
தில்லானா
மோகனாம்பாள்
கலைமணி

# தில்லானா மோகனாம்பாள்

(முதல் தொகுதி)

"கலைமணி"

**கொத்தமங்கலம் சுப்பு**



பழனியப்பா பிரதர்ஸ்

'கோனார் மாளிகை'

14, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 600 014

*கிளைகள்:*

திருச்சி - 620 002 சேலம் - 636 001

கோயமுத்தூர் - 641 001 மதுரை - 625 001

ஈரோடு - 638 001.

# கதையைப்பற்றி....... ஆசிரியர்

ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள்.

ஆந்திர கவர்னர் ஸ்ரீநாகேஷ் அவர்கள் தலைமையில் சிகந்தராபாத்தில் ஸ்ரீராம நவமி விழாவுக்காகக் காந்திமகான் கதை நிகழ்த்தினேன். அடுத்த நாள் அங்கு ஓர் அன்பர் என்னைத் தேநீர் அருந்த வருமாறு அவர் வீட்டுக்கு அழைத்தார். அவர் எனக்கு முன்பு பழக்கம் இல்லாதவர்.

"ஐயா, விருந்து உம்முடையதாய் இருக்கலாம். ஆனால், வயிறு என்னுடையதாயிற்றே! என்னை ஏன் வற்புறுத்துகிறீர்கள்?" என்று கேட்டேன். பிறகு அவர், தம் குடும்பமே ஒரு கலைக் குடும்பம் என்றும், சித்திரம் தீட்டுவது தங்கள் பொழுதுபோக்கு என்றும் கூறவே, அக்கலைஞர் வீட்டுக்கு ஆவலுடன் சென்றேன்.

அவர் வீட்டுக் கூடத்தில் பல சித்திரங்கள் இருந்தன. இடப்புறமிருந்து என்னை அழைத்துக்கொண்டே ஒவ்வொரு சித்திரமாய்க் காண்பித்துக்கொண்டு வந்தார். வலப்புறத்தில் வரும்பொழுது திடீரென்று அங்கிருந்த ஒரு சிற்பத்தின்மீது என் பார்வை பதிந்தது. திகைத்தேன். அப்படியே நின்றேன். வாய்பேச வரவில்லை. நாக்குழறியது. கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. அங்கு நான் பார்த்த சிற்பம் என்னையே ஆட்டிவைத்தது.

திருவாரூர்க் கோபுரத்தின் முன்னணியில், கமலாலயக் கரையில் நாதசுர வித்வான் சண்முகசுந்தரம் மெய்ம்மறந்து வாசிக்கிறார். அவர் எதிரில் தில்லானா மோகனாம்பாள் நாட்டியம் செய்கிறாள். அவள் கண்களில் கலையும் காதலும் ஒன்றையொன்று போட்டி போடுகின்றன. அதுதான் அந்தச் சிற்பம்.

என் பேனாவில் பிறந்தவள், பிளாஸ்டர் ஆப் பாரிஸில் உருப்பெற்று, எனக்குச் சற்றும் அறிமுகமே இல்லாத ஒரு கலைஞரால் உயிர் பெற்று, என் கண்முன் ஒயிலாக ஆடிக்கொண்டிருந்தாள். இதைக்காட்டிலும் வேறு என்ன பாக்கியம் ஓர் எழுத்தாளனுக்குக் கிடைக்க முடியும்.

விகடனில் மோகனாம்பாள் தொடர்கதையாக வந்துகொண்டிருந்த சமயம் ஒரு நாள் ஆந்திராவிலிருந்து ஒரு தமிழர் எனக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் "வாரந்தோறும் ஒரு மரத்தடியில் முப்பது, நாற்பது ஆந்திர அன்பர்கள் வந்து கூடுகிறார்கள். அவர்களுக்கு அந்த வாரம் வந்த தில்லானா மோகனாம்பாள் கதையை நான் படித்து, தெலுங்கில் மொழிபெயர்த்துக் கூறுகிறேன். அவர்கள் எல்லோரும் உங்களை மிகவும் பாராட்டுகிறார்கள். அதை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று எழுதி இருந்தார். பாராட்டோடு மாத்திரமா விட்டார்? அடுத்த வாரம், இரண்டு தகரங்கள் நிரம்ப ஆவக்காய் ஊறுகாயைக் கொண்டுவந்து பரிசும் அளித்தார்.



திருப்பதியில் என் பேரால் எம்பெருமானுக்கு அர்ச்சனை செய்து பிரசாதங்களை அனுப்புவார் ஒருவர். திருவாரூரிலிருந்து தியாகராஜாவின் தேன்குழலைப் பார்சல் செய்து அனுப்புவார் ஒருவர். "அந்த இடத்தைப் படிக்கும் பொழுது கண்ணீர் விட்டோம்; நீங்கள்தாம் சார்லஸ் டிக்கன்ஸ்; இது உரைநடைச் சிலம்பு" என்றெல்லாம் அன்பர்கள் வாரந்தோறும் கடிதம் வரைவார்கள். மோகனாம்பாள் மூலம் எனக்குக் கிடைத்த வாசக அன்பர்கள் எத்தனை எத்தனையோ பேர்கள்!

காட்டூர் ராமையா என்பவர் ஒரு பிரபலமானவர். அவர் மோகனாம்பாளுக்குக் கமலாலயத்தின் கரையில் பாராட்டு விழா நடத்த ஏற்பாடு செய்துவிட்டார். சுந்தரமூர்த்தி நாயனாருக்கு இறைவன் அலங்காரம் செய்து பார்த்ததைப்போல் இந்த அடிமைக்குப் பட்டுப் பீதாம்பரம், தலைப்பாகை, குண்டலம் ஆகியவற்றைச் செய்யக் கையில் வரைபடத்தையும் எழுதிக்கொண்டு, சைத்திரிகர் ஒருவரையும் அழைத்துக்கொண்டு அன்புடன் என் இல்லத்திற்கு வந்தார். விஷயத்தைக் கேட்டதும் என் உள்ளம் உருகியது. மிகப்பணிவுடன் இவ்விழாவை நடத்த வேண்டாம் என்று அவரிடம் மன்றாடிக் கேட்டுக்கொண்டு தடுத்துவிட்டேன்.

இம்மாதிரி எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகள்! அத்தனைக்கும் என் பேனா காரணமல்ல, வாசகர்களின் தமிழ் அன்பே காரணம். மோகனாம்பாள் திருமணப் பத்திரிகையைப் படித்துவிட்டு எத்தனை பாராட்டுத் தந்திகள்! எத்தனை திருமணப் பரிசுகள்! ராதா சில்க் எம்போரியத்தில் 'தில்லானா மோகனாம்பாள் புடைவை' என்று அரக்கு நிறப்பட்டில் சண்முகசுந்தரம் வாசிக்க, மோகனா ஆடும் காட்சியைப் பொன்னால் இழைத்தார்கள். 'மோகனாம்பாள் வளை' என்று கடைகளில் எல்லாம் வளையல்கள் வியாபாரத்திற்கு வந்தன.

தமிழகத்தின் அன்பே! தமிழ் வாசகர்களின் மனக்கோயிலே! உங்களை வணங்குவதைத் தவிர என்னால் வேறு என்ன சொல்ல முடியும்? எட்டும் இரண்டும் அறியாத என்னை, இந்நாவலை எழுதத் தூண்டி ஊக்கமளித்துப் பட்டிமண்டபம் ஏற்றிவைத்தார் என் தலைவர் ஸ்ரீ வாசன் அவர்கள். அவருக்கு என் வணக்கங்கள்.

விகடன் என் வீடு. அங்குள்ள ஏனைய ஆசிரியர்களும், அச்சுத் தொழிலாளர்களும் என் அண்ணன் தம்பிகள். என் எழுத்தைக் குழைத்து எழில் உருவங்களாகத் தீட்டிய அன்பர் கோபுலு என் ஆருயிர். அவர்களுக்கெல்லாம் என் நன்றி.

இம்மாபெரும் நாவலை அச்சேற்றி, அன்புடைய வாசகர்கள் கையில் அளிக்க முன்வந்த பேரன்பர், சிரஞ்சீவி S.M. பழனியப்ப செட்டியார் அவர்களைப் பாராட்டுகிறேன் வாழ்த்துகிறேன், வணக்கம்.

"கலைமணி"

**கொத்தமங்கலம் சுப்பு**

71, லாயிட்ஸ் ரோடு,
சென்னை-14.
19 - 7 - 68.



**மோகனாம்பாள் :** ஆரூரில் பிறந்த ஆடல் அழகி. ஆடும் தியாகரின் அடியார் குலத்தினள். காவிரியில் துள்ளி வரும் மீனையும், ககனத்தில் மின்னும் நட்சத்திரங்களையும் அவள் கண்களில் காணலாம். இசை மேதை சண்முக சுந்தரத்தின் கலையில் மயங்கினாள்; காதலில் உருகினாள்.



**வடிவாம்பாள் :** மோகனாவின் தாய். சாமர்த்தியமே உருவானவள்; சாகஸம் நிறைந்தவள். தாசியின் தாய்க்கு உரிய பேராசையும் தளுக்கும் அவளைப் போல் வேறு யாரிடமும் காண முடியாது. ஆயினும், தாய்ப்பாசம் அவளையும் விடவில்லை.



**ஜில் ஜில் ரமாமணி :** குப்பையில் கிடந்த குன்றிமணி. மனித இதயம், புடம் போட்ட தங்கம் போல மாறும் என்பதற்கு அவளே உதாரணம். பெண்மையின் பெருஞ்சிறப்பை அவளிடம் காணலாம்.



**சண்முகசுந்தரம் :** சிக்கல் சிங்காரவேலன் முன் இசையால் சேவிப்பவன். கட்டழகன், கலையழகன், அட்ட திக்கும் புகழும் நாதஸ்வர மேதை. கலைகளுக்குத் தலை வணங்குவான்; ஆனால், கர்வம் உடையவன்தான். மோகனாவின் அழகும் ஆடலும் அவனையே ஆட்டி வைத்தன.



**பரமானந்தப் பரதேசி :** நாதத்தால் இறைவனைக் கண்டவர். அவருக்குச் சோறு வேண்டா; சுகம் வேண்டா; ஆனால், இசை வேண்டும். அவர் பாடினால் பட்ட மரம் துளிர்க்கும். முருகா, முருகா என உருகும். அவர் கலைஞர்களுக்காகவே வாழும் ஒரு சித்தர்.



**மதன்பூர் மகாராஜா :** பெருந்தன்மையின் உறைவிடம். ஆடம்பரக்காரர். சுலபத்தில் ஏமாந்துவிடுவார். ஆனால், நல்லவர். சமஸ்தானாதிபதிகளின் பணச் செருக்கையும் படாடோபத்தையும் அவரிடம் காணலாம்.



நாகலிங்கம் : நல்ல பாம்பல்ல; சாரைப் பாம்பு போன்றவன். அவனிடம் சத்தியம் -அசத்தியம், காதல்-காமம் என்ற பேதங்கள் எல்லாம் இல்லை. ஆசைப் பேயின் அடிமையான அவன், காசுக்காக-காமத்துக்காக எதையும் செய்யும் ஒரு பிறவி.



கடம்பவனம் பிள்ளை : காவேரிக்கரை மிராசுதாரின் பந்தாவை விடாதவர். அவருக்கு எதுவுமே ஆயிரம் காலேமாகாணிதான். அடே என்று பத்துப் பேரைக் கூப்பிடுவதில் ஆசைப் படுபவர்.



வைத்தி : சாதுரியமான மனிதர். சவடால் பேர்வழி அவர். பிறருக்குக் கெடுதல் செய்தாலும் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போலத்தான் இருக்கும். ஏமாற ஆள் இருக்கும் போது ஏன் திருட வேண்டும் என்ற கொள்கை உடையவர்.

# பொருளடக்கம்

## முதற்பாகம்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. அழகுமலைப் பாதை | — | 13 |
| 2. சோலைமலைத் திருவிழா | — | 23 |
| 3. ஜில்ஜில் ரமாமணி | — | 32 |
| 4. "குங்கும வண்ணனடி கிளியே குமரப்பெருமானடி" | ... | 39 |
| 5. கலை உள்ளங்களின் அலைமோதல் | — | 47 |
| 6. காதலின் கண்ணீர் | — | 54 |
| 7. நாகம் சீறியது | — | 59 |
| 8. மாய சர்ப்பிணி | — | 63 |
| 9. "தளாங்கு ததிங்கிணதோம் !" | — | 67 |
| 10. நந்தவனத் தோட்டம் | ... | 71 |
| 11. நாகலிங்கமும் ரமாமணியும் | ... | 73 |
| 12. எப்படிப் போயினரோ ! | — | 80 |
| 13. தன் வினை தன்னைச் சுடும் | ... | 90 |
| 14. "காணத் துடிக்குதே கண்கள்" | ... | 96 |
| 15. ஆசை உள்ளங்களின் அந்தரங்கப் பேச்சு | ... | 105 |
| 16. பூதம் காப்பாற்றியது ! | ... | 119 |
| 17. "ஆடரவக் கிண்கிணியான் ஆடும் திரு ஆரூர்" | ... | 121 |
| 18. அன்பே உலகம் அதுவே இன்பம் | — | 130 |

19. ஏனிந்த நாணமோ! ... 138
20. வடிவாம்பாளின் சாமர்த்தியம் ... 142
21. மாப்பிள்ளை மயங்கினார் ... 147
22. வண்டியால் வந்த வினை ... 155
23. நிலை பெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா! ... 167
24. சவடால் வைத்தி ... 173
25. ஆசை நெஞ்சில் வீசும் புயல் ... 179
26. சவடாலும் சாமர்த்தியமும் ... 184
27. தாயின் ஆசைக் கனவு ... 191
28. காரைக்கால் நடேசன் ... 201
29. மனக்கவலை மாற்ற மருந்துண்டோ! ... 204
30. "என்ன சொன்னாள்..............?" ... 210
31. ரமாபாய் சர்க்கஸ் ... 218
32. எண்ணிய நங்கை எதிரில் வந்தாள்! ... 228
33. வீசிய வலையில் விழுந்த மீன் ... 231
34. கண்ணை விழித்த பின்னும் உண்டோ கனவு? ... 239
35. பெற்றவள் பித்தானாள் ... 242
36. வரதனின் தூது ... 255
37. உடன் பிறவாத பிறப்பு ... 260
38. ஓடும் மனத்துக்கு ஓய்வு உண்டோ? ... 268
39. கம்பெனி வீட்டில் கண்ட காட்சி ... 272
40. கடம்பவனத்தின் கலக்கம் ... 281
41. "நானேன் ஏவினேன்" ... 288
42. கலைப் பேச்சோ! வலை வீச்சோ! ... 296
43. மைனரின் மனோதர்மம் ... 309
44. இசைப் பயிர் செய்த வேளாளர்கள் ... 318
45. பாரி நாயனம் ... 322
46. "மங்கையர்க்கரசி மரகதம்" ... 325
47. வைத்தி வத்தி வைக்கிறார்! ... 335
48. வெற்றியும் தோல்வியும் வீரருக்கில்லை ... 349
49. புயலுக்குப் பின் போராட்டம் ... 363





50. "கடலைக் குழப்பிய கருநாகம்" ... 372
51. மானமும் வெட்கமும் எனருக்கேது? ... 377
52. உள்ளம் சுரந்து ஓடிய வெள்ளம் ... 383
53. வைத்தியின் வைரம் ... 392
54. முன்னலங்காரம் ... 405
55. பரவசமாக்கிய பாரி நாயனம் ... 409
56. "காணாத கண் என்ன கண்ணே!" ... 418
57. "தீம் தீம் தீரன்ன தீரன்ன" ... 429
58. காதல் பாதையில் கல்லும் முள்ளும் ... 440
59. "மூர்க்கனுக்கு மோகம் வந்தால்?" ... 451
60. கண்ணை விழிப்பானா? கவலை தீருமா? ... 464
61. இடியும் மின்னலும் இதயத்தைத் தாக்கின ... 477
62. உயிர் தளிர்த்தது; உணர்ச்சி பூத்தது! ... 488
63. கண்ணை விழித்தான்; அவள் கண்ணைத் துடைத்தாள்! ... 501
64. வடிவாம்பாள் வழி மறைத்தாள் ... 515
65. அன்னையே பகையானால் யாரிடம் சொல்வது? ... 528
66. பாவம் பணத்தாசை ... 538
67. ஆசை அங்கே, பாசம் இங்கே! ... 551
68. பணம் குவிகிறது; மனம் மறைகிறது! ... 565
69. பாண்டு மாஸ்டர் பங்காரு ... 571
70. சென்னையில் சண்முகம் ... 578
71. நேசம் மறக்குதில்லை நெஞ்சம் ... 590
72. பாம்பின் வாய்த் தேரை ... 596
73. எத்தன் வைத்தி! ... 604
74. தாயின் சந்தேகம் ... 610
75. சந்நிதியில் கண்டாள், சந்தோஷம் கொண்டாள்! ... 615
76. கற்பகமே, என்றன் கவலைகள் தீராயோ? ... 627
77. காதலன் வந்தான், கணையாழி தந்தான் ... 639
78. "சிப்பிக்குள் முத்துப்போல்" ... 652
79. அம்மா ஆடிய நாடகம்! ... 664

80. காவேரி கலா நிலையம் ... 672
81. கலையை வெல்லுமோ காதல்? ... 676
82. மங்கையர் மாண்பே! மரகதமே! ... 683
83. பரிசும் பாராட்டும் ... 688
84. கடமை பெரிதெனக் கண்டார் ... 693
85. அலை மோதும் கடல் மேலே ... 701
86. மிஸ்டர் வைத்திஜி ... 713
87. அலை வீசினாலும் அணையா விளக்கு ... 720
88. ஆட்டத்தில் கப்பலே ஆடியது ... 726
89. பிழைக்கத் தெரியாத பெண்ணே! ... 739
90. பள்ளி எழுந்தால் பயனுண்டோ? ... 745
91. இசையே என் இறைவன் ... 750
92. சக்தி தாண்டவம் ... 763
93. விண் மீன் விழுந்தது, வேதனை தீர்ந்தது! ... 776
94. எண்ணமெலாம் வண்ணமலர் ... 787
95. பொய்க்கால் பொன்னனா? ... 793
96. கருணைக் கடலின் அலைமோதல் ... 796
97. தமிழ்த் திருநாட்டைத் தாயென்று கும்பிடுவோர் ... 801
98. உள்ளம் நிசமானால் உலகம் வசமாகும் ... 814
99. வைத்திக்கு வந்த யோகம்! ... 827
100. ஆறுமுகவேலன் வீதிவலம் வந்தான் ... 840
101. உண்மையும் பொய்யாகும்! ... 853
102. சேது யாத்திரை ... 859
103. சென்று நீ தொழுதுய்யாய் திருவிராமேச்சுரம் ... 864
104. திண்புவி தனழக்கவே கூவாய் குயிலே ... 876
105. சிங்கமுகாசுரன் ... 889
106. ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும் ... 895

✦ ✦ ✦



# தில்லானா மோகனாம்பாள்



"கடவுள் ஆண் பிள்ளையை முதலில் படைத்தாரா, அல்லது பெண்ணை முதலில் படைத்தாரா?" என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டதால் எனது நண்பர் பேராசிரியர் தில்லைநாயகம் அவர்களிடம் இதைப் பற்றி ஆராய்ந்தேன். அவர் பின்வருமாறு கூறினார்;

"கடவுள் ஆணைத்தான் முதலில் படைத்தார். ஆண்மகன் புதிதாகப் பிறந்த காளங்கன்று போல் துள்ளி விளையாடினான். அவன் உடலில் வலிமையும், உள்ளத்தில் வீரமும், நடையில் அழகும், செயலில் கம்பீரமும், ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு வந்தன. சிங்கம், புலி, கரடி ஆகிய எல்லாவற்றையும் மனிதன் அடக்கினான்; மலையைப் புரட்டினான்; மரத்தை வெட்டினான்; கடலில் நீந்தினான்; கப்பல் விட்டான். இவ்வாறு நாளாக நாளாக அவன் வீரம் வளர்ந்து வரவே, அவனை எதிர்ப்பார் யாருமின்றி உலாவத் தொடங்கினான். உலாவினான், உலாவினான், உலாவினான். வேறென்ன செய்வது? வாழ்க்கை சலித்துவிட்டது. வெறும் வீரத்தில் அவனுக்கு இன்பம் இல்லை. 'நம்மை யாராவது அடக்க மாட்டார்களா?' என்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது. அவனை அடக்குவார் உலகில் ஒருவருமே இல்லை என்றால் மனிதன் உயிரைக்கூட விட்டுவிடத் துணிந்தான். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் கடவுள் கையிலே ஒரு பிடி மண்ணை எடுத்துக்கொண்டு மனத்தில் தியானித்தார். வீராதி வீரர்களையெல்லாம் அடக்கும் ஒரு பிறவி இதில் பிறக்க வேண்டுமென்று எண்ணினார். அவர் கையிலிருந்து ஒரு பெண் குதித்தாள். கடவுளுக்கே அந்த வியக்தியைப் பார்த்ததும் தலை சுழன்றது. சற்று நேரம் சிந்தனை செய்து மனத்தை அடக்கிக்

கொண்டு, 'உன் பெயர் பெண். போ, ஆணுக்கு எதிரே போய் நில்!' என்றார். மதோன்மத்தனாகத் திரிந்த ஆணின் முன் பெண் வந்து நின்றாள். ஆண்மகனைத் தன் கண்களால் ஒரு முறை பார்த்தாள். ஒரே ஒரு முறைதான் பார்த்தாள். அந்தப் பார்வையிலேயே ஆண் மகனின் வீரம் தீரமெல்லாம் விடை பெற்றுக்கொண்டன. மயங்கி வீழ்ந்தான். அப்போது வீழ்ந்தவன் வீழ்ந்தவன்தான். இன்னும் அவன் எழுந்திருக்கவே இல்லை.

"இந்த முடிவுக்கு நான் வருவதற்குக் காரணமாயிருந்தது வெறும் ஆராய்ச்சியல்ல... தில்லானா மோகனாம்பாளின் திவ்ய சௌந்தர்யம்தான் காரணம்" என்றார் தில்லைநாயகம்.

"ஐயா, உமது கண்களுக்கு அழகாகத் தோன்றும் ஒன்று எனது அவநம்பிக்கை பிடித்த கண்களுக்கு அழகில்லாமல் தோன்றலாம். இருந்தாலும், அந்த மோகனாம்பாள் எங்காவது நாட்டியம் செய்தால் எனக்கும் சொல்லுங்கள்" என்றேன் நான்.

தில்லைநாயகம் பெருமூச்சு விட்டார்.

"சில கலைஞர்களுக்குப் புத்தியும் வித்தையும் இருந்தாலே போதும். சங்கீதம், நாட்டியம் போன்ற காந்தர்வவித்தை கலைஞர்களுக்கோ, இவைகளோடுகூட பூர்வ புண்ணியமும் நிறைய வேண்டி இருக்கிறது. அழகும், அமைப்பும், சரீரமும், சாரீரமும் நாமாக உண்டாக்கிக்கொள்பவையல்ல. ஆண்டவன் அருளால்தான் கிடைக்க வேண்டும். அந்த ஆண்டவனோ ஒரு நல்லதைக் கொடுத்தால் கூடவே பத்துக் கெடுதல்களையும் கொடுத்துவிடுகிறார். அப்படி இல்லையென்றால், அந்த அபூர்வ சிருஷ்டியைப் போட்டு ஆட்டி அலைக்கழித்து காட்டி மறைத்துவிடுகிறார்...

"மோகனாம்பாள் அத்தகைய பிறவிகளில் ஒருத்தி. பற்றற்று வாழும் எனக்கே அந்தப் பெண்ணின் நினைவு ஒரு பாரமாக இருக்கிறதென்றால் அவளிடம் ஏதோ ஒரு சக்தி இருந்திருக்கத்தானே வேண்டும்!"

"அவள் யார், எந்த ஊர், அவள் வரலாறு என்ன? விவரமாய்ச் சொல்லுங்கள்" என்றேன் நான்.

ஸ்ரீ தில்லைநாயகம் அவர்கள் இந்தச் சரித்திரத்தை எனக்குச் சொல்லிப் பல வருஷங்களாய்விட்டன. இன்னும் அது என் மனத்தை விட்டு அகலவில்லை. இப்பொழுது நினைத்தாலும் பசுமையாகவே காட்சி அளிக்கிறது. அப்பேர்ப்பட்ட தில்லானா மோகனாம்பாளின் கதையைத்தான் நான் இப்போது உங்களுக்குச் சொல்லப் போகிறேன்.





## அழகுமலைப் பாதை

மாலை வேளை. பொன்னை உருக்கி வார்த்தது போல் வானமாதேவி மஞ்சள் பூசிக் குளித்திருந்தாள். தரையும் வானும் தங்க மயமாய்க் காட்சியளித்தன. "என் படைப்பில் ஏழை கிடையாது. இதோ பாருங்கள், தங்கத்தை வாரி வீசியிருக்கிறேன்" என்று இயற்கை குதூகலிக்கும் நேரம். மதுரையிலிருந்து அழகர் கோவிலுக்குச் செல்லும் பாதையில் நடமாட்டமே இன்றி நிசப்தம் நிலவியது. சாலையின் இருபுறமும் மகாராணி மங்கம்மாள் பெயரைச் சொல்லிக்கொண்டு நிற்கும் உயர்ந்த மரங்கள், யாரேனும் என் நிழலில் வந்து தங்கமாட்டார்களா என்று கேட்பன போல் நீண்ட நிழல்களுடன் கிளைகளாகிய கைகளை ஆட்டி, வாருங்கள் என்று அழைத்தவண்ணம் நின்றன. ஓரத்தில் உள்ள செடிகளில் காயா மலரும், கொன்றை மலரும், காட்டு மல்லிகை, நெருஞ்சி, விஷ்ணு கிராந்தி முதலிய மலர்களும் புஷ்பித்து, தங்கள் வாசனையைப் பொதிய மலைத் தென்றலுடன் கலந்து அனுப்பிக்கொண்டே இருந்தன. நாம் காட்டில் பூத்த மலர்கள், நம்மைப் பார்க்கக்கூட மனிதர்கள் வரப் பயப்படுகிறார்களே என்று அவை வருந்தியபோது சுவர்க்கோழி, பொன் வண்டு முதலியவைகள் ரீங்காரமிட்டு இசை பரப்பி அவைகளை உறங்க வைத்தன. கூடுகளுக்குள் அடையப் போகும் பறவைகள் ஆவலுடன் கூவியழைத்து, குழந்தை குட்டிகளைச் சரிபார்த்துக்கொண்டிருந்தன. காட்டுக்குள் பதுங்கியிருந்த நரிகளும், முயல்களும், முள்ளம் பன்றிகளும் நம் இக்கு விஜயத்திற்கு நேரம் வந்துவிட்டதா என்று புதர் வழியே எட்டிப் பார்த்தவை ஏதோ மாட்டு வண்டிகள் வரும் சத்தம் கேட்டுச் சரேலென்று தலையை உள்ளே இழுத்துக்கொண்டன.

வெகு தூரத்தில் இரண்டு பெரிய கூடு போட்ட மாட்டு வண்டிகள் சற்றுத் தள்ளி ஒன்றன் பின் ஒன்றாக வந்து கொண்டிருந்தன. வண்டிகளில் படிந்திருந்த செம்புழுதியைப் பார்க்கும்போது அவைகள் வெகு தூரத்திலிருந்து வருகின்றன என்பது தெரிந்தது. களைத்துப் போய் அரைத் தூக்கத்தில் இருந்த வண்டிக்காரர்கள் மாடுகளைத் 'தா தா' என்று அதட்டும் போதெல்லாம் மாடுகள் 'ஏன் ஏன்' என்று தலையை ஒரு ஆட்டு ஆட்டி, சலங்கையைக் குலுக்கிப் பதில் தெரிவித்தனவேயன்றி அந்தப் பெருநடை மாறாமலேதான் நடந்து சென்றன.

இந்த வண்டி மாடுகளின் ஒரே சீரான பெருநடைக்கு ஏற்றபடி வண்டியின் இரு சக்கரங்களில் உள்ள கடைச்சாவிகள் குடத்தில் உரசி 'க்ரீச் டக்-க்ரீச் டக்-க்ரீச் டக்' என்று ஒரே காலப் பிரமாணத்தில் தாளம் தவறாமல் சத்தம் போட்டுக்கொண்டு வந்தன. இந்தச் சத்தத்திற்கிணங்க, முதல் வண்டியிலிருந்த முத்துக்குமாரசாமி நட்டுவனாரின் கை விரல்கள் வண்டிக் கூட்டின் மேல் மிருதங்கம் வாசித்துக்கொண்டே வந்தன. வாயால் "தித்தளாங்கு தகதிமி தக ஜணு தை தை, தை தை, க்ரீச் டக்; தித்தளாங்கு தகதிமி தக ஜணு, தை தை தை தை, க்ரீச் டக்" என்று ஜதி சொல்லிக்கொண்டே வந்தவர் அதை நிறுத்திவிட்டு, "என் குழந்தே, இந்தக் கடைச்சாவி சத்தம் நாலு ஆவர்த்தனம் இருக்குமா?" என்று புன்முறுவலுடன் கேட்கவே, வண்டியில் நடுவில் உட்கார்ந்திருந்த மோகனாம்பாள், "இருக்கும். நானும் அதையேதான் கவனித்துக்கொண்டு வருகிறேன். பாருங்கள், மாட்டின் கால் நடையில் ஒரு தாளம், வண்டியின் கடைச்சாவி சத்தத்தில் மற்றொரு தாளம், ரயிலின் கடக் கடக் என்ற ஒலியிலோ இன்னொரு தாளம் - இப்படியே உலகத்தில் எல்லாமே அல்லவா ஒரு காலப் பிரமாணத்தோடு நடந்து வருகின்றன !" என்று கூறினாள்.

மோகனாம்பாளின் புத்தி சாதுர்யத்தைக் கவனித்து மகிழ்ந்த நட்டுவனார், "இதைத்தான் லயம் என்பார்கள் இறைவன் படைத்த ஒவ்வொரு பொருளும் ஒரு தாளத்தோடு இயங்கிக்கொண்டே இருக்கிறது. தானும் ஆடி, உலகையும் ஆட வைக்கும் தில்லை நடராஜப் பெருமானின் தத்துவமே அதுதான், அம்மா" என்றார்.

"அப்படியானால் நடராஜப் பெருமானும் உங்களைப் போல ஒரு நட்டுவனார்தான் என்கிறீர்கள்?"

"ஆமாங் குழந்தை ! நாம் அரங்கில் ஆடுகிறோம் அவர் அம்பலத்தில் ஆடி அகில புவனங்களையும் ஆட்டி வைக்கிறார்."

மோகனா குறும்பாய்ச் சிரித்துக்கொண்டே கேட்டாள்: "என் மாமா, அப்படியானால் அவரை ஆட்டி வைப்பது யார்?"

"அந்தச் சிவகாமசுந்தரியேதான் அம்பிகையின் கையில் தாளம் இருக்குமே, பார்த்ததில்லையா?" என்று நட்டுவனார் பதில் கூறியவுடனே மோகனா,

"இப்போதுதான் நட்டுவனாரய்யாவை யார் ஆட்டி வைக்கிறாங்க என்பது புரிந்தது" என்று சிரித்தாள்.

"இதற்கா இப்படிச் சுத்தி வளைக்கிறாய் ! நான் மட்டுந்தானா பெண்டாட்டிக்குப் பயந்து ஆடுகிறேன்? நாளை உனக்குப் பயந்து எவன் ஆடப் போகிறானோ !" என்று கேலியாய் உரைத்தார் குமாரசாமி.

இந்தச் சமயம் வண்டிக்குள்ளே முன்னால் உட்கார்ந்து தூங்கிக் கொண்டிருந்த மோகனாவின் தாய் வடிவாம்பாள் அம்மாள்



இத்தனை பேச்சுக்கிடையில் 'கிர்' என்று ஒரு குறட்டை விட்டுத் தூங்கி விழுந்து வண்டிக் கூட்டில் முட்டிக்கொண்டாள்; பயந்து விழித்தாள். இதைப் பார்த்த மோகனா, வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, "ஏன் ஐயா, அம்மா விடும் குறட்டையிலுங்கூட ஒரு காலப்பிரமாணம் இருக்கில்லே?" என்று கிண்டலாய்க் கேட்கவே நட்டுவனார், "நம்ம மத்தளக்காரன் வரதன் கையைத் தவிர உலகத்திலே எல்லா இடத்திலேயும் லய சத்தம் இருக்குதம்மா" என்று பதில் சொல்லவும், வண்டியில் இருந்த எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

சிரிப்பொலி அதிகமாக இருப்பதைக் கண்ட வடிவாம்பாள் வாயைப் பொத்தி, "சரி சரி, சத்தம் போடாதீங்க காட்டுப் பாதை, கள்ளர் பயம் அதிகமாம் இந்தப் பக்கத்தில்" என்று எச்சரிக்கை செய்யவே, வண்டியில் நிசப்தம் நிலவியது. இப்படி வடிவாம்பாள் சொல்லி வாய் மூடுமுன் வண்டிக்கு முன்னால் கொஞ்ச தூரத்தில் ஓர் உருவம் கையில் நீண்ட தடியுடன் காட்டுக்குள்ளிருந்து வெளியே வருவதைக் கண்டார்கள்.

அந்த உருவம் சாலை ஓரத்தில் வந்து நின்றுகொண்டு, சாலை போகும் திசையை இரு புறமும் பார்த்தது. இரண்டு வண்டிகள் வருவதையும் பார்த்துவிட்டது அப்படியே நின்ற இடத்தில் நின்றது.

இதைப் பார்த்த வடிவாம்பாள் நடுங்கிப் போனாள். இவ்வளவுக்கும் அவர்களிடம் திருடுவதற்கு ஒன்றுமே இல்லை. காதில் தோடுகளோ, கையில் காப்பு, கொலுசு, வங்கி, நாகொத்து முதலிய நகைகளோ கிடையாது. கழுத்தில்கூட ஒரு பவழ மாலையைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. உருவிய கோலமாக உட்கார்ந்திருந்தாலும், அந்த ஆளைப் பார்த்ததும் அவள் நடுங்கிய நடுக்கம் சொல்லுந்தரமல்ல. முகத்தில் வியர்த்தது. தன் மகளை ஒரு புறம் பயத்தோடு பார்த்தாள்; மோகனாம்பாளோ ஒரு நகையும் அணிந்துகொள்ளாமல் புது மலர்போல் அமர்ந்திருந்தாள். இதனால் அவள் அழகு அதிகமாகத் தெரிந்ததே அல்லாமல், குறைந்துவிடவில்லை. ரோஜாச் செடி மொட்டுவிட்டதுபோல் வனப்புடன் விளங்கினாள். வேறு எந்த நகையும் அவள் புன்னகைக்கு இணையில்லை. பதினெட்டு வயதுக்கேற்ப அவளது கடைந்துவிட்ட மேனியும், சரவு சரவான கால்களும், கொடி போன்ற கைகளும், அளவான கழுத்தும், வட்ட முகமும் பொட்டழகும், பார்த்தவர்கள் இது கம்மியின் கை படாமல் செய்த செம்பொற்சிலையோ என்று வியக்கும் வண்ணம் இருந்தது.

வடிவாம்பாள் ஒரு முறை தன் மகளை ஏற இறங்கப் பார்த்தாள். அப்போது அவள் கழுத்தில் இன்னும் கழற்றாமல் கிடந்த ஒற்றை வடச் சங்கிலியின்மீது அவள் பார்வை விழுந்தது.

"அந்தச் சங்கிலியையும் கழற்றிவிடம்மா !"

"இது ஒன்று இருந்தால் என்னம்மா? அதில் தாயித்து இருக்கிறதே"

"பாதகமில்லே, கண்ணு! இப்போ கழற்றினோம்னா அப்புறம் தேங்காய் உடைச்சு, காலணா கற்பூரத்தைக் காட்டிவிட்டு கழுத்திலே போட்டுக்கலாம். திருடன் கண்டுக்கிட்டா தாயித்தே போயிடும்."

"பயப்படாதே, அம்மா! இந்தத் தாயித்தைத் திருடினா திருடன்கூட வித்வானாக மாறிவிடுவான். இது வந்த மகத்துவந்தான் எனக்கு ஆட வந்தது என்றுகூட அடிக்கடி சொல்லுவாயே! அதைக் கழற்றலாமா?" என்று குழைந்து சொல்லியும், தாய் கேட்கவில்லை.

"கழட்டுடின்னு சொன்னா வரட்டு வாதம் பிடிக்கிறாயே! உன் ஒரு சங்கிலியாலே வைக்கோலுக்குக் கீழேயிருக்கிற அவ்வளவு நகையும் போகப் போவுது!" என்று தாய் கடிந்துகொள்ளவும் மோகனா, "அப்படின்னா, நீ தாயித்தை மதிக்கலே. தங்கத்தைத்தான் மதிக்கிறே" என்று சங்கிலியைக் கழற்றலானாள்.

"ஆமாம். தங்கம் இல்லாட்டி தாயித்து வந்துடுமோ" என்று வடிவாம்பாள் சொன்னதும், மோகனா தன் கழுத்துச் சங்கிலியைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு தாயிடம் கொடுத்தாள். அதை வாங்கி அப்படியே தான் உட்கார்ந்திருந்த ஜமக்காளத்திற்கு அடியில் பரப்பியிருந்த வைக்கோலுக்குள் திணித்தாள் வடிவாம்பாள். இதுவரையில் சும்மா இருந்த முத்துக்குமாரசாமி நட்டுவனாரும் இதைப் பார்த்துவிட்டு அவர் கழுத்தில் கிடந்த சங்கிலியையும் கழற்றுவதைக் கண்டாள் வடிவாம்பாள்.

"உன் சங்கிலி கிடந்துட்டுப் போகுது. முத்துக்குமரு. அது கிலிட்டு தானே?"

"சங்கிலிக்காக கழட்டலே அம்மா. இது கிலிட்டு நகைன்னு வடிவாம்பா அம்மாவுக்குத் தெரியும். வந்து நிக்கிற திருடனுக்குத் தெரியுமா? அவன் என்னை ரெண்டு போட்டா?" என்று கழற்றி மடியில் மறைத்துக்கொண்டார்.

இந்தச் சமயம் வண்டி அந்த உருவத்தின் அருகில் சென்றுவிட்டது. வடிவாம்பாள் கடைக்கண்ணால் பார்த்தாள். சுமார் ஆறடி உயரத்தில் கையும் கம்புமாக நிற்கும் அந்த ஆளைக் கவனித்தாள். மங்கிய வெளிச்சத்தில் அந்த உருவம் கையிலிருந்த கம்பைச் சிறிது தூக்குவதைக் கண்டாள். அவள் கண்கள் பயத்தால் மூடிக்கொண்டன. அப்பொழுது, கணீர் என்ற குரலில் "ஏய்! அழகர் கோவிலுக்குப் போகும் பாதை இதுதானா?" என்று வண்டிக்காரனைப் பார்த்து அந்த உருவம் கேட்டது. திருடன் வழிப்போக்கனாக மாறியதும் மோகனா 'களுக்'கென்று சிரித்தாள். ஆனாலும் திருடர்களின் ஏமாற்று வித்தைகளை நன்கு அறிந்த வடிவாம்பாள் தன் மகளின் தொடையில்



ஒரு நிமிண்டு நிமிண்டவே, சிரிப்பை அடக்கியதுமட்டுமல்லாமல் அப்போது வந்த அழுகையையும் அடக்கிக்கொண்டாள் மோகனா.

"ஏய் வண்டிக்காரா, தூங்குகிறாயா என்ன? அழகர் கோவிலுக்குப் போகும் பாதை இதுதானா?" என்று மறுபடியும் அந்த ஆள் அதட்டிக் கேட்கவே, நிஜமாகவே அப்பொழுதுதான் விழித்த வண்டிக்காரன், "ஆமாங்க, அதோ மலை தெரியுதே, அதுதான் அழகர்கோவில். நாங்ககூட அங்கேதான் போறோம். கூட வந்திங்கன்னா சுளுவாப் போயிடலாம்" என்று சொல்லி, மறுபடியும் யோக நித்திரையில் ஆழ்ந்தான்.

கூடவே வந்தால் என்று வண்டிக்காரன் சொன்னவுடன் வடிவாம்பாள் அம்மாளுக்கு விஷயம் விளங்கிவிட்டது. திருடர்களுக்கு வாடகை வண்டிக்காரர்களும் உடந்தையாக இருப்பார்கள் என்ற சந்தேகம் அவளுக்கு எப்போதுமே உண்டு. திகிலுடன் மனத்தில் சிந்திக்கலானாள்: "சரிதான், இன்னும் சற்று தூரத்தில் அடர்த்தியான காடு இருக்கப்போகிறது. அதில் நாலைந்து திருடர்கள் பாதையோரம் பதுங்கி இருப்பார்கள். வண்டி அந்த இடத்திற்குப் போனவுடன் இந்த ஆள் சீட்டி அடிப்பான். உடனே புலிபோல் எல்லாத் திருடர்களும் பாய்ந்து வந்து வண்டிக் கூட்டின்மேல் கம்பால் தடதடவென்று அடிப்பார்கள். நம்மை இறங்கச் சொல்வார்கள். நாம் ஏழைகள் என்று கண்ணைக் கசக்குவோம். கடைசியில் வண்டியைக் குப்புறக் கவிழ்த்து வைக்கோலுக்குள் இருக்கும் ஐயாயிரம் ரூபாய் நகைகளையும் எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள்!" என்று பற்பல பயங்கர எண்ணங்கள் அவள் மனத்தில் ஓடத் தொடங்கின.

இதற்குள் வண்டி அந்த ஆளைக் கடந்தது. அந்த ஆள் மெதுவாக வண்டிக்குள் இருப்பவர்களைப் பார்த்தான். வண்டியின் பின் பக்கமாகவே வரத் தொடங்கினான்.

அவன் தொடர்ந்து வருவதைப் பார்த்த வடிவாம்பாள் நடுங்கினாள். 'வண்டியை வேகமாய் ஓட்டு' என்று வண்டிக்காரனிடம் சொல்ல நினைத்தாள். ஆனால் தொண்டையிலிருந்து பேச்சு வரவில்லை.

அதற்குள் தாடியும் மீசையுமாக இருக்கும் அந்த உருவம் வண்டி அருகில் நெருங்கிவிட்டது. "அழகுமலையானே, நீதான் காப்பாற்ற வேண்டும்" என்று வடிவாம்பாள் வேண்டிக்கொண்டாள். அப்போது அந்த ஆள் இடக்கையால் வண்டியின் கூண்டைப் பிடிக்கவே 'ஓ'வென்று அலறினாள் வடிவாம்பாள்.

முதல் வண்டியிலிருந்து கூக்குரல் கேட்டவுடனே பின் வண்டியிலிருந்த மத்தளக்கார வரதனும், துத்திக்காரனும், முகவீணைக்காரனும், வேலைக்காரி அபரஞ்சியும் கீழே சட்டென்று குதித்து ஓடி வந்தார்கள். உதவிக்கு ஆள்கள் வருவதைக் கண்டும் திருடன் பயந்து

ஓடாமல் அங்கேயே நிற்பதைக் கண்ட முத்துக்குமாரசாமி நட்டுவனாருக்குச் சிறிது சந்தேகம் வந்தது. அந்த ஆளை உற்றுப் பார்க்கலானார். வடிவாம்பாளுக்கும் சிறிது பயம் தெளிந்தது.

மத்தளக்கார வரதன், "ஏய்! யாரடா அங்கே, பொம்பளைங்க தனியா வர்ரபோது வந்து கலாட்டா செய்யறவன்?" என்று கேட்டுக்கொண்டே இடுப்புத் துணியை வரிந்து கட்டினான். "சும்மா ஒரு தகிங்கிணத்தோம் குடுத்தேன்னாப் பாரு" என்று முண்டாவைத் தட்டிக்கொண்டே அருகில் வந்தான்.

வரதன் தஞ்சாவூர்ப் பையன். பயில்வான் வரதனென்றும், பஜனை மடம் வரதன் என்றும் அவனைக் கூப்பிடுவார்கள். அக்காலத்தில் மிருதங்கம் வாசிப்பவர்கள் தேகத்தை நன்றாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக தேகாப்பியாசமும் செய்வார்கள். அந்தக் கூட்டத்தில் வரதனும் ஒருவன். காலையில் எழுந்தவுடன் தண்டால், பஸ்கி முதலியவைகள் எடுப்பான். அதற்கடுத்தாற்போல் முதல் நாள் ஊற வைத்து முளை விட்டிருக்கும் கொண்டைக்கடலைகளை அப்படியே பச்சையாய் ஒரு ஆழாக்கு துவம்ஸம் செய்துவிடுவான். உடனே கர்லாவை எடுத்து 108 முறை கைகளை மாற்றாமல் சுற்றுவான். உடம்பில் விளக்கெண்ணெய் தடவி 'மஸாஜ்' செய்து கொள்வான். பச்சைப் பாலைச் சர்க்கரை போடாமல் சாப்பிடுவான். இவையெல்லாம் அவனுடைய நித்தியப்படி கட்டளைகள். எங்கேயாவது காய்கறித் தோட்டத்தைக் கண்டுவிட்டாலோ அனுமார் புகுந்த மாதிரிதான்! பச்சை வெண்டைக்காய், பாகற்காய், அவரைக்காய் இவைகளையெல்லாம் கைநிறையப் பறித்து வைத்துக்கொண்டு, நறுக்கு நறுக்கென்று அவன் கடித்துத் தின்னும்பொழுது, தஞ்சாவூர் சிவகங்கை தோட்டத்துக் குரங்குகள்கூட அவனைப் பார்த்துத் திகைக்கும். நல்ல மெருகேறிய உடம்பில் ஒரு மல் ஜிப்பா போட்டு, அரையில் ஒட்டுச் சல்லடம் கட்டியிருப்பான் வரதன். அதில் ஒரு சிங்கம் போட்ட பாவட்டா வேறு தைத்திருப்பான்.

அவன் உடம்பில் நல்ல பலம் உண்டு. ஒருவனை ஓங்கி அறைந்தால் அடிபட்டவன் சுருண்டு விழுந்துவிடுவான். ஆனால் அவன் இதுவரையில் யாரையுமே அடித்ததில்லை. பாவம்! அவன் அடி முழுவதையும் அந்த மிருதங்கந்தான் அனுபவித்து வந்தது. அதோ வரதன் வருகிறான் என்று சொன்னால் போதும். அந்த மிருதங்கம் தானே எழுந்து தொப்பியில் ரவையை வைத்துக்கொண்டு வாசிக்க ஆரம்பித்துவிடும்! அவன் மிருதங்கத்துக்கு அவனிடம் நடுக்கம்; ரசிகர்களுக்கோ அவன் மிருதங்கத்தினிடம் நடுக்கம்!

வரதன் ஓடி வந்தான். எதிரில் நின்றான். "டேய், உன்னை என்ன செய்கிறேன் பாரு" என்றான். கச்சத்தைக் கட்டினான். சட்டையை முழங்கை வரையில் ஏற்றிவிட்டான். ஒரு குதி குதித்து, ஒரு பால்லா



போட்டான். "சும்மா ஒரு அரைச்சாப்பு குடுத்தேன்னா காது ரெண்டும் 'ஙொய்ய்— ஆம்மா'" என்று எதிரும் புதிருமாகத் தட்டா மாலை விளையாடி வந்தான்.

"தம்பி! உன் அரைச்சாப்பு முழுச்சாப்பு எல்லாம் மிருதங்கத்திலே காட்டு! என்னிடம் வேண்டாம். அடிப்பவனாக இருந்தால் அப்பொழுதே அடித்திருக்கமாட்டாயா?" என்று அந்த ஆள் கூறவே, வரதன், வந்தது வரட்டும் என்று அந்த ஆள்மேல் குபீரென்று பாய்ந்தான். அப்போது, "வரதா, நில்!" என்று கூறிக்கொண்டே முத்துக்குமார நட்டுவனார் வண்டியை விட்டுக் கீழே குதித்தார். வரதன் விலகினான். நட்டுவனார் அந்த ஆளின் முகத்தை மங்கிய வெளிச்சத்தில் உற்று நோக்கினார். அவர் நெற்றியில் திருநீறு துலங்கியது. வெண்மையான தாடி மார்புவரை தொங்கியது. திருடனுக்கு இருக்கவேண்டிய கொடுமைக்குப் பதிலாக முகத்தில் அருள் ஒளி நிரம்பியிருப்பதைப் பார்த்தார்.

"சாமி, நீங்கள்தானா?" என்று கூறி இரு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்தி, "கும்பிடுறேனுங்க" என்று கீழே இருந்த புழுதியையும் கவனியாமல் அவர் காலில் நெடுஞ்சாங்கிடையாக விழுந்தார் முத்துக்குமாரசாமி.

இதைப் பார்த்ததும் வடிவாம்பாள் உள்பட எல்லோரும் திகைத்தார்கள்.

தம்மை வணங்கிய முத்துக்குமாரசாமி நட்டுவனாரை அந்தப் பரதேசியார் 'திருச்சிற்றம்பலம்' என்று கூறி வாழ்த்தி, "எழுந்திரு, முத்துக்குமரு" என்றார். நட்டுவனார் எழுந்து பய பக்தியுடன் கைகட்டி வாய் புதைத்துச் சற்று நேரம் நின்றார். வண்டியிலேயே அமர்ந்து வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்த வடிவாம்பாளையும் மோகனாம்பாளையும் பார்த்து, "அய்யாவைத் தெரியாதுங்களா? பரமானந்தப் பரதேசியார்" என்று கூறவே, அந்தப் பெயர் ஒரு மின்சார சக்திபோல் எல்லோர் மனத்திலும் ஒரு மாறுதலை உண்டாக்கியது. இதுவரை பயம், சந்தேகம் ஆகிய குழப்பங்களில் தத்தளித்த மோகனாம்பாளின் முகம், சந்தோஷத்தில் மலர்ந்தது. வடிவாம்பாள் முகத்தில் இருந்த திருடர் பயம் மறைந்து சிவ அபராதம் செய்துவிட்டோமே என்ற புதுப்பயம் குடி கொண்டது. வண்டியை விட்டு இருவரும் கீழே இறங்கியதும், "குழந்தே, இப்படி வா அம்மா, சாமியாரைக் கும்பிடு" என்றார் நட்டுவனார்.

மோகனாம்பாள் பரமானந்தப் பரதேசியார் அருகில் வந்து, அவர் முகத்தை ஆவலுடன் பார்த்துவிட்டு வணங்கினாள். வடிவாம்பாளும் "என்னை மன்னிக்கணுங்க, தெரியாமெ பொம்பளைப் புத்தியிலே..." என்று சொல்லிக்கொண்டே கை கூப்பினாள். இருவரையும் பரதேசியார் தம் கைகளால் வாழ்த்திவிட்டு, "முத்துக்குமரா, இவாள் யாரப்பா?" என்று கம்பீரமான குரலில் கேட்டார்.

"இது என் சிஷ்யப் பிள்ளைங்க, மோகனாம்பாளு பேரு. இது அவுங்க தாயார். திருவாலூர் வடக்குத் தெரு வடிவாம்பாள் என்று சொல்லுவாங்க. இப்போ அழகர் கோயில்லே குழந்தை திருவிழாவுக்குப் போவுது. நடராஜப் பெருமான் அருளாலே கையும் காலும் ரொம்ப சுத்தம்" என்று தமக்கே உரிய பாஷையில் நட்டுவனார் அறிமுகம் செய்து வைக்கவே, பரதேசியார் சிரித்துக்கொண்டே, "நடராஜப் பெருமான் கிருபையாலே மனசும் சுத்தமாக இருக்கட்டும்" என்று ஆசிர்வதித்துவிட்டு, "குழந்தாய் ! பரதம் பத்து வருஷம் என்று சொல்லுவார்கள். அந்தப் பத்து வருஷத்திற்குள் நன்றாகத் தொழில் செய்து அகம் குழைந்து இறைவனை ஆடிப் பாடி அந்தக் கலையில் ஒன்றுபட்டு வாழவேண்டும்" என்றார்.

"நாலு பேர் மெச்சிக்கிறாப்போலே கொஞ்சம் பணம் காசு சேர்த்துக்கிட்டு நல்லாயிருக்கணும்னு உங்க வாயாலே சொல்லுங்க" என்று வேண்டிக்கொண்டாள் வடிவாம்பாள்.

"அம்மா, நானோ பரதேசி. பணத்தைப்பற்றி எனக்கென்ன தெரியும்? நேரமாகிறது, வண்டியில் ஏறிக்கொள்ளுங்கள்" என்று சொல்லவே, வடிவாம்பாள், "சாமியும் எங்க கூடவே வண்டியிலே வரலாமே !" என்று கேட்டுக்கொண்டாள்.

திருடன் என்று யாரைக் கண்டு பயந்தாளோ, அவரையே தன் தாய் பணிந்து வண்டியிலே ஏறிக்கொள்ள அழைத்ததைப் பார்த்த மோகனாவுக்குச் சிரிப்பு வந்தது. "அம்மா, அவர் திருடனாக இருக்கப் போகிறார் !" என்று கிண்டலாகக் கூறினாள்.

இதைக் கேட்ட சாமியார், "என்னைப் பார்த்துத் திருடன் என்று பயந்தீர்கள் அல்லவா? நானும் திருடன்தான் நம்மை ஆட்டி வைக்கும் நடராஜப் பெருமானும் திருடன்தான். உள்ளம் கவர் கள்வன் என்று அவரை நாம் பாடவில்லையா? அம்மா, நான் வண்டியில் ஏறுவதில்லை நீங்கள் புறப்படுங்கள்" என்றார்.

"ஏன் சுவாமி, எங்களோடு வண்டியில் வரக்கூடாது என்று பார்க்கிறீர்களா?" என்று வடிவாம்பாள் கேட்கவே, "எனக்கு அந்த வித்தியாசமெல்லாம் கிடையாது. உன்னைத் தாசி என்று சிறுமைப்படுத்தவோ, இந்த உடம்பைப் பரதேசி என்று பெருமைப்படுத்திக்கொள்ளவோ எனக்கு உரிமை ஏது? ஆனால் நான் வண்டியில் வர மறுத்த காரணம் இதுவல்ல. நான் ஒரு துறவி. இறைவன் அளித்த கரசரணாதி அவயவங்களால் அவனைப் பணியக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆதலால் அவன் அளித்த கால்களால் நடந்து செல்வதே சரி. என்னை வற்புறுத்தாதீர்கள்" என்று சொல்லிவிட்டு, சாமியார் பதிலுக்குக்கூடக் காத்திராமல் சாலையோடு நடந்துவிட்டார்.

சாமியார் போகும் திக்கையே நோக்கினார்கள் எல்லோரும்.



"ஏன் முத்துக்குமரு, நீ முதலிலேயே என்கிட்ட சொல்லியிருக்கப் படாது?" என்று கடிந்துகொண்டாள் வடிவாம்பாள்.

"நான் எப்படி அம்மா சொல்லுவேன். வண்டிக்குள்ளே உட்கார்ந்திருப்பது யார் என்று அவர் பார்த்ததுந்தான் எனக்கும் சந்தேகம் வந்தது. ஏதோ தெரிஞ்ச முகமா யிருக்குதேன்னு பார்த்தேன் அதுக்குள்ளேதான் நீங்க சத்தம் போட்டுட்டீங்களே ! இந்த வரதன் வேறே வந்து குஸ்திக்குக் கிளம்பிவிட்டான்."

"நல்ல வேளைக்கு நீங்க தடுத்தீங்க. இல்லாட்டி, நம்ம கைப்ளாங்குனு ஒரு முழுச் சாப்பு குடுத்திருக்கும்" என்றான் வரதன்.

"அடே, அவரு பத்தனமில்லைடா ! மகான். உன் கையை அவர் மேலே நீட்டியிருந்தால் அப்புறம் உன் கையை மடக்கவே முடியாது" என்று சொல்லிவிட்டு, வடிவாம்பாள் ஏதோ யோசித்தவளாய் நட்டுவனார் பக்கம் திரும்பி, "ஏன் தம்பி, இந்தப் பரமானந்தப் பரதேசியைப் பத்தி பலவிதமாகப் பேசிக்கிறாங்களே, அவருக்குச் சித்து விளையாட்டெல்லாம் வருமோ?" என்றாள்.

"சங்கீதத்திலே அவர் ஒரு சித்தர். அவர் பாடினால் கல்லும் உருகும்; புல்லும் பூப்பூக்கும்."

"அது கிடந்துட்டுப் போகுது முத்துக்குமரு. சித்தர்கள் எல்லாம் கல்லைத் தொட்டா பொன்னாயிடுமாமே. இவருக்கு அப்படி ஏதாவது வருமா, உனக்குத் தெரியுமா என்று கேட்கிறேன்."

மோகனா சிரித்தாள். "அம்மா, நீ பரதேசி கிட்டவே பணம் பறிக்கப் பார்க்கிறாயே !" என்றதும் எல்லாரும் கொல்லென்று சிரித்துவிட்டுத் தமது வண்டிகளில் ஏறிக்கொண்டார்கள். வண்டிகள் மறுபடியும் அழகர் கோயிலை நோக்கிப் புறப்பட்டன. "இந்தா வரதா, பின் வண்டியையும் சேர்த்தே ஓட்டிக்கிட்டு வரச் சொல்லு" என்று வடிவாம்பாள் எச்சரிக்கை செய்தாள்.

## இரண்டாவது அத்தியாயம்

## சோலைமலைத் திருவிழா



சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட நூல் என்று சொல்லப்படுவது, சிலப்பதிகாரம். ஐம் பெருங் காப்பியங்களில் தலைசிறந்த அந்த நூலில் கோவலனுக்கு மதுரை மாநகர் ஏகும் பாதையைக் கூறும்போது "திருமால் குன்றத்துச் செல்குவீராயின்" என்று திருமாலிருஞ்சோலையையும், அதில் ஓடும்

சிலம்பாறு என்னும் நூபுரகங்கையையும்பற்றிப் பாடப்பட்டிருக்கிறது சிலப்பதிகாரம், பரிபாடல், திருமுருகாற்றுப்படை முதலிய பழம்பெரும் நூல்களால் பண்டைநாள் தொட்டே பாடிப் புகழ் பெற்ற திருத்தலம் அழகர் கோயில்.

காஞ்சீபுரத்தைப் பள்ளியறையாகவும், திருவரங்கத்தை நடனசாலையாகவும், கடம்பவனத்தை நந்தவனமாகவும், திருஆரூரை ஆஸ்தான மண்டபமாகவும், வேதாரணியத்தை வெளிக் கதவாகவும், தில்லையை நாடகசாலையாகவும், மதுரையை அந்தப்புரமாகவும் கொண்ட தமிழன்னைக்குத் திருமாலிருஞ்சோலை ஒரு தமிழ்க் களஞ்சியமாகவே விளங்கி வருகின்றது.

தமிழ்த்தேனை அள்ளி அள்ளிச் சொரிந்த ஆழ்வாராதியர்கள் பன்னிருவரில் அறுவர், பைந்தமிழ் பாடிப் பணிந்தடி போற்றிய திருநகரம் திருமாலிருஞ்சோலை.

"மஞ்சுறு மாலிருஞ் சோலை நின்ற மணாளனார்
நெஞ்சம் நிறை கொண்டு போயினார்"

என்று அழகிய மணவாளனை நெஞ்சம் கனிந்து பாடுகின்றாள் ஆண்டாள்.

"ஆரமுத மானதந்தி மணவாளா
ஆறுமுக மாறிரண்டு விழியோனே
சூர்கிளை மாளவென்ற கதிர்வேலா
சோலைமலை மேவிநின்ற பெருமாளே"

என்று சந்தமிகு தமிழ் பாடி பற்பல திருப்புகழ்களால் அருணகிரிநாதர் போற்றிய ஆறுபடைவீடுகளில் ஒன்றாகிய பழமுதிர்சோலையும் இதுவே.

மதுரையிலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவில் உள்ள இந்தத் தலத்தில், பாண்டி நாட்டாரும் சோழ நாட்டாரும் நாடு வேற்றுமை பாராட்டாமல் வழிபடுவார்கள். தென்னாட்டுக்கே பெருமை அளிக்கும் திருப்பணி முறையிலும் அழகர் கோயில் திருப்பணி அதி அற்புதமானது. கோட்டையும் மலையும் கோயிலுமாக விளங்குவது இந்தத் திருத்தலம். இதை ஒருமுறை பார்த்தவர்கள் தமிழ்நாட்டின் வரலாற்றை அப்படியே அறிந்துகொள்ளலாம். ஒவ்வொரு சோழ பாண்டிய அரசர்களாலும், பின் வந்த விஜயநகர நாயக்கர்களாலும் செய்யப்பட்ட திருப்பணிகளை இங்கே பார்க்கலாம். சப்தஸ்வர தூண்களும், பொன்வேய்ந்த மண்டபங்களும், தொண்டைமான் கோபுரமும், பச்சை போர்த்த திருமலையும் பார்க்கப் பார்க்கத் திகட்டாத காட்சிகளாகும். இந்தக் கோயில், பெருமாள் கோயில் ஆயினும் இங்கு விபூதி பிரசாதமும் கொடுப்பார்கள். அந்த நாட்டிலுள்ள கள்ளர், மறவர் முதலிய எல்லா மக்களும்



பயபக்தியுடன் வணங்கும் பதினெட்டாம் படியான் சந்நிதியும் இங்கே அமைந்திருப்பதால் சைவர், வைஷ்ணவர், உயர் குலத்தோர், தாழ்ந்தவர் என்னும் பேதங்கள் ஏதுமில்லாமல் எல்லோரும் வணங்கும் திருத்தலம் இது.

இன்றைக்கு ஆறாம் திருநாள். உபயக்காரரால் இதற்கென்றே விசேஷமாய் ஜோடிக்கப்பட்ட விமானத்தில் அழகர் எழுந்தருளினார். அழகாய் அலங்கரிக்கப்பட்ட அந்த விமானத்தில் தந்தம் போல் பிரகாசிக்கும் தென்னங்குருத்தின்மேல் வெற்றிலையால் கிளிகளும், செம்பரத்தைப் பூவினால் செய்த சக்கரங்களும், மல்லிகை, முல்லை முதலிய அரும்புகளாலேயே அமைக்கப்பட்ட சங்குகளும், இன்னும் மற்ற மலர்களால் செய்யப்பட்ட மான் மயில் முதலிய அலங்காரங்களும், வருவார் போவார் கண்களையெல்லாம் கவர்ந்தன. காலை முதலே வெளியூர்களிலிருந்து ஏராளமான கிராமத்து மக்கள் குழந்தை குட்டிகளுடன் மொட்டை வண்டிகளிலும், கூண்டு வண்டிகளிலும் வந்து இறங்க, இன்னும் பல இளைஞர்கள் ரேக்ளா, கேணித்தட்டு முதலிய வண்டிகளில் தமது பந்தயக் காளைகளைப் பூட்டி ஜில் ஜில் என்று ஓட்டி வந்தார்கள். எண்ணெய், சீப்பு இரண்டையுமே கண்டறியாத பல கிராமத்துப் பெண்கள் திருவிழாவுக்கென்றே தலையில் எண்ணெய் தடவி வாரிக்கொண்டு, எவ்வளவு வாரியும் படியாத தலையும், வாரி முடியாத கொண்டையுமாய் முகமெல்லாம் எண்ணெய் வழிய, தங்கள் கழுத்திலுள்ள தாலிச் சரடுகளில் செவ்வந்திப் பூவை அள்ளிச் செருகியிருந்தார்கள். தேரும் திருநாளும் யாருக்கும் குதூகலம் அளிப்பவையாதலால் இளம் காளையரும், இள நங்கையரும் ஒன்றுசேர்ந்து வடக்குத் தெருவின் மூலையில் அடிக்கும் வெயிலையும் பாராமல் அள்ளிச் செருகிய கொண்டை ஆட, காலில் அணிந்த தண்டைகள் தாளம் போட, கும்மி அடித்துக்கொண்டு அவரவர் கடைக்கண்களால் தங்கள் காதலன் காதலிமார்களைப் பார்த்த வண்ணம்,

"சாந்துப் பொட்டடி நீஎனக்கு - நல்ல
சந்தனப் பொட்டடி நானுனக்கு.
இந்த நிலாவுக்கும் சந்தனப் பொட்டுக்கும்
ஏற்குமோடி முத்து வீராயி."

என்று பாடுவதும், சிரிப்பதும், ஆடுவதுமாகப் பொழுதைக் கழித்தார்கள்.

"மாயன் அழகு மலைமேலே - என்றும்
மல்லிகைப் பூவாசம் வீசுதடி
நாயகனவன்புக ழேபாடி - இள
நங்கைய ரேகும்மி யடியுங்கடி !

நந்தன் மதலையைக் கும்பிடுவோம் - அந்த
நாரணன் தாளையே நம்பிடுவோம்
செந்திரு மார்பனைச் சுந்தர ராஜனை
செந்தமிழ் பாடியே கும்மியடி.

சாத்தின கதவு திறக்காமல் - என்றும்
சந்தனக் காப்புக் கலையாமல்
சத்தியம் காக்கும் கருப்பண்ண சாமியை
சரணமென் றேகும்மி யடியுங்கடி.

தோளழ கன்அவன் தாளழகன் - முடி
தூக்கிச் சொருகும் குழலழகன்
சோலைமலைத் திருமாலை வணங்கியே
சுந்தர ராஜனைக் கும்மியடி.

கன்னாடிக் கன்னத்தில் வேர்க்குதடி - உந்தன்
கடைக்கண்ணு எங்கேயோ பார்க்குதடி
முன்னாடி சாமியைக் கும்பிடடி - பின்னே
முத்துப்போல் புருசன் வருவானடி."

என்று மற்றொரு புறத்தில் பெண்கள் கை வளை குலுங்க, கும்மியடித்து ஆடிப் பாடிக்கொண்டிருந்தனர்.

இன்னொரு புறத்தில் சில பக்தர்கள் உடம்பெல்லாம் இரத்தம் ஒழுகத் தங்கள் கையிலிருந்த சாட்டைகளால் தங்கள் உடம்பில் சரேல் சரேல் என்று அடித்துக்கொண்டு 'அழகுமலைக் கோவிந்தம்' என்று சொல்லிக்கொண்டே வீதிகளைச் சுற்றி வந்தார்கள்.

ஊரின் வேறொரு புறத்தில் பூத ஆட்டக்காரன் ஆடிக்கொண்டிருந்தான். சிறு குழந்தைகளை இடுப்பில் வைத்த தாய்மார்கள். 'இதோ பார் பூதம், அதோ பார் பூதம்' என்று சொல்வதும், யதேச்சையாகப் பக்கத்திலே போகும் உடல் பெருத்த மனிதர்கள், இதைக் கேட்டுவிட்டுத் தங்களைத்தான் சொல்கிறார்களோ என்ற எண்ணத்தில் அந்தத் தாய்மார்களின் முகத்தை வெறுப்புடன் பார்ப்பதுமாக இருந்தார்கள்.

வீதி ஓரத்தில், " வை ராஜா வை ! ஒரு அணா வச்சால் ஒரு அணா, இரண்டணா வச்சால், இரண்டணா" என்று கையில் மணி அடித்தபடி சில சூதாடும் கடைக்காரர்கள் கடைகளை அமைத்திருந்தார்கள்.

மற்றொரு புறம் ஒரு மிட்டாய்க் கடை அதில் சிவப்பு, பச்சை, ஊதா, கிச்சிலி முதலிய வர்ணங்களில் மைசூர்ப்பாகு போன்ற கட்டிகளை அடுக்கி வைத்திருந்தான். காடா விளக்குகளின் மண்ணெண்ணெய்ப் புகை பட்டு அதில் ஒரு அடுக்கு மைசூர்ப்பாகுக் கட்டிகள் தாமே கறுப்பு வர்ணத்தைப் பூசிக்கொண்டிருந்தன ! இந்தக்



கடையைப் பார்த்தவண்ணம் திறந்த வாய் திறந்தபடி பலர் நின்று கொண்டிருந்தார்கள். ஆனால், பிறர் மெச்சுவதற்காக இதை வாங்கித் தின்ற ஒருவனோ தொண்டையில் கரகரப்புத் தாங்காமல், மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தவித்துக்கொண்டிருந்தான்.

அப்போது கூட்டத்தில் ஒரு பரபரப்பு உண்டாயிற்று எல்லோரும் திரும்பினார்கள். உபயக்கார ராமன் செட்டியாரும் அவர் மனைவி அழகம்மையாச்சியும் இரண்டு மயிலைக் காளைகள் பூட்டி அழகான பெட்டி வண்டியில் வந்து இறங்கினார்கள்.

ராமன் செட்டியார் பெரிய தனவந்தர். புண்ணியச் செயல்களில் பெரிதும் ஈடுபட்டவர் அதிலும் இவ்வருஷம் தம் அருமை மைந்தனுக்கு மகன் பிறந்திருப்பதை முன்னிட்டு அழகுமலையானுக்கு ஆறாம் திருநாள் மண்டகப்படியைச் செய்ய முன் வந்திருந்தார். கோயிலார் நடத்த வேண்டிய இந்த ஆறாம் நாள் திருவிழாவை ராமன் செட்டியார் தமக்கு விட்டுக்கொடுக்கும்படி தேவஸ்தானத்திற்குக் காணிக்கை செலுத்தி உபயத்தை நடத்துவதால், திருவிழாவுக்கு என்றே திருப்புகழ் கோஷ்டி, திவ்யப்பிரபந்த கோஷ்டி, வேதபாராயணக் காரர்கள், பொய்க்கால் குதிரை, தஞ்சாவூர்ப் பியான்டு முதலியவைகளுக்கெல்லாம் பெரிய பெரிய கைகளை அமர்த்தியதோடு, நல்ல மேளம், ஸ்பெஷல் சதிர், வாண வேடிக்கை இவைகளுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்.

தம்மால் நடத்தப்படும் திருவிழாவைப் பார்க்க வருபவர்கள் வெயிலில் தவிக்கக்கூடாது என்பதற்காக புஷ்கரணியின் நாலு மூலைகளிலும் கீற்றுக் கொட்டகைகள் போட்டு, அங்கே ஜனங்களைத் தங்கும்படி செய்து அவர்களுக்காகத் தண்ணீர்ப் பந்தல்களும் அமைத்திருந்தார். கீழே புது மணல் பரப்பி, அதன் ஓரத்தில் பசும்புல் கிராய்களை அடுக்கி, அவைகளின் நடுவில் நன்கு காய வைத்த புதுச் சால்களில் வடி கட்டிய நீரை நிரப்பி, அதில் பச்சைக் கற்பூரம், ஏலக்காய், குங்குமப்பூ, விளாமிச்சை வேர் முதலியவைகளைப் பொதி கட்டிப் போட்டு நறுமணமூட்டி, பல வரிசைப் பானைகளில், கடுகு தாளித்துக் கொட்டிய நீர்மோரும், சுக்கைத் தட்டிப்போட்ட பானகமும், சுண்டல், மாங்காய் ஊறுகாய் போன்ற சிறு தீனிகளும் வைத்து, வருவார் போவாரின் பசித்த முகம் பார்த்து, பரிமாறுவதற்கும் ஆள்களை நியமித்திருந்தார்.

மாலை நேரம் ஆக ஆகக் கூட்டம் ஊரே தாங்க முடியவில்லை எங்கு பார்த்தாலும் கியாஸ் லைட்டுகளும், கடைக்குக் கடை பெரிய மண்ணெண்ணெய் விளக்குகளும் சேர்ந்து ஊரே பெரிய தீபாலங்காரத்துடன் ஜகஜ்ஜோதியாய் பிரகாசித்துக்கொண்டிருந்தது.

மரத்தடிகளிலும், மண்டபங்களிலும், திருக்குளத்தின் படித்துறைகளிலும் அங்கும் இங்குமாகக் கூட்டம் கூட்டமாய் மக்கள் எதையோ

எதிர்பார்த்தவண்ணம் இருந்தார்கள். அப்போது கோயில் மணி டணார் டணார் என்று முழங்கியது. கூடவே தேன்மாரி பொழிந்தது போல் திவ்யமான நாதஸ்வர சங்கீதமும் கேட்க ஆரம்பித்தது.

நாதஸ்வர ஒலி கேட்டதுமே மக்கள் கூட்டம் நெருக்கியடித்துக் கொண்டு கோயிலை நோக்கி ஓடி வர ஆரம்பித்தது. யானையை வேடிக்கை பார்த்தவர்கள் அதை விட்டு ஓடி வந்தார்கள். படித்துறையில் படுத்துக் காற்று வாங்கிக்கொண்டிருந்தவர்கள் "மேளக் கச்சேரி ஆரம்பிச்சுட்டாங்கடா" என்று சொல்லிக்கொண்டே அவசரத்தில் கீழே விரித்திருந்த துண்டுகளைக்கூட எடுக்க மறந்து ஓடினார்கள். விருந்து சாப்பிட்டுவிட்டு மார் நிறைய சந்தனத்தைப் பூசிக்கொண்டு, வாயில் வெற்றிலை பாக்குடன் சீட்டாடிக்கொண்டிருந்த பேர்கள், தங்கள் கைகளில் இருந்த எழு துருப்புகளையுங்கூட விட்டெறிந்துவிட்டு ஓடி வந்தார்கள்.

வளை அடுக்கிக்கொண்டிருந்த பெண்கள், ஒரு கையில் அடுக்கிய வளைகளோடு அவசரமாகப் புறப்படவே, வளையல்காரனும் 'அம்மா, அம்மா' என்று கூப்பிட்டுக்கொண்டு கூடவே ஓடி வந்தான். இந்த ஊரில் இத்தனை மக்கள் எங்கே இவ்வளவு நேரம் இருந்தார்கள் என்று கேட்கும் வண்ணம் பதினாயிரக்கணக்கானவர்கள் கூட்டம். சந்நிதி வாசல் கொள்ளவில்லை. முன்பே வந்து முதலிடம் பார்த்துக் கொண்டவர்கள், அலங்கார மண்டபம் முழுதும் அமர்ந்திருந்தார்கள்.

கூட்டம் எள் போட்டால் எள் விழாது. அதன் நடுவே இருந்து நாதஸ்வரத்தில் பந்துவராளி ராகத்தை அற்புதமாக வாசித்துக் கொண்டிருந்த இளைஞனையே எல்லோரும் கண் கொட்டாமல் பார்த்தார்கள்.

அடேயப்பா. அவன் வாசிப்பில்தான் என்ன இனிமை! அவன் நாதஸ்வரம் வாசித்தான் என்று சொல்வதைக்காட்டிலும் தேன் அருவி பாய்வது போல் அமிருத தாரையாகப் பொழிந்துகொண்டிருந்தானென்றுதான் சொல்லவேண்டும். இதைப் பார்த்த பலர் 'இந்த வயதில் இவ்வளவு வித்தையா!' என்று மூக்கில் விரல் வைத்தார்கள். அவனுக்கு முன் அமர்ந்து, கண்ணன் குழலிசையில் ஆயர்பாடி மக்கள் மயங்கியது போல் சிலர் தம்மை மறந்து தலையை ஆட்டிக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு முறையும் அவன் நாதஸ்வரம் திரும்பின திசையெல்லாம் தலைகள் திரும்பின. வாசிப்புக்கேற்றாற் போல் பையனும் அழகாக இருந்தான். சுமார் இருபத்துநாலு வயது சொல்லலாம். சிவந்த மேனி, ஜவ்வாதுப் பொட்டு, வைரக் கடுக்கன், வீரச் சங்கிலி, நாதஸ்வரத்தில் கட்டித் தொங்கிய தங்கமணி, இன்னும் பல பதக்கங்கள்; இவைகளோடு அவன் வாசிப்பும் அபாரமாக இருந்துவிடவே மண்டபத்தில் தாள முடியாத கூட்டம் கூடியிருந்தது. அத்துடன் அந்த ஆயிரக்கணக்கான மக்கள், சிறிதும் சந்தடி செய்யாமல், நின்றவர்கள்



நின்றபடியும், உட்கார்ந்தவர்கள் உட்கார்ந்தபடியும் அவன் இசையில் மெய் மறந்து சொக்கிப்போய் இருந்தார்கள்.

அந்த இளைஞனின் பெயர் சண்முகசுந்தரம். தஞ்சை ஜில்லாவிலுள்ள சிக்கலில் பிறந்தவன். அக்காலத்தில் பிரபலமாக இருந்த செம்பொன்னார் கோயில் ராமசாமி நாயனக்காரரிடம் வித்தை பயின்று திமிரி நாதஸ்வர வாசிப்பில் தனக்குத் தானே நிகராய் விளங்கி வந்தான். அவனுக்குத் திருக்களாவூர் முத்துராக்குவின் தவிலும் அனுசரணையாக அமைந்திருந்தது. சண்முகசுந்தரம் ராகம் வாசிக்கும் பாணியே அலாதி. காவேரிக் கரையின் சங்கீத மேதையும் தஞ்சாவூர்ப் பாணியும் அவனிடம் பரிபூர்ணமாகக் குடிகொண்டிருந்தன.

நாதஸ்வரத்துக்குரிய ராஜபாட்டையோடு, அவன் வாய்ப்பாட்டிலும் வல்லவனாதலால், கமகங்களும் பிர்க்காக்களும் தேசல் இல்லாமல் குண்டு குண்டாய் அவன் வாசிப்பில் அமைந்திருந்தன.

சங்கீத மும்மணிகளை ஈன்றெடுத்த சோழ மண்டலம், அவர்களுடைய சங்கீதத்தைப் பரப்புவதற்கு, அக்காலத்தில் பல மேதைகளை ஈன்றிருந்தது. அவர்களில் ஒருவர் செம்பொன்னார் கோயில் ராமசாமி. அவரிடம் சிறு வயதில் சண்முகசுந்தரம் வித்தை பயின்று அவர் காலால் இட்ட வேலையைத் தலையால் செய்து வந்தான். சில நாளில் "எங்கேடா சண்முகம்?" என்று எப்போதும் குரு கேட்கும் அளவுக்குக் குருவின் பரிபூரண அன்புக்குப் பாத்திரமாகி விட்டான் சண்முகசுந்தரம். இவனுக்கு அபரிமிதமாக வாசிக்கும் திறமை வந்ததைக் கண்டவுடன் குரு மகிழ்ந்தார். ஒரு நாள் குருவே அவன் கையில் வாத்தியத்தை எடுத்துக்கொடுத்து, "தம்பி! நாதஸ்வரம் ராஜவாத்தியம். ஒரே சமயத்தில் லட்சக்கணக்கான மக்களுக்குச் செவிக்கு ஆனந்தத்தை அளிக்கக்கூடியது. இதைக் கையாண்டு பாமரரும் பண்டிதரும் போற்ற வாழ்ந்து வருவாய்" என்று ஆசிர்வதித்தார்.

அன்று தொடங்கிய திக் விஜயம். சண்முகசுந்தரத்தின் புகழ் தமிழ்ச் சீமையெங்கும் பரவியது. அவன் எத்தனையோ பேர்களின் அருமைக்குப் பாத்திரமானான். வித்தையில் பலத்த போட்டி ஏற்பட்டது. எல்லாவற்றையும் வென்று இரண்டே வருஷங்களில் நாதஸ்வரக்காரர்களுக்கிடையேகூட பலர், "சிக்கல் தம்பி வாசிக்கணும், கேட்கணும்" என்று சொல்லும் அளவுக்கு உயர்ந்தான்.

இக்காலத்தில் இருப்பது போல் அப்போது ரேடியோக்கள் இல்லை. கிராமபோன் பிளேட்டுகள்கூட அதிகம் வரவில்லை. பிளேட்டிலே பாட்டைக் கொடுத்தால் தரக்குறைவான இடங்களிலெல்லாம் தங்கள் குரல் கேட்கும் என்றும், தங்கள் பாட்டை நடுத்தெருவில் வைத்துவிடுவார்கள் என்றும் சங்கீதக்காரர்களிடையே ஒரு மனோபாவம் இருந்து வந்ததால் பெரும்பான்மையானவர்கள்

பினேட்டுக் கொடுக்க முன்வருவதில்லை. ஆதலால் சங்கீதக் கச்சேரிகளை நேரில் கேட்டால்தான் உண்டு என்ற நிலை அப்போது இருந்தது.

அக்காலத்தில் வித்வான்கள் தங்கள் வித்தையையும் வித்தையின் கௌரவத்தையும் மட்டுமே கருத்தில் கொண்டவர்களாய் நாதோ பாசனை செய்து வந்தார்கள். காசுக்கு விலை கூறும் கடைச்சரக்கல்ல சங்கீதம் என்றும் நம்பி வந்தார்கள். ஜனங்கள் வித்துவான்களை மதித்தார்கள். வித்துவான்கள் வித்தையைப் போற்றினார்கள். கச்சேரிகளுக்கு டிக்கட் வைப்பதும், எதிரில் ஆசனம் போட்டு அமர்வதும், வித்துவான் பாடும்போது அவர் முகத்துக்கு எதிரே தினசரிப் பத்திரிகையைப் பிரித்துப் படிப்பதும், கச்சேரி நடுவில் 'மங்களம் பாடு' என்று சீட்டு எழுதிக் கொடுப்பதும் ஆகிய ஜனநாயக முறைகளை அப்போது யாரும் கையாண்டதில்லை.

எங்கு கச்சேரிகள் நடந்தாலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடுவார்கள். நிசப்தமாக இருந்து கேட்பார்கள். நன்றாயிருந்தால் அதைப்பற்றியே பேசுவார்கள். அந்த வித்துவானைக் கொண்டாடுவார்கள். இம்மாதிரி சங்கீத மதிப்பு தலை தூக்கி நின்ற காலத்தில்தான் சண்முகசுந்தரத்தின் திக் விஜயம் ஆரம்பமாயிற்று. சண்முகசுந்தரத்தை ஒன்று, கச்சேரி மேடையில் பார்க்கலாம்; அல்லது ரயிலில் பார்க்கலாமே தவிர, வீட்டில் ஒரு நாளைக்காவது அவன் கச்சேரியில்லாமல் சும்மா இருந்தான் என்ற பேச்சே கிடையாது.

சிறு வயதில் மேதா விலாசம் பெற்றவர்கள் என்றாலே அவர்களுக்கு எதிரிடையான சில குணங்களும் எப்படியோ வந்துவிடுகின்றன. சண்முகசுந்தரமும் இதற்கு விதிவிலக்கல்ல.

சங்கீத வித்தையில் மனோதர்மம் மிக்கவர்கள் சில சமயங்களில் அபூர்வ ராகங்களைப் பாடுவார்கள். இப்படியே சண்முகசுந்தரமும் ஒருநாள் ரிஷபப் பிரியா ராகத்தை ஆலாபனம் செய்தான். பைரவி, கல்யாணி, தோடி, காம்போதியையே கேட்டு ரசித்த ஒருவருக்கு ரிஷபப் பிரியா என்று ஒரு ராகம் இருப்பதாகவே தெரியவில்லை. "இந்த ராகத்தின் பெயர் என்ன?" என்று கேட்டார் அந்த ரசிகர். சண்முகம் ரசித்து வாசிப்பதற்கு இடையூறாக அவர் அடிக்கடி இதைக் கேட்கவே, "சுவாமி! இங்கே என்னைத் தொந்தரவு செய்யாதீங்க! ராக விபோதம் புஸ்தகத்தைப் பாருங்கள்" என்று பதில் சொல்லி விட்டான். இதிலிருந்து அவனுக்கு அதிகப்பிரசங்கி என்றும், ரசிகர்களை மதிப்பதில்லை என்றும் கெட்ட பெயர் ஏற்பட்டது.

ஒருநாள் ஒரு கல்யாண வீட்டில் மேலே பீதாம்பரம் போட்டுக் கொண்டு நாதஸ்வரம் வாசித்துக்கொண்டிருந்தான்.

அந்தப் பீதாம்பரம் அவனுடைய குருநாதர் அளித்த பரிசு; ஆதலால் எந்தக் கச்சேரியிலும் சற்று நேரம் அதை மேலே போட்டுக்



கொள்ளுவதை ஒரு வழக்கமாய்க் கொண்டிருந்தான். கல்யாண வீட்டிலும் இதைப் போட்டுக்கொண்டுதான் வாசித்தான். ஆனால், பிள்ளை வீட்டுக்காரர் பெண் வீட்டுக்காரரிடம் சட்டம் பேச ஆரம்பித்தார். "என்னையா மனிதர் நீர்? மாப்பிள்ளைக்குக் காசி யாத்திரைக்கு நல்ல குடை தரவில்லை; கறுப்பு ஸில்பர் வேண்டும் என்று கேட்டேன். அதை வாங்கித் தரவில்லை; ரசத்திலே உப்பு அதிகம்; காப்பி எங்கள் மாட்டுக்கு வைக்கும் கழுநீர் போல் இருக்கிறது; எங்களை அவமானம் செய்வதாகவா உத்தேசம்? உங்கள் மேளக்காரன்கூட எங்களை மதிக்கவில்லை. இதோ பாரும் தோளில் துண்டு போட்டுக்கொண்டு வாசிக்கிறான்" என்று தாலி கட்டும் முன் சண்டை போட ஆரம்பித்தார்.

விஷயம் வேறொன்றுமில்லை. வரதட்சணைப் பணத்தில் இருநூறு ரூபாய் பாக்கி. பெண் வீட்டுக்காரரோ, 'இந்த சம்பந்தி இப்போதே இவ்வளவு கொடுமை செய்கிறாரே, நாளைக்கு நமது பெண் அவர் வீட்டுக்குப் போனால் என்ன பாடு படுத்துவாரோ! இந்த மாப்பிள்ளைதான் காலையிலேயே காசி யாத்திரை புறப்பட்டானே. அவன்பாட்டிலே காசிக்கே போகும்படி விட்டோமா? பாதையில் நின்று வம்பை விலைக்கு வாங்கிக் கொண்டோமே' என்று எண்ணிப் பெண்ணைப் பெற்றவர் இருக்க வேண்டிய நிலையில் ஊமையாக நின்றார்.

"என்னங்காணும் பேச மாட்டேங்கிறீர்? இப்பவே அந்த மேளக்காரன் மேல்வேஷ்டியை எடுக்கப்போறானா இல்லையா?" என்று சம்பந்தி இரைந்து பேசவே, இதைக் கவனித்த சண்முகசுந்தரம் பைரவியைப் பாதியில் நிறுத்திவிட்டு, "ஐயா இங்கே வாரும்" என்றான். சம்பந்தி திகைத்தார்; அருகில் வந்தார். "உங்களுக்குப் பாக்கி எவ்வளவு, இருநூறுதானே? அதைக் கொடுத்துவிட்டால் நான் முண்டாசு கட்டிக்கொண்டு வாசிக்கலாமா?" என்று கூறி, தன் பணம் இருநூறு ரூபாயை எடுத்துப் போட்டான். தலையில் முண்டாசைக் கட்டினான். "பவமானா சுதடுபெட்டு" என்று மங்களம் வாசித்து முடித்துவிட்டான்.

சம்பந்தியும் சம்பந்தியும் பிறகு ஒத்துப்போய்விட்டார்கள். மேளக்கார சண்முகசுந்தரத்தையோ பல நாள்கள்வரை யாரும் கல்யாணக் கச்சேரிக்கு அழைப்பதில்லை. துடுக்கு என்பார்கள்; கர்வம் என்பார்கள்; "ஐயோ! அவனா? குறித்த நாளில் வரமாட்டானே, வந்தாலும் வாசிக்கமாட்டானே, வாசித்தாலும் ஏமாத்தி விடுவானே" என்பார்கள். ஆனால் இவர்கள் எல்லோரும் அந்தச் சண்முகசுந்தரம் வாயில் சீவாளியை வைக்க ஆரம்பித்துவிட்டானானால் மயங்கி விழுந்து, "அற்புதம்! அற்புதம்! அப்பொழுதே சொன்னேனே" என்று ஆடி விழுவார்கள்.

அதிலும் இன்றைக்கு சண்முகசுந்தரத்தின் வாசிப்பு அழகர் கோயிலின் ஆறாம் திருநாளைக்கே அழகு செய்தது; அபாரமாய் அமைந்திருந்தது. அதற்குக் காரணம், கூடியிருந்த பதினாயிரக் கணக்கான மக்கள் கூட்டமா, அல்லது அவனுக்கெதிரில் முதல் வரிசையில் அமர்ந்து விரலைத் தட்டித் தாளம் போட்டுக்கொண்டு, நல்ல சங்கதிகள் விழும்போதெல்லாம் இரு கைகளையும் உயரக் கூப்பி, "முருகா முருகா, அப்பனே நடக்கட்டும்" என்று கூறிப் பரமானந்தமாகச் சங்கீதத்தை அனுபவிக்கும் அந்தப் பரமானந்தப் பரதேசியார்தான் காரணமா? அல்லது தனக்கு ஏராளமான சன்மானத்தைத் தந்து வாசிக்கச் சொல்லியிருக்கும் உபயக்காரர்தான் காரணமா?

யாருக்காகத்தான் இவ்வளவு அற்புதமாக வாசிக்கிறான்? அதோ அவன் முகத்தையே பார்ப்போம். அடிக்கடி அவன் கண்கள் எதிரில் இருக்கும் கூட்டத்தில் ஒருவரைப் பார்க்கின்றனவே! உடனே தவுல்காரரும் சண்முகமும் ஒருவரையொருவர் பார்த்துக் கேலியாய்ப் புன்னகை வேறு செய்துகொள்கிறார்கள்! இதோ சண்முகசுந்தரத்தின் கண்கள் மீண்டும் அந்தப் பக்கம் திரும்புகிறபடியால் நாமும் நமது பார்வையை அந்தப் பக்கம் திருப்புவோம். ஆஹா! கண்கள் கூசுகின்றனவே, ரங்கோன் வைரங்களின் ஒளி! யார் அந்த அம்மாள்?

மூன்றாவது அத்தியாயம்

## ஜில் ஜில் ரமாமணி



சண்முகசுந்தரம் உண்மையிலேயே யாருக்காகத்தான் இவ்வளவு அற்புதமாக வாசிக்கிறான்? தென்றல் யாருக்காக வீசுகிறது? தேன் யாருக்காக இனிக்கிறது? மலர் யாருக்காக மலர்கிறது? கடவுள் யாருக்காகப் படைப்புத் தொழில் செய்கிறார்? இவைகளுக்குத் தகுந்த விளக்கம் கிடைத்தால்தான், கலைஞனும் யாருக்காகக் கலையில் ஈடுபடுகிறான் என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும்! காம்போதி வேண்டுமா, கைநிறையப் பொன் வேண்டுமா, என்று கேட்டால் நிச்சயம் சண்முகசுந்தரம் காம்போதியையே விரும்புவான். அதுதான் அருங்கலையுள்ளம். இதிலிருந்து அவன் வாசித்தது அவனுடைய ஆத்மானந்தத்திற்காகவே என்ற முடிவுக்கு வருகிறோம். ஆனால், கலையிலே அப்படி ஈடுபட்டிருப்பவனுக்குச் சிரிப்பு வந்தது



சிரித்துக்கொண்டார்கள்? அவர்கள் நயன பாஷையில் எதைப்பற்றிப் பேசிக்கொண்டார்கள்? அவன் அடிக்கடி திரும்பிப் பார்த்த அந்த 'ரங்கூன் வைரம்' யார்?

அவள் யாரென்று அவனுக்குத் தெரியும்! அவள் பெயர் ஜில் ஜில் ரமாமணி! முகத்தில் அரிதாரத்தையும், முத்து வெள்ளையையும் பூசிக்கொண்டு, மதுரைப் புது மண்டபத்தில் ஐந்து ரூபாய்க்கு வாங்கி அணிந்த வைர நகைகளுடன், தெருவில் சதிராட வந்திருக்கும் அந்த ரமாமணியைக் கச்சேரி மேடைக்கு எதிரில் கண்டவுடன், அவன் நாதோபாசனை கலைந்தது. ரமாமணி வாய்த்துடுக்கானவள். அவள் ஆட்டமோ பிடித்தவர்களுக்குத்தான் பிடிக்கும். ஒரு பயில்வானுக்குரிய பந்தம் விளையாட்டு, கத்தி விளையாட்டு முதலிய ஆட்டமெல்லாம் ஆடுவாள் ஜில் ஜில் ரமாமணி.

'சாமி புறப்படும்போது, நம்முடைய அற்புதமான வாசிப்புக்குப் பிறகு இவளுடைய ஆட்டமா நடக்கப் போகிறது! அம்மம்மா! இவள் தெருவில் தொம், தொம்மென்று குதிப்பாளே!' என்று எண்ணியதும் அவனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அவன் குணத்தை அறிந்தவர்கள் இனிமேல் அவனுக்கு வாசிப்பு ஓடாது என்பதை யூகித்திருப்பார்கள்.

யூகம் என்ன? இதோ சண்முகசுந்தரம் மங்களம் ஊதிவிட்டான். இதுவரை பசியையும் பாராமல் நாதஸ்வரத்தில் மயங்கி இருந்த மக்கள் கூட்டம் மளமளவென்று கலைய ஆரம்பித்தது. நாதஸ்வரத்தை வாங்கி, தாளக்காரப் பையன் உறையில் போட்டுக் கட்டினான். தன் உடம்பை ஒரு துவாலையால் துடைத்துக்கொண்டே நடந்தான் சண்முகசுந்தரம். அவன் பந்தலுக்கு வெளியே காற்றாட வந்து நின்றதும் தாளக்காரப் பையன் வெற்றிலைப் பெட்டியைத் திறந்து அதிலிருந்து ஒரு கொட்டைப் பாக்கை எடுத்துச் சீவினான்.

தவுல்கார முத்துராக்கு, குடுமியைத் தட்டி அள்ளி முடிந்துகொண்டே, கீழே விழுந்த கொண்டை ஊசியைத் தேடிக்கொண்டிருந்தான்.

பையன் பாக்கைச் சீவி சண்முகத்திடம் கொடுக்கப் போன சமயம் "கும்பிடறேனுங்க" என்று எதிரில் வந்து நின்றாள் ரமாமணி. அவளுடைய முகத்திலிருந்த அரிதாரத்தையும், 'கியாஸ் லைட்டு' வெளிச்சத்தில் பளபளவென்று மின்னும் காக்காய்ப்பொன் பொடிகளையும், புதுமண்டபம் வைர நகைகளையும் பார்த்ததும் சண்முகசுந்தரத்துக்குச் சிரிப்பே வந்துவிட்டது. வாய்விட்டுச் சிரித்தான்.

"என்னங்க சிரிக்கிறீங்க?" என்று நாணிக் கோணி உடம்பை ஒரு நொடிப்பு நொடித்துக்கொண்டாள் ரமாமணி.

"இங்கேயும் நீ வந்துட்டியா?" என்றான் சண்முகசுந்தரம்.

"அதென்னங்க அப்படிச் சொல்லிட்டீங்க? இப்போ எந்த ஊராயிருந்தாலும் முன்னாலே நான் புறப்பட்டாத்தானே சாமி புறப்படும்? இந்தாங்க, வெத்திலை போடுங்க" என்று வெள்ளி முலாம் பூசிய வெத்திலைப் பெட்டியை நீட்டினான். பாவம், அந்த வெத்திலைப் பெட்டி தரையில் வைத்து இழுபட்டு இழுபட்டு அடிப்பாகம் பித்தளையாகவும் மேல்பாகம் வெள்ளியாகவும் விளங்கியது. முகம் ஒரு நிறமாயும் கை ஒரு நிறமாயும் இருக்கும் ஜில்ஜில் ரமாமணியைப் போலவே அதுவும் காட்சியளித்தது.

'இவன் பேச ஆரம்பித்தால் விடமாட்டானே! என்ன செய்வது?' என்று ஒரு வழியும் தோன்றாமல் சண்முகசுந்தரம் திண்டாடுகையில், "தம்பி! வூட்டுக்குப் போவலாமா?" என்று கேட்டுக்கொண்டே உதவிக்கு வந்து சேர்ந்தான் ஒத்துக்கார தருமன்.

"அட என்ன அவசரங்க, துத்திக்காரரே" என்றாள் ரமாமணி.

"துத்திக்காரர் இல்லை, தங்கச்சி! ஒத்து நாயனக்காரர்னு சொல்லு!" என்று கௌரவத்தை விடாமல் பிடித்துக்கொண்டான் தருமன்.

ஒத்துக்கார தருமனும் ஒரு காலத்தில் நாதசுரம் வாசித்தவன்தான். அப்போது சுருதியோடு சேர்ந்து வாசிக்காத பலன் இப்போது அவனை ஒத்துக்காரனாக்கிவிட்டது. "இரு, அண்ணே! அது வெத்திலையைப் போட்டுக்கட்டும்" என்றாள் ரமாமணி.

"இல்லை, சின்னப் பொண்ணு! தம்பி இப்போ வூட்டுக்குப் போனாத்தானே சுவாமி புறப்பாட்டுக்கு வாசிக்க வரலாம்."

சண்முகம் சற்றுக் குறும்புக்காரனாதலால், "என்ன தருமண்ணே, இது உனக்குத் தருமமா? ரமாமணியோடு கொஞ்ச நேரம் பேசவிடமாட்டேங்கிறயே! இந்தா பார் ஜில்லு! நீ இங்கேயே நில்லு! நான் ஜாகைக்குப் போய் ஒரு எட்டிலே வந்துடறேன். சாமிக்கு முன்னாலே நான் ஊதி முடிச்ச ஒன் ஆட்டமும் பார்க்கணுமில்லே? இப்ப பேச்சிலே புடிச்சா பொழுது விடிஞ்சிடுமே! சாமி புறப்பட வேண்டாம்?" என்று கூறவுமே, தன் ஆட்டத்தைப் பார்க்கச் சண்முகம் வரப்போகிறான் என்ற சந்தோஷத்தில் ஜில்ஜில் ரமாமணி, "அதுவும் நெசந்தான். வெத்திலையைப் போட்டுக்கிட்டுப் புறப்படுங்க" என்று சொல்லும் சமயம், "பொட்டியிலே வாசனைப் பாக்கு இருக்குதா?" என்று கேட்டுக்கொண்டே ஒரு பிரமுகர் எதிரில் வந்து நின்றார்.

"இருந்தால் என்ன, கொடுக்கணுமோ" என்று துடுக்காய்க் கேட்கப்போன ரமாமணி, அந்தப் பிரமுகரின் முகத்தைப் பார்த்தாள். பேயறைந்தது போல் திடுக்கிட்டாள்.

அந்தப் பிரமுகரின் பெயர் நாகலிங்கம். அந்தப் பக்கத்துக்கே அவர் ஒரு 'ஆள்'. எந்தக் கோர்ட்டில் எந்த அடிதடி வழக்கு நடந்தாலும் அதில் நாகலிங்கம் கை வரிசையும் கொஞ்சம் இருக்கும்.



அவருக்குப் பணத்தையும் நிலத்தையும் கொடுத்த கடவுள் படிப்பைக் கொடுக்கவில்லை. நல்லூர் என்ற கிராமத்தில் அவர் பெரிய தலைக்காரர். ஆனால் நடத்தையெல்லாம் சின்னத்தனமானது. யார் மேலாவது அவருக்குக் கோபம் வந்தால் ஒரு புளியமரம் மொட்டையாகிவிடும். அந்த ஆளை மரத்தில் கட்டி வைத்து, புளியம் விளாறால் அடித்து, அவனை விடுதலை செய்து, அவன் காயத்துக்கு மருந்து போட்டு, செலவுக்குப் பணமும் கொடுப்பதில் அவருக்கு ஒரு சந்தோஷம். நாடக கண்டிராக்டு, வக்கீல் வீடு, கிரிமினல் கேசு, தாசி வீடு இவைகளில்தான் அவர் அதிகமாய் ஈடுபடுவார்.

'கிஞ்சின் குஞ்சுமணி' என்று அக்காலத்தில் ஒருவர் நாடகத்தில் இருந்தார். மோகினி ராஜா வேஷம், மோகினிப் பெண் வேஷம் போட்டுக்கொண்டு வந்து நாடக மேடையில் அவர் ஆடினால், தரையெல்லாம் செந்தூள் பறக்கும். அவரிடந்தான் ஜில்ஜில் ரமாமணி தயாரானாள். பூர்வாசிரமத்தில் அவள் பெயர் கருப்பாயி. பிறகு கள்ளபார்ட்டு நடிப்பில் கியாதி பெற்று ஜில்ஜில் ரமாமணி ஆனாள். திருடன் வேஷத்தைப் போட்டுக்கொண்டு, "ஜிண்டான், டப்பான், ஜிமுக்குத்தான்" என்று அவள் ஆடும்போது கரகோஷம் கொட்டகையே அதிரும்.

ஒரு சமயம் ரமாமணி, நாகலிங்கம் வசிக்கும் நல்லூருக்குத் தெருக்கூத்தில் நடிக்கப் போயிருந்தாள். மேடையில் அவள் திருடன் வேஷத்தில் வந்து - 'தில்லாலங்குடி தில்லாலங்குடி - தில்லாலக் குயிலே பலபாதில்லாலக் குயிலே!' என்று ஒரு பாட்டை எடுத்து விட்டவுடனே, நமது மைனர் நாகலிங்கத்தின் திருநோக்குக்கு அந்த ரம்பை இலக்கானாள்.

கொஞ்ச காலத்திற்குப் பின் அவளுக்கு நாடகம் அலுத்துவிட்டது. நாகலிங்கத்துக்கும் அவளை அலுத்துவிட்டது. அவளை கை விட்டு விட்டார். அதன்பின் சில காலம், மௌனப் படங்கள் ஓடும் பயாஸ்கோப்புக் கொட்டகைகளில் பார்ஸி டான்ஸ் செய்து வந்தாள் ரமாமணி. கண்ணை மாத்திரம் தனியாக ஆட்டுவாள். உடம்பு அசையாமல் கழுத்தை மாத்திரம் ஆட்டுவாள். சில பஞ்சாபி ஆட்டங்களும் அசைவுகளும் கொடுத்து ஆடுவாள். இப்படி ஆடிக் கடைசியில் சதிருக்கே கிளம்பிவிட்டாள்.

சண்முகசுந்தரம் வாசிக்கப்போன ஊர்களில் இரண்டொரு இடங்களில் ஜில்ஜில் ரமாமணியும் ஆடியதுண்டு. ஒரு சமயம் ரமாமணியின் ஆட்டத்தை அவனே பார்க்கும்படி நேர்ந்துவிட்டது. அன்றைய தினம் சதிரின் நடுவில், அவள் கால் கட்டைவிரலில் கத்தியை இடுக்கிக்கொண்டு நடனம் செய்து பதினாறு வாழைக் காய்களைத் தாளத்தோடு வெட்டித் தள்ளினாள். ஜனங்கள் கரகோஷம் செய்தார்கள். சண்முகசுந்தரமோ இதைப் பார்த்துவிட்டு, "ஜில்லு! உன் பாடு மோசமில்லை. உனக்கு டான்சுக்கு ராசி

கிடைக்காட்டியும், காப்பி கிளப்பிலேயாவது வாழைக்காயை வெட்டி நீ புழைச்சுக்குவே" என்று அத்தாட்சி கொடுத்தான்.

இன்று அழகர் கோவில் திருவிழாவுக்கு அவனும் வந்திருக்கவே, சண்முகத்துக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வந்தது. அவனுக்கும் சண்முக சுந்தரத்தை இங்கு பார்த்ததில் ரொம்ப சந்தோஷம். இந்தச் சந்தோஷத்தின் நடுவே நாகலிங்கத்தைப் பார்க்கவும் அவனுக்குப் பழைய நினைவுகள் வந்து, எரிகிற நெருப்பில் எண்ணெய் விட்டதுபோல் ஆயிற்று. இருந்தாலும், விட்டுக்கொடுக்காமல் நாகலிங்கத்திடம் பேசினான்.

"அட நீங்களா, சௌக்கியமா இருக்கீங்களா?___ இவங்கதான் நல்லூர் மிராசுதார் நாகலிங்கம் பிள்ளை, நல்ல ஞானஸ்தரு" என்று சண்முகத்திடம் எகத்தாளமாய்க் கூறிவிட்டு, "இந்தாங்க, வெத்திலை போட்டுக்குங்க" என்று நாகலிங்கத்திடம் பெட்டியை நீட்டினான். அதிலிருந்து ஒரு கை நிறைய வாசனைப் பாக்கை அள்ளி வாயில் போட்டுக்கொண்டார் நாகலிங்கம்.

"தம்பி, மேளம் கேட்டேன். சுமாராத் தேவலாம். இன்னும் கொஞ்சம் விருத்தி பண்ணிக்கிட்டா நல்லாயிருக்கும்" என்று பெரிய மனிதர் தோரணையில் நாகலிங்கம் சண்முகத்தைப் பார்த்துக் கூறினார்.

சங்கீதத்துக்கும் நாகலிங்கத்துக்கும் வெகு தூரம் என்பதைப் புரிந்துகொண்டான் சண்முகம். இருந்தாலும் வினயமாக, "உங்க அபிப்பிராயப்படி அப்படியே அபிவிருத்தி பண்ணிட்டா போவுது" என்றான்.

"நான் பெரிய பெரிய தங்க நாயனமெல்லாம் கேட்டிருக்கிறேன். அதுகளைக் கேட்ட காதுக்கு உன் வாசிப்பு அவ்வளவு சாத்தாயில்லை" என்று சொல்லவே, சண்முகம் கிண்டலாய், "தங்க நாயனத்திலே வாசிச்சா சங்கீதம் நல்லாத்தானே இருக்கணும்" என்றான்.

நாகலிங்கம் சண்முகத்தை ஏற இறங்கப் பார்த்தார். தம்மைக் கேலி செய்கிறானோ என்ற சந்தேகம் இப்போதுதான் அவருக்கு வந்தது. "நீ இந்த நாயனத்திலே மகுடி ஊதுறதில்லையோ?" என்று கேட்டார்.

"வாசிப்பதுதான்; ஆனால் இங்கே மலையும் காடுமாய் இருக்குதே. ஆதிசேஷன் படமெடுத்து வந்துட்டா என்ன செய்யறது என்று நினைச்சேன். ஆனால் இப்போ நாகலிங்கமே நேரிலே வந்துட்டதனாலே..."

"தம்பி, நம்மளைப்பத்தி உனக்கு நல்லாத் தெரியாது போலிருக்கு. எந்த நாயனக்காரனும் நம்மைக் கண்டா ஒரு கும்பிடு போட்டுட்டுத்தான் வாசிப்பான்"

"அடடே இது தெரியாமல் போச்சே. தெரிஞ்சிருந்தால் நீங்க இருக்கிற திக்குக்கே ஒரு கும்பிடு போட்டிருப்பேனே பெரிய



ஞானஸ்தரு. மேளத்தைப்பத்தி அபிப்பிராயம் சொல்ல வந்துட்டாரு வரேன் ரமாமணி" என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் சண்முகசுந்தரம்.

தனக்கு ஒரு கும்பிடுகூடப் போடாமல் கிண்டலாகப் பேசி விட்டுப் போகும் சண்முகத்தையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்த பிள்ளை, ரமாமணியின் பக்கம் திரும்பினார்.

"பெரிய அதிகப்பிரசங்கிப் பய போலிருக்கு."

"இல்லீங்க; நல்ல வித்தைங்க."

"ரொம்ப வித்தையைக் கண்டவளில்லை நீ! நாடகத்திலே கள்ள பார்ட்டு போட்டுக்கிட்டிருந்தவதானே நீயும்?"

நாகலிங்கத்தின் அலட்சியமான பேச்சு அவளுக்கு ஆத்திரத்தை ஊட்டியது. அதோடு பழைய நினைவுகளும் வரவே, சுடச் சுடப் பதில் கொடுத்தான் ரமாமணி.

"கள்ள பார்ட்டு போட்டா என்ன? வேஷந்தானே போட்டேன்? உங்களைப் போல ஊரை ஏமாத்துறவங்க எல்லாம் டாப்பு சிறப்பா இருக்கிறபோது நான் கள்ளபார்ட்டு போட்டது குத்தமாப் போச்சா?"

"ஏ கருப்பாயி ! நிறுத்திக்க !"

"சரிதான் போய்யா" என்று சொல்லிவிட்டு நடந்தாள் ரமாமணி. நாகலிங்கம் பிள்ளை கூடவே சென்றார்.

"இன்னிக்கு நீ ஆடப்படாது."

"ஏன், வாங்கின ரூபாய்க்கு ஆடறேன். ஆடப்பிடாதுன்னு சொல்ல நீங்க யாரு?"

"நான் யாரா? அதை அப்புறம் தெரிவிக்கிறேன். உனக்கு ரூபா குடுத்தவங்கதான் இன்னிக்கி நீ ஆடவேண்டாம்னு சொல்லி யிருக்காங்க. இங்கே, மின்னலே வந்து நாட்டியம் செய்யப் போகுது"

"அவ யாரவ, மின்னல் ! அவ மின்னலாயிருந்தா நான் இடி, மேகம், மழை, புயல் ! நான் ஆடற இடத்திலே அவளுக்கென்ன வேலை?"

"இதெல்லாம் நீ கேக்கப்படாது. நான் ஆடவேண்டாம்னு சொன்னா ஆடப்படாதுதான்."

"அதெல்லாம் அந்தக் காலம். இப்போ உங்க பேச்சைக் கேட்க நான் தயாராயில்லை."

"இன்னைக்கி நீ ஆடினே, உன் காலை முறிச்சிடுவேன். உன் கால் உனக்கு வேணும்னா, இப்பவே வண்டியைக் கட்டிக்கிட்டு ஊருக்குப் போய்விடு."

"இந்தாங்கறேன் ! இந்தப் பூச்சிக்கெல்லாம் நான் பயந்தவள் இல்லே ! இந்த ஊரிலே நாகலிங்கம் பிள்ளை கொடிகட்டிப் பறக்கல்லே. வெள்ளைக்காரன் கொடி பறக்குதாக்கும். நான் ஆடத்தான் ஆடுவேன்."

இதைக் கேட்ட நாகலிங்கம் ஆத்திரம் கொண்டார். "இன்னைக்கு மட்டும் நீ என் சொல்லைக் கேட்காமல் ஆடு. அப்புறம் என்ன நடக்குதுன்னு பார்ப்போம் !" என்று சொல்லிவிட்டுக் கோபத்தோடு அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டார்.

நாகலிங்கம் ரமாமணியை ஏன் ஆடக்கூடாது என்று தடுத்தார் என்பதைப் பார்ப்போம். இந்த வருஷம் ஆறாம் திருநாளில் ஆடுவதற்குக் கோயில்காரர்கள் ரமாமணியை முதலிலேயே ஏற்பாடு செய்துவிட்டார்கள். ஆனால் உபயக்கார ராமன் செட்டியாரோ தம் மண்டகப்படிக்காகப் பெரிய பெரிய கைகள்தாம் வந்து கச்சேரிகள் நடத்த வேண்டுமென்று தீர்மானித்து, திருவாரூரிலிருந்து தென்னாடெங்கும் புகழ் பெற்ற மோகனாம்பாளை வரவழைத்தார்.

ரமாமணிக்கு இந்தச் செய்தி சொல்லியனுப்பப்பட்டிருந்த போதிலும், அவள் அதை லட்சியம் செய்யாமல் இன்றைக்கு ஆடுவதற்குத் தயாராய் வந்துவிட்டாள். அவள் எதற்கும் துணிந்தவள். அவளோடு நேரில் பேசித் தகராறு செய்துகொள்வது தரக்குறைவு என்று கருதிய உபயக்கார ராமன் செட்டியார், யாரைக்கொண்டு ரமாமணியிடம் சமாதானம் பேசுவது என்று யோசித்தார்.

நல்லூர் நாகலிங்கத்தின் ஞாபகம் அவருக்கு வந்தது. உடனே வண்டியனுப்பி அவரை அழைத்துவரச் செய்தார். "இதோ பாருங்கள் ! திருவாரூர் மோகனாம்பாளின் நாட்டியம் ரொம்ப அற்புதமானது. அதற்கு நான் ஏற்பாடு செய்து, அவர்கள் கோஷ்டியும் காலையில் வந்து இறங்கிவிட்டார்கள். இப்போது உங்கள் ரமாமணியும் வந்து நிற்கிறாள். நீங்கள்தான் அவளிடம் 'இந்த வருஷம் ஆடவேண்டாம், பிறகு பார்ப்போம்' என்று பக்குவமாய்ச் சொல்லி, சமாதானம் செய்ய வேண்டும். பணத்தைப்பற்றிப் பரவாயில்லை. கொடுத்துவிடுவோம்" என்று கூறவே, நாகலிங்கம், "ஆகட்டும், அப்படியே செய்கிறேன். அவள் நான் சொன்னால் கேக்காமலா போய்விடுவாள்?" என்று சொல்லிவிட்டுக் கோயில் வாசலுக்குப் புறப்பட்டார்.

மேளக் கச்சேரி சங்கீதம், அவருக்குப் புரியாதவைகளில் ஒன்று. ஆகையால் அலங்கார மண்டபத்துக்கு வெளியே உலாவிக்கொண்டே 'அந்த மோகனாம்பாள் எப்படி இருப்பாள்? அவளைப்பற்றி ஊரெல்லாம் பேச்சாயிருக்கிறதே, அவளைப் பரிச்சயம் செய்துகொள்ளாத இந்த ஜன்மம் என்ன ஜன்மம் ! இந்த ரமாமணியை விரட்டிவிட்டு நேரே மோகனாம்பாள் வீட்டுக்குப் போக வேண்டும். சாப்பாட்டிற்கென்ன? நேரங்கழித்துச் சாப்பிட்டால் போகிறது' என்று சிந்தித்துக்கொண்டே இருந்தார். நல்ல வேளையாக மேளக் கச்சேரி திடீரென்று நின்றுவிடவே, ரமாமணியை உடனே கண்டு மிரட்டினார். அவள் எதிர்த்துப் பேசினாலும் நாகலிங்கத்துக்கு அவளை ஆடாமல் நிறுத்திவிடலாம் என்ற நம்பிக்கை இன்றும்



இருந்தது. இதனிடையில் ஆசை தூண்டவே, மோகனாம்பாள் இருக்கும் ஜாகைக்குப் போய் ஒருமுறை அவளை நேரில் கண்டு பேசவேண்டுமென்று நினைத்தார். அவசரம் அவசரமாகத் தம் வேலைக்காரன் சொக்கனை அழைத்து அவனிடம் இரும்புப்பெட்டிச் சாவியைக் கொடுத்து ரகசியமாக ஏதோ சொன்னார். சொக்கன் 'இதோ ஒரு நொடியில் வந்துவிடுகிறேனுங்க' என்று சொல்லிவிட்டு ஓடினான்.

நான்காவது அத்தியாயம்

## "குங்கும வண்ணனடி கிளியே குமரப் பெருமானடி"



"பெண் அழகு ஆணை மயக்கும் என்பவர்களுக்கெல்லாம் ஒரு வார்த்தை. அழகுக்கு ஆண் பெண் வித்தியாசம் கிடையாது. அது பெண்ணையும் மயக்கும், ஆணையும் மயக்கும், தன்னையும் மயக்கும், தன்னிரு கண்ணையும் மயக்கும். இல்லாவிட்டால் தலையில் பூச்செண்டை வைத்துக் கொள்வதற்காக நிலைக்கண்ணாடிக்கு முன் சென்ற மோகனாம்பாள் இத்தனை நேரம் தன் அழகையே பார்த்தவண்ணம் அப்படியே பிரமித்து நிற்பாளா?

பருவத்திற்கே ஒரு தனி அழகு உண்டு. அழகும், பருவமும் அமைந்துவிட்டாலோ, பாலும் சீனியும் கலந்தது போலத்தான். மோகனாம்பாள் பதினெட்டு வயதுப் பெண். தன் அழகைக் கண்ணாடியில் பார்த்து, தானே ரசித்துக்கொண்டு, தன் முகத்தில் வியர்வை முத்துக்குலுங்க நிற்கிறாள். ஆதவனைக் கண்ட தாமரை மலர்வதுபோல் அழகும் அந்த அழகியின் உள்ளத்தைக் கண்டு மலர்கிறது. பொட்டிடுவாள்; கண்ணாடி பார்ப்பாள்; இயற்கையிலேயே சந்திர பிம்பம் போன்றது அவள் முகம்; அதில் ஒரு ஜவ்வாதுப் பொட்டையும் இட்டவுடன் அந்த முகம் தனது அழகை அதிகமாய் எடுத்துக்காட்டவே சற்று நேரம் அதில் பூரிப்பாள். உடனே பக்கத்தில் இருக்கும் பூவை எடுத்துத் தலையில் வைப்பாள். பூவை அழகு பார்த்து ரசித்துச் சூட்டிக்கொள்ளுமுன், பொட்டு வியர்வையில் இளகிவிடும். இப்படிப் பூவும் பொட்டுமாக மன்றாடிக் கொண்டிருந்தாள் மோகனாம்பாள். சாமி புறப்பாட்டின்போது நாட்டியம் செய்வதற்காக நலங்கு மஞ்சள் பூசிய அவளுடைய கால்கள்

இரண்டும், மாறி மாறி ஏதோ ஒரு ஜதியை கட்டைவிரல்களால் தரையில் தட்டியவண்ணம் இருந்தன. உடுக்கையைப் போல 'இருந்தும் தெரியாமல், இல்லை என்றும் சொல்லமுடியாமல்' அவள் இடை அமைந்திருந்தது. ஆனால் அதற்கு மேல் பூட்டிய ஒட்டியாணமோ நான் இருப்பதால் இடையும் இருக்கிறது என்று விளம்பரம் செய்துகொண்டிருந்தது. நாட்டியத்திற்கு உரிய ஆடைகளை அவள் அணிந்திருந்தாள். "கட்டுகிறவர்கள் கட்டினால்தான் பட்டும் பெருமையடைகிறது" என்பது போல் அவள் உடம்பில் ஒட்டிய வண்ணம் அந்த உடை அமைந்து சித்தன்னவாசல் சித்திரம் போல் அவள் தோற்றமளித்தாள். பூங்கொடி போன்ற இரண்டு கைகளும் அபிநயம் பிடித்துப் பழக்கப்பட்டு, வளைவு நெளிவுகள் படிந்த கைகளாதலால் ஒவ்வொரு அசைப்பிலும் அவை அழகை அள்ளி வீசின. அவள் உடம்பு பருமனுமல்ல ஒல்லியுமல்ல; நடுத்தரமான உடம்பு. உயரத்திற்கேற்ற பருமனும், கடைந்தெடுத்த சிற்பம்போல் அங்க பாரங்களும் அமைந்திருந்தன. அந்தக் கண்கள் மட்டும், அடேயப்பா — அவைகளில்தான் என்ன கம்பீரம் ! முன்னாளில் விழிகளை "வேல்போன்ற விழிகள்", "கடல் போன்ற கண்கள்" என்றெல்லாம் கவிஞர்கள் வர்ணிப்பார்கள். அந்த வர்ணனைகளைப் படித்தால் படிப்பவர்கள் கண்ணெதிரில் மங்கையரின் மலர் விழிகள் தோன்றுவதில்லை. ஆதலால் மோகனாம்பாளின் கண்களை நாம் வர்ணிக்க முயலுவதைக்காட்டிலும் 'அவள் கண்களுக்கு இணை அவள் கண்களே' என்று உள்ளதை உள்ளபடியே கூறிவிடுவதுதான் சரி. ஆனால் குரலிலோ அவள் கரும்பு மொழியாள்.

அலங்காரத்தினிடையே என்ன நினைத்தாளோ, ஒரு பாட்டைப் பாட ஆரம்பித்தாள்.

**"எங்கும் நிறைந்திருப்பான்**
**எட்டியும் எட்டாதிருப்பான்**
**குங்கும வண்ணனடி - கிளியே**
**குமரப் பெருமானடி"**

என்று மெதுவாகப் பாடிக்கொண்டு அபிநயம் பிடித்தாள். அஸ்தங்களும் முத்திரைகளும் சரியாய் இருக்கின்றனவா என்று கண்ணாடியில் பார்த்தாள். கண்ணாடியைப் பார்த்தவுடனே மறுபடியும் எண்ணம் அழகின்மேல் செல்லவே, குங்குமப் பூபோல் சிவந்திருந்த தன் கன்னத்தின்மீது ஒரு திருஷ்டிப் பொட்டையும் இட்டுக்கொண்டாள். ஓடிப்போய் தட்டில் இருந்த கதம்பச் சரங்களில் ஒரு சரத்தை எடுத்து மாலையாகக் கட்டிக் கழுத்தில் போட்டுக் கொண்டாள். இன்னொரு சரத்தையெடுத்து இரண்டு கைகளிலும் கட்டிக்கொண்டாள். கண்ணாடி முன் வந்து வல முழங்காலைத் தரையில் ஊன்றி இட முழங்காலை உயர்த்தியவண்ணம்



மண்டியடைவு பிடித்து உட்கார்ந்து, தன் அழகைப் பார்த்துக் கொண்டாள்.

**"பின்னழகைக் காணில் ரதிப்**
**பெண்ணைமதன் நாடுவனோ - என்**
**கன்னழகைக் கண்டவர்க்கே - கிளியே**
**கரும்புவில் ஏதுக்கடி."**

என்று அவள் வாய் பாடியது. மறுபடியும் ஒரு முறை தன் அழகைக் கண்ணாடியில் பார்த்துவிட்டு, 'சே! இப்படி உட்கார்ந்தால் நன்றாக இல்லை' என்று கலகலவென்று சிரித்தாள்.

இந்த வேடிக்கையை இதுவரை கதவு மறைவில் நின்று பார்த்துக் கொண்டிருந்த வேலைக்காரி அபராஞ்சி, "ரதிதேவியே நேரிலே வந்து விட்டது போல் இருக்கிறது" என்று சொல்லவும், மோகனாம்பாள் "அடியே, இவ்வளவு நேரம் நீ இங்கேயா ஒளிஞ்சிக்கிட்டிருந்தே" என்று அவள் கன்னத்தில் கிள்ளினாள்.

"நானும்தான் உன் அழகைக் கொஞ்சம் பார்க்கிறேனே! ஆஹா, இப்போ உன்னைப் பார்த்தா உலகமே மயங்கிவிடும்" என்றாள் அபராஞ்சி.

"ரதிக்கேற்ற மன்மதன்தான் இல்லையேடி! அவர்தான் பரமசிவன் பார்வையிலே போய்விட்டாரே!"

"அந்த மன்மதன் போனா போறான். உனக்கேற்ற மன்மதன் ஒரு நாள் வராமலா போகப்போறான்!"

"வரட்டும்! பார்ப்போம்" என்று மோகனா விளையாட்டாய்க் கூறினாள்.

"மோகனா, உன்னைப் பார்க்கணுமாம். அய்யா வந்திருக்காங்க" என்று சொல்லிக்கொண்டே உள்ளே வந்தாள் வடிவாம்பாள். அவள் கூடவே அந்த நாகலிங்கம் பிள்ளையும் நுழைந்தார். தன் அறையில் ஓர் அந்நியனைக் கண்டவுடன் பாதி அலங்காரத்தில் இருந்த மோகனாம்பாள், வெறுப்புடன் சரேலென்று ஓடிப் பக்கத்தில் இருந்த திரைக்குள் மறைந்துகொண்டாள்.

வீடுகளிலே "அஞ்சறைப்பெட்டி" என்று ஒன்று உண்டு. கடுகு, வெந்தயம், மிளகு, கொத்தமல்லி என்று அதிலுள்ள பல அறைகளிலும் பல சாமான்கள் இருக்கும். ஆனால் அவைகள் எல்லாவற்றையும் கீழே கொட்டிவிட்டு அவ்வளவு அறைகளிலும் கடுகையே கொட்டி வைத்தால் நன்றாக இருக்குமா? அது போல், மனித உள்ளமும் ஒரு அஞ்சறைப் பெட்டிதான். அதிலே காமம், குரோதம், மோகம், மதம், மாத்சரியம் என்று எத்தனையோ குணங்கள் உண்டு. ஆனால் இந்த நாகலிங்கம் பிள்ளையின் உள்ளத்தில் மட்டும் அந்த எல்லாக் குணங்களுக்கும் இடமில்லை. காமம் என்ற ஒன்றையே போட்டு நிரப்பிய பெட்டி இவர் உள்ளம்.

தாம் நினைத்தபடியே கையில் ஒரு நகையையும் எடுத்துக் கொண்டு நேரே இங்கு வந்துவிட்டார். கண்ணாடி எதிரில் நின்ற மோகனாவை ஒரு கணந்தான் அவர் பார்த்தார். அவர் தலை சுழன்றது. தன் தாயாரே இவரை உள்ளே அழைத்து வந்ததை எண்ணி மோகனாவின் கண்கள் கலங்கின.

"என்ன பொண்ணே, அப்படி ஒடி ஒளிஞ்சுக்கிட்டே? ஐயா இந்த ஊருக்கே பெரிய மனிதராம். உன்னைப் பார்க்கணும்னு ஆசையா வந்திருக்காரு" என்று பரிவுடன் பேசினாள் வடிவாம்பாள்.

"அதுதான் ஆட்டம் நடக்கப்போகிறதே. அங்கு வந்து பார்க்கட்டும். நான் இங்கே யாரையும் பார்க்க முடியாது. நீ அவரை வெளியே கூட்டிப் போ" என்று மகள் கோபித்தாள்.

தாய் நாகலிங்கத்தின் முகத்தைப் பார்த்தாள். நாகலிங்கமோ இம்மாதிரி வரவேற்பை எதிர்பார்க்கவில்லையாதலால் பிரமித்து நின்றார். இருந்தாலும் நம்பிக்கையைத் தளரவிடாமல், "எனக்குக் கோயிலுக்குப் போகணும். இதைக் கையிலே கொடுத்துட்டு ஒரு வார்த்தை பேசிட்டுப் போயிடலாம்னு பார்த்தேன்" என்று தம் சட்டைப் பையிலிருந்து ஒரு நகை டப்பியை எடுத்து, வடிவாம்பாள் முகத்திற்கு முன், அந்த டப்பியைத் திறந்தார். அதற்குள் அழகான வைர மூக்குத்தி ஒன்று தகதகவென்று பிரகாசித்துக்கொண்டிருந்தது.

வடிவாம்பாளுக்கு மூக்குத்தியைப் பார்த்ததும் ஆசை உண்டாயிற்று. அந்த மூக்குத்தியைக் கொண்டுவந்த புண்ணியவானை அவமானப்படுத்துவதை அவள் விரும்பவில்லை. "கண்ணு ! ஐயா கோயிலுக்குப் போகணுமாமே ! இன்னும் எவ்வளவு நேரந்தான் பொட்டு வச்சுக்குவே?" என்று சொல்லிக்கொண்டே, திரைக்குள்ளே சென்றாள். அங்கு இரு கண்களிலும் கண்ணீர் வடித்துக்கொண்டு தன் மகள் நிற்பதைக் கண்டாள். வயிறு பகிரென்றது. அந்த மூக்குத்தி அவள் மனத்தில் ஆசையைத் தூண்ட, அருமை மகளின் கண்ணீர் பாசத்தைத் தூண்ட, என்ன செய்வதென்று தெரியாமல் ஒரு கணம் தவித்தாள் வடிவாம்பாள். பிறகு, சமாளித்துக்கொண்டு வெளியே வந்தாள். இவ்வளவு நேரமும் அங்கேயே பழியாய் நின்று கொண்டிருந்த நாகலிங்கத்திடம் தன் முகத்தில் லேசாகச் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, "வாருங்கள், அப்படிப் போவோம்" என்று சொல்லி அவரைக் கூடத்திற்குள் அழைத்துச் சென்றாள்.

"என்னைக் கண்டு உன் மகள் ஏன் பயப்படவேணும்? மற்றவங்களைப்போல் நான் என்ன, பணம் காசு இல்லாதவனா? இல்லை அயோக்கியனா? என்னை ஏன் இப்படி அவமரியாதை செய்யுது?" என்று நாகலிங்கம் அதட்டிக் கேட்கவே, வடிவாம்பாள் அவர் முகத்தைப் பயத்துடன் பார்த்தாள்.



அமாவாசை நிற்பதே போல் எதிரில் நின்ற பிள்ளையின் முகத்தில் வீரத்தின் அடையாளமாக இருந்த வெட்டுமீசை துடிப்பதைக் கண்டாள். அவரது கண்கள் கோபத்தால் சிவந்து கோவைப்பழம் போல் காட்சியளிப்பதையும் கண்டாள். அதுமாத்திரமல்லாமல், அவருக்குப் பின்னால் வாசற்படியில், எந்த நிமிஷம் எஜமான் ஏவினாலும் உடனே எதிரியின்மேல் பாய்ந்து அடித்து நொறுக்கிவிடத் தயாராயிருக்கும் வண்டிக்காரச் சொக்கனையும் கண்டாள். 'ஊருக்குப் பெரிய மனிதராகிய இவருடைய பகை ஏற்பட்டால் உயிருடன் திருவாரூருக்குப் போக முடியாதே. என்ன செய்வது?' என்று யோசித்துப் பிள்ளையவர்களிடம் முன்னிலும் அதிகமாகக் குழைந்து பேசலானாள்.

"இது உங்க ஊர். எங்களை எப்படி வேணுமானாலும் நீங்க பேசலாம். ஆனால் என் பெண், உங்களை அவமரியாதை செய்தாள் என்று மாத்திரம் அபாண்டமாகச் சொல்லாதீங்க. பெரியவங்களை அவமரியாதை செய்ய அவள் என்ன பித்துப் பிடிச்சவளா? நீங்களே இப்படி யோசியாமல் கோவிச்சுக்கிட்டா, நாங்கள் எல்லாம் என்ன செய்யமுடியும்?" என்று வடிவாம்பாள் சலுகையும் சாமர்த்தியமுமாய்க் கூறினாள்.

நாகலிங்கம் பிள்ளையின் கோபம் நல்லபாம்பின் படம் சுருங்குவது போல் இந்த நாலு வார்த்தைகளிலேயே கொஞ்சம் அடங்கியது. தனக்குள் சிந்திக்கலானார்: 'மோகனாம்பாள் இவ்வளவு அழகாய் இருப்பாளென்று நினைக்கவில்லை. அவள் திரைக்குள் ஓடி மறைந்த காட்சியே மின்னல்போல் இருந்தது. நாம் கோபக்காரன் என்று அவள் நினைத்துவிட்டால் காரியமே கெட்டுப்போகும். இந்தத் தாய்க்காரி பணத்தாசை பிடித்தவளாக இருக்கிறாள். முதலில் இவளை நம் கைக்குள் போட்டுக்கொள்வோம்' என்று நினைத்தார் நாகலிங்கம்.

இரண்டு சாமியார்களுக்குள் ஒரு நாள் ஒரு சண்டை வந்தது. இவர்களில் ஒருவர் நாமக்காரர். மற்றொருவர் பூச்சுக்காரர். சண்டை சில்லறைச் சண்டைதான். அதாவது, ஒரு புண்ணியவான் காலணாவைச் சைவச் சாமியாரிடம் தருமம் செய்து, அவர்கள் இருவரையும் எடுத்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டார். இதைச் சில்லறை மாற்றிப் பங்கு பிரித்துக்கொள்வதில்தான் சண்டை வந்தது. சைவச் சாமி இரண்டு சல்லியை எடுத்துக்கொண்டு ஒரு சல்லியை நாமக்காரரிடம் கொடுத்தார்.

"என்ன சாமி, பெரிய துறவி வேடம் தரிச்சிருக்கு. அரைச் சல்லிக்கு இப்படிப் பாக்குதே. ஒரு சல்லியுமே இவ்விடத்திலே தான் தள்ளட்டுமே" என்றார் நாமதாரி.

"ஏன் அவ்விடத்தில் பெரிய ஆழ்வார் வேஷம் தரிச்சிருக்குதே அரைச் சல்லியை அதுதான் விட்டுக்கொடுத்துடட்டுமே"

"சன்னிதானத்துக்கு எங்க பெருமாள் திருவுளப் பாங்கு தெரியாது போலிருக்குது. பணத்தை மதிக்காவிட்டால் எங்கள் பெருமாளுக்குப் பிடிக்காது. அவர் மார்பில் லெட்சுமியை வைத்திருப்பவர் !"

"எங்கள் சிவனாரும் அப்படித்தான் தங்கமலையில் பிறந்த பார்வதியைப் பாதியாகக் கொண்டவர் !"

"எங்கள் திருவரங்கம் பெரிய கோயில், தங்கக் கோபுரம் !"

"எங்கள் தில்லை நடராசனுக்கும் தங்கக் கோபுரம்" என்று இவ்விதமாக இருவரும் தகரக் குவளைகளில் தாளம் போட்டுக்கொண்டு பாட்டில் இறங்கிவிட்டார்கள்.

கடைசியில் நாமதாரி, "ஏது? எவ்வளவு சொன்னாலும் சன்னிதானம் சல்லியை விடாது போலிருக்கே ! என்று சிரித்தார்.

"சரி, சாமி ! முதல்லே நாம ரெண்டு பேரும் பணத்தின் பக்தர்கள் பிறகுதான் பகவானின் பக்தர்கள் ஆனதால் முதல்லே ஆளுக்கு ஒரு சல்லியை எடுத்துக்கொள்வோம். மீதமுள்ள ஒரு சல்லிக்குப் பொட்டுக் கடலையை வாங்கி எண்ணி எண்ணிப் பிரிச்சுக்குவோம் !" என்று இரண்டு பேரும் கடைவீதிப் பக்கம் போனதாக ஒரு கதை சொல்லுவார்கள்.

"பணம் பாதாளம் மட்டும் பாயும்; ஈட்டி எட்டின மட்டுந்தான் பாயும்" என்பதை நாகலிங்கம் நன்கு அறிந்தவர் ஆதலால், வடிவாம்பாளைப் பணத்தால் வசப்படுத்திவிடலாம் என நிச்சயம் செய்தார். நாகலிங்கம் பிள்ளை, மோகனாம்பாள் வீட்டைத் தேடி வந்தபோது, கூடத்தில் போட்டிருந்த விசுப்பலகையில், வடிவாம்பாள் உட்கார்ந்திருந்தாள். நாகலிங்கத்தைக் கண்டவுடன், "வாங்க" என்று கை கூப்பி வரவேற்றாள்.

"நான்தான் நல்லூர் மிட்டாதார் நாகலிங்கம் பிள்ளை. மோகனாம்பாள் இன்றைக்கு இந்த ஊரிலே ஆடுவதாகக் கேள்விப்பட்டேன். வந்ததுதான் வந்தோமே, பார்த்துவிட்டுப் போகலாம்னு வந்தேன். இப்போ மோகனா எங்கே இருக்குது?" என்று கேட்கவே, வடிவாம்பாள் நாகலிங்கத்தை ரொம்ப ரொம்பப் பெரிய மனிதர் என்று எண்ணி, "உள்ளே இருக்கிறாள்" என்று கூறிவிட்டாள்.

"ஒரு அவசியமான விஷயமாய்ப் பார்க்கவேணுமே" என்றார் நாகலிங்கம்.

அவசியமான விஷயம் என்றவுடன், ஏதாவது நாட்டியக் கச்சேரிக்காகப் பேச வந்திருப்பாரோ என்று எண்ணித்தான் மோகனா இருந்த அறைக்குப் போனாள் வடிவாம்பாள். நாகலிங்கமோ கூடவே நுழைந்துவிட்டார்.

மோகனாம்பாள் உள்ளேயிருந்து தன்னைக் கோபித்து விரட்டியதைக் கண்டதும், நாகலிங்கம், இனி தாயைக் கொண்டுதான் மகளை அடைய வேண்டும் எனத் திட்டமிட்டார்.



"எனக்கு வேறொன்றும் கோபமில்லை. இதுவரை நம்மை யாரும் தடுத்துப் பழக்கமில்லை. கவர்னர் தர்பாராயிருந்தாலும் இந்த நாகலிங்கம் உள்ளே வந்தா ஒருத்தருக்கும் தடுக்கத் தைரியம் வராது" என்றார்.

"கவர்னர் ஆண்பிள்ளை, வெட்கப்படமாட்டாரு. என் குழந்தை பொண்ணுதான் பாருங்க" என்று பதில் அளித்தாள் வடிவாம்பாள்.

"அது என்னைப் பார்க்கல்லியேங்கறதுக்காக எனக்கு வருத்தமில்லை. இந்தா. இந்த மூக்குத்தியை அதுகிட்டே நீயே கொடுத்திடு" என்று நாகலிங்கம் வைர மூக்குத்தி டப்பாவை வடிவாம்பாளிடம் கொடுக்கப் போனார்.

"இது எதுக்கு? வேண்டாமுங்க."

"சும்மா இருக்கட்டும்; நான் ஒரு வாட்டி ஒரு இடத்துக்கு வந்துட்டுப் போனா அதுக்கு ஒரு அடையாளம் இருக்கணும்."

"இல்லை, என் பொண்ணுக்கு இதெல்லாம் பிடிக்காது. ஏதாவது சொல்லும்."

"சொன்னால், நாட்டியத்துக்காக நல்லூர் மிட்டாதார் சன்மானம் செய்தார்னு சொல்லு."

"இல்லைங்க, அவ ஒரு பிடிவாதக்காரி. கண்டிப்பா வேண்டாம்னு சொல்லிடுவா."

"வேண்டாம்னு சொல்ல, இது பித்தான்லே வைக்கிற கல் இல்லை, அசல் வைரம். அவ வேண்டாம்னு சொன்னா நீ மூக்கிலே போட்டுக்க. ஒருத்தருக்குன்னு கொண்டுவந்ததை நான் திருப்பிக் கொண்டு போகிறது நியாயமில்லை, பாரு !"

நாகலிங்கம் சொல்வதிலும் ஏதோ ஒரு நியாயம் இருப்பதாக எண்ணினாள் வடிவாம்பாள். காரணம் அந்த வைர மூக்குத்தி ! "இதை என் கையிலே தராதீங்க. இந்த வம்பெல்லாம் எனக்கு வேண்டாம்" என்று கூறிக்கொண்டே, நகை டப்பியைப் பெற்றுக்கொண்டாள் வடிவாம்பாள்.

இதற்குள் மோகனாவின் அலங்காரம் முடிந்துவிட்டது. இன்னும் அந்த மனிதர் கூடத்தில் இருப்பதைக் கண்டாள். ஆத்திரத்துடன் கூடத்துக்கு வந்தாள். தன் தாய் கையிலிருக்கும் மூக்குத்தியைப் பார்த்து, "அம்மா ! இதை ஏன் நீ வாங்கினாய்? அவரிடமே திருப்பிக் கொடு. நாம் பிச்சை வாங்கிப் பிழைக்க வரவில்லை. ஆட்டம் ஆட வந்திருக்கிறோம்" என்றாள்.

"இந்தாப்பாரு, மோகனா ! நம்ம கையிலே வித்தை என்று ஒன்றிருந்தால் நாலு பேர் நாலு சன்மானம் செய்யத்தான் செய்வாங்க. இதை வேண்டாம்னு சொல்லலாமா?"

"வித்தைக்குச் சன்மானம் செய்கிறவர் வீட்டுக்கு வரணுமா? ஆட்டம் நடக்கப்போகுது. அங்கே செய்யட்டுமே !"

"நான் அங்கேயும் செய்வேன், இங்கேயும் செய்வேன். உன் வித்தைக்காக எதை வேண்டுமானாலும் செய்வேன்" என்று அசட்டுச் சிரிப்புடன் அருகில் வந்தார் நாகலிங்கம். அவர் பூசியிருந்த ஈக்கோ ஸெண்ட் ஒரே அடியாய் மூக்கைத் துளைத்தது. சரேலென்று விலகினாள் மோகனாம்பாள்.

"வித்தையை மதிக்க உமக்கு என்ன தெரியும்? உமது முகத்தைப் பார்த்தாலே வித்தை முந்நூறு மைலுக்கு அப்பாலே ஓடிப் போகுமே!" என்றாள்.

"என்ன! என்னையா அப்படிச் சொல்கிறாய்?" என்று பல்லைக் கடித்தார் நாகலிங்கம்.

"உம்மைச் சொல்லாமல் வேறு யாரைச் சொல்ல முடியும்? அம்மா, இதெல்லாம் உன்னாலே வந்தது. இறந்த வீட்டில் நுழைந்து அந்த மனிதர் தெம்மாங்கு பாடுகிறார். நீ வைர மூக்குத்தியை அழகு பார்த்துக்கொண்டு நிற்கிறாயே! இப்படிக் கொடு அதை" என்று தாயிடம் இருந்த மூக்குத்தி டப்பாவைப் பறித்து, "இந்தாங்க, எடுத்துக் கொண்டு வெளியே போங்க" என்று வாயிற்படியில் விட்டெறிந்தாள் மோகனா.

நாகலிங்கம் ஆவேசம் கொண்டார்.

"என்ன, வெளியேயா விட்டெறிகிறாய்? இந்த நாகலிங்கம் யார் தெரியுமா? நாகப்பாம்பு! கறுவிக் கறுவிப் பழி வாங்குவேன். பொம்மியை மதுரைவீரசாமி சிறைப் பிடிச்சமாதிரி உன்னையும் சிறைப் பிடிப்பேன். வீணாகப் பாம்புடன் பகைக்காதே" என்று சீறினார் நாகலிங்கம்.

"பாம்புடன் பகைக்காதே" என்று அவர் சொல்லி வாய் மூடுமுன், "பாம்பா, எங்கே இருக்குது?" என்று கேட்டுக்கொண்டே ஒரு பெரிய கர்லாக் கட்டையைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்தான் வரதன்.

மத்தளக்கார வரதனைப் பார்த்ததும் நாகலிங்கத்திற்குத் தூக்கி வாரிப்போட்டது.

"எங்கேம்மா பாம்பு? இதோ கர்லாக் கட்டையாலே நசுக்கி விடுகிறேன். சும்மா ஒரு கும்கி கொடுத்தேன்னா!" என்று சொல்லி, வரதன் இங்குமங்கும் தேடினான். அப்போது வழவழவென்று மூக்குத்தியிருந்த வெல்வெட் டப்பா அவன் காலில் பட்டதும் "ஐயோ, பாம்பு!" என்று ஒரு குதி குதித்தான்!

"உண்மையான பாம்பில்லே, வரதா! இதோ மனித உருவத்தில் நிற்கிறாரே, இந்தப் பாம்பு!" என்று மோகனா கூறவே, வரதன் நாகலிங்கம் பக்கம் திருப்பி, "என்னய்யா? பொம்பளைங்க தனியாயிருக்கிற இடத்திலே வந்து, உம்... சும்மா ரூபக தாளத்திலே ஒரு மோகரா வைச்சேன்னா முதுகு திமுதிமுத்துப் போகும்" என்றான்.



மோகரா என்ற மிருதங்க பாஷை நாகலிங்கத்துக்குப் புரியவில்லை. "கொஞ்சம் மருவாதையோடே பேசு தம்பி, நம்மகிட்டே வாலாட்டினா கூண்டோடே கைலாசம், தெரியுமில்லே?" என்று இல்லாடி பாஷையில் இறங்கினார் நாகலிங்கம்.

"என்ன சொன்னே, என்ன சொன்னே? கைலாசமா? இந்த ஊருக்குள்ளே நீ கைலாசம்னு சொல்லாதேய்யா! இது பெருமாள் கோயில் இருக்கிற இடம். வைகுண்டம்னு சொல்லு!" என்று எதிரில் நின்று கர்லாவைச் சுழற்ற ஆரம்பித்தான் வரதன். அவன் அடிக்கத்தான் ஓங்குகிறானா, அல்லது அப்பியாசம் செய்கிறானா என்பது தெரியாமல் நாகலிங்கம் திகைத்து நிற்கும்போது வெளியே ஒரு கியாஸ்லைட்டு வெளிச்சமும் பலர் வருவதும் தெரிந்தது. நாகலிங்கம் இனி மேலும் அங்கே நிற்கக்கூடாதென்று, மூக்குத்தி டப்பாவைக் கையில் எடுத்துக்கொண்டு நடையைக் கட்டினார். ஆனால், அவர் போகும் போது மோகனாவைத் திரும்பிப் பார்த்த ஒரு பார்வையில் உண்மையிலேயே விஷம் குடிகொண்டிருந்தது.

"ஏன் மோகனாம்பா, நான் அடிப்பேனா? நீயே சொல்லு; அந்த ஆள் ஏன் இப்படிப் பயந்துக்கிட்டுப் போறான்!" என்றான் வரதன்.

"வரதா, நீ யாரையும் தொட்டு அடிச்சடாதே. அப்புறம் பயம் விட்டுப் போகும்!" என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள் மோகனாம்பாள். வடிவாம்பாள் தனக்கு வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டாள்.

அப்போது கோவில் சிப்பந்தி ஒருவன் உள்ளே வந்தான். "சுவாமி புறப்பட்டுவிட்டது. உங்களை அழைத்துவரச் சொன்னார்கள். இதோ வண்டி வந்திருக்கிறது" என்று அழைத்தான்.

ஐந்தாவது அத்தியாயம்

## கலை உள்ளங்களின் அலைமோதல்



"கள்ளழகர் திருச்சோலை காணக் கண் போதாதே" என்பதற்கிணங்க அன்று அழகர், யானை வாகனத்தில் எழுந்தருளினார்.

சோலைமலைக் கள்ளழகர் சொருகக் காரப் பெருமான். அவர் கோயிலில் நிபம் முதல் திவர்த்தி வரையில் எல்லாமே நெய் தான். எங்கு பார்த்தாலும் நெய்த் தீவட்டிகள் பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தன. சுடர் ஒளி வீசும் அந்த வெளிச்சத்தில் முத்தங்கி அணிந்து, முத்துத் தலைப்பாகை சூடி-

ரத்தினப் பதக்கங்கள் தரித்து, திருமேனியெல்லாம் கருந்துளசி மாலையிட்டு, தூக்கிக்கட்டிய கொண்டையுடன் அழகன் பவனி வர, அந்த முத்தங்கியில் உள்ள முத்துகள் மாயன் அள்ளியுண்ட வெண்ணெய்க் கட்டிகள், அவன் திருமேனியில் சிதறியிருப்பது போல் காட்சி அளிக்க, அந்தத் திருமாலிருஞ்சோலையே ஆயர்பாடியாகத் தோன்றியது. அந்த அற்புதமான சூழ்நிலையில் சண்முகசுந்தரத்தின் நாதஸ்வரம் கண்ணன் குழல் போல இன்னிசையைப் பாய்ச்சியது.

சண்முகசுந்தரம் 'மல்லாரி' வாசித்துக்கொண்டிருந்தான்.

'தனதனன, தனதனன, தனதன, தனதன, தனதனனா
தன்னான தன்னான தன்னான தன்னான'

என்ற நடையில் மல்லாரியை வாசிக்க ஆரம்பம் செய்தவுடனே, அதிலிருந்த பாணியும், குழைவும், கமகமும் எல்லோரையும் வசப்படுத்தின. சண்முகசுந்தரம் தன்னை மறந்து, வைத்த சீவாளி எடுக்காமல் சுநாதத்தோடு மல்லாரியில் லயித்தான். நாதஸ்வரத்திலிருந்து குமிழியிட்டுக்கொண்டு இசையருவி எங்கும் பாய்ந்தது.

அல்லியும் தாமரையும் ஒருங்கே படர்ந்த குளம் அழகர் கோவில் புஷ்கரணி. பதினாயிரம் அகல் விளக்குகளை ஏற்றி அலங்காரம் செய்திருப்பது போல் அந்தக் குளத்தில் செவ்வல்லிகள் பூத்துச் சிதறிக்கிடந்தன. எங்கும் பால் போன்ற வெண்ணிலவு. அந்த அல்லிக் குளத்தின் படித்துறையில் ஒரு மெல்லியலாள் நின்றாள். அவள் வேறு யாருமில்லை; மோகனாம்பாள்தான்.

நாட்டியத்திற்காக அழைக்கப்பட்டு வீட்டிலிருந்து வந்தவர்கள், மேளக் கச்சேரி முடிந்தபின் போகலாம் என்று சற்று ஒதுப்புறமாக அங்கே நின்றார்கள்.

"யாரம்மா மேளம் வாசிக்கிறது? இவ்வளவு அற்புதமாய் இருக்குதே!" என்றாள் மோகனா.

"சிக்கல் தம்பியாத்தான் இருக்கும். அதுதான் பெரிய மேளத்துக்கு வந்திருக்குதுன்னு சொன்னாங்க" என்றாள் வடிவாம்பாள்.

"இவ்வளவு நல்ல வாசிப்பை நான் கேட்டதே இல்லையம்மா!"

"அந்தத் தம்பி நல்லாத்தான் வாசிக்கும். என்ன செய்யறது? குணம் நல்லாயில்லியே. ஆளை மதிக்கமாட்டாதாம். உன்னைப் போல அது ஒண்ணு!"

தன் தாய் குற்றம் சொல்வதை மோகனாம்பாள் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. "அம்மா! நான் அவர் பெயரைக் கேள்விப் பட்டிருக்கேன். ஆனா இன்னிக்குத்தான் அம்மா அவர் வாசிப்பைக் கேட்டேன்" என்றதும், கூட இருந்த நட்டுவனார், "அது ஒரு தெய்வப் பிறப்பு அம்மா! அவன் வாசிப்பை வருஷம் முழுவதும் கேட்டுக் கொண்டிருக்கலாம்" என்றார்.



அப்போது மல்லாரியை முடித்துவிட்டு, சண்முகசுந்தரம் தோடி ராகத்தை எடுத்து அற்புதமாக வாசிக்க ஆரம்பித்தான்.

இசைத்தேன் பருகிய வண்டுகளாய் மயங்கியபடியே எல்லாரும் நின்ற இடத்திலே தலையை அசைத்துக்கொண்டிருந்தனர். தோட்ட இடமெல்லாம் சுத்தமாகவும், சரளமாகவும் நினைத்த கற்பனைகளெல்லாம் தங்கு தடையின்றி நாதஸ்வரத்தில் பேசவே, ஆற்றோட்டம்போல் எங்கும் இசை வெள்ளம் பெருகியது. தான் அளித்த இசையில் தானே மயங்கித் திளைக்கலானான் சண்முகசுந்தரம்.

இதே சமயத்தில், புஷ்கரணியின் அருகில் நின்றுகொண்டிருந்த மோகனாம்பாள் அவன் வாசித்த ஆலாபனைக்கு ஏற்ப ஆடி அசைந்து கொண்டிருந்தாள். அவன் வாசித்த ஒவ்வொரு பிடியிலும் அவள் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தாள். ஆயனின் குழல் கேட்டு அவன் அருகில் வரும் ராதையைப்போல, மெல்ல நடந்தாள். அவள் அறியாமலேயே அவள் கால்கள் நாதஸ்வர இசை நடக்கும் இடத்துக்கு அவளை இழுத்தன. காந்தத்தை நாடி வரும் இரும்புபோல் இசை வழியே நடந்து நடந்து, அவன் அருகில் வரலானாள்.

சண்முகசுந்தரத்தின் அருகில் வந்ததுமே மோகனாவின் மனதில் சொல்ல முடியாத ஓர் இன்பம் ஏற்பட்டது. அவள் தன் கண்களால் சண்முகசுந்தரத்தின் முகத்தை ஒரு முறை பார்த்தாள். பார்த்த கண்கள் பார்த்தபடி நின்றாள். அவள் பார்வையிலிருந்து அவளுக்கு முன் இருந்த கூட்டமெல்லாம் மறைந்தது. அழகர் மறைந்தார். தாய் மறைந்தாள். தன்னையும் மறந்தாள். ஆனால் அந்தச் சண்முகத்தின் சுந்தர வடிவம் மட்டும் அவள் கண்களை விட்டு நீங்காமல் நின்றது.

இவ்வாறு அவள், அவன் அழகில் மயங்கி அவன் திருவடியில் தன் மனத்தைக் கிடத்தியிருக்க, இதையொன்றும் பாராதவனாய் மெய்ம்மறந்து நாதஸ்வரத்தை வாசித்துக்கொண்டிருந்தான் கலைஞன் சண்முகசுந்தரம்.

அப்போது திருஷ்டி பரிகாரம்போல் 'டமார் டமார்' என்ற ஒலிகள் கேட்டன. வான வீதியை நோக்கித் தீப்பிழம்புகள் பறந்தன. சீறிக்கொண்டே சென்ற அந்த நெருப்புப் பந்துகள் படார் படார் என்று வெடித்தன. தவுல்கார முத்துராக்குவே காதைப் பொத்திக் கொண்டார். அப்போது, ஆகாயத்தில் பச்சை, சிவப்பு, ஊதா, நீலம் முதலிய பல நிறங்களில் ரச குண்டுகள் தோன்றின. நாதஸ்வரக் கச்சேரி முடிவதற்குள்ளேயே பொழுது விடிந்துவிட்டால் நம் வாணங்களின் கதி என்ன ஆவது என்று எண்ணி முந்திக்கொண்ட வாணக்காரரின் கைவண்மை இது.

மேலும் தொடர்ந்து 'டமால், டுமீல், டப், டப்' என்ற வேட்டுகள் முழங்கவும், கூட்டத்திலிருந்து, "ஏய், வாண வேடிக்கை, வாண

வேடிக்கை என்று சத்தம் போட ஆரம்பித்தார்கள். தெருவெங்கும் பொட்டி வாணம், தோரண வாணம், கொடி வாணம், அவுட்டு வாணம், ஆகாச வாணம் என்று எங்கு திரும்பினாலும் வாணங்களைக் கொளுத்திய வண்ணமாக இருந்தார்கள் வாணக்காரர்கள்.

வெட்டுச் சத்தம் கேட்டவுடனே சண்முகம் தன் வாசிப்பை நிறுத்திவிட்டான்.

"எய் ! இந்தாடா ! எடுத்து உறையில் போடு" என்று நாதஸ்வரத்தை வெறுப்புடன் பையனிடம் கொடுத்தான்.

ஆனால் அவன் எதிரில் நிற்கும் மோகனாம்பாளோ, சண்முகம் வாசிப்பை நிறுத்தியதையும் கவனியாமல், தன் கண்களுக்குள் அவன் உருவத்தை வைத்து இமைகளால் பூட்டியபடி, கண்களை மூடிய வண்ணம் கற்சிலைபோல் நின்றாள்.

அவள் முதுகில் வடிவாம்பாள் கையை வைத்து உலுக்கிய பிறகே, மோகனா தன் நினைவுக்கு வந்தாள். ஏதோ கனவு கண்டு விழித்தவள் போல் பிரமித்தாள்.

சண்முகசுந்தரம் அந்த இடத்தைவிட்டு அவசரமாகக் கிளம்புவதைப் பார்த்தாள்.

"அடி வா பொண்ணே, எதைக் கண்டு இப்படி எங்கேயோ பார்த்துக்கிட்டிருக்கே?" என்று மகளின் கையைப் பிடித்து இழுத்தாள் வடிவாம்பாள். தன் பெண் எங்கு பார்க்கிறாள் என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும் அதை அவள் காட்டிக் கொள்ளவில்லை.

"எங்கேயம்மா பார்த்தேன்? அவரைத்தானே பார்த்துக் கொண்டிருந்தேன். எவ்வளவு அற்புதமாய் வாசித்தார் பார் !" என்றாள் மோகனா.

"ஆமா, அவன் வாசித்தான். எந்தக் கூட்டத்திலே யார் கிட்டே அடிபடப் போகிறானோ ! வாண வேடிக்கை நடத்தினால் இவனுக்கு என்ன? வாங்கின பணத்துக்கு வாசிக்க வேண்டியதுதானே?" என்றாள் வடிவாம்பாள்.

ஆனால் சண்முகம் புறப்படுவதைக் கண்ட மோகனா பதைத்தாள். தன் உள்ளத்தை எடுத்துக்கொண்டு அவன் ஓடப் பார்க்கிறானே என்று திகைத்தாள். "வாத்தியாரையா, அவர்கிட்ட அடுத்தாப்பிலே நம்ம ஆட்டம் இருக்குது, பார்த்துவிட்டுப் போகலாம்னு சொல்லுங்க" என்று நட்டுவனாரிடம் கூறினாள்.

நட்டுவனாரும் சண்முகத்திடம் சென்று, "தம்பி, நம்ம சிஷ்யப் பொண்ணு அடுத்தாப்பிலே ஆடப் போகுது. அதைக் கொஞ்சம் இருந்து பார்த்துட்டுப் போகலாமே" என்று மரியாதையுடன் அழைத்தார்.

484270



சண்முகத்தின் பதிலையே ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்தாள் மோகனா. 'ஆகட்டும், வருகிறேன்' என்று கூறும் அமுத மொழியை அவனிடம் எதிர்பார்த்தாள். அதற்குப் பதிலாக அந்தத் துடுக்குக்கார சண்முகம், "என் நல்லா ஆட்டுமே; அதிர்வேட்டுத் தாளத்துக்கு ஆடப் போகுதோ? ஆடட்டும். அதைப் பார்த்துக் கண்ணை வேறே கெடுத்துக்கணும் போலிருக்கு" என்றான்.

மோகனாம்பாள் தன் இதயத்தையே அவனிடம் தூது அனுப்பியிருந்தாள். இந்தப் பதில் கடுசரம் போல் அவள் இதயத்தில் தைத்தது. அவன் கலையில் மயங்கிய அவளுடைய உள்ளம் தன் கலையை அவன் அவமதித்தான் என்பதைக் கேட்டவுடன் கனல் போல மாறிற்று. அவள் ரத்தம் கொதித்தது; சித்தம் துடித்தது. நெருப்பை மிதித்தவள் போல் துள்ளினாள். அவள் கண்களில் கண்ணீர் கலங்கியது. ஆத்திரத்தில் அவளையும் மீறி வார்த்தைகள் வரலாயின.

"வாத்தியாரே, அவர் சிக்கல்காரரில்லே, அவர் எங்கே ஒழுங்காகப் பேசப் போறாரு? வாங்க இப்படி; அவரை ஒரு மனிதனாக மதிச்சுக் கூப்பிட்ட என் புத்தியைச் சொல்லணும்" என்று படபடவென்று பேசினாள் மோகனா.

சிங்கக் குட்டி சீறுவதைப் போல் அவள் சீறுவதைக் கண்டான் சண்முகம். ஒரு கணம் அவள் உருவத்தில் மயங்கினான். இருந்தாலும் துடுக்கு அவனை மீறியது. "ஓஹோ, இலங்கதான் குதிக்கப் போறாங்களோ? பொம்பளைங்க கொஞ்சம் அடக்கமாகப் பேசினால் நல்லதுன்னு சொல்லுங்க" என்றான் நட்டுவனாரிடம்.

"இவர் எனக்குப் புத்தி சொல்லுகிறாரோ? அவர் திமிரி நாயனக்காரரில்லே ! கொஞ்சம் திமிராய்த்தான் பேசுவாரு! வாத்தியாரையா ! 'என் சிஷ்யப் பொண்ணு குதிக்காது. திவ்வியமா நாட்டியம் ஆடும்' என்று சொல்லுங்க ! அவர் கையிலே பேசற நடை என் காலிலே பேசும் என்று சொல்லிவிட்டு வாங்க" என்று ஆத்திரத்துடன் மொழிந்தாள் மோகனாம்பாள்.

சண்முகத்தின் கண்கள் சிவந்தன. தன் சங்கீதத்தை அவள் அவமதிக்கிறாள் என்ற ஆத்திரம் அவனுக்கு வந்தது.

திருவாரூர் மோகனாவைப்பற்றியும், அவளுடைய நடனக் கலையைப்பற்றியும் அவனும் கேள்விப்பட்டிருக்கிறான். இன்று அவள் ஆடப் போகிறாள் என்பதும் அவனுக்கு ஒருவாறு தெரியும். இப்போது மோகனாம்பாளை எதிரில் கண்டும், அவன் வாய்த் துடுக்கும் வித்தைக் கர்வமும் குறுக்கிடவே, இருவரும் ஒருவரையொருவர் அறிமுகம் செய்துகொள்ள முடியாத நிலைமைக்கு வந்துவிட்டனர்.

சண்முகம் ஆத்திரத்துடன், "இந்தா பொண்ணே ! உங்க திருவாரூர் வித்தையெல்லாம் நம்மகிட்ட வேண்டாம்" என்றான்.

"எங்க திருவாரூர் வித்தை இல்லாவிட்டால் உங்களை யாரும் தேடமாட்டாங்க. அந்த மும்மணிகளும் பாடி வைக்காட்டி இவரு தெருவிலே வந்து கையைக் கட்டிக்கிட்டு நிற்கவேண்டியதுதான்"

"என்ன மேலே மேலே பேசறியே!" என்றான் சண்முகம்.

"பேச்சு மாத்திரமில்லே, தம்பி. அது வித்தையிலேயும் அப்படித்தான்!" என்றார் நட்டுவனார்.

"என்னங்க வித்தை. பொல்லாத வித்தை! என் நாதஸ்வரத்திலே ஒரு தில்லானா ஊதறேன், அதற்கு இவள் ஆடிவிடுவாளா?" என்றான் சண்முகம்.

"நான் ஆடறேன், ஆனால், நம்ம ஊர் பாரி நாயனத்தை எடுத்து இவர் ஊதிவிடுவாரா என்று கேளுங்கள்" என்றாள் மோகனாம்பாள்.

"ஊதிவிட்டால்?" என்றான் சண்முகம்.

"ஆடிவிட்டால்?" என்றாள் மோகனாம்பாள்.

"பார்ப்போம்."

"பார்ப்போம்."

இரு இளம் கலைஞர்களுக்குள்ளே, துடுக்காய் ஆரம்பித்த பேச்சு இப்படி ஒரு போட்டியில் போய் முடியவே, கூட்டம் பிரமித்தது. வடிவாம்பாளும் நட்டுவனாரும் திகைத்து நின்றார்கள். சண்முகசுந்தரம் துடுக்காக நடந்து சென்றான். அப்போது 'நாட்டியம் நாட்டியம்' என்று கோவில்காரர்கள் அழைக்கும் சத்தம் கேட்கவே, மோகனாம்பாளும் மிடுக்காக நடந்தாள்.

"அவனிடத்திலே பேச்சுக் கொடுப்பானேன், வாங்கிக் கட்டிக்குவானேன்? அவன்தான் பொல்லாதவன்னு சொன்னேனே" என்று நடந்துகொண்டே கூறினாள் வடிவாம்பாள். அப்போது மோகனாம்பாள் ஒரு திரும்பு திரும்பி, தன் தாயை ஒரு பார்வை பார்த்தாள். 'சரி, ஏதோ பெரிய விபரீதம் வந்துவிட்டது' என்று, பெட்டிப் பாம்பாக அடங்கி நடந்தாள் வடிவாம்பாள்.

தெற்கு வீதி முனையில் தெருவை அடைத்து ஜமுக்காளங்களும் ரத்தினக் கம்பளங்களும் விரிக்கப்பட்டிருந்தன. ஏராளமான ஜனக் கூட்டம் அங்கே அமர்ந்திருந்தது. பரமானந்தப் பரதேசியும் அந்தக் கூட்டத்தில் ஒருவராக உட்கார்ந்திருந்தார்.

வாண வேடிக்கைகள் முடிந்துவிட்டன. ஆனால் மோகனாம்பாளின் உள்ளத்தில் மட்டும் இன்னும் வாணங்கள் வெடித்துக்கொண்டுதான் இருந்தன.

நீட்டின கையைத் தட்டிவிட்டது போன்ற உணர்ச்சியும், தன் கலையை அவமதித்தானே என்ற ஆத்திரமும், அவனுக்கு நான் மட்டமானவளா என்ற கர்வமும் அவள் மனத்தைத் தாக்கின.

"அவன் அற்புதமாக வாசித்தால் மற்றவர்களை அவமானப்படுத்த வேண்டுமா? நாம் அவன் எதிரில் போய் நின்றதே தப்பு. என்னைத்



திரும்பியாவது பார்த்தானா? அவன் அழகாய் இருந்தால் என்ன? நான் அழகாய் இல்லையா? அவன் மேளத்தை ஆயிரம் பேர் கேட்டால் என் நாட்டியத்தையுந்தான் ஆயிரம் பேர் பார்க்கிறார்கள். அதிர்வேட்டுத் தாளத்துக்கு ஆடுவாளா என்றல்லவா கேட்டான்? அதிர்வேட்டென்ன, இடி முழக்கத்தையே தாளமாய் வைத்துக்கொண்டு ஆடுவேன்' என்று அவள் மனம் குமுறிற்று.

முகம், சிவந்தது. நெற்றி வியர்த்தது. ரத்தம் துடித்தது.

'திந்தித்தாம், திந்தித்தாம்'

சிவபெருமானைக் கூத்தில் வென்ற பராசக்தி போல், அவள் துள்ளிக் குதித்து ஆட ஆரம்பித்தாள். மின்னல் போன்ற வேகத்தில் கால்கள் பூமியில் படுவது தெரியாமல் கரகரவென்று சுழன்றாள். தகிட தகிட தகிட என்று கால்கள் பூமியில் பாவும்போது கனல் பறந்தது. அவள் கண்ணைப் பார்த்தவர்கள் கண்ணையே பார்த்தார்கள். ஜல்ஜல் என்று சதங்கை குலுங்கும் காலைப் பார்த்தவர்கள் கால்களையே பார்த்தனர். கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த ரசிகர்கள் அப்படியே மலைத்து மௌனமாகிவிட்டனர். குளத்தில் பூத்திருந்த குமுத மலர்கள்கூட அசையாமல் அவள் ஆட்டத்தையே பார்த்துக் கொண்டிருந்தன. காற்றுகூட சற்றுநேரம் அப்படியே நின்றுவிட்டது. அவள் கால் வேகம் முத்துக்குமரனின் கை வேகத்தைச் சோதித்தது. ஆட்டத்தின் வேகத்தைப் பார்த்த வாதன் அதில் கதி கலங்கி மத்தளம் வாசிப்பதை நிறுத்திவிட்டான். ஆனால் எதிரிலிருந்த பரமானந்தப் பரதேசியார் மட்டும் "அற்புதம், அற்புதம், முருகா" என்று உருகியவண்ணம் இருந்தார். இவ்வாறு அவள் பெண்மைக்கே உரித்தான ரோஷத்தில் தன்னையும் உலகையும் மறந்து ஆடி ஒரு முத்தாய்ப்பு வைத்து நிறுத்திக் கை கூப்பி நிற்கவே, கூடியிருந்த ஜனங்களின் கரகோஷம் வானையே பிளந்தது.

உபயக்கார ராமன் செட்டியாரின் மனம் குளிர்ந்தது. ஒரு வெள்ளித் தாம்பாளம் நிறையப் பழங்களும், வெற்றிலைப் பாக்கும் அதன்மேல் ஒரு பதக்கத்துடன் கூடிய சங்கிலியும் வைத்துப் பரமானந்தப் பரதேசியாரிடம் கொடுத்தார்.

"இறைவனை ஆடியும் பாடியும் வழிபடுவது நம் நாட்டு மரபு. இன்று மோகனாம்பாள் ஆடிய நடனத்தில் பராசக்தியின் ஊழிக் கூத்தைக் கண்டேன். கந்தனின் களியாட்டத்தையும் கண்டேன். இது வெறும் ஆட்டமல்ல. அவளை ஏதோ ஒரு சக்திதான் இன்றைக்கு இப்படி ஆட்டிவைத்திருக்கிறது. ஸ்ரீராமன் செட்டியார் அளித்த இந்தப் பதக்கத்தையும் தங்கச் சங்கிலியையும் அவர் சார்பில் நான் கொடுக்கிறேன். 'வா குழந்தாய், இதைப் பெற்றுக்கொள்" என்று அவள் கையில் தாம்பாளத்தைக் கொடுக்கப் போனார் பரமானந்தப் பரதேசியார்.

ஆனால் மோகனாம்பாளின் கண்கள் எங்கேயோ பார்த்தன. யாரையோ தேடுவதுபோல் இருந்தன. ஆவேசம் வந்து அடங்கியவள் போல் மிரள மிரள விழித்தாள். பரதேசியார் நீட்டிய பரிசை வாங்கவில்லை.

வடிவாம்பாளும் நட்டுவனாரும் இதைப் பார்த்துப் பிரமித்தார்கள். கூட்டம் திகைப்புடன் இதையே கவனித்தது.

மறுபடியும் பரதேசியார் "இந்தா அம்மா, வாங்கிக்கொள்" என்று சொல்லவும், மோகனா அவரைப் பார்த்தாள். அவள் கண்களிலிருந்து ஊற்றுப்போல் மளமளவென்று கண்ணீர் பொங்கியது. அடியற்ற மாம்போல் அவர் காலில் வீழ்ந்தாள். பிறகு எழுந்தாள். தன் நினைவு அற்றவளாய்த் தாம்பாளத்தை வாங்கி வரதனிடம் கொடுத்தாள்.

'"சங்கிலியைப் போட்டுக்கொள்ளட்டும்" என்றார் ராமன் செட்டியார்.

இது அவள் காதில் விழவேயில்லை. அழுத வண்ணம் சரேலென்று முகத்தைத் திருப்பிக்கொண்டு நடந்தாள்.

கூட்டத்தினர் பிரமித்தனர். தாயும் நட்டுவனாரும் கூடவே அவளைத் தொடர்ந்தனர்.

ஆறாவது அத்தியாயம்

## காதலின் கண்ணீர்



**வீ**ட்டுக்குள் வந்த மோகனாம்பாள் யாருடனும் பேசவில்லை. தன் அறைக்குள் நுழைந்தாள். படுக்கையில் போய் பொத்தென்று விழுந்தாள். தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதாள். அவள் உள்ளத்தில் ஒரு எரிமலையே வெடித்துவிட்டது. 'தன் ஆட்டத்தை அவன் பார்க்கவில்லையே !' என்று ஒரு கணம் எண்ணினாள். 'இந்த ஆட்டத்திலே நான் மயக்கம் போட்டு விழுந்திருக்கக்கூடாதா? இந்த அவமானம் வந்தபிறகு நாம் ஏன் உயிர் வாழவேண்டும்?...... அவன் யாரோ, நாம் யாரோ? மின்னலைப்போல வந்தான்; நம் உள்ளத்தில் புகுந்தான்; அதில் துயரத்தை உண்டாக்கிவிட்டு ஓடி மறைந்தானே, இரக்கமே இல்லாதவன்' என்று நினைத்ததுமே அவள் நெஞ்சம் குமுறியது.

'நாம் எத்தனையோ கூட்டங்களைப் பார்த்திருக்கிறோம். எத்தனையோ வித்வான்களின் கச்சேரிகளைக் கேட்டிருக்கிறோம். இவன்மேல் மாத்திரம் நமக்கு ஏன் இவ்வளவு அக்கறை? இவன் பேசிய



பேச்சுக்கு மட்டும் நாம் ஏன் இவ்வளவு வருந்தவேண்டும்? அவன் பேசிவிட்டால் நாமும்தான் பதில் பேசிவிட்டோமே' என்று சமாதானம் செய்துகொள்ளப் பார்த்தாள். மனம் கேட்கவில்லை. மறுபடியும் மறுபடியும் அவள் மனம் அவனையே நாடியது. 'அவன் எவ்வளவு துடுக்காய்ப் பேசினாலும் இன்னும் சற்று நேரம் தன் எதிரில் நின்று பேசியிருக்கக்கூடாதா?' என்று நினைத்தாள்.

'அவன் எங்கேயிருந்தாலும் சரி, இப்பொழுதே ஓடிப் போய் 'இந்தா உன் சங்கிலி ! நீ அதிர்வேட்டுத் தாளத்துக்கு ஆடச் சொன்னாயல்லவா? ஆடினேன்; என்னை மறந்து ஆடினேன்; உன்னை நினைந்து ஆடினேன்; அதனால்தான் இந்தப் பரிசு கிடைத்தது. இந்தா, இதை நீயே வைத்துக்கொள், என் இதயத்தை என்னிடம் திருப்பிக் கொடுத்துவிடு' என்று அவனோடு சண்டை பிடிக்க வேண்டும்' என்று எண்ணினாள்.

அவன் முகம் அப்பொழுது அவள் எதிரில் வந்தது. தோடியை ஊதியபடி அவன் நின்றான். 'இல்லை; நான் நினைத்தது தப்பு ! நான் உன்னைப் பேசியது தப்பு ! நீ என்னை அடித்தாலும் வைதாலும் என் கழுத்தைப் பிடித்துத் தள்ளினாலும் நான் உன்னை விடமாட்டேன், விடவே மாட்டேன்' என்று சொல்லி அவள் துயரம் தாளாமல் கதறினாள்.

"சே ! அவர் எவ்வளவு பெரிய வித்வான். நாம் அவரிடம் இப்படிப் பேசிவிட்டோமே. அவர் பேசினால் அதற்காக நாமும் அப்படிப் பேசலாமா?... பின் என்ன? அவர் காலிலா விழுவது?... அவர் வாசிப்பாராம், அதற்கு நான் தில்லானா ஆட வேண்டுமாம்! ஆடுகிறேன் ! நன்றாய் ஆடுகிறேன் ! என் கால்கள் ஓயும் மட்டும் ஆடுகிறேன் ! அவர் பார்க்கட்டும்... ஏன்? இப்பொழுதே வரட்டும்; வாசிக்கட்டும்; இப்பொழுதே நானும் ஆடுகிறேன்' என்ற பல எண்ணங்களில் துடித்தாள் மோகனாம்பாள்.

வீட்டுக்கு வந்தது முதல் தன் பெண் இப்படி அழுகையும் ஆத்திரமுமாய்த் துடிப்பதைப் பார்த்த வடிவாம்பாள் என்னென்னவோ எண்ணினாள். மோகனா முதன் முதலில் சண்முகத்தைப் பார்த்த அந்தப் பார்வையே அவளுக்குப் பிடிக்கவில்லை. அவள் வயிற்றில் அப்பொழுதே சுரீர் என்று பட்டது. தான் பெற்ற மகள், தன்னுடைய ஒரே செல்வம், தன்னைக் கைவிட்டுவிடுமோ என்று திகைத்தாள். இருவருக்கும் சண்டை வந்தபோது அவளுக்குச் சிறிது சமாதானம் ஏற்பட்ட போதிலும், இந்தச் சந்திப்பும் சண்டையும் எங்கே கொண்டுபோய் விடுமோ என்ற கவலையும் கூடவே அவளை வாட்டியது.

வீட்டுக்கு வந்தவுடன் தன் மகள் உடையைக்கூட மாற்றாமல் அழுதுகொண்டு இருப்பதைக் கண்டு அந்தப் பெற்ற மனம் கொதித்தது.

"மோகனா, இது என்ன கண்ணு? எழுந்திரு. அவன் ஒரு வாய்த் துடுக்குக்காரன், பொல்லாதவன். அவன் குணம் எல்லாருக்கும் தெரிஞ்சதுதானே? அவனை ஒரு மனுசனாய் நினைச்சு நீ வருத்தப் படறியே!" என்றாள்.

"அம்மா, அவரை ஒன்றும் சொல்லாதே. போ இங்கிருந்து!" என்று மகள் எரிந்து விழுந்தாள்.

"இப்ப நான் என்னத்தைச் சொல்லிட்டேன்?— அவரையாமில்ல அவரை! என் மகளை அவமானமா பேச அவன் யாருன்னு கேக்கிறேன்" என்று அவள் மேலும் ஆரம்பித்தாள்.

"அம்மா! உன்னைக் கும்பிடுறேன். நீ அவரை ஒன்றும் சொல்லாதே" என்று கூறிவிட்டுத் தாயின் முகத்தைப் பார்த்தாள். அடக்க முடியாமல் அவளுக்கு அழுகை வந்துவிட்டது. "அம்மா" என்று கதறி அவள் மடியில் தலையைப் புதைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

இப்பொழுது நாம் அழகர் கோவிலில் சண்முகசுந்தரம் தங்கியிருந்த வீட்டுக்குப் போவோம்.

அங்கு ஒரு பிரப்பம் பாய் மேல் தாளக்காரப்பையன் தூங்கிக் கொண்டிருந்தான். ஒத்துக்காரத் தருமனும் தவுல்கார முத்துராக்குவும், மோகனாம்பாளின் நாட்டியத்தைப் பார்த்துவிட்டு வந்த சந்தோஷத்தில் சிரிப்பும் விளையாட்டுமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"என்ன ஒத்துக்காரரே! எப்படி நாட்டியம்?" என்றார் முத்துராக்கு.

"அது சாதாரணமான பொண்ணு இல்லை, தம்பி! நாட்டியத்துக்குன்னே பொறந்திருக்கு. இன்னைக்கு அது புடிச்சதே அந்த அடவு, அது மாதிரி நீ வேறு எங்கனாச்சியும் பார்த்திருக்கியா?" என்றான் தருமன்.

"நிசமாவே அற்புதமா இருந்தது, அண்ணே. அந்தப் பெண்ணுக்கு உடம்பும் வாகா ஒத்துக்கிட்டுது. நம்ம கொல்லுமாங்குடிப் பொண்ணும் இருக்குதே, பார்வதி; அதைப் பாருங்க. ஆடற பொண்ணு நல்லாச் சாப்பிடணும்னு யாரோ சொல்லிட்டாங்க போலிருக்கு. அரங்கேத்தம் ஆறதுக்குள்ளே உடம்பு ஆனையா பெருத்திட்டுது. நாட்டியம்னு ஆட வந்தா அதுக்கு உடம்பை நல்லா வைச்சுக்கணும்— என்னே, எங்கே இவரு?" என்று கேட்டார் முத்துராக்கு.

"எங்கே போச்சுன்னு தெரியலியே. நாட்டியத்திலேயும் காணோம். கோயில் கிளிலுக்குப் போயிருக்குமா?" என்று யோசித்தான் தருமன்.

"இன்னைக்கு நாயனக்காரரு அந்தப் பொண்ணைக் கொஞ்சம் அதிகமாகத்தான் பேசிட்டாரு" என்றார் முத்துராக்கு.



பொறந்தன்னைக்கு வந்த குணம், பொங்கலிட்டா போகுமா? அதிர்வேட்டுக்காரங்கிட்டே வந்த கோபத்தை ஆடற பொண்ணுகிட்ட காட்டிட்டாரு!"

"சரிசரி விடுங்க நமக்கெதுக்கு அந்தப் பேச்சு? ஏன் தருமண்ணே! இன்னிக்கு நம்ம 'பங்குப் பணம்' கிடைக்குமா? இல்லை, என்னதான் பாதி வாசிப்பிலே நிறுத்திட்டாரே, அதனாலே பணம் கிடையாதுன்னுட்டாங்கன்னா?" என்று கேட்டுக்கொண்டிருக்கும் போது கதவு தட்டும் சத்தம் கேட்டது. ஒத்துக்காரத் தருமன் ஓடிப் போய்க் கதவைத் திறந்தான். சண்முகசுந்தரம் ஒரு சால்வையைத் தலையில் போர்த்தியவண்ணம் உள்ளே நுழைந்தான்.

'சண்முகம் எங்கே போயிருந்தான்? இப்பொழுது எங்கிருந்து வருகிறான்?' என்பதைக் கவனிப்போம்.

வாண வேடிக்கைச் சத்தத்தில் பொறுமையிழந்து கச்சேரியை நடுவில் நிறுத்திய சண்முகசுந்தரம் நேரே வீட்டுக்கு வந்தான். வந்தவுடன் நாதஸ்வரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு தரையில் உட்கார்ந்தான். தோடி ராகத்தை முன்னால் தான் விட்ட இடத்திலிருந்து வாசிக்க ஆரம்பித்தான். அதைப் பூர்ணமாக வாசித்து முடித்த பிறகுதான் அவன் மனம் சமாதானம் அடைந்தது. ஆத்திரம் நீங்கி நிம்மதி ஏற்பட்டது. பிறகு வெற்றிலைப் பெட்டியை எடுத்து வெற்றிலை போட ஆரம்பித்தான். அவன் மனத்தில் பலவித யோசனைகள் தோன்ற ஆரம்பித்தன.

'அந்த நட்டுவனார் நம்மிடம் என்ன கேட்டார்? 'ஆட்டத்தைப் பார்க்க வாருங்கள்' என்றுதானே அழைத்தார்? இதற்காக நாம் ஏன் அப்படிக் கோபித்துக்கொண்டோம்? அந்தப் பெண் சொல்லித்தானே அவரும் கூப்பிட்டிருக்க வேண்டும்! அந்தக் கூட்டத்தில் அத்தனை பேர் நின்றார்களே, அதில் வேறு யாரையாவது அவள் அழைத்தாளா? சே! கலைஞர்களுக்குள் ஒருவருக்கொருவர் கொடுக்கவேண்டிய சாதாரண மரியாதையைக்கூட நாம் கொடுக்கத் தவறிவிட்டோமே! சரி, இப்பொழுதே போய் நாமும் அந்த ஆட்டத்தைப் பார்த்துவிடுவோம்' என்று எண்ணினான். ஆனால் சற்றுமுன் அவளோடு இவ்வளவு தூரம் வீராப்பாய்ப் பேசிவிட்டு இப்போது எப்படி அவள் முன் போய் நிற்பது என்ற சந்தேகமும் கூடவே ஏற்பட்டது. போகாமலே இருந்துவிடுவோமா என்றுகூட நினைத்தான். ஆனால் அவன் உள்ளம் கேட்கவில்லை. தன்னை யாரும் கண்டுகொள்ளாமல் இருக்கவேண்டுமென்று எண்ணி ஒரு போர்வையை எடுத்துப் போர்த்திக்கொண்டு நாட்டியம் நடந்த இடத்துக்குச் சென்றான். அங்கே கூட்டத்தின் ஒரு மூலையில் வெளிச்சம் இல்லாத ஓர் இடத்தில் உட்கார்ந்தான். அப்பொழுது முத்துராக்குவும் தருமனும், முன்பே வந்து நாட்டியமேடைக்கருகில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தான். மெதுவாக,

அவர்கள் கண்ணில் படாமல் எழுந்து போய் ஒரு விளக்குத் தூணின் மறைவில் நின்றுகொண்டான்.

மோகனாவின் அற்புதமான நாட்டியத்தைக் காணக் காண சண்முகம் மெய்ம்மறந்தான். அவள் ஆட்டத்தின் வேகம் ஏற ஏற அவள்மேல் அவனுக்கு ஒருவித அக்கறை பிறந்தது. வாக்குவாதத்தின் போது அவளிடம் அவன் கண்ட அழகு, இப்போது ஆயிரம் மடங்கு அதிகமான பிரகாசத்துடன் தோற்றமளிப்பதைக் கண்டான். அவள் ஆட ஆட இவன் உள்ளம் துள்ளியாடியது. அவளுடைய அஞ்சலி ஹஸ்தத்தில் அவன் நெஞ்சையே பறிகொடுத்தான். எப்படியும் திருவாரூர் சென்று, அந்தப் பாரி நாயனத்தைப் பழகி, அதில் தில்லானா வாசித்து, அவள் வாயால் 'சபாஷ்' என்று பட்டம் வாங்க வேண்டும் என்று நிச்சயம் செய்துவிட்டான்.

நாட்டியம் முடிந்ததும், முத்துராக்குவும் தருமனும் வீட்டுக்குக் கிளம்பினார்கள். அவர்களை முன்னே போக விட்டுவிட்டு, சற்று நேரம் கழித்துப் புறப்பட்டான் சண்முகம்.

உள்ளே நுழைந்த சண்முகத்தின் சந்தோஷத்தைக் கண்ட முத்துராக்கு, "என்ன தம்பி ! முகத்திலே ஆனந்தம் கூத்தாடுது ! எங்கே போயிருந்தீங்க?" என்று கேட்டார்.

"நீங்கள் எல்லாங்கூட ரொம்ப ஆனந்தமாயிருக்கீங்களே, என்ன விஷயம்?" என்று ஒன்றும் தெரியாதவன் போல் கேட்டான் சண்முகம்.

"இப்பத்தானே நாட்டியம் பார்த்துட்டு வர்ரோம் !" என்று இருவரும் ஏக காலத்தில் கூறினார்கள்.

"என்ன அநியாயம் ! அந்தப் பொண்ணு என்னைக் கண்டபடி பேசியிருக்குது; நீங்க எல்லாரும் அவ ஆட்டத்தைப் பார்க்கவா போனீங்க?" என்று அதட்டலாகக் கேட்டான் சண்முகம்.

"அட, நீதான் கொடுத்துவைக்காதவன். கோவிச்சுக்கிட்டுப் பார்க்கமாட்டேன்னுட்டே எங்களுக்கென்ன? அந்தப் பொண்ணு ஆட்டம் ரொம்ப அற்புதம் ! இன்னிக்கி நீ விட்ட குறையை அதுதான் தொட்டு முடிச்சிச்சு. அது பொண்ணில்லை, தம்பி !... தேவரம்பை !... என்ன தருமண்ணே, சொல்லுங்க !" என்று ரசித்தார் முத்துராக்கு.

"லப்பர் பந்துப்பா. காலிலேதான் என்ன விரைவு ! கையிலேதான் என்ன அபிநயம் ! அது ஆட்டமும் அளகும் இன்னிக்கு முளுக்கப் பார்த்துக்கிட்டிருக்கலாம். இந்த ரமாமணியுந்தான் அன்னிக்கி ஆடிச்சே; ஜட்காவண்டிக் குதிரையாட்டமா லொங்கு லொங்குன்னு" என்றவுடனே சண்முகம் கலகலவென்று சிரித்தான். அவன் உள்ளம் ஏதோ ஓர் உணர்ச்சியால் குதூகலம் அடைந்தது.

அப்போது தருமன், "தம்பி ! நீ ஒரு நல்ல சந்தர்ப்பத்தை விட்டுட்டே. இன்னைக்கி நீ மட்டும் அந்த ஆட்டத்தைப் பார்த்திருந்தே, ரொம்ப சந்தோசப்பட்டிருப்பே. கடைசியிலே அந்தப் பரமானந்தப் பரதேசி பேசினாரு பாரு" என்றதும்,



"அதுதான் பார்த்தேனே, தங்கச் சங்கிலிகூடப் பரிசு கொடுத்தாரே !" என்று சொல்லிவிட்டான் சண்முகம். இதைக் கேட்டதும் அவர்கள் இருவருக்கும் சந்தோஷத்தால் தூக்கி வாரிப்போட்டது.

"தம்பி ! பொண்ணு எப்படி?"

"தம்பி ! ஆட்டம் எப்படி?"

"அவ அழகு எப்படி?"

"அவ வித்தை எப்படி?"

இப்படி முத்துராக்குவும் தருமனும் மாறி மாறிக் கேட்கலானார்கள்.

"என்னண்ணே ! இரண்டு பேருமா ஆளுக்கு ஒரு பக்கம் கேள்வி கேட்டு மத்தளம் அடிக்கிறீங்க ! போதும் போதும், நேரமாச்சு. போய்ப் படுப்போம்" என்று சொல்லிவிட்டுத் தன் அறையை நோக்கிச் சென்றான் சண்முகம். அவன் மனமெல்லாம் திருவாரூர் பாரி நாயனத்தின் மேலேயே இருந்தது.

ஏழாவது அத்தியாயம்

## நாகம் சீறியது



மோகனாம்பாளின் நாட்டியத்தை சண்முகம் ஒருவன் மாத்திரந்தான் மறைந்திருந்து பார்த்தானா? இல்லை. அவள் நாட்டியத்தை ஆறு கண்கள் மறைந்திருந்து உற்று நோக்கின. அவைகளில் இரண்டு கண்கள்தாம் கலைக்கண்கள். இன்னும் இரண்டு கண்கள் பொறாமைக் கண்கள். ஏனைய இரண்டு கண்களோ காமாந்தகாரக் கண்கள்.

நாகலிங்கம் கண்களைத்தான் கடைசியாகக் குறிப்பிட்டோம். அவரும் மறைந்திருந்துதான் பார்த்தார். ஆட்டத்தை அல்ல, அவளை ! அழகே உருவாய் அமைந்திருந்த அந்த அற்புத சிருஷ்டியை அப்படியே வாரி விழுங்கிவிட ஆசை கொண்டார் நாகலிங்கம்.

இவ்வாறு மோகனாம்பாளையே அவர் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருக்கும்போது, அவரையும் மோகனாம்பாளையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தன ஜில்ஜில் ரமாமணியின் பொறாமைக் கண்கள். ஜில்ஜில் ரமாமணி, மோகனாம்பாள் ஆடிய நடனத்தைப் பார்த்தாள்; திகைத்தாள். தான் ஆடவேண்டிய இடத்தில் அவள் ஆடுகிறாளே என்று அவளுக்கு ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வந்தது. 'அவள் ஆடும் அந்த ஜமக்காளத்தின் கீழ் ஒரு சிறிய கல் தூக்கிக்கொண்டிருக்கக்கூடாதா? அவள் ஆடும் வேகத்தில் கால்

இடறி அவள் கீழே விழக்கூடாதா?' என்று அவள் பொருமினாள். அவளுக்கு இருந்த ஆத்திரத்தில் அவள் கண்களுக்கு மாத்திரம் சக்தி இருந்தால் அப்படியே மோகனாவைச் சுட்டெரித்திருப்பாள். 'அவள் ஆட்டத்துக்கிடையில் போய் நாமும் நிற்போமா?' 'என்னுடன் போட்டிக்கு வா' என்று கூப்பிடுவோமா?' என்றுகூட அவளுக்குத் தோன்றியது. என்ன இருந்தாலும் உலகம் தெரிந்தவள் அல்லவா! தன் போட்டி அவளிடம் செல்லாது; அவளுக்கு எதிரில் போய் நிற்கவே தான் தகுதியுடையவளல்ல என்ற உண்மையை ஆட்டம் ஆரம்பித்த அந்தே நிமிஷங்களில் அவள் உணர்ந்துகொண்டாள். இந்தத் தோல்வி மனப்பான்மை அவளுடைய ஆத்திரத்தை மேலும் அதிகமாக்கியது. இந்தச் சமயத்தில்தான் நாகலிங்கம் மோகனாம்பாளையே பார்த்துக் கொண்டு நிற்பதை அவள் கவனித்துவிட்டாள்.

தன்னைக் கைவிட்ட ஒருவன் இன்னொருத்தியின் அழகில் மயங்குகிறான் என்ற ஆத்திரம் வேறு அவளுக்கு உண்டாயிற்று. பொறாமையும் ஆத்திரமும் பொங்கியெழ, நாகலிங்கத்தையும் மோகனாம்பாளையும் வெட்டிவிடுபவள்போல் மாறிமாறிப் பார்த்தாள்.

அப்போது நாகலிங்கம், வண்டிக்காரன் சொக்கனை நோக்கித் தன் கண்களால் ஏதோ ஜாடை செய்வதைக் கண்டாள். சொக்கனும் பதிலுக்கு ஜாடை செய்தான். உடனே அவர்கள் இருவரும் கூட்டத்தை விட்டு நகர்ந்து சென்றார்கள். அதைப் பார்த்துவிட்ட ரமாமணி அவர்களையே தொடர்ந்து சென்றாள்.

சொக்கனும் நாகலிங்கமும் திருக்குளத்தை நோக்கிச் செல்வதைப் பார்த்த ரமாமணி, குறுக்குப் பாதையில் ஓடி, குளத்தில் உள்ள மடைவாய்க்குள் ஒளிந்துகொண்டாள்.

அவள் நினைத்ததுபோல் படித்துறையில் அவர்கள் இருவரும் இறங்கி நடந்து வந்தார்கள்.

"வா, அப்படி மறைவாகப் போய்ப் பேசுவோம்" என்றார் நாகலிங்கம். இருவரும் ரமாமணி உட்கார்ந்திருக்கும் மடைவாய்க்கு மேலேயே வந்து உட்கார்ந்தார்கள். நாகலிங்கத்தின் கண்களில் அகப்பட்டுவிட்டால் தன்னைக் கொன்றுவிடுவார் என்ற எண்ணத்தில், ரமாமணி மூச்சுக்கூட விடாமல் பதுங்கிக்கொண்டாள். அப்போது நாகலிங்கம், "சொக்கா! அதைப் பிடிச்சிடவேண்டியது தான்" என்றார்.

"அதுக்கென்ன, முடிச்சுட்டா போவுது! பனங்காயைச் சீவறாப் போல ஒரே சீவு!" என்றான் சொக்கன்.

இதைக் கேட்ட ரமாமணி திடுக்கிட்டாள்.

"அட செவிட்டுப் பயலே! புடிக்கணும்னு சொன்னா முடிக்கிறோம்கறியே. இந்தா, கிட்டத்திலே வா" என்று நாகலிங்கம்



சொன்னதும் சொக்கன் நெருங்கி வந்தான். நாகலிங்கம் அவன் காதில் ரகசியமாகச் சொன்னார். ரமாமணி கூர்மையாகக் கேட்டாள்.

"மோகனா ராத்திரியே புறப்படுகிறாளாம். வழியிலே வண்டியை மறிச்சு— ஆமா, நம்ம குறக் கருப்பன் இல்லை, அவனையும் பத்து ஆளையும் கூட்டிக்க— ஒரு பயில்வான் இருக்கான் மத்தளக்காரன்— ஜாக்கிரதை—— ஓடு" என்றார். மறுபடியும் "சொக்கா!" என்று கூப்பிட்டார்.

"இந்தா, இந்தப் பணத்துக்கு அவங்களுக்குத் தண்ணியை வாங்கி ஊத்து" என்று அவன் கையில் ஐந்து ரூபாயை நீட்டினார். சொக்கன் அதை வாங்கிக்கொண்டு அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டதும், நாகலிங்கம் வேறு வழியே சென்றார்.

அவர்கள் காலடிச் சத்தம் மறையும் மட்டும் உள்ளேயே பதுங்கியிருந்தாள் ரமாமணி. அவள் உடம்பெல்லாம் வியர்வையில் நனைந்துவிட்டது. மெல்லத் தலையை நீட்டிப் பார்த்துவிட்டு வெளியே வந்தாள். குளிர்ந்த காற்று வீசியது. "அம்மாடி! ஒழிந்தாள் மோகனாம்பாள்" என்று பெருமூச்சு விட்ட ரமாமணி, நேரே வீட்டிற்குப் போய்த் தன் படுக்கையில் படுத்தாள்.

ஆனால் அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. புரண்டு புரண்டு படுத்தாள். அரை மணி ஆயிற்று; ஒரு மணி ஆயிற்று; சாமிகூடக் கோவிலுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டது.

ரமாமணியின் மனத்தில் பழைய நினைவுகள் தோன்றின. 'இன்று இந்தக் கூட்டத்தில் ஆடாதே. ஆடினால் காலை ஒடித்துவிடுவேன்' என்று சொன்ன இதே நாகலிங்கம், ஒரு காலத்தில் தன்னைப் பார்த்து "மானே, தேனே" என்று கொஞ்சிக் குலாவியதையெல்லாம் எண்ணினாள்.

'உன்னை உயிருள்ள வரைக்கும் கைவிடமாட்டேன்' என்று சொல்லி அவர் தன்னை நாடகத்திலிருந்து விலகச் சொன்னதும், அவர் பேச்சை நம்பித் தான் விலகியதும், அதன் பிறகு அவர் கிழித்த கோட்டைத் தாண்டாமல் அவருக்கு அடங்கி நடந்ததும், பிறகு அவர் இன்னொரு பெண்ணிடம் அன்பு காட்ட ஆரம்பித்த போது "ஏன் இப்படிச் செய்கிறாய்" என்று ஒரு கேள்வி கேட்டதற்காகத் தன்னை அவர் அடி அடி என்று அடித்து, நகைகளையெல்லாம் பிடுங்கிக் கொண்டு விரட்டிவிட்டதும், தான் இரவு முழுவதும் சோளக் கொல்லையில் மறைந்திருந்து அந்த ஊரை விட்டே ஓடி வந்ததையும் எண்ணினாள். இதையெல்லாம் எண்ணிய போது அவள் கண்களிலிருந்து நீர் பெருகலாயிற்று. அவள் வாழ்க்கையில் எத்தனையோ கஷ்டங்களைத் தானே தனியாய் நின்று சமாளிக்க வேண்டியிருந்ததால் அந்த அபலைப் பெண்ணுக்கு வாய்த்துடுக்கும் தைரியமும் ஏற்பட்டிருந்த போதிலும், அவள் கண்களில் கண்ணீர்

வடிய ஆரம்பித்ததும் அவளுடைய பொறாமைக் குணம் மாறியது. பெண்மைக்குரிய இரக்கம் தானாகவே தோன்ற ஆரம்பித்தது. தன்னைப் போல் இந்த நாகலிங்கத்திடம் சிக்கி எந்தப் பெண்ணும் கஷ்டப்பட்டுவிடக்கூடாது என்ற நல்லெண்ணம் தோன்றவே, அவள் மனம் மறுபடியும் மோகனாவின் மேல் சென்றது.

"ஐயோ, பதினெட்டு வயதுப் பெண்; பார்த்தால் இன்று முழுதும் பார்த்துக்கொண்டிருக்கலாம்; அவ்வளவு அழகாய் இருக்கிறாள்! கிளி போன்ற அந்தப் பெண்ணை இந்தப் படுபாவி என்ன செய்யப் போகிறானோ! இவனுக்கு ஏன் இந்த ஆசை? இவன் கையில் அந்தப் பச்சைக் கிளி சிக்கினால், பாவம், உயிரையே விட்டுவிடுவாளே! இந்தப் பாவம் யாருக்கு? நமக்குத் தெரிந்திருந்தும் நாம் 'சும்மா இருக்கலாமா? ஒரு பெண்ணுக்குப் பெண் இந்த உபகாரங்கூடச் செய்யாமல் நாம் இருந்தென்ன? இப்பொழுதே போகிறேன். அவளை 'இன்று இரவு' நீ ஊருக்குப் போகவேண்டாம்; பாதையில் உனக்கு ஆபத்து காத்திருக்கிறது' என்று எச்சரிக்கிறேன். நாகலிங்கத்துக்கு இது தெரிந்து அவன் நம்மைக் கொன்றாலும் சரி, நம் வாழ்வைப் பாழாக்கிய அவன் கையாலேயே நாம் மடிந்தாலும் சரி, கடைசியில் ரமாமணி ஒரு பெண்ணை ஒரு பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றினாள் என்ற நல்ல பெயருடனாவது இறப்போம்' என்ற முடிவுக்கு வந்தாள் ஜில்ஜில் ரமாமணி.

படுக்கையை விட்டுச் சட்டென்று எழுந்தாள். அவசரம் அவசரமாக ஒரு போர்வையை எடுத்துப் போர்த்திக்கொண்டு மோகனாம்பாள் தங்கியிருக்கும் வீட்டை நோக்கி ஓடினாள்.

எங்கும் இருட்டாய் இருந்தது. தெருவில் நாய்கள் குரைத்தன. ஊர்க்காவல்காரன் எதிரில் வருவதைக் கண்டு பதுங்கினாள். அவள் நெஞ்சம் பட்பட்டென்று அடித்துக்கொண்டது. அவன் போன பின் ஒரே ஓட்டமாய் மோகனாம்பாள் வீட்டுக்கு ஓடி, "அம்மா, அம்மா, மோகனா மோகனா" என்று கதவைத் தட்டினாள்.

கதவு திறக்கப்படவில்லை. அவள் மனம் பகீரென்றது. வீடு வெளிப்பக்கம் பூட்டப்பட்டிருப்பதைப் பார்த்தாள்! 'ஐயோ, ஊருக்குப் புறப்பட்டுவிட்டார்கள் போலிருக்கிறதே! இனி யாரிடம் சொல்வது? எப்படிக் காப்பாற்றுவது?' என்று எண்ணியவாறு திகைத்து அங்கேயே நின்றுவிட்டாள்.





## மாய கர்ப்பிணி

வீடு திரும்புவதில்தான் மாடுகளுக்கு எவ்வளவு உற்சாகம்! மோகனாம்பாள் கோஷ்டியாரின் வண்டிகள் இரண்டிலும் பூட்டிய புலிக்குளத்துக் காளைகள், வீட்டுக்குப் போனால் தொட்டித் தண்ணீர், பிண்ணாக்கு, பருத்தி விதை இவைகள் கிடைக்கும் என்ற ஆவலில் துள்ளுத் துள்ளென்று மதுரையை நோக்கி ஓடிக்கொண்டிருந்தன. வடிவாம்பாள் அரைத் தூக்கத்தில் ஆடி விழுந்த போதிலும், தன் மகளுக்குப் பரிசு கிடைத்த தங்கச் சங்கிலியைப்பற்றி அடிக்கடி எண்ணிப் பூரித்தாள். நட்டுவனாருக்கோ, மோகனா இரவு ஆடிய ஆட்டத்தை நினைத்து உற்சாகம். ஆனால் மோகனா மட்டும் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்தாள்.

ஒரு நொடியில் காதலித்து அடுத்த நிமிஷத்தில் சண்டை போட்டுக்கொள்ளும்படி நேர்ந்த தன் கருத்துக்கினியவனை மறுபடியும் காண எண்ணியது அவள் மனம்.

'நம்மைப்போல் அவனும் தஞ்சாவூர் ரயிலில் செல்ல வேண்டியவன்தானே! அவன் வண்டியும் இந்த மதுரைப் பாதையில்தானே வரவேண்டும்!' என்று நினைத்ததும் அவளுக்கு அளவுகடந்த ஆனந்தம் உண்டாயிற்று. 'நம் வண்டிக்கு முன்னால் அவன் வண்டி போயிருந்தாலோ?' என்ற ஒரு சந்தேகம் வரவே, அந்த ஆனந்தம் மாறி தாங்கமுடியாத வருத்தம் உண்டாகியது. உடனே அவள் மனம் வெகுவேகமாக மதுரைவரை சென்றது. 'மனோவேகம் போல் மாடுகளுக்கு வேகம் இல்லையே' என்று எண்ணினாள். 'இந்த வண்டிக்காரனை உள்ளே உட்காரச் சொல்லிவிட்டு நாமே இந்த மாடுகளை அதட்டி விரட்டி ஓட்ட வேண்டும்; சண்முகம் போகும் வண்டியைப் பிடிக்க வேண்டும்' என்றுகூட அவளுக்குத் தோன்றியது. இதற்குள் 'நாம் வண்டியைப் பூட்டிய பிறகு அவன் வண்டி கட்டியிருந்தால்?' என்ற சந்தேகமும் வந்தது.

"அதனால் என்ன? ரயில் குறிப்பிட்ட நேரத்தில்தானே புறப்படும்? முன் வண்டியில் வந்தாலும் பின் வண்டியில் வந்தாலும் ரயிலில் ஒன்றாய்த்தானே புறப்பட வேண்டும்? நாம் போய் முதலிலேயே ரயிலில் ஏறிவிடுவோம். அவன் எப்படியும் மெள்ளத்தான் வருவான். அதற்குள் வண்டியிலுள்ள அவ்வளவு ஆசனங்களிலும் பெட்டி, படுக்கை, கூஜா எல்லாவற்றையும் வைத்து இடத்தை முதலில் நாம் பிடித்துக்கொண்டுவிடுவோம். ரயிலில் இடம் அகப்படாமல் அவன்

திண்டாடுவான். ஒவ்வொரு பெட்டியாய்ப் பார்த்துக்கொண்டே வருவான். நான் ஜன்னல் அருகில் உட்கார்ந்திருப்பேன். அவன் என்னைப் பார்ப்பான். நான் அவனைப் பாராதது போல் முகத்தைத் திருப்பிக்கொள்வேன். நம் வண்டியில் இடம் இருக்கிறதா என்று படியில் ஏறி, பெட்டியின் உள்ளே பார்ப்பான். அப்பொழுதும் நான் அவனைப் பார்க்க மாட்டேன். உடனே எங்கு பார்த்தாலும் சாமான்கள் அடுக்கியிருப்பதும், அவைகளை எடுத்தால் உட்கார இடம் இருப்பதும் அவனுக்குத் தெரியும். அவன் விழிப்பான். நம்முடன் பேச நினைப்பான். நானாகக் கூப்பிட்டு வண்டியில் ஏறிக்கொள்ளச் சொல்வேன் என்று அவன் காத்திருப்பான். அப்போதும் நான் அவனிடம் பேசாமல் 'வரதா! அந்த ஆசனத்திலிருக்கும் பெட்டி, படுக்கைகளை எடுத்துக் கீழே வை. காசு கொடுத்து டிக்கெட் வாங்கினவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். பாவம், ஏறிக்கொள்ளட்டும்' என்றுதான் சொல்லுவேன். அவன் உள்ளம் குளிரும். என் எதிரில் வந்து உட்காருவான். அப்பொழுதும் அவனைப் பார்க்கமாட்டேன். ரயில்வே அட்டவணைப் புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு அதை அக்கறையாய்ப் படிக்க ஆரம்பிப்பேன். 'இவள் நம்மைப் பார்க்க மாட்டாளா!" என்று அவன் ஏங்குவான். ஏங்கட்டும்! நன்றாக ஏங்கட்டும்! ஏங்கித் திண்டாடட்டும்!" என்றெல்லாம் நினைத்தாள். உடனே அவள் முகம் நாணத்தால் சிவந்தது. அப்போது ஒரு பாலத்தின்மேல் வண்டிகள் கடகடவென்று ஓடும் சத்தம் கேட்டது. மோகனாம்பாள் சிந்தனை கலைந்தது. சாலையைப் பார்த்தாள்.

அந்தப் பாலத்தைக் கடந்து வண்டிகள் செல்லும்போது பாலத்தின் மதகின் மேல் உட்கார்ந்திருந்த ஒருவன் வண்டிகளின் அருகில் ஓடிவந்தான். "அம்மா! அம்மா! உங்களுக்குப் புண்ணியமா போகுதம்மா! காப்பாத்துங்கம்மா" என்று அவன் கெஞ்சினான்.

"அதோ அளகுமலை இருக்குதப்பா, அங்கே போய் வேண்டிக்கோ; காப்பாத்துவாரு" என்றாள் வடிவாம்பாள்.

"அம்மா, அம்மா! பத்து மாசம் புள்ளைத்தாச்சி அம்மா! திருவிளாப் பார்க்கணும்னு ஆசைப்பட்டா! அவ ஆசையைக் கெடுக்கப்படாதேன்னு கூடவே கூட்டியாந்தேன் அம்மா! காப்பாத்துங்கம்மா! இரண்டு உசிரைக் காப்பாத்தின புண்ணியம் உண்டம்மா!"என்று அவன் கையெடுத்துக் கும்பிடவே மோகனாவின் மனம் இளகியது.

"என்ன ஐயா? அந்த அம்மாளுக்கு என்ன?" என்று அக்கறையுடன் விசாரித்தாள் மோகனாம்பாள்.

"ரொம்ப ஆசைப்பட்டாளுங்க; கூட்டியாந்தேன். வழியிலே பிரசவ வேதனையாலே கஷ்டப்படறாளுங்க. ஒரு அடிகூட நடக்க முடியல்லீங்க. யாராவது ஒரு பொம்பளை துணைக்கு இருந்தால்



இதோ ஒரு நொடியிலே நான் பக்கத்து ஊருக்குப் போய் ஒரு மருத்துவச்சியைக் கூட்டியாந்துடுவேன்" என்றான் அந்த ஆள்.

"அம்மா, வா அம்மா, போய் பார்ப்போம்" என்றாள் மோகனாம்பாள்.

"ஆமா, இந்த இருட்டிலே இறங்கிப் போறாங்களாக்கும்! நீ சும்மா இரு பொண்ணே! இங்கெல்லாம் திருட்டுப் பயம் ஜாஸ்தி" என்றாள் வடிவாம்பாள்.

"ஆமா! உன் கண்ணுக்குச் சாமியார்கூடத்தான் திருடனா தெரிஞ்சார். ஏய், வண்டியை நிறுத்தப்பா" என்று சொல்லிக் கொண்டே கீழே குதித்தாள் மோகனாம்பாள்.

"இந்தா, மோகனா! சும்மா இரம்மா" என்று வடிவாம்பாளும் கீழே இறங்கினாள்.

"தாயே, நீங்க நல்லாயிருப்பீங்க! இப்படி வாங்க" என்று கூறிப் பக்கத்தில் இருந்த காட்டு ஊருணியை நோக்கி நடந்தான் அந்தப் பேர்வழி.

"எங்கே அப்பா இருக்கிறாங்க?" என்று ஆவலுடன் கேட்டாள் மோகனா.

"இதோ, அந்த மண்டபத்திலே உட்கார்த்தி வைச்சிருக்கேன். தண்ணி குடிச்சுட்டு வந்தாளுங்க. அப்படியே சுருண்டு உட்கார்ந்துப் பிட்டாளுங்க" என்று சொல்லிக்கொண்டே நடந்தான் அந்த ஆள். அவனைத் தொடர்ந்து ஒற்றையடிப்பாதையில் தாயும் மகளும் வேகமாய் நடந்தார்கள்.

சாலையை அடுத்து ஒரு குளமும், அதற்கு எதிர்ப்புறத்தில் ஒரு பதினாறு கால் மண்டபமும் இருந்தன. வடிவாம்பாளுக்கும் மோகனாவுக்கும் அந்த இடத்தைப் பார்த்ததுமே அச்சம் ஏற்பட்டது. 'இது திருடர்கள் சாமர்த்தியமோ' என்ற சந்தேகத்தில் இருவரும் தயங்கினார்கள்.

அப்போது அந்த மண்டபத்திலிருந்து 'அம்மா, ஐயோ' என்று ஒரு பெண் பிள்ளையின் தீனமான குரல் கேட்டது. சந்தேகம் நீங்கியவர்களாய் வடிவாம்பாளும் மோகனாவும் அந்த மண்டபத்தை நோக்கி மறுபடியும் நடந்தார்கள்.

வண்டிகள் இரண்டும் சாலையின் நடுவிலேயே நின்று கொண்டிருந்தன. பெண்கள் இருவரும் தம்மைக் கூப்பிடாமல் இறங்கிச் செல்வதைப் பார்த்துவிட்டு, நட்டுவனார் சற்று நேரம் வண்டியிலேயே உட்கார்ந்திருந்தார். கொஞ்ச நேரமாகியும் அவர்கள் திரும்பி வராததால் வண்டியை விட்டுக் கீழே குதித்தார். 'ஏய், வரதா!' என்று கூப்பிட்டார். வரதனும் துத்திக்காரனும் அபராஞ்சியும் அவர்கள் வந்த வண்டியிலிருந்து இறங்கினார்கள். "ஏய், வண்டிக்காரங்களா நீங்களும் வாங்க" என்றார் நட்டுவனார்.

"இறங்கிப் போனா திருடன் மாட்டைப் புடிச்சிக்கிட்டுப் போயிடுவானுங்க, நீங்க போங்க" என்றான் முதல் வண்டிக்காரன். "ஆமாங்க வண்டியைத் தனியா விட்டுட்டு வரப்படாதுங்க" என்றான் இரண்டாவது வண்டிக்காரன்.

இதற்குள் மோகனாவும் வடிவாம்பாளும் மண்டபத்தை அடைந்துவிட்டனர். அந்தப் பெண் குரல் கேட்டுக்கொண்டே இருந்தது. இருட்டில் சுற்றி நெல்லி மரமும் அரச மரமும் சூழ்ந்த அந்த இடத்தில் அவர்கள் நெருங்கியதுமே மண்டபத்தின் மறைவில் இருந்து தொப்பென்று ஒரு ஆள் குதித்தான். அவன்தான் சொக்கன். அவன் கூடவே பத்துப் பதினைந்து பேர்களும் குதித்தார்கள். இதைக் கண்ட வடிவாம்பாளும் மோகனாவும் "அய்யோ திருடன், திருடன் !" என்று அலறினார்கள்.

'திருடன், திருடன் !' என்ற சத்தத்தைக் கேட்ட நட்டுவனாரும் வாதனும் 'விடாதே, பிடி, பிடி !' என்று கூச்சலிட்டுக்கொண்டே சத்தம் வந்த திக்கை நோக்கி ஓடினார்கள்.

"விடாதே ! பிடி ! பிடி !" என்ற சத்தத்தைக் கேட்டவுடன் சொக்கன் சாலையைப் பார்த்தான். நட்டுவனார், வாதன், வேலைக்காரி அபரஞ்சி, துத்திகாரர் ஆகிய நால்வரும் ஓடி வருவது அவன் கண்ணுக்குத் தெரிந்தது. உடனே, குறக் கருப்பனைப் பார்த்து, "கருப்பா ! அவங்களைப் பார்த்துக்கோ" என்று அவசரமாகக் கூறிவிட்டுத் தன் இடுப்பிலிருந்து சரேலென்று ஒரு பிச்சுவாவை உருவினான்.

அந்தப் பிச்சுவா பளீர் என்று மின்னியது. அதை மோகனாவின் கழுத்துக்கு நேரே நீட்டி "சத்தம் போடாதே ! கொன்றுவிடுவேன்; போ, அப்படி" என்றான். எதற்கும் அஞ்சாத அந்த இளம் பெண் மோகனாம்பாளுக்குக் கத்தியைக் கண்டதும் வாய் குழறியது.

"அம்மா !" என்று வடிவாம்பாள்மீது சாய்ந்தாள். பயத்தால் அவள் உடம்பு நடுங்கியது. உடம்பெல்லாம் வியர்த்துவிட்டது.

மகள் தன் மேல் சாய்ந்தவுடன் அவளை இறுக அணைத்துக் கொண்டாள் வடிவாம்பாள்.

"சத்தம் போடாமல் நட!" என்று கத்தியை நீட்டிக்கொண்டே சொக்கன் முன்னே வர, கத்தியைப் பார்த்துக்கொண்டே தாயும் மகளும் பின்னால் நடந்தார்கள். எந்த ஆபத்தையும் சமாளிக்கும் திறமையுடைய வடிவாம்பாள் மூச்சு விடவும் பயந்தாள். தான் கத்தினால் தன் மகளுக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்சத்தில் சூத்திரப் பாவை போல் நடந்தாள். சொக்கன் கையில் இருக்கும் கத்தியையும் தன் மகளின் முகத்தையும் பார்த்தபடி அவள் பின்புறமாகவே நடக்கும்போது அவள் முதுகில் "சிலீர்" என்று ஏதோ பட்டதும் அவள் நடுங்கியே போய்விட்டாள். முகம் வெளுத்தது.



திரும்பிப் பார்த்தாள். அவள் முதுகில் பட்ட பொருள் அங்கு மேட்டின்மேல் நின்ற ஒரு அரை வண்டியின் சக்கரம் என்பதை உணர்ந்தாள்.

"ஏறு வண்டியில்" என்று உத்தரவிட்டான் சொக்கன்.

மந்திரத்தில் கட்டுப்பட்டவள் போல் மோகனாவை அணைத்துக்கொண்டு, வண்டியில் ஏறி அமர்ந்தாள் வடிவாம்பாள். சொக்கனும் கத்தியை உருவியவண்ணம் வண்டியில் உட்கார்ந்தான். வண்டி பறந்தது.

வண்டி ஓடிக்கொண்டிருந்தாலும் அதிலிருந்து ஒரு சத்தமும் வரவில்லை. அந்த வண்டியின் அச்சிலே வளையங்கள் இல்லை. கடைச்சாவிகளின் உரசல் இல்லை. கூண்டு ஆடவில்லை. மாடுகளின் கழுத்தில் மணிகள் இல்லை. அது நாகலிங்கத்தின் பந்தய வண்டி. முன்னால் போகும் வண்டிக்காரனுக்கு, பின்னால் ஒரு வண்டி தொடர்ந்து வருகிறது என்பதே தெரியாதிருக்கும்படி அமைக்கப்பட்ட வண்டியாதலால் அது சத்தமே இல்லாமல் ஓடிக்கொண்டிருந்தது. வண்டிக்காரன் வாயால் ஒரு அதட்டல்கூட அதட்டாமல், அந்தக் குட்டைகள் இரண்டும் ஓடியதைப் பார்த்தால் நாகலிங்கத்தின் நள்ளிரவுத் திருட்டுகளில் அந்த விலங்குகளும் பல முறை சம்பந்தப்பட்டுப் பழகிப்போனவைகளோ என்ற சந்தேகம் வந்தது.

சொக்கனின் கத்தி, அவர்கள் முகத்தின் முன் இன்னும் நீட்டப்பட்டபடியேதான் இருந்தது. வடிவாம்பாள் இன்னும் தன் மகளைக் கட்டிக்கொண்டபடியேதான் இருந்தாள். ஆனாலும் மோகனாவின் மூக்குக்கு நேரே மட்டும் அடிக்கடி கையை வைத்து மூச்சு இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டாள்.

வண்டி ஒரு காட்டுப்பாதையில் வெகு வேகமாகப் போய்க்கொண்டிருந்தது.

## ஒன்பதாவது அத்தியாயம்



### "தனாங்கு ததிங்கிணதோம் !"

முன்பெல்லாம் போலீஸ்காரர்கள் இரவில் ரோந்து சுற்றி வரும்பொழுது 'பாரா உஷார் !' என்று இரைந்து கத்துவார்கள். இந்தச் சத்தத்தைக் கேட்டு வீடுகளில் தூங்கும் குழந்தைகள் வீறிட்டு அலறி எழுந்து தாயையோ தகப்பனையோ போய்க் கட்டிக்கொள்ளும். அவர்கள் தெரு முனையில் போய்

இன்னொரு தரம் 'பாரா உஷார்' என்று சத்தமிடும் போது சத்தம் குறைவாகக் கேட்கும். அதன் பிறகுதான் எல்லோரும் தூங்குவார்கள்.

இப்படி ஊருக்கெல்லாம் தைரியத்தைக் கொடுக்கும் போலீஸ்காரர் ஒருவர்மேல் ஒரு நாள் ஒரு வழக்கு விசாரணைக்கு வந்தது. அதாவது, உங்கள் போலீஸ்காரன் 'பாரா உஷார்' என்று கத்தினான்; எனக்குத் தூக்கம் கெட்டுவிட்டது" என்று ஒரு கனவான் அதிகாரிகளுக்கு ஒரு கடிதம் எழுதிப்போட்டுவிட்டார். அந்தக் கடிதத்தைப் பார்த்த அதிகாரிகள் 'அடேயப்பா ! அந்தக் கனவான் பெரிய உத்தியோகஸ்தராயிற்றே ! அவர் தூக்கத்தைக் கெடுத்தால் ஆபீஸில் வந்து அவர் தூங்குவாரே' என்று நினைத்து அந்தப் போலீஸ்காரரைக் கூப்பிட்டு விசாரிக்கலானார்கள்.

"என்னா மேன், நீ என் மேன் கூச்சல் போடணும்கிறே? சத்தம் போடாமே பாரா செஞ்சா என்ன?" என்று கேட்டார் அதிகாரி.

"தரும துரைகளே, தனியாப் போகிற போது யாராலேயும் சத்தம் போடாமல் போக முடியாதுங்க. இருட்டிலே சந்து பொந்துகளிலே நடக்கிறபோது, அங்கே பேய் இருக்குமோ, பிசாசு இருக்குமோன்னு பயமாயிருக்குமுங்க. அந்தப் பயத்திலே நெஞ்சு கிடந்து 'படபட'ன்னு அடிச்சுக்கும். காலும் கையும் வெடவெடன்னு நடுங்கும். தொப்பி மேலே யாரோ வந்து உட்கார்ந்துகிட்டு நம்ப கழுத்தைப் பிடிக்கிற மாதிரி தோணும். அப்போ வாயைத் துறந்து 'பாரா உஷார்' னு ஒரு சத்தம் போட்டம்னா அந்தச் சத்தமே நமக்கு ஒரு தைரியத்தைக் கொடுக்குமுங்க !" என்று அந்தப் போலீஸ்காரர் சொன்னாராம்.

இதைப் போலவேதான் வரதனும் 'விடாதே பிடி, பிடி !' என்று உரக்கச் சத்தமிட்டுத் தனக்குத் தைரியத்தை உண்டாக்கிக்கொண்டான். அவன் அவ்வளவு சத்தம் போட்டதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. திருடன் அவனைப் பிடித்துவிடக்கூடாது என்பது முதல் காரணம். அடுத்த காரணம், அவன் சத்தத்தைக் கேட்டே திருடன் ஓடிவிட வேண்டும் என்பது.

"அடி தளாங்கு தகிங்கிணதோம். எலே திருடவா வந்தீங்க?" என்று சொல்லிக்கொண்டே ஓடினான் வரதன். அப்பொழுது அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. எதற்கும் கையிலே ஒரு கம்பு இருந்தால் நல்லதாயிற்றே என்று நினைத்தான். பக்கத்தில் தொங்கிய மாக்கிளையிலிருந்து ஒரு கம்பை ஒடித்துக்கொள்ள எண்ணினான். 'இருட்டு நேரத்திலே மரத்திலே பாம்பு இருக்குமோ' என்ற சந்தேகம் வரவே நீட்டின கையை மடக்கிக்கொண்டான்.

"அடச் சே ! நீ ஒரு ஆம்பளையாட்டமா !" என்று அவன் முகத்தில் ஒரு இடி இடித்துவிட்டு ஒரு கொம்பை ஒடித்து அவன் கையில் கொடுத்தாள் அபரஞ்சி.



"விடாதே, பிடி ! பிடி !" என்று கத்திக்கொண்டே எல்லோரும் மண்டபத்தை நோக்கி ஓடினார்கள். அந்தச் சமயம் கருப்பனும், நாலைந்து திருடர்களும் இவர்களை ஏமாற்றுவதற்காக மண்டபத்திலிருந்து வேறொரு திக்கை நோக்கி வெளிச்சத்தில் ஓடினார்கள். நட்டுவனார் அவர்களைத் துரத்திக்கொண்டு போக, கூடவே மற்ற மூவரும் அதே திக்கில் ஓடினார்கள்.

ஆனால் கொஞ்ச தூரம் சென்றதும் கருப்பனும் அவனது ஆள்களும் எங்கேயோ ஓடி மறைந்துவிடவே, நட்டுவனாரும் வரதனும் திகைத்து நின்றுவிட்டார்கள்.

இந்தச் சமயத்தில்தான் மோகனாம்பாளை வண்டியில் ஏற்றிக்கொண்டு சென்றுவிட்டான் சொக்கன்.

"இது திருடங்க நம்மை ஏமாத்தறதுக்காகச் செஞ்ச சூழ்ச்சியாமா யிருக்குமோ?" என்றாள் அபரஞ்சி.

"அப்படியும் இருக்கலாம்" என்று கூறிக்கொண்டே நால்வரும் மண்டபத்தை நோக்கி மறுபடியும் ஓடிவந்தார்கள். ஆனால் மண்டபத்தின் அருகில் ஆள்கள் ஒருவரையும் காணோம்.

"எங்கே ஒருவரையும் காணோம்" என்றார் நட்டுவனார்.

வரதன் சுற்று முற்றும் பார்த்தான். "சும்மா ஒரு தகிங்கிணதோம் கொடுத்துடலாம்னு பாத்தேன். என் கையிலே மட்டும் அவங்க அகப்பட்டிருந்தாங்கன்னா ஆளுக்கு ஒரு தனி ஆவர்த்தனம் கொடுத்திருப்பேன் !" என்றான்.

என்ன செய்வதென்று தெரியாமல், நட்டுவனார் திகைத்து அங்கேயே நின்று கொண்டிருந்தார்.

"ஏன் சும்மா யோசிக்கிறீங்க? எப்ப மோகனா இங்கே இல்லையோ, வண்டிக்குத்தான் போயிருக்கணும். பின்னே வாங்க, வண்டிப் பக்கம் போவோம்" என்று சொல்லிவிட்டு வரதன் வேகமாக நடந்தான். நட்டுவனாரும் துத்திக்காரனும் தொடர்ந்தார்கள். ஆனால் அபரஞ்சிக்கு மட்டும் ஏதோ சந்தேகமாகவே இருந்தது. அந்த இடத்தைச் சுற்றி ஒரு முறை பார்த்தாள்.

அப்போது அவள் கண்களுக்குக் குளத்தின் படித்துறையில் பலர் ஒளிந்திருப்பது தெரிந்தது. பயந்து நிழலில் மறைந்துகொண்டே பக்கத்திலிருந்த ஒரு ஐயனார் கோவிலுக்குள் நுழைந்துவிட்டாள். இதற்குள் வரதனும் மற்றவர்களும் படித்துறையை நெருங்கி விட்டார்கள்.

"என்ன நட்டுவனாரே ! உங்கள் சங்கிலியைக் கணட்டாமே எறங்கி வந்துட்டீங்க போலே இருக்கே. அந்தத் திருட்டுப் பயலுகளை மாத்திரம் நான் துரத்திக்கிட்டு ஓடலேன்னா, இந்நேரம் உங்க சங்கிலியைக் கழட்டிக்கிட்டே போயிருப்பாங்களே !" என்று தற்பெருமையடித்துக்கொண்டான் வரதன்.

அப்பன் குதிருக்குள்ளே இல்லை என்பது போல் வரதன் பேசிய விளையாட்டுத்தனமான பேச்சு இப்போது அவர்களை ஆபத்துக் குள்ளாக்கியது. 'வந்த வேலை முடிந்துவிட்டது. இவர்கள் கண்ணுக்கு அகப்படாமல் சற்று நேரம் ஒளிந்திருந்துவிட்டு இவர்கள் சென்ற பிறகு ஓடிவிடலாம்' என்று ஒளிந்திருந்த திருடர்களுக்கு, வரதன் பேசிய பேச்சு ஆசையை உண்டாக்கிவிட்டது. 'குபீர்' என்று அந்தத் திருடர்கள் இவர்கள் மேல் பாய்ந்தார்கள். நட்டுவனாரின் கழுத்துச் சங்கிலியின் மேல் குறக்கருப்பன் கையைப் போட்டான். "அடே, இது கிலிட்டுடா, கிலிட்டுடா" என்று கதறினார் நட்டுவனார். "தனாங்கு ததிங்கிணதோம்! இங்கேயாடா ஒளிஞ்சிருந்தீங்க!" என்று கூறி வரதன் பாவ்லா போட ஆரம்பித்தான். அவன் கையில் இருந்த கம்பைச் சிலம்பம் சுற்றினான். அவனைத் திருடர்களால் நெருங்க முடியவில்லை. அப்போது பின்புறமாக வந்த ஒருவன் அவன் தலையில் ஓங்கி ஒரு அடி கொடுத்தான். வரதன் அதையும் சமாளித்துக்கொண்டு, "அடி தன்னானே கிடு கிடு கிண்ணத்தாம்! நாலு பேரையாவது செம்மைக்கு வார் புடிச்சுப்பிடறேண்டா" என்று ஒரு திருடனை ஓங்கி அறைந்தான். இன்னொரு திருடன் வயிற்றில் 'பனாங்கு' என்று ஒரு குத்துக் குத்தினான்.

இப்படி இடசாரி வலசாரியாகச் சுற்றிக்கொண்டே வரதன் வேட்டையாடுவதைக் கண்ட குறக்கருப்பன் உண்மையிலேயே நடுங்கிவிட்டான். வரதன் கையில் அகப்பட்டவர்களெல்லாம் கீழே விழுவதைக் கண்ட அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. மடியில் இருந்த பொடி மட்டையை எடுத்து அதிலுள்ள பொடியை வரதன் முகத்தில் தூவினான். தந்திரம் பலித்தது. "ஐயோ! எரியுதே! எரியுதே!" என்று அலறினான் வரதன். கையிலிருந்த கம்பைக் கீழே போட்டுவிட்டு வரதன் கண்களைக் கசக்கிக்கொள்ள ஆரம்பித்தான். நச், நச்சென்று அவன் தும்மிக்கொண்டிருக்கும்போது குறக் கருப்பனும், இன்னொருவனும் அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள்.

"என்ன, வஸ்தாது! நம்பளுக்கே தண்ணி காட்ட ஆரம்பிச்சுட் டீங்களே! பொடி எப்படி?" என்றான் கருப்பன். இதற்குப் பதில் சொல்ல ஆரம்பித்த வரதன் பேச முடியாமல் நச்சென்று தும்மினான். பொடி, புகையிலை, சுருட்டு முதலிய எந்தப் பழக்கமும் வரதனுக்குக் கிடையாது. அதனால் முதன் முறையாக, அவன் மூக்கிலும், கண்களிலும் நாட்டுப்பொடி ஏறியவுடனே, அவனுக்கு உயிரே போவதுபோல் ஆகிவிட்டது. கண்ணீரும், தும்மலும், பெருகச்சுமாகத் திணறினான்.

வரதனையும், நட்டுவனாரையும், துத்திக்காரனையும் பிடித்து இழுத்துக்கொண்டு திருடர்கள் மண்டபத்தை நோக்கி நடந்தார்கள். "டேய்! இவங்ககூட ஒரு பொம்பிள்ளை வந்தாளே, அவ எங்கேடா?"



என்றான் கருப்பன். அவளைத் தேடிக்கொண்டே ஐயனார் கோவிலுக்கு அருகில் வந்தார்கள். அதைக் கண்ட அபாரஞ்சி அந்த இருட்டில் மெல்ல ஒரு மண் குதிரைமேல் ஏறி, ஆடாமல் அசையாமல் ஒரு சிலை போல் உட்கார்ந்துவிட்டாள். திருடர்கள் சுற்று முற்றும் பார்த்துவிட்டுப் போய்விடவே, அவள் குதிரையினின்றும் இறங்கி 'மோகனாம்பாளைக் காணோமே' என்ற கவலையில் குறுக்குப் பாதையில் சாலையை நோக்கி ஓடினாள்.

மண்டபத்தின் கல்தூண்களில் நட்டுவனாரையும், வரதனையும், துத்திக்காரனையும் கட்டிவிட்டு அவர்கள் எதிரில் கருப்பனும் மற்றவர்களும் உட்கார்ந்து காவல் காத்துக்கொண்டிருந்தார்கள்.

"அடப் பாவிகளா, கையை மாத்திரம் அவிழ்த்துவிடுங்கடா. கொஞ்சம் மூக்கைத் துடைச்சுக்கிறேன்" என்று சொல்லிவிட்டு நச்சென்று தும்மினான் வரதன்.

பத்தாவது அத்தியாயம்

## நந்தவனத் தோட்டம்



நல்லூரை அடுத்த காட்டிற்குள்ளே மலையை ஒட்டினாற்போல் ஒரு தோட்டம். தோட்டத்தைச் சுற்றிலும் செம்பாறாங் கற்களால் சுவர் எடுக்கப்பட்டிருந்தது. அதன் உள்ளே நாட்டு ஓடு வேயப்பட்ட ஒரு சிறு கட்டடம் இருந்தது. நெடுங்காலத்திற்கு முன்பு, யாரோ ஒரு பக்தர் இங்கே நந்தவனம் வைத்திருந்ததாகவும், பிறகு அவர் இறந்தவுடனே கவனிப்பாரற்று அந்த நந்தவனம் பாழாகிவிட்டதாகவும் சொல்லுவார்கள். நல்லவர்களுக் கெல்லாம் ஒரு காலத்தில் உறைவிடமாக விளங்கிய அந்தத் தோட்டம், இப்பொழுது நாகலிங்கத்தின் திருவிளையாடல்களுக்கு ஏற்ற இடமாக விளங்கியது. மோகனாவை ஏற்றிச் சென்ற நாகலிங்கத்தின் பந்தய வண்டி அந்தத் தோட்டத்திற்குள் நுழைந்து கட்டடத்தின் வாசலில் போய் நின்றது.

சொக்கன் கீழே குதித்தான். "அஞ்சலை, அஞ்சலை" என்று கூப்பிட்டான். (அப்பொழுது யார் பார்த்தாலும் அச்சம் கொள்ளக் கூடிய ஒரு பருத்த பெண்மணி அங்கே வந்து நின்றாள்.)

"சாவி எங்கே? எல்லாம் தயார் செஞ்சுட்டியா?" என்றான் சொக்கன். "இந்தா!" என்று சாவியைக் கொடுத்தாள் அஞ்சலை. சொக்கன் கதவைத் திறந்தான். 'கிர்ர்' என்ற பெருஞ்சத்தத்துடன் கதவு திறந்தது. தங்களுக்குப் போட்டியாக யாரோ வசிக்க வருகிறார்கள்

போயிருக்கிறதே என்று அங்கிருந்த பெருச்சாளிகளும் கீரிப் பிள்ளைகளும் அங்கும் இங்கும் ஓடின. சொக்கன் வண்டியருகில் வந்தான். வடிவாம்பாளையும் மோகனாவையும் பார்த்து, "இறங்குங்க கீழே!" என்றான். "ஏ அஞ்சலை, இவங்களை இறக்கி உள்ளே கூட்டிக்கிட்டுப் போ" என்று உத்தரவிட்டான்.

அஞ்சலை வண்டியருகில் வந்தான். இளங்காற்றில் அப்பொழுதுதான் மோகனாம்பாளின் கண்கள் சற்று திறந்தன. ஆனால் கண்ணுக்கு முன் அஞ்சலையின் சொரூபத்தைக் கண்டவுடன் மறுபடியும் மயங்கி விழுந்தாள் மோகனா.

"ராத்திரி ஆட்டம் ஆடின பொண்ணுல்லே? நான் அப்பவே நினைச்சேன், அய்யா கண்ணுக்கு முன்னாலே இப்படி அளகளகா ஆடுதே, அது ஒளுங்கா வீடு போய்ச் சேரணும்மேன்னு."

"அடச் சே! உன்னை யார் பின்னே இதெல்லாம் கேட்டாங்க? இல்லாட்டி ஒன்னையும் என்னையுமா சிறைப் பிடிப்பாங்க?"

"என்னையேன் பிடிக்கிறாங்க? உன்னைத்தான் வருசத்திலே மூணு வாட்டிப் பிடிச்சிட்டுப் போறாங்க. நீயும் சர்க்கார் செலவிலே ஒவ்வொரு ஊரா பாத்துட்டு உடம்பைத் தேத்திக்கிட்டு வந்துடறே."

"சரி, சரி! அந்தப் பெண்ணை இறக்கிக்கொண்டு போய் உள்ளே போடு" என்று சொக்கன் கூறியதும் அஞ்சலை, ஒரு ஆட்டுக் குட்டியைத் தூக்குவது போல் மோகனாம்பாளைத் தூக்கினான்.

"எங்களை என்ன செய்யப்போறே, தம்பி?" என்று பயந்து கொண்டே சொக்கனைக் கேட்டாள் வடிவாம்பாள்.

"தம்பியா? யாரு உன் தம்பி. போ உள்ளே!" என்று கத்தியை நீட்டினான் சொக்கன்.

"உனக்கு எவ்வளவு பணம் வேணும்னாலும் தரேன். எங்களை விட்டுடு" என்று கெஞ்சினாள் வடிவாம்பாள்.

"போன்னு சொன்னா போறியா. சும்மா வம்பு பேசிக்கிட்டு! போங்க உள்ளே" என்று அவன் அதட்டவே எல்லோரும் உள்ளே சென்றார்கள். அங்கே விரித்திருந்த ஒரு பாயின்மேல் மோகனாவைப் போட்டான் அஞ்சலை. வடிவாம்பாள் அப்படியே தலையில் கை வைத்துக்கொண்டு தரையில் உட்கார்ந்தாள். சொக்கனும் அஞ்சலையும் வெளியே சென்று கதவை இழுத்துப் பூட்டினார்கள்.

"சரி, கவனிச்சுக்க. நான் போய் யசமானைக் கூட்டிக்கிட்டு வாரேன்" என்று அஞ்சலையிடம் எச்சரிக்கை செய்துவிட்டுப் புறப்பட்டான் சொக்கன்.

தனியே விடப்பட்ட வடிவாம்பாள், 'வந்த இடத்தில் நம்முடைய கதி இப்படியாகிவிட்டதே' என்று மனமுருகிவிட்டாள்.

'சாலையில் அந்தப் பாவியின் பேச்சைக் கேட்டு ஏமாந்துவிட்டோமே! நடுக்காட்டில் ஒரு கர்ப்பிணி தவிக்கிறாள் என்ற வார்த்தையில் இந்தப் பொண்ணு மயங்கிவிட்டாளே! இப்பொழுது



ஆபத்து தலைக்குமேல் வந்துவிட்டதே! கையிலுள்ள நகைநட்டின் பேரில் ஆசைப்படாமல் இவர்கள் சிறை வைத்திருப்பதைப் பார்த்தால், இவர்கள் கொள்ளைக்காரர்களாகவும் தோன்றவில்லையே! அந்தப் பாவி நாகலிங்கத்தின் ஆட்கள் போலல்லவா தோன்றுகிறது?' என்று எண்ணினாள். தன் மகள் கிடக்கும் அலங்கோல நிலையைப் பார்த்தாள். 'எப்பொழுதும் தைரியமாக இருக்கக்கூடிய பெண் இப்படி மயக்கம் போட்டு விழுந்துவிட்டாளே!' என்று ஏங்கினாள்.

"மோகனா, மோகனா" என்று கூப்பிட்டாள் வடிவாம்பாள். பேச்சு இல்லை. உடம்பைத் தொட்டு அசைத்தாள். அதற்கும் மோகனா எழுந்திருக்கவில்லை. அந்த மங்கிய வெளிச்சத்தில் ஒரு தண்ணீர்ப் பானை இருப்பது தெரிந்தது. ஓடிப்போய் கொஞ்சம் தண்ணீரைக் கொண்டுவந்து, முகத்தில் தெளித்தாள். மோகனாம்பாள் மெல்ல விழித்துப் பார்த்தாள்.

"அம்மா! நாம் எங்கேயம்மா இருக்கிறோம்?" என்று கேட்டாள் மோகனாம்பாள்.

"அந்த நாகலிங்கம் நம்மைப் புடிச்சு அடைச்சுட்டாம்மா. இப்ப என்னடி செய்யறது?" என்று வருந்தினாள் வடிவாம்பாள்.

மோகனாவின் மயக்கம் கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிந்தது. எழுந்தாள்; கதவிடுக்கின் வழியாக வெளியே பார்த்தாள். எங்கும் ஒரே இருட்டுத்தான். தான் இருந்த அறையை முழுவதும் சுற்றிப் பார்க்கலானாள். எங்கு பார்த்தாலும் குப்பையும் கூளமுமாக நிரம்பி யிருந்தது. வௌவால் கூட்டங்களின் நாற்றம் மூக்கைத் துளைத்தது. சுவரைத் தடவிக்கொண்டே மெல்ல நடந்தாள். ஒரு சிறிய பலகணி தெரிந்தது. அதன் துவாரத்தின் வழியே வெளியே பார்த்தாள்.

அஞ்சலையின் இரண்டு கண்களும் உள்ளே கூர்ந்து நோக்குவது தெரிந்தது. "தப்பிச்சுக்கிட்டுப் போயிடலாம்னா பார்க்கிறே? இந்த அஞ்சலை கையிலே அகப்பட்டா கோழிக்குஞ்சை அமுக்கற மாதிரி அமுக்கிடுவேன்" என்றான் அஞ்சலை. மோகனாவுக்குப் பயம் மேலிட்டது. அப்படியே சுவரின்மீது சாய்ந்தாள்.

பதினொன்றாவது அத்தியாயம்



## நாகலிங்கமும் ரமாமணியும்

"ஒன்று குருக்களாகப் பிறக்க வேண்டும் இல்லாவிட்டால் கோயில் மாடாகப் பிறக்க வேண்டும்" என்று ஒருவன் வேண்டிக் கொண்டானாம். கோவில் மாட்டை வண்டியில் பூட்டுவது கிடையாது. அதற்கு உழைக்கவேண்டிய அவசியமே இல்லை. யாரும் கட்டிப்போடவும் மாட்டார்கள்

கண்ட வயலில் இறங்கி மேய்ந்துவிட்டு அது வண்டி போகும் பாதையில் படுத்திருக்கும். சாலையில் வண்டி வந்தால் அது எழுந்திருக்காது. "அப்பா எழுந்திரு, சாமி எழுந்திரு" என்று வண்டிக்காரன் கையைக் கூப்பிக் கெஞ்சுவான். மனது இருந்தால் எழுந்திருந்து விலகிப் போகும். இல்லாவிட்டால் சண்டித்தனந்தான். சில சமயம் சக்கரத்தில் கொம்பைக் கொடுத்து வண்டியையே தூக்கி மடிக்கப் பார்க்கும். "மா" என்று கத்தும். வண்டிக்காரன் பாடு திண்டாட்டமாகிவிடும். அவன் ஓடிப்போய்க் கடையிலிருந்து நான்கு வாழைப்பழங்களை வாங்கிக் கொண்டுவந்து அந்த மாட்டுக்குக் கொடுத்தால்தான் அது போகும். முகமெல்லாம் வண்டி மசியை அப்பிக்கொண்டு, திமில் குலுங்க ஆடி அசைந்து, அது நடந்து செல்லும்போது அதன் கண்களைப் பார்த்தால் கர்வம் என்றால் என்ன என்பது அப்போதுதான் தெரியும்.

இந்தக் கர்வம் சில மனிதர்களுக்கும் உண்டு. நமது நாகலிங்கம் அவர்களே அதற்குச் சான்று. அழகர்கோவிலில் அவர் வீட்டு வாசலிலே ஒரு மாமரம். அந்த மாமரத்தடியில் உட்காருவதற்கென்றே வழவழவென்று இரண்டு கற்கள் போடப்பட்டிருந்தன. அவைகளில் ஒன்றில் நாகலிங்கம் உட்கார்ந்து நெடுநேரமாக ஒரு வேப்பங்குச்சியினால் பல் விளக்கிக்கொண்டிருந்தார்.

அவருக்குப் பின்னால் இரண்டு ஆள்கள் நின்றார்கள். அவர்களில் ஒருவன் ஒரு பித்தளைத் தோண்டியில் தண்ணீர் வைத்துக்கொண்டு நின்றான். இன்னொருவனோ முகம் துடைக்கும் துண்டை வைத்துக் கொண்டு காத்திருந்தான். நாகலிங்கத்திற்கும் நம்மைப்போல் முப்பத்திரண்டு பற்கள்தாம். ஆனால் அடிதடி கேசுகளில் போனது போக மீதம் உள்ள பற்களும் ஒரு வராகனெடை தங்கமுந்தான் இப்போது இருந்தன. இதைத்தான் இரண்டு மணி நேரமாக அவர் தேய்த்துக் கொண்டிருந்தார்.

நாகலிங்கம் வெளியே அமர்ந்திருக்கிறார் என்றால் அந்த ஊரிலுள்ள சாதாரண மக்கள் அந்தத் தெருப்பக்கமாகவே போகமாட்டார்கள். தப்பித் தவறி ஒருவன் சென்றான் என்று வைத்துக்கொள்வோம். உடனே நாகலிங்கம் பல் தேய்ப்பதை நிறுத்தி விட்டு அவனை ஏறிட்டுப் பார்ப்பார். வந்த மனிதனோ கால் செருப்பைக் கழற்றிக் கையில் எடுத்துக்கொண்டு, இரு கைகளையும் கூப்பி, 'கும்பிடறேனுங்க' என்பான். நாகலிங்கம் இதைக் கேட்டு ரசிப்பார்.

**தன்னைக் கவனியாது யாராவது போனால் அவனைக் கூப்பிட்டு அதட்டுவார், உருட்டுவார், மிரட்டுவார்; "இரு பயலே! உன்னை விட்டேனா, பார்" என்பார். இவ்வாறு கோயில் மாடு போல் அட்டகாசம் செய்வதையே தொழிலாகக் கொண்டிருக்கும்**



நாகலிங்கம் பின்னை இன்று பல் தேய்த்துக்கொண்டு யாருடைய வருகையையோ அடிக்கடி எதிர்பார்த்தவண்ணம் இருந்தார்.

தெருக்கோடியில் சொக்கன் வருவதைப் பார்த்தார். பல்லுக் குச்சியைக் கீழே எறிந்துவிட்டு அவசரம் அவசரமாக வாயைக் கொப்புளித்துவிட்டு உள்ளே சென்றார்.

சொக்கன் கூடத்தில் நுழைந்து கையைக் கட்டிக்கொண்டு அவர் எதிரில் நின்றான்.

"என்ன சொக்கா? முடிச்சுட்டியா?" என்று ஆவலோடு கேட்டார் நாகலிங்கம்.

"முடிச்சிட்டேனுங்க.

"எதாச்சும் கொலை கிலை உண்டோ?"

"இல்லீங்க."

"ரத்தக் காயம்? கிரிமினல் கேசு?"

"ஒண்ணுமே கிடையாதுங்க. ஆட்களை எல்லாம் மண்டபத்துத் தூணிலே கட்டிப் போடச் சொல்லிவிட்டேன்."

"முட்டாளே! உன்னை யாரடா மோகனாம்பாளைத் தூணிலே கட்டிப் போடச் சொன்னது?" என்று அவனை அடிக்கப் போனார் நாகலிங்கம்.

"இல்லிங்க அதைக் கொண்டுபோய் நந்தவனத்துத் தோட்டத்திலே வச்சுட்டேனுங்க" என்றான் சொக்கன்.

"சபாஷ்! சொக்கா நீதாண்டா சிங்கம்! இந்தா!" என்று அலமாரியைத் திறந்து ஒரு துப்பட்டாவைத் தூக்கி அவன் கழுத்தில் எறிந்தார். சொக்கன் அதை எடுத்து முண்டாசாகக் கட்டிக்கொண்டான்.

"சரி; பெரிய வண்டியைப் பூட்டச் சொல்லு" என்று நாகலிங்கம் உத்தரவிட்டவுடன் சொக்கன் அவரைக் கும்பிட்டுவிட்டு வெளியே சென்றான்.

நாகலிங்கம் மறுபடியும் அலமாரியைத் திறந்தார். எந்த வேட்டியைக் கட்டுவது என்று புரியவில்லை. அவர் எப்போதும் 703 மல்தான் கட்டுவார். இப்போது கரையில்லாத அந்த வேட்டியைக் கட்டுவது அபசகுனம் போல் தோன்றியது. அவ்வளவு வேட்டியையும் அடுக்கோடு கீழே தள்ளினார். அதிலிருந்து சாவிக்கொத்து, மணிபர்ஸ், சீட்டுக்கட்டு, சுருட்டுப்பெட்டி, கிரிமன்ஸ் பித்தான், நெருப்புப்பெட்டி எல்லாம் சிதறின. நடுவில் இருந்து ஒரு மதுரைச் சலவை மயில் கண் வேட்டியை எடுத்தார். அதை மடி வைத்து மூலக்கச்சமாகக் கட்டிக் கொண்டார். கண்ணாடியில் தம்மைத் தாமே பார்த்துக்கொண்டார். வேட்டியைக் கச்சம் கட்டியவுடனே வயது அதிகம் ஆனது போல் ஒரு தோற்றம் அளித்தது. அதை அப்படியே களைந்தார். ஜரிகைக் கரையுடன் இருந்த ஒரு சாய வேட்டியை எடுத்து [illegible] கட்டிக்கொண்டார். நல்ல 'ஜவாயிரம்' [illegible]

போட்டுக்கொண்டார். செண்டு பாட்டிலை உடைத்து அதில் கொட்டினார். மறுபடியும் தம்மை ஒரு தரம் கண்ணாடியில் பார்த்துக்கொண்டார்.

ஜம்மென்று மாப்பிள்ளை போல் இருப்பது தெரிந்தது. மகிழ்ந்தார். பாவம்! இந்தச் சமயம் பார்த்துத்தானா அந்த நரை மயிர் அவர் கண்ணில் பட வேண்டும்! அவசர அவசரமாக ஒரு மங்குக் கோப்பையை எடுத்தார். அதில் ஒரு பொடியைத் தூவி, தண்ணீரை ஊற்றிக் குழைத்து, புருசால் தலையில் நரை இருந்த இடத்தில் தடவினார். உடனே தலை மாத்திரம் முகத்தைக்காட்டிலும் இருபது வயது இளமையாகக் காட்சியளித்தது. அப்படியே மீசையிலும் ஒரு இழுப்பு இழுத்துக்கொண்டார். 'இனிப் புறப்படலாம்' என்று நிச்சயித்துக்கொண்டு மற்றும் ஒரு முறை கண்ணாடியில் பார்க்கும்போது சட்டையின் தோள்பட்டை இரண்டிலும் பொட்டுப் பொட்டாக புருசிலிருந்து சிந்திய மை கரி மழை பெய்தது போல் இருப்பதைக் கண்டார்.

உடனே வேறு சட்டையை மாட்டிக்கொண்டு மோகனாவைச் சந்திக்கும் ஆசையில் காலைப்பலகாரங்கூடச் சாப்பிடாமல் புறப்பட்டார். கதவைத் திறந்தார். என்ன ஆச்சரியம்! ஜில்ஜில் ரமாமணி உள்ளே நுழைந்தாள்!

சற்றும் எதிர்பாராத விதமாய் அவள் தோன்றவே, நாகலிங்கம் திடுக்கிட்டார்.

"அட! எங்கே புறப்பட்டீங்க? செண்டு நாத்தம் மூக்கைத் துளைக்குது!" என்றாள் ரமாமணி.

"ஏன், உனக்கென்ன அதைப்பற்றி? நீ எங்கே வந்தே, இங்கே?"

"ஏது, ஐயா நிக்கிற நிலையைப் பார்த்தா புது மாப்பிள்ளை யாட்டம் இருக்குதே. என்ன விசேஷம்?"

"அட ஒண்ணுமில்லே. நாளைக்குத் தேர் இழுக்கணுமே. ஊராருக்கெல்லாம் ஊழியத்துக்கு ஓலை விடணுமேன்னு பேசறதுக்காகக் கோவிலுக்குப் புறப்பட்டேன். வழியை விடு" என்று ஒரு பெரும் பொய்யைத் தூக்கிப் போட்டார் நாகலிங்கம்.

"அட! கோவிலுக்குப் போறாராமில்லே! பொய்யைப் பாரு! எங்கேயாச்சும் வேட்டைக்குப் புறப்பட்டீங்களோ?" என்றாள் ரமாமணி.

இதுவரை சும்மாவிருந்த நாகலிங்கம் ரமாமணியை ஒரு பார்வை பார்த்தார். 'அவள் சாதாரணமாக வரவில்லை; ஏதோ வம்புக்காகத்தான் வந்திருக்கிறாள்' என்று உணர்ந்தார். கோபம் வந்தது.

"நான் எங்கே போனா உனக்கென்ன? அதைக் கேட்க நீ யார்?"

"நானா? நான் ஒரு பெண் பிள்ளை. நல்லூர் நாகலிங்கம் இறந்தால் தலை முழுகுகிறவள்" என்று கூறிக்கொண்டே கதவைச் சாத்தப்போனாள் ரமாமணி.



"சீ! பாதையை விடு! நாடகமா போடறே இங்கே வந்து? உன்னைத்தான் அன்னிக்கு ராத்திரியே அடிச்சு விரட்டினேனே! மறுபடி எந்தத் தைரியத்திலே என் வீட்டுக்குள்ளே நுழைஞ்சே?"

"நான் செய்ததெல்லாம் தப்பு. 'இனிமேல் நீ அடித்தாலும் கொன்றாலும் உன் காலடியிலே கிடக்கிறேன்' என்று மன்னிப்புக் கேட்டுக்கிட்டு உன் காலிலே விழ வந்தேன்" என்று கிண்டலாகக் கூறினாள் ரமாமணி.

இதை உண்மையென்று நம்பினார் நாகலிங்கம். கடகடவென்று சிரித்தார்.

"அட, ஒரு நாள் முந்தி வந்திருக்கப்படாது? சரின்னாவது சொல்லித் தொலைச்சிருப்பேனே!"

"ஏன்? நேத்துத்தான் சன்னியாசம் வாங்கிக்கிட்டீங்களோ? அடச் சே! ஊரிலே ஒரு பெண் அழகாயிருந்தால் உன் கண்ணை ஏன் ஐயா உறுத்துது? உனக்குப் பயந்து பிரும்ம தேவன் படைக்கிறதையே நிறுத்திடுவான் போலிருக்கிறதே! ஏய்யா? உனக்கு வயசாகலியே? இன்னமா சின்னப் புத்தி விடலே?"

"ஏய்! என்ன வர வரப் பேச்சு தடிக்குது? நாகலிங்கத்துக்கு முன்னாலே பேசறபோது கொஞ்சம் நாக்கை அடக்கிப் பேசணும்!"

"இவரு பெரிய பாக்கு வெட்டி! வெட்டிடுவாரு! இந்தச் சல சலப்புக்கெல்லாம் இந்த ஜில்லு பயப்படாதுங்கிறேன்!"

"இப்ப என்ன செய்யணும்கிறே நீ?"

"அந்த மோகனாம்பா எங்கே? அவளை எங்கே அடைச்சு வச்சிருக்கே? சொல்லு!"

இதைக் கேட்டவுடன் நாகலிங்கத்தின் முகம் வெளுத்தது. தன் இரகசியம் இவளுக்கு எப்படித் தெரிந்ததென்று திகைத்தார். உடனே சமாளித்துக்கொண்டார்.

"ஏன் அந்தப் பெண்ணுக்கென்ன? அவளைக் காணோமா? எனக்கொன்னும் தெரியாதே!"

"உனக்கு ஒண்ணுந் தெரியாது; ஆனால் சொக்கனுக்குத் தெரியும்; கருப்பனுக்குத் தெரியும்; குளத்துக்குத் தெரியும்; படித்துறைக்குத் தெரியும்; எனக்குத் தெரியும்; சும்மா என்னிடம் மறைக்காதே. அவளை என்ன செய்தாய்? சொல்லு!"

"ஆஹாஹாஹா! ரமாமணி முகத்திலே புது ராங்கு இல்லே வருது; ஏன்? மனசிலே சக்களத்திப் போராட்டம் நடக்குதோ?"

"சீ வாயை மூடு! அந்தப் பெண்ணைப்பற்றி அப்படியெல்லாம் பேசாதே. அது பத்தரை மாத்துத் தங்கம் பாவி. ராத்திரி நீ பேசிக்கிட்டிருந்ததெல்லாம் நான் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன்."

"ஒட்டுக் கேட்டியா?"

"ஆமாம். கேட்டேன்."

கோபத்தால் நாகலிங்கத்தின் கண்கள் சிவந்தன.

"என்ன தைரியம் உனக்கு? என்னை உளவு பார்க்காதே. பார்க்காதேன்னு அன்னிக்கு முதல் சொல்லிக்கிட்டிருக்கிறேன்" என்று அவள் தலைமயிரை எட்டிப் பிடிக்கப் போனார் நாகலிங்கம். ரமாமணி சரேலென்று விலகினாள். இடுப்பில் இருந்து ஒரு கத்தியை எடுத்தாள்.

"இந்தா! இந்த உடம்பிலே இன்னொரு முறை உன் கைபட விடமாட்டேன். உன்னாலே கெட்டவள்தான் நான். ஆனால் நீ ஒரு பஞ்சமா பாதகன் என்று அன்றைக்கு எனக்குத் தெரியாது. உன்னோடு நான் வாழ்ந்த பாவத்துக்குத்தான், இப்பொழுது நான் ஊர் ஊராக அலைகிறேன். இனி என்னைத் தொடாதே. தொட்டின்னா உன்னையும் குத்திவிட்டு நானும் இறந்துபோவேன். ஆனால் எனக்கு நீ செய்த கொடுமையை எல்லாம் மன்னிச்சுடறேன். அந்தப் பெண்ணை ஒன்னும் செய்யாதே. விட்டுவிடு" என்றதும் ரமாமணிக்குத் தன்னையும் மீறித் துக்கம் வந்தது. "அவ எங்கே இருக்காங்கிற விவரத்தைச் சொல்லு. நீதான் அவளைப் பிடிச்சு அடைச்சு வச்சிருக்கிறே. உன் காலிலே விழுகிறேன், சொல்லு" என்று அவர் காலில் விழுந்து கெஞ்சினாள் ரமாமணி.

"இந்தா, என் பாதையிலே நீ குறுக்கே வராதே. எனக்கு நேரமாச்சு, போகணும்" என்று புறப்பட்டார் நாகலிங்கம். ரமாமணி அவருடைய கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள்.

"நான் விடமாட்டேன். அந்தப் பெண்ணை நீ கெடுக்க விடவே மாட்டேன்."

"விடுகிறாயா இல்லையா?"

"முடியாது. நானும் பெண்; அவளும் பெண். உன் கையால் அவளைத் தொடவிட மாட்டேன்."

"சீ" என்று எட்டி உதைத்தார் நாகலிங்கம். இதை எதிர்பார்க்காத ரமாமணி ஒரு மூலையில் போய் விழுந்தாள். அவள் கையில் இருந்த கத்தி சற்று தூரத்தில் போய் விழுந்தது. அதை எடுத்துக்கொண்டார் நாகலிங்கம்.

"இனி நீ சத்தம் போட்டால் கொன்றுவிடுவேன். என் இரகசியம் உன்னிடம் இருக்கும் வரையில் உன்னை வெளியே போக விடமாட்டேன். கிட இங்கேயே!" என்று கூறி அவளை உள்ளே போட்டுக் கதவைச் சாத்திப் பூட்டினார். சரசரவென்று வாசலுக்கு வந்தார். அங்கே நின்ற வண்டியில் ஏறி உட்கார்ந்தார்.

சொக்கன் 'தா' என்று அதட்டவே மாடுகள் இரண்டும் சிட்டாய்ப் பறந்தன.

வெளியே நாகலிங்கத்தின் வண்டி வேகமாக ஓடும் சத்தம் "கட கட" வென்று உள்ளே கேட்டதும், அந்த வண்டியின் சக்கரங்கள் தன் உயிரையே இழுத்துக்கொண்டு ஓடுவதாக நினைத்தாள் ரமாமணி.



தட்டுத் தடுமாறிக்கொண்டு எழுந்தாள். அவிழ்ந்து கிடந்த தன் தலைமயிரை அள்ளி முடிந்தபொழுது அவள் கைகளில் சிறிது ஈரம் பட்டது. அது என்னவென்று கையைப் பார்த்தாள். கையிலே இரத்தக் கறை தெரிந்தது. அப்போதுதான், தன் தலையில் ஏதோ தாங்க முடியாமல் வலி எடுப்பதை உணர்ந்தாள்.

தான் கீழே விழுந்தபொழுது விசுப்பலகையின் கால் தலையில் மோதியதால் தலையில் காயம் பட்டிருந்ததை அறிந்தாள். வேறொரு சமயமாக இருந்தால் இப்படி ஒரு காயம் பட்டதற்கு அவள் துடித்தே போயிருப்பாள். ஆனால், இன்று அவளுக்குத் தலைக்காயத்தினால் ஏற்பட்ட வலியைக்காட்டிலும், அதிகமாக உள்ளத்தில் ஏற்பட்ட புண்ணில் வலியெடுத்தது. ஒவ்வொரு முறையும், ஒரு மலரையும் வளையலையும், சேலையையும், நிலவையும் கண்ணாடியையும் காணும்போதெல்லாம், "நாம் பெண்ணாய்ப் பிறந்தது நாம் செய்த பாக்கியம்" என்று மகிழ்ந்து பெருமைப்பட்டுக்கொண்டிருந்து வந்த அவளுடைய உள்ளம் இப்போது வேறுவிதமாக நினைத்தது. "ஐயோ, நாம் ஆணாகப் பிறக்கவில்லையே! அப்படிப் பிறந்திருந்தால் இந்த நாகலிங்கம் போன்ற கயவர்களை நன்றாய் அடித்து உதைத்துப் பாடம் கற்பிக்கலாமே!" என்று தோன்றியது.

ஒரு அனாதரவான இளம்பெண்ணை நாகலிங்கம் கெடுக்கப் போகிறான் என்பதை அறிந்து, அவளைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்த தன்னை, ஒன்றும் செய்ய முடியாமல் அக்கொடியவன் உள்ளே அடைத்துவிட்டுப் போனதை நினைத்து அவள் மனம் பல விதமாகக் குழம்பியது. கடைசியில் எப்படியாவது அந்தப் பெண்ணின் மானத்தைக் காப்பாற்றிவிட வேண்டும் என்ற தீர்மானத்தினால் அவளுடைய உடலில் ஒரு புதிய பலமும் மனத்தில் ஒரு புதிய துணிவும் ஏற்பட்டன. நெற்றியில் வடிந்த இரத்தத்தைத் துடைத்துக்கொண்டாள். அலமாரியில் கிடந்த ஒரு மல் துணியைக் கிழித்துத் தலையில் இருந்த காயத்தைக் கட்டிக்கொண்டாள்.

அந்த வீடு அவளுக்குப் புதியது இல்லை. அதன் ஒவ்வொரு மூலை முடுக்குகளையும் அவள் நன்கு அறிந்தவள். முன்னொரு காலத்தில், நாகலிங்கத்தின் இதயபீடத்தில் அவள் இருந்தபோது, இந்த வீட்டிலும் அவள் அரசு நடத்தியது உண்டு. ஆகையால், இதிலிருந்து தப்பி ஓடிவிட நினைத்து அறையின் நாற்புறமும் சுற்றிப் பார்த்தாள்.

அது ஒரு பழைய காலத்து வீடு. மாடியில்லாதது. முன்புறம் முகப்பும் உள்ளே ரேழியும், அதை அடுத்துக் கூடமும், பின்கட்டும், சமையல் கட்டும் உள்ள கட்டடம். இப்பொழுது ரமாமணியைக் கூடத்து அறையில்தான் சிறை வைத்திருந்தார் நாகலிங்கம். இந்த அறையிலிருந்து ஏதேனும் சத்தம் கேட்டால் பின்கட்டில் இருக்கும் வேலைக்காரர்கள் வந்துவிடுவார்கள். ஆதலால் கோவலன் நாடகத்தில், கல்யாண இரவில், கோவலன் வெளியேறியது போல்

ஓட்டைப் பிரித்துக்கொண்டு ஓடிவிடுவது என்று நிச்சயம் செய்து விட்டாள் ரமாமணி.

காயத்தினால் இழந்த இரத்தம் அவளைக் களைப்புக்குள்ளாக்கியது. ஆனால், காரியத்தில் துணிந்த சித்தமோ அவளுக்குப் புதிய பலத்தைக் கொடுத்து உதவியது. உடனே அலமாரி அருகில் வந்தாள். ஒரு முக்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டாள். அதன்மேல் ஏறினாள். முக்காலி ஆடியது. அதோடு அவள் கால்களும் களைப்பால் நடுங்கின. அலமாரியைப் பிடித்துக்கொண்டாள். நடுக்கம் தெளிந்த பின் அலமாரியின் மேல்புறத்தைக் கைகளால் இறுகப் பிடித்துக்கொண்டு, தன் பலம் முழுவதையும் வரவழைத்துக்கொண்டு, ஒரு எம்பு எம்பினாள். அலமாரியின் மேல் தாவி ஏறிவிட்டாள். அப்போது மளமளவென்று சத்தம் கேட்டது. அலமாரியின் மேல்புறப் பலகை உடைந்து அதன் மேல் நின்ற ரமாமணி திடீரென்று தலை குப்புற விழுந்தாள். நாகலிங்கம் அலங்காரம் செய்துகொள்ளும் அவசரத்தில் கீழே எடுத்தெறிந்திருந்த துணிகள்மீது பிரக்ஞையற்ற நிலையில் அவள் கிடந்தாள்.

## பன்னிரண்டாவது அத்தியாயம்



### எப்படிப் போயினரோ!

நந்தவனத் தோட்டத்திற்கும் அழகர் கோவிலுக்கும் ஏழு கல் தூரந்தான் உள்ளது. ஆனால், இந்த ஏழு கல்களும் ஏழு காதங்களாக நாகலிங்கத்திற்குத் தோன்றின பாவம். நாகலிங்கத்தின் மனத்தில் இருக்கும் ஆசையின் வேகம் அந்தக் காளைகளுக்குத் தெரியாததால் அவை எப்போதும் போலவே ஓடின. சொக்கன் அதட்டியதில் குறைவில்லை; காளைகள் அஞ்சி ஓடியதிலும் குறைவில்லை. ஆனால் நாகலிங்கத்திற்கோ நந்தவனத் தோட்டம் வர வர எட்டிப் போவதாகத் தோன்றியது.

உடனே நாகலிங்கம் "சொக்கா, நீ உள்ளே வா" என்று உத்தரவு செய்துவிட்டு, சொக்கன் கையிலிருந்த காளைகளின் கயிறுகளைத் தம் கையில் வாங்கிக்கொண்டு, தாமே இருப்பிடச் சட்டத்தில் ஏறி அமர்ந்தார். தங்கள் கயிறுகள் நாகலிங்கத்தின் கைக்கு மாறிவிட்டன என்பதை அறிந்த காளைகள் இரண்டும், குணம் கெட்ட புருஷனிடம் அவன் மனைவி பயப்படுவது போல் பயந்தன. "தா!" என்று ஒரு அதட்டு அதட்டினார் நாகலிங்கம். அதுவரை கடுமையான திராட்டில் ஓடிக்கொண்டிருந்த காளைகள், இப்போது கண்ணை மூடிக்கொண்டு



'கியாலப்'பில் கிளம்பின. நாலு மைலில் இருந்த நந்தவனத் தோட்டத்தின் கூரையும் சுற்று மரமும் இதோ வந்துவிட்டோம் என்று தொலைவில் தெரிந்தன.

கட்டடத்தைப் பார்த்ததும் நாகலிங்கத்துக்குக் குஷி பிறந்துவிட்டது. கூட்டிலிருந்த தார்க்கம்பைச் சரேலென்று உருவினார். காளைகள் இரண்டும் உத்தம ஜாதிக் காளைகள் ஆதலால் இந்தச் சத்தம் கேட்ட மாத்திரத்திலேயே முன்னிலும் வேகமாகப் புறப்பட்டன. அவைகள் ஓடிய ஓட்டத்தில் கால் தரையில் படும்போதெல்லாம் லாடங்களில் இருந்து நெருப்புப் பொறிகள் பறந்தன. நாகலிங்கமே கயிறுகளை இழுத்துப் பிடித்து ஓட்ட வேண்டியதாயிற்று. அந்தக் காளைகளின் கொம்புச் சோடியும், குளம்புச்சீரும், நிமிர்ந்த தலையும், இரண்டும் ஒன்றுபோலப் பூ வால்களை உயர்த்திக்கொண்டு தாவித் தாவி 'கியாலப்' ஓடும் அழகையும் பார்த்துவிட்டு நாகலிங்கத்துக்கே உள்ளூர ஆனந்தம் ஏற்பட்டது. அப்போது நந்தவனத் தோட்டம் அவர் எதிரில் வந்து நின்றது. காளைகளை அடக்கி நிறுத்தினார். அவைகள் இரண்டும் வாய் நிரம்ப நுரையுடன் பெருமூச்சு விட்டுக் கொண்டு நின்றன. அவைகளின் கால்கள் இன்னும் நடுங்கியவண்ணம் இருந்தன. உடம்பிலிருந்து அனல் பறந்தது. "சபாஷ்" என்று இரண்டு காளைகளையும் தட்டிக் கொடுத்தார் நாகலிங்கம். கயிறுகளைத் தூக்கி முன்புறம் எறிந்துவிட்டு, இருப்பிடச் சட்டத்திலிருந்து கீழே குதித்தார்.

"எலே, சொக்கா! வீட்டுக்குப் போன உடனே மாடு ரெண்டுக்கும் நல்லா வேது வைச்சுக் குளுப்பாட்டிவிடு" என்று உத்தரவு செய்தார். வண்டி ஓட்டியதால் கசங்கியிருந்த உடையைச் சரி செய்து கொண்டார். துப்பட்டாவை ஒழுங்காய்ப் போட்டுக்கொண்டு, மீசையை மேலாகத் தடவி விட்டுக்கொண்டே கட்டடத்தின் பக்கம் திரும்பினார். அளவு கடந்த ஆனந்தத்தோடு கம்பீர நடை போட்டுக் கொண்டு ராஜ பார்வை பார்த்தபடி கட்டடத்தின் வாசற்படியருகில் போனார். வாசல் கதவு சாத்தியிருந்தது. ஆனால் பூட்டப்படவில்லை.

"எலே! ஏன்டா கதவைப் பூட்டல்லே?" என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

"ஐயோ, நல்லா பூட்டி இருந்தேனுங்களே!" என்று சொல்லிப் பதறிக்கொண்டே சொக்கன் கதவைத் திறந்தான். உள்ளே ஓடினான்.

நாகலிங்கமும் கூடவே ஓடினார். உள்ளே பார்த்தார். கட்டடம் இருந்தது. ஆனால் மங்கையர்களைக் காணவில்லை. நாகலிங்கத்துக்குத் தாங்க முடியாத ஏமாற்றம் ஏற்பட்டது. அவ்வளவு ஏமாற்றமும் ஒரு நொடியில் கோபமாக மாறியது. கீழே கிடந்த ஒரு கம்பை எடுத்துக் கொண்டு, "அயோக்கியப் பயலே! வீட்டிலே அடைச்சி வச்சிருக்கம்னு எங்கிட்ட பொய்தானே சொன்னே?" என்று சொக்கனை ஓங்கி அடித்தார். "அம்மாடி!" என்று அலறினான்

சொக்கன் நாகலிங்கத்தின் கைகள் மேலும் மேலும் அவனை அடிக்கவே, "ஆத்தா ! சாமி சத்தியமா அடைச்சு வச்சுட்டு, அந்த அஞ்சலையைக் காவலுக்கு வச்சுட்டு வந்தேனுங்க ! ஆத்தே ! அடிக்காதீங்க, எசமான் ! அடிக்காதீங்க ! உங்க உப்பைத் தின்னுட்டு துரோகம் செய்வேனா?" என்று அவன் அலறினான்.

அப்போது, நந்தவனத் தோட்டத்தின் வடபுறம் இருந்த பாழும் கிணற்றிலிருந்து யாரோ முக்கி முனகும் குரல் கேட்டது. இருவரும் ஓடினார்கள். அங்கே ஏற்ற மரத்தில் தொங்கிய தண்ணீர்ச் சாலின் மேல் அஞ்சலை உட்கார்ந்திருந்தாள். சொக்கனும் நாகலிங்கமும் அருகில் வருவதைக் கண்டவுடன், "எசமான், மோசம் போயிட்டேனுங்க ! தப்பிச்சுக்கிட்டுப் போயிட்டாளுங்களே !" என்று அலறினாள் அஞ்சலை.

சில காரியங்களை நாம் செய்ய நினைக்கிறோம். நினைக்கிறபடி நடப்பதில்லை. சில சமயங்களில் நாம் நினைத்தது நினைத்தபடியே நடந்துவிடுகிறது. அப்போது அதைத் தெய்வ சங்கல்பம் என்று சொல்லுகிறோம். ஆனால், இந்தக் கர்ம பூமியில், தானே நேரில் வந்து உதவி செய்ய இறைவன் இன்னும் ஆரம்பிக்கவில்லையாதலால், அவனுடைய இஷ்டத்தை ஒருசில மனிதர்கள் மூலமாகத்தான் நிறைவேற்றி வைக்கிறான். இப்போது மோகனாவைக் காப்பாற்றியவரும் அம்மாதிரி ஒரு மனிதர்தான்.

மோகனாவின் வீட்டுக்கதவு பூட்டப்பட்டிருந்ததைப் பார்த்த ரமாமணி திகைத்து, இரு கைகளையும் பிசைந்தபடி நின்றான் என்று முன்பு கூறினோம் அல்லவா? அவன் சும்மா அங்கேயே நின்றுவிடவில்லை. யோசித்துக்கொண்டே வீட்டை நோக்கி நடந்தான். இவ்வளவு பாடுபட்டு ஓடி வந்தும் பலன் கிடைக்கவில்லையே என்று அவன் வருத்தத்துடன் நடந்து வரும்போது, அவன் காதில் ஒரு பாட்டுக்குரல் கேட்டது. பாட்டு என்னவோ பழம்பாட்டுத்தான். ஆனால் அது ரமாமணியின் நைந்த உள்ளத்துக்குப் பாலும் பழமும் கலந்ததுபோல் சுவைத்தது.

'நினையாது முன் வந்து நிற்பினும் நிற்கும் எனையாளும் ஈசன் செயல்' என்ற அமுத மொழிகளை அருள் கனிந்த உள்ளத்துடன் ஒருவர் இனிமையாகப் பாடிக்கொண்டிருந்ததைக் கேட்டான். அருகில் வந்தான். குளத்தின் ஆனோடியில் உட்கார்ந்துகொண்டு இரு கைகளையும் தலைக்கு மேல் கூப்பியவண்ணம் பிரார்த்தனை செய்துகொண்டிருந்த பரமானந்தப் பரதேசியாரைப் பார்த்தான்.

'விஷயத்தை அவரிடம் சொன்னால் என்ன?' என்று எண்ணம் தோன்றியது. பாட்டு முடியுமட்டும் காத்திருந்தான். நெருப்பின் அருகில் செல்லப் பயப்படும் புழுப்போல் அவனுக்கு அவர் முன் செல்லவே பயமாயிருந்தது. கடைசியில் துணிந்து அவர் முன் வந்து வணங்கினான்.



"நீ யாரப்பா? இந்த நள்ளிருளில் இங்கு எதற்கு வந்தாய்?" என்றார் பரதேசி.

"சுவாமி, இந்தச் சேதியை நான் சொன்னதாக யாரிடமும் சொல்லிவிடாதீர்கள். என் உயிருக்கே ஆபத்து வந்துவிடும்" என்று கூறிவிட்டு, அவர் முகத்தைப் பார்த்தான் ரமாமணி.

"இறைவன் அளித்த உயிரை அவன் ஒருவனால்தான் எடுக்க முடியும். வேறு யாரும் அதை அபகரித்துவிட முடியாது. பயப்படாதே சொல்லு" என்றார் பரதேசி.

நாகலிங்கம் மோகனாவின் மேல் ஆசைப்படுவதையும், வண்டியை மடக்கி அவளை அபகரிக்கச் சூழ்ச்சி செய்திருப்பதையும் விவரமாகக் கூறினான் ரமாமணி. சொல்லிக்கொண்டு வரும்போதே அடிக்கடி பரதேசியின் முகத்தைப் பார்த்தான். அவர் முகத்தில் இருந்த அமைதியை அந்தச் செய்தி சிறிதும் கலைக்கவில்லை. அவருக்கு அக்கறையே இல்லை போல் தோன்றியது. அதற்கேற்றாற்போல் முழுவதையும் கேட்ட பிறகு, பரமானந்தப் பரதேசி சொல்லிய பதில் அவனைத் தூக்கி வாரிப் போட்டது.

"அம்மா, அவனன்றி ஓர் அணுவும் அசையாது. நீ சொல்லிய இந்த விஷயத்தில் இந்த அடிமையால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. ஆண்டவன் காப்பாற்றினால்தான் உண்டு. நீயும் இதை என்னிடம் சொன்னதாக நினைக்காதே. நானும் யாரிடமும் சொல்ல மாட்டேன். போ" என்று அவர் சாந்தமாகப் பதில் சொல்லிவிட்டார்.

'ஐயோ, இந்தப் பட்ட மரத்திடம் போய் முறையிட்டோமே!' என்று நினைத்தான் ரமாமணி. ஆனால், 'சுவரோடாயினும் சொல்லி அழு' என்பதுபோல், துயரத்தை ஒரு முறை வாய்விட்டுச் சொல்லிவிட்டபடியால் அவன் உள்ளத்தில் சிறிது பாரம் குறைந்தது. நடைப்பிணம் போல் நடந்து தன் வீடு போய்ச் சேர்ந்தான்.

பரமானந்தப் பரதேசியாரைத் தமிழ்நாட்டில் பலர் அறிந்திருந்தார்கள். ஆனால், அந்தப் பரதேசி யார் என்பதை அவர் ஒருவர்தான் அறிந்திருந்தார். ஒருமுறை ஓர் அன்பர் அவரிடம் நெருங்கி "சுவாமி, பூர்வாசிரமத்தில் தங்களுடைய திருநாமதேயம் என்ன?" என்று வினவினாராம். அப்போது பரதேசி "உமது முற்பிறப்பில் உம்முடைய பெயர் என்னவென்று தெரியுமோ?" என்று கேட்டாராம். இப்படி அந்த மகான் பூர்வாசிரம ஞாபகமே இல்லாதிருப்பவராதலால் நாமும் அதைச் சர்ச்சை செய்வது அவசியமல்ல. ஆனாலும் அவருடைய தற்போதைய ஆசிரமத்தில் அவரிடம் நாம் காணும் அரிய குணங்களை ஆராயலாம்.

தோடியும் காம்போதியுமே அவருடன் கூடப் பிறந்தவர்கள். தேவார திருவாசகங்களே அவருடைய தாய் தந்தையர் ஈன்றெடுத்த மக்களே அவருக்கு உறவினர்கள். வானமே கூரை; வையமே வீடு

ஞானமே ஆசான்; ஞாயிறே நேசன் அவர் இரண்டு கரங்களுமே அவருக்குப் பாத்திரங்கள் இசையே அவர் மூச்சு; சங்கீத சாதனையே அவர் செய்யும் யோக சாதனை. கலை நிகழ்ச்சி நடக்கும் இடங்களே அவருக்குத் தவச்சாலை!

பரதேசியாருக்குப் பச்சிலைகள் மேல் ரொம்பப் பிரியமுண்டு. ஒரு இலையைப் பார்த்தால் இறைவன் பூசைக்கு ஏற்றதென்பார். இன்னொரு இலையைப் பார்த்தால் குழந்தைகளுக்கு ஏற்றதென்பார் அவர் நடக்கும்போது செடிகளை மிதிக்கமாட்டார். தரையில் படர்ந்து பூத்திருக்கும் மலர்களையும், அழகுக்குத் தாயகமாக நிற்கும் பசும்புல் பரப்பையும் உற்றுப் பார்த்து உள்ளம் உருகுவார். "பச்சை மா மலை போன்ற பெருமானின் பள்ளிகொண்ட திருமேனியை அலங்கரிக்கும் பனிமலர்கள் இவை" என்பார்.

சில சமயம், அவர் நோய் தீர்க்கும் வைத்தியனாகத் தோற்றமளிப்பார். அதிலும், குழந்தைகளுக்கு நோய் வந்துவிட்டதென்றால் பரதேசியார் துடித்துவிடுவார். அவருக்குப் பச்சிலை எங்கிருந்துதான் கிடைக்குமோ ! ஒரு நொடியில் ஒரு இலையைப் பறித்து வருவார். அதைக் கசக்கிக் குழந்தையின் தாய்ப்பாலில் ஒரு சொட்டு விட்டுப் போடச் சொல்லுவார். உடனே குழந்தை, நோய் நீங்கி எழுந்துவிடும். வீட்டுக்காரர் வணக்கம் செலுத்த ஆரம்பிப்பதற்குள் அவர் அந்த இடத்தை விட்டுப் போய்விடுவார். சில பைத்தியங்கள் அவரை விடாமல் பிடித்து வைத்துக்கொண்டு, "சாமியாரே ! உங்களுக்குத் தங்கம் செய்யத் தெரியுமா?" என்று தொந்தரவு செய்வார்கள். அவர்களுக்குக் காலை இளம் வெயிலைக் காட்டி "இதுதான் தங்கம்" என்பார். இதைப் பார்த்த உடன், "நீங்கள் உழைக்க ஆரம்பித்தால் தானாகவே தங்கம் கிடைத்துவிடும்" என்று சொல்லி மறைந்துவிடுவார்.

அவரைப் பித்தன் என்பார் சிலர். சித்தன் என்பார் பலர். பக்தன் என்பார் அநேகர். நித்தன் என்பாரும் உண்டு.

ரமாமணியின் பேச்சைக் கேட்ட பரதேசியார் சிறிது நேரம் யோசித்துக்கொண்டே இருந்தார். பிறகு, "இறைவா, உன் செயல் !" என்று எழுந்து விடுவிடென்று நடந்து ஒரு பழைய சிவப்புக் கட்டடத்தின் முன் போய் நின்றார்.

அழகர் கோவிலின் ஊர் ஆரம்பத்தில் இருக்கும் அவுட்போஸ்டு போலீஸ் ஸ்டேஷன்தான் அது.

அந்தக் கட்டட வாசலில் அப்போது இருந்த கொடுமையான காட்சி ஒன்றை நாம் இங்கே சொல்லாமல் இருக்க முடியவில்லை. இன்று அதை நினைத்தாலோ கண்ணீர் வருகிறது. அதாவது, ஆடு மாடுகளைப் பவுண்டில் அடைத்து வைப்பதைப் போல், அறிவும் திறனும் பொருந்திய பல மனிதர்களை அங்கே அடைத்து வைத்திருந்தார்கள். அவர்கள் எல்லோரும் திருடர்கள் அல்ல; குற்றவாளிகளும் அல்ல. இந்தப் பழந்தமிழ்நாட்டின் மானத்தை வழிவழியாகக் காத்துவரும் வீரபரம்பரையில் வந்தவர்கள். அவர்களுடைய வீரத்தைக் கண்டு அஞ்சிய அந்நிய ஆட்சி, அந்த மரபே நசித்துவிடும்வண்ணம் அவர்களைப் பல விதத்தில் கொடுமைப்படுத்தியது. அந்தக் கொடுமைகளுக்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல் "குற்றப் பரம்பரைச் சட்டம்" என்று ஒரு சட்டம் அக்காலத்தில் இருந்தது. அந்தச் சட்டத்தின் பேரைச் சொல்லி, தமிழகத்தில் பழங்குடி மக்கள் பலரைத் தினந்தோறும் இரவில் போலீஸ் ஸ்டேஷன் வாசலில்தான் வந்து படுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தி வந்தார்கள். அந்த அநியாயத்திற்கு இலக்காகிப் பல இளங்காளைகள், நடுக்கும் குளிரில் தங்கள் காதலிகளையும், அருமைக் குழந்தைகளையும் வீட்டில் தனிமையில் தவிக்கவிட்டு, 'அவுட் போஸ்டு' வாசலில் அடிமைத்தனமே பாயாகவும், அந்த அவமானச் சட்டமே தலையணையாகவும் கொண்டு இரவெல்லாம் படுத்திருந்தார்கள். பரதேசியார் இவர்களைத் தாண்டி உள்ளே சென்றார்.



ஸ்டேஷனுக்குள் அவர் நுழைந்ததும் அங்கு எல்லோரும் ஆழ்ந்து உறங்குவதைக் கண்டார். ஆனால், ஒரு ஆச்சரியம், அங்கிருந்தவர்களில் யாருமே படுத்துக்கொண்டு உறங்கவில்லை.

வாசலில் இருந்த சேவகர்கள் இருவரும் நின்றபடியே துப்பாக்கி முனையில் தூங்கினார்கள். 'ரைட்டர்' உட்கார்ந்தபடியே தூங்கினார். 'ஏட்டையா' ஒருவர்தான் கொஞ்சம் நன்றாய்ச் சேரில் சாய்ந்துகொண்டு தூங்கினார். ஆனால் இன்ஸ்பெக்டர் யாரும் அங்கு தூங்கவில்லை. ஏனெனில், அந்த ஸ்டேஷனுக்கு இன்ஸ்பெக்டரே கிடையாது !

உள்ளே நுழைந்த பரமானந்தப் பரதேசியார், முதல் காரியமாக அங்கு இருந்த அரிக்கன் லாந்தரைத் தூண்டினார். திடீரென்று வெளிச்சம் அதிகப்படவே ஏட்டையா விழித்துக்கொண்டார். விளக்கடியில் தாடி மீசையுடன் நிற்கும் சாமியாரைப் பார்த்த உடன் ஒரு நிமிஷம் அவர் பயந்தே போய்விட்டார்.

ஏட்டு கன்னையா நாயுடு ஒரு பழம்புலி. அவருக்கு அந்தப் பக்கத்தில் உள்ள திருடர்கள் யாவரையும் நன்றாய்த் தெரியும். ஆதலால் பரதேசியாரைத் திருடன் என்று சந்தேகிக்காமல், யாரோ பிச்சைக்காரன் என்று நினைத்துப் பின்வருமாறு குசலம் விசாரித்தார்.

"என்ன சாமியாரே, பசிக்குதோ? இதென்ன, காப்பி கிளப்புன்னா பார்த்தே?"

"இல்லை அப்பனே! உங்களிடம் ஒரு உதவி கேட்க வந்தேன்"

"என்ன அப்பனே. ஏதாவது திருட்டுக் குடுத்திட்டியா? உங்கிட்ட எவன் ஐயா திருட வந்தான்? அவன் ஜாதகத்திலே ஏதாவது கெட்ட காலம் இருக்கும் போலிருக்கு! இல்லாட்டி போயும் போயும் பண்டாரத்துக்கிட்ட திருடுவானா? என்ன சாமி, எம்புட்டுச் சில்லறை போச்சு?"

"இது சில்லறை விஷயமல்ல; ஒரு பெண்ணின் உயிருக்கே ஆபத்து!" என்றார் பரதேசி.

"பெண்" என்ற வார்த்தையைக் கேட்டதுமே கன்னையா நாயுடுவுக்குத் தூக்கம் எல்லாம் பறந்துவிட்டது.

"என்னய்யா, பார்த்தால் பரதேசியாட்டமா இருக்கிறீர். உமக்கும் பெண்ணுக்கும் என்னய்யா சம்பந்தம்?" என்று சிரித்தார் ஏட்டு.

"நாங்கள் இருவரும் இந்த உலகத்தில் பிறந்துவிட்டதுதான் சம்பந்தம் அப்பனே. பிறகு வேடிக்கை செய்யலாம். இப்பொழுது ஒரு பெண் மதுரைக்குப் போகும் சாலையில் வண்டியில் போய்க்கொண்டிருக்கிறாள். பாதையில் அவள் வண்டியை மறித்து, அவளைத் தூக்கிக்கொண்டு போய்விடச் சிலர் சதியாலோசனை செய்திருக்கிறார்கள். நீங்கள் உடனே வந்து அதைத் தடுக்கவேண்டும்" என்று உருக்கமாக வேண்டிக்கொண்டார் பரமானந்தப் பரதேசி.

"நல்ல கேஸ்தான். பெண்ணுக்கு வயசென்ன?" என்று கேட்டுக் கொண்டே ஒரு காகிதத்தில் குறிக்கத் தொடங்கினார் ஏட்டு.

"வயது பதினெட்டு இருக்கும்."

"நிறம்?"

"சிவப்பு"

"உடம்பில் ஏதாவது மச்சம் உண்டா?"

"தெரியாது."

"நகை கிகை போட்டிருக்குதா?"

"தெரியாது."

"சும்மா ஏதாவது ஞாபகம் இருந்தா சொல்லுங்க."

"தெரிந்தால்தானே சொல்லலாம்"

"பின்னே எப்படி ஐயா ஒரு கேஸ் எடுக்கறது? 'வால்யூ' தெரிய வேண்டாம்? சதியாலோசனை ஒரு குற்றம். வழி மறிச்சது இரண்டாவது குற்றம். பெண்ணைத் தூக்கிக்கிட்டுப் போனது மூணாவது குற்றம்."

"ஐயா, இதுவரை தூக்கிக்கொண்டு போனதாகத் தெரியவில்லை. ஆனால் நாம் இப்படிப் பேசிக்கொண்டே இருந்தால் எந்த நிமிஷமும் திருடர்கள் வண்டியை வழி மறித்துத் தூக்கிப் போய்விடுவார்கள்."

"அந்தக் கவலை உனக்கெதுக்கு, சாமியாரே? எப்போ போலீஸ்லே ரிப்போர்ட் பண்ணிட்டீங்களோ இனிமே நீங்க அந்த



விஷயத்தையே மறந்துவிடலாம் பேய் இருபத்தெட்டு. முந்தாநேத்தி நாளு, நீங்க ரெண்டு பேரும் வாங்க சாமியாரே. சதியாலோசனை செஞ்சவங்க யாரு? யாரைச் 'சஸ்பெக்ட்' பண்றீங்க?"

"நாகலிங்கம் பிள்ளை."

இதுவரை வீராவேசமாகக் கிளம்பிய கன்னையா நாயுடுவுக்கு நாகலிங்கம் என்ற பெயரைக் கேட்டவுடன் நாடி தளர்ந்தது.

"யாரு, நம்ப நல்லூர் நாவன்னா கானாவா? என்ன ஐயா, அவர் ஊரிலே பெரிய மனுசன் ஆச்சே! உம் சாட்சிகள் யாராவது உண்டா?"

சாமியார் சற்று யோசித்தார். பிறகு "இல்லை" என்றார்.

"சாட்சி இல்லாமே எப்படி ஐயா கேஸ் எடுத்துக்கறது?"

"என்னைத்தான் நீங்கள் நம்ப வேண்டும்."

"சரி! உம்முடைய பெயர்?"

"பரமானந்தப் பரதேசி."

"உண்மைப் பெயர் என்ன?"

"அதுவேதான்."

"உமது ஊர்?"

"எல்லா ஊரும் எமது ஊரே!"

பரதேசியைக் கொஞ்சம் சந்தேகத்துடன் நோக்கினார் நாயுடு.

"நீர் இன்கம்டாக்ஸ் கட்டுறீரா?"

"கிடையாது."

"ஏதாவது நிலம் இருக்கா? வரி கட்டுறீரா?"

"கிடையாது."

"சரிதான், போய்யா; சாட்சியும் கிடையாது உமக்கும் ஊரு பேரு கிடையாது பரதேசி புகார் பண்றான்னு பெரிய மனிசன் மேலே கேஸ் எடுத்தா, இந்த அவுட் போஸ்டே எடுபட்டுப் போயிடும். கேசு ஸ்ட்ராங்க் இல்லாமே இங்கே எதுக்காக ஐயா ராத்திரி வேளையிலே வந்து உயிரை வாங்குறீங்க? போம்! போம்! போய்க் கோவில் வாசல்லே படுத்துத் தூங்கும்! வழிப்பறி நடக்கட்டும்; தானே அப்புறம் கேஸ் எடுத்துக்கறோம் அது எங்கள் டியூட்டி!" என்று பேச்சை முடித்துவிட்டுப் பரதேசி போவதற்கு முன்னாலேயே தூங்க ஆரம்பித்துவிட்டார் கன்னையா நாயுடு.

நேரம் ஆக ஆகப் பரதேசியாருக்குக் கவலை அதிகமாயிற்று. உபயக்கார ராமன் செட்டியார் வீட்டுக்குச் சென்றார். 'பரதேசியார் வந்திருக்கிறார்' என்றவுடனே கதவைத் திறந்துகொண்டு ராமன் செட்டியாரே வாசலுக்கு வந்தார்.

"சாமி! வரவேண்டும். அமர வேண்டும்" என்று உபசரித்தார்.

"அதற்கெல்லாம் இப்பொழுது நேரம் இல்லை. ரொம்ப அவசரம். நம்பிக்கையான ஆட்கள் நான்கு பேர் என்னோடு வரவேண்டும்" என்றார் பரதேசி.

"இதை என்னிடம் சொல்ல வேண்டுமா? தாங்களே கூட்டிக் கொண்டு போயிருக்கலாமே!" என்று வினயமாகக் கூறி, நான்கு ஆட்களைக் கூடவே அனுப்பி வைத்தார் ராமன் செட்டியார்.

பரதேசியாரும் ஆட்களும் மதுரைப் பாதையில் இருபுறமும் பார்த்துக்கொண்டும், தேடிக்கொண்டும், வருவார் போவாரிடம் "இந்தப் பக்கமாக இரண்டு வண்டிகள் போயினவா?" என்று விசாரித்துக்கொண்டும் விரைவாக நடந்துகொண்டிருந்தார்கள்.

இரவு முன்னேரத்தில் ஐயனார் கோவிலிலிருந்து குறுக்குப் பாதை வழியே சாலையை நோக்கி ஓடி வந்த வேலைக்காரி அபராஞ்சி அங்கு வந்ததும் சாலையின் வண்டிகள் இல்லாததைக் கண்டாள். திகிரென்றது. திருடர்களுக்குப் பயந்து வண்டிக்காரர்கள் வண்டியை ஓட்டிக்கொண்டு போய்விட்டார்களோ என்று எண்ணினாள். அவள் அந்தப் பக்கத்துக்கே புதியவளாதலால், மதுரைக்கு எந்தப் பக்கம் போவது என்று தெரியாமல் குருட்டாம் போக்கில், அழகர் கோவிலை நோக்கியே ஓடி வந்துகொண்டிருந்தாள்.

எதிரில் நாலைந்து பேர் வருவதைப் பார்த்துவிட்டுப் பயந்து தயங்கி நின்றாள்.

"ஏனம்மா, இந்தப் பக்கமாக இரண்டு வண்டிகள் போயிற்றா?" என்று கேட்டுக்கொண்டே பரதேசியார் அவள் அருகில் வரவே, அவள், "சாமி! ஆபத்து வந்துடுத்து சாமி. அன்னிக்கி உங்களைத் திருடன்னு நினைச்ச சந்தேகப்பட்ட பாவத்துக்கு இப்ப நிசத் திருடன் கிட்டவே மாட்டிக்கிட்டோம்" என்று விசும்பி விசும்பி அழுதாள்.

அவள் மூலம் நடந்த விஷயத்தைத் தெரிந்துகொண்ட பரதேசியார் மண்டபத்திற்குச் சென்று, நட்டுவனார் வரதன் முதலானவர்களை மண்டபத் தூணிலிருந்து கட்டவிழ்த்து விடுதலை செய்து, மோகனாவும் வடிவாம்பாளும் எங்கே என்று தேடத் தொடங்கினார்.

நாற்புறமும் தேடிக்கொண்டே காலடித் தடங்களைப் பார்த்தார். மேட்டிலிருந்து ஒரு வண்டி புறப்பட்டுப் போன தடம் தெரிந்தது. அதைப் பிடித்துக்கொண்டே சாமியார் முன்னே நடக்கலானார். மற்றவர்கள் அவரைப் பின் தொடர்ந்தே வந்தார்கள். பலபலவென்று கிழக்கு வெளுக்கும்போது எல்லோரும் நந்தவனத் தோட்டத்தை அடைந்தார்கள். அங்கே தெரிந்த கட்டடத்தைப் பரதேசியார் கவனித்தார்.

இதற்குள், வரதன் கட்டடத்தைச் சுற்ற ஆரம்பித்தான். ஒரு பலகணியின் வழியாக அஞ்சலை உள்ளே பார்த்துக்கொண்டிருப்பதைக் கவனித்தான். அவள் அறியாமல் அவனும் பலகணி வழியே பார்க்க எண்ணி, மெல்ல அவளுக்குப் பின் பக்கம் சென்றான். அதற்குள் அஞ்சலை, "யாரடா அவன்?" என்று கேட்டுக்கொண்டே



அரக்கிபோல் அவன்மேல் பாய்ந்தாள். வரதனுக்கு உடம்பு வெலவெலத்தது. ஒரு பெண்ணுடன் சண்டையிடக் கூசினான். அதற்குள் அஞ்சலை அவனை ஓங்கி அறைந்துவிடவே, வரதனுக்கும் ஆவேசம் வந்துவிட்டது. அவள் கையை இறுகப் பிடித்து ஒரு அமுக்கு அமுக்கினான். "ஐயோ" என்று அலறினாள் அஞ்சலை.

இந்தச் சத்தத்தைக் கேட்டு எல்லோரும் ஓடி வந்தனர். பலகணி வழியாக உள்ளே பார்த்தனர். வடிவாம்பாளும் மோகனாவும் இருப்பதைக் கண்டனர். அதற்குள் வடிவாம்பாள் இவர்களைப் பார்த்து விட்டு, "முத்துக்குமரு! மோசம் போயிட்டேன்டா!" என்று கதறி விட்டாள்.

"வரதா, அந்தப் பெண்ணை ஒன்றும் செய்யாதே. விட்டுவிடு. பெண்ணே, கட்டடத்தின் கதவைத் திற!" என்று பரதேசியார் கம்பீரமாகக் கூறவும், அஞ்சலை மௌனமாய் வந்து கதவைத் திறந்தாள்.

பரதேசியார் உள்ளே நுழைந்து, மயக்கமாய்க் கிடக்கும் மோகனாவின் முகத்தைக் கூர்ந்து நோக்கினார். "பாவம், பயத்தால் மயங்கிவிட்டது குழந்தை! முத்துக்குமரு, இனிமேல் நாம் இங்கிருந்தால் ஆபத்து. எதிரி எந்த நிமிஷமும் இங்கு வந்துவிடுவான். அபராஞ்சி, நீயும் வடிவாம்பாளும் மோகனாவைக் கைத்தாங்கலாக அழைத்து வாருங்கள்" என்று கூறிக்கொண்டிருக்கும்போதே கூடவே இருந்த அஞ்சலை மெல்ல நழுவிப் போய், ஏற்ற மரத்தின் மேல் ஏறுவதைப் பார்த்தார். அவள் உயரத்தில் ஏறி நின்றுகொண்டு யாரையோ உதவிக்கு அழைக்கப் போகிறாள் என்று அவருக்குத் தெரிந்துவிட்டது.

உடனே பரமானந்தப் பரதேசி ஒரே ஓட்டமாய் ஓடி ஏற்ற மரத்தின் அடிப்பாகத்தைத் தூக்கிவிட்டார். அஞ்சலை ஏற்றமரத்தோடு விறுவிறு என்று கிணற்றுக்குள் இறக்கப்பட்டாள். பரதேசியார் அவளைப் பார்த்து, "சத்தம் போடாமல் இருந்தால் உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன். உட்கார் ஏற்றச் சாலில்!" என்றார். அஞ்சலை உயிரின் மேல் உள்ள ஆசையினால் தன் உடம்பைக் குறுக்கிக்கொண்டு, சிரமப்பட்டுச் சாலில் உட்கார்ந்தாள். கிணற்றில் ஆள் நிற்கப் போட்டிருந்த கல்மீது அந்தச் சாலை வைத்து, ஒரு கொடியால் அவள் கைகளை சாலோடு சேர்த்துக் கட்டிவிட்டார். பிறகு அவசரமாக நந்தவனத் தோட்டத்தில் புகுந்து ஒரு பச்சிலையைக் கிள்ளிக் கையில் எடுத்துக்கொண்டார். எல்லோரும் நந்தவனத் தோட்டத்தை விட்டுப் புறப்பட்டார்கள்!

"முத்துக்குமரு, வண்டிப்பாதையில் போக வேண்டாம். அங்கு ஆபத்து வரலாம். இதோ இந்தக் காட்டுப்பாதையில் போனால் அந்த ஆறு தாண்டியவுடன் மதுரை போய்ச் சேர்ந்துவிடலாம்" என்று

பரதேசியார் கூறவே, எல்லோரும் அவர் காட்டிய வழியில் புறப்பட்டார்கள்.

மோகனாம்பாளுக்கு இன்னும் மயக்கம் தெளியவில்லை. அபாஞ்சி அவளைத் தோளில் சாத்தியவண்ணம் வந்து கொண்டிருந்தான். பரதேசியார் தம் கையில் இருந்த பச்சிலையை அவள் மூக்குக்கு நேராகப் பிடித்தபடியே,

" காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா - பூக்கும்
கடம்பா ! முருகா ! கதிர்வேலா ! நல்ல
இடங்காண் இரங்காய் இனி"

என்ற இனிய தமிழ்ப்பாடலை நல்ல இசையுடன் பாடிக்கொண்டே, " கடம்பா, முருகா, கதிர்வேலா ! உன் கருணைக்குத் தக்க இடம் இந்தக் கலைச்செல்வம். இவளைக் காப்பாற்று" என உள்ளம் உருகி வேண்டிக் கொண்டு வரும்போது, பொழுது புலர்ந்தது. பூக்கள் மலர்ந்தன. மோகனாவின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

பதின்மூன்றாவது அத்தியாயம்

# தன் வினை தன்னைச் சுடும்



தோல்வியால் ஆத்திரம் அடைந்த நாகலிங்கம் நந்தவனத் தோட்டத்தை விட்டுப் புறப்பட்டார். வரும் வழியெல்லாம் தன் ஆசையில் மண்ணைப் போட்டவர்கள் யாரென்று தெரிந்தால் அவர்கள் தலையில் கல்லைப் போட்டுக் கொன்றுவிட வேண்டும் என்று சிந்தையைக் குழப்பிக்கொண்டே வந்தார். அஞ்சலையை அவர் விசாரித்தபோது, அவள் சொல்லிய அடையாளங்களிலிருந்து பரமானந்தப் பரதேசியின் மேல் அவருடைய சந்தேகம் விழுந்தது. அப்போது இரவில் அவர் பரிசு கொடுத்து மோகனாவைப் புகழ்ந்ததும் நினைவுக்கு வந்துவிடவே பரதேசிதான் காப்பாற்றி விட்டார் என்று அவருக்கு நிச்சயமாகத் தெரிந்துவிட்டது. ஆனால் இதைப் பரதேசியிடம் யார் சொல்லியிருப்பார்கள்? ரமாமணி ஒருத்திக்குத்தான் தன்னுடைய ரகசியம் தெரியும். அவள்தான் சொல்லியிருக்கவேண்டும் என்று முடிவுக்கு வந்தவுடன் அவருடைய ஆத்திரம் எல்லாம் ரமாமணியின் மேல் திரும்பியது.



"இந்த மோகனாம்பாள் மதுரைக்குப் போய் ரயிலில் ஏறிவிட்டாள், கிளி பறந்து போய்விடுமே ! நமக்குத் தெரியாத தஞ்சாவூர்ச் சீமையில் போய் நாம் அவளை எப்படி அடைவது?" என்று ஒரு சஞ்சலம் ஏற்பட்டது. கடைசி முடிவாக மதுரைக்குப் போய் மோகனா ரயிலில் ஏறுமுன் அவளைப் பிடித்து வசப்படுத்தி விடவேண்டும். அதற்குப் பின்தான் மற்ற வேலைகள் என்ற தீர்மானத்துக்கு வந்தார். உடனே அவர் மனம் குறுக்கு வழியில் செல்ல ஆரம்பித்தது. "சொக்கா, வண்டியை அவுட் போஸ்டுக்கு விடு" என்று உத்தரவிட்டார் !

அவுட் போஸ்டு வாசலில் வண்டி போய் நின்றது. வண்டிக்குள் இருந்தபடியே, " எட்டையா இருக்கிறாரா?" என்று குரல் கொடுத்தார் நாகலிங்கம்.

இந்தக் குரலுக்கு எப்போதுமே அங்கு நல்ல மதிப்பு உண்டு. " வாங்க பிள்ளை" என்று வாசலுக்கு ஓடி வருவார் கன்னையா நாயுடு. ஆனால் இன்று மட்டும் " முந்நூத்திநாலு ! நாகலிங்கம் பிள்ளை வந்திருக்காப்பிலே இருக்கு. நான் வேலையாயிருக்கேன் என்று சொல்லு," என்று உட்கார்ந்தபடியே பதில் சொன்னார் எட்டு.

அதற்குள் நாகலிங்கமே இறங்கி உள்ளே வந்துவிடவே, "அடாடா ! நானே வந்திருப்பேனே ! நீங்க என் வந்தீங்க?—" என்று கூறிக்கொண்டே, " ஏய், அந்தச் சேரை இழுத்துப் போடு" என்று உத்தரவிட்டார். அதே சமயத்தில் அவர் கண்கள் " உஷார் ! கப் சிப் !" என்று சொல்வதுபோல் அங்குள்ள ஜவான்களை ஒரு முறை பார்த்தன.

" சேதி தெரியுமுங்களா? நம்ம வீட்டிலே ஒரு நகை களவு போயிடுச்சே" என்று மெதுவாகப் பேச்சை எடுத்தார் நாகலிங்கம்.

" என்னங்க விளையாடுறீங்க ! ஒங்க வீட்டிலே இன்னொருத்தன் வந்து திருடவாவது," என்றார் நாயுடு.

இந்தக் கேலிப்பேச்சை நாகலிங்கம் புரிந்துகொள்ளாமல் இல்லை. ஆனால் அதை வெளிக்காட்டாமல், " வீட்டில் இல்லீங்க. நம்ம கையிலே யிருந்தே களவு போய்விட்டது" என்றார்.

" விவரமாய்ச் சொல்லுங்கள்" என்றார் நாயுடு.

" நேத்து நம்ம ஊருக்கு நாட்டியம் ஆட வந்திருந்தாளே, அந்தத் திருவாரூர் பொண்ணு, அதுதாங்க, அந்த— அவ பேருகூட—"

" மோகனாம்பாள் நல்ல ஆடினாளாமே? நான்தான் பாக்கலே"

" நானும் பாக்கலீங்க— 'அவசரத்திலே ஊரிலே மூக்குத்தியை வச்சிட்டு வந்திட்டோம். ஒரு வைர மூக்குத்தியிருந்தா குடுத்து அனுப்புங்க'ன்னுட்டு அவுங்க அம்மா சொல்லி அனுப்பினதாக ஒரு ஆள் வந்து சொன்னான். நிசமோ பொய்யோ, நாமே நேரிலே கொண்டுபோய்க் கொடுத்திடுவோம்னு நான் அவுங்க ஜாகைக்குப்

போனேன். மூக்குத்தியைக் குடுத்தேன். தாய்க்காரி சந்தோஷப் பட்டாள். மகள் என்னமோ ஆத்திரப்பட்டாள். எனக்கு எல்லாமே ஏதோ நாடகமாட்டம் இருந்தது. கடைசியிலே அந்த மோகனாம்பாள் 'இந்தாங்க, எனக்கு வேண்டாம் இரவல் நகை'ன்னுட்டு டப்பாவை என் கையிலே குடுத்துட்டாள். நானும் சரிதான்னு டப்பாவைக் கையிலே எடுத்துக்கிட்டு வீட்டுக்குப் போயிட்டேன். காலம்பர எழுந்திரிச்சதும் டப்பாவைத் திறந்து பார்த்தா, மூக்குத்தி இல்லீங்க !..."

எட்டையா இடை மறித்தார். "என்ன கல்லு, பழைய சிகப்பா?"

"அட இல்லீங்க ! ஒண்ணரைக் காரட்டு வைரங்க ! கல்லே மூவாயிரம் ரூபாய் பெறும்" என்றார் நாகலிங்கம்.

"இப்ப எங்கே அந்த மோகனாம்பாள்?"

"ராத்திரியே சொல்லாம கொள்ளாமல் புறப்பட்டு ஆத்தாளும் மகளும் ஊருக்குப் போயிட்டாங்களாம். இப்பவே மதுரைக்குப் போயி அவங்க ரயில் ஏறுவதற்கு முன்னாலே அவுங்களைப் புடிச்சாத்தான் பொருள் கிடைக்கும். வாங்க போவோம்" என்றார் நாகலிங்கம்.

"நீங்க வீட்டுக்குப் போங்க. நான் கவனிச்சுக்கறேன்" என்று மழுப்பினார் எட்டையா.

"இல்லை, ஸார் ! அதுக்குள்ளே அந்தப் பொண்ணு ரயில் ஏறிடும். நம்ம வண்டி இருக்கு. வாங்க."

"அய்யே ! நான் உங்களோட வந்தால், அது நல்லா இருக்காதுங்க ! நீங்க போங்க, நான் சைக்கிளிலே வந்துடறேன் !"

"அட போங்க, நாயுடு ! அது ஒரு பாடாவதி சைக்கிள் ! அதைத் தொலைச்சுட்டு, இன்னிக்கு மதுரையிலே புதுசா ஒண்ணு வாங்கிட வேண்டியதுதான், ஸார் ! வாங்க, ஏறுங்க வண்டியிலே" என்று நாகலிங்கம் விடாப்பிடியாக இழுக்கவே, கன்னையா நாயுடு வேறு வழியில்லாமல், "அப்படின்னா, நீங்க வண்டிக்குப் போங்க. நான் இந்த உடுப்பை மாத்திக்கிட்டு ஒரு மினிட்டிலே வந்துடறேன்" என்று கூறவும், நாகலிங்கம் வெளியே சென்றார்.

எட்டு குல்லாவை எடுத்துத் தலையில் வைத்துக்கொண்டபடி, நாகலிங்கம் வெளியே போய்விட்டாரா என்று பார்த்தார். "ஏய், முருகாத்தி நாலு ! ராத்திரி பரதேசி வந்ததுக்கும் இப்ப நாகலிங்கம் பிள்ளை வந்திருக்கறதுக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கு. நம்ம வீட்டிலே போய் நான் மதுரைக்குப் போயிட்டு வரேன்னு சொல்லு" எனக் கூறிவிட்டு வாசலில் வந்து வண்டியில் ஏறினார்.

அப்போது ஒரு ஜவான் ஓட்டமாக ஓடி வந்தான். நின்று ஒரு 'சல்யூட்' அடித்துவிட்டு, "நெருப்பு ! நெருப்பு !" என்று அலறினான்.

"எங்கேப்பா?" என்று கேட்டார் ஹெட்கான்ஸ்டபிள்.

"நாகலிங்கம் பிள்ளை வீடு பத்தி எரியுது" என்றான் வந்த ஜவான்.



"ஹா !" என்று நாகலிங்கம் கீழே குதித்தார்.

ஹெட்கான்ஸ்டபிளும் நாகலிங்கமும் நாகலிங்கத்தின் வீட்டை நோக்கி ஓடினார்கள்.

நாகலிங்கமும் எட்டையாவும் வீட்டருகில் வந்தபோது அவர்கள் கண்ட காட்சி அவர்களைத் திடுக்கிடச் செய்தது. நாகலிங்கத்தின் வீட்டின் முன் கட்டும் கூடமும் எரிந்துகொண்டிருந்தன. திருவிழாக் கூட்டம் அவ்வளவும் அங்கு வந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. அனல் திகுதிகு என்று அடித்ததால் பக்கத்து வீட்டுக்காரர்கள் தங்கள் தங்கள் வீட்டைக் காத்துக்கொள்ளத் தண்ணீரை அள்ளி அள்ளித் தங்கள் வீட்டுக் கூரைகளில் ஊற்றிக் கொண்டிருந்தார்கள். நாகலிங்கத்தின் வீட்டுக்கூரையில் பனங்கைகளில் ஆணி அடித்திருந்தார்கள். ஆதலால், அந்த ஆணிகள் பழுத்து "படார் படார்" என்று வெடித்து ஆக்கினேயாஸ்திரப் பிரயோகம் செய்து ஒருவரையும் கிட்ட நெருங்கவிடாமல் விரட்டிக்கொண்டிருந்தன. தீ கொழுந்துவிட்டு எரிய ஆரம்பிக்கவே ஊர் மக்கள் என்ன செய்வது என்று அறியாமல் திகைத்தனர்.

ஒருவர் அந்தத் திகிலிலும், பரபரப்பிலும் "தீ" "நெருப்பு" என்ற இரண்டையும் சேர்த்து "தெருப்பு ! தெருப்பு !" என்று அலறினார். இன்னொருவர் வெறும் குடம் ஒன்றைத் தூக்கிக்கொண்டு அங்கும் இங்குமாக அலைந்தார். ஒருவர், "கூரையை இடித்துக் கீழே தள்ளுங்கள் !" என்றார். ஒருவர், "ஆணி வெடிக்கிறது ! கிட்டத்தில் போகாதே !" என்று கத்தினார். ஆனால் நாகலிங்கமோ, எரியும் வீட்டுக்குள் புகுந்துவிடத் துணிந்தார். எட்டையா பின்னால் இருந்து அவரை இழுத்தார்.

"எட்டு, நீங்க ஸ்டேஷனுக்குப் போங்க ! நான் இதை அவிச்சுட்டுக் கூப்பிடறேன்" என்றார் நாகலிங்கம்.

"இல்லீங்க, நான் ரிப்போர்ட் எடுக்கணும்; இருக்கேன்" என்றார் எட்டு.

நாகலிங்கத்துக்கு தன் வீட்டில் நெருப்புப் பிடித்ததைக் காட்டிலும் பக்கத்தில் எட்டு நிற்பதுதான் பெரு நெருப்பாய்த் தோன்றியது. அவர் தம் வீட்டுக்குள் நுழையாமல் இருக்க வேண்டுமே என்ற கவலை வந்தது எட்டு "அணை ! அணை !" என்று சத்தம் போட்டார். இதைக் கேட்காமல் நெருப்பு மேலும் எரிந்துகொண்டே இருந்தது.

இந்தச் சமயம் எட்டையாவின் மூக்குக்கு அருமையான வாசனை ஒன்று வீசலாயிற்று. அவருக்குச் சோளப்பொரி என்றால் ரொம்பப் பிடிக்கும். அதில் நெய்யும் சர்க்கரையும் சேர்த்துச் சாப்பிடுவதில் ஆசை. திடீரென்று எங்கிருந்தோ சோளப்பொரி வாசனை அடிக்கவே அதை ரஸிக்க ஆரம்பித்தார். "ஆஹா ! சோளப்பொரி வாசனை

ஆமாய்க்குதே !" என்று நாகலிங்கத்திடம் கேட்கவே நாகலிங்கம் வயிற்றெரிச்சலுடன், "எட்டு மூட்டை சோளம் இருக்குங்க உள்ளே !" என்றார். மேலும், எட்டை வீட்டுக்கு அனுப்பும் ஆசையில், "இல்லீங்க, எட்டய்யா ! நான் பாத்துக்கறேன். நீங்க வீட்டுக்குப் போங்க !" என்றார்.

"சேச்சே ! இந்த ஆபத்திலே உங்களை விட்டுட்டு எப்படிப் போறதுங்க? எது, முன் கட்டே போயிடும் போலிருக்கே. எப்படி நெருப்புப் பிடிச்சுது, தெரியுமா?" என்றார் எட்டு.

"எப்படிப் பிடிச்சா என்னங்க ! அணைஞ்சா போதும்" என்றார் நாகலிங்கம்.

இந்தச் சமயம் நல்ல வேளைக்கு ராமன் செட்டியார் தண்ணீர்ப் பந்தல் தருமம் உதவி செய்தது. தெருவில் காலை விழா சுவாமி புறப்பட்டு வந்தது. சுவாமியுடன் கூட வந்தார் செட்டியார், நாகலிங்கம் வீட்டில் நெருப்புப் பிடித்திருப்பதைப் பார்த்தார். பக்கத்தில் இருந்த ஆட்களிடம் ஏதோ சொல்லவே தண்ணீர்ப் பந்தல் வாசலில் இருந்த எட்டு வண்டித் தண்ணீரும் அங்கே வந்து சேர்ந்தது. பெரிய அண்டாக்களில் இருந்த தண்ணீரை அள்ளிக் குடம் குடமாகத் தீயில் ஊற்றினார்கள். பக்கத்தில் ஒரு திருவிழாப் பாத்திரக்கடை இருந்தது. அதிலிருந்த புதுப்பாத்திரங்களை ஆளுக்கொன்றாக எடுத்துக்கொண்டு நாதஸ்வரக்காரர்கள், சாமி தூக்குபவர்கள், நகரா அடிப்பவர்கள் எல்லோருமே சேர்ந்து நெருப்பணைக்க முன்வந்தனர்.

ஆனால் பூதக்காரன் ஒருவன் மாத்திரம் தன் தலையில் இருந்த பூதப் பொம்மையைக் கழற்றாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். "அடே பூதம் ! எடுடா குடத்தை !" என்று எட்டு அதட்டவே, அவன் ஓடியே போய்விட்டான். "பாருடா, பொட்டைக் குட்டியாட்டம் நடக்குறான்" என்றார் எட்டு. ஆனால், அவன் இன்னும் கொஞ்சம் தள்ளிப் போய் நின்று நெருப்பு எரிவதைக் கவனித்தான்.

ஒருவிதமாகப் பலருடைய பேருதவியால் நெருப்பு அணைக்கப் பட்டது. வீடு முழுவதும் புகையினால் இருண்டு இருந்தது. எட்டு உள்ளே நுழையப் போனார்.

"நீங்க இங்கேயே இருங்க. உள்ளெல்லாம் ஒரே புகையாயிருக்கு" என்று கூறி நாகலிங்கம் அவசரமாக உள்ளே நுழைந்தார்.

போலீஸ்காரரைக் கண்டு இப்போது நாகலிங்கம் இவ்வளவு பயப்படுவதற்குக் காரணம் என்ன என்பதை வாசகர்கள் இதற்குள் ஊகித்திருப்பார்கள். ஆம்; ரமாமணிக்காகத்தான் இவ்வளவு பயமும் !

அவளை அடைத்து வைத்த அறையில்தான் தீப்பிடித்திருக்கிறது நாகலிங்கத்தைப் பொறுத்த வரையில் அவள் இறந்தாலும் தொல்லை; இருந்தாலும் தொல்லை: இறந்திருந்தால் பெரிய வழக்கு வந்துவிடும்.



ஒரு பெண்ணை வீட்டில் அடைத்து வைத்து நெருப்பை வைத்துவிட்டார் என்று கேசு எடுத்துவிடுவார் எட்டையா.

அவள் இருந்தாலோ, தன்னை அடைத்து வைத்ததாகவும், மோகனாவை வழிமறித்துத் தூக்கிப் போனதாகவும் அவளே ரிப்போர்ட்டுச் செய்துவிடுவாள். இந்த இரண்டு வித எண்ணத்தாலும் இருதலைக்கொள்ளி எறும்பாய்த் துடித்தார் நாகலிங்கம்.

வீட்டுக்குள் கரியும், புகையும், தண்ணீரும், நாற்றமும் சகிக்க முடியாமல் இருந்தன. அதற்குள் திணறிக்கொண்டே நுழைந்தார். நேரே ரமாமணி இருந்த அறைக்குள்தான் புகுந்தார். உள்ளே சுற்றிச் சுற்றித் தேடினார். அலமாரி பாதி எரிந்து கிடந்தது. கட்டிலும் மெத்தையும் கரியாய்க் கிடந்தன.

"என்னய்யா தேடுறீங்க?" என்று கேட்டது எட்டுவின் குரல். நாகலிங்கம் திடுக்கிட்டார். எட்டு அவர் எதிரில் நிற்பதைக் கண்டார். கை விலங்கும் தூக்குக் கயிறும் மாறி மாறி அவர் கண்களுக்குத் தோன்றவே, அப்படியே தள்ளாடி அவர் சாயப்போன சமயம், எட்டு பிடித்துக்கொண்டார்.

"துணிக்குக் கீழே கிடந்ததுங்க ! மணிபர்ஸ்-தானே தேடுனீங்க. இந்தாங்க !" என்று பர்ஸை எடுத்து நீட்டினார் எட்டு.

இதுவரை ரமாமணியின் உடல்தான் துணிகளுக்குக் கீழே கிடந்ததோ என்று எண்ணிய நாகலிங்கம் திகில் நீங்கி, "ஆமாங்க இதைத்தான் பார்த்தேன்" என்றார்.

"அது மாத்திரமில்லைங்க. ஒரு சத்தி, நாலு வளை ஓடசல், ரத்தக் கறைபட்ட துணிகள் இரண்டு. இதெல்லாம் தடயம் கிடைச்சிருக்கு. இந்த ரிப்போர்ட்டிலே ஒரு கையெழுத்துப் போடுங்க" என்று ஒரு காகிதத்தை நீட்டினார் எட்டு.

"இதெல்லாம் எதுக்குங்க?" என்று நாகலிங்கம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அவர் கேட்கவில்லை.

"நீங்க இங்கே இல்லாதபோது உங்க வீட்டிலே என்னவோ நடந்திருக்கு. யாரோ வேணுமென்றே நெருப்பு வச்சிருக்காங்க. நான் உங்க ஆளை எல்லாம் விசாரிச்சேன். ஒருத்தரும் யாரையும் பார்க்கலையாம். கேசு கொஞ்சம் சிக்கல்தான். ஆனால் இந்தக் கன்னைய நாயுடுவுக்கு இதெல்லாம் தண்ணி பட்ட பாடு" என்று கூறிக்கொண்டே தம் கையில் இருந்த தடயங்களைப் பத்திரம் செய்தார் நாயுடு.

நாகலிங்கமோ, ரமாமணிதான் வீட்டுக்கு நெருப்பு வைத்துவிட்டு எப்படியோ தப்பி ஓடிவிட்டாள் என்று அறிந்துகொண்டுவிட்டார். "அவள் எதற்கும் துணிந்தவள். எந்தச் சமயத்திலும் தன்னைக் காட்டிக் கொடுத்துவிடுவாள். அவள் முந்துவதற்குள் நாம் அவளைக் கண்டு பிடித்து ஒழுங்கு செய்ய வேண்டும்" என்று நிச்சயம் செய்து

கொண்டார். பயம் தெளிந்தது இந்த மட்டில் வீடு வெந்ததோடு போயிற்றே என்ற நினைப்பில் ஒரு நிம்மதி பிறந்தது. அவருடைய சிந்தனை மறுபடியும் மதுரையை நோக்கிப் பாய்ந்தது.

பதினான்காவது அத்தியாயம்

## "காணத் துடிக்குதே கண்கள்"



அன்றும், இன்றும், என்றும், அழகு குறையாத நகரங்கள் சில உலகில் உண்டு. அவைகளில் ஒன்று மதுரை மாநகரம். பாண்டியர்கள் தமிழ் வளர்த்தார்கள். சோழர்கள் பக்தியை வளர்த்தார்கள். சேரர்கள் வீரத்தை வளர்த்தார்கள் என்று தமிழ் மூவேந்தர்களும் தமிழ்நாட்டுப் பண்பை வளர்த்ததைப்பற்றிக் கூறுவார்கள். அப்படித் தமிழ் வளர்த்த மதுரையிலே வந்து இறங்கினான் சண்முகசுந்தரம். அழகர் கோயிலை, விட்டு மோகனா புறப்படுவதற்குச் சற்று நேரம் முன்புதான் அவன் புறப்பட்டான்.

மதுரையில் வந்து ரயிலடியில் இறங்கியதும் ஒத்துக்கார தருமனுக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது.

"என் தம்பி, இந்த மதுரைக் கோயிலைப் பார்த்தியா? நாலு கோபுரமும் நாலு மைலுக்கு அங்கிட்டே தெரியுதே இதை எப்படித் தம்பி கட்டினாங்க?" என்றான் தருமன்.

"கையாலேதான் கட்டினாங்க" என்று வெடுக்கென்று பதில் சொன்னான் சண்முகசுந்தரம்.

"அதைக் கேக்கல்லை, தம்பி இவ்வளவுக்கும் கல்லுக்கு எங்கே போனாங்க?"

"நம்ம ஊருலே நெல்லு விளையுது; இங்கே கல்லு விளையுது" என்றார் தவுல்கார முத்துராக்கு.

இந்தப் பதிலைக் கேட்டதும் தருமன் ஏதோ யோசிக்க ஆரம்பித்தான். கடைசியில் "நம்ம ஊரிலே ஏன் தம்பி கல்லு விளையல்லே?" என்று ஆணித்தரமான கேள்வியைக் கேட்டான்.

"நம்ம ஊரிலேயுந்தான் ஒரு காலத்திலே கல்லு விளைஞ்சிக்கிட்டிருந்தது. சோழ மகாராஜாக்கள் அதையெல்லாம் வெட்டிப் பாதியைக் கோயில்களாகக் கட்டிட்டாங்க. பாதியைக் காவேரிக்குப் படித்துறைகளாகக் கட்டிப்பிட்டாங்க. போனது போக மிச்சம் விழுந்த பொட்டுப் பொடியையெல்லாம் இப்ப நம்ம அரிசிக்கார பஞ்சாட்சரம் மூட்டையிலே கலந்துவிட்டுட்டாரு" என்று சண்முகம்



சொல்லவும் முத்துராக்குவும் தருமனும் சிரித்தார்கள். இந்தச் சமயம் ரயில் ஊதிய சத்தம் கேட்டது. தருமன் விழுந்தடித்துக்கொண்டு பிளாட்பாரத்துக்கு ஓடினான்.

அங்கு ஒரு ரயில் வந்து நின்றது. "இது எந்த ஊர் வண்டி?" என்று சில பிரயாணிகளிடம் கேட்கவே அவர்கள் "பட்டணம் வண்டி" என்றார்கள். தருமன் "சிக்கலுக்கு இது போகுமா?" என்று கேட்டான். வண்டியிலிருந்தவர்களுக்குப் புரியவில்லை. தருமன் திரும்பி வந்துவிட்டான்.

"தம்பி ! இது நம்ம ஊருக்குப் போகாது பட்டணம் போற வண்டியாம்" என்றவுடன் சண்முகம், "இல்லே தருமண்ணே ! இந்த வண்டிதான் நாம் போக வேண்டிய வண்டி" என்று சொல்லவும் எல்லோரும் வண்டிக்கு வந்தார்கள்.

அக்காலத்து ரயில் வண்டிகள் இக்காலத்தைப் போலில்லை. குறிப்பிட்ட நேரத்தில் புறப்பட்டுவிடும். அதுவும் தவிர, கம்பெனிக்காரர்கள் நடத்தியதாகையால் பொது மக்களைத் திருப்தி செய்து சம்பாதிக்க வேண்டுமென்ற தன்மைத்தால் பிறர் நலத்தையும் கவனித்து வந்தார்கள். ரயில்வே ஸ்டேஷன்களில் சாப்பாடு, பலகாரம் முதலியவை மிக நன்றாகவே இருக்கும். வியாபாரிகளின் கூச்சல் சற்று அதிகமாயிருந்தாலும் வேண்டியவைகள் கிடைக்கும். அதுவும் மதுரையைப் போன்ற நிலையங்களில், ரயில்வே ஸ்டேஷனுக்கு உள்ளூர்க்காரர்கள் சில சமயங்களில் வேடிக்கை பார்ப்பதற்காகக்கூட வருவார்கள். வாய் நிறைய வெற்றிலை பாக்குடன் பிளாட்பாரத்தில் இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கத்துக்கு அவர்கள் 'மஜா'வாக நடந்து செல்லும் அழகே அலாதியாக இருக்கும்.

இன்று காலை ஒன்பது மணிக்கு ரயில் என்றாலும், இம்மாதிரி உல்லாச புருஷர்கள் அப்போதும் காணப்பட்டார்கள். அவர்களில் சிலர் சண்முகசுந்தரத்தைப் பார்த்துவிட்டனர். "அதோ சிக்கல் சண்முக சுந்தரம்" என்று யாரோ ஒருவர் கூறவே அங்கே கும்பல் கூடிவிட்டது. சங்கீத வித்வான்களிடத்தில் எப்போதுமே மக்களுக்கு ஒரு பிரேமை உண்டு. அவர்கள் சற்றுத் தலைமறைவாகப் பிரயாணம் செய்ய நினைத்தாலும் அவர்களுடைய உறைபோட்ட தம்பூரும், மிருதங்கமும் அவர்களைக் காட்டிக் கொடுத்துவிடும். அதைப்போல் சண்முகசுந்தரத்தின் நாதஸ்வரப் பைகளும், இரட்டைத் தவுலும் அவன் வந்திருந்ததை விளம்பரம் செய்துவிட்டன. கூட்டத்தில் சிலர் பார்த்துப் புன்னகை செய்தார்கள். சிலர் பாராததுபோல் பார்த்தார்கள். ஒருவர் சண்முகத்தின் அருகில் வந்தார். "எது ரயிலுக்குப் போறீங்களா?" என்று பேச்சுக் கொடுத்தார்.

"ரயிலுக்குப் போகலீங்க ! ஊருக்குப் போறேன்" என்று சண்முகம் கூறவே அவர்கள் சிரித்தார்கள்.

இந்நிலையில் தருமனும் முத்துராக்கும் இரண்டாம் வகுப்பில் இடம் தேட ஆரம்பித்தார்கள். இரண்டாம் வகுப்புப் பெட்டிகள் இரண்டுதான் இருந்தன. அவ்விரண்டிலும் இரண்டு வெள்ளைக்காரர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அந்தக் காலத்தில் இந்த வெள்ளைக்காரர்கள் தொந்தரவு ரயிலில் அதிகம். அவர்கள் இருக்கும் வண்டியில் நாம் ஏறினால் இறங்கச் சொல்லுவார்கள். இல்லாவிட்டால் நமது கடுக்கனையும் குடுமியையும் பார்த்துச் சிரிப்பார்கள்; கேலி செய்வார்கள். ஆகவே, அந்த இரண்டு வண்டிகளையும் விட்டு விட்டால் தருமன் வண்டி நெடுகத் தேடி வரும்போது, கடைசியில் ஒரு பெட்டி முழுவதுமே காலியாய் இருந்தது. ஆவலுடன் அதன் அருகில் போய் விசாரித்தான். அதை 'ரிசர்வ்டு' என்று கார்டு சொல்லிவிடவே, தருமன் சந்தேகத்துடன் சண்முகத்திடம் ஓடிவந்தான்.

"தம்பி ! ஒரு வண்டிதான் காலியாயிருக்கு. அதிலேயும் ரிசர்வு போலீசு போகுதாம் !" என்றான் தருமன்.

உடனே சண்முகசுந்தரம் அந்தப் பெட்டியின் அருகில் சென்று பார்த்தான். அதில் "மோகனாம்பாள் அண்டு பார்ட்டி" என்று எழுதிய காகிதம் தொங்குவதைக் கண்டான். அவனுடைய உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது.

முதல் நாள் இரவு அவள் ஆடிய நாட்டியம் அவன் கண்முன் வந்தது. அவளும் இரவே புறப்பட்டிருக்க வேண்டுமே ! இந்நேரம் இங்கு வந்திருக்க வேண்டுமே என்று எண்ணினான். வண்டியிலிருந்து சற்றுத் தூரம் வெளியே வந்து பிளாட்பாரத்தில், அவள் வருகிறாளா என்று பார்த்தான். அவள் வரவில்லை. மறுபடியும் வண்டியருகில் வந்தான். பிரயாணிகள் அவசர அவசரமாக வண்டிகளில் ஏறிக்கொண்டிருந்தார்கள். தருமனும், தவுல்காரரும் சண்முகத்தின் உத்தரவுக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

"ஏறு தம்பி ! நாங்க இடம் பார்க்கணுமில்லே" என்றான் தருமன். இதைக் காதில் வாங்காமல் சண்முகசுந்தரம் அந்த 'ரிசர்வ்' தாளையே பார்த்துக்கொண்டு நின்றான்.

"என்ன தம்பி படிச்சுக்கிட்டே இருக்கே? அதுதான் 'ரிசர்வ்' வருதுன்னு சொன்னாங்களே ! வா, தம்பி ! நமக்கு எதுக்குப் போலீசு தொந்தரவு!" என்றான் தருமன்.

சண்முகசுந்தரத்தின் எண்ணக்கடலில் பல அலைகள் மோதிக் கொண்டிருந்தன. இப்போதே அவள் வந்து சேர்ந்து அவளுடன் கூட நாம் பிரயாணம் செய்தால் ஆனந்தமாக இருக்குமே! அவளும் துடுக்காகப் பேசுவாள். நாமும் விடாமல் பேசுவோம். சாரமற்ற ரயில் பிரயாணம் இன்ப மயமாகிவிடும். ஆனால் நேற்று இரவு நடந்ததை எண்ணி அவள் நம்மிடம் பேசமாட்டாளோ? பேசாவிட்டால் என்ன?



நாமே வலிய அவளை வம்புக்கு இழுப்பது என்று நிச்சயம் செய்தான். இதற்குள் மணி அடித்தது.

"தம்பி, மணி அடிச்சிட்டாங்க. இதோ ஆலவட்டம் காட்டி கார்டு பிகிலை எடுத்து பல்லாரி ஊதினதும் ரயில் புறப்பட்டுடும். ஏறு, தம்பி !" என்றான் தருமன்.

சண்முகத்துக்கு தருமன் தொந்தரவு தாங்கவில்லை. இன்னும் சற்றுப் போனால் அவன் தன்னையே தூக்கி ரயிலில் போட்டு விடுவான் என்று தோன்றியது. அடிக்கடி வாசலைப் பார்த்தான். அவளோ வருவதாகக் காணோம். ரயில் எப்பொழுதும் கிடைக்கும். ஆனால் இந்த ரதியுடன் பிரயாணம் செய்யும் வாய்ப்பு எப்பொழுதும் கிடைக்குமா? இதற்காக ஒரு நாளைக்கு மதுரையில் தங்கினாலும் பாதகம் இல்லை. இரவு ரயிலில் அவள் போகும் வண்டியைப் பார்த்து அதில் ஏறிக்கொண்டுவிட வேண்டும் என்ற எண்ணத்தில் தன் பிரயாணத்தை நிறுத்திவிடத் தீர்மானித்தான். ஆனால் இந்தக் காரணத்தைத் தருமனிடம் எப்படிச் சொல்வது?

"ஏன் தருமண்ணே ! மதுரையிலே ஏதோ வேலை இருக்குன்னியே !" என்றான் தருமனை நோக்கி.

"எனக்கா ! ஒண்ணுமில்லேப்பா. சும்மா கொஞ்சம் பட்டணம் பொடிதான் வாங்கலாம்னு பார்த்தேன். இங்கே பட்டணத்திலே இருந்து புதுசா பார்சல் வந்திருக்கும். அரைவணாவுக்கு வாங்கி வச்சுக்கிட்டா நல்லா இருக்கும்னு நினைச்சேன்" என்றான் தருமன்.

"முத்துராக்கு ! தருமண்ணனுக்குப் பொடி வாங்கணுமாம். வாங்கிக்கிட்டு நம்ம ராத்திரி ரயிலிலே போவோம்" என்றான் சண்முகம்.

அதைக் கேட்ட முத்துராக்கு, "என்னது ! ஒரு பொடி மட்டைக்காகவா பயணத்தை நிறுத்தறது? ஏறுங்க ! வண்டி கிளம்பப் போகுது" என்றார்.

"இல்லே முத்துராக்கு, பாவம் பெரியவரு ! அவரு மனசு போலவே இறங்கி வாங்கிக்கிட்டே போயிடுவோம்" என்று சிரித்துக் கொண்டே கூறிய சண்முகம் பதிலுக்குக் காத்திராமல் ரயிலை விட்டு நகரவே முத்துராக்கு, தருமன் இருவருக்கும் தூக்கி வாரிப்போட்டது.

இந்த மனம் இருக்கிறதே. இதைக் குரங்கு என்றார் ஒரு கவிஞர். இன்னொரு சித்தரோ மனத்தை மாடென்றார். ஆனால் நாம் இந்த மனத்தைக் குரங்குமல்ல, மாடுமல்ல, இது ஒரு பச்சோந்தி என்று சொல்லுகிறோம். சமயத்திற்குத் தகுந்தாற்போல் மாற்றிக்கொள்வதில் இதற்கு இணை இதுதான்.

நேற்று சண்முகசுந்தரத்திடம் மோகனாம்பாள் கூறிய அதே வார்த்தைகளை ஒரு ஆண் பிள்ளை கூறியிருந்தால் அவன் தலை அவனுடையதல்லவென்று ஆகியிருக்கும். ஆனால், இன்று பாதுகாக்

யார் அவனைக் கோபித்தாளோ, அவளையே நாடுகிறது அவன் மனம். யார் ஏசினாளோ, அவள் வார்த்தைகளையே கேட்க விரும்புகின்றன அவன் செவிகள். யார் அவனை மதியாமல் பேசினாளோ, அந்த மோகன உருவத்தையே தேடுகின்றன அவன் கண்கள்.

இனம் இனத்தோடு சேரும் என்ற பழமொழியில் நமக்குச் சில சமயங்களில் சந்தேகம் வந்தாலும் மனம் மனத்தோடு சேரும் என்பதில் சந்தேகமே இல்லை. இந்த இரண்டு உள்ளங்களும் ஒன்றை ஒன்று விரும்புகின்றன. அதே சமயத்தில் இரண்டும் விரோதிக்காமலும் இல்லை. இந்த ஆச்சரியத்தை நம்மால் ஆராய்ந்து முடிவு காண முடியாது. நமக்குப் புரியாத இயற்கையின் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று.

பௌர்ணமிச் சந்திரனைக் கண்டு கடல் பொங்குவது ஏன்? சூரியனைக் கண்டவுடன் தாமரை முகம் மலருவதேன்? தரையில் வந்து வானமழை முத்தம் கொடுப்பதேன்? மழைத்துளி குளத்தை நாடுகிறது. குளம் ஆற்றைத் தேடி ஓடுகிறது. ஆறு கடலைக் கூடி மகிழ்கிறது. மனிதனும் அந்த வழியில்தான் ஓடுகிறான். அதைப் போல் தன்னை ஏசிய எழில் நங்கையையே நாடியது அவன் மனம். அதற்காகவே தருமன் தலையில் பழியைப் போட்டுவிட்டுத் தன் வழிப்பயணத்தையும் நிறுத்திக்கொண்டான் சண்முகசுந்தரம்.

"மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சாயங்காலம் சண்முகசுந்தரம் நாதஸ்வரக் கச்சேரி செய்யப் போகிறான்" என்று கேள்வியுற்றதுமே மதுரை மாநகரம் அல்லோலகல்லோலப்பட்டது.

சங்கீத ரசிகர்களுக்குப் பெயர் பெற்றது மதுரை. மாலையானவுடன் சோலைக்கோனார் சந்தனக் கடையில் சந்தனம் பூசிக்கொள்வாரும், குடுமிக்குள்ளே மல்லிகை அரும்பை முடிந்துகொள்வாரும், முதலிடம் தேடி ஓடுவாருமாக மக்கள் திரள்திரளாக மீனாட்சி கோயிலை நாடிச் சென்றனர். அக்காலத்தில் மதுரையில் கதா காலக்ஷேபத்தில் சிறந்த பாகவதர்களும், வீணை, ஜலதரங்கம், நாதஸ்வரம் போன்ற வாத்தியங்களில் தேர்ச்சி பெற்ற மகாவித்வான்களும் இருந்தனர். ஆதலால் சங்கீத அலை எங்கும் அடித்துக்கொண்டிருந்தது. அன்று சண்முகசுந்தரம் தம் ஊரில் வந்து தங்கியிருக்கிறான் என்பதை அறிந்த உடனே பல பிரமுகர்கள் அவனிடம் வந்து கச்சேரி செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர். அதோடு அவனுக்கும் இரவுவரை அங்கே தங்கியிருக்க வேண்டிய அவசியம் இருந்தபடியால் உடனே தடை சொல்லாமல் ஒப்புக்கொண்டான்.

அன்று மாலை கல்யாண மண்டபத்தில் சண்முகசுந்தரம் உட்கார்ந்து வாசிக்க ஆரம்பித்ததுமே கோவில் கொள்ளாமல் கூட்டம் கூடிவிட்டது. கிளி மண்டபத்திலும் பொற்றாமரைக் கரையிலுங்கூட



மக்கள் உட்கார்ந்திருந்து கேட்டனர். கோவிலுக்குள்ளே இடம் இல்லாததால், ஆடி வீதியிலும் கூட்டம் நிரம்பி இருந்தது.

"தேவி மீனாக்ஷி முதம்
தேஹிமே ஸததம்"

139560
484276 4

என்ற கல்யாணி ராகக் கீர்த்தனத்தின் பல்லவியை அவன் தொட்டதுமே மக்களுக்கு ஆனந்தம் தாங்கவில்லை.

"பாவன மதுரா நிலயே
பாண்டிய ராஜ தனயே"

என்று அவன் வாசிக்கும்போது அங்கு அமர்ந்திருந்த ரசிகர்களுக்கு எல்லாம், எதிரில் அன்னை மீனாட்சியே வந்து கேட்பதுபோல் தோன்றியது. அந்தச் சமயம் பார்த்து மீனாட்சியின் பரம பக்தரும் அவ்வூர் சிவாச்சாரியாருமாகிய சோமசுந்தர பட்டர் ஓடோடி வந்தார். அம்பிகையின் வாகை மாலை ஒன்றை அவன் கழுத்தில் அணிவித்தார். அன்றொரு நாள் குமரகுருபரருக்கு மீனாட்சியே நேரில் வந்து தன் முத்துமாலையைக் கழற்றிப் போட்டதுபோல் இருந்தது அந்தக் காட்சி.

கச்சேரி முடிந்து ஸ்வாமி தரிசனம் செய்யும்போது அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. பிரசாதத்தை வாங்கிக்கொண்டு வெளியே வந்து கடிதத்தைப் பிரித்தான் சண்முகம். அதில் ஐந்நூறு ரூபாய்க்கு ஒரு தரிசன உண்டியல் இருந்தது. அதோடுகூடப் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

கலைஞர் சண்முகசுந்தரத்துக்கு ராமன் செட்டியார் எழுதியது. இறைவன் திருவருளால் எல்லா நலங்களும் உண்டாகுக.

நேற்று தாங்கள் அற்புதமாக வாசித்தீர்கள். ஆனால் பணம் வாங்கிக்கொள்ளாமலேயே புறப்பட்டுவிட்டீர்கள் என்று அறிந்தேன். இத்துடன் எங்கள் தஞ்சாவூர்க்கடையில் பணம் வாங்கிக் கொள்ளும்படி சிறு தொகைக்கு ஒரு உண்டியல் அனுப்பியுள்ளேன்.

தாங்கள் இளைஞர். தங்களுக்கு வித்தைக்குத்தான் நேரம் இருக்கும். ஆனால், அதோடு உலகானுபவமும் சேர்ந்து தங்கள் வாழ்வில் நலம் பெருகும்படி இறைவனை வேண்டுகிறேன்.

வேணும்.

அண்ணாமலையார் துணை.

இந்தக் கடிதத்தைப் பார்த்ததும் சண்முகசுந்தரத்துக்கு என்னவோ போல் இருந்தது. அடுத்தபடி அவர் அழைக்கும் இடத்தில் வந்து பணம் வாங்காமலேயே வாசிப்பதாகப் பதில் எழுதிக் கொடுத்துவிட்டு, ரயிலுக்குப் புறப்பட்டுவிட்டான்.

பகலைக்காட்டிலும் இரவில் ரயில்வே ஸ்டேஷன் விளக்குகளுடன் மிகவும் அழகாய் இருந்தது. சண்முகசுந்தரமோ

மேலே துப்பட்டாவைப் போட்ட வண்ணம் பிளாட்பாரத்தின் நெடுக உலாவிக்கொண்டே ஓரக் கண்ணால், எந்த வண்டியிலாவது மோகனாம்பாள் அமர்ந்திருக்கிறாளா என்று பார்த்துக்கொண்டே வந்தான். ஒரு வண்டியில் உறை போட்ட மிருதங்கம் ஒன்று இருப்பது தெரிந்தது. ஆவலுடன் அருகில் சென்று பார்த்தான். நாடகத்தில் மிருதங்கம் வாசிக்கும் கோடையிடி சாமிராவு என்பவர் மிருதங்கத்தை வண்டியில் வைத்துவிட்டு உலாவிக்கொண்டிருந்தார். சண்முக சுந்தரத்தை அருகில் கண்டதும், "நமஸ்தே. நான்தான் சாமிராவு, உங்க கச்சேரி எங்கு நடந்தாலும் நான் கேட்காமே இருக்கமாட்டேன்" என்று பேசப் பிடித்துக்கொண்டார். அவர் பிறந்த நாள் முதல் இன்று வரையில் அவர் வாசித்துள்ள நாடகங்களை எல்லாம் ஒப்பிக்க ஆரம்பித்துவிட்டார். அவரிடமிருந்து எப்படித் தப்புவது என்று சண்முகம் விழித்துக்கொண்டிருந்தான்.

இந்தச் சமயத்தில் தருமனும், முத்துராக்குவும் பிளாட்பாரத்தில் நின்றபடி ஒரு பெரிய சர்ச்சையில் ஈடுபட்டிருந்தார்கள்.

"என்ன தவுல்காரரே, இந்த ஊரிலே மருதைங்கறாங்க, குருதைங்கறாங்க. பாருங்க, மத்தியானம் நம்ம நாயனக்காரருக்காகக் கொட்டைப்பாக்கு வாங்கலாம்னு போனேன். நல்ல கொட்டைப் பாக்குக் கிடைக்கல்லே. கடைசியிலே ஊரெல்லாம் தேடி ஒரு கடையிலே இருந்தது. எடுத்து எண்ண ஆரம்பிச்சா 'இருவத்தெட்டு, இருவத்தொம்பது, நுப்பது,' என்றார் கடைக்காரர். நான் 'நுப்பது இல்லே, முப்பது'ன்னு சொன்னேன். இதிலேயே எங்களுக்குள்ளே சண்டை வந்திடுச்சு. கடைசியிலே எம்பதுன்னார். நான் எம்பனதுன்னேன். வாக்குவாதம் முத்திடுச்சு. தம்பி நீங்களே சொல்லுங்க; எம்பனத்தேழா, எம்பத்தேளா? எது சரி?" என்று கேட்டான் தருமன்.

"பாக்கு என்ன ஆச்சு?" என்றார் முத்துராக்கு.

"வாங்கல்லே. எப்ப எண்ணிக்கையிலே வித்தியாசம் இருக்கோ, வாங்க முடியுமா?" என்று தருமன் சொல்லவுமே, பக்கத்தில் நின்றவர்கள் எல்லோரும் சிரித்தார்கள்.

இதற்குள் ஒரு ரயில் ஊதியது. உடனே தருமன் ஓடிப்போய் அதில் ஏறிவிட்டான். அது தூத்துக்குடி ரயில் என்று சொல்லி அவனை இறங்கச் சொல்லுவதற்குள் முத்துராக்குவுக்கு உன் பாடு என் பாடு என்றாகிவிட்டது.

சாமிராவிடமிருந்து தப்பித்துக்கொண்ட சண்முகம், ரயிலுக்கு மணியாகிவிட்டதை உணர்ந்தான். 'இப்போதும் மோகனா வரவில்லையே, என்ன செய்வது? இன்று இரவும் மதுரையில் தங்கி நாளைக்குப் போகலாமா?' என்றுகூட அவனுக்குத் தோன்றியது. இந்தச் சமயம் தருமன், "தம்பி, என்ன யோசிக்கிறீங்க? இந்த ரயிலை



யும் விட்டுட்டா திருவையாத்துக் கச்சேரிக்கு எப்படிப் போறது? தம்பி" என்று சொல்லிக்கொண்டே காலியாக இருந்த ஒரு இரண்டாம் வகுப்பு வண்டியில் சண்முகத்தின் படுக்கையைத் தட்டி விரிக்கலானான்.

சண்முகத்துக்குப் பெருத்த ஏமாற்றமாகிவிட்டது. காலையில் ஊருக்குப் போகாமல் பன்னிரண்டு மணி நேரம் அவளுக்காகக் காத்திருந்தும் அவள் இந்த ரயிலிலும் வரவில்லை என்றதும் அவனுக்கு ஆத்திரமும் கோபமும் தலை தூக்க ஆரம்பித்தன. "என்ன தருமன்னே ! எம் படுக்கையை நான் போட்டுக்க மாட்டேனா?" என்று தருமன் மேல் எரிந்து விழுந்தான். தருமனோ இதைக் காதில் வாங்காமல் தலையணையை ஓங்கி ஒரு தட்டுத் தட்டிவிட்டுக் கீழே இறங்கினான். சண்முகம் வேண்டா வெறுப்புடன் வண்டியில் ஏறி அமர்ந்தான்.

வண்டி புறப்பட மணி அடித்தார்கள். பிளாட்பாரத்தில் இருந்த கூட்டம் சிறிது சிறிதாக வண்டியை விட்டு விலகியது. கார்டு வந்து கதவைச் சாத்தினார். சண்முகத்துக்கு மனம் நிம்மதியில்லை. இதே சமயம், "அய்யா, அய்யா !" என்று யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. சண்முகம் ஆத்திரத்துடன் கதவைத் திறந்தான். ஒரு ஆள் ஒரு பெட்டியையும் படுக்கையையும் உள்ளே தள்ளினான். இன்னொருவன் ஒரு கூஜாவையும், டிபன் பாத்திரத்தையும் கொண்டு வந்து வைத்தான். சண்முகத்துக்கு வெறுப்பாயிருந்தது.

"இது செகண்ட் கிளாஸ்" என்று கூவினான்.

"ஆமாங்க, தெரியுது" என்று கூறினான் மூட்டையைப் போட்ட ஆள்.

இதற்குள் பெட்டி படுக்கை முதலிய சாமான்களால் வண்டி நிரம்பிவிட்டது. சண்முகத்துக்குக் கால் வைத்து நிற்கக்கூட இடமில்லை. அவனுக்கு வந்த ஆத்திரத்தில், "இதென்னய்யா, கூட்ஸ் வண்டியா?" என்று கூறிக்கொண்டே பாதையில் இடைந்த படுக்கையைக் கையால் தூக்கி எறியப் போகும்போது, "யாரு, சண்முகசுந்தரமா, நீங்கள்தான் இதில் பிரயாணம் செய்கிறீர்களா?" என்று கேட்டார் பரமானந்தப் பரதேசி.

பரதேசியைப் பார்த்ததும் சண்முகம் வணங்கினான். முகத்தில் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, "அட, சாமியா? சாமிக்கு ஏது இவ்வளவு மூட்டை !" என்றான் சண்முகம்.

"மூட்டையை நாம் விட்டாலும், நம்மை மூட்டை விடவில்லையே" என்றார் பரதேசி.

இந்தச் சமயத்தில், இதுவரையிலும் தலையைக் குனிந்துகொண்டு தாய்க்குப் பக்கத்தில் நின்ற மோகனா, சண்முகத்தின் குரல் கேட்டலே, வாடிய பயிர் மழை பெய்தவுடன் தலை நிமிர்வதைப் போல் நிமிர்ந்து

அவனை நோக்கினான். அன்று முழுவதும் அவன் பட்ட கஷ்டங்களையெல்லாம் மறந்தான். கண்ணெதிரில் நிற்கும் அவள் உருவத்தையே பார்த்துப் பார்த்து அகமகிழ்ந்தான்.

இதற்குள் சண்முகம் மோகனாம்பாளைப் பார்த்துவிட்டான். அவன் அறியாமல் ஆனந்தம் மேலிட்டது. "மோகனா" என்று கூப்பிடத் தோன்றியது. உடனே அவனுக்கு இயல்பான துடுக்கு குறுக்கிட்டது. "டிக்கட் வாங்கினவங்க காத்துக்கிட்டிருக்கணுமா? ஏறிக்கலாமே !" என்று பாதையில் இருந்து விலகினான்.

மோகனாவும் வடிவாம்பாளும் மௌனமாய் வண்டியில் ஏறி அமர்ந்தார்கள். வரதன் சாமான்களை ஒழுங்கு செய்துவிட்டு இறங்கினான். மோகனா ஜன்னல் அருகில் வந்தாள். இரு கைகளையும் கூப்பிப் பரதேசியை வணங்கினாள். அவளால் பேசமுடியவில்லை. இரு கண்களிலும் நீர் சுரந்திருந்தது. ஆபத்தில் காப்பாற்றியது மாத்திரமல்லாமல் தன்னைச் சேருமிடத்தில் சேர்ப்பித்ததற்காகவும் நன்றி தெரிவிக்க நினைத்தது அவளது மனம்.

பரதேசியார், "திருவருள் காக்க" என்று ஆசீர்வதித்தார். வடிவாம்பாள் மட்டும் "சாமி, அவசியம் திருவாரூருக்கு வரணும்" என்று கேட்டுக்கொண்டாள்.

"விலகு, விலகு" என்று கூவியவண்ணம் பச்சை விளக்கை ஆட்டினார் கார்டு. ரயில் ஊதியது. வண்டி மெள்ள நகர்ந்தது.

அப்போது, "அதோ, அதோ போறாங்க" என்ற குரல் கேட்டுப் பரதேசி திரும்பினார். நாகலிங்கமும், எட்டையாவும் ரயிலை நோக்கி ஓடி வருவதைக் கண்டார்.

ஆனால் வண்டியோ புறப்பட்டுவிட்டது. பரதேசியும் நாகலிங்கமும் எதிரும் புதிருமாக நின்றார்கள்.

"அடடா ! பிள்ளையவர்களா? வரவேண்டும், வரவேண்டும். ஏது, மோகனாம்பாளை வழியனுப்ப வந்தாற்போலிருக்கிறது !" என்று கேட்டார் பரதேசியார்.

நாகலிங்கத்திற்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. "ஆமாமா ! உங்களைப்போல, முற்றத் துறந்த முனிவர்களே வழியனுப்ப வரும்போது, நாங்க வராமலிருக்கலாமா?" என்றார்.

"நான் வழியனுப்ப வரவில்லை. ஊரில் கள்வர் பயம் அதிகமாய்ப் போய்விட்டது. அதனால் துணைக்கு வந்தேன். என்ன, எட்டையா ! நான் சொல்வது சரிதானே?" என்று பரதேசியார் எட்டு கண்ணைய நாயுடுவின் பக்கம் திரும்பிக் கேட்கவே, கண்ணைய நாயுடு என்னவோ யோசித்தார்.

நாகலிங்கமோ தூரத்தில் சென்று மறைந்துகொண்டிருக்கும் ரயில் வண்டியை நோக்கியபடியே பெருமூச்சு விட்டார்.

பதினைந்தாவது அத்தியாயம்

## ஆசை உள்ளங்களின் அந்தரங்கப் பேச்சு



**கா**தல்: இந்த மூன்று எழுத்துக்களுக்குள் மூன்று உலகமே அடங்கியிருக்கிறது. இந்த உலகின் நல்வாழ்வே காதலில்தான் பிறக்கின்றது. ஆணும் பெண்ணும் தனித் தனியாய் உலகில் திரிந்திருந்தால் இன்றைய உலகமே வந்திருக்காது. காதலில்தான் உலகம் வளர்ந்தது. அழகு, கலை, அருந்தொழில் எல்லாமே காதலில்தான் மலர்ந்தன. குறிப்பிட்டுச் சொன்னால், மனித உள்ளத்தில் அன்பு என்ற உணர்ச்சியே காதலில்தான் பிறந்தது. மனிதப்பண்பே காதலால்தான் வளர்ந்தது. இன்பம் என்னும் கனி காதலில்தான் பழுத்தது.

காதல் என்று ஒன்று இல்லையேல் மனிதனும் மற்ற மிருகங்களைப் போலத்தான் வாழ்ந்திருப்பான். ஏடு இல்லை, எழுத்து இல்லை; பாடு இல்லை, பலன் இல்லை; காதல் இல்லையேல். மனித குலத்தின் உயர்வுக்குத் தெய்வம் அளித்த வரப்பிரசாதம் காதல்.

தானே மலரும் மலர் போலவும், தானே பெய்யும் மழை போலவும், தானே கிடைப்பது தெய்வீகக் காதல். அரும்பு மலர்ந்த உடன், நறுமணம் அதைத் தேடி வருவதுபோல் பருவ உள்ளம் மலர்ந்த உடன் இந்தப் பரவச உணர்ச்சி தானே உண்டாகிறது. இந்த உணர்ச்சியின் பலனை அடைவதற்காக மனித உள்ளம் தாங்கொணாத கஷ்டங்களையெல்லாம் தாங்க முன் வருகிறது. அந்தக் கஷ்டங்களோடு போரிட்டு அடையும் வெற்றியில்தான் இன்பம் இருக்கிறது.

ஒரு பொருளை விரும்புவதும், தன் முயற்சியால் அதை அடைவதுந்தான் மனித இயற்கை. உலகம் தோன்றியது முதலே ஒன்றைக் காதலித்து, அதற்காகப் பாடுபட்டு அதை அடைவதிலேதான் மனித குலம் வளர்ந்திருக்கிறது.

உதாரணமாக, உலகில் பிறந்த ஒரு குழந்தையைப் பார்ப்போம். குழந்தையானது பிறந்தவுடன் கத்துகிறது. பிறகு முகம் பார்க்க முயலுகிறது. கைகால்களை ஆட்ட முயலுகிறது. நீந்த முயலுகிறது. தவழ்ந்து, தத்தி நடக்க முயலுகிறது. ஓட முயலுகிறது. ஒரு நடை வண்டியைக் குழந்தை தள்ளும்போது, அந்த வெற்றியில் அந்தக் குழந்தையின் முகத்தில் காணும் ஆனந்தத்தைப் பாருங்கள். இது முயற்சியில் கிடைத்த முதல் வெற்றி.

இப்படி முயலுவதாலேயே முன்னுக்கு வருகிறான் மனிதன்.

தான் பறித்த மலரில், தான் தொடுத்த மாலையில், தான் படைத்த சித்திரத்தில், தான் போட்ட கோலத்தில், தான் சமைத்த சமையலில் மனித உள்ளம் மகிழ்ச்சி கொள்ளுகிறது.

ஆனால் இந்த மகிழ்ச்சிதான் முயற்சியின் முடிவா? அல்ல. இதற்கு மேல் ஒன்று இருக்கிறது. அதுதான் இன்பம். தான் பறித்த மலரில் உள்ளத்திற்கு இன்பமில்லை. அந்த மலரைப் பிறர் நுகர்ந்தால்தான் இன்பம். சித்திரத்தைப் பிறர் பார்த்தால்தான் இன்பம். கோலத்தைப் பலர் புகழ்ந்தால்தான் இன்பம். அன்புடன் சமைத்த சமையலைக் கொண்ட கணவன் உண்டால்தான் இன்பம்.

இப்படி ஒருவரில் ஆரம்பமாகிய மகிழ்ச்சி இருவர் கலந்துதான் இன்பமாகிறது. இதைத்தான் "காதல் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட்டதே இன்பம்" என்று பெரியோர் கூறியிருக்கிறார்கள்.

ஆனால் இது லேசில் கிடைக்கிறதா? அதில்தான் எத்தனை கஷ்டங்கள் ! காதல் கிடைக்க எவ்வளவுக்கெவ்வளவு கஷ்டம் அதிகமாகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு இன்பமும் அதிகமாகிறது. முடிவில் "நான் வென்றேன். நான் நாடிய பொருளை அடைந்தேன்" என்ற நினைப்பில் ஏற்படும் இன்பத்துக்கு எல்லையே இல்லை. இந்த 'நான்' இருக்கிறதே, இதுதான் காதலின் இரகசியம். ஆனால், இந்த 'நான்' அழிவதுதான் காதலின் மகத்துவம்.

உலகத்தில் சிரஞ்சீவியாக இருக்கும் காதல் காவியம் எல்லாவற்றையும் பாருங்கள். எல்லாமே கண்ணீரால்தான் எழுதப்பட்டிருக்கின்றன. காதல் பாதையில் கல்லும் முள்ளும் நிரம்பியிருக்கின்றன என்பதைக் காண்கிறோம்.

காட்டுக்கு நடுவில், கரடி, புலி மத்தியில் தவம் செய்தாள் உமை, சிவபெருமானை அடைய. இது முதல் காதல்.

பரண் மேலே நின்று பைம்புனம் காத்தாள் வள்ளியம்மை, வேலனை அடைய.

இரு விழிகள் நீர் சோர ஏங்கித் துடித்தாள் ராதை, கண்ணனை அடைய.

மானும் மயிலும் மரமும் துடித்தன சகுந்தலையின் காதல் வேதனையில்.

நிலவில் உடல் புண்ணானாள் மகாசுவேதை. மலரில் அடிபட்டு இறந்து வீழ்ந்தாள் இந்துமதி.

காடெல்லாம் அலைந்து திரிந்து கால் கடுத்து, மண்ணில் தவழ்ந்தாள் லைலா. மரணத்தின் மடியிலும் மனப்பால் குடித்தாள் அனார்கலி.

இவ்வாறு காதலைத் தேடிக் கஷ்டப்பட்டு, அதிலே காம்பு இற்றுப் போய், காதலன் மடியில் உதிர்ந்த கனிகள் பல உண்டு காவியத்தில்.



இவைகளைப் பார்க்கும்போது நமது மோகனாவின் காதலும் எப்படி முடியப் போகிறதோ என்று நாம் யோசிப்பது இயற்கை. இந்தத் துடுக்குக்காரனை அவள் ஏன் காதலிக்கிறாள்?

உலகத்தில் மற்ற எந்த ஆணிடத்திலும் காணாத அதிசயத்தை அவனிடம் கண்டுவிட்டாளா? அல்லது, அடையமுடியாத அவனை அடைவதுதான் தன்னுடைய பெண்மைக்கும், அழகுக்கும் ஏற்றது என்று நினைத்துவிட்டாளா?

முல்லையைக் காட்டிலும் ரோஜா எந்த விதத்தில் சிறந்த மலர்? வாசத்திலா, அழகிலா, படைப்பிலா? ஆனால் ரோஜாவின் மேல் ஏன் நமக்கு இத்தனை ஆசை? முல்லையைப் போல் அது கொல்லை முழுவதும் பூத்துக் குலுங்குவதில்லை. குறைவாய்ப் பூக்கிறது. அதனால் ஆசை. அபூர்வமாய்த்தான் கிடைக்கிறது; அதனால் இன்னும் அதிக ஆசை. பக்கத்தில் போனால் முள் குத்துகிறது. அதனால் அவசியம் பறிக்க வேண்டுமென்று உள்ளம் தூண்டுகிறது. அதைப் பறித்துவிட்டாலோ, கையில் சொட்டும் ரத்தம் தெரிவதில்லை. கைகளில் காணும் மலரில், உலகத்தையே வென்றுவிட்டதுபோல் தோன்றுகிறது.

அவனோ, கிட்ட வரும்போது எட்டி ஓடுகிறான். அவளோ, நெருங்கி நெருங்கி வருகிறாள். இதற்கிடையே தாய் வேறு தடுக்கக் காத்திருக்கிறாள். கடலைத் தாண்டியவன் அதன் கரையில் உள்ள மணலைத் தாண்ட முடியாமல் மயங்கி விழவும் கூடும். இம்மாதிரி நிலை காதலில்தான் நிரம்ப உண்டு. ஆனால், உலகமோ, நித்தம் இந்த நாடகத்தைப் பார்த்துக்கொண்டு, அதன் நியதிப்படி தண்டவாளத்தில் ரயில் ஓடுவது போல் ஓடிக்கொண்டே இருக்கிறது.

சண்முகசுந்தரமும் மோகனாவும் செல்லும் ரயில் மதுரை, வைகை ஆற்றுப் பாலத்தின்மேல் போய்க்கொண்டிருந்தது. அது பழங்காலத்து ரயில்.

அந்த இரண்டாம் வகுப்புப் பெட்டியே அழகாக இருந்தது. சுற்றிலும் பித்தளைக் குழாய்களில் கிராதி அமைத்திருந்தார்கள். எதிர் எதிராக இரண்டு படுக்கைகளும், ஒரு ஓரத்தில் இன்னொரு படுக்கையும் ஆக மூன்று ஆசனங்கள் இருந்தன. அந்தப் பெட்டிக்குள்ளே இருந்த 'கோட் ஸ்டாண்டு'களில் எல்லாம், மல்லிகைப்பூ மாலைகளும், ரோஜாப்பூ மாலைகளும் மாட்டப்பட் டிருந்தன. திருமங்கலம் ரோஜாப்பூவும், திருப்பரங்குன்றம் மல்லிகைப் பூவும் மணம் வீசி வண்டி முழுவதும் பரிமளம் நிரம்பியிருந்தது. நல்ல பச்சைக் கர்ப்பூரம், குங்குமப்பூ சேர்த்து அரைத்துப் பன்னீர் விட்டுப் பிசைந்த கையரைவைச் சந்தனம் ஒரு இலையில் இருந்தது. அம்மனின் சந்தனக்காப்புப் பிரசாதம் ஆதலால் பட்டர் அதைக் கட்டிக் கொடுத்திருந்தார். அந்தச் சந்தனத்தின் வாசனையும், மலரின் மணமும்

இளங்காற்றில் கலந்து வீசிக்கொண்டிருந்தன. சண்முகசுந்தரத்தின் அங்கவஸ்திரம் காற்றில் பறக்கும்போதெல்லாம் அதில் போட்டிருந்த சதம்ப அத்தர் ஜம்மென்று வாசனையை வீசியது. அந்த வண்டி முழுவதும் சுந்தரம் மணக்க, அவர்கள் இருவரும் கடைக்கண்ணால் ஒருவரை ஒருவர் பார்த்த வண்ணம் வாய் பேசாமல் உட்கார்ந்திருந்த காட்சி புது மண இரவை ஞாபகம் ஊட்டியது.

சண்முகசுந்தரத்தின் மனத்திலே இப்போது ஒரு பெரிய சர்ச்சை நடந்துகொண்டிருந்தது. இன்று காலை அவன் யாருக்காகத் தன் பிரயாணத்தை நிறுத்தினானோ அவளே இப்போது எதிரில் வந்து அமர்ந்திருக்கிறாள். ஆனால், இப்போதோ அவன் வாய் திறக்க வில்லை. அவள்தான் முதலில் பேசட்டுமே என்று எண்ணுகிறான். அசைப்பில் அவள் திரும்பினாலும், அவள் நிமிர்ந்தாலும், பெருமூச்சு விட்டாலும் தன்னிடந்தான் ஏதோ பேசப் போகிறாள் என்று எண்ணி விட்டாலும் தன்னிடந்தான் ஏதோ பேசப் போகிறாள் என்று எண்ணி ஏமாந்துகொண்டே வருகிறான். இந்த 'மனமோகன வடிவத்தைத் தரிசிப்பதற்காக நாள் முழுவதும் மதுரையில் தேடித் தேடி அலைந்ததை எண்ணியபோது அவனுக்கே சிரிப்பு வந்தது—

பிரயாணத்தை நிறுத்தியவுடன் அவன் மனத்தில் 'மோகனா மதுரையில்தான் தங்கியிருக்கவேண்டும். அவள் எங்கு இருக்கிறாள் என்று பார்த்தால் என்ன?' என்று தோன்றியது. அக்காலத்தில் ரயில்வே ஸ்டேஷன்களில் குதிரை வண்டிகள்தான் அதிகம் இருக்கும். அவற்றுள் ஒரு வண்டியைப் பார்த்துத் தருமன் ஓட்டி வந்தான். சண்முகத்துக்குக் குதிரையைப் பார்த்ததும் தூக்கிவாரிப் போட்டது. அது குதிரையுமல்ல கழுதையுமல்ல குதிரை முகம் இருந்தது. ஆனால் கால்கள் முட்டி தட்டின.

"என்னங்க குருதையை இப்படிப் பார்க்கிறீங்க? ஏறிக் குந்துங்க" என்றான் வண்டிக்காரன். சண்முகம் கோஷ்டியினர் வண்டியில் ஏறினர். "ஏய், ஏய்" என்று ஏறி நின்றுகொண்டு சத்தம் போட்டான் வண்டிக்காரன். அந்தத் தொத்தல் குதிரை ஓட ஆரம்பித்தது.

"எங்கே தங்குவது?" என்று தருமன் கேட்டான்.

"மங்கம்மா சத்திரத்துக்குப் போவோம்" என்றான் சண்முகம்.

மங்கம்மா சத்திர வாசல் வந்தவுடன் வண்டியில் உட்கார்ந்த படியே, "தருமண்ணே ! உள்ளே அறை காலியாயிருக்குதா, பாரு. அப்படி இருந்தாலும் முதல்லே அந்த அதிகப்பிரசங்கிப் பொண்ணு இங்கே வந்து இறங்கி இருக்கிறாளான்னு பார்த்துக்கிட்டு என்கிட்ட வந்து சொல்லு" என்றான் சண்முகம்.

"எந்தப் பொண்ணு, தம்பி?" என்றான் தருமன்.

"அதுதான், அந்தத் திருவாரூர் நடனம்."

"ஏன், அவ இருந்தா நமக்கென்ன?"

"சே ! சே ! அது என்ன ஆனை மதிக்காம பேசுது ! அது ராத்திரி பேசின பேச்சு இன்னும் என் காதிலேயே நிக்கிது ! நீ போய்ப்



பார்த்துட்டு வா, அண்ணே !" என்று உத்தரவு செய்துவிட்டு வண்டியில் ஐந்து நிமிஷம் காத்திருந்தான். அந்த ஐந்து நிமிஷமும் ஐந்து யுகமாக இருந்தது, அவனுக்கு.

தருமன் வந்து, "அறை காலியிருக்காம். அந்தப் பொண்ணும் இங்கே இல்லை. நம்ம இறங்கிவிடுவமா?" என்று கேட்டபோதுதான் சண்முகத்தின் பாடு திண்டாட்டமாகிவிட்டது.

"இல்லை, தருமண்ணே ! இது ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிர்த்தாப்பிலே இருக்கு. ரயில் ஊதுற சத்தத்திலே இங்கே தலைவலி எடுத்துடும். வேறே இடம் பார்ப்போம்" என்று சொல்லிவிட்டு வண்டிக்காரனை நோக்கி, "வேறு விடுதிக்கு விடு" என்றான் சண்முகம்.

குதிரை இதற்குச் சம்மதிக்கவில்லை. ஒரு மாதிரியாய் நடக்க ஆரம்பித்தது ! ஒவ்வொரு விடுதியாக மோகனாவைத் தேடிக்கொண்டே சென்றான். அவள் எங்கும் இல்லாததால், "இந்த விடுதியில் காத்து வராது", "இங்கே மூட்டைப்பூச்சி இருக்கும்போல் இருக்கிறது", "இங்கே அறையெல்லாம் நல்லா இருக்கு. ஆனால் நமக்குப் பச்சரிசிச் சாப்பாடு ஒத்துக்கொள்ளாது", "இது வித்வான்கள் இறங்க லாயக்கில்லை", "இது ரயிலடிக்கு ரொம்பத் தூரம்" என்று ஊர்க்கடைசி வரையில் போய் எல்லா விடுதிகளையும் தட்டிக் கழித்துவிட்டான். அவள் எங்கும் இல்லை என்பதில் சண்முகத்துக்கு ஏமாற்றம். தருமனுக்கோ ஒவ்வொரு விடுதியாய் ஏறி இறங்கிக் கால் கடுத்துவிட்டது.

"ஏன், தம்பி ! எனக்கு அந்தப் பொண்ணைத் தேடினதுக்கே இப்படிக் காலை வலிக்குதே. நேத்து அது ஆடினதிலே அதுக்கு கால் என்ன வலி வலிக்கும்?" என்று கிண்டலில் இறங்கினான் தருமன்.

சண்முகசுந்தரம் விட்டுக் கொடுக்கவில்லை. "நான் அவளையா தேடுறேன்? அவள் இல்லாத விடுதியிலே இறங்கணும்னு பார்க்கிறேன்" என்று கூறிவிட்டு, "சரி, மறுபடியும் மங்கம்மா சத்திரத்துக்கே விடச் சொல்லு வண்டியை" என்றான்.

வண்டி புறப்பட்டது. பாவம், அந்தக் குதிரைக்கு, ரயிலடிக்கு மறுபடியும் திரும்புகிறானே என்று கோபம் வந்துவிட்டது. திரும்ப மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்தது. வண்டிக்காரன் சாட்டைக் கம்பால் சொடேர் சொடேர் என்று குதிரையை அடிக்க ஆரம்பித்தான். 'இந்தாய்யா, உனக்கு ரயிலடிக்குத்தானே போக வேண்டும்? அவ்வளவுதானே? இதோ, நான் பின்னாலேயே போகிறேன், என் சாமர்த்தியத்தைப் பார்' என்று குதிரை பின்னாடியே நடந்து தன் சாதுர்யத்தைக் காட்ட ஆரம்பித்தது.

குதிரை ஒரு அடி முன்னால் போனால் பத்து சஜெம் பின்னால் போக ஆரம்பித்தது. இப்படித் தெருவில் நர்த்தனம் செய்ய ஆரம்பிக்கவே, கூட்டம் கூடிவிட்டது. வண்டிக்காரனோ, "நல்ல

சாத்தானுங்க. முந்நூறு ரூபா கேட்டான். சரின்னு குடுத்து வாங்கினேன். இப்ப என்னடான்னா மக்கர் செய்யுது ! திருப்பரங்குன்றம் கார்த்தியல்லே ஏழு வண்டியை முந்தினதுங்க ! சும்மா உக்காருங்க. பயப்படாதீங்க." என்று சொல்லிக்கொண்டே, இந்தப் பாட்டிற்கு ஏற்றபடி குதிரையை அடித்துக்கொண்டே வந்தான்.

"ஏம்பா, பணம் முழுக்கக் குடுபடல்லியே?" என்றான் சண்முகம்.

"இல்லிங்க ! பின்னாடி குடுக்கிறதாகச் சொல்லியிருக்கேன்."

"அதுதான் பின்னாடியே ஓடுது ! அப்பா, நிறுத்திடு ! நாங்க இறங்கிக்கறோம்."

இதைக் கேட்ட வண்டிக்காரனுக்கு ரோஷம் பிறந்துவிட்டது. திடீரென்று கீழே குதித்தான். சாட்டையால் குதிரையைச் "சுளீர்", "சுளீர்" என்று அடிக்க ஆரம்பித்தான். குதிரை பிய்த்துக்கொண்டது. வாயு வேகம் மனோ வேகமாகப் புறப்பட்டது. தொத்தல் குதிரைக்கு இத்தனை வேகம் எங்கிருந்து வந்தது என்று ஆச்சரியம் வந்தது. இனிக் குதிரை நிற்காது என்று நிச்சயித்த வண்டிக்காரன் 'ஏய் !' என்று ஏறி உட்கார்ந்தான். குதிரையும் 'ஏய், நீ மறுபடியும் ஏறுகிறாயா !' என்று சொல்வதுபோல் குபீரென்று ரோட்டில் குறுக்கே திரும்பிக்கொண்டது. பின்காலை உயர்த்தி, பெட்டியில் ஒரு உதைவிட்டது. முன் காலைத் தூக்கிக் குதித்ததில் தரையில் வண்டி மிதி இடித்தது. இவ்வளவு போதாது என்று கரகரவென்று ராட்டினம் சுற்றுவதுபோல் சுற்ற வேறு ஆரம்பித்துவிட்டது. இதைப் பார்த்த தருமன் "ஏனய்யா ! வண்டிக்காரரே ! இந்த ஊரிலே குதிரையையும் செக்கிலே பூட்டுவாங்களோ !" என்றான்.

இதைக் கேட்ட வண்டிக்காரன், தன்னையும் மீறி வந்த கோபத்தில், தனக்குக் குதிரை விற்றவனைச் சரமாரியாகத் திட்ட ஆரம்பித்தான். கடைசியில் ஒரு விதமாக மங்கம்மா சத்திரம் போய் இறங்கினார்கள்.

சத்திரத்தில் வந்து இறங்கியவுடன், "தம்பி, நீ தூங்கு. நாங்க இப்படி ஊரைச் சுத்திப் பாத்துட்டு வரோம்" என்றான் தருமன்.

"என்ன தருமண்ணே, பார்க்கப் போறே? இங்கேயே இரு" என்றான் சண்முகசுந்தரம்.

"இல்லை, தம்பி தவுல்காரருக்குத் திருமலை நாயக்கர் மஹால் பார்க்கணுமாம். கூட்டிக்கிட்டுப் போயிட்டு வந்துடறேன்" என்று தவுல்காரரைச் சாக்கிட்டுத் தான் பார்க்க நினைத்தான் தருமன்.

இதைக் கேட்டவுடன் சண்முகத்துக்கு ஒரு வேளை மோகனாவும் மதுரையைச் சுற்றிப் பார்க்கப் போயிருக்கலாமோ என்று தோன்றவே, "இல்லை, அண்ணே ! எனக்குத் தனியா தூக்கம் வராது. நானும் உங்களோடு வருகிறேன்" என்று கூடவே புறப்பட்டுவிட்டான்.

எல்லோரும் மஹாலைப் பார்க்கும்போது, சண்முகம் மங்கையைத் தேடினான்.



அடுத்தாற்போல் வண்டியூர்த் தெப்பக்குளத்தில் படகில் ஏறி மைய மண்டபத்திற்குச் சென்றார்கள். படகில் சண்முகம் உட்கார்ந்ததுமே தருமன் ஏறி, அவன் பக்கத்தில் அமர்ந்தான். அதைப் பார்த்ததும் சண்முகம் மனத்தில் நகைத்துக்கொண்டான். 'தருமன் உட்கார வேண்டிய இடமா இது? அந்தத் தருணியல்லவா உட்கார்ந்து வரவேண்டும்?' என்று நினைத்தான்.

'இந்த இன்பப்படகிலே, இளந்தென்றலிலே அந்த அன்புப் பறவையுடன் ஆடிப் பாடித் திரிய வேண்டும்' என்று ஒரு கணம் அவனுக்குத் தோன்றியது. அதற்குள் மைய மண்டபம் வந்துவிட்டது.

படகுக்காரன் "இறங்குங்க" என்றான். சண்முகம் அவசரத்தில் இறங்கவே படகு வேகமாய் நகர்ந்தது. சண்முகம் விழப் போனான். நல்ல வேளையாகத் தருமன் பிடித்துக்கொண்டான். அதையும் எண்ணினான் சண்முகம்.

ஆனால் அவனுடைய மனப்போராட்டத்தை அந்த ரயில் வண்டி அறியுமா? அது பாட்டில் போய்க்கொண்டிருந்தது. எதிரில் இருக்கும் மோகனாம்பாளோ அவன் பட்ட பாட்டையும், அவளைத் தேடியதையும் அறியாமல் எதையோ எண்ணிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவளையே நோக்கினான் சண்முகம்.

'உனக்காகக் குதிரை வண்டியில் இருந்து விழத் தெரிந்தேனடி. உனக்காகத் தெப்பக்குளத்தில் வழுக்கிக்கூட விழ இருந்தேனடி' என்று அவளிடம் சொல்ல நினைத்தான். ஆனால், கர்வம் தடுத்தது.

'இவ்வளவு பாடுபட்டு இவளை ஊரில் உள்ள வீதிகள் எல்லாவற்றிலும் தேடினோமே, இதோ எதிரில் உட்கார்ந்துகொண்டே பேசாமல் இருக்கிறாளே !' என்று அவனுக்குக் கோபம் வந்தது. அவசர அவசரமாக வெள்ளிக்கூஜாவைத் திறந்தான். ஒரு டம்ளர் தண்ணீரை எடுத்துக் குடித்தான்.

"அதென்ன, குடிக்கிற தண்ணீரா?" என்றாவது மோகனா கேட்க மாட்டாளா என்று எதிர்பார்த்துச் சற்று நேரம் கூஜாவை மூடாமலே இருந்தான். அவளோ கேட்கவில்லை. வந்த ஆத்திரத்தில் கூஜா மூடியை அவசரமாய்த் திருகவே, தப்பு மரை விழுந்து மூடி சிக்கியது. காலில் கூஜாவை இடுக்கிக்கொண்டு, மூடியைக் கையால் வேகமாக இழுத்தான். மூடி கையுடன் வந்தது. தண்ணீரை முகமெல்லாம் வாரி அடித்தது. இதற்கும் அந்தப் பெண் பேசவில்லை. பேசாவிட்டாலும் பாதகமில்லை. முகத்தைத் திருப்பிக்கொண்டு, 'களுக்'கென்று சிரித்தாள். 'ஏன், இந்தச் சிரிப்பை நேரில்தான் சிரிக்கட்டுமே! முகத்தை மறைத்துக்கொண்டு சிரிப்பானேன்?' என்று அவனுக்குத் தோன்றியது.

அந்தச் சிரிப்பிலிருந்தாவது ஒரு பேச்சு வராதா என்று நினைத்தான்.

தன்னோடு பேசத்தான் வெட்கம். அவள் தாயுடனாவது பேசலாமல்லவா?

அந்த மௌனத்தை அவனால் பொறுக்க முடியவில்லை. வெல்வெட் தலையணையை ஒரு தட்டுத் தட்டிவிட்டு, அதன்மேல் ஜம்மென்று சாய்ந்துகொண்டான். அவனை அறியாமல் கருட்டி ராகத்தை முனக ஆரம்பித்தான். சண்முகம் வாய்ப்பாட்டிலும் வித்வான். ஆதலால், அந்த ராகம் அவனிடம் கொஞ்ச ஆரம்பித்தது. அப்படியே முனகிக்கொண்டே வந்து,

" ஏதுக்கித்தனை மோடிதான் உமக்
கெந்தன் மீதையா?"

என்ற கீர்த்தனத்தின் பல்லவியில் வந்து நின்றான்.

இந்தப் பாடல் இரண்டு பேருடைய செவிகளில் விழுந்தது. ஒருவருக்கு இது அமிர்த வர்ஷமாகக் காதில் ஒலித்தது. இன்னொருவருக்கோ ஆலகால விஷமாகப் புகுந்தது. வடிவாம்பாளைத்தான் இங்கே குறிப்பிடுகிறோம்.

வடிவாம்பாளுக்கு முதலில் இந்த வண்டியில் ஏறியதே பிடிக்கவில்லை. அவள் விஷயம் தெரிந்தவள். தன் மகளின் நல்வாழ்வில் அக்கறை உடையவள். அவளைப் பொன்னைப்போல் போற்றி வளர்த்தவள். பொன் காய்க்கும் செடி என்றே நினைத்தவள். அவள் கால் சலங்கை ஒலியில் பணம் குலுங்கும் சத்தத்தைக் கேட்டாள். அவள் கையால் அபிநயம் பிடிக்கும்போது அதில் உலகமே பிடிபடுவதைக் கண்டாள். அவள் கண்ணுக்கு இட்ட மையில் உலகத்தில் உள்ள செல்வப் புதையல்களை எல்லாம் எடுத்துத்தரும் அஞ்சன மை இருப்பதைக் கண்டாள். தன் மகளின் விழி வலையில் ராஜாதி ராஜர்கள் எல்லாம் வந்து சிக்கவேண்டும் என வேண்டினாள். அவள் அரங்கேற்றத்தன்றே வடிவாம்பாள் எண்ணற்ற ஆகாயக் கோட்டைகளைக் கட்டினாள்.

ஆதலால், நேற்று, தன் மகள் சண்முகத்தைப் பார்த்த முதல் பார்வையிலேயே வடிவாம்பாள் நெஞ்சம் திக்கென்றது. அதன் பிறகு, இருவருக்கும் சண்டை வந்துவிடவே வடிவாம்பாளுக்குச் சிறிது சந்தோஷம் வந்தது.

அதன் பிறகு தொடர்ந்து ஏற்பட்ட ஆபத்துகளில் அவள் சண்முகத்தைப்பற்றி நினைக்கவே இல்லை. இந்த மட்டில் ஒரு பார்வையோடு போயிற்றே என்று மனம் மகிழ்ந்திருந்தாள். ஆனால் இன்று எதிர்பாராத விதமாய், அவனும் தன் மகளும் எதிரும் புதிருமாய் உட்கார வேண்டி வந்ததைக் கண்டதுமே அவள் மனம் புழுங்கியது. இறங்கி மூன்றாவது வகுப்பிலாவது போய் உட்கார்ந்து விடலாமே என்று நினைத்தாள்.

'நேற்று அவன் வாசிப்பைக் கேட்டபோதே அவள் ஒருமாதிரியாய்ப் பார்த்தாளே, இப்போது பாட வேறு ஆரம்பித்துவிட்டானே! ஏதாவது விபரீதம் வந்துவிட்டால் என்ன செய்வது?' என்று எண்ணிப்



பயந்தாள். அந்தத் தாயின் உள்ளத்திலே பற்பல எண்ணங்கள் தோன்றி அவள் மனத்தை வாட்டலாயின.

இனிமேல்தானே அவளுக்கு எல்லாம் இருக்கிறது! நாலு வீடுகள் கட்ட வேண்டாமா? நூறு வேலி நிலமாவது சம்பாதிக்க வேண்டாமா? நமது மகளும் நாலு லட்சத்துக்கு நகை போட வேண்டாமா? வடிவாம்பாள் மகள் மோகனாம்பாள் என்று சீமை வெங்கும் பேர் எடுக்க வேண்டாமா? இந்தப் பிள்ளையாண்டானிடம் என்ன இருக்கிறது? வித்தை இருக்கிறது. வித்தை வீடு கட்ட உபயோகப்படுமா? அழகு இருக்கிறது. அரையணாவுக்கு உபயோகப்படுமா? இவன் எவ்வளவு சம்பாதித்தாலும் இவனுடைய ஜவ்வாதுப் பொட்டுக்கும் சந்தனத்துக்கும் காணாதே!

இவளுக்குத்தான் என்ன அவசரம்? நொய் அரிசி கொதி பொறாது என்பதுபோல், இப்பவே இப்படிப் பாக்குதே! பெண்புத்தி பின் புத்தி என்பது தெரியவில்லையே. முப்பது நாழிகையும் முடிஞ்சதானே போது விடியும்? அப்படித்தான் இதுக்கு என்ன வயசாயிடுத்து? நேற்றுப் பிறந்தது. விஜயதசமிக்குப் பள்ளிக்கூடத்தில் வைக்கத் தைத்த வெல்வெட் சட்டை வீட்டிலே கிடக்குது. தொட்டில் போடுகிறபோது போட்ட காப்பை இன்னும் அழிக்கவில்லை. அதுக்குள்ளே ஏன் இந்த அவசரம்?

அவளுக்குத் தன் மகள் மேல் ஆத்திரமாக வந்தது. கூடவே தன் மகள் என்ற பாசமும் வந்தது. 'அது என்ன செய்யும்? நேத்துப் பிறந்த பொண்ணு. அதன் ஆட்டம் உண்டு, பாட்டு உண்டு, வேலை உண்டு என்றுதானே இருந்தது? இந்தப் பாவி வந்து எதித்தாப்பிலே நின்னால் என் மகள் என்ன செய்வாள்? ஆண்டவன் எதுக்குத்தான் இவங்களுக்கெல்லாம் அழகைக் கொடுக்கிறானோ?' என்று தெய்வத்தைப் பலமுறை மனத்தில் திட்டினாள். தன் மகளைத் திட்டவும் மனம் வரவில்லை; அவள் செய்கையை ஒப்புக்கொள்ளவும் மனம் வரவில்லை. இப்படித் திண்டாடிக்கொண்டிருக்கும்போது, அவளுக்குச் சத்துருவாகத் தூக்கம் வேறு அவளைத் தொந்தரவு செய்யலாயிற்று. அவள் அதை அடக்கவும், அது அவளை அடக்குவதுமாகப் போராடிக்கொண்டிருந்தாள்.

சண்முகமும் வடிவாம்பாளும் இவ்வாறு எதிரெதிரான திசைகளில் தங்கள் சிந்தையை ஓடவிட்டு இருக்கையில் மோகனாவின் உள்ளம் களிப்பில் துள்ளியது. தன் உயிரைக் காப்பாற்றியதும் அல்லாமல் தன்னைத் தன் கருத்துக்கினியவருடன் ரயிலில் ஏற்றிவிட்டதற்காகவும், தன் பிரயாணத்தை இன்பமயமாக ஆக்கியதற்கும் காரணமாகவுள்ள அந்தப் பரமானந்தப் பரதேசியாரை அவள் உள்ளம் வாழ்த்தியது.

'ஆனால், நாம் நினைத்தபடி நடக்கவில்லையே! இவருக்கு முன் நாம் ரயிலுக்கு வந்துவிடுவோம். இவர் இடம் அகப்படாமல் தவிப்பார். நம் வண்டியில் இடம் கேட்பார் என்று ஆசைப்பட்டோமே! அது தலை கீழாகமாறிவிட்டதே. நாமல்லவா இவரிடத்தில் நமக்கு இடம் கொடு என்று கேட்கவேண்டியதாகிவிட்டது? இவர் உள்ளத்தில் நமக்கு இடம் கேட்பது போதாதா? உட்கார்ந்து செல்லும் ரயிலிலும் அல்லவா இவரைக் கெஞ்ச வேண்டியதாகிவிட்டது! நான் சொல்ல நினைத்ததை இவர் சொல்லிவிட்டாரே! — 'டிக்கட் வாங்கினவங்க காத்துக்கிட்டு இருக்கனுமா? ஏறிக்கலாமே!' — ஆகா, பெரிய கற்பனைசெய்து பேசிவிட்டதாக எண்ணம்! இதை நான்தானே முதலில் நினைத்தேன்! நான் நினைத்ததை இவர் எப்படி அறிந்தார்?

மனசுக்குள்ளே இவருக்கும் நம்மேல் அன்பு இருக்கும் போலிருக்கிறது. இல்லாவிட்டால், அதையே சொல்ல வருமா?... அன்பிருந்தால் ஏன் அப்படி ரயிலில் ஏறும்போது பாதையிலிருந்து சரேலென்று விலகினார்? என்னமோ தேளை மிதித்த மாதிரி விலகுவானேன்? — அன்புமில்லை, ஒன்றுமில்லை! அவ்வளவும் திமிர், துடுக்கு, அகம்பாவம்! தான் ஆண்பிள்ளை என்ற கர்வம். பாரேன் உட்கார்ந்திருப்பதை! வெல்வெட் தலையணையில் சாய்ந்துகொண்டு ஏதோ தன் மனத்தில் பெரிய சக்ரவர்த்தி என்றுதான் ஞாபகம்!.... மன்மதன் மாதிரி சாய்ந்துகொண்டு உட்கார்ந்திருக்கிறார். இருக்கட்டுமே, அப்படியே உட்கார்ந்திருக்கட்டும். எத்தனை நாழிகைதான் உட்கார்ந்திருப்பார்!—

'இதென்னடி கஷ்டம்! இலையில் சாதத்தை வைத்துக்கொண்டு எத்தனை நேரந்தான் சாப்பிடாமல் இருப்பது? எதிரில் மலரை வைத்துக்கொண்டு எத்தனை நேரந்தான் எடுத்து வைத்துக் கொள்ளாமல் இருப்பது? — இப்படி எதிரும் புதிருமாக உட்கார்ந்து கொண்டு எத்தனை நேரந்தான் பேசாமல் இருப்பது? நான் வாயைத் திறந்து எப்படிப் பேசமுடியும்? அம்மா வேறே கொட்டு கொட்டுனு முழித்துக்கொண்டிருக்கிறாள். நான் பேச முடியுமா? அப்படித்தான் வெட்கத்தைவிட்டு என்ன பேச்சு வேண்டிருக்கிறது!—

'அவர்தான் முதலில் பேசட்டுமே. என்னிடம் பேச வேண்டாம், அம்மாவிடம் பேசவது! அப்படி மெல்லப் பேச்சை ஆரம்பித்தால் நான் இடையிலே சேர்த்துகொள்ளுகிறேன் — பாரு, கல்லுப்பிள்ளை யாராட்டம் உட்கார்ந்திருப்பதை? வாயில் என்ன கொழுக்கட்டையா இருக்கிறது? எனக்கு வரும் கோபத்தில் பரிசு வாங்கிய அந்தச் சங்கிலியைத் தூக்கி அவர் முகத்திலே...சே! சே! அவர் கையிலே— இல்லை— அவர் கழுத்திலே போட்டுவிடத் தோன்றுகிறது! எப்படிப் போடுவது? இவர் உட்கார்ந்திருக்கும் அழகுக்கு அந்தச் சங்கிலியும்



கழுத்தில் கிடந்தால் ரொம்ப நன்றாக இருக்கும்! பாட்டைப் பார்! 'எதுக்கித்தனை மோடியாம்! நானா மோடி செய்கிறேன்? நீங்கள்தான் செய்கிறீர்கள். எனக்கு வரும் ஆத்திரத்தில் 'மோடியாவரா-நாசமி' என்று பாடி ஒரு ஆட்டமே ஆடிவிடலாமா என்று தோன்றுகிறது — நாம் நினைத்து என்ன பயன்? அதுதான் கல்லாயிற்றே! பிறர் வித்தையை ரசிக்கத் தெரிந்தால்தானே பிறர் மனசையும் புரிந்துகொள்ளத் தெரியும்! அப்படி எல்லாம் உயர்ந்த குணம் இருந்தால் நேற்றைக்கு ஆட்டத்துக்கு வந்திருக்காதா? — சேச்சே, கடவுள் அழகைக் கொடுத்தார், வித்தையைக் கொடுத்தார், ஆனால் அவருக்கு அன்பைக் கொடுக்க மறந்துவிட்டாரே!' என்று நினைத்தாள்.

காலையில் தான் பட்ட கஷ்டம் ஞாபகத்திற்கு வந்தது. 'ராத்திரி அந்தத் திருடன் கத்தியை எடுத்து நீட்டினானே, கத்தியால் குத்தியிருந்தால் இப்போது இவரை நான் பார்க்க முடியுமா? பாழும் வீட்டில் அடைத்து வைத்தானே, அங்கேயே கிடந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? இவ்வளவு கஷ்டப்பட்டு வந்திருக்கிறேனே, வாயைத் திறந்து ஒரு ஆறுதல் வார்த்தை சொல்லக் கூடாதா! இவரைத் தவிர வேறு யார் எனக்கு இருக்கிறார்கள்? நேற்றைக்குச் சண்டையில் ஏதேதோ பேசினேன். உண்மைதான். அதன் பின்தான் சரணாகதி அடைந்துவிட்டேனே! ஏன் அப்படி உட்கார்ந்திருக்கிறார்? ஏதாவது பேசக்கூடாதா? வாயைத் திறந்து வைதாலும் போதும்' என்று அவன் முகத்தைப் பார்த்தாள். ஒரு மழைத்துளிக்காகத் தவங்கிடக்கும் முத்துச் சிப்பியைப்போல், அவனுடைய ஒரு பேச்சுக்காக அவள் ஏங்கிக் காத்திருந்தாள்.

எதிரில் அமர்ந்திருக்கும் இன்ப வடிவத்தைத் தன் கண்களால் மறுமுறையும் நோக்கினாள். அவன் ஜவ்வாதுப் பொட்டும், மைதீர் கடுக்கனும், புன்முறுவல் பூத்த முகமும், அவன் சாய்ந்திருந்த ஒய்யாரமும் அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. மெல்லத் தன் தாய் முகத்தையும் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டாள்.

வடிவாம்பாள் முகத்தில் கோபம் குடிகொண்டிருப்பதைக் கண்டாள். உடனே ஜன்னல் வழியே முகத்தை வெளியில் நீட்டிக்கொண்டு வேடிக்கை பார்ப்பதுபோல் பார்க்கத் தொடங்கினாள்.

என்ஜின் "குப், குப்" என்று வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. ஒவ்வொரு "குப்"புக்கும் ஒரு கார்த்திகைப் பொறி வாணம் வெளிவந்து கொண்டிருந்தது. இருட்டில், அந்தப் பொறிகள் நீளம் நீளமாகப் பறப்பதே ஒரு அழகாய் இருந்தது. இந்த அழகை மோகனா பார்க்கும் போது அந்தப் பொறிகளுள் ஒன்று அவன் அழகைப் பார்க்க ஆசைப்பட்டதுபோல் வெகு வேகமாக ஓடிவந்து, அவன்

கண்ணுக்குள் புகுந்துகொண்டது. "அம்மா !" என்று உள்ளே திரும்பினாள் மோகனா. எதிரில் அவன் உட்கார்ந்திருக்கிறானே என்ற வெட்கத்தில் அவளால் சத்தம்போட முடியவில்லை. கண்களைக் கசக்கவும் முடியவில்லை. திண்டாடித் திணறினாள். தன் மகளின் கண்கள் சிவந்திருப்பதையும், அவள் சொல்ல முடியாமல் திணறுவதையும் கண்டாள் வடிவாம்பாள்.

"என்னடி, அம்மா ! கண்ணிலே என்ன?" என்று அருகில் வந்தாள். மோகனா தன் இரு கை விரலாலும் இமைகளை நீக்கிக் காட்டினாள். வடிவாம்பாள் அந்த விழிகளில் பார்த்தாள். பாவம், அவளுக்கு வெள்ளெழுத்து ஆரம்பம்; ஒன்றும் தெரியவில்லை.

இம்மாதிரி ஒரு சந்தர்ப்பம் வராதா? எப்படியாவது அவளுடைய அருகில் வந்து, அவளுடன் பேச்சுக்கொடுத்து, அவளுடன் உறவாட ஒரு வாய்ப்புக் கிடைக்காதா என்று காத்திருந்தான் சண்முகசுந்தரம். இப்போது அவளுடைய கண்ணில் கரித்தூள் விழுந்ததைக் கண்டதும் அவளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று ஆவலுடன் ஓடி வந்தான். அவள் முகத்துக்கு நேரே தன் முகத்தை வைத்துக்கொண்டு, அவள் கண்ணில் தன் வாயால் ஊதினான். மோகனாவுக்கு அவன் இதயத்தில் இருக்கும் ஆசைக்கனலை அவன் ஊதுவதுபோல் தோன்றியது.

கண்ணில் ஒரு கரித்துண்டு விழுந்திருப்பதைக் கண்டான், சண்முகசுந்தரம். அவசரம் அவசரமாகத் தன் அங்கவஸ்திரத்தைப் பந்து போல் சுருட்டி, அதில் வாயால் ஊதி அவள் கண்ணில் ஒற்றத் தொடங்கினான். மோகனா மெய் மறந்தாள். அவன் இதயப் புண்ணில் ஒத்தடம் கொடுப்பதுபோல் இருந்தது. அவன் துண்டில் இருந்த வாசனையில் அவள் உடம்பு புல்லரித்தது.

சண்முகம் கரியை எடுத்துவிட்டான். "இந்தா பாத்திங்களா?" என்று ஒரு கடுகு போலிருந்த கரித்துண்டைக் காட்டினான்.

"இத்துனூண்டு இருந்துக்கிட்டு எவ்வளவு பாடு படுத்திவிட்டது" என்றாள் வடிவாம்பாள்.

ஆனால் மோகனாவுக்கு மாத்திரம், 'ஐயோ' வலக்கண்ணில் விழுந்த கரி இடக்கண்ணிலும் விழுந்திருக்கக்கூடாதா? அவர் அப்படியே பக்கத்தில் நின்று ஊதிக்கொண்டேயிருக்க மாட்டாரா? தன் ஆசையைக் கவர்ந்த அந்த சுந்தர ரூபம் தன் அருகிலேயே நின்று இரவு முழுவதும் உதவி செய்யக் கூடாதா?... இந்தப் பாழும் கரித்துண்டு இவ்வளவு சீக்கிரம் வெளியில் வந்து மோசம் செய்துவிட்டதே !' என்ற எண்ணம் ஏற்பட்டது.

சமயத்தை நழுவ விடாமல் சண்முகம் பேச ஆரம்பித்தான்: "இந்த ரயில் கரி இருக்குதே, இதை உடனே எடுத்துடணும். இல்லேன்னா நாலு நாளைக்கு விடாம கண்ணை உறுத்தும்" என்று சொல்லிப் பதிலுக்காக மோகனாவின் முகத்தைப் பார்த்தான். மோகனாவோ தாயின் முகத்தைப் பார்த்தாள்.



சண்முகசுந்தரம் மேலும் பேசத் தொடங்கினான்: "காலம்பர ரயில்லே உங்க பேரு போட்ட சீட்டு ஒட்டியிருந்துதே, நீங்க அதிலே போகலியாக்கும்?" என்றான்.

"என்ன செய்யறது ! உட்கார இடம் கேட்டு அவங்களைத் தூங்க விடாமல் தொந்தரவு கொடுக்கணும்னு இருக்கே!" என்றாள் மோகனா.

வடிவாம்பாளோ, "இந்தக் கச்சேரிக்கு வந்த நேரம் புள்ளைக்கு கிரகமே நல்லாயில்லை. எச்சும், பேச்சும், கள்ளனும் களவாணியும் ஒரே தொந்தரவா போச்சு" என்று சலித்துக்கொண்டே சண்முகசுந்தரத்தை வெறுப்போடு பார்த்தாள்.

சண்முகசுந்தரம் தன்னைத்தான் சுட்டிக் கூறுகிறாள் என்று அறிந்தான். இருந்தாலும், "அடே ! கள்ளன் வேறே வந்துவிட்டானா? என்ன, ஏதாவது திருடு போச்சா?" என்று கேட்டான்.

"அந்தத் திருடனாலே ஒண்ணும் ஆபத்தில்லே" என்று வடிவாம்பாள் அவன் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டாள்.

சண்முகத்துக்குச் சற்று நேரம் யோசனை ஓடவில்லை. எதையோ எண்ணினான். உடனே எழுந்தான். உயர ஒரு கூடையில் சுவாமி பிரசாதம் இருந்தது. அதிலிருந்து கொஞ்சம் விபூதி குங்குமத்தையும், இரண்டு மல்லிகைப் பூ மாலைகளையும் எடுத்தான்.

"மீனாட்சி அம்மன் கோயிலுக்குப் போயிருந்தேன். இந்தாங்க, பிரசாதம்" என்று வடிவாம்பாள் கையில் ஒரு தேங்காய் மூடியையும் புஷ்பத்தையும் கொடுத்துவிட்டு, மற்றொன்றை மோகனாவின் பக்கம் நீட்டினான். மோகனா அதைப் பெற்றுக்கொள்ளாமல் தயங்கினாள். அவன் காலில் விழுந்து நமஸ்கரித்துவிட்டு வாங்கிக்கொள்ள வேண்டும் போல் தோன்றியது.

இதை உணராத வடிவாம்பாள், "சும்மா வாங்கிக்க கண்ணு" என்று சொல்லிவிட்டு சண்முகசுந்தரத்திடம் "நான் சொல்லாமல் அது எதையும் வாங்கிக்காது" என்று பெருமை அடித்துக்கொண்டாள்.

மோகனா எழுந்து நின்று, ஆனந்தத்தால் தன் கரங்கள் நடுங்க பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டாள். விபூதியையும் குங்குமத்தையும் நெற்றியில் இட்டுக்கொண்டு அந்தப் புஷ்பத்தைச் சிறிது கிள்ளித் தலையில் வைத்துக்கொள்ளவே உணர்ச்சி வசப்பட்டாள். 'தாயே, நீ தான் என் ஆசையை நிறைவேற்றவேண்டும். அவர் கையால் முதலில் உன் பிரசாதத்தை வாங்குகிறேன்' என்று நினைத்தாள். அவளுடைய விழி ஓரத்தில் ஆனந்தக் கண்ணீர் துளிர்த்தது.

சண்முகசுந்தரம் அவளையே பார்த்தான். 'இந்த ரதியையா நேற்று அப்படிப் பேசிவிட்டோம் !' என்று கலங்கினான்.

மோகனா தன்னைச் சமாளித்துக்கொண்டு, அவனைப் பேச்சுக்கு இழுக்கவேண்டும் என்ற ஆசையில், "எம்மா, அப்படின்னா

கோயில்லேகூட வாசிச்சிருப்பாங்க?" என்று தன் தாயாரைப் பார்த்துக் கேட்டான்.

"ஆமா, மனசு என்னமோ போல இருந்திச்சு. போய்க் கொஞ்ச நேரம் வாசிச்சேன்."

"'நான் வாசிச்சுட்டுப் போற மட்டும் சாமிக்கு யாரும் தேங்காய் உடைக்கப்படாதுன்னு முதலிலேயே சொல்லியிருப்பாரு."

அவளுடைய கிண்டலைப் புரிந்துகொண்டான் சண்முகம். "இதுக்காகக் காதிலே கொண்டாந்து அதிர்வேட்டைப் போட்டா வாசிப்பாங்களா? அப்படியாவது பணம் சம்பாதிக்காட்டி என்ன?" என்றான்.

"போங்க, தம்பி! நீங்க எவ்வளவுதான் வாசிச்சாலும் இந்தக் கோவம் உங்களுக்கு ஆகாது!" என்றாள் வடிவாம்பாள்.

"அது கோவமில்லே, அத்தே! வித்தையிலே பூந்துட்டா நமக்கு நம்மளையே தெரியறதில்லே."

சண்முகசுந்தரம் தன் வாயால் தன் தாயாரை 'அத்தை' என்று அழைத்ததும் மோகனா 'களுக்'கென்று சிரித்துவிட்டாள். இதைச் சண்முகசுந்தரம் அறிந்தான்; வடிவாம்பாள் உணரவில்லை.

"அப்படியா வித்தையிலே கண்ணு தலை தெரியாமல் போயிடும்? நான் நம்பல்லே, தம்பி!" என்றாள் வடிவாம்பாள்.

"ஏன், நேத்து உங்க மகள் ஆடிச்சே, கண்ணு தெரிஞ்சா ஆடிச்சு? பம்பரமாட்டம் அது ஆடின வேகத்திலே அந்தப் பரதேசியார் 'முருகா முருகா' என்று கூவிக்கிட்டேயிருந்தாரே" என்றான் சண்முகம்.

இப்படிச் சண்முகசுந்தரம் சொல்லி வரும்போது மோகனாவின் உள்ளம் குளிர்ந்தது. தன் ஆட்டத்தை அவன் பார்த்தான் என்ற சந்தோஷத்தில் அவள் பூரித்தாள். களிப்பின் மிகுதியில் வார்த்தைகள் துள்ளிக்கொண்டு வந்தன.

"ஏம்மா, அப்படின்னா இவரு ஆட்டத்தைப் பாத்துட்டுப் போறாரோ? இல்லை, யாராவது சொன்னதைக் கேட்டுவிட்டுக் கதை அளக்கிறாரோ?" என்றாள்.

"இதிலே கதை என்ன? கொஞ்சம் காத்து வாங்கலாம்னு வந்தேன். நீ ஆடிக்கிட்டிருந்தே. ஒரு ஓரமா நின்னுக்கிட்டுப் பார்த்தேன்."

"ஏன், எதிர்த்தாப்பலே வர வெக்கம் போலிருக்கு!"

"எனக்கென்ன வெட்கம்? நான் என்ன பொம்புளையா?"

"கலையிலே ஆம்பளை பொம்பளை வித்தியாசம் இருக்கா? தில்லானா ஊதப் பயந்துக்கிட்டு எதிர்த்தாப்பலே வராமல் ஒளிஞ்சுக்கிட்டுப் பாத்திருக்காரு."

"தில்லானா ஊதப் பயமென்ன? இப்ப ஊதறேன், ஆடுறியா?"

"திருவாரூர் நாயனத்தை இல்லே எடுத்து ஊதணும்?"



"அங்கே வந்து ஊதி உன்னை ஆட விடாமலா போகப் போறேன்?"

பேச்சுத் தடித்துவிட்டது. இதை உணர்ந்த வடிவாம்பாள், "சரி, சரி! அதெல்லாம் அப்புறம் பாத்துக்குவம். இப்ப தூங்குங்க" என்றாள்.

"இல்லே அம்மா, வெட்கம் கெட்டம்னா! பொம்பளை கிம்பளைன்னு பேசினா?"

"இல்லே, அந்தை சும்மா. திருவாரூர் திருவாரூர்னு சொன்னா? இவ நல்லா ஆடுறவளா இருக்கலாம். அதுக்காக?"

சடக்கென்று விளக்கை அணைத்தாள் வடிவாம்பாள். "சரி, சரி, தூங்குங்க!" என்று தன் மகள் அருகில் வந்து படுத்தாள்.

பெட்டியில் இருள் சூழ்ந்தது. வடிவாம்பாளை உறக்கம் சூழ்ந்தது. ஆனால், காதல் என்னும் அழியாத ஒளிபடைத்த இரு உள்ளங்களையும் அந்த இருள் என்ன செய்யும்? இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். இரண்டு உள்ளங்களிலும் ஆசை முகங்கள் தோன்றின. அந்தரங்கம் பேசின. கண்ணை மூடிக் கொண்டாலும், கண்ணுக்குள்ளே நிறைந்திருக்கும் சண்முகத்தைக் கண்டு ரசித்தாள் மோகனா. தன் கருத்தில் புகுந்து எட்டாவது ஸ்வரமாக இன்னிசை பரப்பும் மோகனாவை ரசித்தான் சண்முகம். தங்களுக்கு இடையே இருக்கும் வடிவாம்பாளையும், தங்கள் வாய்த் துடுக்கையும் நொந்துகொண்டனர். இருவரும் ஏக்கத்தில் விட்ட பெருமூச்சு அடிக்கடி கேட்டது. இரண்டு உள்ளங்களும் பொருமின. ஒருவரை ஒருவர் நினைத்தபடி உறங்கினார்கள்.

விடியற்காலையில் திட்டையில் கண்விழித்துப் பார்த்தாள், மோகனாம்பாள். எதிரில் உள்ள ஆசனம் காலியாயிருந்தது. சண்முகசுந்தரம் தஞ்சாவூரிலேயே இறங்கிப் போய்விட்டதை அறிந்தாள். அவளை அறியாமலேயே ஒரு பெருமூச்சு வந்தது.

பதினாறாவது அத்தியாயம்



## பூதம் காப்பாற்றியது!

ரயில் மோகனாம்பாளை ஏற்றிக் கொண்டு போவதைப் பார்த்துக்கொண்டே நின்ற நாகலிங்கத்துக்கு, அவள் மதுரையை விட்டுப் போனாலும் தன் மனத்தைவிட்டுப் போகவில்லை என்ற சந்தோஷம் மாத்திரம் தான் கிடைத்தது. ஆனால், ஹெட்கான்ஸ்டபிள் நாயுடுவுக்கோ இன்று மதுரைக்கு வந்ததில் ஒரு கேஸ் கிடைத்தது. தம்பிடம்

புகார் செய்ய வந்த பரமானந்தப் பரதேசி இப்போது ஒரு பெண்ணை வழி அனுப்புவதைக் கண்ட மாத்திரத்திலேயே அவருக்கு நடந்த விஷயங்கள் எல்லாம் விளங்கிவிட்டன. இனி நாகலிங்கத்தின் மூக்குக்கயிறு தம்மிடம் இருக்கிறது என்று நிச்சயம் செய்துவிட்டார். பரதேசியை விசாரித்தால் எல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனியாகி விடும் என்று எண்ணி அவர் திரும்பியபோது பரதேசியைக் காணவில்லை!

தாம் அழகர்கோவிலை விட்டுப் போவதற்குள் இந்த நாகலிங்கத்தை ஒரு மடக்கு மடக்கிவிடவேண்டும்; நன்னடத்தைக்கு ஜாமீனாவது வாங்கிவிடவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு எப்போதுமே உண்டு. அதற்கு அனுகூலமாக இப்போது ஒரு சமயம் வாய்க்கவே அந்தக் கேசை ஜோடிப்பதற்கு வேண்டிய ஆதாரங்களைத் தேடத் தொடங்கினார்.

ஆனால் அன்று காலையில் நாகலிங்கத்தின் வீட்டுக்கு முன் நடந்த சம்பவம் ஒன்றைப் பாதி கவனித்தவர், முழுவதையும் கவனித்திருந்தால் அவர் தேடிய ஆதாரங்கள் அவருக்குக் கைமேல் கிடைத்திருக்கும். அதாவது, தீயை அணைக்கும்போது ஒரு பூதம் ஓடி வந்ததல்லவா? அந்தப் பூதம் அவருக்கு அவ்வளவு ரகஸ்யத்தையும் சொல்லியிருக்கும். ஏனென்றால், அந்தப் பூதத்துக்குள் இருந்தது வேறு யாரும் அல்ல, ரமாமணியேதான்.

நாகலிங்கம் தன்னைக் கீழே தள்ளிவிட்டு அறையைப் பூட்டிக் கொண்டு போனதும், அலமாரிமேல் ஏறித் தப்ப முயன்ற ரமாமணி கீழே விழுந்து நெடுநேரம் தன்னை மறந்து கிடந்தாள். ஆனால் மோகனாவை மாத்திரம் அவளால் மறக்க இயலவில்லை. நாகலிங்கம் கையில் உயிர் விடுவதைக்காட்டிலும் மோகனாவைக் காப்பாற்றும் நல்ல முயற்சியில் உயிர் போனாலும் சரியென்று அவளுக்குத் தோன்றியது. கடைசியில் தள்ளாடிக்கொண்டே எழுந்தாள். எப்படித் தப்புவது என்று யோசித்தாள்.

ஊரார் அந்த வீட்டுக்குள் நுழையும்படி எப்படி கவனத்தைத் திருப்பிவிடலாம் என்று யோசித்தாள். அப்போது நாகலிங்கத்தின் கெட்ட காலத்திற்கேற்றாற்போல் அவன் கையாலேயே அலமாரியிலிருந்து எடுத்தெறிந்த தீப்பெட்டி அவள் கண்ணில் பட்டது. உடனே அங்கு கிடந்த நாலைந்து துணிகளைச் சுருட்டிக்கொண்டு போய், அறையின் ஒரு ஓரத்தில் வைத்து அவைகளில் நெருப்பு வைத்துவிட்டாள். அவள் தந்திரம் பலித்தது. வீதியில் குபுகுபு என்று புகை வந்தது.

வீதியில் போன ஒருவர் உள்ளே ஓடி, சமையல் ஆளிடம் கூடத்து அறையிலிருந்து புகை வருவதைச் சொன்னார். இதற்குள் ரமாமணி துணியில் வைத்த தீ கட்டுக்கடங்காமல் கூரையில் பிடித்துவிட்டது. ரமாமணி உள்ளே சிக்கிவிட்டாள். 'இனி இறந்தோம்' என்றுதான்



நினைத்தாள். அந்தச் சமயம் வாசற்கதவுப் பூட்டை உடைக்கும் சத்தம் கேட்டது. கதவு மறைவில் பதுங்கினாள். கதவு திறக்கப்பட்டது. ஆள்கள் இருவர் நெருப்பு இருக்கும் இடத்தை நோக்கி ஓடினார்கள்.

ரமாமணி வெளியே கோவிலை நோக்கி ஓடினாள். அங்கு நாகலிங்கத்தின் வீட்டு இன்னொரு வேலைக்காரன் நின்றுகொண்டிருக்கவே, வேறு வழியின்றி அங்கிருந்த ஒரு பூத பொம்மைக்குள் புகுந்து மறைந்துகொண்டாள்.

இதற்குள் காலை விழா சுவாமி கோவிலுக்குள்ளிருந்து புறப்பட்டு வந்துவிட்டது. கூட்டமும் கூடிவிட்டது. கோவில் மணியக்காரர், "ஏ, பூதம்! புறப்படுங்கடா! புறப்படுங்கடா!" என்று அதட்டினார். அப்போது இருந்த நிலையில் என்ன செய்வது என்று தோன்றாமல் ரமாமணி பூதத்தைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டுவிட்டாள். எப்போதும் ஆடும் பையனுக்குத் தன் வேலையை வேறு யாரோ பார்ப்பதில் சந்தோஷம். ரமாமணிக்கோ மறைய நல்ல இடம் கிடைத்தது என்று சந்தோஷம்.

நாகலிங்கத்தின் வீட்டு வாசலில் அவள் கண்ட காட்சி அவளையே திடுக்கிட வைத்தது. தான் வைத்த சிறு நெருப்பு இவ்வளவு பெரிதாகிவிட்டதே என்று நினைத்தாள். இந்தச் சமயம் ஹெட்கான்ஸ்டபிள் நாயுடு அங்கு நிற்பதைப் பார்த்ததும், மோகனாவுக்கு வந்த ஆபத்தை அவரிடம் சொல்லவேண்டுமென்று தூண்டியது அவள் மனம். அவர் அருகில் வந்தாள். ஆனால் அதே சமயத்தில்தான் எட்டு, "டே பூதம், தண்ணி எடுத்து ஊத்துடா" என்று அதட்டினார். உடனே ரமாமணிக்குப் பயம் வந்துவிட்டது. பூதத்தை யாராவது கழற்றி எறிந்துவிட்டால் தன் குட்டு வெளியாகிவிடும்; நாகலிங்கத்திடம் இப்போது அகப்பட்டால் தான் வைத்த தீயிலேயே அவன் தன்னைத் தூக்கி எறிந்தாலும் எறிந்துவிடுவான் என்று தோன்றியது. அங்கிருந்து ஓட்டமாய் ஓடிவிட்டாள்.

பதினேழாவது அத்தியாயம்



## "ஆடரவக் கிண்கிணியான் ஆடும் திரு ஆரூர்"

சோழ மண்டலம் என்று சொன்னாலே பசி தீரும் என்பார்கள். அந்தப் பெருமைக்குக் காரணமாகிய அன்னை காவிரியே உனக்கு ஆயிரம் நமஸ்காரம். நீ இறைவன் கருணையைப் போன்றவள். நல்லார் பொல்லார் என்று பாராமல் எல்லோருக்கும்

நல்லருள் செய்பவள். கஞ்சிக் கவலையை நீக்கிக் கலைகளை உண்டாக்கியவள். உன் கரையில்தான் கம்பன் பிறந்தான்; கன்னித் தமிழுக்குக் காவியம் தந்தான். உன் கரையிலே மறைகள் வளர்ந்தன. கோபுரங்கள் எழுந்தன. மணிகள் ஒலித்தன. மன்னுயிர் பிழைத்தன. இன்றைய சோழ நாட்டின் பெருமைக்கு நீயே காரணமாவாய். அதனால் உன்னை மறுமுறையும் வணங்குகின்றேன்.

சோழ மன்னர்களே, உமக்கு ஆயிரம் நமஸ்காரம். "சோழ வளநாடு சோறு தரும் நாடு, ஈழம் மலையாளம் ஏதுமில்லை ஈடு" என்றாக்கி வைத்தீர்கள். திருக்கோயில் கண்டீர்கள். கல்லெல்லாம் கவி பாட வைத்தீர்கள். சொல்லெல்லாம் சுவை சொட்ட வைத்தீர்கள். கங்கையைக் கொண்டீர். கடாரத்தை வென்றீர். மங்காத தமிழ்நாட்டு மாண்பை வளர்த்தீர். ஒவ்வொரு ஆறும் உங்கள் பெயர் சொல்லி ஓடுகின்றன. ஒவ்வொரு ஊரும் உங்கள் பெயர் சொல்லிப் பாடுகின்றன. கலையை வளர்த்தீர்கள். கல்வியை வளர்த்தீர்கள். சிலையை அமைத்தீர்கள். சிந்தையை நிறைத்தீர்கள். இன்றையச் சோழநாட்டு மக்களை அறிஞர் என்று உலகம் சொல்வதற்கு நீங்களன்றோ காரணம்! உங்களை மறுமுறையும் வணங்குகின்றேன்.

ஆரூரே ! அபயம் அடைகின்றேன். நீ தொன்மையானவன். பல பெரியோர்களின் தோத்திரம் பெற்றவன். உன்னை நினைக்கும்போது உள்ளம் உருகுகின்றது. உன் கருணையில் கண்ணீர் மல்குகிறது. உன் கலை வளத்தை நினைத்தால் காலடியில் விழத் தோன்றுகிறது. நான் தமிழை வணங்குபவன். உன்னையோ தமிழ் வணங்குகிறது. நான் இசையை வழிபடுபவன். உன் வாசலில் இசை வழிபட்டு நிற்கிறது. நான் ஆடலைப் போற்றுபவன். உன்னகத்தே என்னிறைவன் வீதிவிடங்கப்பெருமான், ஆடரவக் கிண்கிணி பூண்டு ஆடுகின்றான். ஆகவே, உன் திருவீதி மண்ணிலே என் தலையை வைத்து வணங்குகிறேன் —

அதோ சுந்தரர் நடக்கின்றார். நாவுக்கரசர் பெருமான் தன் திருவடியைத் தரையில் வைக்க அஞ்சி நடக்கிறார். சம்பந்தர் சிறு பாதம் உன் புழுதியில் படுகிறது. ஏயர்கோன் கலிக்காமரும், சேரமான் பெருமாளும் திருச்சேவை செய்ய ஓடி வருகின்றார்கள். தியாகையர் கீர்த்தனை இசைத்து பஜனை கோஷ்டியுடன் திருவீதி வலம் வருகிறார். தீக்ஷிதர் வீணையும் கையுமாய் உன் வாசல் வருகின்றார். சாமா சாஸ்திரி பராசக்தியின் சந்நிதிக்கு விரைகின்றார். எந்தையே ! இதோ நீரே புறப்பட்டீர், கண்டான வேடந்தாங்கி.

இத்தனை திருப்பாதங்கள் மிதித்த மண்ணிலா நான் கிடக்கிறேன் ! இவர்கள் எல்லோருடைய திருவடித் தூசியுமா என்மீது படுகின்றது ! என்ன புண்ணியம் செய்தேன் என்று மனமுருகிய நிலையிலே நாம் திருவாரூரைப்பற்றி எழுதுகிறோம்.



இந்த ஊர் ஒரு ராஜதானி நகரம். மற்ற ஊர்களிலெல்லாம் சிங்கக் கொடியும், கருடக் கொடியும், யானைக் கொடியும், பருந்துக் கொடியும் பறக்கலாம். ஆனால் இந்த ஆரூரில் பறப்பதோ வெறும் வீரக்கொடி அல்ல; வீரத்தின் சிகரமான தியாகக் கொடி.

இந்த ஊரை ஆண்டுவரும் ராஜாவின் பெயர் தியாகராஜா. இவர் பல மொழி அறிந்தவர். ஆடல் பாடல் முதலியவைகளில் அதிகப் பற்றுடையவர்; அதிலும் ஆஸ்தான வித்வான்களை அன்புடன் ஆதரிப்பவர்.

அரசர்கள் வருவார்கள்; போவார்கள். ஆனால் இந்த அரசனோ என்றும் இருக்கும் இறைவன். ஆஸ்தானக் கவிஞனோ 'என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை பாடிய' சுந்தரமூர்த்தி நாயனார். அவரை எப்பொழுதும் மாப்பிள்ளைக் கோலத்திலேயே வைத்து அலங்கார புருஷனாக இன்றும் இருக்கச் செய்திருக்கிறார் தியாகராஜா.

நாட்டில் எத்தனையோ க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. ஒன்றிலே கோவில் அழகாக இருக்கும்; ஒன்றிலோ குளம் அழகாக இருக்கும்; மற்றொன்றிலோ தேர் அழகாக இருக்கும்; இன்னொன்றோ ஊர் அழகாக இருக்கும். ஆனால் இந்தத் திருவாரூரைப் போல எல்லா அழகும் பொருந்திய க்ஷேத்திரங்கள் இந்தத் தமிழ்நாட்டிலே இல்லையென்று சொல்லிவிடலாம். கோவில் ஐந்து வேலி, குளம் ஐந்து வேலி, செங்கழுநீர் வாவி ஐந்து வேலி. அத்தனை தேர்களிலும் உயர்ந்தது திருவாரூர் தேர்.

கலை வளர்த்த சோழ மன்னர்களின் தலையில் முடி தரிக்கும் ஐந்து பெரிய நகரங்களுள் முக்கியமானது திருவாரூர்; தேவாரத்திருமுறை கண்ட சோழ மன்னரால் புதுப்பிக்கப்பட்ட பல திருப்பணிகள் நிறைந்தது திருவாரூர்; 'தன் கன்றைக் கொன்றான்' என்று முறையிட்ட ஒரு பசுவுக்காகத் தன் மகன்மேல் தேரை ஓட்டித் தமிழனின் நீதி நெறியை உலகறியச் செய்த மனுநீதிச் சோழன் ஆண்ட ஊர் திருவாரூர்.

தமிழரின் நீதி, தமிழரின் கலை, தமிழரின் சிற்பத் தொழில்; தமிழரின் சங்கீதம், தமிழரின் பக்தி, தமிழரின் தாய்மொழிப் பற்று எல்லாவற்றையும் ஒருங்கே அடக்கிக்கொண்டு, ஊரெங்கும் பன்னீர் மணக்க, சந்தனம் மணக்க, இன்றைக்கும் கலை மணக்கும் பெருங்கோவிலாக விளங்குகிறது திருவாரூர்.

திருவாரூரிலே மாணிக்க நாச்சியார் என்று ஒரு பெண் இருந்து வந்தாள். அவள் கணிகையர் மரபில் வந்தவள்.

"என்கொங்கை நின்அன்பர்
அல்லார்தோள் சேரற்க"

என்று திருவெம்பாவையில் கூறியுள்ளது போல அந்தக் கணிகை வாழ்ந்து வந்தனள்.

ஒரு நாள் கோயிலில் அர்த்த ஜாம பூஜை நடக்கும்போது, அவள் ஆகமத் தொண்டுகள் செய்துகொண்டிருந்தாள். அங்கு கூடியிருந்த பெண்களுக்கும் அவளுக்கும் ஒரு வாக்குவாதம் ஏற்பட்டது. "அடியே, நீ கணிகைதானே?" என்றாள் ஒருத்தி. "கணிகைக்கும் கற்பு உண்டு" என்று சொன்னாள் மாணிக்கம். அதைக் கேட்டு, இருந்தவர்கள் நகைத்தனர். மாணிக்கத்துக்கு மனம் புண்ணாகியது. "தியாகராஜப் பெருமானே, ஏன் இந்த அவமானம் எனக்கு?" என்று விசும்பிக் கொண்டே வீடு சென்றாள்.

அன்று இரவில் ஒரு அற்புதம் நிகழ்ந்தது. சிவனடியார் ஒருவர் மாணிக்கத்தின் வீடு தேடி வந்தார். அழகான உருத்திராக்ஷ மாலைகளும், நெற்றியில் திருநீறும் துலங்க பிக்ஷாடனக் கோலத்தில் எழுந்தருளிய சிவபெருமான்போல அவர் விளங்கினார். மாணிக்கத்தை விரும்பினார். மாணிக்கமும் ஏற்றுக்கொண்டாள். தன்னுடைய தங்கம் கட்டிய உருத்திராக்ஷ மாலையை அவளுக்குப் பரிசாகக் கொடுத்தார்.

இரவு பதினைந்து நாழிகைக்கு அந்தச் சிவயோகியார் திடீரென இறந்துவிட்டார். மாணிக்கம் அலறினாள்; அவருடைய மலரடிகளைப் பிடித்துக்கொண்டு கதறினாள்; அவளுடைய அழுகைச் சத்தம் ஊர் முழுவதும் கேட்டது. அவளைக் கேலி செய்த பெண்களும், மற்றவர்களும் ஓடோடி வந்தார்கள். "என்ன விஷயம்!" என்று கேட்டார்கள். "என் கணவர் இறந்துவிட்டார்" என்று மாணிக்கம் அலறவே, அப்பொழுதும் அவர்கள் நகைத்தார்கள். "ஏனடி, பித்தம் பிடித்தவள்போல் பேசுகிறாய்?" என்று சொல்லிச் சிரித்தார்கள். மாணிக்கத்தின் செவியில் இந்தச் சொற்கள் ஏறவில்லை. "இப்பொழுதே அவருடைய தகனத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்; அவரோடுகூட நான் உடன்கட்டை ஏறுவதற்கும் ஏற்பாடு செய்யுங்கள்" என்றாள்.

ஓடம் போக்கி ஆற்றில் மூழ்கினாள்; மஞ்சள் ஆடை உடுத்தாள்; தலை நிறைய மல்லிகைப் பூவைச் சூட்டினாள்; அவரோடுகூட எரிகின்ற நெருப்பில் ஏறி அமர்ந்தாள்; உடனிருந்த ஊரார் பிரமித்தனர். நகைத்தவர்கள் நமஸ்கரித்தனர்; கேலி செய்தவர்கள் அவள் காலை வணங்கினர்.

அப்போது வான வீதியிலே சிவபெருமான் ரிஷப வாகனத்தில் அமர்ந்து காட்சி அளித்தார்.

"உனது நெறியை உலகுக்கு எடுத்துக் காட்ட நாமே சிவனடியாராய் வந்தோம்!" என்று திருவாய் மலர்ந்தருளினார். மாணிக்க நாச்சியாரின் ஆவி வானை நோக்கிச் சென்றது. சிவபெருமான் திருமேனியில் இரண்டறக் கலந்தது. இன்றைக்கும் திருவாரூரில் ஆழித்தேர் புறப்பட வடம் பிடிக்குமுன் முதல் அர்ச்சனை மாணிக்க நாச்சியாரின் அர்ச்சனைதான்.



அத்தகைய பதியிலார் மரபில் வந்தவள்தான் நமது வடிவாம்பாள்.

தொன்றுதொட்டு ஆடல் பாடல்களிலே அரும் பணி புரிந்த குடும்பங்களில் வடிவாம்பாள் குடும்பமும் ஒன்று. வடிவாம்பாளுடைய மூதாதையருள் ஒருவரான ஞானவடிவு அம்மாள் பதம் பாடுவதையும் கர்ணாம்ருத சுலோகங்கள் பாடுவதையும் இன்றும் கலா ரசிகர்கள் சொல்லிச் சொல்லிப் புகழ்வார்கள். ஞானவடிவு அம்மாள், ஆட்டமும் பாட்டும் ஒருங்கே கலந்து ஒரு வடிவம் எடுத்ததுபோல் ஞான வடிவமாகவே திகழ்ந்தாள். தியாகராஜப் பெருமானைத் தொழுவது, அவருக்குத் திருத்தொண்டு செய்வது ஆகிய இரண்டையுமே தன் வாழ்நாள் முழுவதும் செய்துகொண்டு வந்தாள். ஒரு சமயம், தஞ்சையை ஆண்ட மகாராஷ்டிர மன்னர்களுள் ஒருவர் அவளை அரண்மனையில் வந்து ஆடவேண்டும் என்று அழைத்தபோது, "ஆடும் தியாகர் முன் ஆடிய கால்களால், ஓடும் பணத்துக்காக உன்முன் நின்று ஆடுவேனோ? பாடும் திருவாயால், பாமரனையே பாடிடுவேன்" என்று அரசனுக்குப் பதில் சொல்லியவள் ஞானவடிவு அம்மாள்.

அவள் வழியில் வந்த நமது வடிவாம்பாளும் சிறு வயதில் சில காலம் நாட்டியம் ஆடி வந்தாள். மோகனா பிறந்த வேளை அவளுடைய ஆட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

சிறு வயது முதற்கொண்டே மோகனாவைக் கண்போல் போற்றி வளர்த்தாள். அவளுக்கு வீட்டிலேயே வாத்தியார் வைத்துத் தமிழும், வடமொழியும், தெலுங்கும் கற்றுக் கொடுத்தாள். பரத நாட்டியத்தில் சிறந்த பந்தணைநல்லூர் முத்துக்குமார நட்டுவனாரை, ஊரை விட்டுத் திருவாரூருக்கே வரும்படி சொல்லி, அவருடைய குடும்பத்திற்கு ஆகும் செலவையெல்லாம் கொடுத்து, தன் வீடு ஒன்றிலேயே அவரைக் குடிவைத்துத் தன் மகளுக்குப் பரத நாட்டியம் பயிலுவித்தாள்.

சின்னப் பருவத்திலேயே மோகனா தன்னை மறந்து ஆடத் தொடங்கினாள். அவளுடைய இளம் கால்களிலே லயம் இருப்பதைக் கண்டு லயித்தாள் தாய்; அவள் கைகளிலே நயம் இருப்பதைக் கண்டு வியந்தாள்; மோகனாவின் முகத்தில் இருந்த குறுகுறுப்பையும், சுட்டித் தனமாக அவள் விளையாடிய விளையாட்டுகளையும் கண்டு, தக்க வயதிலே தன் பெண் முன்னுக்கு வருவாள் என்பதை அறிந்தாள்.

அன்றுவரை பிறரைக் குற்றம் சொல்லி வந்த தன் வாயை அடக்கிக்கொண்டாள். எல்லோருக்கும் நல்லவளாக மாறினாள். தான் சாப்பிட்டாலும், சாப்பிடாவிட்டாலும் சங்கீதக்காரர்கள், நாட்டியக் காரர்களுக்கு எல்லாம் சன்மானங்களை அள்ளிக் கொடுத்தாள். தனக்கு இந்த உலகில் தன் குழந்தையே வளரும் செல்வம் என்று எண்ணி, தன் உயிரையே அவளிடத்தில் வைத்து, மோகனாவை அன்புடன் வளர்த்தாள் வடிவாம்பாள்.

ஊருக்கு வந்து இறங்கிய உடனே, வடிவாம்பாள் முதல் காரியமாக எல்லையம்மன் கோவிலுக்கு நான்கு சிதறு தேங்காய்களை உடைத்தாள். மலைபோல வந்த ஆபத்துகள் எல்லாம் நீங்கி உயிருடன் வீடு வந்து சேர்ந்ததை நினைத்தவுடன், அவளுக்கு நன்றியால் கண்கள் நிறைந்தன.

அன்று வெள்ளிக்கிழமையாதலால் மகளையும் கோயிலுக்கு அழைத்துப்போய் ஆண்டவனை வணங்க நினைத்தாள். "மோகனா! வா, அம்மா, சீக்கிரம்! கோவிலுக்குப் போவோம்" என்று பெண்ணை அழைத்தாள்.

மோகனாவுக்கும் அன்று கோவிலுக்குப் போய் வரவேண்டும் என்று மனம் துடித்தது. தன் மனத்தில் இருப்பதையெல்லாம் கமலாம்பிகையிடம் போய்ச் சொல்லி வேண்டிக்கொள்ள வேண்டும் என்று எண்ணினாள்.

தேங்காய், பழம், புஷ்பம் ஆகியவைகளை ஒரு தட்டில் ஏந்தி வேலைக்காரி அபரஞ்சி பின் தொடர, தாயும் மகளும் கோவிலுக்குப் புறப்பட்டார்கள்.

வடிவாம்பாளும் மோகனாவும் சுவாமியையும் அம்மனையும் தரிசனம் செய்துகொண்டு, கோவிலை வலம் வந்துகொண்டிருக்கும் போது, அங்கே ஒரு பாகவதர் கதா காலக்ஷேபம் செய்துகொண்டிருந்தார். அதுவும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரத்தைத்தான்.

"ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் ரொம்ப அழகாயிருப்பார். பரவை நாச்சியாரும் அப்படித்தான் ஆடல் பாடலில் வல்லவள். இருவர் மனமும் ஒன்றையொன்று விரும்பியது. இருவரும் ஒருவரைப் பார்த்தொருவர் காதல் கொண்டனர்.

'**காதல் கொண்டா——ஆ——ஆ..........ரே**
**கயிலாசல ஆலால சுந்தரர் கமலினி மீதிலே (காதல்)**

என்று மோகன ராகத்தில் பாடி ஸ்வரப் பிரஸ்தாரத்திலும் இறங்கி விட்டார் பாகவதர்.

மோகனாவுக்குத் தாங்கவில்லை. 'சுந்தரமூர்த்தி சுவாமியையும் பரவையாரையும் காதலிலே துடிக்க விட்டுவிட்டு, பாகவதர் இப்படி மோகன ராக வெள்ளத்தில் இறங்கிவிட்டாரே' என்று வருந்தினாள்.

இந்தச் சமயத்தில் மிருதங்கத்துக்குத் தனி ஆவர்த்தனம் விட்டு விடவே, 'இந்த மிருதங்கக்காரர் வேறு காதலைப் போட்டு இந்த அடி அடிக்கிறாரே!' என்றிருந்தது.

பாகவதர், "இந்த விதமாகத்தானே ஸ்ரீ தியாகராஜாவின் உத்தரவால் பரவை நாச்சியாருக்கும் சுந்தரமூர்த்திக்கும் திருமணம் நடந்தது" என்று கூறி முடித்தார்.

"தியாகராஜப் பெருமானே! என் சுந்தரமூர்த்திக்கு நீ ஒரு உத்தரவு போடக்கூடாதா?" என்று வேண்டினாள் மோகனா.



"இப்படி பரவையாருடன் வாழ்ந்து வரும் நாளில், சுந்தரமூர்த்தி நாயனார் சிவஸ்தலங்கள் தோறும் சென்று தேவாரம் பாடிக்கொண்டு செல்லுங்கால், திருப்புகலூர் போய்ச் சேர்ந்தார். நாவுக்கரசருக்கு முக்தி கொடுத்த அந்தத் தலத்திலே இறைவனை வணங்கிவிட்டு தனித்திருக்கும்போது அவருக்குப் பரவையாரின் நினைவு வந்தது.

"**பரவை யுறவை நினைந்து நினைந்து**
**பதறி நின்றனரே-சுந்தரர்**"

என்று பாகவதர் பாடினார்.

அதைக் கேட்டதும், 'ஆகா, சுந்தரர் அல்லவா காதலர்! திருப்புகலூருக்குப் போயும் காதலியை நினைக்கிறாரே! இந்தப் பாவி தஞ்சாவூரில் சொல்லாமல்கூட இறங்கிப் போய்விட்டாரே! அந்தக் காலத்தில் இருந்தவர்கள் எல்லாருமே நல்லவர்கள்தாம்' என்று எண்ணினாள் மோகனா.

வடிவாம்பாளுக்கோ கதை நடக்கும் இடமாதலால் தூக்கம் கண்ணை அசத்தியது.

அப்போது பாகவதர், "சுந்தரமூர்த்தி திருவொற்றியூர் சென்றார். அங்கே சங்கிலி நாச்சியார் என்னும் அழகிய மங்கையைக் கண்டார்" என்று சொன்னவுடனே மோகனா திடுக்கிட்டாள். நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"இப்படிச் சங்கிலி நாச்சியாரின் அங்க அழகில் மெய்மறந்த சுந்தரர், அவளிடத்தில் உன்னை மணம் புரிவேன் என்று சொல்ல, சங்கிலியாரோ 'உமக்காக ஒரு நங்கை திருவாரூரில் இருக்கிறாளே, அவளை என்ன செய்வீர்?' என்று கேட்க, அது கேட்ட சுந்தரமூர்த்தி 'உன்னைப் பிரியேன்' என்று சத்தியம் செய்து கொடுத்து அந்தச் சங்கிலியாரின் கையைப் பிடிக்க,

"**அந்தர துந்துபி எங்கும் முழங்க**
**சந்திரர் சூரியர் ஆசி வழங்க**
**சுந்தரமூர்த்தி திருமணம் செய்தார்**
**சுலக்னே சாவதானா**"

என்று பின்பாட்டுக்காரரும், பாகவதரும், மிருதங்கக்காரரும் சேர்ந்து விவாகத்தைச் சிறப்பாக நடத்தலானார்கள்.

மோகனாவின் கண்களில் நீர் வழிந்தது. அவளால் பேசக்கூட முடியவில்லை. 'இப்படியும் உலகில் ஆண் பிள்ளைகள் நடப்பார்களா?' என்று எண்ணினாள். இப்பொழுதே ஓடிப்போய் சண்முகத்தின் காலில் விழுந்து அவனைத் தன்னுடையவனாக ஆக்கிக் கொண்டுவிடத் துடித்தது அவள் மனம்.

ஏன், திருவாரூர்ப் பெண்ணைத் தவிக்க விடுவானேன்? திருவொற்றியூர் பெண்ணின் மேல் ஆசைப்படுவானேன்? தன்னுடைய

சண்முகசுந்தரமும் அப்படிச் செய்துவிடக் கூடாதே! என்று எண்ணிப் பயந்தாள்.

அப்போது பாகவதர், சுந்தரமூர்த்திக்காகப் பரவை நாச்சியாரிடம் "தொண்டர்நாதன் தூது நடந்தான்" என்று நாட்டை ராகத்தில் வெகு உற்சாகமாகப் பாடிக்கொண்டிருந்தார். அந்தப் பாட்டு அவளுடைய காதில் விழவில்லை.

அதற்குமேல் அவளுக்கு அங்கே இருக்கவே பிடிக்கவில்லை. அதே சமயத்தில், அதுவரையில் நித்திராகாரனுடன் போராடிக் களைத்துப் போன வடிவாம்பாள் தன்னுடைய தோல்வியை ஒப்புக்கொள்வதைப் போல் ஒரு பெருத்த கொட்டாவி விட்டாள். உடனே, "அம்மா, வீட்டுக்குப் போவோமா?" என்றாள் மோகனா. இதற்காகவே காத்துக் கொண்டிருந்த வடிவாம்பாளும், "சரி"யென்று சொல்லவே, இருவரும் கோவிலை விட்டு வெளியில் வந்தார்கள்.

தெருவில் வரும்போது யதேச்சையாக மோகனாவின் பக்கம் திரும்பிய வடிவாம்பாள் அவளுடைய கன்னத்தில் வழிந்திருந்த கண்ணீரைப் பார்த்துவிட்டாள். உடனே, "என்ன மோகனா, கண்ணிலே தண்ணி?" என்றாள்.

"இல்லேம்மா! பாகவதர் கதை நல்லாச் சொன்னாரு. ரொம்ப உருக்கமா இருந்தது!" என்று சொல்லிச் சமாளித்தாள் மோகனா.

"நானுந்தான் கேட்டேன். தூக்கந்தான் வந்தது. ரொம்ப உருக்கமா சொன்னாராமில்லே! நேத்து அவன் கண்ணிலே ஊதினபோதே தெரியும். இது கண்ணுக்கு ஆகாது என்று."

"யார் கண்ணுக்கு அம்மா?"

"எல்லார் கண்ணுக்குந்தான். இப்படித் துண்டை மடிச்சுக்கிட்டு தவட்டை வறுத்து ஒத்தடம் கொடுக்கறாப்பலே கண்ணுலே போட்டு அமுக்கினா? வா, வீட்டுக்கு! பாலும் விளக்கெண்ணையுமா குழைச்சுப் போடறேன்!"

மோகனாவுக்கு இருந்த வருத்தத்தில் அதைக் கேட்டதும் சிரிப்பே வந்துவிட்டது. 'அம்மா, உன் மருந்தில் இந்த நோய் தீராது' என்று எண்ணிக்கொண்டே வீட்டுக்கு நடந்தாள்.

வீட்டுக்கு வந்ததும் புஷ்பத்தையெல்லாம் எடுத்து வைத்துவிட்டுத் தேங்காய்மூடிகளை மாத்திரம் கையில் எடுத்துக்கொண்டு சமையலறைக்குள் நுழைந்தாள் வடிவாம்பாள்.

சண்முகத்தையே எண்ணி ஏங்கிக்கொண்டிருந்த மோகனா, ஆடைகளைக்கூட மாற்றிக்கொள்ளாமல் சோர்வுடன் படுக்கையின் மேல் போய்ச் சாய்ந்தாள். அப்போது வரதன் வெகு வேகமாக ஓடி வந்தான். அவன் கையில் ஒரு வெள்ளிக்கூஜா இருந்தது.

"ஏன் அம்மா, இது நம்ம கூஜாவா?" என்றான்.



மோகனா கூஜாவைப் பார்த்தாள். அது சண்முகத்தின் கூஜா என்று அறிந்தாள். ராத்திரி அவன் முகத்தில் தண்ணீரைக் கொட்டிக் கொண்டது ஞாபகம் வரவே, அவள் முகத்தில் லேசாகப் புன்னகை தவழ்ந்தது. கூஜாவைப் பார்த்ததில் சண்முகத்தைப் பார்த்தாற் போலவே தோன்றியது அவளுக்கு.

"என்னம்மா யோசிக்கிறீங்க? இது நம்முதில்லை. அந்த நாயனக் காருடையதுங்கறேன் நான். அபரஞ்சி நம்முதுங்கறா. நீங்க என்ன சொல்றீங்க?"

"அவருடையதுதான்!" என்றாள் மோகனா.

"அடி தகிங்கிணத்தோம்; அப்படிச் சொல்லுங்க! ஏன் இதை வைச்சுட்டு நம்முதை எடுத்துக்கிட்டுப் போயிட்டாரு?"

"அவர் எதிலேயும் அப்படித்தான்!" என்றாள் மோகனா.

"பல்லவி எடம் புரியல்லியே."

"உனக்கு என்னிக்குத்தான் புரிஞ்சுது போ!"

"இப்பத்தான் புரிஞ்சுது! சரிதான் சுருதி சேர்ந்திடுச்சு!" என்று சொல்லிக்கொண்டே வரதன் உள்ளே போனான்.

மோகனா அந்தக் கூஜாவையே பார்த்தபடி நின்றாள்.

"ஆமடா! கச்சேரி முடிஞ்சு மூணு நாளாகுது! உனக்கு இன்னிக்குத்தான் சுருதி சேர்ந்ததாக்கும்" என்று கேட்டுக்கொண்டே உள்ளேயிருந்து வந்தாள் வடிவாம்பாள். வரதன் கையிலிருந்த கூஜாவைப் பார்த்துவிட்டாள். "இது சிக்கலான் கூஜா இல்லே! நம்மது எங்கே?" என்றாள்.

"நடை மாறிட்டுதுங்க. நம்ம பொருள் அவர் கையிலே போயிட்டுது" என்றான் வரதன்.

"போகும் இல்லே? நாளைக்கே ஒரு காலணாக் கார்டு எழுதிப் போட்டுடு. எங்க கூஜாவைக் கொண்டாந்து குடுன்னு."

"ஆகட்டும்! தீர்மானமா எழுதிப் போட்டுடறேன்" என்று சொல்லிக்கொண்டே நகர்ந்தான் வரதன்.

"ஏய் வரதா! உன் தீர்மானம், மோகரா இதையெல்லாம் கார்டுலே எழுதிப் போட்டுடாதே! எழுதினா மரியாதையா எழுதணும்!" என்றாள் மோகனா.

"மரியாதை வேறேயா அவனுக்கு! வரதா! நீ ஒண்ணுமே எழுத வேண்டாம். வெள்ளிக் கூஜா வேணும்னா அவனா வந்து வாங்கிட்டுப் போறான்!" என்றாள் வடிவாம்பாள்.

"அம்மா, நீ சொல்றதுதான் அம்மா நியாயம்!" என்றாள் மோகனா.

# அன்பே உலகம் அதுவே இன்பம்



தஞ்சாவூர் ஜங்ஷன் வாசலில் உள்ள வண்டிப்பேட்டை அருகில் வந்தவுடன் "என்ன தருமண்ணே, கூஜாவை மாத்திட்டே?" என்றான் சண்முகசுந்தரம்.

"எனக்கு வந்த ஆச்சரியத்திலே, இந்த மட்டிலே ஆளு மாறாமல் இருந்ததே ! யாரு கண்ணுலே படப் படாதுன்னுட்டு நேத்து முழுக்க மதுரையெல்லாம் சுத்தினமோ, அவங்களே ரயிலிலே கூடவே வந்துட்டாங்க போலிருக்கே !" என்றான் தருமன்.

"என்னங்க ! கண்ணெல்லாம் சிவந்து இருக்குது ! ராவெல்லாம் தூக்கம் இல்லியா?" என்றான் முத்துராக்கு.

சண்முகத்துக்குக் கேலி புரியாமலில்லை. புரியாதவன்போல், "இல்லே ! ஸகிண்ட் கிளாசிலே, அந்த மெத்தை சக்கரத்துக்கு மேலே இருக்கும் போல இருக்கு. ராத்திரியெல்லாம் ஊஞ்சலாட்டமா ஆட்டி விட்டிருச்சு" என்றான்.

"இது தெரிஞ்சா நம்ம வண்டிக்கு வந்திருக்கலாமே தம்பி ! நல்ல கூட்டம். ஒருத்தரு தலைமேலே ஒருத்தரு உட்கார்ந்துக்கிட்டிருந்தோம். தவுல்காரரு தவுலை தலைக்கு மேல் வச்சிக்கிட்டே வந்தாரு. வண்டி ஆடல்லே, அசங்கல்லே. ஏன் தம்பி, நேத்து அவங்க மதுரையிலே எங்கே இறங்கியிருந்தாங்களாம், கேட்டீங்களா?" என்று தருமன் உடைசல்விட ஆரம்பித்தான்.

சண்முகசுந்தரத்துக்கு இந்தப் பேச்சு உற்சாகமாகவேதான் இருந்தது. இருந்தாலும், "அதை நான் கேட்பேனா அண்ணே ! அவுங்க பேசினாலும், நான் பேசுவேனா? நீயே சொல்லு" என்றான்.

"இல்லே, அவங்க சொல்லி இருப்பாங்களோன்னு கேட்டேன்."

"அவங்களும் சொல்லல்லே, நானும் கேட்கல்லே. சரி தருமண்ணே ! நீ திருவையாத்துக்கு ஒரு வண்டியைப் பேசு. நான் இதோ இந்தக் கூஜாவை அவங்க கிட்ட கொடுத்துட்டு வந்துடறேன்" என்று கூஜாவை எடுத்துக்கொண்டு திரும்பவும் ரயிலை நோக்கி வேகமாக நடந்தான் சண்முகசுந்தரம்.

மதுரையிலிருந்து தஞ்சாவூருக்கு வண்டி வரும்போது காலை மணி ஐந்தரை இருக்கும். "மிந்திரிப் பருப்பு, மிந்திரிப் பருப்பு" என்ற சத்தத்தைக் கேட்டுத்தான் சண்முகம் விழித்தான். அதற்குள் தருமன் வண்டியில் ஏறி விளக்கைப் போட்டுவிட்டான். தருமனுக்கு எதிரில் வடிவாம்பாளையும் மோகனாவையும் எழுப்புவதோ, சொல்லிக்



கொள்வதோ சரியல்ல என்று நினைத்தான் சண்முகம். அதுவுமல்லாமல் விளக்குப் போட்டவுடன் வடிவாம்பாள் ஒருமுறை விழித்துப் பார்த்துக் கண்ணை மூடிக்கொண்டதிலிருந்தே, தன்னோடு அவள் பேச விரும்பவில்லை என்று அறிந்தான். இதற்குள் பெட்டிகள் எல்லாவற்றையும் தருமன் தப தபவென்று இறக்கி பிளாட்பாரத்தில் போட்டுவிட்டான். ஆனால், படுக்கையைக் கட்டும்போது மட்டும் மெல்ல மோகனாவையும் சண்முகத்தையும் அவன் கண்கள் மாறி மாறி நோக்குவதைக் கண்டான் சண்முகம்.

தருமனுடைய சுபாவம், ஒருமாதிரி. ஒரு அவல் கிடைத்தால் விடமாட்டான். ஆதலால், அவன் வாய்க்குப் பயந்து சண்முகம் கீழே இறங்கிவிட்டான். ஆனால், அதே சமயத்தில் தவறுதலாக அவர்கள் கூஜாவை தருமன் எடுத்து வருவதையும் அவன் பார்த்தான். அப்போது ஒன்றும் சொல்லவில்லை. சுரங்க வழியிலே இறங்கி, ஸ்டேஷன் வாசலுக்கு வரும் மட்டும் சும்மா இருந்தான். வண்டி பேசப் போகும் போதுதான், "என்ன தருமண்ணே, கூஜாவைக் காட்டு, நம்முது இல்லை போலிருக்கே !" என்றான் சண்முகம்.

தருமனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அதோடு இதைச் சாக்கிட்டு உடனே ஓடிப்போய் அந்தப் பெண்ணிடம், "நேற்று உன் நாட்டியம் ரொம்ப நன்றாக இருந்தது," என்று சொல்லிவிடத் துடித்தது அவன் மனம். ஆனால் சண்முகம் அதற்கு இடம் கொடுக்கவில்லை. தானே கூஜாவைக் கையில் வாங்கிக்கொண்டு திரும்பி நடந்தான்.

"என்ன தருமண்ணே ! கூஜாவை நாயனக்காரரு எடுத்துக்கிட்டுப் போறாரு. நீ சும்மா பார்த்துக்கிட்டிருக்கியே !" என்று சமயம் தெரியாமல் முத்துராக்கு கோபித்ததைக் கேட்டதும் தருமன் ஓடிப்போய், "இங்கே குடுங்க தம்பி எனக்கு அவமானமாயிருக்கு" என்று அதைக் கையில் வாங்கப் போனான். ஆனால், சண்முகம் "நீ வண்டி பேசு, வந்துட்டேன்" என்று ஸ்டேஷன் கட்டடத்துக்குள் நுழைந்து சுரங்கப் பாதையில் இறங்கி வேகமாய் நடந்தான்.

'ரயில் புறப்பட்டுவிடுமோ? அதற்குள் மோகனாவைப் பார்த்து ஒரு வார்த்தை பேசிவிடவேண்டுமே' என்று அவன் வெகு வேகமாகச் செல்லும்போது, "எங்கே ஸார், கூஜாவை எடுத்துண்டு போறீங்க, தண்ணி வேணுங்களா?" என்று ஒரு குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து சண்முகத்தின் கையிலிருந்த கூஜா ஒருவரால் பறிக்கப்பட்டது. இவ்வளவு ஆவலோடு அதைப் பறித்தது வேறுயாருமல்ல; அந்த ரயிலடியில் உள்ள மாடிக் கிளப்பில் வேலை செய்யும் ஒரு பையன்தான். அந்தப் பையனுக்கு அவ்வளவு பெரிய சண்முகம் அந்த மகாவித்வான் கையில் கூஜாவை எடுத்துப் போவது பிடிக்கவில்லை. "இல்லை தம்பி, ஒன்றும் வேண்டாம்" என்றான் சண்முகம். ஆனால், சண்முகத்தின் சொல்லைப் பையன் கேட்கவில்லை.

கூஜாவை எடுத்தபடி அவன் மாடிக் கிளப்புக்கு ஓடினான். நல்ல 'டிகிரிக் காப்பி'யில் நாலு கப்பைக் கலந்து அதில் கொட்டி நிரப்பினான்.

சண்முகத்துக்குச் சொல்லவும் முடியவில்லை, மெல்லவும் முடியவில்லை. அந்த ரசிகனுடைய அன்பு அவனைப் பிரமிக்க வைத்தது. 'ஏண்டா வித்வான் ஆனோம்!' என்று அவன் மனம் திண்டாடியது.

இந்தச் சமயம் பார்த்து மாயவரம் வண்டி ஊதிவிட்டது. கூஜா இல்லாமல் எப்படி வண்டிக்குப் போவது?

மோகனாவின் வண்டி போகவும், பையன் கூஜாவில் காப்பியோடு வந்து சேர்ந்தான். மற்ற சமயங்களில் இம்மாதிரி நடந்திருந்தால் சண்முகம் கோபித்திருப்பான். ஆனால், இப்போதுதான் ஒரு இடத்துக்கு அன்பை நாடிச் செல்ல, அதே சமயத்தில் தன் மேல் அன்பு கொண்ட ஒருவனால் தனக்கு தொந்தரவு வரவே அவனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

"என்ன சார் சிரிக்கிறீங்க? எங்கே வேணும்னாலும் கொண்டு வரேன் சார்!" என்றான் பையன்.

"சரி வா! வாசலிலே நம்ம ஒத்துக்காரரு பட்டினியா இருக்காரு. ரொம்ப களைச்சுப் போயிட்டாரு" என்று வேடிக்கையாகக் கூறினான் சண்முகம்.

தன்மீதுள்ள அன்பினால் அந்தப் பையன் சிறிதும் தயங்காமல் வாசலுக்கு வந்து ஒத்துக்காரருக்குக் காப்பி கொடுத்ததைப் பார்த்ததும் சண்முகத்தின் கண்களில் நீர் சுரந்தது. "தம்பி, உன் கையாலே எனக்கும் கொஞ்சம் காப்பி கொடு" என்றான். பையனுக்குப் பரமானந்தம். பக்கவாட்டில் பட்டுத்துணியைப் பிடித்து இழுப்பது போல் காப்பியை ஆற்றி நுரையுடன் சண்முகத்திடம் கொடுத்தான். சண்முகம் காப்பி குடிப்பதையே பார்த்துக்கொண்டிருந்தான். விதுரனும் சபரியும் கொண்ட ஆனந்தத்தை அடைந்தான்.

கடவுளின் பெருமை பக்தர்களிடம் இருக்கிறது; கலைஞனின் உயிர் ரசிகர்களிடம் இருக்கிறது. பையனின் கலை ஆர்வத்தைப் பார்த்து மனம் நெகிழ்ந்துபோன சண்முகம், "ஏன் தம்பி, ரயிலடிப் பிள்ளையாருக்குத் திருவிழா வருமில்லே? அது எப்ப வரும்?" என்று கேட்டான்.

"அது ஒண்ணும் கணக்கில்லே. எங்க கையிலே எட்டணா, ஒரு ரூபா, மிஞ்சுகிறபோது அவருக்கும் திருவிழா நடக்கும்!"

"இந்த வருஷம் எனக்குக் கொஞ்சம் முன்னாடியே சொல்லுங்க, நான் வந்து வாசிக்கிறேன்" என்றான் சண்முகம்.

அந்த அன்பு, உலகம் பெறும்.



ஆனால், அய்யன் கடைத்தெருவில் நுழைந்ததுமே வந்த நறுமணம் சண்முகத்துக்கு மோகனாவின் எண்ணத்தைத் திரும்பவும் உண்டாக்கியது. அங்கு தஞ்சாவூர்க் கதம்பம் பந்து பந்தாக வைத்திருந்தது. இதுவரை ஆயிரம் முறை சண்முகம் அந்தப் பக்கம் போயிருக்கிறான். அந்தக் கதம்பம் அவனுக்கு ஒரு உணர்ச்சியையும் உண்டாக்கியதில்லை. ஆனால் இன்று மட்டும் அவன் மனத்தில் கதம்ப மணம் காதல் உணர்ச்சியை உண்டாக்கியது. நேற்று தான் கொடுத்த மலரை அவள் தலையில் வைத்துக்கொண்டு நின்ற காட்சி அவன் கண்முன் வந்தது.

அங்கும் கூட்டம் அவனை விடவில்லை. அத்தர் கடைக்காரர் அத்தரைத் தடவினார். அல்வாதுக் கடைக்காரர் கால் வீசை அல்வாவைக் கொடுத்து ஒரு பொட்டும் போட்டுவிட்டார். விருந்துகளுக்கு அழைப்புக்கு மேல் அழைப்பு வந்தது. இந்த உலகம் சங்கீதத்தில் மயங்குகிறது என்பதைத் தஞ்சாவூர் எடுத்துக்காட்டியது.

முதலில் ஒற்றை மாட்டு வண்டிக்காரனை எடுத்துக்கொள்வோம். அந்த ஏழையை அன்று சங்கீதம் செல்வனாக்கிவிட்டது. அவன் வாடகை பேச மறுத்துவிட்டான்! வண்டியை ஓட்டும்போதே "விரிபோணி" வர்ணத்தின் சிட்டஸ்வரத்தை முணகிக்கொண்டே வண்டியை ஓட்டினான்.

அந்த ஊரில் சங்கீத விஷயத்தில் ஏழை பணக்காரன் என்ற பேதம் கிடையாது. எந்தத் தெருவில் நடந்தாலும் மிருதங்க சப்தம் கேட்கும். கதாகாலட்சேபங்கள் கேட்கும். அல்லது நாட்டிய மேளமாவது கேட்கும். இல்லையேல் தெருவில் புலி வேஷமாவது இருக்கும். இவர்கள் வாழ்க்கை கலையும், களிப்பும், உபசாரமுமாகவே இருக்கும். கஞ்சத்தனம், அல்ப புத்தி இரண்டும் இந்த ஊருக்குள் வரவே வராது.

ஆகவே, ஊரார் உபசாரங்களுக்கு தப்பி, உண்டியலை மாற்றிப் பணம் ஆக்கிக்கொண்டு, தியாகய்யர் சந்நிதியில் சாற்றுவதற்கு இரண்டு மாலைகளையும் வாங்கிக்கொண்டு, தஞ்சையை விட்டு திருவையாற்றுக்குச் சண்முகம் புறப்பட்டபோது காலை பத்து மணிக்கு மேல் ஆகிவிட்டது.

சண்முகசுந்தரம் திருவையாற்றுக் கச்சேரிக்காகத்தான் தஞ்சையில் இறங்கினான். பொன்னம்பலத்தா பிள்ளை என்ற ஒருவருக்கு அவ்வருஷம் ராவ் சாகிப் பட்டம் கிடைத்திருந்தது. அதற்காகக் கண்டியூர் கடம்பவனம் பிள்ளை என்பவரின் முயற்சியில் சில பிரமுகர்கள் ஒன்றுகூடி அவருக்குத் திருவையாற்றில் பாராட்டு விழா ஒன்று நடத்தினார்கள். கடம்பவனம் பிள்ளைதான் சண்முகத்தை அறிந்திருந்தார். இவருக்குத் தாய் தந்தையர் எப்படித்தான் கடம்பவனம் என்று பெயரிட்டார்களோ? உண்மையிலேயே இவர் ஒரு டம்ப வனமாகத்தான் திகழ்ந்தார்.

திருவையாற்றில் தெருவை அடைத்துப் பந்தல் போட்டிருந்தார்கள். எங்கும் போலீஸ் நின்றது. அந்நாளைய வழக்கப்படி விழா நடந்த பந்தல் முழுவதும் இங்கிலீஷ் கொடி பறந்தது. ஈச்சம் மட்டையால் அலங்காரம் செய்திருந்தார்கள். காகிதப் பூக்கள் தொங்கின. எங்கு பார்த்தாலும் சக்கரவர்த்தியின் படங்கள் காட்சியளித்தன. அந்தக் காலத்தில் தற்காலம் போல் எதற்கெடுத்தாலும் 'ஜே' கோஷமும் 'வாழ்க' என்ற ஒலியும் போடமாட்டார்கள். 'ஹிப் ஹிப் உரே' என்றுதான் சொல்லுவார்கள். ஆரம்பத்திலும் கடைசியிலும் இங்கிலீஷ் பியாண்டில் 'ராஜ வாழ்த்து' வாசிப்பார்கள். ஒரு விருந்துக்குப் போவதற்கென்றே கறுப்புக் கோட்டுத் தைப்பார்கள். இன்னும் எத்தனையோ முக்கிய விஷயங்கள் விருந்து வேளையில் நடக்கும்.

அந்த விழாவின் போது பல பிரமுகர்கள், ராவ் சாகிப்பைப் பாராட்டிப் பேசினார்கள். இங்கிலீஷில் எழுதிப் படித்தார்கள். பாட்டுப் பாடினார்கள், புகழ்ந்தார்கள். ஸ்ரீமான் பொன்னம்பலத்தா பிள்ளைக்கோ இவை எல்லாம் நம்மைப் பற்றியல்ல என்ற எண்ணந்தான் உண்டாகியது. அந்த அளவுக்கு அதில் உண்மை கலந்திருந்தது. இது முடிந்ததும் தேநீர் விருந்து நடைபெற்றது.

அன்றைய விருந்தில் முக்கியமாக இன்னொரு விசேஷமும் உண்டு. இந்தப் பட்டத்திற்காக அதே ஜில்லாவில் இன்னொருவரும் ஆசைப்பட்டார். அவர் பொன்னம்பலத்தா பிள்ளையின் பங்காளி. இருவரும் போட்டி போட்டுக்கொண்டு மாற்றி மாற்றி அதிகாரிகளுக்கு விருந்துகள் வைத்ததில் அஜீரணத்திற்குப் பயந்து அந்த ஜில்லாவுக்கு கலெக்டர்களே வரப் பயந்தார்கள். இருவரும் சென்னையில் வாரத்தில் பாதிநாள் இருப்பார்கள். குதிரைப் பந்தயம், கிளப், கவர்னர் விருந்து முதலியவைகளில் இருவரும் அடிக்கடி கலந்துகொள்வார்கள். இப்படி இருந்தும் பொன்னம்பலத்தா பிள்ளைக்குத்தான் அவ்வருஷம் பட்டம் கிடைத்தது. அதில் அவர் கோஷ்டியாகிய கடம்பவனம் பிள்ளைக்கு ரொம்ப ஆனந்தம். விழாவை புது விதமாய்க் கொண்டாட ஏற்பாடு செய்திருந்தார். 'டீ பார்ட்டி' முடிந்தபின் ஊர்வலமும் வைத்திருந்தார். இவைகளில் வாசிப்பதற்குத்தான் சண்முகம் வரவழைக்கப்பட்டிருந்தான்.

தஞ்சாவூர் ஜில்லாவில் இல்லாத சமையல் எங்குமே இல்லை. ஆயினும் இந்த டீ பார்ட்டிக்கு என்றே பட்டணத்திலிருந்து ரொட்டி சுட்டு விற்கும் கம்பெனிக்காரர் ஒருவர் வரவழைக்கப்பட்டிருந்தார். அந்தப் புண்ணியவான் மேஜையில் சாப்பிடும் ஒவ்வொருவரையும் ஜலதரங்க வித்வானாக நினைத்தாரோ என்னவோ! ஒவ்வொருவர் முன்னாலும் பத்துப் பீங்கான் கோப்பைகளையும் எட்டுக் கரண்டிகளையும், நாலு கண்ணாடிக் கிண்ணங்களையும்



வைத்திருந்தார். எங்கு பார்த்தாலும் பீங்கான் சத்தமும், உடைந்த இங்கிலீஷ்-ம் ஆக இருந்த சூழ்நிலையில், எதிரில் அமைந்திருந்த மேடையின்மீது சண்முகசுந்தரத்தின் கர்னாடக சங்கீத மேளக் கச்சேரி ஆரம்பமாகியது.

கச்சேரி நடுவில் அடிக்கடி மாலை போடுவதும், கை தட்டுவதும், பீங்கானில் கரண்டியால் தட்டுவதும், சிரிப்பதும் அவனுக்கு சகிக்கவில்லை. அவன் ஊத நினைத்தாலும் மனம் ஊத விடவில்லை. "நீங்க சும்மா இருங்க, நான் பாத்துக்கறேன்" என்று முத்துராக்கு தவில் வாசித்தும் சண்முகத்தால் நாதஸ்வரத்தை வாசிக்காமல் உட்கார்ந்திருக்கவும் முடியவில்லை. கல்யாணி ராகத்தை வாசித்தான். அவன் இதயத்தில் அந்த ராகம் தோன்றவில்லை. ஆனால், அந்தக் கூட்டத்தினரோ, அவன் எப்படி வாசிக்கிறான் என்று பார்க்கவும் இல்லை, ஏன் சும்மா உட்கார்ந்திருக்கிறான் என்று கேட்கவுமில்லை.

இதை நினைத்து நினைத்து அவன் உள்ளம் புழுங்கியது. முதலிலேயே எங்கு கச்சேரி என்று கேட்காமல் ஒப்புக்கொண்டதற்கு வருந்தினான்.

சண்முகம் திருவையாற்றில் கச்சேரி என்றவுடன் பணத்தைப் பற்றிக்கூடப் பேசாமல் ஒப்புக்கொண்டான். தன் மனத்தின் அடிப்படையில் குருவாக மதித்திருக்கும் தியாகப் பிரும்மத்தின் அருள் நிறைந்த ஊரில் வாசிக்கப்போகிறோம். சங்கீத ரஸிகர்கள் நிறைந்த ஊர், "எந்தரோ மகானுபாவுலு" முதலிய பஞ்ச ரத்தினக் கீர்த்தனங்களை ஆத்மார்த்தமாக வாசிக்க வேண்டும் என்றெல்லாம் ஆவலோடு வந்தான். பந்தலுக்குள் அவன் கண்ட காட்சி அவன் உள்ளத்தைப் புண்ணாக்கியது. அக்காலத்தில் எந்த சங்கீத வித்வானும், திருவையாற்றில் நல்ல பேர் எடுத்தால்தான் அவரை வித்வான் என்று தமிழ்நாடு ஒப்புக்கொள்ளும். அந்த அளவிற்கு ஒரு புனிதமான ரஸிகத்தன்மை அந்த ஊர் மக்களிடம் இருந்து வந்தது.

சண்முகம் வாசிக்க வருகிறான் என்றவுடன் அந்த ஊர் ரஸிகர்கள் திரள் திரளாக விழாப் பந்தலுக்கு விரைந்தார்கள். சங்கீத ரசனை ஏழை பணக்காரர் என்று பார்ப்பதில்லை. ஆதலால் ரஸிகர்களுள் பலர் ஏழைகளாகவும் இருந்தார்கள். இந்தக் கூட்டம் வரவர அதிகமாகி வாசலில் ஆயிரக்கணக்கானவர்கள் நிற்க, உள்ளே ஐம்பது பேர்கள் சங்கீதத்தையும் கேளாமல் பேசிக்கொண்டிருப்பது சண்முகத்துக்குப் பிடிக்கவில்லை.

இதே சமயம், வாசலில் ஒரு சத்தம் கேட்டது. அங்கு இருந்த காவல்காரர்கள் அந்த ரசிகர்களை உள்ளே வரக்கூடாது என்று விரட்டுவதை அறிந்தான் சண்முகசுந்தரம். அவன் மனம் கொதித்தது. தடுப்பதைப் பொருட்படுத்தாமல் சங்கீதம் கேட்கும் ஆசையில் கூட்டம் பந்தலுக்குள் வர ஆரம்பிக்கவே, காவல்காரர்கள் தடியடிப்

பிரயோகத்தில் இறங்கினார்கள். கூட்டத்திலிருந்து பெரும் கூக்குரலும், "ஐயோ, அப்பா" என்ற சத்தங்களும் எழுந்தன. சண்முகசுந்தரம் நாதசுரத்தைக் கீழே வைத்தான்.

தன் ஆத்திரம் எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டான். சண்டைக்காரன் என்று பேர் வந்துவிடக்கூடாது என்று கருதி மிக விநயத்துடன் கச்சேரிக்குத் தன்னை அழைத்த கடம்பவனம் பிள்ளையைக் கூப்பிட்டான். "வாசல்லே காத்திட்டிருக்கிறவங்களை உள்ளே விடுங்களேன்! நான் வாசிக்கப்போகிறேன். அவுங்க கேட்டுட்டுப் போகப்போறாங்க. இதிலே உங்களுக்கு என்ன நஷ்டம்?" என்று நயந்து பேசினான்.

"உங்களுக்கு அவங்களா பணம் குடுக்கிறாங்க, நாங்கதானே பணம் கொடுக்கிறோம்?" என்றார் கடம்பவனம் பிள்ளை.

சண்முகத்துக்குக் கோபம் வந்துவிட்டது. "என்னய்யா பணம்? பெரிய கனகாபிஷேகம் பண்ணிட்டீங்களா? ஒரு கல்யாணி ராகத்தினுடைய ஆரோகண அவரோகணத்துக்குக் காணாதையா நீங்க கொடுக்கிற பணம்! அந்த ரசிகர்களை உள்ளே விட்டால்தான் வாசிக்க முடியும்" என்றான்.

இதைக் கேட்டதும் பிரமுகர்களிடையே சிறிது குழப்பம் ஏற்பட்டது. கூட்டத்திலிருந்த ஒருவர் எழுந்தார். "இது ஒப்பந்தத்தை மீறுவதாகும். சட்டப்படி இது குற்றம்!" என்றார், கடம்பவனத்தாரை கடைக்கண்ணால் பார்த்தார்.

இன்னொருவர், "ஊத மாட்டேன்னா இவன் குழாயைப் பறிச்சு வைச்சுட்டுப் போகச் சொல்லய்யா!" என்றார்.

"சங்கீதம் குழாயிலில்லை!" என்றான் சண்முகம்.

இதைக் கேட்டவுடன் கூட்டத்திலிருந்த பிரமுகர்கள் பலர் மேடையை நோக்கிக் கோபத்துடன் பாய்ந்து வந்தார்கள்.

தருமனும் முத்துராக்குவும் நடுங்கிவிட்டார்கள். சண்முகமோ 'வந்தது வரட்டும்; அந்த ரசிகர்களுக்கு இல்லாத சங்கீதத்தைப் பணத்திற்கு விற்க வேண்டியதில்லை' என்ற எண்ணத்தில் வீரத்தோடு நிமிர்ந்து நின்றான். நல்ல வேளையாக அப்போது ராவ் சாகிப் பொன்னம்பலத்தா பிள்ளை குறுக்கிட்டார்.

"ஸைலன்ஸ்" என்றார் பொன்னம்பலத்தா பிள்ளை. "ஏனப்பா, ஊர்வலத்திற்குத்தான் வாசிக்கப்போகிறாயே, அப்பொழுது கேட்கட்டுமே அந்த ரஸிகர்கள்?" என்றார் பிள்ளை.

"ஊர்வலமா?" என்றான் சண்முகம். அதற்குள் கச்சேரிக்கு அழைத்த கடம்பவனம் பிள்ளை, "ஆமாம். டீ பார்ட்டி முடிந்தவுடன் ராவ் சாகிப் ஐயாவை ஸாரட்டில் வைத்து ஊர்வலம் நடக்கப் போகிறது. அதில் நீ வாசிக்கப்போகிறாய்" என்றார்.



இதைக் கேட்டதும் சண்முகத்திற்கு இன்னும் ஆத்திரம் மேலிட்டது. "ஓஹோ! ஒரு மனிதனை உட்கார்த்தி வைத்து அவருக்கு முன்னாலே நான் நடந்து 'பரல பராமதான பேத தண்ட சதுரா', 'ராம நீ சமானம் எவரு' என்று எல்லாம் வாசிக்க வேணுமோ? இப்படி எல்லாம் நாங்கள் செய்தா தியாகராஜஸ்வாமி திருவையாற்றைவிட்டே ஓடிப்போயிடுவாரு. இந்தாங்க பிள்ளை; 'அட்வான்'ஸைத் திருப்பி வாங்கிக்கிட்டு ஆளை விட்டுடுங்க" என்றான்.

"என்ன சொன்னே? ஆளை விடுவதா? உன் ஜன்மத்திலே இந்தத் திருவையாத்துக்குள்ளே நீ இன்னொரு தடவை நாயனத்தை எடுக்கிறதைப் பார்த்துப்பிடுறேன்" என்று கடம்பவனம் பிள்ளை அதட்டினார்.

"இன்னைக்கே இந்த ஊரிலே வாசிக்கிறேனா இல்லையா பாருங்கள்!" என்றான் சண்முகம்.

மறுபடியும் ராவ்சாகிப் குறுக்கிட்டார். "சரிதான் ஸார், விடுங்க! அந்த வித்வான் சொல்வதிலும் ஒரு 'பிரின்ஸிபிள்' இருக்கு. எனக்கும் உடம்பு சரியில்லை. ஊர்வலம் வேண்டாம்" என்றார்.

"ஏன், இவர் சுவாமி வந்து கேட்டால்தான் ஊதுவாரோ? திருவையாத்திலே வாசிக்கப்பிடறேன்னு சொன்னானில்லே, இவன் துணிஞ்சு இந்த ஊரிலே ஒத்துப் போட்டுறட்டும், உயிரோட ஊருக்குப் போறானாங்கிறதைப் பார்ப்போம்!" என்றார் கடம்பவனம் பிள்ளை.

சண்முகம் வெளியே புறப்பட்டுவிட்டான். வெளியே இருந்த ரசிகர் கூட்டத்திற்குத் 'தங்களால் ஒரு வித்வான் கடம்பவனத்தின் பகைக்கு ஆளாகிவிட்டானே' என்ற வருத்தம் தாங்கவில்லை. "எங்களாலே என்னத்துக்குங்க உங்களுக்குக் கஷ்டம்? நீங்க பாட்டிலே வாசிச்சுட்டுப் பணத்தை வாங்கிட்டுப் போயிருக்கலாம். சங்கீதம் கேட்கிற பாக்கியம் எங்களுக்கு இருந்தா எங்களைப் பார்த்து ஒருத்தன் கம்பை ஓங்குவானா?" என்று நாத் தழுதழுக்க ஒரு ரசிகர் கூறவும், சண்முகத்திற்கு உணர்ச்சி மேலிட்டது. "உங்களுக்கு இல்லாத வாசிப்பு வேறு யாருக்கய்யா? வாங்க, எல்லோரும் காவிரிக் கரைக்குப் போவோம்" என்றான். ரசிகர்கள் கூட்டம் முழுவதும் அவனைத் தொடர்ந்தது.

ஆனால், கடம்பவனம் பிள்ளையோ "இந்த ஊர் எல்லைக்குள் நீ வாசித்தால் கலகம் உண்டாகும்" என்று சொல்லிச் சண்முகத்திற்கு எப்படி வாய்ப்பூட்டுச் சட்டம் போடலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தார்.

இதற்குள் திருவையாற்று ரசிகர்கள் ஓர் அற்புதமான ஏற்பாட்டைச் செய்துவிட்டார்கள்.

அன்றைக்குக் காவேரியன்னை காணாத காட்சியைக் கண்டாள். கரை நெடுக மக்கள் வெள்ளம்போல் உட்கார்ந்துகொண்டிருந்தனர். காவேரியிலே சாவேரி பெருகியது. ஒரு பரிசலிலே சண்முகம் கோஷ்டியினர் நாதஸ்வரக் கச்சேரி செய்தார்கள்.

கரையில் நின்ற ரசிகர்கள் எல்லோரும் சண்முகத்தின் கண்களுக்குச் சங்கீத வடிவமாகவே தோற்றம் அளித்தனர். அவன் தன்னை மறந்தான். அற்புதமாக வாசித்தான். கூட்டமும் தன்னை மறந்து கேட்டது. நாணற்காட்டில் பதுங்கியிருந்த பாம்புகள் படம் விரித்துக்கொண்டு நாதஸ்வரத்தின் வழியே வந்த கான ரஸத்தைப் பருகின.

மேய்ந்துவிட்டுத் தண்ணீர் குடிக்க வந்த பசுக்கள் தண்ணீரைப் பாதி குடித்துவிட்டுத் தலைநிமிர்ந்து 'இந்தத் தண்ணீரை எப்போதும் பருகலாம். இப்பொழுது இசையைப் பருகுவோம்' என்று நின்றன.

கூட்டத்திலிருந்த பெண்பிள்ளைகளின் இடுப்பிலிருந்த குழந்தைகள் தங்கள் அழுகையையும், தாயின் பாலையும் மறந்து சண்முகம் வாசித்த சங்கீத அமிர்தத்தை உண்டன.

ஓடுகின்ற காவேரி ஸ்தம்பித்து நின்றாள். இளம் தென்றலில் அசைந்து ஆடிய நாணல்கள் அவன் இசையைக் கேட்டு இன்னும் குதித்து ஆடின. தியாகையாவின் சமாதி அருகிலே ஒரு ஜோதி நிறைந்தது.

அதே சமயத்தில் சண்முகத்தின் உள்ளத்திலும், ரசிகர்களின் உள்ளத்திலும் ஆனந்தம் நிரம்பியது. ஆனால், கடம்பவனம் பிள்ளைக்கு மட்டும் உடம்பு துடித்தது.

பத்தொன்பதாவது அத்தியாயம்

## ஏனிந்த நாணமோ !



ஸ்ரீமான் கடம்பவனம் பிள்ளைக்கு ஒரு மருமகன் உண்டு. அவர் அந்த ஜில்லாவுக்கே பெரிய புள்ளி. அவர் பெயர் சிங்கபுரம் மைனர். ஒற்றைக்கல் வைரக் கடுக்கனைப் போட்டுக்கொண்டு, அவர் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து ஓட்டி வருவதே ரொம்ப அழகாக இருக்கும். 'டாக் டாக்' என்று அவர் குதிரை வரும் அழகைப் பார்த்துப் பார்த்து மயங்குவார்கள் அந்தப் பக்கத்தில் உள்ள கிராமத்து மக்கள். ரப்பர் டயரும், மெருகு போட்ட பித்தளைப் பூண் கட்டுகளும், இருபுறமும் அழகான ஜெர்மன் சில்வர் விளக்குகளும் உடைய அவருடைய 'டாக்கார்ட்' வீதியில் வரும்போதே பளபளவென்ற ஒளி கண்ணைப் பறிக்கும். அவர் காலால் ஒரு தடவை மணியை மிதித்து விட்டால் 'டணார்' என்ற ஒலியும், அதன் கார்வையும் காதை நிரப்பும். அவருக்குச் சுமார் நானூறு வேலி குடித்தனம் உண்டு. நிலத்தின் விளைவையெல்லாம் காவேரி கவனித்து வந்தாள். செலவை மட்டும் அவர் கவனித்து வந்தார். அந்தப் பக்கத்தில் உள்ள பஞ்சாயத்து போர்டு தேர்தல்முதல் மேல்சபைத் தேர்தல்வரை எல்லாவற்றிலும் அவர் நின்று ஜயிக்காத தேர்தலே கிடையாது. அவ்வளவுக்கும் கடம்பவனம் பிள்ளைதான் மேற்பார்வை.



மாவுக்குப் பதினைந்து கலம் என்பதுதான் அவருக்குத் தெரியுமே அல்லாமல் அதற்கு மனிதன் உழைக்கவேண்டும் என்பதே அவருக்குத் தெரியாது. அந்த ஜில்லாவில் எங்கு எது நடந்தாலும் அவருடைய நன்கொடை இல்லாமல் எதும் நடக்காது. ஆனால் அவருடைய பண்ணையாள்கள், காரியஸ்தர்கள் எல்லோரும் தமக்கு நன்கொடை அளிக்க வேறு யாராவது கிடைக்க மாட்டார்களா என்று தேடுவார்கள். அவர் பண்ணையில் உள்ள மாடுகள் ரொம்ப நன்றாக இருக்கும். ஆனால், மனிதர்களோ பாதி நாள் ஏகாதசி விரதம் இருப்பார்கள்.

அவர் கலியாணம் செய்துகொள்ளப்போகிறார் என்றால் கேட்க வேண்டுமா? தன் தாய்மாமன் கடம்பவனம் பிள்ளையின் மகளையே விவாகம் செய்துகொள்வதற்காக நிச்சயம் செய்துவிட்டார். கலியாணத்தில் அந்தப் பக்கத்தில் உள்ள வித்வான்கள் எல்லோருடைய கச்சேரிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இன்று அவரே திருவாரூரில் நேரில் வந்து இருந்துகொண்டு, மோகனாவை நாட்டியத்துக்கு ஏற்பாடு செய்வதற்காகத் தம் காரியஸ்தரை அனுப்பியிருந்தார்.

முத்துக்குமார நட்டுவனார் காரியஸ்தரோடு வடிவாம்பாளின் வீட்டுக்குள் நுழைந்தார். "வாங்க வாங்க" என்று உபசரித்தாள் வடிவாம்பாள்.

"நம்ப சிங்கபுரம் பண்ணையிலே பெரிய கொ[illegible] செய்துகொள்ளப் போறாராம். நம்ப கொளந்தைய [illegible] கேட்க வந்திருக்காங்க" என்றதுமே, வடிவாம்பாள் ஏதோ யோசித்தாள்.

எல்லோரும் உட்கார்ந்தார்கள். அபரஞ்சி தாம்பூலம் கொண்டு வந்து வைத்தாள். ஆனால், வடிவாம்பாளோ பேசவே இல்லை.

"என்ன, நீங்க ஒண்ணும் பதில் சொல்லலியே?" என்றார் காரியஸ்தர்.

"பதில் என்ன சொல்ல இருக்கு? முடியாது என்றுதான் சொல்லணும்" என்றாள் வடிவாம்பாள்.

காரியஸ்தருக்கும் நட்டுவனாருக்கும்
இதைக் கேட்டதும்
தூக்கிவாரிப் போட்டது.
நல்லாத்தெரிஞ்சவுங்க எல்லாருமே
"ஆமா, முத்துக்குமரு, இப்படி
சோதனை செய்தா நம்ம என்ன செய்யறது? 'இத்தனாந் தேதி
கலியாணம், நீ ஓம் மகளை வந்து ஆடச்சொல்லு' என்று ஒரு
மாசத்துக்கு முந்தியே சொல்லியிருந்தா நல்லாருக்குமால்லியா?
அவங்க வீட்டுக் கலியாணத்திலே ஆடாமே, இந்த நாட்டியம் எதுக்கு
இருக்கு? 'விடிஞ்சாக் கலியாணம், புடி பாக்கு வெத்திலை'
அப்படின்னு சொல்லி என்னைச் சிக்கலிலே மாட்டிவிட்டா—?" என்று
படபடவென்று பேசினாள் வடிவாம்பாள்.
வந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால், சிக்கல் என்ற
வார்த்தையைக் கேட்டதும், உள்ளிருந்து ஆவலுடன் ஓடி வந்து கதவு
மூலையில் நின்று எட்டிப் பார்த்தாள் மோகனா.
"இப்படி முடியாது என்று சொன்னால்—?" என்றார் காரியஸ்தர்.
"வேறே என்னங்க செய்யறது? பத்து நாளைக்கு முன்னாலே
காக்கா காலிலே கட்டி ஒரு சேதி அனுப்பியிருக்கட்டும்.
முடியாதுன்னு சொல்லுவேனா? உங்க கிட்டே பணம் கேட்பேனா?
காசு கேட்பேனா? வந்து ஆடிட்டுப் பண்ணையிலே ஒரு வேளை
சாப்பிட்டுட்டுப் வரப்போறேன். இப்ப நான் சங்கரநயினார்
கோயிலுக்குப் போவேனா, பண்ணையிலே வந்து ஆடுவேனா?
இப்படி என்னை ரெண்டும்கெட்டானா திண்டாட
விட்டுட்டீங்களே!" என்றாள் வடிவாம்பாள்.
அப்போதுதான், மோகனாவுக்கும், முத்துக்குமர
நட்டுவனாருக்கும் வடிவாம்பாள் சாமர்த்தியம் புரிந்தது. 'அடே,
நமக்குக்கூடத் தெரியாமல் இவள் சங்கரநயினார்கோயிலில் கச்சேரி
ஒப்புக்கொண்டிருக்கிறாளே' என்று வியந்தார்கள். ஆனால், வந்த
காரியஸ்தரோ, "இவ்வளவுதானே! சங்கரநயினார்கோயிலுக்கு
முடியாது என்று எழுதிவிடுங்கள். அந்தக் கச்சேரிப் பணத்தையும்
சேர்த்தே நாங்க தந்துவிடுகிறோம்" என்றார்.
பணம் என்ற வார்த்தையைக் கேட்டதும், வடிவாம்பாளுக்கு
அபாரமான கோபம் வந்துவிட்டது.
"அதென்ன பேச்சுக்குப் பேச்சு பணம்கிறீங்களே! பணம் என்ன
அவ்வளவு பெரிசா? பெரிய பண்ணையிலே ஆடறதுக்குப் பணம்
வாங்கிக்கிட்டுத்தான் ஆடணுமா? இந்த வடிவாம்பா அப்படி
ஒண்ணும் ஏழை ஆயிடலீங்க! எந்த எடத்திலே போய் என் மக
மேளம் போட்டாலும், ஆயிர ரூபாயை எண்ணிவைக்கக்
காத்துக்கிட்டு இருக்காங்க. பணம் இன்னிக்கி வரும், நாளைக்கிப்
போகும். பண்ணையார் வீட்டுக் கலியாணம் வருமா?" என்று கூறி,
ஒரு கச்சேரிக்கு இவ்வளவு பணம் என்பதையும் ஜாடையாகத்
தெரிவித்தாள். காரியஸ்தரும் இதைப் புரிந்துகொண்டார்.



"வரதா" என்றாள் வடிவாம்பாள். மிருதங்கத்துக்குச் சாதம்
போட்டுக்கொண்டிருந்த வரதன் கையில் கல்லுடன் ஓடிவந்தான்.
"என்னம்மா?"
"இப்பவே சங்கரன்கோயிலுக்கு ஒரு காயிதம் எழுதிப்போடு.
வடிவாம்பாள் அம்மாளுக்கு ஒடம்பு முடியல்லே, நாத்திப் பத்து டிகிரி
காச்சல் அடிக்குது, கச்சேரிக்கு வரமுடியாதுன்னு."
"ஏம்மா, டாக்டரைக் கூப்பிடவா?"
"இல்லே, புரோகிதரைக் கூப்பிடு! நீ ஒரு புரியாதவன். எழுதிப்
போடுன்னா—? பண்ணையார் வீட்டுத் தம்பிக்குக் கலியாணமாமே,
என்ன செய்யறது!"
"அடிததிங்கிணதோம்! அப்ப நமக்கு ஒரு துப்பட்டா
கிடைக்கும்" என்றான் வரதன்.
"ஆமா, இதை வாயைத் திறந்து கேளு! பெரிய இடத்துக்
கலியாணத்திலே சும்மா பணத்தை மட்டுமா குடுத்தனுப்புவாங்க.
அவுங்க பேரு சொல்றாப்பிலே ஏதாவது போடணும்னு
அவுங்களுக்குத் தெரியாது? இதைப் போய்க் கேக்கிறியே!" என்றாள்
வடிவாம்பாள்.

இந்த நாடகத்தைப் பார்த்த காரியஸ்தர் பிரமித்துப் போனார்.
அவர் பையிலிருந்த பத்துப் பச்சை நோட்டுகள் வெளி வந்தன.
அவ்வளவும் நூறு ரூபாய் நோட்டுகள். ஒரு தாம்பாளத்தில் அவற்றை
வைத்து, "இந்தாங்க ஆயிரம் ரூபா இருக்கு. இன்னும் ஆயிரத்தி நூறு
ரூபாய் கலியாண வீட்டிலே கொடுக்கிறோம், ஒப்புக்குங்க" என்று
தாம்பாளத்தை வடிவாம்பாளிடம் நீட்டினார்.

வடிவாம்பாள் கடகடவென்று சிரித்தாள். "ஏது பணத்தை
வாங்கிக்காட்டி விடமாட்டீங்க போலிருக்கே!" என்று தாம்பாளத்தை
வாங்கிக்கொண்டாள்.

அப்போது, "அம்மா, கொஞ்சம் உள்ளே வா" என்று மோகனா
கூப்பிடும் குரல் கேட்டது.

வடிவாம்பாள் தயங்கியபடி உள்ளே சென்றாள். "அம்மா, இந்தக்
கச்சேரி வேண்டாம். நீ சொல்லியபடி சங்கரநயினார் கோயிலிலாவது
போய் உண்மையாகவே கச்சேரி செய்துவிடலாம். எனக்குக்
கல்யாணத்தில் ஆடப் பிடிக்கவில்லை. வெட்கமாக இருக்கிறது"
என்றாள் மோகனா.

முதல் முறையாகத் தன் மகள் கச்சேரி விஷயத்தில் இப்படி
எதிர்த்துப் பேசியதைக் கேட்ட வடிவாம்பாள் திகைத்தாள்.

# வடிவாம்பாளின் சாமர்த்தியம்



"வெட்கமாக இருக்கிறது. என்னால் ஆடமுடியாது !" என்று மோகனா கூறியது வடிவாம்பாளுக்கு ஆச்சரியமாயிருந்தது.

"வெட்கமா? எதுக்கம்மா வெட்கப்படறே? திருடச் சொன்னாங்களா, பொய் சொல்லச் சொன்னாங்களா, ஆடத்தானே சொல்றாங்க? அதுக்கென்ன வெட்கம்?" என்று கேட்டாள் வடிவாம்பாள்.

"இல்லேம்மா, கல்யாண வீட்டிலே பொண்ணு, மாப்பிள்ளையைப் பார்க்கும்; மாப்பிள்ளை, பொண்ணைப் பாப்பாரு. எல்லாரும் மாப்பிள்ளையையும் பொண்ணையும் பாப்பாங்க. நம்ம ஆட்டத்தை யாரும் பாக்க மாட்டாங்க !"

"பார்க்காட்டிப் போறாங்க, நம்ம பணத்தைப் பார்த்துட்டுப் போகலாம் !"

"அப்படியாவது பணம் சம்பாதிக்காட்டி என்னம்மா?"

"என்ன சொன்னே? நமக்கு நட்டுவனாரு, முட்டுக்காரன், எடுபிடிப் பெண், வீடு, வாசல், நகைநட்டு இதெல்லாம் பணம் இல்லாம வருமான்னு கேக்கறேன் !"

"அம்மா, இதெல்லாம் எனக்கு ஒண்ணும் வேண்டாம். கண்ட இடத்திலே ஆடச் சொல்லாதே !"

"என்னடி, உன்னை முள்ளு மேலேயா ஆடச் சொல்றாங்க? நல்லா சமுக்காளம் விரிச்சிருக்கும். அது மேலேதான் ஆடச் சொல்றாங்க. அழகர் கோவிலிலே ஆடினவளுக்குத் திருவாரூரிலே என்ன வந்திடுச்சி?"

வடிவாம்பாள் கேட்ட இந்தக் கேள்விக்கு எப்படித்தான் பதில் சொல்வது என்று மோகனாவுக்குத் தெரியவில்லை. தன் மனத்தில் இருப்பதைத் தாயிடம் சொன்னாலோ அவள் மேலும் கோபிப்பாள். தவிரவும், அதை எப்படித்தான் வாய்விட்டுச் சொல்வது? சற்று யோசித்தாள். கடைசியில் மெதுவாக, "எனக்கு ஆடப் பிடிக்கவில்லை அம்மா !" என்றாள்.

"ஏன் பிடிக்காது !"

"ஏனோ, எனக்குப் பிடிக்கலே ! அவ்வளவுதான் !"

"நான் ஒப்புக்க முடியாது. ஆடுன்னு சொன்னா ஆடத்தான் வேணும். இல்லே, உன் வீடு, உன் வாசல் ! நான் நாளைக்கே புறப்பட்டுப் போறேன் !"

"ஏன் அம்மா இப்படிப் பிடிவாதம் பிடிக்கறே?"



"நானா பிடிவாதம் பிடிக்கிறேன் ? நேத்துவரைக்கும் என் பேச்சைக் கேட்டு நடந்தவ இன்னைக்கு என் முன்னாலேயே ஆடமாட்டேங்கிறயில்லே? இதுக்கா நான் படாத பாடு பட்டுச் சத்துக் குடுத்தேன்? ரெண்டு நாளா நானும் பார்க்கிறேன், நீ பேசற பேச்சும் பார்க்கிற பார்வையும் நல்லாவில்லே ! ஆமா, நான் சொல்லிட்டேன் ! இப்ப நீ—"

"அம்மா, என்னாலே முடியாது !" என்று கூறி மோகனா சரேலென்று உள்ளே போய்விட்டாள். வடிவாம்பாள் திகைப்பூண்டை மிதித்தவள் போல் நின்றாள்.

இதே சமயம் காரியஸ்தர், "அம்மா" என்று கூப்பிடவே வடிவாம்பாள் தயங்கியபடி வந்தாள்.

"என்ன, ஏதோ உங்களுக்குள்ளே—!"

"நீங்கதான் பாத்துக்கிட்டிருக்கீகளே ! முடியாதாம் !"

"ஏன் முடியாதாம்?"

"அதுதான் கேட்டுக்கிட்டிருந்தீங்களே. அது பொண்ணா அது என் வவுத்தெரிச்சலைக் கொட்டிக்கிது !"

"என்ன விஷயங்குறேன்?"

கச்சேரிக்குப் பேசவந்த மனிதர் மெள்ள பஞ்சாயத்துக்கு வந்துவிட்டதை அறிந்தாள் வடிவாம்பாள். அப்போதுதான் அதிகமாக பேசிவிட்டதை உணர்ந்தாள். உடனே சமாளித்துக்கொண்டாள். "அது சொல்லுது, முந்தி ஒப்புக்கிட்ட இடத்திலேதான் ஆடுமாம். இதுக்கு ஒப்புக்க மாட்டாளாம் !"

இதைக் கேட்ட காரியஸ்தரும், நட்டுவனாரும் திகைத்தார்கள்.

கோபத்தோடு உள்ளே வந்த மோகனா, இரண்டாங்கட்டில் உள்ள தன் கட்டிலின் மேல் வந்து உட்கார்ந்தாள். அன்றைக்கென்று அவளுக்கு ஏதோ ஒரு நாணமும், சிறிது கண் கலக்கமும் ஏற்பட்டன. தன் ஆடிப்பார்க்க வேண்டியவன் ஒருவன் இருக்க, அவன் இல்லாத கூட்டத்தில் பல பேர் முன் போய் ஆடுவதை நினைக்க அவளுக்கு லஜ்ஜை உண்டாயிற்று. இன்றுவரையில் வெட்கம் என்பதையே வித்தையில் அவள் கண்டதில்லை. ஆனால், இந்தப் புது உணர்ச்சி அவளுக்கு இன்றுதான் ஏற்பட்டது.

தன்னைப் பிறர் ஒருவருடைய உடைமையாக, இதுவரையில் அவள் எண்ணியது இல்லை. இன்று அவள் மனம் ஒருவனை வரித்தவுடனே பெண்ணுக்கே பெருமை தரும் நாணம் அவளைப் பிடித்துக்கொண்டது.

"நாணம் என்பது நங்கைமார்க்கு அணிகலம்" என்ற வார்த்தைகள் எத்தகைய பொன் மொழிகள் ! நாணத்தால் முகம் சிவப்பதும், இளம் வியர்வை முகத்தில் அரும்புவதும் அழகுக்கு அழகு செய்கின்றன. அதே சமயம், உள்ளத்தை இழுத்துப் பிடிக்கும் ஒரு நாணாகவும், ஓடும்

எண்ணத்துக்கு ஓர் அரணாகவும் அது அமைகின்றது. பெண்மையின் பேரழகை நாணத்தைப் போல் பிரகாசிக்கச் செய்யும் சக்தி வேறொன்றுக்கும் கிடையாது.

மோகனாவின் உள்ளம் என்னவோ ஒரு விதமாக இருந்தது. 'ஆட முடியாது' என்று சொன்னதில் ஓர் ஆனந்தமும், அவனை நினைத்ததில் ஓர் இன்பமும் ஏற்பட்டன. அதை எடுத்துச் சொல்ல எடுகளால் முடியாது. அவளுடைய மென்மையான கன்னங்கள் ரோஜாப் பூப் போல் சிவந்தன. முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பின. கால் கட்டைவிரலால் தரையைக் கீறிக்கொண்டே நின்றாள்.

ஆனால் அவள், 'ஆடமாட்டேன்' என்று கூறிய ஒரு வார்த்தை அந்த வீட்டுக்குள்ளே ஒரு புயலை உண்டாக்கிவிட்டது. தாயை உலுக்கியது. நட்டுவனாரை இடிந்து விழச்செய்தது. வரதனையோ ரொம்பவும் துன்புறுத்திவிட்டது.

(வரதன் ஏகாங்கி. அவன் உண்டு, மிருதங்கம் உண்டு என்று இருப்பவன். சம்பளத்திற்காகவோ, சாப்பாட்டிற்காகவோ அவன் அங்கு வேலை பார்க்கவில்லை. மோகனாவின் மேல் உள்ள பாசத்தினால்தான் அவன் அங்கு இருந்து வந்தான். மோகனாவைக் கூடப்பிறந்த தங்கைபோல் பாவித்தான். ஆடப்பிறந்த தெய்வம் போல் சேவித்தான். இனி இவள் ஆட்டம் இல்லை என்றவுடன் அவனுக்கு 'இனி நமக்கு இந்த வீட்டில் வேலை இல்லை' என்ற எண்ணம் வந்துவிட்டது.)

வரதன், தலையில் படுக்கையுடன் கக்கத்தில் மிருதங்கத்தை இடுக்கிக்கொண்டு, மோகனாவின் எதிரில் வந்து நின்றான். அவன் கண்கள் கலங்கி இருந்தன. "சரி மோகனா, நான் போறேன்" என்றான்.

வரதனுடைய சோகத்தைப் பார்த்த மோகனா திடுக்கிட்டாள். "எங்கே போகிறாய் வரதா?" என்று கேட்டாள்.

"காசி, ராமேச்வரம் எங்கேயாச்சும், கால் போகிற போக்கில்!"

"என்ன வரதா? என்ன கோபம்?"

"ஆமாம், நீதான் ஆட மாட்டேன்னுட்டே. நீ ஆடாத வீட்டில் நான் எதுக்கு? அம்மா கொடுக்கிற சம்பளத்துக்காகவா நான் இங்கே இருக்கேன்? உன் ஆட்டத்துக்கு வாசிக்கிற ஆசையில்தானே இங்கு நான் இருக்கேன்!"

"நான் இனி எப்பவுமே ஆடமாட்டேன்னு சொல்லலியே!"

"இந்த 'ஆர்குமென்டெ'ல்லாம் எனக்குப் பிடிக்காது. மோகனா ஆடாத வீட்டிலே வரதனுக்கு வேலை இல்லை!"

"வரதா, நீகூட இப்படி கோவிச்சுக்கிட்டா நான் என்ன செய்யறது? இந்தக் கல்யாண வீட்டிலே எனக்கு ஆடப் பிடிக்கலையே வரதா."



"ஏன்? மத்த வித்வான்கள் எல்லாம் ஒத்துக்கல்லியா? அவங்க எல்லாம் தெரியாமலா ஒத்துண்டாங்க? சண்முகசுந்தரம் மகா வித்வான் இல்லையா? அவரு எப்படி ஒத்துக்கிட்டாரு?"

'சண்முகசுந்தரம் ஒப்புக்கொண்டுவிட்டான்' என்று கேட்டவுடனே, மோகனாவின் லஜ்ஜை எல்லாம் எங்கேயோ ஓடி ஒளிந்துவிட்டது. பணமே இல்லாவிட்டாலுங்கூட அவன் முன்னிலையில் ஆட வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. இருந்தாலும் அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல், "அவரு ஒப்புக்கொண்டு இருக்காரா? அது உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள்.

"கடம்பவனம் பிள்ளை இரண்டு கச்சேரிக்கும் தாமே சேர்த்துப் பேசினாராம். திருவையாத்துக் கச்சேரிக்கும் கல்யாணத்துக்கும்!"

"உனக்கு நிஜமாகத் தெரியுமா?"

"அப்படித்தான் அழகர் கோவிலிலே பேசிக்கிட்டாங்க."

மோகனாவின் முகத்தில் வந்த ஆவலைக் கவனித்தான் வரதன். அவனுக்கும் சந்தோஷம் வந்தது.

"தெரியாமலா சொல்றேன்? பெரிய கல்யாணத்தில் பெரிய மேளம் இல்லாமல் இருக்குமா?"

"அப்படின்னா, வரதா..." என்றாள் மோகனா.

"தாம் தித்தாம், தீம் தித்தை! அவ்வளவுதானே? ஆடப் போறேன்னு சொல்றே!" என்று சொல்லிக்கொண்டே, படுக்கையைத் தொப்பென்று போட்டான். "நல்ல வேளை! எங்கே நாளு களை சவுக்கத்திலே, நடையைக் கட்டிவிடும்படியா வந்துடுமோ என்று நினைச்சேன்" என்றான்.

"எங்கே போவே?"

"எங்கேயா? கையிலே தாளம் இருக்கு. வாயிலே கிருஷ்ணா, ராமா, கோவிந்தா இருக்கு. பண்டரிபுரம் குல்லா வாங்கி மாட்டிக்கிட்டுப் புறப்பட்டுடறேன். அதுக்காக, சாப்பாட்டுக்கு எவ்வளவுதான் ததிங்கிணதோம் போட்டாலும், மோகனாவுக்கு வாசிச்ச கையாலே இன்னொருவருக்குப் போய் வாசிப்பேனா?"

"வரதா, அப்படி எல்லாம் ஒன்றும் வந்துவிடாது. சிக்கலார் வாராருன்னியே, நிஜமாக வராரா?"

"இந்தா, சத்தியமாகச் சொல்றேன். அவரைக் கல்யாணத்திற்குப் பேசி இருக்காங்க. அந்த மட்டிலும் எனக்குத் தெரியும். வாரதும் வராததும் அவர் குணத்தைப் பொறுத்து இருக்கு. அந்தக் கட்டை திடீர்னு சுருதி ஏறும், இறங்கும்."

மோகனா அவசரம் அவசரமாகக் கண்ணைத் துடைத்துக் கொண்டாள். "அம்மா!" என்று கூப்பிட்டுக்கொண்டே வேகமாக ஹாலுக்கு வந்தாள்.

காரியஸ்தர் முன் உட்கார்ந்திருந்த வடிவாம்பாள் அதைக் காதில் வாங்கிக்கொள்ளாதவள் போல் இருந்தாள். மறுபடியும் மோகனா, "அம்மா, இங்கே கொஞ்சம் வாயேன்" என்றாள்.

"அம்மா என்கிற மதிப்பு வேறே எனக்கு வச்சிருக்கா?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்தாள் வடிவாம்பாள்.

"எம்மா, அவங்க கிட்டே முடியாதுன்னு சொல்லிவிட்டாயோ?" என்றாள் மோகனா.

"வேறு என்ன செய்கிறது? எஜமானி அம்மா உத்தரவு எப்படியோ அப்படித்தானே சொல்லணும்!"

"அப்படியெல்லாம் சொல்லாதே, அம்மா. நீ இவ்வளவு வருத்தப்படுவே என்று தெரிஞ்சிருந்தா நான் அப்படிச் சொல்லியிருக்க மாட்டேன்."

"எனக்கு என்னடி வருத்தம்? பவழ மாலையைத் தவிர வேறு நகை கேட்கப் போறேனா நான். ஆடினா உனக்கு நல்லது!"

"நிசந்தான் அம்மா உங்க மனசைப் புண்படுத்திவிட்டோமே என்று வருத்தப்பட்டேன். நீங்க எங்கே ஆடச் சொன்னாலும் ஆடறேன்."

அதைக் கேட்டதும் வந்த ஆனந்தத்தில் தன் மகளைக் கட்டி முத்தமிட்டாள் வடிவாம்பாள். "நிஜமாத்தானா?" என்றாள்.

"ஆமாம்மா, நிஜமாகத்தான்" என்று சொல்ல நினைத்தாள் மோகனா. ஆனால், அதைச் சொல்ல வாயில் வார்த்தை வரவில்லை.

தன் மகளின் உணர்ச்சி மிகுதியைக் கண்ட வடிவாம்பாளுக்கு என்னவோ போலிருந்தது. தலையைக் கையால் தடவிக் கொடுத்தாள். சிரித்துக்கொண்டே வெளியே வந்தாள்.

"நான்தான் சொன்னேனில்ல, அதான் விஷயம்" என்றாள் வடிவாம்பாள்.

"எது?" என்றார் காரியஸ்தர்.

"ஒரு வைரத்தோடு வாங்கணும்னா, நான்தான் ஏழு தோடு இருக்கே, இன்னொன்று எதுக்குன்னேன். இதை மனசிலேயே வைச்சுக்கிட்டு, ஆட முடியாதுன்னு இருக்கிறா" என்று சொல்லிச் சிரித்தாள்.

"அதுக்கு மைனர் இடத்திலே நான் சொல்கிறேன். என்ன பிரமாதம்! இரண்டாயிரத்தைந்நூறு ரூபாய் கொடுக்கிற இடத்திலே ஒரு ஜோடி தோடுதானா பிரமாதம்?" என்று சொல்லிக்கொண்டே, "அப்போ சம்மதந்தானே?" என்று கேட்டார் காரியஸ்தர்.

"ஆமாம், முகூர்த்தம் எத்தனாம் தேதி என்று சொல்லலியே?" என்றாள் வடிவாம்பாள்.

காரியஸ்தருக்கும் நட்டுவனாருக்கும் தங்கள் தவறுதலை நினைத்த போது ஏமாற்றமாக இருந்தது. வடிவாம்பாளின் வாக்குச் சாதுரியத்தில் தாங்கள் ஏமாறியதை ஏக காலத்தில் உணர்ந்தார்கள்.



முகூர்த்தத் தேதி தெரிந்துகொள்ளாமல், அவள் சங்கரநயினார் கோயில் கச்சேரி என்று சொல்லியதைத் தாம் நம்பிவிட்டதை எண்ணிக் காரியஸ்தர் சிரித்துக்கொண்டார். "ஆவணி நாலாம் தேதி வெள்ளிக்கிழமை, ராத்திரி பத்து மணிக்குச் சிங்கபுரத்திலே உங்க நாட்டியம்!"

வடிவாம்பாள் கடகடவென்று சிரித்தாள். "என் நாட்டியம் இல்லீங்க, என் மக மோகனா நாட்டியம்!" என்று சொன்னாள்.

சற்று நேரத்துக்கு முன்னால் ஒரே மௌனம் குடிகொண்டிருந்த வீட்டில் இப்போது ஒரே சிரிப்பும் ரகளையும் மிகுந்தன.

காரியஸ்தரும் நட்டுவனாரும் விடை பெற்றுக்கொண்டு வெளியே சென்றார்கள்.

வடிவாம்பாளுக்கு ஆயிரத்தைந்நூறு ரூபாய் அதிகப் பணமும், ஒரு ஜோடி வைரத் தோடும் தன் சாமர்த்தியத்தினால் கிடைக்கப் போவதில் அளவற்ற சந்தோஷம். இம்மாதிரி நான்கு கச்சேரிகள் கிடைத்தால், தன் மகளுக்கு ஒரு வைர ஒட்டியாணங்கூடச் செய்து போடலாம் என்று மகிழ்ந்தாள்.

மோகனாவுக்கோ சண்முகசுந்தரத்தின் எதிரில் ஆட ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததைப்பற்றிப் பரம சந்தோஷம்.

வரதனுக்கு வந்த சந்தோஷத்தில் மிருதங்கத்தை மடியில் எடுத்து வைத்துக்கொண்டு கொஞ்சி, "இந்தா, சாப்பிடு. இன்னும் கொஞ்சம் சாப்பிடு" என்று சொல்லிச் சாதத்தை அதன் மேல் வைத்துக் கல்லால் தேய்க்க ஆரம்பித்தான்.

## இருபத்தொன்றாம் அத்தியாயம்

## மாப்பிள்ளை மயங்கினார்



ஆவணி நாலாம் தேதி அன்று அந்த நாகபட்டினம் தாலுகாவே அமளிப் பட்டது. வந்த ரயில்கள் எல்லாம் பால் குடங்களும், தயிர்க்குடங்களும் சுமந்து கொண்டு வந்தன. தம்பூராவும், மிருதங்கமும் ஒவ்வொரு பெட்டியிலிருந்தும் இறங்கின.

சிங்கபுரம் பண்ணை, மைனரின் ஏகபோக கிராமம். அன்று அந்தக் கிராமத்தில் ஒரு பெரிய திருவிழாவைப் போலத்தான் கலியாணப் பந்தல் போடப்பட்டிருந்தது. தஞ்சை ஜில்லாவே பந்தல் அலங்காரத்துக்குப் பெயர் பெற்றது. தென்னங்கீற்றைக்கொண்டு பின்னல் வேலைசெய்து பெரிய மாடமாளிகையை அங்கே எழுப்பி இருந்தார்கள்.

பந்தலுக்குள் தரை எங்கும் வெண்மணல் பரப்பி இருந்தது. அதன் மேல் கூத்தாநல்லூர் மரக்காயர் அனுப்பிவைத்த மலாயா நாட்டு ரத்தினக் கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன.

பந்தலுக்குள் மூலைக்கு மூலை கும்பகோணம் ஐவ்வாது வத்திகளும், ஆரகஜா வத்திகளும் புகைந்து எங்கும் நறுமணத்தைப் பரப்பிக்கொண்டிருந்தன. தஞ்சாவூர் வியாபாரி ஒருவர் எல்லோருடைய அங்க வஸ்திரத்திலும் அத்தரைத் தடவினார். பொட்டுச் சப்ளைக்காரர் ஒவ்வொருவருக்கும் பிறைச்சந்திரன் போல் ஒரு விநாடிக்குள் பொட்டு இட்டுக்கொண்டே வந்தார். பந்தலின் ஓரத்தில் நாற்பதுபேர், மணியான ஆள்கள் நின்றுகொண்டு, அவர்கள் கைகளிலே பெரிய பெரிய வெல்வெட்டு தைத்து ஜரிகை வேலை செய்த விளாமிச்சை வேர் விசிறிகளை வைத்துக்கொண்டு விசிறிய வண்ணம் இருந்தார்கள்.

எதிரிலே மேடைக்கு வலப்புறத்திலே நிஜமான பூக்களைக் கொண்டு விதானம் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. அழகான ரசகுண்டுகளையும், ஸ்படிக மணிகளையும், கந்தர்வ பொம்மைகளையும் கொண்டு அலங்காரம் செய்யப்பட்டிருந்த அந்தப் பந்தலின்கீழ் முத்துச் சிப்பிகள் பதித்திருந்த ஒரு தோதகத்தி ஆசனத்தில், வெல்வெட்டுத் திண்டுத் தலையணைகளுக்கு இடையே மாப்பிள்ளை சிங்கபுரம் மைனரும் அவர் பக்கத்தில் புது மணப்பெண்ணும் அமர்ந்திருந்தார்கள்.

கல்யாணப் பெண்ணின் தலையில் சந்திரப் பிறை, சூரியப் பிரபை, ராக்கொடி, ஜடை நாகர், தங்கத் தாழம்பூ முதலியவைகள் வைத்து, அலங்காரம் செய்திருந்தார்கள். வைரம் ஜொலித்தது.

மாப்பிள்ளையோ ஜம்மென்று உட்கார்ந்திருந்தார். ஆனால் அவருடைய முகம் அடிக்கடி கோணிச் சுருங்கி மாறிக்கொண்டே இருந்ததிலிருந்து அவர் அரங்கத்தில் அப்போது நடந்து கொண்டிருந்த சங்கீதக் கச்சேரியை ரசிக்கவில்லை என்று தோன்றியது.

அவர் மட்டும் என்ன? அங்கே பந்தலில் அமர்ந்திருந்த ரசிகர்களுள் பெரும் பகுதியினர் அப்படித்தான் இருந்தார்கள் என்று சொல்லவேண்டும்.

சங்கீதக் கச்சேரி செய்த வித்வான் மிகவும் புகழ் வாய்ந்த பெரிய வித்வான்தான் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அவருடைய சங்கீத ஞானத்துக்கும் திறமைக்கும் ஏற்றபடி அவருடைய சாரீரம் ஒத்துழைக்க மறுத்துவிட்டது. அதுதான் கோளாறு. நாலு களைச் சவுக்கத்தில் அரையேயரைக்கால் இடத்தில் ஒரு திரடான பல்லவி. அதை எத்தனை விதமாக பிரஸ்தாரம் பண்ணிப் பாட முடியுமோ அப்படியெல்லாம் செய்து அவர் தானாகவே மகிழ்ந்துகொண்டிருந்தார். அவருக்குப் பக்க வாத்தியம் வாசித்த மிருதங்கக்காரர், 'ஏண்டா இங்கே வந்து அகப்பட்டுக்கொண்டோம்' என்று நினைக்கிற



மாதிரி முகத்தை வைத்துக்கொண்டு தம்முடைய கடமையை நிறைவேற்றிக்கொண்டிருந்தார்.

அப்போது கடம்பவனம் பிள்ளை அவசரமாக எதையோ பறிகொடுத்தவர் போல் பந்தலில் நுழைந்து ஒருமுறை சுற்றிப் பார்த்தார். உடனேயே வெளியே போய்விட்டார்.

இந்தக் கல்யாணக் காரியங்களை மேல் பார்ப்பதில் கடம்பவனம் பிள்ளைக்கு உடம்பு வலி எடுத்துவிட்டது. அதற்கு மருந்து சாப்பிடுவதற்காக அவர் அடிக்கடி பந்தலை விட்டு வெளியே வந்துகொண்டிருந்தார். "என்ன மாமா, கண்ணெல்லாம் சிவந்து கிடக்குது!" என்று யாராவது கேட்டால், உடனே, "ஆறு நாளா தூக்கம் இல்லை, தம்பி! பந்தக்காலுக்கு முதல் நான் தூங்கினது!" என்பார். உடனே சமையல் கட்டுக்குள் போவார். "ஆச்சா, ஆச்சா?" என்பார். பதில் வருவதற்குள் வெளியே வந்துவிடுவார். உக்கிராண அறைக்குப் போவார். "என்னய்யா வெத்திலை எல்லாம் கிடந்து அழுகுது! எடுத்துக் குடய்யா!" என்பார். "பண்ணையாளுங்களுக்கு ஒரு இலை நீட்டாதே. கேட்டாங்கன்னா அந்த மட்ட வெத்திலை இருக்கு பாரு, அதை எடுத்துக் கொடு" என்பார். உடனே அடுத்த ஜாகைக்குள் நுழைவார். "என்ன, யாருகிட்ட மூணு ஆஸ்? திருப்பாப்புலியூராரா? அடி சக்கை! என்ன தம்பி, ராணி, தூக்கி பத்தா? உம் முகத்திலேயே தெரியுதே! உம், சீக்கிரம் முடிச்சிக்கிட்டு என்ன. கொஞ்சம் ரசமும் சோறுமா கரைச்சு அனுப்பவா?" என்பார்.

பிறகு, அடுத்தாற்போல் உள்ள வித்வான் ஜாகைக்கு வருவார். "என்ன, அய்யாவுக்கு வென்னீரா பச்சைத் தண்ணியா? ஸ்நானம் ஆச்சா, கொஞ்சம் பசுவெண்ணெய் அனுப்பவா? நான் போய்க் கொஞ்சம் நல்ல புகையிலையா அனுப்பறேன்" என்று உறுதிமொழி கூறிப் புறப்படுவார்.

இப்படியே மோகனாவின் ஜாகைக்குள் வருவார். "உஸ்" என்று இங்கே வந்துதான் உட்காருவார். "என்ன வடிவாம்பா, எல்லாம் ஒழுங்காகக் கவனிக்கறாங்களா? காப்பி, டிபன் எல்லாம் வருதா? குத்தாலத்திலேருந்து பச்சை ஏலக்காய் ஜாதிக்காய் வந்திருக்குதே, கொண்டாந்து கொடுத்தாங்களா? கொளும்பு திராட்சைப் பழம் வந்திருக்கு. ஒரு கூடை தரேன், மறக்காமல் ஊருக்குக் கொண்டுபோ!" என்பார். "இந்தா, உன் மகளைக் கொஞ்சம் 'ரெஸ்ட்' எடுத்துக்கச் சொல்லு. நாட்டியம் ஆரம்பிக்க ஒன்பது மணிக்கு மேல் ஆயிடும் போல் இருக்குது. இந்தா, கொஞ்சம் தண்ணி கொடு குடிக்க. இந்தப் பானைத் தண்ணிதான் நல்லாயிருக்கு. தம்பி, அவசரமா எனக்கு ஒரு வெத்திலை சீவல் கொடு, போகணும்" என்பார்.

இந்தக் கல்யாண அமளியில் எல்லோரும் இவ்வாறு ஈடுபட்டிருக்க மோகனா ஒருத்தி மாத்திரம் வேறொரு சர்ச்சையில் ஈடுபட்டிருந்தாள். 'ஏன் வரதா, நம்ம கச்சேரி ஒண்ணுதானா கல்யாணத்திலே?" என்றாள்.

"ஏன், ரொம்ப வித்வான்கள் வந்திருக்காங்களே ! அவங்கள்ளாம் அவங்க ஜாகையிலே இருக்காங்க"

"அவர், சிக்கலார் எங்கிருக்காரு, பார்த்தியா?"

"சந்தனம் இருந்தா மணம் தானே வருது. பார்க்கிறதென்ன? வந்திருந்தா சாயங்காலம் வாசிப்பாரில்ல? கேட்டால் காத்திலே தெரியுது !" என்றான் வரதன்.

"இல்லை, நீ போய்ப் பார்த்துட்டு வாயேன்."

"இல்லை மோகனா ! நேத்துத்தான் மிருதங்கத்துக்குச் சாதம் போட்டேன். அதை எடுத்துச் சுதி எப்படி இருக்குன்னு பாக்கணும்."

"சரி, நீ போகமாட்டே?" என்று கேட்டாள் மோகனா.

"மாட்டேன்னா சொல்றேன்? சரி, இதோ போறேன். அம்மா வந்து கேட்டால்—"

"என்னடா அம்மா வந்து கேட்டால்—" என்று கூறிக்கொண்டே வடிவாம்பாள் வந்தாள்.

"இல்லேம்மா, கலியாண வீட்டிலே நல்ல வாசனைச் சுண்ணாம்பு வச்சிருக்காங்க. உங்க சுண்ணாம்பு டப்பாவை எடுத்துக்கிட்டுப் போய் அதிலே நிறைய அடைச்சுக்கிட்டு வரேன்னு சொன்னேன். வெத்தலைப் பெட்டியிலே டப்பியைக் காணுமேன்னு அம்மா வந்து கேட்டால் என்று மோகனா கேட்டுது—"

"மோகனா எங்கடா கேட்டா? நீதானே கேட்டாய்?" என்றாள் வடிவாம்பாள்.

"ஓ ! நான்தான் கேட்டேனா? அப்பிடின்னா அந்த டப்பாவைக் கொடுங்க. அதிலே சுண்ணாம்பை அடைச்சுக் கொண்டுவந்திடறேன்" என்றான் வரதன்.

"இந்தா. டப்பாவிலேயும் அடைச்சுக்கிட்டு ஒரு வெத்திலையிலேயும் எடுத்துக்கிட்டு வா." என்றாள் வடிவாம்பாள்.

வரதன் டப்பாவை வாங்கிக்கொண்டு போனான்.

"இந்த வரதனைப் பார்த்தியா? மடி நிறைய வாசனைப் பாக்கும் வெத்திலையும் வச்சிருக்கான்" என்றாள் வடிவாம்பாள்.

"பின்னே சுண்ணாம்பும் வேண்டியதுதானே?" என்றாள் மோகனாம்பாள்.

வடிவாம்பாள் கடைக்கண்ணால் தன் மகளைப் பார்த்துச் சிரித்தபடியே சென்றாள். தனியே விடப்பட்ட மோகனாவுக்கு ரொம்ப சந்தோஷம்.

எதேச்சையாகச் சண்முகத்தைச் சந்திக்க இந்த வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி அவள் மகிழ்ந்தாள். வரதன் எப்பொழுது வருவான் என்று துடித்தது அவள் மனம்.

'இந்த ஊருக்குச் கச்சேரிக்கு வந்திருக்கும் அவர் நம் ஜாகைக்குத் தான் வந்தால் என்ன? சும்மா எதற்குத் தன் ஜாகையிலேயே அடைந்து

4842



கிடக்க வேணும்? இங்கு வராவிட்டாலும் எப்படியும் நம் நாட்டியத்துக்கு வருவார். அன்று அழகர்கோயிலில்தான் சண்டை வந்துவிட்டது. மறைந்திருந்து பார்த்தார். இன்று மறைந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. நேரில் உட்கார்ந்து பார்ப்பார். நாம் அற்புதமாக ஆடலாம். அன்று அவர் தோடிதானே வாசித்தார்? அற்புதமாக வாசித்தாரே. இன்று நாமும் தோடியிலேயே ஒரு முத்துத்தாண்டவர் பதத்தை ஆடுவோமே. அவர் தோடி ஓஸ்தியா அல்லது நம் தோடி ஒஸ்தியா என்று பார்க்கட்டும்.

'ஏன்? அவர் என் கச்சேரியைப் பார்க்க வருவதில் என்ன குற்றம்? அவரும் வித்வான்தானே? கூட்டத்திலே வந்து உட்காரக் கூடாது என்றிருக்கிறதா? இது என்ன கஷ்டம். நான் பாட்டுக்கு அவரைப் பார்த்துக்கொண்டு ஆட்டத்தை மறந்துவிட்டால்—! சேசே, அப்படியெல்லாம் ஆகாது. அது எப்படி. அவர், எதிரில் உட்கார்ந்திருந்தால் இன்னும் அக்கறைதான் அதிகம் உண்டாகும். இதற்காகத் தாளத்தை விட்டுவிட்டால் கை கொட்டிச் சிரித்துவிடுவாரே. அதற்காக என்ன? நாம் ஆடும்போது எப்படியும் அவர் கைகள் தாளத்தைக் காட்டிக்கொண்டுதானிருக்கும்.

'நான் அவரைப் பார்த்துக்கொண்டே ஆடிவிடுகிறேன். அவரை அதிகமாகவும் பார்த்துவிடக்கூடாது. கொஞ்சம் கண் அந்தப் பக்கம் அதிகமாகத்தான் போகும். அதை நாம் அடக்க வேண்டும். இல்லாவிட்டால் அம்மா ஆட்டம் முடிஞ்சு கோவிப்பாள். போனால்தான் போகட்டுமே, இதில் என்ன ஒளிவு மறைவு வேண்டியிருக்கிறது? வேறு யாரைப் பார்க்கிறோம், அவரைத்தானே பார்க்கிறோம்? இந்த நட்டுவனார் ஏதாவது பக்திப் பாட்டுகளை ஆரம்பித்துவிடாமல் இருக்க வேண்டும். என்ன செய்வது? அலாரிப்பு, ஸ்வரம் முடிந்தவுடனே, நாமே "பார்த்துப் பார்த்துக் கண்ணிரண்டும் பூத்து நிற்பதேனையா?" என்று ஆரம்பித்து விட்டால் என்ன? சேசே! அதெல்லாம் கூடாது. அவர் அதிகப்பிரசங்கி என்று நினைத்து விடுவார். நட்டுவனார் பாடுகிறபடி பாடட்டும். எப்படியாவது இரண்டு சிருங்காரப் பதங்களாவது இருக்கத்தானே இருக்கணும்? ஒரு ஜாவளியில் அக்கறையாய் ஆடிவிட்டால் போகிறது— அப்புறம் இவா வந்து பேசாமலா போகப்போகிறார்?'

'இன்று எந்தப் புடவையைக் கட்டுவது— அவருக்கு எந்த நிறம் பிடிக்குமோ? அன்று அவர் பச்சைக் கரை வேட்டி கட்டியிருந்தார். ஊதாவிலே பீதாம்பரம் கட்டி யிருந்தார். நானும் இன்றைக்குப் பச்சைப் புடவை கட்டி ஊதா ரவிக்கை அணிந்துகொண்டால் என்ன? சே! பச்சைப் புடவை உடம்பைப் பருமனாக எடுத்துக்காட்டும். ஊதாப் புடவை கட்டி, பச்சை ரவிக்கையைப் போடுவோம்.'

இவ்வாறெல்லாம் எண்ணமிட்ட மோகனா ஓடிப் போய்ப் பெட்டியைத் திறந்தாள். ஊதாப் புடவை ஒன்றை எடுத்து உடம்பில

வைத்துப் பார்த்தாள். அவள் சிவப்பு உடம்புக்கு ஊதாப் புடைவை ரொம்ப எடுப்பாக இருந்தது. உடனே அவளை அறியாமல் ஓர் ஆனந்தம் வந்தது.

அப்போதுதான் வரதன் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டே உள்ளே வந்தான். அவனைப் பார்த்ததுமே மோகனாவின் வயிற்றில் பகீர் என்றது. "ஏன் வரதா, அவரு...?"

'வல்லியாம். திருவையாற்றிலே கடம்பவனம் பிள்ளையோடே சண்டை பிடிச்சுக்கிட்டாராம். 'இந்தா உன் அட்வான்ஸ்' என்று வாங்கின பணத்தையும் திருப்பி அனுப்பிச்சிட்டாராம். நம்ம நன்னிலம் சேதுதான் மூர்த்தத்துக்கு ஊதினானாம்" என்றான்.

இதைக் கேட்டதும் அவள் கையில் இருந்த புடைவை நழுவி விழுந்தது. அதன் மேல் பலபலவென்று, அவள் கண்ணீர்த் துளிகள் விழுந்தன. அவள் சந்தோஷம் முழுவதும் துக்கமாக மாறியது. எதிலும் மனம் ஓடவில்லை.

இதற்குள் வடிவாம்பாள் விரட்ட ஆரம்பித்தாள். "மணி ஒன்பதாச்சே! இப்ப கூப்பிட வந்துடுவாங்களே! இன்னுமா அலங்காரம் செஞ்சுக்கல்லை?" என்றாள்.

மோகனா உயிரற்ற உடல்போல், வாடிய பூங்கொடி போல் எதையோ கையில் கிடைத்ததை உடுத்திக்கொண்டாள். அவளுக்கு அலங்காரத்தில் நாட்டம் செல்லவில்லை. இதைக் கண்ட வடிவாம்பாள் தானே அலங்கரிக்கலானாள். மையிட்டாள், பொட்டிட்டாள், நல்ல சேலை ஒன்றைக் கட்டினாள். பொருத்தம் பார்த்து நகையைப் போட்டு அலங்காரத்தை முடித்தாள்.

அந்த நேரத்தில் கச்சேரிக்கு அழைக்கவும் வந்துவிட்டார்கள். நான்முந்தி, நீ முந்தி என்று ஒரு முப்பது பேர் வீட்டுக்குள் நுழைந்து "வாங்க! கூப்பிடத்தான் வந்தோம்!" என்றார்கள். காரியஸ்தர் தம் குல்லாயைச் சரி செய்துகொண்டார். கடம்பவனம் பிள்ளை மோதிரத்தைத் துடைத்துக்கொண்டார்.

"என்ன வடிவாம்பா, புறப்படலாமா? நான் பாட்டுக் கச்சேரியைக் கூட அரைமணி முன்னாடியே முடிச்சுக்கச் சொல்லிட்டேன். கூட்டம் பந்தல் தாங்கவில்லை" என்று பல்லை இளித்தார் கடம்பவனம்.

மோகனாவுக்கு அவரைப் பார்க்கப் பார்க்க ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'அடப்பாவி! உன்னாலே அல்லவா அவர் வரவில்லை' என்று கேட்கத் தோன்றியது. அதற்குள் வடிவாம்பாள் வெற்றிலைப் பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். வரதன் ஒரு கையில் மிருதங்கத்தையும் மற்றொரு கையில் முகம் துடைக்கும் சவுக்கத்தையும் எடுத்துக்கொண்டான். நட்டுவனார் விபூதிப் பூச்சுடன் வந்து நின்றார். எல்லோரும் புறப்பட்டனர்.



பந்தலுக்குள் மோகனா வந்து நுழைந்ததும் இதுவரை அங்கு மிங்கும் இருந்தவர்களும், தூங்கியவர்களும், அழைக்காதவர்களும், அழைத்தவர்களும், கிழவிகளும், சிறுமிகளும் ஆகிய அத்தனை பேரும் ஏககாலத்தில் பந்தலுக்குள் நுழைந்தனர். தட்டிகள் பிய்க்கப்பட்டன. ஒருவர் மடியில் ஒருவர் உட்கார்ந்தனர். காச்சு மூச்சென்று சப்தம் கிளம்பியது. இதுவரை அரைத் தூக்கத்தில் இருந்த பெண்ணும் மாப்பிள்ளையுங்கூட நிமிர்ந்து உட்கார்ந்தனர். சிங்கபுரம் மைனர் கண்களுக்கு முன்னே ஒரு கொடிமின்னல் நடந்து போவதுபோல் தோன்றியது. பிரமை நீங்கிப் பார்த்தவுடன் அவள் தான் மோகனாம்பாள் என்று அறிந்தார். அடுத்த காரியம், தன் மாமன் மகன் பக்கம் திரும்பினார். ஒரு பெருமூச்சு விட்டார்!

மேடையில் அலாரிப்பு ஆரம்பமாயிற்று. மோகனாவும் தன் வருத்தத்தைச் சமாளித்துக்கொண்டு பெயரளவுக்கு ஆட ஆரம்பித்தாள்.

மைனருடைய கண்கள் மோகனாவையே பார்த்துக் கொண்டிருந்தன. இவ்வளவு அழகான தங்கச் சிலையை நேற்றே பார்த்திருக்கக் கூடாதா என்று வருந்தினார். மறுமுறையும் அவளைப் பார்த்தார். அழகில் சொக்கினார். பாவம், பக்கத்தில் இருந்த புது மணப்பெண்ணோ விடியற்காலம் மூன்று மணிக்கே எழுந்தபடியால் தூக்கத்தில் சொக்கி விழுந்தது.

மேடையில், வடிவாம்பாள் கையாலேயே செய்த அலங்காரத்துடன் மோகனா விளங்கினாள். அவளுடைய பொன் மேனிக்கு ஏற்ற வண்ணம் கத்தரிப்பூ வர்ணத்தில் காசிப் பட்டால் ஆகிய நாட்டிய உடை அணிந்திருந்தாள். கழுத்திலே ஒரே ஒரு பழைய சிவப்பும் வைரமும் பதித்த மாங்காய்மாலை மாத்திரம் போட்டிருந்தாள். பச்சை ரவிக்கை மீது அந்த மாங்காய்மாலை ஒரு தனி அழகைக் கொடுத்தது. வைர புல்லாக்கும், பேசரியும் பளிர் பளிர் என்று பிரகாசித்தன. கருநாகம் போல நீண்டு, புரண்டு தொங்கிய பின்னலில் ஒரே ஒரு வைர ஜடை நாகர் மாத்திரம் அணிந்து இருந்தாள்.

அலாரிப்பு முடிந்தவுடனே மோகனாவின் மனத்தில் அங்கலாய்ப்பு வந்தது. 'இத்துடன் ஆட்டத்தை நிறுத்திவிடக்கூடாதா' என்று ஏங்கினாள். அவள் ஏங்கி நின்று பெருமூச்சு விட்டபோது அதிலும் ஒரு அழகைக் கண்டு மைனர் ஏங்கினார்.

ஜதிஸ்வரம், வர்ணம் முதலியவைகள் எல்லாம் அதி விரைவாய் நடந்தேறின. முத்துக்குமார நட்டுவனார் அற்புதமாகப் பதம் பாட ஆரம்பித்தார். ஆனால் அவர் பாடிய பதமோ மோகனாவின் உள்ளக் கிளர்ச்சியை மேலும் தூண்டுவதாய் அமைந்தது.

"தெருவில் வாரானோ, என்னைச் சற்றே திரும்பிப் பாரானோ?"

என்று நட்டுவனார் பாடியபோது உண்மையிலேயே சண்முகசுந்தரம் தெருவில் வருகிறானோ என்று அவளையும் அறியாமல் அவளுடைய கண்கள் வாசலைப் பார்த்தன. இதயத்தில் ஒரு உணர்ச்சி வந்ததுமே அந்தப் பாட்டுக்கு அவள் ஆடிய ஆட்டம் மிக அற்புதமாக அமைந்தது. ஒவ்வொரு முறையும் அவள் அபிநயம் பிடிக்கும்பொழுது மாப்பிள்ளை மைனருக்குத் தன் உள்ளத்தையே பிடித்து இழுப்பதுபோல் தோன்றியது. 'வாசலில் வாரானோ, எனக்கு ஒரு வாசகம் சொல்லானோ' என்று அவள் ஆட்டத்தில் கல்யாண மாப்பிள்ளையின் பக்கம் திரும்பியபோது, மாப்பிள்ளைக்கு அப்படியே எழுந்து ஓடிப்போய் 'நான்தான் இதோ இருக்கிறேனே, ஏன் வாசலில் தேடுகிறாய்?' என்று சொல்லத் தோன்றியது.

ஆனால், மோகனாவுக்குத் தன் மனத்தைக் கொள்ளை கொண்டவன் அந்த ஊருக்கே வரவில்லையே என்ற ஏக்கம் வர ஆரம்பித்தது. கால்கள் தளர்ந்தன. பெருமூச்சு வந்தது. முகம் வியர்த்தது. ஆட்டத்தில் ஒரு அசிரத்தை ஏற்பட்டது. எப்போதும் ஒரு பதத்துக்குப் பத்து விதங்களில் அபிநயம் பிடிப்பவள் இன்று நான்குடன் நிறுத்திக் கொண்டாள். நட்டுவனாருக்கு இது ஆச்சரியமாக இருந்தது. ஆனால், சபையில் உள்ளவர்களுக்கு நாட்டியத்தில் ஒரு குறையும் தோன்றவில்லை.

ஆட்டம் ஒருவிதமாக முடிந்தது. கடம்பவனம் பிள்ளை கையிலே சந்தன, தாம்பூலங்களுடன் ஒரு வைரத் தோட்டையும் ஆயிரத்தைந்நூறு ரூபாய்களையும் எடுத்துக்கொண்டு இருவர் பின் தொடர, மேடைக்கு அருகில் வந்து அமர்ந்தார். வடிவாம்பாளின் கண்கள் அந்த வெள்ளித் தாம்பாளத்தின்மீது சென்றன. தாம்பாளத்தையும் சேர்த்து வாங்கிக்கொள்ள வேண்டுமென்று அவள் நினைத்தாள். மாப்பிள்ளைக்கோ, மோகனாவின் மேல் கண்கள் சென்றன. 'ஐயோ, ஆட்டம் முடிந்துவிட்டதே! அவள் ஊருக்குப் போய்விடுவாளே' என்று எண்ணினார்.

கடம்பவனம் பிள்ளை சன்மானங்களை மோகனாவிடம் கொடுத்தார். மோகனா, அதைத் தன் தாயிடம் கொடுக்கும்படி கையைக் காட்டினாள். வடிவாம்பாள் ஆவலுடன் அதைப் பெற்றுக்கொண்டாள். கடம்பவனம் பிள்ளை சந்தனப் பேலாவைக் கையில் எடுத்துக்கொண்டார்.

"அத்தான் எங்கேடா இருக்காரு?" என்று கேட்டார்.

அந்தக் காலத்தில் ஒரு வழக்கம் உண்டு. மாமன், மச்சான், அத்தான், அம்மான் மகன் முதலியவர்கள் கல்யாணங்களில் ஏசிப்பேசி விளையாடுவார்கள்.

"அத்தான் எங்கே இருக்காரு?" என்று கடம்பவனம் கேட்டதும், கூட்டத்தில் குபீர் என்று சிரிப்பு வந்தது. "இதோ இருக்கிறேன்" என்று சிரித்துக்கொண்டே வந்தார் புலியூர் பிள்ளை.



"எங்கே, ஓடி மறைஞ்சிட்டபோன்னு பார்த்தேன் தாலி ஆட்ட போது நீ போவாயா?" என்றார் கடம்பவனம். இந்த வார்த்தை மோகனாவின் இதயத்தில் தேள் கொட்டியது போல் இருந்தது.

"அம்மா, வா போவோம்!" என்றாள்.

அதற்குள், "ஏ பொண்ணே, இந்தா, அத்தானுக்குச் சந்தனம் பூசு" என்று சந்தனப் பேலாவை மோகனாவின் பக்கம் நீட்டினார் கடம்பவனம்.

மோகனா திடுக்கிட்டாள்.

"பத்துப் பவுன் அவன் கையிலிருந்து கறக்கணும். கால் ரூபாய் செலவாகுமேன்னு வண்டி மாட்டுக்கு வாடம் கட்டப் பயப்படறான். விடாதே அவனை! என்ன பொண்ணு நிக்கிறே? இந்தா பூசு!" என்றார் கடம்பவனம்.

ஏற்கெனவே வருத்தத்துடன் இருந்த மோகனாவுக்கு இதைக் கேட்டதும் கோபம் பீறிட்டுக்கொண்டு வந்தது. கடம்பவனம் பிள்ளையை ஆத்திரத்துடன் பார்த்தாள்.

இருபத்திரண்டாம் அத்தியாயம்

## வண்டியால் வந்த வினை



சந்தனம் பூசு என்றவுடன் மோகனா பார்த்த பார்வைக்கு இணையாக நாம் காவியத்தில்தான் ஒரு பார்வையைக் காணலாம். அன்று கண்ணகி தனக்குத் தீங்கு இழைக்கப்பட்டபோது எப்படிப் பார்த்தாளோ, அப்படி இருந்தது மோகனாவின் பார்வை. அவள் மூச்சில் அனல் பறந்தது. பதினெட்டு வயதுகூட நிரம்பப் பெறாத பச்சை உள்ளத்தில் கடம்பவனம் கூறிய அந்த இரண்டெழுத்து வார்த்தைகள் இரண்டு வெட்டுகளை வெட்டியிருந்தன. சந்தனம் என்ற சொல் அந்தப் புண்ணில் அனல் போலப் பாய்ந்தது. ஆயினும், அறிவுடையவள் ஆதலால் தன் சினத்தை அடக்கினாள். உடம்பில் ஏற்பட்ட படபடப்பை அடக்கினாள்.

"வேண்டாமுங்க. இது மரியாதையில்லை. அவங்க கையாலே பூசிக்கொள்ளட்டும்" என்றாள்.

"அடேடே! திருவாரூர்ப் பொண்ணல்ல! என்ன நாசுக்கா பேசறா, பாரு! ஏ, பொண்ணே! பத்துப் பொன்னுக்குக் குறைஞ்சு வாங்காதே அவங்கிட்டே! இல்லாட்டி தலைவழியா சந்தனத்தைக் கொட்டிடு" என்றார் கடம்பவனம்.

மோகனா கோபத்தோடு, "அவங்களுக்குத்தான் கை இருக்கே? பூசிக்கட்டும். இல்லே, உங்களுக்கு அத்தானாக இருந்தால் உங்க கையாலே பூசுங்க" என்றாள்.

"அப்படின்னா எனக்கு வேண்டாம் அப்பா, குளிருது !" என்றார் புலியூர் பிள்ளை.

தன்னை மோகனா எதிர்த்துப் பேசியதைக் கண்ட கடம்பவனம் ஆத்திரம் கொண்டார்.

"என்ன? மாதவி, கண்ணகியா மாறப் பார்க்கறாப்போல இருக்கு !" என்றார்.

"இல்லை, மணிமேகலையாக மாறப் பார்க்கிறேன்" என்றாள் மோகனா. உடனே தாயிடம் திரும்பி, "அம்மா, நாட்டியம் ஆட வந்தோமா, சந்தனம் பூச வந்தோமா? இது என்ன கேவலம்! பெண்ணை மதிக்காத இவங்களுக்கு ஒரு கண்ணகி போதாது, இன்னும் பத்துக் கண்ணகி பிறந்து வந்து புத்தி சொல்லணும் போல யிருக்கு !" என்று கடிந்துகொண்டாள்.

'மணிமேகலையாக மாறப் பார்க்கிறேன்' என்று மோகனா கூறியவுடன் கடம்பவனம் பிள்ளை திகைத்தார். அவருக்கு மணிமேகலை யார் என்ற சந்தேகம் வந்துவிட்டது. நாடகத்திலே மாதவி, கண்ணகி வேஷத்தை அவர் பார்த்ததுண்டு. ஒரு சமயம் திருக்கடையூர்ப்பக்கம் போகவேண்டி வந்தபோது, அங்கு தேரோடும் வீதி இருக்கிறதா என்று விசாரித்துப் பார்த்து, மாதவியின் வமிசத்தார் அங்கு இல்லை என்பதை அறிந்து வந்திருக்கிறார். இப்போது மோகனா மணிமேகலையாகப் போகிறாள் என்ற வார்த்தையைக் கேட்டதும், இது ஏதோ சண்டைதான் என்பதை மட்டும் அறிந்து கொண்டார். உடனே அவருக்குக் கோபம் வந்தது.

"காலையிலே ஊஞ்சலுக்கு நீயா வருவியாக்கும்னு பார்த்தேன். நீ வரவில்லை. இப்ப சந்தனம் பூசுன்னு சொன்னா பூச மாட்டேங்கிறே! நாங்க ரூபாயை எண்ணிக் குடுக்கறோம். எங்க இஷ்டப்படிதான் ஆடணும்! இப்ப பூசறியா இல்லியா?" என்றார் கடம்பவனம்.

மோகனா பதில் சொல்லாமல் தாயைப் பார்த்தாள். வடிவாம்பாளுக்கும் கோபம் வந்தது. பெரிய இடத்தில் தான் வாயைத் திறந்து ஏதாவது சொல்லிவிட்டால் விபரீதம் வந்துவிடுமோ என்று அஞ்சினாள். இதைப் பார்த்த மோகனாவுக்குக் கண்களில் நீர் பொங்கியது. அப்போது கடம்பவனம் மேலும் பேசலானார்.

"இப்ப நீ பூசாட்டி உன்னை லேசிலே விடமாட்டோம் ! ஆட வந்த ஒரு தாசிக்கு இவ்வளவு இருந்தால் எனக்கு எவ்வளவு இருக்கும்?"

"எது...? வயசா, அறிவா....? உங்களுக்கு வயசு ஆச்சு. அதற்குத் தகுந்த அறிவு இருக்கிறதாகத் தெரியலியே ! உங்க பெண்ணை



இப்படிக் கண்டவன்களுக்கெல்லாம் சந்தனம் பூசச் சொல்லுவீங் களா?" என்று அருவருப்பும் ஆத்திரமுமாகக் கேட்டாள் மோகனா.

அதைக் கேட்டதும் வந்த கோபத்தில் கடம்பவனம் தம்மையே மறந்தார். "என்ன சொன்னே ! என் மகளையா? என் மகளையா தாசின்னு சொன்னே?" என்று அவர் கைகளும், கால்களும் பதற மேடையை நோக்கி ஓடிவந்தார்.

அதைக் கண்ட வடிவாம்பாள் எழுந்து குறுக்கே வந்தாள்.

"இந்தாங்க புள்ளை, சும்மாயிருங்க. அதுக்கொண்ணும் தெரியாது, சின்னப்புள்ளை ! இப்ப உங்களுக்கு என்ன செய்யணும்?" என்று முன்றானையை இறுக இழுத்துக் கட்டினாள்.

"நீங்க சும்மா இருங்கம்மா ! சந்தனந்தானே பூசணும்? இதோ நான் பூசறேன். வார் புடிச்சு ரொம்ப நாள் ஆச்சு" என்று எழுந்தான் வரதன்.

இதைப் பார்த்த கடம்பவனம் சீறினார். "எலே முட்டுக்காரப் பயலே ! என்னடா, என்ன நினைச்சுக்கிட்டீங்க? இந்த ஊருக்குள்ளே மறுபடியும் கால் எடுத்து வைக்கிறதா எண்ணமில்லியோ?"

"மன்னவனும் நீயோ வளநாடும் உன்னுதோன்னாராம் கம்பரு. போய்யா போ !... இவரு பிச்சையிலேதானே ஊரு பொழைக்குது. தொப்பி ஏறிப் பூட்டாப்பிலே இறக்கு !" என்றான் வரதன். மோகனாவை நாலு பேர் முன்னிலையில் அவர் அவமானப்படுத்தி யதைக் கண்டதும் அவன் தன்னையே மறந்து பேசினான்.

இதுவரை மனத்தை அடக்கிக்கொண்டு நடந்ததையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த மாப்பிள்ளைக்கு இந்த வாக்குவாதம் பிடிக்கவில்லை. "மாமா" என்று மெதுவாகக் கூப்பிட்டார்.

கடம்பவனத்துக்கோ ஆத்திரம் கண்ணையும் காதையும் அடைத்திருந்ததால் மாப்பிள்ளையின் குரல் காதில் விழவில்லை. சிங்கபுரம் மைனரோ மோகனாவின் தீரத்தை மெச்சிக்கொண் டிருந்தார். 'ஆஹா இவளல்லவா பெண் ! எப்படி நிமிர்ந்து நிற்கிறாள் ! எவ்வளவு தைரியமாகச் சந்தனம் பூசமாட்டேனென் கிறாள் !' என்று நினைத்தார். ஆனால், அந்த மைனர் மாப்பிள்ளை அதோடு நிற்கவில்லை. 'இவள் கையால் நமக்கு மாத்திரம் அல்லவா பூசவேண்டும்?' என்று அந்தரங்கத்தில் ஒரு ஆசையோடு இதைப் புகழ்ந்துகொண்டிருந்தான் விபரீதம்.

பந்தலில் நடக்கும் சண்டைகள் அவருக்குப் பிடிக்கவில்லை. உடனே எழுந்தார். உள்ளே சென்றார். மாப்பிள்ளை எழுந்தவுடன் பெண்ணும் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டாள்.

ஆனால் கடம்பவனமோ சந்தனப் பேலாவுடன் மோகனாவின் வழியை மறித்துக்கொண்டு நின்றார். அப்போது, "எசமான் அவசரமாகக் கூப்பிடறாங்க" என்று காரியஸ்தர் வந்து அவரிடம்

சொன்னார் சந்தனப் பேலாவைக் கீழே வைத்துவிட்டு அலட்சியமாக உள்ளே சென்றார் கடம்பவனம் பிள்ளை.

அதுவரை சட்டையைக் கழற்றிக் கையிலேயே சுருட்டி வைத்திருந்த புலியூர் பிள்ளையோ பாதி வெட்கத்துடன் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு, சட்டையை லபக்கென்று மாட்டிக்கொண்டார். கூட்டத்திலிருந்து ஒரு அப்ளாஸ் விழுந்தது. கொட்டகை அதிரும்படி சிரிப்பும் எழுந்தது. உலகத்திலேயே இப்படிச் சட்டையைப் போட்டுக் கொண்டதற்காக அப்ளாஸ் வாங்கியவர் அவர் ஒருவர்தாம்!

தம்முடைய தனி அறையில் சிங்கபுரம் மைனர் நின்றார். அவர் கண்களில் தீப்பொறி பறந்தது. கடம்பவனம் உள்ளே நுழைந்ததும், "கல்யாணத்துக்கு என்ன செலவு ஆகியிருக்கும் மாமா?" என்றார்.

"இதுக்குத்தான் அவசரமாகக் கூப்பிட்டியா? நாலு நாளும் கழிச்சில்லே பாக்கணும்?" என்றார் கடம்பவனம்.

"இல்லே, ஒரு உத்தேசம்!"

"அம்பது ஆயிரம் ஆகும்."

"இந்த அவமானத்தைச் சம்பாதிக்க அம்பது ஆயிரம் செலவு பண்ணணுமா?"

"என்ன அவமானம்? அந்தக் குட்டி கேட்டதுதானே? நீ சும்மா இரு தம்பி! நான் அவ காலை ஒடிச்சுடறேன்!"

"சை! வாயை மூடும்! உம்மாலேதான் எனக்கு அவமானம்! கூட்டமெல்லாம் சிரிக்குது!"

"எந்தப் பய சிரிச்சவன், சொல்லு, பல்லை ஒடச்சுடறேன்!"

"திருவையாத்துலேதான் மேளத்தோட சண்டை போட்டார்னு பார்த்தா இங்கே நாட்டியத்தோடே கலகம். உமக்கு இத்தனை வயசாகியும் கொஞ்சங்கூட வித்தையை மதிக்கத் தெரியவில்லையே!"

இப்போதுதான் கடம்பவனம் பிள்ளைக்குத் தம் மருமகன் தமக்குப் பரிந்து பேசவில்லை, தாசிக்குப் பரிந்து பேசுகிறான் என்பது புரிந்தது. கோபம் மீறியது.

"டே டே டே! நிறுத்துடா நிறுத்து, நான் ஒன் மாமாடா!" என்றார்.

"தெரியும். மகாபாரதத்திலே வந்த மாதிரி மாமா நீர். சமாதானம் செய்து அவங்களை மரியாதையா வீட்டுக்கு அனுப்பும்!"

"டே, மத்தவங்கள்ளாம் மாமனாரைத் தன் காலிலே விழச் சொல்லுவான். நீ இந்த மட்டுக்கும் தாசி காலிலே விழச் சொல்றியே!"

"நீர் அவளைப் பேசின பேச்சுக்கு— அதுவும் செய்யலாம்! அவ ஆட வந்தாளா, பூச வந்தாளா?"

"ஏன்? ஆடணும், மணவறையிலே பாடணும், ஊஞ்சலை ஆட்டணும், சந்தனம் பூசணும், அதெல்லாம் வளக்கம்."



"அந்த வழக்கமெல்லாம் மாற வேண்டிய காலம் வந்துடுத்து. இப்பவே போய் மன்னிப்புக் கேளும்."

"ஏன், நீதான் போய்க் கேளேன்! உன் வீட்டுக் கல்யாணம் தானே?" என்று கடம்பவனம் பிள்ளை வேகமாக வெளியே சென்றார்.

"ஓய் நில்லும்!" என்று குரல் கேட்டது. திரும்பினார் கடம்பவனம் பிள்ளை.

"சாவியைக் கொடும்" என்றார் மைனர்.

"ஏன்?"

"நீர் மேற்பார்வை பார்த்தது போதும்."

"முடியாது. முந்தி இது உன் பிதிரார்ஜித சொத்து. இப்ப என் மக சொத்து. நான் மேல்பார்வை பார்க்க எனக்கு 'ரைட்' இருக்கு" என்றார் கடம்பவனம்.

"போதும். இப்போ சாவியைக் கொடுக்கிறீரா, இல்லையா?"

"என் சாவி, சாவி என்கிறே? என் மகளைப் பார்த்து அவ தாசின்னு கேட்டிருக்கா? அது உன் மனசிலே உறைக்கலே?" என்று பேச்சை மாற்றினார் கடம்பவனம்.

"மாமா, அவ அப்படிக் கேட்கவில்லை. 'உங்கள் மகளாக இருந்தால் சந்தனம் பூசச் சொல்வீர்களா?' என்றுதான் அவள் கேட்டாள். நீங்கள்தான் அதை மாற்றிச் சொல்கிறீர்கள்!"

"தாசிக்குப் பேரேமி? என்ன தம்பி, ஏன் அவமேலே இவ்வளவு அக்கறை? இல்லை கேட்கிறேன். என்னமோ அவளுக்குப் பரிஞ்சுக்கிட்டுத் தாளம் போடறியே! அவ என்னைக் கேட்ட கேள்விக்குச் சரியான பாடம் கத்துக் கொடுக்காமல் நான் விடப்போறதில்லை. பார்ப்போம். சிங்கபுரம் தாண்டி எங்கே போறான்னு பார்க்கிறேன்."

"அவ வம்புக்கு நீங்க போனா நான் ரொம்பப் பொல்லாதவனாக இருப்பேன்."

"இந்த ஜில்லாவுக்கே பொல்லாதவன் ஒத்தன்தான்டா உண்டு. அது இந்தக் கடம்பவனம். எங்க ஊர் தெரியுமில்லே. கண்டியூர் உன்னைப் படைச்சவனையே தலையைக் கிள்ளின ஊர்."

"என் தலையையும் வாங்கிவிடுவீங்களோ?"

"உன் தலையை ஏன்டா நான் வாங்கறேன்? நீதான் முந்தியே தலையிலே கையெழுத்துப் போட்டு என் கிட்டே கொடுத்து இருக்கியே! உன் 'பவர் ஏஜன்ட்' டில்ல நான்? கண்ணுலே விரலைக் குடுத்து ஆட்டிடுவேன்! அக்கா மகனாச்சேன்னு பார்த்தா, தலைக்கு மேலே ஏர்றான்" என்று சொல்லிக்கொண்டே, கடம்பவனம் வெளியே போய்விட்டார்.

நாட்டியம் நடந்த இடத்திலிருந்து மோகனா ஜாகைக்குச் செல்லும் போது நல்ல இருட்டு. வழக்கம்போல் வித்வானை

மரியாதையுடன் வீட்டுக்கு அனுப்பவில்லை. கூப்பிட வந்த முப்பது பேர்களுள் ஒருவராவது இப்போது கொண்டுபோய் விட வரவில்லை.

வீட்டுக்குள் வந்ததும் வடிவாம்பாள் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டே பெட்டியைத் திறந்தாள். பணத்தைப் பெட்டியின் அடியில் துணிகளுக்குக் கீழே வைத்தாள். தோடு இருந்த பெட்டியைத் திறந்து ஒரு பார்வை பார்த்துவிட்டு, அதையும் பெட்டியில் இருந்த நகை டப்பாவில் வைத்து மூடினாள். பிறகு, பெட்டி மேலேயே சாய்ந்துகொண்டு படுத்துவிட்டாள். அவளுக்கு இருந்த குழப்பத்தில் குற்றம் தன் மகளுடையதா, அல்லது கடம்பவனம் செய்ததுதான் குற்றமா என்று நிச்சயம் செய்ய முடியாமையால், நடந்ததை மறந்து தூங்க ஆரம்பித்தாள். தூக்கமும் வரவில்லை.

நட்டுவனாருக்கு மோகனாவின் மேல் ஒரு பாசமும் பரிவும் உண்டு. மெல்ல அவள் அருகில் வந்தார்.

"குழந்தே, ஏன் இப்படி உட்கார்ந்துக்கிட்டிருக்கே? எழுந்திரு. உடையெல்லாம் மாத்திக்க" என்றார்.

"உடையை மாத்தலாம் வாத்தியாரையா ! என் உள்ளத்தை ஆற்றிக்கொள்ள முடியுமா? எவ்வளவு கேவலமாகப் பேசினார் பார்த்தீர்களா?" என்று சொல்லிக்கொண்டே மாலை மாலையாகக் கண்ணீர் விட்டாள் மோகனா.

"அவர்களா அம்மா பேசினார்கள்? பணம் பேசுகிறது. பாழும் பழக்கம் பேச வைக்கிறது. உன்னைப் போல் இன்னும் பத்து மோகனா பிறந்திருந்தால் இந்த வகுப்பே உயர்ந்திருக்குமே ! உம், என்ன செய்வது? எழுந்திரு" என்றார் நட்டுவனார்.

"ஏன் வாத்தியாரையா, சந்தனம் பூச வேணும்னு....." என்று எதையோ சொல்ல நினைத்தாள் மோகனா. துக்கம் தொண்டையை அடைத்தது. அவள் உடம்பு நடுங்கியது.

"அம்மா, பூச வேண்டாம் அம்மா ! நீ கலைக்குத் தொண்டு செய்யத்தான் பிறந்தவள். கயவர்களுக்கல்ல.

"கோயிலில் கணிகையர் தட்டெடுப்பது போல் மாப்பிள்ளையும் பெண்ணும் அமர்ந்திருக்கும் ஊஞ்சல் அருகில் கணிகையர் வந்து நின்று திருஷ்டி தோஷம் வராமல் தடுப்பது வழக்கந்தான். கல்யாண வீட்டில் வித்வானுக்கு, தமிழ்ப் பண்டிதருக்கு, கிராமத்தாருக்கு, சிவனடியாருக்கு, கலைஞனுக்கு எல்லோருக்குமே மரியாதைகள் உண்டு. அந்த வழக்கத்தையொட்டி மரியாதை செய்வதற்காகவென்றே நம் சமூகத்தையும் கலியாணத்திற்கு அழைப்பார்கள்.

"வடநாட்டிலே பலர் நடுவில் பெண்கள் ஆடுவதும், அவர்கள் கொடுக்கும் பணத்தை வாங்கிக்கொண்டு சலாம் வைப்பதும் ஜல்சா என்ற பெயரில் நடந்து வருகிறது. இது தஞ்சைக்கும் இறக்குமதியாகி இன்று சந்தனம் பூசும் அளவுக்கு வந்திருக்கிறது. இது உடைத்தெறிய



வேண்டிய பழக்கம். இன்று நீ உடைத்தெறிந்தாய் ! எனக்கு ரொம்ப சந்தோஷம் !" என்றார் நட்டுவனார்.

மோகனாவுக்குச் சிறிது சமாதானம் ஆயிற்று. அவள் கோபம் இப்போது வரதன் மேல் திரும்பியது.

அதே சமயத்தில் சொல்லி வைத்தாற்போல் வரதன் அவள் எதிரில் வந்து நின்றான். அவன் கையில் சாப்பாடு எடுக்கும் பாத்திரங்கள் இருந்தன. கல்யாண வீட்டில் இருந்து இன்னும் சாப்பாடு வரவில்லை யாதலால், பாத்திரத்தைக் கொடுத்துவிட்டு, சாப்பாடு அனுப்பும்படி சொல்லப் புறப்பட்டவன் மோகனாவின் துயரைக் கண்டு அங்கேயே நின்றுவிட்டான்.

மோகனா மெல்ல நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். "நீ சொல்லிய தால்தானே நான் இங்கு வர ஒப்புக்கொண்டேன்? இவ்வளவு அவமானத்துக்கும் காரணம் நீதானே?" என்று கேட்டாள்.

வரதன் பதில் சொல்லவில்லை. கையிலிருந்த கலியாணப் பத்திரிகையை எடுத்துக் கொடுத்தான். அதில் 'சண்முகசுந்தரம் நாதஸ்வரம்' என்று அச்சிட்டு இருப்பதைப் பார்த்தாள் மோகனா.

"பின் ஏன் வரல்லே, வரதா?"

"இந்தக் கடம்பவனம் குணம் முந்தியே அவருக்குத் தெரிஞ்சுடிச்சு. அதுதான் வரல்லே !" என்றான் வரதன்.

"இப்போ நீ எங்கே போறே?"

"பசியாயிருக்கு. மனசு வேறே வருத்தமாயிருக்கு. போயச் சாப்பாட்டைக் கொஞ்சம் மேலே போட்டாத்தான் இந்த வருத்தம் அடங்கும்" என்று சொல்லிப் புறப்பட்டான்.

"வரதா, அப்படியே ஊருக்குப் போக ஒரு வண்டி அனுப்பச் சொல்" என்றாள் மோகனா.

"ஆகட்டும்" என்று நடந்தான் வரதன்.

சிங்கபுரம் மைனர் அவ்வளவு கெட்டவர் அல்ல. வாலிபர். அதிலும் படிப்பு உடையவர் ஆதலால், பல நற்குணங்களும் அவரிடம் படிந்து இருந்தன. ஆனால், அதே சமயத்தில் சில்லறைப் புத்தியும் இல்லாமல் போகவில்லை.

மோகனாவை முதல் முறையாகப் பார்த்ததில் இருந்தே அவருடைய உள்ளத்தில் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. தன்னுடைய அழகுக்கும், அறிவுக்கும், செல்வத்துக்கும் இம்மாதிரி ஒரு அழகி அருகில் இருந்தால் எவ்வளவோ பொருத்தமாயிருக்குமே என்று அவருக்குத் தோன்றியது.

திருவாரூர் மோகனாம்பாள் நம்முடையவள் என்ற கௌரவம் வேறு கிடைக்கும். இந்தக் கௌரவத்திற்காகவே எவ்வளவு செலவு செய்தாலும் செய்யலாம் என்று அவருடைய மனம் பல நியாயங்களை எடுத்துப் போதித்தது.

ஆனால் இப்பொழுது அவசரம் அது அல்ல. "மாமா ஆனால் இப்பொழுது துணிந்தவர். இம்மாதிரி வீண் பொல்லாதவர். எதற்கும் துணிந்தவர். இம்மாதிரி வீண் வம்புகளிலேயே தம் செல்வம் எல்லாவற்றையும் இழந்தவர். இடைரென்று அவர் மோகனாவுக்கு ஏதாவது ஒரு கெடுதல் செய்துவிட்டால் என்ன செய்வது? அவருக்கு ஆள் பலம் அதிகம். பண்ணையிலுள்ள அவ்வளவு பேரும் அவருக்குப் பயந்து நடப்பவர்கள்' என்று எண்ணினார் மைனர்.

அதில் இருந்த ஆளிடம், "கூப்பிடு, காரியஸ்தரை !" என்றார்.

குல்லாவைக் கழற்றிக் கையில் எடுத்துக்கொண்டு, குடுகுடு வென்று ஓடிவந்தார் காரியஸ்தர்.

"மோகனாவுக்கு ஒரு வண்டியைக் கட்டி ஊருக்கு அனுப்பச் சொல்லும். ஜாக்கிரதை !" என்றார் மைனர். காரியஸ்தர் பேசாமல் அங்கேயே நின்றார்.

"என் நிற்கிறீர்?"

"அவாளே வண்டி கேட்டாங்க. மானேஜரைக் கேட்டேன் நான். 'வண்டி கொடுக்கிறதாகப் பேச்சு இல்லை. ஊருக்கு நடந்து போகட்டும்'னுட்டாரு."

"ஓஹோ, அவ்வளவுக்கு ஆகிவிட்டதா?" என்று சிறிது யோசித்தார் மைனர்.

"அவர்களுக்குச் சாப்பாடு போச்சா?"

"சாப்பாடு குடுத்தனுப்ப வேண்டாம்னுட்டாரு."

"சரி, நீர் போகலாம்."

காரியஸ்தர் வெளியே சென்றவுடன் மைனர் கடுமையாக யோசிக்கலானார். கடம்பவனம் பிள்ளை கையிலிருந்து தன் ஒருவனால்தான் அவளைக் காப்பாற்ற முடியும் என்ற எண்ணம் அவருக்கு வந்தது. உடனே தானே ஒரு சால்வையை எடுத்துப் போர்த்திக்கொண்டு, வெளியே புறப்பட்டார். நேராக வண்டிகள் நிறுத்தப்பட்டிருக்கும் காடி கானாவை அடைந்தார்.

அங்கு வந்ததும், "வேலப்பா !" என்று கூப்பிட்டார். பின்புறத்தில் தூங்கிக்கொண்டிருந்த வேலப்பன் அலறிப் புடைத்துக்கொண்டு, எழுந்து வந்து, "எஜமான் !" என்று கும்பிட்டான்.

"நம்முடைய 'கோச்'சைப் பூட்டி, நாட்டியத்துக்கு வந்தவங்களை நீயே போய் ஜாக்கிரதையாகத் திருவாரூரில் கொண்டு விட்டு வரவேண்டும். கூடத் துணைக்கு வேண்டுமானால் மருதையையும் சந்தனையும் கூட்டிப்போ !" என்றார் மைனர்.

அதைக் கேட்ட வண்டிக்காரன் தயங்கி நின்றான். எஜமானுடைய உத்தரவு அவனுக்குத் திகைப்பாயிருந்தது. ஏனெனில், பண்ணையில் உள்ள 'கோச்'சில் மைனரைத் தவிர வேறு யாரும் ஏறும் வழக்கம் இல்லை.



அவனுடைய குழப்பத்தையும் தயக்கத்தையும் கண்ட மைனர், "என்ன வேலப்பா?" என்றார்.

"நம்ம பெரிய மாடு இருக்கு. வில்லு வண்டியைப் பூட்டி அழைச்சிகிட்டுப் போகலாமில்லே !"

"வேண்டாம். நம் 'கோச்சு' வண்டியிலே போகட்டும். நான்தான் பூட்டி அனுப்பினேன் என்று அவர்களிடம் சொல் !"

"இல்லே, அது எஜமான் உக்காருகிற வண்டியாச்சேன்னு பார்க்கிறேன் !"

"அது எனக்குத் தெரியும் ! நான் சொன்னதைச் செய் !"

பதில் பேசாமல் அங்கிருந்து சென்றான் வேலப்பன்.

இரவு மூன்று மணி இருக்கும். வடிவாம்பாள் ஜாகையின் வாசலில் மைனரின் சாரட்டு வந்து நின்றது. ரப்பர் டயர்கள் போட்ட வண்டி. ஆதலால் சத்தமே கேட்கவில்லை. வண்டிக்காரன் கதவைத் தட்டினான். "அம்மா ஊருக்குப் போகலாமா?" என்று கேட்டான். அதுவரை தூங்காமல் கலகத்தைப்பற்றியே பேசிக்கொண்டிருந்த தாயும் மகளும், அங்கிருந்து போனால் போதும் என்ற எண்ணத்தில் புறப்பட்டார்கள்.

கடம்பவனம் பிள்ளையோ "அந்த மோகனாவை என்ன செய்வது?" என்று யோசித்துக்கொண்டே இருந்தார். திருவாரூர் கோவிலில் அவளுக்குள்ள மான்யத்தைப் பிடுங்கிவிடச் சொல்லலாமா? அவள் கச்சேரிக்குப் போகும் இடங்களில் எல்லாம் நாம் சென்று தகராறு செய்யலாமா? அல்லது நாட்டியமே கூடாது என்று ஒரு சட்டம் கொண்டுவரச் செய்யலாமா?" என்று நாகரிகமான முறையில் அவர் மனம் குழம்பிக்கொண்டே இருந்தது.

வண்டியோ, திருவாரூர்ச் சாலையில் கவலையில்லாமல் போய்க் கொண்டிருந்தது. பலபலவென்று விடியும்போது மோகனாவின் வீட்டு வாசலில் வண்டி வந்து நின்றது. வண்டிக்காரன் பெட்டிகளை எடுத்து உள்ளே வைத்தான். மோகனாவும் தாயும் உள்ளே இறங்கிச் சென்றார்கள்.

வடிவாம்பாள் வண்டிக்காரன் கையில் ஒரு ரூபாயை எடுத்துக் கொடுத்தாள். "இந்தாப்பா, நீ செய்த உபகாரத்துக்கு ரொம்ப நன்றி வைத்துக்கொள்" என்றாள்.

வண்டிக்காரன் சிரித்துக்கொண்டே, "எஜமான் கோவிப்பாரு வேண்டாமுங்க" என்று சொல்லிவிட்டு, "எஜமானுக்கு உங்க குழந்தை நாட்டியத்துலே ரொம்பப் பிரியம் வந்துட்டுது போலேயிருக்கு. அவங்களே நேரே காடிகானாவுக்கு வந்து 'நம்ம கோச்சையே பூட்டிட்டுப் போயிடு'ன்னு சொன்னாங்க" என்றான்.

"அப்படியா ! நான் ரொம்ப சந்தோஷப்பட்டேன்னு மைனர் கிட்டச் சொல்லு" என்றாள் வடிவாம்பாள்.

பேசிக்கொண்டிருக்கையில்,

இவ்வாறு உள்ளே அவர்கள் உடம்பு முழுவதும் ஒரு நாலு முழத் வாசலில் அதிகாலையாதலால் துண்டினால் போர்த்திக்கொண்டு ஒத்துக்கார தருமன் வடிவாம்பாளின் வீடு நோக்கி வந்தான். வீட்டுக்குள் நுழையப் போனவன் சட்டென்று நின்று திரும்பினான். வாசலில் நின்றிருந்த மைனரின் கோச்சு வண்டி அவனுடைய கவனத்தைக் கவர்ந்தது. ஒரு விநாடி யோசித்தான்.

"ஒஹோ, அப்படியா !" என்று தனக்குத் தானாகவே தலையை ஆட்டிக்கொண்டு, வீட்டுக்குள் நுழையாமல் வந்த வழியே வேகமாக நடந்தான்.

தொட்டுப் பல வருஷங்கள்

தருமன் நாதசுரத்தைத் கற்பனைக்குச் சந்தர்ப்பமே ஏற்படாமல் ஆகிவிட்டதால் அவனுடைய வாசலில் பார்த்ததும், அவன் தவித்தான். இன்று இந்த வண்டியை கற்பனை அளவுக்கு மீறிவிட்டது.

நேரே ரயில்வே ஸ்டேஷனுக்கு ஓடினான். அங்கு பிளாட்பாரத் தில், கையிலே ஒரு வாழை இலைப் பொட்டணத்தில், தஞ்சாவூர்க் சுதம்பத்தை வைத்த வண்ணம் சண்முகசுந்தரம் உலாவிக்கொண் டிருந்தான். தருமனைப் பார்த்தவுடனே, "என்ன தருமண்ணே ! அவங்க அங்கே, வீட்டிலே இருக்காங்களா?" என்று ஆவலுடன் கேட்டான்.

"இருக்காங்க— ஆனா அது ரொம்பப் பெரிய இடத்து விஷயம் போலயிருக்கே !" என்றான் தருமன்.

"என்ன?" என்றான் சண்முகம்.

"இல்லே ! நான் போகும்போது வாசலிலே ஒரு வண்டி இருந்தது. பக்கத்திலே போய்ப் பார்த்தா ஏதோ பிரபுக்கள் வண்டிபோலே தோணிச்சு. கிட்டத்திலே போய்ப் பார்த்தா - நமக்குத் தெரிஞ்ச இடத்து வண்டிதான் !"

"யாரு? யாரு வண்டி?" என்று பரபரப்புடன் கேட்டான் சண்முகம்.

"வேறு யாரு வண்டி தம்பி அப்படி நிற்கும்? எல்லாம் நம்ம சிங்கபுரம் மைனர் கோச்சு வண்டிதான் !" என்று கடைசி வார்த்தையை மட்டும் ரகசியமாய்க் காதோடு கூறினான் தருமன்.

அவன் கூறிய வார்த்தைகள் சண்முகத்தின் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியதுபோல் இருந்தன. கையில் இருந்த பொட்டலம் நழுவிக் கீழே விழுந்தது. சண்முகம் திரும்பி வேகமாக நடந்தான். பிளாட்பாரத்தில் புகுந்து ரயிலில் ஏறி உட்கார்ந்திருந்தான்.

அவனுடைய வேகமும் ஆத்திரமும் தருமனுக்கு ஆச்சரியமா யிருந்தன. "ஏன் தம்பி, நம்ம சூஜாவை வாங்கிக்கிட்டு போயிடுவோமே !" என்றான்.



"வேணும்னா நீ போய் வாங்கிக்கிட்டு வா" என்றான் சண்முகம்.

ரயில் ஊதியது. சண்முகத்தின் சிந்தையைப்போல எஞ்சின் 'குப் குப்' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே புறப்பட்டது.

தருமன், தன் கையில் சூஜாவுடன் வடிவாம்பாள் வீடு நோக்கி வரும்போது, அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. 'சிங்கபுரம் மைனர் அங்கு இருந்தால் அவரிடம் எப்படி நடந்துகொள்வது? 'எங்கே வந்தாய்' என்று கேட்டால் என்ன சொல்வது? 'ஏண்டா நேற்று கலியாணத்துக்குச் சண்முகம் வாசிக்க வரவில்லை?' என்று உதைத்தாரானால் என்ன செய்வது? நமக்கென்ன ! 'அந்தச் சண்முகம் அப்படித்தானுங்க ! நான்கூடச் சொன்னேன் பெரிய இடத்துத் தயவு வேணும்னு. அவன் கேட்கலை' என்று புளுகிவிடுவது' என்று நிச்சயம் செய்துகொண்டான்.

'மைனர் தயவும் நமக்கு அவசியம் வேணும். அவரிடம் ஒரு கும்பிடு போட்டு, கல்யாணம் விசாரித்துவிட்டு, ஒரு ரொக்கா வாங்கிக் கிட்டுப் போய்க் கடையிலே ரெண்டு சட்டைத் துணியாவது வாங்கணும்' என்று திட்டம் போட்டுக்கொண்டே வடிவாம்பாள் வீட்டு வாசலில் வந்து நின்றான் தருமன்.

வாசலில் வண்டியைக் காணவில்லை.

வாசற்கதவு சாத்தியிருந்தது. கதவைத் தட்டுவதா, கூடாதா என்று தருமன் யோசித்தான்.

அப்போது கதவு திறக்கும் சத்தம் கேட்டது. தருமன் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து, துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு நின்றான். கதவு திறந்தது. வரதன் வெளியே வந்தான்.

"வாங்க, எப்ப வந்தீங்க?" என்றான் வரதன்.

வாசலில் யாரோ பேசுவதைக் கேட்ட மோகனா, வந்திருப்பது யார் என்று பார்த்தாள். தருமன் நிற்பது தெரிந்தது. 'இவர் எப்படி இங்கு வந்தார் !' என்று அவளுடைய மனம் சந்தோஷத்தால் துள்ளியது.

இதற்குள் தருமன், கதவைத் திறந்துகொண்டு வந்தது வரதன் என்பதை அறிந்தான். "என்ன முட்டுக்காரரே, சௌக்கியமா?" என்றான்.

"வாங்க துத்திக்காரரே ! என்ன தொண்டை கட்டி இருக்குதா?"

"துத்தி இல்லே தம்பி, 'ஒத்து நாயனம்' என்று சொல்லு."

"முட்டுக்காரர் இல்லே அண்ணே, 'மத்தளக்காரர்'னு சொல்லு. ஏது இப்படி அதிகாலையிலே..."

"அய்யா இருக்குறாங்களோ?"

"எந்த அய்யா?" என்றான் வரதன்.

"விளையாடாதீங்க தம்பி" என்று மெதுவாக, "மைனர் எசமான்?" என்றான் தருமன்.

"என்ன சொன்னே? அண்ணே, முதுகு வலிக்குதோ? இங்கே யாரையா மைனர்? இது யாரு வீடு தெரியுமல்லே? வடிவாம்பா அம்மா வீடு" என்றான் வாதன்.

"தெரிஞ்சுதான் தம்பி வந்தேன். கண்ணாலே கண்டதுக்கப்புறம் கேட்டா என்ன என்றுதான் கேட்டேன். எங்கிட்டவே ஒட்டுறியே? காலங்காத்தாலே இங்கே சிங்கபுரம் பண்ணை பீட்டன் நின்னுச்சா இல்லியா?"

"அதைப்பத்தி உனக்கென்ன?"

"அவரு இருக்கிறாரான்னு கேட்டேன்.

"அதனாலேதான் காலையிலே வந்தேன். வாசலிலே வண்டி நின்னுது, பார்த்தேன் !"

இம்மாதிரி தருமன் பேசியதைக் கேட்கக் கேட்க வாதனுக்குக் கோபம் அதிகமாயிற்று. "இந்தாய்யா, நீ ஏன் எங்க வீட்டைச் சுத்திச் சுத்தி வாறும்?"

"அப்படிக் கேளு. சொல்றேன் சண்முகசுந்தரம் ரயிலடியிலே இருந்துக்கிட்டு நீங்க வீட்டிலே இருக்கீங்களானு பார்த்துட்டு வாச்சொன்னான். நான் பாத்துட்டுப் போய், 'வாசலிலே சிங்கபுரம் மைனர் வண்டி நிக்குதுன்னு சொன்னேன்.' சரிதான், நமக்கு எதுக்குப் பெரிய இடத்துப் பகைன்னுட்டு வண்டி ஏறிப் போய்விட்டான். நான் கூஜாவை வாங்கிக்கிட்டுப் போக வந்தேன்" என்றான்.

இதைக் கேட்டதும் மோகனாவுக்கு நெஞ்சில் இடி விழுந்தது போல் இருந்தது. தான் கட்டிய கோட்டையெல்லாம் சரிந்து மண்ணோடு மண்ணாகிவிட்டதுபோல் தோன்றியது. சண்முகம் தன்மேல் சந்தேகம் கொண்டுவிட்டான் என்ற எண்ணத்தில் அவள் தலை சுழன்றது. அவளை அறியாமல் 'அம்மா !' என்று அலறிக் கொண்டு, உள்ளே ஓடினாள்.

உள்ளே உடைகளைக் காயப்போட்டுக்கொண்டிருந்த வடிவாம்பாள் "என்னம்மா ! என்ன?" என்று கேட்டுக்கொண்டே ஓடி வந்தாள்.

"அம்மா ! ஆபத்து வந்துடுத்தும்மா ! அப்பவே இந்த நாட்டியத்துக்கு ஒப்புக்க வேண்டாம் என்றேனே, கேட்டியா? அவமானம் வந்துடுத்தும்மா !"

"நீ சொல்லித்தானே நான் ஒத்துக்கிட்டேன்? என்ன அவமானம் இப்போ வந்துட்டுது? ரொக்கம் இரண்டாயிரத்தைந்நூறு ரூபாய் ! இரண்டாயிரத்திலே வைரத்தோடு ! அவமானமாமில்லே. அவமானம் !"

"இல்லை, அம்மா ! அவர் நம்ம ஊர் வரையிலே வந்துட்டு வாசலை மிதிக்காம போயிட்டாரம்மா !"

"எவருடி அவரு?"

"அந்தச் சிக்கலார்தான் அம்மா !"



"சிக்கலாரா? ஏன் போயிட்டாரு? வெட்கம் வந்திடுச்சோ?"

"நம்ப வீட்டு வாசலிலே அந்த வண்டி இருந்துதாம்."

"ஏன், என் வீட்டு வாசலிலே வண்டி நிற்கக்கூடாதா? ஒரு வண்டி இல்லே, ஒன்பது வண்டி நிற்கும். இவன் யாரு கேக்கிறதுக்கு?"

"அம்மா, நீ அவரை அப்படியெல்லாம் சொல்லாதே !" என்று எரிந்து விழுந்தாள் மோகனா.

"ஏன் சொல்லப்படாது? அவன் தில்லானா ஊதுறேன்னு சொன்னானே, ஊதினானா? திருவாரூர் நாயனத்தை எடுத்து ஊது என்று நீ கேட்டியே, எடுத்து ஊதினானா? அவன் ஒரு வம்புக்காரன் ! இனிமே அவன் பேச்சை இந்த வீட்டுக்குள்ளே எடுக்காதே ! எங்கே அந்த ஆளு?" என்று தருமனிடம் வேகமாய் வந்தாள்.

"என்ன அக்கா?" என்று எழுந்தான் தருமன்.

"இந்தா, நீ யாரோ நான் யாரோ ! எதுக்கு அக்கா உறவு கொண்டாடறே? காப்பி வேணும்னா வாங்கிக் குடிச்சிட்டுப் போ. உங்க சிக்கலார் வந்தாரா?"

"ஆமா"

"போயிட்டாரா?"

"ஆமாம்."

"இந்த ஊர் வரையிலே வந்தீங்களே, உங்களுக்குத் துப்பிருக்குதா?" என்றாள் வடிவாம்பாள்.

தருமன் திகைத்தான். "என்ன? என்ன? எதுக்கு?" என்று புரியாமல் விழித்தான்.

"எங்க வீட்டுக் கூஜாவைக் கொண்டாந்து குடுக்க வேண்டாம்! அதை அப்படியே எடுத்துக்குறதா எண்ணமா?" என்றாள் வடிவாம்பாள்.

இருபத்துமூன்றாம் அத்தியாயம்

## நிலை பெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா !



"கூஜாவைக் கொடுக்கிறதாக எண்ணமா இல்லையா?" என்று வடிவாம்பாள் கேட்டதும், தருமனுக்கு ஒரே சமயத்தில் சிரிப்பும் கோபமும் வந்தன. "அட ஏன் அக்கா சத்தம் போடறீங்க?" என்று கேட்டான்.

"இந்தா, மறுபடியும் அக்கா என்கிறியே!" என்று அதட்டினாள் வடிவாம்பாள்.

"சரி! அம்மா இந்தா உன் கூஜா! இதைக் குடுக்கத்தானே வந்தேன்! இல்லாட்டி உன் வீடு தேடி யார் வரப் போறாங்க?" என்று சொல்லிவிட்டுத் தருமன் கூஜாவைத் தூக்கி அவள் முன் "ணங்" என்று வைத்தான்.

வடிவாம்பாள் அதைக் கையில் எடுத்துக்கொண்டு, "சரி, இனிமே அப்படி இப்படினு கேவலமா பேசிக்கிட்டுத் திரியாதே!" என்று எச்சரித்தாள்.

"அட என்னம்மா கேவலத்தைக் கண்டுட்டே?"

"ஆமா, மைனர் எத்தனை பெரிய மனுஷன்! நீ இத்தினியூண்டு ஆளு! நீ பாட்டுக்கு ஓரத்திலே நின்னு ஒன் துருத்தியை ஊதிவிட்டுப் போவியா? அதிகப்படியா பேசிக்கிட்டு!"..... என்று கதவைப் படாரென்று சாத்திக்கொண்டு உள்ளே சென்றாள் வடிவாம்பாள்.

தருமனுக்கோ துருத்தி ஊதுபவன் என்ற வார்த்தையைக் கேட்டதும் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. ஆத்திரத்தோடு கதவைப் படபடவென்று இடித்தான். வடிவாம்பாள் கதவைத் திறந்தாள்.

"இந்தாம்மா, இவரும் அந்தக் காலத்திலே நாயனம் ஊதிக்கிட்டிருந்தவர்தான். கோவில்லே பூசை இல்லாமல் போச்சு. இவரு ஒத்து ஊதப் போனாரு! சும்மா சங்கீதம் தெரியாத ஒத்துக்காரன்னு நினைச்சுக்கிட்டுப் பேசாதே!"

"ஆமா, நீங்க ஊதற கோயிலிலே பூசை எதுக்கு அண்ணே? சாமிதான் ஓடியிருப்பாரே! பாவி மனுசன் ஒத்து ஊதினாராம். நீதான் கதியோட சேர விடமாட்டியே ஐயா! உன் முகத்திலே முளிச்சிட்டு மோகனா அழுதுகிட்டே இருக்கு. பூனை குறுக்கே வந்தாப்பலே எங்கே அய்யா வந்தே? சரி சரி, வழியிலே நிக்காதே! கதவைச் சாத்தணும்!" என்றான் வரதன்.

அப்போதும் தருமன் போகாமல் நிற்கவே, "ஏய்யா, நீ வாங்காம போகமாட்டே போலிருக்கு?" என்றான்.

"வாங்காமல் விட்டுடுவாங்களோ? கொடு அய்யா, எங்க கூஜாவை!" என்றான் தருமன்.

அப்போதுதான் வரதனுக்கும் சண்முகத்தின் கூஜா ஞாபகம் வந்தது. உடனே உள்ளே போய் அதை எடுத்து வந்து தருமனிடம் கொடுத்தான். தருமன் வாங்கிக்கொண்டு முணுமுணுத்துக்கொண்டே புறப்பட்டான்.

ஏற்கெனவே ஏமாற்றம் பற்றாக்குறைக்குத் திட்டுகள் வேறு. அதோடு பசியும் சேர்ந்துவிடவே, நேரே அடுத்த ரயிலுக்காவது சிக்கல் போகும் எண்ணத்தில் ஸ்டேஷனை நோக்கி நடந்தான் தருமன்.

வடிவாம்பாள் தன் கூஜாவைக் கையில் வாங்கியவுடன் ஆத்திரத்தில், கூடத்தில் வைத்துவிட்டுப் போய்விட்டாள். சற்று நேரம்



கழித்து அவளுக்கு ஒரு சந்தேகம் வந்தது. தன் கூஜாவுக்கு உள்ளே டம்ளர் இருக்கிறதா என்று பார்த்துவிட வேண்டும் என்று தோன்றியது. அவசரமாக வந்து கூஜாவை எடுத்தாள். அது கனத்தது.

"அழகர் கோவில் தண்ணி அப்படியே இருக்கு!" என்று சொல்லியபடியே திறந்தாள். உள்ளே டம்ளர் இருந்தது. அதை எடுத்துக்கொண்டு, தொட்டி முற்றத்தருகிலே கொண்டுபோய்க் கூஜாவைத் தலைகீழாய்க் கவிழ்த்தாள். உள்ளிருந்து தண்ணீர் கொட்டவில்லை. ஆனால், அதற்குப் பதிலாகப் பாதாம் பருப்பு, கிஸ்மிஸ், தஞ்சாவூர் முந்திரிப்பருப்பு, லாலா கடை மிட்டாய் இவையெல்லாம் ஒன்றாய்க் கலந்து பொலபொலவென்று கொட்டின. அவற்றைப் பார்த்த வடிவாம்பாளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"மோகனா, இந்தா பாரு அவன் சமத்தை! கொழந்தைங்களுக்கு திங்கறதுக்கு வாங்கி வச்சிருக்கான். அதோடே கொடுத்திட்டுப் போயிட்டான்!" என்றாள் வடிவாம்பாள்.

"குழந்தை ஏதம்மா? அவருக்குத்தான் கலியாணமே இன்னும் ஆகலியே!" என்றான் வரதன்.

ஆனால், குப்பையில் கொட்டப்பட்ட கனிகளும், இன்னபிற பண்டங்களும் தன்னுடையவை என்பதை அறிந்தாள் மோகனா. அவைகளைப் போலவே தன்னுடைய காதலும் தூர எறியப்பட்டதாக எண்ணினாள். பெண்மைக்கு ஆணைக்காட்டிலும் கஷ்டத்தை எதிர்த்து நிற்கும் சக்தி அதிகமாக உண்டு. ஆனால் இம்மாதிரியான அபவாதத்தை மாத்திரம் பெண்களால் பொறுக்க முடியாது. உயிருக்கும் மேலாக மதிக்கும் ஒன்றில் களங்கம் கூறினான் என்று எண்ணியவுடன் மோகனா தலையைக் கவிழ்த்தாள். அவள் கண்ணீர் தரையில் பலபலவென்று உதிர்ந்தது. அப்படியே கீழே அமர்ந்து உட்கார்ந்துவிட்டாள். அவள் பலமெல்லாம் அவளை விட்டு ஓடிவிட்டது போல் தோன்றியது. கை கால்களெல்லாம் இற்றுவிட்டன போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. தலை சுழன்றது. மனத்தில் பித்துப் பிடித்தது போல் பல யோசனைகள் ஓடின.

'நாலுநாள் கனவாகவா முடிகிறது நம் காதல்!' என்று நினைத்தாள். ஆம்; இந்தக் காதல் நேற்றுப் பூத்தது. இன்று உதிர்ந்துவிட்டது. ஆனால், தானாக உதிரவில்லை. அதைச் சந்தேகம் என்னும் தடியால் அடித்து அல்லவா உதிர்த்துவிட்டார்கள்!

அவளுக்குத் தன்மீதே ஒரு வெறுப்புத் தோன்றியது. "காதலாவது காதல்! நீ காதல் செய்யும் தகுதியிலா பிறந்திருக்கிறாய்? முருங்கை மரத்தில் குயில் உட்காருமா? ஏதோ முருங்கைக்குத் தகுந்த கம்பளிப் பூச்சியாகத் தேடிக்கொண்டு உன் வாழ்க்கையை நடத்திவிட்டுப் போவாயா! உனக்கேதடி காதலும் அன்பும்? நீ தாசி, உனக்கு உண்மையிலேயே காதல் பிறந்தாலும் அதை உலகம் ஒப்புக்

கொள்ளாது உன் தாயே உன் காதலை ஒப்புக்கொள்ளவில்லையே !— நீ அதில் தப்பிப் பிறந்தவள் என்கிறாயா? எங்கே சொல்லிப்பார் ! உலகம் கேட்கிறதா பார்ப்போம்.

'உலகம் என்ன வேணுமானாலும் சொல்லட்டும் ! அவராவது என்னை மதித்தாரா? என் வீட்டு வாசலில் வண்டி நின்றது.... உண்மைதான். அதைப் பார்த்தவுடன் இந்த ஒத்துக்காரருக்கு ஏன் அப்படித் தோன்றவேண்டும்? இவர் ஏன் ஓடிப்போய் அவரிடம் சொல்ல வேண்டும்? இவர்தான் சொன்னார். அவர் ஏன் உடனே திரும்பிப்போகவேண்டும்? எதிர் வீட்டு வாசலில் எத்தனையோ வண்டிகள் வந்து நிற்கின்றன. யாரும் சந்தேகப்படவில்லையே ! ஊர் வரையில் வந்த மனிதன் ஆத்திரப்பட்டுப் போவானேன்? வீடு நோக்கி வருவது; உட்காரவேண்டாம், 'மோகனா' என்று கூப்பிட வேண்டாம், 'என்ன விஷயம், ஏன் மைனர் வண்டி வந்தது' என்று கேட்கிறது தானே ! சந்தேகம் தீர்ந்திருக்காதா?—

'ஐயோ, இவருக்காகக் காத்திருந்தேனே ! வருவார் வருவார் என்று வழி பார்த்திருந்தேனே ! இப்படியாயிற்றே !— நானே நேரில் சென்று— நான் எப்படி அவரிடம் செல்வேன் ! அவர் முகத்தில் எப்படி விழிப்பேன் !' என்று எண்ணும்போது அவளுக்கு மூக மூக என்று அழுகை வந்தது அவளால் அழுகையை அடக்க முடியவில்லை.

'கூஜா நிறைய கனி வகைகளும், தின்பண்டங்களும்...... இது யாருக்கு? எனக்குத்தானே ! அன்று அந்தத் தேங்காய் மூடியையும் மல்லிகைப்பூவையும் ரயிலில் கொடுக்கும்போது எத்தனை அன்பாகக் கொடுத்தார் ! அதைப் போலவே இதையும் அன்போடு என் கையில் தந்திருப்பாரே !' என்று நினைத்தாள். உடனே அவளுடைய துக்கம் எல்லாம் தாயின் மேல் கோபமாக மாறியது. "ஏ ! அம்மா, அம்மா !" என்று தாயிடம் ஓடினாள் மோகனா. "நீ ஏன் வண்டி எங்களைக் கொண்டுவந்து விட வந்தது என்று சொல்லவில்லை?...... ஏன் சொல்லவில்லை?" என்று சீறினாள்.

"ஆமாடி, நினைச்சுக்கிட்டாளாம், ஓடி வந்து என் மேலே விழுகிறா ! ஏன், ஊரிலே கேட்கறவனுக்கெல்லாம் நான் பதில் சொல்லணுமோ? இவரு கோடீச்வரன், சந்தேகப்பட்டுட்டாரு. கனகாபிஷேகம் பண்றதை நிறுத்திப்பிடுவாரு. சரிதான் போ !" என்று எரிந்து விழுந்தாள் தாய்.

தாயின் கோபம் அவளுடைய உள்ளத்தில் சுரீர் என்று தைத்தது. ஆற்றுவாரின்றி, தேற்றுவாரின்றி அப்படியே துயரத்தை யாரிடமும் சொல்ல முடியாமல் தவித்துக்கொண்டே மனம் இடிந்த நிலையில் உள்ளே சென்றாள்.

அன்று மாலை 'பாடம் பார்க்கும்' போது மாடியில் உள்ள நாட்டிய ஹாலில் ஜமுக்காளம் விரித்திருந்தது. வரதன்



வாத்தியத்துடன் தயாராக அமர்ந்திருந்தான். நட்டுவனாரும் கையில் தலைக்கோலுடன் உட்கார்ந்திருந்தார். வடிவாம்பாள் கீழே ஏதோ வீட்டு வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தாள்.

ஒத்திகைக்கு வந்த மோகனா அன்று புது மாதிரியாகத் தோற்றமளித்தாள். வழக்கம் போல் அவள் அணியும் பட்டுப் புடைவையும் பட்டு ரவிக்கையும் இல்லாமல் ரொம்ப சாதாரணமான உடையில் வந்திருந்தாள். அவள், நெற்றியில் திருநீறைப் பூசியிருந்தாள். பனியில் அடிபட்ட தாமரைப் பூப்போல் அவள் முகம் ஒட்டியிருந்தது. செந்தாழை உள் மடல்போல் அவள் மேனி துவண்டிருந்தது. கண்கள் இரண்டும் கலங்கித் தெறியவையாக இருந்தன. ஆயினும் சிந்தையில் உள்ள அதிர்ச்சி அந்தக் கண்களில் குடிகொண்டிருந்தது. இயற்கையாக உள்ள புன்னகைக்குப் பதிலாக ஏக்கப் புன்னகை ஒன்று அவள் முகத்தில் அடிக்கடி தோன்றியது. வந்தவுடன் தட்டிக் கும்பிட்டுவிட்டு ஆட ஆரம்பித்தாள். எப்போதும் நட்டுவனார் சொல்லித்தான் பாட்டு தொடங்கும். இன்று அவளாகவே பின்வரும் தேவாரப் பாடலை எடுத்தாள்.

நிலைபெறுமாறு எண்ணுதியேல
நெஞ்சே நீவா !

'ஏ நெஞ்சமே ! நிலையற்ற உள்ளமுள்ள ஒருவனைக் காதலித்தாய். அதன் பயனாக, இப்போது அலைவீசும் கடல் போல் தத்தளிக்கிறாய். உனக்கு நிம்மதி வேண்டுமென்றால், என்றும் நித்தியமானவனும் எப்பொழுதும் கை விடாதவனும் ஆகிய தியாகராஜப் பெருமானைக் காதல் செய். அவன் திருக்கோயிலுக்குச் செல்.

"நீ பிறந்த பிறப்புக்கேற்ப அவனுடைய கோயிலை அலகிடு, மெழுகு. அவனுடைய திருமேனியை அலங்கரிக்க மலர் கொய்து மாலைகளைக் கட்டு. ஆடியும், பாடியும் அவனுடைய தாளை வணங்கு" என்று எண்ணமிட்டு உள்ளம் உருகி அதற்கேற்றாற்போல் நாவுக்கரசர் பெருமான் பாடியுள்ள திருத்தாண்டகத்தைப் பாடத் தொடங்கினாள்.

**நிலை பெறுமாறு எண்ணுதியேல்**
**நெஞ்சே ! நீ வா !**
**நித்தலும் எம் பிரானுடைய**
**கோயில் புக்குப்**
**புலர்வதன் முன் அலகிட்டு**
**மெழுக்கும் இட்டுப்**
**பூமாலை புனைந்து ஏத்திப்**
**புகழ்ந்து பாடித்**

தலையாரக் கும்பிட்டுக்
கூத்தும் ஆடிச்
"சங்கரா! சயபோற்றி!
போற்றி" என்றும்
"அலைபுனல் சேர் செஞ்சடை
எம் ஆதி!" என்றும்
"ஆரூரா!" என்றென்றே
அலறா நில்லே.

என்று பாடப்பாட அவளுக்கு ஒரு பரவசம் வரலாயிற்று. ஒவ்வொரு அபிநயத்திலும் தன்னை மறந்தாள். கடைசியில் இரு கண்களிலும் விழி நீர் சோர கை முந்தியதோ, கால் முந்தியதோ, கண் முந்தியதோ, மெய் முந்தியதோ, மனம் முந்தியதோ என்று சொல்ல முடியாமல், இரு கைகளையும் உயரத் தூக்கி, அஞ்சலி ஹஸ்தத்துடன் நடராஜ விக்ரகத்தை நோக்கி, முன்னும் பின்னுமாக மூச்சுக் காற்று வேகத்தில் ஆடி வந்தாள் மோகனா. ஆட்டம் உச்ச நிலையை அடைந்தது.

"ஆடும் தியாகனே! உன்னை நம்பினேன். உலக வாழ்வில் ஒருவனைத்தான் கைப்பற்றினேன். அவன் ஓடுகிறான். நான் தேடுகிறேன். என்னை வாழ்விப்பாய்! இல்லையேல் உன் கழல்தான் துணை" என்ற எண்ணம் அவள் உள்ளத்தில் ஓடியது. ஏமாற்றத்தில் உடைந்த உள்ளம் இறைவன் முன் ஒரே அடியாய் ஓலமிட்டது. "ஆரூரா! அபயம்! ஆரூரா! அபயம்!" என்று அலறி, "என்னை எப்படி ஆட்கொள்வாயோ?" என்று ஆடி ஆடித் துவண்டு வீழ்ந்தாள் மோகனா.

சிலையின் காலடியில் அவளுடைய கூப்பிய கரங்கள் கூம்பிய தாமரை மொட்டுப்போலக் கிடந்தன. பதறி எழுந்தனர் கோஷ்டியினர். ஓடிவந்தாள் வடிவாம்பாள். "மகளே!" என்று அலறித் தூக்கினாள். மூச்சிருக்கிறது. முகத்தில் சிரிப்பிருக்கிறது. ஆனால் பேச்சில்லை. அங்கிருந்த நால்வரும் திகைத்தனர். என்ன செய்வதென்று அறியாது நின்றனர். மோகனாவின் உடம்போ வியர்த்துச் சில்லிட்டது.

"மோகனா! மோகனா!" என்றாள் தாய். பேச்சில்லை. முகத்தில் தண்ணீர் தெளித்தாள், விசிறினாள். அப்போதும் பேச்சில்லை.

இதைப் பார்த்துக்கொண்டே இருந்த வரதன் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான். "எல்லாம் இந்த வண்டியிலே வந்த வினையம்மா" என்றான்.

வடிவாம்பாளுக்கு வரதன் சொல்வது சரி என்று பட்டது. உள்ளே ஓடினாள். அங்காளம்மன் விபூதியை இரு கைகளிலும் அள்ளிக் கொண்டு ஓடிவந்தாள்.



"ஆமடா, நீ சொல்றபடி வண்டியிலே வந்ததுதான் குழந்தைக்கு ஆகலே! வயசுப் பெண். வழியிலே பேயும் பிசாசும் ஓடுது. எதிலே பயந்திருக்கோ!" என்று விபூதியை முகத்தில் இட்டாள்.

ஆனால் வரதனுக்கு மாத்திரம் இது வண்டியால் வந்த வினைதான் என்றும், வழியிலே வந்த பிசாசு தருமனுடைய சந்தேகத்தின் உருவத்தில்தான் வந்தது என்றும் தெரியும்.

இதனிடையே மோகனா கண்விழித்தாள். "அம்மா, அவர் வந்தாரா?" என்று கேட்டாள்.

தாயாருக்கு 'எவர்' என்பது புரியவில்லை. இருந்தாலும் "வருவார் அம்மா. நிச்சயம் வருவார்" என்று அன்போடு ஒரு பொய்யைச் சொல்லி, பெண்ணை மடியில் போட்டுக்கொண்டாள். இந்த ஆறுதலில் மோகனா கண் அயர்ந்தாள்.

ஆனால் வரதனோ, "தாயே, உன் வாக்குப் பலிக்க வேண்டும்" என்று நினைத்துக் கொண்டான்.

இருபத்து நான்காம் அத்தியாயம்

## சவடால் வைத்தி



உங்களுக்குச் சவடால் வைத்தியைத் தெரிந்திருக்க நியாயம் இல்லை. ஒரு வேளை அவர் அடையாளத்தைச் சொன்னால் உங்களுக்கு அவரை எங்கேயோ பார்த்திருக்கிறோம் என்ற ஞாபகம் வரலாம். சுமார் ஐந்தடி எட்டு அங்குல உயரம் இருப்பார். எப்போதும் ஒன்பதினாயிரம் மல் வேஷ்டியை மூலைத்தார் வைத்துக் கட்டியிருப்பார். வலைப்பனியன் போட்டிருப்பார். அந்த வலைகள் மேலே தெரியும்படி நைஸான புக் மஸ்லின் ஷர்ட் அணிந்திருப்பார். அந்தச் சட்டையில் உள்ள கடிகாரப்பையில் இருந்து பித்தான் துவாரம் வரையில் ஒரு டாலர் போட்ட தங்க கிலிட் செயினும், பைக்குள் "ராஸ்கோப்" கடிகாரமும் வைத்திருப்பார். ஏதோ திருடனுக்கு அடையாளம் சொல்கிறாற்போல் சொல்கிறோமே என்று எண்ண வேண்டாம். அந்த ஆசாமி ஒருமாதிரியான பேர்வழி.

அவர் காதிலே ஒற்றைக்கல் கடுக்கன் இருக்கும். அவரை நெருங்கினால், அத்தர் வியாபாரியின் பெட்டி கீழே விழுந்து உடைந்தால் என்ன நாற்றம் வருமோ, அத்தனை வாசனைகளும் அடிக்கும். நெற்றியில் புனுகு வைத்து, அதன்மேல் குங்குமப் பொட்டிடுவார். புருவத்தில் அரகஜா போடுவார். முக்கியமாக அவரை

மூன்று இடங்களில் பார்க்கலாம். ஒன்று, நாடகக் கொட்டகை, இரண்டாவது, தாசிகள் வீடு; மூன்றாவது, பணக்காரர்களின் தனி அறைகள்.

அவருடைய தகப்பனார், வேதம் பூராவையும் மனப்பாடம் செய்திருந்தார். இவரோ அத்தனை தாசிகளின் பெயரையும் தலைகீழாய் ஒப்பிப்பார்.

சிவராம சாஸ்திரிகள் என்பவர் ஒரு பெரியவர். அப்படி இருந்தும் கேவலம், மித்தையான இந்த உலக பாசம் அவருடைய மனத்தில் நெடுநாள் இருந்து வந்தது. அந்தப் பாசத்தை அறவே ஒழித்து, அவரைச் சன்யாச ஆசிரமத்தில் ஈடுபடுத்திய பெருமை முழுவதும் இந்த உத்தம புத்திரனையே சாரும்.

இவனை ஈன்ற தாயார் தனக்குப் புத்திரன் இல்லாவிட்டால் மேல் உலகத்தில் போய் நரக வேதனை அனுபவிக்க வேண்டி வருமே என்று மிக வருந்தினாள். வைத்தி பிறந்தான். பெரியவன் ஆனான். தாய் தந்தையர்களுக்கு, மேல் உலகத்தில் போய் நரக வேதனையை அனுபவிக்கும் தொந்தரவில்லாமல், இந்த உலகத்திலேயே அந்த வேதனையைப் பரிபூரணமாக அளித்தான்.

இவனுடைய கிராப்பும், சிகரெட்டும், சவடாலும், கெட்ட நடவடிக்கைகளும் அவர்களுக்கு மனவேதனையை அளித்தன. பெற்ற மகராசி போய்ச் சேர்ந்தாள். அதுவரை பல்லைக் கடித்துக்கொண்டு வீட்டில் இருந்த சிவராம சாஸ்திரிகள், தன் செல்வத்தை இந்தப் புத்திரன் கையில் கொடுத்தால், அதன் மூலம் இவன் செய்யும் பாவத்திற்கும் சேர்ந்து தாம் கஷ்டம் அனுபவிக்கவேண்டி வரும் என்ற அச்சத்தால் அந்தப் பத்து மா நிலத்தையும் ஒரு வேத பாடசாலைக்கு எழுதி வைத்துவிட்டு, காஷாயம் வாங்கிக்கொண்டு ரிஷிகேசம் போய்ச் சேர்ந்தார்.

பெற்றோர் வைத்த செல்வத்தில் வைத்தி என்ற பெயர் மட்டுந் தான் பையனுக்கு மிஞ்சியது. அதோடு அவன் சுயார்ஜிதமாகச் சம்பாதித்த கெட்ட பழக்கங்கள் அவ்வளவும் அவனிடம் குடிகொண்டன.

ஒருவன் முகத்தைப் பார்த்த மாத்திரத்தில் அவன் ஜாதகத்தில் ஒன்பது கிரகங்களும் இருக்கும் இடத்தைச் சொல்லிவிடுவார் சாஸ்திரிகள். பையனும் ஒருவிதத்தில் அப்படித்தான். எதிராளியின் முகத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே "ஒன்பதாம் பந்து ஜோடியா?" என்று கேட்டுவிடுவான். அவருக்கு சகஸ்ரநாமத்தில் உள்ள அத்தனை நாமாவும் மனப்பாடம். பையனுக்கு அத்தனை பந்தயக் குதிரைகளின் பெயர்களும் மனப்பாடம்.

இவரைப் பலர் பலவிதமாக அழைப்பார்கள். அவற்றுள் ஒன்று "சவடால் வைத்தி", மற்றொன்று, "கிராப்புத்தலை வைத்தி";



இன்னொன்றோ, "பெரிய, பெரிய" அல்லது "திரு திரு" என்னும் அர்த்தத்தைக் கொடுக்கக்கூடிய ஒரே மாதிரியான இரண்டு எழுத்துப் பெயர். இவரிடம் அகப்பட்டவர்கள் எத்தனை பெரிய மனிதர்கள் ஆனாலும் கடைசியில் 'திரு திரு'வென்று விழிப்பார்கள் என்ற ஒரு அர்த்தத்தில்தான் இவருக்கு அந்தப் பெயர் பொருந்தும்.

இந்தப் புள்ளியைச் சிங்கபுரம் கலியாணத்தில் சீட்டாட்டம் நடந்த வீட்டிற்குள் கடம்பவனம் நுழைந்தாரே, அப்போதே அறிமுகம் செய்ய நினைத்தோம். ஆனால், இவர் அப்போது மூணு சீட்டில் மும்முரமாக ஈடுபட்டிருந்ததால் இவரைத் தொந்தரவுச் செய்ய விரும்பவில்லை.

அன்று இரவு நடந்த நாட்டியக் கச்சேரியில் இவரும் இருந்தார். மோகனாவின் ஆட்டத்தை மற்றவர்கள் பார்த்து ரசிக்கும்போது இவர் மட்டும், மைனர் மோகனாவைப் பார்ப்பதைப் பார்த்துப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தார். 'அந்தப் பார்வையால் நாம் கொஞ்சம் பணம் சம்பாதிக்கலாம்' என்ற நினைப்பில் அவருடைய மனம் அன்று இரவு பல திட்டங்கள் போட்டுக்கொண்டிருந்தது.

அதிகாலையில் எழுந்து, மோகனா இறங்கியிருந்த ஜாகைப்பக்கம் சென்றார். அங்கு வாசலில் கடம்பவனம் நிற்பதைக் கண்டார்.

"ஏய் வைத்தி ! இவங்க எங்கடா போனாங்க? வண்டித்தடம் இருக்கு. பண்ணைக் கோச்சாட்டம் இருக்கு. உனக்கு ஏதாவது தெரியுமா?" என்றார் கடம்பவனம்.

வைத்திக்கு அதிலிருந்து ஒன்று மாத்திரம் தெரிந்தது. மோகனா ஊருக்குப் போய்விட்டாள் என்பதுதான் அது. உடனே 'எனக்கு ஒன்றும் தெரியாது' என்று உண்மையைச் சொல்லிவிடாமல், "ஓய் ! இதுதானே ! என் வாயைக் கிண்டுகிறீரே !" என்று சொல்லி மழுப்பி விட்டுச் சிந்தித்தவண்ணம், குளக்கரைப் பக்கம் போனார். எதிரே வேலப்பன் வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தான். அவனிடம் குருட்டாம் போக்கில் ஒரு கேள்வியைப் போட்டார்.

"என்னடா, கொண்டுபோய் விட்டு வந்துட்டியா?"

"ஆமா எஜமான். பொழுது விடியறதுக்கு முன்னாலேயே போய் இறங்கிட்டாங்களே !" என்றான் வேலப்பன்.

"மோகனா என்ன சொன்னாள்?"

"அது ஒண்ணும் சொல்லலே. அவங்கம்மாதான் ரொம்ப சந்தோஷம்னாங்க."

"சரி, சரி, வண்டியைக் கொண்டுபோய் அவுத்துப் போடு" என்று உத்தரவு செய்தார். ஏதோ இவர் சொல்லாவிட்டால் வண்டி அப்படியே பூட்டியபடி நிற்கும் என்பதல்ல, அவர் அபிப்பிராயம். சும்மா ஒரு அதிகாரம் செய்து உரிமையை நிலை நாட்ட எண்ணினார். அழகைப் போல் உள்ளத்தைக் கவருவது வேறொன்றுமில்லை.

அதிலும் திருவாரூர் மோகனாவின் அழகுக்கு அடிமையாகும் பாக்கியம் தமக்குக் கிடைக்காதா என்று பல பெரிய கைகள் காத்திருந்தன. அக்காலத்தில் நாலு பெரும்புள்ளிகள் ஒரு இடத்தில் கூடிவிட்டால் மோகனாவின் எழிலைப்பற்றி இடையே பேசிக்கொள்வது வழக்கமாயிருந்தது. இந்தச் சிங்கபுரம் மைனரோ, பெரும்புள்ளி. அதோடு அவருக்குச் சிறிது சபலம் தட்டியிருப்பதாகவும் வைத்தி அறிந்துவிட்டார். இனி விடுவாரா? இந்த இரண்டு பேருக்கும் ஒரு முடிச்சைப் போட்டுவிட்டால், தான் இனி பிறர் முடிச்சை அவிழ்க்க வேண்டிய அவசியம் நேராது என்று வைத்தியின் படுமூளை கூர்மையாக வேலை செய்தது.

இதன் பிறகு வைத்தி எப்படி இவ்வளவு சீக்கிரம் மைனர் இருக்கும் இடத்துக்கு வந்தார் என்பதை நாம் சொல்லவே முடியாது. மைனரிடம் வரும்போதே, "மைனர்வாள்! ரொம்ப சந்தோஷம்! நான் ஊருக்குப் போயிட்டுவரேன். கலியாணம் ரொம்ப அற்புதமாக நடந்தது!" என்று சிரித்துக்கொண்டே வந்தார்.

"எங்கய்யா வந்தீர்? நான் வெளியே புறப்பட்டுக்கிட்டிருக்கேன். டே சந்தனம் வெத்திலை பாக்குக் கொடு அய்யாவுக்கு" என்று அலட்சியமாய் உத்தரவு செய்தார் மைனர்.

பையன் சந்தனம், வெத்திலை பாக்கு கொண்டுவரப் போனான். அந்தச் சமயம் பார்த்து வைத்தி, வைத்தார் தீயை!

"மோஹிக்கு ரொம்ப ஆனந்தம்! என்னிடத்திலே சொல்லி 'மாமா நீங்க ஸ்பெஷலா சொல்ல வேணும்னு' கேட்டுண்டா" என்றார்.

இதைக் கேட்ட மைனர் திகைத்தார். அவசரமாய்ப் போகப் புறப்பட்டவர் நாற்காலியில் உட்கார்ந்தார்.

"அது யார் அய்யா, மோஹி?" என்றார்.

வைத்தி கடகடவென்று சிரித்தார். "ஓ உங்களுக்குத் தெரியாது? நம்ம மோகனாதான். ராத்திரி, 'ஸ்பெஷ'லா வண்டி கட்டி அனுப்பினீங்களே, அதிலே அவளுக்குப் பரமதிருப்தி."

இதைக் கேட்டவுடன் மைனரின் முகத்தில் ரத்தம் ஏறுவதைக் கவனித்தார் வைத்தி. மைனரின் அசட்டுச் சிரிப்பு தம் சம்பாத்தியத்துக்கு ஆணிவேர் என்பதை உணர்ந்தார்.

"அப்படியா? அது என்ன மோகனாவை மோஹின்னீங்க?" என்றார் மைனர்.

"அது குழந்தையா யிருக்கும்போது அப்படியே கூப்பிட்டுப் பழக்கமாகிவிட்டது. அவ என் வீட்டிலேதானே வளர்ந்தாள்?" என்று ஒரு புதுப் பொய்யைத் தூக்கி எறிந்தார் வைத்தி.

உலகத்தில் மற்றவர்கள் எல்லாம் பொன்னை முதலாக வைத்து வியாபாரம் செய்வார்கள். வைத்தியோ பொய்யை முதலாக வைத்து வியாபாரம் செய்பவர். இந்தப் பொய்யான உலக வாழ்வுக்கு அதையே



முதல் போட்டால் போதும் என்பது அவர் அநுபவத்தில் கண்ட உண்மை.

மோகனாவுக்கு வைத்தி வேண்டியவர் என்றதுமே மைனரின் சித்தை அறுபது மைல் வேகத்தில் ஓடியது. அதற்குள் பையன் சந்தனம் வெற்றிலை பாக்கு கொண்டுவந்தான். மைனர் எழுந்தார். அலமாரியைத் திறந்தார். அதிலிருந்து ஒரு பயில்கன் வேஷ்டியையும் துப்பட்டாவையும் எடுத்தார்; தாம்பாளத்தில் வைத்தார். தம் கையால் வைத்தியிடம் சன்மானம் கொடுத்தார்.

"இதெல்லாம் எதுக்கு மைனர்வாள்! நான் சென்னட வேஷ்டி கட்டுவதில்லை. ஒன்பதினாயிரந்தான் கட்டுவேன்" என்று கூறிக் கொண்டே கையில் வாங்கினார் வைத்தி!

"சரிதான் வைத்தி! இந்தாரும், கிளாஸ்கோ மல்லும் ஒரு பீஸ் வாங்கிக்கொள்ளும்" என்று ஐம்பது ரூபாயை எடுத்துக் கொடுத்தார்.

"ஆமா, அப்படியென்றால் உமக்கு அவளை ரொம்ப நன்னாத் தெரியுமா?"

"அதென்ன அப்படிக் கேட்டுப்பிட்டிகள். அவ எழு வயசாயிருக்கிற போதே கோசர்ஜான் பாட்டுக்குக் கூடவே கூட்டிண்டு போவேன். எந்த வித்வானைக் கண்டாலும் நாலு கீர்த்தனங்களை எழுதிப் போடச் சொல்லுவேன்— இப்படியே—"

"மோகனாவுக்குப் பாடவும் வருமா?"

வைத்தி திகைத்தார். உடனே சமாளித்துக்கொண்டார். 'வருமாவா? பேஷா பாடுவாள். நான்தான் பொம்மனாட்டி கச்சேரி பண்ணினால் தக்க பக்க வாத்தியம் அமையாது. நீ நாட்டியத்தையே கத்துக்கோன்னு அட்வைஸ் பண்ணினேன்."

மைனருக்கு இதைக் கேட்கக் கேட்க ஆனந்தமாய் இருந்தது. மேலும் அக்கறையுடன், "ஆமாம், அந்தப் பெண் எப்படி?" என்று கேட்டார்.

"தங்கக் கம்பின்னா தங்கக்கம்பி!"

"அட, அழகைக் கேக்கல்லேங்காணும்! அதுதான் உலகத்துக்கே தெரியுமே. குணம் எப்படிங்கறேன்?"

"அது கொஞ்சம் நீக்குச்சிதான். இந்தக் காலத்திலே அப்படி ஒரு பொண்ணைப் பார்க்கவே முடியாது. நேத்து உங்க மாமா பட்ட பாட்டைத்தான் நீங்க பாத்தீங்களே!" என்றார் வைத்தி.

இதைக் கேட்டதும் மைனருக்குத் தலை தொங்கியது. ஏதோ யோசித்தார்.

"இந்தா பாருங்க மைனர்வாள். அவ இந்த தில்லானாவுக்கே அழகு. சென்ற பதினெட்டு வருஷங்களுக்குள்ளே பிரம்மதேவன் இப்படி ஒரு அழகைப் படைக்கல்லே. ரோஜாப்பூவிலே வாசனை இருக்கிறாப்பிலே வித்தையும் இருக்கு. கூடவே முன் இருக்கிற மாதிரி அகம்பாவமும்

உண்டு. அதை நான் சொல்லித்தான் ஆகணும். 'டோன்கேர்'னு வளர்த்தவ பாருங்கோ. அவனைப் போயி உங்க மாமா பண்ணைக்காரனை 'டிரீட்' பண்ற மாதிரி 'டிரீட்' பண்ணினா நன்னாயிருக்குமா? அதுதான் குடுத்தா சூடு ! ஆனால் ராத்திரி ரொம்ப வருத்தப்பட்டுட்டாள். 'மாமா, மைனர்வாளுக்கு ஏதாவது வருத்தம் இருக்குமோன்னு' கேட்டா."

"நீர் என்ன சொன்னீர்?"

"நான் விடுவேனா? கொஞ்சம் வருத்தம் இருக்கத்தான் இருக்கும். உன்னைக்கூட அடிக்கடி பார்த்தார்னு சொன்னேன்."

"அடப்பாவி ! காரியத்தைக் கெடுத்துப்பிட்டீரே ! நான் அவளைப் பார்த்தது கோபத்திலே இல்லியே !"

"அது எனக்குத் தெரியாதா மைனர்வாள்? அதிகப்பிரசங்கித் தனத்தை நம்ம 'என்கரேஜ்' செய்யப்படாது பாருங்க. 'நானுந்தான் அவரை அடிக்கடி பாத்தேன். நல்ல அழகா யிருந்தார். அவர் பார்த்த பார்வையிலே கொஞ்சங்கூடக் கோபம் தெரியலியே மாமா' என்றாள் அவள்."

"அப்புறம்?"

"அப்புறம் என்ன? நான் உங்களுக்குக் கோபந்தான்னு சொன்னதும் கண்ணாலே ஒரு பொட்டு ஜலம் விட்டுட்டாள். 'மாமா, மைனர் ஐயாகிட்டே ரொம்பச் சொல்லுங்க. என்னை மன்னிக்கும்படி'ன்னு என் துப்பட்டாவை எடுத்து வச்சண்டு குடுக்க மாட்டேன்னுட்டா."

"என்ன? மன்னிப்புக் கேட்டாளா?"

"உம்— இந்த டயத்திலேதான் உங்க வண்டியும் வந்தது."

மைனர் ஏதோ சொல்ல நினைத்தார். இருந்தாலும் முழுவதும் தைரியம் வராமல் திணறிக்கொண்டே "ஓய் வைத்தி" என்றார்.

"என்ன மைனர்வாள்?"

"ஆமா— அவங்க தாயார் என்ன சொன்னாள்?"

"அவ பணத்தை எண்ணிக்கிண்டே இருந்தாள்."

"ஓய் வைத்தி—"

"என்ன மைனர்வாள்?"

"ஆமாம்— அவ நிஜமாய் என்னைப்பத்திப் பேசினாளா?"

"உம்மைப்பத்தியேதான் பேசிண்டிருந்தாள்."

"நீர் பிள்ளையார் கோவில் திண்ணையில் அல்லவா படுத்துக் கொள்ளப்போவதாக வேலைக்காரன் சொன்னான் !"

"அப்படித்தானே உம்ம கிட்டச் சொல்லுவேன் !"

"ஓய் வைத்தி—"

"என்ன மைனர்வாள்?"



"நீர் அவளிடத்தில் சொல்லணுமே"

"என்ன சொல்லணும்?"

"நம்மைப்பத்தி—"

"ஆஹா ! தாராளமா ! 'நல்ல பணக்காரர், நல்ல புள்ளே, தப்புத் தண்டாவுக்குப் போகாதவர்' என்று."

"இதெல்லாம் யாருங்காணும் உம்மைச் சொல்லச் சொன்னா?"

"பின்னே?"

"ஓய் வைத்தி—"

"என்ன அய்யா வைத்தி, வைத்தினு உயிரை எடுக்கிறீர் ! சரி, பாத்துக்கறேன்— முதல்லே பூசாரி வரம் கொடுக்க மாட்டாளே, அவம்மா !"

"அவ பணத்தை எண்ணிக்கிட்டே இருக்கட்டும் !"

"மனசாலே எண்ணினாப் போறாதே கையாலேயே எண்ணணும்?"

"சரி, இந்தாரும் !"

ஒரு கவர், வைத்தியிடம் தள்ளப்பட்டது. அதில் ஒரு கத்தை நோட்டுகள் இருந்தன.

"எப்ப வருகிறீர்?" என்றார் மைனர்.

"ரெண்டு நாள் வாய்தாக் குடுக்கணும்."

"இதிலேதான் உங்கள் சாமர்த்தியத்தைப் பார்க்கணும்."

"இதிலேதான் உங்க தாராளத்தைப் பார்க்கணும்."

"வண்டி?"

"உங்க வில்லுவண்டியையே கட்டி அனுப்புங்கோ. போய் இறங்கிண்டு திருப்பி அனுப்பிடறேன்."

வைத்தி புறப்பட்டார். மைனரின் வண்டியில், கூடவே மைனர் தம் மனத்தையும் மாட்டுச் சலங்கையில் கட்டி அனுப்பினார்.

## இருபத்து ஐந்தாம் அத்தியாயம்



### ஆசை நெஞ்சில் வீசும் புயல்

திருவையாற்றில் கடம்பவனத்திடம் சண்முகம் சண்டை பிடித்துக்கொண்டு காவேரிப் படகில் ஏறிச் சாவேரி வாசித்த பின், நேரே ஊருக்கு வந்தான். அடுத்த நிமிஷமே அட்வான்ஸ் பணம் நூறு ரூபாயையும் மைனர் பெயருக்கே திருப்பி அனுப்பிவிட்டு, சிங்கபுரம் கச்சேரிக்கு வர இயலாது என்று எழுதிவிட்டான். காரணம்,

வேறொன்றும் இல்லை. திருவையாற்றிலேயே அவ்வளவு தூரம் தகராறு செய்த மனிதன் கடம்பவனம் அவருடைய நிர்வாகத்தில் அவருடைய மகளுக்கே நடக்கும் கல்யாணத்திற்குத் தான் போய் அகப்பட்டுக் கொண்டால் விடிய, விடிய ஊது என்பார். அல்லது மகுடி வாசி, இங்கிலீஸ் நோட் வாசி என்பார். எப்படியும் அவனுக்கு ஏதாவது தொல்லை கொடுக்காமல் விடமாட்டார். கல்யாண வீட்டில் எதற்குத் தர்க்கமும் தகராறும் என்று அவனுக்குத் தோன்றியதால்தான் அம்மாதிரி எழுதினான்.

ஒரு கச்சேரியை அவன் விட்டதால் நஷ்டம் ஒன்றும் இல்லை. பணத்துக்காகப் பணிந்து அவன் மரியாதையை இழக்கவும் தயாரா யில்லை. அதே சமயம், அவனுக்கு இலங்கையில் இருந்து ஒரு தந்தி வந்திருந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு தனவந்தர் வீட்டில் கல்யாணத்துக்கு அவனை வாசிக்க அழைத்திருந்தார்கள். அவனுக்கும் கதிர்காமம் சென்று முருகனைத் தரிசிக்க வேண்டும் என்ற நெடுநாளைய ஆவல் இருந்தது. உடனே அதை ஒப்புக்கொண்டான்.

சிங்கபுரம் கல்யாணத்துக்கு முதல் நாள், ஒத்துக்காரத் தருமன் ஒரு சந்தேகத்தைக் கிளப்பினான். "என் தம்பி, சிங்கபுரத்துக்கு நீங்க வல்லேன்னுட்டீங்க. ஆனா, அவங்க வண்டியைக் கட்டிக்கிட்டு வந்து கூப்பிட்டா என்ன செய்வீங்க?" என்றான்.

"நான்தான் நாளைக்குத் தஞ்சாவூர் போகப் போறேனே!"

"என், தஞ்சாவூரிலே என்ன?"

"இலங்கைக்குப் போறதுன்னா கலெக்டர் ஆபீசுக்குப் போய் என்ன ஏதுன்னு கேட்டுக்கிட்டு, பாசுப்போட்டு எடுக்க வேண்டாம்?"

"தம்பி நானும் கூட வரேன்" என்றான் தருமன்.

"நீங்க என்ன அண்ணே, சகுனத் தடையாட்டம் சொல்றீங்க!" என்றான் சண்முகம்.

தருமன் கேட்கவில்லை. தஞ்சாவூரில் போய் கீழ வீதி மிலிட்டரி ஹோட்டலில் சாப்பிட்டுவிடுவது என்று நிச்சயம் செய்துவிட்டான்.

ஆனால் சண்முகம் புறப்பட்டது அவன் சொன்ன காரணத்திற்கு மாத்திரம் அல்ல. சிலோனுக்குப் போனால் திரும்பி வரப் பதினைந்து நாளாவது ஆகும். ஆதலால், அதற்குள் ஒரு முறை திருவாரூர் போய் மோகனாவைப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவல் அவனுக்கு. கூடவே தருமனையும் அழைத்துப்போக அவனுக்கு விருப்பம் இல்லை. ஆனால் அவனாகவே விடாப்பிடியாகக்கூடக் கிளம்பவே, அவனைத் தடுக்கவும் முடியவில்லை. அதனால் ஒரு தந்திரம் செய்தான்.

"அப்படின்னா சரி, தருமண்ணே, அந்தத் திருவாரூர்க்காரங்க கூஜாவைக் கையிலே எடுத்துக்க. திரும்பி வரப்போ இறங்கிக் கொடுத்துட்டு வந்திடுவோம்" என்றான் சண்முகம்.

இருவரும் இரவு புறப்பட்டுத் தஞ்சாவூர் போய்ச் சேர்ந்தனர்.



மறுநாள் முழுவதும் தஞ்சாவூரில் இருந்து பாஸ்போர்ட் விஷயமாகக் கவனித்தான் சண்முகம். அவனுக்கு வேண்டிய வசதிகள் கிடைத்துவிட்டன. ஆனால் தருமன் விஷயத்தில்தான் சிறிது சங்கடம் வந்தது. அதுவும் ரொம்ப சாதாரண விஷயம். தருமனுக்கு அம்மைத் தழும்பு இல்லை. அம்மை குத்திக்கொள்வது என்றால் அவனுக்கு ஒரே நடுக்கம். டாக்டர் அறையில் இருந்தபடி, "தருமண்ணே, உள்ளே வாங்க" என்றான் சண்முகம்.

"இல்லை, தம்பி, நீங்களே முடிச்சிக்கிட்டு வந்துடுங்க" என்று வாசலில் இருந்தபடியே சொல்லிவிட்டான் தருமன்.

"இல்லே அண்ணே! டாக்டர் கூப்பிடறாரு, வாங்க" என்றான் சண்முகம்.

"அட, ஏன் தம்பி, என்னைப் போட்டுத் தொந்தரவு பண்ணறே. எனக்குத் தடுமன், மூக்கெல்லாம் குடையுது!" என்றான் தருமன். அவனுக்கு அந்த டாக்டர் அறைக்குள்ளே நுழையவே பயம். தருமன் வேல் குத்திக்கொண்டு நிறைய காவடி எடுத்திருக்கிறான். ஆனால் 'அம்மை' குத்திக்கொள்வது என்ற பேச்சை எடுத்தாலே அவனுக்கு ஒரே காப்ரா. அம்மை குத்துகிற இன்ஸ்பெக்டர் தெருவில் வந்திருக்கிறார் என்றால் ஊரை விட்டே ஓடிவிடுவான்!

ஆதலால், சண்முகம் ரொம்ப நேரம் தாஜா பண்ணிய பிறகு, ஒருவாறாகத் தருமன் அம்மை குத்திக்கொள்ளச் சம்மதித்தான். ஆனால் உள்ளே நுழையும்போதே ஒரு எலுமிச்சம்பழத்தை இரண்டாக வெட்டிக் கையில் வைத்துக்கொண்டான். அம்மை குத்தி ஒரு சிறு கீறியவுடன் அந்த இடத்தில், எரிச்சலையும் பொறுத்துக்கொண்டு, ஒரு மூடியைத் தேய்த்து அம்மைப் பாலை அழித்துவிட்டான். ஏனெனில், காய்ச்சல் வந்துவிடுமோ என்ற பயம்!

இவ்வாறு பாடுபட்டு பாஸ்போர்ட்டுக்கு ஏற்பாடு செய்த பின், சடைவீதிப்பக்கம் புறப்பட்டான் சண்முகம்.

"ஏன் தருமண்ணே, திருவாரூருக்குப் போகணுமில்லே, எப்பப் புறப்படலாம்?" என்றான் சண்முகம்.

தருமனுக்கு அம்மை, குத்திக்கொண்டு இருளில் போகப் பயம். "ஏன், தம்பி, கருக்கல்லே போவோமா?" என்றான்.

"ஆமா, திருவாரூரிலே, அந்தப் பொண்ணைப் பார்த்தாலும் பார்ப்பமே, வெறுங்கையோடேயா போறது?"

"வெறுங்கை என்ன தம்பி? சும்மாவா போறோம்? அதுதான் அவங்க கூஜாவைக் கொண்டுகிட்டுப் போறோமே!"

"அப்படி இல்லே அண்ணே, நம்ம கௌரவத்துக்குச் சும்மா போனா நல்லாயிருக்குமா?"

இதைக் கேட்டதுந்தான் தருமனுக்குத் தங்கள் கௌரவம் புரிந்தது. "அது நிசந்தான் தம்பி. ஏதாவது வாங்கிக்கிட்டுப் போக வேண்டியதுதான். ஆனால்..." என்று இழுத்தான்.

"என்ன ஆனால்?"

"உன் கௌரவத்துக்கு நீ அங்கே வரதே எனக்குப் பிடிக்கலே தம்பி! கூஜாவை நானே கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வந்துடறேனே!" என்றான் தருமன்.

அதைக் கேட்டதும் சண்முகத்துக்குச் சிரிப்பு வந்துவிட்டது. இந்தக் காதல் விவகாரத்தைத் தருமனிடம் சொன்னாலும் ஆபத்து, சொல்லாவிட்டாலும் ஆபத்து என்பதை உணர்ந்தான்.

மோகனாவுக்கு அன்பாய் அளிப்பதற்கு வேண்டிய மிட்டாய், முந்திரிப்பருப்பு முதலியவைகளை வாங்கினான்.

"அட, ஏன் தம்பி, இதெல்லாம்? சிரிக்கப் போறாங்க!" என்றான் தருமன்.

சண்முகம் அதைக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. ஒரு ஜவுளிக் கடைக்குள் நுழைந்தான். உயர்ந்த விலையில் ஒரு நல்ல பட்டு ரவிக்கைத் துண்டை வாங்கினான். அதையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த தருமன், "தம்பி, எனக்கு ஒரு பனியன் இருந்தா பாருங்க. இந்த அம்மை குத்திக்கிட்டது குளிருது" என்று குழைந்து பேசி, ஒரு வலைப்பனியனை வாங்கிப் போட்டுக் கொண்டான்.

இவ்வாறு தஞ்சாவூரில், மோகனாவுக்கு என்றே பார்த்துப் பார்த்துப் பல சாமான்களை வாங்கிக்கொண்டு, இரவு ராஜா சத்திரத்தில் தங்கிவிட்டு, அதிகாலையில் திருவாரூர் வந்து இறங்கியதும், "தருமண்ணே, அவங்க வீட்டுக்குப் போய், அவங்க ஊரிலே இருக்காங்களான்னு பார்த்துக்கிட்டு வாங்க" என்று கூறினான் சண்முகம்.

இவ்வளவு ஆசையோடு அவளைப் பார்க்க வந்தான் சண்முகம். தருமன் திரும்பி வந்து அவனிடம் சொன்ன சொல் உயிருடன் நெருப்பில் போட்டதுபோல் இருந்தது. அவனுடைய உள்ளம் பட்டபாட்டில் உடல் தன் வசத்தில் இல்லை. மோகனாவை நினைக்க நினைக்க அவனுக்கு ஏமாற்றமும், ஆத்திரமும் எல்லை மீறி எழுந்தன. வண்டியில் ஏறி அமர்ந்த பிறகு அவனுடைய மனம் அமைதி அடையவில்லை.

"அடேயப்பா. அழகாம், அழகு! இதுவா அழகு! உருவம் உள்ள ஒன்றை நாம் காதலிக்கக் கொண்டுதானே இவ்வளவு கஷ்டமும் வந்தது? உருவமில்லாத இசையைக் காதலிப்பதில் இம்மாதிரி இடையூறு உண்டா?

'திருவாரூருக்கு வரும்போது நாம் வந்த ஆனந்தம் என்ன! இப்போது அடைந்த ஏமாற்றம் என்ன! இவளுக்காக ஆசையுடன் பழமும், பருப்பும் நம் கையால் வாங்கிக் கூஜா நிறையக் கொட்டி வைத்தோமே! அவளுக்கு அது கொடுத்து வைத்ததா?



'இவள் ஏன் என் கண்ணில் பட்டிருக்கவேண்டும்? நாம் தேடிப் போனோமா? வம்பிலே ஆரம்பித்த இந்த அன்பும் வம்பாகவா முடிய வேண்டும்!'

அவளை மறந்துவிட வேண்டும் என்று நினைத்தான். எதையோ பாட ஆரம்பித்தான். ஆனால் உதடு ஸ்வரம் சொல்லும் போது அவன் உள்ளம் 'மோகனா மோகனா' என்று இடையே கூறிக்கொண்டே இருந்தது.

அவளை அவன் வெறுக்க வெறுக்க அவன் இதயத்தில் அவள் முகமும், அழகும், அவள் உருவமும் வந்து நின்றன. அவள் வருத்தத்தோடு அவனைப் பார்ப்பது போல் தோன்றியது. ஆனால் அதே சமயத்தில் அந்தப் பாமும் வண்டியும் வந்து நின்றது. அவனுடைய உள்ளத்தில் அந்த வண்டியின் சக்கரங்கள் உருண்டுகொண்டே ஓடின.

"இந்தத் தருமனை ஏன் தூது அனுப்பினோம்? காதலுக்கு மாத்திரம் தூதே கூடாது! அன்று அன்னம் தமயந்திக்குத் தூது போயிற்று. என்ன ஆயிற்று? நளன் பட்ட கஷ்டத்தை நாடே அறியும்" என்று எண்ணுவான். உடனே தருமன் மேல் கோபம் வரும்.

'அட பாவி, நீதான் பார்த்தாய். பார்த்ததை என்னிடம் வந்து சொல்லவேண்டுமா? இந்த நாராசத்தை என் காதில் ஊற்றாமல் ஊரில் இல்லை என்று சொல்லியிருக்கக் கூடாதா? சுட்ட பானையில் பச்சைத் தண்ணீரை விட்டதுபோல் உன் செய்தியால் என் உள்ளமே உடைந்து விட்டதே - ஐயோ! உலகில் எந்த நோயும் தீர்ந்தவுடன் உடல் நலமடைகிறது. இந்தக் காதல் ஒன்று மாத்திரம் இருந்தாலும் துன்பம் தருகிறது; மறந்தாலும் துன்பம் தருகிறது.

'சே! நமக்கு இது லாயக்கில்லை. இந்த ஏக்கமே கூடாது. நாம் கையில் நாதஸ்வரத்தை எடுத்தால் அந்த எண்ணம் அல்லவா வரும்? நம் கற்பனையை எல்லாம் கெடுத்துவிடுமே! அவள் நினைவே கூடாது. அவளை ஞாபகப்படுத்தும் ஒரு பொருளும் நம்மிடம் இருக்கக் கூடாது' என்று ஆத்திரத்துடன் பெட்டியைத் திறந்தான். அதில், மேலாக அவன் வாங்கிய அழகிய பெங்களூர் சிவப்புப் பட்டு ரவிக்கைத் துண்டு இருந்தது. அதன் கரைகளில் சரிகையால் அன்னங்களும் தாமரையும் போடப்பட்டிருந்தன. அந்த அன்னங்களின் கண்கள் சிவப்புப் பட்டால் உருட்டி விடப்பட்டிருந்தன. அதைக் கையில் எடுத்துப் பார்த்தவுடன் அவன் கண்கள் சிவந்தன. உள்ளம் பொருமியது. சரேர் என்று அந்தப் பட்டைக் கிழித்தான்.

அவனுடைய உள்ளத்தில் யாரோ கீறியது போல் இருந்தது. அவனுடைய கண்கள் நெருப்புத்துண்டம் போல் ஜொலித்தன. தான் இன்னது செய்கிறோம் என்றுகூடத் தெரியாத நிலையில் மீண்டும்

பிடித்ததுபோல், அப்படியே உட்கார்ந்திருந்தான். அவன் கையில் இருந்த பட்டுத்துண்டு ஜன்னல் வழியாகக் காற்றில் வெளியே பறந்தது.

அந்தச் சமயத்தில் ரயில் திடீரென்று நின்றது. ஒரு உலுக்கு உலுக்கிவிட்டு வண்டி நின்றவுடன், ரயிலில் இருந்தவர்கள் திகைத்தார்கள். என்ஜினிலிருந்த டிரைவரும், பின் வண்டியிலிருந்த கார்டும் ஓடிவந்தார்கள். இருவரும் அங்குமிங்கும் பார்த்துவிட்டுச் சண்முகம் இருக்கும் வண்டியில் ஏறினார்கள். "ஏன் ஐயா, சிவப்புக்கொடி காட்டினீங்க?" என்றார் கார்டு.

சண்முகம் திகைத்தான். அப்போது அவனைக் குனிந்து பார்த்த கார்டு அடையாளம் தெரிந்துகொண்டார். உடனே "அடடா ! சண்முகசுந்தரம் பிள்ளையா? ஏன் இப்படிச் சிவப்புத் துணியைக் காட்டினீங்க?" என்றார்.

அப்போதுதான் சண்முகத்துக்குத் தன் நினைவு வந்து, விஷயம் புரிந்தது. அவனுக்கு அவமானமாகப் போய்விட்டது. "ஒன்றும் இல்லை சார். இந்தப் பட்டு— இதைக் கையில் வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்; அவ்வளவுதான்" என்றான்.

இருவரும் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டுக் கீழே இறங்கினார்கள். ரயில் புறப்பட்டது. ஆனால், சண்முகத்துக்குத் தன்னை அவர்கள் பார்த்த பார்வை 'சுரீல்' என்று தைத்தது. பைத்தியம் என்று நினைத்தது போல் தோன்றியது. எழுந்து கண்ணாடி எதிரில் சென்றான். தன் முகத்தைப் பார்த்தான். அடேயப்பா ! அதில்தான் எத்தனை மாறுதல் ! அவன் முகம் அவனுக்கே பயத்தை உண்டாக்கியது !

நினைவுப் பொருளைக் கிழிந்தெறிந்தாலும் நினைவைக் கிழிக்க முடியுமா? உடையைக் கிழிக்கலாம் உள்ளத்தை என்ன செய்வது? அந்தப் பெரும் பாரத்தைச் சுமந்துகொண்டே சிக்கல் பிளாட்பாரத்தில் இறங்கிச் சென்றான் சண்முகசுந்தரம்.

இருபத்து ஆறாம் அத்தியாயம்

## சவடாலும் சாமர்த்தியமும்



திருவாரூருக்குப் புறப்பட்ட சவடால் வைத்திக்கு வண்டி கடம்பவனத்தின் கச்சேரி வாசலை நெருங்கிவரும்போது திடீரென்று ஒரு சந்தேகம் வந்தது. வண்டிக்காரனிடம், "ஏண்டா, அய்யா கச்சேரியில் இருப்பாரோ?" என்று கேட்டார்.

"ஏன், அய்யா கிட்ட சொல்லிக்கிட்டுப் போகத்தானே? அவுங்க இந்நேரம் இங்கே



வாசலிலேதான் இருந்தாங்க. நீங்க உள்ளே பேசிக்கிட்டிருக்கிறதைப் பார்த்துட்டுக் கச்சேரிக்குப் போயிட்டாங்க."

"என்ன, வாசலிலே இருந்தாரா? நாங்க பேசிக்கிட்டிருந்ததைப் பார்த்தாரா?" என்றார் வைத்தி. அவருக்கு சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது. பிரடை கழன்ற தம்பூர் தந்தி போல் ஜீவன் இல்லாமல் திணறினார். 'சரி. வண்டியைக் கச்சேரி வாசல்லே விடாதே. குளத்துக்கு அக்கரையா விட்டுடு' என்றார் வண்டிக்காரனிடம்.

வண்டி குளத்துக்கு வடகரை வழியாக விடப்பட்டது. வைத்தியோ வண்டிக்குள் ஒடுங்கி உட்கார்ந்திருந்தார். அதே சமயம் குளத்தங்கரைப் பிள்ளையார் குறடுப் பக்கமிருந்து, "டேய், வைத்தி !" என்ற குரல் கேட்டது. திரும்பினார். கையில் கம்பைச் சுழற்றிக்கொண்டே எதிரில் வந்தார் கடம்பவனம்.

வைத்திக்கு உடம்பில் நடுக்கம் ஏற்பட்டது. 'தன் மகனுடைய வாழ்வுக்கு வைத்தி உலை வைக்கிறான் என்ற விஷயம் தெரிந்துதான் கடம்பவனம் நம்மைக் கூப்பிடுகிறார். கம்பால் அடித்துக் கொன்று விடுவார்' என்பதை எண்ணியதுமே வைத்தி உதறத் தயாரானார்.

இதற்குள் கடம்பவனம் வண்டி அருகில் வந்தார். "ஏய், கீழே இறங்கு !" என்று உத்தரவிட்டார். வைத்தி பேந்தப் பேந்த விழித்துக் கொண்டே 'தொபுக்' கென்று கீழே குதித்தார்.

"என்னடா பேசிக்கிட்டிருந்தே, மருமகன் கிட்டே?"

வைத்திக்கு வயிற்றில் என்னவோ செய்தது. "அது வந்து— அதாவது........" என்று பேச ஆரம்பித்து உமிழ்நீரைக் கூட்டி விழுங்கினார்.

"என்னடா முழிக்கிறே ! என்ன சொன்னான், என்னைப்பத்தி? என் மாமனாரை எஸ்டேட் மானேஜ்மென்டை விட்டு விலக்கிவிட்டுட்டேன்னு சொன்னானோ?" என்று பரபரப்போடு கேட்டார் கடம்பவனம்.

இப்போதுதான் வைத்திக்குச் சிறிது திகைப்பு நீங்கியது. உடனே மூளையும் வேலை செய்ய ஆரம்பித்தது. "உங்களைப்பற்றி எங்கிட்ட பேசுவாரா பிள்ளை?" என்று மழுப்பினார்.

"பின்னே என்ன, அவ்வளவு நேரம் பேசிக்கிட்டிருந்தீங்க?"

இப்போது நிஜமாகவே சங்கடத்தில் மாட்டிக்கொண்டார் வைத்தி. ஆனால் இதற்குள் மூளை சுதாரித்துக்கொண்டது. "உண்மையைச் சொல்றதுக்கென்ன பிள்ளைவாள்? உங்களைப்பத்தித்தான் பேசினோம். 'என்னமோ நேத்து மாமாவுக்கு ரொம்பவுந்தான் கோபம் வந்துவிட்டது' என்று மைனர் வருத்தப்பட்டார்" என்று முதல் நாள் நாட்டியத்தில் நடந்த சம்பவத்தை வைத்துச் சாடு திரித்தார் வைத்தி.

"வேறே ஒன்னும் என்னைப்பத்தி வித்தியாசமா சொல்லலியே?" என்று கேட்டுவிட்டு, "சரி, எங்கே புறப்பட்டே?" என்றார் கடம்பவனம். வைத்தியின் மனம் இப்போது நன்றாகத் தேறிவிட்டது. கடம்பவனத்திடம் கொஞ்சம் சில்லறை கறக்கலாமே எனத் திட்டம் போட்டது.

"வண்டி கும்பகோணத்துக்குப் போறதுன்னு சொன்னாங்க அதிலே ஒட்டிக்கிட்டேன்."

"ஏன், கும்பகோணத்தில் என்ன உனக்கு?"

"ஒரு ரூபா மேஜை. அஞ்சு ரூபா லிமிட்டு. பெரிய ஆட்டம் நடக்கிறது. ஒரு ஐம்பது ரூபா இருந்தா குடுமே!" என்றார் வைத்தி.

"நூறு ரூபாய் நோட்டாகத்தானே இருக்கு?"

"அதைத்தான் குடுமே. உம்ம பேரைச் சொல்லி, ஆடறேன், உம்ம கைராசியைப் பார்ப்போம்" என்றார் வைத்தி.

கடம்பவனம் மணி பர்சிலிருந்து ஒரே ஒரு நூறு ரூபாய் நோட்டைக் கையில் எடுத்தார். அடிக்குப் பயந்த வைத்திக்கு இப்போது அதிர்ஷ்டம் அடிக்கப்போகும் எண்ணத்தில் ஆனந்தம் தாங்கவில்லை.

"இந்தா பாரு வைத்தி. இந்த ஒரு நோட்டுத்தான் இருக்கு. இப்போ கியாஸ் லைட்டுக்காரன் வருவான். பணம் குடுக்கணும். நாளைப் பின்னே கேளு, தருகிறேன்" என்று கூறி நோட்டைப் பையில் வைத்துக்கொண்டே "எலே, சீக்கிரம் கொண்டுபோய் விட்டுட்டு வண்டியை ஓட்டிக்கிட்டு வாடா" என்று வண்டிக்காரனிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டார் கடம்பவனம்.

வைத்தி அவரையே பார்த்தார். 'பாவி, கண்ணிலே காண்பித்து விட்டுக்கொண்டு போகிறான் பாரு:! சின்னபுத்திக்காரன்' என்று எண்ணிக்கொண்டே வண்டியிலே ஏறினார் அந்தப் பெரிய மனிதர். "விடுடா, திருவாருருக்கு" என்று வண்டிக்காரன் மேல் எரிந்து விழுந்தார்.

வைத்தி ரொம்ப விதரணை தெரிந்த மனிதர். கடம்பவனம் பிள்ளைக்கும் வைத்தி வேண்டியவர். அவர் மாப்பிள்ளை சிங்கபுரம் மைனருக்கும் வைத்தி வேண்டியவர். இவருடைய நண்பர்களின் ரகமே அலாதி. எல்லா நண்பர்களும் தனியாய் இவரைச் சந்திக்கும்போது "வைத்தி நமஸ்காரம், வணக்கம் ஓய், மாமா மருமான்" என்று கெஞ்சுவார்கள். நாலுபேர் இருக்கும் இடத்தில் வைத்தியைப் பார்த்து விட்டால் தெரிந்ததாகக்கூடக் காட்டிக்கொள்ள மாட்டார்கள். இதில் என்ன வேடிக்கை என்றால், அந்த நாலு பேருமே வைத்திக்குத் தெரிந்தவர்களாய் இருப்பார்கள். ஆதலால் பகலில் அவர் அதிகமாய் நண்பர்கள் இருக்கும் இடத்துக்கு வரமாட்டார்.



இன்று திருவாரூர் வந்ததும் வண்டியை ஊர்க் கோடியிலேயே நிறுத்தி இறங்கிக்கொண்டு, வண்டிக்காரனை ஊருக்கு அனுப்பிவிட்டு பல சந்து பொந்துகளில் நுழைந்து வடக்குத் தெரு நோக்கி வந்தார்.

வடக்குத் தெரு வடிவாம்பாள் என்ற பெயரை மாத்திரம் வைத்தி கேள்விப்பட்டது உண்டு. அவளை நேற்றுப் பார்த்ததும் உண்டு. இதைத் தவிர வடிவாம்பாள் வீட்டு வாசல்படியை மிதிக்கும் பெருமையோ, அவளைப் பார்த்துப் பேசும் பாக்கியமோ இதுவரை வைத்திக்கு வாய்த்ததில்லை. வடிவாம்பாளுக்கும் அந்தத் துரதிருஷ்டம் வந்ததில்லை.

ஆதலால், இப்போது எந்த விதமாக வடிவாம்பாளை அறிமுகம் செய்துகொள்வது என்று பலமாக யோசனை செய்தார் வைத்தி. அவருடைய சாமர்த்தியம் இழைப்புளிக் கூர்மை போன்றது. மரத்துக்கும் வலிக்காமல், கைக்கும் வலிக்காமல், உளியும் சிக்காமல் இழைக்கும் தன்மை உடையது.

சற்று நின்று யோசனை செய்து சிங்கபுரம் மைனர் கொடுத்த கவரை எடுத்துப் பிரித்துப் பார்த்தார். அதில் ஐநூறு ரூபாய்கள் இருந்தன. அதில் ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்துத் தம் மஸ்லின் சட்டைப் பையில் செருகிக்கொண்டார். நோட்டு வெளியே தெரிந்தது.

சட்டைப் பையை இடப்புறமாக வைத்துத் தைக்கும் வழக்கத்தை யார்தான் கண்டுபிடித்தார்களோ? அவர்கள் உண்மையிலேயே அறிவாளிகள். பையில் வைக்கும் பணம் இதயத்தையே அல்லவா மறைத்துவிடுகிறது! வைத்தியும் தம்முடைய மனித இதயத்தைப் பணத்தால் மறைத்துக்கொண்டு மைனருக்குத் தூது செல்ல முனைந்தார்.

வடிவாம்பாள் வீட்டின் வாசலில் மிருதங்கம் கட்டும் ரத்தினம் நின்றுகொண்டிருந்தான். ரத்தினம் மிருதங்கத்தை அற்புதமாய்க் கட்டுவான். ஒரு கட்டையைத் தோல் பிடித்துக் கட்டிக் கொடுத்தால், அக்காலத்திலேயே அவனுக்குப் பதினைந்து ரூபாயும் ஒரு துப்பட்டாவும் கிடைத்து வந்தன. அவனிடம் ஒரு நல்ல சுபாவம் உண்டு. மற்றவர்களைப்போல் மிருதங்கம் கட்டக் கொடுத்தவர்களை அலைய விட மாட்டான். தானே தினந்தோறும் அவர்களுடைய வீடு தேடி வருவான். ஒரு நாளைக்குத் தோலுக்குப் பணம் கேட்பான். ஒருநாள் வாருக்குப் பணம் கேட்பான். இன்னொரு நாள் எண்ணெய்க்குப் பணம் கேட்பான். இப்படியே என்றைக்கும் பணம் கேட்டுக்கொண்டே, தவணையும் சொல்லிக்கொண்டிருப்பான். இன்று சாயங்காலம் அவனுக்கு ஒரு ரூபாய் தேவை. வரதனிடம் வந்துவிட்டான். வரதனோ எட்டணா, ஒரு ரூபாயாக பத்து ரூபாய் வரை கொடுத்துவிட்டான். இன்றைக்கும் வந்து அவன் பணம் கேட்கவே வரதனுக்குக் கோபம் வந்துவிட்டது

"போடா போ ! இனி ஒரு சல்லிக்காசு தர முடியாது ! என் மிருதங்கத்தைக் கொண்டாந்து குடுத்துட்டு, உன் ரூபாயை அணா பைசா தீர்த்து வாங்கிக்கிட்டுப் போ" என்று சொல்லிவிட்டு, வரதன் கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே போய்விட்டான். ரத்தினமோ கையைக் கட்டிக்கொண்டு வாசலிலேயே நின்றுகொண்டிருந்தான். இந்தச் சமயம் பார்த்து வைத்தி அங்கு வரவே ரத்தினம் மரியாதைக்கு விலகிக்கொண்டான். வைத்தி அவனை ஒரு சுடுபார்வை பார்த்து விட்டுக் கதவில் கை வைத்துத் திறந்தார்.

"அட சீ, படுக்காளிப் பயலே ! கதவைத் திறந்துக்கிட்டு உள்ளே வரும் அளவுக்கா உனக்குத் துணிச்சல் வந்திடுச்சு ! ஒரு 'குமிக்கி' குடுத்தேன்னா தலை வயிற்றுக்குள்ளே போய்விடும் !" என்றது வரதனின் குரல். வைத்திக்குக் 'குப்' என்று வியர்த்தது. கதவைத் திறந்தவன் ரத்தினம் அல்ல, வேறு யாரோ என்பதைக் கண்ட வரதனும் திகைத்தான்.

"நான் அந்த ரத்தினமாக்கும்னு நினைச்சேன், நீங்க——" என்று இழுத்தான் வரதன்.

"அதனாலே பாதகமில்லேடா, நீதானே சொன்னே?" என்று வாசற்படியைத் தாண்டி ரேழியில் காலை வைத்தார் வைத்தி. வாத்துக்கு இறகில் தண்ணீர் ஒட்டுவதில்லை. வைத்திக்கு இதயத்தில் அவமானம் ஒட்டுவதில்லை.

வரதன் அந்த 'டா'வில் பிரமித்துப் போனான். "அடேய் மடப்பயலே ! சும்மா போகமாட்டே?" என்று தெருவில் பார்த்துக் கேட்டுவிட்டு, "உங்களை இல்லேங்க ! அந்த வெளியே நிக்கறவனைச் சொன்னேன்" என்று அவன் கூறவே, வைத்திக்குக் கொஞ்சம் அச்சம் வந்தது. இந்தப்' பையன் ஒரு பயில்வான். இவனை நாம் பகைத்துக் கொள்ளக்கூடாது என்று நிச்சயம் செய்துகொண்டார். "உம், வடிவு இருக்காளோ?" என்று கனிவுடன் கேட்டார் வைத்தி.

வரதன் அதற்குப் பதில் சொல்லாமல், "நீங்க யாரு?" என்று கேட்டான்.

"என்னை உனக்குத் தெரியாது?"

"எனக்குத் தெரியாதவங்களை நான் உள்ளே விடமுடியாது" என்று கூறிக்கொண்டே, "ஏண்டா நிற்கறே? இந்தா எட்டணாவை வாங்கிக்கிட்டுத் தொலை" என்று வாசலில் நின்ற ரத்தினத்திடம் பணத்தைக் கொடுக்கப் போனான் வரதன்.

வேறு இடமாக இருந்தால் இதற்குள் வைத்தி நேரே உள்ளே போயிருப்பார். இந்த வரதனுடைய கர்லாக்கட்டை போட்ட முண்டா இரண்டும் வைத்தியைக் கொஞ்சம் பயமுறுத்தின. ஆதலால்தான் ரேழியில் நின்றே பேசினார். வரதன் தன் அருகில் வந்தவுடன் வைத்தி,



வரதனைப் பார்த்து லேசாகச் சிரித்தார். இதைப் பார்த்த வரதன், "என்ன, தானாச் சிரிக்கிறீங்க?" என்றான்.

"இல்லை. நேற்று அவ்வளவு அற்புதமா மிருதங்கம் வாசிச்ச பையன் நீதானா என்று பார்க்கிறேன்."

"ஆமாங்க..." என்றான் குறும்புடன் தஞ்சாவூர் வரதன்.

"உனக்கு யாருகிட்ட சிட்சை?"

"தஞ்சாவூர் ஆஞ்சனேயர் கிட்ட..."

"அது யார் ஆஞ்சனேயலு? நான் கேள்விப்பட்டதில்லையே !"

"நீங்க கேள்விப்பட்டிருக்க மாட்டீங்க. ஆனால் பார்த்திருப்பீங்க. மேலவீதி முனங்கிலே ஒரு ஆஞ்சனேயர் கோவிலும், பஜனை மடமும் இருக்குது பாருங்க, அங்கேதான் இந்த அய்யா எந்தத் தாளத்துக்கும் எந்தப் பாட்டுக்கும் வாசிக்கத் தயாரானாரு. ஆமா, நீங்க யாருங்கிறதைச் சொல்லாமே உள்ளே போறீங்களே !"

"என்னைத்தான் கலெக்டர் வைத்தின்னு சொல்லுவா."

கலெக்டர் என்ற வார்த்தையைக் கேட்டதும் வரதன் திகைத்து விட்டான். 'அடடா, இவ்வளவு பெரிய மனிதரையா நாம் தடுத்து நிறுத்திவிட்டோம்?' என்று பயம் தோன்றியது. "அப்படியானா கொஞ்சம் இப்படியே இருங்க. இதோ அம்மா கிட்டச் சொல்லிட்டு வந்திடுறேன்" என்று உள்ளே ஓடினான்.

வடிவாம்பாள் இளம் தூக்கமாயிருந்தாள். வரதன் சொல்லியதைக் கேட்டவுடன், "யாரு, கலெக்டரா !" என்று வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து, ஓடிவந்தாள். ரேழியில் நிற்கும் சவடால் வைத்தியைக் கண்டதும் ஒரு கணம் திகைத்தாள்.

'இது யாரு இந்த ஆளு? எங்கேயோ பார்த்திருக்கிறோமே... நேற்று கல்யாண வீட்டுலே உட்கார்ந்திருந்தவர் இல்லே? அடே ! இவர் அந்தச் 'சவடால் வைத்தி'ன்னு சொல்லுவாங்களே, அவர் இல்லே ! இவர் எங்கே இங்கே வந்தார்?' என்று ஒரு கணத்தில் அவரை எடை போட்டுவிட்டாள் வடிவாம்பாள். நேற்று மைனர்வீட்டுக் கல்யாணத்தில் பார்த்த அவர் இன்று தன் வீடு தேடி வந்திருப்பதில் ஏதோ விஷயம் இருக்கத்தான் வேண்டும் என அவளுக்குப் பட்டது.

"வாங்க, உள்ளே வாங்க" என்றாள். வைத்தியும், "நமஸ்காரம். உங்க மிருதங்கக்காரப் பையனைக் கொஞ்சம் வெளியே அனுப்பலாமோ?" என்று கேட்டுக்கொண்டே பல வருஷங்கள் பழகியவனைப்போல் உள்ளே போய் உட்கார்ந்தார்.

"ஏன்? என்ன செய்யணும்?"

"இல்லே, இங்கே நான் ஒரு கோர்ட்டு வேலையா வந்தேன். நம்ம முசாபரி பங்களாவிலே போய்த் தஞ்சாவூரிலேயிருந்து வக்கீல் வந்திருக்கிறாரா என்று பார்த்துவிட்டு வரச் சொல்லணும்."

"அவ்வளவுதானே ! வாதா, போய்ப் பார்த்துட்டு வா" என்றாள் வடிவாம்பாள்.

வாதன் போவதையே பார்த்துக்கொண்டிருந்தான் வைத்தி. அதற்குள் வடிவாம்பாள் வெற்றிலைப் பெட்டியை எடுத்து வைத்து விட்டு, "என் ஐயா ! நீங்கதானே வைத்திங்கறது. ஏதோ கலெக்டர் வீங்களாமே என்ன அர்த்தம்?" என்றாள்.

"அடியேன் ஒரு சபாவிலே பில் கலெக்டராக இருந்தேன். அது சம்பந்தமா நம்ம மேலே ஒரு கேசு. அதுக்காகத்தான் சர்க்கார் வக்கீல் வந்திருக்காரோ என்று பார்க்கச் சொன்னேன்" என்று சிரித்தார் வைத்தி. வடிவாம்பாளும் பொய்யைப் புரிந்துகொண்டு கூடச் சிரித்தாள்.

"ஆபத்துக்குப் பாபமில்லேன்னு சொல்லியிருக்கா" என்றார் வைத்தி.

"இப்ப என்ன ஆபத்து வந்துடுத்து உங்களுக்கு?"

"நான் அப்படி ஒரு பொய்யைச் சொல்லாட்டா உங்க மத்தளக் காரன் என்னை அப்பளமாக்கியிருப்பான் !"

"உம், உம். இப்ப இங்கே ஏதாவது நிசம் சொல்றதுன்னா இருந்து சொல்லுங்க. கேக்கிறேன். இல்லாட்டி ரெண்டு பேரும் பொய்யையே சொல்றதுன்னா உலகம் தாங்காது !"

"சேச்சே, அதெல்லாமில்லே வடிவு"

"இதுதான், தலைமாட்டிலே நின்னு பேரு வச்சவங்களாட்டம் ! ஆமா, எங்க வந்திங்க?"

"நேத்து உம் மகள் நாட்டியத்தைப் பார்த்தேன் பாரு."

"நீங்க எங்கே நாட்டியத்தைப் பார்த்திங்க? கையிலே தப்பு தப்பா தாளத்தைப் போட்டுக்கிட்டுக் கல்யாணத்துக்கு வந்தவங்களையில்லே பாத்துக்கிட்டிருந்திங்க? !"

"அட, நான் பாத்தா என்ன, பாக்காட்டா என்ன? நம்ம மைனர் பார்த்தாராம்."

"ராம் என்ன ! அதுதான் கண் கொட்டாம பாத்துக்கிட்டிருந் தாங்களே. எனக்குக்கூடத் தெரியுமே."

"உனக்கு அவர் பார்த்ததுதானே தெரியும்? எனக்கு அவர் பார்த்தது, மயங்கினது, விழுந்தது, இப்ப சாப்பாடுகூட வேண்டாம்னு உன் மகள் ஞாபகமாகவே இருக்கிறது எல்லாம் தெரியும்."

"உம். நான் இதை நம்ப முடியாது. நீர் சும்மா இப்படிச் சொல்லி என்கிட்ட ஏதாவது காப்பிக்குச் சில்லறை வாங்க வந்திருப்பீர்."

"இல்லே வடிவாம்பா. இன்னிக்கு மைனரே என்னைக் கூப்பிட்டு 'நீ போய்ப் பார்த்துண்டு வா'ன்னு சொல்லி அனுப்பினார்."

"இந்தாங்க அய்யா, நீங்க வந்ததுக்கு ஏதாவது சொல்லிவிட்டுப் போவீங்க. ஆனா மைனர் பெரிய வீட்டுப் புள்ளை. அவங்க கிட்ட யிருந்து ஆளு வரதுன்னு சொன்னா அதுக்கு என்ன அடையாளம்?"



"நான்தான் வந்திருக்கேனே"

"நீர் ஒரு அடையாளமா?"

"பின்னே?"

"ஏதாவது ஒரு ருசுவா சொல்லுங்க கையை வீசிக்கிட்டுப் போயிட்டு வாங்கன்னா அனுப்பிச்சாங்க?"

"ஓ, அதுவா? செலவுக்கு ஒரு நூறு ரூபாய் கொடுத்தாரு."

"உமக்குப் போதும். எனக்கு?"

வைத்தி திகைத்தார். மடியில் இருந்த நோட்டை எடுத்தார் அதில் இருநூறை எடுத்து அவளிடம் கொடுத்துவிட்டுப் பாக்கியை மடியில் வைக்கப்போனார்.

"ஊஹூம் !...... அதையும் கொடுத்திடுங்க. உங்க பணந்தான் பையிலிருக்கே" என்றாள்.

வைத்தி தன் கையிலிருந்த நானூறையும் வடிவாம்பாளிடம் கொடுக்க, அவள் அதை வாங்கி மடியில் செருகிக்கொண்டாள். "என்ன விஷயம்? மறுபடியும் ஏதாவது கல்யாணமா? எந்த ஊரிலே நாட்டியமாடணும்?" என்றாள்.

இதைக் கேட்ட வைத்தி அப்படியே மலைத்துவிட்டார். 'அடேயப்பா ! இந்த வடிவாம்பாள் நம்மையும் விழுங்கிவிடுவாள் போலிருக்கிறதே !' என்று நினைத்தார்.

அப்போது 'அம்மா' என்று மோகனா கூப்பிடும் குரல் மாடியிலிருந்து கேட்டது. வடிவாம்பாள் பதறி எழுந்தாள்.

"ஐயா, நீங்க அப்போ ஒன்னு செய்யுங்க. இப்ப போயிட்டு சாயங்காலம் சரியா ஆறு மணிக்கு வந்துடுங்க. மோகனா கோவிலுக்குப் போயிடும். மைனர் என்ன சொன்னாரு என்பதை யெல்லாம் அப்ப பேசிக்கலாம்" என்று சொல்லிவிட்டு, அவசரமாக மாடிப்படி ஏறினாள் வடிவாம்பாள்.

வைத்தி எழுந்து தயங்கித் தயங்கி வெளியே சென்றார்.

## இருபத்து ஏழாம் அத்தியாயம்



# தாயின் ஆசைக் கனவு

தன் மகள் மாடியில் இருந்து அழைத்த குரல் கேட்டு மாடிப்படிகளில் ஏறி வந்த வடிவாம்பாளை, அவள் கால்கள் நடு வழியிலேயே நிறுத்திவிட்டன. மனம் ஓடினால்தானே உடல் ஓடும்? பெற்ற தாயே தன் மகளைப் பார்க்க வெட்கப்பட்டாள். அன்று அழகர் கோயிலில் நாகலிங்கத்தின் மூக்குத்தியால் தான் பட்ட பாடு அவளுக்கு

நினைவு வந்தது. அதனால் இப்போது அவன் மடியில் இருக்கும் நானூறு ரூபாயும் நாலு பாம்புகளை மடியில் கட்டிக்கொண்டிருப்பது போல் ஒரு உணர்ச்சியை அவளுக்கு உண்டாக்கின. உயர்ந்த பதவியில் இருக்கும் ஒருவர் பெயரைச் சொல்லி, அவர் வீட்டிலிருக்கும் ஒருவர், பிறரிடம் லஞ்சம் வாங்கிவிட்டால் என்ன உணர்ச்சி உண்டாகுமோ அந்த உணர்ச்சி அவள் மனத்தில் உண்டாகி, எதற்கும் அஞ்சாத வடிவாம்பாளை ஆட்டி வைத்தது.

வைத்தியையே அவள் ஏமாற்றிவிட்டாள். ஆனால், அவள் மனச்சாட்சியை அவளால் ஏமாற்ற முடியவில்லை. மகளின் விருப்பத்துக்கு விரோதமாகத் தான் செய்ய நினைக்கும் காரியத்தை எண்ணும்போது, அந்தப் பெற்ற வயிறு கலங்கியது. கூடவே என்னென்னவோ சமாதானங்களும் தோன்றின.

'அப்படி என்ன துரோகம் செய்துவிட்டேன். நானூறு அல்ல, நாலாயிரமாக இருந்தாலும் எனக்கல்லவே இந்தப் பணம் ! இதை நானா செலவு செய்யப் போகிறேன்? அவளுக்குத்தானே?

'நானுந்தான் சிறு வயதில் பணத்தை மதியாமல் இருந்தேன். காதலே தெய்வம் என்று நம்பியிருந்தேன். அந்தத் தெய்வம் சோறு போட்டதா? வாழ்க்கைக்குப் பணம் வேண்டும். ஏழையிடம் எத்தனை தான் கலை இருந்தாலும் அது விலை போகாது. வித்தை பாதி, மிடுக்கு பாதி. மிடுக்கன் இல்லாத வித்வான் பாட்டைக் காசில்லாதவன்தான் கேட்பான். என்னதான் மோகனா ஆடட்டுமே ! ஒரு கச்சேரி முழுவதும் ஒரே புடைவையைக் கட்டிக்கொண்டு ஆடினால் யார் பார்ப்பார்கள்? ஒரு நிகழ்ச்சிக்கு நடுவிலே நாலு தடவையாவது உடையை மாத்தணும். நகையை மாத்தணும், நடையை மாத்தணும். இல்லாமல் போனால், நம்ம தொழிலையே மாத்திக்க வேண்டியது தான் !

'வித்தை வித்தை என்று தாம் சொல்லிக்கொண்டிருந்தால் போதுமா? நகையும் வேணும், புடவையும் வேணும். இல்லாவிட்டால் வெறுங்கை முழம்போடாது. உலகத்தில் என்ன எல்லாருமா வித்வான்கள்? ஆட்டத்தைப் பார்ப்பவர்களும் உண்டு. ஆளைப் பார்ப்பவர்களும் உண்டு. 'இதோ நான் அலாரிப்பு ஆடப்போகிறேன், அரை நாள் ஆகும்' என்று சொன்னால் யார் உட்கார்ந்திருப்பார்கள்? ஆள் பாதி ஆடம்பரம் பாதி என்று இருந்தால்தான் உலகம் மதிக்கும். பணமில்லாத வித்வானுக்குக் கச்சேரிக்கும் பணம் வராது. நம்ம கையிலே பணம் இருந்தால்தான் 'ஆயிரம் கொடு இரண்டாயிரம் கொடு' என்று கேட்கலாம். நாமே வரட்சையானால் 'கொடுத்ததைக் கொடு. ஆடுகிறேன்' என்றுதான் சொல்லத் தோன்றும்.

'எதற்கும் இந்தச் சம்பந்தம் நல்ல சம்பந்தம். நமக்குச் செல்வமும் உயரும். அதனாலே கச்சேரி சன்மானமும் உயரும்' என்று எண்ணிய வண்ணம் வடிவாம்பாள் மாடிப்படியில் மெதுவாக ஏறினாள்.



இதற்குள் மறு முறையும், "அம்மா" என்று கூப்பிட்டுக் கொண்டே மோகனா மாடிப்படியில் இறங்கிவிட்டாள். எதிரே, படிக்கட்டு நடுவில் தயங்கியபடி நிற்கும் தாயைக் கண்டாள். நிலைத்து நிற்கும் வடிவாம்பாளிடம் சடக்கென்று ஒரு கேள்வியை வேறு கேட்டுவிட்டாள்.

"யாரம்மா இப்போ ஏதோ பேச்சுக் குரல் கேட்டதே !" என்றாள் மோகனா.

வடிவாம்பாள் இருந்த மன நிலையில் வேறு யாரேனும் இருந்திருந்தால் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் ஏதையாவது உளறிக் கொட்டியிருப்பார்கள். ஆனால், வடிவாம்பாளோ சாவதானமாக, "சோசியர் வந்திருந்தாரம்மா" என்று நலுங்காமல் ஒரு பொய்யைச் சொன்னாள்.

நிஜமாகவே இது ஒரு பெரும் பொய். மத்தளக்கார வாத்தி ஏதாவது ஒரு பொய்ச் சாக்குச் சொல்லிவிட்டானானால் வடிவாம்பாள் அவனைப் பல குறுக்குக் கேள்விகள் கேட்டுத் திணறடித்துவிடுவாள். அவளுக்கு அந்த வீட்டில் வேறு யார் பொய் சொன்னாலும் பிடிக்காது. தான் பொய் சொல்வதாகவும் அவளுக்கு இதுவரை தெரியாது. காரணம் இதுதான்.

அவள் சொல்லும் பொய்களில் தவறில்லை என்பது அவள் அபிப்பிராயம். தன் மகள் நன்கு வாழ்வதற்கு எதைச் செய்தாலும் குற்றமில்லை என்பது அவளுடைய திட்டமான முடிவு.

இப்படிச் சொன்னால் சிலருக்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனால் சற்று அவரவர்களும் நினைத்துப் பார்த்தால் உண்மை தெரியும்.

நம் வீட்டில் குழந்தை பால் குடிக்க மறுக்கிறது. 'இதோ நாம் கோயிலுக்குப் போகப் போகிறேன். உம், சீக்கிரம் பாலைக் குடி' என்கிறாள் தாயார். குழந்தை பாலைக் குடிக்கிறது. தாய் சொன்னது பொய் இல்லையா?

குழந்தைக்குச் சாதம் ஊட்டுகிறாள் தாய். குழந்தை சாப்பிட மறுக்கிறது. 'இதோ நான் பிச்சைக்காரனுக்குப் போட்டுவிடுவேன். ஏய் பிச்சைக்காரா !' என்று கூப்பிடுகிறாள். குழந்தை சாப்பிட்டு விடுகிறது.

இவையெல்லாம் பொய்யாக இருந்தால் வடிவாம்பாள் சொன்னதும் பொய்தான். இவைகளைக் குற்றமில்லை என்று நினைப்பவர்கள், வடிவாம்பாளையும் குற்றம் சொல்ல மாட்டார்கள். அதுதான் அவளுடைய அபிப்பிராயம்.

"ஜோசியரா ! எதுக்கம்மா?" என்றாள் மோகனா.

"இல்லேம்மா, உனக்கு உடம்பு இப்படி ஆயிடுச்சே. மத்தியானம் கூட மயக்கம் வந்துடுச்சே !' என்ன கோளாறு, குழந்தை ஜாதகத்தைப் பாருங்க'ன்னு கேட்டேன்" என்றாள் வடிவாம்பாள்.

பாவம், மோகனா எதையோ நினைத்தாள். சாதாரணமாக அவளுக்கு இம்மாதிரி விஷயங்களில் அக்கறை இல்லாவிட்டாலும் அவளுடைய மன நிலை இப்போது ஜோதிடர் என்ன சொல்லியிருப்பார் என்பதைத் தெரிந்துகொள்ளத் துடித்தது. 'சண்முகத்தின் காரணம் இல்லாத கோபம் நீங்குமா? மறுபடியும் அவர் நம்மைத் தேடி வருவாரா?— கஷ்ட காலம் வந்தாலும், அல்லது கல்யாண காலம் வந்தாலுந்தானே உலகத்தார் ஜோசியனைத் தேடுவார்கள்? நமக்கோ பணத்துக்கு ஒரு கஷ்டமும் இல்லை. ஆதலால், தாயார் ஜோசியரிடம் கல்யாணத்தைப்பற்றித்தானே கேட்டிருப்பாள்?— ஜோசியம் நிஜமா பொய்யா?— நமக்கு எதுக்கு அந்தக் கவலை? ஆண்டவனே! ஜோசியம் நிஜமாகவே இருக்க வேண்டும். வேறு எந்தச் சமயத்தில் பொய்யானாலும், இந்தச் சமயத்தில் அது பொய்யாகவே கூடாது' என்று பலவிதமாக எண்ணமிட்டது. அவளுடைய குழந்தை மனம். ஆனால், அதை எல்லாம் வெளிக்காட்டிக்கொள்ளாமல், 'ஜாதகமெல்லாம் பார்த்து என்னம்மா செய்யறது? இப்படிப் பிறக்காமல் இருந்திருந்தா நல்லா இருந்திருக்கும். என்ன சொன்னார் ஜோசியர்?" என்றாள்.

"நல்ல காலந்தானாம். ஏதோ ஒரு கிரகந்தான் கொடுமையாப் பாக்குதாம்" என்றாள் வடிவாம்பாள்.

அவள் சொன்னது சண்முகசுந்தரத்தை. ஆனால், மைனரின் பார்வைதான் அது என்பது நமக்குத் தெரியும்.

"வேறு ஒண்ணும் சொல்லலியாம்மா?" என்று வருங்காலத்தை எண்ணிக் கேட்டாள் மோகனா.

"சாயங்காலம் ஆறு மணிக்கு வரேன். அப்ப விவரமா சொல்றேன்னு இருக்காரு."

"அம்மா, சாயங்காலம் அவர் வரபோது நானும் இருக்கேன் அம்மா!"

"உனக்கு ஒண்ணும் புரியாது அம்மா. தவிரவும் உனக்கு வேறு வேலை இருக்கு. சாயங்காலம் கோவிலுக்குப் போய் ஒரு தேங்காய் ஒடைச்சு அர்ச்சனை செய்துவிட்டு வந்துட்டா எல்லாம் சரியாப் போகும்னாரு. நீ கோயிலுக்குப் போகணும்."

மோகனாவுக்குச் சிரிப்பு வந்தது. 'அடேயப்பா! ஒரு தேங்காய் உடைக்கிற சத்தத்தில் பயந்துகொண்டு ஓடுகிற கிரகமும் இருக்கிறதா?' என்று எண்ணினாள்.

"ஏம்மா, நாலு நாளைக்கு முன்னாலேகூட நாலு சிதறுகாய் போட்டோமே!" என்றாள் மோகனா.

"அப்படியெல்லாம் கேக்காதே அம்மா. உன் கையாலே இன்னிக்குக் கொண்டுபோய் ஒரு தேங்காய் உடைச்சுட்டு சகஸ்ர நாமமாச் செய்துக்கிட்டு வந்துடு."



"சகஸ்ரநாமமா? என் தலையைக் கண்டா அந்தக் குருக்கள் தாத்தா, பாட ஆரம்பிச்சுடுவார். நேரம் ரொம்ப ஆகுமே!"

"அதுக்காக என்ன? வரதன், அபரஞ்சி ரெண்டு பேரையும் துணைக்குக் கூட்டிக்கிட்டுப் போ. நான் வீட்டைப் பார்த்துக்கறேன்" என்றாள் வடிவாம்பாள்.

இப்படித் தாயார் சொல்லவே, தன் மனத்தில் இருக்கும் குழப்பத்துக்குத் தெய்வந்தான் உதவி செய்யவேண்டும் என்ற நம்பிக்கையோடு, மோகனா கோயிலுக்குப் புறப்படத் தயாரானாள். மோகனா மாடியில் தயார் செய்துகொண்டிருக்கையில் வடிவாம்பாள் கீழே இறங்கி வந்தாள்.

இதே சமயத்தில் வாசலில் சென்ற வைத்தி பட்ட பாட்டைப் பார்ப்போம். வடிவாம்பாள் வீடு தாண்டி அவர் தெரு முனையில் போய்க்கொண்டிருக்கும்போது, "இவர்தான் ஐயா" என்று வரதன் கூறிய குரல் கேட்டது. திரும்பினார் வைத்தி. அவர் எதிரில் ஒரு போலீஸ்காரன் வெட்டு மீசையுடன் வருவதைப் பார்த்தார்.

"யாரு? இவரா?" என்றான் போலீஸ்காரன்.

"ஆமாங்க! இவருதான் கலெக்டர்னு சொன்னாரு" என்றான் வரதன்.

"அட, சை! நம்ம கலெக்டர் எவ்வளவு டிப்டாப்பா இருப்பாரு! இவன் யாரோ 'அவுட்பாக்'!"

"இல்லீங்க! இவர்தான் 'கலெக்டர்'னாரு! பங்களாவிலே வக்கீல் வந்திருக்காரானு பாருன்னாரு!"

"பின்னே, ஆசாமி யாரோ 'எத்தன்' போலிருக்கே!" என்று மலைத்தான் போலீஸ்காரன்.

இந்தச் சமயம் வைத்தி திரும்பி வேகமாக நடக்க ஆரம்பித்தார்.

"நில்லுங்க சார், நில்லுங்க" என்று கேட்டுக்கொண்டே போலீஸ்காரன் அருகில் வரவே, வைத்தி, "என்னையா நிக்கச் சொல்றே, ஏன்? என்ன விஷயம்? சாதாரண 'ஸிடிஸன்'னை வீதியிலே போகாதீங்கன்னு தடுக்கிறியே!" என்றார்.

"இல்லே சார். நீங்க உங்களைக் கலெக்டர்னு சொல்லிக்கிட்டீங்களாமே!" என்றான் போலீஸ்காரன்.

வைத்திக்குத் திடுக்கிட்டது. பக்கத்தில் நிற்கும் வரதனையும் பார்த்தார். "இதெல்லாம் படிப்பில்லாததாலே வர குறை!" என்றார்.

வரதன் போலீஸ்காரன் முகத்தைப் பார்த்தான். போலீஸ்காரன் வரதன் முகத்தைப் பார்த்தான். இந்த இருவருக்கும் படிப்பில்லாதவன் என்ற அந்த அவச்சொல் தங்களைக் குறிப்பிடவில்லை என்ற எண்ணமும் வந்தது.

"என்னய்யா, படிப்பு இல்லாததைக் கண்டுட்டே? நாங்கள் உங்களைப்போலத் தனி ஆவர்த்தனம் தானம் இல்லாம வாசிச்சமா? என்னமோ கலெக்டர்வீரே?" என்றான் வரதன்.

"பாத்தியா தம்பி, இந்த ஆளு பேசறதே !" என்று போலீஸ்காரரிடம் சொல்லிவிட்டு, வரதனை நோக்கி, "ஆமா. ஜில்லா கலெக்டரா, டிப்டி கலெக்டரா, பில் கலெக்டரான்னு கேட்டியா? படிப்பிருந்தால் நீ கேட்டிருக்க மாட்டே?" என்றார் வைத்தி.

"ஓய் சாரோ, கொஞ்சம் இருங்க. நீங்க என்ன கலெக்டர்? அதை யாவது சொல்லுங்க" என்றான் போலீஸ்காரன்.

"சொன்னா போதுமா, இல்லே சர்டிபிகேட்டும் வேணுமா?"

"இல்லை சும்மா சொன்னாலே போதும்."

"மீனாம்பிகா நாடக சபாவிலே டிக்கட் கலெக்டர். அமெச்சூர் ஆக்டர் சபாவிலே பில் கலெக்டர்."

"அப்படி ஒரு கம்பெனி இருக்கிறதாகவே கேள்விப்பட்ட தில்லையே !"

"நீ, ஆப்பிரிக்கா தேசத்திலே 'யாமா - யாமா'னு ஒரு மிருகம் இருக்கே, கேள்விப்பட்டிருக்கியா? செத்தவங்களோடே பேசலாம், சீட்டாடலாம்னு கேள்விப்பட்டிருக்கியா? அந்த மாதிரிதான் இந்தக் கம்பெனிகளுடைய விஷயமும். நீ பிறக்கிறதுக்கு முன்னாலேயே நான் அந்த சபாவிலே வேலை பார்த்திருக்கேன் !"

"நிறுத்துங்க சார் ! நீங்க கலெக்டர்னு சொன்னது தப்புதான், சார்."

"என்ன தப்பு? வா உங்க கலெக்டரையே கேட்போம். யாரு அவர்? — அதுதான் அந்த ஐ.சி.எஸ். — சீமைக்குப் போய்....."

"சங்கர கோபாலகிருஷ்ணன்."

"ஆமாம் ! சங்குப் பிள்ளைதானே? வா, கேட்போம். நீ வராட்டாலும் பாதகம் இல்லை. நானே அவரை டிபார்ட்மெண்ட் மூலமா உனக்கு எழுதச் சொல்றேன். உம் நம்பர் என்ன?"

"எதுக்கு சார் நம்பர் எல்லாம் கேக்கிறீங்க ?"

"நான் ஒண்ணும் உன்னை வேலை விட்டு நீக்கிடமாட்டேன் அப்பா; சும்மா சொல்லு !"

இதைக் கேட்ட போலீஸ்காரப் பையனுக்கு இவர் பெரிய ஆள் தான் என்று தோன்றியது.

இவ்வளவு நேரம் பொறுமையுடன் வைத்தியையே பார்த்துக் கொண்டு நின்ற வரதன், அவரிடம், "என் அய்யா, நீங்க சொன்னீங்களேன்னு முசாபரி பங்களாவிலே போய்ப் பார்த்தேன், அங்கே வக்கீல் வரவில்லை. அதுவும் பொய்தானே?" என்றான்.

"இதிலே பொய் என்னப்பா இருக்கிறது? அவர் நிசமா வந்திருந்தா நானே போயிருக்க மாட்டேனா? உன்னை ஏன் போய்ப் பார்க்கச் சொல்றேன்?"

"தம்பி, நீயே சொல்லு" என்று போலீஸ்காரரைப் பார்த்துக் கேட்டார் வைத்தி. போலீஸ்காரரும் "அது 'கரெக்ட்' தாங்க" என்றார்.



"சபாஷ்" என்றார் வைத்தி. "தம்பி, உனக்கு இருக்கிற கெட்டிக்காரத்தனத்துக்கு நீ மாத்திரம் படிச்சிருந்தா எவ்வளவு நல்ல பேர் வாங்கலாம் தெரியுமா? என் தம்பி, நீ என்ன பி.ஏ.யா?" என்றார் மறுபடியும் போலீஸ்காரனைப் பார்த்து.

"இல்லே சார், 7-ம் வகுப்புத்தான்."

"அட ஏழாம் வகுப்பா! நான் நம்பமாட்டேன். பி.ஏ. படிச்சவன் மாதிரி இருக்கே உன் கெட்டிக்காரத்தனம் ! உன் முகத்திலேயே படிப்புத் தெரியுதே ! ஆமா, நீ எங்கே இவ்வளவு தூரம் படிக்க கெட்டிக்காரன் ஆனாய்?" என்றார் வைத்தி.

பாவம், அந்தப் பையனுக்குத் தன் கெட்டிக்காரத்தனத்தை மறுக்க மனம் வரவில்லை. "எல்லாம் பழக்கந்தான் சார்" என்றான்.

"இந்தா பாரு, நான் சொல்றேன்னு நினைக்காதே. நீ கொஞ்சம் 'மில்டன்' படி. அவருடைய புஸ்தகம் 'டேல் அப் டூ சிடீஸ்'னு ஒண்ணு இருக்கு."

"இல்லே சார். அது 'சார்லஸ் டிக்கன்ஸ்' எழுதியது."

"கீப் கொயட் ! டிக்கன்ஸை எனக்குத் தெரியாது பாரு, நீ சொல்லித்தானே தெரிஞ்சுக்கணும் ! அவ்வளவும் மில்டன் எழுதின புஸ்தகம். இன்கம்டாக்ஸுக்குப் பயந்துண்டு 'டிக்கன்ஸ்'னு பேரைப் போட்டுண்டான். என் தம்பி, இங்கே எங்கேயாவது நல்லதா ஒரு கப் காப்பி கிடைக்குமா?" என்றார் வைத்தி.

"வாங்க சார், நமக்குத் தெரிஞ்ச ஓட்டல் ஒண்ணு இருக்கு" என்றான் போலீஸ்காரப் பையன்.

"ஏய் வரதா. நீயும் வாயேன்" என்றார் வைத்தி.

"நான் உங்களோடே வரதா? நீங்க போங்க !" என்று கூறிக் கொண்டு வரதன் வீட்டுக்குப் புறப்பட்டான். முசாபரி பங்களாவில் வைத்தி சொல்லியபடி வக்கீல் இல்லாததைக் கண்டதுமே வரதனுக்குச் சந்தேகம் வந்தது. அதனால்தான் தன் நண்பனாகிய ஒரு போலீஸ்காரப்பையனைக் கூட அழைத்து வந்தான். இப்போது வரதனுக்கு விஷயம் புரிந்துவிட்டது. இந்த வைத்தி ஒரு வெத்துவேட்டு என்று தீர்மானித்தான்.

பாவம், படிப்பில் அக்கறை கொண்ட அந்தப் போலீஸ்காரனுக்கு அன்று ஒரு ரூபாய் தண்டச்செலவு.

சொல்லி வைத்ததுபோல், சரியாய் ஆறு மணிக்கு வைத்தி வந்து விட்டார்.

இதற்குள் வடிவாம்பாள் வரதனுக்குச் சமாதானம் சொல்லி, அவனையும் அபரஞ்சியையும், மோகனாவையும் கோயிலுக்கு அனுப்பிவிட்டு வைத்திக்காகக் காத்திருந்தாள்.

அன்றைக்குச் சிங்கபுரம் மைனர் தம்முடைய சொந்த வண்டியைப் பூட்டி அனுப்பியதிலிருந்தே வடிவாம்பாளுக்கு லேசாக ஒரு சந்தேகம் மனத்தில் இருந்து வந்தது. தன் மகள் மேல் தக்க புள்ளி ஒன்று கண்

போட்டிருக்கிறது என்ற சந்தோஷத்தில் மைனரின் கடைக்கண் பார்வையைக் குபேரனின் பார்வையாகவே எண்ணினாள். அன்று அந்த மணப்பந்தலில் பெண்ணும் மாப்பிள்ளையும் உட்கார்ந்திருந்த அழகைப் பார்த்தவுடனேயே வடிவாம்பாளின் தாயுள்ளம் 'தனக்கும் இப்படி ஒரு மாப்பிள்ளை வாய்க்க வேண்டும்' என்று ஆசைப்பட்டது. அந்த ஆசை இவ்வளவு சீக்கிரம் பழுக்கும் என்பதை அவள் எதிர்பார்க்கவில்லை.

அன்று காலையில் வைத்தி வந்து வீட்டில் காலடி வைத்ததுமே இந்த எண்ணத்தில்தான் உட்காரச் சொன்னாள். அவன் கையில் இருந்து நானூறு ரூபாய்களைப் பெற்றுக்கொண்டவுடன் வடிவாம்பாளுக்கு இதுதான் தோன்றியது. 'இந்த ஆள் பெரிய எத்துக்காரன். இவனிடம் இருந்தே நம் கைக்குப் பணம் வந்திருக்கிறது என்றால் அதிர்ஷ்ட தேவதை நம் பக்கம் இருக்கிறது என்றுதான் அர்த்தம். ஆனால், இவனை நாம் முழுவதும் நம்பிவிடவும் கூடாது. இந்த விஷயம் நல்ல முறையில் முடியும்வரையில் நாம் பிகுவை விடவே கூடாது' என்று நிச்சயம் செய்துகொண்டு, வைத்தியை எதிர்பார்த்திருந்தாள், வடிவாம்பாள்.

வைத்தி வந்தவுடன், மோகனாவிடம் மைனருக்கு இருக்கும் அக்கறையைப் பக்குவமாகச் சொன்னார். வடிவாம்பாள் கடைசிவரை கேட்டுக்கொண்டிருந்தாள். கடைசியில், "ஐயா, உங்களைக் கும்பிடறேன். நீங்க இந்த வீட்டுக்குள்ளே வராதீங்க" என்றாள்.

இதைக் கேட்ட வைத்தி திடுக்கிட்டார்! "இந்தா பாரு, நான் கூப்பிட்டா வரமாட்டேன். போன்னு சொன்னாலும் போக மாட்டேன். நமக்கு என்ன, நல்லவங்க நன்றாயிருக்கணும், அவ்வளவு தான்! இப்போ நாளைக்கு உம் பொண்ணு ஆடறான்னு வச்சுக்கோ. இந்தக் காலத்துலே இந்த முனிசிபாலிட்டி, யூனியன் எதிலே பார்த்தாலும் ஒரே குழப்பமாயிருக்கு" என்றார்.

"அப்படின்னா?" -

"அதுதான் மெம்பர்களுக்குள்ளே போட்டி."

"என்னய்யா, ஒண்ணுமே புரியலையே!"

"அதாவது, ரோட்டிலே கல்லும் முள்ளும் நிறைய இருக்கு. கூட்டினாத்தானே போகும்! இந்தப் போட்டியைப் பார்த்துட்டுத் தொழிலாளி கூட்டல்லேன்னு வச்சுக்க. உன் பெண் ஆடறபோது ஒரு கல்லு காலிலே பட்டது! அப்ப என்ன ஆறது?"

"என்னய்யா துக்கிரித்தனமா சொல்லிக்கிட்டு! நீர்தான் வாசல்லே போறபோது தடுக்கி விழுமே!"

"யாரு வருத்தப்படப்போறா? மோகனா அப்படியா? நம்மகிட்ட ஒரு பத்து வேலி நிலம் இருந்தா எவ்வளவு வசதியா நம் இஷ்டம் போல் எங்கு போனாலும்—"



"நமக்குன்னா, யாருக்கு?"

"உன் மகளுக்குத்தான். இல்லேன்னா உனக்கும் எனக்கும் யாரு குடுப்பாங்க?"

"என்ன அய்யா சொல்றீங்க? சொல்றதைத் தெளியா சொல்லுமே!"

"இந்தாபாரு, மைனர்கிட்டச் சொல்லி பத்து வேலி எழுதித்தரச் சொல்கிறேன். அதுதான் விஷயம்" என்றார் வைத்தி முடிவாக.

"எழுதித் தரலாம். இறங்கி யார் உழுகிறது? உங்க பத்து வேலியிலே விளைகிற பணத்தை, எம் மகள் பத்து மேடையிலே ஆடிச் சம்பாதிச்சுடுவா."

"இந்தபாரு வடிவாம்பா! இந்தத் தொழில் நிரந்தரமில்லே. ஒரு போட்டி வந்தாலும் போச்சு. உடம்பு பெருத்தாலும் போச்சு. அந்தக் கோவிலடிக் குஞ்சம்மாளைப் பாரு. ஆட முடியாம இளைக்குது."

"அதுக்குனு வாதாம் பருப்பா வறுத்துத் தின்னா—?"

"பாதாம் பருப்பு இல்லே, பணத்தைப் பார்த்த சந்தோஷம் உடம்பு பெருத்துப் போகுது. இப்ப மோகனா இருக்கா, ஆடி ஓடி அலுத்துப் போனா ஒருநாள் உட்காரத்தானே வேணும்! என்னைக்கும் உன் மக இப்படியே இருந்துவிட முடியாது. யாரையாவது கலியாணம் செய்து கொண்டுதானே ஆகணும்?"

"என் மகள் விஷயத்திலே எனக்கில்லாத அக்கறை உமக்கென்ன வந்திடுத்தாம்?"

"இந்தா பார், 'என் மகள், என் மகள்'னு பேசாதே."

"ஏன்?"

"அவள் உன் மகள் இல்லே!"

"என்ன?"

"ஆமாம்! எங்கே இன்னும் பத்து ஜன்மம் எடுத்துப் பாரு இப்படி ஒரு மக பிறக்கிறதா பார்ப்போம்? அவ உன் மகளும் இல்லே தாசியும் இல்லே. அவ இந்தப் பரத நாட்டியக் கலைக்குன்னே பிறந்தவள். இந்தப் பாரத நாட்டுக்கே செல்வம்!"

வடிவாம்பாளுக்கு உடம்பு புல்லரித்தது. வைத்தி பேசப்பேச அவளுக்குக் கண்களில் ஆனந்தக் கண்ணீர் நிறைந்தது. 'இவருக்கு ஒரு கப் காப்பியைக் கொடுத்துவிடலாமோ' என்றுகூட நினைத்து விட்டாள். ஆனால், இத்தனை வருஷமாக ஏற்பட்டிருந்த பழக்க வாசனையானது அந்தக் காரியத்தைச் செய்யவிடாமல் அவளைக் காப்பாற்றியது!

இரும்பு பழுத்துவிட்டதை உணர்ந்த கருமான், அதை எடுத்துத் தன் இஷ்டப்படி வளைப்பதைப் போல், வடிவாம்பாளின் மனம் பழுத்துவிட்டதை உணர்ந்த வைத்தி அதைத் தம் இஷ்டத்துக்கு வளைக்கத் தொடங்கினார்!

"மைனர் ரொம்பச் சின்ன வயசு. சொத்துக்காரர். உன் மகள் போடு குட்டிக்கரணம்'னு சொன்னால் போடுவார்" என்றார்.

"ஏல் இயா, அவ என்ன குரங்காட்டியா? குட்டிக்கரணம் போட்டால் யாருக்கு என்ன மிச்சம்? நாளைக்குக் கடம்பவனம் பிள்ளை பகை வந்தால் நாங்க என்ன ஆகிறது?"

"அதுக்கு நான் ஆச்சு"

"அடியை வேணா நீங்க முதுகிலே வாங்கிக்குவீங்க! அப்புறம் ஆள் ஓட்டத்திலே ஆரம்பிச்சாப் புடிக்க முடியாது. என் மகளுக்குத் தகுந்தவனா—"

"யார் வரப்போகிறான்? எவனாவது ஒரு வித்வான் வருவான். பாடுபட்டுச் சம்பாதிச்ச பணத்தையெல்லாம் பாலும் குங்குமப்பூவுமாகச் சாப்பிட்டுக் 'குளோஸ்' பண்ணிப்பிடுவான். மைனர்னா, கறவைப் பசு! அவராலே காலணாச் செலவு இருக்காது. நாலு வீட்டைக் கட்டித் தருவார். பத்து மாட்டை வாங்கித் தருவார்—"

"பெருக்கி மெழுகி சாணி தட்டிக்கிட்டு என்னை இருக்கச் சொல்லுவார்."

"அதில்லை. கச்சேரிக்குப் போக வேண்டாம்னு சொல்ல மாட்டார். மோகனாவுக்கு நல்ல பேர் வந்தா தனக்குக் கௌரவம்னு நினைப்பார். எவ்வளவு பெருமை இருக்கு பாரு!"

இவ்வளவும் வடிவாம்பாளுக்கே தெரியும். இருந்தாலும், வைத்தியைப் பேச விட்டுவிட்டுக் கேட்டுக்கொண்டிருந்தாள். அவர் பேசப் பேச வடிவாம்பாளுக்குப் பணத்தாசை மேலிட்டது. ஆனால் மகளின் குணம் தெரிந்தவள் ஆதலால், தன் வாயைத் திறந்து எதுவும் சொல்லாமல் இருந்தாள்.

கடைசியில், "இப்ப நீ என்ன முடிவு சொல்கிறாய்?" என்று வைத்தி கேட்டவுடன் வடிவாம்பாள் விழித்துக்கொண்டாள்.

"இந்தாங்க வைத்தி! என் மகள் பொல்லாதவள். அவள் காதிலே நீங்க வந்த சேதி பட்டுதுனா வீதி ரெண்டுபட்டுப்போகும். நீங்க போய், அந்த மைனரையே என் கிட்ட வந்து பேசச் சொல்லுங்க!"

"சே, அவர் பெரிய மனுஷன் ஆச்சே!"

"அப்படின்னா, நாங்க மட்டும் என்னவாம்! சரி வேண்டாம்—நீங்க போங்க!"

"இல்லை, வரச்சொல்றேன். ஆனால்— எப்போ?..."

"எப்பவானாலும். இன்னும் ஒரு வாரத்துக்குள்ளே வரச் சொல்லுங்க. ஆனால், இந்த வண்டி கிண்டியைக் கொண்ணாந்து வாசல்லே போடக்கூடாது."

"என்ன, இப்பவே காவடி எடுக்கச் சொல்றே? சரி, பின்னே நான் வரேன்" என்று சொல்லிக்கொண்டே வைத்தி புறப்பட்டார். வைத்தி போய் பத்து நிமிஷம்வரை வடிவாம்பாளுக்கு மன நிம்மதி இல்லை

அசோக் நகர், சென்னை-83



இந்தச் சமயம் மோகனாவும் கோவிலில் இருந்து வந்துவிட்டாள். பிரசாதத்தைத் தன் கையில் வாங்கினாள் வடிவாம்பாள். அதை எடுத்து முதலில் மகளின் நெற்றியில் இட்டாள். அப்படி இடும்போது, மைனர் சம்பந்தம் முடியவேண்டும் என்று நினைத்துக்கொண்டே இட்டாள். மோகனாவோ சண்முகத்தை நினைத்துக்கொண்டே இட்டுக்கொண்டாள்.

139560

## இருபத்தெட்டாம் அத்தியாயம்

484704



## காரைக்கால் நடேசன்

**மா**, பலா, வாழை என்னும் தமிழ்நாட்டு முக்கனிகளுள் முதற்கனி காரைக்கால் தமிழ்ப் பெண்மணிகளின் பெருமையைச் சொல்வது காரைக்கால். அதோடு தமிழ் மக்கள் தொன்றுதொட்டுப் பெண்மையைப் பேணி வளர்த்தார்கள் என்பதை இக்காலத்தவருக்கு எடுத்துக்காட்டும் ஒரே ஊர் காரைக்கால் தான்.

சைவமும் தமிழும் உள்ளவரை காரைக்கால் அம்மையாரைத் தமிழகம் மறவாது. வருடந்தோறும் மாம்பழத் திருவிழாவில் லட்சக் கணக்கான தமிழ் மக்கள் யாத்திரை வரும் தலம் அது. மனிதனின் ஆன்ம வாழ்வுக்கு வழி வகுத்த சைவத் திருமுறைகளில் முக்கியமான பாடல்கள் காரைக்கால் அம்மையின் பாடல்கள்.

அவருக்கு ஈசன் அளித்த மாம்பழத்தைக் கொட்டை தோது நீக்கிக் கனிச்சுவையை மட்டும் கன்னித் தமிழில் வடித்து அழியாக் காவியமாக ஆக்கித்தந்த அன்னை, காரைக்கால் அம்மையார். அன்று ஆளுடைய பிள்ளைக்குச் சீர்காழியில் தேவியே வந்து ஞானப்பால் ஊட்டியதுபோல் இன்று தமிழ் மக்களுக்கு அளித்த ஞான அமுதம் அவர் பதிகங்கள்.

அத்தகைய காரைக்காலில் துபாஷ் வீடு என்று பரம்பரைப் பெயர் பெற்ற ஒரு குடும்பம் உண்டு. அந்தக் குடும்பத்தின் வழிவந்தவர் நடேசன்.

இவர் ஒரு செல்வர். காரைக்காலிலேயே பரம்பரையாக நடத்து வரும் வியாபாரத்திலே ஊறியவர். ஆனால் இவரைப் பார்த்தவர்கள் யாரும் இவரை மது விற்பவர் என்று சொல்ல முடியாது. இவர் பேச்சும், பழக்கமும், நடை, உடை, பாவனைகளும் இவருக்கும் அந்த வியாபாரத்துக்கும் சம்பந்தம் இருப்பதாகவே தோன்ற இடம் அளிக்காது.

இதல்லாமல் இவர் சிறந்த ரசிகருங்கூட. அந்தப் பக்கத்தில் எங்கு நாடகம் நடந்தாலும் இவரைப் பார்த்துக்கொள்ளலாம். நல்ல மேளம் கேட்பதில் ஆசை அதிகம். இவருக்கு வெளிப்பாளையத்தில் கல்யாணம் ஆகியிருந்தது. இவர் கல்யாணத்தில் சண்முகம் வாசித்தான். அன்று முதல் எப்போது நாகபட்டினம் வந்தாலும் ஒரு முறை சிக்கல் சென்று சண்முகத்தைப் பார்த்து வருவார். சண்முகத்திடம் அபாரமான அன்பு உடையவர்.

காரைக்கால் அக்காலத்தில் சங்கீதத்துக்குப் பெயர் பெற்ற ஒரு ஊராகவும் இருந்தது. அந்த ஊரில் ஒரு பெரிய நாதஸ்வர வித்வான் வேறு இருந்தார். கேவலம், கடனாளிக்கும், சுங்கத்தை ஏமாற்றுவதற்கும், குடிக்கும், அரசியல் சதுரங்கத்திற்கும் மாத்திரம் பெயர் பெற்றதல்ல அந்த ஊர். இவை யாவும் இடையில் ஏற்பட்ட அடிமைத்தனத்தால் வந்த வியாதிகள். அந்த ஊர் மக்களின் பழக்க வழக்கங்களை இவை மாற்றினாலும் அவர்களுடைய பண்பாட்டை மாற்றவில்லை.

பாட்டுக்காரர்களுக்குப் பட்டு, வாசனைச் சாமான் முதலிய உல்லாசப் பொருள்களில் இயற்கையாகவே பிரியம் அதிகம். பேச்சைவிடப் பாட்டு உயர்ந்தது. அது போல் பஞ்சுத் துணியைவிடப் பட்டு உயர்ந்தது. பிரசங்கத்தைவிட, ஸ்வரப் பிரஸ்தாரம் உயர்ந்தது. அதுபோல் பூவைவிட அத்தர் உயர்ந்தது. ரஸத்தை வடித்துக் கொடுப்பவர்கள் வித்வான்கள். ஆகவே, திராட்சை ரஸத்தை வடித்து அழகான பாட்டிலில் தங்கக் காகிதம் சுற்றி வைத்துக் கலைஞர்களுக்குச் சமர்ப்பணம் செய்வது ஒரு உயர்ந்த உபசாரம் என்று எண்ணியவர்களும் அவ்வூரில் உண்டு. இது பாரிஸ் நகரைப் பார்த்து வந்த வழக்கம்.

ஒரு வித்வான் முன்பெல்லாம் கள்ளிக்கோட்டைக்குக் கச்சேரிக்குப் போய் வந்தால் அவருடன் ஒரு கூடை ஆரஞ்சுப்பழமும், மலேரியாக் காய்ச்சலும் வந்து இறங்கும். திண்டுக்கல்லுக்குப் போய் வந்தால் வெற்றிலையும், மலைப்பழமும், புளிச்சேப்பமும் கூட வரும். அதைப் போலவே காரைக்காலுக்குப் போய்விட்டு வந்தால் உடைத்த "லவெண்டர்" பாட்டில் ஒன்றும், ஓரத்தில் தைத்த பட்டு அங்கவஸ்திரமும், உடனே சலவை செய்த சில்க் சட்டைகளும் வரும். அவரவர்கள் ஊரில் கிடைக்கும் உயர்ந்த பொருள்களை ரசிகர்கள் வித்வான்களுக்குச் சன்மானம் செய்வது இயற்கை. இம்மாதிரி சன்மானம் செய்வதில் நடேசன் தலைசிறந்தவர்!

திருவாரூரிலிருந்து வந்த சண்முகம் பித்தம் பிடித்தவன் போல் இருந்தான். அவன் மனம் எதிலும் ஓடவில்லை. நாதஸ்வரப் பெட்டியைக்கூடத் திறக்கவில்லை. வந்த கடிதங்களைக்கூடப் பார்க்கவில்லை. எந்தக் கச்சேரிக்கும் ஒப்புக்கொள்வதில்லை என்று கூறிவிட்டான். இலங்கைக்குக்கூட வரவில்லை என்று தந்தி கொடுத்து



விட்டான். தவுல்கார முத்துராக்கு இலங்கைக்குப் போவதற்குச் சொல்லிக்கொண்டு வர ஊருக்குப் போயிருந்ததால் சண்முகத்தை 'ஏன் இப்படிச் செய்கிறாய்' என்று கேட்பவர்களும் இல்லை. அவன் சரியாகக் குளிப்பதில்லை, சாப்பிடுவதில்லை. தருமனிடமும் முகம் கொடுத்துப் பேசுவதில்லை. இவ்வாறு வெறிபிடித்தவன் போல் அவன் இருக்கும் நிலையில்தான் காரைக்கால் நடேசன் அங்கு வந்து சேர்ந்தார்.

மற்றவர்கள் எல்லோரும் சண்முகத்தின் வாசிப்பைத்தான் கேட்டு ரசிப்பார்கள். நடேசனோ சண்முகத்தின் பேச்சைக் கேட்டே ரசிப்பவர்; இன்று எதிர்பாராதவிதமாக அவர் வந்தவுடன் சண்முகம் எவ்வளவுதான் தன் வருத்தத்தை மாற்றிக்கொண்டு உபசாரம் செய்ய முயன்றாலும் அவனால் முடியவில்லை.

"வாங்க நடேசண்ணே!" என்று அவன் கூப்பிட்ட தொனியில் இருந்தே அவன் வருத்தத்தைப் புரிந்துகொண்டுவிட்டார் நடேசன். இருந்தாலும், கேட்டால் வருத்தம் அதிகமாகும் என்ற எண்ணத்தில் "என்ன, இலங்கைப் பிரயாணம் எப்ப?" என்று பேச்சை ஆரம்பித்தார்.

"என்ன, இலங்கையிலே என்ன இருக்கு? நான் வரமுடியாதுன்னு தந்தி கொடுத்துட்டேன்" என்றான் சண்முகம்.

"ஏன், கதிர்காமம் போக வேணும்னு சொன்னீங்களே! நான்கூட சௌகரியப்பட்டால் உங்களோட புறப்படலாமின்னிருந்தேன்!"

"நீங்க வேணுமானா போயிட்டு வாங்க. போயி அந்த முருகன்கிட்ட இது நியாயமான்னு கேளுங்க!"

"ஏன், என்ன வருத்தம்?"

"இல்லை அண்ணே. தயவு செய்து என்னை ஒன்றும் கேட்காதீங்க" என்று ஒரு பேச்சில் முடித்துவிட்டான் சண்முகம்.

இதைக் கண்ட நடேசன் பேச்சை வேறு பக்கம் திருப்பினார்.

"என்னா பிள்ளைவாள், கோயிலுக்குப் போய்விட்டு வருவமா?"

"கும்பிட்டதெல்லாம் போதும். அவருதான் காவியையே கட்ட விட்டுடுவாரு போலிருக்கே!" என்று பெருமூச்சு விட்டான் சண்முகம்.

அவன் மனத்தில் இருக்கும் துயரத்தைப் போக்க நடேசனுக்கு ஆவல் உண்டாயிற்று. பாதி உண்மையும், தனக்கே உரிய கற்பனை பாதியுமாகத் தருமன் சொன்னதும் நடேசன் விஷயத்தைப் புரிந்து கொண்டார். சண்முகத்தை எப்படியாவது காரைக்காலுக்கு அழைத்துப் போய், இரண்டு நாள் தன் விருந்தாளியாக வைத்திருந்து அவன் வருத்தத்தை ஆற்றித் திருப்பி அனுப்புவது என்று நிச்சயம் செய்துகொண்டார்.

மெள்ளப் பேச்சை ஆரம்பித்தார்.

"என்ன, பிள்ளை, வாங்களேன்; ஊருக்குப் போய்விட்டு வருவோம்" என்றார்.

"இல்லிங்க நான் ஒரு இடத்துக்கும் புறப்படவில்லை"

நடேசன் விடவில்லை. "சரிதான் பிள்ளை, வாங்க !" என்று வற்புறுத்திச் சண்முகத்தைத் தம் வண்டியிலேயே காரைக்காலுக்கு இழுத்துப் போய்விட்டார்.

## இருபத்தொன்பதாம் அத்தியாயம்

# மனக்கவலை மாற்ற மருந்துண்டோ !



இந்த உலகில் ஒருவரை ஒருவர் வேண்டுமென்றே கெடுப்பதில்லை. திருடன்கூட ஒருவனைக் கெடுக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் திருடுவதில்லை.

மரத்திலே புல்லுருவி படருகிறது. அந்தப் புல்லுருவிக்கு மட்டும் பேசத் தெரிந்தால், "நான் வளர இடம் கொடுத்தது இந்த மரந்தான். இது நன்றாக இருக்க வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே மரத்தைப் பட்டுப்போகச் செய்து, தானும் கெட்டுவிடும். இது, ஒரு நல்ல எண்ணத்துடன் நம்மைக் கெடுக்கும் நண்பர்களைப் போன்றது.

தசரதன் தவித்தது அன்பால். கைகேயிக்கு வரம் கொடுத்தது அன்பால். அதன் பயனாய் ராமபிரான் காட்டுக்கு அனுப்பப்பட்டபோது, துடித்து வீழ்ந்து இறந்ததும் அன்பால்தான். ஆகவே, உலகில் அதிகமான ஆபத்துகள் அன்பால்தான் வருகின்றன என்பதை அறிந்துதான், பலர் அன்பு, வெறுப்பு இரண்டையும் விட்டுப் பற்றற்று வாழப் பழகிக்கொண்டனர்.

உயர இருக்கும் பழத்தையே கீழே இழுக்கும் ஆகர்ஷண சக்தி கொண்டது பூமி. அப்படி இருக்க இதனுள் வாழும் மனிதனை அது இழுக்காமல் விட்டுவிடுமா? பற்றற்று வாழப் பழகிய மகான்கள் கதியும் இப்படித்தான். என்றைக்காவது ஒரு நாள் அவர்களும் பொத்தென்று ஆசையால் விழுந்துவிடுவதும், அதுவரை கிடைத்த அவ்வளவு நற்பெயரும் அபவாதமாக மாறுவதும் தொன்றுதொட்டு நடந்து வருகின்றன.

ஞானிகளின் கதியே இப்படியென்றால் சாதாரண மனிதனைப் பற்றி என்ன சொல்வது? நாம் ஆசாபாசமே உருவானவர்கள். நமது வாழ்க்கைக்கு அன்பே ஆணிவேர். ஆதலால், அன்பால் உயர்வதும், கெடுவதும் உலக இயற்கை. இத்தகைய அன்பில் சிறந்தவர் நடேசன்.

காரைக்காலில் அவர் வீடு பெரிய வீடு. அதற்குப் பின்புறம் தோட்டம். தென்னம்பிள்ளைகளும், பூஞ்செடிகளும் நிறைந்தது.



அதன் மத்தியில் அழகிய சவுக்கண்டி ஒன்று அமைத்திருந்தார். அந்தச் சவுக்கண்டியில்தான் அவர் விருந்தினர்களை உபசரித்து அவர்களுடன் கூடிப் பேசுவார்.

அந்தக் கொட்டகை தென்னங்கீற்றால் போடப்பட்டிருந்தாலும், அதன் நாற்புறமும் நல்ல சீட்டித் துணிகளால் திரைகள் கட்டப்பட்டிருந்தன. உள்ளே, ஓரங்களில் வெல்வெட் தைத்த சோபாக்கள் போடப்பட்டிருந்தன. அநேகமாய் அவற்றில் யாரும் நெடுநேரம் உட்காருவது கிடையாது. கட்டும் வேட்டிக்குக் கரை போட்டிருப்பது போல் அவை அலங்காரத்திற்காகத்தான் இருந்தன. சவுக்கண்டியின் நடுவில் திவ்யமான சதிர் ஜமுக்காளம் விரித்து அதன்மேல் 'டர்கிஷ் கார்பெட்' போட்டு, வெல்வெட் தலையணைகளும் திண்டுகளும் போடப்பட்டிருந்தன.

காரைக்காலில் எல்லாமே நன்றாக இருக்கும். ஆனால், ஒன்று மாத்திரம் சுமார். அதுதான் காரைக்கால் வெற்றிலை. ஸ்ரீமான் நடேசன் அதையும் அறிந்து, கும்பகோணத்திலிருந்து மேலக் காவேரி வெற்றிலைத்துளிர் கொண்டுவர ஏற்பாடு செய்திருந்தார்.

சண்முகம் வந்திருக்கிறான் என்று கேள்விப்பட்டவுடன் காரைக்கால் ரசிகர்கள் பலர் அங்கு வந்து கூடினார்கள். சுற்றிப் பலர் நின்று முகமன் கூறி உபசரிக்கக் கண்டதும், சண்முகத்தின் துயரம் சற்று நேரம் நீறு பூத்த நெருப்புப்போல் அடங்கிக் கிடந்தது.

அவன் அதிகம் பேசவில்லை, அதிகம் சிரிக்கவில்லை. இதைப் பார்த்த அன்பர்கள், வித்வான் வினயமாக அடக்கத்துடன் இருக்கிறார் என்றுதான் நினைத்தார்களே அல்லாமல், தங்களை எல்லாம் களிப்பிக்கும் வித்வான்களுக்கும் கவலைகள் இருக்கும், அவர்களும் தங்களைப் போல் மனிதப் பிறவிகள்தாம் என்ற எண்ணம் ஒருவருக்கும் உண்டாகவில்லை.

வந்த ரஸிகர்கள் அவனைப் பார்த்தே மகிழ்ந்தனர். நடேசனோ ஒவ்வொரு ரசிகரையும் வரவேற்று உபசரித்து, சண்முகத்திற்கு அறிமுகம் செய்வித்துத் தம் வீட்டிற்குத் தெய்வமே விஜயம் செய்திருப்பது போன்ற மகிழ்ச்சியுடன் விளங்கினார்.

இவ்வாறு உலகத்தாரெல்லாம் அன்பைச் சொரிந்துகொண்டிருக்கும்போது, 'தனக்குக் கிடைக்க வேண்டும் என்ற இடத்திலிருந்து தனக்குரிய அன்பு கிடைக்கவில்லையே ! தான் வைத்த ஆசை இலவு காத்த கிளி போல் ஆகிவிட்டதே !' என்று எண்ணினான் சண்முகம்.

'அடே, அப்பா ! அவள் நின்ற நிலை என்ன ! பார்த்த பார்வை என்ன ! எதிரும் புதிருமாக ரயிலில் வந்தபோது அவள் நம் இதயத்தில் அல்லவா ஏறி உட்கார்ந்திருந்தாள் ! நாம் அவளைப் பாராதது போல் இருந்தபோது அவள் நம்மையே பார்த்தாள். அடிக்கடி தாயானாவேறு கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டாள். நாம் அவள்

கண்ணில் ஊறியபோது, அவள் முகத்தில் தெரிந்த அன்பும், நாணமும் இன்றும் கண்முன் நிற்கின்றனவே!...... நாம்தாம் அவளைத் தவறுதலாகப் புரிந்துகொண்டோமா? நம்மிடம் ஒரு வித்தை இருக்கிறது. இயற்கையாகவே நம் போன்ற கலைஞர்களைப் பார்க்க மக்கள் விரும்புவது சகஜம். பேச விரும்புவதும் சகஜம். இந்த முறையில் அவள் நம்மைப் பார்த்திருந்தால், இதே முறையில் அவள் வெட்கி நாணி இருந்தால்? சே, இருக்கவே இருக்காது!

'இன்றுவரை நம்மை எத்தனையோ பேர் இப்படிப் பார்த்திருக்கிறார்கள். ஆனால், நம் மனத்தில் இம்மாதிரி எண்ணம் எவரைப் பார்த்தும் உண்டானதில்லை. 'நெருப்பு இல்லாமல் புகையாது, நெஞ்சம் ஈடுபடாமல் நேசம் தோன்றாது' அவள் பார்த்தது காதல் பார்வைதான்.

'அப்படி இருந்தால் ஏன் இந்தத் துரோகம்? ஏன் இந்த மாறுதல்? தஞ்சாவூரில் சொல்லாமல் இறங்கியது குற்றமா? நாம் நம் அன்பைத் தெரிவிக்கவில்லையே என்ற காரணம் இருக்குமா? இது என்ன கல்யாணக் கச்சேரி நிச்சயிக்கிற விஷயமா, உடனே பதில் எழுதிப் போட!— என்னவோ உலக வாழ்வில் இது ஒருநாள் பிரயாணம். ரயில்வே சிநேகம். இதைப்போய் நாம் பெரிதாக்கிக்கொண்டது தவறுதான். அவள் நம்மிடம், 'அன்பே, உன்னைக் காதலிக்கிறேன்' என்றாளா? 'ஐயோ, பிரிய முடியவில்லையே!' என்று துடித்தாளா? அவளுக்குக் கண்வீச்சில் காசு இருக்கிறது. நட்டுவனார் கற்றுக் கொடுத்த பாடம், தொட்டிலில் வந்த பழக்கம். அவள் கண்வெட்டு அரிவாள் வெட்டுப் போல் நம் மனத்தைப் புண்படுத்திவிட்டது. குற்றம் அவளுடையதா?

'சீ, அவள் ஒரு ஏமாற்றுக்காரி. இதே கண்கள்தானே மைனர் பேரில் விழுந்திருக்கின்றன! இதே கண்கள்தானே அவரையும் மயக்கி இருக்கின்றன? இதே கண்களால் இன்னும் எத்தனை பேருடைய மனத்தைப் புண்படுத்தி இருக்கிறாளோ! அது ஒரு நஞ்சு விழி - 'பாம்புக்கு விஷம் பல்லிலே, பாவைக்கு விஷம் பார்வையிலே' என்றெல்லாம் எண்ணியபோது, சண்முகத்தின் உடல் காந்தியது. விழிகள் சிவந்தன. மூச்சு தடைப்பட்டது. எழுந்துபோய் ஒரு ஓரத்தில் உட்கார்ந்துகொண்டான்.

சண்முகத்தின் போராட்டத்தைக் கண்ட நடேசன் ரஸிகர்களிடம், "பாவம், வண்டியில் வந்தது களைப்பாயிருக்கும். கொஞ்சம் சிரம பரிகாரம் செய்துகொள்ளட்டும்" என்று கூறவே, நண்பர்கள் ஒவ்வொருவராய்க் கலைந்தனர்.

நடேசன் சண்முகம் அருகில் வந்து உட்கார்ந்தார். "என்ன சண்முகம் பிள்ளை, குளிக்க வேண்டாமா?" என்றார்.

"ஆமா, குளிக்கத்தான் வேணும். என் மனசு கொதிக்கிற கொதிப்புக்குக் கிணறு, குளம் எல்லாம் பத்தாது. கடலிலே விழுந்தாத்தான் தேவலாம்."



"என்ன அப்படிக் கவலை வந்துட்டுது உங்களுக்கு?"

"அண்ணே, அது ஒரு வெட்கக்கேடு— அதை விடுங்க. உயிர் சாக்கிலே நெருப்பை வச்சுக் கட்டிக்கிட்டாப்பிலே அது உள்ளேயே இருந்து உடம்பை எரிக்கிற கவலை"

"சரி சரி, சொல்ல வேண்டாம். நல்ல சந்தனாதித் தைலம் இருக்கு. கொஞ்சம் தேச்சுவிடச் சொல்றேன். ஸ்நானத்தைப் பண்ணுங்க"

"வேண்டாம் அண்ணே. வியாதிக்குத் தைலம் உண்டு. விதிக்குத் தைலம் உண்டா? என்னெண்ணெய் தேய்ச்சு முழுகினாப்பிலே எண்ணம் போயிடுமா?"

"அடே முத்தா!" என்றார் நடேசன். முத்தன் வந்தான். "எழுந்திருங்க" என்று அதிகாரத்துடன் சொன்னார் நடேசன். சண்முகம் எழுந்தான்.

சண்முகத்தின் தலையில் ஒருகை சந்தனாதித்தைலத்தை வைத்து, முத்தன் சூடு பறக்கத் தேய்த்தான். சண்முகம் ஒரு சாதுக் குழந்தை போல் மௌனமாகத் தேய்த்துக்கொண்டான்.

இளம் வெந்நீரில் நாலு சொட்டு உயர்ந்த 'ஓடிகோலோ'னை விட்டு வைத்தார் நடேசன். அதில் ஸ்நானம் செய்தான் சண்முகம். மொறு மொறு என்று சலவை செய்த குழாய் பீஸ் வேஷ்டியை அணிந்து கொண்டு மறுபடியும் கூடத்தில் வந்து உட்கார்ந்தான்.

நல்ல மட்டிப்பால் வத்திகள் சிறு புகையை விட்டுக்கொண்டு அந்தச் சவுக்கண்டி பூராவும் நறுமணத்தைப் பரப்பிக்கொண்டிருந்தன.

நடேசன் அலமாரியைத் திறந்தார். அதிலிருந்து ஒரு ரொட்டிப் பெட்டியை எடுத்தார். தன் கையாலேயே அந்த டின்னைத் திறந்தார். கமகமவென்று மணக்கும் மேரி பிஸ்கட்டுகளை இரண்டு பிளேட்டுகளில் எடுத்து வைத்தார். ரொட்டியின் அழகும் மணமும் பசியைக் கிளப்பின. சண்முகம் ஒரு ரொட்டியைக் கையில் எடுத்தான்.

"கொஞ்சம் இருங்க" என்றார் நடேசன்.

சண்முகம் நடேசனைப் பார்த்தான். நடேசன் தயங்கிக்கொண்டே பின்வருமாறு கேட்டார் :

"பழக்கம் உண்டில்லே...?"

சண்முகத்துக்குப் புரியவில்லை. விழித்தான்.

"சாப்பிடுவீங்க இல்லே?" என்றார் நடேசன். என்ன கேட்கிறார், எதைக் கேட்கிறார் என்று மலைத்தான் சண்முகம். நடேசன் லேசாய்ப் புன்னகை செய்துகொண்டார்.

"என்ன பிள்ளை, மலைக்கிறீங்க? கொஞ்சம் டிரிங்ஸ் ஏதாவது சாப்பிடுறீங்களானு கேட்டேன்!" என்று சொல்லிவிட்டு, ஒரு சோடா பாட்டிலையும், இன்னொரு கையில் தங்கக் குல்லாய் போட்ட பாட்டில் ஒன்றையும் எடுத்தார்.

சண்முகத்துக்கு இதைக் கண்டதும் உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரையில் ஒரு குலுக்குக் குலுக்கியது அந்தப் பாட்டிலின்மேல் வலை போட்டது போல் மெல்லிய இரும்புக் கம்பி சுற்றி இருந்தது. 'அடே, என்னைத் தொடாதே. உன் புத்தியும் இரும்புக் கம்பிக்குள் அடைபட்டது போல் ஆகிவிடும்' என்று சொல்வது போல அது இருந்தது.

"என்ன பிள்ளை ! ஒரு பார்வையிலேயே மயங்கிட்டீங்க?" என்றார் நடேசன்.

"என்னை மயக்க மது வேறே வேணுமா, அண்ணே? மனசு உள்ளவங்களைத்தானே இது மயக்கும்? நான்தான் மனசைப் பறி கொடுத்துட்டேனே !"

"பழக்கம் உண்டா இல்லையா? கேட்டதுக்குப் பதில் சொல்லுங்க."

"கிடையாது அண்ணே !"

"பின்னே சாப்பிடுங்க. இதுதான் உங்களுக்கு இப்பத் தேவை."

"வேண்டாமுங்க. கெட்ட பழக்கம்."

"பழக்கப்படுத்திக்க வேண்டாம் சண்முகம். ஒரு நாளைக்கு சாப்பிட்டா ஒண்ணும் செய்துவிடாது."

"ஐயோ, இது தொட்டால் ஒட்டிக்கும் !"

"இல்லே, பிள்ளை, வருத்தத்தை மாத்தும். மனசுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும். சும்மா சாப்பிடுங்க. இந்தாங்க" என்று சோடாவை உடைத்து கிளாசில் ஊற்றினார் நடேசன்.

சோடா பொங்கியது. அதிலிருந்து காற்று, உஸ் என்ற பெருமூச்சு விட்டுக்கொண்டே சண்முகத்தின் மனத்தைப் போல் கொந்தளித்தது. நடேசன், ரத்தம்போல் சிவந்திருந்த மதுவை அந்தக் கிளாசில் ஊற்றினார். சண்முகத்துக்கு அந்த வர்ணத்தில் ஒரு வெறுப்பு வந்தது. அந்த வாடையில் ஒரு அருசி ஏற்பட்டது. முகத்தைத் திருப்பிக் கொண்டான். இதைப் பார்த்த நடேசன் சிரித்தார்.

"இந்தாங்க, சாப்பிடுங்க !" என்றார் அவர் முகத்தில் அன்பு தவழ்ந்தது. இதய சுத்தமாக விஷத்தைக் கொடுப்பவர்போல் தோன்றினார். அவர் கொடுப்பதை மறுக்க சண்முகத்துக்குத் தைரியம் வரவில்லை. நண்பர் மனம் சிரமப்படுமே, நம்மை மரியாதை தெரியாதவன் என்று கருதுவாரே, இதை எப்படித் தட்டுவது என்று நினைத்தான்.

"சாப்பிடுங்க பிள்ளை. இது விஷமில்லை. இதைச் சாப்பிட்டுத்தான் நம்ம ஊரையே ஏப்பம் விட்டிருக்கான் வெள்ளைக்காரன் உம், இந்தாங்க !" என்றார் நடேசன்.

"என்னை வற்புறுத்தாதீங்க. இதைப் பார்த்தாலே எனக்குப் பயமாயிருக்கு."



"ஏன் பயப்படுறீங்க? வண்டு பூவிலே குடிக்கிறது மனிசன் பூப்போட்ட கிளாசிலே குடிக்கிறான். இதுதான் வித்தியாசம்."

"ஆமா, அது ஆகாசத்திலே பறக்குது மனிசன் பூமியிலேயே பறக்கிறான். அண்ணே, இது நல்லதில்லே, வேண்டாம் !"

"இந்தாங்க பிள்ளை ! நான் பத்து வருசமாய்ச் சாப்பிடறேன். என்னைக்கும் ஒரு லிமிட்டுதான் அதிகமா போச்சன்னாத்தான் ஆபத்து."

"சீட்டாட்டத்திலே தோத்தவன் இன்னும் ஆட ஆசைப்படுவான் குடிச்சு மயங்கினவன் இன்னும் குடிப்பான் சூதும், குடியும் தொட்டவனை விடாது. அண்ணே ! இது மனசைக் கெடுத்துவிடும் !"

"சண்முகம் பிள்ளை, நான் வியாபாரி மாசத்துக்கு ஆயிரம் பாட்டிலுக்கு அதிகமா விற்பனை ஆகுது இது கெட்டதா இருந்தா மனிசன் தொடுவானா?"

"அண்ணே ! அது நல்லதோ, கெட்டதோ எனக்குத் தெரியாது நான் நாலு பேர் நடுவிலே நிக்கறவன்; நான் ஆடப்படாது ஆண்டவனுக்கு முன்னாலே நின்று வாசிக்கிறவன் என் சங்கீதத்தைக் கேட்டு மத்தவங்க ஆடும்போது, எனக்கு மதுவா வேணும்? நான் ஆடி விழவா வேணும்? உலகம் பொறுக்காது என்னைப் பார்த்து ஊரு கெட்டுப்போகும், நான் வாழ ஆசைப்படவில்லை. இப்பவே சாகத் தயாராக இருக்கிறேன். உங்க கையாலே கொஞ்சம் விஷத்தை வைத்துக் கொடுங்க. ஆசையோடு வாங்கிக் குடிக்கிறேன். இது வேண்டாம். எடுங்க, எடுங்க. உங்க காலிலே விழுந்து கும்பிடறேன். இதை எடுத்துக் கொட்டுங்க" என்று சொல்லிக்கொண்டே, "ஹோ" என்று அலறினான் சண்முகம்.

இதைப் பார்த்த நடேசன், கீழே இருந்த இரண்டு கிளாசுகளையும் எடுத்துக்கொண்டு போய்த் தோட்டத்தின் ஓரத்தில் கொட்டினார். அவர் கண்கள் கலங்கின. சற்று நேரம் அங்கு நின்று தம் கண்களைத் துடைத்துக்கொண்டு திரும்பி வந்தார்.

"அண்ணே, என் மேலே கோபமா?" என்றான் சண்முகம்.

"இல்லே, சண்முகம். நீங்க ஒரு உத்தமர். நெடுங்காலம் நல்லாயிருக்கணும். இவ்வளவு நல்லவங்களைக் கண்டா உலகத்துக்கே பொறுக்காது" என்று பெருமூச்செறிந்தார் நடேசன் பிறகு கேட்டார் :

"ஆமா, இதை வேண்டாம்னு சொல்லிட்டீங்க; ஆனால், உங்க கவலையை எப்படி மறப்பீங்க?"

"நம்ம ஊருலே வழியாயில்லே. கவலைப்பட்டவங்க எல்லாம் குடிச்சுத்தானா கவலையை மறந்தாங்க? குடிப்பழக்கம் உள்ள தேசத்திலே கவலையைக் குடிச்சு மறப்பாங்க. இந்தக் கோவணாண்டிகள் ஊரிலே ஆண்டியா போயிடுவாங்க."

"சண்முகம்! அப்படி எல்லாம் சொல்லாதீங்க. நீங்க என்னைக்கும் வாசிக்கணும். இந்த நாடே ஆனந்தப்படணும். வாங்க, சாப்பிட்டு விட்டு ராத்திரி சர்க்கஸுக்குப் போவோம். நாகபட்டினத்திலே, 'ரமாபாய் சர்க்கஸ்' என்று ஒரு கம்பெனி வந்திருக்காம். உம். சீக்கிரம் சாப்பிட எழுந்திருங்கள்" என்றார் நடேசன்.

முப்பதாம் அத்தியாயம்

## "என்ன சொன்னான்........?"



வடிவாம்பாள் வீட்டில் இருந்து வெள்ளிக்கிழமை மைனரை அழைத்து வருவதாகச் சொல்லிவிட்டு வந்த வைத்திக்கு நடுவில் கொஞ்சம் வேலை இருந்தது. பையில் இருந்த நூறு ரூபாய் நோட்டுக் கரையும் வரையில் அவர் வேறு எந்த விஷயத்தையும் கவனிக்கவில்லை. அந்த நோட்டை மாற்றி, பத்து ரூபாய் நோட்டாக்கி, அதைச் சில்லறையாக்கி அவர் திருவிளையாடல்களை இரண்டு நாள் சிரமப்பட்டு முடித்துக்கொண்டு, இரண்டு கண்களையும் ஆடுதனும் டைமனும் ஆக ஆக்கிக்கொண்ட பிறகுதான், அவருக்குச் சிங்கபுரம் ஞாபகம் வந்தது.

சிங்கபுரத்தில் மைனர் தேடுவார் என்பது அவருக்குத் தெரியும். இருந்தாலும் இம்மாதிரி விஷயங்களில் இரண்டு நாள் காக்கப் போட்டுப் பதில் சொல்லுவதுதான் வியாபார முறை என்பதை அறிந்தவராதலால், கொஞ்சம் தாமதமாகவே சிங்கபுரத்துக்கு வந்து சேர்ந்தார்.

இம்முறை அவர் வந்தது மைனரின் வண்டியில் அல்ல. வாடகை வண்டி. அந்தச் சிறு கிராமத்துக்குள் வண்டிக்காரனே வண்டிக்குள் உட்கார்ந்து ஓட்டப் பயப்பட்டான். திடுதிப்பென்று மைனரோ அல்லது அவர் மாமா கடம்பவனம் பிள்ளையோ எதிரில் வந்து விட்டால், தான் உட்கார்ந்து ஓட்டுவது அவமரியாதையாகக் கருதப்பட்டு, தென்னை மரத்தில் முள்ளுக்குப் பதிலாகத் தன்னைக் கட்டி வைத்துவிடுவார்கள் என்று அவனுக்குத் தெரியும். அந்த பயத்தால் அவன் ஊரில் நுழைந்ததுமே வைத்தியிடம், "இறங்குறீங்களா?" என்று கேட்டான். வைத்தியும் இறங்கிவிட்டார். வாடகை மாத்திரம் பாதி கொடுத்துவிட்டுப் பாதியைப் பிறகு தருவதாகச் சொல்லி ஊரை நோக்கி நடந்தார்.



வழி நெடுக யோசனை செய்தார் வைத்தி. அவர் மைனரைச் சந்திக்க வருகிறார் என்று ஊரில் தெரிந்தால் ஊரார் சந்தேகப்படுவார்கள். வைத்தியைப் பொறுத்தவரையில் ஊரார் தம்மைப்பற்றிப் பேசுவதை அவர் லட்சியம் செய்வதில்லை. 'உன் கடமையைச் செய்; ஊரார் எதைச் சொன்னாலும் சொல்லட்டும்' என்ற பெரிய தத்துவத்தில் ஊறி அவர் சின்னத்தனமாக நடப்பவர்.

இப்படி ஊருக்கே பயப்படாத மனிதருக்கு அந்த ஊரில் ஒருவரிடம் பயம் வந்தது. அந்த ஒருவர் கடம்பவனந்தான் என்று நாம் சொல்ல வேண்டியதில்லை. 'தன் மாப்பிள்ளையைச் சந்திக்க வைத்தி வந்திருக்கிறான் என்று அவர் நினைப்பது அவ்வளவு சரியல்ல என்று கருதினார். அதற்காக வைத்திக்குக் கடம்பவனத்திடம் பயம் என்பதல்ல. அவருடைய கம்புக்குத்தான் பயந்தார். அடிபட்டால் தேகம் வலிக்குமே என்ற பயந்தானே ஒழிய வைத்தி அவமானத்துக்குப் பயப்படும் கோழை அல்ல!

ஆதலால், சிங்கத்தின் குகைக்குள்ளேயே நுழைவதைப் போல நேரே கடம்பவனம் இருக்கும் அறைக்குள்தான் நுழைந்தார் வைத்தி. திடீரென்று தாம் எதிர்பார்க்காத நேரத்தில் வைத்தி வருவதைக் கண்டதும் கடம்பவனத்துக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"என்ன வைத்தி, எங்கே வந்தாய்? எங்கேயாவது, ஏதாவது என்னமாவது தகராறா?" என்றார் கடம்பவனம்.

வைத்தி சிரித்துக்கொண்டார். "அப்படியெல்லாம் ஒன்றும் கவலைப்படவேண்டாம். ஒரு நிதி விஷயமாக வந்தேன்" என்றார் வைத்தி.

"என்ன நிதி, சங்க நிதியா, பதும நிதியா?"

"இல்லே, கருணை நிதி."

"அதென்னப்பா கருணை? கையை அரிக்குமே!"

"உம்ம கையிலேருந்தா கொடுக்கப் போறீர்? மருமகன் பணம் தானே?"

"என்ன விஷயம், சொல்லு!"

"ஒரு தரும காரியம். நம்ம ஊருலே ஒரு 'லாண்ட்' இருக்கு. சர்க்கார் புறம்போக்கு நிலம். அதை வாங்கி 'P.B.A.' என்று ஒன்று ஆரம்பிக்க உத்தேசம்."

"P.B.A. என்றால்?"

"'புவர் பெனிபிட் அசோசியேஷன்' - 'ஏழைகள் சகாய சங்கம்' - அதுக்கு ஒரு கட்டடம் கட்டணும்."

"கட்டி.......?"

"ஏழைகள் கஷ்டத்தை நீக்கணும்."

"எப்படி?"

"அவாளுக்குத் தினசரி 'கோல்டு வாட்டர்' கொடுக்கிறது"

"உம் பச்சைத் தண்ணிதானே? குடிக்க மாட்டம்னாங்கள்ளா?"

"'கம்பல்' பண்ணிக் கொடுக்கறது ! பச்சைத் தண்ணியிலே இருக்கிற வைட்டமின்கள் எல்லாத்தையும் பத்தி புஸ்தகம் போடறது. அதுக்குப் பிரசாரகர்களை நியமித்து, கிராமம் கிராமமாகப் போய் லெக்சர் பண்ணச் சொல்றது."

"அட, தண்ணிப் பந்தல்தானே? இதுக்கு ஒரு தட்டியும், ஒரு பானையும், ஒரு குவளையும் இருந்தா போதுமே ! இதையா கஷ்ட நிவாரண நிதி, பி.பி.என்னு பெரிசா சொன்னே. பாத்தா பெப்பேன்னு இருக்கு."

"'பிச்சாத்' தண்ணீர்ப் பந்தல் இல்லே சார் இது ! இதுக்கு ஆபீஸ் உண்டு. கிளார்க் உண்டு. மானேஜர் உண்டு. வாராவாரம் இன்ஸ்பெக்ஷன் உண்டு."

"மானேஜர் யாரு?"

"இப்போதைக்கு நான்தான்."

"நீயா? உருப்பிட்டாப்பிலேதான்."

"இப்படித்தான் முதல்லே எல்லாரும் சொன்னாங்க. இப்ப ஆறாயிரம் ரூபாய் வசூல் ஆகி இருக்கு."

"அடேயப்பா ! ஆறாயிரம் ரூபாய்க்குத் தண்ணீர் கொடுத்தா ஒரு தாலுகாவுக்கே ஜன்னி வந்துவிடுமே !"

"சார் ! நீங்க பெரிய மனுஷன். இந்தத் தாலுகாவுக்கே ஒரு புள்ளின்னு சொன்னேன். உங்களையும் பாத்துட்டு வான்னு கமிட்டியிலே சொன்னாங்க. உமக்கே உம்ம 'பேரிலே' அக்கறை இல்லியானா வேண்டாம். அவர் தரல்லைன்னு சொல்லிடறேன்."

"டேடே ! கேக்கறது யாசகம் ! இதிலே அமுல் வேறயா?..."

"யாசகம் இல்லே சார் ! நிதி ! என்னைப் பிச்சைக்காரன்னா பாத்தீர்? நாளைக்கு பேப்பர்லே எல்லார் பேரும் வரும். உம்ம பேர் மாத்திரம் இருக்காது."

"என்ன? பேப்பர்லே பேரு வருமா? சரி, இப்ப எவ்வளவு தாணுங்கிறே?"

"நீர் ஒரு நூறு ரூபாய் போடும். உம்ம மாப்பிள்ளையை ஆயிரம் ரூபாய் போடச் சொல்லும்."

"இந்தா பாரு வைத்தி. மாப்பிள்ளையை நீயே கேட்டுக்க... இந்தா நம்மளுது 'டென்' ருபீஸ்."

"என்ன, 'டென் ருபிஸா?' கடம்பவனம் பிள்ளைன்னு பேரைப் போடறதுக்கே பதினைஞ்சு ரூபாய் ஆகுமே ! சரி. பின்னே ஒரு ரூபாய் போடும். உம்ம பேரில்தானே வரப் போகுது?"

"பின்னே, இந்தா இருபத்தஞ்சு !"

"சரி, எதையாவது கொடும். நான் இனிமே வாயைத் திறக்கப் போறதில்லே."



"என்ன வைத்தி இப்படிச் சொன்னா? அம்பது போதுமா?"

"நான்தான் சொல்லிவிட்டேனே. உம்முடைய மதிப்பு உமக்குத்தான் தெரியும் !"

"சரி அப்பா, விடு. நாலு பேருக்கு நடுவிலே நான் என்ன மட்டமா? நூறு ரூபாயே இருக்கட்டும்."

"இப்ப சொன்னீரே, அது கரெக்ட்."

"எழுதிக்க ! கடம்பவனம் பிள்ளை 'டொனேஷன் நூறு ரூபா !'"

"எழுதிக்கறதா, பணம் கையிலே வராதா?"

"அடே, குடுக்கறேன், அப்பா !"

"அதெல்லாம் இல்லே. கடம்பவனம் பிள்ளை பிராமிஸ்டு என்று பெரிய எழுத்திலே போட்டுடுவேன். வாரும், மாப்பிள்ளை கிட்டே போவோம்."

"இல்லேப்பா நீயே போ..."

"அட ! சும்மா வாருமே ! நீர் சொன்னால்..."

"வாண்டாம் அப்பா நீயே போ. உன் சாமர்த்தியம் அவன் சாமர்த்தியம்" என்று கூறிவிட்டார் கடம்பவனம்.

வைத்தியும், "நான் பேசிவிட்டு வரேன். உம்ம பணம் தயாராயிருக்கட்டும். வாங்காம விட மாட்டேன்" என்று கூறிக்கொண்டே மைனர் பங்களாவை நோக்கிச் சென்றார்.

மைனரின் பங்களாவுக்குள் வைத்தி போன சந்தர்ப்பம் சரியில்லை. அங்கு மைனருக்கும், மறுவீடு போய்விட்டு அப்போதுதான் வந்திருந்த அவருடைய மனைவிக்கும் இடையே ஏதோ வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது.

ராமாயணத்திலே சூர்ப்பணகை ராவணனிடம் சீதையின் அழகைச் சொல்லிக்கொண்டே வரும்போது ராவணனைப் பார்த்து, 'அண்ணா, நான் சொல்கிற விஷயம் அண்ணி காதில் கேட்டால் என்னை இந்த ஊரை விட்டே விரட்டிவிடுவான்' என்று பயப்பட்டாளாம்.

ஸ்ரீமான் வைத்தி ஆயிரம் சூர்ப்பணகைக்குச் சமானமானவர். அங்கே ஒரு ராவணன் குடிதான் கெட்டது. ஆனால், வைத்தியால் கெட்ட குடிகள் அநேகம். ஒரே ஒரு வித்தியாசம். சூர்ப்பணகை மூக்கு அறுபட்ட சேதி சரித்திரத்தில் வந்துவிட்டது. வைத்தி மூக்கு அறுபட்டால் அதைச் சொல்லிக் கொள்ளமாட்டார். சந்தர்ப்பம் சரியில்லாததை நன்றாக உணர்ந்த வைத்தி பக்குவமாகத் தலையை உள்ளே நீட்டி, "வரலாமோ?" என்றார்.

"வாரும், எங்கேய்யா வந்தீர்?" என்றார் மைனர், கம்பீரத்தை விடாமல். தம் மனைவிக்கு எதிரில் தம்முடைய அந்தரங்க நட்பைத் தெரிவித்துக்கொள்ள அவருக்கு வெட்கம்.

"சமூகத்தைத்தான் பார்க்கணும்னு வந்தேன். ஒரு தரும காரியமா" என்று பவ்யத்துடன் கூறினார் வைத்தி.

"மரகதம், நீ கொஞ்சம் உள்ளே போறியா?" என்றார் மைனர். அவருக்கு வைத்தியிடம் தனியாய்ப் பேச ஆவல். ஆனால், அந்த மாமன் மகள் அந்த இடத்தைவிட்டு அசையவில்லை.

"அது என்ன தருமம்?" என்று அக்கறையாய்க் கேட்டாள் மரகதம்.

"ஏன் அவாளை உள்ளே போகச் சொல்றீங்க? இருக்கட்டுமே! எனக்கு அவா கிட்டவும் கொஞ்சம் வேலையிருக்கு—"

மைனருக்கு, வைத்தி ஏதாவது உளறிவிடப் போகிறாரே என்று கவலை வந்துவிட்டது. ஆனால், வைத்தியோ உளறவில்லை. அந்தப் பெண் தானாகவே உள்ளே சென்றுவிடும்படி சாமர்த்தியமாய்ப் பேச ஆரம்பித்தார். "நாங்க ஒரு தரும காரியம் ஆரம்பிச்சு இருக்கோம். உங்க தகப்பனார்கூட 'பிராமிஸ்' பண்ணியிருக்கார். நீங்களும் ஏதாவது 'ஹெல்ப்' பண்ணணும்."

"அதெல்லாம் அவங்க கிட்டே கேளுங்க" என்று தன் புருஷன் பக்கம் கையைக் காட்டினாள் மரகதம்.

"அவங்ககிட்டே கேக்கத்தான் வந்திருக்கேன். இருந்தாலும் நீங்க லேடீஸ் ஏதாவது குடுத்தா உங்க பேரும் பேப்பர்லே வரும்."

"நான் கொடுக்கவும் வேண்டாம், என் பேர் பேப்பர்லே அடிபடவும் வேண்டாம்! அவங்களே கொடுக்கட்டும்" என்று கூறிக்கொண்டே சரேலென்று மரகதம் உள்ளே போய்விட்டாள்.

தன் மனைவி உள்ளே சென்றதும் மைனர் தைரியமாய்ப் பேச ஆரம்பித்தார்.

"ஓய்! நிதின்னு ஒரு பொய்யைச் சொன்னீர். மரகதம் உள்ளே போயிட்டுதே" என்றார் மைனர்.

"கடம்பவனம் பிள்ளை மகள்தானே! எனக்குத் தெரியாதா? ஆனால், நிதி விஷயம் பொய்யில்லை."

"என்ன நிதி?"

"ஏழைகள் சகாய நிதி—"

"இது யாருக்கு?"

"நான்தான் ஏழை. நீங்கள் தரும் பணம் சகாய நிதி. இதைச் சொல்லித்தான் உங்க மாமா கிட்டே இருந்து தப்பிச்சு வந்தேன்."

"நீர் நேற்று முன் தினமே வருவதாய்ச் சொன்னீர், வரவே இல்லையே—!"

வைத்தி பதில் சொல்லவில்லை. எப்படிச் சொல்லலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கும் போதே, மைனர் அவசரமாய்க் கேள்வி கேட்க ஆரம்பித்தார்.

"என்ன வைத்தி, பார்த்தீரா?"

"பார்த்தேன். உங்க மாமாதானே! மனுஷன் நூறு ரூபாய் தர மூக்கால் அழறார்."



"அதில்லே வைத்தி— திருவாரூர் விஷயம் பார்த்தீரான்னு கேக்கறேன்!"

"ஓ அதுவா! அது ஒண்ணும் பிரயோசனப்படல்லே, சார்!"

இதைக் கேட்ட மைனர் இடி விழுந்தது போல் ஆகிவிட்டார். மறுபடியும் தொண்டையைக் கனைத்துக்கொண்டு, "ஏன், என்ன சொல்லிச்சு?" என்று கேட்டார்.

"'அட போங்க மாமா. இதெல்லாம் நம்ப முடியாது. மைனராவது ஆசைப்படவாவது! இதெல்லாம் பொய்'னு சொல்லி—"

"சரி மெள்ள மெள்ளப் பேசும். ஏன் பொய்னு சந்தேகம் வந்தது? ஒருவேளை, நீர் போய்ச் சொன்னதாலே இருக்குமோ?"

"ஏன், நீரேதான் போய்ச் சொல்லுமே, நம்பறாளான்னு பாப்பம்! அதுதான் நீர் ஆசைப்படவே மாட்டீர்னு நினைக்கிறாளே!"

"உம், அப்புறம்? முதல்லே நீர் என்ன சொன்னீர்?"

"உன் அழகிலே மைனர் மயங்கிவிட்டார்னு சொன்னேன்."

"அழகு மட்டுந்தான் சொன்னீரா, வித்தையைப்பத்திச் சொல்லலியோ?"

மைனரின் அவசரத்தைக் கண்ட வைத்தி பதிலைக் கொஞ்சம் இறுக்கிப் பிடிக்க ஆரம்பித்தார்.

"சொல்லலை, நான் வேணும்னே அதை 'மென்ஷன்' பண்ணாம விட்டுட்டேன்."

"ஏன்?"

"கொஞ்சம் சந்தேகமா இருந்தது. அதனால்—"

"என்ன சந்தேகம்?"

"இல்லே, உமக்கு சங்கீத ஞானம் உண்டா கிடையாதா என்ற ஒரு சம்சயம்."

"என்னங்காணும், இப்படிச் செய்துட்டீரே! அவள் ஒரு வித்தை தெரிந்தவள். என்ன இருந்தாலும் 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்று சொல்லி இருக்காங்களே!"

"இந்த அர்த்தத்திலே அதைச் சொல்லல்லியே—!"

"பின்ன எப்படி நீர் எனக்குச் சங்கீத ஞானம் இல்லேன்னு சொன்னீர்—?"

"உங்க மாமாவைப் பார்த்துத்தான் சொல்லிட்டேன்."

மைனர் பிரமித்தார். அவர் முகம் சுண்டியது.

"சஞ்சலப்படாதீங்கோ. எல்லாம் பஞ்சமத்துக்கு முன்னாலே ஒரு சுரமும் நிக்காது."

"அதென்ன பஞ்சமம்?"

"பணம் என்னுகிற சத்தத்துக்குப் பேரு பஞ்சமம். அந்தச் சுரத்தைக் கொஞ்சம் ஓங்கி மீட்டினால் சரியாப்போகும். முதல்லே ஒரு நானூறு ரூபாய் கொடும். உம்மாலே எனக்கு நஷ்டம்."

"ஏன், என்ன செய்தீர்?"

"வடிவாம்பாள் வாங்கிக்கொண்டுவிட்டாள்."

"சரி, கொடுக்கிறேன். விஷயத்தைச் சொல்லும்."

"அங்கே ஒருத்தருக்கும் இந்த விஷயத்திலே நம்பிக்கை வரவில்லை. 'அடேயப்பா, மைனரா அப்படி' என்று ஆச்சரியப்படுகிறான். நீர் ஏதோ ரொம்ப நல்ல பிள்ளைன்னு அவா அபிப்பிராயம்."

"பின்னே என்ன? என்னைக் கூட்டிக்கிட்டுப் போயி மாரியம்மன் கோவில் வாசல்லே நின்னு சொல்லச் சொல்றீரா?"

"அதெல்லாம் வேண்டாம். உம்முடைய தூதனாகவே என்னை அவா மதிக்கல்லே."

"ஏன்?"

"நம்ம கையிலே 'காஷ்' போறல்லே. அங்கு போய் உக்காந்ததும் நகை எங்கே, புடவை எங்கே, முத்துமாலை எங்கேன்னு கேக்க ஆரம்பிச்சுட்டா."

"யார், மோகனாவா?"

"சேச்சே! அவ 'சிங்கிள் பை' கேக்கல்லே— எங்க கிட்டவே வல்லே."

"அவ அபிப்பிராயமாவது தெரிஞ்சுதோ?"

"லேசாய்ச் சொன்னாள்."

"என்ன சொன்னாள்?"

"இதுக்கு மேலே என்ன அய்யா சொல்லுவா, ஒரு சின்னப் பொண்ணு?"

"இன்னும் ஒண்ணுமே சொல்லலியே நீர்?" என்றார் பொறுமையை இழந்து, மைனர்.

"ஓகோ! சொல்லலியோ?" என்று ஒரு சிரிப்புச் சிரித்துக்கொண்டு, "'வரட்டும். அம்மாகிட்டே பேசிக்கட்டும்'னுட்டா" என்றார் வைத்தி.

மைனர் மலைத்தார். "அப்படியானா நீர் போன விஷயம் ஒண்ணும்—" என்று இழுத்தார்.

"நான்தான் அந்த மோஹினி கெட்டிக்காரத்தனம் யாருக்கும் வராதுன்னு சொன்னேனே!...... நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்றார் வைத்தி.

"ஆமாமா. கெட்டிக்காரப் பெண்தான்— அப்படின்னா?"

"அவ அம்மாவை நீங்க பார்க்கணும்."

"எப்போ?—"

"அவ இங்கேயே வரேன்னு சொன்னா?"

"இங்கேயா? ஓய்! வேண்டாம்! வம்பா போகும்!"

"இதுதானே! முழுக்கக் கேக்காம பேசறீரே! நான்தான் 'வெள்ளிக்கிழமை அன்னிக்கு மைனரே வருவார். நீ பேசிக்க. எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு'ன்னு சொன்னேன்."



"என்ன? நீர் வராமலா?"

"இல்லே மைனர்வாள். வெள்ளிக்கிழமை நம்ம டிடிஎப் கும்பகோணம் வரச்சொல்லி இருக்கார்."

"சரிதான். கும்பகோணத்துக்கு இன்னொரு நாள் போகலாம்."

"இல்லை, விஷயம் அர்ஜண்டு. ஒரு ஐநூறு ரூபாய் வாங்க வெள்ளிக்கிழமை டயம் போட்டிருக்கிறார்."

"சரி, அதை நான் தரேன்."

"பின்னே இந்த ஐநூறு, அது ஒரு நானூறு, ஆகத் தொளாயிரம் எடுங்கோ!"

"ஆயிரம் ரூபாய் நோட்டாத்தானே இருக்கு அப்புறம் வாங்கிக்குங்களேன்!"

"பின்னே அப்படியே கொடுங்கோ. உங்க மாமா பாக்கித் தொகையும் வரவு வச்சுக்கறேன். வெள்ளிக்கிழமை அன்னிக்கு நான் உங்களைத் திருவாரூர்லே சந்திக்கறேன். சின்னசாமி கடை வாசல்லே வண்டியைக் கொண்டுவந்து நிறுத்துங்க—"

"சரி, வந்துடறேன்."

"வெள்ளிக்கிழமை திருவாரூர் போறேன்னு வீட்டிலே சொல்லிப்பிடாதீங்கோ. அவாளும் கோவிலுக்கு வரேன்னு கிளம்பிடுவா— சரி, ஒண்ணேகால் ரூபா கொடும்."

"எதுக்கு?"

"நாலணா டிம்மி பேப்பர். ஒரு ரூபாய்க்கு ஓரணா ஸ்டாம்பு வாங்கித் தயாராக வச்சுக்கறேன். நீங்க வரபோது பவுண்டன் பேனாவை மறக்காம எடுத்துண்டு வந்துடுங்கோ—"

"எதுக்கு எல்லாம்?"

"ஒரு சமயம், ஏதாவது எழுதிக்கிழுதிக் கொடுக்க வேண்டி வந்தா— கையோடே ஸ்டாம்பு இருக்கிறது நல்லது பாருங்கோ—"

"சரி! என்ன வேணுமானாலும் செய்துக்கும்! வெள்ளிக்கிழமை சாயங்காலம் சரியா வந்துடுவேன்" என்றார் மைனர்.

வைத்தியின் சட்டைப்பை மறுபடியும் பணத்தால் நிரம்பியது. ஆனால், மைனரின் மனமோ அலைமோதியது. வைத்தியை அனுப்பிவிட்டு, வெள்ளிக்கிழமை எப்போது விடியும், தன் மனைவிக்கு என்ன சாக்குச் சொல்லிவிட்டுப் புறப்படுவது என்பதையே சிந்தித்துக் கொண்டிருந்தார்.

## ரமாபாய் சர்க்கஸ்



சண்முகமும் நடேசனும் நாகபட்டினத்தை அடைந்து சர்க்கஸ் 'டெண்டு'க்குள் நுழைந்த சமயம் ஆட்டம் ஆரம்பமாகவில்லை. உள்ளே 'காலரி'யில் ஏராளமாக ரசிகர்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

வாசலில் ஒரே ஒரு கிளாரினெட்காரரும், அவர் அருகில் ஒரு டிரம் அடிப்பவரும் இரண்டு நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டு "பஹரியாலா", "ஆரேசையா", "அச்ச மோரி லாகிஸே கேனு கேனுகேனவா" முதலிய அபூர்வமான பாடல்களை வாசித்துக்கொண்டிருந்தனர். இந்தப் பாடல்களை அவர்கள் வாசித்த அழகையும், தாளத்திற்காக வெட்டி வெட்டி இழுத்த அலங்கோலத்தையும் பார்த்து நாகபட்டின ரஸிகர்கள் கிண்டல் செய்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.

"அடே, 'டிக்கட்டு வாங்கினவன் வாசலிலே நிக்காதே. உடனே உள்ளே ஓடு' என்கிறான் இவன்! இல்லாவிட்டால் இவன் நம் கண்காணப் பாட்டைக் கொலை செய்வன்!" என்றார் ஒருவர்.

"இல்லேடா! இது பட்டாளம் பியாண்டு. வெடி மருந்து தீர்ந்து போச்சுன்னா இந்த வாத்தியத்தை வாசிப்பான். இதைக் கேட்ட எதிரிகள் எல்லாம் செத்துப்போய்விடுவார்கள்" என்றார் இன்னொருவர்.

"ஏண்டா பாவம், இவன் இப்பத்தான் நம்ம செலவிலே சுத்துக்கறான்!" என்றார் மற்றொருவர்.

இப்படிப் பரிகாசம் செய்துகொண்டே அந்த ஊர் ரசிகர்கள் உள்ளே வந்துகொண்டிருந்தார்கள்.

இவ்வாறு பத்தரை மணி ஆனதும் ஆட்டம் ஆரம்பமாயிற்று. வாசலில் இருந்த பியாண்டுக்காரன் உள்ளே வந்து ஊத ஆரம்பித்தான். "அட, இங்கேயும் கொல்ல வந்துட்டாண்டா!" என்றார் ஒருவர்.

பியாண்டு துரித காலத்தில் முழங்க ஆரம்பித்துவிட்டது. "டரட்ட! டரட்ட! டரட்ட்ட்டா!" என்று அவன் வாசித்ததும் உள்ளிருந்து மணி அடிக்கப்பட்டது. உடனே ஐந்தாறு இளங்காளைகள் ஒரே மாதிரி பனியன்களை அணிந்து ஓடி வந்தார்கள். கையைத் தரையில் ஊன்றி அந்தர் அடித்தார்கள். கர்ணம் போட்டார்கள். கூட்டம் வியப்புடன் பார்த்தது. இந்தக் காட்சி கொஞ்சம், அளவுக்கு அதிகமாகிவிடவே, சபையில் உள்ளோர் பேசத் தொடங்கினார்கள்.



"ஏண்டா கர்ணம் போடறான்?"

"எல்லாம் சாப்பாட்டுக்குத்தான்."

"போன ஜன்மத்திலே பிள்ளையார் கோயிலைப் பார்த்துட்டுத் தோப்புக்கரணம் போடாமல் போயிருப்பான். அதுக்கு இப்ப அசலும் வட்டியுமா சேத்துப் போடறான்," என்றார் ஒரு ரசிகர். இதற்குள் அந்தர்கள் வேகமாக ஆரம்பித்தன.

அந்தர் ஆட்டம் முடிந்தவுடன் பல பையன்கள் "பார்" விளையாட ஆரம்பித்தார்கள். அவர்கள், கையில் பவுடர் தடவிக்கொள்வதைப் பலர் வேடிக்கை பார்த்தனர்.

"அட, மத்தவன் எல்லாம் முகத்துக்குப் பவுடர் போடுவான், இவன் கைக்குப் போடறாண்டா!"

"அட சுத்தினது போதும்டா" என்ற குரல்கள் எழுந்தன.

இரண்டு பெண்கள் கம்பி மேல் நடக்க ஆரம்பம் செய்தார்கள். கையில் குடையைப் பிடித்துக்கொண்டு, அவர்கள் கம்பி மேல் நடந்த அழகும் வேகமும் பார்ப்போரை பிரமிக்க வைத்தன.

"தம்பி! முதலில் ஒரு மண்ணுக் கம்பியை வாங்கி வைச்சுக்கிட்டுத்தான் இவளைக் கலியாணம் செய்துக்கணும்!" என்றார் ஒருவர்.

"ஐயோ! இவ நடு ராத்திரியிலே எந்திரிச்சு ஓட்டு மேலே ஏறி நடக்க ஆரம்பிச்சுடுவாளே!"

அடுத்தபடியாக மண்ணெண்ணெய்ப் புட்டிகளை அம்மானை ஆடுதல், தீப்பந்தத்தைக் கொளுத்தி வாயால் விழுங்கி அணைத்தல், ஒரு வாளித் தண்ணீரை ஒரே வாயாய் குடித்தல் முதலிய அற்புதங்கள் யாவும் நிகழலாயின.

இவற்றைப் பார்க்கப் பார்க்க ஏற்கெனவே மனத்தில் சந்தோஷமற்ற நிலையில் இருக்கும் சண்முகத்துக்கு இன்னும் சலிப்பு ஏற்பட்டது.

இந்தச் சமயத்தில் "டமடம" என்று டிரம் முழங்கியது. சண்முகம் நிமிர்ந்து உட்கார்ந்தான். கூட்டம் முழுவதும் நடுவில் இருக்கும் சர்க்கஸ் வளையத்தையே பார்த்தன. சர்க்கஸ் கம்பெனியின் 'புரோப்ரைட்டிரிக்ஸ்' மிஸ் ரமாபாயே இப்போது வரப்போகிறாள் என்று பேசிக்கொண்டார்கள்.

உள்ளிருக்கும் திரை விலகியது. அதிலிருந்து ஒற்றைச் சக்கர சைக்கிளில், ஆங்கிலோ இந்திய உடை தரித்து ரமாபாய் தோன்றினாள்.

ஒற்றைச் சக்கர சைக்கிளால் அவள் அந்த வளையத்தை வேகமாகச் சுற்றி வந்தாள். கூட்டம் கரகோஷம் செய்தது. பிறகு மேலே தொங்கிய கம்பிமீது சைக்கிளை ஏற்றி, மெதுவாக விடத் தொடங்கினாள். கால் மிதிக்கும் பெடலிலிருந்து இரண்டு கால்களையும் எடுத்துவிட்டு, தன் கைகளால் பெடலைச் சுற்றி

கொண்டே அவள் வரும்போது எழுந்த கரகோஷச் சத்தத்தால் அந்தக் கூடாரமே கிழிந்தது. மெதுவாக வந்துகொண்டிருந்த அவள், சண்முகத்தின் அருகில் வந்ததும் அவனை ஒரு முறை பார்த்தாள். சண்முகமும் பார்த்தான். இந்தச் சமயம் அந்தப் பெண்ணுக்குச் சிறிது "பாலன்ஸ்" தவறியது. கீழே விழுந்துவிடுவதைப் போல் சைக்கிள் சாய்ந்தது. கூட்டம் முழுவதும் "ஹா!"வென்றது. உடனே அவள் சாமர்த்தியமாகச் சமாளித்துக்கொண்டாள்.

அவள் மேலேயிருந்து சைக்கிளோடு குபீரென்று தாவி உள்ளே போனதும் கரகோஷம் அதிர்ந்தது. சண்முகத்தைத் தவிர எல்லோரும் கை தட்டினார்கள். ஆனால் சண்முகமோ, 'அவள் யார்? எங்கோ பார்த்திருக்கிறோமே!' என்ற யோசனையில் இருந்தான்.

அந்த முகம் தெரிந்த முகமாக இருந்தது. அவள் அவனைப் பார்த்த பார்வையும், உடனே அவள் சமாளித்ததும் அவனுக்கு ஆச்சர்யம் அளித்தன.

அந்தச் சமயத்தில் அடுத்த 'ஐட்டம்' ஆரம்பமாகியது.

பியாண்டு வாசிப்புச் சத்தம் நிறுத்தப்பட்டு, உடனே இருவர் வளையத்தில் வந்து நின்றனர்.

ஒருத்தி, அந்தப் பெண். இன்னொருவர், தமிழில் மொழி பெயர்ப்பவர்.

அந்தப் பெண், "பாயியோ அவுர் பகினியோ" என்று ஆரம்பித்து எதையோ கையை ஆட்டி ஆட்டிப் பேசினாள். பக்கத்தில் நின்றவர் அதைத் தன் இஷ்டம் போல் மொழிபெயர்த்துக் கூறினார்.

"கனவான்கலே, தனவான்கலே, சீமான்கலே, சீமாட்டிகலே! இப்பொலுது ஜலப் பிரதேசங்களிலும் மலைப் பிரதேசங்களிலும், ஜமீன் தார்களாலும், மகாராஜாக்களாலும் புகலப் பெற்றவரும், நூற்று முப்பத்தி ஆறு தங்க மெடல்கலை வாங்கியவரும் ஆகிய மிஸ்டர் பிரும்ம குமார் சாண்டோ தம் மேல் ஆனையை ஏத்திக் கொல்லுவார்!"

இதைக் கேட்டதும் கூட்டத்தினர் கரகோஷம் செய்தனர்.

தன்னுடைய உயர்ந்த பேச்சைக் கேட்டுத்தான் ஜனங்கள் ஆரவாரம் செய்கிறார்கள் என்று எண்ணிய அந்த "லகரவாதி" மேலும் உற்சாகத்துடன், "ஆனை என்றால் ஆனை. பொய்யான ஆனையில்லை! நிஜமான ஆனையையே ஏற்றிக் கொல்லுவார்!" என்றார். கூட்டத்தினரின் ஆரவாரம் கட்டுக்கடங்காததாயிற்று.

"அட கொல்லாதே! ஆனையையும் கொல்லாதே, அருமைத் தமிழையும் கொல்லாதே!" என்றார் ஒரு சாரார்.

"உல்லே போ, உல்லே போ!" என்றனர், இன்னொரு சாரார். இந்த நிலையில் மறுபடியும் பியாண்டுக்காரர் இங்கிலீஷ் நோட்டு வாசிக்க ஆரம்பித்தார். அந்தச் சத்தமே கொலைக்களத்துக்குக்



கைதியை அழைத்துச் செல்வது போன்ற ஒரு பயங்கர உணர்ச்சியை உண்டாக்கியது.

அப்போது உள்ளேயிருந்து பீமசேனன் போன்ற ஒரு பயில்வான் வெளியே வந்தார். அவர் உடம்பில் இருபுறமும் பூசணி மாலை போட்டுக்கொண்டது போல் மெடல்கள் தொங்கின. அவர் நடையே சிங்கம் நடப்பது போல் இருந்தது. இரு புறமும் திரும்பி அவர் பார்த்த பார்வை காளைபோல் கம்பீரமாக இருந்தது. அவர் கைகள் இரண்டிலும் இருந்த பருத்துத் திரண்ட முண்டாக்களும், உடலில் உப்பல் உப்பலாக இருந்த தசைக் கட்டும் பார்ப்பவர் மனத்தை அச்சுறுத்தின. சபை நடுவில் வந்து நின்று அவர் சபையோரைப் பார்த்து, "நமஸ்தே" என்று கை கூப்பிய பிறகுதான் எல்லோரும் பயம் தெளிந்து கை தட்டி வரவேற்றனர்.

வளையத்தின் மையத்தில் வந்து நின்ற சாண்டோ, நான்கு பஸ்கிகளை எடுத்து நிமிர்ந்து பார்த்தார். பிறகு அப்படியே தடாலென்று கீழே மல்லாந்து விழுந்தார். 'தம்' அடக்கி விறைத்துப் படுத்துக்கொண்டார்.

அப்போது இரண்டு பேர் ஓடிவந்து ஒரு பலகையை எடுத்து அவருடைய மலைபோன்ற மார்பின் மேல் வைத்தனர். உள்ளே மணி அடிக்கும் சத்தம் கேட்டது. எல்லோரும் திரும்பினார்கள். அப்போது உள்ளே இருந்து அழகிய நீண்ட தந்தங்கள் கொண்ட ஒரு யானையின் மேல் ஏறியபடி ரமாபாய் வந்தாள்.

உலகில் பிறந்தவர்களுக்கு எத்தனை வயதானாலும் சரி, ஓடும் ரயிலையும், உயிரோடிருக்கும் யானையையும் பார்ப்பதில் எப்பொழுதும் ஒரு ஆனந்தம் உண்டு. இந்த யானையோ சர்க்கஸ் கம்பெனிக்கே உரித்தான முறையில் உடம்பு இளைத்துத் தந்தங்கள் மட்டும் இளைக்காமல் இருந்தது. அதன் மேல் அமர்ந்திருந்தாள் ரமாபாய்.

யானையிடம் அவள் ஏதோ சொன்னாள். அது பயில்வான் போட்டிருக்கும் பலகை மேல் ஏறவில்லை. மேலும் அவள் அதட்ட அதட்ட அது ஒரு அடியேனும் எடுத்து வைக்கவில்லை. சாண்டோ அருகில் வந்ததும், துதிக்கை நுனியால் அவர் மேல் போட்டிருந்த பலகையைத் தட்ட ஆரம்பித்தது. "டொக் டொக்" என்று சத்தம் கேட்டதும் அதன் மேல் காலை வைக்க மறுத்துவிட்டது. அதைப் பார்த்து மேலே இருந்த பெண் "ஹட்டோ ஹட்டோ" என்று அதட்டினாள்.

யானை, "அட போம்மா! தரையிலே குழியை வெட்டி, மேலே சிறு பலகைகளைப் போட்டுச் செடி செத்தையால் மூடி வைத்திருந்ததை நம்பித்தானே நான் நடந்து வந்து குழியில் விழுந்தேன். மறுபடியும் விழுவேனா?" என்று கூறுவதைப் போல் பின்னாலேயே நகர ஆரம்பித்தது.

இதைப் பார்த்ததும் கூட்டத்தில் காசு கொடுத்து டிக்கட் வாங்கியவர்கள் பலருக்கு, "இந்த யானை சாண்டோ மேல் ஏற மறுக்கிறதே, நாம் கொடுத்த பணத்துக்கு இது கட்டுப்பட்டு நடக்க வேண்டுமா இல்லையா?" என்று கோபம் வந்தது. இன்னும் ஒரு சாராருக்கு, "இந்த யானை சாண்டோ மேலும் ஏறி மிதிக்க வேண்டாம், நம்மையும் பின்காலால் மிதிக்க வேண்டாம்" என்று தோன்றவே எழுந்து பின்னாலேயே நடக்க ஆரம்பித்தனர்.

யானையின் சண்டித்தனத்தைக் கண்ட ரமாபாய் அதில் காதில் அங்குசத்தைப் போட்டு இழுக்கவே, யானை பிளிறத் தொடங்கியது. இந்தச் சமயம் பார்த்து பியாண்டுக்காரர் டிரம்மில் தனி ஆவர்த்தனம் வாசிக்க ஆரம்பித்தார்.

அந்த யானை சமீபத்தில்தான் மைசூர்க் காட்டில் பிடிக்கப்பட்டது. இம்மாதிரி கேட்ட டிரம் சத்தத்தில் பயந்து ஓடியபோதுதான் கொப்பத்தில் விழுந்தது. ஆகையால், டிரம் சத்தம் கேட்டதும் அலறிக்கொண்டே துள்ளிக் குதித்து ஓட ஆரம்பித்தது.

ரசிகர்கள் பரபரப்படைந்து இங்கும் அங்கும் ஓடினார்கள். பெண்கள் அமர்ந்திருந்த பகுதியில் பெருங்குழப்பம் உண்டாயிற்று. குழந்தைகள் அலறின. பலகைக்கு அடியில் படுத்திருந்த சாண்டோ குதித்து எழுந்தார். ஓட்டமாய் ஓடினார். யானையைப் பிடித்து இழுத்து நிறுத்திவிடுவார் என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். ஆனால், அவர் மட்டும் வேறு விதமாக நினைத்தார்.

அவருக்கு உடலில் நல்ல பலம் உண்டு. பாரம் தூக்குவதிலும் பஸ்கி எடுப்பதிலும் நிபுணர். அதே சமயத்தில், உடலில் அதிகப் பற்றுதலும் உடையவர். ஆதலால், எண்ணெய் போட்டு உருவி வளர்த்த தம் உடம்பை மதங்கொண்ட யானையிடம் கொடுப்பதில் அவருக்கு விருப்பம் இல்லை. கூட்டத்தைக் கடந்து ஓட ஆரம்பித்தார் ! இதைப் பார்த்துக் காலரியில் உட்கார்ந்திருந்த கூட்டத்தினர் சிரித்தனர்.

அந்த ஆரவாரத்துக்கு இடையில் கூடாரத்தின் ஒரு புறத்தில் பெருங்குழப்பம் உண்டாயிற்று. "கொண்டு வா பணத்தை ! கொண்டு வா பணத்தை !" என்ற கூச்சல்களும் சீட்டிகளும் கிளம்பின. காலரிகள் உடைய ஆரம்பித்தன.

இதைப் பார்த்த சண்முகமும் நடேசனும் கூடாரத்தைவிட்டு வெளியேறிப் போகையில், ஓர் ஆள் ஓடி வந்து, சண்முகத்தின் தோளில் கையை வைத்து, "உங்களை முதலாளி அம்மா கூப்பிடுகிறார்கள்" என்றான்.

உள்ளே சென்றவுடன் சண்முகத்தை இரு கைகளையும் கூப்பிக் கும்பிட்டாள் ரமாபாய். கூட இருந்தவர்களைப் பார்த்து, "ஆப் ஜரா ஜாயியே !" என்றாள். அவர்கள் எல்லோரும் வெளியே சென்றவுடன்,



"சண்முகம், என்னைத் தெரியுதா?" என்று தமிழில் கேட்டாள் ரமாபாய்.

தமிழில் அவள் பேசியதைக் கேட்டதும் சட்டென்று அவளை அடையாளம் தெரிந்துகொண்ட சண்முகம், "அட, ஜில் ஜில் ரமாமணியா? இது என்ன புதிசா வேஷம்!" என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

"விஷயமெல்லாம் பிறகு சொல்றேன். முதலில் வெளியிலே போய் ரெண்டு வார்த்தை சொல்லி இந்தக் கூட்டத்தைச் சமாதானம் செய்யுங்க. இல்லாட்டி, கூடாரமே பிஞ்சு போய்விடும் !" என்று பரபரப்புடன் சொன்னாள் ரமாமணி.

"உன்னை விடவா நான் நல்லா பேசிவிடப் போகிறேன்? நீயே போய்ப் பேசேன் !"

"நான் பேசத் தயாராயிருந்தா உங்ககிட்டே ஏன் சொல்றேன்? நான் இப்ப நாலு பேருக்கு நடுவிலே தமிழிலே பேசக்கூடாது. பேரைக்கூட ரமாபாய்னு மாத்தி வச்சுக்கிட்டு, ஒருத்தருக்காகப் பயந்து தலைமறைவாயிருக்கேன். கொஞ்சம் தயவு பண்ணுங்க" என்று ரமாமணி கெஞ்சவே, சண்முகம் ஆகட்டுமென்று ஒப்புக் கொண்டான்.

அவன் வெளியே வந்து கூட்டத்தாரிடம், "அமைதியாயிருங்கள்" என்று கூறிச் சமாதானம் செய்யவே கூட்டம் கப்சிப்பென்று அடங்கியது. ஆட்டம் ஒருவாறு முடிந்தது.

சண்முகத்தின் செல்வாக்கைப் பார்த்த நடேசன் சந்தோஷப் பட்டாராயினும், இந்த சர்க்கஸ் கம்பெனி முதலாளியிடம் இவனுக்கு எப்படி நட்பு வந்தது என்பதை யோசித்துக்கொண்டே "இது யாரு வடக்கத்திக்காரம்மா?" என்று கேட்டார்.

"நமக்குத் தெரிஞ்சவங்க !"

"ஏது, வடக்கே போயிருந்தபோது பழக்கமா?"

"இல்லேல்லே அது— நான் பிறகு சொல்கிறேன்" என்றான் சண்முகம்.

"ஆனால், இப்ப மனக்கவலைக்குக் கொஞ்சம் ஆறுதலா இருக்கும் நான் வரேன்" என்று கூறிக்கொண்டே புறப்பட்டார், நடேசன்.

உண்மையிலேயே சண்முகத்துக்குச் சிறிதளவு மன ஆறுதல் ஏற்பட்டுவிட்டது. கூட்டத்தையும் மக்கள் அன்பையும் பார்த்ததில் அவனுக்குச் சஞ்சலம் குறைந்தது.

மறுபடியும் ரமாமணியின் அறைக்குள் நுழைந்த சண்முகம், "ஏன் இது? யானையைக் கட்டித் தீனி போடுற வேலையை நீ ஏன் ஆரம்பிச்சே?" என்று கேட்டான்.

"யானையே நம்மதில்லே நாயனக்காரரே ! அம்மன் கோவில் யானையாம். நம்ம சாண்டோவுக்குச் சம்பளம் என்ன தெரியுமா? ஒரு நாளைக்கு அஞ்சு ரூபா !"

"ஆனைக்கு?"

"பத்து ரூபாய். அதுதான் யானை பாத்திருக்கு. ஒரு நாளிலே ஏறி மிதிச்சுட்டம்னா வாடகை வருவது கெட்டுப்போயிடும்னு நினைச்சு விட்டுடுச்சு !"

"ஆமா, நீ ஏன் சர்க்கஸிலே இறங்கினே ! நீ சைக்கிளில்லே வந்தபோது உன் பின்னலையும் கால் சராயையும் பார்த்து நான் பிரமிச்சுட்டேன்."

"ஏன், பத்து வயது இளமையா தெரிஞ்சுதோ?"

"சேச்சே, உடையை மாத்திட்டாப்பிலே வயசு மாறுமா? இது எதுக்கு இந்த வேஷம்னு கேக்கறேன் !"

"இதுவா? இந்த உலகத்துலே ஆம்பிளைங்க செய்யற அக்கிரமத்துக்குப் பயந்து—"

"அதென்ன, ஆம்பிளை என்ன அக்கிரமம் செய்தான்?"

"அவன் பொம்பளையைப் பொம்மையா நினைக்கிறான். அவளுக்கும் மனசு உண்டு என்கிற எண்ணமே ஆணுக்குக் கிடையாது. பொம்பளையை மதிக்கிறது கிடையாது."

"பொம்பளை மாத்திரம் சரியா நடக்கிறாளோ? நம்பினா மோசம் செய்யறதுக்குன்னே பொறந்த பொறப்பிலே உங்க பொறப்பு?"

"இந்தாங்க, நீங்க சங்கீதத்திலே வித்வானா இருக்கலாம். உலகத்தைப்பற்றி உங்களுக்கு ஒண்ணும் தெரியாது."

"தெரியாமத்தான் இத்தனை நாளும் இருந்தேன். இப்பத்தான் தெரிஞ்சுக்கிட்டேன்."

"என்ன தெரிஞ்சுக்கிட்டீங்க?"

"அதுதான் 'பெண்கள் அடிக்கடி நிறம் மாறும் பச்சோந்தி'ன்னு !"

"அது யாராவது கீர்த்தனை எழுதி வச்சிருப்பாங்க. பாடம் பண்ணியிருப்பீங்க. ஆனால், பெண்கள் சேலையை வேணா நிறம் மாற்றிக் கட்டுவோம். சிந்தையை மாற்றிக்க மாட்டோம் ! குணம் கெட்டுத் திரியறது எல்லாம் உங்களைப் போல ஆம்புளைங்கதான். இந்தாங்க நாயனக்காரரே, என்னை ஒருத்தர் ஆசை காட்டி மோசம் செய்தார். இப்ப அவரே என்னைக் கொன்னுடுவேன்னு திரியறாரு. அந்தப் பாம்புக்குப் பயந்துக்கிட்டுத்தான் நான் இந்த வேசம் போட்டு அலையறேன். இதுலேருந்து பொம்பளை கெட்டவளா, ஆம்பிளை கெட்டவனா சொல்லுங்க—உம்— சொல்லுங்க...."

"இந்தா ரமா, வேறே விஷயம் பேசுவமே !"

"சரி— அந்த— அந்தப் பொண்ணு எப்படி இருக்கு?"

"எந்தப் பொண்ணு?"

"அதுதான்— அட அவங்க ஊர்கூட இங்கே பக்கத்திலே தானாமே?"



"இந்தா நாகூர் இருக்கு. வெளிப்பாளையம் இருக்கு. இருசிக் கொல்லை இருக்கு. எந்த ஊரு, சொல்லு !"

"இந்தப் பன்னீர்ப் போத்தல்கூடப் போடறாங்களே. அதுதான் திருவாரூர்—"

திருவாரூர் என்றதும் சண்முகத்தின் நெஞ்சம் துணுக்கென்றது. பதில் சொல்லாமல் அவளைப் பார்த்தான். ரமாமணி இதைப் பார்க்கவில்லை. அவளுக்கு இந்த உலகில் ஓர் ஆசைதான் இருந்தது. தன்னால் தப்புவிக்கப்பட்ட மோகனாம்பாள் சௌக்கியமாயிருக்கிறாளா என்பதைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல்தான் அது.

அந்த ஆவல் மிகுதியில், "அதுதானுங்க, அழகர் கோயில்லே ஆடிச்சே ஒரு பொண்ணு....மோகனாம்பா— அது சௌக்கியமா இருக்கான்னு கேக்கறேன்" என்றாள்.

"எனக்குத் தெரியாது" என்று முகத்தைத் திருப்பிக்கொண்டான் சண்முகம்.

இதைக் கவனித்த ரமாமணி மேலும் கேட்க ஆரம்பித்தாள்.

"ஏன் தெரியாது. நீங்க அதைப் பாக்கிறதில்லையா?"

"ஏன் அவகிட்ட போயி சங்கீதம் கத்துக்கப் போறேனா? அவ அழகாயிருந்தா அவமட்டுலே—"

"ஓ ! அழகைக்கூட கவனிச்சிருக்கீங்களா !"

"இந்தா ரமாமணி ! நிறுத்து அந்தப் பேச்சை ! அவள் ஒரு விஷப்பூண்டு."

"அப்போ மருந்துக்காகுமே !" என்று சிரித்தாள் ரமாமணி. சண்முகத்தின் பேச்சும், வார்த்தையும், முகபாவமும் அவளுக்குச் சிறிது விஷயத்தைப் புரிய வைத்தன.

"உங்க பேச்சைப் பார்த்தா ஏதோ புருசன் பெண்சாதியைக் கோவிச்சுக்கிறாப்பிலே இருக்கே! ஏன், என்ன விஷயம்? சபத்திலே தோத்துட்டீங்களா?"

இதைக் கேட்ட சண்முகம் சீறி எழுந்தான். "இந்தா— வித்தையிலே இந்தச் சண்முகம் தோத்தால் உயிரை வைத்திருக்க மாட்டான். உன்னைப் போலே அது ஒரு— அது ஒரு— ரமாமணி ! என்னைத் தொந்தரவு செய்யாதே— நான் ஊருக்குப் போறேன்."

இதைப் பார்த்த ரமாமணி அவர்கள் இருவருக்கும் இடையில் ஏதோ ஒரு பெரிய மனத்தாங்கல் இருப்பதை உணர்ந்துவிட்டாள்.

"நாயனக்காரரே, நில்லுங்க ! அது மேலே கோவம் இருந்தா என்னை ஏன் சீறி விழுறீங்க? நாளைக்கு ஆட்டத்துக்கு வரீங்களா?" என்று அவனை, வழியை மறித்துக் கேட்டாள்.

"வந்தா நீ அவள் பேச்சைப் பேசமாட்டாயே" என்றான் சண்முகம்.

அப்போது, "நாயனக்காரர் உள்ளே இருக்கிறாரா?" என்று ஒரு குரல் கேட்டது.

உடனே சண்முகம், "நாளை வருகிறேன்" என்று புறப்பட்டான். வாசலில் வந்தவுடன் நடேசனும் தவுல்கார முத்துராக்குவும் நிற்பதைக் கண்டான்.

முத்துராக்குவைக் கண்டதும் சண்முகத்திற்கு மனக்கசப்பு ஏற்பட்டது. மனத்தில் கஷ்டம் இருக்கும்போது தன் உறவினர்களைக் கண்டால்கூட எரிச்சலும், காரணமற்ற கோபமும் ஏற்படுவது இயற்கை.

"என்ன தம்பி ! இலங்கைக்குப் போகணும்னு சொல்லிவிட்டு இங்கே வந்து உட்கார்ந்திருக்கீங்க?" என்று கேட்டான் முத்துராக்கு.

"ஏன், நீங்க போயிட்டு வாறதுதானே?"

"நான் மாத்திரம் போய் என்னங்க செய்றது? நான் பக்கவாத்தியக்காரன்தானே !"

"பின்னே, நான் போகாட்டி, நீங்களும் சும்மாயிருக்கிறதுதானே ! இதை ஏன் கேக்கறதுக்கு வரீங்க?"

"நடேசண்ணே, நீங்களே சொல்லுங்க. தம்பி யாழ்ப்பாணம் போகணும்னு சொல்லிச்சி நான் திருக்களாலூர் போய் வீட்டில் சொல்லிக்கிட்டு, பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடு எல்லாம் செய்துட்டு வந்து பார்த்தா, இவரு கச்சேரியைக் 'கான்சல்' பண்ணிப்பிட்டு உட்கார்ந்திருக்காரு" என்று நடேசனிடம் கேட்டார்.

"எனக்கு மனசு சரியில்லை, கச்சேரியை வேண்டான்னு தந்தி கொடுத்துட்டேன் !" என்றான் சண்முகம்.

"சரி முத்துராக்கு, இப்ப ஏன் அதை எல்லாம் பேசுறே?" என்று கேட்டார் நடேசன்.

"பின்னே எப்ப அண்ணே பேசுறது? கூட ஒருத்தர் இருந்தாத்தானே நியாயம் விளங்கும்."

"இந்தா முத்துராக்கு, இது என் சொந்த விஷயம். இதிலே நீ பேச வராதே !" என்றான் சண்முகம்.

"நான் மட்டும் சொந்தம் இல்லையா? அந்தக் குடுகுடுப்பை தருமண்ணன் ஏதோ உளறினார்னுட்டு, நீ நம்பிட்டியே ! எனக்கு விசயமெல்லாம் தெரியும் தம்பி !"

"என்ன தெரியும்? அதுதான் வீட்டுவாசல்லே வண்டி நின்னிருக்கு. அதைக் கண்ணாலே பார்த்துட்டுத்தானே தருமண்ணன் வந்து சொன்னாரு !"

"இந்தாங்க சண்முகம், வண்டி கிண்டின்னு பேசாதீங்க. அக்கா தங்கச்சியோட பிறந்திருந்தா ஒரு பொண்ணைப்பற்றிப் பேசறபோது நிதானமா பேசுவீங்க. சும்மா வாய் புளிச்சுதோ மாங்காய் புளிச்சுதோன்னு பேசிப்பிட்டா கேட்டுக்கிட்டு இருக்கிறதா?" என்று கேட்டுவிட்டு நடேசனைப் பார்த்து, "இது ஒரு அவசரம். இவருக்கு எத்தாப்பிலே ஒது ஒத்துக்காரரு. அவர் ஒரு அபஸ்வரம். அவரு சொன்னாருன்னு கேட்டுக்கிட்டு இவர் ஆடறாரு" என்றார்.



"என்னைய்யா ரெண்டு பேரும் இப்படிச் சண்டை போட்டுக்கிட்டா நல்லாயிருக்கா? என்னதான் நடந்தது. சொல்லுங்களேன் !" என்றார் நடேசன்.

"இல்லேண்ணேன். சிங்கபுரத்திலே தம்பி கச்சேரிக்கு ஒத்துக்கிட்டு இருந்தது. அந்தத் திருவாலூர்ப் பொண்ணும் கச்சேரிக்கு ஒத்துக்கிட்டிருந்தது. நாங்க கச்சேரிக்குப் போகல்லே. அந்தப் பொண்ணு அந்த ஊரிலே போய் ஆடியிருக்கு. கடம்பவனம் பிள்ளை தகராறுலே ஆரம்பிச்சுட்டாரு..."

"இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?" என்று குறுக்கே பேசினான் சண்முகம்.

"இந்தா ! உங்கிட்டே சொல்லல்லே. நீ சும்மாயிரு— அந்தக் கடம்பவனம் பிள்ளை அந்தப் பொண்ணைப் பார்த்து, 'சந்தனத்தை எல்லாருக்கும் அள்ளிப் பூசு'ன்னு சொன்னாராம். 'அடபோய்யா போ'ன்னுட்டாளாம் அந்தப் பொண்ணு. நம்ம புலியூர் பிள்ளை வந்து கதை கதையாய்ச் சொல்றாரு..."

இப்போதுதான் சண்முகம் சற்று யோசிக்கத் தொடங்கினான். ஒரு வேளை, நாம் நினைத்தது தவறோ என்ற எண்ணம் முதன் முதலாகத் தோன்றியது. இருந்தாலும் வண்டிக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்ற எண்ணமும் கூடவே வந்தது. "சந்தனம் கிடந்துட்டுப் போவுது. முத்துராக்கு, வண்டி ஏன் வந்தது?" என்றான்.

"ஊரிலே கொண்டாந்து விட வந்தது !"

சண்முகத்துக்கு அது நியாயமாகவே பட்டது. இருந்தாலும் "அதுக்கு மைனர் வண்டிதான் வரணுமா? பண்ணையிலே வேற வண்டியே இல்லியா?" என்றான்.

"மாமனார் பகைக்குப் பயந்துக்கிட்டு மைனர் தன் சொந்த வண்டியைக் கட்டி ராவோடே ராவா அனுப்பியிருக்கிறார்."

"அந்த மைனருக்கு ஏன் அவ்வளவு அக்கறை?" என்றான் சண்முகம்.

"இல்லாட்டி ஒரு கலகம் வந்தா, அவருக்கு இல்லே கெட்ட பேரு வரும்? சும்மா தம்பீ, காக்கா உக்காந்திச்சு பனம்பழம் விழுந்திச்சுன்னு பேசப்படாது. நீ பெரிய ஞானஸ்தன். நீ எப்படித் தருமண்ணன் சொன்னதைக் கேட்டு அவசரப்பட்டு முடிவு பண்ணிட்டேன்னு எனக்கே ஆச்சரியமா போச்சு" என்று பேச்சை முடித்தார் முத்துராக்கு.

தன்னிடம் அன்பு கொண்ட முத்துராக்கு இவ்வாறு விஷயத்தை விளக்கிக் கூறவும், சண்முகத்தின் மனத்தில் சிறிது மாறுதலும் ஆறுதலும் உண்டாயின. தெளிந்த உள்ளத்தில் அவர் கூறிய விஷயங்களைப்பற்றிச் சிந்தித்தான். அவர் சொல்லுவது நியாயமாகவும், தான் அவசரப்பட்டதுதான் தவறு என்றும் விளங்கியது. 'அநாவசியமாக, அவன்மேல் சந்தேகப்பட்டுவிட்டோமே. அவளுக்கு இந்தச் செய்தி

தெரிந்திருந்தால் என்ன பாடு படுவாளோ?" என்று பச்சாதாபமும் ஏற்பட்டது. கண்ணைக் குத்திய கையே அதைத் துடைக்கவும் ஓடுவதுபோல, அவளுடைய வருத்தத்தை ஆற்றத் திருவாரூருக்கு உடனே போய்வர வேண்டும் என்று தன் மனத்திலே தீர்மானம் செய்துகொண்டான்.

முப்பத்திரண்டாம் அத்தியாயம்

## எண்ணிய நங்கை எதிரில் வந்தாள் !



வியாழக்கிழமை முதற்கொண்டே வடிவாம்பாள் மைனரை வரவேற்க ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்துவிட்டாள். தன் மகனுக்கும் மற்றவர்களுக்கும் உண்மைக் காரணத்தைத் தெரிவிக்காமல் அவள் வீட்டை அலங்கரிக்க முற்பட்டாள். அந்த வீட்டில் ஒட்டடை அதிகம் இருப்பதாக அவளுக்கு வியாழக்கிழமை அன்றுதான் தெரிந்தது. "நாளை வெள்ளிக்கிழமை அம்மா! வீட்டில் ஒட்டடை அடிக்கக்கூடாது" என்று கூறிக்கொண்டே வரதனையும், அபரஞ்சியையும் வைத்துக்கொண்டு வேலை வாங்கினாள்.

"புரட்டாசி பிறந்தால் நவராத்திரி வந்துவிடும். சரஸ்வதி பூஜைக்கு வீட்டிலேயே பத்துப் பேரைக் கூப்பிட்டு ஒரு ஆட்டம் வைக்கலாம் என்று இருக்கிறேன்" என்று மோகனா கேட்காதபோதே பதில் கூறினாள். தன் மகள் முன்பு, அருமையான கோதுமை அல்வாவும், மைசூர்ப்பாகும் கொண்டுவந்து வைத்துத் தின்னச் சொன்னாள்.

"இது எதற்கு அம்மா?" என்று மோகனா கேட்டபோது, "உனக்காகத்தான் ஆசையாச் செய்தேன் சாப்பிட்டு எப்படியிருக்குன்னு சொல்லு அம்மா !" என்றாள்.

எவ்வளவுதான் வடிவாம்பாள் சாமர்த்தியமாய்ப் பொய் சொன்னாலும் வரதனுக்கும் மோகனாவுக்கும் ஏதோ சந்தேகமாகவே இருந்தது. இருந்தாலும் மோகனாம்பாள் சிந்தனை முழுவதும் சண்முகத்தை எப்படி மறுபடியும் தன்னுடன் பேசச் செய்வது, அவன் மனத்தாங்கலை எப்படித் தீர்ப்பது என்ற எண்ணத்திலேயே இருந்ததால் தாயாரின்மீதிருந்த சந்தேகத்தைப்பற்றி அவள் அதிகமாகப் பொருட்படுத்தவில்லை.

வெள்ளிக்கிழமையன்று மாலை வடிவாம்பாள் தன் கையாலேயே மகளுக்குத் தலை சீவி, ஜடை போட்டு, அலங்கரித்து, "கோவிலுக்குப் போய்விட்டு வா, அம்மா" என்று குழைந்து சொன்னாள்.



அன்று அதிகப்படியாக அம்மனுக்கு ஒரு சஹஸ்ரநாமத்திற்கும் இரண்டாங்காலத்தில் வடை, சர்க்கரைப் பொங்கல், தேன்குழல் நைவேத்தியத்திற்கும் ஏற்பாடு செய்திருந்தாள். தான் மைனரிடம் விஷயங்களைப் பேசி முடிக்கச் சற்று நேரம் அதிகமானாலும் அதுவரை தன் மகளைக் கோயிலில் இருக்கும்படி செய்யவேண்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாடுகள் எல்லாம்.

"நீங்க கோயிலுக்குப் போய் அர்ச்சனை செய்யுங்கள். நைவேத்திய சமயத்துக்கு நானும் வந்துவிடுகிறேன்" என்றும் சொல்லி அனுப்பினாள்.

"அம்மா, நீயும் வருவதுதானே?" என்று மகள் கேட்டதற்கு "என்னால் அதிக நேரம் சன்னதியில் நிற்க முடியவில்லை தின்னா. ரெண்டு காலும் உளையுது" என்று சொல்லவே, மகளும் சரி என்று கோயிலுக்குப் புறப்பட்டாள்.

பின்னால் வரதனும் அபரஞ்சியும் தொடர்ந்து வர, கையில் தேங்காய், பழம், புஷ்பம் இவைகளைத் தட்டில் வைத்துக்கொண்டு மோகனா கோயிலுக்குப் புறப்பட்டாள்.

மாலை நேரம். அந்த மஞ்சள் வெயிலிலே மோகனா நடந்து சென்ற அழகு பார்த்தவர் பிரமிக்கும் வண்ணம் இருந்தது. பூங்கொம்பு போல் அவள் நடந்துவர மாலைச் சூரியன் அவள் மேல் பொன்முலாம் பூசினான். கடை வீதியில் உள்ளவர்களின் கடைக் கண்கள் எல்லாம் 'அவளுடைய கடைக்கண் நம் மேல் விழாதா' என்று ஏங்கின.

அவர்கள் கடை வீதி நடுவில் சென்றபோது "டிங்-டாங்" என்று ஒரு குதிரை வண்டியின் மணிச்சத்தம் கேட்டு நிமிர்ந்தார்கள். அந்த வண்டியைப் பார்த்ததும் வரதன், மோகனா இருவருக்கும் ஏக காலத்தில் பகீர் என்றது.

ஆம். அதுதான் மைனரின் வண்டி. வைத்தி குறிப்பிட்டபடி சின்னசாமி கடை வாசலில் வந்து வண்டி நின்றது. அதிலிருந்து மைனர் கீழே இறங்கினார். கடை வாசலில் இருந்த வைத்தி அவரை வரவேற்றார்.

வண்டியைக் கடந்து சற்றுத் தூரம் சென்றதும், அதுவரையில் குனிந்த தலை நிமிராமல் எதையோ எண்ணியவண்ணம் சென்ற மோகனா வரதனைப் பார்த்துக் கேட்டாள்.

"இந்த வண்டிதானே அது?"

"ஆமாம். இதாலேதான் வினை வந்தது ! அந்தப் பக்கம் கூட நிற்கிறவர் இருக்கிறாரே, பெரிய வெத்துவேட்டு ! அன்னைக்கு எங்கிட்ட கலெக்டர்னு சொல்லிப் புளுகிவிட்டு, அம்மாகிட்டே வந்து ஏதோ பேசிக்கிட்டிருந்தார்" என்றான் வரதன்.

"என்னைக்கி?"

"நாலு நாளைக்கு முந்தி நீ மாடியிலே தூங்கிக்கிட்டு இருந்தே."

"ஆமா, அம்மா யாரோ சோசியர் வந்திருக்காரு என்றல்ல சொன்னாங்க?"

"ஜோசியனா, இவனா ஜோசியன். இவன் ஒரு கிரகம். அந்த திருநள்ளாறுலே இருக்காரே, அவருக்கும் மேலே !"

இதைக் கேட்டதும் மோகனாவுக்கு மனத்தில் விவரம் தெரியாத ஒரு பயம் ஏற்பட்டது. வண்டியையும் வைத்தியையும் பற்றிச் சிந்தித்த வண்ணம் நடந்தாள்.

மாலை வெயிலில் மோகனா செல்வதைப் பார்த்த மைனரின் மனம் அதற்குப் பின்வரும் இருள்போல் மயங்கியது. அழகு அவர் கண்களைப் பறித்தது. நெடுந்தூரம் அவள் நடந்து செல்வதையே பார்த்துவிட்டு வைத்தியின் பக்கம் திரும்பினார்.

"ஓய் ! வைத்தி, இது யாருங்காணும்?"

"ஏன், யார் மாதிரி தெரியறது?"

"அப்படியே தேவலோக ரம்பை பூலோகத்தில் நடக்கிற மாதிரி தெரியுது. யாரையா இவ?"

"'ஒரு வானத்திலே இரண்டு சந்திரன்கள் இருக்க முடியாது. ஒரு பூமியிலே இரண்டு அழகிகள் இருக்க முடியாது'ன்னு கவிகள் சொல்லி இருக்கா."

"அட, எந்தக் கவிங்காணும் இதைப் போய் வேலை மெனக்கெட்டுப் பாட வந்தான்?"

"இந்த வைத்திதான் சொல்றார். இவள்தான்காணும் அவள் !"

"அப்படின்னா?"

"சாக்ஷாத் மோகனாம்பாளேதான் !"

"அப்படியா ! அன்று கல்யாணத்தில் நாட்டிய உடையில் பார்த்தது; ஆனால், அவளாயிருந்தால் உம்மைப் பார்த்தவுடனே பேசாமல் இருக்கமாட்டாளே !"

"பேசலையேன்னு பார்க்கிறீரே. என்னைத் தெரிஞ்சதாகவாவது காட்டிக்கொண்டாளா?"

"இல்லியே !"

"அதுதான் அவள் கெட்டிக்காரத்தனம். நீர் பக்கத்திலே இருக்கிற போது பேச வெட்கப்பட்டிருக்கா. நாணம் சார் நாணம் ! அச்சம், மடம், நாணம், ஞானம் எங்கறாளே, அது !"

"ஆமாம், இப்ப அவ எங்கே போறா?"

"கோவிலுக்குப் போறா !"

"அடே ! அங்கே கண்டபடி கூட்டம் வந்து மொச்சுக்குமே ! இவ எங்காணும் அங்கே எல்லாம் போறா?"

"நீரும் உம்ம சம்சாரமும் நன்னா இருக்கணும்னு கும்பிடப் போறாள். சரி, சரி, வாரும். போய்க் காரியத்தைப் பேசி முடிப்போம்"



என்று வைத்தி கூறவே, வடிவாம்பாள் வீடு நோக்கி இருவரும் நடந்தார்கள்.

முப்பத்துமூன்றாம் அத்தியாயம்

## வீசிய வலையில் விழுந்த மீன்



கடல் நீரில் உப்பும், கரும்பில் இனிப்பும் இருப்பது போல், மனிதனுக்குள் உணர்ச்சிகள்தாம் உயிருக்கு அடுத்தபடியாக அவனை ஆட்டி வைக்கின்றன. மனிதனை நல்லவன், கெட்டவன் என்று உருவாக்கு வதும் இந்த உணர்ச்சிகள்தாம்.

ஆனால், சிங்கபுரம் மைனரை இப்போது ஆட்கொண்டிருக்கும் உணர்ச்சி அவரை நல்லவனாக்கக்கூடியதல்ல. மைனர், வடிவாம்பாள் வீடு நோக்கி வரும்போதே யோசிக்கலானார்.

பாவம், சிறு பிள்ளை சமீபத்தில்தான் கல்யாணமானவர்.

முதலில் அவருக்குத் தன் மனைவியின் நினைவு வந்தது. அந்தப் பெண் மரகதம், பிறந்தது முதல் ஒன்றாகவே பழகியவள். சின்ன வயதில் ஒவ்வொருவரும், 'செல்லத்துரையைக் கட்டிக்கப் போறியா?' என்று கேட்டபோதெல்லாம் வெட்கத்தால் கண்ணீர் விட்டவள்; 'உன்னைக் கட்டிக்கிட்டு உன் தலையிலே குட்டறேன் பார்' என்று விளையாடியவள்.

அவளுக்குக் கெட்டிக்காரத்தனம் போதாது; அவளுக்கு எப்பொழுது அழுகை வரும், எப்பொழுது சந்தோஷம் வரும் என்று சொல்ல முடியாது. சில நாளைக்குத் தன் தகப்பனார் பெருமையையே பேசிக்கொண்டு, 'எங்க அப்பா இல்லாட்டி உங்க சொத்தெல்லாம் பங்காளி வியாஜ்யத்திலே போயிருக்குமே !' என்று கேட்பாள்; அடுத்த நிமிஷமே, 'எனக்கு எங்க அப்பாவும் வேண்டாம், அம்மாவும் வேண்டாம். நீங்கதான் வேணும்' என்று சொல்வாள்.

'இப்படிப் பால் போன்ற உள்ளமுடைய மரகதத்திற்கு இது துரோகம் இல்லையா?' என்று நினைத்தார். அறிவு இப்படிச் சொன்னபோது ஆசை வேறு விதம் சொல்லிற்று.

'இதிலே துரோகம் என்ன இருக்கிறது. நம்மிடம் செல்வம் இருக்கிறது. நாம் எப்படியும் இருக்கலாம். கண்டதும் காதல் என்று சொல்வார்களே, அது உண்மையாக இருக்கக்கொண்டுதானே, காவியங்களில் எழுதியிருக்கிறார்கள்? நாமாகவா காதல் கொள்ளுகிறோம்? அது கடவுள் அருளால் உண்டாகிறது.

எப்பொழுது அந்தக் கடவுள் காதலை உண்டாக்கிவிட்டாரோ, நாமும் அதற்கு உட்பட்டுத்தானே ஆகவேண்டும்! உலகத்தாருக்குப் பயந்து வாழ முடியுமா? கிடைத்தவனைப் பார்த்துப் பொறாமைப் படத்தான் படுவார்கள். எனக்கு உன் மேல் பொறாமை என்று சொல்லப் பயந்துகொண்டு, 'அடேயப்பா, சிங்கபுரத்துப் பையனைப் பாரடா! சின்ன வயதிலேயே கெட்டுப்போய்விட்டான்' என்று தூற்றுவார்கள். இது இயற்கைதானே?

'ஆமாம், நாம் அவள் மேல் ஆசைப்பட்டிருக்கிறோமே. இது அவளுக்கு நல்லதா, கெட்டதா? அவள் இன்னும் கல்யாண மாகாதவள். அவளுடைய கலையை ரசிக்கும் பெரும்பாலானவர்கள் கையில் தாளம் போட்டுக்கொண்டு, அவள் காலைப் பார்ப்பவர்கள் அல்ல; ஜதிக்குச் சரியாகக் கால் குதிபோடுகிறதா என்று கணக்கு எடுப்பவர்களும் அல்ல. நாம் அப்படியா பார்த்தோம்? ஏதோ கண்ணுக்கு அழகாக இருக்கிறாள். அவளைப் பார்த்தால் மனத்துக்கு ஆனந்தமாக இருக்கிறது. மிட்டாய்க் கடையைப் பார்ப்பது போலவும், பழக்கடையில் அடுக்கி வைத்திருக்கும் ஆப்பிளையும் ஆரஞ்சையும் பார்த்தவுடன் நமது கண் அங்கே செல்வது போலவும், நமது மனத்தை அவள் அழகு இழுக்கக்கொண்டுதானே பார்த்தோம்.

'ஐயோ, அந்த அழகு ஆளைக் கொல்லுகிறதே! இப்படி அழகாக இருந்தால் எவன்தான் பார்க்க மாட்டான்? இந்த வடிவாம்பாள், வயசுப் பெண்ணை, கலைச்செல்வத்தை வைத்துக்கொண்டு, இன்னும் கல்யாணம் செய்யாமல் வைத்திருப்பதே ஒரு பெரிய வியாபார தந்திரம். நான் இல்லாவிட்டால் என்ன? இன்னும் எத்தனையோ பணக்காரர்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள். வடக்கேயிருந்து ஒரு மார்வாடி வருகிறான் என்று வைத்துக்கொள்வோம். கோடி ரூபாயைக் கொண்டுவந்து வடிவாம்பாள் காலில் கொட்டுகிறான். இந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு போய்விடுகிறான். பாஷை தெரியாத ஊரில் போய் அவள் என்ன பாடு படுவாளோ? அந்த ஊரில் இவள் பரத நாட்டியம் ஆட முடியுமா? அப்புறம் அவளுடைய கதி என்ன? இந்தக் கிளியை ஏதாவது ஒரு பூனை கொத்திக்கொண்டு போய்விட்டால்...?'

இப்படி எண்ணியவுடனே, மைனரின் கண்களில் கண்ணீர் வந்து விட்டது. 'நமக்காக இல்லாவிட்டாலும், மோகனாவின் அழகுக்காகவும் கலைக்காகவும் அவளை நாம்தான் அடையவேண்டும். நாம்தான் பாதுகாக்க வேண்டும்' என்ற கருணையும் உண்டாயிற்று.

அப்பொழுது மாலை நேரம். வெளிச்சம் மறைந்து, இருள் கவ்வும் நேரம். அவர் ஒழுக்கம் என்னும் விழிப்பிலிருந்து, காமம் என்னும் கண்மூடித்தனமான அந்தகாரத்தில் விழப்போகிறார். மாலை நேரம் மயங்குவதைப் போல் அவர் மனமும் இப்பொழுது மயங்குகிறது. விளக்கு ஏற்றப்படுமா? அல்லது இருள்தானா?



இந்த உலகில் மனிதன் ஒருவன்தான், தான் செய்வது என்ன என்று புரிந்துகொண்டு தவறு செய்பவன். இந்த விதத்தில் மனிதன் பெரியவன். அதை அறிவு தடுக்கும்; ஆசை இழுக்கும். இந்த இரண்டுக்கும் நடுவிலே மனம் அகப்பட்டுக்கொண்டு திண்டாடும். தவறு செய்யும்போது தெரிந்தே தவறு செய்வான். பின்பு அதை மறைக்கத் தன் அறிவை உபயோகப்படுத்திக் காரணம் தேடுவான்; சமாதானம் தேடுவான்.

அறிவு ஒரு சிறந்த சாதனம். அந்த விளக்கின் கீழ் தேவாரமும் படிக்கலாம், திருட்டுக் கையெழுத்தும் போடலாம். இன்று மைனர் தம்முடைய அறிவைக்கொண்டு தம் எண்ணத்தை மறைக்கப் பார்க்கிறார். இவ்வாறு அவர் மனம் போராடிக்கொண்டு வருகையில் ஒரு சமயம் திரும்பிப் போய்விடுவோமா என்றுகூடத் தோன்றியது. ஆனால் வைத்தி பக்கத்தில் வரும்போது இது நடக்குமா? மௌனமாக மறைந்து மறைந்து இருவரும் வந்துகொண்டிருந்தார்கள்.

இவ்வாறு மைனர் அவளுடைய வீடு தேடி வந்துகொண்டிருக்கையில், தன் மகளைக் கோவிலுக்கு அனுப்பிய வடிவாம்பாள் வீட்டிலிருந்தே பின்வருமாறு பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தாள்.

"சுவாமி, ஆண்டவனே! அவளுக்கு நல்ல புத்தியைக் கொடு. நாலு தாசியைப்போல அவளையும் வாழச்செய். வீணில் பிடிவாதம் பிடித்து, வருகிற சீதேவியை உதறித் தள்ளிவிடவிடாதே. எனக்கோ வயசாகிவிட்டது. அவள் நிறைய காசு பணத்தோடு வாழ்வதை நான் கண்ணால் பார்க்க வேண்டும்.

"இந்த உலகத்தில் என்றைக்கு அவள் தாசியாகப் பிறந்தாளோ, அன்றைக்கே அவளைச் சமூகம் மதிக்கப்போவதில்லை. அவள் உத்தமியாக வாழ்ந்தாலும் ஒருவரும் பாராட்டப்போவதில்லை. அது மாத்திரமல்ல. 'பாருடா தாசி, பதிவிரதை வேஷம் போடுகிறாள்' என்றுதான் கூறப்போகிறது.

"குயிலுக்குப் பிறந்தது மயிலாக முடியுமா? கோவிலில் ஆடுகிறவள் குலக்கொடி ஆகிவிட முடியுமா?

"உடம்பைச் சட்டை மறைப்பது போல, இழுக்கைப் பணம் ஒன்றுதான் மறைக்கக்கூடியது. பத்துப் பேருக்கு நடுவிலே பட்டுச் சட்டை போட்டவனைத்தான் எல்லோரும் பார்ப்பார்கள். பணம் உள்ளவர்கள் பேச்சை எல்லோரும் கேட்பார்கள்.

"பணம் இருந்தால் குலம், குணம் இவை எல்லாம் இரண்டாவதாக ஆகிவிடும். இந்த ஞானம் என் பெண்ணுக்கு வர வேண்டும். இந்தச் சம்பந்தத்தை அவள் ஏற்றுக்கொள்ள வேண்டும்..." என்று ஆண்டவனிடம் வேண்டிக்கொண்டாள் வடிவாம்பாள்.

மணி ஐந்தரை ஆனவுடனே வடிவாம்பாள் தன் மனதுக்குள் ஒரு முறை, மைனர் வந்தால் எப்படி நடந்துகொள்வது என்பதை நிச்சயம் செய்துகொண்டாள்.

சரியாக ஆறு மணிக்கு மைனர் வந்துவிட்டார். மைனரையும் கூட்டிக்கொண்டு வைத்தி உள்ளே நுழைந்தார். உடனே வடிவாம்பாளுக்கு எங்கிருந்தோ சமயம் தெரியாமல் ஒரு வெட்கம் வந்துவிட்டது. அவள் நாணிக் கோணி ரேழி மறைவில் நின்றுகொண்டு "வாங்க" என்று அரைத் தொண்டையில் கூப்பிட்டு விட்டு வெட்கத்துடன் சரேலென்று உள்ளே போய்விட்டாள்.

இந்த வேண்டாத வெட்கத்தைப் பார்த்த மைனருக்குக்கூட கொஞ்சம் முகம் சுருங்கியது. அதற்குள் உள்ளிருந்து, "உஸ் வைத்தி" என்ற குரல் கேட்டது. உடனே வைத்தி இரண்டாம் கட்டுப்பக்கம் சென்றார். அங்கு வெட்கப்பட்டுக்கொண்டு நின்ற வடிவாம்பாள், "இந்தாங்க. இந்த வெத்திலைப் பெட்டியைக் கொண்டுபோய் அவுங்களுக்கு வையுங்க" என்று மைனர் காது கேட்கும்படி அடித் தொண்டையில் ரகசியம் பேசினாள்.

வைத்தி வெற்றிலைப் பெட்டியைக் கொண்டுவந்து வைத்தார். இதற்குள் நாற்காலியில் அமர்ந்தார் மைனர். சும்மா எவ்வளவு நேரம் தான் உட்கார்ந்திருக்க முடியும்? அங்கு உள்ள ரவிவர்மா படங்கள், நடராஜ விக்ரகம், மூலையில் சாத்தி இருந்த தம்பூர், உயரக் கட்டியிருந்த ஓட்டை மிருதங்கம், ஆணியில் மாட்டியிருந்த ஜாலர், அடுத்தாற்போல் தொங்கிய சலங்கை, ஜன்னலில் இருந்த கம்பிகள் எல்லாவற்றையும் ஆராய்ந்துவிட்டு, கடைசியில் உத்தரம் எத்தனை, வளை எத்தனை என்று பார்ப்பவர் போல் மோட்டு வளையைப் பார்க்கத் தொடங்கினார்.

வடிவாம்பாளும் மறைவில் இருந்தபடியே மைனர் துடிக்கும் துடிப்பைக் கண்டாள். மைனர் வீட்டு வாசலில் அவருடைய பண்ணை ஆள்கள் காத்துக் கிடப்பது போல், இப்போது அவர் இங்கு வந்து காத்துக் கிடக்கும் அழகைக் கண்டாள். இந்த ஒவ்வொரு நிமிஷமும் ஒரு லட்ச ருபாய் என்பதை உணர்ந்தாள். ரொம்ப வெட்கத்துடன் வெளியே வந்தாள்.

"என்ன, வைத்தி? அவுங்க வெற்றிலைகூடப் போடாமல் உட்கார்ந்திருக்கிறாங்களே!" என்று வெட்கத்துடன் மெதுவாய் வைத்தியிடம் கூறினாள்.

"ஏன் மைனர்வாள், வெத்திலை போட்டுக்கொள்ளுங்களேன்!" என்றார் வைத்தி.

"இல்லை. நான் அதிகமாகப் போடுவதில்லை" என்றார் மைனர்.

இதற்குள் வடிவாம்பாள் அவசரமாக உள்ளே போய் ஒரு வெள்ளி டப்பியைக் கொண்டுவந்து வைத்தாள்.

"வாசனைப் பாக்கு இருக்கு, போட்டுக்கச் சொல்லுங்க....." என்று அதையும் வைத்தியிடத்தான் சொன்னாள்.

மைனர், வெள்ளி டப்பியைத் திறந்தார். பாக்கைக் கையில் கொட்டிக்கொண்டார். அதை வாயில் போட்டுக்கொள்ளப்போகும்



சமயத்தில், "உம்— அதிலே அந்தச் சாரப் பருப்பு கிடக்கும். அது கசக்கும். அதை எடுத்துட்டு—" என்று அவசரத்தில் மைனரிடமே நேரில் பேசிவிட்டாள் வடிவாம்பாள். உடனே வெட்கம் வந்து கூடக் குன்றிவிட்டாள். மைனரும் அவள் சொல்படியே சாரப்பருப்பைத் தூக்கி எறிந்துவிட்டு, சக்கைப் பாக்கை வாயில் போட்டுக் கொண்டார்.

"ஆகா! பாக்கு ரொம்ப நல்லா இருக்கு!"

"குழந்தை எப்பவாச்சும் வெத்திலை போட்டுக்கும். அதுவும் நல்ல பாக்கா இருந்தாத்தான்" என்றாள் வடிவாம்பாள்.

இதைக் கேட்ட மைனர் இன்னும் ஒரு பிடி பாக்கை அள்ளி வாயில் போட்டுக்கொண்டார்.

அந்தப் பாக்கு, மைனர் வீட்டு கல்யாணத்திலே இடிக்கப்பட்ட வாசனைப் பாக்குத்தான் என்பதை அவரும் தெரிந்துகொள்ள வில்லை, வடிவாம்பாளும் சொல்லவில்லை.

இப்படி காப்பி, அல்வா, மைசூர்ப்பாகு, வெட்கம் ஆகிய பூர்வ பீடிகைகளிலேயே வெகு நேரம் சென்றுவிட்டது. பேச்சை ஆரம்பிக்க மைனருக்குத் துணிவில்லை. வடிவாம்பாளோ அவசரப்படவில்லை. அந்தச் சமயம் வைத்தியின் கடமை உணர்ச்சி உந்தவே, அவர் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தார்.

"ஆமா, மைனர்வாளைப் பார்க்கணும்னு சொன்னீங்களே!"

"நல்லாருக்கு—! இன்னிக்குத்தான் அவுங்களைப் பார்க்கிறேனா? அவுங்க சின்னக் குழந்தையா லச்சணமா குதிரை வண்டியிலே குந்திக்கிட்டு இஸ்கூலுக்கு வரபோதே பார்த்திருக்கேனே!"

"இல்லை, நேரிலே பார்க்கணும், பேசணும்னு சொன்னீங்களே. வந்திருக்கார். என்ன சொல்லணுமோ சொல்லுங்கோ!"

"பெரிய இடத்திலே நான் சொல்றதுக்கு என்ன இருக்கு. அவுங்களுக்குத் தெரியாதா?"

இப்படி இருவரும் பரிமாறிக்கொள்வதைக் கண்ட மைனர் ஆவலுடன் வடிவாம்பாளைப் பார்த்து, "சும்மாச் சொல்லுங்க" என்றார்.

மைனர் தன்னிடம் பேசியதும், வடிவாம்பாளுக்கு வெட்கம் தலைக்கு மேல் வந்துவிட்டது. ஒரு வளைவு வளைந்து தன் மேலாக்கை இழுத்துப் போட்டுக்கொண்டாள். அப்படியே தரையைப் பார்த்துக்கொண்டு, தூண் அருகில் போய் நின்று கொண்டாள்.

'இதென்னடா கஷ்டம்?' என்று மைனர் நினைத்துக்கொண்டார். வடிவாம்பாள் மெதுவாகக் கயிறு திரிக்க ஆரம்பித்தாள்.

"மூணு நாளா பளிச்சு பளிச்சுன்னு பல்லி சொல்லிக்கிட்டே இருந்தது."

"என்ன சொல்லிச்சு? அதிர்ஷ்டம் வருதுன்னு சொல்லித்தா?" என்றார் வைத்தி.

"இல்லே! அந்த உத்தரத்திலே கௌளி சொன்னா வராதவங்க வராங்கனு அர்த்தம் என்னடா, இப்படிச் சொல்லுதே. மைனர் குழந்தை இன்னிக்கே வந்துடுவாங்களாக்கும்னு காப்பிப் பிளிட்டரிலே டிக்காசன் எல்லாம் போட்டு வச்சேன்"

"ஐயய்யோ, மூணு நாளைக்கு முன்னாலே போட்ட டிகாஷனா?" என்றார் வைத்தி.

அதைக் கேட்ட மைனருக்குச் சிரிப்பு வந்தது. அதை அடக்கிக் கொண்டு, "சும்மா இருங்காணும், காப்பி அற்புதமாய் இருந்தது" என்றார்.

"அவருக்கென்ன அப்படித்தான் பேசுவாரு! வாசலிலே போற வண்டி, வர வண்டியெல்லாம் பார்த்தேன். அப்புறந்தான், இன்னிக்குக் காலம்பறத்துலே இருந்து முத்தத்துக் கம்பி மேலே' வந்து உட்கார்ந்துக்கிட்டுக் காக்கா கர் கர்னு கத்திச்சு. சரி, கூடவே வைத்தியும் வாரு போலேயிருக்குன்னு தெரிஞ்சிக்கிட்டேன்"

"இல்லை, அவர்கூட ஏதோ வேலை இருக்குன்னு சொன்னார். நான்தான் எனக்கு அவங்களைத் தெரியாது. நீர் இப்போ அவசியமா வாரும்னு சொல்லி அழைச்சிட்டு வந்தேன்"

"நல்லா சொன்னீங்க. உங்களைத் தெரியாமல் இருக்க முடியுமா? ஏதோ நான் பண்ணின புண்ணியம். நீங்க காலடி எடுத்து வச்சிருக்கீங்க. இந்தக் குடிசைக்குள்ளே நீங்க வரதுக்குக் குடுத்து வைக்கணுமே!" என்றாள் வடிவாம்பாள்.

இதைக் கேட்ட ஆனந்தத்தில் மைனர், வாயிலிருந்த பாக்கை அப்படியே விழுங்கிவிட்டார்.

கடிகாரம் ஓடாமல் நிற்பது சர்வ சாதாரணம். ஆனால் கருத்து ஓடாமல் நிற்பதே கிடையாது. கடிகாரத்தின் முள்ளை வலதுப் புறமாகத்தான் ஓட்ட வேண்டும் என்பார்கள். கருத்தோ, முன்னும் ஓடும், பின்னும் ஓடும்.

இங்கே நம் மைனர் கோவிலுக்குப் போகும் மோகனாவுடன் தன் கருத்தை ஓட விட்டுவிட்டு, வடிவாம்பாள் முன் அமர்ந்திருந்தார். அவர் மனக்கண்முன் அடிக்கடி மோகனா. தோற்றம் அளித்தாள். அவருக்கு அல்வாவும், மைசூர்ப்பாகும் வைத்து வடிவாம்பாள் உபசரித்தாள். ஆனால், அவர் நாவில் மோகனா என்ற பெயர் உச்சரிக்கப்பட்டு வந்ததால் இந்தச் சுவைப்பண்டங்கள் இனிப்பைத் தரவில்லை. ஆயினும், அவைகளை விழுங்கியது போலவேதான் பாக்கையும் விழுங்கினார்.

'இந்தக் குடிசைக்கு நீங்க வரக் குடுத்து வைக்கணுமே' என்ற வார்த்தைகள் அவர் காதில் ரீங்காரம் செய்தன. இந்தச் சமயம் வைத்தி "சரி கும்பகோணத்திலே ஒரு பங்களாவே வாங்கி வச்சுடச் சொல்றேன்" என்றார்.



இவ்வளவு சுலபமாக வைத்தி சொல்லிவிட்டாரே என்று மைனருக்கு ஒரு கணம் தோன்றியது. இருந்தாலும் அவரும் "சரி வாங்கிடுவம்" என்றார்.

"பங்களா வாங்கலாங்க. அதைச் சுத்தமா வைச்சுப் பாத்துக்கப் பணம் வேண்டாமா?" என்றாள் வடிவாம்பாள்.

"பணந்தானே? மாசாமாசம் ஆயிரம் ரூபா தரச் சொல்றேன்" என்றார் வைத்தி.

மைனருக்குக் கோபம் வந்துவிட்டது. வைத்தியைச் சரேலென்று ஒரு பார்வை பார்த்தார். "நீர் என்னங்காணும் குறுக்கே பேசிக்கிட்டு? என்ன ஜீவனாம்சமா கொடுக்கறோம்? இந்தாங்க அம்மா, பாங்கிலே ஐம்பதினாயிர ரூபாயைக் கட்டிடறேன். கையிலே ஒரு செக்குப் புஸ்தகம் வாங்கிக் குடுத்துடறேன். அவ இஷ்டம். வேணுங்கிறபோது செக்கை மாத்திக்கட்டும்" என்றார்.

வடிவாம்பாளுக்கு இந்த யோசனை பிடித்தது. ஆனால், பின் பாதிதான் அவளுக்குத் திருப்தியில்லை. அதனால், "எனக்குச் சம்மதந்தான். பணத்தை பாங்கிலே அவ பேராலே கட்டுங்க. ஆனால் மாசாமாசம் செலவை நீங்களே பாத்துக்குங்க" என்றாள்.

"அதுவும் சரி" என்றார் மைனர். பெருமான் மாடு போல் வடிவாம்பாள் எதைக் கேட்டாலும், சரி சரி என்று தலையை ஆட்டிக் கொண்டே இருக்க அவர் தயாராகிவிட்டார்.

"ஆமா... இப்ப நீங்க வந்துட்டுப் போனீங்கன்னு பேச்சை ஆரம்பிக்கணுமே. எதை வச்சுக்கிட்டு ஆரம்பிக்கறது?" என்றாள் வடிவாம்பாள்.

"இதை வச்சுக்கிட்டு ஆரம்பியுங்க" என்று மைனர் தம் மணிபர்சைத் திறந்து அதிலிருந்து ஒரு சிறிய கவரை எடுத்தார்.

வடிவாம்பாளுக்கு உள்ளங்கை அரித்தது. எத்தனை ரூபாய்க்கு செக்கு இருக்குமோ என்று அதை ஆவலுடன் வாங்கினாள். மேலே இருந்த பேப்பரைப் பிரித்துவிட்டு உள்ளே இருந்ததைப் பார்த்தாள். அதில் மைனரின் போட்டோ ஒன்று இருந்தது. அக்காலத்தில் போட்டோ எடுப்பது அதிகம் இல்லையாதலால், மைனர் அதை அவ்வளவு ஜாக்கிரதையாக வைத்திருந்தார். அதைப் பார்த்தவுடன் வடிவாம்பாளுக்குச் சிரிப்பு வந்தது. ஆம், அவள் அதையா கேட்டாள்? இருந்தாலும் வருவதை விடாமல் அந்தப் போட்டோவையும் எடுத்து வைத்துக்கொண்டாள்.

"அட, ரொம்ப அழகாயிருக்கே! இது எப்ப எடுத்தீங்க?" என்றாள் வடிவாம்பாள்.

தன் அழகில் மோகனாவின் தாய்க்குத் திருப்தி வந்துவிட்டது என்பதை அறிந்ததும் மைனர், இப்போது தம் அழகிலேயே மயங்கலானார்.

"நிஜமா நல்லாயிருக்கா? இதைப் பார்த்தா மோகனா என்ன நினைக்கும்?" என்றார் மைனர்.

"'இந்த மாதிரி போட்டோ பிடிக்கக்கூடாது. ஆயுசு குறைச்சல்'னு சொன்னாலும் சொல்லும்" என்றாள் சாமர்த்தியமாய் வடிவாம்பாள். "ஆமா— இது இருக்கட்டும்— ஏய்யா, சும்மா உக்காந்திருக்கிறீரே, சொல்லுமே !" என்றாள் வைத்தியைப் பார்த்து.

"நான் எப்படிச் சொல்றது? என்னாலே செலவு வாதுன்னு சொன்னாரா? ஏன் மைனர்வாள், கைப்பெட்டியைத் திறவுங்களேன் !" என்றார் வைத்தி.

பெட்டி திறக்கப்பட்டது. அதிலிருந்து வெல்வெட்டு டப்பா ஒன்றை எடுத்துத் திறந்தார் மைனர். அதில் அழகான வைர அட்டிகை ஒன்று இருந்தது. அதைப் பார்த்த வடிவாம்பாளுக்கு வாயெல்லாம் பல்லாயிற்று. அதையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

இதுதான் சமயம் என்று, "சோபனம் எப்ப வச்சுக்கறது?" என்றார் வைத்தி.

இதைக் கேட்டவுடன் வடிவாம்பாள் திடுக்கிட்டாள். நகை சும்மா வரவில்லை என்பதை அறிந்தாள். இனி பேசும் விஷயத்தை வைத்தியை வைத்துக்கொண்டு பேசக்கூடாது என்று தோன்றியது.

"வைத்தி, நீங்க கொஞ்சம் வாசலிலே போய் இருங்க. நான் கொஞ்சம் அவுங்ககிட்ட பேசிட்டு—" என்றாள் வடிவாம்பாள்.

"இப்பவே உத்தரவாயிடுத்தா?" என்றார் வைத்தி.

"அட, சரிதான் காணும் ! போம்னு சொன்னா போமேன். போய் வண்டியைக் கொண்டாரும். இதோ வரேன்" என்றார் மைனர்.

வைத்தியும் "சரி" என்று சொல்லிப் புறப்பட்டார்.

வைத்தி வெளியே சென்றவுடன் வடிவாம்பாள், "இந்தா பாருங்க ! இது எல்லாம் ஒழுங்காகும் வரையிலே ரகசியமா இருக்கணும் !" என்றாள்.

"எப்பவும் ரகசியமாகவே இருக்கும்."

"என் பெண் கொஞ்சம் பிடிவாதம் உள்ளவள். இந்தக் குலத்திலேயே தப்பிப் பிறந்தவள். அவளுக்குக் கல்யாணத்திலேயே அக்கறையில்லை. நாட்டியத்திலேதான் அக்கறை."

"நான்தான் ஆடலாம்னு சொல்லிவிட்டேனே !"

"அது சரி. நான் மெதுவாகத்தான் இந்தச் சேதியை அவகிட்டச் சொல்ல ஆரம்பிக்கணும்."

"ஒரு வாரத்திலே முடிவு தெரியுமா?"

"அது ஒரு வருஷங்கூட ஆகும். பக்குவமாய்ப் பேச்சை எடுத்து—"

"பிறகு என்னை ஏன் இப்ப வரச் சொன்னீங்க?"

"வைத்தி சொல்றதை நான் நம்பலாமா? அவர் வாயாலே நிசத்தைச் சொன்னால்கூட நிசம் பொய்யாகிவிடும். அதுக்காகத்தான்



நீங்களே வரட்டும், பேசி நிஜந்தானான்னு தெரிஞ்சிக்கலாம்னு பாத்தேன்."

"ரொம்ப நியாயம். இப்ப என்ன நினைக்கிறீங்க?"

"எனக்குத் திருப்தியாயிருக்கு. நான் என் மகள்கிட்ட சொல்லிப் பார்க்கிறேன். உங்களுக்குச் சந்தேகமா இருந்தா இந்த நகையை நீங்க எடுத்துக்கிட்டுப் போங்க."

"இதிலென்னங்க வந்துடுத்து? இது இங்கேயே இருக்கட்டும். அப்படின்னா ஒரு வாரத்திலே முடியுமா?"

"எனக்கென்ன வந்தது? என் குழந்தை எங்கேயாவது நல்லா இருக்கணும். நீங்களும் நல்லா இருக்கணும். எவ்வளவு சீக்கிரமாகச் சொல்லி அனுப்ப முடியுமோ அவ்வளவு சீக்கிரம் சொல்லி அனுப்பறேன்."

"அப்பவானா நான்—?"

"போயிட்டு வாங்க—" என்று சொல்லிக்கொண்டே நகைப் பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டாள்.

"நீங்கள் எப்படியாவது அவளைச் சம்மதிக்க வைத்துவிடணும்."

"சம்மதிச்சா கல்யாணம் எங்கே வச்சுக்கிறது?"

"கல்யாணமா?" என்று திகைத்தார் மைனர்.

"ஆமா, பின்னே?— ஒரே மகள். நல்லா நாலு நாள் கல்யாணம் நடத்தித்தான் ஆகணும்."

மைனருக்குத் தலை சுழன்றது. மனம் என்னவோ செய்தது. அவர் மோகனாவுக்காக எதையும் செய்யத் தயாராயிருந்தார். ஆனால், கல்யாணமான பதினைந்து நாளில் மறுபடியும் ஒரு கல்யாணம் செய்துகொள்ள வேண்டி வரும் என்ற எண்ணம் அவருக்கு அச்சம் ஊட்டியது. "இது பேச்சுக்கு இடமாகுமே ! மாமா கடம்பவனம் பிள்ளை காதில் இந்தச் செய்தி விழுந்தால், சொந்த மருமகன் என்று பாராமல் எஸ்டேட்டையே கவிழ்த்துவிடுவாரே !" என்று பயந்தார்.

பதில் சொல்லாமல் மௌனமாக இருந்தார்.

முப்பத்து நான்காம் அத்தியாயம்

## கண்ணை விழித்த பின்னும் உண்டோ கனவு?



சண்முகசுந்தரம் இசையில் மகாவித்வானாக இருக்கலாம். ஆனால், வித்வான்களுக்கே உரிய குழந்தை மனம் அவனையும் விடவில்லை.

'அவளுக்கு' என்று ஆசையோடு வாங்கின பட்டுத்துணியை நாம் ஆத்திரத்தில் கிழித்துவிட்டோமே ! இது அவளை ஒன்றும் செய்யாமல் இருக்க வேண்டுமே ! நம்முடைய

காதலுக்கு இது ஓர் அபசகுனமாக வந்துவிடக்கூடாதே! இதனால் நம் இருவர் அன்புக்கும் ஏதேனும் இடைஞ்சல் வந்துவிடக்கூடாதே! அச்சானியம் போல் ஏன் இதைச் செய்தோம்?" என்று நினைத்தபோதெல்லாம் அவன் மனம் ரொம்ப வேதனைப்பட்டது.

நாகபட்டினத்தில் இருந்து சிக்கலுக்கு வந்ததும் தர்மனைக் கூப்பிட்டு, நாலு ஆவர்த்தனம் படபடவென்று அவன் மேல் கோபித்துக்கொண்ட பிறகுதான் அவன் மனம் நிம்மதியடைந்தது.

தர்மனுக்கோ ஓர் அதிருஷ்டம். சண்முகசுந்தரத்துக்குக் கோபம் வந்தால், தர்மனுக்குக் காப்பிச் செலவுக்குச் சில்லறை கிடைக்கும். தன்னுடைய குறைகளை எல்லாம் அப்பொழுதுதான் அவன் சொல்லிக்கொள்வான்.

இவ்வாறு தர்மன் மேல் உள்ள கோபம் தீர்ந்தவுடன், 'முத்துராக்கு இல்லாவிட்டால் நாம் மோகனாவையே இழந்திருப்போமே!' என்று சண்முகசுந்தரம் எண்ணினான்.

"முத்துராக்கு, நான் எவ்வளவு வாசித்தாலும் பெருமை எல்லாம் உனக்குத்தான் அப்பா. நீ அமர்த்திக் தருகிற காலப் பிரமாணந்தானே என் வாசிப்புக்கு வழிகாட்டுகிறது? உன் நடையைப் பின்பற்றித்தானே நான் நடக்கிறேன்? இந்தா, நீதான் முன்வண்டி நான் பின்வண்டி தான்!" என்று சண்முகசுந்தரம் முத்துராக்கைத் தட்டிக் கொடுத்த போது முத்துராக்கு, "இந்தாங்க தம்பி, அப்படியெல்லாம் வண்டி வண்டியா புகழாதீங்க! ஏன், தம்பி, உங்ககூட வாசிக்கிறதுக்குக் கொடுத்து வச்சிருக்கேனே, அது போதும்" என்றான்.

இடையே தருமன் ஒரு யோசனை சொல்ல வந்தான். "இவ்வளவெல்லாம் பேசுறியே தம்பி, கல்யாணத்தைத்தான் கட்டி முடிச்சுடுவே" என்றான் தருமன்.

"நீ அந்தப் பெண்ணைக் கல்யாணம் கட்டிக்கிட்டு, உங்க இரண்டு பேருக்கும் பிள்ளை பிறந்து, நான் அதைத் தூக்கி வைச்சுக்கணும். எனக்கு அதுதான் பெரிய சந்தோசம்" என்று முத்துராக்கு ஆனந்தத்தில் கூறினான்.

"ஆமாம், நீ தவில் வாசிக்கிற கையாலே, பிள்ளையைத் தூக்கினால் பிள்ளை உடம்பு நல்லாத்தான் இருக்கும். கையா அது? கல்லு இல்லே! பிள்ளை உடம்பு கன்னிப் போகுமே! நான் தூக்கி வைச்சுக்கிட்டுத் திரியுறேன், தம்பி!" என்றான் தருமன்.

"ஆமா, தர்மண்ணன் தொட்டுத் தூக்கினா போதும், பொய்யும் புளுகும், புளகருட்டும்... உடனே..."

"சே... சுருட்டு நான் குடிக்கிறதே இல்லேப்பா!" என்று தர்மன் இடை மறித்துச் சொல்லவே, எல்லோரும் சிரித்தனர்.

தன் பக்க மேளக்காரர்கள் இப்படித் தன் மேல் அன்பைச் சொரிவதைப் பார்த்த சண்முகத்துக்கு, கஷ்டமும் ஒரு நன்மையைக்



கொண்டுவருகிறது என்பது தெரிந்தது. இடுக்கண் நேர்ந்த காலத்தில்தான் உண்மை நண்பர்கள் யார் என்பது வெளிப்படுகிறது என்ற ஆனந்தமும் ஏற்பட்டது.

முத்துராக்குவும் தர்மனும், "நீ இரு தம்பி, நாங்க போய் அவளுக்குக் கல்யாணமே வைச்சுக்கிட்டு வந்திடறோம்!" என்றார்கள்.

உண்மையில் சண்முகத்துக்கு இதில் ஆசைதான். இருந்தாலும் விஷயத்தை விட்டுக்கொடுக்காமல், "அதெல்லாம் பிறகு பார்த்துக்க லாம். முதல்லே தருமண்ணன் வச்ச வத்தியை அணைச்சுட்டு வருவோம்" என்றான்.

அன்றைக்கே முத்துராக்கை அழைத்துக்கொண்டு, திருவாரூருக்குப் புறப்பட்டுவிட்டான். தர்மன் வருவதாக எத்தனையோ விதங்களில் எடுத்துக் கூறியும், "நாங்க நல்ல காரியமா போகிறோம், அண்ணே!" என்று சொல்லிவிட்டான் முத்துராக்கு.

சண்முகசுந்தரமும் முத்துராக்குவும் திருவாரூர் வந்து இறங்கிய உடனே, உல்லாசமாக வடிவாம்பாள் வீட்டை நோக்கி வந்தார்கள்.

கல்யாணம் என்ற வார்த்தையில் இடி விழுந்தது போல உட்கார்ந்திருந்த மைனர், வடிவாம்பாளிடம், "கல்யாணம்னா... அது அவ்வளவா சரியில்லையே!" என்றார்.

வடிவாம்பாளும் மைனரின் குழப்பத்தைப் பார்த்துச் சற்று இறங்கி வந்தாள்.

"சரி, முதலிலே மோகனா சரி சொல்லட்டும். ஜோராக் கூட்டமுல உப்பிலியப்பன் கோவிலிலே நடத்துவம்" என்றாள்.

மைனரோ, "எதற்கும் நீங்க கேட்டு வையுங்க. யோசிச்சுச் சொல்றேன்" என்று விடைபெற்றார். வாசலில் வண்டிச்சத்தம் கேட்கவே எழுந்து வெளியே வந்தார். வடிவாம்பாளும் கூடவே வழி அனுப்புவதற்காக வந்து ரேழியில் நின்றுகொண்டாள்.

இந்தச் சமயத்தில் தங்கள் வண்டியைத் தள்ளி நிறுத்திவிட்டு இறங்கி வந்த சண்முகசுந்தரமும், முத்துராக்குவும் மோகனாவின் வீட்டு அருகில் வந்து சேர்ந்தார்கள். வீட்டு வாசலிலே மைனர் நிற்பதைக் கண்டான் சண்முகம். அவன் உள்ளம் சம்மட்டியால் ஓங்கி அடிக்கப்பட்டது போல் இருந்தது. ஒட்டிவைத்த பீங்கான் உடைந்தது போல் சத்தம் இல்லாமல் உள்ளம் உடைந்தது.

வாசலில் வரும் வித்வானைக் கண்ட மைனர் அவனைப் பார்த்துப் புன்னகை புரிந்தார்.

'அட, நம்மைப் பார்த்துச் சிரிக்கிறானே!' என்று எண்ணினான் சண்முகம்.

பாம்பை மிதித்தவன் போல, அவரையும், ரேழி மறைவில் நின்ற வடிவாம்பாளையும் ஒருமுறை பார்த்துவிட்டுச் சரேலென்று அவன் நடந்தான். அவன் நடையை முத்துராக்குவால் தொடர முடியவில்லை

தெருவைத் தாண்டிய பிறகுதான், சண்முகசுந்தரம் முத்துராக்குவைத் திரும்பிப் பார்த்தான்.

நடுவாசிப்பிலே தாளம் தவறிப் போடும்போது, தாளக்காரப் பையனைச் சில சமயம் சண்முகம் இப்படிப் பார்த்தது உண்டு. வித்தை விஷயத்தில் முத்துராக்குவுக்கு அந்தக் கதி ஏற்பட்டதில்லை. ஆனால், இன்று சண்முகசுந்தரம் பார்த்த பார்வை, "சீ ! நீகூட அல்லவா தாளம் தவறிவிட்டாய்?" என்று கேட்பது போல் இருந்தது.

பேச வாயில்லை முத்துராக்குவுக்கு. கண் முன்னே மைனர் நிற்பதைக் கண்ட பிறகு அவனால் என்ன சமாதானம் சொல்ல முடியும்?

முப்பத்தைந்தாம் அத்தியாயம்

## பெற்றவன் பித்தானான்



உலகமே உள்ளத்தில்தான் அடங்கியிருக்கிறது. நம்மை ஒருவர் நினைத்தால் நமக்குப் புரை ஏறுகிறது. நம் வீட்டில் ஒரு இன்பதுன்பம் நிகழ்ந்தால் நம் உள்ளத்தில் உருப் புரியாத உணர்ச்சிகள் எழுகின்றன.

சுருதி சேர்க்கப்பட்ட தம்பூர்த் தந்தியில் ஒரு தந்தியை மீட்டினால், அடுத்த தந்தியிலும் நாத அலை எழுவதைப் போல், இரண்டு இசைந்த உள்ளங்களில் ஒன்றை விதி தொட்டு மீட்டும்போது அடுத்த உள்ளமும் அலைபடுவது இயற்கை. ஆகவே, சண்முகத்தின் உணர்ச்சிகள் மோகனாவுக்கு உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்கியதில் வியப்பில்லை.

கமலாம்பிகையின் சந்நிதியில் நின்றுகொண்டு இருந்த மோகனாவுக்குத் தன் காதில், "சீ சண்டாளி, நீ ஒரு பெண்ணா? உன்னை நினைத்துக்கொண்டு ஒருவன் உள்ளம் கொதிக்கிறது. நீ இங்கே பூ வைத்துக்கொண்டு நிற்கிறாயே !" என்று யாரோ கேட்பதுபோல் ஒரு புரியாத ஒலி பேசியது.

அர்ச்சனையில் அவள் மனம் ஈடுபடவில்லை. மாலையில் கண்ட வண்டியும், அதற்குப் பக்கத்தில் இருந்த மனிதர் இருவரும் தன்னுடைய மானத்தை வண்டியில் ஏற்றிச் செல்லத்தான் வந்திருக்கிறார்கள் என்ற ஐயம் அவளுக்கு ஏற்பட்டது.

'தாயே, கமலாம்பா ! என்னை மன்னித்துக்கொள். நான் வீட்டுக்குப் போகிறேன். அங்கே ஏதோ ஆபத்து சூழ்ந்திருக்கிறது' என்று அவள் மனம் சொல்லிக்கொண்டது. அர்ச்சனை முடியும் வரை,



அவளில் நிற்பவள் போல் நின்றாள். கற்பூரத்தைக் கண்களில் ஒத்திக்கொண்டாள்.

"வரதா, வீட்டுக்குப் போவோமா?" என்றாள்.

அவனும் மறுத்துப் பேசவில்லை. இருவரும் அபாரஞ்சியை அங்கே நிறுத்திவிட்டு, வீட்டுக்குப் புறப்பட்டுவிட்டார்கள். வழியில் வரும் போது, "அதே வண்டியைப் பார்த்தது முதல் எனக்கு என்னவோ செய்கிறது வரதா !" என்றாள் மோகனா.

"எனக்கும் சந்தேகமாகத்தான் இருக்கு" என்றான் வரதன்.

"நீ என்கிட்டே ஏன் முந்தியே சொல்லலே?"

"நான் இன்னிக்குத்தானே அந்த ஆளை மறுபடி பார்க்கிறேன் !"

"அவர் யாருன்னு உனக்குத் தெரியுமா?"

"எனக்கு ஏன் அவனைத் தெரியுது? பண்ணைக்குத் தெரியும். பணக்காரருக்குத் தெரியும். நான் கேள்விப்பட்டவரைக்கும் அவன் நல்ல ஆள் இல்லையாம்."

"வரதா, பெற்றவளே பகையானால் மற்றவரை என்ன சொல்வது? அம்மாவுக்கு என்னைவிடப் பணந்தானே பெரிசாக இருக்கு !—"

"உனக்குத்தானே அந்தப் பணமும் !"

"ஏன், இரண்டு பக்கமும் பேசுகிறாய்?"

"என் தொழிலுக்கு இரண்டு கையும் பேசணுமே ! இப்போ என்ன வந்துடுத்து? அவங்க நம்ப வீட்டுக்குத்தான் போயிருக்காங்கன்னு என்ன நிச்சயம்?"

"இல்லே வரதா ! என்னைக் 'கோவிலுக்குப் போ போ' என்று அம்மா விரட்டியதைப் பார்க்கும்போது, எனக்கு அவள் ஏதோ செய்கிறாள் என்றே தோன்றுகிறது. என்னை என் தாயே புரிந்து கொள்ளவில்லை என்றால் நான் யாரை நொந்துகொள்வது?" என்று சொன்னவுடனே வரதனால் பதில் சொல்ல முடியவில்லை.

மோகனாவும் வேறு ஒன்றும் பேசவில்லை. இருவரும் வீட்டை நோக்கி நடந்தார்கள்.

அப்பொழுது மாலை ஏழு மணி இருக்கும். கடைகளில், விளக்குகளை ஏற்றிக்கொண்டிருந்தார்கள். தெருவெங்கும் மல்லிகையும் முல்லையும் மணத்தன. கடைகளுக்கு வருவோரும் போவோருமாகக் கூட்டம் "ஜே, ஜே" என்று இருந்தது.

மோகனா வருவதைப் பார்த்துப் பலர் அவள் அழகில் மயங்கினர். "எங்கேடா, கோயிலிலே இருந்தா?" என்று பலர் கேட்டுக் கொண்டனர்.

அப்பொழுது வேகமாக வந்த ஒரு வண்டி அவர்களைத் தாண்டிச் சென்றது. அந்த வண்டியில் பூட்டியிருந்த மொட்டை மாடுகளின் சலங்கைகள் "ஜல், ஜல்" என்று ஒலித்துக்கொண்டே ஓடின. திருப்பதிக்குப் போய் வந்தவன் சடுக்கன் போட்டுக்கொண்டது போல்

அந்த மொட்டை மாடுகளின் கழுத்துகளைச் சலங்கைகள் அலங்கரித்தது வேடிக்கையாக இருந்தது.

அதுவரையில் தலை குனிந்துகொண்டு வந்த மோகனா, சடக்கென்று திரும்பிப் பார்த்தாள். "வரதா, அதோ —— அவருமாதிரி இருக்கே!" என்றாள். அந்த இருளில்கூடத் தன் காதலன் அந்த வண்டியில் உட்கார்ந்து செல்வது அவள் கண்களில் தெரிந்தும் தெரியாமலும் பட்டுவிட்டது.

வரதன், "யாரு?" என்றான்.

"அவருதான்— சிக்கலார் மாதிரி இருக்கு— வரதா, நீ போய்ப் பாரு" என்றாள் மோகனா. அதற்குள் வண்டி நெடுந்தூரம் போய்விட்டது.

"என்ன, சண்முகமா? இருக்காது" என்று சொல்லிக்கொண்டே வரதன் ஓடினான். 'அண்ணன் என்று கூப்பிடுவதா... ஐயாவா, சிக்கலாரா? எப்படிக் கூப்பிடுவது?' என்று அவன் நிச்சயிப்பதற்குள் வண்டி ஒரு சந்தில் திரும்பிவிட்டது.

வரதன் தொடர்ந்தான். அவனால் அந்த மாடுகளின் வேகத்தைப் பிடிக்க முடியவில்லை. "ஏய், ஏய்" என்று கூப்பிட்டான். அதற்குள் வண்டி போயே போய்விட்டது.

வரதன் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டே மோகனாவிடம் வந்து சேர்ந்தான். மோகனா கற்சிலை போல் வரதனுக்காகக் காத்துக்கொண்டிருந்தாள்.

"அவர்தானா வரதா?" என்றாள்.

"அது என்ன வண்டியா, புஸ்வாணம் மாதிரியில்ல பறக்குது!"

"நீ ஓடிப் போய்க் கூப்பிடக்கூடாதா? அவர் எங்கே வந்திட்டுப் போகிறாரோ!"

"அவராயிருந்தா நிறுத்தியிருக்கமாட்டாரா? வேறு யாரோ?" என்றான் வரதன்.

"இல்லே வரதா! அவர் மாதிரிதான் இருந்தது" என்று சொல்லி யோசித்தவண்ணம் நடந்தாள், மோகனா. சண்முகசுந்தரந்தான் போகிறானோ என்ற சந்தேகம் தீரவில்லை. ஏற்கெனவே மைனரின் வருகை அவள் மனத்தைப் புண்படுத்தியிருக்க, அந்தப் புண்ணிலே புளியை இட்டது போல் இந்தச் சந்தேகம் வேறு சேர்ந்துகொண்டது.

மைனரின் வண்டி வந்து அவரை அழைத்துச் செல்லும்வரை மனத்தை அடக்கிக்கொண்டு ரேழியில் நின்ற வடிவாம்பாள், அவர்கள் போனவுடனே அவசரமாய் உள்ளே சென்று, அந்த அட்டிகைப் பெட்டியை எடுத்து ஆவலுடன் திறந்து பார்த்தாள். அது ஜொலித்த ஜொலிப்பு அவள் உள்ளத்தைப் பறித்தது.

அதே சமயத்தில் அவளுக்கு இது நிஜமா வைரந்தானா என்ற சந்தேகமும் வந்தது. ஆசாரியிடம் காட்டி அதையும் பார்த்துவிட எண்ணினாள். அதற்காக நிஜமான வைரமில்லாவிட்டால் அவள்



வீசியெறிந்துவிடுவாள் என்று நினைக்க வேண்டாம். அது கண்ணாடியாயிருந்தாலும் கீழே போட மனம் வருமா? பேராசையுள்ள நெஞ்சு அவ்வாறெல்லாம் பேதலிக்கும். ஆனால், மைனர் தந்தது வைரமாய்த்தான் இருக்கும் என நிச்சயம் செய்துகொண்டாள்.

உடனே தன் மகளுக்கு அதைப் போட்டு அழகு பார்த்துவிட வேண்டும் என்ற ஆசையும் வந்தது. 'இன்று நல்ல நாள், வெள்ளிக்கிழமை. கோயிலில் இருந்து அவள் வீட்டுக்கு வந்ததும் போட்டுப் பார்த்துவிடலாம்' என்று எண்ணியபோது, கோயிலுக்கு வருவதாகத் தான் மோகனாவிடம் சொல்லி அனுப்பியதும் நினைவுக்கு வந்தது.

கோயிலுக்குப் போவது, அங்கு இதைக் குருக்கள் கையில் கொடுத்து அம்மன் பாதத்தில் வைக்கச் சொல்லி வாங்கித் தன் அருமை மகள் கழுத்தில் அங்கேயே பூட்டிவிடுவது என்ற தீர்மானத்தில் அதை எடுத்துப் பத்திரமாய் முன்றானையில் முடிந்து கொள்ளப் போனாள். பெட்டி பெரியதாக இருந்ததால் முடிந்துகொள்ள முடியவில்லை. அந்தச் சமயத்தில் இன்னொரு சந்தேகம் வேறு வந்தது.

'இம்மாதிரி ஒரு பெரிய நகையைச் சுவாமி பாதத்தில் வைக்கிற சமயம் யாராவது ஒருவர் பார்த்து 'என்ன வடிவாம்பா! சுவாமிக்குச் சாத்துகிறாயா?' என்று கேட்டுவிட்டால் என்ன செய்வது? அதைத் திருப்பி வாங்கிக்கொள்வது நன்றாக இருக்காதே' என்று யோசித்தாள். 'அதைத் தவிர, சுவாமியின் பாதத்தில் வைத்ததை எடுத்து வந்துவிட்டால், அதனால் சுவாமியே ஏதாவது செய்துவிட்டால்?' என்ற பயமும் வந்தது. ஆதலால் 'சுவாமிக்கு ஆறணாவில் ஒரு மாலையை வாங்கி அற்புதமாய்ச் சாத்திவிடுவோம். இப்போது பூக்கடை சாத்தியிருப்பாங்க, அடுத்த வெள்ளிக்கிழமை பார்த்துக்கலாம்' என்று ஒரு முடிவு செய்துகொண்டாள். நகையை எடுத்து உள்ளே வைத்துப் பூட்டப் போனாள்.

அப்போது சண்முகம் வாசல் வழியே வந்ததும், மைனரை முறைத்துப் பார்த்ததும் அவள் கண் முன் வந்து நின்றன.

'இவன் ஏன் நம் வீட்டைச் சுற்றி வருகிறான்? எதற்காக மைனரை முறைத்துப் பார்க்கவேண்டும்? பசித்தவன் பலகாரக் கடையைப் பார்த்த மாதிரி இவன் நம் மகளைப் பார்த்து ஏன் ஏங்கவேண்டும்? அன்று ரயிலில் அவன் நடந்துகொண்ட விதமும், கூஜாவை வாங்க வந்த தருமன் அதருமமாய்ப் பேசினதும், அவன் திரும்பிப் போய்விட்டான் என்ற செய்தி கேட்டு அன்றைக்கு அந்தக் குட்டி அலறி மயக்கம்போட்டு விழுந்ததும், இன்று இவன் வாசலில் இருந்து வெட்டிவிடுபவன்போல் பார்த்துவிட்டுப் போவதும்— ஒன்றும் நன்றாய் இல்லையே! ...உம்... நாம் எப்படியடா நம் குழந்தை சந்தோஷமாக இருப்பாள் என்று பார்க்கிறோம். இந்தப் பாவி

பாலிலே உறை மோர் விட்டாப்பலே அவள் மனசைக் கெடுக்கப் பார்க்கிறானே !'

'எங்கே வந்துவிட்டுப் போகிறான்? ஒரு சமயம், கோயிலுக்குத் தரிசனம் செய்ய வந்திருப்பானோ? இந்தக் கோயிலுக்குத்தான் கண்டவங்கள் எல்லாம் கும்பிட வந்துவிடுகிறார்களே ! இங்கிருந்து நேரே இவனும் கோயிலுக்குப் போய் அவளும் அங்கிருந்து, இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்துவிட்டால்? அம்மாடியோ !— குடி கெட்டுப் போகுமே !' என்று துடித்தாள் வடிவாம்பாள்.

இதை நினைத்ததுமே அவள் உடம்பு பதறியது. தான் போற்றிக் காத்த புதையலைத் திருடன் எடுப்பது போல் தோன்றியது. உடனே கோயிலுக்கு ஓட எண்ணி அவசரமாய்ப் பூட்டைக் கையில் எடுத்தாள். ஓடிவந்து வாசற்கதவைச் சாத்திப் பூட்டப் போனாள். அந்தச் சமயம் பார்த்துச் சாவிக்கொத்து பூட்டில் இல்லை. உள்ளே ஓடினாள். அலமாரியில் பார்த்தாள். அங்கும் இல்லை. மஞ்சள் பெட்டியில் தேடினாள். உத்திரத்தில் பார்த்தாள். ஆணியில் மாட்டியிருக்கிறோமா என்று பார்த்தாள். 'கை மறதியாக எங்கேனும் போட்டுவிட்டோமா? இல்லாட்டி அதிலிருந்த வெள்ளி வளையம், முன்னு வாங்கிக்கு ஆசைப்பட்டு இந்த வைத்தி கிய்த்தி எடுத்துக்கிட்டுப் போயிருப்பானா? ஒரு வேளை, ஞாபக மறதியாக மைனரே பையில் போட்டுக்கொண்டு போயிருப்பாரோ, இதென்னடி கஷ்டம்?' என்று இடுப்பில் கையை வைத்தாள். சாவிக்கொத்து மடியில் இருந்தது ! அதைக் கண்டதும் அவளுக்கே தாங்கமுடியாத சிரிப்பு வந்தது.

அப்போது, "என்னம்மா சிரிக்கிறே?" என்று கேட்டுக்கொண்டே மோகனா அவள் எதிரில் வந்து நின்றாள்.

வடிவாம்பாள் திடுக்கிட்டாள்.

மகளின் முகத்தைப் பார்த்தாள். முகம் எப்போதும் போல் இல்லை. ஏதோ யோசனைகள் உள்ளே நடக்கின்றன என்ற சாடை அவள் முகத்தில் தெரிந்தது.

பொதுவாகக் கலைஞர்கள் உணர்ச்சி மிக்கவர்கள். உணர்ச்சி பொங்கி வரும்போது கலை பிறக்கிறது. உணர்ச்சியை அடக்கிக் கொண்டு அதன் வசப்படாமல் உலகில் வாழ்பவர்கள் அச்சிலே வார்த்த பொம்மை போல் அலுங்காமல் வாழலாம். அவர்களால் நன்மையும் இல்லை, தீமையும் இல்லை. செம்மலரோன் கைம்மலரால் செய்து வைத்த சிலைகளுள் அது ஒன்று. ஆனால், கலைஞர்களோ உணர்ச்சியை அடக்க முடியாமல் வெளியிட்டுவிடுவார்கள். இதுதான் கலைஞர்களிடம் உள்ள குறை; நிறைவும் இதுதான்.

தன் அருகில் நின்ற மகளைப் பார்த்ததும், ஒன்றும் தெரியாதவள் போல், "ஏன் கண்ணு, கோயிலில் இருந்து அதுக்குள்ளே வந்துட்டே? நான் வரேன்னு சொன்னேனே !" என்றாள் வடிவாம்பாள்.



"எனக்கு அங்கே இருப்பே கொள்ளவில்லை அம்மா. நீங்க வீட்டிலே தனியா இருப்பீங்களேன்னு தோணித்து" என்றாள் மோகனா.

இந்த எதிர்வெட்டு வடிவாம்பாள் எதிர்பார்க்காத ஒன்று. "நான் தனியாகவா இருந்தேன்? உன்னையே நினைச்சுக்கிட்டிருந்தேன். உனக்குக்கூடப் புரையேறி இருக்குமே!"

"ஆமாம்மா, இருமலே வந்துவிட்டது" என்று சொல்லிக் கொண்டே தன் கடைக்கண்ணால் அங்கு கிடந்த வெற்றிலைக் காம்புகள், காப்பி, பலகாரம் சாப்பிட்ட பாத்திரங்கள் முதலியவை களைப் பார்த்தாள் மோகனா.

இதைக் கவனித்த வடிவாம்பாள் அவள் கவனத்தைத் திருப்ப எண்ணியவளாய், "இந்தா, இதைப் பாரு" என்று தன் மடியில் இருந்த நகை டப்பாவை எடுத்தாள். அதைத் திறந்து அதற்குள் இருந்த அட்டிகையை எடுத்து, "அம்மாடி, கொஞ்சம் கழுத்தைக் காட்டு!" என்றாள்.

மோகனா அதைத் தன் கையில் வாங்கினாள். விளக்கு அருகில் பிடித்து ஒரு முறை பார்த்தாள். அந்தப் பதக்கத்தின் நடுவில் இருந்த பச்சை அற்புதமா யிருந்தது. இவ்வளவு பெரிய நகை இங்கு எப்படி வந்து குதித்தது என்ற சந்தேகத்துடன் அந்தப் பதக்கத்தைத் திருப்பிய போது, அதில் "பி.எம்.எஸ். சிங்கபுரம்" என்று எழுதி இருந்ததைப் படித்தாள். அவள் கை நடுங்கியது. முகம் வியர்த்தது. தன் தாயை ஒரு பார்வை பார்த்தாள்— "சே ! நீ இவ்வளவுதானா?" என்று கேட்பது போலிருந்தது அந்தப் பார்வை.

மாட்டின் பார்வைக்குக்கூட மனிதர்கள் அர்த்தம் புரிந்துகொண்டுவிடுகிறார்கள். அப்படியிருக்க, மகள் பார்த்த பார்வை தாய்க்குப் புரியாதா? இன்று நேற்றா மகள் அவளைப் பார்க்கிறாள். பசிக்கு ஒரு பார்வை, பாலுக்கு ஒரு பார்வை, தூக்கத்திற்கு ஒரு பார்வை, துள்ளி விளையாட ஒரு பார்வை என்று நாக்கு வருமுன்னே நயனந்தானே பேச ஆரம்பித்தது?

சிறு வயதில் தன் மகளின் பார்வைகளை வடிவாம்பாள் ரசித்தது போல் இப்போது அவளால் ரசிக்க முடியவில்லை.

"என்ன அப்படிப் பார்க்கிறே? அந்தப் பார்வையெல்லாம் வேறே எங்கேயாவது வச்சுக்க !" என்று ஆத்திரத்துடன் குமுறினாள் வடிவாம்பாள்.

தன் தாய் எதையோ நிச்சயம் செய்துவிட்டாள். நமக்குப் பேச இடம் கொடுக்காமல் கண்டிப்பாய் இருக்கப் பார்க்கிறாள் என்பதை உணர்ந்தாள் மோகனா. அவளுக்கும் ஆத்திரம் வந்தது. ஆனால் பிடிவாதக்காரியான தாயிடம் சண்டை பிடித்துப் பயனில்லை என்பதை எண்ணி, "இல்லியே அம்மா ! சும்மாதானே பார்த்தேன்? நகை நல்லா இருக்கே. இது ஏதுன்னு பார்த்தேன் !" என்றாள்.

"இதுவா? இது— நான் போய் எல்லையம்மன் கோவில் வாசலிலே ஆடப்போறேன். அதுக்காக எனக்குப் போட்டுக்க வாங்கி இருக்கிறேன். வயசாச்சுப் பாரு. இனி நகையெல்லாம் போட்டுக்கிட்டாத்தான் நல்லாயிருக்கும் !"

"எம்மா எரிஞ்சு விழுறே? எது என்றுதானே கேட்டேன்?"

"ஆமாடி. நீ நல்லாயிருக்கிறதைப் பார்த்து நான் எரிஞ்சு விழுகிறேன், உன் மேலே எனக்குப் பொறாமை அட கடவுளே ! உனக்கே நல்லாயிருந்தா சரி !" என்று வடிவாம்பாள் பல்லவியில் இறங்க ஆரம்பித்தாள்.

"நான் உன்னை ஒன்றும் சொல்லவில்லையே ! ஏன் இப்படி?.."

"பின்னே என்னடி !'நகையைக் கையிலே கொடுத்தா கழுத்திலே போட்டுக்கிட்டு காலிலே விழுந்து கும்பிடுவாயாக்கும்னு நினைச்சேன். இப்போ நீ என் காலிலே விழுவியா?" என்றாள் தாய்.

'அம்மா, உன் காலில் விழுந்து கும்பிடுகிறேன். நடந்ததைச் சொல்லு' என்று கேட்க நினைத்தாள் மோகனா. ஆனால், அடக்கம் அவள் நாவைத் தடுத்தது.

"உன் காலில் விழாமல் வேறு யார் காலில் விழப்போகிறேன், அம்மா? இது ஏதோ நல்லாயிருக்கே, ரொம்பப் பிரியமா வாங்கி இருக்கியே என்று பார்த்தேன் என்ன விலை அம்மா?"

இந்தக் கேள்விக்கு எப்படிப் பதில் சொல்வாள் வடிவாம்பாள்? ஆம், அதன் விலைதான் என்ன?

விலை மதிக்க முடியாத தன் மகளை அதற்கு விலை என்பதா? அவள் கற்பை விலை என்பதா? அவள் பருவ காலம் பூராவையும் விலை என்பதா?__

நேற்றுவரை மோகனா சென்ற வாழ்க்கையிலிருந்து, வண்டியை வேறு வழியில் திருப்பிவிடும் கைகாட்டிபோல் அல்லவா இந்த அட்டிகை வந்திருக்கிறது?

இவை எல்லாம் வடிவாம்பாள் உள்ளத்திலே ஓடின. உண்மையைச் சொல்லும் தைரியம் இல்லை.

"செரொட்டிலே வாங்கி வச்சிருக்கேன். உனக்கு மனசுக்குப் பிடிச்சா நகை நம்மளுதுதான் !" என்றாள் வடிவாம்பாள் இரண்டு அர்த்தத்தில்.

"ஏன் அம்மா இப்படிப் பேசுகிறாய்? நீ எதை வாங்க நினைத்து நான் வேண்டாமென்று சொல்லிவிட்டேன்? இதிலே செரொட்டு என்ன?"

"இன்னிக்குத்தானே விலை நீ என்னன்னு கேட்கிறே? நேத்துக் கேட்டியா? உன் புடவை என்ன விலைன்னு உனக்குத் தெரியுமா? உன் மூக்குத்தி என்ன விலைன்னு தெரியுமா? வயசாச்சில்லே ! வரவு செலவுக் கணக்கெல்லாம் கேக்க வந்துட்டே !" என்று வரிந்து கட்டினாள் வடிவாம்பாள்.



அவளுக்குக் குற்றமுள்ள நெஞ்சு உண்மையை மறைக்கச் சொல்கிறது. மோகனாவுக்குத் தாயன்பும், வயதுப் பெண்ணுக்குரிய துடுக்கும் உண்மையை வாய்விட்டுக் கேட்க முடியாமல் தடுக்கின்றன. இவ்வாறு தாயும் மகளுமே கண்ணாமூச்சி விளையாடுகிறார்கள். பணத்தின் மகத்துவத்தால் மோகனாவுக்கு இந்த நகை மூலம் உண்மையைத் தெரிந்துகொண்டுவிட உள்ளம் துடித்தது.

"நான் வரவு செலவுக் கணக்குக் கேட்கவில்லை, அம்மா. இது எப்படி இங்கு வந்தது என்றுதான் கேட்கிறேன் !" என்றாள்.

"அதுவா? கோவலன் நாடகத்துக் கருடன் கொண்டுவந்து போட்டுது. என்ன, நீ வரவர கேள்வி கேட்க ஆரம்பிச்சுட்டே?"

"இல்லேம்மா, நகை பழைய நகையாட்டம் இருக்கே, யாராச்சும் ஏமாத்திப்பிட்டாங்களோன்னு பார்க்கிறேன்"

"என்ன? பழைய நகையா? அவன் யாருடி என்னை ஏமாத்துறவன்? எல்லாம் புதுசுதான் !"

"குடுத்த ஆளு நல்லவன்தானே?"

"ஏன் அப்படிக் கேட்கிறாய்? எவன் கொடுத்தால் உனக்கு என்ன?"

தாயின் குரல் ஏற ஏற மகளின் துடுக்கும் ஏறலாயிற்று. தன் தாயிடமிருந்து நிச்சயமாய் உண்மையை வாங்கிவிடுவது என முடிவு செய்துகொண்டாள், மோகனா.

"இல்லேம்மா, உங்களுக்கு நகைன்னா போதும். யாரு கொடுத்தாலும் வாங்கி உள்ளே வச்சிடுவீங்க"

"உம் சொல்லுங்க—"

"இது ஏதோ திருட்டு நகை மாதிரி இருக்கு. பின்னாலே பெரிய மனுசன் வீட்டுப் பேர் வெட்டி இருக்கு அதனாலேதான் கேட்டேன்"

'ஆமாம், மைனர் வந்திருந்தார், தந்தார்' என்று வடிவாம்பாள் உண்மையைச் சொல்லி இருக்கக்கூடாதா? அப்படிச் சொல்லி விட்டால் அவள் வடிவாம்பாள் இல்லையே !

மகள் கேள்வியில் வடிவாம்பாளுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. தன் மகள் தன்னைக் குறுக்கே கேள்வி கேட்டு மறிக்கிறாள் என்ற எண்ணம் வந்தது. இப்படியெல்லாம் அவள் பேசுவதற்குக் காரணம் அவள் அல்ல; அந்தச் சண்முகசுந்தரந்தான் என்ற நினைப்பும் ஏற்படவே, அவளுடைய ஆத்திரம் எல்லாம் அவன் பக்கம் திரும்பியது. அவன் இவளைக் கோவிலில் சந்தித்துவிட்டான் என்று நிச்சயமும் செய்துகொண்டாள். மடியில் இருந்த மல்லிகைப் பூ சாக்கடையில் விழுந்துவிட்டால் எப்படி வருத்தம் உண்டாகுமோ அந்த வருத்தமும், வளர்த்த கடா திரும்பிப் பாய்ந்தது போன்ற ஆத்திரமும், தன்னைவிட மோகனாவுக்கு அவன் வேண்டியவனாகிவிட்டானே என்ற கோபமும் தன்னை மீறிக் கொதித்து வந்தது. உடம்பு படபடத்தது. அவளை அறியாமல் வார்த்தைகள் அம்புபோல் பாய்ந்து வந்தன.

"எனக்கு எல்லாம் தெரியும்டி! நீயா கேட்கிறே? நான்தான் கோயிலுக்கு வருவதாகச் சொல்லி இருந்தேனே? நீ என் அவசரப்பட்டு வீட்டுக்கு வந்தே?"

"எனக்கு இருப்புக் கொள்ளவில்லை; முள்ளு மேலே நிக்கிறாப்பிலே இருந்தது."

"வழியோட நடந்தா நல்லா இருக்கும் சந்து வழியிலே போனா முள்ளு குத்தத்தான் குத்தும்!" என்றாள் வடிவாம்பாள்.

மோகனாவுக்கு என்னவென்றே புரியவில்லை. எதற்குத் தாய் இப்படிச் சொல்கிறாள் என்றும் தெரியவில்லை. அப்படியே விழித்துக் கொண்டு நின்றாள்.

"ஏம்மா முழிக்கறே? வண்டிக்குத்தான் பாதை உண்டுன்னு நினைச்சியா? வாழ்க்கைக்கும் பாதை உண்டு. ஒவ்வொருத்தரும் பொறந்த பொறப்புக்குத் தகுந்தாப்பிலே எப்படி எப்படி நடக்கணும்னு வகுத்துத்தான் வச்சிருக்காங்க. நீ குறுக்கு வழியிலே போனா முள்ளுதான் குத்தும்—"

"என்னம்மா சொல்றே? எனக்குப் புரியவில்லையே!" என்றாள் மோகனா.

"புரியறது என்னடீ இருக்கு? எவனைப் பார்க்க நீ கோவிலுக்குப் போனேன்னு கேட்கிறேன்!" என்றாள் தாய்.

இவ்வார்த்தைகள் மோகனாவைத் திடுக்கிட வைத்தன. தன் தாயா இப்படிக் கேட்கிறாள் என்ற ஆத்திரமும் துக்கமும் பொங்கி வந்தன.

"என்னம்மா இப்படி எல்லாம் கேட்கிறீங்க?" என்றாள்.

"எனக்கா தெரியாதுன்னு பாக்கறே? அந்தச் சிக்கலான் அங்கே வந்தானா இல்லியா? சொல்லு! இங்கே வாசலிலே வந்து அவர் நிக்கறதைப் பார்த்துட்டு மாடு வெறிக்கிறாப்பிலே வெறிச்சிட்டுப் போனான். கோயிலுக்கு வந்து உங்கிட்டச் சொல்லி உன்னைத் தூண்டிவிட்டானாக்கும்!— நான் வரேன்னு சொல்லியிருக்கறப்போ, நீ பெற்ற தாய் பேச்சையும் மதிக்காமல்— நோட்டம் பார்க்க வீட்டுக்கு வந்திருக்கிறே!" என்று வடிவாம்பாள் ஆத்திரத்தில் 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்று படபடவென்று பொரிந்து தள்ளினாள். அவள் சாமர்த்தியமெல்லாம் அவளுக்கு வந்த ஆத்திரத்தில் பலியாயின.

சண்முகம் தன் வீட்டிற்குத்தான் வந்தான் என்று கேட்டதும் மோகனாவின் உள்ளம் சுரீர் என்றது. இங்கு வந்துவிட்டுத்தான் வண்டியில் போயிருக்கிறான் என்று தெரிந்துகொண்டாள். இருந்தாலும், மேலும் நடந்தவற்றை அறியும் எண்ணத்தில், "ஏம்மா, சும்மா கதையெல்லாம் சொல்றீங்க!" என்றாள்.

"நானாடி கதை சொல்றேன்? திரும்பி விறைச்சுக்கிட்டுப் போற போதே அவன் கோவிலுக்குத்தான் போறான்னு கண்டுபிடிச்சுட்

48427


டேனே! இந்தப் பாழும் சாவி சமயத்துக்கு ஆப்பிடல்லே! இல்லாட்டி நானே வந்து, அங்கே உங்க ரெண்டு பேருக்கும் நடுவிலே நின்னு, கையும் களவுமா பிடிச்சிருப்பேன்! எனக்கென்ன? நாலு பேரைப்போல நீ வாழணும்னு நினைக்கிறேன். நல்லா இருக்கணும்னு பாக்கிறேன். உனக்காகப் பொய்யும் புளுகும் சொல்லி, கண்டவனையெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டு, நாலு காசு சேக்கணும்னு பார்க்கிறேன். நீ அந்த வெடு வெட்டிப் பயலை நினைச்சுக்கிட்டு என்னை முழிச்சுப் பாக்கிறே, எதிர்த்துப் பேசறே, கணக்குக் கேட்கிறே! உனக்கு ஆட்டத்தைக் கத்து வச்சேன், அரங்கேத்தம் பண்ணி வச்சேன், பாட்டைப் படிச்சு வச்சேன். பலன் என்ன கண்டேண்டி!" என்று ஹோவென்று முகாரியில் ஆரம்பித்து விட்டாள், வடிவாம்பாள்.

"அம்மா, சும்மா இருங்கம்மா! சும்மா இருங்க!" என்று மோகனா அவளைச் சமாதானம் செய்யச் செய்ய வடிவாம்பாளின் சுருதி இன்னும் ஓங்கியது.

"ஏண்டி என்னைச் சமாதானம் செய்றே! அந்தச் சிக்கலான் சொன்னானா? உன் தாயைத் தனது பண்ணிக்கணு—"

"நான் அவரோடு பேசவே இல்லை, அம்மா!" என்று மகளும் தழுதழுத்த குரலில் கூறினாள்.

"என்ன பேசல்லியா? என்கிட்டயா பொய் சொல்றே?"

வடிவாம்பாளுக்கு ஒரு நிச்சயம். மோகனா தன் மகள் ஆதலால் நிச்சயம் பொய் சொல்வாள் என்ற நம்பிக்கை. காலமும் கல்வியும் உலகை மாற்றிவிட்டதை உணரும் திறமை அவளுக்கு இல்லை.

"நான் என்னென்னமோ நினைச்சேண்டி. வாயைக் கட்டி வகுத்தைக் கட்டி உன்னை வளர்த்தேண்டி! இன்னிக்கு நீ அதை மறந்து பெத்தவளையே மதிக்காம பேச ஆரம்பிச்சுட்டே! என்னையே எதிர்த்துக் கேள்வி கேட்க ஆரம்பிச்சுட்டே!" என்று கூறியபடி நகைப் பெட்டியை எடுத்து அலமாரியில் வைத்துப் பூட்டிவிட்டு, தரையில் முன்றானையை விரித்துப் படுத்துக்கொண்டு, மூசு மூசு என்று அழ ஆரம்பித்தாள், வடிவாம்பாள்.

வடிவாம்பாளின் பிடிவாதம் அன்று தணியவேயில்லை. மகள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். வரதன் வந்து காலில் விழுந்து கெஞ்சினான். கோவிலில் இருந்து அபரஞ்சி கொண்டுவந்த நெய்த் தேங்குழல் வீணாய்ப் போகிறது என்றுகூடச் சொல்லிப் பார்த்தான். அவள் ஒருவரிடமும் பேசவில்லை, எழுந்திருக்கவில்லை, தூங்கவும் இல்லை.

இம்மாதிரி அவள் பிடிவாதம் செய்வது இதுதான் முதல் தடவை. ஆகையால், மோகனாவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அவளும் சாப்பிடாமல் போய்த் தன் படுக்கையில் படுத்தாள்.

வரதன் பாவம், அந்தப் பிரசாதங்களைத் தன் கையாலேயே எடுத்து மூடி வைத்துவிட்டு, அதன் எதிரிலேயே பட்டினியாய்ப் படுத்துக்கொண்டான். பசி வயிற்றில் இருக்க, பக்கத்தில் நல்ல சம்பாச் சோறும், சர்க்கரைப் பொங்கலும், நெய்த் தேங்குழலும் மணம் வீசிக்கொண்டு இருக்கும்போது, யாருக்காவது தூக்கம் வருமா? 'தந்தி தொம் நம்' என்று முதல் பாடத்தில் ஆரம்பித்து முக்கால் இடம் மூன்று களைச் சவுக்கம் வரையில் வாயாலேயே சொல்லித் தீர்த்துவிட்டான், வரதன் !

மோகனா தன் படுக்கையில் படுத்துத் தலையணையில் தலையைச் சாய்த்தவுடன் விசும்பி விசும்பி அழத் தொடங்கினாள். அவள் கண்ணீர் தலையணையை நனைத்தது. தான் கோவிலுக்குப் போயிருந்த சமயத்தில் மைனர் இங்குதான் வந்துவிட்டுப் போயிருக்கிறான். அவனிடம் தன் தாய் ஏதோ பேசி இந்த நகையை வாங்கி வைத்திருக்கிறாள் என்ற எண்ணம் வந்ததும் அவள் வருத்தம் அதிகமாயிற்று.

'ஆனால் கோவிலுக்கு அவர் வந்ததாகச் சொன்னானே, அவர் அங்கு வரவில்லையே ! வேகமாக வண்டியில் போய்விட்டாரே !— வாசலில் வண்டி நின்றதாகத் தருமன் போய்ச் சொன்னான். உடனே ரயிலேறிப் போனார். இன்றுதானே நேரில் வந்து அது நிஜமா என்று பார்க்க வந்திருக்கிறார். மைனரையே பார்த்துவிட்டுப் போய் விட்டார் ! இனி நம் முகத்தில் விழிக்கமாட்டார்—' என எண்ணினாள். அவள் உடம்பு துடித்தது. நெஞ்சம் பற்றி எரிந்தது. 'தன்னிடம் நேரில் கேட்காமல் இப்படி வந்து மறையும் அவரை நேரில் சந்தித்துக் கேட்டுவிட்டால் என்ன? இது என்ன அபவாதம்?

'இந்த அபவாதத்தைத் தாங்கி உலகில் எப்படி வாழ்வது? முதலில் நமக்கு வந்த பழியைத் துடைத்துக்கொள்ளவேண்டும். இரண்டாவதாக, அவருடைய அன்பைத் திரும்பிப் பெற வேண்டும். பெண் ஜன்மம், பேச்சுக்கு இடமானது. பெண்ணைப்பற்றி ஏளனம் செய்வதிலும், நாக்கிலே நரம்பு இல்லாமல் பேசுவதிலும் ஊருக்கு ஒரு ஆனந்தம். எப்பொழுது இரண்டு முறை வீடு தேடி வந்தாரோ, அன்பு இருந்ததால்தானே வந்திருக்கிறார்? இப்பொழுது அந்த அன்பு முழுவதும் நஞ்சாக மாறி இருக்குமே ! ஐயோ, நான் என்ன பாவம் செய்தேன்? ஏன் என்னை இப்படிச் சோதிக்க வேண்டும்? மைனர் வந்தபோது நான் வீட்டில் இல்லை என்று அவருக்குத் தெரியுமா? நான் கோயிலில் அவரையே எண்ணிக்கொண்டு நின்றது அவருக்குத் தெரியுமா? தாயே, கமலாம்பா ! நீயாவது சொல்ல மாட்டாயா? நாம் வீட்டை விட்டுப் புறப்பட்டு அவரைத் தேடிச் சென்றால்?— அதுவும் அபவாதம். காட்டிலே ஓடும் கவரிமான், மரத்தில் வால் சிக்கி ஒரு மயிரை இழந்தாலும் உயிர் வாழாது என்பார்கள். மானத்தை இழந்தபின் யாருக்காக வாழ வேண்டும்?' என்று நினைத்தவுடன்



அவள் கண்கள் ஊற்றைப்போலப் பொங்கின. 'யாருக்காக வாழவேண்டும்? 'தாசி குலத்தில் பிறந்தவள், தடுமாறி அலைந்தாள்' என்ற கெட்ட பெயர் வராமல் பழியைத் துடைத்துக்கொள்ளவாவது வாழத்தான் வேண்டும்' என்று எண்ணினாள்.

அவளுக்கு எங்கிருந்தோ ஒரு துணிவு வந்தது. 'நம் உள்ளம் புண்ணாவது ஒருபுறம் இருக்கட்டும். நம்மைக் காதலித்ததற்காக அந்தக் கலைஞனின் உள்ளம் புண்ணாகிவிட்டதே ! அதையாவது நாம் ஆற்ற வேண்டும். நம்மால் அவர் கஷ்டப்படக்கூடாது. நாம் உண்மையை அவருக்குத் தெரிவிக்க வேண்டும்' என்று முடிவு செய்து கொண்டாள்.

பச்சைக் குழந்தை, பதினெட்டு வயது நிரம்பாதவள். அவளுடைய உள்ளத்திலே இப்பொழுது பெண்மை சிறியது. தன்மானம் என்ற உணர்ச்சி அவள் இதயத்தை வைரமாக்கியது. அவளுடைய மலர் போன்ற மனம் இப்பொழுது மாணிக்கம் போல உறுதி பெற்றது.

காதல் என்பது காட்டாற்று வெள்ளம் அல்ல. கரையை இடித்துக் கொண்டு ஓடிவிடலாம் என்பதும் அதன் முறையல்ல. அப்படிச் செய்தால் மனித வாழ்வுக்கு அது ஒவ்வாது. ஒரு நாள் செய்யும் தவறுதல் உயிர் உள்ளவரையில் கெட்ட பெயரை உண்டாக்கிவிடும். என்ன செய்வது? உலகத்தில் வாழும் பொழுது அதற்கு ஒட்டித்தான் வாழ வேண்டும். ஆகவே, 'நாம் நேரில் போவது சரியல்ல. முதலில் வரதனை தூது அனுப்புவோம். அவரிடத்தில் அவ்வளவு விஷயங்களையும் எடுத்துச் சொல்லச் சொல்வோம்' என்று நிச்சயித்தாள்.

உடனே மாலையில் கண்ட வண்டியும் அதில் போன சண்முகமும் அவள் மனக்கண்ணில் ஓடினார்கள். 'ஐயோ ! இந்த வரதன் ஓடிப் போய் வண்டியைப் பிடித்திருக்கக்கூடாதா? ஏன் வரதனை அனுப்பினோம்? நாமே ஓடிப்போய் அந்த வண்டியைப் பிடித்து நிறுத்தி அவருடன் பேசி இருக்கக்கூடாதா?

'கண்டோம். பிறகு கருத்தொருமித்தது. இருவரும் இன்பத் தோணியிலே எதிரும் புதிருமாய் அமர்ந்து பேசாமல் ஒரு இரவு பிரயாணம் செய்தோம். அதோடு முடிந்துவிட்டதா நம் காதல் உலகம்? ஆரம்பமே முடிவாகிவிட்டதா? இப்பொழுது அபவாதம் ஒரு அணைபோல் வந்துவிட்டதே !' என்ற எண்ணத்தில் அவளுக்கு மறுபடியும் துக்கம் குமுறியது. படுக்கையில் புரண்டு புரண்டு அழுது கொண்டே கிடந்தாள்.

இவ்வாறு மகள் துடிக்கையில் தாய் என்ன செய்கிறாள் என்று பார்ப்போம்.

தரையில் படுத்த வடிவாம்பாளுக்கும் தூக்கம் பிடிக்கவில்லை. தான் கட்டிய ஆகாயக் கோட்டைகளைத் தன் மகளே காலால்

எத்துகிறாள் என்ற எண்ணத்தில் அவள் மனம் புழுங்கியது. தான் பாடுபட்டுப் பாலூட்டி, சீராட்டி, தாலாட்டி வளர்த்தது எல்லாம் விழலுக்கு இறைத்த நீராயிற்றே. தன்னையே தன் மகள் எதிர்த்துப் பேசும் காலமும் வந்ததே ! என்ற எண்ணத்தில் மனம் நொந்து பெருமூச்சு விட்டுக்கொண்டே வெகு நேரம் கிடந்தாள்.

இரவு இரண்டு மணியிருக்கும். அவள் மனத்தை என்னவோ செய்தது. அவளால் அதற்கு மேல் படுக்கையில் படுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. அவள் உள்ளத்தில் உருப்புரியாத வேதனை ஒன்று வரலாயிற்று. தன் பசியை அடக்கிக்கொள்ள அவளுக்கு முடியும். ஆனால், 'தன் மகள் பட்டினியாய்க் கிடக்கிறாளே. அவளுக்கு வேறு யாரும் சாதம் போட்டிருக்க மாட்டார்களே' என்ற எண்ணம் வந்தது. அவளுடைய கோபம் எல்லாம் பறந்தது. ஆத்திரம் எங்கோ ஓடியது. 'நம்மால் குழந்தை சோறு உண்ணவில்லையே. வேளாவேளைக்குச் சாப்பிட்டால்தானே அவள் உடம்பு நன்றாக இருக்கும். அவள் கஷ்டத்துக்கு நாம் காரணமாய்விட்டோமே !' என்ற எண்ணம் வந்தவுடன் வடிவாம்பாள் துடித்து எழுந்தாள். உள்ளே நடந்தாள்.

மோகனா படுத்திருக்கும் அறை வாசல் வந்தவுடன் சற்றுத் தயங்கினாள். அவள் கோபம் அவளைத் தடுத்தது. ஆனால், பாசம் இழுத்தது. கதவிலே கையை வைத்தாள். கதவு திறந்துகொண்டது. அரைத் தூக்கத்தில் புரண்டுகொண்டிருக்கும்போது, அறைக்குள்ளே சந்தடி செய்யாமல் ஒரு உருவம் வருவதைக் கண்டாள் மோகனா. அவள் வேறு யாருமல்ல, தன் தாய்தான் என்பதும் தெரிந்தது.

வடிவாம்பாள் மோகனாவின் அருகில் வந்தாள். சற்று நின்றாள். ஒரு பெருமூச்சு விட்டாள். அவள் உடம்பைத் தொட்டுப் பார்த்தாள். நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். சற்று உடம்பைத் தொட்டு அசைத்தாள். மோகனா எழுந்திருக்கவில்லை. உடனே அருகில் உட்கார்ந்து தன் மகளை மெதுவாகத் தடவிக் கொடுத்தாள்.

மோகனா அரைத் தூக்கத்தில் தாயின் கை தன் மேல் படுவதை உணர்ந்தாள். "எழுந்திரு அம்மா !" என்று வடிவாம்பாள் அன்புடன் சொன்னாள். மோகனா பதுமை போல் எழுந்தாள்.

அவளை உள்ளே கூட்டிக்கொண்டு போய், தன் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு கோவிலிலிருந்து வந்த பிரசாதத்தைத் தன் கையால் எடுத்து மகள் கையில் கொடுத்து, "இந்தா, சாப்பிடு !" என்று சொல்லியவுடனே, மோகனா தாயின் முகத்தைப் பார்த்தாள்.

அதுவரை அடக்கி வைத்திருந்த துயரம் வெடித்தது. "அம்மா !" என்று கூறி, விசும்பி விசும்பி அழுதாள். தாய் அவளை இறுகக் கட்டிக் கொண்டாள்.



"அழாதே, கண்ணு ! எல்லாம் உனக்கு நல்லதுக்குத்தானே செய்கிறேன் ! நானா கொண்டுவிட்டுப் போகப் போறேன்?" என்று சொல்லி முன்றானையால் அவள் கண்களைத் துடைத்தாள். கையிலிருந்த சர்க்கரைப் பொங்கலைத் தன் மகளின் வாயில் ஊட்டினாள்.

## முப்பத்து ஆறாம் அத்தியாயம்

# வரதனின் தூது



சுகஜமாகச் சிக்கல் என்ற பெயரைக் கேட்டதும் பலருக்கு வக்கீல் வீட்டு ஞாபகம் தான் வரும். அந்த அளவுக்கு வம்பு வழக்கு இல்லாதவருக்கோ பிரிந்து கிடக்கும் நூல் கண்டின் ஞாபகம் வரும். ஆனால், பிரிந்து கிடக்கும் திரிகரணங்களையும் ஒன்றாக்கிப் பிறவிச் சிக்கலைத் தவிர்க்கும் இறைவனால் தான் இந்த ஊருக்குச் சிக்கல் என்னும் பெயர் வரலாயிற்று.

இந்த ஊரில் சிவபெருமானே சிக்கிக்கொண்டார் என்றால் இங்கு பிறந்த பிறவிகள் சிக்காமல் இருக்க முடியுமா?

இந்த ஊருக்கு நடந்து வருபவர்கள் உளையில் சிக்கிக் கொள்ளுவார்கள். அதற்குத் தப்பி ஊருக்குள் வந்தால், இந்த ஊர் மக்களின் உபசரிப்பில் சிக்கிக்கொள்வார்கள். அதற்கும் தப்பினால் அந்த அழகு சொட்டும் ஐயன், சிங்காரவேலனின் வடிவழகில் சிக்கிக் கொள்ளுவார்கள். இதற்கும் மேலாகச் சண்முகத்தின் மதுர இசையில் சிக்கிக்கொள்ளுவார்கள் !

இப்போது சண்முகம் தானாகவே இன்னொன்றில் சிக்கித் தவிப்பதால், அவன் வாசிப்பில் சிக்க முடியாது. இன்னும் கோவிலில் கால சந்தியே ஆகவில்லையாதலால் சிங்காரவேலனிடம் சென்றும் சிக்க முடியாது. ஆதலால், உளையில் சிக்கித் தவிக்கும் தருமனிடம் நாம் செல்வோம்.

தருமன் அதிகாலையில் எழுந்து சண்முகத்தின் வயலில் நடவாட்கள் வந்திருக்கிறார்களா என்று பார்க்கப் போனான். தனி இடத்தில் செல்லும்போது பாட்டும் துணைக்கு வரும். இந்த அநுபவம் பலருக்கும் இருக்கலாம். தருமனும் இதற்கு விதிவிலக்கல்ல. முன்பே அவன் நாதஸ்வரம் வாசித்தவன் என்று கூறியிருக்கிறோம். இன்று அவனுடைய சங்கீதத்தை இந்தப் பாமர உலகம் ரசிக்கவில்லையே என்ற ஆத்திரம் அவனுக்கு உண்டு. ஆனால், அங்கு

இருந்த பூவரச இலை ஒன்றைச் சுருட்டி ஊதலாக்கிக்கொண்டு அதில் ஊதிக்கொண்டே நடக்க ஆரம்பித்தான்.

இடையில் நெடுநாள் ஒத்து ஊதியே பழகிவிட்டதால் சிறிது நேரம் அவனுக்கு ஒரே ஸ்வரந்தான் ஊத வந்தது. இலை பதப்படவும், இதயம் குஷிப்படவும், ஸ்வரங்கள் கணக்கில் அடங்காமல் 6, 7, 8, 9 என்று பிடித்துக்கொண்டு கிளம்பலாயின. பிலஹரியில் ஆரம்பித்து சாவேரி வரை வந்துவிட்டான். பத்து மணி ஆனது தெரியவில்லை. குஷியாய் ஊதிக்கொண்டே எதிரில் கோடிக்கணக்கான பேர்கள் நிற்பதாகவும், தலையை ஆட்டுவதாகவும், ரசிப்பதாகவும், தனக்கு மாலை போடுவதாகவும் எண்ணிக்கொண்டே மல்லாரி நடையில் இறங்கினான். மல்லாரிக்கு ஏற்ப அவன் உடம்பும் தலையும் ஆடின. இரண்டு கால்களும் அவனை அறியாமல் காலப்பிரமாணத்தில் நடந்தன. பாதையில் பாழும் வாய்க்கால் இருப்பது தெரியவில்லை. 'லொளுக்' என்று உளையில் கால் மாட்டிக்கொண்ட பிறகுதான் அவன் கவனித்தான். ஊதலைத் தூக்கி எறிந்துவிட்டு, 'தேவலோகத்தில் இருந்த நாம் சகதியில் விழும்படியாகிவிட்டதே' என்ற கவலையில் காலை வெளியே இழுத்தான்.

முழங்கால்வரை சகதி அப்பிக் கிடந்தது. அதைக் கழுவக் குட்டைப்பக்கம் போனான். குட்டைக் கரையில் நடவாட்களுக்குச் சோறு போடுவதற்காக இரண்டு தவலைகளில் புழுங்கலரிசி வெந்துகொண்டிருந்தது. ஓர் அடுக்கு நிறைய, தோல் சீவாத கீரைத் தண்டும் பரங்கிப் பழமும் வெட்டிப்போட்டு, மொச்சைக் கொட்டை குழம்பு கொதித்து, மணம் வீசியது. ஒருவன் நடவுப் பெண்களுக்காக நல்லெண்ணெய், மஞ்சள், வெற்றிலை பாக்கு, இவைகளை எடுத்து வைத்துக்கொண்டிருந்தான். தருமன் இவைகளை மேல் பார்த்துக்கொண்டிருக்கும்போதே நடவாட்கள் வயலுக்குள் இறங்கிவிட்டார்கள்.

"பால்வண்ணை நாதரும்
வேல்நெடுங் கந்தனும்
பக்க மிருப்பாங்க
நாத்து நடு
பால்குடிக்கும் பிள்ளை
வயிறு நிறையோணும்
பசிதணிய வேணும்
பாத்து நடு
நாகூரில் வாழுற
சாகூல மீதொலி
நாயகம் பேர்சொல்லி
நாத்து நடு



கூகூவென் றேழைகள்
சோத்துக் கலையாமல்
குமிக்கவேணும் நெல்லை
நாத்து நடு
வந்தாண்டி கந்தன்
வளைச்செட்டி யாகவே
வள்ளியின் கையைப்
பிடிச்சாண்டி
செந்தா மரைமுகம்
சிணுங்கின தைப்பார்த்து
சிங்கார வேலன்
சிரிச்சாண்டி !"

என்று பாடி நாற்று முடியைப் பிரித்து நெற்றியில் தொட்டுக் கும்பிட்டுப் பல பெண்கள் நடவு நட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இடக்கரத்தில் நாற்று முடியையும், அதிலிருந்து ஒவ்வொரு நாற்றாய் எடுத்து வைத்து நிலமகளின் திருமேனியை அலங்கரிப்பது போல் அவர்கள் வரிசை வரிசையாய் வலக்கரத்தினால் நடும் அழகையும் கண்ட தருமன் மயங்கினான். ஒவ்வொரு நாற்றாய் எடுத்து நட்டு, ஒவ்வொரு வயிறாகச் சோறிடுகிறார்களே, இவர்கள் அன்றோ உலகத்தின் தாய்க்குலம் என்று அவனுக்குத் தோன்றவில்லை !

ஆனால், அவன் மனத்தில் நாற்றுப் பறிக்கும் நங்கையரின் அழகும் அவர்கள் சிரித்துப் பேசும் பேச்சும், வளை குலுங்க அவர்கள் ஒரே சமயத்தில் நாற்று எடுத்து எடுத்து வைக்கும் அழகுந்தான் பட்டன.

தருமனும் வயலில் இறங்கிவிட்டான்.

"ஆத்தே நண்டு, நண்டு !" என்றாள் ஒரு பெண். தருமன் ஓட ஆரம்பித்தான். அவன் உடம்பெல்லாம் சந்தனம் தெறித்தது போல் சகதியும் சேறும் தெறித்தன. அவன், எதிரில் இருந்த நாற்று முடியை அவிழ்த்தான்.

ஒரே மாதிரியாய் அடுக்கி வைத்திருந்த நாற்றுகளைப் பிரிப்பதற்குள் ஒரு முறை அதைக் கீழே தவற விட்டான். கட்டுக் கலைந்தது. பெண்கள் சிரித்தார்கள்.

"அய்யா, நடவு நட்டுக் கதிரறுத்துக் கொடுத்தால் நல்லா சாப்பிடுவாங்க !" என்றாள் ஒரு பெண். எல்லோரும் சிரித்தனர்.

அப்போது 'தித்தளாங்கு தளாங்கு' என்ற குரல் கேட்டது. தலையைக் குனிந்து வயல் வரப்பைப் பார்த்தவண்ணம் கக்கத்தில் மிருதங்கத்துடன் வரதன் நடந்து வந்தான். வரப்பில் ஒரு 'வித்வான்' நடந்து வருவதைக் கண்டதுமே வயலில் இருந்த பெண்கள் எல்லோரும் அவனைக் கும்பிட்டு ஒரே குரலில் "உளுளுளுளுளு"

என்று குலவை இட்டார்கள். இந்தக் குலவைச் சத்தத்திலே வரதன் திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தான்.

"மத்தளக் காரங்க தத்திமி கொட்டவும்,
வாயில் - பாட்டு முழங்கிடவும்,
**உத்தம மாகவே வயிறு நிரம்பனும்,**
**ஊருக்குச் சோறிட நாத்து நாடு"**

என்று மறுபடியும் பாட ஆரம்பித்தனர். வரதன் பாடு திண்டாட்டமாகிவிட்டது. அவனை மிருதங்கம் வாசிக்கச் சொன்னால் அவன் இப்போதே மிருதங்கத்தை அவிழ்க்கத் தயார். ஆனால், அந்தப் பெண்கள், வாசித்தால் விட்டுவிடுவார்களா? குலவை விட்டவர்களுக்குப் பணம் போட வேண்டாமா?

வரதன் சில்லறைக்குத் தன் சட்டைப் பையைத் தேடினான். அவன் கையில் ஒரு முழு ரூபாய்தான் கிடைத்தது. அதைப் போட மனம் வரவில்லை. வேகமாக நடக்க ஆரம்பித்தான். அந்தப் பெண்களோ வழியை மறித்துவிட்டனர்.

இந்தத் தர்மசங்கடமான நிலையில் "என்ன முட்டுக்காரரே, சுகமா?" என்று தருமன் குரல் கேட்டது. ஆனால், அவன் உடம்பில் இருந்த சேறும் சகதியும் தலைமுண்டாசும் அவனை அடையாளம் தெரியாமல் செய்துவிட்டன.

"யாரையா முட்டுக்காரன்னு சொல்றது? வவுத்திலே ஒரு 'கும்பி' கொடுத்தேன்னா தெரியுமா?" என்றான் வரதன்.

"நான் ஆரம்பிச்சா ஓயமாட்டேன் தெரியுமா?" என்றான் ஒத்துக்கார தருமன்.

'என்னடா, எங்கேயோ கேட்ட குரலா தெரிகிறதே' என்று பார்த்தபோதுதான், எதிரில் இருப்பவன் தருமன் என்று தெரிந்தது. வரதன் சிரித்தான்.

"ஒத்துக்காரரே, எற்கனவே உங்களுக்கு தருமன்னு பேரு. இப்ப ஏமதருமனாட்டமே இருக்கீங்க. இந்த வேஷத்திலே நீங்க நிக்கறதைப் பார்த்தா குழந்தை குட்டிகளெல்லாம் பயந்துடும்" என்றான் வரதன்.

"அட, குலவை விட்டவங்களுக்குக் காசு கொடுக்க வக்கில்லே, பேச்சைப் பாரு !"

"முழு ரூபாயாயிருக்குதேன்னு பார்த்தேன். ஏ ஆயா, உங்கிட்டே ஒரு ரூபாய்க்குச் சில்லறை இருக்குமா?" என்றான் வரதன்.

அவன் கையிலே முழு ரூபாயைப் பார்த்தவுடன் தருமன் பிரமித்தான். அவன் மாத்திரம் என்ன, அந்தப் பெண்களும் பிரமித்தனர். அப்போது வரதன் அந்தப் பெண்களுள் ஒருத்தியிடம் முழு ரூபாயையும் கொடுத்துவிட்டான். இந்தச் சந்தோஷத்தில் பெண்கள் ஒரு முறை குலவை விட்டனர்.



"ஏன், தம்பி, முழு ரூபாயையுமா கொடுத்திட்டே?" என்றான் தருமன்.

"பின்னே என்ன, இன்னியா குடுப்பாங்க? அட போய்யா! மத்தளத்துக்குச் சோறு போடறதுக்கே பத்து ரூபாய் கேக்கறான். மனுசனுக்குச் சோறு போடற கைக்கு எவ்வளவு கொடுத்தாத்தான் என்ன?"

"ஆமா, பாடுபட்டுச் சம்பாதிச்சாத்தானே பணத்து அருமை தெரியும் !" என்றான் தருமன்.

"பின்னே என்ன? பணங்காட்டிலே விளையுதோ பணம்?"

"அட ! சரிதான் போய்யா, மைனருகிட்டே கை நீட்டினா போடுறாரு !" என்றான் தருமன்.

"மறுபடியும் அப்படிச் பேசினீரோ, நான் போட்டுடுவேன்" என்று மரியாதையாக வைதான் வரதன்.

"அட, இதெல்லாம் இருக்கிறதுதான் தம்பி ! சும்மா விடு. உலகத்திலே இனி புதுசாவா பொழுது விடியப் போவுது?"

"என்னங்காணும், இருட்டிலே ஆந்தை கத்தற மாதிரி கத்தறே. விஷயத்தைச் சொல்லு."

"நீ எங்கே புறப்பட்டே, உனக்கும் சீட்டுக் கிளிஞ்சுடுச்சா?"

"எங்கேருந்து?"

"அங்கே இருந்துதான். அம்மாளை இனிமே ஐயா ஆடக் கூடாதுனு உத்தரவு போட்டிருப்பாரு. மத்தளக்காரரு வாத்தியத்தைக் கையிலே எடுத்துக்கிட்டுப் புறப்பட்டுட்டாரு."

"உம்— அப்புறம்?"

"அப்புறம் என்ன? இனி வீடு வீடா ஏறி இறங்குவாரு."

"உம்— பிறகு?"

"சாப்பாட்டுக்குத் ததிங்கிணத்தோம் போடுவாரு."

"இந்தாய்யா, நீ வயசிலே மூத்தவனா இருக்கிறியேன்னு பார்க்கறேன். இல்லாட்டி, உன்னைச் செம்மைக்கு நாலு வைச்சுட்டு நீ வாசிக்கிற கோவில்லே போய்ச் சொல்லிடுவேன்."

"கோவில்லே எதுக்கு? பாவத்தைத் தொலைக்கவா?"

"பாவமா? எது? சாமி, தருமண்ணனை அடிச்சுட்டேன். இன்னும் அஞ்சாறு நாளைக்கு அவர் ஊதி ஒன்னைத் தொந்தரவு பண்ணமாட்டாருன்னு சொல்லத்தான்."

"இந்தாய்யா, ரொம்ப ஓட்டாதே. இது யாரு ஊரு தெரியுமில்லியா?"

"தெரியாமலா வந்திருக்கேன்? முதல்லே உங்க நாயனக்காரரைக் கண்டு நியாயத்தைக் கேக்கறது. அப்புறம், உங்க ஊராரைக் கண்டு விசயத்தைச் சொல்றதுனுதானே வந்திருக்கேன்?"

"அவரைத்தான் ஊரிலே இல்லாம ஓட்டிட்டீங்களே! இனி என்ன கேட்கப் போறீங்க?" என்றான் தருமன்.

'சண்முகம் ஊரில் இல்லை' என்றவுடன் வரதனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"அவரு ஊரிலே இல்லியா? எங்கே போயிருக்காரு?"

"அதோ அந்தக் குளத்தங்கரையிலே ஒரு வீட்டு வாசல்லே நாமம் போட்டு இருக்குது பாரு. அங்கே போய்க் கேளு."

"நாமமா? நாயனக்காரர் வீட்டுலே—"

"நாயனக்காரர் வீடில்லே தம்பி. அதுதான் சோசியர் வீடு. அங்கே போயி கால் ரூபாயை வெத்திலை பாக்குலே வச்சு— 'இந்த மாதிரி ஒருத்தனை நம்பிக்கை மோசம் பண்ணி ஊரை விட்டே ஓடுறாப்பிலே செஞ்சுட்டோம். இப்ப எங்கே இருக்கான்னு' கேளு... பொல்லாத மனிசன் தேடிக்கிட்டு வந்திட்டான்!"

நிஜமாகவே கோபிக்க ஆரம்பித்தான் தருமன். இதைக் கேட்கக் கேட்க வரதனுக்குக் கோபம் வந்தது. இருந்தாலும், மோகனா தன்னிடம் சொல்லியதை நினைத்துத் தன் கோபத்தை அடக்கிக் கொண்டான்.

முப்பத்து ஏழாம் அத்தியாயம்



## உடன் பிறவாத பிறப்பு

வடிவாம்பாளின் வீட்டில் ரகளை நடந்த மறுநாள், அவர்கள் வீட்டில் எல்லாம் ஒழுங்காகவே நடப்பது போல் தோன்றினாலும், ஒவ்வொருவர் மனத்திலும் அடிப்படையில் ஒரு குழப்பம் இருந்து கொண்டே வந்தது.

முதல் நாள் இரவு மோகனாவை எழுப்பிச் சாதம் ஊட்டிய தாய், பொழுது விடிந்ததும் ஏதோ புதிதாக வீட்டுக்கு வந்தவள் போல் நடந்து கொண்டாள். யாரோ கச்சேரி பேச வந்தார்கள். அதைச் சொல்ல வந்தார் முத்துக்குமர நட்டுவனார். அவரிடம் இனி தான் இந்த வீட்டு எஜமானி அல்ல என்றும், எது வேண்டுமானாலும் மோகனாவையே நேரில் கேட்கும்படியும் கூறினாள். பாவம், அவர் ஒரு அப்பாவி. "அதற்கென்ன அப்படியே செய்கிறேன்" என்றார்.

"என்ன? அப்படியே செய்கிறேன் என்றால் என்ன அருத்தம்?"

"எதுக்கும் குழந்தையைக் கேட்டுக்கொள்ளுகிறேன். மரத்தின் மேல் ஏறுபவனை எவ்வளவு நான்தான் தாங்க முடியும்? உங்கள்



கடமை. பெண்ணை முன்னுக்குக் கொண்டுவந்துவிட்டீர்கள். இனி வீட்டுப் பொறுப்பை அவளிடம் விடுவதுதான் நியாயம்' என்று நட்டுவனார் உலக நியாயத்தைச் சாவதானமாய் எடுத்துக் கூறவே, வடிவாம்பாளுக்கு எரிச்சலாய் வந்தது.

நட்டுவனார் அவள் மனத்தில் உள்ள கோபத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்ற கோபம் ஒரு புறம். உடனே தன்னை சமாதானம் செய்து 'இல்லை, நீங்கள் அப்படியெல்லாம் சொல்லக் கூடாது நான் அவளைக் கோபிக்கிறேன்' என்று சொல்லவில்லையே என்ற வருத்தம் ஒருபுறம். இதுமட்டும் அல்லாமல், இந்த மனிதன் கொஞ்சங்கூட நன்றியில்லாமல், இதுவரையில் தான் வீட்டுக்கு எஜமானியாயிருந்த பொறுப்பை விட்டுவிடுகிறேன் என்று சொன்னவுடன், சரி என்று சொல்லிவிட்டானே என்ற ஆத்திரந்தான் அதிகம் வந்தது.

இந்தச் சமயத்தில், "என்ன சமைப்பது?" என்று அபாஞ்சி வந்து கேட்டான்.

"என்னை ஏன் கேட்கிறாய்? அவள் கிட்ட போய்க் கேளு" என்று அவனை எரிந்து விழுந்தாள்.

வாசலில் வந்த காய்கறிக்காரன், கூட்டுக்காரி முதல் யாரையும் அவள் விடவில்லை. யாராவது 'ஏனம்மா இவ்வளவு வருத்தம்? உங்கள் மகள் ஏதாவது சொன்னாளா?' என்று தப்பித் தவறிக் கேட்க மாட்டார்களா. நாம் ஒரு முறை அழமாட்டோமா என்று எண்ணினாள். கோவிலுக்காவது போவோம் என்று கோபமாய்ப் புறப்பட்டுவிட்டாள். அந்தக் கோபத்திலும் அவள் அலமாரியைப் பூட்டிச் சாவியை எடுத்துக்கொண்டாள். ஆதலால், அவளை யாரும் எங்கு போகிறாய் என்று தடுக்கவும் இல்லை. யாரையாவது கூப்பிட்டு, 'இந்தா, எனக்குக் கோபம். கொஞ்சம் சமாதானம் செய்' என்றுகூடச் சொல்ல அவள் தயார்தான். ஆனால், ஒருவரும் அவள் எதிரில் வரவில்லை...

காலையில் எழுந்தது முதல் மோகனாவும் சரியாய் இல்லை. வெடிக்கக் காத்திருக்கும் எரிமலை போல் அவள் உள்ளம் குமுறிக் கொண்டே இருந்தது. வேறு யாரேனும் சண்டை பிடித்தால் தாயிடம் சொல்லலாம். தனக்கும் தாய்க்குமே ஏற்பட்ட சண்டையை யாரிடம் சொல்வது? துக்கம் சொன்னால் தீரும். ஆனால், தாய் செய்த காரியம் என்ன? அவர் எதற்காக ஒரு வைர நகையை அளித்தார்? இதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நினைத்தாள்.

தாயிடம் கேட்டுவிடுவது என்று துணிவுடன் கூடத்துக்குப் போனாள். அப்போது "இனி நான் இல்லை இந்த வீட்டு எஜமானி" என்ற வார்த்தைகள் அவள் காதில் விழுந்தன. இரண்டாங் கட்டிலேயே நின்றுவிட்டாள். அவள் கண்கள் கலங்கின. இன்னும்

சற்று நேரம் நின்று, என்னதான் பேசுகிறான் என்று கேட்க ஆசை தூண்டியது ஆனால், ஒட்டுக் கேட்பது தவறு என்று எண்ணி உள்ளே வந்துவிட்டாள். வந்து அதே சிந்தனையில் உட்கார்ந்தவள் எழுந்திருக்கவே இல்லை.

எதிரில் வரதன் வந்து நின்றதுகூட அவளுக்குப் புரியவில்லை. அவள் மனப் போராட்டத்தை அறிந்த வரதன் அதைப்பற்றி ஒன்றும் கேட்காமல், "உன்கிட்டே பஞ்சாங்கம் இருக்குதா?" என்றான்.

மோகனா நிமிர்ந்து பார்த்தாள். அந்தப் பார்வையில், 'என்னை எதற்குத் தொந்தரவு செய்கிறாய்' என்ற அர்த்தம் தொனித்தது.

"இல்லே, இன்னிக்குத் துவாதசியான்னு பார்க்கணும்..."

"உனக்கு என்ன அதைப்பற்றி?"

"நேத்து ஏகாதசி நிச்சயம் ஆயிடுத்து. ராவு முழுக்கப் பட்டினி. இன்னிக்குத் துவாதசியாயிருந்தா குளிச்சு முழுகிட்டுப் பலகாரம் சாப்பிட்டா புண்ணியம் உண்டு. துவாதசி இல்லேன்னா குளிக்காமலே சாப்பிடலாம். பட்டினிதான் கிடந்தது கிடந்தோமே. புண்ணியத்தை ஏன் விடணுமின்னு பார்க்கிறேன்."

"ராத்திரி நீ சாப்பிடலே—" என்று கேட்டாள் மோகனா.

"நீ மாத்திரம் சாப்பிட்டியா? நீயும் பட்டினிதானே!"

"நான் பட்டினி கிடக்கவில்லை. ராத்திரி இரண்டு மணிக்கு அம்மா வந்து, எழுப்பிச் சாப்பிடச் சொன்னாங்க. ஏதோ ஒருவாய் சாப்பிட்டேன்."

"உனக்கு அம்மா இருக்காங்க. எழுப்பிச் சோறு போடுவாங்க. எனக்கு எந்த அம்மா எழுப்பிச் சோறு போடுது? உன்னை நம்பி நாங்க எல்லாம் பட்டினி கிடந்தோம். நீ எங்களை மோசம் பண்ணிட்டியே!"

"ஏன் வரதா, இந்த அம்மா எனக்குப் பிடிக்காதவைகளைச் செய்கிறாள்? அதே சமயத்தில் என் மேல் பிரியமாயும் இருக்கிறாள். மத்தவங்க கோபத்தைவிட அம்மா கருணை என்னைக் கொல்லுதே! நான் என்ன செய்வது?"

"உனக்கு அவங்க கிட்டே கேள்வி கேட்கத் தைரியம் இல்லே. என்கிட்டே கேட்டு என்ன புண்ணியம்? அம்மா, நீ சொல்கிறபடி என்னால் நடக்க முடியாதுன்னு சொல்லறது."

"காலம்பரகூடச் சொல்லப் போனேன். எனக்கு மனசு வரவில்லையே!"

"மனசு வராமலா அந்த மனிதனைத் தேர்ந்தெடுத்தே? உன் மனசாலே வந்த வினைதானே அது?"

"இல்லே வரதா. அவருடைய அழகும், குணமும், மரியாதையும், வித்தையும் யாரையும் மயக்கும்."

"இந்தா, வித்தையைப்பத்திச் சொல்லு நான் ஒப்புக் கொள்கிறேன். அவன் குணத்தைப்பற்றி என் கிட்டே பேசாதே. அம்புட்டும் வசகிர நடை—"



"போதும் போதும், வாயை மூடு. அவரு புத்தியைப்பற்றி நீ ஒன்னும் குற்றம் சொல்ல வேண்டாம்."

"பாருடா கோபத்தை! எல்லாம் வேண்டியவங்களா அதுக்கு ஒரு பேச்சுத்தான். நீ இவ்வளவு பிரியமாக இருக்கிறாயே, அந்த ஆளு கோபிச்சுக்கிட்டு போயிட்டானே, அது நியாயமா?"

"வாசல்லே ஒரு அன்னியன் வந்து நின்னா யாருக்கும் கோபம் வரத்தான் வரும்."

"சரி, அவருக்குக் கோபம் வந்தது நியாயம். நீ அழுதுக்கிட்டு இருக்கிறதும் நியாயம். ஆனால், நான் இன்னும் பலகாரம் சாப்பிடாமே இருக்கிறது என்ன நியாயம்? எனக்கு ஒரு ஒன்னே முக்காலணா கொடு."

"அது ஏன் ஒன்னேமுக்காலணா?"

"ஏழு இட்டிலி, ஒரு குவளைத் தண்ணீர்."

"இந்தா, இரண்டு அணாவாக வைத்துக்கொள்" என்று மோகனா இரண்டு அணாவைத் தூக்கி அவன் கையிலே கொடுத்தாள். வரதன் அதை வாங்கிக்கொண்டு போகவில்லை. தயங்கியபடி நின்றான்.

"ஏன் வரதா, பலகாரம் சாப்பிடப் போகவில்லையா?"

அவன் பதில் சொல்லவில்லை. தலையைக் குனிந்துகொண்டே நின்றான்.

"இன்னும் ஏதாவது பணம் வேணுமா?"

குனிந்தபடி வேண்டாமென்று தலையை ஆட்டினான்.

"ஏன் போகவில்லை?"

வரதன் நிமிர்ந்தான். அவன் கண்கள் கலங்கியிருந்தன.

"இந்தா, என்னை உணர்ச்சி கெட்டவன்னு நினைக்காதே. உன் மனசு கிடந்து இப்படித் தடுமாறிக்கிட்டிருக்கிறபோது, நான் போய் பலகாரம் தின்னுக்கிட்டா உட்கார்ந்திருப்பேன்? என் உடம்பு ஒன்னும் அவ்வளவு பெரிசு அல்ல. அது இருந்தாலும் போனாலும் யாரும் கவலைப்படப் போவதில்லை. வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொல்லத் தைரியம் இல்லே உனக்கு. இன்னும் பணம் வேணுமான்னு கேட்கிறே. இந்தா உன் இரண்டணா" என்று அதைக் கீழே வைத்து விட்டு, வரதன் வெளியே புறப்படப் போனான்.

"வரதா, வரதா!" என்று ஆத்திரத்துடன் கூப்பிட்டாள் மோகனா. அவள் கூப்பிடாவிட்டாலும், வரதன் போயிருக்க மாட்டான். வாசல் படியிலேயே நின்றான்.

"எதுக்குக் கூப்பிடறே?"

"நீயும் என்னை விட்டுட்டுப் போவேன்னா—"

"நான் என்ன, உன் கூடப்பிறந்தவனா? இன்னிக்குத் தாயும் மகளும் அடிச்சுப்பீங்க, நாளைக்குக் கூடிப்பீங்க. இந்த வரதன் எவ்வளவுதான் கூடப் பிறந்தவனாட்டமா இருந்தாலும், அன்னியன்

தானே! என்கிட்டே உன் மனசைத் திறந்து எதாவது சொன்னாயா?" என்று வரதன் நா தழுதழுக்கக் கூறியவுடனே மோகனாவின் மனம் குமுறியது.

அவள் கண்களில் கண்ணீர் சுரந்தது. ஒரு தாய்க்கு ஒரு பெண்ணாகத் தான் பிறந்திருந்தபோதிலும், கடவுள் அருளால், தன்னிடத்தில் சகோதர பாசம் கொண்ட ஒரு பரிசுத்த ஆத்மா இருக்கிறது. அது அவளுக்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராகக் காத்திருக்கிறது என்பதை எண்ணியபோது அவள் இதயம் நெகிழ்ந்தது.

"வரதா, எனக்கு வேறு ஒன்றும் வேண்டாம். என்னை மானத்தோடு அந்தக் கடவுள்—" என்று சொல்லும்போது, அவளால் பேச முடியவில்லை. அவள் சொல்ல எண்ணிய சொல் வாயில் வரவில்லை. அதைச் சொல்லாதே என்று காதல் அவள் நாவைத் தடைப்படுத்தியது. அவள் நா தட்டி நின்றது. வரதனும், "உனக்கு என்ன வந்துடுத்து? இப்போ எதுக்காக அப்படியெல்லாம் பேசறே?" என்றான்.

"இல்லே வரதா, அவர் என்னைக் குற்றமற்றவள் என்று தெரிந்து கொண்டால் போதும். நீ போய் அவரைக் கண்டு சமாதானம் செய்வாயா?" என்றாள்.

வரதனுக்கு உள்ளம் குளிர்ந்தது.

"ஏம்மா, என்கிட்ட இதை மூன்று நாளைக்கு முன்னாலே சொல்லியிருக்கக் கூடாதா? உனக்கு என் மேலே நம்பிக்கையிருந்தா, வண்டியை அவர் பார்த்த அன்னிக்கே சொல்லியிருக்க மாட்டியா? இத்தனை நாள் கழிச்சுத்தானா சொல்லணும்? நான் இப்பவே புறப்படறேன்" என்று அவன் புறப்படத் தயாரானான்.

"இல்லே வரதா! நீ கொண்டுபோகும் செய்தியை அவர் நம்புவார் என்பது என்ன நிச்சயம்? இதைச் சொல்ல வந்தாய் என்பதற்காக, என் அன்பை எட்டி உதைத்தது போல் உன்னையும் அவர் எட்டி உதைக்கலாம்."

"உனக்காக, ஒருத்தன் உதைச்சான்னாக்கூட என் தலையிலே வாங்கிக்கிறேன்."

"அதுதான் வேண்டும் வரதா. அவர் உன்னைக் கோபித்துக் கொண்டால் நீ அவரைக் கோபித்துக்கொள்ளக்கூடாது. அவரோடு சண்டையிடக்கூடாது. நீ அவரை அவமரியாதையாகப் பேசிவிட்டால் நான் என் நாக்கைப் பிடுங்கிக்கொண்டுவிடுவேன். அவர் என்னை வையட்டும், உதைக்கட்டும். என் முகத்தில் விழிப்பது இல்லையென்று நிச்சயம் செய்துகொள்ளட்டும். என்ன செய்தாலும் பாதகம் இல்லை. ஆனால், என்னை நிரபராதி என்று மாத்திரம் அவர் தெரிந்து கொண்டால் அது போதும்!—"



அதற்குமேல் மோகனாவால் சொல்லமுடியவில்லை. வரதனாலும் கேட்டுக்கொண்டிருக்க முடியவில்லை. இருவரும் சற்று நேரம் அப்படியே மௌனமாக இருந்தார்கள். கடைசியாக வரதன் சொன்னான் : "மோகனா, என்னுடைய மானம், அவமானம் எல்லாத்தையும் இங்கேயே விட்டுவிட்டுப் போறேன். சண்முகசுந்தரம் கால் கட்டையாலே என்னை அடிச்சாக்கூட உனக்காகப் பட்டுக்குறேன். அதை உன் கிட்டேகூடச் சொல்லமாட்டேன். எப்படியாவது நீ கண் கலங்காமல் இருந்தா அதே எனக்குப் போதும்" என்று சொல்லிவிட்டு, உள்ளே போய்ச் சட்டையைப் போட்டுக் கொண்டான்.

அவன் வெளியே வரும் சமயம், "அம்மா வந்துடட்டும், சொல்லிவிட்டுப் போ" என்றாள் மோகனா.

"நான் சொன்னா அவுங்க போக விடுவாங்களா?" என்றான் வரதன்.

"அது என்னமோ எனக்குத் தெரியாது. நீ சொல்லாமே போனா நாளைக்கு வீட்டுக்குள்ளே உன்னை நுழைய விடமாட்டாங்க."

"அப்படின்னா, நான் அம்மா கிட்ட என்ன சொல்வேனோ, எப்படி உத்தரவு வாங்குவேனோ. நீ குறுக்கே வந்து பேசக்கூடாது. அதோடு நான் வரும் வரைக்கும் நீ அம்மாவையும் எதிர்த்துப் பேசக்கூடாது" என்று இரண்டு வாக்குறுதிகளையும் வாங்கிக் கொண்டான் வரதன். வடிவாம்பாள் எப்போது வருவாள் என்று காத்துக்கொண்டிருந்தான்.

கோவிலுக்குப் புறப்பட்டுச் சென்ற வடிவாம்பாள் கோவிலுக்குப் போகவில்லை. வழியில் இருந்த ஜோசியர் வீட்டுக்குத்தான் போனாள். வழக்கம் போல் ஜோசியர் 'நல்ல காலம் சீக்கிரம் வருகிறது' என்று சொன்னவுடனே அவளுக்குக் கோபம் பாதி தணிந்தது. உடனே அலமாரியில் இருக்கும் அட்டிகையின் ஞாபகம் வந்தது. 'விலை பெற்ற நகையை வீட்டில் வைத்துவிட்டு வந்துவிட்டோமே. இந்தப் பெண்ணுக்கு ஒன்றையும் கவனிக்கத் தெரியாதே' என்ற எண்ணம் வரவும், வேகமாக வீடு நோக்கி வந்தாள் வடிவாம்பாள்.

வீட்டுக்குள் நுழைந்த வடிவாம்பாள் வரதன் சட்டை துப்பட்டாவுடன் எங்கோ புறப்படத் தயாராக இருப்பதைக் கவனித்தாள்.

"எங்கே புறப்பட்டே?" என்று அதிகாரத்தோடு கேட்டாள்.

"புறப்பட்டேனா, இல்லையே! நீங்க வீட்டிலே இல்லியே, சீக்கிரம் வந்திடணுமே, உங்ககிட்டே சொல்லாமே போனா நல்லாயிருக்காதேன்னுதான் காத்துக்கிட்டு இருக்கேன்" என்றான் வரதன்.

"நீயாவது இவ்வளவு மரியாதை வைச்சிருக்கியே!" என்று ஒரு பெருமூச்சு விட்டாள் வடிவாம்பாள்.

"நீங்க எதை வேணுமானாலும் சொல்லுங்க. இந்த வரதன் நீங்க கிழிக்கிற கோட்டைத் தாண்ட மாட்டான். இப்போ ஊருக்குப் போக வேண்டாமென்கிறீங்களா? நான் போகவில்லை."

"இல்லை தம்பி, கச்சேரியும் கிச்சேரியுமா இருக்குது. இப்ப ஊருக்குப் புறப்பட்டிருக்கியேன்னு பார்க்கிறேன். எங்கே போகணும்?"

"அப்படி இங்கே வேலையிருந்தா இப்ப ஊருக்கு நான் போகவில்லை அம்மா" என்று பரிவுடன் சொன்னான் வரதன்.

இப்படி ஒருவன் தன் வார்த்தைக்கு மதிப்பு வைக்கிறான் என்பதைப் பார்த்தவுடனே வடிவாம்பாளுக்கு உள்ளம் குளிர்ந்து விட்டது.

"நீ என்றைக்கும் ஊருக்குப் போகவேண்டுமென்று சொல்லாதவன், இப்பொழுது சொல்கிறாய். உன்னால் இரண்டு கச்சேரி இல்லாமல் போனால்தான் என்ன? இந்த வீட்டில் நீ வரும் வரையில் இன்னொருத்தன் மிருதங்கத்தைத் தொடமாட்டான். எங்கே போகணும் அப்பா?"

"ஒரு கல்யாண விஷயம் அம்மா."

"அப்படிச் சொல்லு. காலாகாலத்திலே கல்யாணத்தைக் கட்டிக் கிட்டாத்தான் நல்லது. அப்போதான் குடும்பத்திலே ஒரு பொறுப்பு வரும். உனக்கு இருக்கிற இந்த ஞானங்கூட அந்தப் பெண்ணுக்கு இல்லையே ! எப்போ கல்யாணம்?"

"எனக்கு இல்லீங்க, என் தங்கச்சிக்கு."

"தங்கச்சியா?.... உனக்குக் கூடப்பிறந்தவங்க ஒருத்தரும் இல்லேன்னு சொன்னியே !"

"கூடப் பிறந்தால்தானா, நான் போய்த்தான் மாப்பிள்ளையைப் பார்த்துப் பேசிக் கல்யாணத்தை முடிக்க வேண்டியிருக்குது."

"எத்தனை நாள் ஆகும்?"

"நாளைக்கே வந்தாலும் வருவேன். நாலு நாள் ஆனாலும் ஆகும். ஆனா, எனக்கு எங்கே போனாலும் உங்க ஞாபகந்தான் இருக்கும்."

"ஏண்டா, ஊருக்குப் போறவன், பழைய சட்டையைப் போட்டுக்கிட்டு, கந்தல் துணி மாதிரி ஒரு துண்டைப் போட்டுகிட்டுப் போறியே ! இந்தா......" என்று, போன வருஷம் தீபாவளிக்கு நட்டுவனாருக்காக வாங்கி, அவருக்குக் கொடுக்காமல் வைத்திருந்த ஒரு துப்பட்டாவையும், ஒரு சரிகை வேஷ்டியையும் எடுத்து அவனிடம் கொடுத்தாள் வடிவாம்பாள்.

"இதெல்லாம் எதுக்கு அம்மா? இங்கேயே இருந்துச்சுன்னா, மாப்பிள்ளைக்காவது கொடுப்பேன்" என்றான்.

"அதுவும் நிசந்தான்."

"ஆமாம்மா, இது இங்கேயே இருக்கட்டும். உங்க கையாலே கொடுத்து அவர் கட்டிக்கிறதைப் பார்க்கணும்" என்றான் வரதன்.



இதுவரை வீட்டில் ஒட்டடை அடிப்பது முதல் ஓடியாடி வேலை செய்வது வரையிலும், மத்தளம் வாசிப்பது முதல் மண்ணெண்ணெய் வாங்குவது வரையிலும் எல்லா வேலைகளையும் வரதனேதான் கவனித்துக்கொண்டு வந்தான். இன்றைக்கு அவன் ஊருக்குப் போகிறான் என்பதிலே வடிவாம்பாளுக்குத் திருப்தியில்லை. இருந்தாலும் அவன் கையில் மூன்று ரூபாயைக் கொடுத்து, "இந்தா வரதா, செலவுக்கு வச்சுக்கோ" என்றாள்.

"எதுக்கம்மா, மூன்று ரூபாய்? இரண்டு ரூபாயே போதுமே !"

"அதனால் பாதகம் இல்லே. சீக்கிரம் வந்துவிடு. ஏண்டாப்பா, ராத்திரி நீ சாப்பிடவேயில்லையே !"

"உங்க அன்பு ஒண்ணே போதும் அம்மா. ஒரு வேளை சாப்பிடாமல் இருந்தா என்ன?" என்று சொல்லிக்கொண்டே மிருதங்கத்தையும் கையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டான் வரதன்.

"எதுக்கடா மிருதங்கம்?" என்று வடிவாம்பாள் பயத்தோடும் ஆச்சரியத்துடனும் கேட்டாள்.

"இல்லேம்மா, இதை நம்ப தூக்கிக்கிட்டுப் போனோம்னா ரயில்லே, உட்கார்ந்து இருக்கிறவங்க, இடம் கொடுப்பாங்க. கிளப்பிலே நல்ல பலகாரம் கொடுப்பாங்க" என்று சொல்லிக் கொண்டே வரதன் புறப்பட்டான்.

இப்பொழுது சிக்கலில் வயல் வெளியில் தருமனைக் கண்டதும், அவன் தன்னை எவ்வளவு கேவலமாகப் பேசினாலும், வரதன் பொருட்படுத்தாமல் இருந்ததன் காரணம், தான் சண்டை போடவில்லை என்று மோகனாவிடம் சொன்னதால்தான். வரதனிடம் முழு ரூபாய் நிறைய இருப்பதைக் கண்ட தருமனும், நமக்கு ஏன் இவனுடன் பகை என்று எண்ணி உறவாட ஆரம்பித்துவிட்டான்.

அவன் உறவில் பிரயோசனம் இல்லை ஏன் என்று கேட்டால் சண்முகசுந்தரம் எங்கே போனான் என்று அவனுக்கும் தெரியவில்லை. ஆயினும், வரதன் வந்து, விஷயங்களைச் சொன்னவுடனேயே தருமனுக்கு இப்போதே சண்முகத்தைக் காணவேண்டுமென்ற ஆவல் உண்டாயிற்று. சண்முகசுந்தரம் காரைக்காலுக்குப் போயிருக்கிறானா அல்லது மறுபடியும் சர்க்கஸ் கம்பெனிக்கே போயிருப்பானா என்ற சந்தேகம் வந்தது தருமனுக்கு. சர்க்கஸ் கம்பெனிக்குப் போனால், ஒரு சமயம் சண்முகம் அங்கு இருந்தாலும் இருக்கலாம் என்று தருமன் கூறவே, ஓசியில் சர்க்கஸ் பார்க்கும் ஆசையில்தான் தருமன் தன்னைக் கூப்பிடுகிறானோ என்ற எண்ணம் வரதனுக்கு வந்தது. தருமனும் அப்படிக் கூப்பிடக்கூடியவன்தான். ஆனால் இன்று நிஜமாகவே சண்முகத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையாலேதான் அவன் வரதனைக் கூப்பிட்டான்.

# ஓடும் மனத்துக்கு ஓய்வு உண்டோ?



**வா**ழ்க்கை ஒரு வயல். அதில் எதிர்பார்ப்பு என்னும் விதையை விதைத்து மனிதர்கள் உழைக்கிறார்கள். பலனை அறுவடை செய்கிறார்கள். கண்டு முதலில் பலனும் உண்டு, பதரும் உண்டு. பதர் போன்றதுதான் ஏமாற்றம். எதிர்பார்க்காவிட்டால் ஏமாற்றம் உண்டாகாது. ஆதலால் எதையும் எதிர்பார்க்காதே என்பார்கள் பலர். ஆனால் எதிர்பார்ப்பு, ஏமாற்றம் ஆகிய இந்த இரண்டும் இல்லையேல் உலகமே இல்லை. வாழ்க்கை சக்கையாகிவிடும்.

சண்முகசுந்தரத்துக்குத் திருவாரூரில் ஏற்பட்ட ஏமாற்றம் ஒருவராலும் பொறுக்கக்கூடியதல்ல.

மாமரம் பூக்கிறது. தோட்டக்காரன் நிறைய காய்க்கும் என எண்ணுகிறான். புயலில் அடிபட்டுப் பூவெல்லாம் உதிர்ந்து விடுகின்றன. அப்போது அவன் மனம் என்ன பாடுபடும்? அதுதான் இப்போது சண்முகத்தின் மன நிலையும். ஆனால், தோட்டக்காரன் கண்களுக்கு அவ்வளவு பூவும் உதிர்ந்துவிட்டது போல் தோன்றினாலும் உண்மையாக உதிர்ந்துவிடுவதில்லை. கடுகுக்கும் சிறிதான ஒரு பிஞ்சை வைத்துவிட்டுத்தான் போகிறது. இந்தப் பிஞ்சுதான் காதல் நினைவு. இது காயாகிப் பழமாகி, கிளி கொத்தாமல், அணில் கடிக்காமல் பலன் கொடுக்கும் காலம் வர வேண்டும். அதற்குள் காற்று அடித்தாலும் போச்சு; கும்பால் தட்டினாலும் போச்சு !

அன்று சண்முகசுந்தரம் தன் காதலை உதறிவிட்டாலும் மாமரத்தில் ஒட்டிய பிஞ்சுபோல், அது அவனிடமிருந்து முழுவதும் நீங்கிவிடவில்லை. தான் எந்த வீட்டில் ஆவலுடன் நுழைய வந்தானோ, அதே வீட்டு வாசலில் மைனர் நின்றது அவனைத் திடுக்கிட வைத்தது. எது பொய்யாக வேண்டும் என அவன் நினைத்தானோ அது அவன் கண்முன் நிஜமாகிவிட்டது. அவன் கலையுள்ளம் தாங்கவில்லை. வண்டியில் முத்துராக்குவுடன் அமர்ந்திருந்த அவன் பேசவே இல்லை.

வண்டி திருவாரூரிலிருந்து சிக்கலை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. வண்டி மாடுகளின் சலங்கைச் சத்தமும், குளம்புச் சத்தமுந்தாம் கேட்டனவே தவிர, வண்டிக்காரன்கூட இரைந்து ஓட்டாமல் இருந்தான்.



மைனரைப் பார்த்தது முதல் சண்முகசுந்தரத்தின் உள்ளம் அடைந்த வேதனையில், அவனுக்கு மார்பு வலிக்க ஆரம்பித்துவிட்டது. வலியால் புழுப்போல் துடித்தான். காற்றைக் கொடுத்துக் கொடுத்து நெடுநேரம் நாதஸ்வரம் வாசிக்கும் அவனுக்கு அப்பொழுதெல்லாம் ஏற்படாத வலி இப்பொழுது ஏற்பட்டது. உள்ளம் உடலையும் ஆட்டி வைத்தது. தன் மார்பை இடக்கையால் அமுக்கிக்கொண்டான். நீண்ட பெருமூச்சு விட ஆரம்பித்தான்.

"என்ன தம்பி, உடம்பு என்ன செய்யுது?" என்றான் முத்துராக்கு.

"உடம்பு ஊருக்குப் போறேன்னு சொல்லுது."

"ஏன் தம்பி, வண்டியை வேணும்னா நிறுத்திட்டு ஒரு சோடா கீடா வாங்கிச் சாப்பிடுறியா?"

"வேண்டவே வேண்டாம். அப்படிச் சோடாவைச் சாப்பிட்டாவது உடம்பைக் காப்பாத்திக்கணுமா? முத்துராக்கு, இன்னிக்குச் சொல்றேன். நான் இதுவரையில் எவளையும் திரும்பிப் பார்த்தது இல்லே, இப்படி ஆசைப்பட்டதும் இல்லே, இப்படி மோசம் போனதும் இல்லே. என் ஜென்மத்துக்கும் இது ஒண்ணே போதும்" என்று சண்முகசுந்தரம் உண்மையையே கூறிவிட்டான்.

"அட, போ தம்பி ! உன் காலடியிலே தேவலோக ரம்பையே வந்து விழுவா — என்னமோ இதுக்காக இவ்வளவு வருத்தப்படறே !"

"அந்த ரம்பை யாருக்கு இப்ப வேணும்? ரம்பம் போல நெஞ்சை அறுக்க இவ ஒருத்தி போதாதா? சே, அந்தப் பேச்சை இன்னுமா பேசணும்? உம், 'ஒரு சண்முகசுந்தரம் இருந்தான், வாசித்தான், அவனுக்கு வினையா ஒரு பொம்பளை வந்து சேர்ந்தா. அப்புறம் அவனைக் காணோம்' என்று உலகம் சொல்லட்டும்."

அப்பொழுது வண்டி ஒரு நாலு ரோடு சந்திப்பில் வந்தது. "நிறுத்து வண்டியை !" என்றான் சண்முகம்.

"ஏன் தம்பி, ஊருக்குத்தானே போகிறோம்?" என்றான் முத்துராக்கு.

"ஊருக்கா? எந்த ஊருக்கு? எனக்கு இனிமே ஊருன்னு ஒண்ணு இருக்குதா? எனக்கு ஊர் இனி பொன்னம்பலந்தான்" என்று இரு கண்களும் சிவக்க, பெருமூச்சு விட்டுக்கொண்டே, பித்தனைப் போல் பேசினான் சண்முகம். இதைப் பார்த்து முத்துராக்குவுக்குப் பயமே வந்துவிட்டது. அவன் முகத்தைக் கூர்ந்து கவனித்தான்.

கண்ணுக்குத் தெரியாத ஒன்று, மனம் என்னும் பெயருடையது. அது உடலை ஆட்டி வைக்கிறது. அதே போலக் கண்ணுக்குத் தெரியாத மற்றொன்று உயிர் என்ற பெயருடையது. அது உடலை ஆடச் செய்கிறது. இவ்வாறு கண்ணுக்குத் தெரியாத சக்திகளாலேயே இயக்கப்படும் மனிதனோ தன் கண்ணால் காண்பவையெல்லாம் உண்மை என்றே நம்பி ஏமாந்துவிடுகிறான். இது உலக ஆச்சரியங்களுள் ஒன்று.

சண்முகசுந்தரத்தின் சிறிய பெருமூச்சும், சிந்தைக் குழப்பமும் இனி அந்த வண்டி எந்தத் திசையில் ஓடும் என்பதை நிச்சயம் செய்ய முடியாதவண்ணம் இருந்தது. "விடு, நாகபட்டினத்துக்கு !" என்றான்.

அவனுக்கு இருந்த குழப்பத்தில் காரைக்காலுக்குப் போகப் பிடிக்கவில்லை. இத்தகைய மன நிலையில் அங்கு போவது ஆபத்து எனத் தோன்றியது. மறுபடியும் நடேசனின் முகத்தில் விழிக்கவும் பிடிக்கவில்லை. சிக்கலுக்குப் போய், இரண்டு நாளைக்கு முன் கோபித்துக்கொண்ட தருமனைப் பார்த்து, 'தருமன்னே, நீ சொன்னது எல்லாம் நிசம். நான்தான் மோசத்தால் மோசம் போய்விட்டேன்' என்று சொல்லவும் மனம் வரவில்லை. உண்மை நண்பர்கள் எல்லோரும் அந்த நேரத்தில் விரோதிகள் போல தோற்றம் அளித்தார்கள். ஒருவர் முகத்திலும் விழிக்காமல் எங்கேயாவது ஓடிப்போய்விட வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது.

எங்கே ஓடுவது? ஆண்டியா, பரதேசியா, அல்லது சாதாரண மனிதனா? அவன் இறங்கி நடந்தால், இருபது பேர்கள் கூட வரக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். கூட்டத்தில் புகுந்தால், கூட்டம் முழுவதும் அவனை வணங்குகிறது. தனிமை என்பது அந்தக் கலைஞன் ஜாதகத்தில் கிடையவே கிடையாது. சண்முகசுந்தரம் தனியாக இருப்பது எப்போது?— சந்திரன் வானத்தில் பரிபூரண கலையுடன் விளங்கும்பொழுது மட்டுந்தான் நட்சத்திரங்கள் மறைந்து தனியாகின்றான். அதே போல், சண்முகம் நாதஸ்வரம் வாசிக்கும் போதுதான், அவனால் தனித்து விளங்க முடியும். நட்சத்திரக் குவியல் போன்ற சிந்தனைச் சிதறல்களும் மறையும். ஆனால், சாதாரண நேரத்தில் உலகத்தில் தனி மனிதனாக அவன் இனி இருக்கவே முடியாது.

அதனால் இப்பொழுது அவனுக்குப் புகலிடம் ஒன்றே ஒன்றுதான். அங்கு சங்கீதம் கிடையாது. அவனை அதிகம் தெரிந்தவர்கள் கிடையாது. ரமாமணி ஒருத்திதான் இருக்கிறாள். அவளோ அவனிடம் மதிப்பு வைத்து, தள்ளி நின்று மரியாதையாகப் பழகுபவள். ஆதலால், "விடு, நாகபட்டினத்துக்கு !" என்றான் சண்முகசுந்தரம்.

✤ ✤ ✤

தருமனும் வரதனும் சண்முகத்தைத் தேடிக்கொண்டு கூடார வாசலுக்கு வந்த சமயம், பகல் இரண்டு மணி இருக்கும். அங்கு விசாரிக்க ஆரம்பித்தார்கள். ஆனால், கூடாரத்தின் வாசலில் நின்ற காவல்காரனுக்குத் தமிழ் தெரியாது. இவர்கள் இருவருக்குமோ இந்தி தெரியாது.

"சிக்கலார் வந்திருக்கிறாரா?" என்றான் வரதன். அதற்கு வாசலில் நின்றவனோ "கியா?" என்றான்.



"என்னடா இய்யா முய்யான்னு பூனை சந்துத மாதிரி ஏன் வரதன்னேனே, கொஞ்சம் விலகுங்க. நான் கேக்கறேன் !" என்று வரதனை ஒருபுறம் தள்ளிவிட்டுத் தருமன் உரிமையுடன் கேட்க ஆரம்பித்தான்.

"எங்க சிக்கல் தம்பி வந்திருக்குதா?"

இதற்கும் "கியா" என்ற பதில்தான் கிடைத்தது.

அந்தத் தர்வானிடம் கேட்டுப் பயனில்லை என்ற முடிவுக்கு இருவரும் வந்தார்கள். ஆனால், வரதனுக்கு ஒரு தந்திரம் தோன்றியது. "இந்த பாஷைதானே புரியாது? இவனுக்குப் புரிகிற பாஷையிலேயே பேசுகிறேன். பாருங்க !" என்று கூறி, சட்டைப்பையில் கையை விட்டான்.

அந்தக் காலத்துப் பணங்களில் சத்தம் கேட்குமாதலால் அவன் பை கலகலவென்றது. உடனே காவல்காரன் அவனைப் பார்த்து மரியாதையுடன், "கியா ஜீ !" என்றான்.

தருமனுக்குக் கோபம் வந்துவிட்டது. 'என்ன மிருதங்கக்காரரே, அந்த மனுசன் சீங்கறான் ! கேட்டுக்கிட்டு நிக்கிறீங்க !' என்றான் தருமன்.

"இல்லீங்க, ஜீன்னா மருவாதை !" என்றான் வரதன்.

"சரிதான், மருவாதையிலேயே சீன்னு சொன்னா, கோபம் வந்தா இன்னும் என்ன சொல்லுவானோ?" என்றான் தருமன்.

வரதன் இதைப் பொருட்படுத்தவில்லை. ஒரு அணாவைத் தூக்கி தர்வான் கையில் வைத்தான். அவனோ இன்னும் தருவான் என்ற எண்ணத்தில் கையை நீட்டியபடி நின்றான். வரதன் நாதஸ்வரம் வாசிப்பது போல் கைகளால் ஜாடை செய்து 'உள்ளே இருக்கிறாரா?' என்று ஜாடையாய்க் கேட்டான்.

காவல்காரன் புரிந்துகொண்டுவிட்டான். "ஓ அந்தர் சோத்தா ஹை ! ஜாவ்ஜீ !" என்று கூடாரத்தின் உட்புறம் கையைக் காட்டி ஒரு கும்பிடு போட்டான். ஆனால், உண்மையில் அவன் புரிந்துகொண்டது, இருவரும் கிளாரினெட்டுக்காரரைத் தேடி வந்திருக்கிறார்கள் என்பதுதான்.

இருவரும் உள்ளே நுழைந்தார்கள். அங்கு ஒருவரும் இல்லை. கூடாரம் வெறிச்சென்றிருந்தது. இரவில் பீப்பாயை உருட்டும் நாய் மாத்திரம் அங்கு கட்டப்பட்டுக் கிடந்தது. அதுகூட இவர்களைப் பார்த்துவிட்டுக் குரைக்கவில்லை. "தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். நான் தூங்கப் போகிறேன்' என்பது போல் இவர்களைக் கெஞ்சலுடன் ஒரு பார்வை பார்த்துவிட்டுக் கண்களை மூடிக்கொண்டது.

ஒருவன் நாலு நாற்காலிகளை ஒருமுகமாய் வைத்து அதில் ஒருக்களித்தபடி தூங்கிக்கொண்டிருந்தான். இன்னொருவன் தரையில் பரப்பியிருந்த மணலில் படுத்து ஹாய்யாகத் தூங்கினான். இவைகளைப் பார்த்த தருமனுக்கும் கண்ணைச் சுற்றியது.

"மிருதங்கக்காரரே, காத்து நல்லா வருதுங்க. குடவரை வாசலிலே வந்தாப்பிலே வருது" என்று துண்டைக் கீழே விரித்தான் தருமன்.

"என்ன அண்ணே, படுக்க ஆரம்பிச்சுட்டீங்க?"

"சும்மா கொஞ்ச நேரம்! வெயிலிலே நடந்து வந்தது கண்ணைச் சுழட்டுது—"

"அவரைத் தேட வேண்டாம்?"

"எப்படியும் ராத்திரி கொட்டகைக்கு வந்துதானே ஆகணும்? வரதண்ணே, நீயும் இப்படியே படுத்துக்க. இப்ப ஓரணாவோடே முடிஞ்சுது. இல்லாட்டி வெளியே போனம்னா ராத்திரி டிக்கட்டு வாங்கினாத்தான் உள்ளே விடுவான்."

"தருமண்ணே, எந்திரிங்க."

"நான் சொல்றதைக்... கேளு..." என்று கூறியபடியே தருமன் குறட்டை விட ஆரம்பித்தான்.

வரதன், "சரி, நீ தூங்கு. நான் பாத்துக்கிட்டு வரேன்" என்று சொல்லிவிட்டுக் கூடாரத்தைச் சுற்றி வந்தான். அங்கு நின்ற தமிழர் ஒருவரிடம் விசாரித்ததில் சர்க்கஸ்காரர்கள் பகலில் அங்கு தங்குவதில்லை என்றும், கம்பெனி வீட்டில் போய்ப் பார்க்கும்படியும் தகவல் கிடைத்தது.

வரதன், அவர்கள் இறங்கி இருக்கும் இடத்தை விசாரித்துக் கொண்டு, ஊர் ஒதுப்புறத்தில் இருந்த கம்பெனி வீட்டுக்கு இரவு ஏழு மணிக்கு வந்து சேர்ந்தான்.

முப்பத்து ஒன்பதாம் அத்தியாயம்

# கம்பெனி வீட்டில் கண்ட காட்சி



உலகில் உள்ள ஆச்சரியங்களுள் கம்பெனி வீடு என்பதும் ஒன்று. நாடக மேடையையும் சர்க்கஸ் வளையத்தையும் காட்சியில் கண்டவர்கள் அங்கு இருக்கும் நடை, உடை, அலங்காரம் இவைகளைப் பார்த்து இதுதான் சொர்க்கலோகம் என்று சொல்லிவிடுவார்கள். ஆனால், அவர்கள் கண்ணால் ஒரு முறை இந்தக் கம்பெனி வீட்டைக் கண்டால் போதும், இதுதான் நரகம் என்றும் கூறிவிடுவார்கள். பகலுக்கும் இரவுக்கும் உள்ள வித்தியாசம் மேடைக்கும் வீட்டுக்கும் உண்டு.

அங்கும் கட்டுக்காவல் பலமாக இருந்தது. வாசலில் நின்ற காவல்காரன் வரதனை உள்ளே விட மறுத்துவிட்டான்.



வரதன் என்ன செய்வது என்று அறியாமல் அந்தக் கட்டடத்தைச் சுற்றி வரலானான்.

அது ஒரு பழைய நாள் கட்டடம். ஜமாபந்தி, கம்பெனி விடு ஸ்வாமிகள் வருகை இம்மாதிரிக் காலங்களில்தான் அந்த வீடு கூட்டி விளக்கு ஏற்றப்படும். ஆனால், இப்போது அங்கு எங்கு பார்த்தாலும் பவர் லைட்டுகள் தொங்கின. சர்க்கஸ் கம்பெனியில் இரவில் மின்னும் நட்சத்திரங்கள் எல்லாம் அங்கு இப்போது சாதாரண உடையில் நடமாடிக்கொண்டிருந்தார்கள்.

ஒருவன் விளக்கடியில் உட்கார்ந்து க்ஷவரம் செய்துகொண்டிருந்தான். மற்றொருவர் தம் பபூன் உடுப்பை இஸ்திரி போட்டுக்கொண்டிருந்தார். பயில்வான் ஒருவர் தம் உடம்பு முழுவதும் எண்ணெயைத் தடவிக்கொண்டு, இரண்டு பேரை மசாஜ் செய்ய விட்டுவிட்டுக் கீழே கிடந்த பாதாம் கொட்டைகளைத் தம் கையால் குத்தி உடைத்துத் தின்றுகொண்டிருந்தார்.

இவைகளுக்கிடையே தோட்டத்தில் ஒரு பழங்காலக் கானாத் திண்ணையின் மேல் சண்முகம் உட்கார்ந்திருந்தான். அவன் எதிரில் ரமாமணி வடநாட்டு உடையில் உட்கார்ந்திருந்தாள். சண்முகத்தின் உள்ளத் துயரம் முழுவதையும் அறிந்தவளாய் அனுதாப உணர்ச்சியுடன் அவள் அமர்ந்திருந்தாலும், அவளால் சண்முகம் சொல்லிய விஷயத்தை நம்ப முடியவில்லை.

"நீங்க என்ன சொன்னாலும் இதை என்னாலே நம்ப முடியல்லீங்க! அந்தப் பொண்ணு அப்படிப்பட்ட பொண்ணு இல்லே!"

"என் கண்ணாலே பார்த்தேன். அப்படியானா என் கண் பார்வை சரியில்லை என்கிறாயா?"

"இந்தக் காரியங்களிலே கண்தான் சத்துரு. அதை நம்பக்கூடாது."

"இப்ப சொன்னதுதான் உண்மையான வார்த்தை. என் கண்ணாலே முதல்லே அவளைப் பார்த்ததாலே வந்த வினைதானே இது?"

"இல்லே நாயனக்காரரே, எனக்கு வருகிற ஆத்திரத்திலே நானே போய் அந்தப் பெண்ணைப் பார்த்து விஷயத்தை எல்லாம் விவரமா தெரிஞ்சிக்கிட்டு வந்துடலாமான்னு தோணுது. ஆனால் நான் உயிருக்குப் பயந்து மறைஞ்சு திரியறேன். யாரு கண்ணுலேயாவது அகப்பட்டுட்டேன்னா ஆபத்தா போயிடும்."

"ஏன், உனக்கு என்ன ஆபத்து?"

"நான் ஒரு பாம்போடு பழகிவிட்டேன். ஒரு நாள் ஆத்திரத்திலே அதன் இரையைத் தட்டி விட்டுவிட்டேன். இன்னொரு நாள் அதன் வளையில் நெருப்பை வைத்துவிட்டேன். அது இப்ப என்னைக் கண்ட இடத்திலே கடிக்கத் தேடிக்கிட்டு இருக்கு. நானும் நாகபட்டினத்திலே வந்து சுப்பலுக்குக் காத்துக்கிட்டிருக்கேன்."

"கப்பலுக்கா?"

"ஆமா! இங்கேயிருந்து மலேயா நாட்டுக்குப் போவதாகத் திட்டம் போட்டிருக்கேன். கப்பல் செலவுக்காகத்தான் இந்த ஊரிலே ஆட்டம் ஆரம்பிச்சோம். ஏதோ பணம் வசூலாகி இருக்கு. அடுத்த கப்பலிலே புறப்படலாம்னு இருக்கேன்."

இதைக் கேட்ட சண்முகம் திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தான். "எனக்கும் இங்கே மனசு ஒரு மாதிரியா இருக்கு. நானும் மலாய் நாட்டுக்கு வந்துவிடுகிறேன். அப்பத்தான் அந்த எண்ணம் மறக்கும்" என்றான்.

ரமாமணி 'சரி' என்று சொல்லத் தயங்கினாள். சண்முகம் "ஏன் மலைக்கிறாய்?" என்று கேட்டான்.

ரமாமணி சிரித்தாள்.

"சிரித்தால்—?"

"இல்லை, ஊர் என்ன நினைக்கும்?"

"என்ன நினைக்கிறது? நம்ம மனசிலே களங்கமிருந்தாத்தானே?"

"உங்கள் மனதிலே இல்லாவிட்டால் ஊரார் மனதிலே இருக்காதா? நீங்கள் மைனரைப் பார்த்துட்டு நினைச்சாப்பிலேதானே இதையும் பார்த்துட்டு ஊர் நினைக்கும்?" என்றாள் ரமாமணி.

ஆனால், ஊர் அதுவரையில் காத்திருக்கவில்லை. இவர்கள் இருவரும் தனியாகத் தோட்டத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பதை இடிந்த சுவர் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்த வரதன், இப்பொழுதே நினைத்துவிட்டான். 'அட பாவி! இதுவா காரணம்?' என்று எண்ணினான்.

இதற்குள் கூட்டத்தின் உள்ளிருந்து மணி அடிக்கப்பட்டது. வித்தைக்காரர்கள் ஆட்டத்திற்குப் புறப்பட்டுவிட்டார்கள். ரமாமணியும் எழுந்தாள். சண்முகம் தொடர்ந்தான்.

வரதன் கண்ட காட்சி அவனைக் கோபம் கொள்ளச் செய்தது. 'சீ! இவள் எங்கள் மோகனாவின் கால் தூசி விலை பெறுவாளா? உனக்கு ஏன் புத்தி இப்படிப் போயிற்று?' என்று சண்முகத்தைக் கேட்க வேண்டும் என்று எண்ணினான்.

உடனே பொறுமையாக இருக்க வேண்டும் என்று மோகனா சொல்லி அனுப்பியது நினைவுக்கு வந்தது. 'இருக்கட்டுமே! அவள் இவனை நல்லவன் என்று எண்ணித்தானே அவ்வாறு சொல்லி அனுப்பினாள்? இப்படி மோசம் செய்வான் என்று அவள் எண்ணி இருப்பாளா?' என்று தோன்றியது. 'சரி, கண்ணாலேயே பார்த்தாகி விட்டது. இனி நமக்கு இங்கு என்ன வேலை, ஊருக்குப் போகலாம்' என்று முடிவு கட்டினான்.

ஆனால், தருமன் கூடாரத்தில் தனக்காகக் காத்திருப்பானே என்ற எண்ணம் வந்தது. 'காத்திருந்தால் இருக்கட்டுமே, இனி அவன் தயவு நமக்கு எதற்கு?' என்று நினைத்தான். 'இருந்தாலும் நாம் சண்முகத்திடம் பேசாமல் ஊருக்குப் போய்விட்டால் மோகனா என்ன நினைக்கும்?'



இதை நினைக்கவே வரதனால் முடியவில்லை. அவனுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. தான் இங்கு கண்ட காட்சியை அவளிடம் தெரிவித்து, அவள் படும் பாட்டைத் தன் கண்ணால் எப்படிப் பார்ப்பது என்று வருந்தினான். அவன் கண்கள் கலங்கின. 'ஊருக்குப் போகவும் வேண்டாம், மோகனாவிடம் இந்தத் துயரத்தைச் சொல்லவும் வேண்டாம்' என்ற எண்ணம் அவனை மீறிக்கொண்டு வந்துவிட்டது. இவ்வருஷம் பண்டரிபுரம் யாத்திரை நிச்சயம் என்று தோன்றிவிட்டது. ஆனால், அவன் கோபம் இப்போது பாண்டுரங்கன் மீதே திரும்பலாயிற்று. 'மோகனா எப்படிப்பட்ட பெண்! அவளை நீ ஏன் இப்படிச் சோதிக்கிறாய்?' என்று கடவுளை வேண்டினான். 'நீ ஏன் அவள் சொல்லியபடி செய்யாமல் என் கோயிலுக்கு வர நினைக்கிறாய்?' என்று பாண்டுரங்கனே கேட்பது போல் அவனுக்குத் தோன்றியது.

'எதற்கும் சண்முகத்தை நேரில் கண்டுவிடுவது. அவனிடம் மோகனா சொல்லிய விஷயங்களைச் சொல்லி, மோகனா குற்றமற்றவள் என்பதை நிரூபித்துவிடுவது. அப்புறம் அவன் எப்படிப் போனாலும் சரி' என்ற எண்ணத்தில் சர்க்கசுக்குப் புறப்பட்டு விட்டான்.

வரதன் கொட்டகை வாசலுக்கு வரும்போதே, தருமன் வாசலில் அவனுக்காகக் காத்திருந்தான்.

"என்ன மத்தளக்காரரே, எங்கே போயிட்டீங்க?" என்றான் தருமன்.

வரதனுக்கு வந்த கோபத்தில், "நாடகம் பார்த்தேன்!" என்றான்.

"அட நாடகமா? நானும் வந்திருப்பேனே!"

"நீங்கதான் தூங்கினீங்களே! கனவுலே கண்டிருக்கலாமே."

"அட, கனவாவது தம்பி! அடிச்சு எழுப்பி 'ஏறடா கூடாரத்து மேலே— பாருக் கம்பியைக் கட்டுடா—' என்று ஆரம்பிச்சுட்டாலுவ. வேலைக்காரன்னு நினைச்சிட்டாலுவ போலிருக்குது. எனக்கு வந்த கோவத்திலே அறைஞ்சிடுவமான்னு தோணிச்சு. சரி, வாண்டாம். இது நம்ம ஊரில்லேன்னு விட்டுட்டேன். என்ன நாடகம் பாத்தீங்க?" என்று ஆவலுடன் கேட்டான் தருமன்.

"அதுவா? நந்தவன சீன். நல்ல நிலவு அடிக்குது. நந்தவனத்துக்குப் பக்கத்திலே ஒரு கிணறு. அதுக்குப் பக்கத்திலே ஒரு திண்ணை போட்டிருக்குது. அது மேலே கதாநாயகன் உட்கார்ந்திருக்கிறான். எதுத்தாப்பிலே கதாநாயகி நின்னுக்கிட்டுப் பல்லை இளிச்சுகிட்டு புன்முறுவல் செய்யறா."

"அடிச்சிங்களே பிரைஸ் ! ரொம்ப நல்லா யிருந்திருக்குமே !" என்றான் தருமன்.

"ஆமா, அப்படியே அவுங்க இரண்டு பேரையும் தூக்கிக் கிணத்திலே போட்டுடுவமான்னு தோணிச்சு. ஒரு சத்தியத்துக்குக் கட்டுப்பட்டுச் சும்மா நின்னேன்."

"அட! இதுதானே உன் வீறாப்பையே பேசிக்கிட்டு. யாரு தம்பி ஆக்டு?"

"அயன் ஸ்திரீ பார்ட் ரமாபாய். அயன் ராஜ பார்ட்டுத்தான் உங்க ஆளு. சிக்கல் சண்முகசுந்தரம் பிள்ளை."

"என்ன ! என்ன ! நீ சண்முகத்தைப் பார்த்துட்டியா?"

"பார்த்துட்டேன். ஆனா, பார்க்கக்கூடாத சந்தர்ப்பத்திலே பார்த்துட்டேன். இனிமேல்தான் நேரிலே பார்த்துப் புத்தி சொல்லப் போறேன்."

தருமனுக்கு இதைக் கேட்டதும் கோபம் வந்துவிட்டது. நாம் இருக்கும் போது இவன் யார் புத்தி சொல்ல என்று நினைத்தான். "ஏன், பார்த்தா என்ன செஞ்சிடுவியாம்?" என்றான்.

"பினாங்கு !..."

"என்னையா பினாங்கு? விலாங்கு தண்ணியிலே இல்லே கிடக்கும்?"

இதற்குள் வரதன் தன் கோபத்தைச் சமாளித்துக்கொண்டான். தருமனிடம் பேசி விஷயம் முழுவதையும் அறியத் தூண்டியது அவன் மனம்.

"இல்லேண்ணே, நமக்கு மனசு பாதி நேரம் வித்தையிலே இருக்குது பாருங்க. சும்மா ஏதோ அடதாள பல்லவிக்குச் சொல்லுக் கட்டுக் கணக்குப் போட்டுக்கிட்டிருந்தேன். அதுதான் பினாங்கின்னு ஆரம்பிச்சேன்."

"எனக்கும் அப்படித்தான். சங்கராபரணத்தை நினைச்சுக்கிட்டே சில நாளைக்குத் தூங்க மாட்டேன்."

"ஏன் அதுக்கு என்ன ஆச்சு? நீங்கதான் வாசிக்கிறதில்லையே !"

"அட, சும்மா கிண்டல் பண்ணாதே தம்பி டிக்கட்டை வாங்கிட்டு வா. உள்ளே போவோம். ஆட்டம் ஆரம்பம் ஆயிடும்."

"இதோ" என்று பையில் கை வைத்தான் வரதன். தருமன் ஆவலுடன் நோக்கினான். இதுதான் சமயம் என்று வரதன் பின் வரும் கேள்வியைக் கேட்டான்.

"ஆமா, உங்களுக்குத் தெரிஞ்சிருக்குமே, இந்த சர்க்கசுக் கம்பெனிப் பெண் யாரு?"

இந்தக் கேள்விக்குத் தருமன் சும்மா இருப்பானா? உங்களுக்குத் தெரியுமே என்று ஒருவரிடம் ஒரு விஷயத்தைக் கேட்டுப் பாருங்கள். அவர் தெரியாது என்று சொல்லுகிறாரா என்று பார்ப்போம்.



பாட்டலே மாட்டார். இதற்குத் தருமனும் விதிவிலக்கு அல்ல. அவன் கற்பனை ஓடலாயிற்று. "ரொம்ப அழுத்தமாய். தம்பிக்குத் தெரிஞ்சவன்" என்றான் தருமன். இதைக் கேட்டதுமே வரதனுக்கு மூளை குழம்பியது.

"இவங்களுக்குள்ளே என்ன உறவு?" என்று கேட்டான்.

"யாரோ வடக்கத்திப் பெண்ணாம். ஒரு கோடீசுவரன் மகளாம். கல்யாணமே வேண்டாமின்னுட்டாளாம். சண்முகம் ஹைதராபாத்துக்கு வாசிக்கப் போயிருந்தபோது, பார்த்திருக்கிறாரு. இப்போ வந்தது முதல் கொண்டு சண்முகத்தை விடமாட்டேங்கிறா" என்று எல்லாவற்றையும் கண்டது போல் ஒப்பிக்கலானான்.

தருமன் சொல்லச் சொல்ல, வரதனுக்குச் சண்முகத்தின் மேல் கோபம் வந்தது. 'அட பாவி ! உனக்கு எங்க மோகனா கொடுத்து வைக்கலில்லையே ! பச்சைத் தண்ணி கொண்டான்னு நீ சொன்னா புரிஞ்சுக்க அவளுக்குப் பாஷை தெரியாது. இப்படியா ஒரு வடநாட்டுப் பெண் மேலே ஆசைப்படணும்? அவளுக்குக் காம்போதி தெரியுமா? பைரவி தெரியுமா? சண்முகசுந்தரம் இவ்வளவு அற்புதமாக வாசிக்கறான்னு தெரியுமா? சே, இந்தக் கண்றாவிகளை எல்லாம் பார்க்கும்போது நம்ப பாடுதான் தேவலை. கல்யாணமே பண்ணிக்காமே இருக்கிறோம், பாரு !" என்று தன்னையே புகழ்ந்து கொண்டான் வரதன். பிறகு தருமனுடன் உள்ளே நுழைந்தான்.

தருமனுக்கு சர்க்கஸ் ஆட்டம் ரொம்ப ஆனந்தம் அளித்தது. அதிலும் அந்த உடைகளிலேயே அவன் மயங்கிவிட்டான். எங்கேயாவது கொஞ்சம் பணம் பார்த்து, வீட்டுக்குப் போனதும் தன் குழந்தைகளுக்கு ரமாபாய் அணிந்திருப்பது போன்ற டிரஸ் தைத்துப் போட்டுப் பார்க்க வேண்டும் என்ற ஆசை வந்தது.

வரதனுக்கோ சண்முகம் எங்கே, இங்கு என்ன செய்கிறான் என்ற கவலை அதிகமாயிற்று. ஒவ்வொரு ஆசனமாக அவன் கண்கள் அங்கு மிங்கும் தேடின. எதிலும் சண்முகம் இல்லை. அப்போது ஒரு ஆசாமி விழுந்தடித்துக்கொண்டு உள்ளே வந்தார். அவர் துப்பட்டா தரையில் இழுபட்டது. பின்னால் வந்த ஒருவர் அதை மிதிக்கவே, அந்த ஆசாமி ஒரு முறை நிலை குலைந்தார். விழப் போனார். "சபாஷ் !" என்றான் வரதன். வந்தவர் வேறு யாருமல்ல; ஸ்ரீமான் சவடால் வைத்திதான்.

வைத்திக்கு ஏதோ வேலை இருந்தது போலும். வரும்போதே தாமதமாக வந்தார். ஆனால் அவர் முன்பே டிக்கட்டு வாங்கி அதை ரிசர்வும் செய்திருந்ததால் அவர் ஆசனம் முதல் வரிசையில் காலியாக இருந்தது. அதில் வந்து அவர் அமர்ந்தார். உட்கார்ந்தவுடனே இரு பக்கமும் திரும்பிப் பார்த்து ஒரு முறை புன்முறுவல் செய்து கொண்டார். ஏதோ எல்லோரும் தன் வரவுக்குக் காத்திருப்பது போல் அவருக்கு ஓர் எண்ணம். அப்படித் திரும்பியவர் தனக்குப் பக்கத்து நாற்காலி காலியாயிருப்பதைக் கண்டார்.

இதை வரதனும் பார்த்தான். வைத்தி அருகில் ஒரு இடம் காலியாயிருப்பதைக் கண்டதும் 'அதில் மைனர் வந்து உட்காருவார். இந்த இரண்டு ஆட்களையும் என்ன செய்வது' என்று அவன் ஆத்திரப்பட்டுக்கொண்டிருந்தான். அப்போது மைனருக்குப் பதிலாக உள்ளிருந்து சண்முகசுந்தரம் வந்து வைத்தியின் பக்கத்தில் உட்கார்ந்தான்.

இதைப் பார்த்த வரதன் திடுக்கிட்டான். 'இவனுக்கும் சண்முகத்துக்கும் என்ன உறவு? இந்தச் சண்முகம் ரொம்பப் பெரிய ஆள் போலிருக்கிறதே' என்று ஆச்சரியமடைந்தான்.

ஆனால், வைத்தி இப்படியெல்லாம் யோசிக்கவில்லை. அவருக்கு எல்லோருமே உறவினர். அதை மற்றவர்கள் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் வைத்தி உறவு கொண்டாடாமல் இருக்க மாட்டார்.

பக்கத்தில் உட்கார்ந்த சண்முகத்தைத் திரும்பிப் பார்த்து வைத்தி சிரித்துக்கொண்டார். சண்முகம் பதிலுக்குச் சிரிக்கவில்லை. அதற்காக வைத்தி வருத்தப்படவுமில்லை. மெதுவாகப் பேச்சுக் கொடுத்தார்.

"என்ன பிள்ளைவாள், சௌக்கியமா? எனக்கு இந்த உலகத்திலேயே உங்க வாசிப்புத்தான் பிடிக்கும் !"

"ரொம்ப சந்தோஷம்" என்று கூறிவிட்டு மௌனமாக அமர்ந்தான் சண்முகம்.

"ஒரு சால்வையைப் போர்த்திக்கப்படாதோ? பனி ரொம்ப அடிக்கிறாப்பலே யிருக்கே !" என்றார் வைத்தி.

"ஆவணி, புரட்டாசியிலே பனி ஏதுங்க?" என்றான் சண்முகம்.

"பனி இல்லே, கடல் காத்து வாடை—" என்று கூறிவிட்டு வைத்தி ஆட்டத்தைப் பார்க்க ஆரம்பித்தார்.

இவர்கள் இருவரும் பேசுவதைப் பார்த்த வரதன் திகைத்தான். என்னதான் பேசுகிறார்கள் என்று கேட்க ஆவலாயிருந்ததால் அவர்கள் பக்கம் போக எண்ணி எழுந்தான். உடனே கூட்டம் 'உட்கார், உட்கார்' என்று கத்தியது. வரதன் உட்கார்ந்தான்.

இதற்குள் வைத்தி மறுமுறையும் சண்முகத்திடம் பேச்சுக் கொடுத்தார்.

"ஏது, திருவாருருக்குப் போயிருந்தாப்பிலே இருந்துதே! என்ன விசேஷமோ?"

"ஆமா, ஏன் அந்த ஊருக்கு ஒருத்தரும் வரக்கூடாதோ?"

"நீர் நன்னா பேசுறீர்காணும். எனக்கு இந்த மாதிரி ஹாஸ்யமா பேசறவாளைக் கண்டாத்தான் திருப்தி. நான் உம்மைத் திருவாரூரிலே பார்த்தேன். ஏதோ கோவிலுக்கு வந்திராக்கும்னு நினைச்சேன்."

"ஆமா ! அந்த ஊர்ப்பேரைக் காப்பாத்த ஒரு கோவிலும் அங்கு இருக்குதில்ல."



"ஆமா, நீங்க அடுத்த மாதம் ஊரிலேதானே?"

"ஏன்?"

"ஒரு கச்சேரி விஷயமா உம்மைப் பார்க்கணும் !"

"இல்லை, நான் கச்சேரியெல்லாம் நிறுத்திட்டேன்."

"இப்படித்தான் வித்வான்கள் எல்லாம் சொல்லுவா. ஒரு 250 ரூபாயைக் கூட்டிக் கொடுத்தா சரிப்பா. 'ரேட்டை உசத்தணும் பாருங்க !"

"சரி, என்னைத் தொந்தரவு செய்யாதீங்க."

"தொந்தரவு இல்லேங்காணும். உம்ம பணம் ஒரு இடத்திலே கிடக்கு. அதை நீர் கல்யாணத்தின்போதே வாங்கிக்க மாட்டேன்னுட்டீர். இப்ப அது வட்டியும் முதலுமா வந்து சேரப்போகுது."

"எனக்கு ஒண்ணும் விளங்கவில்லையே !"

"கச்சேரி பேச வருவாங்க. 5000 ரூபா கேளும். நமக்கு 500 தள்ளும். நம்ம சிங்கபுரம் மைனர் இருக்காரோல்லியோ?"

சண்முகத்திற்குத் திக்கென்றது.

"ஆமா !"

"அவர் கல்யாணத்திலேயே நீர் வாசிக்கலேன்னு அவருக்கு ரொம்ப வருத்தம்."

"அதுக்காக?"

"இப்ப ஒரு ஏற்பாடு திருவாரூரிலே நடந்துகொண்டிருக்கு. அதுக்கு நீர்தான் வாசிக்கணும். நான் ரொம்பச் சொல்லியிருக்கேன். திருவாரூர் மோகனாம்பாளைத் தெரியுமோ இல்லையோ? அவ வீட்டுலே ஒரு விசேஷம்— அவளுக்கும் நம்ம மைனருக்கும்—"

அந்த வார்த்தைகளைக் கேட்ட சண்முகத்திற்கு அந்த ஆளை ஓங்கி ஒரு அடி அடித்துவிடலாமா என்று தோன்றியது. மனத்தை அடக்கினான். வைத்தியை எரிப்பவன்போல் ஒரு பார்வை பார்த்து விட்டு, "சரி சரி, நிறுத்து அய்யா !" என்று சொல்லி எழுந்து உள்ளே சென்றான்.

வைத்தியோ அவனை ஏளனமாகப் பார்த்தான். 'என்ன இந்த ஆள் பணத்தை மதிக்கமாட்டேன் என்கிறானே' என்ற கருத்து அவன் பார்வையில் தொனித்தது.

ஆட்டம் முடிந்தது. சண்முகத்தைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணத்தில் மேடைக்கு உள்ளே நுழைய ஆரம்பித்தான் வரதன். காவல்காரன் தடுத்தான். "என்னய்யா, தடுக்குறே? டிக்கெட் வாங்கி யிருக்கிறேன் !"

"ஆட்டம் பார்க்கத்தான் ஐயா டிக்கெட் ! எஜமானி அம்மாளைப் பார்க்க முடியாது" என்றான் அவன். இந்தச் சமயத்தில் உள்ளே யிருந்த சண்முகசுந்தரம் வரதனைப் பார்த்துவிட்டான். ஏற்கெனவே ஒருவர்

முகத்திலும் விழிக்கப் பிடிக்காமல் இருந்துகொண்டிருந்த அவனுக்கு, வைத்தியின் சவடால் நெருப்பில் நெய் வார்த்தது போல் இருந்தது. மோகனாவின் பக்க வாத்தியக்காரனைக் கண்டவுடன் கோபம் பீறிக்கொண்டு வந்தது. 'என்னடா, கல்யாணப் பத்திரிகை குடுக்க வந்தியா?' என்று கேட்க நினைத்தான். அதை அடக்கிக்கொண்டு, "ரமா, நான் ஒருவரையும் பார்க்க விரும்பவில்லை" என்றான். உடனே ரமாமணி எழுந்து வெளியே வந்தான். அவனுடைய உடையும் தலைக்கட்டும் வரதனுக்குப் புதுமையாக இருந்தன.

"நாதசுரக்காரரைப் பார்க்கணும்" என்றான் வரதன்.

"ஜாவ், ஜாவ், இதர் கோயி நகி" என்று சொல்லி அவன் உள்ளே போய்விட்டான். ரமாமணியும் சண்முகமும் எழுந்து பின்பக்கம் நடந்தார்கள். இதைப் பார்த்துக்கொண்டே இருந்த வரதனும், 'சரி, இந்த மட்டிலும் நமது மோகனா இவன் வலையில் விழாமல் தப்பியதற்கே, கோவிலுக்குச் சதிர்த் தேங்காய் உடைக்க வேணும்' என்று எண்ணிக்கொண்டே வெளியே புறப்பட்டான்.

\+ \+ \+

சர்க்கஸ் கூடாரத்தை விட்டு வரதன் வேகமாய் வெளியே வரும்போது, அந்தக் கொட்டகையின் வாசலில் ஒரு ஆள் மேல் மோதி முட்டிக்கொண்டான். இவன் மோதிய வேகத்தில் அந்த ஆளின் மடியில் இருந்து ஒரு அரிவாள் கீழே விழுந்தது. அந்த ஆள், "ஏய், பாத்து நடக்கப்பிடாது?" என்று கேட்டுவிட்டு, அந்த அரிவாளைக் குனிந்து எடுத்தான்.

வரதன் அவனை உற்றுப் பார்த்தான். அந்த முகத்தை எங்கேயோ பார்த்த மாதிரித் தோன்றியது. 'யார் இவன்? எங்கே பார்த்திருக்கிறோம்?' என்று நினைத்துக்கொண்டே அவனைத் தாண்டிச் சென்றுவிட்டான் வரதன்.

சற்றுத் தூரம் போன பிறகுதான் திடீரென்று அவனுக்கு அந்த ஆள் யார் என்று ஞாபகம் வந்தது. 'அட, இவன் அழகர் கோயில் ஆளில்லை? இவன் எங்கே இங்கே வந்தான்?' என்ற சந்தேகம் வந்தது.

ஆம், வரதன் சந்தித்தது வேறு யாரும் இல்லை. நாகலிங்கத்தின் வண்டிக்காரன் சொக்கனேதான்!





# கடம்பவனத்தின் கலக்கம்

முட்டுண்ட பின்தான் குனியத் தோன்றும் பலருக்கு. அதைப்போல் வரதனுக்குச் சற்று தூரம் சென்றபின்தான் அவன் சொக்கன் என்று தெரிந்தது. சொக்கன் என்று தெரிந்ததுமே அவன் மூளை வெகு தீவிரமாக வேலை செய்ய ஆரம்பித்தது. "அடி தனாங்கு தகிங்கிணதோம்" என்று முணுமுணுத்தவன், "திருடன்! திருடன்" என்று கத்திக்கொண்டு சொக்கனைத் துரத்தினான்.

சர்க்கஸ் கொட்டகை வாசலில் அப்போதுதான் கூட்டம் கலைந்துகொண்டிருந்தது. திருடன் என்ற கூக்குரலைக் கேட்டதும், திருடன் யார் என்பது தெரியாமலே, பலர் ஓடியவர்களை எல்லாம் துரத்தினர். இந்த ரகளையில் சொக்கன் சிட்டாய்ப் பறந்தான். வரதனா விட்டுவிடுபவன்? நாலு எட்டில் தாவிப் போய்ப் பாய்ந்தான். அந்த ஆள் மல்லாந்து வீழ்ந்தான். வரதன் அவன் மேல் ஏறி உட்கார, இருவரும் மண்ணில் கட்டிப் புரண்டனர்.

இதற்குள் கூட்டம் அங்கு கூடிவிட்டது. பலர் சூழ்ந்து கொண்டார்கள். போலீஸ் ஊதுகுழல்கள் கேட்டன. ஊதுகுழல் கேட்டவுடனே சுற்றியிருந்த கூட்டம் விலகியது. வரதன் எழுந்தான். அந்த ஆளோ எழுந்திருக்க முடியாமல் கீழே கிடந்தான்.

அந்தச் சமயம் வந்த போலீசார் அந்த ஆளைத் தூக்கிப் பிடித்து நிறுத்தினர். வரதன் ஆவலுடன் அவன் முகத்தைப் பார்த்தான். அவனுக்கும் மூக்கில் ஒரு அடி பட்டிருந்தது. அதோடு அவன் மூக்கில் ஒரு தளுக்குப் போட்டிருந்தான். ஆனால் அவன் சொக்கன் அல்ல.

"டே டே! நீ - நீ?" என்றான் வரதன்.

"என்னய்யா, நானா திருடன்? திருடனைப் பிடிக்கிறோம்னுட்டு வீதியிலே போறவனை எல்லாம் புடிக்கிறீங்க!" என்றான் அந்த ஆள்.

"இல்லேய்யா!..... ஒரு பயல் அழகர் கோயில்லே எங்கள் வண்டியை அடிச்சுப் பறிச்சான். அவன் இங்கே..."

அப்பொழுது கூட்டத்தில் இருந்த ஒருவர், "என்ன ஐயா! திருடனை புடிக்கற லட்சணம்! அழகர் கோயில்லே அடிபட்டதுக்கு நாகூரிலே வந்து ஆளைப் பிடிக்குறே?" என்று பரிகாசமாகக் கேட்டார்.

இதற்குள் போலீஸ்காரன், "என்னையா ரகளை?" என்றான்.

"இல்லைங்க! நான் சர்க்கஸ் கம்பெனியிலே வேலை செய்யறவன். என்னை வந்து இவர் திருடன்னு சொல்லிப் புடிச்சுட்டாரு."

"என்னையா திருட்டுச் போச்சு !"

"ஒண்ணுமில்லைங்க — !"

"பின்னே ஏன் திருடன்னு கத்தினே?"

"இந்த மாதிரி ஒருத்தன் என்னை —"

"இந்த ஆளா, இந்த மாதிரி ஒருத்தனா?"

"மாதிரிதான் !"

"ஏன் தம்பி, உனக்கு ஏதாவது மூளைக் கோளாறோ? சும்மா இருக்கிறவனைத் திருடன்னு புடிச்சுட்டியே !"

"சரி சரி, போ !" என்று போலீஸ்காரன் விரட்டவே வரதன் இந்த மட்டும் விட்டார்களே என்ற சந்தோஷத்துடன் திரும்பினான். ஆனால், அவன் மனத்தில் சொக்கன் ஏன் இங்கு வந்தான், திடீரென்று அவன் எங்கு மறைந்தான் என்ற சந்தேகங்கள் வேலை செய்தன.

✤ ✤ ✤

சிங்கபுரம் மைனர் பங்களாவில் மைனரின் மனைவி மரகதம் வருத்தத்துடன் உட்கார்ந்திருந்தாள். அவள் எதிரில் வெள்ளித் தாம்பாளத்தில் இரண்டு இட்டிலிகள், மிளகாய்ப்பொடி, எண்ணெய், துவையல், எரித்த குழம்பு, பக்கத்திலே வெள்ளித் தம்ளரில் தண்ணீர் இவ்வளவும் இருந்தன. அப்படியிருந்தும் அவளுக்கு ஏன் வருத்தம் வந்தது என்றுதான் கடம்பவனத்துக்குப் புரியவில்லை.

"அட, ஏம்மா மரகதம், ஏன் கண்ணைக் கசக்குறே?" என்றார் கடம்பவனம்.

"ஒண்ணுமில்லேப்பா, உங்களுக்கு !" என்றாள் மரகதம்.

உடனே அவருக்கு வேலைக்காரர்கள் அவளுக்குச் சரிவர ஆகாரம் போடவில்லையோ என்ற கோபம் வந்தது. "அடே ராமா, ரெண்டு மலைப்பழம் உரிச்சுப் போடு. ஏண்டா, இட்டிலிக்கு நெய்யை விழுதா எடுத்துப் போடவேண்டாம்?" என்று பரிசாரகனைக் கோபித்தார். "கூப்பிடு தவசுப் பிள்ளையை" என்று சொல்லிக் கொண்டு, தாமே சமையல் அறைக்குள் ஓடினார்.

"மடப்பயல்கள் ! இட்டிலி பிடிக்கலேன்னா இடியாப்பம் சுடறது. இல்லாட்டி தோசை போடறது. என்னடா செய்திங்க இந்நேரம்? எட்டு மணிக்காடா பலகாரம் கொடுக்கறது? குழந்தை பசியாலே துடித்து அழுவுது" என்று கேட்டுக்கொண்டே கையை ஓங்கியபடி சென்றார்.

நல்ல வேளைக்கு அங்கு தவசுப் பிள்ளை இல்லை. அவன் தண்ணீர் கொண்டுவரப் போயிருந்ததால் தப்பினான். அவருக்கு வந்த கோபத்தில் யாரை அடிப்போம், யாரைத் திட்டுவோம், எதைச் செய்தால் தம் மகளுடைய வருத்தத்தைத் தணிக்கலாம் என்று தடுமாறினார். ஆனால், மரகதம் விசும்பிக்கொண்டேதான் இருந்தாள்.

"என்னம்மா கோபம்? உன்னை எவன் என்ன சொன்னான், சொல்லு !" என்றார்.



மரகதம் பதில் சொல்லவில்லை. கடம்பவனம் பிள்ளை எதைப் பொறுத்தாலும் பொறுப்பார், தம் மகளுடைய ஒரு சொட்டுக் கண்ணீரைக்கூடப் பொறுக்கமாட்டார். கடம்பவனம் பிள்ளையைப் பல அவதாரங்களிலே பார்த்தது உண்டு. அவர் கோபம் கொண்டால் நரசிம்மாவதாரம் எடுத்துவிடுவார். தற்புகழ்ச்சியில் இறங்கிவிட்டாலோ திருவிக்கிரமாவதாரம் எடுப்பார். ஆனால், தம் மகள் மரகதத்தின் முன் எப்போதும் வாமனாவதாரமாகிவிடுவார்.

எவ்வளவோ அன்புடன் வளர்த்த கடம்பவனத்தின் செல்வக் குழந்தை இப்போது கண்ணீர் வடித்தால் பொறுப்பாரா அவர்?

"ஏம்மா அழுகறே? உன்னை எவன் என்ன செய்தாம்மா?" என்று துடித்தார் கடம்பவனம்.

"எல்லாம் உங்க மருமகப்புள்ளைதான்!" என்று அழுது கொண்டே சொன்னாள் மரகதம்.

"மருமகப் புள்ளையா? என்ன செய்தான்? கண்ட காலிப் பயகளைத் தேடிக்கிட்டுத் திரியப்படாது. இவனுக்கே கட்டிக் கொடுத்தா உன்னோடே ஒழுங்கா குடும்பம் நடத்துவான்கற எண்ணத்திலே யில்ல உன்னைக் கட்டிக் கொடுத்தேன்!"

"ஏன் அப்பா? அவரை அப்படிச் சொல்றீங்க" என்றாள் மரகதம்.

"பின்னே என்னம்மா? உன்னைக் கண் கலங்க வைக்க அவன் யாரு? என்ன செய்தான், சொல்லு !"

"அன்னிக்கொரு நாள் திருவாலூருக்குப் போனார் நானும் கோயிலுக்கு வரேன்னு சொன்னேன். நீ வரவேண்டாம்னுட்டுப் போயிட்டார். நான் அன்னிக்கு முழுக்கச் சாப்பிடவே இல்லை."

"சாப்பிடல்லியா? சரி, சாப்பிட வேண்டாம். ஏதாவது பலகாரமாவது சாப்பிட்டிருக்கக்கூடாதோ?"

"அது எப்படிப்பா, மனசு வந்தாத்தானே? அப்புறம் ராத்திரிப் பத்து மணிக்கு வந்தாரு. என்னோடே பேசவே இல்லை."

"பேசாட்டிப் போறான் முட்டாப் பயல் !"

"சும்மா இருங்கப்பா !" என்று மகள் கோபித்துக்கொண்ட பிறகு தான் கடம்பவனம் பிள்ளை தம் வாய்த்தவற்றை உணர்ந்தார்.

"சரிதான், அது அன்னிக்கோடே போச்சு. இன்னிக்கு ஏன் அழுகறே?" என்று கேட்டார்.

"நான் ஒண்ணும் அழல்லே. இன்னிக்கும் காலங்காத்தாலே எந்திரிச்சு எங்கேயோ போயிட்டாரு."

"அதுதான் நானும் பார்த்தேன். எங்கேயோ அவனே வண்டியை ஓட்டிக்கிட்டுப் போனான். 'சரி, அவன்தான் வீட்டிலே இல்லியே. வந்து உன்னைப் பாத்துட்டுப் போவோம்'னு வந்தேன். திருவாரூருக்கு என்னத்துக்குப் போனான்?"

"ஏன் போறாரா? இதென்னப்பா கேள்வி? தெரியாது போல கேக்கறீங்களே !"

"சொல்லம்மா, ஏன் போறான்?"

"அதுதான் அங்கே ஒன்னு இருக்குதில்லே?"

"என்ன இருக்கு?"

"அதுதான் கோயில். அந்தக் கோயிலுக்குத்தான் அடிக்கடி போறாரு. இங்கே ராத்திரி எல்லாம் தூங்கறதில்லே. பிரமை பிடிச்சாப்பிலே உட்கார்ந்திருக்காரு. சரியா சாப்பிடறதுகூட இல்லே. பித்துப் பிடிச்சாப்பிலே பெருமூச்சு விடறாரு. நேத்து ராத்திரி எல்லாம் முழிச்சுக்கிட்டே இருந்தாரு. எந்திரிச்சதும் பல்லுகூட விளக்காமல் வண்டியைப் போட்டுக்கிட்டுத் திருவாரூருக்குப் போயிட்டாரப்பா. எங்கே சாமியாரா போயிடுவாரோன்னு தோணுது அப்பா !" என்று அழுதாள் பேதை மரகதம்.

கடம்பவனம் திகைத்தார்.

"சாமியாராகவா அம்மா ! அதெல்லாம் அவன் அப்படியெல்லாம் போகக்கூடியவன் இல்லியே ! நானுந்தான் பல கோயிலுக்குப் போறேன். சாமியாராயிட்டேனா? இதைப் பாக்குறபோது ஏதோ சூதா இல்ல தெரியுது ! ஹா..." என்று யோசித்தார் கடம்பவனம் பிள்ளை.

"இங்கே யாராவது ஆண்டி பரதேசி வாராங்களா?"

"ஆண்டி பரதேசி ஒருத்தரும் இங்கே வரதில்லே அப்பா. அந்த நிதிக்கார ஐயாதான் அடிக்கடி வராரு. பணம் வாங்கிட்டும் போறாரு. இவரு இருக்கிற பணத்தை எல்லாம் ஏழைக்கு அள்ளிக் கொடுத்திடுவாரு போலே இருக்குது. அன்னிக்கு அந்த ஆளைக் கூட்டிக்கிட்டு அறைக்குள்ளே போய்ப் பெட்டகத்தைத் திறந்துவிட்டுட்டாரு..."

பெட்டகத்தைத் திறந்துவிட்டான் என்பதைக் கேட்டவுடன் கடம்பவனம், ஒரு துள்ளுத் துள்ளினார். அவர் மனத்தில் ஏதோ சுடுபுடாச் செய்தது.

"நிதிக்காரனா...?" என்று யோசித்தார். கடைசியில் திகைப்புடன் "ஏம்மா, அந்தச் சவடால் வைத்தியா?" என்றார்.

"ஆமாம், அவரு வைத்தியோ கித்தியோ, எனக்குத் தெரியாது. உங்களைக்கூட முந்தி எல்லாம் பார்க்க வருவாரே...!"

"அட அவன் அயோக்கியனாச்சே !" என்று சொல்ல நினைத்தார் கடம்பவனம். ஆனால், அந்தத் தகப்பனார் தலை அவரை அறியாமலேயே கீழே குனிந்தது. வாயிலிருந்து வார்த்தை வரவில்லை. தம் மகளின் முன் தகப்பன் வெட்கப்பட ஆரம்பித்தார். தம்மைச் சமாளித்துக்கொண்டு, "வைத்தி பெரிய அந்து ஆச்சே ! ஆளை அரிச்சுத் தின்னுடுவானே ! சரி, கொண்டா பொட்டகத்துச் சாவியை. உன் புருஷன் என்ன எடுத்திருக்கிறான் பார்ப்போம் !" என்றார்.



இதைக் கேட்ட மகள் மலைத்தாள்.

"ஏன், சாவி இல்லையா?"

"வேண்டாம் அப்பா நீங்க பெட்டியைத் திறக்க வேண்டாம்."

"ஏன் அம்மா? என்னை நம்ப மாட்டாயா?"

"இல்லை அப்பா. அத்தான் ஏதாச்சும் சொல்லுவாங்க...!"

"அவன் யாரு என்னைச் சொல்றதுக்கு?"

"இல்லை, அவர் வந்துடட்டும். அவர் சொத்து அவர் கொடுக்கறாரு. என்ன வேணுமானாலும் செய்யறாரு. நம்ம கேட்கப்படாது அப்பா !"

"அட, சும்மா குடு சாவியை ! அவன் என்னதான் செய்திருக்கான்னு தெரியணுமில்லே?"

கடம்பவனம் பதறிக்கொண்டே இரும்புப் பெட்டியைத் திறந்தார். அவர் கையால் எழுதி வைத்த இருப்புச் சிட்டை பெட்டகத்தில் இருந்தது. அதில் ரொக்கம் மூவாயிரம் குறைந்தது. இதை அவர் பொருட்படுத்தவில்லை. ஆனால், வைர அட்டிகை பதினாறு ஆயிரம் விலை ஆயிற்றே !

பிற்காலத்தில் தம் மகளுக்கு ஆகும் என்ற எண்ணத்தில் தம் கையால் தம் தமக்கைக்குச் செய்து போட்டதாயிற்றே ! அது எங்கே? யாருக்குக் கொடுத்தான்? வைத்தி சம்பந்தப்பட்டிருக்கிறானே ! ஏன் திருவாரூர்ப் பயணம்? கல்யாணத்தன்று ராத்திரியே தம் சொல்லையும் எதிர்த்து வண்டியைக் கட்டிவிட்டானே ! கோவிலுக்கா போகிறான்? பண்டாரமாகவா ஆகிறான்? அடேயப்பா ! "மரகதம் மரகதம் ! அவன் பண்டாரமாகல்லே அம்மா ! உன்னையும், என்னையும் இந்த ஜமீனையும் ஆண்டியாக்கப் பார்க்கிறான் அம்மா !" என்று அலறினார் கடம்பவனம் பிள்ளை.

✦ ✦ ✦

அதே நேரத்தில் திருவாரூர் சின்னசாமிக் கடையின் வாசலில் மைனரின் வண்டி வந்து நின்றது. காலை எட்டு மணி இருக்கும். மைனர் இறங்கி உட்சென்று, "வைத்தி இருக்கிறாரா?" என்று விசாரித்தார். உடனே ஒரு பையன் அவரை மரியாதையுடன் வைத்தியின் அறைவாசலுக்கு அழைத்துச் சென்றான்.

வைத்தி, முதல் நாள் சர்க்கஸுக்குப் போய்விட்டு வந்ததால் அலுத்துத் தூங்கிக்கொண்டிருந்தார். அப்பொழுது கடைப்பையன், "யாரோ உங்களைத் தேடிக்கிட்டு வந்திருக்காங்க சார்" என்று அவரை எழுப்பினான்.

"வந்தா காத்துக்கிட்டு இருக்கச் சொல்லுடா !" என்றார் வைத்தி. இதைக் கேட்டவுடனே மைனர் திடுக்கிட்டார். மறுபடியும் பையன் எழுப்பினான்.

"வைத்தி சார், வைத்தி சார், உங்களைத் தேடிக்கிண்டு யாரோ பெரிய மனுஷான் வந்திருக்காங்க சார் !" என்றான்.

"எந்தப் பெரிய மனுஷன்டா, காலையிலே என்னைத் தேடிக் கிண்டு வர்ரான்? எல்லோரும் இருட்டிலேதான்டா தேடுவான்!" என்று உளறிக்கொண்டே புரண்டார் வைத்தி.

இதற்குமேல் மைனரால் பொறுக்க முடியவில்லை. திடீரென்று அவருக்குத் 'தாம் சிங்கபுரம் எஸ்டேட்டின் சொந்தக்காரர் என்றும், ஜில்லாவுக்கே பெரிய மனிதர் என்றும், தம்மிடம் இந்த வைத்தி பணத்தை வாங்கிக்கொண்டு ஏமாற்றிவிட்டான் என்றும், வடிவாம்பாள் முன் தாம் கை கட்டிக்கொண்டு நின்றதற்குக் காரணம் இவன்தான் என்றும்' எண்ணங்கள் தோன்றி, கோபத்தைக் கிளறி விட்டன.

"ஓய், வைத்தி!" என்று அதட்டினார் மைனர்.

வைத்தி வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தார்.

"மைனர்வாளா! வரணும். ஏது, அதிகாலையிலே—?"

"முதல்லே உட்காரச் சொல்லிவிட்டுப் பேசுங்காணும்! மரியாதை தெரியாதவர்!" என்றார் மைனர்.

அவராகவே உட்கார்ந்திருக்கலாம். ஆனால், மரியாதை கௌரவம் என்ற எண்ணம் வந்தவுடனே பிறர் சொல்லாமல் உட்காருவது தம் கௌரவத்துக்குத் தப்பு என்ற மனப்பான்மை வந்துவிட்டது.

"உட்காருங்கோ—உட்காருங்கோ!" என்றார் வைத்தி.

மைனர் ஆத்திரத்துடன் உட்கார்ந்தார். சின்னசாமி கடையின் கட்டில் எதைப் பொறுத்தாலும் பொறுக்கும். கோபம், ஆத்திரம் இவை மாத்திரம் அந்தக் கட்டிலுக்கு ஆகாது! மைனர் கோபத்தோடு படாரென்று உட்காரவே, கட்டில் சடக்கென்று விழப்போயிற்று. கீழே விழப்போன மைனரை வைத்தி, கையால் தூக்கி விட்டார். தம் வாழ்விலேயே வைத்தி ஒருவரைக் கைதூக்கி விடுவது இன்றுதான். மைனருக்கு வந்த கோபத்தில், வைத்தியின் தோளைப் பிடித்துக் குலுக்கினார்.

"என்னங்காணும், என்னை ஏமாந்தவன் என்றா பார்த்தீர்?"

"என்ன? அதுக்குள்ளேயா இப்படிச் சந்தேகம் வந்துடுத்து?"

"என்னமோ பேசறேன், முடிக்கிறேன், அப்படி இப்படி எல்லாம் அளந்தீர்——"

"நான் இப்போதான் வந்து படுத்தேன். ராத்திரியெல்லாம் உங்க விஷயமாகத்தான் பேசிக்கொண்டேயிருந்தேன்."

"என் விஷயமாகவா? என்ன பேசிக்கொண்டிருந்தீர்?"

"அது, நாகபட்டினத்திலே ஒரு நல்ல ஜோஸ்யர் இருக்கிறார். அவர்கிட்டே போய் இந்த விஷயம் எப்போ முடியும்னு கேட்கப் போனேன்."

"என்னாங்காணும், புருடா விடுகிறீர்? இதுக்கு ஜோஸ்யந்தான் கேட்கணும்னா அதை நானே கேட்டிருக்க மாட்டேனா? இதுக்கா உம்மகிட்டே பணம் கொடுத்தேன்? பணம், வைர அட்டிகை!"



"ஓய், எங்காணும் சும்மா கோபிக்கிறீர்? சிறுபிள்ளை மாதிரி சரியாயிருக்கே! அட்டிகையை என்கிட்டயா கொடுத்தீர்? அந்த வடிவாம்பாள் கிட்டே அட்வான்சாகக் கொடுத்தீர் சரி. இப்போ உமக்கு என்னாங்காணும் வேணும்? என்னோடுகூடப் புறப்படும். அட்டிகையை வாங்கித் தந்துடறேன். ஆமாம்— கிளம்பும்! பல்லைக்கூட அப்புறம் தேய்ச்சுக்கறேன்."

மைனர் வெலவெலத்தார். "இப்போ, உம்ம கிட்டே அட்டிகையை கேட்கிறேனா? ஆசாமி விஷயம் என்ன ஆச்சுங்கறேன்?"

"ஆக்கப் பொறுத்தவர், ஆறப் பொறுக்க மாட்டீரோ? தாம்பத்தியம் என்கிறது ஆயுள் வரைக்கும் இருக்கிற 'மேட்டர்'. அதை ஒரு நாளிலே முடிக்க முடியுமா? எதிலேயும், நீர் அன்னிக்கு நடந்து கொண்டதிலே, சந்தேகப்பட்டு அந்த வடிவாம்பாள் என்கிட்டே கேட்கிறா—"

"நான் ஒன்னும் தப்பா நடந்துடலியே! என்ன கேட்டா?"

"மைனருக்குப் பொறுமை கிடையாது போலிருக்கே! கல்யாணம்னு சொன்னவுடனே முகம் கன்னிப்போச்சே நாளைக்கு என் பொண்ணு ஏதாவது சொன்னா இவர் அப்படித்தான் கோபிச்சுப்பாரோ'னு கேட்டா. அவ கேட்டது நியாயந்தானே ஐயா!"

"அதுக்கு நீர் என்ன சொன்னீர்?"

"நான் உம்மைக் காட்டிக்கொடுப்பேனா? உங்கிட்டே அப்படித்தான் கோபிச்சுக்குவார். ஆனால், உன் பெண்ணுகிட்டே அடங்கி நடப்பார் அப்படின்னு சொல்லேன். அவ கொல்லுன்னு சிரிச்சுட்டா. என்ன இருந்தாலும், உமக்கு ஒரு முகராசி இருக்குங்காணும். உம்மைப்பற்றிச் சொன்னா, சொன்னவுடனே எல்லாரும் 'எஸ்' என்கிறானே!"

"வேறே யார் 'எஸ்' என்று சொன்னா?"

"வேறே யாருங்காணும் சொல்லுவா? சும்மா 'கிராஸ்' எல்லாம் பண்ணாதேயும். நான் என் வாயைத் திறந்து ஒன்னும் சொல்ல மாட்டேன்."

மைனருக்குக் கொஞ்சம் தெம்பு வந்தது. ஸ்தோத்திரம் என்று வந்துவிட்டால் மைனர் என்ன, பெரிய 'மேஜர்'களே மயங்கும்பொழுது, அவரா சும்மா இருப்பார்?

"ஆமாம் வைத்தி, இப்போ நான் எதுக்கு வந்தேன்னு கேட்டா——?"

"இதெல்லாம் யாருங்காணும் உம்ம கிட்டே கேட்கப் போறா! எனக்கே தெரியாதா? கோவிலுக்கா வந்திருக்கப் போறீர்? இல்லை, இந்த வைத்திக்குத்தான் பேட்டி கொடுக்க வந்திருப்பீரா? இந்த 'மோகி மேட்டர்' மாத்திரம் இல்லேன்னா இந்தக் கிராப்புத் தலை வைத்தி உம்ம கேட்டு வாசலிலேன்னா நிற்கணும்? அது கிடக்கட்டும், மைனர்வாள், பல் தேய்ச்சாச்சா? காப்பி சாப்பிட்டாச்சா? டே பிச்சை, இரண்டு பேருக்கும் ஸ்டிராங்கா காப்பி கொண்டா!"

"ஓய், நீர் இன்னும் பல் தேய்க்கவில்லையா?"

"நீர் வந்திருக்கிறபோது, பல் தேய்க்கிறதா முக்கியம்? அது என்னாங்காணும் கண் எல்லாம் சிவந்திருக்கு? ராத்திரியெல்லாம் தூங்கவில்லை போலிருக்கே?"

"தூக்கம் வரலே வைத்தி சார் !"

"இனிமே உமக்கு ஏதுங்காணும் தூக்கம்? இப்போ காதலில் தூக்கம் வராது. நாளைக்குக் களிப்பிலே தூக்கம் வராது. எனக்கும் உங்க 'மேட்டர் செட்டில்' ஆகிற வரையில் தூக்கமே வராது. சரி, இங்கேயே இரும். இன்னிக்குச் சாயங்காலமே வடிவாம்பாளைப் பாத்துடுவம். எங்கே, ஒரு நூறு ரூபா எடும். சின்னசாமி நச்சரிக்கிறான்" என்றார் வைத்தி.

"ஓய், ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகமாகக் கழிக்கிறேன். ஒவ்வொரு நாளும் நரக வேதனையாக இருக்கிறது. உம்மைத்தான் நம்பியிருக்கிறேன்" என்று நோட்டை எடுத்துக் கொடுத்தார் மைனர்.

"நம்பும், மலை போல் நம்பும். எங்கேயும் நான் போய்விட மாட்டேன்" என்று நோட்டை வாங்கிச் சட்டைப்பையில் செருகிக் கொண்டார் வைத்தி.

நாற்பத்து ஒன்றாம் அத்தியாயம்

## "நானேன் ஏவினேன்"



"உன்னைத் தூதாக நான் ஏன் ஏவினேன்?......" என்று ஒரு தலைவி தோழியைப் பார்த்து வருந்தினாளாம். வரதன் தூது போனதில் அந்த அளவுக்கு விபரீதம் இல்லாவிட்டாலும் அவன் கொண்டு வரும் செய்தி சாதாரணமானதல்ல.

அவன் நாகப்பட்டினத்திலிருந்து வந்து வீட்டுக்குள் நுழைந்த உடனேயே வடிவாம்பாள் அவனைக் குசலப்பிரச்னம் செய்ய ஆரம்பித்தாள். "என்ன வரதா, கல்யாணம் நிச்சயமாய்விட்டதா?" என்று கேட்டாள்.

மோகனா எதிரில் இருக்கிறாளே என்று வரதன் தயங்கினான். சற்று நேரம் மௌனமாய் நின்றான்.

"ஏன் சும்மா இருக்கே? பணம் காசு ஏதாவது அதிகமாகக் கேட்டானா, சொல்லு?" என்றாள். வரதன் இதற்குப் பதில் சொல்லவில்லை. வடிவாம்பாளோ வரதன் மேல் உள்ள அன்பால் மேலும் ஆறுதலாகப் பேசினாள்.



"வரதா, ஒன்னும் கவலைப்படாதே ! அப்படி அவன் பணம் காசு அதிகமாகக் கேட்டான்னா கொடுத்துட்டுப் போறான். வேறு ஒரு பையனைப் பாத்துக்கறது" என்று அவள் சொல்லவே, வரதனுக்குச் சிறிது சிரிப்புக்கூட வந்தது.

எங்கே வடிவாம்பாள் அம்மான் தன் கையில் இருந்து நழுவிடப் போகிறானோ என்று அவள் சந்தேகிக்கவில்லை. என்ன சொல்கிறான் என்றுதான் பார்த்தாள். மோகனா அவனையே கவனித்தாள். அதற்குள், "என்னடா, உன் வாயிலே கொழுக்கட்டையா இருக்கு? சும்மா நிக்கிறியே ! என்ன சொன்னான்?" என்று மேலும் கேட்டாள் வடிவாம்பாள்.

"அட அவன் பேச்சைப் பேசாதீங்க அம்மா? அவன் ஒரு மோசக்காரன்" என்றான் வரதன்.

இதைக் கேட்டதும் மோகனாவுக்குத் திகீர் என்றது. விளையாட்டுக்காகக்கூடச் சண்முகத்தைப்பற்றி வரதன் இப்படிப் பேச மாட்டானே என்று எண்ணினாள்.

"அப்படி என்ன தம்பி உன்னை மோசம் பண்ணிட்டான்?"

"இல்லீங்க. அவன் ஆளுக்குத் தகுந்தாப்பிலே வேஷம் போடறான். இங்கே வந்தா ஒரு மாதிரியா இருக்கான். ஊருக்குப் போனா ஒரு மாதிரியா இருக்கான்."

"ஏன், ஊருக்குப் போனா சட்டை போட்டுக்கிடாமல் இருக்கானா?"

"இல்லேம்மா, சும்மா விளையாடாதீங்க. அந்த ஆள் நடவடிக்கையே நல்லா இல்லீங்க ! அவனைப் பெரிய மனுஷன்னு நினைச்சு பொண் கொடுக்கலாம்னு கேட்கப் போனா, அங்கே அவன் இன்னொரு பொண்ணோட கூடிக் குலாவிக் கும்மாளம் போட்டுக்கிட்டு இருக்கான்."

"வரதா !" என்று கோபத்துடன் கேட்டுக்கொண்டே மோகனா எதிரில் வந்தாள். "இதோ பாரு ! ஆள் எதிரில் இல்லாதபோது அவங்களைப்பற்றிக் கேவலமா பேசக்கூடாது" என்றாள்.

அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. கோபத்தால் புருவங்கள் துடித்தன. கண்ணில் செவ்வரி படர்ந்தது. முகவாய்க் கட்டையில் இளம் வியர்வை வியர்த்தது. அவள் நின்ற நிலையைப் பார்த்து வரதனே நடுங்கினான். "இல்லே மோகனா ! உனக்கு ஒன்னும் தெரியாது. உனக்கு வெளுத்ததெல்லாம் பால் !" என்றான்.

"சரி சரி, போதும்" என்றாள் மோகனா.

இப்படி இவர்களுக்குள்ளேயே சண்டை வளருவதைப் பார்த்த வடிவாம்பாள், "இந்தா மோகனா, நீ சும்மா இரு. அவன் கண்ணாலே பார்த்துவிட்டு வந்ததைச் சொல்றான். உலகத்தில் எந்த மனிசன் எப்படிப் போனா நமக்கு என்ன?" என்று கேட்டாள்.

"சும்மா இரு அம்மா, உனக்கு ஒன்னும் தெரியாது."

"இதை இன்னிக்கா சொல்றே? உன்னைப் பெத்த அன்னிக்கேதான் அப்படி ஆயிடுத்தே என் பிழைப்பு! அவன் தங்கச்சி கல்யாணத்துக்கு மாப்பிள்ளை பார்க்கப் போனான். மாப்பிள்ளைப் பையன் அங்கே, ஏதோ ஏனோ தானோன்னு நடந்துகிட்டு இருக்கு. அதைப்பற்றி அவன் எங்கிட்டச் சொன்னா உனக்கு ஏன் கோபம் பொத்துக்கிட்டு வருது? ஏண்டா, வரதா, அவனைச் சும்மா விட்டுட்டா வந்தே?"

"எனக்கு வந்த கோபத்திலே, அப்படியே அவனையும் அந்தப் பொண்ணையும் தூக்கிக் கிணற்றிலே போட்டுவிடலாம்னுகூடத் தோணிச்சு. ஒரு சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு சும்மா இருந்தேன்."

மோகனாவுக்கு என்னவோ செய்தது. அவள் கால்நகம் முதல் தலைவரையில் ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்தது. அவள் காதிலே பாய்ந்த இந்தச் சொல், தாமரை மலரில் இரும்பைக் காய்ச்சி வார்த்தது போல, சுளீர் என்று தைத்தது. அதற்கு மேல் அவளால் அங்கு இருக்க முடியவில்லை. இருந்தாலும் விஷயத்தை முழுவதும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசையில், "நீ உன் கண்ணால் பார்த்தியா?" என்று கேட்டாள்.

"பார்க்காமலா சொல்றேன்? இங்கிருந்து நான் போன ஆசை என்ன? நான் எண்ணிக்கிட்டு இருந்த சந்தோஷம் என்ன? ரயில் புறப்பட அரை மணி ஆகும்னு கேள்விப்பட்டவுடனே மிருதங்கத்தைத் தூக்கி இடுக்கிக்கிட்டு நடந்தே போனேன், மோகனா! அவனைத் தேடித் தெருவெல்லாம் அலைஞ்சேன். கடைசியிலே பார்த்தா, ஒரு பொண்ணோட, தனியா கிணற்றடியிலே உட்கார்ந்துக்கிட்டுத் தமாசா பேசிக்கிட்டு இருக்கான்."

"அந்தப் பொண்ணு அவர் தங்கச்சியாக இருக்கலாம்."

"அப்படி இருந்தாத்தான் சந்தோசமா இருப்பேனே நான்? தங்கச்சியா அவ? அவ தலையும் சட்டையும்? உம்... இங்கே எப்படி இதையெல்லாம் சொல்லுறதுன்னு வருத்தப்பட்டுக்கிட்டு இருந்தேன். நல்ல வேளையா அம்மா கேட்டாங்க. நீயும் கேட்டுட்டே! என்னை இனிமே ஒன்னும் கேட்காதே!" என்று சொல்லிப் பொலபொல வென்று கண்ணீர் விட்டான் வரதன்.

"சரிதாண்டா, போ, இவன் இல்லாட்டி, இன்னும் எத்தனையோ பேர். இதுக்காகவா பொம்பிள்ளையாட்டமா அழறே? போய்ச் சட்டையைக் கழட்டிட்டுச் சாப்பிடு" என்றாள் வடிவாம்பாள்.

வரதன் அழுதுகொண்டே உள்பக்கம் போனான்.

மோகனா தன் கால் நடப்பதுகூடத் தெரியாமல் தன் அறைக்குள் சென்று கட்டிலில் அமர்ந்தாள். அவள் வரதன் சொன்னதை நம்பவே யில்லை. 'இம்மாதிரி இருக்கவே இருக்காது' என்று எண்ணினாள்.



அவளுடைய இறைவன் அருள் பெற்ற அறிவு 'இதை நம்பாதே' என்று தடுத்தது. ஆனால், பேதைமை அவளைக் கவலையில் ஆழ்த்தியது.

"ஐயோ, என் சுந்தரமூர்த்தியை யாரும் மோசம் செய்யாமல் இருக்க வேண்டுமே!" என்று அன்று கோவிலில் துடித்த அவளது மனம் இந்தச் செய்தியைக் கேட்டுத் துடித்தது. அவள் விசும்பவில்லை, அழவில்லை, அசையவில்லை. அவளையும் அறியாமல் கண்ணீர் கொட்டியது.

'அவர் காலடியை மிதித்தவர்கள்கூடத் தவறு செய்ய மாட்டார்கள் என்று எண்ணினேனே! அவர் முகத்தில் வஞ்சனைக்களை சற்றேனும் இல்லையே! ஈஸ்வரமாக வாசிப்பவர், இப்படி அபகாரமாக நடந்துகொள்வாரா?'

"நேற்று வந்தவர், என் வீட்டு வாசல்வரை வந்தவர், துயரத்தோடு சென்றவர், அதற்குள் ஒருத்தியின் வலையில் விழுந்திருப்பாரா? யாருக்காவது துயரத்தில் ஆசை பிறக்குமா? சுடு நெருப்பில் மலர் பூக்குமா? இதில் ஏதோ தவறு இருக்கிறது.

'அவர் நன்றாய் இருக்கட்டும். அவளோடு கூடவே வாழட்டும். எனக்கு என்ன உரிமை இருக்கிறது அவரிடம்? இல்லை, 'நீங்கள் அவளை விட்டுவிட வேண்டும், என்னோடுதான் வசிக்க வேண்டும்' என்று நான் கேட்க முடியுமா? சங்கீதம் எல்லோருக்கும் பொது அழகு எல்லோருக்கும் பொது. கடவுளை அடைய எல்லா மலர்களுந்தான் காத்து இருக்கின்றன. அவர் பாதத்தில் நாம் வைக்கப்பட மாட்டோமா என்று மல்லிகையும், தாமரையும், வானை நோக்கித் தவம் செய்கின்றன. கொடுத்து வைத்த மலர் கொண்டையில் ஏறுகிறது. அடுத்த மலரோ, அவர் பாதத்தில் அர்ச்சனையாய் விழுகிறது.'

'என்னைப் போன்ற உபயோகமற்ற, துரதிருஷ்டம் பிடித்த மலர்கள் மரத்தடியில் உதிர்ந்து, கீழே விழுந்து, காற்றில் அடிபட்டு காலில் மிதிபடுகின்றன.... ஐயோ! நான் ஏன் பெண்ணாகப் பிறந்தேன்? நான் ஏன் அவர் மேல் ஆசை வைத்தேன்? அவர் எங்கே? நான் எங்கே...?'

மோகனா தலை நிமிரவில்லை. பெருமூச்சு விடவில்லை. ஆனால் முன்புறப் புடைவை முழுவதும் கண்ணீரால் நனைந்துவிட்டது. அவள் விட்ட கண்ணீர் ஆறாகப் பெருகியது. அதன் மேல், ஒரு ஓடத்தில் சண்முகமும், இன்னொருத்தியும் சந்தோஷமாகப் பாடிக்கொண்டு செல்வதுபோல் தோன்றியது.

எவ்வளவு நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள் என்று சொல்ல முடியாது. துயரம் மாறியது. அதிலே துணிவு பிறந்தது. பேதைப் பெண் பித்துப் பிடித்தவள்போல் இருந்தாள். பித்தனுக்கும் ஏற்படும் தற்காப்பு உணர்ச்சி அவளையும் பிடித்தது.

ஆசையெனும் கயிற்றில்தான் உலகம் இயங்குகிறது. ஆசைதான் அத்தனை முயற்சிகளுக்கும் அடிப்படையாக இருக்கின்றது. தனக்கு

உதவிக்கு வர யாரும் இல்லை என்றவுடனே, ஆசை கொண்டவர்கள் மனம், தானே துணிவு பெறுகிறது. மோகனாவுக்கு அந்தத் துணிச்சல் வந்துவிட்டது.

'அவள் யாராயிருந்தாலும் உரிமை என்னுடையதுதான். என்னை அவள் அழகில் வெல்லட்டும், ஆட்டத்தில் வெல்லட்டும். பிறகு அவரை அடையலாம். இந்த இரண்டிலும் அவளால் என்னை வெல்ல முடியலாம், அல்லது முடியாமல் போகலாம். ஆனால், அன்பில் என்னை வென்றுவிடுவாளா அவள்? அவள் யார் என்று பார்க்கிறேன்! எந்த அழகால் அவரை மயக்கினாள் என்று பார்க்கிறேன். அவள் என்னைவிட அழகா என்று பார்க்கிறேன். 'அவருக்கு அருகில் அமர உனக்கு என்னடி யோக்கியதை இருக்கிறது?' என்று கேட்கிறேன் இப்போதே புறப்படுகிறேன்— —

'ஐயோ, நான் காதலித்த பொருளை இன்னொருத்தி பற்றிக்கொண்டுவிட்டாளே! என் வாசல்வரையில் வந்த என் மணிப்புறாவை ஏதோ ஒரு பருந்து வந்து, கவ்விக்கொண்டு போய் விட்டதே!— அன்று உன் கையால் எனக்கு நீ மீனாட்சி அம்மன் பிரசாதத்தைக் கொடுத்தாயே, நீயா இப்படிச் செய்தாய்? உன் கையால் அன்று எனக்கு மல்லிகைப்பூவை அளித்தாய். அந்தப் பூ வாடியதுபோல், உன் ஆசையும் வாடிவிட்டதா? அந்த மலர் காய்ந்தது போல் உன் மனமும் உணர்ச்சியற்றதாகிக் காய்ந்துவிட்டதா? ஏன் இப்படிச் சோதிக்கிறாய்? உன்னை நம்பினேனே, உன் இசையில் மயங்கினேனே! இசைபட வாழ்வோம் என்று எண்ணினேனே! உன் எழிலில் என் இதயத்தைப் பறி கொடுத்தேனே! இதுதானா நீ எனக்குத் தரும் பரிசு.

'நான் அமர வேண்டிய இடத்தில் இன்னொருத்தி அமருவதா? உன் இதயத்தில் எனக்கு நீ இடம் அளித்திருந்தால் இன்னொருத்திக்கு அங்கே இடம் இருக்குமா? நீ கந்தர்வன், கலைஞன், காம்போதியோடு களி நடனம் புரிவாய். கல்யாணியோடு கலந்து மகிழ்வாய். தோடியுடன் கூடி விளையாடுவாய்! உனக்கு எல்லா ராகமும் ஒன்றுதான். உனக்கு ஏதேனும் வித்தியாசம் இருந்தால்தானே என்னைப் பெரியவள் என்று எண்ணியிருப்பாய்? தேன்வண்டு ரீங்காரம் செய்கிறது. காதுக்கு நன்றாகத்தான் இருக்கிறது. கண் முன் தெரியும் எத்தனையோ மலர்மேல் அது உட்காருகிறது. ஒவ்வொரு மலராக முத்தமிட்டு, முத்தமிட்டு—"

இதை எண்ணும்போது அவளுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. ஆறாத் துயரத்துடன் அழுதாள்.

—என் இதயம் உனக்கு எப்படித் தெரியும்? கண்ணாலே கண்ட உன் உருவம் என் கண்ணுக்குள்ளே இருக்கும்பொழுதே இந்தச் செய்தியை நான் கேட்கிறேனே! அன்று உன் வாயைத் திறந்து என் கண்ணில் ஊதினாயே! அதில் இருக்கும் உன் உருவத்தையும் ஊதியிருக்கக்கூடாதா? அதை அப்படியே என் கண்ணில் பதிய வைத்துவிட்டு, இன்று இப்படிச் செய்யலாமா?



'நீங்களா செய்தீர்கள்? நீங்கள் அப்படிச் செய்வீர்களா? என்மேல் நீங்கள் வைத்த அன்பு எனக்கு அல்லவா தெரியும்? நாம் இருவரும் வாயால் பேசவில்லையே, மனத்தால் அல்லவா பேசிக்கொண்டோம்? சொல்லால் பேசவில்லையே, சொக்கி அல்லவா நின்றோம்? என் கண் பொய்யாகலாம், என் கருத்துமா பொய்யாகிவிட்டது? நீங்கள் மோசம் செய்யவே மாட்டீர்கள்— எவளோ ஒருத்தி உங்களை மயக்கி விட்டாள். எத்தனை பேரை இப்படி மயக்கினாளோ? எத்தனை பேரை ஒட்டாண்டியாக்கினாளோ?

'ஐயோ, அவளால் உங்களுக்கு ஆபத்து வராமல் இருக்க வேண்டுமே! அவளால் உங்கள் இசை உங்களை விட்டு அகலாமல் இருக்க வேண்டுமே! உங்கள் உடம்பு இளைக்காமல் இருக்க வேண்டுமே! உங்களைக் கவனிக்க அவளுக்கு என்ன தெரியும்? இதோ வருகிறேன். அவளை யார் என்று கேட்கிறேன். அவள்தான் உங்கள் மடியில் உட்காரத் தகுந்தவள் என்று நீங்கள் நினைத்தால் நான் உங்கள் மடியிலேயே உயிர்விடத் தகுந்தவள் என்று நிரூபிக்கிறேன்.'

இவ்வாறு எண்ணிக்கொண்டே மோகனா நெடுநேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். வரதனிடம் இன்னும் கேட்கவேண்டுமென்ற ஆசை வந்தது. ஆனால், அவன் முகத்தைக்கூடப் பார்க்க இப்போது அவளுக்குப் பயமாக இருந்தது. 'இன்னும் என்ன நடந்திருக்குமோ, இன்னும் என்னென்ன சொல்வானோ? அதைக் கேட்கும் வரையில் நம் உள்ளம் வெடிக்காமல் இருக்க வேண்டுமே' என்று எண்ணினாள்.

கண்ணைத் துடைத்துக்கொண்டாள். தொண்டையைக் கனைத்துக்கொண்டாள். கொஞ்சம் தண்ணீரை எடுத்து முகத்தை அலம்பினாள். என்ன வந்தாலும் தன் உணர்ச்சியை வெளியே காட்டக் கூடாது என்று நிச்சயம் செய்துகொண்டாள்.

"வரதா, இங்கே வா" என்று கூப்பிட்டாள் மோகனா.

வரதன் வந்தான். மோகனா தன் தொண்டையை அடக்கிக் கொண்டு, பின் கண்டவண்ணம் கேட்கலானாள்.

"ஆமா, நீ பார்த்ததாகச் சொன்னாயே, அதெல்லாம் வேடிக்கையா? நிஜமாகவே நீ பார்த்தாயா?"

வரதன் பதில் சொல்ல முடியாமல் நின்றான்.

"சும்மா சொல்லு வரதா. நான் கஷ்டத்தைத் தாங்கத் தயாராகி விட்டேன். நான் கண்ணீர் விடுவேன் என்று எதையும் நீ சொல்லாமல் இருக்காதே. நான் இடிந்து விழுந்துவிடும் மண் சுவர் அல்ல. உறுதியான கல்லுக் கட்டடம். சொல், எதுவாயிருந்தாலும் சொல்" என்று மோகனா கூறியதும், வரதன் அடக்க முடியாத துயரத்துடன் சொல்லத் தொடங்கினான்.

"என் கண்ணாலே பார்த்தேன் மோகனா! நாகபட்டினத்திலே ஒரு சர்க்கஸ் கம்பெனி வந்திருக்குது. அந்த சர்க்கஸ்காரப் பொம்பளை யோடு கொஞ்சிக்கிட்டுப் பேசிக்கிட்டிருந்தாரு. சிக்கலை விட்டுட்டாரு. நாதஸ்வரத்தை விட்டுட்டாரு. மானம் மரியாதை எல்லாத்தையும் விட்டுட்டாரு."

"ஏன் வரதா, என்னையும் விட்டுட்டார், இல்லையா?" என்று கேட்டுத் தன் உதட்டை இறுக மூடிக்கொண்டாள்.

"உன்னைப் பிடிச்ச நல்ல காலம், மோகனா அது. அவன் இப்படிக் கெட்டுப்போவான் என்று நான் நினைக்கவே இல்லை."

"ஏன் வரதா, என்னை அங்கே கூட்டிக்கொண்டு போகிறாயா?" என்று துக்கத்தை அடக்கிக்கொண்டு கேட்டாள் மோகனா.

வரதன் அவளைப் பார்த்தான். அவனால் மறுத்துப் பேச முடியவில்லை.

"நான் பார்த்துக் கஷ்டப்படுகிறது போறாதுன்னு அதை நீ வேறே உன் கண்ணாலே பார்க்கணும்னு நினைக்கிறாயா?" என்று கூறி வருகையில் வரதனின் நாக்கு தழதழத்தது.

இதுவரை அடக்கிக்கொண்டிருந்த துயரம் மோகனாவை மீறிவிட்டது. அவளும் கைகளால் கண்ணைப் பொத்திக்கொண்டு மூசு மூசுவென்று அலறிவிட்டாள்.

குழந்தைக்கு விக்கல் வந்தால் வயிறு பருக்கும் என்பார்கள். இதைப்போல் துக்கமும் மனத்தைப் பக்குவப்படுத்துகிறது. புயலடித்த பின் கடலில் அமைதி ஏற்படுகிறது. பொங்கி வழிந்த பின்தான் பால் சுவை கூடுகிறது. இவைகளைப் போலவே, மோகனாவின் உள்ளமும் இப்பொழுது அறிவின் சொல்படி நடக்க ஆரம்பித்தது. மனம் என்னும் மாடு அடங்கியது. அறிவு என்னும் கயிற்றுக்குக் கட்டுப் பட்டது. அது அவளை, "உடனே நீயே புறப்படு நாகபட்டினத்துக்கு, அவனைப் போய்ப் பார். அவனை அடையத் தவறிவிடாதே!" என்று கூறியது.

'ஆம், நாகபட்டினத்திற்குப் போகவேண்டும். அம்மாள் லேசில் விடமாட்டாள். அவளையும் சமாதானம் செய்து அழைத்துச் செல்ல வேண்டும்' என்று நிச்சயம் செய்தாள் மோகனா. துணிவு பிறந்தது. சாகஸம் தோன்றியது. தன் துக்கத்தை வெளிக்காட்டாமல் நடிக்க முற்பட்டாள்.

அன்று அவள் கட்டிக்கொண்ட புடைவை ஆயிரம் ரூபாய் பெறும். தன்னை அவள் அலங்கரித்துக்கொண்ட அழகில் அவளே மயங்கி இருப்பாள். ஆனால், நிலைக் கண்ணாடியின் முன் நின்று ஒரு முறை தன்னைத்தானே பார்த்தாள். நெஞ்சைக் கல்லாக்கிக் கொண்டாள். முகத்தில் சிரிப்பைக் கொண்டுவந்தாள்.

துள்ளிக் குதித்து மாடிப்படியில் இறங்கி ஓடி வந்தாள். வரும் போதே, "அம்மா, அம்மா, இதைக் கேட்டாயா? இந்த வரதன் தங்கச்சிக்குக் கல்யாணம் பேசறேன்னுட்டுப் போயி சர்க்கஸ் பார்த்துட்டு வந்திருக்கான் அம்மா!" என்று கூறிக்கொண்டே ஓடி வந்தாள்.



அவள் ஓட்டமும், நடையும் வடிவாம்பாளைப் பத்து வயது இளமையாக்கிவிட்டது. தன் மகளின் சந்தோஷத்தைப் பார்த்த தாய் பிரமித்து நின்றாள்.

"என்னம்மா, பாக்கிறே, அப்படி? நான்தான் அம்மா மோகனா!" என்றாள்.

இதைப் பார்த்த வடிவாம்பாள் மேலும் கூர்ந்து நோக்கினாள்.

"ஏய் வரதா, இந்தக் கண்ணு வைத்தியர் இருந்தார்னா கூட்டிக் கிட்டு வா. அம்மாவுக்குக் கண்ணில் என்னமோ தெரியல்லே. கம்மா முளிச்சுப் பார்க்கறாங்க!" என்றாள் மோகனா.

"இல்லேடா, எனக்குக் கண்ணு நல்லாத்தான் இருக்கு. நீ நாளு தேங்காய் எடுத்துக்கிட்டு போயி எல்லை அம்மன் கோவில் வாசல்லே உடைச்சுட்டு வா."

"என்ன சொல்லி உடைக்க?" என்றான் வரதன்.

"அழகர் கோவில் பிசாசு விலகிப் போச்சுன்னு உடை. என் அம்மா, இப்பத்தாண்டி என் மகளைப் பார்த்தாப்பிலே இருக்கு!" என்று மோகனாவைக் கட்டிக்கொண்டாள் தாய்.

"அம்மா, வா அம்மா, நாமளும் சர்க்கஸ் பார்க்கப் போவோம்!"

வடிவாம்பாள் மனம் குளிர்ந்தாள். இருந்தாலும், "ஆமா, அதைப் போய்ப் பாரு—" என்றாள்.

"போம்மா, ரொம்ப நல்லா இருக்காம்."

"நல்லாயிருந்தா சும்மாவா காட்டுறான்? பணமில்லே?"

"இது கிடந்துட்டுப் போவுது அம்மா. பவுன் பவுனா உன் காலடியில் குமிக்கிறேன் பாரு" என்று மான் குட்டிபோல் துள்ளி, ஜல ஜல ஜலவென்று ஒரு ஆட்டம் ஆடினாள் மோகனா. அதைப் பார்த்த வடிவாம்பாளின் மனப்பூட்டுத் திறந்தது. பெட்டியின் பூட்டையும் திறந்தாள். போக்கிலே விட்டுத் திருப்பலாம் என்ற ஆசையில் புறப்பட ஒப்புக்கொண்டாள்.

நெடு நாளைக்குப் பிறகு அன்றைய தினம் மறுபடி அந்த வீட்டில் ஜாலர் தட்டும் சத்தம் கேட்டது. மிருதங்கம் முழங்கியது. கால் சலங்கை குலுங்கியது. மாலை ஆறு மணிக்கெல்லாம் வாசலில் இரண்டு வண்டி மாட்டின் சலங்கைகளும் குலுங்கின.

அபரஞ்சியை வீட்டைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு வடிவாம்பாள், மோகனா, வரதன் ஆகிய மூவரும் நாகபட்டினத்திற்கு சர்க்கஸ் பார்க்கப் புறப்பட்டார்கள்.

அன்றைய தினம் திருவாரூர் ரயில்வே பிளாட்பாரத்தில் ஆறு மணி ரயில் ஆறு மணிக்கே வந்துவிட்டது. ஆனால், ஆறு மணிக்கு

அஸ்தமிக்கும் சூரியனோ நால் மணி நேரம் அப்படியே நின்று மோகனாவின் அழகைப் பார்த்தான். அரும்பாகத் தொடுத்து அம்மா கையால் அவள் தலையில் வைத்த மல்லிகை மலர் மலர்ந்து திருவாரூர் பிளாட்பாரம் முழுவதும் வாசனையை நிரப்பியது.

ஸ்டேஷன் காப்பிக் கடையில் காப்பியை ஆற்றிக்கொண்டிருந்த ஒருவர் பிளாட்பாரத்தில் நடந்துசெல்லும் கொடி மின்னலைப் பார்த்துவிட்டு, காப்பியையும் விட மனமில்லாமல் ஒரு தம்ளர் பச்சைத் தண்ணீரைக் கொதிக்கும் காப்பியில் கொட்டிக் கலந்து குடித்து விட்டு ஓடி வந்தார். ஐ-ஆர் ரூமில் இருந்தவர்கள் எல்லாம் காற்றுக்காக வெளியே வந்து நின்றனர். ரயிலில் இருந்தவர்கள் திருவாரூர் ஸ்டேஷனைப் பார்க்க ஆசைப்பட்டு ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தனர். ஆனால், எல்லோரும் அகஸ்மாத்தாய்த்தான், அதிரூப சௌந்தர்யத்துடன் மாலைத் தெய்வமே மங்கையாகி வந்ததுபோல் வந்து நிற்கும் மோகனாவின் வடிவழகில் மயங்கினர்.

சுற்றி நின்றவர் மயங்கினர். சூரியன் மயங்கினான். சந்திரன் எட்டிப் பார்த்தான். மோகனாவை ஏற்றிக்கொண்டு நாகப்பட்டினத்துக்குப் போகிறோம் என்ற கர்வத்தில் ரயில் 'ஊ' என்று குதூகலமாகக் கூவியது. வாயில் விசிலை வைத்து "பிர்ர்ர்" என்று ஊதினார் கார்டு. அவர் கையில் இருந்த விளக்கு உயரத் தூக்கியபடி ஆடியது. ஆனால் என்ஜினோ போக மாட்டேன் என்றது. அவர் ஊத ஊத ரயில் புறப்படவில்லை. காரணம் வேறொன்றும் இல்லை. மோகனாவைப் பார்த்தபடி அவர் பச்சை விளக்குக்குப் பதில் சிவப்பு விளக்கை ஆட்டிக்கொண்டிருந்ததுதான்!

என்ஜின் டிரைவர் இறங்கி ஓடோடி வந்தார். கார்டு யாரைப் பார்க்கிறார் என்பதை அவரும் பார்த்தார். பிறகு, பச்சை விளக்குக் காட்டப்பட்டது. பறந்தது ரயில், பத்து மைல் வேகத்தில்!

நாற்பத்து இரண்டாம் அத்தியாயம்

# கலைப் பேச்சோ! வலை வீச்சோ!



நெருப்பை ஊதினால் பற்றிக்கொள்கிறது. விளக்கை ஊதினால் அணைகிறது. ஊதுவது ஒன்றுதான். ஆனால், நடப்பதோ சூழ்நிலைக்கு ஏற்ப மாறி மாறி நடக்கிறது. சண்முகத்தின் மனத்தில் இருந்த நீறு பூத்த நெருப்புக்கு, வைத்தி ஊதியது தூபம் போட்டதாகிவிட்டது. அந்த நெருப்பு பற்றி, சண்முகத்தின் உள்ளத்தை எரிக்கத் தொடங்கியது.



மோகனா மைனரை அடையப் போகிறாள் என்று அவனுக்கு இருந்த சந்தேகம் வைத்தியின் பேச்சிலிருந்து ஊர்ஜிதமாகிவிட்டது.

ஆட்டத்திலே தோற்றால் விளையாட்டு; அன்பிலே தோற்றால் அதுவே வினை அல்லவா?

ஆதலால், சண்முகசுந்தரம் மலாய் நாட்டுப் பயணத்தை நிச்சயம் செய்துவிட்டான்.

அடுத்த கப்பலிலேயே புறப்பட்டுவிடுவது என்றும், ரமாமணி சர்க்கஸ் கம்பெனியை இந்த ஆட்டத்துடன் இந்த ஊரில் நிறுத்திவிடுவது என்றும் தீர்மானம் ஆகிவிட்டது.

'இடத்துக்கு முந்துங்கள்! இதுவே கடைசி ஆட்டம்!' என்ற விளம்பரம் ஊர் முழுதும் வரலாயிற்று. சர்க்கஸ் கொட்டகையில் கூட்டம் தாங்கவில்லை. காலரி எல்லாம் நிரம்பிவிட்டது. காலரிகள் ஆணியை மாத்திரம் போட்டு அடித்திருந்தால் மடமடவென்று ஒடிந்திருக்கும். நல்ல வேளையாக ஒணாங்கொடிகளால் கட்டப்பட்டிருந்ததால் எத்தனை பேர் ஏறி உட்கார்ந்தாலும், ஏழையின் இதயம் போல், அவை வளைந்து கொடுத்துச் சுமந்தன. சோபாக்கள் மட்டும் நிரம்பவில்லை.

ரமாமணிக்கு வசூலைப் பார்த்து ஒருபுறம் சந்தோஷம்; மற்றொரு புறம் வருத்தம்.

"நாயனக்காரரே, நல்லா வசூல் ஆகுது. இந்தச் சமயத்திலே நிறுத்தப்படாதுங்க. இன்னும் ஒரு நாலு ஆட்டம் நடத்திவிட்டால் என்ன?"

"உனக்கு இதிலே பணம் என்ன மிச்சம் கிடைக்குமோ அதை நான் தரேன். இதுக்காகப் பயணத்தை 'டிலே' பண்ணாதே!"

"நீங்க ஏன் இப்படி அவசரப்படுறீங்க? நான்தான் எதிரிக்குப் பயந்து புறப்படறேன். நீங்க யாருக்குப் பயந்து இப்படி ஓடுறீங்க?"

"நீ எதிரிக்குப் பயப்படுறே. நான் இதயத்துக்குப் பயப்படுறேன். மனுசனுக்கு முதல் எதிரி மனசுதானே?"

"அப்படீன்னா அதை இந்த ஊரிலேயே கட்டி வச்சிட்டு வந்துடுவீங்களா?"

"நிழலும் நெஞ்சும் கூடத்தானே வரும். ஆனால், ஒரு வித்தியாசம். நிழல் பகல்லே மட்டுந்தான் வரும். நெஞ்சு பகல், ராத்திரி இரண்டு வேளையிலும் நம்மை விடாது."

"எனக்கு உங்களைக் கூட்டிப் போகவே பயமாயிருக்கு."

"ஏன், என்ன பயம்? நான் என்ன பேயா, பிசாசா?"

"சந்தேகப் பேய்ன்னு ஒண்ணு இருக்குங்க. அது ரொம்பப் பொல்லாத பேய். நம்ம ஊருக்குப் போனா, 'ரமாபாயும் சண்முகசுந்தரமும் கப்பலிலே போயிருக்காங்க என்பதுதானே நிஜம்?' ஆனால், அந்தப் பேய் அப்படிச் சொல்லாது. 'ரமாமணியும்

சண்முகமும் அக்கரைச் சீமைக்கு ஓடிப் போயிட்டாங்க'ன்னு சொல்லும்."

"அப்படிச் சந்தேகத்துக்கு நீ பயப்படுவதாயிருந்தால் நான் மாத்திரம் போகிறேன்" -

"நீங்க மட்டும் எதுக்குப் பயந்து இப்ப ஓடுறீங்களாம்?" என்று கேலியாய்க் கேட்டான் ரமாமணி.

சண்முகம் பதில் சொல்ல முடியாமல் திணறினான்.

இதை உபயோகப்படுத்திக்கொண்டு ரமாமணி மேலும் பேச ஆரம்பித்தாள். "முதலில் பெண். பெண் என்றாலே உங்களுக்குச் சந்தேகம். இரண்டாவது கண். அதுதான் சந்தேகத்துக்குக் காரணம். நாயனக்காரரே, கோச்சு வண்டியிலே ஓடுகிற குதிரையெல்லாம் ஏன் வேகமாக ஓடுது தெரியுமா?"

"ஏன் ஓடுது?"

"அதுக்கெல்லாம் கண்ணை மூடிப்பிடறாங்க. அதனாலேதான் அதுகளுடைய வாழ்க்கை வழியோடே வேகமாக ஓடுது."

"எதற்கு இவ்வளவு பீடிகை போடுகிறாய்?"

"அந்தப் பெண் மோகனா ரொம்ப நல்லவள். நீங்க பெண் மனசைத் தெரிந்துகொள்ளாமல் வீணாகிலே சந்தேகப்பட்டு, உங்க வாழ்வு, அதன் வாழ்வு இரண்டையும் பாழாக்கப் போறீங்க."

இதைக் கேட்டவுடன் சண்முகம் கோபத்தால் ஆவேசம் கொண்டான்.

"அப்படியானால் நான் அறிவற்றவனா? இனம் இனத்தோடே சேரும்னு சொல்லுவாங்க. அது சரியாயிருக்குதே. பொண் செய்த குற்றம் பொண்ணுக்குத் தெரியாது. நீ காகக்கு வித்தையாடறே. அவளும் காகக்குத்தான் வேடிக்கை காட்டுறா. பெண்ணும் பொன்னும் தானே இந்த உலகத்துக்குச் சத்துருக்கள்! சரி சரி, உன் உபதேசம் போதும். இந்தச் சண்முகத்துக்கு மலாய் நாடல்ல, மாநிலம் முழுவதுமே வேறொருவர் துணையில்லாமல் போகத் தெரியும். நான் வரேன்."

இவ்வாறு கோபித்துக்கொண்டு, சரசரவென்று நடந்துவிட்டான் சண்முகம்.

"சண்முகம், சண்முகம்" என்று கூப்பிட்டுக்கொண்டே திரைவரையில் வந்துவிட்டாள் ரமாமணி. திரையைக் கிழித்துக்கொண்டு வரமுடியாத நிலையில் அவள் இருந்ததால் அங்கேயே நின்றாள்.

'கிரீன் ரூமி'லிருந்து புறப்பட்ட சண்முகம் வேகமாக வளையத்தின் மேல் வைத்திருக்கும் செங்கல் சுவரைத் தாண்டினான். சேர், பெஞ்சு, காலரி இவைகளிடையே நுழைந்து, கூடாரத்தின் வாசலுக்கு வந்தான். சட்டென்று நின்றான். வெறித்துப் பார்த்தான். அவன் எதிரில் ஜகஜ்ஜோதியாக அழகு குலுங்க ஒரு உருவம் நின்றது.



அது வேறு யாரும் அல்ல, மோகனாவேதான்! இருவரும் ஒருவரை யொருவர் வெட்டிவிடுவது போல் பார்த்தார்கள்.

எதிர்பாராமல் அவளை அங்கு சந்தித்ததும் அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவள் அழகு அவனைப் பார்த்து ஏளனம் செய்தது. அவள் அலங்காரம் அவனைக் கேலி செய்து சிரித்தது. அவளுக்காக ஏங்கித் தவித்து, தான் வாடுகையில் அவள் உல்லாசமாகப் பட்டுப் புடைவை கட்டி, பொட்டிட்டு, மை தீட்டி, புது மணப்பெண் போல் வந்து நிற்பதை அவன் மனம் பொறுக்கவில்லை.

இதே நிலையில்தான் மோகனாவும் திகைத்தாள். வரதன் சொல்லியது நிசந்தான். அவன் அந்த சர்க்கஸ்காரப் பெண்ணோடு உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டுத்தான் வெளியே போகிறான் என்று அவளுக்குத் தோன்றியது. தன்னை விரும்பிப் பார்த்த அதே கண்கள் இப்பொழுது தன்னை வெறுப்புடன் பார்ப்பதற்குக் காரணம் அவள்தான் என்று நினைத்தாள்.

அவர்கள் இருவரும் என்ன எண்ணத்துடன் பார்த்துக் கொண்டாலும், வடிவாம்பாளுக்கு அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்வதே பிடிக்கவில்லை.

"சரிதான், ஏன் பாதையிலே நிக்கறே? கண்டவங்க எல்லாம் வருவாங்க. மேலே இடிச்சுக்கிட்டுப் போவாங்க. வா, உள்ளே போய் உட்கார்ந்துக்குவோம்" என்று மோகனாவின் கையைப் பிடித்தாள் வடிவாம்பாள். மோகனா தாயைக் கோபத்துடன் ஒரு பார்வை பார்த்தாள். திரும்பினாள். அதற்குள் சண்முகம் வெளியேறிவிட்டான்.

மகள் கையைப் பிடித்துக்கொண்டு இழுத்து வந்து, தங்களுக்குப் போடப்பட்டிருந்த சோபாவில் அவளுடன் உட்கார்ந்தாள் வடிவாம்பாள்.

ரமாமணியும் திரை மறைவில் நின்று கூட்டம் முழுவதும் வந்து விட்டதா என்று பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய கண்கள் காலரியில் எத்தனை ஆள்கள், அதில் இலவசப் பாஸ் எத்தனை என்று பார்த்துக்கொண்டே வந்தன. அப்போது திருவாரூருக்குப் போனாவது யாரைப் பார்க்கவேண்டுமென்று அவள் துடித்துக்கொண்டு இருந்தாளோ, அந்த மோகனாவே ஆட்டம் பார்க்க வந்திருப்பதைக் கண்டவுடனே ஆனந்தம் அவளை மீறியது.

மோகனாவுடன் பேசவேண்டும், சண்முகத்தின் நிலைமையும் அவளிடம் தெரியப்படுத்தி, உண்மையை அறியவேண்டும் என்று எண்ணியது அவள் மனம்.

அந்தச் சமயத்தில் முதல் நாள் 'இந்தியக் பேபி'. நான் விரட்டிய மத்தளக்கார வரதன், மோகனாவுக்குப் பின்புறம் ஒரு ஆசனத்தில் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள்.

✦ ✦ ✦

வரதனிடம் ஒரு ஆள் வந்து, "உங்களை எஜமானியம்மா கூப்பிடறாங்க" என்று அழைத்தான்.

வரதனுக்கு வஞ்சம் தீர்த்துக்கொள்ள இதுதான் சந்தர்ப்பம் என்று தோன்றியது. அவனுடைய கர்வம் இப்போது ஓங்கியது. "இதர் கொய்-நயீ-சாவ்-" என்று முதல் நாள் ரமாமணி சொன்னதைப் போலவே சொன்னான்.

"இல்லிங்க, உங்களைப் பார்க்கணுமாம்."

"என்னைப் பார்த்து என்னய்யா பிரயோசனம்? நான் என்ன பெரிய நாதஸ்வர வித்வானா? நான் சாதா மிருதங்கக்காரன்தானே!" என்றான் வரதன்.

தான் ரொம்பக் கிண்டலாகப் பேசிவிட்டதாக அவனுக்கு அபிப்பிராயம்.

"இல்லீங்க, உங்களைக் கையோடு கூட்டிட்டு வரச் சொன்னாங்க."

"கை எதுக்கு, அங்கு ஏதாவது மிருதங்கம் இருக்குதா? அட, போய்யா, போ. டிக்கெட்டு, சர்க்கஸ் பார்க்கிறதுக்குத்தான், எஜமானி அம்மாளைப் பார்க்கிறதுக்கு இல்லை, போய்ச் சொல்."

வரதனுக்கும், அந்த ஆளுக்கும் நடக்கும் வாக்குவாதத்தை உள்ளே இருந்தே கவனித்தாள் ரமாமணி. ஒரு மணியை அடித்தாள். வாதனுக்குப் பக்கத்தில் இருந்த ஆள் உள்ளே போய்ச் சேர்ந்தான்.

அதற்காக அவள் முயற்சியை விட்டுவிடவில்லை. மறுபடியும் ஒரு பயில்வானிடம் ஏதோ சொல்லி வரதனிடம் அனுப்பினாள். அனுப்பிய பயில்வான் வரதன் கண் காண நின்றுகொண்டு தன் முண்டாவை ஒரு தட்டுத் தட்டினான். இதைப் பார்த்த வரதனும் தன் முண்டாவை லேசாகத் தட்டிக்கொண்டான். அவன் கையை நீட்டி, மடக்கி, தன் தசைக்கட்டைப் பார்த்தான். வரதனும் 'நான் மாத்திரம் என்ன, நானும் பயில்வான்தான்' என்ற எண்ணத்தில் தன் கையையும் நீட்டி மடக்கினான். பயில்வான் வரதனைப் பார்த்துப் புன்னகை புரிந்தான். வரதனும் பதிலுக்குப் புன்னகை புரிந்தான்.

"கொஞ்சம் இங்கே வாங்களேன்!" என்று கை ஜாடையாய்க் கூப்பிட்டான் பயில்வான்.

"என்னையா கூப்பிடறீங்க?" என்று சாடையால் கேட்டுக் கொண்டே அவன் அருகில் போனான் வரதன். 'ஜேய் ஹனுமான்' என்றான் பயில்வான். வரதனோ 'ஜெய் ஹனுமான்' என்று சொல்லித் தன் தாயத்தைத் தொட்டுக் கும்பிட்டான்.

"ஏது, உடம்பை நல்லா வைச்சிருக்கீங்களே! நீங்க என்ன சாப்பிடறது? பாதாங்கொட்டையா பிஸ்தாவா?" என்றான் பயில்வான்.

"பாதாம், பிஸ்தா எல்லாம் வேண்டாங்க! தவறாமல் பழையது சாப்பிட்டு, பஸ்கி, தண்டால் எடுத்துக்கொண்டு வந்தால் போதும்"



என்று சொல்லி, வரதன் தனக்கு உடற்பயிற்சியில் உள்ள அக்கறையை எடுத்துக் காட்டிக்கொண்டான்.

"நீங்களும் கொஞ்சம் தேகாப்பியாசம் எல்லாம் செய்திருக்கீங்களோ?" இந்தக் கேள்வி கிடைத்தால் வரதன் விடுவானா?

"காலம்பர எழுந்ததும், 108 பஸ்கி, அரை மணி நேரம் கர்லாக் கட்டை, கொல்லைக் கிணற்றிலிருந்து 18 குடம் தண்ணீர்!"

"தண்ணி எதற்கு? குளிக்கிறதுக்கா?"

"இல்லை, அதுக்கு எப்படி 18 குடம் போதும்? தோளில் தூக்கிக் கொண்டாந்து கொட்டுவேன். அவ்வளவும் தேகாப்பியாசம்."

"கொஞ்சம் இப்படி உள்ளே போவோமா?"

"ஆகா! போவோமே!" என்று அவன்கூடக் குஷியாய்ப் போனான் வரதன். தன்னைப்போல் ஒரு பயில்வான் கூப்பிடும்போது அந்தக் கௌரவத்தைத் தட்டக்கூடாது என்ற எண்ணத்தில்தான் அவன் போனான்.

ஆனால், யாரை இவ்வளவு கேவலமாக வரதன் பேசினானோ அந்த ரமாபாயின் எதிரிலேயே வந்து நின்றான் அவன்.

வரதன் உள்ளே வந்தவுடன், பக்கத்திலிருந்தவர்கள் வெளியே போய்விட்டார்கள்.

"தம்பி!" என்றாள் ரமாபாய்.

வரதன் திகைத்தான். இவள்கூடத் தமிழ் பேசுகிறாளே என்று எண்ணினான். இருந்தாலும் அவன் கிண்டல் அவனை விட்டுப் போகுமா?

"ஏன் அக்கா?" என்றான் வரதன்.

"உனக்கு ஏன் என்னைக் கண்டால் பிடிக்கல்லே?" என்றாள் ரமாமணி.

"சில பேருக்கு உப்பு அதிகம் வேணும். சில பேருக்குச் சர்க்கரை அதிகம் வேணும். நான் உப்பு உறைப்பு அதிகம் பிடிக்காதவன். உன் நடவடிக்கை எனக்குப் பிடிக்கல்லே" என்று கம்பீரமாக உரைத்தான் வரதன்.

"அதென்னப்பா அப்படி? உன்னோடு வந்திருப்பவள்தானே மோகனாம்பாள்" என்றாள்.

"ஏன்? அது இங்கே வரக்கூடாதா? காசு கொடுத்து டிக்கட்டு வாங்கி இருக்கோம்" என்றான் வரதன்.

வரதனின் பேச்சு அவளுக்கு மேலும் ஆச்சரியத்தை உண்டாக்கியது.

"நான் யார் என்று உனக்குத் தெரியுமா?"

"தெரியுமே! ஒண்ட வந்த பிடாரி!"

"எந்த மாதிரிலே?"

"சிக்கல் தம்பி பேரைச் சொல்லிக்க வந்தவ. சண்முகத்தைக் கைக்குள்ளே போட்டுக்கிட வந்தவ."

"என்ன உளறுகிறாய்!"

"எனக்கா தெரியாது. நான்தான் ரெண்டு நாளா உங்களை வேவு பார்த்துக்கிட்டே வரேனே!"

இதைக் கேட்டதும் ரமாமணி திடுக்கிட்டாள். அவள் பயந்த பயம் நிஜமானதைக் கண்டு ஆச்சரியப்பட்டாள். இந்த நேரத்தில் உலகத்தின் போக்கை எண்ணியதும், அவளுக்குச் சிரிப்பு வந்தது. கலகலவென்று சிரித்துவிட்டாள்.

"பொம்பளை சிரிச்சால் போச்சு" என்றான் வரதன்.

"ஆமா, சிரிச்சால் போச்சு, பேசினால் போச்சு, பார்த்தால் போச்சு. ஏன், பெண்ணாய்ப் பிறந்தாலே போச்சு! இதெல்லாம் ஆணுக்கு மாத்திரம் கிடையாது! ஆமா, நீ வேவு பார்த்துக் கண்ணாலே கண்டதை எல்லாம் உங்க மோகனா கிட்ட சொன்னாயா?" என்று குறும்புடன் கேட்டாள்.

"ஏன்? சொல்லாமல் இருப்பேனா?" என்றான் வரதன்.

"அடேயப்பா! இதைச் சொல்லாமல் இருந்தால் தலையே வெடிச்சுவிடாதா? தம்பி, உலகம் கெடுவதெல்லாம் உங்களாலேதான்! சரி, உங்க மோகனாவை நான் சற்றுப் பார்க்கவேண்டும். உள்ளே கூப்பிடு."

"நீ ஒண்ணும் பார்க்கவேண்டாம். அவள் உன்னைவிட அழகுதான். உன்னைக்காட்டிலும் சண்முகத்துக்கு ஏத்தவள்தான்."

ரமாமணிக்கு அவமானம் தாங்கவில்லை. வரதன் மேல் கோபம் வந்தது.

"மத்தளக்காரரே, மரியாதையாய்ப் பேசும். உமக்குப் பரமானந்தப் பரதேசியைத் தெரியுமா?"

"இங்கே கொஞ்சம் தண்ணீர் இருக்குமா?"

"ஏன்?"

"இல்லே.. உங்க வாயாலே அந்தப் பெரியவர் பேரைக் கேட்டதுக்கு என் காதைக் கழுவிக்கணும்."

"ரொம்ப நல்லா பேசறீங்க. அந்தப் பெரியவர் உங்களை அழகர் கோவிலிலே காப்பாத்தினாரே. அதுவாவது நினைவு இருக்கா?"

"உயிருள்ள மட்டும் மறக்க மாட்டோம். நாங்க நன்றி மறக்கற வங்க இல்லே."

"அப்போ, ஏதாவது ஒரு பெண் உதவி செய்தாள் என்று அவர் சொன்னாரா?"

"பொண்ணா அது? தெய்வமில்ல அது! எங்களுக்கு ஆபத்து வருதுன்னு சொல்ல எங்க ஜாகைக்குத் தேடி வந்தாங்களாம். அப்புறம் சாமியார் கிட்ட விஷயத்தைச் சொல்லிக் காப்பாத்துங்கன்னு கெஞ்சினாங்களாம். அதற்குப் பிறகுதான் சாமியார் வந்து எங்களைக் காப்பாத்தினாராம். அந்த அம்மாவைப்பத்தி உனக்கென்ன?"



"அந்த அம்மா இப்போ மோகனாவைப் பார்க்க விரும்பறாங்கன்னு சொல்லிக் கூப்பிட்டுக்கொண்டு வாரும்."

"அந்தம்மாவா! அவுங்க எங்கே இருக்காங்க?" என்றான் வரதன் ஆவலுடன்.

"நான்தான் அவள்!" என்றாள் ரமாமணி.

இதைக் கேட்ட வரதன் பிரமித்தான். மோகனாவின் உயிர் இவளால்தான் காப்பாற்றப்பட்டது என்பதை அறிந்ததும் உள்ளம் நன்றியால் நிறைந்தது. இரு கைகளையும் உயரத் தூக்கியபடி, "அம்மா, கும்பிடறேனுங்க. தெரியாமல் உங்களைப்பத்தி வித்தியாசமா பேசிட்டேனுங்க" என்று வணங்கினான். அவன் கண்களிலே ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

இதைப் பார்த்த ரமாமணிக்கும் கண் கலங்கியது. "நானும் தெரிஞ்சு காப்பாத்தலே தம்பி. ஏதோ தெரியாமல்தான் என் வாழ்வில் ஒரு நன்மையைச் செய்துட்டேன். மோகனாவை நான் அவசியம் பார்க்கணுமே, கூப்பிடறியா?"

"இதோ" என்று வரதன் வெளியே வந்தான்.

"இடத்துக்கு முந்துங்கள்" என்று எப்போது சர்க்கஸ்காரர்கள் சொல்லிவிட்டார்களோ முந்தத்தானே வேண்டும்? கூட்டம் முந்திக் கொண்டுதான் வந்தது. முன் வரிசை பாதி நிரம்பியும் நிரம்பாமலும் இருந்தது. வடிவாம்பாளோ சேரில் உட்கார்ந்தது முதல் வழக்கம்போல் தூக்கக் கலக்கத்தில் ஆழ்ந்துவிட்டாள்.

வரதன் வந்து, "உன்னை சர்க்கஸ்காரப் பொண்ணு கூப்பிடுது உள்ளே வா" என்று அவசரமாய்ச் சொன்னதும், மோகனா ஆச்சரியத்துடன் எழுந்தாள்.

உள்ளே வந்ததும் வரதன் ரமாமணியைக் காட்டி, "இவங்கதான்" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தான். இதற்குள் மோகனா இடைமறித்து, "கண்ணாடியில் நீ பார்த்தது இவளைத்தானா?" என்றாள்.

"ஆம்!"

'இவள்தானா நமக்குப் போட்டியாக வந்தவள்' என்று மோகனா எண்ணியபடி இருக்கையில் ரமாமணியே ஆரம்பித்தாள்.

"அம்மா, எனக்குப் போட்டியாக நீ அழகர் கோவிலிலே ஆட வந்திருந்தாய்!"

"ஓகோ! அதற்குத்தான் இம்மாதிரி வஞ்சம் தீர்த்துக் கொண்டாயா?" என்றாள் மோகனா. அவள் கண்கள் கலங்கின.

"அல்ல, உன் ஆட்டத்தைப் பார்த்துவிட்டு, நான் அன்றைக்கு ஆடாமல் இருந்தேன்."

"ஏன், இல்லாவிட்டால் ஆடி ஜயித்துவிடுவாயோ? ஆட்டத்தில் நீ எனக்கு உயர்ந்தவள் அல்ல. அழகிலும் நீ எனக்கு உயர்ந்தவள் அல்ல. அவரை மயக்கியதில்தான் நீ என்னைவிட உயர்ந்தவள். நன்றாக நீயே அவரோடு சந்தோஷமாக இரு" என்று படபடவென்று பேசினாள் மோகனா.

"நிறுத்து!" என்று உத்தரவு போட்டது ரமாமணியின் குரல்.

"பேதைப் பெண்ணே! ஏன் சந்தேகம் பிடித்துப் பேசுகிறாய்? சண்முகத்தின் காவடியை பிடித்தவர்களுக்குக்கூட அந்தப் புத்தி வராது."

"இதை நீயா சொல்லுகிறாய்?"

"ஆம். அவரும் நானும் உடன்பிறந்தவர்களைப் போல் பழகுகிறோம். உன்னிடம் அவரைப்பத்தி பேசவேண்டும் என்பதற்காகவே உன்னை அழைத்தேன். நீ இங்கு வராவிட்டால் நானே திருவாரூர் வந்து உன்னைப் பார்த்திருப்பேன்."

"அடாடா! என்னிடம் என்னடி அம்மா உனக்கு அவ்வளவு அக்கறை?"

இதற்கு எப்படிப் பதில் சொல்வது?

தன்னைப் பார்த்துத் தன்னால் காப்பாற்றப்பட்ட மோகனாவே சந்தேகிப்பதை எண்ணி, குழந்தை போல் விசும்பலானாள் ரமாமணி. அப்போது வரதன் உரைத்தான்.

"மோகனா, நான் உன்கிட்ட இவங்களைப்பற்றிச் சொன்னதெல்லாம் தப்பு. இவங்கதான் நம்மை அழகர் கோயில் ஆபத்திலே இருந்து காப்பாத்தினவங்களாம். பரதேசியார் சொன்னது இந்த அம்மாதானாம். அந்தப் பாவி நாகலிங்கம் பகைக்குப் பயந்துக்கிட்டுத்தான் இந்த அம்மா மாறுவேஷத்தோடே இருக்காங்க" என்றான்.

"அவங்களே சொன்னாங்க. எனக்கும் அது ஒரு மாதிரியா தெரியும்" என்று சொன்னான்.

மோகனாவுக்கு அவன் சொன்னதைக் கேட்டதும் அந்த வண்டியும், சத்திரமும், நந்தவனத் தோட்டத்துப் பாழ்வீடும் கண்முன் வந்தன. அந்தப் பயங்கர ஆபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றியவள் ரமாமணிதான் என்றவுடன் அவளுக்கு மெய் சிலிர்த்தது. என்ன பேசுவது என்று தெரியாமல் திகைத்தாள். "அக்கா" என்று அவளை நன்றியுடன் கட்டிக்கொள்ளப் போனாள்.

"மோகனா! என்னைத் தொடாதே. நான் உன்னால் தொடத் தகுந்தவள் அல்ல. உன்னுடைய ஆட்டத்தையும் அழகையும் பார்த்துத்தான் அன்று மயங்கினேன். இன்று உன் குணத்தைக் கண்டு பரவசம் அடைகிறேன். உனக்காக இந்த ஜன்மத்தை நான் இழந்தாலும் சரி. இன்னும் எத்தனை பிறவி எடுத்தும் உதவி செய்யக் காத்திருக்கிறேன்" என்று கூறினாள் ரமாமணி.



"அம்மா, நான் உங்களுடைய உத்தம குணத்தை அறியாமல் சந்தேகப்பட்டுவிட்டேன்!" என்றாள் மோகனா உணர்ச்சியுடன்.

"மோகனா, அதனாலே குற்றமில்லை. எனக்கு அபவாதம் புதிதல்ல. இவ்வளவு கெட்டிக்காரப் பெண் நீ, சண்முகத்தைக் கைவிட்டுவிட்டாயே!"

"ஏன், அவர் ஏதாவது சொன்னாரா?"

"எல்லாம் சொன்னார். பணம் உன்னை மயக்கிவிட்டது என்றார். உன் வீடு தேடி அவர் வந்தபோது, யாரோ பணக்காரரை உன் வீட்டில் கண்டதாகவும் சொன்னார்."

மோகனா அப்படியே பிரமித்து நின்றாள். ரமாமணி மேலும் பேசினாள்.

"அழகும் கலையும் நிரம்பியவள் நீ. அவர்தான் உனக்கேற்ற நாயகர். நீகூட இப்படி ஆகிவிட்டாய் என்று எண்ணி அவர் இதயமே உடைந்துவிட்டது. அவருடைய சிரிப்பும் விளையாட்டும் போய் ஏக்கமும் பெருமூச்சும் அவரை ஆட்கொண்டுவிட்டன. இனி அவர் எங்கு வாசிக்கப் போகிறார்? எத்தனை நாள் உயிர் வாழப் போகிறார் என்று என்னால் சொல்ல முடியாது. ஐயோ! இந்த வருத்தம் தாங்காமல் அவர் ஊரை விட்டே ஓடக்கூட நிச்சயம் செய்துவிட்டார். இங்கு இருந்தால் அவமானம் என்று மலாய் நாட்டுக்கு, அடுத்த கப்பலிலேயே புறப்படப் போகிறார்—"

அவள் சொல்லச் சொல்ல மோகனாவுக்குத் துயரம் தாங்கவில்லை.

"அக்கா! என் உயிரைப் பிரிந்தாலும் பிரியேன்! அவரைப் பிரிய என்னால் முடியாது! நான் ஒரு பாவத்தையும் அறியேன், அக்கா! இதெல்லாம் என் தாயாரால் வந்த வினை" என்று அலறிவிட்டாள் மோகனா.

இதைப் பார்த்த ரமாமணிக்கும் கலக்கம் வந்தது.

"மோகனா, வருந்தாதே! நீ உத்தமி என்று எனக்குத் தெரியும். சற்று முன்கூட அதையேதான் அவரிடம் சொல்லிக்கொண்டிருந்தேன்" என்றாள்.

"அக்கா, எதைச் சொல்லி என்ன பிரயோசனம்? அவர் ஊருக்குப் போவதாகச் சொல்கிறீர்களே, அவர் பயணத்தைத் தடுக்கும் வழி என்ன?"

"எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. நீ அவர் காலில் விழுந்து கதறினாலும் சந்தேகம் இப்போது தீராது. ஆனால் அவர் பயணத்தை நீ தடுத்தே ஆகவேண்டும். இன்று அவர் இருக்கும் பித்துப் பிடித்த நிலையில் அவர் எந்த நிமிஷத்தில் என்ன சொல்வார், என்ன செய்வார் என்பதே தெரியாது. உள்ளம் உடைந்துவிட்டால் யோசனை அதில் தங்காது."

ரமாமணி கூறியவைகளைக் கேட்ட மோகனா யோசித்த வண்ணம் வெளியே வந்து தன் ஆசனத்தில் அமர்ந்தாள்.

இதே சமயத்தில் வெளியே சென்ற சண்முகத்துக்கு "யாருக்குப் பயந்து ஓடுகிறாய்?" என்று ரமாமணி கேட்ட கேள்வி நினைவில் வந்தது.

'யாருக்குப் பயந்து நாம் ஓடுகிறோம்?

உலகில் இவள் மாத்திரம் என்ன உயர்வானவள்? இவளுக்கு நாட்டியம் தெரிந்தால் நமக்குச் சங்கீதம் தெரிகிறது. சேச்சே! ஒரு ஆண் மகன் பெண்ணைக் கண்டு பயப்படுவதா?' தனக்குள் ஒரு சிரிப்புச் சிரித்துக்கொண்டான் சண்முகம். உடனே தன்னுடைய கடுக்கன், மோதிரம் எல்லாவற்றையும் ஒரு துடைப்புத் துடைத்துக் கொண்டான்.

அவசரமாகக் கம்பெனி வீட்டுக்குச் சென்றான். பெட்டியைத் திறந்தான். அற்புதமான காஷ்மீர் சால்வையை எடுத்துப் பிரித்து மேலே போட்டான். நெற்றியில் திலகமிட்டான். மீண்டும் சர்க்கஸ் கொட்டகையில் நுழைந்த சண்முகம் ஒருமுறை சுற்றிலும் பார்த்தான். ஜம்மென்று மாப்பிள்ளை போல் நடந்து வந்து, மோகனாவுக்கு எதிர்ப்புறத்தில் ஒரு ஆசனத்தின் மேல் அமர்ந்தான். அவளை ஒரு முறை உற்றுப் பார்த்தான்.

"என்ன பொண்ணே, சர்க்கஸ் பார்க்க வந்திருக்கிறாயா?" என்று கேட்பது போல் இருந்தது அந்தப் பார்வை.

அவளும் ஒரு முறை எறிட்டுப் பார்த்தாள். 'ஆமாம் ராஜா, என்ன பார்க்கிறே?' என்பது போல் இருந்தது அந்தப் பார்வை.

இவர்கள் இருவர் பார்வையும் ஒருவருக்கு வெறுப்பை உண்டாக்கியது. வேறு ஒருவருக்குக் களிப்பை உண்டாக்கியது. முதலில் சொன்னது வடிவாம்பாள். இரண்டாவது சொன்னது ரமாமணி என்பதில் யாருக்கும் சந்தேகம் வராது.

பியாண்டுக்காரன் துரித காலத்தில் ஊதத் ஆரம்பித்தான். முதல் மணி அடிக்கப்பட்டது. கொட்டகையில் பரபரப்புக் காணப்பட்டது.

அந்தச் சமயம் சண்முகத்தின் முகமும் மோகனாவின் முகமும் ஏக காலத்தில் எதைக் கண்டோ ஆத்திரம் அடைந்தன. ஏன்? இருவரும் பார்க்க ஸ்ரீமான் வைத்தியும் சிங்கபுரம் மைனரும் வந்து ஒரு புறம் அமர்ந்தார்கள். சீறினான் சண்முகம். சீறினாள் மோகனா. ஆனால், சிரித்துக்கொண்டே வடிவாம்பாளைக் கும்பிட்டார் வைத்தி.

"அடி பாவி! இவங்களோடேயா நீ வந்திருக்கே சர்க்கசுக்கு?" என்று நினைத்தான் சண்முகம்.

மோகனா, மைனர் இருக்கும் திக்கைப் பார்த்துவிட்டு வெறுப்புடன் திரும்பினாள். சண்முகம் இதைப் பார்த்தான். 'உம்! நான் எதிரில் இருக்கிறேன் என்றுதானே அப்படி வெறுக்கிறாய்? என்ன பாசாங்கு!' என்று எண்ணினான்.



இந்தச் சமயத்தில் ஆட்டம் ஆரம்பமாகிவிட்டது. வடிவாம்பாளோ ஆட்டத்தை ரசிக்கத் தொடங்கினாள்.

"என்ன வைத்தி, நீர் சொன்னபடி இங்கேயே வந்துட்டாங்களே!" என்றார் மைனர்.

"நானா சொன்னேன், அந்த வேலைக்காரி எங்கேயோ டூரப் செய்துகொண்டு புறப்பட்டதாகச் சொன்னாள். அப்புறந்தான் சர்க்கசா இருக்கும்னு நினைச்சேன்" என்றார் வைத்தி.

"இல்லே, அவுங்க இங்கே வருவதாகத் தெரிஞ்சால் நம்ம வண்டியிலேயே வந்திருக்கலாமே!"

"சரிதான், நீர் என்னை இறக்கிவிட்டுடுவீர்!" - மைனர், வைத்தி இருவரும் சிரித்தார்கள்.

'அட பாவிகளா! சிரிக்கிறீங்களா? சிரியுங்க! என்ன திமிரு இருந்தால் அந்த ஆள் என்னையே மேளத்துக்குக் கூப்பிட்டிருப்பான்?' என்று துடித்தான் சண்முகம்.

சண்முகத்தின் ஒவ்வொரு பார்வையும் மோகனாவுக்குத் துயரத்தை அளித்தது. அவன் ஏங்கி விடும் பெருமூச்சைக் கண்டு அவள் பதறினாள். அவனை முன்பு பார்த்ததற்கு இப்பொழுது அவன் உடல் இளைத்திருப்பதையும், அவன் கண்களில் துயரமே குடி கொண்டிருப்பதையும் காணக்காண அவள் பெருமூச்செறிந்தாள். அவனைப் பித்தாக்கிய தன் அழகை நொந்துகொண்டாள். எதிரில் இருவரும் அமர்ந்திருந்தும் இடையே பெரிய ஆறு போல் கிடக்கும் சந்தேகப் பேயைச் சபித்தாள். இப்படிப் பேசாமல் ஒருவரையொருவர் பார்ப்பதுகூட இனிக் கிடைக்காமல் போய்விடுமே என்று எண்ணியபோது, அவளுடைய கண் கலங்கியது. உடனே அவன் பிரயாணத்தை எப்படித் தடுப்பது என்று யோசித்தாள்.

'அவர் ஒரு கலைஞர். உயிரைக்காட்டிலும் கலையைப் பெரிதாக மதிப்பவர். இப்போது அந்தக் கலையை, நெருப்பைச் சாம்பல் மூடியது போல், கவலை மூடி இருக்கிறது. அவரை வம்புக்கு இழுக்க வேண்டும். மறுபடியும் அவருடைய சபதத்தை அவருக்கு நினைவூட்ட வேண்டும். கலையால்தான் அவர் மனம் ஒரு நிலைக்கு வரும். அதுதான் தகுந்த வழி. பெண்ணுக்குச் செல்வம் கண்ணீர் மட்டும் அல்ல; தைரியமும் வேண்டும்' என எண்ணினாள். அன்பு அவளுக்குத் தைரியத்தைக் கொடுத்தது. வம்புக்கு இழுக்கும் சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டு துடித்தாள் மோகனா.

'பார்' ஆட்டங்கள் முடிந்தன. இடை வேளைக்காக மணி அடிக்கப்பட்டது. கூட்டமெல்லாம் சென்றதும் சண்முகமும் எழுந்து வெளியே சென்றான்.

மோகனாவைக் கடந்து அவன் செல்லும்போது, எழுந்தாள் மோகனா. "எதுக்கு இப்படிப் பயந்துக்கிட்டு ஓடணும்? பாவம், கால் தடுக்கிடப் போகுது!" என்றாள் துடுக்காக.

திரும்பினான் சண்முகம்.

"ஆடற காலில்லே அடிக்குப் பயப்படணும்?" என்றான்.

அவன் பதில் சொல்லியதில் அவளுக்குத் தெம்பு உண்டாயிற்று.

"ஓடற காலுக்கும் காயம்பட்டா ஓட முடியாது" என்றாள்.

"பின்னே என்ன, உன் சோபனத்துக்கு வந்து ஊதுவேன்னு பாக்கிறியா?"

இந்தக் கேள்வி நாராசம் போல் விழுந்தது அவள் காதில். தன்னை மறந்தாள்.

"அது நடக்கிறபோது பாத்துக்குவோம்! அய்யா சொன்ன சொல்லைக் காப்பாத்திப்பிட்டாரு. சோபனத்துக்கு வந்து ஊதறாராமில்லே! பேச்சைப் பாரு!"

"என்ன, சொன்ன சொல்? யாரிடம் என்ன சொன்னேன்?"

"ஆமாம் திருவாரூர் பாரி நாயனத்தை எடுத்து ஊதிவிட்டீங்களா?"

"ஏன், உன்கிட்டதான் வித்வான் என்கிற பட்டம் வாங்கணுமோ?"

"என்கிட்ட பட்டம் வாங்க வேண்டாம். தோத்து ஓடறேன்னு ஒப்புக்கொள்ளுங்க. 'தில்லானா ஊதுறேன், ஆடட்டும்'னு ஆயிரம் பேருக்கு முன்னாலே வீறாப்புப் பேசினீங்களே!"

"ஏன், மைனர் மனைவி ஆட மத்தளமும் ஒத்தும் போதாதோ? இந்த மகாவித்வான்தான் வாசிக்கணுமோ?"

"மகா வித்துவானாம், மகா வித்துவான்! என் கால் சலங்கைக்குப் பயந்துகிட்டுத்தானே கப்பல் ஏறி ஓடப் போறீங்க. மங்கையிடம் போட்ட சபதத்தை ஜயிக்க முடியாம மலாய் நாட்டுக்கு ஓடுறீங்க. உங்களுக்குப் பேச்சு வேறு வேண்டியிருக்கிறதா?"

"என்ன சொன்னே? இந்தச் சண்முகம் உயிரோடிருக்கும் வரையிலே தன் வித்தையை யாரும் குறை சொல்ல விடமாட்டான்."

"உயிரோடிருக்கிற வரையிலா, ஊரிலிருக்கிற வரையிலா?"

"போட்டிக்குப் பயந்து ஓடுகிறவன் நானல்ல. இதிலிருந்து பதினைந்தாவது நாள் நான் வாசிக்கிறேன். நீ ஆடி ஆடிக் கீழே விழுந்து அலறும்படி செய்கிறேன்."

"இந்த மோகனா அப்படிப்பட்டவள் அல்ல. ஆடி ஆடிக் கீழே விழமாட்டாள். அவளுடைய ஆண்டவனின் காலடியில் விழுவாள்."

"உனக்கு ஆண்டவன் வேறு இருக்கிறானா?"

"இல்லாமலா சொல்லுகிறேன். இந்தக் காலிலே கட்டிய சலங்கை கலகலவென்று குலுங்குவதை அவர் காணட்டும். என் கருத்திலே கொண்ட பிரேமை என்னை ஆட்டி வைப்பதைப் பார்க்கட்டும். சொல்லச் சொல்லக் காது கேட்காத அந்தக் கற்சிலை என் ஆட்டத்தில் கலங்கட்டும். அறிவொளி வீசட்டும். அன்பாய் மாறட்டும்.



அதன் காலடியில் என் உயிரையே காணிக்கையாக எடுத்துக் கொள்ளட்டும்" என்று சொன்னதும் அதுவரையில் அவன் அடக்கிக் கொண்டிருந்த துக்கம் எல்லாம் பொங்கி வந்தது. அழுதவண்ணம் தாயின் பக்கம் திரும்பினாள்.

"சபாஷ்! அப்படிச் சொல்லு" என்று வைத்தியின் குரல் கேட்டது. எல்லோரும் திரும்பினார்கள். இவர்கள் சண்டையை வேடிக்கை பார்த்துக்கொண்டே மைனரும் வைத்தியும் அங்கே நிற்பதைக் கண்டார்கள்.

"எங்கே, நீ மாத்திரம் மோகனாவை ஜெயிச்சுப்பிடு உனக்குத் தங்க நாயனம் 'பிரசண்ட்' பண்ணறேன்" என்றார் மைனர்.

"உன்னைக் கண்டுதான் நாதசுரம் கத்துக்கிட்டேனோ? உன் தங்கத்தைக் கொண்டுபோய் உடைப்பிலே போடு! அவளை நான் தோற்கடிப்பதை உன் கண்ணாலே பாரு" என்று வெறுப்புடன் கூறிவிட்டு மிடுக்காக நடந்தான் சண்முகம்.

நாற்பத்து மூன்றாம் அத்தியாயம்

## மைனரின் மனோதர்மம்



எவனால் தன் வாழ்வில் இவ்வளவு தகராறும் வந்ததோ அந்த மைனரே, இப்பொழுதும் வந்து குறுக்கிட்டதைக் கண்ட மோகனா வெகுண்டாள்.

"இவுங்களை யாரம்மா மத்தியஸ்தத்துக்குக் கூப்பிட்டது? சர்க்கஸ் பார்க்க வந்தா அதைப் பார்த்துட்டுப் போகணும். கம்மா தங்க நாயனம் பிரசண்டு பண்றம்னு ஏன் சொல்லணும்?" என்றாள் மோகனா.

"இந்தா, இதிலெல்லாம் நீ பேசக்கூடாது. நீ உனக்கு மாத்திரம் சொந்தமில்லை. நீ இந்த நாட்டின் கலைச்செல்வம். உன்னை அவமானம் செய்கிறவன் கலைக்கு விரோதி. அவனிடம் சண்டை பிடிக்க ரஸிகர்களுக்கு எல்லாம் உரிமை உண்டு" என்று ஊடே புகுந்து பேசினார் வைத்தி.

மோகனாவைத் திகைக்கச் செய்தது வைத்தியின் விசித்திரவாதம். சற்று நேரம் யோசித்தாள். இந்தச் சற்று நேரத்திற்குள் மைனர் என்னென்னவோ யோசித்தார். இதற்குள் வெளியே போன கூட்டம் திரும்பி வந்துவிட்டது. ஆகையால், மோகனா சரேல் என்று தன் ஆசனத்தில் போய் அமர்ந்தாள். மைனரும் வைத்தியும் அவரவர் இடத்தில் போய் அமர்ந்தார்கள்.

"ஓய், நீர் என்னமோ நீக்குச்சின்னு சொன்னீரே. கோபம் வந்துட்டா அவ மத்தாப்புங்காணும்!" என்றார் மைனர்.

"ஏன், அழகு கண்ணைக் கூசுதோ?" என்றார் வைத்தி.

"ஆமாங்காணும், மெள்ளச் சொல்லிப் பாருமே! நம்ம வண்டியிலேயே வந்துடலாம்னு சொல்லி..."

"இதெல்லாம் சொல்லி வராது மைனர்வாள். ஒரு காலத்திலே, தானே வரும். இப்ப உம்மையும் என்னையும் கேட்டுண்டா அந்த நாதஸ்வரக்காரனுக்குக் குடுத்தா...?"

"ஆமா, அது என்ன கலகம்?"

"என்னவா? வந்து உட்கார்ந்தது முதல் அவளையே பாத்துக்கிண்டிருந்தான். நீர் கவனிக்கல்லியோ?"

"இல்லையே!"

"சரிதான், நீர் சர்க்கசாவது பார்த்தீரோ?"

"அதுவும் இல்லை"

"பின்னே நீர் எப்படி அவனைக் கவனிச்சிருக்க முடியும்? உங்க மாமா கடம்பவனம் வந்ததையாவது பார்த்தீரோ?"

இதைக் கேட்டதும் மைனருக்கு ஒரு கணம் மூச்சு நின்று மறுபடியும் வந்தது. பாதி பயமும் ஆச்சரியமும் கலந்த குரலில், "என்ன, மாமாவா?" என்று கேட்டார்.

"ஆமா"

"எங்கே உட்கார்ந்திருந்தார்?"

"இடம் அகப்படாமல் திண்டாடிவிட்டு, பின்னாலே ஐந்தாவது வரிசையிலே உட்கார்ந்திருந்தார்."

"எங்க மாமாதானா, நிச்சயமா தெரியுமா?"

"அவரேதான் ஓய். ஒரு இடத்துக்கு வந்தா நம்மைச் சுத்தி என்ன நடக்கிறதுன்னு பார்க்கணும். சபை நோக்கம் தெரியாத வித்வான் கண்ணை மூடிண்டு பாடுவார். முழிச்சா ஆறு இருக்காது. அப்படி இருக்கப்படாது. உலகத்திலே முழிச்சிண்டே இருக்கணும். கண்ணை மூடிண்டு இருக்கணும்னா காட்டுக்குப் போயிடணும்."

"இப்போ உம்மை நம்பி நான் முழிக்கிற முழிப்புப் போறாதா? இன்னம் வேறேயா முழிக்கணும். அந்த நாதஸ்வரக்காரன் என்ன செய்தான்?"

"மோஹனி உம்மைப் பார்த்தாளோ இல்லியோ?"

"ஆமா"

"சிரிச்சாளோல்லியோ?"

மைனருக்குத் திகைப்பாயிற்று. "சிரிச்சாளா! இல்லியே, முகத்தைக் கோணிக்கிட்டா!"

"பின்னே என்னங்காணும். வாயைத் திறந்து சிரிப்பாளா? முகத்திலே ஒரு ஜாடை. அவ்வளவுதானே. உம்மை அவள் பார்த்ததைப் பார்த்துட்டு அந்த நாதஸ்வரக்காரன் பொருமினான். அதுக்குத்தான் கொடுத்தா."



"வைத்தி, இவ்வளவையும் நீர் பார்த்திருக்கிறீர். நான் ஒண்ணையுமே பார்க்கலியே!"

"பாட்டரி லைட்டுப் பட்டா பெருச்சாளிக்குக் கண்ணு தெரியாது. உமக்கு அழகு, கண்ணுலே பட்டுட்டா கண்ணு தெரியாது போயிருக்கு."

வைத்தியின் ஹாஸ்யம் மைனருக்கு உறுத்தியது. இருந்தாலும் மேலும் கேட்கலானார்.

"ஆமா, மாமா வந்தார்னீரே, என்ன செய்தார்?"

"'என்ன வைத்தி, மாப்பிள்ளை எங்கே வந்திருக்கார்'னு கேட்டார். இந்த மாதிரி மோகனா பின்னாலே வந்தோம்னு சொன்னேன். 'சரி, பின்னே மாப்பிள்ளை பெரிய மனுஷனாயிட்டார். இனிமே நம்ம கவலைப்பட வேண்டாம்'னுட்டுப் போயிட்டார்."

"ஏங்காணும், என்னை என்ன திண்டலா செய்றீர்? எனக்கு வர கோபத்துக்கு..."

"இதோ பாரும். உமக்கும் என் மேலேதான் கோபம் வரும். வடிவாம்பாளுக்கும் என் மேலேதான் கோபம் வரும். உங்க மாமா ஸ்ரீமான் கடம்பவனத்துக்கும் என் மேலேதான் கோபம் வரும். ஏன் என்றால் நான் ஒருத்தன்தானே இதிலே ஏழை."

"பின்னே என்ன, எங்க மாமா வந்தார். கேட்டாருன்னு சொன்னா..."

"ஆமாங்காணும், பின்னே என்ன? நானோ உமக்குப் பக்கத்திலேயே கட்டையிலே கானான் முளைச்ச மாதிரி உட்கார்ந்துகொண்டிருக்கேன். மாமா என்ன செய்தார்னு என்னைக் கேட்டால்...... வந்தார், உட்கார்ந்தார், உம்மைப் பார்த்தார், போயிட்டார். அவ்வளவுதான் தெரியும். அந்த மனுஷனுக்கே இத்தனை வயதுக்கு மேலே சர்க்கஸ் பார்க்க வந்தோமே என்று வெட்கமா இருந்திருக்கு. அதோடே உம்மையும் பார்த்துட்டார். போயிட்டார்"

"உம்... அவர் அப்படிப் போக மாட்டாரே!"

"பின்னே ஏன், உள்ளே வந்த மனுஷன் உடனே போயிட்டார்?"

மைனருக்கு ஒன்றும் விளங்கவில்லை. தம் மாமா பொல்லாதவராயிற்றே. எதற்கு வந்தார், ஏன் உடனே போய்விட்டார் என்ற சந்தேகம் எல்லாம் வந்தது.

"சரிதான்காணும். யார் வந்தா எனக்கென்ன? யார் பார்த்தா எனக்கென்ன? நான் என்ன மோகனா பக்கத்திலேயா உட்கார்ந்திருந்தேன்?" என்று சொல்லி, "ஆமாம்! நான் அந்த சண்முகத்தோடே பேசினதும் அவ ஏன் சண்டைக்கு வந்தா?" என்று கேட்டார்.

"அதுதான் ரகசியம். சன்னை போட்டால் சபாஷ்னு அர்த்தம். பெண்கள் குணமே தெரியல்லியே உமக்கு!"

"அட, ஏனையா அனக்கறீர்? நீர் என்னமோ உறவு கொண்டாடுறீர். அவா ரெண்டு பேரும் உம்மைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை"

"உம்மை மட்டும் திரும்பிப் பார்த்தாளா, சொல்லும்! பன்னிரண்டாயிர ரூபாய் வைர அட்டிகையைத் தூக்கிக் கொடுத்தீரே, அந்த வடிவாம்பாள் திரும்பிப் பார்த்தாளா?"

"என்ன, என்னையே திருப்பறீர்?"

"திருப்பல்லே ஐயா. அவாளுக்கு எப்பப் பார்க்கணும், எப்பப் பார்க்கப்படாது என்பதெல்லாம் நன்னா தெரியும். என்னோடே முதல் 'அட்வைசே' அதுதான். 'எனக்குப் பக்கத்திலே யாராவது நிக்கறபோது என்னைக்கூடக் கண்டுக்காதே!' அப்படின்னு சொல்லி இருக்கேன்"

"ஏன் அப்படி?"

"இந்த உலகத்திலே எத்தனையோ 'இடியட்டு'கள் இருக்காங்க. உடனே எங்கிட்ட வருவான். பல்லை இளிப்பான். பணத்தை எண்ணிக் காட்டுவான். 'ஓய் வைத்தி, நீர்தான் 'ஹெல்ப்' பண்ணணும்'ம்னு காலிலே விழுவான். என்ன முழிக்கிறீர்? இதுதானே, அட உம்மைச் சொல்லல்லைங்காணும்!" என்றார் வைத்தி.

வைத்திக்கும் வண்டி மாட்டுக்கும் கயிறு கையிலே இருக்க வேண்டும் என்று நினைத்தார் மைனர். இனி அதை நினைத்து என்ன செய்வது? தம்முடைய காரியங்கள் முடிந்த பிறகு ஒரு நாள் வைத்திக்குச் சரியான பாடம் கற்பித்துவிட வேண்டும் என்றுகூடத் தோன்றியது.

சற்று யோசித்தார். பிறகு, ரொம்பக் கண்டிப்புடன் பேச ஆரம்பித்தார்.

"ஆமா, வந்த விஷயம்...?"

"அதுதான் பாத்தாச்சே!"

"அப்படின்னா?"

"பதில் கிடைக்கிறது."

"எப்படிக் கிடைக்கும்? கேள்வியைக் கேட்டால்தானே?"

"அவசரப்பட்டா? நம்ம சர்க்கஸ் பார்க்க வந்திருக்கோம்னு மத்தவா நினைச்சப்போ. ஆனா வடிவாம்பாளுக்கும் மோகனாவுக்கும் நாம் யாரைப் பார்க்க வந்தோம்னு தெரியும். 'ரிப்ளை' தானே வரும்."

"இந்தச் சமாதானம் எனக்குத் தேவையில்லை. இன்னிக்கு அவுங்க ரெண்டு பேரையும் பார்த்துப் பேசிடணும். நம்ப வண்டியிலேயே அவர்களைக் கொண்டுபோய் விட்டுடுவோம்!"

"நீர் சொல்றதும் நல்ல யோசனைதான். ஆனால்...."

"என்ன ஆனால்?"



"இல்லே, நீரே ஓட்டிக்கிண்டு வந்திருக்கிறீரே. கூடப் பேசுவீரா, குதிரையை ஓட்டுவீரா? அவ கண்ணுக்கு முன்னாலே நீர் வண்டி ஓட்டினா நன்னாயிருக்காதேன்னு பார்த்தேன்."

"எல்லாம் நல்லா இருக்கும். இன்னைக்கி நம்ம வண்டியிலேதான் அவுங்க வரணும்" என்று கண்டிப்பாய் உத்தரவு போட்டுவிட்டார் மைனர். எதற்கும் கலங்காத வைத்தி இதற்குச் சிறிது திகைத்தே விட்டார்.

இந்நிலையில் மோகனாவுக்கு ஆட்டத்தில் மனம் செல்லவில்லை. தான் நினைத்தது ஒன்று, நடந்தது வேறு ஒன்றாகிவிட்டதே என்று வருந்தினாள்.

'அவருடைய அன்பை அடையத்தானே இத்தனை பாடுபட்டேன்? நல்ல வேளை. அவருடைய பயணத்தைத் தடுத்துவிட்டோம். பித்துப் பிடித்தவரை மறுபடியும் கையில் நாதஸ்வரத்தை எடுக்கும்படி செய்துவிட்டோம். அவர் எப்படியும் பாரி நாயனத்தை எடுத்து ஊதிவிடுவார். ஆனால் அதன் பயனாக நாம் அவரை அடைய முடியுமா? ஏற்கெனவே இருந்த சந்தேகம் போதாதா? இந்த மைனர் இன்று ஏன் இங்கு வரவேண்டும்? வந்ததுதான் வந்தார். நாமும் அவரும் பேசும்பொழுது ஏன் குறுக்கிட வேண்டும்?... இது என்ன பிரமை! தம்மை அவர் அடைய வேண்டும் என்று என் தலையில் எழுதியிருந்தால் நான் இந்த வீட்டில் பிறப்பேனா? இப்படி ஆட வருவேனா? எண்ணி எண்ணித் தவிப்பேனா?... நான் எக்கேடு கெட்டால் என்ன? இனி அவர் நன்றாயிருப்பார். என்னைத் தோற்கடிக்கும் ஆவலில் ஆனந்தமாக வாசிப்பார். நான் அதில் மயங்கி மயங்கி ஆடுவேன். அது ஒன்றே போதும்...' என்று எண்ணி ஒரு பெருமூச்சு விட்டாள்.

ஆனால் இன்று கண்ணீர் விடவில்லை. 'அந்த ஆள் பேசிய ஒரு பேச்சு... 'தங்க நாயனம் செய்து தருகிறேன்' என்று சொன்னானே! நாம் தோற்பதில் இவனுக்கு என்ன மிச்சம்? உலகத்தில் எந்த நிமிஷத்தில் எங்கிருந்து பகை வரும் என்பது தெரியவில்லையே! நிலத்தில்கூட, இந்த நிலத்தில் இன்னதுதான் விளையும் என்றிருக்கிறதே! ஆனால் நெஞ்சில் எதுவும் விளையும்போல இருக்கிறதே!' என்றெல்லாம் எண்ணியபோது, அவளையும் மீறி ஒரு சிரிப்பு வந்தது.

"என்ன சிரிக்கிறே?" என்றாள் வடிவாம்பாள்.

"இந்த மைனர் சொன்னதை நினைச்சேன்."

"ஆமா, அவரு ஒரு ஜரிகை ஒரு மரநாயனம் போதாதா? தங்கம் என்ன சும்மாவா இருக்கு! பணம் இருந்தா அவன் கையிலேயா குடுத்து வீணாக்கணும்?"

"அது நிஜந்தான். இன்னும் எத்தனையோ கை காத்துக்கிட்டிருக்கறபோது!"

"ஆமா! எனக்குத்தானே கேக்கிறேன்!" என்று கோபமாய் விழித்தாள் வடிவாம்பாள். "நீ எதுக்கு அவனை மறுபடியும் வம்புக்கு இழுத்தே?"

"சொல்லிப்புட்டுச் சும்மா இருந்தா?"

"நாளைக்கு அவன் ஊதுவான். நடுவீதியிலே நீ ஆடு!"

"என் அம்மா, நான் தோத்துப் போயிடுவேன்னு நீயும் நிச்சயம் செய்துட்டியா?"

"இந்தா, நான் என்ன நிச்சயம் செய்யறது? என்னைக் கேட்டுக் கிட்டா அவன் கிட்டப் பேசினே? என்னைக் கேட்டுக்கிட்டா அவனைச் சண்டைக்கிழுத்தே? எனக்கென்ன தெரியும்?" என்று ஆத்திரத்தில் பேசினாள் வடிவாம்பாள்.

இதைக் கவனித்த மோகனா, வந்த இடத்தில் தாயுடன் அதிகம் பேச விரும்பவில்லை.

ஆட்டம் முடிந்தது. ஆட்டம் முடிந்ததும் கூட்டம் வெளியே போயிற்று. மைனரும் வைத்தியும் முதலில் வெளியேறினார்கள்.

"என்னங்காணும் கூடவே வந்துட்டீர்?" என்றார் மைனர்.

"சித்தே இங்கேயே இரும். நான் உள்ளே போய் அவா ரெண்டு பேரையும் நம் வண்டிக்கே கூட்டிக்கிண்டு வந்துடறேன்" என்று உறுதி சொல்லிவிட்டு உள்ளே போனார் வைத்தி.

இந்தச் சமயத்தில் வெளியே நின்ற மைனரின் வண்டிக்குப் பக்கத்திலிருந்து, "பாத்தியா! ஆள் அனுப்பி அஞ்சு நிமிசம் ஆச்சு, இன்னும் வரலே" என்றது ஒரு ஆண் குரல்.

"அப்படியெல்லாம் உடனே வந்திடுவாங்களா? அவர்களைக் கூட்டிக்கிட்டுத்தானே வரணும்!" என்றது ஒரு பெண் குரல்.

அங்கு நின்று பேசிக்கொண்டிருந்தது வேறு யாரும் அல்ல, ஸ்ரீமான் கடம்பவனம் பிள்ளையும் அவருடைய திருக்குமாரி மரகதவல்லியுந்தான்.

கடம்பவனம் கோபத்தால் துடித்துக்கொண்டிருந்தார். மரகதம் பயத்தால் நடுங்கிக்கொண்டிருந்தாள்.

"ஏன் அப்பா, அத்தான் இங்கே வந்து என்னைப் பாத்துப்பிட்டு, ஏன் வந்தேன்னு கோவிச்சுக்கிட்டா?"

"'எங்க அப்பா கூட்டுக்கிட்டு வந்தாரு, வந்தேன்'னு சொல்லு."

"'அப்படின்னா உங்க அப்பா வீட்டிலேயே இரு'ன்னு சொல்லிட்டாருன்னா?

"இருவே. இருந்தா நான் சோறு போடறேன்."

"போங்க அப்பா."

"நான் என்ன இவனுக்கு உன்னை விலைக்கா வித்துட்டேன்! 'பிரிவுகவுன்சில்' வரையிலே போய் இந்தப் பய மானத்தை வாங்கிடறேன் பாரு! வருசம் முப்பதானாலும் சரி. எனக்காச்சு, அவனுக்காச்சு, பாத்துடறேன்!"



இதைக் கேட்ட மரகதம் திகைத்தாள். 'அப்பாவின் கௌரவத்துக்காக முப்பது வருஷம் வாழாவெட்டியாக இருப்பது நல்லதா? அல்லது தன் கணவன் எது செய்தாலும் அதற்கு உட்பட்டு வருத்தத்தைச் சகித்துக்கொண்டு வாழ்வது நல்லதா?' என்று அந்தச் சின்னப் பெண்ணால் நிச்சயம் செய்ய முடியவில்லை.

"என்ன அம்மா, யோசிக்கிறே? மைனரை குட்டுப் போட்டு இளுத்துப்புட மாட்டேன்? அப்பத்தான் இந்தக் கடம்பவனத்துக்கு கவர்மெண்டில் உள்ள செல்வாக்குத் தெரியும் அவனுக்கு. ஊரா! 93 பேரன் இல்லாம போனானே!" என்று அங்கலாய்த்தார் கடம்பவனம்.

"போங்க அப்பா! வம்பும் வழக்கும் வேண்டாம் அப்பா! அவுங்க எப்படிப் போனாலும் வீட்டுக்கு வந்துடாம இங்கேயேவா இருந்துடப் போறாங்க? வாங்க அப்பா, ஊருக்குப் போயிடுவோம்."

"ஊருக்குப் போறதா? உனக்குப் போலீசு வேணுமா, மிலிட்டரி வேணுமா, பட்டாளம் வேணுமா? இந்தக் கடம்பவனம் சொன்னா அம்புட்டும் இங்கே வந்து நிற்கும்! இந்தப் பய, தானே வண்டியை ஓட்டிக்கிட்டு அந்தப் பொம்புளை ரெண்டு பேரையும் அழைச்சுக்கிட்டு சர்க்கஸ் பார்க்க வந்திருக்கான். உள்ளே போய் அவுங்க உட்கார்ந்திருக்கிற லட்சணத்தைப் பார்த்தேன். வயிறு பத்தியெரிஞ்சது! வந்துட்டேன்! இப்போ மறுபடியும் இங்கே வண்டியிலே வந்து ஏறித்தானே ஆகணும். அப்போ கேக்கறேன், 'இந்த வண்டி என் மகளுக்கு ஏற்பட்டதா, இல்லை அந்தத் திருவாலூராளுக்கு ஏற்பட்டதா?'னு கேக்கிறேன்."

அவருடைய வீரப்பிரதாபங்களெல்லாம் அந்த வெகுளிப் பெண்ணின் காதில் ஏறியதாகத் தெரியவில்லை. அவள் திடீரென்று வேறு எதையோ கேட்டாள்.

"ஏன் அப்பா, அந்த வைர அட்டிகை அவ கழுத்திலே இருந்துச்சா? பாத்திங்களா?"

"இல்லேயம்மா! இன்னிக்குப் போட்டுக்காட்டி நாளைக்கும் போட்டுக்கிறான்."

"இந்த மாதிரியெல்லாம் வரும்னு நான் நினைக்கவேயில்லை அப்பா" என்று மரகதம் கண்ணீர் விட்டாள்.

"இந்தா பார், நான் ஒரு யோசனை சொல்றேன். கம்மா பதில் பேசாமல் கேளு."

"சொல்லுங்க."

"ஏறு, வண்டியிலே ஏறி உக்கார்ந்துக்க. அவன் வந்து பாத்துட்டு 'இல்லை, தாசிதான் வரணும். நீ கீழே இறங்கு'னு சொல்லட்டும். பார்ப்போம்."

"பயமா இருக்கு அப்பா!"

"எதுக்கு அம்மா பயப்படறே, நான் இருக்கிறபோது? ஏறிக்க!" என்றார் கடம்பவனம்.

இருவரும் வண்டியில் ஏறி உட்கார்ந்தார்கள்.

✦ ✦ ✦ ✦ ✦

இந்தச் சமயத்தில் கூடாரத்தின் வெளியே காத்துக்கொண்டிருந்த மைனர் குஷியாய்த் தலையில் முண்டாசைக் கட்டிக்கொண்டு சற்று ஒதுப்புறமாகச் சென்றார். இவ்வளவு நேரம் கொட்டகைக்குள் உட்கார்ந்திருந்ததால் கொஞ்சம் வெளிக்காற்றுப் பட்டவுடன் மனத்திற்கு ஆனந்தமாய் இருந்தது. வேர்வையால் நனைந்திருந்த தம் சில்க் சட்டையைக் காற்றடிக்க உதறிக்கொண்டே யோசிக்கலானார். அவர் மனக்குதிரை நாலுகால் பாய்ச்சலில் பாய்ந்தது.

'இந்த வைத்தி ஒரு சூரன். எப்படியும் மோகனாவையும் வடிவாம்பாளையும் வண்டிக்கு அழைத்து வந்துவிடுவான். ஆனால், இவனும் கூடவே வண்டியில் ஏறுவானே! சரிதான், பத்து ரூபாயைக் கையில் கொடுத்து ரயிலில் வா என்றால் வருகிறான். வரதனும் அவனும் ரயிலிலேயே வரட்டும்' என்று முடிவு கட்டினார்.

'ஆகா! அவர்களுடன் உட்கார்ந்து வண்டியில் போனால் அதுவே ஆனந்தமாயிருக்குமே! வண்டியைச் சற்று நேரம் வேகமாய் ஓட்டுவோம்! உடனேயே குதிரையைத் திராட்டில் விட்டுவிட்டால் என்ன? காலை குளிர்ந்த காற்று வீசும். வடிவாம்பாள் தூங்கிப் போய்விடுவாள்!— இல்லை, அவள் தூங்காவிட்டால்தான் என்ன?—'

'ஐயோ! இந்தத் திருவாரூர் ஐம்பது மைல் இருக்கக்கூடாதா? நான் முழுவதும் பிரயாணம் செய்யலாமே!...... இந்தக் குதிரை இரண்டு மணி நேரத்தில் கொண்டுபோய்த் தள்ளிவிடுமே! இருக்கட்டுமே. இப்போது மணி இரண்டு. நாலு மணிக்குத் திருவாரூர் போய்விடுவோம். இவர்களை வீட்டில் இறக்கி விட்டுவிட்டு... நாம் என்ன வண்டிக்காரனா. உம்— 'இங்கே ஒரு தலையணை கிடைக்குமா?' என்று கேட்டால் போகிறது—'

மைனருக்கு ஆனந்தம் நிலை கொள்ளவில்லை. தம்மை அறியாமலேயே ஒரு கமாச ராக ஜாவளியை சீட்டி அடித்துக்கொண்டே உலாவினார்.

அப்போது ஓர் ஆள் அவர் அருகில் ஓடி வந்தான்.

"உங்களைக் கூப்பிடறாங்க" என்றான்.

"யாரு?"

"யாரோ ரெண்டுபேரு உங்க வண்டிக்கிட்டே—"

மைனருக்கு வந்த ஆனந்தத்தில் உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரையில் உடம்பு நெகிழ்ந்தது. 'மோகனாவை வண்டிக்கு அனுப்பி விட்டு, விஷயம் தெரிந்த வைத்தி பின்தங்கிவிட்டார்' என்பதாக உணர்ந்துகொண்டார். உடனே, எவ்வளவு நேரமாய்க் காத்திருக்கிறார்களோ என்று நினைத்தவர் வெகு வேகமாய் ஓடினார்.

வந்த வேகத்தில் வண்டியை ஒருமுறை பார்த்தார். புடைவை தெரிந்தது. தம் வண்டியும் வாழ்வும் இன்று புனிதமாயின என்ற



எண்ணத்தில் குப்பென்று தாவிப் பெட்டியில் ஏறினார். வண்டி குலுங்கியது. ஒரு நாளும் இல்லாத வேகத்தில் குதிரை கிளம்பியது.

"டக் டக் டக் டக்" என்ற குதிரையின் குளம்படிகளுக்கேற்ப மைனர் மனதும் சந்தோஷத்தில் துள்ளியாடியது. 'எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது? இல்லை, அவள்தான் பேசட்டுமே' என்று எண்ணினார். 'ஊஹூம். சந்தர்ப்பத்தை விடக்கூடாது. காற்றில் மோகனா தூங்கி விட்டால்?' என்ற பயம் வந்தது. 'வண்டியை ஒரு பள்ளத்தில் விடுவோம். தூக்கிப் போடும். 'ஏன் தூக்கிப் போட்டுவிட்டதா?' என்று கேட்போம். 'அம்மாடியோ! இந்தக் குதிரை போகிற வேகத்தில் சக்கரம் பள்ளத்தில் இறங்கினால் நாம் பாதாளத்தில் விழ வேண்டியதுதான்!' என்பாள் அவள். அப்புறம் 'ஆமா, சர்க்கஸ் எப்படி இருந்தது?' என்று கேட்போமா? அதற்கு இந்த வடிவாம்பாள் தொணதொணவென்று பேச ஆரம்பித்துவிட்டால்...!' என்ற ஆட்சேப சமாதானங்கள், குதிரையின் காலடி மாறுவது போல் அவர் மனத்தில் "ரைட் லெப்ட்" போட்டன.

குதிரையின் வேகத்தைத் தணித்தார். மனத்தை அடக்கிப் பிடித்தார். அருமையான வழி பிறந்தது. மெல்லத் திரும்பினார். "ஏன் இந்த அட்டிகையைப் போட்டுக்கிட்டு வல்லே? திருடனுக்குப் பயமா? எங்கிட்டே துப்பாக்கி இருக்குதே!" என்றார்.

"சுடுடா! சுட்டுக் கொன்னுடு. இதுக்குத்தானே சாவியைப் பறிச்சுக்கிட்டே!" என்று அலறினார் கடம்பவனம்.

"ஹா!" என்றார் மைனர்.

"இதுக்குத்தான் அடிக்கடி திருவாரூருக்குப் போனீங்களா?" என்றாள் மரகதம்.

"ஐயோ, மரகதமா?" என்றார் மைனர்.

"ஆமா. என் மரகதம்டா, மாணிக்கம்டா, வைரம்டா, வைடூரியம்டா! உன்னைத் தங்கம் என்று நினைச்ச கட்டி வைச்சேன்டா. நீ இப்படித் தாமிரமாப் போயிட்டியே!" என்று கடம்பவனம் கூப்பாடில் இறங்கினார்.

இதைக் கேட்ட மைனர் வண்டியை விட்டே இறங்கலாமா என்று யோசித்தார். குதிரை இவைகளையெல்லாம் பற்றி யோசனை செய்யவில்லை. சிங்கபுரம் பாதையில் திரும்பிச் சென்றது.

✦ ✦ ✦

சர்க்கஸ் கொட்டகைக்கு உள்ளே அவசரமாய்ச் சென்ற வைத்தி, மைனர் பார்வையில் இருந்து மறைந்ததும் சடக்கென்று நின்றார். என்ன செய்யலாம் என்று யோசித்தார். இதற்குள் வடிவாம்பாள், வரதன், மோகனா மூவரும் 'கிரீன் ரூம்'க்குள் போவதைக் கண்டார்.

வைத்தி அவசரமாய் உள்ளே நுழையப் போனார்.

"அந்தர் நகி ஜா ஸக்தா" என்றான் தர்வான்.

"பிர்ர்ர்" என்று உள்ளே நுழைந்தார் வைத்தி.

"இதரியே" என்று கையைப் பிடித்தான் நர்வான்.

"அவங்களோடே கூட வந்தவங்கப்பா !"

"நகி ஜா ஸக்தா."

"அப்படியானா இங்கேயாவது உட்கார்ந்திருக்கலாமா?"

"அச்சா"

வைத்தி ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார்.

உள்ளே சென்ற மோகனா தன் தாயை ரமாமணிக்கு அறிமுகம் செய்து வைத்தாள். தங்களைக் காப்பாற்றிய ரமாமணியைக் கண்ட ஆனந்தத்தில் வடிவாம்பாள் அவளுடன் பேசலானாள். அங்கேயே தங்கிவிட்டுக் காலையில் ரயிலுக்குப் போகலாம் என்று ரமாமணி கேட்டுக்கொள்ளவே வடிவாம்பாளும் சம்மதித்தாள்.

வெளியே உட்கார்ந்திருந்த வைத்திக்குக் காலை இளம்காற்றில் தூக்கம் கண்ணைச் சுற்றியது. கொஞ்சம் கண் அயர்ந்தார். குறட்டைச் சத்தம் கேட்டது. இந்தத் தூக்கத்தில் மைனர் வந்து தம்மை எழுப்புவதுபோலவும், தாம் உடனே எழுந்து, "ஓ, ஏற்பாடு செய்து விட்டேனே, நாட்டியப் போட்டிக்கு ! மோகனா ஜெயித்தால் நீங்கள் காலுக்குத் தங்கத்தில் கொலுசு செய்து போடவேணும் என்று வடிவாம்பாள் சொன்னாள்" என்று சொல்வதாகவும் கனவிலும் தோன்றியது.

நாற்பத்து நான்காம் அத்தியாயம்

# இசைப்பயிர் செய்த வேளாளர்கள்



வெறும் சோற்று மூட்டையல்ல உலகம். கட்டுச்சோற்று மூட்டையில், துவையல், கருவடாம், ஊறுகாய் என்று பல வியஞ்சனங்களை வைத்துக் கட்டுவது போல உலகத்திலும் சோற்றைத் தவிர எத்தனையோ சுவைகள் இருக்கின்றன.

இங்கு கலை இருக்கிறது, களிப்பு இருக்கிறது, கவலை இருக்கிறது, காதல் இருக்கிறது, மோதல் இருக்கிறது, உண்மை இருக்கிறது, பொய் இருக்கிறது, எல்லாம் கலந்த சூழ்நிலைதான் உலகத்தை என்றும் நிலைக்க வைத்திருக்கிறது. மனித வாழ்வுக்குச் சாப்பாடு மாத்திரம் போதாது. அது வயிற்றைத்தான் வளர்க்கும். உள்ளத்தை நிரப்புவதற்குக் கலைகள் வேண்டும். கலையும், கழனியும் கலந்ததுதான் உலகம்.



பல கலைகளைப் படைத்தது தமிழ்நாடு. இந்த நாட்டிலே மதுரை, சங்கம் வைத்துத் தமிழை வளர்த்தது. அதைப்போலத் திருவாரூர் கலையை வளர்த்தது. கமலாலயம் என்னும் தாமரைப் பொய்கையிலே கலை அன்னம் விளையாடியது. அதன் அழியாச் சுவடுதான் ஹம்ஸத்வனி ராகம். இது போன்ற எத்தனையோ ராகங்களும் கீர்த்தனங்களும் இங்கு அவதரித்திருக்கின்றன.

நமது சங்கீதத்துக்குத் திருவாரூர் ஒரு பண்ணையாக இருந்து வந்திருக்கிறது. இசையால் ஈசனை வழிபட்டு, அவனுக்கு நண்பனாக இருந்து, அவனைத் தன் வேலைக்காரனாக ஆக்கிக்கொண்டு, தொண்டருக்கெல்லாம் தொண்டன் சிவபெருமான் என்ற பெருமையை இறைவனுக்கு அளித்த சுந்தரமூர்த்தி நாயனார், ஆரூரில் எந்த வேளையில் அடி எடுத்து வைத்தாரோ, அன்று முதல் அந்த ஆரூர் என்ற பெயர் போய் அதை நம்மூர் என்று தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் சொல்லும் பெருமை வந்துவிட்டது.

இந்தத் திருவாரூரிலே, ஒவ்வொருவரும் தங்கள் பண்பையும், பராக்கிரமத்தையும், கலைத்திறனையும், பெரும் பெரும் பணிகளாகச் செய்து காட்டியிருக்கிறார்கள். அரசன் பெரியவன் நீதியை நிலை நாட்டுதல் அரசனின் கடமை, தலைசிறந்த நீதி தன் மகனைத் தேர்க்காலிலே இட்டு, நீதியைத் திருவாரூரிலே நிலை செய்து காட்டினான் சோழ மன்னன். அடுத்து வருகின்றது தோள் வலிமை. புய பலத்தால் போராடிப் பலரைக் கொல்வது பண்பாடு அல்ல; பிறருக்கு நன்மை செய்வதுதான் பண்பாடு. அந்த மக்களின் தோள் வலிமையை எடுத்துக் காட்டுகிறது கமலாலயம்.

சிற்பியின் பெருமையை எடுத்துக் காட்டுகிறது கோவில். தச்சரின் பெருமையை எடுத்துக் காட்டுகிறது, அச்சுத் தேர். தமிழரின் பெருமையை எடுத்துக் காட்டுகிறது தேவாரத் திருத்தாண்டகங்கள்.

இவ்வாறு எல்லாத் துறைகளிலும் மேம்பட்ட திருவாரூர், இசையிலே பின்தங்கிவிடுமா? ஈசன் இசை வடிவானவன் அல்லவா! அவன் பெருங் கோவில் கொண்ட ஆரூரிலே இசை தழைத்தது.

பக்தர்களில் பல வகுப்பினர் உண்டு. சிலர் ஈசனின் கோவிலுக்குச் செல்வார்கள். சிலர் ஈசனை மனக்கோவிலில் நிறுத்துவார்கள். ஆனால், இந்த இரண்டு இடங்களிலும் இசை என்றைக்கும் அவன் அருகிலேயே இருக்கும்.

உயிரை வளர்க்கப் பயிரை வளர்ப்பவன் வேளாளன். அவனால் உடல் பசி தீருகிறது. உள்ளப் பசிக்கு வேளாண்மை செய்பவர் இசை வேளாளர்கள். அந்தக் கலைஞர்கள் திருவாரூரிலே நிரம்பியிருந்தார்கள். அவர்கள் வழிவழியாகத் தங்கள் உள்ளம் என்னும் வயலிலே உயர்ந்த இசையை வேளாண்மை செய்து, அதை உலகமெங்கும் பரப்பினார்கள்; உலகை மகிழ்ச்சியாக்கினார்கள். தேம்.

வாத்தியம், நடனம் என்ற முத்தமிழ் போன்ற மூன்று வகை இசைகளையும் இவர்கள்தாம் வேளாண்மை செய்து வந்தார்கள்.

பரத நாட்டியத்தைப் பயின்ற எத்தனையோ பதியிலார் வமிசத்து அன்னைமார்கள் அங்கு இருந்தார்கள். அவர்கள் சிவநெறி தழுவி, சீலத்தில் குறையாது, செம்மையில் மாறாது, தங்கள் கலையை நாடெங்கும் பரப்பினார்கள்.

அவர்களிலே ஒரு அம்மையார் கமலத்தம்மாள் என்பவர். இசையில் பெரும்புலமை வாய்ந்தவர். பதங்களை அவர் பாடும் அழகைக் கேட்டுவிட்டு மகிழ்ந்த அவர்கள் குருநாதர் ஸ்ரீ முத்துசாமி தீட்சிதர் அவர்கள், எத்தனையோ கீர்த்தனைகள் செய்தார்கள் என்று சொல்லுவார்கள்.

அத்தகைய பழம் பெரும் பதியில் தீட்சிதர் வாழ்ந்த காலத்தில் தம்பியப்ப முட்டுக்காரர் என்று ஒருவர் இருந்தார். ஸ்ரீ தீட்சிதர் அவர்கள் பெரிய பக்தர். அவருடைய பூஜைக்குப் பூத்தொடுத்தல் முதல் அவருடைய கீர்த்தனைகளைச் சாதாரணமான சிஷ்யர்களுக்கும் பாடம் சொல்லுவதுவரை எல்லாப் பணிகளிலும் தம்பியப்ப முட்டுக்காரரும் பங்கு கொண்டார். அரும்பு அரும்பாக எடுத்து, மாலை தொடுத்துக்கொண்டே அழகு அழகான கீர்த்தனைகளைச் சாதித்தியம் செய்து வருவார். தீட்சிதர் பரவசத்தில் உதிரும் பாட்டுகளை அப்படியே தம் உள்ளத்தில் அடுக்கிக்கொள்ளுவார். தம்பியப்பர் தீட்சிதர் அவர்கள் பரம்பரையில் வந்த பெரியவர்கள் தங்களுடைய நூலிலே, தம்பியப்பரை "சங்கீத ம்ருதங்க லட்சண லட்சிய சாஸ்திரமுலோ சமுத்ராமைன தப்பியப்புடு" என்று பாராட்டி எழுதி வைத்திருக்கிறார்கள். அவர் இசை வேளாளர் மரபில் வந்தவர். கர்னாடக சங்கீதத்தில் கடல் போன்றவர்.

திருவாரூருக்கு ஒவ்வொருவரும் தங்கள் பணியை நிலைபெறுமாறு செய்திருப்பதைக் கண்ட தீட்சிதரின் தகப்பனார் ராமசாமி தீட்சிதர் அவர்கள் தாம் என்ன செய்வது என்று யோசித்தார். திருவாரூரிலே இன்ன இடத்தில் இன்ன ராகங்களைத்தாம் நாதஸ்வரத்தில் வாசிக்க வேண்டும், இன்ன இடத்தில் இன்ன கீர்த்தனைகள்தாம் வாசிக்க வேண்டும் என்று பக்தியும், இசையும் கலந்து பல பாடல்களை அடைவு முறை செய்து வைத்தார். அதைப் பின்பற்றித் தீட்சிதராலும், தம்பியப்பராலும் தொகுக்கப்பட்ட இந்த முறைதான் இன்றைக்கும் பின்வந்த பலரால் அபிவிருத்தி செய்யப்பட்டு, அங்கு நடந்து வருகின்றது.

அந்தத் தம்பியப்ப முட்டுக்காரரின் சிஷ்ய பரம்பரையிலே நம் கதை நிகழும் காலத்தில், ஒரு மகான் இருந்தார். அவர் பெயர் சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர் என்று வைத்துக்கொள்வோம். பல காரணங்களை உத்தேசித்து அவருடைய இயற்கைப் பெயரை நாம்



கூறவில்லை. திருவாரூர்க் கோவிலிலே நாதஸ்வரம் வாசிப்பது அவருடைய பணி. தீட்சிதர் கீர்த்தனங்களை அதே பந்தாவில் அற்புதமாக வாசிப்பவர்.

அவர் வாசித்த நாதஸ்வரத்தை வேறு எவரும் எடுத்து வாசிக்க முடியாது. அக்காலத்தில் இருந்த நாதஸ்வரங்களைவிட அது உருவத்திலும் பெரியது; ஓசையிலும் பெரியது. இன்றைக்கும் அதைத்தான் கோவிலில் வாசிக்க வேண்டும். நமது சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர் அதிலே சிறந்தவர்.

சிவ பக்தர். ஒழுக்கத்தின் உறைவிடம். மடி வைத்து, வேஷ்டி கட்டிக்கொண்டு, கழுத்தில் கௌரி சங்கம் அணிந்திருப்பார். அவரைப் பார்த்தால் சைவத் துறவிபோல் விளங்குவார். எப்பொழுதும் சிவநாமம் சொல்லிக்கொண்டே இருப்பார். பஞ்சாட்சரமும், சப்த ஸ்வரங்களும் அவருடைய இடைகலை, பிங்கலையாக ஓடிக்கொண்டிருந்தன. தூங்கும் நேரம் தவிர மற்ற நேரங்களில் அவர் தோளிலே நாதஸ்வரப் பை தொங்கும். கமலாலயத்தின் கரை மண்டபத்திலே உட்கார்ந்து அவர் வாசிக்க ஆரம்பித்துவிட்டால் ஊரே மயங்கும்; உள்ளம் உருகும்.

ஆனால், அவரிடம் ஒரு சிறு குறை. சங்கீதம் இறைவனின் வழிபாட்டுக்கு ஏற்பட்டது. அதை முறையோடு பயில வேண்டும், முறையுடன் ஓத வேண்டும் என்ற எண்ணத்தால், அதைப் பிறருக்குக் கற்றுக்கொடுப்பதே இல்லை. திருவாரூர் வாசிப்பு முறையை மற்றவர்கள் கற்றுக்கொண்டு, அதில் புதுமையைக் கலந்து கெடுத்துவிடுவார்களோ என்ற அச்சத்தால் அவர்கள் செய்து வைத்த அடைவு முறையைக்கூடப் பிறருக்குச் சொல்ல மாட்டார்.

✦ ✦ ✦

ஒருநாள் இரவு மணி பதினொன்று இருக்கும். சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர் வீட்டில் எல்லாரும் சாப்பிட்டுவிட்டுப் படுத்துவிட்டார்கள். ஆனால், அவர் ஒருவர் மாத்திரம் விசுப்பலகையில் உட்கார்ந்து சுவரில் சாய்ந்தபடி ஏதோ ஒரு சிட்டாஸ்வரத்தை ஸாதித்யம் செய்துகொண்டிருந்தார். அப்போது அவர் வீட்டுக்கதவு தட்டப்பட்டது. "தியாகராஜா" என்று சொல்லி எழுந்தார். கதவைத் திறந்துகொண்டு வாசலில் வந்தார்.

"யாரது?" என்று கேட்டார்.

அந்த இருளிலே ஒருவர், அவர் காலடியில் விழுந்தார். அவர் கால்களைப் பற்றிக்கொண்டார். "வாக்குக் கொடுங்கள் எழுந்திருக்கிறேன்" என்று கேட்டார்.

"உமக்கு என்ன வாக்குக் கொடுக்க வேண்டும்?"

"என் மானத்தைக் காப்பதாக வாக்குக் கொடுங்கள். இசையின் பெருமையைக் காப்பதாக வாக்குக் கொடுங்கள்" என்று கேட்டார். காலில் விழுந்தார்.

"இந்த உயிர் எந்த நேரத்திலும் பிரியக்கூடியது. அதற்குள் இசையின் பெருமையைக் காக்க ஒரு பாக்கியம் கிடைத்தால், அதை விடப் பெரியது வேறு ஒன்றும் இல்லை. தியாகராஜன் திருவுள்ளம் அப்படியானால் காக்க முயல்கிறேன்" என்று வணங்கியவரைக் கை தூக்கிவிட்டார் சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர்.

வணங்கியவர் எழுந்தார். அவர் கையைப் பிடித்து அவரை உள்ளே அழைத்துப் போனார். விளக்கு வெளிச்சத்தில் பார்த்தபோது, தம் காலில் பணிந்தவர் மகாவித்வான் சிக்கல் சண்முகசுந்தரம் என்பதை அறிந்தவுடனே, "தம்பி!" என்று ஆவலுடன் கட்டிக் கொண்டார் சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர்.

நாற்பத்து ஐந்தாம் அத்தியாயம்

## பாரி நாயனம்



சண்முகசுந்தரம் தங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறான் என்றவுடனே, சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரரும், அவருடைய மனைவியும் குழந்தைகளும் ஆச்சரியப்பட்டார்கள். அங்குமிங்கும் நின்றுகொண்டு பல தலைகள் அவனை எட்டிப் பார்த்தன. நாதஸ்வரக்காரர் உபசரிப்பில் இறங்கினார். நல்ல பாலில் குங்குமப்பூ போட்டுக் காய்ச்சி அவனுக்குக் கொண்டுவந்து கொடுத்தார். சண்முகசுந்தரம், "பால் வேண்டாம், எனக்கு உங்கள் பரிவுதான் வேண்டும்" என்று பணிவுடன் கேட்டுக் கொண்டு, "பாரி நாயனத்தை எனக்குக் கற்றுத் தரவேண்டும். அதை எடுத்து நான் வாசிக்க வேண்டும்" என்று வேண்டினான்.

இந்த நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் தாலாட்டுக்கு அடுத்த படியாக முதலிலே காதிலே கேட்ட இசை நாதஸ்வரந்தான். நாதஸ்வரமா அல்லது நாககரமா? ஏன் இவ்வாறு அதற்குப் பெயர் வந்தது என்ற சர்ச்சை நெடுங்காலமாக நம் நாட்டில் இருந்து வருகிறது. பழம்பெரும் தமிழ் நூல்களிலே இந்த வாத்தியத்தின் பெயரே வரவில்லை. ஆனால், இன்றைக்கும் கல்யாணம் என்று பந்தல் கால் ஊன்றும் பொழுதே கொட்டு மேளம் முழக்கித்தான் கால் ஊன்றப்படுகிறது. கோவிலில் கொடியேற்றம் கொட்டு மேளத்தோடு தான். கிராமாந்தரக் கோவில்களில் அதிகாலையில் வாசிக்கப்பட்டு, நம் வீடு வந்து தேடி எழுப்புகின்ற பூபாளமும், பிலகரியும் கேளாத செவிகள் கிடையாது. மங்கள வாத்தியம் என்று எல்லோராலும் போற்றப்படுவது நாதஸ்வரம்.



நமது பழைய நூல்களிலே சிறு வங்கியம், பெரு வங்கியம் என்று சொல்லப்படுவதுதான் நாதஸ்வரம் என்று ஒரு சாரார் கூறுகிறார்கள். பழைய கல்வெட்டுகளிலும், நாதஸ்வரம் என்ற வார்த்தை காணப்படவில்லை. ஆனால், சுமார் ஐந்நூறு வருஷங்களுக்கு முன்பு வெட்டியதாகக் காணப்படும் கல்வெட்டு ஒன்று சமீபத்தில் கும்பகோணத்தில் கிடைத்திருக்கிறது. அதில் நாதஸ்வரத்தின் உருவப் படம் இருக்கிறது. இவை எல்லாவற்றையுங்காட்டிலும், இப்போது நாதஸ்வரமே நம்மிடையே இருப்பதால் நம் ஆராய்ச்சியை இத்துடன் நிறுத்திக்கொள்ளலாம்.

முன்பு நம் நாட்டில் வித்வான்கள் கையாண்ட நாதஸ்வர வாத்தியத்தைத் திமிரி என்று சொல்லுவார்கள். அது முக வீணையைக் காட்டிலும் சற்றுப் பெரியது. முக வீணையும், திமிரியும் எச்ச சுருதியைக் கொண்டவை. நமது சண்முகசுந்தரமும் திமிரி நாயனந்தான் வாசித்துக்கொண்டிருந்தான்.

அக்காலத்தில் திருவாரூர் கோவில் ஒன்றில் மட்டுந்தான் பாரி நாயனம் வாசிக்கும் வழக்கம் இருந்து வந்தது. நயினார் அடியார்கள் என்ற ஒரு கூட்டத்தார் அதைக் கையாண்டனர். அதன் ஓசை அற்புதமானது. ஐந்து வேலி பரப்பு உள்ள கமலாலயத்தில் அதன் ஓசை ஆழக் குளித்துவிட்டு வெளியே வரும்போது, அந்த இன்ப நாதத்தில் ஊரே மயங்கும்.

அதில் வழிவழியாகக் கை வந்த மகாவித்துவான் சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர். ஆதலால்தான் அவரைத் தேடிச் சண்முகம் வந்து சேர்ந்தான். அதைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று சண்முகசுந்தரம் கேட்டவுடனேயே, சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர் கூறினார்: "தம்பி, உங்களுக்குத் திமிரி கை வந்துவிட்டது. உங்க மனோதர்மம் அதிலே பொங்குகிறது. அதை விட்டுவிட்டுப் பாரியைக் கற்றுக்கொள்வது கடினம்."

"பத்தே நாளில் பழகிக்கொள்வேன்" என்றான் சண்முகம்.

"தம்பி, உங்கள் ஊக்கத்தைப் பாராட்டுகிறேன். ஆனால், நீங்கள் நினைப்பது போல, பாரி நாயனம் அவ்வளவு சுலபமாகக் கற்றுக்கொள்ளக்கூடியதல்ல. அதற்கு உடம்பு ரொம்ப வணங்க வேண்டும்."

"உடம்பு வணங்காமல் எந்த வாத்தியமும் முடியாதண்ணே! நான் என்றைக்குமே மாணவன்தான். என்னை நம்பி நீங்க சொல்லிக் கொடுக்கலாம்."

"ஆனால், வரவேண்டுமே!"

"முயற்சி இருந்தால் எந்த வித்தையும் வருங்க!"

"வாத்தியம் வாசிப்பவர்கள் வாய்ப்பாட்டுக்காரர்களாவது சுலபம். என்னதான் கையிலே வாத்தியத்தை வாசித்தாலும், அவர்கள்

வாயாலே சுரம் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். சுரத்திலேதான் சிந்தனையும் ஓடும். ஆனால், ஒரு வாத்தியத்தை வாசித்த வித்வான், இன்னொரு வாத்தியத்தை வாசிப்பது கஷ்டம். கை வராது, தம்பி !"

"நீங்க கை வந்தவங்க. உங்களுக்கு மனசு வந்ததுனா எனக்குக் கை தானே வரும்."

"தம்பீ, பாரி நாதஸ்வரம் அப்படியல்ல. கெண்டையும் சீவாளியும் சேர்த்து ஆள்காட்டி விரல் நீளம் இருக்கும் வாத்தியமும் நீளம். எடுத்து ஊதினா பாதிக் காத்து வெளியே போய்விடும். சுவரஸ்தானங்கள் திமிரியில் இரண்டு சாணுக்குள்ளே இருக்குது. ஆனால், பாரி நாயனத்திலே விரலை விரிச்சுப் போடணும். அதைப் பழகவே நாளாகிவிடும் தம்பி !"

"நீங்கள் கொஞ்சங்கூடக் கவலைப்பட வேண்டாம். நான் கற்றுக் கொள்ள வேண்டுமென்று நிச்சயம் செய்துவிட்டேன். இதனாலே எனக்கு நெஞ்சு வலி வந்தாலும் சரி, உங்க கண் முன்னாலேயே அதில் நான் அற்புதமாக வாசிச்சுக் காட்டறேன்."

"அதெப்படித் தம்பி முடியும்? எங்க கோடி வீட்டுப் பெரியவர் மகன் குப்புசாமி என்னோடகூடத்தான் அஞ்சு வருஷம் கத்துக்கிட்டான். அவனுக்கே நல்லா ஊத வரல்லே. அவனுக்கு ஊத வாலேங்கிறது தெரியாமே, நான் நல்லா ஊதறதுக்காக என் மேலே அவனுக்குப் பொறாமை."

"உங்க மனசிலே ஒரு சந்தேகம் இருக்கு போலேயிருக்கு. நான் உங்க பெயரைக் கெடுத்துவிடுவேனோன்னு பயப்படறீங்க."

"இல்லே தம்பி ! உங்களுக்கென்ன, இனிமேல் கத்துக்கிட்டுத் தானா வித்வானாகணும்? இது பாரி நாயனம். தியாகராஜாவுக்குத்தான் உகந்தது. வேறே எங்கேயும் ஊதப்படாது. இதைக் கத்துக்கிட்டு உங்களுக்கு என்ன மிச்சம்னு பார்க்கிறேன்."

"லாபத்துக்கு இல்லேண்ணே. ஒரு சம்பிரதாயம் வந்துடுத்து. நான் பாரியை வாசிக்கிறேன்னு சொல்லிவிட்டேன். பாரியை நான் ஊதவில்லையானால் இனித் திமிரியை நான் கையிலே எடுக்கமுடியாது. மனிதருக்கு மானந்தான் முக்கியம். நீங்க கத்துக் கொடுத்துத்தான் ஆக வேண்டும்."

"எப்போ ஆரம்பிப்போம்?"

"இப்பவே ஆரம்பிக்கலாம்..."

"என்ன! ராத்திரி பன்னிரண்டு மணிக்கா?"

"ஆமாம்."

"சரிதான், பன்னிரண்டு மணிக்கு ஊதினா தியாகராஜர், 'என்னடா சாமிக்கண்ணு ஊதறே'ன்னு முழிச்சுக்கிடுவாரு. காலம்பர பார்ப்போம். படுக்கை எடுத்துப் போடச் சொல்லவா?"

"வேண்டாம்."



"ஏன் தம்பி?"

"இன்னிக்கு நான் உங்க வீட்டுக்கு சிஷ்யன் என்கிற முறையிலே வந்திருக்கிறேன்."

"சிவ, சிவ, நீங்க தரையிலே படுக்கிறதா?"

"அதனாலே பாதகம் இல்லே. நான் பாரி நாயனத்தை வாசிக்க சபதத்தை முடிக்கிறவரைக்கும் பாய் விரிச்சுப் படுக்க மாட்டேன். தலையணை வைக்கமாட்டேன்."

"இவ்வளவு அக்கறை இதுவரை ஒருத்தருக்கும் இல்லே. அதனாலேதான் நான் ஒருத்தருக்கும் சொல்லிக் கொடுக்கிறதில்லே. ஊரிலே 'அவன் ஒரு லோபி. வித்தையைச் சொல்லிக் கொடுக்காதவன்' அப்படின்னு சொல்லுறாங்க."

"ஐயோ, அபராதம்! உங்களை யாரு அப்படிச் சொல்லுவாங்க?"

"ஊரிலே சொல்றாங்க, தம்பி! சரி, தூங்குங்க. காலம்பர பாடம் ஆரம்பிப்போம்" என்று அவர் சொல்லவே சண்முகசுந்தரம் சரி என்று ஒப்புக்கொண்டான்.

அவன் மனம் ஆனந்தமடைந்தது. இரவெல்லாம் தான் பாரி நாயனம் வாசிப்பது போலவும், மோகனா ஆட முடியாமல் திண்டாடுவது போலவும் அவனிடம், "நிறுத்து ! நிறுத்து ! என் காலைப் பார் ! ரத்தம் கட்டிவிட்டது !" என்று கெஞ்சுவது போலவும் கனவு கண்டுகொண்டே படுத்திருந்தான் சண்முகம்.

நாற்பத்து ஆறாம் அத்தியாயம்

## "மங்கையர்க்கரசி மரகதம்"



ஒரு நாளும் இல்லாத திருநாளாக வண்டிக்குள்ளே மனைவியும் மாமனாரும் உட்கார்ந்து வருவதையும், வண்டியை மைனர் ஓட்டிக்கொண்டு வருவதையும் பார்த்த சிங்கபுர மக்கள் ஆச்சரியப்பட்டார்கள். ஆனால் மைனரோ, 'சரிதான், நம்ப மாமாவும் மரகதமும் ஊரிலே டமாரம் அடிச்சிட்டுத் தான் நம்மைத் தேடிக்கிட்டு நாகபட்டினத்துக்கு வந்திருக்காங்க' என்று நிச்சயம் செய்துகொண்டார். அவர் குடி படைகளைப் பார்க்க அவரே வெட்கப்பட்டார். வண்டியைப் பங்களா வாசலில் நிறுத்திவிட்டு, மைனர் இறங்கி உட்சென்றார். கூடவே மரகதமும் போனாள். கடம்பவனம் நின்றார்.

"சரி, நீங்க வீட்டுக்குப் போங்கப்பா!" என்றாள் மரகதம்.

"வீட்டுக்கா?.. நான் எப்படிப் போகிறது? இதை உண்டு இல்லேன்னு ஒரு பைசல் பண்ணிட்டுத்தான் போகணும்" என்று குதித்தார் கடம்பவனம்.

இதைக் கேட்ட மைனர் ஆத்திரத்தோடு திரும்பினார்."யாரை மாமா பைசல் பண்ணப் போறீங்க?" என்றார்.

" உன் நடவடிக்கையைத்தான்."

" ஏன்? என் நடவடிக்கைதான் முந்தியே 'ப்ரிவிகவுன்சிலி'லே பைசலாயிடுத்தே !"

" அது உன் பங்காளி உன் மேலே போட்ட பிராதில்லே? இது உன் சம்சாரத்தினுடைய கேசு."

" அதுக்கு நீங்க வக்காலத்து வாங்கியிருக்கீங்களா?"

" இன்னிக்கா வாங்க வேண்டும்? அதைத்தான் நான் வாங்கிப் பதினேழு வருசம் மூணு மாசமாச்சே !"

" அந்த வக்காலத்து ஆவணி நாலாம் தேதியோடே கிழிஞ்சு போச்சு. இப்போ அவ என் பெண்சாதி."

இதைக் கேட்ட மரகதம் தனக்குள் ஆனந்தப்பட்டாள். தன் தகப்பனார் மேல் அவளுக்குக் கோபம் வந்தது. ஆனால், அதற்குள் கடம்பவனம் எகிறிக் குதித்தார்.

" நீ அவ புருஷனா? உன்னை நம்பி இந்தப் பெண்ணை இனி ஒரு நிமிஷங்கூட இங்கே விட்டிருக்க முடியாது."

" என்ன தப்புக் கண்டுக்கிட்டீங்க?"

" நீ ஏன் நாகபட்டினத்துக்குப் போனே?"

" என்னைவிட இருபத்தஞ்சு வயது மூத்தவரு, எங்க மாமா வந்திருக்காரு. என்னைக் கட்டிக்கிட்ட பெஞ்சாதி என்னைக் கேட்காமே வந்திருக்கு. நான் சர்க்கசு பார்க்கப் போனது குற்றமா?"

"ஒழுங்கா போனா குத்தமில்லே. ஒருத்தருட்டவும் சொல்லாமல் நீ எங்கே போயிருந்தே?"

"எங்கே போனேனா? அதான் வந்து கூட்டிக்கிட்டு வந்தீங்களே?"

" நாங்களா கூட்டிக்கிட்டு வந்தோம்? வண்டியிலே நீ எங்களை எதிர்பார்க்கலே போலிருக்குதே!"

"எதிர்பார்க்காமலா உக்காத்தி வச்சு ஓட்டிக்கிட்டு வந்தேன்?"

" திரும்பி என்னமோ, அட்டிகை ஏன் போட்டுக்கிட்டு வரலேன்னு கேட்டியே !"

"ஆமாம், அப்பாவும் மகளுமாக சர்க்கஸ் பார்க்க வந்தீங்களே இன்னும் கொஞ்சம் அலங்காரம் பண்ணிக்கிட்டு வந்திருக்கலாமே. வைர அட்டிகையை ஏன் போட்டுக்கிட்டு வரலேன்னு கேட்டேன்."

"அட்டிகை எங்கடா இருக்கு? நீதான் அதைக் கொண்டுபோய்த் திருவாரூரிலே கொடுத்துவிட்டியே ! எனக்குத் தெரியாதுன்னு நினைக்கிறியா?"



"ஓஹோ! தெரியுமா? தெரிஞ்சா போலீஸிலே எழுதி வைக்கிறது தானே?"

"போலீஸ் எதற்கு? இந்தக் கடம்பவனம் பிள்ளை ஆயிரம் போலீஸ்காரனுக்குச் சமானம்."

"அப்படியானா தென்னை மரத்திலே கட்டிவச்சு அடிக்கிறது தானே?"

"என் பொண்ணை உனக்குக் கட்டி வைக்காமே இருந்தால் நானு தென்னை மரத்திலே உன்னைக் கட்டி இருப்பேன். என் மகளுக்காகப் பார்க்கிறேன்."

"இது தெரிஞ்சிருந்தா வாயை மூடிக்கிட்டு இருக்கணும். என் கிட்டே வந்து கேள்வி கேட்கப்படாது. அப்பொழுதுதான் மரியாதை தங்கும்."

"மரியாதை வேண்டாமடா. என் மக வாழ்ந்தால் போதும்!" என்று இரைந்தார் கடம்பவனம்.

மரகதம் குறுக்கே வந்து புகுந்தாள். "அப்பா, நீங்கள் சும்மா இருங்கப்பா" என்று தகப்பனை விலக்கிவிட்டாள். ஏற்கனவே சண்டைக்காரர். அதிலும் ஒருவர் வந்து விலக்கினால் விட்டுவிடுவாரா, கடம்பவனம்? " இந்தா மரகதம் ! நீ உள்ளே போ. நான் அவன்கிட்டே பேசிக்கிறேன் !" என்றார்.

"போ, போ, உள்ளே போ. உங்க அப்பா என்னை அடிச்ச விசாரணை பண்ணப் போறாரு. போ, நீ போ உள்ளே."

" என்னடா? நான் அடிச்ச அடியெல்லாம் மறந்துபோச்சா? உன்னை அடிக்காமே என்னிக்கடா நீ ஒழுங்கா பள்ளிக்கூடம் போயிருக்கே?"

"ஓய்! வாயை மூடுங்காணும்! பெரிய மனுஷனாச்சேன்னு பார்த்தா சும்மா மேலே போறீர்! என் இஷ்டப்படிதான் நடப்பேன்!"

"எங்கே நட, நட பார்ப்போம்" என்று கடம்பவனம் பிள்ளை கம்பை ஓங்கினார்.

"அப்பா! நீங்க பேசாமே வீட்டுக்குப் போங்க! அவரு என் புருஷன்!" என்று கம்பைத் தட்டிவிட்டாள் மரகதம்.

" என்ன, உன் புருஷனா? இந்தப் பயலா! பொழுது விடிஞ்சா வண்டியைக் கட்டிக்கிட்டுத் திருவாரூர் தேவடியா வீட்டுக்குப் போறானே, இவனா?"

"அவரு எங்கே போனாலும் என் புருஷன். நீங்க மரியாதையில்லாமல் பேசாதீங்க."

" எம்மா, என்னையா இப்படிக் கேட்கறே நீ?"

" ஆமாம், உங்களைத்தான் கேட்கிறேன். இது நல்ல தொந்தரவா போச்சு. நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். அத்தானைப் போய்க் கண்டபடி பேசறீங்க."

"அத்தான், நீங்க உள்ளே வாங்க" என்றாள் மைனரிடம். மைனர் விறைப்பாக நின்றார்.

இவர்கள் இருவரும் இருக்கும் நிலையைப் பார்த்து, எங்கே அடித்துக்கொள்ளுவார்களோ என்று தோன்றவே மரகதம், "எனக்காக எங்க அப்பாவை மன்னிச்சுடுங்க. அவங்களுக்கு முரட்டுக் குணம். கோபம் வந்தா கண் தெரியாது. நீங்க உள்ளே வாங்க" என்று மைனரின் காலில் விழுந்து கெஞ்சினாள்.

இதைப் பார்த்த கடம்பவனம் பிள்ளை, "பெத்துப் பதினெட்டு வருஷம் வளர்த்த தகப்பன் உனக்குப் பெரிசா இல்லே. அந்தப் பாவிப் பயல் பெரிசா போனான்" என்று சொல்லிவிட்டு ஆத்திரத்துடன் வெளியேறினார்.

மைனரோ மரகதத்தின் பெருந்தன்மையைப் பார்த்துவிட்டுத் திகைத்தார்.

மரகதம் எழுந்தாள். கண்ணைத் துடைத்துக்கொண்டாள். "உள்ளே வாங்க. நான் சர்க்கசுக்கு வரமாட்டேன்னுதான் சொன்னேன். அப்பாதான் கோபத்திலே கூட்டிக்கிட்டுப் போனாரு. இந்த ஒரு அட்டிகை இல்லே, அவ்வளவு நகையையும் வேண்டுமானாலும் கொண்டுபோய் அங்கே கொடுங்க. நான் உங்களை ஒண்ணும் குற்றம் சொல்லலே!

"உங்களுக்குத் தகுந்த அழகு எனக்கு இல்லை. எனக்கு ஆடவும் தெரியாது, பாடவும் தெரியாது. அந்தத் திருவாரூர்ப் பொண்ணு நிஜமாவே அழகா இருக்கா. கல்யாணத்தும் போதே, அவள் ஆடுறதைப் பார்த்தேன். அத்தானுக்கு இப்படில்லே பொண்ணு அமையணும்னு நினைச்சேன். அதனாலேதான் தலையைக் குனிஞ்சுக் கிட்டே இருந்தேன். நீங்க அவ மேலே ஆசைப்பட்டது சரி" என்று அந்த வெகுளி பேசியது. அது பேசப் பேச பெண்மை தலைசிறந்து நின்றது. இதைப் பார்க்கப் பார்க்கப் படித்த வாலிபராகிய மைனர் உள்ளம் நெகிழ்ந்தது.

மைனர் உள்ளே போகவும், மரகதம் ஆவலுடன் கொல்லைப் பக்கம் ஓடினாள். அவசர அவசரமாக வெந்நீர் எடுத்து வைத்தாள். துண்டு, சோப்பு இவைகளைத் தானே கொண்டுபோய்க் குளிக்கும் அறையில் வைத்தாள். வேகமாகத் தன் கணவனிடம் வந்தாள்.

மைனரோ, உள்ளே வந்து உட்கார்ந்தது முதல் மரகதத்தின் உயர்ந்த பண்பாட்டில் மனத்தைப் பறிகொடுத்து, 'ஐயா, இந்தப் பெண்ணுக்கு மோசம் செய்ய இருந்தோமே!' என்று வருந்திக் கொண்டே இருந்தார். ஒரு புறம் மோகனாவின் அழகும், ஒரு புறம் மரகதத்தின் பரிவும் அவர் மனத்தை வாட்ட ஆரம்பித்தன. 'சின்ன வயதில், கூடவே சண்டை பிடித்துக்கொண்டு வாயாடியாகத் திரிந்த மரகதம், இப்பொழுது இவ்வளவு பெருந்தன்மையுடையவளாகி விட்டாளே. பெண்மை தலைதூக்கி நிற்கிறதே' என்று எண்ணினார்.



இப்படி இருக்கையில், "தண்ணீர் தயாராக இருக்கிறது. குளிக்கப் போங்கள்" என்று மரகதம் சொன்னவுடனே அவள் முகத்தைப் பார்க்கவே மைனர் கூசினார். இருந்தாலும், நிமிர்ந்து பார்த்தார். ஆச்சரியம்! அந்த மரகதத்தின் முகத்தில் கோபக் குறியே இல்லை. தன்னைத் தன் கணவன் மோசம் செய்துவிட்டான் என்ற வருத்தத்தின் குறியும் இல்லை. ஒன்றுமே நடக்காதது போல அவள் முகத்திலே உன்னதமான பெண்ணின் களை பிரகாசித்துக்கொண்டிருந்தது. புன்சிரிப்பு முகத்தில் தவழ்ந்தது. பார்க்கப் பார்க்க அந்த மரகதம் உத்தம ரத்தினமாக மாசு மறுவற்ற மரகதமாய் விளங்கியது.

மைனர் பதுமை போல் எழுந்து உள்ளே சென்றார். குளிக்கும் அறையின் கதவை அடைத்துக்கொண்டார். அவர் கண்களில் ஊற்றுப் போல் கண்ணீர் வடிந்தது. பாவம், நெடுநேரம் கண்களையே துடைத்துக்கொண்டு இருந்தார்.

குளித்து சுவாமி கும்பிடப் போனார். சுவாமி அறைக்குள் நுழைந்தவுடன் அவருக்குத் தம்மை அறியாமல் ஒரு பயம் வந்தது. 'மரகதத்துக்குத் தப்புச் செய்ய நினைத்தோமே!' என்று அவர் மனச்சாட்சி குடைந்தது.

அதற்குள் மரகதம் கணவனுக்குப் பலகாரங்கள் எல்லாம் தன் கையால் கொண்டுவந்து வைத்தாள். மைனர் இலையில் உட்கார்ந்தார். அவர் கைகள் பலகாரங்களை அள்ளி வாயில் போட்டுக்கொண்டன. "என்ன அத்தான், மிஷின் மாதிரி சாப்பிடறீங்க? உப்பு போதுமா, போதாதா, துவையலுக்கு?" என்று சிரித்துக்கொண்டே கேட்டாள்.

'உப்பு போதும் மரகதம், உப்பு போதும். சொரணை வந்தது' என்று நினைத்துக்கொண்டார் மைனர்.

'இந்தப் பாழாப்போன வைத்தியினாலே அல்லவா இந்தத் தகராறு? போனால் போகிறது. என்ன, ஒரு பதினைந்து ஆயிரம் ரூபாய் போயிருக்கலாம். அதனால் நஷ்டம் ஒன்றும் இல்லை. நாம் தப்பினோம்!' என்று ஆறுதல் அடைந்தார்.

இவ்வாறு இரண்டொரு நாள்கள் கழிந்தன. கணவனும், மனைவியும் அன்யோன்யமாக வாழலானார்கள்.

✦ ✦ ✦ ✦ ✦

ஸ்ரீமான் வைத்திக்கு உலகமே அவர் வீடு. ஆதலால், உலகத்துக் கவலைகளையெல்லாம் அவரே ஏற்றுக்கொண்டு அவைகளைக் கவனிப்பார். நாகபட்டினத்தில் விடப்பட்ட வைத்தி திருவாரூர் வந்து இரண்டு மூன்று நாள்களுக்குள் பல விஷயங்களைத் தெரிந்துகொண்டுவிட்டார். அவற்றுள் ஒன்று, சண்முகம் சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரரிடம் பாரி நாயனம் பழகுகிறான் என்பது. அதைக் கேட்டதும் துப்பு விசாரிக்க இறங்கினார். உண்மை விஷயங்கள் புலனாயின. உடனே தம் முயற்சிக்குப் பங்கம் வந்து விடுமே என்ற யோசனை வந்தது. நேரே சிங்கபுரத்துக்குக் கிளம்பினார்

கொஞ்ச காலமாகச் சிங்கபுரத்திற்குள் நுழையும்போது, சிங்கத்தின் வாயில் நுழைவதாகவே எண்ணி அவர் உள் நுழைந்து வந்தார். இன்று அவர் வந்த நேரத்தில், முதல் முதலில் வண்டிக்கார வேலப்பன்தான் எதிர்ப்பட்டான். எப்பொழுதும் அவரைப் பார்த்தால், "சாமி, கும்பிடறேனுங்க" என்று சொல்வது வேலப்பனின் வழக்கம். இன்றைக்குப் பார்த்ததும் பார்க்காதவன் போல் நடந்தான்.

"எலே வேலு, என்னடா? ரப்பா போறே?" என்றார் வைத்தி.

வேலு திரும்பினான். "இலை மரத்திலே இருக்குமுங்க!" என்றான். வைத்திக்கு ஒரு வார்த்தை போதும். உடனே அந்த ஆள் தம்மை மதிக்கவில்லை என்று புரிந்துகொண்டார்.

"வேலப்பா, என்னடா, சௌக்கியமாக இருக்கிறாயா?"

"டா போடாதீங்க! கடம்பவனம் பிள்ளை கம்பு காத்துக்கிட்டு இருக்கு. பேசாமே வந்து சுவடு தெரியாமே வீட்டுக்குப் போங்க" என்றான் வேலப்பன்.

"ஏன்? கடம்பவனத்துக்கு என் மேலே என்ன கோபம்?"

"உங்களாலேதான் மைனர் கெட்டுப்போனாருன்னு சொல்லறாரு."

"மைனர் கெட்டுப்போனாரா? அவர் என்ன பொடி மட்டையா கெட்டுப்போக!"

"அட, ஏன் ஐயா சும்மா கித்தாப்புப் பேசறீங்க? வந்த வழியைப் பார்த்துக்கிட்டுப் போங்க!"

வைத்திக்கு விஷயம் விளங்கிவிட்டது. சிங்கபுரம் முழுவதுமே நம் பெயாதி பரவிவிட்டது என்பதைப் புரிந்துகொண்டார். இந்நிலையில் மைனரை என்ன தந்திரம் செய்து பார்ப்பது என்று யோசித்தார்.

"சரிதான் — சரி. வேலப்பா, ஒரு ஆயிரம் ரூபாய் பணம் உங்கிட்ட கொடுக்கிறேன். அதைக் கொண்டுபோய் மைனர்கிட்டே நான் கொடுத்ததாகச் சொல்லிக் கொடுத்துடறியா?" என்று கேட்டார்.

"எனக்கு எதுக்குங்க இந்தப் பொல்லாப்பு? பண விஷயம்."

"ஏய் வேலு, அவர் சம்பளத்தை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு, அவருக்கே துரோகம் பண்ணறியே! அவருக்கு ஒரு இடத்திலே இருந்து வரவேண்டிய ஆயிரம் ரூபாய் பணம் வந்தது, கொண்டுவந்து கொடுக்கலாம்னு வந்தேன். நல்ல வேளையாக கடம்பவனம் கோபமாக இருக்கிறாருன்னு நீயும் சொல்லிட்டே. என் கையில் இருக்கிற பணத்தை அவர் தட்டிப் பிடுங்கிண்டா நான் எங்கே போறது? அதுக்குத்தான் கொண்டுபோய்க் கொடுடான்னேன், ரொம்பப் பிகு பண்ணிக்கிறியே!"

"இது பண விஷயங்க. நான் இதிலே எல்லாம் தலையிட மாட்டேன்" என்று வேலப்பன் பயத்துடன் கூறினான்.

"சரி, பின்னே, வைத்தி ஆயிரம் ரூபாய் கொண்டுவந்தாரு, என்கிட்டே கொடுத்தாரு, நான் முடியாதுன்னுட்டேன் அப்படின்னு



மைனர் கிட்ட சொல்லிடு. நான் வர்றேன்" என்று கோபமாகக் கூறிவிட்டு, வைத்தி திரும்பி நடந்தார்.

வேலப்பன் பாடு தர்மசங்கடமாகிவிட்டது. பணத்தை வாங்குவதா வேண்டாமா என்று யோசித்தான். "ஐயா!" என்று கூப்பிட்டான். வைத்தி திரும்பினார்.

"இல்லிங்க, கொஞ்சம் இங்கேயே இருங்க. நான் போய் உள்ளே சொல்றேன், நீங்க வந்திருக்கீங்கன்னு."

"சரி, நீ போய்ச் சொல்லு. அதுவரையில் மறைவா எங்கே உட்காரலாம், சொல்லு!"

வேலப்பன் அவரைக் கூட்டிக்கொண்டு போய் களத்துமேட்டில் ஒரு வைக்கோல் போர் மறைவில் உட்கார வைத்துவிட்டு, அவர் வருகையைச் சொல்ல ஓடினான்.

"வைத்தி வந்திருக்கிறாரு, உங்களைப் பார்க்க வேண்டுமாம்" என்று வேலப்பன் சொன்னதுமே மைனருக்குத் திகில் பிடித்தது. 'இவன் ஏண்டா இங்கு வந்தான்?' என்று முதலில் தோன்றியது இருந்தாலும், 'சொல்லாமல் வண்டியை ஓட்டிக்கொண்டு வந்து விட்டதற்கு மோகனா கோபித்திருப்பாளோ?' என்ற சந்தேகம் வரவே, அவரை அறியாமல், அவரது மனம் பழைய பாதையில் ஓட ஆரம்பித்தது.

மதில் மேல் ஏறித் திருடுகிறவர்கள், உடும்பின் வாலில் கயிற்றைக் கட்டி, தூக்கி எறிவார்கள். உடும்பு உயரத்தில் போய், தான் விழுந்த இடத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளும். உடனே கயிற்றை இழுத்துப் பார்ப்பார்கள். இழுக்க இழுக்க, உடும்பு இறுகப் பிடித்துக்கொள்ளும். இதைத்தான் 'உடும்புப்பிடி' என்பது.

இந்த மனமும் அப்படித்தான். சில சமயங்களில் இது ஒன்றைப் பிடித்துக்கொள்ள ஆரம்பித்தால், உடும்புப்பிடியாகப் பிடித்துக் கொண்டுவிடும். எவ்வளவுக்கெவ்வளவு இழுக்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு இதன் பிடி பலப்படும்.

தீய எண்ணத்தைத் தனியாக உட்கார்ந்து அடக்கிவிடலாம் என்று பார்த்தால் அது நம்மை அடக்கிவிடும். மனத்தில் கெட்ட நோக்கம் வளர்கின்ற காலத்தில் உடனே ஓடிப் போய் நான்கு நல்லவர்களுக்கு நடுவில் அமர்ந்துவிடுவது ஒரு பெரிய நன்மை.

மைனர் எங்கே போவார்? மாமாவிடந்தான் போக வேண்டும். மாமாவோ இந்த மைனருக்கே குருஸ்தானம் வகிக்கக்கூடியவர். இவ்வாறு மைனர் சற்று நேரம் திண்டாடினார். ஆனால், இரண்டு நிமிஷத்துக்கெல்லாம் வைத்தியின் எதிரில் வந்து நின்றார்.

களத்துமேட்டில் மைனரைப் பார்த்ததும் வைத்தி, "போங்காணும், உம்மை நம்பினா வைக்கோல் போரை நம்பினா போலத்தான்" என்று கோபித்துக்கொண்டார்.

"என்ன வைத்தி? என்ன கோபம்?"

"பின்னே என்ன, என்னைக் கூடாரத்துக்கு உள்ளே போகச் சொல்லிவிட்டு, நீர் வண்டியைக் கட்டிக்கொண்டு போய்விட்டீரே!"

"ஏன், வடிவாம்பாளும், மோகனாவும் வந்து காத்துக்கிட்டு இருந்தாங்களா!"

"ஏன், நான் மனுஷனாகத் தெரியலியோ?"

"என்ன வைத்தி? என்ன நடந்தது?"

"ஆமாம், நடந்தது வந்த மனுஷனுக்கு ஒரு இட்டிலி, காப்பி ஒன்றும் கிடையாது."

"டேய் வேலப்பா, தலகாப்பிள்ளை கிட்டச் சொல்லிப் பலகாரம் வாங்கிக்கிட்டு வா. வைத்தி வந்திருக்கிறாருன்னு சொல்லாதே. 'தபால் காரனுக்குப் பலகாரம் வேண்டுமாம், எஜமான் சொன்னாரு'ன்னு சொல்" என்றார் மைனர். வேலப்பன் ஓடினான்.

"நல்ல வேளை, நாய்க்கு வைக்கணும்னு சொல்லாமே இருந்ீரே. நான் பலகாரம் சாப்பிட்டுட்டேன். அந்த வேலப்பன் போகட்டும்னு தான் பசிக்குதுன்னு சொன்னேன். இப்போ நான் வந்த விஷயத்தைக் கேளும். தங்க நாயனம் செய்ய அட்வான்ஸ் கொடுத்திட்டீரோ?"

"இல்லை."

"அப்படியிருந்தா அதைக் 'கான்சல்' பண்ணணும்."

"ஏன், போட்டி இல்லையா?"

"போட்டி உண்டு...பொண்ணு உமக்கு இல்லே!"

இதை வைத்தி சொன்னவுடனே, மைனருக்குத் தம் பொருளைப் பிறர் கொண்டுபோகப் போகிறார்களே என்ற எண்ணம் வந்தது.

"என்ன... என்ன விஷயம்?"

"அது 'மாட்டர்' ரொம்ப சீரியஸ். நீர் வைர அட்டிகையைத் தூக்கிக் குடுத்துட்டீர். நானும் நம்ப மோஹினிதானேன்னு சாதாரணமா நினைச்சுட்டேன். இப்ப பார்க்கப் போனா நம்ப ரெண்டு பேரும் மோசம் போயிடுவோம் போலே இருக்கு. அந்தச் சண்முகத்துக்கும் மோகனாவுக்கும் சண்டை என்று நாம் நினைத்தது தப்பு. அது ஏதோ பிரணய கலகமாம்."

"அட! தமிழிலே சொல்லித் தொலையுமே!"

"ஏதோ ஊடல் மாதிரி இருக்கு."

"என்ன, ஊடலா?"

"ஆமாம். இந்தக் கூடல் பக்கத்திலே அழகர் கோவிலுன்னு ஒன்று இருக்கு. அது பாடல் பெற்ற ஸ்தலங்களில் ஒன்று. குன்றுதோறாடல் நடந்த இடம். அங்கே மோகனா ஆடலுக்குப் போயிருக்கா. சண்முகத்தின் வாசிப்பு மாடல்லே மயக்கம் வந்திருக்கு. அதுக்கு நடுவிலே நீர் வந்ததாலே கூடல் தடைப்பட்டு ஊடல்லே வந்திருக்கு. இனிமே நீர் 'டல்'லா இருக்கப்படாது. தடை எல்லாம் வடிவாம்பாள் சொல்லி அழறாள்."



"என்ன, சண்முகத்துக்கும் அவளுக்கும் நிஜமான சண்டை இல்லையா?"

"இல்லை. இந்தப் போட்டியில் அவன் ஜெயித்தால் பார் கண்டா?... கற்றாரைக் கற்றாரே காமுறுவர்!"

"அப்படியானால் நம்ம கதி?"

"அதோகதிதான். மூர்க்கரை மூர்க்கரே முகப்பர்!"

இதைக் கேட்ட மைனர் திடுக்கிட்டார்.

வைத்தி மேலும் பேசினார்: "திருவாரூருக்கு வந்து சாமிக்கண்ணு நாயனக்காரர் கிட்டே சண்முகம் பாரி நாயனத்தைப் பழக ஆரம்பிச்சுட்டான். கத்துக்கொண்டு ஊதிவிட்டால் மோகனா அவன் காலடியிலே சரணாகதி ஆகிவிடுவாள். எனக்கு உம்மைப் பத்திகூடக் கவலையில்லை. அந்த மோஹினி ஒரு அபூர்வ வஸ்து. அவ உம்மகிட்ட இருந்தாத்தான் அவளுக்கு நல்லது."

மைனரின் முகம் சிவந்தது. தான் தோற்கக்கூடாது என்ற எண்ணம் வந்தது. "ஓய் வைத்தி, அவனைப் பாரியை வாசிக்க விடப்படாது. என்ன வழி?"

"எல்லாம் 'பிளா'னோடுதான் வந்திருக்கிறேன்."

"என்ன பிளான்?"

"நான் ஒரு பெரிய 'ஸ்கீம்' போட்டிருக்கிறேன். அதைக் கொஞ்சம் 'வொர்க்' பண்ணணும். ஒரு ஆயிரம் ரூபாய் வேணும்."

"இதுதானா ஸ்கீம்? ஐந்நூறு போதுமா?"

"அது எதுக்குங்காணும் போதும்? பத்து வீட்டுக்காரர்கள் இருக்காங்களே. ஆளுக்கு நூறு ஆனாலும் ஆயிரம் ஆகுமே!"

"என்ன... பத்து வீட்டுக்காரனா...?"

"அதெல்லாம் என்னை இப்போ ஒண்ணும் கேட்காதீர். சண்முகம் வேற்றார் ஆளு. சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரருக்கு, அவனுக்குச் சொல்லிக் கொடுக்க உரிமை கிடையாது. அதை வச்சுண்டுதான் ஒரு சூழ்ச்சி பண்ணப் போறேன். எடும் ஆயிரம் ரூபாயை!"

"ஆயிரம், ஆயிரம்னு கேட்கிறியே. அட ஒரு ரூபாயையாவது குறைச்சுக் கேக்கப்படாதா?"

"சரி, கூடத்தான் ஒரு ரூபாயைக் கொடுமே!"

"இங்கேயே இரும். கொண்டுவரேன்" என்று சொல்லிவிட்டு மைனர், வீட்டுக்குப் போனார்.

ஐயாயிரமாகக் கேட்காமல் போனோமே. சமயத்தில் மூளை வேலை செய்ய மாட்டேன் என்கிறதே என்று வைத்தி வருத்தப்பட்டுக் கொண்டிருந்தபோது, கம்பைத் தட்டிக்கொண்டே யாரோ களத்து மேட்டுக்குள் நடந்து வரும் சத்தம் கேட்டது. வைத்தி ஓடிப் போய் மறைவில் நின்று பார்த்தார்.

ஸ்ரீமான் கடம்பவனம் பிள்ளை உள்ளே நுழைவது தெரிந்தது. வைத்திக்கு உடல் நடுங்கியது. ஒன்றும் புரியவில்லை. குபீரென்று வைக்கோல் போருக்குள் தாவி நுழைந்தார். தலை நிறைய வைக்கோலை அள்ளி வாரிப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார்.

சரசரவென்று வைக்கோலில் சத்தம் கேட்டவுடனே கடம்பவனம் பிள்ளைக்குத் தூக்கி வாரிப்போட்டது. 'ஏதாவது சாரைப்பாம்பாக இருக்குமோ' என்று நினைத்தார். கம்பைப் படபடவென்று தட்டினார். வைத்திக்கு உடம்பு வியர்த்தது.

"ஏன்டா, என்னடா சத்தம் கேட்குது? யார் அங்கே?" என்றார் கடம்பவனம். வைக்கோல் போரைப் பயத்துடன் ஒரு முறை சுற்றி வந்தார். வைத்தியின் அருகில் வரும்போது வைத்தி நடுங்கிய நடுக்கத்தில் வைக்கோல் சலசலத்தது. திடுக்கிட்டார் கடம்பவனம். தள்ளி நின்றபடி கம்பால் வைக்கோல் போருக்குள் ஓங்கிக் குத்தினார். வைத்தியின் உடம்பில் கம்பு குத்தியது. அவரால் கத்தவும் முடியவில்லை, கத்தாமல் இருக்கவும் முடியவில்லை. பல்லைக் கடித்துக் கொண்டு இருந்தார்.

இவ்வாறு இருக்கையில் வேலப்பன் கையில் பலகாரத் தட்டுடன் வந்து சேர்ந்தான்.

வேலப்பனைக் கண்டதும் கடம்பவனத்தின் பயம் தெளிந்தது. "அடே! போரை நாளைக்குப் பிரிச்சுத் தூளி விட்டு மறுபடியும் போடச் சொல்லு. என்னடா பலகாரம்?" என்றார்.

"தபால்காரருக்கு எசமான் கொடுக்கச் சொன்னாங்க" என்று சொன்னான் வேலப்பன்.

கடம்பவனத்துக்குக் கோபம் வந்தது. "ஆமாம், தபால்காரனுக்குப் பலகாரம் கொண்டுகிட்டு போடா. அவன் நாலு ஊருக்குப் போறவனா இல்லையா? எல்லா இடத்திலேயும் இப்படிச் சாப்பிட்டா உடம்பு என்ன ஆகும்? கொண்டுபோ வீட்டுக்கு!" என்று சத்தம் போட்டார்.

வேலப்பன் திரும்பினான். "எலே, அதை நீ தின்னுட்டு, இந்த வைக்கப்போர்லே ஏதோ பூச்சி பொட்டு இருக்கிறாப்லே தெரியது. உதறிப் பாரு" என்று உத்தரவு செய்துவிட்டு நடந்தார்.

வேலப்பன் பலகாரத்தைச் சாப்பிட ஆரம்பித்தான். வைக்கோல் போருக்குள் இருந்த வைத்தி அதைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே இருந்தார்.

கடம்பவனத்தின் தலை மறைந்த பின் வைத்தி கீழே குதித்தார். ஆனால், சம்பா வைக்கோல் உடம்பெல்லாம் அரிக்க ஆரம்பித்து விட்டது. வைத்தி பிடில் வாசித்துக்கொண்டே இருந்தார்.

ஜமீன்தார் வந்தவுடன் அவரிடமிருந்து ஆயிரம் ரூபாயைக் கையில் வாங்கிய பிறகுதான் வைத்தியின் உடம்பில் இருந்த அரிப்பும், உள்ளங்கை அரிப்பும் நீங்கியன.



உலகத்தில் வக்கீலுக்குத்தான் பீஸ் கொடுக்க வேண்டும் என்பதல்ல. வாழ்க்கைக்கும் பீஸ் கொடுத்தால்தான் நிம்மதி உண்டாகிறது. மூளை வேலை செய்கிறது. வண்டிக்கு மசகு போட்டால்தான் ஓடுகிறது.

திருவாரூரை அடைந்ததும், ஆயிரம் ரூபாய் நோட்டைக் கையில் எடுத்தார் வைத்தி. அத்தனைக்கும் பத்து ரூபாய் நோட்டாக மாற்றி, பெட்டியில் வைத்துப் பூட்டினார். ஒரு ஐம்பது ரூபாயை மாத்திரம் சில்லறை மாற்றி, மஸ்லின் சட்டையில் பணம் வெளியே தெரியும்படி வைத்துக்கொண்டு வெளியே நடந்தார்.

சாயங்காலம், கோயிலில் சாயரட்சை மணி அடித்தது. வைத்தி முன்னும் பின்னும் பார்த்துக்கொண்டே கீழ வீதியில் ஒரு சந்தில் நுழைந்தார். சந்தின் கடைசியில் உள்ள ஒரு பழைய வீட்டின் வாசலில் போய் நின்றார். கதவை மெதுவாகத் தட்டி, "நாயனக்காரர் இருக்கிறாரா?" என்றார்.

கதவு திறந்தது. அவர் எதிரில் சுமார் ஆறடி உயரம் உள்ள ஒரு ஆள் வந்து நின்றார். அவர் முகத்தில் கோபமும் பொறாமையும் கலந்து கொடுமையாகக் காட்சியளித்தன. அவர் வேறு யாருமில்லை. அவர்தான் சாமிக்கண்ணு நாயனக்காரர்மேல் பொறாமை கொண்ட எதிரி; கோடி வீட்டுக் குப்புசாமி நாயனக்காரர்.

நாற்பத்து ஏழாம் அத்தியாயம்



## வைத்தி வத்தி வைக்கிறார்!

**கோ**யில் கட்டுவதற்குக் கல் வேண்டுமல்லவா? அதற்காகப் பெரும் பாறைகளின் நடுவில் வரிசையாக ஆக்கர் போடுவார்கள். போட்டு, அந்தத் துளைகளில் வெடி மருந்தை வைத்துக் கெட்டிப்பார்கள். கெட்டித்த பின் அதில் நீளமாக ஒரு திரியை வைத்துவிட்டு, தள்ளி நின்று அந்தத் திரியில் நெருப்பை வைத்துவிடுவார்கள். அந்தத் திரி தீபாவளிப் பட்டாசுத்திரி போல் விருவிரு என்று எரிவதில்லை. மெதுவாக எரிந்து கொண்டே போய்ப் படாரென்று வெடிக்கும். உடனே பெரும் பாறைகளும் பிளந்துவிடும். அந்தத் திரியைத்தான் வர்த்தி என்பார்கள். அதுவே பேச்சு வழக்கில் வத்தியாயிற்று. பிற்காலத்தில் நம்மிடையே சிமிண்டுக் கோயில் கட்டும் பழக்கம் ஏற்பட்டு இப்பொழுது அதுவும் இல்லாமல் போயிற்று. என்றாலும், இன்னும் அந்த வத்திவைப்பது என்ற அருமையான சொல்லைக் காப்பாற்றி வருபவர்கள் ஸ்ரீமான் வைத்தி போன்றவர்கள்தாம். அவர் பெயரிலும் ஆரம்பத்தில் ஒரு 'ஐ'

காரம் சேர்ந்ததால்தான் அவரை வைத்தி ஆக்கிவிட்டது. வை "தீ" என்று சாதாரணமாக அழைக்க வேண்டிய அவரை ஒரு தகர ஒற்று சேர்ந்து 'வைத்தி' என்று ஆக்கிவிட்டது.

இத்தகைய வைத்தியை வாசலில் பார்த்ததும் குப்புசாமி நாயனக்காரர் மரியாதையுடன் "இதோ வந்துடறேன்" என்று உள்ளே போனார்.

பாவம், வைத்தி வந்திருக்கிறாரே, தம் வீட்டில் அவர் உட்காரக் கூடச் சரியான இடமில்லையே என்ற எண்ணத்தால் அவரே புறப்பட்டு வெளியே வரத் தயாராக இருக்கையில், வைத்தி தாமே அவர் வீட்டுக்குள் புகுந்துவிட்டார்.

இதைப் பார்த்த குப்புசாமிக்கு, வைத்தியை வெளியே போ என்றும் சொல்ல முடியவில்லை, உள்ளே வா என்றும் சொல்ல முடியவில்லை. இவ்வாறு அவர் தயங்கி நிற்கையில், "என்ன நாயனக்காரரே, வீட்டிலே இருக்கிறது ஆச்சரியமா யிருக்கே? நான், நீங்க எங்கேயாவது கச்சேரிக்குப் போயிருப்பீங்களாக்கும்னு நினைச்சேன்" என்றார் வைத்தி.

குப்புசாமி நாயனக்காரரை உள்ளூரிலேயேகூட அதிகமாக யாரும் அழைப்பதில்லை. இது வைத்திக்கும் தெரியும். குப்புசாமிக்கு வித்தையெல்லாம் தெரியும். ஆனால், இடம், பொருள், ஏவல் தெரியாது; சங்கீதம் தெரியும்; ஆனால், வாசித்தால் 'பிசிறு' அடிக்கும். கல்யாண வீட்டிற்கு வாசிக்கப் போனால் முகூர்த்தத்தின்போது முகாரி வாசிப்பார். யாராவது கேட்டால் 'முகாரி கெட்ட ராகம் இல்லையே' என்று வாதம் செய்வார். மணவறையில் 'வாழ்வை நம்பாதே' என்று வாசிப்பார். மாப்பிள்ளை ஊர்வலத்தின்போது, ஒரு முறை சாரட்டுக்கு முன்னே வாசித்துக்கொண்டு புறப்பட்டார். எந்தப் பாட்டை? "வாழ்வாவது மாயம் இனி மண்ணாவது திண்ணம்" என்ற பாட்டை.

"கூடியவரையில் கோடி வீட்டுக் குப்புசாமியைக் கூப்பிடாதே" என்பதுதான் ஜனங்களின் அபிப்பிராயம். ஆனால் அவரோ, இந்த உலகமே ஞானசூன்யம் என்றும், தம்மை விட்டால் சங்கீதம் ஒருவருக்கும் தெரியாது என்றும், தம்முடைய கஷ்டத்துக்கெல்லாம் காரணம் சாமிக்கண்ணு நாயனக்காரர்தான் என்றும் பிடிவாதமான அபிப்பிராயம் உடையவர். இருந்தாலும் வைத்தியின் புகழுரையைக் கேட்ட உடனே அவர் விட்டுக்கொடுக்கவில்லை.

"கொஞ்சம் வீட்டு வேலை அதிகம். அதனாலேதான் கச்சேரிக்கு ஒண்ணும் ஒப்புக்கொள்ளலே!" என்றார்.

"ஆமா, முகமெல்லாம் ஏன் ஒரு மாதிரியா இருக்குது? ஏதாவது வாசிச்சுக்கிட்டிருந்தீங்களா?"

"ஆமா. விக்கிரமாதித்தன் கதை வாசிச்சுக்கிட்டு இருந்தேன்."



"என்னங்காணும், எதுக்கெடுத்தாலும் எடக்கிலே ஆரம்பிச்சுட்டீர்?"

"குதிரையிலே இடக்குப் பண்ணும்! குப்புசாமி ஏன் பண்றான்? நான் வவுத்துக்கு ஆத்த மாட்டாமே ஏதோ பேசினா இடக்குங்கிறீங்க!"

"அட பாவி மனுஷா! இந்தா குப்புசாமி, இருந்தாலும் நீ ரொம்ப மட்டம். உனக்கு ஒரு முடைன்னா எங்கிட்டத்தானே வரணும். காப்பி சாப்பிட்டையா?"

"இல்லை."

"என்ன டிபன் சாப்பிட்டே?"

"கையிலே காசு கிடைச்சா எதைச் சாப்பிடலாம்னுதான் யோசிச்சுக்கிட்டு இருந்தேன்."

"சரி, இங்கே யாராவது பையன் இருந்தா வாங்கிட்டு வரச் சொல்லு. அப்படியே இந்த ஒரு ரூபாய்க்கும் சில்லறை மாத்திக்கிட்டு வந்துடட்டும்" என்று ஒரு ரூபாயைத் தூக்கிக் கொடுத்தார் வைத்தி. தட்ட முடியாமல் வாங்கிக்கொண்டு ஒரு பையனிடம் செம்பு முதலியவற்றைக் கொடுத்து அனுப்பினார் குப்புசாமி நாயனக்காரர்.

"ஆமா, சேவுகம் ஒண்ணும் சரியா இல்லியா?"

"எங்கேங்க, அதுக்கெல்லாம் நாலு பேர் சிபாரிசு வேணும்" என்றார் குப்புசாமி.

"உமக்கு எதுக்கு சிபாரிசு? உம்ம யோக்கியதை இந்த ஊரிலே யாருக்கு இருக்குது?"

"அது உங்களுக்குத் தெரியுது, எனக்குத் தெரியுது, ஊருக்குத் தெரியல்லியே!"

"ஓய்! சும்மா கதை அளக்காதீர். குப்புசாமி நாயனக்காரர் வாசிப்புன்னு சொன்னா கூட்டம் கேக்கக் காத்துக்கிட்டு இருக்கு."

"கேக்கற கூட்டம் காசு கொடுக்குமாங்க? நம்மைக் கூப்பிடறதுன்னாத்தான் பணக்காரங்களுக்கு வலிக்குதே!"

"அதுக்கு நீரும் கொஞ்சம் காக்காய் பிடிக்கணும். கண்ட இடத்திலே கூழைக் கும்பிடு போடணும். வேட்டியை எடுத்து இடுப்பிலே கட்டிக்கிட்டு எசமான்னு கூடவே ஓடணும். உமக்கு எங்கே அதெல்லாம் தெரியுது. உங்க சாமிக்கண்ணுவைப் பாரும். வீடு, வாசல், தங்க நாயனம் என்ன ஜோராயிருக்கார்! ரெண்டு பேரும் ஒண்ணாத்தானே சொல்லிக்கிட்டீங்க! உம்மைவிட அவரு யோக்கியதையிலே சாஸ்தியா, என்ன?"

"அதென்ன அப்படிச் சொல்லிப்பிட்டீங்க! அவர்தானே தீக்ஷிதரய்யாவுக்கு முக்கிய சிஷ்யராம்."

வைத்தி சிரித்தார்.

"என்ன சிரிக்கிறீங்க? இல்லை, நானா சொல்றேன்? அது அப்படித்தானே சொல்லிக்கிட்டு இருக்கு? ஊரானும் கேக்கறான்."

"நீர், குடத்துக்குள்ளே வச்ச விளக்காட்டமா உள்ளேயே உட்கார்ந்திருந்தீர்னா என்ன செய்யறது. உம்மைப் பத்தி ஊரார் தெரிஞ்சிக்கல்லியேங்கறபோது எனக்கு வருத்தமா இருக்கு!"

இது குப்புசாமிக்கு ரொம்ப நியாயமாகப் பட்டது. "சரி, வெத்திலை போடுங்க" என்று பெட்டியைக் காட்டினார்.

வைத்தியோ தாம் வைத்த வத்தி பற்றிவிட்டது என்பதை உணர்ந்தார். வெத்திலைப் பெட்டியைத் தடவிக்கொண்டே "ஆமா, என்ன, சீவல்கூட இல்லை போல் இருக்கே?" என்றார்.

"அதுலே இருந்தால்தான்."

"அடே பையா, இந்த ஒரு ரூபாய்க்குச் சீவல் வாங்கிட்டு வா" என்று உத்தாவு போட்டார் வைத்தி.

"என்னத்துக்குங்க, வாண்டாங்க, அந்த ஒரு ரூபாயை இப்படிக் கொடுங்க" என்றார் குப்புசாமி.

"இந்தாரும். ஒரு ரூபாய் என்ன, இரண்டு ரூபாயா வச்சுக்கும்" என்று வைத்தி எடுத்துக் கொடுத்தார்.

"இந்த மாதிரி அன்புடையவங்க இரண்டு பேர் இருந்தா போதுங்க!" என்றார் குப்புசாமி.

"ஆமா, சாமிக்கண்ணு நாயனக்காரர் உமக்கு ஒண்ணும் உபகாரம் செய்யறதில்லையோ?"

"உபகாரமா? இடஞ்சல் பண்ணாம இருந்தால் போதுங்க."

"இல்லே, நல்ல செல்வாக்கோடே இருக்காரே, எங்கேயாவது ரெண்டு இடத்திலே சொன்னா உமக்கும் தொழில் நடக்குமேன்னு கேக்கறேன்."

"அதெல்லாம் எதிர்பார்க்காதீங்க. அந்த ஆளுக்கு வயத்திலே பல்லு. நமக்கு வருகிற கச்சேரியைக்கூட அவர் கெடுத்துடுவாரு. அந்த ஆளுப் பேச்சை என்கிட்ட பேசாதீங்க!"

"பின்னே, அவனாலே உமக்கு ஒண்ணும் மிச்சமில்லை."

"இல்லை, கண்டிப்பா யில்லை."

"அப்படின்னா, அது ஒண்ணுதான் வழி!"

"என்ன வழி, பிச்சை எடுக்கிறதா?"

"நீர் ஏங்காணும் பிச்சை எடுக்கிறீர்? அந்த ஆளைப் பிச்சை எடுக்க விடு. உன் யோக்கியதையைப் பிரகாசிக்கவிடாமல் தடுக்கறானில்லே. விளக்கிலே சுடரைத் தட்டி விடறாப்பிலே நீ அவனை ஒரு தட்டுத் தட்டு."

"அதுவும் ஒருவாட்டி இருட்டிலே தட்டிவிட்டேனுங்க, பிரயோசனப்படல்லே!"

"அது என்ன அது?"

"ஒரு நாள் ராத்திரி கோயில்லே இருந்து வந்துக்கிட்டு இருந்தாரு. ஏதோ ஆத்திரத்திலே குறுக்கே போய் ஒரு தட்டுத் தட்டிட்டேன்.



சரி, ஆளு தீர்ந்தான் அப்படின்னு சந்தோசப்பட்டேன். அடுத்த நாள் ஊரெல்லாம் நம்ம பேரு சிரிப்பாச் சிரிக்கடிக்க."

"எப்படி?"

"ராத்திரி, குப்புசாமி என் பேரைச் சொல்லி வாந்தல கம்பத்தை அடிச்சுக்கிட்டிருந்தான்'னுட்டு அந்தச் சாமிக்கண்ணு ஒரு கதையைக் கட்டிவிட்டுட்டாரு."

"அட பாவி மனுஷா!"

"ஊரும் நம்பிடுச்சுங்க. அதுதானே ஆச்சரியம்!"

"ஆமா, எனக்கு ஒரு சந்தேகம்; நீர் அடிச்சது அவரைத்தானே?"

"அவருன்னு நினைச்சுத்தான் அடிச்சேன். அந்த நேரத்திலே என்ன தெரியுதுங்க?"

"பின்னே அது போதும். நம்ம திருப்திக்குத்தானே அடிக்கறோம்! ஆனா என்னைக் கேட்டா அந்த ஆளைத் தலைதூக்க முடியாமல் செய்திருப்பேனே! இந்தத் திருவாரூரை விட்டே ஓட்டியிருக்கலாமே!"

"எப்படி? சொல்லுங்க!" என்று ஆவலுடன் கேட்டார் குப்புசாமி.

"இந்தப் பாரி நாயனம் இருக்கே, இது யார் வீட்டுச் சொத்து?"

"அது தியாகராஜாவுக்கு ஏற்பட்டது."

"சரிதான்காணும். நீரும் நானுங்கூடத் தியாகராஜாவுக்கு ஏற்பட்டவங்கதான். நான் அதைக் கேட்கவில்லை. எந்தப் பாரம்பரைச் சொத்துங்கறேன்?"

எங்க பத்து வீட்டுக்காரருக்குத்தான் சொந்தம்."

"சாமிக்கண்ணு நாயனக்காரருக்கு மட்டும் சொந்தமில்லையே!"

"ஏன்? அப்படிச் சொன்னாரா?"

"அட, அதுக்குள்ளே இப்படிக் கோவிச்சுக்கிறீரே!"

"இல்லேங்க, அந்த ஆளு அப்படிச் சொன்னாலும் சொல்லும்."

"அட, சொல்றதென்னங்காணும்? அப்படித்தான் நடந்துக்கிறாரு. இல்லாட்டி கண்டவங்களை எல்லாம் கூப்பிட்டுப் பாரி நாயனத்தை எடுத்து வாசிக்கப் பழக்கி வைப்பாரா?"

"என்ன? பாரி நாயனத்தைப் பழக்கிக் கொடுக்குதா? யாருக்கு? எவனுக்கு? எப்போது?"

"இருங்க, இருங்க! அப்படி ஒண்ணும் மட்டமான ஆளுக்கில்ல. சண்முகசுந்தர நாயனக்காரரு இருக்காருல்ல...?"

"ஆமா, சிக்கலாரு."

"அவருக்குத்தான், நாலு நாளா பாடம் நடக்குது."

அதைக் கேட்டதும் குப்புசாமி நாயனக்காரரின் கண்கள் சிவந்தன; உடம்பு பதறியது.

"நிசமாவா? அதெப்படி முடியும்? வேத்தூர் ஆளு அதை எப்படித் தொட முடியும்? இவர் எப்படி அத்துமீறிச் சொல்லிக் கொடுக்கலாம்னு கேக்கறேன்!" என்று குதித்தார்.

வைத்தியின் வத்தி வெடித்துவிட்டது. "அட! எங்காவது எங்கிட்ட கேக்கறே? அவருகிட்ட சொல்லு," என்றார்.

"கேக்கறது என்ன? விட்டேனா பாருங்க அதை. இன்னிக்கு ராத்திரி கோயிலேயிருந்து வரபோது தட்டிடுறேன்" என்று துடித்தார்.

"ஓய்! இதுதான் தப்பு. இதிலெல்லாம் நேருக்கு நேரே நின்னா 'கிரிமினல் கேசு' வந்துடும்."

"வந்தா வரட்டுமுங்க. இங்கே சாப்பிடுறதை அங்கே போய்ச் சாப்பிட்டுட்டுப் போறேன். இதுக்காக இவளை விட்டுடுவேனா?"

"பதறாதேயுங்காணும், அதுக்கு ஒரு வழியிருக்கு. நான் சொல்றேன்" என்று வைத்தி அவர் காதில் ஏதோ ரகசியமாய்ச் சொன்னார். குப்புசாமியின் முகம் மலர்ந்தது.

"இந்தாரும், இதைச் செலவுக்கு வைத்துக்கொள்ளும்" என்று ஒரு ஐந்து ரூபாயைக் குப்புசாமி கையில் கொடுத்தார், வைத்தி. முழுசாக ஐந்து ரூபாயைப் பார்த்ததும் தலைகால் தெரியவில்லை குப்புசாமிக்கு.

"தொலைச்சுப்பிடறேனுங்க. ஊரை விட்டே ஓட்டிப்பிடறேன். இன்னும் ஒரு எட்டணாக் கொடுங்க" என்றார் குப்புசாமி.

தொளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்னரை ரூபாய் மிச்சம் என்று வைத்தி மகிழ்ந்தார். ஆயிரம் ரூபாய் வியாபாரத்தை எட்டரை ரூபாயில் முடித்துவிட்டோமே என்ற திருப்தி அவருக்கு.

✤ ✤ ✤

'ரௌத்ர காளியம்மா! உனக்கு ராகு காலத்தில் அர்ச்சனை செய்கிறேன். என் மகளுக்கு மைனரின் சம்பந்தம் கிடைக்க வேண்டும்" என்று வடிவாம்பாள் முன்பே வேண்டிக்கொண்டிருந்தாள். இதற்காக நாகபட்டினத்தில் இருந்து வந்து நாலு நாளைக்கெல்லாம், ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலையில் கோவிலுக்குப் புறப்பட்டாள். புறப்படும்போது வடிவாம்பாளுக்கு ஒரு சந்தேகம் வந்தது.

"அம்பிகை வரப்பிரசாதி. அதுவும் ராகு காலத்தில் அவளுக்கு அர்ச்சனை செய்து வந்தால் கல்யாணம் ஆகாத பெண்களுக்கு எல்லாம் உடனே கல்யாணம் ஆகிவிடும் என்பது அவ்வூராரின் நம்பிக்கை. இது நடந்தும் இருக்கிறது என்று வடிவாம்பாள் தெரிந்துதான் அர்ச்சனைக்கு ஏற்பாடு செய்தாள்.

ஆனால், இன்று வந்த சந்தேகம் அர்ச்சனையைப்பற்றியல்ல. 'அர்ச்சனையை ராகு காலத்தில் செய்யலாம். அதற்காக நாம் கோவிலுக்கு ராகு காலத்தில் புறப்படலாமா?' என்ற சந்தேகம் வந்துவிட்டது. இருந்தாலும் சிறிது பயம், சிறிது பக்தி, இவை இரண்டும் கலந்து, ராகு காலத்தின் பிற்பகுதியில் புறப்பட்டாள்.

போய்க்கொண்டே இருக்கும் போது, எதிரில் சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரரும் அவர் பக்கத்தில் சண்முகசுந்தரமும் வருவது தெரிந்துவிட்டது. சண்முகத்தைப் பார்த்தவுடன் அவளுக்கு வந்த எரிச்சலில் சரசரவென்று ரோட்டை விட்டுக் கமலாலயத்தில் படிகளில் இறங்கி நடந்தாள்.



"இவன் ஏன் இங்கு வந்தான்? சாமிக்கண்ணு அண்ணனுடன் ஏன் வருகிறான்? பாரி நாயனம் கற்றுக்கொள்ள வந்துவிட்டானா? அப்படியானால் போட்டி உண்மையிலேயே வந்துவிட்டதா? அவனும் நன்றாக வாசித்து, என் மகளும் நன்றாக ஆடிவிட்டால் என்ன ஆகும்? கொம்பையும் கொடியையும் நெருங்கவிடக் கூடாதே!...' என்று பல கேள்விகள் அவள் மனத்தில் எழுந்தன. கோவிலுக்குள் நுழைந்தார்கள்.

அவள் மனத்தில் இருந்த ஆத்திரத்தில், இரண்டு தேங்காய்களை உடைக்கச் சொல்லி அம்பிகையின் சந்நிதானத்தில் சண்முகத்தின் முயற்சிகள் தோற்க வேண்டும் என்று ஆங்காரத்துடன் பிரார்த்தனை செய்துகொண்டாள். உண்மையில் அன்று ரௌத்ர காளியாக விளங்கியவள் வடிவாம்பாள்தான்!

வக்கீலுக்குப் பீசு கொடுத்தால் வழக்கை எடுத்துப் பேசுவார். சிலர் தெய்வத்தை வக்கீலாக நினைத்துப் பீசு கொடுத்துப் பார்ப்பார்கள். ஆனால், தெய்வம் நீதிபதியாக நடந்துவிடும்! உடனே, 'சாமி, உன்னை நம்பினேனே, மோசம் செய்துவிட்டாயே!' என்று அவர்கள் தெய்வத்தை நொந்துகொள்வார்கள்.

இங்கு வடிவாம்பாள் ஆங்காரக்காளியை வக்கீலாகத்தான் நினைத்தாள். ஆனால், அன்னை பராசக்தி என்ன நினைக்கிறாளோ?

அர்ச்சனை முடிந்து வடிவாம்பாள் வெளியே வரும்போது, எட்டு மணி இருக்கும். நல்ல இருட்டு. தெரு விளக்குகள் ரொம்ப மங்கலாய் எரிந்துகொண்டிருந்தன. அவளுக்குக் காளியம்மன் சந்நிதியில் நின்றதால் பயம் திக்குத்திக்கென்று அடித்துக்கொண்டது. வேகமாக நடந்தாள்.

அப்போது "என்ன, வடிவாம்பா அம்மானா?" என்று ஒரு குரல் கேட்டது. அது வைத்தியின் குரல். எதிரில் வந்து நின்றார் வைத்தி.

அவளுடைய கால்கள் நடுங்கின. தன் வீட்டில் சாதுரியமாகப் பேசித் திகைக்க வைத்த அதே வைத்தியை இரவு இந்நேரத்தில் தனியாய்க் கண்டதும் வடிவாம்பாள் நடுங்கினாள். அவளிடம் இருந்த பணத்தாசை ஓடி மறைந்துவிட்டது. பயம் தலையெடுத்தது. உடல் நடுங்கியது. இவனுடன் தனியாய் நின்று பேசுவதுகூடத் தவறு என்று தோன்றியது.

"ஏன், ஏதாவது சொல்லணுமா? அப்படி இருந்தா நாளைக்கு மத்தியானமா இரண்டு மணி சுமாருக்கு வீட்டுக்கு வாங்க. அது உயரக்கப் பாடம் பாத்துக்கிட்டு இருக்கும். நம்ம பேசலாம்" என்று சொல்லி வேகமாக நடந்தாள்.

"என்ன, உங்க பெண்தான் ஓடறான்னு பார்த்தா நீங்களும் ஓட ஆரம்பிச்சிட்டீங்களே! இப்பிடி ஓடினா எப்படித் தூக்கறது?" என்றார் வைத்தி.

"இல்லே, எனக்கு நேரமாச்சு வீட்டுலே மோகனா தேடும்" என்று சொல்லிக்கொண்டே நடந்தாள் வடிவாம்பாள். வைத்தி தொடர்ந்தார் "ஒரு விஷயம்" என்றார்.

"என்ன? மைனர் ஏதாவது சொன்னாங்களா?" என்றாள் வடிவாம்பாள்.

"ஆமா. அந்த அழகர் கோவிலிலே நடந்ததையெல்லாம் சொன்னேன் இந்தச் சண்முகம் விஷயமும் சொன்னேன்."

"என்ன சொன்னாங்க?"

"அதைத் தீர்த்துக் கட்டிட வேண்டியதுதான்னு சொல்லிவிட்டாரு."

"ஐயோ !"

"ஆமா! அவரு பாதையிலே யாராவது குறுக்கே வந்தா அவ்வளவு தான்."

"நீங்க சொல்றது எனக்கு ஒண்ணும் புரியல்லியே!"

"எல்லாம் நாலு நாளிலேதானே புரியும். அதுக்காக வேண்டிய பிளானெல்லாம் பண்ணிப்பிட்டுதான் வரேன்" என்று சொல்லிவிட்டு வைத்தி நடந்தார்.

வடிவாம்பாளுக்குத் திகில் தாங்க முடியவில்லை. 'தீர்த்துக் கட்டுறதா? யாரை? சண்முகத்தையா? ஐயோ! அந்தப் பிள்ளையின் அழகும் வாசிப்பும் அவள் கண் முன் வந்தன. தன் மகளை மயக்கியவன் எப்பேர்ப்பட்டவன் என்பதை உண்மையாக அவள் உணர்ந்தது இன்றுதான். அவளை அறியாமலே அவள் கை கால்கள் உதறின.

"இந்தாங்க, வைத்தி" என்றாள் வடிவாம்பாள்.

"என்ன? எனக்கு நேரமாச்சு சின்னசாமி கடை சாத்திப்பிடுவான்" என்றார் வைத்தி.

"இல்லே, என்னமோ அந்தச் சண்முகம் விஷயம் சொன்னீங்களே!"

"ஆமா. அதுதான் தீர்த்துக் கட்டிடப் போறேன்னு சொன்னேனே! குப்புசாமியைத் தூபம் போட்டுவிட்டிருக்கேன். யாரிடமும் சொல்லிக் கொடுக்கப்படாதுன்னு தீர்த்துக் கட்டிப்பிடுவாங்க" என்றார் வைத்தி.

இதைக் கேட்ட வடிவாம்பாள், "அம்மாடி" என்றாள். அவளை அறியாமல் ஒரு பெருமூச்சு வந்தது. "சரி, ரொம்ப சந்தோஷம்" என்றாள்.

"சந்தோஷப்பட்டா போதாது. மைனர் விஷயத்தை நீங்கதான் முடிக்கணும்" என்று சொல்லி நடந்தார் வைத்தி.

வைத்தி போய்ச் சற்று நேரம்வரை அவளுக்கு நடுக்கம் தீரவில்லை. உயிர், கற்பு முதலிய அடிப்படை உணர்ச்சிகள் வரும் காலத்தில்தான் மக்களின் உண்மை சுபாவம் வெளிப்படுகிறது. இன்று அவள் சண்முகத்தின்மேல் கொண்ட அனுதாபம் அத்தகையது. அவனுக்கு ஆபத்து என்று எண்ணியதுமே அவள் நடுங்கிய நடுக்கம் நாலுபேர்



நடமாடும் சாலையில் வந்த பிறகுதான் மறைந்தது. ஏனெனில் நாலு பேருக்காக வாழும் வாழ்வுதானே அவள் உலகம்!

✦ ✦ ✦

வடிவாம்பாள் வீட்டில் "கோவிலுக்குப் போன தாயாரை இன்னும் காணோமே!" என்று மோகனா எண்ணிக்கொண்டிருக்கும் போது, வரதன் தெரு வழியே வந்துகொண்டிருந்தான். அவன் முகத்தில் இருந்த ஆனந்தமும், வாயால் அவன் சொல்லி வந்த பல்லவி சாகித்யமும், அவன் நடந்த நடையும் அவன் இருட்டுக்கும் பயந்து பாடிக்கொண்டு வருகிறானா, இல்லை, அவன் மண்டையில் அரை மரை கழன்றிருக்கிறதா என்று எல்லோரையும் நினைக்க வைக்கும்.

"தகதரிஜோம் விரகொடிச்சோம்
வெள்ளித் தண்ணி காயப்போட்டு
மேளைக் குளிச்சோம்
அப்பப்பா அம்மம்மா தம்பி
தருமலிங்கம் தம்பி தருமலிங்கம்"

என்று ஆதி தாளத்தில் இரண்டாம் காலப் பிடித்துக்கொண்டே வீட்டுக்குள் நுழைந்தான்.

"என்ன வரதா, பயித்தியம் மாதிரிதானே பாடிக்கிட்டு வரே" என்றாள் மோகனா.

"ஓ! நீ இங்கேயே இருக்கியா! நீயும் அம்மாவோடே கோவிலுக்குப் போயிருக்கியாக்கும்னு நினைச்சேன் ? தகதரிஜோம்"

"போதும் உன் பாட்டு. ஆமா, வீதியிலே பாடலாமா, வரதா?"

"பாட்டு மாத்திரமா? தானே சிரிச்சிக்கிட்டேகூட வந்தேன். ரெண்டு பேர் திரும்பிப் பார்த்ததுந்தான் எனக்கு என் நினைவு வந்தது"

"என்ன வரதா அப்படி ஆச்சரியம்!"

"ஒருத்தன் ஹோட்டலிலே இருந்து சாப்பாடு வாங்கிட்டுப் போனான். குழம்பு, மோர், ரசம் எல்லாத்தையும் போசன அடுக்கிலே வச்சு வலது கையிலே புடிச்சுக்கிட்டான். ஒரு அடுக்கிலே சாதத்தை வாங்கி தலைக்கு மேலே வச்சுக்கிட்டான். அதுக்கு மேலே பொரிச்ச அப்பளத்தை வைச்சுக்கிட்டு இடது கையாலே அடுக்கைப் புடிச்சுக்கிட்டு நடந்தான்."

"ஐயோ! அப்பளம் காத்திலே பறந்துடுமே!"

"பறந்திடுமில்லே? இதைத்தான் நான் சொன்னேன். உடனே அவன் என்ன செய்தான் தெரியுமா? அப்பளத்தை எடுத்துத் தலையிலே வச்சுக்கிட்டு, அதுக்கு மேலே அடுக்கை வச்சுக்கிட்டான். அப்பளமெல்லாம் நொறுங்கிப் போச்சு. இதை நினைச்சா சிரிப்பா வருது" என்று சொல்லிவிட்டு, வரதன் மேலும் சிரித்தான்.

"சிரிச்சது போதும். யாரு அந்த ஆளு?"

"நீதான் சொல்லுவியே! வேறே யாருக்கு இந்தப் புத்தி தோணும்? நம்ம சிக்கலார் கிட்ட இருக்காருல்லே ஒத்து நாயனக்காரர் தருமன்னன்... அவருதான்!"

"என்ன? அவரா? இங்கே எங்கே வந்திருக்காரு?"

"அவுங்க இப்ப இந்த ஊருலேதானே காம்பு போட்டிருக்காங்க...!"

மோகனாவுக்கு விஷயம் பூராவும் தெரிந்துகொள்ள மனம் துடித்தது.

"யாரு, சிக்கலாரா?"

"ஆமா. சாமிக்கண்ணு நாயனக்காரர் கிட்டே பாரி நாயனம் கத்துக்கறாராம். உன்னை ஆடாமல் விட மாட்டாராம்!"

"யாரு சொன்னா?"

"தருமன்னன்தான். 'ஏன் அய்யா நீ வீட்டுக்கு வரலே'ன்னு கேட்டேன். 'நீங்க சன்னைக்காரங்க நான் வந்தா தம்பி கோபிக்கும். இந்தக் களப்புச் சாப்பாடு ஒத்துக்கல்லே. கொஞ்சம் நல்ல துவையல், ஊறுகா இது மட்டும் இருந்தா கொடுத்து அனுப்பு'ன்னு சொன்னாரு."

"யாரு, அவரா சொன்னாரு?"

"சண்முகமா? உம். அவருதான் அறுபது நாழியும் பாரி நாயனத்தை ஊதிக்கிட்டு இருக்காராமே!"

"எங்கே வாதா வந்திருக்காரு? நீ பாத்தியா?" என்று ஆவலுடன் கேட்டாள் மோகனா.

"நான் எங்கே பார்க்கறது? துர்க்கையம்மன் கோவிலுக்குப் பக்கத்திலே ஜாகை புடிச்சிருக்காங்களாம். சண்முகம் தூங்கறதே இல்லையாம். இதையே பழகிக்கிட்டு இருக்காராம்."

மோகனாவுக்குச் சண்முகம் தன்னைத் தோற்கடிக்க இவ்வளவு பாடுபடுகிறானே என்று கோபம் வரவில்லை. அதற்குப் பதிலாக அவன் படும் கஷ்டத்தைக் கேட்டு உள்ளம் புண்ணாகியது.

"வாதா, என்னாலேதானே அவருக்கு இத்தனை கஷ்டமும்?"

"உன்னாலே இல்லேம்மா! உன்னைப் படைச்சு, உனக்கு அழகையும் வித்தையையும் அள்ளிக் குடுத்தாரே அந்தக் கடவுளாலே!"

"வாதா, அவருக்கு இந்தக் களப்புச் சாப்பாடு ஒத்துக்குமோ, என்னமோ? அங்கே சாப்பிடுவெல்லாம் நல்லா இருக்குமோ?"

வாதன் நிமிர்ந்து பார்த்தான். மோகனா துயரமே உருவாய் நின்றாள்.

"தவலைச்சோறுதானே, எப்படி நல்லா இருக்கும்?"

"ஆமா. இப்ப அப்பளம் விழுந்திட்டுதுன்னு சொன்னியே, அதெல்லாம் இல்லாமல்தானே சாப்பிடுவாரு?"

வாதன் பதில் சொல்லவில்லை.

"இல்லே வாதா. நல்ல பாலு மோரு இருக்காது. ராவாப்பகலா ஊதிக்கிட்டு இருக்கிறவருக்கு உடம்பு என்னத்துக்கு ஆகும்? இதை நினைச்சா எனக்குக் கவலையா இருக்கு."



"நம்ம என்ன செய்யலாம் மோகனா?"

"நீ அந்தத் தருமன்னனைப் பார்த்தா..."

"பாலு, மோரு, தயிரு, நெய் எல்லாம் நம்ம வீட்டிலே இருந்து கொண்டுபோய் ஒருத்தருக்கும் தெரியாமல் கொடுத்துட்டு வான்னு சொல்லப் போறே. அவ்வளவுதானே?"

"பின்னே என்ன செய்யறது, வாதா?"

"நான் கொண்டுபோய்க் குடுத்துடுவேன். ஆனா என்ன பிரயோசனம்?"

"ஏன்?"

"அந்தச் சண்முகம் தூக்கிக் குப்பையிலே கொட்டிடுவானே, மோகனா!" என்று வாதன் கூறியபோது மோகனாவின் கண் கலங்கியது.

இதைப் பார்த்த வாதன், "ஆனா ஒரு விசயத்துலே சந்தோசம். சண்முகத்தின் வித்தையிலே சாமிக்கண்ணு நாயனக்காரர் மயங்கிட்டாராம். வந்த ரெண்டு நாளிலேயே பாரி நாயனம் ஊத ஆரம்பிச்சுட்டதாம்" என்றான்.

அதைக் கேள்வியுற்றதும் அவளுக்குத் தன்னையறியாமலே ஒரு சந்தோஷம் வந்தது. "அது ரொம்பக் கஷ்டமாச்சே" என்றாள்.

"என்ன கஷ்டம்? வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். எடுத்து ஊதிச்சாம். முதல் நாள் காத்தே குடுக்க முடியல்லியாம்."

"அப்புறம்?"

"அடுத்த நாள் ஊதிப் பார்த்ததாம். மார்வலி வந்திடுச்சாம்."

"மார்வலியா? இப்ப எப்படி இருக்கு? யார் மருந்து குடுத்தாங்க?"

"அடுத்த நாள் வாசிக்கவே இல்லியாம். தேத்து நாதஸ்வரக்காரர் வந்து பார்த்தா, அதை எடுத்து வச்சிக்கிட்டு 'சபாக பத வர்ணம்' வாசிச்சிக்கிட்டு இருந்ததாம்."

"எப்படி ஒரு நாளிலே வாசிக்க வந்தது?"

"எல்லாம் ஊக்கந்தான். உன்னைத் தோக்கடிக்கணும் என்கிற எண்ணம்."

"வாதா, நீ சொல்லுவது நிஜமா?"

"ஆமாம் மோகனா. தருமன் சொன்னாக்கூட நான் நம்ப மாட்டேன். நாயனக்காரர் மகன் சொன்னான்."

"என்ன வர்ணம் வாசித்தார்?" என்று ஆவலுடன் கேட்டாள் மோகனா.

"நம்ம திருவாரூர் வர்ணந்தான். ரூபக தாளத்திலே இருக்கில்லே,

எந்தனிதே-தெலுபுதுரா
பேவாரு தானுதுரா!"

"வாதா, மத்தளம் எடுத்துக்கிட்டு வா!" என்றாள் மோகனா.

இரண்டே நிமிஷங்களில் காலில் சலங்கை கட்டப்பட்டது. அடுத்த இரண்டாவது நிமிஷத்தில் நட்டுவனார் வந்து எதிரில் உட்கார்ந்து அதே பத வர்ணத்தைப் பாடிக்கொண்டிருந்தார். மோகனா அந்த வர்ணத்திற்கு ஏற்ப ஆனந்தமாக ஆடினாள்.

"எந்த விதம் சொல்லுவேன்? எவ்வாறு தாளுவேன்?" என்ற உணர்ச்சிகள் அவளுடையவைதானே?

எந்தனிநே - தெலுபுதுரா
வேலாகு தாளுதுரா -
மந்து கெகு - வீர வரைந்த
தியாகராஜ - நா ஸாமீ - "

எழுதுகோலால் தீட்டிய வர்ணங்கள் காலத்தால் அழிகின்றன; மங்குகின்றன. ஆனால், இசையால் தொடுத்த இந்த வர்ணங்கள் என்றுமே அழியாதவை. காலத்தால் பாடிப்பாடி மெருகேறுகின்றவை. இந்தப் பத வர்ணத்துக்கு அவள் அன்று ஆடிய ஆட்டம், 'ஓஹோ! சமாஸ் வர்ணமா வாசிக்கிறார்? அதற்கு நான் ஆடாமல் விட்டுவிடுவேனா?" என்று கேட்பது போல் இருந்தது.

✤ ✤ ✤

அன்று வடிவாம்பாள், வீட்டுக்கு வந்தவுடன் குங்குமப் பிரசாதத்தைத் தன் மகளிடம் கொடுத்து இட்டுக்கொள்ளச் சொல்லவில்லை. அதை அப்படியே கீழே வைத்தாள்.

"இந்தா இருக்கு பிரசாதம், எடுத்து இட்டுக்க. எவன் வரணும்னு நினைக்கிறியோ அவன் வருவான்" என்று வேண்டா வெறுப்புடன் கூறினாள்.

அதை எடுத்து நெற்றியில் இட்டுக்கொண்டாள் மோகனா. தன் தாயின் கோபத்துக்கு என்ன காரணம் என்று அவளுக்குப் புரியவில்லை.

"ஏன் அம்மா, கோவமா இருக்கீங்க?" என்று பணிவுடன் கேட்டாள் மோகனா.

"எனக்கேன் கோபம் வருது? நீ என்னைக் கேட்டா அந்தச் சிக்கலானைச் சம்பிரதாயத்துக்கு இழுத்தே?" என்று எரிந்து விழுந்தாள் தாய்.

"அதுக்கு இப்ப என்னம்மா வந்தது?"

"என்ன வந்ததா? திருவாரூர் சந்தி சிரிக்கப் போகுது. நம்ம மனுசன் நாலு பேர் காது கேக்க அவமானம் வரப்போகுது."

"என்னம்மா அவமானம்? ஆடணும்னா ஆடிட்டுப் போக."

"ஆமாடி! நீ சம்பிரதாயம் போடவா உனக்குக் கத்துக் கொடுத்தேன்? ஆடி, நாலு காசு பணத்தைச் சம்பாதிப்பேன்னு பார்த்தேன்" என்று சீறினாள் தாய்.



"எம்மா, சம்பாதிச்சதெல்லாம் போதாதா? இந்த ஊருக்குள்ளு தான் ரெண்டு பேர் உட்கார நேரம் இல்லாமல் ஆடிக்கிட்டு இருக்கமே!"

"அவ யாரவ இன்னொருத்தி?"

"ஒருத்தி இல்லே, ஒருத்தர்! 'நீதி, நீதி, தியாகராஜா'" என்று உடம்பை அசைத்து ஒரு ஆட்டம் ஆடினாள் மோகனா.

வடிவாம்பாள் களுக்கென்று சிரித்தாள். அவளுக்கு இருந்த கோபத்தின் நடுவே, தன் மகளின் துடுக்கில் உணர்ச்சியை இழந்து குபீரென்று சிரிப்பு வந்ததைக் கண்டு அவளுக்கே வெட்கமாயிற்று. கோபமும் சிரிப்பும் கலந்தவளாய் வெட்கித் தலை குனிந்தாள் வடிவாம்பாள்.

இந்தச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்த மோகனா ஓடிப்போய்த் தாயின் கழுத்தைக் கட்டிக்கொண்டாள்.

ஓடி வந்து தன் மகள் கட்டிக்கொண்டவுடன் தாயின் மனம் கனிந்தது. அவளை அறியாமலே இரண்டு சொட்டு அன்புக் கண்ணீர் கசிந்தது. உள்ளம் இரண்டும் ஒன்றுதான். மகளும் நல்வாழ்வை விரும்புகிறாள். தாயும் அதையேதான் விரும்புகிறாள். ஆனால், இருவரும் செல்லும் பாதைதான் வெவ்வேறு. இதைத்தவிர தாய் மகள் என்ற தருமம் மாறவில்லை.

"ஏன் அம்மா, உங்களுக்கு அடிக்கடி கோவம் வருது?"

"அதுவா? உங்க சிக்கலாரு இங்கே வந்து நிக்காரு."

இதைக் கேட்ட மோகனா தாயை மறந்தாள், தன்னை மறந்தாள், வாசலுக்கு ஓடினாள்.

"எங்கே ஓடுறே? வாசல்லே வந்து நிக்கல்லே!" என்றாள் வடிவாம்பாள். இதைக் கேட்ட மோகனா திகைத்து அப்படியே நின்றாள்.

"அந்தச் சிக்கலான் இந்த ஊருக்கு வந்துட்டான். சாமிக்கண்ணு நாயனக்காரர்கிட்டே பாரி நாயனம் பழகுறானாம். இந்த உள்ளூர்த் தெருவிலே நீயும் அவனும் போட்டி போட்டுக்கிட்டு நின்னா நல்லா இருக்காதேன்னு பார்த்தேன்" என்றாள் தாயார்.

மோகனா சிரித்தாள். "அம்மா, பயப்படாதீங்கம்மா! உங்க மகள் அப்படி ஒன்றும் விட்டுக்குடுத்துட மாட்டாள்" என்றாள். ஆனால் வடிவாம்பாள் அதை ரசிக்கவில்லை என்பது அவள் பார்த்த பார்வையிலேயே தெரிந்தது.

சண்முகத்தைப்பற்றி வாதன் கூறியது முற்றிலும் உண்மைதான். சண்முகம் இரண்டு நாளைக்கு எடுத்து ஊதியும் அந்தப் பாரி நாயனம் ஊத வரவே இல்லை. திமிரி நாயனத்துக்குக் கொடுக்கும் அளவு காற்றை அதற்குக் கொடுத்தால் அதில் நாதம் பிறக்கவில்லை. குறைத்துக் கொடுத்தாலும் காற்று வெளியே போய்க்கொண்டிருந்தது

முதல் இரண்டு நாள் பட்ட பாட்டில் அவனுக்கு மார்புவலி அடிபட்டது. துடியாய்த் துடித்துவிட்டான். இதைக் கேள்விப்பட்ட முத்துராக்குவும் தருமனும் திருவாரூருக்கு வந்துவிட்டார்கள்.

முத்துராக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். அப்படி இருந்தும் சண்முகம் கேட்கவில்லை. அன்று முழுவதும் சாப்பிடவில்லை. மார்புவலி ஒரு புறம் இருக்க, அவன் மனம் யோசித்துக் கொண்டே இருந்தது. இரவு முழுவதும் தூங்கவில்லை. அடுத்த நாட்காலை நான்கு மணி இருக்கும். "தருமண்ணே, அந்த நாயனத்தை எடுத்தா!" என்று பரபரப்புடன் கூறினான். தருமன் போய் அதை எடுத்து வருவதற்குள் ஆத்திரம் தாங்காமல் தானே ஓடிப் போய் எடுத்து வந்தான். அதன் சீவாளியை எடுத்துவிட்டு அடிப்பக்கத்தில் ஒரு கையை வைத்துப் பொத்திக்கொண்டு குழலில் ஊதினான். கையிலே காற்று எந்த வேகத்தில் அடிக்கிறது என்று பார்த்துக் கொண்டான். மறுபடியும் சீவாளியை வைத்து ஊதினான். 'பாதிக் காற்று வெளியே போய்விடுகிறது' என்று கண்டான்.

"அண்ணே, கொஞ்சம் வெள்ளை மெழுகு வாங்கிட்டு வா போ!" என்று தருமனிடம் சொன்னான். உடனே தருமன் "கடை தொறந்திருக்க மாட்டாங்களே!" என்றான்.

"அட போ, நீ ஒண்ணு, சகுனத் தடையாட்டமா?" என்றான் முத்துராக்கு.

"ஏன் தம்பி, கறுப்பு மெழுகு தேவலாமில்லே" என்று கேட்டுவிட்டுப் பதிலுக்குக்கூடக் காத்திராமல் வெளியே புறப்பட்டுவிட்டான் தருமன்.

அவ்வளவு அவசரமாக மெழுகு வேண்டும் என்ற சண்முகத்தால் தருமன் வரும்வரை சும்மா இருக்க முடியுமா?

✤ ✤ ✤

காலை வேளை சாமிக்கண்ணு நாயனக்காரர் சண்முகத்தின் வீட்டுக்குப் பழக்கிக் கொடுக்க வந்தார். அப்போது அவர் கண்ட காட்சி அவரைத் திடுக்கிட வைத்தது. காரணம் வேறொன்றுமில்லை. அப்போது சண்முகம் பாரி நாயனத்தில் சுமாசு வர்ணத்தைச் சாதகம் செய்துகொண்டிருந்தான். திகைத்தார் சாமிக்கண்ணு நாதஸ்வரக் காரர்.

அவன் காற்றுக்கொடுத்த விதத்தில் அந்த நாதஸ்வரத்தில் இருந்து எழுந்த ஓசை ரொம்ப சுநாதமாயிருந்தது. வாசித்த விதத்தில் அவன் வித்தை தெரிந்தது. இன்றுவரை காணாத அற்புதம் அதில் தெரிந்தது. "தியாகராஜா!" என்றார் நாதஸ்வரக்காரர்.

அவர் உடம்பு புல்லரித்தது. கண்களில் நீர் மல்கியது. சண்முகமோ அந்தச் சுநாதத்தில் மயங்கி லயித்து ஊதிக்கொண்டிருந்தான். நாம் நிரவல், பல்லவி, ஜாவளி முதலியவற்றில் காணும் இன்பத்தை அந்த



மகாவித்துவான் வர்ணத்தில் கண்டுகொண்டிருந்தான். ஸ்வரங்களும் குண்டு குண்டாய் அழகொழுக, பச்சைக் குழந்தைகள் போல் விளையாடிக்கொண்டிருந்தன.

வாசித்து முடித்து விழித்தான் சண்முகம். எதிரில் நின்ற நாதஸ்வரக்காரரைக் கண்டு எழுந்து நின்று கையெடுத்து வணங்கினான். "தம்பி, நீங்க என்னைக் கும்பிடக்கூடாது. நான்தான் உங்களைக் கும்பிடணும்" என்று அவனைப் பார்த்து இரு கைகளையும் உயரத் தூக்கிக் கும்பிட்டார் சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர். அவர் கண்களில் ஆனந்தக்கண்ணீர் அருவி போல் வழிந்தது.

"அற்புதம், அற்புதம். இவ்வளவு சுநாதம் எப்படிக் கொடுத்தீர்கள்? நேற்று ஊத வரவில்லையே, இன்று எப்படி ஊதினீர்கள்?" என்றார்.

"எல்லாம் உங்கள் அருள். இரண்டு நாளாக இந்தக் காத்தை எப்படி வெளியே போகவிடாமல் தடுப்பது என்று பார்த்தேன். ராத்திரி நாலு மணிக்குத்தான் ஒரு யோசனை வந்தது. கொஞ்சம் பழைய சாதத்தைப் பிசைந்து பசையாக்கித் தொண்டையிலே தடவி ஒட்டினேன். உடனே வாசிக்க வந்துவிட்டது" என்றான் சண்முகம். இருவரும் ஒருவரைப் பார்த்துப் பிரமித்தனர்.

ஆனால், அடுத்த நாள் அதே நேரத்தில் பாடம் நடக்கும்போது அந்த வீட்டின் கதவு தட்டப்பட்டது. கதவைத் திறந்தார்கள். தேவஸ்தானம் காரியஸ்தர் ஒருவர் வந்து நின்றார். சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரரைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்:

"நிறை செல்வத் திருவாரூர் நின்றாடும் தியாகேசர் ஆணை- உங்கள் மேலே வழக்கு வந்திருக்கு. தேவாசிரிய மண்டபத்தில் பஞ்சாயத்தார் கூடியிருக்கிறார்கள். உங்களை உடனே வரும்படி உன் துறைக் கட்டளையார் உத்தரவு" என்று கூறினார்.

இதைக் கேட்ட சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர், "வழக்கா? என் மீதா? தியாகராஜா" என்று பிரமித்தார். சண்முகம் திகைத்தான்.

நாற்பத்து எட்டாம் அத்தியாயம்

## வெற்றியும் தோல்வியும் வீரருக்கில்லை



திருவாரூர் தேவாசிரிய மண்டபத்தில் அன்றைய தினம் கூட்டம், என் போட்டால் என் விழாது. அப்படிக் கூடியிருந்தது. தொடுத்த மலரும் தூபமும் சாந்தும் வைத்துக்கொண்டு எப்பொழுதும் தியாக ராஜாவைத் தரிசனம் செய்வதற்காகத் தேவர்கள் இங்கு காத்திருப்பார்கள் என்பது

திருவாரூர் ஐதீகம். ஆனால், இன்று அந்த இடத்தில் வைத்தி வைத்த தூபம் புகைந்து, பஞ்சாயத்தார்களைக் கூட்டியிருக்கிறது ஸ்ரீ சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர் பெரியவர் வித்தையிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவர். அவர் மேல் இதுவரை யாரும் ஒரு குற்றமும் சாட்டியது கிடையாது. இன்று அவரை விசாரிக்கப் போகிறார்கள் என்றதுமே ஆரூர் மக்களின் கூட்டம் அக்கறையாகக் கூடிவிட்டது.

தில்லை, திருவாரூர், ஆவுடையார் கோவில், மதுரை ஆகிய திருத்தலங்களில் எல்லாம் கோயிலை அடுத்து வாழுபவர்கள் அதிகம். அதிலும், திருவாரூர் பெரிய கோயில் பழமையான கோவில். நாளைக்கு முப்பத்து எட்டுக் கலம் அரிசியைப் படித்தரமாக ஆக்கிப் படைப்பது ஆரூர். ஆதலால், கோவில் சிப்பந்திகளும் அங்கு அதிகம்.

ஆதி காலத்தில் அக்கோவிலுக்குத் தஞ்சை அரசர்கள் ஆயிரம் வேலி நிலத்தை மானியம் விட்டார்களாம். அதில் அபிஷேகக் கட்டளை நானூறு. அன்னதானக் கட்டளை முந்நூறு, இராஜாங்கக் கட்டளை முந்நூறு என்று பிரித்துவிட்டு, இதை நிர்வகிக்கும் பொறுப்பை மூவரிடம் விட்டிருந்தார்களாம். நிர்வாகத்தின் வரும்படியை இவர்கள் கோவிலில் கொண்டுவந்து கொடுப்பார்கள். இதை உள்துறைக் கட்டளையார் சரி பார்ப்பார்கள். இம்மி குறைந்தாலும் ஏற்க மாட்டார்கள்.

தியாகராஜாவுக்கு மகாபிஷேகம் செய்வதற்குப் பன்னிரண்டாயிரம் வாழைப்பழங்கள் வரவேண்டும் என்றிருந்தால், அதில் ஒரு பழம் குறைந்தாலும், ஒரு காம்பு அழுகியிருந்தாலும் உள் துறையார் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

இதேபோல் செங்கழுநீர் ஓடைக்கென்று ஐந்து வேலி நிலம் தரப்பட்டிருக்கிறது. இதை ஒரு குடும்பத்தார் நிர்வகித்து வருகிறார்கள். அந்த மலரில் ஒரு வண்டு கடித்திருந்தாலும், பூச்சி அரித்திருந்தாலும் அதை உள்துறைக் கட்டளையார் வாங்க மாட்டார்கள். இதற்காக அந்தக் குடும்பத்தார் ஓடையைச் சுற்றி வசம்பைப் பயிராக்கி, அதன் நடுவே செங்கழுநீர்ப் பூவைப் பயிரிடுவார்கள். வசம்பு வாசனைக்குப் பூச்சிகள் வராமல் ஓடிவிடும் என்பதே காரணமாகும்.

தருமம் நன்றாக நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிக்கும் உள்துறையார், ஒரு பிரபலமான குடும்பத்தினர். தமிழும் தருமமும் இரு கண் எனக் கொண்டவர்கள். கோவில் நிர்வாகம் சம்பந்தத்தில் ஒரு சிறு குறையும் இல்லாமல் தங்கள் உழைப்பையும் செல்வாக்கையும் தியாகராஜருக்கு அர்ப்பணம் செய்து நிர்வாகத்தைப் பார்த்து வந்தார்கள். நிர்வாகத்தோடு மட்டும் நில்லாமல் அவர்களும், அன்னதானம், அநாதை விடுதி, வித்தியா தானம் முதலியவைகளையும் செய்துகொண்டு, அதோடு தமிழ் நாட்டுக்கே பெருமை தரும் தியாகராஜாவின் திருத்தேரை இழுத்து வரும் பொறுப்பையும் அவர்களே மேற்கொண்டிருந்தார்கள்.



அன்று தேவாசிரிய மண்டபத்தில் ஒருபுறத்தில் தியாகராஜர் சந்நிதியில் சுத்தமத்தளம், பஞ்சமுக வாத்தியம் வாசிக்கும் தம்பிரான் முட்டுக்காரர் பரம்பரையினர் ஆகிய பாரசைவர்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்களின் தலைவராகிய நட்டுமுட்டு நடராச மூர்த்தியார் விபூதி, ருத்திராட்சம், பூணூல் தரித்து வைதிகமாய் அமர்ந்திருந்தார்.

இன்னொரு புறத்தில் குப்புசாமி நாயனக்காரர் இளைத்தவராதிய நயினார் அடியார் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் அமர்ந்திருந்தார்கள்.

எக்காளம், திருச்சின்னம், சங்கு, வாங்கா, கர்னா, கொடுகொட்டி முதலியவைகளை முழக்குவதோடு பாரி நாயனம், ஒத்து, தவுல், தாளம் முதலிய திருப்பணிகளும் இவர்களுக்கே உரியன.

ராஜதானி மண்டபத்தின் எதிரே ஸ்தலத்தாரும், ஸ்தானத்தாரும் பொற்பண்டாரிகளும், ஓதுவார், ரகசியம் சாத்துவார், கழல் கண்டார் கொத்தனார் முதலிய திருப்பணி செய்வார் கூட்டம் அமர்ந்திருந்தது. மற்றொரு புறத்தில் பெண்மணிகள் கூட்டம் அமர்ந்திருந்தது. அவர்களுள் முக்கியமானவர் மூத்த முறைக்காரி என்னும் கொண்டி அம்மையார். பதியிலார் வம்சத்தில் வந்த அவர் தினந்தோறும் தியாகேசன் திருமுன்னர் சாயரட்சை முடிந்தவுடன் நாட்டியம் ஆடும் பாக்கியம் பெற்றவர். அவர்கள் வயது நாற்பதுக்கு மேல் ஆகிய பின்தான் ஆடுவார்கள். வெள்ளை உடை உடுத்தி, வெள்ளை மலர் தரித்து, வெள்ளைப் பணி பூண்டு கோணல் கொண்டையிட்டு மத்தளம் நட்டு முட்டு முழங்க அவர்கள் ஆகம விதிப்படி ஆடுவார்கள். அந்த அம்மை ஒரு புறம் அமர்ந்திருந்தார்.

அவருக்குப் பக்கத்தில் சாளரவாயிலின்கண் இருந்து வீணையும் குழலும் வாசிக்கும் திருப்பணி மங்கையர் அமர்ந்திருந்தார்கள். இவர்களைத் தவிர தட்டம் சுற்றுதல், அஞ்சலி பிடித்தல் முதலிய முறை செய்யும் தாசிகள் அமர்ந்திருந்தனர். ஊரார் எல்லாருமே அழைக்கப்பட்டிருந்தார்கள். ஆகையால், பெண்கள் பகுதியின் ஒருபுறத்தில் வடிவாம்பாளும், மோகனாவும் இருந்து பஞ்சாயத்தைக் கவனித்தார்கள்.

மண்டபத்தின் எதிர்ப்புறத்தே வெளியூர் மரியாதைக்காரக் கூட்டத்தினர் இடையில் ஸ்ரீமான் சிங்கபுரம் மைனரும் அமர்ந்திருந்தார். அவருக்குப் பக்கத்தில் எதும் அறியாதவர் போல் இருந்தார் வைத்தி.

மேடையின் மேல் பஞ்சாயத்தாராக திருமேனி தீண்டும் வீதி விடங்க நயினார் காதிலே வைரக்கடுக்கனும், அரையில் பத்தாறுப்பட்டு பஞ்சகச்சமும் கட்டி, உடல் முழுதும் சிவாபரணங்கள் பூண்டு, மேலே உத்தரியத்தைப் பிரித்துப் போட்டவண்ணம்

அமர்ந்திருந்தார். அவர் வாய் "நமச்சிவாய" என்ற பஞ்சாட்சரத்தை முணுமுணுத்துக்கொண்டே இருந்தது.

அடுத்தபடியாகத் தியாக வினோதப் பிரமராயர் அமர்ந்திருந்தார். இவரும் குருக்கள் இனத்தவரே. இவர் கழுத்தில் கௌரி சங்கரம் அணிந்து, காதில் ருத்திராட்ச குண்டலங்களுடன் நெற்றியில் உதிர் விபூதி இட்டுக்கொண்டு வாயில் கல்யாணி ராகத்தை முனகிய வண்ணம் இருந்தார்.

இதற்கு அடுத்து இருந்தார் தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த ராஜாங்கக் கட்டளை மடத்துத் தம்பிரான். இவர் சடாமகுடத்துடன் விளங்கினார். இவருக்குப் பின் இரண்டு குட்டித் தம்பிரான்கள் தொண்டு செய்யக் காத்திருந்தனர்.

நான்காவதாக ஓதுவார் அல்லியங்கோதை அடி மறவாத் தேசிகர் அமர்ந்திருந்தார். இவர் எழுந்தாலும் நிமிர்ந்தாலும் எவர் எதிர் வந்தாலும் 'சிவா திருச்சிற்றம்பலம்' என்று சொல்லி வந்தார்.

ஐந்தாவதாக அமர்ந்திருந்தவர்தான் உள்துறைக் கட்டளைக் காரியஸ்தர். அவர் எதுவும் முனகவில்லை. ஆனால், அடிக்கடி அமர்த்தலாக இரு புறமும் பார்த்து வந்தார்.

இந்தச் சமயத்தில் கூட்டத்தில் ஒரு பரபரப்பு உண்டாயிற்று. ஸ்ரீமான் குப்புசாமி நாயனக்காரர் புதுச்சட்டை போட்டு, மடி வைத்துக் கட்டி, குழைச்சல் போட்டுக்கொண்டு ஆடம்பரமாக உள்ளே வந்ததே காரணம். வந்த வேகத்தில் பஞ்சாயத்தாரை நோக்கி ஒரு கும்பிடு போட்டுவிட்டுக் கடைக்கண்ணால் கூட்டத்தைத் துழாவினார். இவரைக் கண்டதும் மூலையில் இருக்கும் வைத்தி பொடி மட்டையைப் பையில் இருந்து எடுப்பவர் போல் ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்துக் காட்டி, சட்டைப்பையில் செருகிக் கொண்டார். கூட்டம் சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரரின் வருகையை எதிர்நோக்கி இருந்தது.

இந்நிலையில் சிவப்பழமாகச் சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர் மாராயத்தால் அழைத்து வரப்பட்டார். அவர் இடத்தோளில் பாரி நாதஸ்வரப் பை தொங்கியது. அவர் கூடவே அவர் மகன் கையில், கோயில் பொருளாகிய திருச்சின்னம், வாங்கா என்ற இரண்டு வாத்தியங்களையும் எடுத்து வந்தான். சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர் உள்ளே நுழையும்போதே ஒரு கல்லின் மேல் ஏறி நின்று ஆரூர் கோயிலின் எழு நிலை மாடங்களையும் கும்பிட்டார். அவர் கண்கள் கலங்கின. கால்கள் தள்ளாடின. மிகுந்த மானியாதலால் தம் மேல் வழக்கு என்று கேள்விப்பட்டது முதல் அவர் தன்னிலையில் இல்லை. இருந்தாலும் உணர்ச்சியை அடக்கிக்கொண்டு கூட்டத்திற்குள் வந்தார்.

அவரைக் கண்டவுடன் கூட்டம் முழுவதுமே எழுந்தது. ஆவலுடன் அவர் முகத்தை நோக்கியது. மாராயம் கந்தப்பன்



"அமருங்கள் அமருங்கள்!" என்று கையமர்த்திய பிறகுதான் கூட்டம் உட்கார்ந்தது.

"சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரரே, தாங்களும் இருக்கலாமே" என்று பஞ்சாயத்தில் ஒருவராகிய சங்கீத ரசிகர் ஸ்ரீ தியாக வினோதப் பிரமராயர் கேட்டுக்கொண்டார்.

இது வீதிவிடங்க நயினாருக்கு ஆத்திரமூட்டியது. "அவர் குற்றவாளிங்காணும்! உட்காரலாமோ?" என்றார். இதைக் கேட்ட தம்பிரானோ, "குரு மகாசந்நிதானம் திருவருளால் இது இரண்டொரு இதமொழி கூற விழைகின்றது" என்று பெரிய பூர்வ பீடிகையுடன் எழுந்தார். கூட்டத்தார் எல்லோரும் அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்று பார்த்தனர். அவர் திருவாயால் "இருத்தல் மரபல்ல" என்று இரண்டு வார்த்தைகள் சொல்லி அமர்ந்தார்.

இவைகளைக் கவனுற்ற அல்லியங்கோதை அடிமறவாத் தேசிகர் எழுந்தார். "சிவா திருச்சிற்றம்பலம். இஃது அறநெறித்தலம். இங்கு சுந்தரருக்கும் மதிப்பு உண்டு. அவரை எதிர்த்து 'அரன் அடியாரை இறைவன் எனத் தொழாத இவரும் புறம்பு. இவரை ஆட்கொள்ளும் அருள் தியாகரும் புறம்பு' என்று கடிந்துரைத்த விரல் மிண்ட நாயனாருக்கும் இடம் உண்டு. ஆகவின் சாமிக்கண்ணு நாயனக்காரர் அமர்ந்தால் குப்புசாமி நாயனக்காரரும் உட்கார வேண்டும்" என அறநெறியை விண்டுரைத்தார்.

இதைப் பார்த்த உள்துறை அதிகாரி "அட! உட்கார்ந்தா என்ன நின்னா என்னையா? உச்சிக்காலத்துக்கு நேரமாகுது. மாராயம், விசாரணை நடக்கட்டும்" என்று உத்தரவிட்டார்.

உடனே மாராயக்காரர் எழுந்தார்.

"ஊராரே, கோயிலாரே, இன்று உங்கள் முன்னே நயினார் அடியார் திருக்கூட்டத்தைச் சேர்ந்த கோடி வீட்டுக் குப்புசாமி நாயனக்காரர், அதே கூட்டத்தைச் சேர்ந்த சங்கீத கலா ரத்தின சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர் மேல் கோயில் அம்பலத்தில் புகார் சொல்லி இருக்கிறார். குப்புசாமி நாயனக்காரர் தம் வழக்கை எடுத்துச் சொல்லும்படி பஞ்சாயத்தார் உத்தரவு" என்று அறிக்கையிட்டார்.

குப்புசாமி நாயனக்காரர் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தார். அவர் எழுந்த வேகத்தில் பொல பொல என்று ஐந்து ரூபாய்ச் சில்லறை கீழே விழுந்து உருண்டோடியது. இதைப் பார்த்த அவர், பயத்தில் "இது, சில்லறை வட்டிக்கடை வடமலைச் செட்டியார் மாத்திக்கொண்டு வரச் சொல்லி.." என்று உளறினார்.

இதைக் கேட்ட கூட்டம் சிரித்தது. நயினார் வழக்கை விசாரித்தார்.

வீதி விடங்கர், "குப்புசாமி, உன் மடியிலே சில்லறை எதுங்கறது வழக்கில்லை. நீ சாமிக்கண்ணு மேலே என்ன குற்றம் சொல்றே"

சாமிக்கண்ணு நாயனக்காரைக் கண்டவுடனே ஏற்பட்ட நடுக்கம் குப்புசாமிக்கு இன்னும் நீங்கவில்லையாதலால், "எது? அண்ணன் மேலேயா? நானா? ஒண்ணும் குத்தம் சொல்லல்லியே !" என்று உளறினார். பிறகு சமாளித்தார்.

" நான் குற்றம் ஒண்ணும் சொல்லல்லே. இது நாயமான்னுதான் பஞ்சாயத்தாரைக் கேக்கச் சொன்னேன்."

"எதைக் கேட்டது என்று இந்தக் கட்டை அறியலாமோ?" என்றார் தம்பிரான்.

"கட்டை எரியாதுன்னு நான் சொல்லவே இல்லீங்க" என்று குப்புசாமி புரிந்துகொள்ளாமல் பதில் கூறியதும் கூட்டம் கொல்லென்று சிரித்தது.

குப்புசாமி தம் தவற்றை உணர்ந்தார். சுதாரித்துக்கொண்டு பேச ஆரம்பித்தார். "சாமிக்கண்ணு அண்ணன் மேலே எனக்கு ஒண்ணும் கோபம் கிடையாது நான் அதற்கு எதிரியில்லை.

"நான் அவர்மீது மூன்று குத்தம் சாட்டுகிறேன். முதலாவது, இந்த ஊருக்குள்ளே நயினார் அடியார் கூட்டத்தார் ஒருவரைத் தவிர அவுங்க வீட்டிலே ' பெண் எடுத்தவங்க, மாப்பிள்ளை, பெண் வகுத்துப் பேரன்கூட எங்கள் நாயனத்தை எடுத்து ஊதக்கூடாது' என்று ஒரு கட்டுப்பாடு இருக்குது. அதை மீறிச் சிக்கல் சண்முகசுந்தர நாதஸ்வரக்காரரை இந்த ஊருக்குள்ளே அழைத்து வந்தது தப்பு."

இதைக் கேட்ட மோகனாவுக்குத் தலை சுழன்றது. 'நம்மாலா இவ்வளவு பெரிய கூட்டம்! நம்முடைய ஒரு சொல்லா இப்படி இந்த ஊரைக் கூட்டிவிட்டது?' என்ற எண்ணத்தில் திடுக்கிட்டாள். வடிவாம்பாளோ ஏதோ கப்பலே கவிழ்ந்தது போல் பெருமூச்சு விட்டாள். தன் மகளின் முகத்தைக் கோபத்துடன் பார்த்தாள். மோகனாவோ தலையைக் குனிந்து தரையைப் பார்க்கலானாள்.

இதற்குள் நியாகவினோதப் பிரமராயர் குறுக்கிட்டார்: "இது குற்றமல்ல. இந்த ஊர் ரயில்வே ஸ்டேஷனிலே எத்தனையோ பேர் வெளியூர் மேளக்காரர்கள் ரயிலிலே போறாங்க, வராங்க. குப்புசாமி சொல்றதைக் கேட்டால் ரயில்வே ஸ்டேஷனையே எடுத்துவிட வேண்டியதுதான்."

" அஃது எவ்வாறு அமையும்? சிக்கலார் இவ்வூரில் ஊதியதாக உரைப்பது அவ்விடத்துக் காதில் கேட்கவில்லையோ? உமது வழக்கை உரையும்" என வினவினார் தம்பிரான்.

"இரண்டாவது குற்றம். பாரி நாயனம், பஞ்சமுக வாத்தியம், சுத்த மத்தளம் இவை மூன்றும் தியாகராஜாவுக்கு விசேஷம். திருவாரூருக்கே இந்த மூன்றினால்தான் பெருமை."

"அல்ல, தியாகராஜாவால்தான் பெருமை" என்றார். சாமிக்கண்ணு.



"அட, அதுதான் இருக்கே. நம்ம சொல்லால்தானா அவருக்குப் பெருமை? பஞ்சமுகவாத்தியம் திருத்துறைப்பூண்டியிலேகூட இருக்குது."

"அங்கு சுத்த மத்தளமும் வாசிக்கப்படுகிறது" என்றார் தம்பிரான்.

"ஆமா, ஆனால் பாரி நாயனம்? இந்த ஊருக்குத்தான் சொந்தம். இதை இந்த ஊரிலே பிறக்காத ஒருத்தரு கையிலே எடுத்து வாசிக்க அவரு அனுமதிச்சது பிசகு" என்றார் குப்புசாமி நாயனக்காரர்.

இந்தக் குற்றச்சாட்டைக் கேட்டதும் கூட்டமே திகைத்தது. சாமிக்கண்ணுவின் மேல் அபிமானம் மிகுந்த நியாக விநோதப் பிரமராயரும் திகைத்துவிட்டார்.

"சாமிக்கண்ணு, நீவிர் உரைக்கும் மறுமொழி யாதோ?" என்று கேட்டார் தம்பிரான்.

இதுவரை குற்றச்சாட்டில் ஸ்தம்பித்து நின்ற சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர் பதில் சொல்ல முன்வந்தார்.

"ஆம், நாயனக்காரரை நான் வாசிக்க விட்டது உண்மை."

"ஏன் அப்படிச் செய்தீங்க? உங்க அப்பன் வீட்டுச் சொத்தா?" என்றார் குப்புசாமி.

இல்லை, எங்கள் பாட்டன் பூட்டன் பரம்பரையாக வந்த சொத்து."

"அப்படின்னா உங்கள் மகனுக்குக் கொடுக்கலாம். ஊரானுக்குக் கொடுக்கலாமா?"

"குப்புசாமி, உனக்கு நான் சொல்வது புரியாது. ஆனால்..."

"ஏன் புரியாது? இங்கிலீசிலே சொல்லப் போறீங்களா?"

கூட்டம் சிரித்தது. மைனரும் வைத்தியும் 'சபாஷ்' என்று ஒருவரை ஒருவர் திரும்பிப் பார்த்துக்கொண்டார்கள். "இப்ப. யாரு குப்புசாமியா பேசறதுன்னு நினைக்கிறீங்க. இல்லே; மடியிலே இருக்கிற சில்லறை பேசுது. ஆயிரத்து எட்டரை ரூபாய்னா கொடுத்திருக்கேன்," என்றார். வைத்தி.

"சத்தம் சத்தம்!" என்று மாராயம் இடையில் புகுந்தார். சத்தம் அடங்கியது. சாமிக்கண்ணு நாயனக்காரர் பின்வருமாறு சொல்லலானார்.

"தாய் குழந்தையை விரும்புகிறாள். கடவுள், பக்தனை விரும்புகிறார். இதைப் போலவே குருவும் சிஷ்யனை விரும்புகிறார்."

"அப்படின்னா, வீட்டிலே கூட்டிக்கிட்டுப் போய்ச் சோறு போடுங்க, வாத்தியத்தைச் சொல்லிக் குடுக்கலாமா?"

"குப்புசாமி, நீ குறுக்கே பேசாதே." இது நியாக விநோதப் பிரமராயர்.

"அவன் கேட்பதும் நியாயந்தானேகாணும்?" இது வீதிவிடங்கர்.

"சிக்கல் தம்பி இந்த நாட்டின் செல்வம். அதைப் போலே ஒரு தெய்வாம்சம் ஆயிரம் வருஷத்துக்கு ஒரு முறைதான் பிறக்குது. அதன்

வாயாலே எனக்குக் கத்துக்குடுன்னு கேட்ட பிறகு நான் எப்படி மறுக்க முடியும்? அது ஊதும்போது நான் தியாகராஜாவையே கண்டேன்."

"நாங்களுந்தான் அடிக்கடி ஊதறோம். அந்த தியாகராஜாவே வாரதில்லை. அப்படி ஒரு சமயம் அந்தத் தியாகராஜாவே வந்து பாரி நாயனத்தைக் குடுன்னு கேட்டா, நான் அவர் கையிலேகூடக் கொடுக்க மாட்டேன்" என்றார் குப்புசாமி.

"நீ ஊதும்போது அப்படியெல்லாம் அவர் வந்து கேட்டுட மாட்டார்." என்றார் தியாக வினோதர்.

இதற்குள் சாமிக்கண்ணு பேச ஆரம்பித்தார்.

"சிக்கலார் இந்தப் பாரி நாயனத்தை எடுத்து ஊதிப் பணம் சம்பாதிக்கப் போறதில்லை. அதை வேறு இடத்திலே ஊதக்கூடாது என்று நானும் சொல்லிவிட்டேன். அவர் அதற்கு ஒப்புக்கொண்டு, கற்றுக் கொடு என்றதால்தான் நான் கற்றுக்கொடுத்தேன்."

"அதெப்படி ஐயா கற்றுக் கொடுக்கலாம்? கட்டுப்பாடு கட்டுப்பாடுதானே! ரகசியம் ரகசியந்தானே! இந்தா, எதிர்த்தாப்பிலே இருக்காரு தியாகராஜாவுக்கு ரகசியம் சாத்தறவரு மாணிக்கத்தன்டை எப்படிச் சாத்தறேன்னு கேட்டா அவர் யாருக்காவது சொல்லிக் குடுப்பாரா?"

"இந்த மாதிரி ஒத்தருக்கும் சொல்லப்படாது என்று மூடிவைத்துத் தான் எத்தனையோ கீர்த்தனங்கள் போயிட்டுது. எத்தனையோ ஜாவளிகள் மறைஞ்சுபோச்சு. நம்ம நாட்டிலே வைத்தியம், சங்கீதம், மந்திரம் இவையெல்லாம் சொல்லிக் கொடுக்காமலேதான் மறைந்து போய்விட்டன" என்றார் தியாக வினோதர்.

"ஓய், தியாக வினோதரே! வெறுமனே இரும். உம்மகிட்டே ஒரு ரகசியம் இருந்தா அதைப் பிறத்தியாருக்குச் சொல்லிக் கொடுத்திடுவீரா?" என்றார் வீதி விடங்கர்.

"ரகசியமாய்ச் சொல்லிக் கொடுப்பேன்."

"எதை?"

"எங்கிட்ட உள்ள ரகசியம் ஒன்றுதான். அதுக்குப் பேரு பஞ்சாட்சரம். அதைப் பட்டுப் போட்டு மூடி ரகசியமாய்ச் சொல்லுவேன்."

"பஞ்சாட்சரம் யாவருக்கும் பொது. பாரி நாயனம் குடும்பச் சொத்து."

"இல்லை அது கலை."

"என்னங்காணும் கலை கலையைப் பிரமாதமாகக் கண்டுப்பிட்டீர்? கலைக்குக் கொம்பும் காலும் முளைச்சால் அது கொலையாகிவிடும். அது இருக்கிறபடி இருந்தாத்தான் அழகு" என்று இரைந்தார் வீதி விடங்கர்.



இவர்கள் இருவருக்கும் நடக்கும் வாக்குவாதத்தைக் கண்ட கட்டளைத் தம்பிரான் விவாதத்துக்குப் பின்வருமாறு முடிவு கட்டினார்.

"நாம் கலை ஆராய்ச்சி செய்ய வரவில்லை. விலை பெற்ற நேரம், உம், மேலே" என்று முத்தாய்ப்பு வைத்தார் தம்பிரான்.

"அது மாத்திரமல்ல. திருவாரூர்க் கோயில்லே இதுதான் வாசிக்கணும்னு தீட்சிதர் எழுதியிருக்காரு. அதையுங்கூட இவர் சொல்லிக் குடுத்துட்டாருனு நான் சந்தேகப்படறேன். ஏனென்று கேட்டால் சிக்கலார் திருவாரூர் பத வர்ணங்கூட வாசிச்சாராம்," என்று அபாண்டமாய் ஒரு பழியைச் சாத்தினார் குப்புசாமி.

இதைக் கேட்ட சாமிக்கண்ணு ஆத்திரம் அடைந்தார். "குப்புசாமி, நீ சொல்வது தவறு. அந்த வர்ணம் எட்டையபுரம் தீக்ஷிதர் செய்தது. நம்ம ஊர் பத்ததியிலே இல்லை. அதை அந்தத் தம்பியே வாசிச்சது."

இந்தச் சமயம் சண்முகசுந்தரம் முத்துராக்குவுடன் கோவிலுக்குள் நுழைந்தான். அவனைக் கண்டவுடன் மக்கள் ஆனந்தத்தில் கரகோஷம் செய்தனர். "நாயனக்காரர், நாயனக்காரர்" என்று பல குரல்கள் எழுந்தன.

உண்மையில் அன்று சண்முகசுந்தரம் வெற்றி மாலை சூடியவன் போல் உல்லாசமாகவும் காணப்பட்டான். பாரி நாயனத்தை எடுத்து ஊதப் பழகிவிட்டோம் என்ற தெம்பால் அழகில் இரண்டு பங்கு அதிகமாகத் தோன்றினான். அவனைப் பார்த்த கூட்டத்தினர் பிரமித்தனர்.

மோகனா அவனையே கண்கொட்டாமல் பார்த்தாள். வெற்றிக்கோலத்துடன் வரும் தன் வீர மணாளனைப் பார்த்து மகிழும் மறநங்கையைப் போல் அவன் அழகைப் பருகினாள். சண்முகம் வந்த வேகத்தில், "பெரியவங்களுக்கெல்லாம் வணக்கம். நான் பஞ்சாயத்துக்கு வரவில்லை. நாயனக்காரரை இங்கு அழைத்து வந்தார்களே, நேரமாயிற்றே என்ற கவலையுடன் வந்தேன். ஆனால் நான் உள்ளே நுழையும்போதே கமாச வர்ணம் எனக்கு எப்படித் தெரியும் என்று ஒரு குரல் கேட்டது. தேனீக்குத் தேன் இருக்கிற இடம் எப்படித் தெரியுமோ அதைப்போல் எனக்கு எங்கெங்கு எந்தெந்தப் பாட்டு இருக்கிறது என்பதும் தெரியும். இந்தக் கமாச வர்ணத்தையும் "மீனாட்சி மே முதம் தேஹி" என்ற தீட்சிதர் கீர்த்தனத்தையும் நான் மதுரையிலே ஸ்வரப்படுத்திக்கொண்டேன். இது உங்களுக்குச் சந்தேகமாயிருந்தால் நான் இப்பொழுதே பாடிக் காட்டுகிறேன். சங்கீதம் தெரிஞ்ச யாருக்கும் இந்தப் பத வர்ணத்தை இரண்டு நாளிலே பாடம் செய்ய முடியாது என்பது தெரியும். என்ன நாயனக்காரரே நிசந்தானே?" என்று குப்புசாமியின் பக்கம் திரும்பிக் கேட்டான் சண்முகம்.

"பாடட்டும் பாடட்டும்" என்றது கூட்டம்.

இதற்குள் குப்புசாமி நிமிர்ந்தார். "மிக்கவாரு பெரிய வித்வான்கறது எங்களுக்கும் தெரியும். அவரைப் போல எங்களுக்குப் பாட வராட்டியும் ஒத்தக்காரமாவது வரும். ஆனால் இரண்டாவது குற்றத்துக்குச் சாமிக்கண்ணு என்ன சொல்றாரு, ஏன் இடிச்ச புளியாட்டம் இருக்கிறாரு?"

இதைப் பார்த்த சாமிக்கண்ணு நாயனக்காரர் ஆத்திரமாய்ப் பேசினார். "ஏன் குப்புசாமி கோபிக்கிறே? ஒருவருக்கும் கற்றுக் கொடுக்கக்கூடாதென்று வித்தையை மூடி வைத்திருந்தால் இன்று திருவாரூர் இருக்குமிடம் யாருக்காவது தெரியுமா? எந்த ஊருக்குப் போனாலும், எந்தச் சங்கீத வித்வான் கச்சேரி செய்தாலும் முதலில் பாடப்படுகிற பாட்டு திருவாரூர்ப்பாட்டு. ஹம்சத்துவனி ராகம் பிறந்தது இந்த ஊரிலே. 'வாதாபி கணபதிம் பஜேஹம்' என்ற கீர்த்தனம் பிறந்தது இந்த ஊரிலே. நம்ம கோயில் உட்பிரகாரத்திலே இருக்கிற வாதாபி விநாயகர்தான் எல்லார் கச்சேரிக்கும் முதலில் வருகிறார். கடைசிப்பாட்டு 'நீ நாம ரூபமுலகு' அதுவும் நம்ம ஊரு தியாகையர் செய்ததுதான்.

"'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று ஆரம்பமாகும் திருத்தொண்டத் தொகை நம்ப ஊரிலே பிறந்தது. அதைப் படித்துத்தான் பெரிய புராணம் படிக்கிறார்கள். இந்த மாதிரி உலகமெல்லாம் நம்ம ஊர்ப் பெருமையைச் சொல்கிறது. தீட்சதரையா, தியாகராஜா, சாமா சாஸ்திரி ஆகிய மும்மணிகள் அளித்த சங்கீதம் இல்லை என்றால் இன்னைக்கிக் கச்சேரியே கிடையாது. சுந்தர மூர்த்தி நாயனார் பாடி வைக்கவில்லையானால் பெரிய புராணம் இருக்காது. மனுநீதிச் சோழன் இல்லையென்றால் நீதி இருக்காது. நம்ம கோவிலைப் பார்த்துக் கட்டவில்லை என்றால் தஞ்சாவூர்ப் பெரிய கோவில் வந்திருக்காது. விளக்கிலிருந்து தீவட்டி வருவதுபோல், கலையில் இருந்துதான் கலை வளருது. ஆனால், 'பாத்திரமறிந்து பிச்சை இடு, கோத்திரம் அறிந்து பெண்ணைக் கொடு' என்பதுபோல, கத்துக் குடுக்கற இடம் நல்ல இடமா இருக்கணும். உம் மாதிரி இருக்கக் கூடாது. அவ்வளவுதான்.

"நான் கத்துக்கொடுத்தது சாதாரண ஆளுக்கில்லே, மகாவித்வானுக்குக் கத்துக் குடுத்தேன். அவர் எடுத்து ஊதினால் பாரி நாயனமும் உலகத்தில் பரவிவிடும். இதிலே என்ன குத்தம்? நம்ம ஊரிலே நவக்கிரகங்கள்கூட ஒரே முகமாப் பாத்துக்கிட்டிருக்கு. நமக்குள் ஏன் அடிச்சுக்கணும்? இது எனக்குக் குத்தமாகத் தெரியவில்லை. ஆனால், பஞ்சாயத்தார் குத்தமாகக் கருதினால் அவர்கள் விதிக்கிற தண்டனைக்குக் கட்டுப்படுகிறேன்," என்றார் சாமிக்கண்ணு.



அவருடைய உணர்ச்சி மிகுந்த பேச்சில் கட்டுண்டதுபோல் பிரமித்து நின்றனர். பஞ்சாயத்தார்கள் கனைத்துக்கொண்டார்கள்.

ஆயினும் குப்புசாமி விடவில்லை.

"பேச்செல்லாம் நல்லாத்தான் இருக்கு. அதுவேயும் பெரிய மனுஷன் பேசறாரு. இனிமேல் ஏழைக்கு நியாயம் கிடைக்குமா? கட்டுப்பாட்டை மீறிப் பாரி நாயனத்தைக் கத்துக்குடுத்த குத்தம், இந்தப் பசப்புப் பேச்சாலே மறைஞ்சிடுமா?" என்று ஆரம்பித்தார்.

உடனே பஞ்சாயத்தாருள் ஒருவராகிய தம்பிரான் எழுந்தார். அவரைப் பின் தொடர்ந்து மற்ற நால்வரும் மண்டபத்தின் உள்ளே சென்றார்கள். பஞ்சாயத்தார்களுக்குள் நெடுநேரம் மந்திராலோசனை நடந்துகொண்டிருந்தது.

இருந்த கூட்டம் முழுவதும் என்ன தீர்ப்பு அளிப்பார்களோ என்ற எண்ணத்தில் பேச்சு மூச்சின்றி அவர்கள் வெளியே வருவதையே எதிர் பார்த்து அமர்ந்திருந்தார்கள். சுமனரும் வைத்தியும் தங்களுக்குப் பாதகமாகத் தீர்ப்பளித்துவிடக்கூடாதே என்று பார்த்துக்கொண்டே இருந்தார்கள். சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர் தமது இரு கண்களையும் மூடித் தியாகராஜப் பெருமானையே சிந்தித்தவண்ணம் நின்றார். சண்முகம், தன்னால் அன்றோ இந்த வம்பும் வழக்கும் என்ற எண்ணத்தில் கவலையுடன் காணப்பட்டான். மோகனாவை வடிவாம்பாள் பார்க்கவில்லை. வடிவாம்பாளை மோகனா பார்க்கவில்லை. மோகனாவின் உள்ளத்தில் ஒரு புயல் அடித்தது. நம் வாய்த்துடுக்கால் வந்த வினைதானே இது! ஒரு சொல் சொன்னாலும் அது இன்று சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்டதே! ஐயோ, பஞ்சாயத்தார்கள் நல்ல தீர்ப்பாகச் சொல்ல வேண்டுமே!

'நாம் பட்ட பாடு பலிக்கும் என்று எண்ணிய நேரத்தில் இந்தச் சோதனை வந்துவிட்டதே! பஞ்சாயத்தார்கள் என்ன முடிவு செய்வார்களோ! கற்று வைப்பது குற்றம் என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது? தாயே! கமலாம்பாள்! நீதான் காப்பாற்ற வேண்டும்' என்று பயந்து நடுங்கிப் பிரார்த்தித்துக்கொண்டே இருந்தாள்.

அப்போது பஞ்சாயத்தார்கள் ஒருவர் பின் ஒருவராக வெளியே வந்தனர். எல்லோரும் நிசப்தமாக அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கேட்கக் காத்திருந்தனர். இந்த நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு வீதி விடங்கரின் குரல் வெளி வந்தது.

"சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர் தியாகராஜப் பெருமானுக்கு நிரம்ப உழைத்தவர். அவர்மேல் இம்மாதிரி ஒரு வழக்கு வந்திருப்பது நமக்கே வருத்தமாக இருக்கிறது. கலைகள் எல்லோருக்கும் பொது என்பதைப் பஞ்சாயத்தார்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால், பாரி நாயனம் அப்படி அல்ல. இது தேவ வாத்தியம். இதை நயினாரடியார்கள் மாத்திரந்தான் வாசிப்பது என்ற வழக்கம் நம்

ஊரில் இருக்கிறது. சண்முகசுந்தரம், அடியார் குடும்பத்தில் வந்தவர் அல்ல. சாமிக்கண்ணு அவருக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார். ஆதலால், சட்டப்படி நாம் அவரைக் குற்றவாளியாகக் கருதுகிறோம். அவர் செய்த தவற்றை இம்முறை மன்னிக்கிறோம். ஆனால், இனி அவர் பாரி நாயனத்தைச் சண்முகசுந்தரத்தின் கையில் கொடுக்கக் கூடாது என்று தீர்ப்பு அளிக்கிறோம். இது பஞ்சாயத்தார்களின் ஏகமனதான தீர்ப்பு'' என்று சொன்னவுடனே கூட்டத்தில் இருந்தவர்கள் எல்லோரும் இதை ஒப்புக்கொள்ள மாட்டாமல் "ஹா ஹா !" என்றார்கள். மோகனாம்பாள் கண்ணீர் விட்டாள்.

சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர் இதைக் கேட்டு மெய்சிலிர்த்தார். "நான் இதற்குக் கட்டுப்பட முடியாது. என் வாயால் அந்தப் பிள்ளைக்குச் சொல்லிக் கொடுப்பதாக வாக்குக் கொடுத்துவிட்டேன். எப்பொழுதும், நான் வாசிக்கும் போது தியாகராஜப் பெருமான் என் இதயத்திலே வருவார். சண்முகசுந்தரம் வாசிக்கும் பொழுது தியாகராஜர் என் எதிரிலேயே நடனம் ஆடிக்கொண்டிருந்தார். என் வாசிப்பிலே காணாத இன்பத்தை அதன் வாசிப்பில் கண்டேன். அந்த ஆனந்தத்தில், வயதில் சிறிய அந்தப் பிள்ளையை நான் கை எடுத்துக் கும்பிட்டேன். அவராகப் பாரி நாயனத்தைக் கற்றுக்கொள்ள முன் வந்ததைப் பார்த்து மகிழ்ந்தேன். தியாகராஜாவுக்கு முன்னாலே ஒரு நாளைக்கு அவரை வாசிக்கச் சொல்ல வேண்டும். அவர் மனம் குளிர வேண்டும். உங்கள் மனமும் குளிர வேண்டும் என்றெல்லாம் ஆசைப்பட்டேன். இனி என்னால் அவருக்குச் சொல்லிக் கொடுக்காமல் இருக்க முடியாது"

''அவ்வாறாயின் நீவிர் பஞ்சாயத்தாரின் ஆணையைக் கடக்கின்றீர்" என்றார் தம்பிரான்.

"மதிக்கின்றேன். ஆனால், மனம் இடம் தரவில்லை" என்றார் சாமிக்கண்ணு.

"அப்படியானால் இனி நீயும் பாரி நாயனத்தைத் தொடக் கூடாது" என்றார் வீதி விடங்கர்.

கூட்டத்தில் இருந்து ஒரு சலசலப்பு 'அநியாயம், அநியாயம்' என்ற குரல் எழுந்தது. சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர் பேயால் அடிபட்டவர் போல் இருந்தார். அவரை அறியாமல் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. ஐம்பது வருஷ காலம் தியாகராஜர் முன் ஓடி ஆடிக் களித்த அவருடைய சிந்தை, 'இனி தியாகராஜனை எப்படித் தரிசிப்போம்? அவருக்கு எவ்வாறு சேவை செய்வோம்?' என்று திகைத்தது.

''தம்பி'' என்று தன் மகனை அழைத்தார். ''அந்தத் திருச்சின்னத்தையும் எக்காளத்தையும் இப்படிக் கொடு" என்றார். அன்றுவரை எத்தனையோ பரம்பரைகளாக அவர்கள் வாசித்த வாத்தியம் அவைகள். பிறகு மேலும் பேசினார்.



"இந்த எக்காளத்தில் என் பாட்டனார் வாய் வைத்து ஊதியிருக்கிறார். என் தந்தை ஊதியிருக்கிறார். நானும் ஊதியிருக்கிறேன். 'தியாகராஜன் பவனி வருகின்றான். தேவர்கள் எல்லோரும் திருச்சேவை காண வாருங்கள்' என்று வானை நோக்கி எக்காளம் கொட்டியிருக்கிறோம். என் பிள்ளையும், அவன் பேரனும் அதை ஊதுவார்கள் என்று எண்ணி மகிழ்ந்தேன். இறுமாந்திருந்தேன்.

"தியாகராஜப்பெருமான் திருவுள்ளம் வேறு விதமாக இருக்கிறது. இதோ, அதை இன்றுடன் கீழே வைத்துவிட்டேன். இந்தத் திருச்சின்னங்கள் என் வீட்டின் சுவரில் தொங்கிக்கொண்டு நாங்கள் திருவாரூர் அடிமை என்றுரைக்கும் சிவச் சின்னங்களாக விளங்கி வந்தன. இதோ, அவற்றையும் படியில் வைக்கிறேன்" என்று கூறிக் கைகள் நடுங்க அவைகளைக் கீழே வைத்தார்.

அதன் பிறகு எதையோ சொல்ல நினைத்தார். நா வரவில்லை. கண்ணீர் வழிந்தது. பேச்சு தடுமாறியது. ஆயினும் பின்வருமாறு சொன்னார் : ''ராமபிரானின் இடத்தோளிலே, கோதண்டம் எப்பொழுதும் இருந்து வந்தது. அந்த அடையாளத்திலிருந்து அவரை ராமர் என்று அறியலாம். எம்பெருமான் சிவபெருமானின் இடப் பக்கத்திலே உமையாள் குடிகொண்டிருக்கிறாள். அவருக்கு அதுதான் அடையாளம். நாங்கள் வணங்கும் நம்பியாரின் இடப்புறத்திலே முப்புரி நூல் இருக்கும். அது அவர்களின் அடையாளம். மேற்சொன்னவர்களை விட்டு, இவை என்றைக்கும் நீங்கியது இல்லை. இதைப்போல இந்தச் சாமிக்கண்ணுவின் இடப்புறத்திலே இருந்து இந்த நாதஸ்வரப்பை நீங்கியது இல்லை.

"மாயவரத்தில் திருவிழாவுக்கு அழைத்தார்கள். போனேன். காலை விழாவில் வாசித்தேன். மாயூர நாதனிடம் மனம் செல்லவில்லை. சாயரட்சைக்கு என் தியாகராஜனுக்கு வாசிக்கவேண்டும் என்று துடித்தேன். வண்டியில் வந்துசேர முடியாது என்றெண்ணி ஓட்டமாய் ஓடி வந்தேன். சாயரட்சையில் வாசித்தேன். அன்று நான் வாசிக்கும் போது ஆடரவக் கிண்கிணியான் எதிரில் வந்து ஆடுவதைக் கண்டேன். என் கால் கடுப்பு நீங்கியது. இன்றோடு அவைகள் எல்லாம் மறைகின்றன. ஆனால், ஒன்று மட்டும் உண்மை. என் பாரி நாயனத்தை வாசிக்கும் போது மாத்திரம் அல்ல, எங்கு இசை இருக்கின்றதோ அங்கு இறைவன் இருக்கின்றான். எங்கு சங்கீதம் இருக்கின்றதோ அங்கு தியாகராஜன் நர்த்தனம் செய்கிறான். எங்கு நாதம் இருக்கிறதோ அங்கு நாதப்பிரம்மம் இருக்கிறது என்று எனக்குச் சண்முகத்தின் வாசிப்பு போதித்தது. ஆதலால் இதோ, என் தோளில் இன்றுவரை நீங்காமல் இருந்த நாதஸ்வரத்தைக் கழற்றி வைக்கின்றேன்" என்று கண்ணீர் மல்க, அடக்க முடியாத உணர்ச்சியுடன் பேசிவிட்டு, நாதஸ்வரத்தைக் கீழே வைத்தார்.

கூட்டம் முழுவதும் "வேண்டாம் வேண்டாம்! போகாதீர்கள், போகாதீர்கள்!" என்று அலறியது. மோகனாவுக்கு என்னவோ செய்தது. கண்ணீரும் கம்பலையுமாக நின்றாள். தாயார் அவள் கையைப் பிடித்து "வா, வீட்டுக்கு" என்றாள் அவள் அசையவில்லை.

மேலும் பேசினார் சாமிக்கண்ணு : "ஆனால், கடைசியாக ஒரு வேண்டுகோள் இன்றுவரை தினந்தோறும் எவனை ஆறு தடவைகள் கும்பிட்டு ஆறுதல் அடைந்தேனோ, எவனுக்காக நான் உயிர் வாழ்ந்தேனோ அவனைக் கடைசியாக ஒரு முறை உள்ளே சென்று பார்க்கிறேன். என் தியாகராஜனைக் கும்பிட்டுவிட்டு, நான் விடை பெற்றுக்கொள்ளுகிறேன்" என்று அவர் கேட்டுக்கொண்டே இருக்கையில் அவர் கால்கள் அவரைத் தியாகராஜாவின் முன் இழுத்துச் சென்றன. ஆடி அசைந்து நடந்து வந்த அந்தப் பெரியார் இரு கைகளையும் உயரத் தூக்கினார். 'தியாகராஜா' என வாய்விட்டு அலறினார்— —

இதைப் பார்த்த கூட்டத்தினர் ஆத்திரம் அடைந்தனர் ஆனால், உணர்ச்சிப் பெருக்கில் அவர்களும் வாய் அடைத்து நின்றனர்.

இதுவரை பொறுமையுடன் இருந்த சண்முகசுந்தரம், "ஐயா, வேண்டாம், தாங்கள் எங்கும் செல்லவேண்டாம். என்னால் உங்களுக்கு ஏன் இந்தக் கவலை? நீங்கள் எப்பொழுதும் போல் தியாகராஜனுக்குத் தொண்டு செய்துகொண்டிருங்கள். அவன் வாசலில் வாசியுங்கள். உங்களையும் கடவுளையும் பிரிக்க நான் யார்? பக்தனையும் பரமனையும் பிரிக்க நான் யார்? ஏற்கெனவே நான் மலேயா நாட்டுக்குப் போவதாகத் திட்டமிட்டிருந்தேன். இடையில் வந்தது இந்தச் செயல். ஆங்காரத்தில் பெரிய அபசாரம் செய்து விட்டேன். நீங்கள் வாசியுங்கள். எனக்குப் பாரி நாயனம் வேண்டாம். நான் வருகிறேன்" என்று உணர்ச்சியுடன் சொல்லிவிட்டு, சரசரவென்று வெளியே நடந்தான்.

இதைப் பார்த்துக்கொண்டே இருந்த மோகனா, தாயின் கையை உதறினாள். பஞ்சாயத்துக்காரர்கள் கூட்டத்தில் விழுந்தடித்துக் கொண்டு வெறி பிடித்தவள் போல் ஓடினாள். வாசலை நெருங்கிய சண்முகத்திடம் சென்று "நில்லுங்கள் ! நில்லுங்கள்; எங்கேயும் போக வேண்டாம், நில்லுங்கள். எனக்காகத்தானே வாசிக்கப் போகிறீர்கள்? வேண்டாம். நான் நீங்கள் வாசித்ததாக ஒப்புக்கொள்கிறேன். நான் ஆட்டத்தில் தோற்றதாகவே ஒப்புக்கொள்கிறேன்" என்று காலில் விழுந்தாள். அவனைப் பற்றி இழுத்துத் தடுத்தாள்.

"சீ" என்றான் சண்முகசுந்தரம். "உன்னைக் கண்டா நான் பிறந்தேன்? உனக்காகவா வித்வானானேன்? என் வழியில் நிற்காதே. எனக்கு நாதஸ்வரமும் வேண்டாம், சங்கீதமும் வேண்டாம். நீயும் வேண்டாம். இந்த உடம்பும் வேண்டாம். உன்னை ஒரு முறை பார்த்து நான் பட்ட பாடு போதும்" என்று சொல்லிவிட்டு நடந்தான்.



இவர்கள் இருவருக்கும் நடந்த வாக்குவாதத்தைப் பார்த்தவுடன் கூட்டத்துக்கு விஷயம் விளங்கியது. 'சண்முகசுந்தரம் வாசிப்பதாம், மோகனா ஆடுவதாம் ! ஒரு நல்ல வாய்ப்பு. இந்தப் பஞ்சாயத்தாரால் வீணாக்கப்படுகிறதே !' என்ற ஆத்திரத்தில் கூட்டத்திலிருந்து இரைச்சல் உண்டாயிற்று. "பஞ்சாயத்தார் விட்டுக்கொடுக்க வேண்டும் ! சண்முகம் வாசிக்கட்டும், மோகனா ஆடட்டும்" என்ற கூச்சல்கள் எழுந்தன. கூட்டம் கட்டுக்கடங்காத நிலை ஏற்பட்டது. பஞ்சாயத்தார்கள் தங்களுக்குள் அவசரமாக ஏதோ பேசிக் கொண்டார்கள். "சண்முகம், நில்லுங்கள்" என்று தம்பிரான் குரல் எழுந்தது. நின்றான் சண்முகம்.

"உள்ளே வாருங்கள்" என்று அழைத்தார் தம்பிரான். பஞ்சாயத்தாரின் வார்த்தையை மீற முடியாமல் சண்முகம் சித்திரப் பாவையைப் போல உள்ளே வந்தான்.

தம்பிரான் எழுந்தார். "சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர் பேச்சு எங்கள் உள்ளத்தை உருக்கிவிட்டது. அவரைப் பிரிந்து தியாகராஜு பொறுக்க மாட்டார். அன்று காஞ்சியிலே, 'கணி கண்ணன் போகின்றான்' என்றவுடனே 'காமரு பூங்கச்சி மணிவண்ணன்' புறப்பட்டது போல் தியாகராஜன் செய்துவிடுவான். அதோடு பொதுமக்களும் நீங்களும் வாசிக்க வேண்டும் என விரும்புகிறார்கள். ஆதலால், ஒரே ஒரு நாளைக்கு நீங்கள் பாரி நாயனம் வாசிக்கலா மென்று பஞ்சாயத்து அனுமதிக்கிறது.

"பங்குனி உத்திரத் திருநாளில் ரிஷப வாகனத்தில் எம்பெருமான் எழுந்தருளுவார். அன்றைக்கு நீங்கள் பாரி நாயனத்தை எடுத்து வாசிக்கலாம். மோகனாம்பாள் நாட்டியம் ஆடலாம் என்று இந்தச் சபை அனுமதிக்கிறது" என்று கூறினார். இதைக் கேட்டவுடனே கூட்டம் சந்தோஷ ஆரவாரம் செய்தது. கரகோஷம் அதிர்ந்தது. உச்சிக்கால மணி ஓம் ஓம் என்று ஒலித்தது.

நாற்பத்து ஒன்பதாம் அத்தியாயம்.

## புயலுக்குப் பின் போராட்டம்



"ஐயா, பசிக்கிறது" என்று சொன்னான் ஒருவன்.

"பால் மாத்திரந்தான் இருக்கிறது. சாப்பிடுவாயா?" என்று கேட்டார் வீட்டுக்காரர். இதைக் காதில் கேட்டவுடனே, பசித்தவன் ஆனந்தப்பட்டான். அப்பொழுது வீட்டுக்காரரின் மனைவியின் குரல் எழுந்தது. "என்னாங்க !" என்றாள் மனைவி. பசித்தவன்

இதைக் கேட்டுவிட்டு, 'ஐயோ, கையிலே கிடைத்த பால் கட்டிக் சுகிக்கப்படுகிறதே!' என்று எண்ணினான். ஆனால், வீட்டுக்கார அம்மாள் கூறியது என்ன? " இரண்டு பழமும் இருக்குது. அதையும் கொடுங்க" என்றான் அவன். இதைக் கேட்டால் பசித்தவன் மனம் எவ்வளவு ஆனந்தப்படுமோ, அவ்வளவு ஆனந்தம், பஞ்சாயத்தாரின் வார்த்தையைக் கேட்டதும் அந்தக் கூட்டத்தில் இருந்த ஒருவருக்கு உண்டாயிற்று. அது வேறு யாரும் இல்லை; மோகனாதான்.

சண்முகம் கையால் நாயனத்தை எடுத்து வாசிக்கக்கூடாதென்று பஞ்சாயத்தார்கள் சொல்லியபொழுது, அவன் பட்ட பாடு அவனுக்குத்தான் தெரியும். ஆனால், கடைசியாக "நீங்கள் வாசிக்கலாம் மோகனாவும் ஆடலாம்" என்று தம்பிரான் சொல்லியதைக் கேட்ட மோகனா, ஆனந்தத்தில் பிரமித்து நின்றாள். தன் காதுகளில் கேட்பது நிசமான வார்த்தைதானா? என்ற சந்தேகம் அவளுக்கு ஏற்பட்டது.

சற்று முன்புதான், 'நீங்கள் வாசிக்க வேண்டாம், நான் தோற்றதாக ஒப்புக்கொள்கிறேன்" என்று சண்முகசுந்தரத்திடம் கேட்டுக் கொண்டாள். ஆனால், அதே மோகனா இப்பொழுது தோற்றதாக ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை. பார்க்கப்போனால் அவள் தோற்கவும் விரும்பவில்லை. "சீ, உன்னைக் கண்டா நான் பிறந்தேன்?" என்று சண்முகசுந்தரம் கேட்ட கேள்விதான் அதற்குக் காரணம்.

அது அவள் உள்ளத்தை உலுக்கியது. அவள் எண்ணத்தில், 'அவன் தனக்காகத்தான் பிறந்திருக்கிறான். அவன் வாசிப்பு, தான் கேட்டு ரசிப்பதற்காகத்தான் ஏற்பட்டது. அவன் அழகு, தான் பருகுவதற்காகத்தான் உண்டானது' என்று தோன்றியது. எப்பொழுது நான் பிறப்பதற்கு நாலு வருஷம் முன்பே அவர் பிறந்திருக்கிறாரோ, அப்பொழுதே எனக்காகவேதான் கடவுள் அவரைப் படைத்திருக்கிறார் என்பது நிச்சயமாகிறது' என்று உறுதியாக எண்ணினாள்.

ஆனால், இன்று அவன் வாயாலேயே அப்படிக் கேட்டதை அவளால் பொறுக்க முடியவில்லை! அவளுக்கு உள்ள துடுக்கில், அவளும் திரும்பிக் கேட்டிருப்பாள்.

'எனக்காக நீ பிறக்கவில்லை; உனக்காவும் நான் பிறக்கவில்லை. ஆனால், உன்னையும் என்னையும் படைத்தானே, அவன் அப்படி முடி போட்டுவிட்டான்' என்று சொல்லியிருப்பாள்.

அப்பொழுது இருந்த சூழ்நிலையில், அவளுக்குக் காதல் மேலோங்கி நின்றது. அதனால் அப்படிக் கேட்கவில்லை. இப்பொழுது அதுவல்ல.

'சண்முகசுந்தரம் வாசிக்கப்போகிறான், நானும் ஆடப் போகிறேன். அவனோ நம்மை ஏற்றுக்கொள்வது சந்தேகம்.



ஆடித்தோற்று, அவன் காலில் விழுந்தால், இவரு அவன் கைகள் நம்மைத் தள்ளியது போல, நாளை அவன் கால்கள் நம்மை உதைக்காது என்பது என்ன நிச்சயம்? ஆதலால், நாமும் ஆடிவிடுவோம். அவனை வென்றுவிடுவோம். காதலில் ஜெயிக்காவிட்டாலும், கலையிலாவது ஜெயித்துவிடுவோம். அவன் வாயால் 'அவள் என்னை வென்றுவிட்டாள். அவள் ஆடிய ஆட்டத்திற்கு நான் வாசிக்க முடியவில்லை' என்று வாழ்நாள் எல்லாம் எண்ணி வருந்தட்டும். இன்று ஆடப்போவதுதான் என்னுடைய கடைசி ஆட்டம். அவரை வென்ற பிறகு யாரிடம் போய் நல்ல பெயர் வாங்க வேண்டும்? யாருக்காக ஆடவேண்டும்? யாருக்காக வாழவேண்டும்? வெற்றி நமக்கு, தோல்வி அவருக்கு. அவர் அதை எண்ணி வருந்தட்டும்' என்று மோகனா ஆத்திரத்துடன் ஒரு முடிவுக்கு வந்தாள்.

அதற்குப் பின் அவள் அங்கு நிற்கவில்லை. அவன் அழகைப் பருகவில்லை. ஆனால், தலையைச் சாய்த்து நிமிர்ந்து ஒரு பார்வை அவனைப் பார்த்துவிட்டு, 'வா, பார்த்துக்கொள்கிறேன்' என்று சொல்லுவது போல், சரேலென்று வெளியே நடந்து சென்றாள்.

அவள் நடையில் அன்று அன்ன நடை பேசவில்லை. அரிமாவின் கம்பீரநடை பேசியது. சிங்கம் போல் நடந்து சென்றாள். அந்தச் சிங்கத்தின் பின்னே, குட்டி ஓடுவது போல அவளைப் பெற்ற தாயாகிய வடிவாம்பாள், மகளின் கூடவே நடந்தாள்.

பஞ்சாயத்து நடுவிலே, வடிவாம்பாளுக்கு ஒரு பெரிய மனக் கலக்கம் வந்துவிட்டது. அவள் மனம் கோவிலிலும் இல்லை, கூட்டத்திலும் இல்லை. அவள் வீட்டு அலமாரிக்குள் போய் ஒளிந்து கொண்டது. காரணம், அந்த அலமாரிக்குள்ளே இருந்த வைர அட்டிகைதான். விஷயம் இவ்வளவு தூரம் முற்றிவிட்டதே. இதைக் கண்ணால் பார்த்துக்கொண்டு உட்கார்ந்துகொண்டிருக்கும் மைனர் அதைத் திருப்பிக் கேட்பாரோ? 'எனக்கு எல்லாம் தெரிந்துவிட்டது. என் நகையை என்கிட்டே கொடு!' என்று கேட்டால் என்ன செய்வது என்று யோசித்தாள். உடனே, அவளுக்கு, 'பெரிய மனுஷத் தன்மை என்றால் என்ன, யார் யார் பெரிய மனுஷர்? இனாமாகக் கொடுத்த ஒரு பொருளைத் திருப்பிக் கேட்பவர்கள் பெரிய மனிதர்களா? மைனர் பெரிய பரம்பரையில் வந்தவராயிற்றே! இந்த அட்டிகையைத் திருப்பிக் கேட்பதன்மூலம் பரம்பரையாக வந்த பெரிய மனிதர்தன்மை, இந்த மைனரால் கெட்டுவிடக்கூடாதே! அதைக் கேட்காமல் இருப்பதுதான் அவர் நிலைமைக்குச் சரி. இதை யார் அவரிடம் எடுத்துச் சொல்லப்போகிறார்கள்?' என்றெல்லாம் பல கற்பனைகள் தோன்றின.

ஆனால், அந்த மைனருக்கு அதெல்லாம் தோன்றவில்லை. மோகனா ஓடிப் போய், சண்முகசுந்தரத்தின் காலில் விழுந்தாளே, அந்தக் காட்சிதான் அவர் கண்முன் இப்போது நின்றது. அவள்

சென்ற ஒலியில் மயங்கிக் கிடந்தார். சண்முகத்திடம் அவன் பேசியதை அவர் கவனிக்கவே இல்லை. 'அந்த மின்னல் கண்ணைப் பறிக்குதே' என்று மாத்திரம் அடிக்கடி தமக்குள் சொல்லிக்கொண்டார். ஆனால், மனத்தில் ஓர் ஆத்திரமும் வந்தது.

பக்கத்து வீட்டுக் குழந்தையும், நமது வீட்டுக் குழந்தையும் சண்டை போட்டுக்கொள்ளுகின்றன. உடனே நமக்கு என்ன தோன்றுகிறது? பக்கத்து வீட்டுக் குழந்தைதான் பொல்லாத குழந்தையென்று தோன்றும். இதே அன்புதான் அப்போது மைனரிடமும் விளையாடியது.

மோகனா ஓடிச் சென்ற அழகு, மைனரின் கண்ணில் பதிந்தது. ஆனால், அதே சமயம் சண்முகசுந்தரத்தின் காலில் அவள் விழுந்ததைப் பார்த்தபோது, அவருக்குச் சண்முகசுந்தரத்தின் மேல் தான் கோபம் வந்தது. வேறு ஒருவராக இருந்தால், 'சரி, அந்தப் பெண் நம்மை விரும்பவில்லை. நம் கண் முன்னாலேயே அவள், இன்னொருவன் காலில் போய் விழுகிறாள். ஆகவே, இனி நாம் அவளைப்பற்றி ஆசைப்படுவது முறையல்ல' என்ற முடிவுக்கு வந்திருப்பார்கள். இது விவேகம். ஆனால், மைனரை ஆட்கொண்டிருப்பதோ, வேகம்! வேகத்துக்கும் விவேகத்துக்கும் வித்தியாசம் அதிகம். காமம் கண்ணை மறைக்க ஆரம்பித்துவிட்டால், யோசிக்கும் சக்தியும் போய்விடும். அது என்ன, கண்ணுக்கு முன்னே படுதாவையா கட்டுகிறது? முதலில் கருத்தைத்தானே அது மறைக்கிறது!

'மோகனா நல்லவள்தான், அவளுக்கு என் மேல்தான் பிரியம். ஆனால், இந்தச் சண்முகசுந்தரந்தான் கெடுத்துவிட்டான்' என்ற கோபந்தான் மைனருக்கு வந்தது.

"என்ன வைத்தி, போவமா?" என்றார் மைனர்.

"அட, கோவம் ஒண்ணும் இல்லேங்காணும்" என்று புரியாமல் பதில் சொன்னார் வைத்தி.

"இது என்னாங்காணும் நாடகம்? இது போய் அவன் கால்லே விழுது. அவன் சாமிக்கண்ணு நாயனக்காரர் காலிலே விழுகிறான். சாமிக்கண்ணு தியாகராஜன் காலிலே விழுகிறார். உம், இதெல்லாம் என்ன?"

"நம்ம வேண்ணாப் போய் வடிவாம்பா காலிலே விழுவோம்."

"என்ன ! அவ அம்மா காலிலேயா?"

"சரி, பின்னே போய்ச் சாமி காலிலே விழுமே."

"ஏன், இனிமேல் வைத்தியை நம்பிப் பிரயோசனம் இல்லையோ?"

"இத்தனை நேரம் இங்கே வெடிச்ச வெடி எல்லாம் இந்த வைத்தி வைத்த ஒரு வத்தியாலேதானே! அது தெரியாது போல இருக்கு என் மேலே நம்பிக்கையில்லேன்னா போய்ச் சாமி காலிலே விழும்."



"என்ன சொல்லி விழறது? 'வைத்தியை நம்பினேன், பணத்தைச் செலவழிச்சேன். பொண்ணு கிடைக்கவில்லை' என்று சொல்லித் கும்பிடவா?"

"என்ன மைனர்வாள், அதுக்குள்ளே கலங்கிட்டீரே! கரும்பைக் கடிச்சுத் தின்னாத்தாங்காணும் ருசி! அதே மாதிரி காதலிலே கஷ்டப் பட்டாத்தான் ருசி!"

"இத்தனை நாள் கஷ்டப்பட்டது போதாதுன்னு சொல்றீர், இன்னும் கஷ்டப்படறேன் - ஆமா வைத்தி, என்னைக் கண்டா ஏன் அந்தப் பொண்ணுக்குப் பிடிக்கலே?"

"கொஞ்சம் கண்ணாடியிலே பார்த்துக்குமே!"

"ஏன்? நான் அவ்வளவு விகாரமாகவா இருக்கிறேன்?"

"உம்மை யாருங்காணும் விகாரம் என்று சொல்லுவான்? அழகு இல்லையா, பணமில்லையா, அந்தஸ்து இல்லையா? கண்ணாடியிலே பாரும் உம்ம அழகு தெரியும்! இனி இந்த மாதிரி எண்ணமே வராது" சிலேடையாகக் கூறினார் வைத்தி.

கண்ணாடியிலே வெள்ளி குறைந்தால், முகத்தைப் பூதம் போலவும், கோணல் போலவும் காட்டத் தொடங்கிவிடுகிறது. கையிலே வெள்ளி குறைந்தாலும் இதே கதிதான். முகத்தைக் கோண வைத்துவிடும். இது வெள்ளியின் மகத்துவம். மைனருக்கு வெள்ளியில் குறைவு இல்லை. "அந்த மோகனா தம்முடைய பணத்தை மதிக்க வில்லையே ! தம்முடைய அழகை மதிக்கவில்லையே, வாலிபத்தை மதிக்கவில்லையே ! தம்மை விட்டுவிட்டு அந்தச் சண்முகத்திடம் இவ்வளவு காதல் கொண்டிருக்கிறாளே ! இவளை என்ன செய்யலாம்?" என்ற குழப்பத்தில் அவர் முகம் கோணி நின்றார்.

ஆனால் வைத்தியின் மூளை வேறு விதமாக வேலை செய்தது. 'இவ்வளவு பாடுபட்டு, பஞ்சாயத்தைக் கூட்டியும், பஞ்சாயத்தார் சண்முகத்தை வாசிக்கும்படி சொல்லிவிட்டார்கள். ஆதலால் மோகனா விஷயம் சீக்கிரம் முடியாது. நமக்கும் இன்னும் பணம் கிடைக்க வேண்டிய அதிருஷ்டம் இருக்கிறது' என்ற சந்தோஷம் பிறந்தது. இருவரும் எழுந்து வெளியே நடந்தார்கள்.

வாசலுக்கு அருகில் வரும்போது, "கும்பிடறேனுங்க" என்று ஒரு குரல் கேட்டது. திரும்பினார்கள். அங்கே குப்புசாமி நின்றார்.

"என்னப்பா, என்ன விசேஷம்?" என்றார் வைத்தி கம்பீரமாக.

குப்புசாமி திகைத்து நின்றார். 'நம்மை அவ்வளவு அன்புடன் பேசி, பஞ்சாயத்துக்குத் தூண்டிவிட்ட வைத்திதானா இப்போது இப்படிக் கேட்பது?' என்று எண்ணினார்.

"அதான், விசேஷமெல்லாம் பாத்துக்கிட்டிருந்தீங்களே!"

"கூட்டத்தைக் கண்டதும் நீ ஏன் பயந்து உளறிட்டே?"

"பயந்தேனா ! இதுக்கு மேலே நான் என்னாங்க வாசிக்கிறது?"

"சொல்லிக் கொடுத்ததை வாசிச்சா போறாது. மனோதர்மம் வேணும். உன்னை நம்பி நான் இறங்கினேன் பாரு. சரி, சரி, போய் விட்டு வா."

"பணம் ______"

"எதுக்குப் பணம்? கொடுத்தது எல்லாம் போதாதா? ஜெயித்து இருந்தா இன்னும் கொடுக்கலாம்."

குப்புசாமியின் கண்கள் சிவந்தன. "ஜெயிப்பு தோற்பு எல்லாம் பேசாதீங்க. சொன்னா சொன்னபடி கொடுக்கிறீங்களா இல்லையா?"

"ஏய், குப்புசாமி! என்ன, என் மேலே பாயுறே?"

"அட, பாயுறது மட்டும் இல்லேய்யா, பணத்தைக் கொடுக்கலேன்னா, ஒரு தட்டுத் தட்டிடுவேன்" என்றார் குப்புசாமி.

மைனருக்கு வெலவெலத்தது.

"சரிதான், ஒரு நூறு ரூபாயைக் கொடுங்காணும்" என்றார்.

"அப்படிச் சொல்லுங்க எஜமான்" என்றான் குப்புசாமி.

வைத்தி ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினார்.

குப்புசாமி அதை வாங்கிக்கொண்டு நேரே புறப்பட்டார். வைத்தியும் மைனரும், யோசித்துக்கொண்டே சின்னச்சாமி கடைக்குச் சென்றார்கள்.

கோவிலுக்குள்ளே நடந்த பேச்சுகளுக்கு இடையே உச்சிக்கால மணியோசை "ஓம் ஓம்" என்று ஒலித்துக்கொண்டே இருந்தது. சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர் மகன் கீழே வைத்த எக்காளத்தை எடுத்து உயர்த்தி வாயில் வைத்து "பபம் பம்பம்! பம்பம் பாபம் போம்" என்று முழக்கினான் சார்வையுடன்.

இந்த எக்காள ஓசையில் கூட்டம் முழுவதும் எழுந்தது. அன்று வேடிக்கை பார்க்க வந்தவர்கள் பலரும் சாமி தரிசனத்துக்கு உள்ளே நுழைந்தனர். நிஜ பக்தர் பலரும் நிறைசெல்வத் திருவாரூர் நிமலனைக் கண்குளிரக் காண உட்புகுந்தனர். சண்முகமும் பயபக்தியுடன் சாமி கும்பிட உள்ளே நுழைந்தான்.

ஒவ்வொரு சந்நிதியாகத் தரிசித்துக் கொண்டே வந்தான். கடைசியில் கமலாம்பிகை சந்நிதியின் அருகில் வரும்போது ஏதோ ஒரு தேவகானத்தைக் கேட்டுச் சண்முகம் திகைத்தான், மெய்ம்மறந்தான். அவன் காதிலே கல்யாணி ராகம் அமிருத தாரையாகப் பாய்ந்தது. அதைக் கேட்ட கூட்டம் முழுவதும் யார் பாடுகிறார்கள், எங்கிருந்து பாடுகிறார்கள் என்பது தெரியாமல் இங்கும் அங்கும் பார்த்தனர். பாடுபவரின் சாரீரத்தில் இருந்த ஜீவன் எங்குமே நாதமயமாக நிரம்பியது. அது ஆண் குரலா பெண் குரலா? ஆண் குரலுக்குரிய கரடுமுரடு அதில் இல்லை. பெண் குரலுக்குரிய சன்னமும் அதில் இல்லை. தம்புரா சுருதிபோல் இரண்டும் கலந்து இருந்தது. அந்தக் குரலில் இருந்து ஒவ்வொரு ஸ்வரமும் எழும்போது



அங்கிருந்த ஒவ்வொரு கல் தூணும் "ஓம் ஓம் ஓம்" என்று எதிரொலித்தது.

கூட்டத்தாரின் உள்ளங்கள் விம்மின. நெஞ்சம் நிறைந்து தேன் குடித்தது போல் ஒரு மயக்கம் உண்டாயிற்று. எல்லோரும் வினயத்துடன் அந்தக் குரல் வந்த திசையை நோக்கிச் சென்றனர்.

அங்கே கமலாம்பிகை இடக்காலை வலக்கால்மேல் போட்டுத் தவம் செய்யும் திருக்கோலத்தில் அமர்ந்துகொண்டிருந்தாள். அவள் எதிரில், இரு கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் ஆறாய்ப் பெருகி ஓட, கைகளை உயரத் தூக்கியபடி, பகீரதன் தவத் திருக்கோலம் போல் நின்றவண்ணம் "கமலாம் பாம்பஜரே" என்று பாடிக்கொண்டே தம்மை மறந்து ஸங்கீத யோகத்தில் லயித்து நின்றார் வணக்கத்துக்குரிய பரமானந்தப் பரதேசியார்.

சண்முகசுந்தரத்துக்கு அவரைப் பார்த்தவுடன் தெய்வத்தை நேரில் பார்த்தது போல் இருந்தது. சாதாரணப் பாட்டுக்கும், பக்தியோடு கலந்து அவர் பாடும் பாட்டுக்கும் மண்ணுக்கும் விண்ணுக்கும் உள்ள வித்தியாசம் இருந்தது. சண்முகம் மெய்ம்மறந்தான். கை கூப்பினான். பரதேசியாரைப் பார்த்தான். கூட்டமும் அவ்வாறே பார்த்துக் கொண்டு நின்றது.

பரதேசியார் பாடி முடித்ததும் கண் விழித்தார். எதிரில் நின்ற கூட்டத்தைப் பார்த்தார். அவருடைய அருள் நோக்குத் தங்கள்மீது விழுந்தவுடனே அங்கிருந்த கூட்டத்தார் அனைவருடைய கைகளும் தானாகவே மேலே எழுந்தன.

"என்னை ஏன் கும்பிடுகிறீர்கள்? அதோ, அன்னை இருக்கிறாள். அவளைக் கும்பிடுங்கள்! என்ன, சண்முகம் சுகமா?" என்றார் பரதேசியார்.

"சாமி!"

"என்ன, பஞ்சாயத்தெல்லாம் முடிஞ்சதா?"

"முடிஞ்சது."

"பணக்காரருக்கல்லவா பஞ்சாயத்துகள் வரும்? பாடுகிறவர்களுக்கு ஏனப்பா பஞ்சாயத்து? ஆமா, பாடுகிறவர்கள் எல்லாம் பஞ்சாயத்துக்குப் போயிட்டால் பரதேசிதானே பாடணும்?"

சண்முகம் குறிப்பை உணர்ந்தான். பதில் சொல்லாமல் நின்றான்.

"பங்குனித் திருநாளுக்கு நானும் வருவேன். நல்லா ஊதணும். ஆடலும், பாடலும் கூடும் நாள் அல்லவா அது! அழகர் கோவில்லே கேட்டது உன் வாசிப்பு - அன்றைக்கும் அதிர் வேட்டுக் கெடுத்து விட்டது" என்று சிரித்துக்கொண்டே கூறினார் பரதேசியார்.

சண்முகத்துக்குச் சிறிது நிம்மதி வந்தது. "சாமி, சிக்கலுக்கு ஒரு வாட்டி வரணும்னு..."

"ஆமாம், ஆண்டவன் கூடக் கூப்பிட்டான். இவனுக்குக் கொடுத்து வைக்கவில்லை. இப்ப நாகப்பட்டினம் பக்கந்தான் போகப் போகிறேன்."

இந்தச் சமயத்தில் நாமம் தரித்துக்கொண்டு தொந்தியும் தொப்பையுமாக ஒருவர் கூட்டத்தை விலக்கிக்கொண்டு உள்ளே நுழைந்தார். பரதேசியாரின் அருகில் வந்து காதோடு ஏதோ சொன்னார். இதைக் கேட்ட பரதேசியார், "சரி தம்பி சண்முகம், நான் சிக்கலுக்கு வருவேன். அங்கு உன்னைப் பார்க்கிறேன். இந்தச் சிஷ்யன் என்னை விட்டால் போதும். அப்புறம் என் இஷ்டந்தான்"

"சிஷ்யனா, இவர்கள் யாரு?" என்றான் சண்முகம்.

"'எனக்கே நான் யார்' என்பது தெரியவில்லையே ! அதைப்பத்தி இவரா கவலைப்படப் போகிறார்? ஒரு நல்ல காரியமாக என்னிடம் வந்தார். நானும் சரின்னுட்டேன். நாளை நாளன்னிக்கு அவர் வேலை முடிஞ்சிடும். அப்புறம் பண்டாரத்தை இஷ்டம் போல விட்டுடுவார். நான் அப்போது வந்து சிக்கல் பண்டாரத்தைத் தரிசனம் செய்கிறேன்" என்றார் பரதேசி.

அப்போது இருவர் உள்ளே நுழைந்தனர். அந்த வைணவச் சீடரிடம் ஏதோ பேசினார்கள். அவர் பரதேசியார் காதில் ஏதோ உரைத்தார். இதைக்கேட்ட பரதேசியார் "ஓஹோ ! அப்படியா?" என்றார் "சரி புறப்படுவோம்" என்று அவர் சொல்லவே இருவரும் புறப்பட்டனர். கூட்டம் விலகி வழிவிட்டது.

அந்த நால்வரும் கூட்டத்தைத் தாண்டிச் சென்றனர். சண்முகம் "இது என்ன மர்மம் ! இந்த நாமக்காரர் யார்?" என்று திகைத்தான்.

✦ ✦ ✦

கோயிலில் இருந்து வீட்டுக்குச் சென்ற வடிவாம்பாளுக்கு அங்கு பரபரப்பான செய்தி ஒன்று காத்திருந்தது.

வடிவாம்பாள் உள்ளே நுழைந்த சமயம் கூடத்தில் முத்துக்குமர நட்டுவனார் குறுக்கும் நெடுக்கும் உலாவிக்கொண்டிருந்தார். வடிவாம்பாளைக் கண்டவுடன் வருத்தத்துடன் அவள் முகத்தைப் பார்த்தார்.

"என்ன முத்துக்குமரு, ஏன் பஞ்சாயத்துக்கு வரல்லை? அங்கே நம்ம பொண்ணு நாடகம் போட்டுச்சு. நீ சொல்லிக் கொடுக்காத ஆட்டமெல்லாம் அது ஆடிச்சு. அட, நம்ம பொண்ணுதானா இதுன்னுகூடத் தோணிட்டுது" என்று சலித்துக்கொண்டாள் வடிவாம்பாள். பாவம், முத்துக்குமர நட்டுவனார் காதில் இது விழவில்லை.

"அதெல்லாம் இருக்கட்டுங்க அம்மா! நான் நாளைக்கு ஊருக்குப் போயிட்டு—உம்—"

"ஏம்பா?"

"நமக்கில்லே அவமானம் வந்துட்டுது !"

"ஆமா, நீதானே குரு? உன்னைக் கேக்காமே அது இந்த மாதிரியெல்லாம் செய்தா உனக்குக் கோபம் வரத்தான் வரும்."



"குருவும் இல்லே, சுக்கிரனும் இல்லே அம்மா. நான் அதைப் பத்திச் சொல்லல்லே. நானுந்தான் இந்த ஊருக்கு வந்து பத்து வருஷமாச்சே, ஏதாவது தப்புத் தண்டாவுக்குப் போயிருக்கேனா !"

"ஏன் அப்பா? நான் அப்படி ஒண்ணும் சொல்லல்லியே !"

"நீங்க இல்லிங்க. என் வீட்டு வாசல்லே போலீஸ் வந்து நின்னா எப்படி இருக்கும்."

"பெரிய மனுஷன் வீடாட்டம் இருக்கும்" என்று சொல்லிக் கொண்டே நுழைந்தான் வரதன்.

"அட, நீ சும்மா இரு வரதா. உனக்கு என்ன குடும்பமா, குழந்தை குட்டியா, மானாவமானம் பார்க்க!" என்றார் நட்டுவனார்.

அவர் கோபமாக இருக்கிறார் என்பதை அறிந்த வரதன் தன் குணத்தை அடக்கிக்கொண்டான்.

"என்ன முத்துக்குமரு, ரொம்ப கோவமா இருக்கே?" என்றாள் வடிவாம்பாள்.

"கோவமில்லை அம்மா. நான் பூசை பண்ணிக்கிட்டிருந்தேன், வாசல்லே போலீஸ்காரர் வந்து தேடறாங்கன்னு சொன்னாங்க; நடுங்கிட்டேன். பயந்துக்கிட்டே வந்தேன். பார்த்தா நாலு பேர் கூடி நிற்குது. எனக்கு வெளியே தலைகாட்ட வெட்கமா போச்சு."

"ஏன், என்ன செய்தியாம்? நீ ஒரு வம்புக்கும் போகமாட்டியே!"

"இல்லையம்மா. ஒரு நாமக்காரரும், கூட ரெண்டு போலீஸ்காரர்களும் நின்னாங்க. அழகர் கோவில்லே என்ன நடந்தது. உங்களை யாரு காப்பாத்தினாங்கன்னு எல்லாம் கேட்டாங்க. நான் உண்மையைச் சொன்னேன். பிறகு "உன்னைத் தூணிலே கட்டி வச்சாங்களா? நீ போட்டுக்கிட்டு இருந்தது எத்தனை பவுன் சங்கிலி,ன்னு எல்லாம் அனாவசியமாகக் கேட்டாங்க. நான் 'கில்ட்டுச் சங்கிலி'ன்னு சொன்னேன். கூட்டமெல்லாம் ஓ'ன்னு சிரிச்சது."

"இது ஒரு அவமானமா முத்துக்குமரு? தங்கத்திலே வாங்கிப் போட்டுக்கிட்டா போச்சு. அப்புறம்?"

"அந்த நாகலிங்கம் மூக்குத்தியைப்பத்தி உனக்குத் தெரியுமான்னு கேட்டாங்க."

வடிவாம்பாள் பயந்தாள்.

"நீ என் பேரை ஏதாவது சொல்லிட்டியோ?"

"நான் நடந்ததைச் சொன்னேன். 'அவர் கொண்டாந்து அம்மா கிட்டே கொடுத்தாரு. அம்மா வாங்கி வச்சுக்கிட்டுது. ஆனால் மோகனா அதை எடுத்து நாகலிங்கம் முகத்தில் விட்டெறிஞ்சுட்டுது'ன்னு சொன்னேன்."

"அப்புறம்?"

"அப்புறம் என்ன, அவுங்கபாட்டிலே போயிட்டாங்க."

"இவ்வளவுதானே ! இதிலென்ன அவமானம்?"

"இல்லையம்மா, ஊர் சிரிச்சிடுச்சு. இனிமே ஒண்ணுக்குப் பத்தா பேசுவாங்க."

"சரிதான் தம்பி, சொன்னா சொல்லிட்டுப் போறாங்க எனக்கு இதெல்லாம் கேட்டா கவலையா இருக்குது. எல்லாம் இந்தப் பொண்ணாலே வந்த வினை. மூக்குத்தியை அந்த ஆறு முகத்திலே வீசி எறிஞ்சு அவன் கையிலே அந்தப் பாடுபட்டோம். சிக்கலான் கிட்ட துடுக்காப் பேசி, அது பஞ்சாயத்து வரைக்கும் வந்துவிட்டது. இனி என்ன வருமோ?"

"போட்டி வருமில்லே?" என்றார் முத்துக்குமரு.

"வராம விடுவானா? அதுதான் பங்குனி உத்திரத் திருவிழாவிலே ஆடணும்னு சொல்லி உத்தரவு போட்டுட்டாங்களே கோயிலார்."

இதைக் கேட்டதும் நட்டுவனார் மோகனாவைக் கோபிப்பார் என்று எதிர்பார்த்தாள் வடிவாம்பாள். ஆனால் அந்தக் குருநாதருக்குக் கலைப்போட்டி என்றதும், தனக்கு வந்த அவமானம் பெரிதாகத் தோன்றவில்லை.

"அப்படின்னா ஒண்ணும் கவலைப்படாதீங்க, நடத்தி வச்சுடுவோம்!" என்றார்.

"என்னத்தை, கலியாணத்தையா?" என்றாள் கோபமுடன்.

"ஆமா, அது கல்யாணம் மாதிரிதான் இருக்கும். என் சிஷ்யப் பொண்ணை ஒருத்தன் ஜெயிச்சுட முடியுமா அம்மா? இனிமே, தினசரி ஒத்திகைதான்" என்று நடந்தார் முத்துக்குமர நட்டுவனார். ஊருக்குப் போகிறேன் என்று வந்தவரை உல்லாசத்துடன் வீடு திரும்பச் செய்தது கலை.

ஆனால், அழகர் கோயில் விஷயம் போலீசார்வரை போய் விட்டதே என்ற எண்ணத்தில், வடிவாம்பாளைப் பிடித்தது கவலை.

ஐம்பதாம் அத்தியாயம்

## "கடலைக் குழப்பிய கருநாகம்"



"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்று ஒரு பழமொழி தமிழில் உண்டு. 'எல்லா ஊரும் எங்கள் ஊர், எல்லா மக்களும் எங்களுக்கு உறவினர்' என்ற தமிழர் பண்பாட்டை எடுத்துக் காட்டுவது இது. இப்படி வாழ எல்லோருக்கும் முடிவது இல்லை. ஆனால், இன்றும் இதைக் கடைப்பிடித்து வாழ்பவர்கள் நம் நாட்டில் உள்ள கலைஞர்கள்தான்.



கலைஞனுக்குத் தன் ஊர் வேற்று ஊர் என்பது இல்லை. எந்த ஊருக்குப் போனாலும், அந்த ஊர் அவனுக்குச் சொந்தமாகிவிடும். இதே நிலை நாகபட்டினத்தில் ரமாமணிக்கும் ஏற்பட்டது.

சென்ற ஒரு மாத காலமாக, மக்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுத்து வந்த அந்த சர்க்கஸ் கம்பெனி மலாய் நாட்டுக்குப் போகிறது என்றவுடனே, அந்த ஊர் மக்கள் பலருக்கும் பிரிய முடியாத வருத்தம் உண்டாயிற்று. ஊர் வெறிச்சென்று இருக்குமே என்று வருந்தினார்கள். முதல்நாள் இரவு நெடுநேரம் வரையில், அவுரித் திடலில் நாகபட்டினம் மக்கள் கூட்டம் இருந்துகொண்டே இருந்தது. ரமாபாய் ஒவ்வொருவரிடமும், "அச்சாபாய்! அச்சாபாய்! ராம் ராம்!" என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டாள்.

அக்காலத்தில், வெளி நாடுகளுக்குக் கப்பலில் பிரயாணம் செய்வது என்றால், ரொம்பத் தொல்லை. கப்பலுக்குள்ளே போதிய அளவு சாப்பாட்டு வசதிகூடக் கிடையாது. அதனால் கப்பலுக்குப் புறப்படப் பத்து நாளைக்கு முன்பே, கப்பலுக்கு வேண்டிய ரொட்டிப் பெட்டி முதலிய சாமான்களைச் சேகரிக்க ஆரம்பித்துவிடுவார்கள். ஒருவர் நாலு எலுமிச்சம்பழம் வாங்கி வைத்துக்கொள்ளுவார். அவருக்குக் கடல் தண்ணீரைப் பார்த்தாலே மயக்கம் வரும். கப்பலில் ஏறி, உட்கார்ந்துவிட்டாலோ கேட்கவே வேண்டாம். முதல் நாள் தலையில் வைத்த கையைச் சிங்கப்பூர் போய்தான் எடுப்பார். குமட்டிக்கொண்டே இருப்பார்.

யானையை மேலே ஏற்றிக்கொண்டாரே நமது பயில்வான் அவர் அன்றைக்கு முழுவதும், எலுமிச்சம்பழத்தைத் தேடி நாகை முழுவதும் அலைந்தார். இன்னொரு பயில்வான், கப்பல் சாப்பாடு நன்றாக இருக்காதே என்ன செய்வது என்று யோசித்துப் புளியஞ்சாதமும் தயிர்ச்சாதமும் பத்துப் பேருக்குக் காணக்கூடிய அளவுக்கு வாங்கிக் கட்டி வைத்துக்கொண்டார். பாவம், அவருக்குக் கப்பலில் புறப்பட்ட அடுத்த நாளே உப்புத் தண்ணீர் வாடையில் அந்தச் சோறு கெட்டுவிடும் என்பது தெரியாது. இன்னொருவர் தம் நண்பரிடம் பழைய சீட்டுக் கட்டுகளை வாங்கி வைத்துக்கொண்டார். வேறொருவர் வெற்றிலை, பாக்கு, புகையிலை எல்லாம் சேகரித்துக் கொண்டார்.

ரமாமணியோ, தான் பிறந்தது முதல், தன்னை இட்டுச் செல்லும் வாழ்க்கை என்ற கப்பல், இன்று மலாய் நாட்டுப்பக்கம் ஓடுகிறது என்று, விதியை நொந்துகொண்டே புறப்படத் தயாரானாள். பாய்மரத்திலே உட்கார்ந்த காக்கை போல்தானே அவள் வாழ்வும்!

விடியற்காலம், மூன்று மணிக்கே எல்லோரும் கடற்கரை வந்து சேர்ந்தார்கள். மதராஸ் போன்ற துறைமுகங்களில் கரையிலிருந்தே கப்பலில் ஏறலாம். இதுகூடச் சுமார் இருநூறு வருஷங்களுக்குள் ஏற்பட்டதுதான். அதற்கு முன்பு எங்கும் படகில் போய்த்தான்

கப்பலை அடைய வேண்டிய நிலைமை இருந்து வந்தது. சில சமயங்களில், படகுக்காரர்கள் கப்பலுக்கு ஏற்பட்ட சார்ஜ்ஜைவிட அதிகம் கேட்பார்கள். நாகபட்டினத்தில் கரையிலிருந்து நான்கு மைல் படகில் சென்றுதான் கப்பலில் ஏற முடியும். ஆகவே, கப்பலுக்குப் போவது என்பது லேசான காரியம் அல்ல. எல்லோரும் 'ரேவு துறைக்கு வந்து சேர்ந்தார்கள்.

அன்று காற்று அதிகம். இரவு முதலே, மரங்கள் கொம்பு சுற்ற ஆரம்பித்தன. ரமாமணியின் மனத்தில் என்னென்னவோ போராட்டங்கள். 'நாம் ஏன் இன்னும் மாறு வேஷத்தில் அலைய வேண்டும்? வாழ்க்கை அவ்வளவு இனிப்பானதா? இந்தக் காற்றில், கப்பலில் ஏறி, ஆடி, விழுந்து, அலைபட்டுக்கொண்டு, அக்கரைச் சீமைக்குப் போயாவது உயிர் வாழ்வது அவசியமா? ஏன் இப்பொழுதே பிரயாணத்தை நிறுத்திவிடக்கூடாது' என்று அவள் யோசித்தாள்.

நாகலிங்கத்தின் நட்புக்குப் பாத்திரமானாள் என்ற ஒரு குற்றத்தைத் தவிர, அவள் வேறு ஒரு குற்றத்தையும் செய்தவள் அல்ல. அவள் நல்லவள்தான். அழகர் கோவிலில் அந்த நாகலிங்கம், தன் காலை ஒடித்துவிடுவேன் என்று சொன்னதும், மோகனாவுக்காக அவன் பரிந்து பேசியதும், அதனால் அவளுக்கு மோகனாவின் மேல் ஏற்பட்ட ஆத்திரமும், நாகலிங்கம் அவளை அடையக்கூடாதென்று வந்த கோபமும், அந்தக் கோபத்தில் மோகனாவுக்கு உதவி செய்யப் போக, இப்பொழுது அந்த ஆத்திரமே அன்பாக மாறியதையும் எண்ணி எண்ணி அவள் மனமும் ஒரு படகு போல் தத்தளித்தது.

தான் மோகனாவிடம் கொண்ட அன்பு, பொறாமையில் பிறந்ததா, கருணையில் பிறந்ததா என்று அவளால் நிச்சயம் செய்ய முடியவில்லை. கொம்பில் இருந்தாலும், குப்பையில் கிடந்தாலும் குண்டுமணி குண்டுமணிதானே?

நான்கு படகுகள் அவளுக்காகக் காத்திருந்தன. ரமாமணியும், அவள் கூட இரண்டு பேரும் ஒரு படகில் அமர்ந்தார்கள். மற்ற மூன்று படகுகளில் அவர்களுடைய ஆட்கள் அமர்ந்தார்கள். அந்த இருளில் படகுகள் கடலில் புறப்பட்டன.

✣ ✣ ✣

நல்ல இருட்டு. இராத்திரி வேளை. கடலுக்கு ஒரே ஆனந்தம். கடலில் இருந்து கரையை நோக்கிப் பெரும் அலைகள் பூமியை அடிக்க வருவது போல் எழுந்து வந்தன. 'ஏ மனிதா! உன் ஆதிக்கத்தைத் தரையோடு வைத்துக்கொள், என்னிடம் காட்டாதே' என்று கடல் அரசி தன் கையாலே பிடித்து வெளியே தள்ளுவதுபோல, உள்ள போகும் படகுகளை அந்த அலைகள் ஓங்கி அடித்து வெளியே தள்ளின. 'நீ தரையை எடுத்துக்கொண்டாய். அதன் மேல் ஏற்றத்தையும், தாழ்வையும் உண்டாக்கினாய். நான் அப்படி



அல்ல. என்றும் சமமான தளத்திலே நிற்கக்கூடியவள்' என்று சொல்வது போல கடல் இரைச்சல் இட்டது.

நாலு படகுகள் சேர்ந்து போய்க்கொண்டிருந்தன. அவற்றுள் நடுப்படகு ரமாபாயின் படகு. "பிரிந்து போ, பிரிந்து போ" என்று சொல்வது போல், அலைகள் படகுகளை ஓங்கி அடித்துப் பிரித்துவிட்டன.

கடலரசி பொல்லாதவள்! தப்பித் தவறி ஒரு மனிதன் கடலில் இறங்கிவிட்டால், அவனை இழுத்து அலைகளால் அடித்து, புரட்டி, உருட்டித் திக்குமுக்காடச் செய்து கடைசியில் கரையிலே கொண்டு வந்து ஒதுக்கித் தள்ளிவிடுவாள். 'போ, அதுதான் உன் வீடு, என்னிடம் வராதே!' என்று சொல்ல அவள் தயங்கியதே இல்லை.

இன்றைக்கு இந்தப் படகுகளையும் அப்படித்தான் ஆட்டி அலைக்கழித்தாள். ரமாமணிக்குக் கப்பலுக்குப் போய்ச் சேர்ந்தால் போதும் என்று ஆகிவிட்டது. படகு கவிழ்ந்துவிடுமோ என்று தத்தளித்தாள். அப்படியிருக்கும் போது, அந்தப் படகை நோக்கி இன்னொரு படகு வேகமாக வந்தது. அந்தப் படகில் இருந்தவர்கள் கையிலே இரண்டு தீப்பந்தங்கள் இருந்தன.

தரையிலே பாம்பு உண்டு, கள்வர் உண்டு, கரடி, புலி உண்டு, கப்பி ரோடும் உண்டு, பயத்தை எடுத்துக் காட்டுவது போல, தீப்பந்தங்களைப் பிடித்துக்கொண்டே மக்கள் நடப்பதும் உண்டு. கடலுக்குள்ளே பந்தம் எதற்கு? வழி இருந்தால் அல்லவா விளக்கு வேண்டும்? அப்படி இருந்தும் அந்தப் படகுக்காரர்கள் பந்தங்களோடு வந்தார்கள். அவர்களைப் பார்த்துச் சுங்க அதிகாரிகளோ என்று எண்ணினாள் ரமாமணி.

அதற்குள் படகு அருகிலே வந்துவிட்டது. அதிலிருந்து நாலு பேர்கள் ரமாமணியின் படகுக்குள்ளே குதித்தார்கள். பந்தத்தை அவள் முகத்துக்கு நேரே நீட்டிக் காட்டினான் ஒருவன். ரமாமணியின் முகத்தில் பாதி வெளிச்சம் அடித்தது. "இதோ இருக்கிறாள்" என்றான். ஆனால், அதே வெளிச்சம் அவனையும் காட்டிக்கொடுத்தது. அவன் வேறு யாரும் இல்லை, சொக்கனேதான்.

"இதோ இருக்கிறாள்!" என்ற வார்த்தைக்கு மேலே, "என்ன புள்ளே, எனக்கா டிமிக்கி கொடுத்துட்டு ஓடப்பார்த்தே? இந்தப் பாம்பு தரையிலும் துரத்தும், தண்ணியிலும் கடிக்கும்!" என்று சீறினார் நாகலிங்கம். திடீர் என்று நாகலிங்கத்தைக் கண்டதும் ரமாமணிக்கு வியர்த்தது. "தும் தும் தும் —" என்றாள். ஆனால், அந்தச் சமயத்தில் இந்தி பேச வரவில்லை.

"என்னடி தும்முறே? எது, கன்னப்பார்ட்டு போடறியா? என் வீட்டைக் கொளுத்தி, என் கையிலே பிடித்த கிளியைப் பறக்கவிட்டு என்னை ஊரிலே தலை காட்டாமே பண்ணினே, இல்லை? உன்னைச்

சாய்க்காமே விடறேனா பாரு!" என்று அவள் முக்காட்டைச் சரேல் என்று இழுத்தார் நாகலிங்கம்.

பூனை நாயைத் திரும்பி அடிப்பது போல் ரமாமணிக்கும் கடைசித் தைரியம் பிறந்தது.

"என்ன? ...என்ன செய்துவிடுவே? நீ செஞ்ச அக்கிரமத்துக்கு நானும் பதிலுக்குச் செய்தேன். என்னை நடு வீதியிலே திண்டாட விட்டாய்! இன்னொரு பெண்ணைத் திரும்பிப் பார்த்தாய். அதற்கு வஞ்சம் தீர்த்தேன், போ !" என்றாள் ரமாமணி.

"எங்கேடி போறது உன்னை உசிரோடு விட்டுட்டுப் போவேனா? என்ன செய்கிறேன் பாரு" என்று இடுப்பில் இருந்த கத்தியை ஓங்கிக்கொண்டே அவள் அருகில் நெருங்கினார் நாகலிங்கம்.

"இந்தா, என்னைத் தொடாதே!"

"உன்னை யாரு புள்ளே தொட வரா? ஒரே குத்து, சாய்ச்சிடுவேன் ! அந்தப் பரதேசிப் பயல் கிட்டே போய்ச் சொல்லி, அவன் போய் அந்தப் பொண்ணை நந்தவனத் தோட்டத்திலே இருந்து காப்பாத்திக்கிட்டுப் போய்விட்டான். நீ ஒண்ணும் தெரியாதவள் போல என் கிட்டே வந்து பேசினே. இல்லே? என் வீட்டுக்கு நெருப்பை வச்சேல்லே? உன்னைக் கத்தியாலே கொண்ணு கடலிலே தள்ளிவிட்டு இப்பவே திருவாரூருக்குப் போய், நீ பறக்க விட்ட கிளியைத் திரும்பிப் பிடிக்காம விடமாட்டேன்? இந்த நாகலிங்கம் என்ன அந்த மோகனாவை விட்டுவிடுவான்னு பாத்தியா?"

"சீ, பாவி! ஏன் அவள் பெயரை உன் வாயால் சொல்லுகிறாய்?— உன் நாக்கு அழுகிப்போகும்."

"என் நாக்கு அழுகிப்போகாது, உன் பொணந்தான் அழுகிப் போகும்." என்று சொல்லிக்கொண்டே கத்தியை ஓங்கி ரமாமணியின் நெஞ்சில் குத்தப்போனார் நாகலிங்கம்.

அப்பொழுது 'டுமீல்' என்ற சத்தம் கேட்டது. ஒரு துப்பாக்கி ரவை அவன் கையில் வந்து பாய்ந்தது. கையிலிருந்த கத்தி படகில் விழுந்தது. "ஐயோ" என்று அலறினார் நாகலிங்கம்.

"என்ன நல்லூர்ப் பிள்ளை, சௌக்கியமா?" என்று ஒரு குரல் கேட்டது. பக்கத்தில் ஒரு சிறு படகில் கையில் துப்பாக்கியுடன் நின்றார், நாம் திருவாரூரில் பரமானந்தப் பரதேசியார் அருகில் கண்ட நாமக்காரர். அவர் வேறு யாருமல்ல. ஸ்ரீமான் பழம்புலி ஏட்டு கன்னையா நாயுடுவேதான்.

இந்தக் குண்டுச் சத்தத்தைக் கேட்டவுடனே, இரண்டு படகுகள் அங்கு விரைந்து வந்தன. அந்தப் படகுகளிலிருந்து பத்துப் போலீஸ்காரர்கள் தொப் தொப்பென்று குதித்தார்கள். கன்னையா நாயுடுவும் கூடவே குதித்தார்.

"எம்மா, சோளப்பொரி வாசனை ஜமாய்ச்சுதே, வீட்டுக்கு நெருப்பு வச்சது சரி ஆனா சோளமுட்டைக்கு வைக்கலாமா? அது தின்கற பண்டமில்லே?"



"ஏய் ஏட்டு! உன்னை விட்டேனா பாரு? இந்த நாகலிங்கத்தை உள்ளே தள்ளவா பாக்கறே?"

"சே, சே, என்னாங்க பிள்ளை அப்படிச் சொல்றீங்க? உங்க மூக்குத்தியைத் திருப்பி வாங்க வேண்டாம்? பொய்க்கேசு குடுத்தீங்களே !"

"மூக்குத்தி போனாப் போகுது. அந்த மோகனாவை உன் கண் காண அடையாமல் விடமாட்டேன்!" என்று கூறிக்கொண்டே கடலில் தாவப் போனார் நாகலிங்கம். ஏட்டு கன்னையா நாயுடுவின் இரும்புப்பிடி அவர் கழுத்தைப் பிடித்தது.

"வா, உங்க மாமன் வீட்டுக்கு. ஏய்! இவர்களை எல்லோரையும் கைது செய்யுங்கள். நாகலிங்கம் பிள்ளை, மோகனாம்பாளைச் சிறை எடுத்தது முதல் குற்றம்; ரமாமணியைக் கொலை செய்ய முயன்றது இரண்டாவது குற்றம். இரண்டுக்குமாக நீ கைது செய்யப்பட்டு இருக்கிறாய். ஜில் ஜில் ரமாமணியாய் ! நாலிங்கம் வீட்டில் நெருப்பு வைச்சதுக்காக உன்னைக் கைது பண்ணலி இருக்கிறது. படகைத் திருப்புங்கள் !" என்று உத்தரவு இட்டார் ஏட்டு கான்ஸ்டேபின் கன்னையா நாயுடு.

"உனக்குக் கைதுபண்ண அதிகாரம் கிடையாது. இது அழகர் கோவில் அல்ல. நாகபட்டினம் கடல். இங்கே கைது பண்ணத் தரைப் போலீஸ்காரர்களுக்கே அதிகாரம் கிடையாது" என்றார் நாகலிங்கம்.

"படகுக்கார எஜமான் பதில் சொல்லுங்கள்" என்றார் கன்னையா நாயுடு.

அதுவரை ரமாமணியின் படகை ஓட்டி வந்த படகுக்காரர் "நாகலிங்கம் பிள்ளை ! நான்தான் துறைமுக இன்ஸ்பெக்டர். என் உத்தரவின் பேரில்தான் அவர் உங்களைக் கைது செய்திருக்கிறார்" என்றார்.

ஐம்பத்து ஒன்றாம் அத்தியாயம்

## மானமும் வெட்கமும் ஈனருக்கேது?



பெட்டைக் கோழியும் குஞ்சுகளும் குப்பை மேட்டுக்குப் பக்கத்தில் உலாவிக் கொண்டிருக்கும். கோழி முன்னால் நடக்கும்; குஞ்சுகள், பின்னே தத்தித் தத்திக்கொண்டே ஓடும். அப்பொழுது தரையிலே பருந்தின் நிழல் தெரியும். நிழலைக் கண்டவுடனே அவ்வளவு குஞ்சுகளையும் தன் இறகத்தில் பொத்திக்கொள்ளும் கோழி. இது அன்பு உணர்ச்சி. குஞ்சுகளுள் ஏதேனும் ஒன்று

சிறகுக்குள் வரத் தெரியாமல் தடுமாறினால், அந்தக் கோழிக்குஞ்சைப் பருந்து அமுக்கிக் காலால் கவ்விக்கொண்டு போய்விடும். அந்தப் பருந்துக்கு ஏற்படுவது வெற்றி உணர்ச்சி. இந்த உணர்ச்சிதான் ஹெட்கான்ஸ்டபிள் கன்னையா நாயுடுவின் பேச்சில் இப்போது தொனித்தது.

"சாமி, கோழிக்குஞ்சை அமுக்குகிற மாதிரி அமுக்கிப் பிட்டேனுங்க. ஒரு விநாடி பிந்திப் போச்சுன்னா ஆளு கொலையே பண்ணியிருப்பான்" என்று சொன்னார்.

"என்ன அப்பனே! இப்பொழுது கொலை பண்ணவில்லையே என்று உனக்கு வருத்தமா?" என்று கேட்டார் பரமானந்தப் பரதேசியார்.

"அப்படியா சொல்றேன்? கொலைக் கேசுன்னா பெரிய கேசல்லோ! அதைப் புடிச்சா பிரமோசன் நிச்சயமாச்சே!"

"ஒரு உயிரைக் காப்பாற்றுவதில் கிடைக்கும் சந்தோஷம் ஒரு கொலைக் கேஸைப் பிடிப்பதில் கிடையாது அப்பனே! நீ இதற்கே சந்தோஷப்படு!"

"ஆஹா! சந்தோஷந்தான். அதிலேயும் சாமி உதவி செய்ததாலே தானே என்னாலே பிடிக்க முடிந்தது!"

"கன்னையா நாயுடு, என்னைப் புகழாதே! உன்னிடம் எனக்கு ஒரு விண்ணப்பம் இருக்கிறது."

"என்ன சாமி, இப்படிச் சொல்லுது? என்ன செய்யணும்னு உத்தரவு போட்டா செய்யறேன். என் வார்த்தையைக் கேட்டு, கூடவே வந்து, நீங்கள் அடையாளம் காமிக்காட்டி இந்த ரமாமணியை நான் கண்டேனா, அவளைத்தான் கைது பண்ணி இருக்க முடியுமா?"

"ஆனால், ரமாமணி நல்லவள். அவளை ஏன் கைது செய்தாய்? அவளை விட்டுவிடு."

"ஐயோ, அடி மடியிலே கையைப் போடறீங்களே! விடறதுக்கு அதிகாரம் எனக்குக் கிடையாது சாமி. பிடிக்கத்தான் உண்டு. விட்டறது, ஜெயிலிலே தள்ளறது எல்லாம் கோர்ட்டார் வேலை."

"நீ என் உதவியைக் கோரியபோது அவளைக் கைது செய்யப் போவதாக என்னிடம் சொல்லவே இல்லையே! மோகனாவைக் காப்பாற்றும்படி என்னிடம் வேண்டிக்கொண்ட பெண்ணைக் காட்டும்படிதானே நீ கேட்டாய்?"

"ஒரு கல்லிலே இரண்டு மாங்காய் விழுந்துச்சுன்னா, நான் அதைப் பொறுக்கிக்கிட்டது குத்தமா? ரமாமணி மோகனாவைக் காப்பாற்றச் சொன்னது நல்ல காரியந்தான். ஆனால், வீட்டுக்குத் தீ வைத்தது குத்தமாச்சே!"

"அப்படியானால் ரமாமணியைக் காப்பாத்த வேறு வழியே கிடையாதா?"



"உண்டு. கேசு நடக்கிறபோது நல்ல வக்கீலை வச்சு வாதாடணும். இப்ப யாராச்சும் ஜாமீன் கொடுத்தா, ரமாமணியை விட்டுடுவாங்க."

"யாரைக் கொடுக்கச் சொல்லலாம்?"

"உங்களைவிட நல்லவங்க உலகத்திலேயே கிடையாது. ஆனா உங்க ஜாமீன் செல்லாது. அதுக்கு எல்லாம் அட்ரசு வேணும். உங்களுக்குத்தான் 'கேர் ஆப் கோயில்' ஆச்சே!"

"என்ன அப்பனே இப்படிச் சொல்லுகிறாய்?"

"சட்டம் வேறே, சத்தியம் வேறே சாமி. நீங்க உலகத்தைக் கடந்தவங்க. எங்களுக்கு உலகத்து ஆளுதான் வேணும். யாராவது பணம் காசு உள்ளவங்க பொறுப்புக் கொடுத்தா ஜாமீனிலே விடுதலை பண்ணுவாங்க. அதுக்கு நான் 'அப்ஜக்ட்' பண்ணலே. கேசு 'ஆர்சன் கேசல்லே?"

இவ்வளவும் நாகபட்டினம் போலீஸ் ஸ்டேஷன் லாக்கப்புக்கு முன்னால் நடந்துகொண்டிருந்த பேச்சுக்கள்.

ரமாமணி லாக்கப்பில் இருப்பது பரதேசியாரின் மனத்தை என்னவோ செய்தது. நமக்கு ஏன் உலகத்து வம்பு என்று அவர் இருந்திருக்கலாம். ஆனால் அவளுடைய நல்ல செய்கை பட்ட மரம் என்று நினைக்கக்கூடிய பற்றற்ற உள்ளத்தையும் ஆட்டி வைத்தது. யாரைக்கொண்டு ஜாமீன் கொடுக்கச் சொல்லலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கையிலே, 'லாக்கப் ரூமுக்குள் ஒரு நாடகம் நடந்துகொண்டிருந்தது.

நாகபட்டினத்தில் அப்போதிருந்த போலீஸ் ஸ்டேஷனில் 'லாக்கப்' பகுதி சேர்ந்தாற்போல் மூன்று அறைகள் கொண்டது. அவைகளுள் ஒன்றிலே சொக்கனும், குறக்கருப்பனும் அடைக்கப் பட்டிருந்தார்கள். இன்னொன்றிலே நாகலிங்கம் தனியாய் அடைக்கப் பட்டிருந்தான். அதற்கு அடுத்த அறையிலே ரமாமணி சோகமே உருவெடுத்தவளாகத் தலையிலே கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு என்ன வருத்தம்? அவளை லாக்கப்பிலே தள்ளியது வருத்தம் அல்ல. மலேயா நாட்டுக்குப் போய் ஒழுங்காகப் பிழைக்கலாம் என்று எண்ணிய அவளை, நாகபட்டினம் திரும்பவும் வரவேற்றது வருத்தம் அல்ல. அவளுடைய வருத்தம் எல்லாம், நாகலிங்கம் இருக்கும் அறைக்கு அடுத்தாற்போல் அவளையும் அடைத்து வைத்தார்களே என்ற ஒரே வருத்தந்தான். அவரோடு கூடிச் சில நாள் வாழ்ந்து வந்த பாவத்திற்கே அவரோடு கூடச் சிறையிலே இருக்க வேண்டி வந்துவிட்டதே என்ற வருத்தந்தான்.

ஆனால், நாகலிங்கம் இந்த லாக்கப்பைப்பற்றிச் சிறிதும் கவலைப் படவில்லை. அவருக்கு இது பிறந்த வீட்டைப் போல.

தூங்கிக்கொண்டேதான் லாக்கப்பில் நுழைந்தார். உள்ளே போனவுடன், துண்டைச் சுருட்டித் தலைக்கு வைத்துக்கொண்டு

நிம்மதியாய்ப் படுத்துவிட்டார். விழித்துப் பார்க்கும்போது மணி எட்டு. பசி வயிற்றைத் துளைத்தது.

"ஏ ! – ஏட்டையா?" என்று இரைந்து ஒரு சத்தம் போட்டார். கன்னையா நாயுடு எழுந்து வேகமாக அருகில் வந்தார்.

"என்ன நாகலிங்கம் பிள்ளே?" என்றார்.

"நாயுடு! நீ பிரமோசனுக்குப் பாத்துக்கிட்டியாக்கும்? நம்பளைப் புடிச்சிட்டே!"

"நான் இல்லே பிள்ளே — சட்டம் புடிச்சுட்டுது."

"உன் சட்டமும் நீயும் நாசமா போங்க! இப்ப ஒரு ஆளை அனுப்பி எட்டு இட்லி வாங்கிட்டு வரச் சொல்றீங்களா?"

"ஆகட்டும், சொல்றேன்" என்றார் நாயுடு. அப்போது நாகலிங்கத்தின் கண்களில் ஒரு ஒளி உண்டாயிற்று.

"நாயுடு உங்ககிட்டே ஒரு விசயம் கேக்கணுமே!" என்று எதற்கோ அடிப்போட்டார். நாயுடுவுக்கு என்ன விஷயமோ, எதைக் கேட்கப் போகிறானோ, எதையாவது எக்கச்சக்கமாகக் கேட்டு வைக்கக் கூடாதே என்று பயம். அருகில் போனார்.

"நீ மதுரை ஊரெல்லாம் சுத்திப் பாத்திருக்கேல்ல?"

"ஆமாம். அதைப்பத்தி என்ன?"

"இல்லே. அங்கே நாகபட்டிணம் மிட்டாய்க் கடைன்னு ஒண்ணு இருக்குது. அதுலே அல்வா, சேவு எல்லாம் நல்லா இருக்கும். இது நாகப்பட்டிணமே ஆச்சே ! நல்ல மிட்டாய்க் கடையா பார்த்து, அதிலிருந்து ஏதாவது பலகாரம் வாங்கிக்கிட்டு வரச் சொல்லுங்களேன்" என்றார் நாகலிங்கம்.

கன்னையா நாயுடுவுக்கு "அம்மாடி" என்று சொல்லத் தோன்றியது.

"ஆகட்டும், எல்லாம் வாங்கிக் கொடுக்கச் சொல்றேன்" என்றார் எட்டு.

"இந்த நன்றியை மறக்கமாட்டேன், ஏட்டையா! வெளியே வந்ததும், செம்மைக்குக் காட்டிடுவேன்!"

"நன்றியும் வேண்டாம், ஒண்ணும் வேண்டாம். மதுரையிலே கொண்டுபோய் உம்மை ஒப்பிக்கிற வரைக்கும் நீர் சாதுவா வந்தா போதும்!"

"சரி, சும்மா இருக்கேன். பலகாரத்தை வாங்கிக்கிட்டு வரச் சொல்லுங்க" என்று உத்தரவு போட்டார் நாகலிங்கம். ஹெட் கான்ஸ்டபிள் வெளியே வந்தார். அப்போது உள்ளே நாடகத்தின் அடுத்த காட்சி ஆரம்பமாயிற்று.

"ஏ புள்ளே கருப்பாயி ! பக்கத்து ரூமிலேயா இருக்கே?" என்றார் நாகலிங்கம்.

"நான் எங்கே இருந்தா உனக்கு என்ன?" என்றாள் ரமாமணி.



"ஏ– குட்டி, ஒரு தெம்மாங்கு பாடேன், கேட்போம். உன் பாட்டுக் கேட்டு ரொம்ப நாளாச்சு."

"உனக்கு மானம் இல்லியா? ஜெயில்லே இருக்கும்போதுகூடவா இவ்வளவு திமிர்?"

"இதுலே என்ன புள்ளே மானம், அவமானம் இருக்கிறது? நீ கூட என்னைக் கை விட்டுட்டே. ஆனா, எப்பவும் என்னைக் கை விடாத இடம் இது ஒண்ணுதான் ! ஆமா, உனக்கு என்ன அந்தத் திருவாரூர் மோகனா குட்டிகிட்டே அவ்வளவு பிரியம் வந்தது?"

"உனக்கு ஏன் வந்தது?"

"அவ அழகிலே—"

"எனக்கு அவ குணத்திலே— !"

"குணத்தை என்ன, கண்ணாலேயா கண்டே? அவள் குணத்துக்கு ஆசைப்பட்டு என் வீட்டைக் கொளுத்தினேல்லே. இன்னும் அந்த வருசம் உயிரோடு இல்லாமலா போகப் போகிறேன்?"

"அதுவரைக்கும் நான் இருந்தா என்னைக் கொல்லு. ஆனால் வெளியே வந்ததும் போய் மோகனாவைத் தூக்காதே!"

"அட புத்திமதி சொல்லுறியளோ? நல்ல தண்ணியைக் கண்டால் கண்ட இடத்திலே அள்ளிக் குடிக்கணும். பசித்தவன், கண்ணாலே பழத்தைக் கண்டால் விடுவானா? யார் வீட்டு மரம் இன்னா பார்க்குறான்? இந்த எட்டு நாயுடு நம்பளைக் காலை வாரி விட்டுட்டான். இல்லாட்டி இன்னிக்கு நான் லாக்கப்பிலே படுத்திருப்பேனா? அந்த மோகனாவைக் கொத்தி அழகர் கோவிலுக்குக் கொண்டுபோயிருக்க மாட்டேனா?"

"சீ... சும்மா கிடய்யா! உனக்குச் செத்தாலும் புத்தி வராது" என்றாள் ரமாமணி. இந்த இரைச்சலைக் கேட்ட போலீஸ்காரர்கள் ஓடி வந்தார்கள். "ஏய் ! என்ன சத்தம் இங்கே!" என்று அதட்டினார்கள்.

"என்னய்யா 'கேட்டு'க்குத்தான் பூட்டுப் போட்டிருக்கீங்க, வாய்க்குக்கூடவா பூட்டுப் போட்டிருக்கீங்க? ஏதோ, சாகப்போற மனிசன் சந்தோஷமா பேசிக்கிட்டிருந்தா, அதைக்கூட விடமாட்டேங்கறீங்களே ! ஏன் தம்பி, இங்கே ரெண்டு சுருட்டு கிடைக்குமா?" என்றார் நாகலிங்கம். இவ்வாறு யோக்கியனுக்கும் சட்டம் தேவையில்லை, அயோக்கியனுக்கும் அது தேவை இல்லை என்பதை நிரூபித்துக்கொண்டு கூச்சலும் சிரிப்புமாக லாக்கப்பில் கிடந்தார் நாகலிங்கம்.

✣ ✣ ✣

பரமானந்தப் பாகேசியார், ரமாமணியை எப்படியும் ஜாமீனில் விடுவித்துவிட வேண்டுமென்று தீர்மானத்துக்கு வந்துவிட்டார். எட்டு கன்னையா நாயுடுவிடம், "அப்பனே, இனிமேல் என் காலைக் கட்டாதே ! நான் புறப்படுகிறேன்" என்றார்.

"என்ன சாமி, மதுரையிலே வந்து நீங்கதானே முக்கியமா சாட்சி சொல்லணும்?"

"அங்கே மாமனாக வந்து சாட்சி சொன்னவர் இருக்கிறார்; என்னைச் சாட்சி சம்மன் என்றெல்லாம் இழுக்காதீர்கள். இப்போது முதலில் நான் ஜாமீனுக்கு ஆள் தேட வேண்டும்!"

"ஐயோ! கேசு புஸ்கஞ்சு போயிடுமே! நந்தவனத் தோட்டத்திலே நடந்ததையெல்லாம் நீங்கதானே சொல்லணும்! உங்க சாட்சி இல்லேன்னா நாகலிங்கம் விடுதலையாகிவிடுவான். மோகனாவுக்கு ஆபத்து" என்று நாயுடு சொன்னவுடனே பரதேசியார், 'நாகலிங்கம் தண்டிக்கப்பட வேண்டும். அவன் விடுதலையாகிவிட்டால், மோகனாவுக்கு இடைஞ்சல் செய்வான். அவளை எப்படியும் தூக்கிப் பிடிப்பான்' என்ற எண்ணம் கொண்டார்.

"சரி, நீங்கள் அவனை மதுரைக்குக் கொண்டுபோங்கள். எந்தச் சமயத்தில் நான் சாட்சி சொல்ல வேண்டுமென்று தோன்றுகிறதோ, அந்தச் சமயத்தில் எனக்கு எழுதுங்கள். நான் எங்கு இருந்தாலும் உங்களோடு கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டே இருக்கிறேன்" என்று கன்னையா நாயுடுவிடம் சொல்லிவிட்டு, விடை பெற்றுக்கொண்டு பரதேசியார் சிக்கலை நோக்கிக் கிளம்பினார்.

நாகலிங்கத்தின் வீடு தீப்பற்றி எரிந்தபோது, அதன் உள்ளே நுழைந்த எட்டு நாயுடுவின் கையில் நாலு வளை உடைசல்களும் ஒரு கத்தியும் ரத்தக்கறை பட்ட இரண்டு துணிகளும் கிடைத்தன அல்லவா? அதில் இருந்தே அவர் நாகலிங்கத்தைக் கவனித்து வந்தார். அதன் பின் அன்று மதுரை ரயில்வே ஸ்டேஷனில் மோகனாம்பாளைப் பார்த்ததும், அருகில் பரதேசியார் நின்றதும் அவருக்குச் சந்தேகத்தை ஊட்டின. இவைகளுக்குப் பின் நாயுடு போலீஸ் இலாகாவில் தனியாகப் பர்மிஷன் வாங்கிக்கொண்டு நாகலிங்கம் கேசில் ஈடுபட்டார். பரதேசியாரைக் கண்டு நந்தவனத் தோட்டத்தில் நடந்த விஷயங்களையெல்லாம் அறிந்தார். அன்று முதல் ரமாமணியைத் தேடுவதில் முனைந்தார். இதனிடையில் சொக்கன் நாகபட்டினம் வந்து ரமாமணியின் இருப்பிடத்தை அறிந்து வந்தான் என்பதையும், நாகலிங்கம் நாகபட்டினம் போகிறான் என்பதையும் அறிந்துகொண்டார். உடனே திருப்பரங்குன்றம் சென்று, அங்கு சாமி கும்பிடப் போன பரதேசியாரிடம் விஷயங்களைச் சொல்லி ரமாமணியை அடையாளம் காட்டுவதற்காக அவரையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டார். நாகபட்டினம் போகும் நாகலிங்கம் திருவாரூரில் வந்து மோகனாவுக்கு ஏதாவது ஆபத்தை விளைவிப்பாரோ என்ற அச்சமும் பரதேசியாருக்கு வந்தது.

இருவரும் திருவாரூர் வந்தார்கள். பரதேசியார் கோவிலில் இருக்கும் போது நாயுடு நட்டுவனாரிடம் மூக்குத்தி விஷயத்தை அறிந்தார். அப்போது நாகலிங்கம் நாகபட்டினம் வந்துவிட்டார் என்ற செய்தி வரவே, இருவரும் விரைந்து நாகைக்குப் போனார்கள்.



சர்க்கஸ் கம்பெனியில் ரமாபாயை அடையாளம் காட்டினார் பரதேசியார். அது முதல் அவளை விடாமல் நாயுடுவுக்கு உதவி செய்த துறைமுக இன்ஸ்பெக்டர் கண்காணித்துக்கொண்டு பாதுகாப்பாக ரமாமணியின் கூடவே வந்தார். அவள் ஏறிய படகையும் அவர்தான் முதன்மையாக இருந்து ஓட்டினார். படகைத் தனியாகப் பிரித்தார் நாயுடுவோ. இன்னொரு புறத்தில் நாகலிங்கத்தைத் தொடர்ந்து ஒரு படகில் வந்து, ரமாமணியை அவன் கொல்லப்போகும் தருணத்தில் காப்பாற்றினார்.

சிக்கலுக்குப் பரதேசியார் வருகிறபோது, சண்முகசுந்தரம் அங்கு இல்லை. தருமனுக்குப் பரதேசியாரைப் பார்த்தவுடனே சந்தோஷம் மேலிட்டது.

"சாமி வரவேணும், வரவேணும். சைவ ஓட்டிலே சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்கிறேன். இருந்து சாப்பிட்டுவிட்டுப் போகணும்" என்று வற்புறுத்தினான்.

பரதேசியாரோ, "நான் சண்முகத்தை உடனே பார்க்க வேண்டும். வண்டியைக் கட்டிக்கொண்டு போய் அழைத்துக்கொண்டு வா" என்று உத்தரவு போட்டார்.

ஐம்பத்து இரண்டாம் அத்தியாயம்

## உள்ளம் கரந்து ஓடிய வெள்ளம்



"என்னடா வரதா, என்ன, அவ்வளவு சாம்பலையுமா எடுத்துப் பல் தேய்ச்சுட்டே? ஒரு சட்டி பழையது இருந்தது. அதையும் காணோம். நல்லா இருக்கு போ! எத்தனை தடவை பல் தேய்க்கிறது, எத்தனை தடவை சாப்பிடறது?" என்றாள் வடிவாம்பாள்.

"பல் தேய்க்கவும் சோறு திங்கவும் நேரம் ஏதம்மா? இங்கே மிருதங்கத்துக்கு மாவு வைக்கிறதுக்குத்தானே நேரம் சரியா இருக்குது!" என்று பழையது சட்டியைத் தடவினான் வரதன்.

வரதன், மிருதங்கத்துக்கு ரவை வைப்பதில்லை. ரவைக்குப் பதிலாகப் பழைய சோற்றில் சாம்பலைப் பிசைந்து, அதைத்தான் தொப்பியில் வைப்பான். அதிலேதான் தொப்பி இதமாக இருக்கும் கும்காரம் பேசும் என்று அவனுக்கு நம்பிக்கை.

"பாட்டுக்கு வாசி என்று சொன்னால், பலசரக்குக் கடையைத் தேடிக்கிட்டுப் போகக்கூடாதுங்க. பழையதும் சாம்பலும் எங்கேயும் கிடைக்கும்" என்று சொல்லுவான் அவன்.

சென்ற ஒரு வார காலமாக மோகனா, காலில் கட்டிய சலங்கையை அவிழ்க்கவில்லை. வரதனோ கள்ளாக் கட்டையைத் தொடவே இல்லை. நட்டுவனாருக்கோ தட்டத்தான் நேரம் சரியாக இருந்தது. பாத்திரப் பட்டறைக்குப் பக்கத்திலேயும், பாத நாட்டியம் கத்துக்குற வீட்டுக்குப் பக்கத்திலேயும் குடியிருக்கக்கூடாதென்று ஊரார் சொன்னார்கள்.

மோகனாவுக்கு இப்பொழுது வேறு எதிலேயும் அக்கறையில்லை. போட்டியிலேதான் எப்பொழுதும் நினைவு. எப்பொழுதும் ஒத்திகை, எப்பொழுதும் ஆட்டம்.

முன்பு எல்லாம் ஒரு கச்சேரிக்குப் போய்விட்டு வந்தால், அடுத்த நாளே வடிவாம்பாள், தன் மகளுக்கு உடம்புக்கு எண்ணெய் தேய்த்துவிட்டு, தலைக்குத் தைலம் தேய்த்து, கஷாயம் வைத்துக் கொடுத்து எவ்வளவோ பக்குவங்கள் செய்வாள். இப்பொழுது அவற்றிற்கெல்லாம் நேரமில்லை. மோகனாவின் ஓயாத ஆட்டத்தைக் கண்டு வடிவாம்பாளுக்கே பயம் வந்துவிட்டது. 'இப்படிச் சோறு தண்ணீர் இல்லாமல் ஆடுகிறாளே! உடம்பு என்னத்துக்கு ஆகும்? இந்தப் போட்டி எதற்காக வந்தது?' - என்று கவலைப்பட்டுக் கொண்டே இருந்தாள். இது போதாது என்று இன்னொரு கவலையும் இன்று காலையில் வந்தது.

தினந்தோறும் காலையிலும் இரவிலும் அலமாரியைத் திறந்து அந்த லவா அட்டிகையை ஒரு முறை தரிசனம் செய்துவிடுவது அவள் வழக்கம். அன்று காலை அதற்காக அலமாரியைத் திறந்தாள். பூட்டு சிக்கியது. சாவி திருப்ப வரவில்லை. அப்போது வரதனை உதவிக்குக் கூப்பிட்டாள். வரதனோ, தந்திங்கிணதோம் வாசித்துக்கொண்டே இருந்துவிட்டான். அதற்குப் பின் அவளாகவே வாசலில் போய்த் தேடும்போது, நல்ல வேளையாக அங்கு ஒரு பூட்டு ரிப்பேர்க்காரன் எதேச்சையாக வந்தான். அவனை அழைத்து வந்து பூட்டைச் சரி பண்ணச் செய்தாள்.

இம்மாதிரி ஒரு சமயத்துக்குக்கூட வரதன் உபயோகப்படவில்லையே என்ற ஆத்திரத்தில்தான் வரதன் பழைய சோற்றுப் பானையைத் தொட்டதும் அவள் கோபித்துக்கொண்டாள்.

"என்னடா வரதா, இந்தப் போட்டியிலே ஆடினா என்ன மிச்சம்? நாலு காசு கிடைக்கப் போவுதா? நீயாவது அவகிட்டே சொல்லேன்."

"என்னைத்தான் பாத்தீங்களாக்கும்! நீங்க இருக்கும்போது, என்னைச் சொல்லச் சொல்றீங்களே அம்மா?"

"பெற்றவள் என்கிற எண்ணம் அவளுக்கு இருக்கா? அவதான் என் முகத்தைக்கூடப் பார்க்க மாட்டேங்கிறாளே!"

"வயது வந்த பொண்ணு கொஞ்சம் விட்டுத்தான் பிடிக்கணும்."



"எதை விட்டுப் பிடிக்கச் சொல்லறே? பசுவை விட்டா பிடிக்கலாம், பணத்தை விட்டா பிடிக்க முடியுமா? அது இஷ்டப்படி அந்தச் சண்முகத்தைக் கட்டிக்கோன்னு நான் சொல்லணுமா?"

"சரி, வேண்டாம். பல்லவிக்குப் பின்னாலே அநுபல்லவிதானே வருது? தானே நடக்குது?"

"எங்கே இருந்து நடக்கும்? அன்னைக்குப் பஞ்சாயத்திலே பாத்தியில்லே? அவ முகத்தைக்கூடப் பார்க்க மாட்டேன்னாளே! அவன் மேலே ஆசைப்பட்டு என்னடா மிச்சம்...?"

"அம்மா, நீங்களும், நானும் சொல்லியா ஆசை வந்தது? தானே பூத்தது, தானே பழுக்குது...!"

"எங்கே பழமாகப் போவுது! அதுதான் வெம்பிப் போச்சே. இதோ பாரு வரதா, உனக்கு உலகம் தெரியாது. உலகத்துலே தாசியா பிறக்கப்படாது. பிறந்தா காசு பணத்தோட இருக்கணும். காசு இல்லே, அவளை யாரும் மதிக்க மாட்டாங்க. நல்ல சம்பந்தம், மைனர் பையன் எதோ, மூணிலே, நாலிலே வந்து தலையை நீட்டுவான். அதுவும் சும்மா வரமாட்டான். ஆயிரம் பத்தாயிரத்தைக் கொடுப்பான். நாட்டியம் கெடாது. உனக்கும் நல்லது. நட்டுவனாருக்கும் நல்லது. கடைசி வரையில் சம்பளம் கிடைக்கும். இதெல்லாம் உங்களுக்குத் தெரிய மாட்டேங்குதே! நாளைக்கு நாயனக்காரன் வந்தா, நீ தாளம் போடவேண்டியதுதான். என்னமோ வரதா, இந்த வீடு நல்லா இருக்கணும்னா அது உன் கையிலேதான் இருக்குது. நீதான் அவளுக்குச் சொல்லணும்."

"அம்மா, நீங்க பெத்தவங்க உங்களுக்கே மோகனாவின் குணம் தெரியலியே! அதுக்குக் காசு வேண்டாம், பணம் வேண்டாம், கலைதான் வேணும்."

"அட, சும்மா கலை கலைன்னு சொல்லாதே. இப்போ அவளுக்கு இருக்கிற அழகு இல்லாமே இருக்கட்டும். கலையை எவனாவது சீண்டுறானா பார்க்கறேன்! என் மகளுக்கு என்னைவிட அக்கறையுள்ளவங்க இருப்பாங்களா? எப்போ நான் சொல்றேனோ அவ கேட்க வேண்டியதுதானே."

"விளக்கெண்ணெயைக் குடின்னு சொன்னா அது கேட்கும். வழுக்கி விழுன்னு சொன்னா கேக்குமா? அது தானம் தவறாமல் ஆடுற பொண்ணாச்சே!"

"வரதா!" என்று மாடியிலிருந்து மோகனாவின் குரல் கேட்டது.

"இதோ வந்துவிட்டேன்" என்று சோத்தைக் குழைத்தான் வரதன்.

வடிவாம்பாளோ, 'வரதன்கூட இப்படிப் பேசுகிறானே' என்ற கவலையுடன் சமையற்கட்டை நீங்கினாள். கூடத்தில் போய் உலாவிக் கொண்டிருந்தாள். 'அவள் மைனரை வேண்டாம் என்கிறாள்; சண்முகம் அவளை வேண்டாம் என்கிறான். நம் கண் முன்னால் நம்

குழந்தையின் பாடு இப்படி வந்துவிட்டதே' என்ற கவலையில் அவள் இருக்கும்போது வாசல் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது.

கதவைத் திறந்தாள். வைத்தியும் மைனரும் எதிரில் நின்றார்கள் வடிவாம்பாளுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"என்ன, நான் உங்களை இப்போ வரச் சொல்லலியே !" என்றாள் வடிவாம்பாள்.

"இதுவரையில் நீங்க சொல்லி வந்தோம். இப்போ நாங்களாகவே வந்துட்டோம்." என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தார் வைத்தி.

"ஏன், தாசி வீட்டுக்குத் தாப்பாள் இல்லேனு பாத்தீங்களா? மோகனா மாடியில் இருக்குது. உங்களைப் பார்த்தா ஏதாவது சொல்லுவா" என்றாள் வடிவாம்பாள்.

"நாங்க என்ன திருடர்களா? இல்லே, அயோக்கியங்களா? என்ன மைனர்வாள் சும்மா இருக்கீங்க?" என்றார் வைத்தி.

"இப்போ எதுக்கு வந்தீங்க?"

"உண்டு, இல்லேன்னு கேட்க வந்தோம்."

அந்த மட்டில் நகையைத் திரும்பிக் கேட்க வரவில்லை என்ற சந்தோஷம் வந்தது வடிவாம்பாளுக்கு அந்தத் திருப்தியில், "நான்தான் சொல்லியிருக்கேனே ! நீங்க ஏன் அவசரப்படுறீங்க?" என்றாள்.

"இந்தாங்க, வடிவாம்பாள் அம்மாள். இது கோர்ட்டு இல்லே. ஏரங்கி போட்டுக்கிட்டே வரதுக்கு நான் ஏதோ உங்களுக்கும் நல்லது, மோகனாவுக்கும் நல்லது என்கிறதுக்காக இந்தச் சம்பந்தத்தை முடிச்சு வைக்கப் பாத்தேன் நீங்க சும்மா தவணை போட்டுக்கிட்டே இருந்தா, இந்த மனுஷன் கேக்க மாட்டேனென்கிறார். என்னைப் போட்டுக் குடைகிறார். என்ன மைனர்வாள், இங்கே வந்ததும் சும்மா இருந்தா—?"

மைனருக்கு வாசற்கதவு திறந்து இருக்கும்போது ரேழியில் நிற்க சங்கோசம் இருந்தாலும் தைரியமாகப் பேச ஆரம்பித்தார்.

"இப்போ நாங்க வந்தது என்ன விஷயம் என்று கேட்டா..." என்று ஆரம்பித்தார் மைனர்.

"என்னாங்க—! இது தெரியாதா? மோகனாவுக்கு இப்ப மனசு சரியாயில்லே. போட்டியெல்லாம் முடியட்டும். அப்புறம் நானே உங்க விஷயமா அதுகிட்டே பேசறேன்" என்றாள் வடிவாம்பாள்.

"இந்தப் போட்டிக்கே மோகனா ஆடப் போவப்படாது" என்றார் மைனர்.

"நானும் அதைத்தான் சொன்னேன். அது கேட்கலே..."

"கேக்கறதும், கேக்காததும் உங்க கையிலேதான் இருக்கு ! ரிஷப வாகனத்தன்னைக்கு மாரியம்மன் கோவில்லே கச்சேரிக்கு ஒத்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லுங்களேன்" என்று யோசனை சொன்னார் வைத்தி.



"நான்தான் போய் ஆடணும். நீங்கதான் நட்டுவாங்கம் பண்ணணும்."

"ஓய் வைத்தி ! இது எல்லாம் என்னாங்காணும் சமாதானம்? நாம்ப என்ன பிச்சையா கேக்குறோம்? பச்சை நோட்டைக் கொடுத்துல்லே கேட்கிறோம்? வடிவாம்பாள் அம்மாள் ! இனிமே என்னால் பொறுக்க முடியாது" என்று அடக்கமாய் இரைந்தார் மைனர்.

இதைப் பார்த்த வடிவாம்பாள் நிதானமாக, "நீங்க எப்போ பலசரக்குக் கடை வச்சீங்க?" என்றாள்.

மைனர் திகைத்தார். "என்ன, பலசரக்குக் கடையா? நான் ஏன் வைக்கிறேன்?" என்றார்.

"இல்லே, பலசரக்குக் கடைக்காரன் பாக்கி கேட்கிற மாதிரி கேக்கிறீங்களே! இது எல்லாம் பக்குவமா சொல்ல வேண்டிய விஷயமில்லே?"

"பக்குவம் ! எத்தனை நான்தான் பொறுக்கிறது? இப்போ கூப்பிடுங்க, உங்க பொண்ணை—"

"ஐயோ, காரியம் கெட்டுப் போகுமே!"

"இப்போ மாத்திரம் என்ன? கெடாமல் ஜெயிச்சா போச்சு!" என்றார் வைத்தி.

"இல்லீங்க, அது ஆட்டத்திலே கண்ணா இருக்கு. போட்டி முடிகிறவரையிலே யாரு எது சொன்னாலும் காதாலே கேட்காது"

"என்ன வடிவாம்பாள், இப்படிச் சொன்னால் பணம் கொடுத்த மனுசன் வெறுமனே இருப்பாரா? உங்க மக வாயாலே பத்து நாள் பொறுத்துக்கிட்டு இருங்கன்னு சொல்லட்டும். மைனர் பத்து வருஷம் பொறுத்துக்கிட்டு இருப்பார். கூப்பிடுங்கள். மோகனாவை—"

மைனருக்கும் இது நல்ல யோசனையாகப் பட்டது எதற்கும் ஒரு முறை கண்ணால் பார்த்துவிடலாம் அல்லவா?

"ஆமாம், அவதான் சொல்லணும்" என்றார் மைனர்.

வடிவாம்பாளுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை 'இப்பொழுது மோகனாவைக் கூப்பிடுவதா? மைனர், வைத்தி இருவரையும் இங்கே பார்த்தவுடனே பெரிய கலவரம் வந்துவிடுமே' அவள் ஏதாவது பேசி, மைனர் ஏதாவது பதில் சொல்லி, பெரிய சண்டை வந்துவிட்டால் மைனர் சம்பந்தமே இல்லாமல் போய் விடுமே !' என்று யோசித்தாள் வடிவாம்பாள்.

இதே சமயத்தில், "என்ன வாதா, இன்னுமா மந்தனம் எடுத்துக் கிட்டு வரே?" என்று சொல்லிக்கொண்டே சலங்கை குலுங்கக் கீழே இறங்கி வந்தாள் மோகனா.

எதிரில் நிற்கும் வைத்தியையும் மைனரையும் கண்டாள். கோபம் வந்தது. ரத்தமும் முகத்தில் ஏறியது. தன் வாழ்வைக் கெடுத்த பாவிகள்

அல்லவா இவர்கள்? இவர்களால்தானே தீராத சந்தேகம் வந்தது என்று எண்ணினாள். இதைப் பார்த்ததும், எந்த வம்புக்கும் அஞ்சாத வடிவாம்பாள்கூட வரப்போகும் யுத்தத்தை எண்ணித் தூண் மறைவில் ஒதுங்கினாள். ஆனால், மோகனா அறிவுடையவள். ஆதலால், ஒரு நிமிடத்தில் தெளிந்தாள்.

இந்த ஒரு நிமிஷத்தில் மைனர் குழம்பினார். இன்னும் கொஞ்ச நேரம் மோகனா பேசாமலே நிற்கக்கூடாதா. அவள் அழகைப் பார்த்துக்கொண்டே இருக்கலாமே என்று அவர் நினைத்துக் கொண்டிருக்கும் போது மோகனா வாய் திறந்தாள். அவள் பேசிய முதல் பேச்சு அவர்களையே திகைக்க வைத்தது. ஏனெனில், அவர்கள் அதை எதிர்பார்க்கவில்லை.

"உட்காருங்கள். வீட்டுக்குள் வந்தவர்கள் ஏன் நிற்க வேண்டும்?" என்று அவள் மிடுக்குடன் கூறினாள்.

இதைக் கேட்ட பின்தான், மைனருக்குத் தாம் இதுவரை நின்று கொண்டிருந்ததே புலனாயிற்று. ஏனெனில், மோகனாவைக் கண்டது முதல் அவர் ஏதோ ஒரு உலகத்தில் பறந்துகொண்டிருப்பதாகவே எண்ணியிருந்தார்.

மைனர் உட்கார்ந்தார். உட்கார்ந்த பிறகுதான் தரையில் உட்கார்ந்தோம் என்பதையும் அறிந்தார். ஆனால், இவ்வளவு பதவிசும் 'புலி பாயப் பதுங்குவது போலத்தான்' என்று வைத்தி புரிந்து கொண்டார்.

இதைக் கண்ட வடிவாம்பாளுக்குப் பைத்தியமே பிடித்துவிட்டது. 'எங்கே வந்தீர்கள்? ஓடுங்கள் வெளியே!' என்று மோகனா கோபிப்பாள் என்று அவள் நினைத்தாள். 'உட்காருங்கள்' என்று மரியாதையாய்ச் சொன்னவுடனே அவளுக்கு ஒரு பெரிய சந்தேகமே உண்டாயிற்று. 'அடாடா, நம் மகளுக்கு இவ்வளவு அன்பு இவர்கள் மேல் இருக்கிறதே! நாம் அல்லவா இதைப் புரிந்துகொள்ளாமல் போய்விட்டோம்' என்று எண்ணி அவசரமாக ஓடிப்போய் வெற்றிலைப் பெட்டியை எடுத்து வந்தாள்.

"அம்மா! எதுக்கம்மா வெத்திலைப் பெட்டி?" என்று தடுத்தாள் மோகனா.

"ஒரு உபசாரத்துக்காகத்தான்" என்றாள் வடிவாம்பாள்.

"உபசாரமா? நாமும் அவுங்களும் ஒண்ணா, உபசாரம் செய்ய? அவர் பணக்காரர், படிச்சவர். அவர் தரமெங்கே, நம்ம தரமெங்கே? வேண்டாம். வெத்திலைப் பெட்டியை உள்ளே கொண்டுபோங்க" என்று உத்தரவிட்டாள். நின்ற இடத்திலேயே வெற்றிலைப் பெட்டியை வைத்துவிட்டுப் பிரமித்தபடி நின்றாள் வடிவாம்பாள்.

இதுவரையில் சும்மா இருந்த வைத்தி, "ஆமா, நீ எங்களை வரவேற்கிறாயா, விரட்டுகிறாயா? எங்களுக்கு ஒண்ணும் புரியல்லையே!" என்றார்.



"இது வரவங்களுக்குத் தெரியாதா? இருட்டை விரட்டுவாங்க. நல்லவங்களை வரவேற்பாங்க. இது ரெண்டிலே யாரு நீங்க?"

வைத்தி மைனர் முகத்தைப் பார்த்தார். மைனரோ வைத்தியின் முகத்தைப் பார்த்தார். இரண்டு பேருக்கும் தாங்கள் யார் என்பது புரியவில்லை.

இந்தச் சமயத்தில் மோகனா மேலும் பேசினாள்.

"உங்க ஊருலே எல்லாம் மழை எப்படி? நல்லா பெய்திருக்கா?"

"அதைப்பத்தி நமக்கு என்ன கவலை? எங்க ஊரிலே மழை பெய்தாலும் ஒண்ணுதான், பெய்யாட்டியும் ஒண்ணுதான்" என்றார் மைனர்.

"ஆமாம், நிஜந்தான்! குடகுலே மழை பெய்தால் உங்களுக்குக் கொண்டாட்டம். உங்க ஊரிலே பெய்யற மழை கடலுக்குத்தானே போகும்! ஆனதாலே ஊரிலே மழை பெய்ய வேணும் என்ற எண்ணம் கூட உங்களுக்கு இருக்காது."

மைனர் திகைத்தார். ஆனால், வைத்தியோ, "ஏன் அந்தக் கேள்வி எல்லாம் இப்போ?" என்றார்.

"இல்லை. பணத்தின் அருமை அவருக்குத் தெரியுமா என்று கேட்டேன்."

"அருமை தெரியுமாவா? எங்கே, எவனையாவது ஒரு ஸ்ரீராமநவமி, கோகுலாஷ்டமின்னு மைனர்கிட்ட பத்து ரூபாய் வாங்கிடச் சொல்லு, என் காதை அறுத்துக்கறேன்!" என்று ஹாஸ்யமாகப் பேசினார் வைத்தி.

வைத்தியின் பேச்சு மோகனாவுக்கு நெருப்பென நெஞ்சில் சுட்டது. 'நீங்கள் யார்?'

"நான் யாரா? நீ என்னை மறந்துட்டியா?" என்றார் வைத்தி.

"உங்களுக்கு என்னைத் தெரியுமா?"

"என்ன, இப்படிக் கேட்டுட்டே? நீ சின்னக் குழந்தையா இருக்கிற போது நான்கூட... பார்த்தீர்களா மைனர்வாள்! பாருங்கோ எப்படி மடக்குதுன்னு. அடேயப்பா! இந்தக் காலத்துப் பெண்களோடே பேசறதுக்கே ரொம்பக் கெட்டிக்காரத்தனம் வேணும்" என்றார் வைத்தி.

"சுவாமி, உங்களை நான் பார்த்ததில்லை. நீங்கள் என்னைத் தெரிந்ததாகப் பாசாங்கு செய்கிறீர்கள். நான் மைனரைக் கேட்டேன், மழை உண்டா என்று" - ஆத்திரத்தோடு உரைத்தாள் மோகனா.

இதைக் கேட்ட மைனர் திகைத்தார். வைத்தி விழித்தார். தாயார் பதைத்தாள். அப்போது வரதன் கையில் மாவைப் பிசைந்துகொண்டே வந்து குதித்தான்.

"என் மோகனா, கூப்பிட்டியா?"

"அட! நம்ம கலெக்டர் வந்திருக்காரே!" என்றான் வைத்தியைப் பார்த்து.

உடனே வைத்திக்கு இங்கிருந்து போனால் போதும் என்று ஆகிவிட்டது. "சரி, பின்னே நாங்க வந்த விஷயம்?—" என்றார்.

"நீங்கள் வந்த விஷயம் என்ன? ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் கெடுக்க வந்தீர்கள்" என்றாள் மோகனா.

"கெடுக்கவா? பணம், காசு, வீடு, பங்களா, தோட்டம் இதெல்லாம் வாழ்வைக் கெடுக்குமா, குடுக்குமா?" என்றார் வைத்தி.

"இவைகள் இருந்தும் ஒரு பெண்ணின் வாழ்வு கெடுவதென்றால்?—"

"ஏன் கெடுது? பணம் இருந்தால் கெடுமா தங்கம்?" என்று வடிவாம்பாள் குறுக்கே வந்தாள்.

"ஏன் அம்மா கெடாது? அப்படிக் கெட்டவங்க ஒருத்தரைச் சொல்லவா?"

"சொல்லு பார்ப்போம்" என்றார்கள் நால்வரும்.

"இந்த மைனரின் மனைவி மரகதம்! அவர் மாமன் மகள் மரகதம். சின்ன வயது முதல் கூடவே விளையாடிய பெண் மரகதம். அவள் கல்யாணத்துக்குக் கரைத்த சந்தனம் காய்வதற்கு முன்னாலே அந்தப் பெண்ணின் வாழ்வை இவர்கள் பாழாக்க வேணுமா?" என்று ஆவேசத்துடன் கேட்டாள் மோகனா.

இதை எதிர்பார்க்காத மைனர் திடுக்கிட்டார். அவர் மனத்தில் சுருக்கென்றது யாரோ ஆணியால் குத்துவதுபோல் இருந்தது. அவர் தலை, தானே குனிந்தது. புயலில் அகப்பட்ட தென்னை மட்டை போல் அவர் மூளை அடிபட்டது.

"ஏதோ பணத்தால் நல்லது செய்வதாகச் சொல்றீங்களே, அப்படி உள்ளவங்க முதல்லே அவுங்க பெண்டாட்டிக்கு நல்லது செய்ய வேண்டாமா? உலகத்திலே படிக்காதவங்க தப்பா நடந்தா பாதகமில்லை.

"ஐயா, நீங்கள் நன்கு படித்தவர்கள். நான்கு பேருக்குப் புத்தி சொல்லக்கூடியவர்கள். ஏன் வீணில் உங்கள் மனைவியின் வாழ்க்கையைப் பாழாக்குகிறீர்கள்? அன்று உங்கள் வீட்டுக் கல்யாணத்திலே நான் ஆட வந்திருந்தபோது, உங்களுக்குப் பக்கத்திலே அடக்கமே உரு எடுத்தாற்போல உங்கள் மனைவி உட்கார்ந்திருந்தாள். நான் அந்தப் பெண்ணையே பார்த்தேன். அவள் முகத்திலே இருந்த வெட்கம், சந்தோஷம், ஆனந்தம் இவைகளை எல்லாம் பார்த்து நான் என்ன நினைத்தேன் தெரியுமா? எனக்கு என்ன தோன்றியது தெரியுமா?—"

அவள் வாய் தடுமாறியது; உடல் பதறியது. அவள் சொல்ல வந்த வார்த்தை நடுவழியில் நின்றுகொண்டது. இரு கண்களிலும் கண்ணீர் பொங்கியது. எல்லோரும் அவள் முகத்தையே கூர்ந்து நோக்கினர். ஆனால், அவள் சொல்ல வந்ததை அடக்கிக்கொண்டு பேசலானாள்.



"அவள் வாழ்வைக் கெடுக்காதீர்கள். அந்தப் பெண்ணுக்குத் துரோகம் செய்ய நினைக்காதீர்கள். பால் வடியும் அவள் முகத்தில் கண்ணீரை வடிய வைக்காதீர்கள். உங்கள் வீட்டுக்கு நான் ஆட வந்து என் வாழ்வு பாழானது போதும். உங்கள் வண்டியால் எனக்கு வந்த வினை போதும். என் வீட்டு வாசற்படியை நீங்கள் மிதித்து என் வாழ்வை மிதித்தது போதும். தங்க நாயனம் செய்து தருகிறேன் என்று சொல்லிச் சங்கடத்தை உண்டாக்கியது போதும். அந்தத் தீராத சந்தேகம் என்னோடு தீரட்டும். அது என் விதி. நான் வாழப் பிறந்தவளல்ல. கல்யாணம் செய்துகொள்ளப் பிறந்தவளல்ல. நான் தெருவிலே உதிர்ந்த மலர். என்னைப்பற்றி யாரும் எதையும் பேசலாம். ஆனால் நானும் பெண். உங்களை ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன். உங்க வீட்டுக்குப் போய் அந்த மரகதத்தின் கண்ணீரைத் துடையுங்கள். அவள் மனத்தில் அவியப்போகும் விளக்கை ஏற்றி வையுங்கள்.

"என் அம்மாவிடம் கொடுத்த அந்த நகையைக் கொண்டுபோய் அவள் கழுத்தில் போடுங்கள். அவள் முகத்தில் புன்னகை வரட்டும். இந்த ஜன்மம் எடுத்ததற்கு எனக்கு அது ஒன்றாவது கிடைக்கட்டும். இனி இந்த வீட்டின் வாசற்படியை மிதிக்காதீர்கள்" என்று படபடவென்று சொல்லிக்கொண்டே தாயின் மடியில் இருந்த சாவியைப் பிடுங்கிக்கொண்டு உள்ளே ஓடினாள் மோகனா. அலமாரியைத் திறந்தாள். அங்கிருந்த அட்டியல் பெட்டியை எடுத்து வந்து "இந்தாருங்கள்" என்று மைனருக்கு முன் வைத்தாள்.

மைனரின் மனத்தில் ஒரு பெரிய போராட்டம் நடந்து கொண்டிருந்தது. மௌனமாய் எழுந்தார். நகைப்பெட்டியை எடுத்து வைத்தியிடம் கொடுத்துவிட்டு வாசலை நோக்கி நடந்தார். வாசற்படியருகில் சென்றதும் வைத்தி நகைப்பெட்டியைத் திறந்தார்.

"அட்டிகையைக் காணோமே!" என்று அலறினார். "என்ன, காணோமா?" என்று பதறினாள் மோகனா. "அடி, அம்மாடியோ! எங்கடி போச்சு?" என்றாள் வடிவாம்பாள்.

"இதெல்லாம் என்ன நாடகம்? சபாஷ்! மோஹினீ அற்புதம்!" என்றார் வைத்தி. மைனரோ, எதுவும் பேசாமல் நின்றார். அதற்குள் வரதன் "இதோ போலீசைக் கூப்பிடறேன்" என்று ஓடினான். இதைக் கேட்ட மைனர், 'ஓய் மத்தளக்காரரே, நில்லும்! வந்த அவமானம் போதும்! இது போலீசுக்கும் தெரிய வேண்டாம்! வா, வைத்தி!" என்று கூறி நடந்தார்.

மோகனா திகைத்து நின்றாள். தாயின் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.

"ஐயோ! எனக்கு ஒண்ணுமே தெரியாது. சாவிக்காரன் என்னெனவோ வேணுமின்னு கேட்டான்! நான் எடுத்துத் தரப் போனேன்!" என்று அலறினாள் வடிவாம்பாள்.

## ஐம்பத்து மூன்றாம் அத்தியாயம்



# வைத்தியின் வைரம்

பையன்கள் பட்டம் விடுகிறார்கள். பட்டம் மரத்தில் போய் சிக்கிவிடுகிறது. அதை இழுக்கிறார்கள். முதலாவது ஆபத்தாக நூல் கயிறு அறுந்துவிடுகிறது. உடனே ஒரு கம்பை எடுத்து எறிகிறார்கள். இரண்டாவதாகக் கம்பும் சிக்கிவிடுகிறது. அந்தக் கம்பைக் கல்லாலெறிந்து தட்டுகிறார்கள். ஆனால், அந்தக் கல் வீதியில் போகும் ஒருவர் மேல் விழுகிறது. அதனால் சண்டை வருகிறது. பிறகு மரத்தில் ஏறுகிறார்கள். மரம் சறுக்கி மார்பெல்லாம் சிராய்த்துவிடுகிறது. இந்தச் சமயத்தில் காவல்காரன் வருகிறான். அவனைக் கண்டு விழுந்தடித்து ஓடுகிறார்கள். காலில் முள் குத்துகிறது. சாயங்காலம் வீட்டுக்குப் போனால் அங்கே தந்தை பிரம்புடன் காத்திருக்கிறார். "ஏண்டா மாமரத்தில் ஏறி மாங்காய் திருடினாய்?" என்று அடிக்கிறார்.

இத்தனை ஆபத்துகளும் எப்படி வந்தன? ஒரு பட்டம் சிக்கிக்கொண்டதால்தானே? ஆனால், அடுத்த நாள் காலையில் ஒரு வேடிக்கை நடக்கிறது. எங்கிருந்தோ ஒரு காற்று வருகிறது. மாமரத்தில் சிக்கிய பட்டம் தானே சிக்கலை எடுத்துக்கொண்டு, பறந்துவந்து அந்தப் பையன் வீட்டு வாசலில் விழுகிறது.

இம்மாதிரிதான் சிங்கபுரம் மைனரின் கதியும் இப்போது இருந்தது.

புத்தியைக் காற்றில் பறக்கவிட்டு அவர் பட்ட பாடும், வடிவாம்பாளிடம் அவர் பட்ட கல்லடியும், மாசதத்தின் பேச்சால் ஏற்பட்ட மார் வலியும், மாமன் அடிக்க வந்து கம்பை ஓங்கியதும், வைர அட்டிகை காணாமல் போனதும் இப்போது இவருக்கும் மறந்து போய்விட்டன. ஆனால், மோகனாவால் மறுபடியும் தன்னுடைய மதி தன்னிடம் திரும்ப வந்ததை எண்ணி அவர் சந்தோஷப்பட்டார். அதுவும் அற்ப சந்தோஷம்.

இந்தச் சமயத்தில் வைத்தியும் அவரும் சின்னச்சாமிக் கடையருகில் வந்துவிட்டார்கள்.

"என்ன மைனர்வாள், வடிவாம்பாளின் சாமர்த்தியத்தைப் பார்த்தீரா?" என்றார் வைத்தி.

"என்ன சாமர்த்தியம்?"

"நகை களவு போச்சன்னாளே, அதுதான்!"

"களவு போனா என்ன, போகாட்டி என்ன? நம்மைப் பொறுத்த வரை அது முன்னாடியே போனதுதானே!"



"அதெப்படி சார் போகும்? தும்பைக் கழுத்திலே போட்டு மாட்டை ஓட்டிவிட்டு வராப்பலே, அட்டிகையைக் கொடுத்தோம். மாடு இல்லேன்னா கயிறாவது கிடைக்க வேண்டாமோ?"

"கொஞ்சம் மனுஷாளைப்பத்திப் பேசும்" என்றார் மைனர்.

வைத்திக்குத் தூக்கி வாரிப்போட்டது. "என்னைப் பார்த்தா இப்படிக் கேட்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"உம்மைப் பார்த்து இதைக் கேட்டது தப்புத்தான். சரி. உம்மைப் பற்றியே பேசும்."

"அப்படியானா நான் மனுஷன் இல்லியா?"

"இதை ஏங்காணும் என்னைக் கேட்கிறீர்? உம்மையே கேட்டுக்கொள்ளும். அப்பத்தான் நிஜம் நல்லா தெரியும்."

"மைனர்வாள், கும்பகோணத்துக்கும் சாக்கோட்டைக்கும் எத்தனை மைல்?"

"ஏன்?"

"இல்லை, கும்பகோணத்துலே அடிபட்டவனுக்கு சாக்கோட்டையிலே போய் மீசை துடிச்சுதாம். ஏங்காணும், உம்மை வடிவாம்பாள் மோசம் பண்ணினால் அதுக்காக என்னை எதுக்குக் கோபிக்கிறீர்?"

"வைத்தி, சும்மா இரும். உம்ம பேச்செல்லாம் போய் உமக்கு என்னமோ மோகனாவைத் தெரியும்னு சொன்னீரே?"

"ஆமா, சொன்னேன்."

"அவ தெரியாதுன்னு சொன்னாளே?"

"கையிலே குடுத்த அட்டிகையையே காணும்கிறபோது ஆளைத் தெரியும்னு சொல்லுவாளா?"

"அப்படின்னா?"

"மத்ஸ்ய பாதம் ஜலே பச்யேத் ந நாரீ ஹ்ருதய ஸ்திதம்னு சொல்லியிருக்கா."

"யாரு?"

"காளிதாஸன்தான். அதாவது, நீரில் இருக்கும் மீனின் காலை அறிந்தாலும் அறியலாம். பெண்களின் இதயத்தை அறிந்துகொள்ள முடியாது என்று அர்த்தம்."

"ஏன் வைத்தி, நீர் சமஸ்கிருதங்கூடப் படிச்சிருக்கிறீரோ?"

"அதைப்பத்தி அப்புறம் சொல்றேன். ஏன் இப்படிப் போலீஸ் என்றதும் நடுங்கிவிட்டீர்?"

"ஆமா, அவன் ஏது நகைன்னு கேட்பான். மைனர் கொடுத்தார்னு இவங்க சொல்லுவாங்க. அப்புறம் நான் கோர்ட்டுலே போய் 'ஆமாம், நகையைக் கொடுத்தேன். ஒண்ணும் நடக்கல்லே. அதைத் திருப்பிக் கொடுக்க வந்தா' என்று சொல்லி நகையும் நஷ்டமாகி, பேரும் நஷ்டப்படணும்."

"இப்போ என்ன செய்யப் போகிறீர்?"

"இதே மாதிரி இன்னொரு அட்டிகை செய்யப் போகிறேன்"

"ஏன்?"

"அது குடும்ப விஷயம்."

"உம். அப்புறம்?"

"அதுதான் புரியல்லே. அந்த மோகனாவானால் எனக்கே புத்தி சொல்ல வரான். நீரானால் உள்ள புத்தியையும் குழப்புகிறீர். ஊருக்குப் போகவும் வெட்கமாயிருக்கு. இங்கே இருக்கவும் வெட்கமாயிருக்கு."

"உம்ம நிலைமையைப் பார்த்தா எனக்குத் துக்கமாயிருக்கு. சரி, ஒரு ஐந்நூறு ரூபாய் எடும்."

"எதுக்கு?"

"கடைசி சான்ஸ்!"

"உமக்கா?"

"இல்லை, உமக்குத்தான். ஒரு பிளான் இருக்கு. அதையும் செய்து பார்த்துடறேன்."

"அதிலேயும் தோல்வியடைந்தால்?"

"இந்த முயற்சியையே விட்டுவிடுவோம்!"

"ஏன், அதை இப்பவே விட்டுடுவோமே!"

"சரி, உம்ம இஷ்டம். உம்ம மாதிரி மைனர்களை நம்பி நான் இதில் இறங்கினதே தப்பு- நான் வரேன்" என்று வைத்தி வேகமாக நடந்தார்.

"ஓய் வைத்தி!" என்றார் மைனர்.

"ஏன்?"

"எங்கானும், மைனர் பையன் இல்லாமல் தாத்தாக்களா இந்த வேலைக்கு வரப்போறா? நான் உம்மைக் கேட்க வேண்டிய கேள்வியை நீர் என்னைக் கேட்கிறீரே— சரி சரி, இந்தாரும் முந்நூறு ரூபாய் இருக்கு இருநூறு ரூபாய் அப்புறம் தரேன். விஷயம் ஏதாவது முடியும் போலே இருந்தால் ஊருக்கு வாரும்."

"ஐயோ! அங்கே வந்தா நம்ம விஷயம் முடிஞ்சு போகும்! நீர் ஆட்டத்தன்னிக்கு இங்கு வாரும்."

"வந்தால்?"

"அதை ஏன் இப்பக் கேட்கிறீர். வாருமே, வைத்தியின் சாமர்த்தியம் அப்ப தெரியும்."

"சரி, வருகிறேன்" என்று சொல்லிவிட்டு வண்டியில் ஏறிப் புறப்பட்டார் மைனர். ஆனால், அவர் வண்டிக்குதிரை அடங்கி ஓடியது. மனக்குதிரையோ அடங்காமல் பலவிதமாகத் துள்ளியது.

வியாபாரம் செய்தவர் தோல்வி அடைந்தால், மறுபடியும் முதல் போட்டு வியாபாரம் செய்ய அவரிடம் பணம் இருக்காது. ஆதலால் அவர் தோற்றால் தோற்றதுதான். வைத்தியர்கள் தோல்வி



அடைந்தால், வியாதியஸ்தர்கள் இருக்கமாட்டார்கள். ஆகவே, அவர்களுக்கும் தோல்வி தோல்விதான். வக்கீல் தோல்வி அடைந்தால் வழக்கு வராது. அவர்களுக்கும் தோல்வி தோல்விதான். ஆனால், பெண் ஆசையில் தோற்றவர்களுக்கு மட்டும் தோற்கத் தோற்க மேற்கொண்டு ஆசை வளருமேயொழிய, அது குறைவது இல்லை. இல்லாவிட்டால், மூல பல சண்டை வரை ராவணன் போயிருக்க மாட்டான். உலகத்திலே வீரத்தால் மடிந்தவர்களைக்காட்டிலும், காமத்தால் மடிந்தவர்கள் அதிகம்.

சிங்கபுரம் மைனர் நல்லவர்தான். அவருக்கு மோகனாவின் புத்தி மதியைக் கேட்டவுடன் மனம் குழம்பியது. அவர் மாத்திரம் தனியாக இருந்தால் நேரே ஊருக்குப் போயிருப்பார். பாழும் சகவாசதோஷம் வைத்தியிடங்கூடக் கடன் சொல்ல நேர்ந்தது. தண்ணீரிலே விழுந்து திண்டாடுபவன், திட்டிலே இருக்கும் அருகம்புல்லைக்கூட ஆதாரமாகப் பிடிப்பதுபோல, ஆசை வெள்ளத்திலே தவித்த மைனர், வைத்தியின் கடைசி முயற்சிக்கும் பணம் கொடுத்தார்.

◆ ◆ ◆

இதே சமயத்தில் வடிவாம்பாள் வீட்டில் நடப்பதைப் பார்ப்போம். ஒருசிலருக்கு ஒவ்வொன்றில் அதிக நம்பிக்கை. நமது வடிவாம்பாளுக்கோ, காட்டேரி, பில்லி, சூன்யம், கிணற்றடிப்பேய், பூசணிக்காய், குங்குமம், ஜோஸ்யர் இவற்றிலெல்லாம் நம்பிக்கை அதிகம். அவள் பிறந்த நேரம் அப்படி. தெய்வ நம்பிக்கையைவிடப் பிசாசுகள் இடத்தில் அவளுக்கு நம்பிக்கை ஜாஸ்தி. குணத்தைவிட பணத்திடம் மதிப்பு ஜாஸ்தி. ஆகவே, நகை காணவில்லை என்றவுடன் அவள் போலீசுக்குப் போகவில்லை. நேராக ஜோஸ்யர் வீட்டைத்தான் தேடி வந்தாள்.

தஞ்சாவூரிலே நெல் விளைகிறது. மைசூரில் கரும்பு விளைகிறது. வங்காளத்தில் சணல் விளைகிறது. இலங்கையில் தேயிலை விளைகிறது. ஆனால், மலையாளத்தில் மா, பலா, தென்னுடன் மந்திரம், தந்திரம், ஜோஸ்யம், ஆயுர்வேதம் முதலியவைகளும் விளைகின்றன. நம் நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் மலையாள ஜோஸ்யர்கள் தான் இருப்பார்கள். மிகவும் நன்றாகப் பலிப்பது ஊமை ஜோஸ்யம். அதற்கு அடுத்தபடி பலிப்பது மலையாள ஜோஸ்யந்தான். ஊமை ஜோஸ்யர் ஜோஸ்யம் சொல்ல ஆரம்பித்தால் நாம் எதையும் அர்த்தம் செய்துகொள்ளலாம். ஆனால், நமது மலையாள ஜோஸ்யர் மாதவம் பிள்ளை பேச ஆரம்பித்தாலோ, நமக்கு வேண்டியதை மட்டும் நாம் அர்த்தம் பண்ணிக்கொள்ளலாம்.

வடிவாம்பாள் ஜோஸ்யர் வீட்டுக்கு ஓடி வந்தாள். அவள் வந்த விதத்திலேயே ஜோஸ்யருக்கு விஷயம் புரிந்துவிட்டது.

"எந்தா, ஆருடமோ?" என்றார் ஜோஸ்யர்.

"ஆமாங்க, எப்படி நீங்க கண்டுக்கிட்டீங்க?"

"நீங்க வந்த நேரம். இப்போ கடகம்."

"கடகம் இல்லீங்க? அது கையிலே போட்டுக்குறதுல்ல" என்றாள் வடிவாம்பாள். ஜோஸ்யர் நகை போய்விட்டது என்று புரிந்துகொண்டார்.

"உம். அதெல்லாம் நீ ஒண்ணும் பறைய வேண்டாம் ஒரு நகை காணாமே போச்சு இல்லையா? நான் ஆருடம் பார்த்துச் சொல்லிட்டேன்னா அது கிடைக்கிறதிலே ஒண்ணும் அட்டியில்லே!" என்றார் ஜோஸ்யர்.

"அடே, ஆச்சரியமாக இருக்குதே! அட்டியல்தான்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?"

முகத்தைப் பார்த்தாலே தெரியும். அட்டிகை காணோமா?"

"ஆமாம்." உடனே ஜோஸ்யர் யோசனையில் ஆழ்ந்தார்.

"நாத்தி எட்டுக்குள்ளே ஒரு நம்பர் சொல்லு."

"12" என்றாள் வடிவாம்பாள்.

"12... நாலு மூணு 12... ஆறு இரண்டு 12..... முதல்லே ஒன்று, அப்புறம் இரண்டு. சரிதானே?"

"ஆமாங்க!" வேறு என்ன சொல்வாள்...?

"பின்னே இரண்டு கால் உடைய ஒரு ஜீவனால்தான் அது..."

"ஐயோ, அப்படியே சொல்லிவிட்டீங்களே!"

அவளுடைய ஆசையில், ஆடு மாடுகள் நகையைத் தூக்கிக் கொண்டு போயிருக்கும் என்று அவளால் கருத முடியவில்லை. மனிதன்தான் எடுத்து இருக்க வேண்டுமென்று ஜோஸ்யர் சொன்னவுடனே, அவள் உள்ளம் குளிர்ந்தது "எந்தப் பக்கத்திலே இருந்து வந்தான், எங்கே கொண்டுபோயிருக்கிறான்? அதையும் சொல்லுங்கோ" என்றாள்.

"வடிவாம்பாள் அம்மாள், இது போலீசுக் கேசு. நான் கண்டு பிடிச்சுக் கொடுக்கப்படாது கொடுத்தா, நானும் உட்கை என்று நினைப்பாங்க உங்களுக்கு என்ன? அட்டிகை வந்து சேரும், போங்க."

"எப்படி வந்து சேரும்? எடுத்தவன் கொண்டாந்து கொடுத்திடுவானா?"

"சும்மா கொடுத்துடுவானா? அதற்கு ஒரு ஹோமம் இருக்கு. ஆகர்ஷணி ஹோமம் என்று பெயர். அதைப் பதினோரு நாளைக்குச் செய்தா பன்னிரண்டாவது நாள் உங்களுக்குப் புரிஞ்சுடும். ஒரு நூறு ரூபாய் ஆகும்."

"அதுக்கென்ன, தரேன். இன்னிக்கே செய்ய ஆரம்பிங்க. அப்போ அட்டிகை கிடைக்கப் பதினைஞ்சு நாளாகுமா?"

"அதுக்குள்ளே கிடைச்சாலும் கிடைக்கலாம். அப்புறம் கிடைச்சாலும் கிடைக்கலாம். கிடைக்கவில்லையானால் எனக்கு



ஊருக்கு ஒரு எழுத்து எழுதுங்க. நான் அங்கேயிருந்து ஒரு மாந்திரீக வேலையிருக்கு. அதைச் செய்யிறேன்."

"அப்போ, நீங்க ஊருக்குப் போகப் போறீங்களா?"

"பின்னே என்னைப் போல ஜோஸ்யம் சொல்றவங்க ஒரே ஊரிலே இருக்க முடியுமா?" என்று சொல்லி நூறு ரூபாயை அட்வான்ஸாக வாங்கிக்கொண்டார். டிக்கெட்டுக்குப் பணம் வந்தது என்று ஜோஸ்யருக்குச் சந்தோஷம். வடிவாம்பாளுக்கோ, அட்டிகை வந்துவிடும் என்ற சந்தோஷம்.

அந்த நம்பிக்கையோடு வீட்டுக்கு வந்தாள். ஆனால், வாசலில் வைத்தியும் வரதனும் சண்டை பிடித்துக்கொண்டிருப்பதைக் கண்டாள்.

"உங்களுக்கு வேண்டியவங்க இங்கே இல்லே. நீங்க உள்ளே வரவேண்டியதில்லை" என்றான் வரதன்.

"தம்பீ, நான் அந்த மரியாதையெல்லாம் எதிர்பார்க்கிறதில்லே எனக்கு மோகனாவை அர்ஜண்டா பார்க்கணும்" என்றார் வைத்தி.

"என்ன விஷயம்?"

"நகை விஷயம்! அது களவு போனதுலே சில பேர் மேலே சந்தேகம் இருக்கு."

"எனக்குச் சந்தேகமெல்லாம் ஒரு ஆள் மேல்தான்" என்றான் வரதன்.

வைத்திக்கு ஆனந்தம். 'துப்புக் கிடைக்கிறது இதைக் கொஞ்சம் வேலை செய்து கண்டுபிடித்துவிட்டால், வடிவாம்பாளுக்குப் பெரிய உபகாரம் செய்தவன் ஆவோம். அந்த உபகாரத்திற்குக் கூலியாகவாவது மோகனாவை மைனருக்குக் கேட்கலாம்' என்ற ஆசை எழுந்தது.

"யாரு மேலே சந்தேகம்? சும்மா சொல்லு."

"என்னாத்துக்கு, வேண்டாமுங்க."

"சும்மா சொல்லு தம்பி. உங்களுக்கெல்லாம் 'யங் மைண்டு' நீங்க எல்லாம் படிக்கல்லேயே தவிர, மூளையிலே 'பிரிலியன்ஸ்' இருக்கு."

"என்ன இருக்கு? பிரியலென்ஸா! அது உமக்கு இருக்கட்டும். உம்ம தாத்தாவுக்கு இருக்கட்டும். எனக்கு ஏய்யா அதெல்லாம் வருது? என் மூளை சுத்தமான மூளை."

"அதைத்தானப்பா சொல்றேன் நான். அதுக்குள்ளே கோவிச்சுக்கிறயே, உனக்கு யாரு மேலே சந்தேகம்?"

"வேண்டாமுங்க. சொன்னா வம்பு."

"மத்தளக்காரரே, உமக்கு எத்தனை ரூபா சம்பளம்?"

"அதை நான் கேட்டதே இல்லீங்க!"

"நீ கேட்காமே இருப்பது உன்னுடைய நல்ல சுபாவத்தைக் காட்டுது. அதுக்காக வடிவாம்பா கொடுக்காமே இருக்கணுமோ?

உனக்கெல்லாம் இப்போ சௌகரியமாக இருக்கவேண்டிய வயசு. இந்தா" என்று ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினார் வைத்தி. வரதன் அதைப் பதில் சொல்லாமல் வாங்கிக்கொண்டு, "இது எதுக்குங்க?" என்றான்.

"உமக்கு யாரு மேலே சந்தேகம், சொல்லு. அட்டிகை மாத்திரம் அகப்படட்டும், இன்னும் 90 ரூபாய் உனக்கு பிரசண்ட் பண்ணறேன்."

"சொல்லிடட்டுமா?"

"சொல்லு."

"எனக்கு உங்க மேலேதாய்யா சந்தேகம். இல்லாட்டி, அட்டிகை காணாமே போனவுடனே, நீங்க வீட்டுக்கு வருவீங்களா?"

"அட பாவி...!"

"யாரு பாவி...? உங்க கையிலே இருந்து பத்து ரூபாய் பணம் வாங்கினேன் இல்லே, அதனாலேதான் பாவிங்கற பட்டம் உடனே வந்துட்டுது!" என்று நோட்டைக் கீழே எறிந்தான் வரதன்.

"வரதப்ப பிள்ளே!"

"என்ன, மரியாதையெல்லாம் பலமாக இருக்கு. போங்கய்யா வீட்டை விட்டு! பத்து ரூபாயைக் கொண்டாந்து லஞ்சம் கொடுக்க வரார்! இது யாரு தெரியுமில்லே? பண்டரிபுரம் ஆளு. பணத்தாளு இல்லை."

"இல்லே, மத்தளக்காரரே, நான் உன்னே வந்து மோகனாவைப் பார்த்து ஒரு ஆபத்தைத் தடுக்கணும்."

"அட போய்யா. நீயே ஆபத்து இவரு என்னமோ உள்ளே போய் ஆபத்தைத் தடுக்கப் போறாராமில்லே!"

இந்தச் சமயத்தில்தான், "என்ன வரதா சண்டை?" என்று கேட்டுகொண்டே வடிவாம்பாள் வந்தாள்.

"இல்லேம்மா, இந்த ஆளு வீட்டுக்குள்ளே வரணும் என்கிறாரு."

"என்ன விஷயம்?" என்று பயந்துகொண்டே வைத்தியிடம் கேட்டாள் வடிவாம்பாள்.

"வடிவாம்பாம்மா, மேலும் பெரிய ஆபத்து மைனர் ரொம்பக் கோபமாக இருக்காரு. உங்க வீட்டிலேதான் யாரோ நகையை ஒளிச்சு வைச்சுக்கிட்டு, ஏமாத்திப்பிட்டதாக எண்ணுகிறாரு."

"என்ன சந்தேகப்படறாரா?"

"அப்பாடி ஒண்ணும் சந்தேகப்படல்லே. ஒரு சம்சயம். எதுக்கும் போலீசை விட்டு, வீட்டைச் சோதனை பண்ணணும் என்கிறாரு."

"அவங்கதான் போலீசிலே எழுதி வைக்க வேண்டா முன்னாங்களே!"

"மைனர் மனசுதானே! அடிக்கடி மாறுமோல்லியோ? 'வீடு முழுவதுமே சோதனை போடணும், வாசலில் எல்லாம் போலீசாரைக் கொண்டுவந்து நிறுத்தணும். உண்டு இல்லேன்னு பாத்துடணும்'



அப்படின்னு என்கிட்டே கோவமா பேசி ஆட ஆரம்பிச்சாரு. உடனே நான் கேட்டுக்கின்டு வரேன்னு வந்துட்டேன்."

"என்ன கேட்டுக்கிட்டு...?"

"பதிலைத்தான்! உங்க பொண்ணு வாயாலே 'எஸ்'னு சொல்லட்டும். இப்பவே போட்டி ஆட்டத்துக்குப் புதுசா ஒரு செட் நகை, புது அட்டிகை எல்லாம் கிடைக்கும். இல்லே, போலீசு இப்பவே வந்துடும். போட்டி ஆட்டம் நடக்காது."

இதைக் கேட்டு வடிவாம்பாள் பயந்தாள். சற்று யோசித்தாள் நட்டுவனார் என்ன சொல்லுகிறார், கேட்கலாம் என்று பக்கத்தில் திரும்பினாள். வாசல் முழுவதும் போலீஸ் நிற்கும் என்று கேட்டவுடனே நட்டுவனார், கொல்லைப்புறமாக வீட்டுக்குப் போய்விட்டார். வடிவாம்பாளுக்குத் திகைப்பு அதிகமாயிற்று.

"என்னாத்துக்கம்மா கலங்குறீங்க? மடியிலே கனம் இருந்தா தானே வழியிலே பயம்? நம்ப வீட்டிலே களவு போன நகைக்கு, இவரு எதுக்கு போலீசைக் கூப்பிடறாரு?" என்றான் வரதன். வடிவாம்பாளுக்கு அது நியாயமாகபட்டது.

உடனே வைத்தி, "நகை மைனருதுதானே?" என்றார் வடிவாம்பாளுக்கு இதுவும் நியாயமாகப்பட்டது.

"அந்த நகையிலே எத்தனை வைரம் பதிச்சிருக்குது, உனக்குத் தெரியுமா?" என்றார் வைத்தி.

"அட்டிகையிலே 36, பதக்கத்திலே 28, ஆக மொத்தம் 64 வைரம்."

"கரக்டா எண்ணியிருக்கியே! அதிலே பாதி கிடைச்சா போதும் மைனருக்கு."

"அது என்ன பாதி?"

"வைரத்துக்குப் பதிலா முத்து. 64க்குப் பதிலா 32. உன் மக வாயைத் திறந்து ஒரு தடவை மைனரைப் பாத்துச் சிரிச்சுட்டான்னா போதும்."

இதைக் கேட்ட வரதனுக்குக் கோபம் வந்துவிட்டது. '32 பல்லுதானே வேணுங்கிறாரு? உங்க பல்லைக் கழட்டி அவரு கையிலே கொடுக்கிறேன்" என்று வேகமாக ஓடி வந்தான்.

வடிவாம்பாளோ, "ஏய் வரதா, நீ வேலைக்காரனா லட்சணமா இரு. குடும்ப விசயத்திலே எல்லாம் நீ உள்ளே புகுந்து பேசாதே. எங்களுக்கு ஒரு ஆபத்து வந்தா நீ என்ன செய்வாய்?— இந்தாங்க வைத்தி, நான் படாத பாடு பட்டேன். எத்தனையோ சொன்னேன். என் பொண்ணு நான் சொன்னதைக் கேட்கலே" என்றாள்.

"சொன்னதைக் கேட்கலேன்னா, மைனர் கையிலே பதினாறாயிரம் ரூபாயைக் கொடுக்கச் சொல்லு" என்று சீறினார் வைத்தி. வடிவாம்பாளுக்கு வயிற்றில் பகீர் என்றது.

"இப்படியெல்லாம் அந்த மைனர் கேட்கலியே!"

"பெரிய மனுஷர் ஆச்சே! அவர் வாயை விட்டுக் கேட்பாரா? அதுக்குத்தான் என்னை அனுப்பிச்சு இருக்காரு. பதினாறாயிரம் வரணும்; இல்லே, உன் மகள் இஷ்டப்பட்டுச் 'சரி' என்று சொல்லணும் எல்லாம் உன் மக கையிலேதான் இருக்கு நான் வரேன்" என்று சொல்லிவிட்டு வைத்தி 'விடு விடு' என்று நடந்தார்.

வடிவாம்பாளும், வரதனும் வீட்டுக்குள்ளே நுழைந்தார்கள். வந்த வேகத்தில், "எய்— மோகனா!" என்று ஆத்திரத்தோடு கூப்பிட்டாள் வடிவாம்பாள்.

"என்னம்மா?" என்று கேட்டுக்கொண்டே வந்தாள் மோகனா.

"உனக்கு என்ன? எல்லாந்தான் அடிச்சு மூப்பா போச்சு. நான் உன்னை எதுக்கு வளர்த்தேன்? எதுக்குப் பெத்து எடுத்தேன்? ஏண்டி, வாழத் தெரியலே உனக்கு? அந்த மனுஷன், லட்சாதிபதி; பிச்சைக்காரனாட்டம் நம்ம வீடு தேடி நடையா நடக்கிறாரு. அவருக்கு என்ன, வயசிலே குறைவா, அழகிலே குறைவா, அந்தஸ்திலே குறைவா? நீ ஏன் மாட்டேன்னு சொல்றே?"

"எனக்கு அவரைப் பிடிக்கலே."

"உனக்குப் பிடிக்கறதையும், பிடிக்காததையும் நான் இப்போ கேட்கலே. அந்த மனுஷன் கிட்டே நான் சரின்னு சொல்லிட்டேன்."

"அப்படின்னா...?"

"ஆமா, சொல்லு. என்ன மலைக்கிறே?" மோகனாவுக்கு அந்த ஒரு வார்த்தையைக் கேட்டதும் நெருப்பை மிதித்ததைப் போல் ஒரு உணர்ச்சி ஏற்பட்டது.

"அம்மா, எனக்கு மனது ஒப்பவில்லை."

"என்ன சொன்னே?"

"ஆமாம் அம்மா. மறுபடியும் அவர் இந்த வீட்டில் நுழைந்தால் என்னை நீங்கள் உயிரோடு பார்க்க முடியாது."

"அப்படியா சொல்றே நீ? நான் ஏண்டி இதெல்லாம் பார்க்கிறேன்! எனக்கென்னடி வந்தது? நான் இப்போவே போய்க் கொல்லைக் கிணத்திலே விழுந்திடுறேன் !" என்று பரபரவென்று நடந்தாள் வடிவாம்பாள்.

"அம்மா, அப்படி எல்லாம் சொல்லாதீங்கம்மா !" என்று மகள் ஓடி வந்து தாயின் கையைப் பிடித்துக்கொண்டாள். மகள் தடுக்கிறாள் என்பதைக் கண்டவுடனே, வடிவாம்பாள், "விடுடி என்னை! இனி ஒரு நிமிஷம் உன் வீட்டிலே இருக்கமாட்டேன். நான் இப்பவே போய் விழுந்துடறேன் பாரு" என்று திமிறிக்கொண்டு நடந்தாள். "அம்மா! அம்மா" என்று கூப்பிட்டுக்கொண்டே தொடர்ந்தாள் மோகனா.

அப்பொழுது வரதன் "சும்மா விடு மோகனா. அவங்க ஆசையை ஏன் கெடுக்குறே? அவங்க எத்தனை தடவைதான் விழுகிறாங்கன்னு பார்ப்போம். பாதாளக் கரண்டி போட்டு எடுத்த மாதிரி, நான் குதிச்சு எடுத்திட மாட்டேன் ! சும்மா போய் விழுங்க அம்மா" என்றான்.

13
48H2704
நகர், சென்னை-83



"எய் வரதா! நீ வீட்டை விட்டு வெளியே போ" என்று அலறினாள் வடிவாம்பாள்.

"அது எப்படிங்க போகிறது? ஒண்ணு, நீங்க கிணத்திலே விழுகிறேனுங்கிறீங்க, இல்லாட்டி மோகனாவைத் தள்ளுறேங்கறீங்க. இந்தத் தகராறிலே உங்களை விட்டுட்டு நான் போக முடியுமா? உங்க வீட்டுச் சாப்பாட்டைச் சாப்பிட்டவன் பாருங்க எம்மா. நான் கேட்கிறேன்: மோகனாவுடைய கலைக்கும் அழகுக்கும் அதை காசுக்கா விக்கிறது?"

"இல்லாட்டி, இப்போ பதினாறு ஆயிரம் கொண்டான்னு அவன் கேட்கிறானே, என்ன பண்ணறது?"

"எதுக்குப் பதினாறு ஆயிரம்?"

"அதுதான், அவன் கொடுத்த அட்டிகைக்கு."

"அவன்தானே கொண்டாந்து கொடுத்தான். மோகனா கை நீட்டி வாங்கிச்சா? இதெல்லாம் இந்த வைத்தி வேலையம்மா. எனக்கு ஒரு வார்த்தை சொல்லுங்க. அந்த ஆளை மாவா பிசைஞ்சு மத்தளத்துக்கு வச்சுடறேன் !"

வரதனின் கோபமும், வடிவாம்பாளின் பேதைமையும் பணத்தாசையும் மோகனாவைத் துன்புறுத்தவில்லை. ஆனால் "இந்த மைனரின் அட்டகாசம், போட்டி ஆட்டத்தைக் கெடுத்துவிடக் கூடாதே. நாளை அவன் வீடு முழுவதும் தேடுகிறேன் என்று போலீசுடன் வந்தால் வம்பும் வழக்கும் வரும். தன் தாயின் தவறு ஊரெல்லாம் பேசப்படும். எதற்கு இந்த அவமானம்? நம் நகைகளை விற்றாவது அவனுக்குப் பணத்தைக் கொடுத்துவிடுவோம். நம்முடைய ஒரே ஆசையாகிய ஆட்டம் நடக்கட்டும்,' என்று எண்ணினாள்.

"வரதா, நீ அவரை அடிக்கவும் வேண்டாம், அம்மா போய் கிணற்றில் விழவும் வேண்டாம். அழகர் கோவிலில் கிடைத்த சங்கிலி ஒன்றைத் தவிர என்னுடைய நகைகள் எல்லாவற்றையும் இப்பவே கொண்டுபோய் வித்து அந்தப் பணத்தை அவர்களுக்குக் கொடு" என்று சொல்லிக்கொண்டே மோகனா தன்னுடைய ஒட்டியாணம் முதல் வைரப் புல்லாக்குவரை நகைகளை எல்லாம் கழற்றி ஒரு பழுக்கா மரவையில் வைத்தாள். அதைப் பார்த்த வடிவாம்பாள் பிரமித்தாள்.

வரதன், "ஆட்டத்துக்கு?..." என்றான்.

"ஆட்டத்துக்கு நகை எதற்கு? நான் போதும். இனி அந்த அலங்காரம் எல்லாம் எனக்குத் தேவையில்லை. ஆண்டவனுக்கு முன்னால் ஆடப் போகிறேன். கலைக்காக ஆடப் போகிறேன். ஆடி வெற்றி கண்டு நான் ஆனந்தப்பட என்ன இருக்கிறது. என் நாட்டியத்துக்கு நகை வேண்டுமா? அஞ்சலி பிடிக்க ஹஸ்தம் போதாதா? மோதிரம் போட்டால்தான் முத்திரை பிடிக்க வருமா?

காலுக்குத் தாளமும் கண்ணுக்கு பாவமும் போதும்" என்று சொல்லி ஒவ்வொன்றாய்க் கழற்றி வைத்தாள். வரதனும், வடிவாம்பாளும் அவள் விரக்தியைக் கண்டு திகைத்தார்கள்.

நகைகளையெல்லாம் கழற்றிவிட்டு, அவள் நின்ற அழகு, ஒரு 'பாலயோகினி போல' தெய்வக் குழந்தைபோல, அருள் வடிவும் தேவமகளே எதிரில் வந்து நிற்பது போலக் காட்சி அளித்தது.

அப்பொழுது, "சிவா, திருச்சிற்றம்பலம்" என்ற தேமதுரத் தமிழோசை வெளியே இருந்து கேட்டது. எல்லோரும் குரல் வந்த திசையை நோக்கினார்கள். மறுபடியும், "திருச்சிற்றம்பலம்" என்று கேட்டது.

"சுவாமி!" என்று ஆவலுடன் கூவினாள் மோகனா. கதவைத் திறந்துகொண்டு ஓடினாள். தாழ்வாரத்தில் நின்ற பரமானந்தப் பரதேசியாரின் கால்களில் அடியற்ற மரம்போல விழுந்தாள்.

"திருவருள் காக்க" என்று கை தூக்கி ஆசீர்வதித்தார் பரதேசி.

"சுவாமி, திருவருள் உண்மையாக இருந்தால், என் துயரத்தைப் போக்கட்டும். என்னைப் படைத்துப் பணத்திற்கு விற்க வேண்டாம். என் கலையைக் காசால் மறைக்க வேண்டாம். ஐயோ, என்னை ஏன் நீங்கள் காப்பாற்றினீர்கள்?" என்று காற்றில் கீழே விழுந்து வெயில் துவண்ட ஒரு பூங்கொடி போல் அவர் திருவடிகளைப் பற்றிக் கொண்டு கதறினாள் மோகனா.

"அன்னையே, நானா உன்னைக் காப்பாற்றினேன்? இறைவன் காப்பாற்றினான். ஏன் காப்பாற்றினான் என்பது அவனுக்குத்தான் தெரியும். எழுந்திரு" என்று அன்புடன் உரைத்தார் பரதேசியார்.

"இல்லை. எனக்கும் தெரியும். தாங்க முடியாத துயரத்தைத் தாங்கப் படைத்தான். மருப்படாத வாழ்க்கையில் ஒருவர் மாசு சொல்லப் படைத்தான். யாரை நம்பிச் சரணம் என்று அடைந்தேனோ, அந்தக் கால்களே என்னை எத்தப் படைத்தான். எந்த இசையை உயர்ந்தது என்று கருதி என் மனத்தைப் பறி கொடுத்தேனோ, அதுவே எனக்கு வசை பாட என்னைப் படைத்தான். சுவாமி, யார் வயிற்றில் பிறந்ததற்காக ஆனந்தப்பட்டேனோ, அவர்களே என்னை வெறுக்கப் படைத்தான். நன்றாக ஆடினேன், உலகம் மதித்தது. அழகோடு பிறந்தேன், எல்லாரும் புகழ்ந்தார்கள் என்று இறுமாப்போடு இருந்தேன். அத்தனை இறுமாப்புகளையும் ஒருவர் காலையால் உதைத்தார். அதுவும் போதாதென்று காலால் எற்றினார். சந்தேகத்தால் என் வாழ்வையே நாசம் செய்கிறார். இந்தத் துயரம் போதும். சுவாமி, இதற்காகவா என்னைக் காப்பாற்றினீர்கள்?" என்று இரு கண்களிலும் நீர் பெருக அரற்றினாள் மோகனா.

"குழந்தாய்! பிறவியை இன்பமாக மாற்றுவதும், துன்பமாக மாற்றுவதும் நம் இதயத்தில்தான் இருக்கிறது. வாழ்க்கை ஒரு கடல் அதில் அலை மோதுவது இயற்கை.



"இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்"

என்று நாம் வாழும் வகையைக் கூறிய வள்ளுவப்பெருமான் சொல்லுகிறார். காற்றடித்தால் விளக்கு நடுங்குவது போல் நாம் நடுங்கக் கூடாது. சிரிக்கத் தெரியாதவன் பிழைக்கத் தெரியாதவன் என்பார்கள். துன்பத்தைக் கண்டு அஞ்சக் கூடாது. அதுதான் இன்பத்தின் ஏணி. அறிவுடைய நீ இவ்வாறு கலங்கலாமா? எழு. விழி. சிரி. என்ன வடிவாம்பாள்! ஏன் பார்த்துக்கொண்டு கல்லுப் போல் நிற்கிறாய்? குழந்தை கண் கலங்குகிறாள். அவள் கண்ணீரைத் துடைப்பதற்கு என்ன?" என்றார் பரதேசியார்.

வடிவாம்பாளுக்குப் பேச வரவில்லை. இதுவரை அவள் அடக்கி வைத்துக்கொண்டிருந்த துக்கம் பீறிட்டுக்கொண்டு வந்தது.

"சாமி, நீங்கதான் காப்பாத்தணும். அது இப்படிக் கடுமையாகப் பேசப் பேச, என் நெஞ்சைக் கத்தியாலே குத்தறாப்பிலே இருக்கு. இனி மேல் அவ வம்புக்கு நான் போகல்லே. அவ எப்படியாவது யாரையாவது கட்டிக்கிட்டு வீடும் விளக்குமா நல்லா இருந்தா போதும்" என்று சாமியாரின் பாதத்தில் பணிந்தாள்.

"திருவருள் காக்க. இதெல்லாம் என்ன? ஆடலும், பாடலும் நிறைந்து இருக்க வேண்டிய வீட்டில் ஆத்திரமும் அழுகையும் ஏன் வந்தன? குழந்தாய், இங்கே வா" என்று மோகனாவை அருகில் அழைத்து அன்புடன், "அழுவதைப் பார். கண்ணைத் துடைத்துக் கொள். போட்டிக்கு ஆடி எல்லாவற்றிலும் ஜெயித்து, நன்றாக வாழ வேண்டியவள் நீ; நீயா அழுவது?" என்று சொல்லி, அவளுடைய கண்ணீரைத் தம் கையால் துடைத்தார் பரதேசியார். அந்தக் கை அன்பு கலந்த கை, அமிர்தம் நிறைந்த கை. இறைவனை வணங்கிய கை, ஈசனுக்கு நறுமலர் கொய்து இட்ட கை ஆதலால், அதன் ஸ்பரிசம் பட்டவுடனே மோகனாவின் துயரம் மறைந்தது. மோகனா பச்சைக் குழந்தை போல் பேந்தப் பேந்த விழித்துக்கொண்டு நின்றாள்.

"மோகனா, என்னம்மா வருத்தம்? அந்த நாகலிங்கம் இங்கே வந்து ஏதாவது தொந்தரவு செய்தானா?"

நாகலிங்கம் என்ற பெயரைக் கேட்டவுடனே மோகனா, வடிவாம்பாள் இருவரும் திடுக்கிட்டனர். "அந்தப் பாவி இங்கும் வந்துவிட்டானா?" என்றாள் வடிவாம்பாள்.

"வந்தாலும் வருவான். அவனைக் கைது செய்து விசாரணைக்காக மதுரைக்குக் கொண்டுபோகும் வழியில் போலீசாரை ஏமாற்றிவிட்டு ஆற்றில் குதித்துவிட்டான். மறுபடியும் உன் வீட்டைத் தேடி வந்து குழந்தைக்கு ஏதேனும் இடையூறு செய்வானோ என்று எண்ணித்தான் நான் இங்கு வந்தேன்."

"பின்னே, அந்தச் சண்டாளன்தான் நகையைத் தூக்கிவிட்டுப் போயிருக்கணும்!" என்று அலறினாள் வடிவாம்பாள்.

"அம்மா, அவன் இங்கு வந்தால் நகையைத் திருடமாட்டான். சாபத்தால் கண் இழந்தவன். அழகர் கோவிலிலேயே குழந்தைக்கு ஆபத்தை உண்டாக்கியவன். உன் மகளுக்குத்தான் ஏதேனும் இடையூறு செய்வான்."

இதைக் கேட்ட மோகனாவின் உடல் நடுங்கியது. ஆட்டம் நெருங்க நெருங்க ஆபத்துகள் அதிகமாகின்றனவே என்று அவள் மனம் வருந்தியது.

வடிவாம்பாள் அவர் காலடியில் வந்து உட்கார்ந்தாள். "சாமி, உங்களை ஒண்ணு கேட்கலாமா?"

"கேள்."

"நீங்க முக்காலமும் தெரிஞ்சவங்களாச்சே. இங்கே ஒரு வைர அட்டிகை களவு போயிடுச்சு. அதை யாரு எடுத்துக்கிட்டுப் போயிருப்பாங்க, சொல்லுங்க" என்றாள்.

பரதேசியார் லேசாகச் சிரித்தார். சற்று உயரப் பார்த்துக் கொண்டே யோசித்தார். "எங்கிருந்து வந்ததோ அங்கு செல்வதுதான் எல்லாவற்றுக்கும் இயற்கை" என்றார்.

தன் தாய் இந்தச் சமயத்தில் பரதேசியாரிடமே குறி கேட்க ஆரம்பித்துவிட்டதைக் கண்ட மோகனாவுக்குத் தாயின் மேல் சிறிது பரிதாபங்கூட வந்தது. "அம்மா! அதையெல்லாம் கேட்க இதுவா நேரம்? ஆபத்துத் தலைக்கு மேல் வந்திருக்கிறது. இன்னும் நாலு நாளில் போட்டி ஆட்டம் இருக்கு. அதுவரையில் ஒரு துன்பமும் இல்லாமல் இருந்தால் போதும். சுவாமி! நீங்கள் இருக்கும் போது எனக்குப் பயமே இல்லை. நாகலிங்கம் என்ன, எமனே வந்தாலும் நான் அஞ்சமாட்டேன்...... நீங்கள் போட்டிக்கு....." என்று வெட்கத்துடன் ஏதோ பேச ஆரம்பித்தாள்.

"எனக்குப் பஞ்சாயத்தன்றே தெரியுமே. ராஜாவின் தர்பாரிலே உன் நாட்டியம், கலை அரசனின் வாசிப்பு. இதைவிட இந்தப் பண்டாரத்திற்கு என்ன வேண்டும்?"

பரதேசியார் போட்டிக்கு இங்கு இருக்கப் போகிறார் என்று அறிந்தவுடன் மோகனா ஆனந்தம் அடைந்தாள். "இப்போது பாலும் பழமும்" என்றாள்.

"ஆமாம், மறந்துவிட்டேனே, பசிக்கிறது. உள்ளே போய் இரண்டு மிளகாய்ப் பழமும், ஒரு குவளை நீர் ஆகாரமும் கொண்டு வா."

"நல்லாருக்கு! இதோ பாலைக் காய்ச்சிக்கிட்டுப் பழமும் எடுத்துக்கிட்டு வர்றேன்" என்று எழுந்தாள் வடிவாம்பாள்.

"அம்மா, நான் பரதேசி. பணக்காரன் அல்ல. எனக்கு உடலைக் காப்பாற்றத்தான் ஆகாரம் வேண்டும். அதற்கு உரம் போட வேண்டும். கொஞ்சம் மோரு போதும்" என்றார் பரதேசியார்.



"என்ன சாமி, நம்ம பிழைப்பில் கையை வைக்கிறீங்களே" என்றான் வரதன். எல்லோரும் சிரித்தார்கள்.

ஐம்பத்து நான்காம் அத்தியாயம்



## முன்னலங்காரம்

"தம்பி, இப்ப உங்களைப் பாத்தா அப்படியே மைசூர் மகாராஜாவாட்டம் இருக்குது!" என்றான் தருமன்.

"நீ எப்ப அண்ணே அவரைப் பார்த்தே? இந்தா தருமண்ணேன்! உன் காலடி மண்ணைக் கொஞ்சம் எடு; தம்பிக்குத் தலையைச் சுத்திப் போடுவோம். உன் கண்ணாலே பார்த்தாலே காயம் பட்டுவிடும். இப்ப வாயாலே வேறே சொல்லிட்டியா!" என்றார் முத்துராக்கு.

இவர்கள் பேச்சைக் கேட்டுச் சண்முகமும், காரைக்கால் நடேசனும் கலகலவென்று சிரித்தார்கள்.

இன்றைய தினந்தான் திருவாரூர் ரிஷப வாகனம். இன்று இரவில் தான் மோகனாவுக்கும் சண்முகசுந்தரத்துக்கும் கலைப்போட்டி நடைபெறப்போகிறது. இதை அறிந்த காரைக்கால் நடேசன் சும்மா இருப்பாரா?

ராஜ தர்பார்களில் கச்சேரி செய்யும் ஆஸ்தான வித்வான்கள் தலையில் பாகை அணிந்து, உடலில் சட்டை தரித்துத்தான் சேவை செய்ய வேண்டும் என்று ஒரு பழக்கம் நம் நாட்டில் உண்டு. திருவாரூரோ அரசர்க்கெல்லாம் அரசனாகிய தியாகராஜன் கோவில் கொண்ட ஊர். இந்த ஊரில் சுவாமிக்கு முன் சேவை செய்யும் வித்வான்கள் சட்டை தரித்துப் பாகை அணிந்துதான் சேவைகள் செய்தல் மரபு.

இறைவன் திருவீதி வலம் வருகையில் சண்முகம் வாசிக்கப் போகிறான் என்பதை அறிந்த உடனே காரைக்கால் நடேசனுக்கு ஓர் ஐயம் எழுந்தது. 'சண்முகம் கல்யாணி வாசிப்பாரா, மோஹனம் வாசிப்பாரா?' என்பதல்ல. 'கோயில் சட்டையும் பரிவட்டமும் அவருக்குக் கொடுப்பார்களா?' என்ற சந்தேகந்தான் அது.

இந்தச் சந்தேகத்திலே தமக்கு ஒரு அரிய சந்தர்ப்பமும் வாய்த்திருப்பதை உணர்ந்தார் நடேசன். நல்ல மனம் துள்ளியது. கலையரசன் சண்முகத்தை அரசனைப் போல் அலங்கரித்துப் பார்த்துவிட ஆசைப்பட்டார். அற்புதமான வெல்வெட் துணியில் தங்க ஜிகினாக்களை இழைத்து, மேலே போட்டுக்கொள்ள அருமை

யான ஒரு சால்வையைத் தயார் செய்துகொண்டு திருவாரூருக்கு வந்துவிட்டார்.

அந்தச் சால்வையைப் போர்த்திக்கொண்டு கண்ணாடிக்கு முன் நின்ற சண்முகம் தன் உருவத்தை ஒரு முறை பார்த்துக்கொண்டான். அவனுடைய கம்பீரமான தோற்றத்தில் அந்தச் சால்வையைப் போர்த்திக்கொண்டவுடன் ராஜ களையே வந்துவிட்டது. உண்மையில் சண்முகம் அன்று நாதகர சக்கரவர்த்தியாகவே காட்சியளித்தான். பரந்த நெற்றியில் ஜவ்வாதுப் பொட்டு பரிமளம் வீசியது. காதிலிருந்த வைரக் கடுக்கன்கள் டால் அடித்தன. இளம் காவியேறிய உதடுகளில் புன்னகை தவழ்ந்தது. அடர்ந்த புருவத்தின் கீழ் அறிவுக் கண்கள் ஒளி வீசின. ஆனால், அந்தக் கண்களின் ஓரத்தில் கண்ணீர்.

ஆசை நிறைவேறவில்லை. வெறும் போட்டி நடக்கப்போகிறதோ என்ற எண்ணத்தைக் கண்கள் காட்டிவிட்டன. கவலை உள்ளத்திலே அலை அடித்தது.

'காதல் கைகூட வழியில்லை. களத்தில் ஆடலும் பாடலுந்தான்...'

'வென்றாலும் தோற்றாலும் இருவருக்கும் லாபமில்லை, வீதியில் ஆட்டந்தான் மிச்சம்.'

'வீம்பு ஜெயிக்கப்போகிறது. விஷயந்தான் இல்லை...'

'பாழும் சந்தேகம், பாம்பன் கால்வாய் குறுக்கிட்டது போல் குறுக்கிட்டுவிட்டது...'

'பண்ணும் பாதமும் ஒன்றும் கலந்து, பதியும் சதியுமாய் வாழ எண்ணியது. ஆனால், அழகைப் பார்த்த ஒருவர் கண்கள் சதி செய்துவிட்டன...'

''மங்கையும் இசை மன்னனும் மயங்கினர், மைனர் கெடுத்துவிட்டார்...''

- இதை எண்ணி அவன் இரு விழிகளிலும் நீர் சுரந்தது. ஆண் மகன் அடக்கிக்கொண்டான்.

"வெல்வெட் ரொம்ப உஷ்ணம் போலிருக்குது. போட்டதும் கண்ணை எரியுது'' என்று தன் கண் கலக்கத்தை அவர்கள் சந்தேகியாமல் மறைக்கக் காரணம் கூறினான்.

"உன்னைப் பாத்தா கண் குளிருது தம்பி" என்றான் தருமன். அவ்வாறு சொன்னது மட்டுமல்ல, சண்முகத்தின் அழகைத் தன் கண்களால் பார்த்தபடியே நின்றான். சண்முகம், முத்துராக்குவையும் தருமனையும் ஒரு முறை பார்த்தான். "தருமண்ணேன், என் பெட்டியை எடுத்துக்கிட்டு வா !" என்றான்.

பெட்டி திறக்கப்பட்டது. அதிலிருந்து இரண்டு மயில் கண் சரிகை வேஷ்டிகளும் ஒரு சோடிச் சால்வைகளும் எடுக்கப்பட்டன.

''இந்தாங்க தவுல்காரரே, இதைக் கட்டிக்கிங்க. இந்தா தருமண்ணேன், செண்டை வேட்டியை மடி வைச்சுக் கட்டி. அதுக்கு



மேலே பீதாம்பரத்தைப் பிரிச்சுக் கட்டு'' என்று ஆவலுடன் அவைகளைக் கொடுத்தான். கட்டபொம்மு ராஜுவே தன் படைகளை அலங்கரித்துப் பார்த்தது போல் கலைஞன் சண்முகசுந்தரம், தன் பக்கவாத்தியக்காரர்களை அலங்கரித்துக் கண் குளிரப் பார்க்க ஆசைகொண்டான்.

பீதாம்பரத்தையும் வேட்டியையும் கையில் வாங்கிக்கொண்ட தருமன் பேந்தப் பேந்த விழித்தான். சிக்கல் தம்பியின் முகத்தைப் பார்த்தான். அவனுக்கு ஏற்பட்ட நன்றி உணர்ச்சியில் நாத் தழு தழுத்தது. "என் தம்பி, இதெல்லாம் நானா கட்டிக்கிறது?" என்றான்.

"ஆமா..."

"ஒத்து ஊதற போதா?"

இதைக் கேட்ட முத்துராக்குவும் நடேசனும் சிரித்தார்கள். ஆனால் சண்முகம் சிரிக்கவில்லை. "ஆமா அண்ணேன். நீதானே தாய்? உன் சுருதியில்தானே சப்த சுரங்களும் தவழ்ந்து விளையாடப் போகுது. நல்லா கட்டுங்க !" என்று அன்புடன் சொன்னான்.

அப்போது முத்துராக்கு, "நாயனக்காரரே, உங்களுக்கு வாசிக்க எனக்குக் குடுத்து வைச்சதே புண்ணியம். அதிலேயும் இன்னிக்கு தியாகராஜாவுக்கு முன்னாலே நின்னு உங்களோடே வாசிக்கப் போறேன். ஆனா ஒரு வார்த்தை" என்றார்.

"என்னங்க?"

"அந்த மோகனாப் பொண்ணு வந்து ஆடறபோது..."

''அதுக்கு உங்களை வாசிக்கச் சொல்லக்கூடாது என்கிறீர்களா?"

''இல்லை இல்லை. அந்தப் பாக்கியமும் எனக்குத்தான் கிடைக்கணும். ஆனா, அது ஆடுறபோது நீங்க நடந்ததெல்லாம் மறந்துட்டு முகத்தைச் சந்தோஷமா வச்சுக்கிட்டு இருக்கணும்" என்று சொல்லிவிட்டு உணர்ச்சி வசப்பட்டவராக அடுத்த அறைக்குள் போய் நுழைந்துகொண்டார். சண்முகம் சற்று நேரம் திகைத்தான். அவன் உள்ளத்தில் இந்த வேண்டுகோள் மனப்புண்ணுக்கு மருந்து தடவியது போல் இதமாக இருந்தது.

◆ ◆ ◆

அதே சமயம் வடிவாம்பாள் வீட்டில் மோகனாவிடமும் இதே கேள்வியைத்தான் வரதனும் கேட்டான்.

"மோகனா, அவர் தில்லானா ஊதுறப்ப தவுல்காரரும் கூடவே வாசிப்பாரில்ல?"

"ஏன் வரதா, அவர் ஒரு ஆவர்த்தனம் வாசிக்கறாரு. அப்புறம் நீயும் நட்டுவனாரும் அதை எடுத்துக்குங்க."

"அதுதானே கேட்டேன். இன்னைக்கு வாசிக்கிறதுக்குனு நான் புது மிருதங்கங்கூட வார் எல்லாம் புடிச்சு வச்சிருக்கிறேன். ஆமாம். தவுலுக்கும் நமக்கும் தனி ஆவர்த்தனம் கிடைக்குமில்லே?"

"ஏன்?"

"கிடைச்சா அந்தத் தவுல் தோர்வை எல்லாம் தட்டி எறிஞ்சுடுவேன்" என்று பெருமையுடன் கூறிவிட்டு, "மோகனா, மிருதங்கத்திலே பேசற சொல்லு தவுலுலே பேசாது. தெரியுமில்லே" என்றான்.

"தெரியும் வாதா! தவிலிலே தவில் சொல்தான் பேசும். மத்தளச் சொல் தவிலிலே பேசுமா?"

"இதுதானே. நீ என்னையே கிண்டல் பண்றியே! இன்னிக்கு என்ன ஆடப்போறே மோகனா?"

"அந்தரத்தில் ஆடப் போகிறேன். ஆசைக்கும் ஆத்திரத்துக்கும் நடுவில் ஆடப்போகிறேன். வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் உயிரைப் பணயம் வைத்து உன் தங்கை ஆடப் போகிறாள்!" என்று சொல்லிப் பெருமூச்செறிந்தாள் மோகனா.

நேற்று முதல் மோகனா நித்திரை இல்லாமல் இருப்பதையும், அடிக்கடி பெருமூச்செறிவதையும், ஆண்டவனை நோக்கிக் கும்பிடுவதையும் கண்ட வரதன், ஏதோ விபரீதந்தான் நடக்கப் போகிறது என்று எண்ணிவிட்டான்.

மோகனாவின் உள்ளத்தில் துன்பம் நிறைந்திருந்தது. அவள் சிரித்து நான்கு நாள்களாகிவிட்டன. ஒரு வாரமாய் ஓயாமல் ஆடி ஆடி அவள் உடம்பு நடுங்குகிறது. கால்கள் நிலை கொள்ளவில்லை. உடல் இளைத்துவிட்டது. ஆனால், அந்தப் போட்டி ஆட்டத்தில் உள்ள அக்கறை அவள் உயிரைப் பிடித்துக்கொண்டிருந்தது.

'நான் வென்றாலும் தோற்றாலும் அவர் என்னைத் திரும்பிப் பார்க்கப் போவதில்லை. எதற்காக ஆடுவது?' என்று ஒரு விரக்தி வரும். அடுத்த நிமிஷத்திலேயே 'அவர் பாரி நாயனம் வாசிக்கப் பழகிவிட்டார். அவருக்கு அதில் புகழ் கிடைத்துவிட்டது' என்று ஒரு சிறு பொறாமை வரும். அடுத்த கணத்தில் 'நமக்குத்தான் இனி என்ன இருக்கிறது! ஆடி ஆடி மயங்கி விழுவோம்' என்ற முடிவு வரும். ஆனால், அதே சமயத்தில் 'ஐயோ, அவர் நம்மைச் சந்தேகித்து விட்டாரே! ஏதேனும் ஓர் அற்புதம் நடந்து என்னை அவருடன் இணைத்து வைக்காதா?' என்ற ஏக்கமும் வரும். அப்படியே பிரமித்துக் கல் போல் நின்றுவிடுவாள். 'அன்று வள்ளியால் விரட்டப்பட்ட வேலன் மரமாகி நின்றதுபோல், இன்று சண்முகத்தால் வெறுக்கப் பட்ட மோகனா மரமாகி நிற்பாள் - மயங்குவாள் - தேறுவாள்.

இவ்வாறு பல நாளாக அவள் தன்னை அன்றைய நாட்டியத்துக்குத் தயார் செய்துகொண்டாள். ஆனால், முத்துக்குமர நட்டுவனாரோ சிலப்பதிகார ஏட்டைப் புரட்டிப் புரட்டி அதில் சிந்தையைச் செலுத்தி ஏதோ செய்துகொண்டிருந்தார்.





## பரவசமாக்கிய பாரி நாயனம்

நிலவளந்தான் கலைகளுக்கு ஆதாரம். மனிதனுக்கு வயிற்றுக்குத் தேடவே நேரம் பற்றவில்லையென்றால் வாழ்வு ஒரு சுமையாகிவிடுகிறது. சுமை தூக்குபவன் சுமைதாங்கியைத் தேடுவதுபோல், அவனும் எந்தச் சமயத்தில் இறக்கி வைக்கலாம் என்று தேடிக்கொண்டே இருப்பான். காவிரி வளநாட்டில் இந்தக் கவலை இல்லையாதலால் கலை வளமும் சேர்ந்திருந்தது.

சண்முகசுந்தரம் நாதஸ்வரம் வாசிக்கப்போகிறான், மோகனாம்பாள் அதற்கு ஆடப்போகிறாள் என்ற செய்தி கதம்ப மணம்போல் தஞ்சை ஜில்லா எங்கும் பரவிவிட்டது. ஒரு வாரத்திற்கு முந்தியே ஒவ்வொருவரும் திருவாரூர் போகத் திட்டம் போட்டு விட்டார்கள். பண்ணையின் காரியஸ்தர், தம் பாட்டிக்குத் "திதி" என்று சொல்லி மிராசுதாரிடம் லீவு கேட்பார். மிராசுதாரும் அதே காரணத்தைக் காட்டிக் கோர்ட்டிலே வாய்தாக் கேட்பார். பண்ணையாள், அதே காரணத்தைக் காட்டிக் காரியஸ்தரிடம் விடுமுறை கேட்பார். ஆனால், எல்லோரும் ஒன்றாக இன்று திருவாரூர்ச் சாலையிலே சந்தித்து ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டே போனார்கள்.

மொட்டைமாடு பூட்டிய வண்டிகள் ஒன்றை ஒன்று முந்திக் கொண்டு ஓடி வந்தன. இவைகளுக்கிடையே ஏதேனும் ஒரு சோடிக் கொம்பு உடைய மாடுகளைக் கண்டுவிட்டால் "அதோ கொம்பு மாடு, கொம்பு மாடு" என்று குழந்தைகள் சத்தம் போட்டார்கள்.

மன்னார்குடியிலிருந்து அழகான சாரட்டுகளில் அங்குள்ள மிராசுதார்கள் திருவாரூரை நோக்கி வந்தார்கள். அவர்கள் அணிந்திருந்த வைர நகைகளால் ஒருவரை ஒருவர் தோற்கடித்துக் கொண்டாலும் புன்னகையால் முகமன் கூறிக்கொண்டனர்.

வெற்றிலைப்பெட்டிகளில், புஸ்தகப் பெட்டி, செல்லப் பெட்டி, வட்டப் பெட்டி, தட்டுப் பெட்டி, முட்டைப் பெட்டி என்று எத்தனை விதங்கள் உண்டோ அத்தனை விதங்களும் அன்று திருவாரூரில் காட்சி அளித்தன.

"பல்லுப் பணம் பெறுமே சாமி தில்லாலே
பல்காவி பொன்பெறுமே போடு தன்னானே"

என்று யாரோ ஒருவர் பாடினாராம். உண்மையிலேயே அவர்கள் போட்ட வெற்றிலை. சீவல் புகையிலையின் விலையைச்

கணக்கெடுத்துப் பார்த்தால் ஒவ்வொருவரும் எத்தனை பொன்னைச் செலவழித்து வெள்ளிப் பணம் போன்ற பல்லில் இந்தப் பொன் முலாம் பூசிக்கொண்டிருப்பார்கள் என்பது தெரியும்.

'இறைவன் அழகைப் பெண்களுக்கே கொடுத்துவிட்டான். ஆணை மோசம் செய்துவிட்டான்' என்று சில ஆண் பிள்ளைகள் குறை சொல்கிறார்கள். இந்தக் குற்றத்தையும் சொல்லிக்கொண்டே மாம்பிஞ்சு முதல் மல்லிகை மொட்டுவரை அழகான சரிகைச் சேலைகளை நெய்து பெண்களுக்கே கொடுத்துவிடுகிறார்கள். அன்று திருவாரூரில் எங்கு திரும்பினாலும் பட்டுப் புடைவைகள். ஒவ்வொரு பெண்மணியும் போட்டி போட்டுக்கொண்டு பட்டுப்புடைவையைக் கட்டிக்கொண்டிருந்தாள்.

வீட்டுக்கு வீடு வெளியூர் விருந்தாளிகள் வந்து தங்கினார்கள். வெந்நீர் போடு, காப்பி போடு, லட்டு பிடி, பலகாரங்களைச் செய் என்று உபசாரத்தில் சலிக்காத பல பிரபுக்கள் உத்தரவு இட்டுக் கொண்டிருந்தார்கள்.

சந்தனமும், பூவும், சங்கீதமுந்தான் அன்று திருவாரூர் முழுவதும் குடிகொண்டிருந்தன.

கமலாலயத்தின் கரை மூலையிலே கரகக்காரர் ஒருவர் 'சிம்ம நந்தன' தானத்தில் கரகம் ஆடிக்கொண்டிருந்தார். நெட்டிக்காரத் தெரு, காகிதக்காரத் தெரு என்று அலங்கார வேலை செய்யும் பலர் நிறைந்த ஊர் ஆதலால், தேர் அலங்காரம், தெரு அலங்காரம், ஊர் அலங்காரம் நிறைந்த திருவாரூர்க் கரகம் கண்ணைக் கவரும் அலங்காரங்களுடன் விளங்கியது. ஆயிரக்கணக்கான மக்கள் அந்த ஆட்டத்தைப் பார்த்து மகிழ்ந்தார்கள்.

மற்றொரு புறத்திலே, பொய்க்கால் குதிரை நாட்டியத்தில் பேர் போன மாரியம்மன் கோவில் பக்கிரியின் கோஷ்டியார் கிடுகிட்டி மேளத்திற்கிணங்க ஆடிக்கொண்டிருந்தார்கள். அதிலே ஆண் வேஷக்காரர் சரபோஜி மகாராஜா போல உடை தரித்திருந்தார். பெண் வேஷக்காரர் மஹாராணி உடையில் ஆடினார். இருவருக்கும் வாக்குவாதம் நடந்தது.

ஆண் :

**நாட்கிழமை நட்சத்திரம் பாத்து வந்தேண்டி,**
**குறிகள் கேட்டு வந்தேண்டி**

பெண் :

**பாத்து வந்தா என்ன நீங்க நேத்து வந்தா என்ன?**
**காத்திருந்த கண்ணிரண்டும் பூத்துப் போச்சு மன்னா.**

என்று பதில் பாட்டுப் பாடவே கூட்டத்தில் இருந்த இளங்காளைகள் கை கொட்டினார்கள்.



ஒரு புறத்திலே, "நடராஜா நடராஜா, நர்த்தன சுந்தர நடராஜா" என்று ஜாலர்களும் மிருதங்கமும் முழங்க பஜனை கோஷ்டி நின்று கொண்டிருந்தது. அதிலே முதன்மையாக இருந்தவர் தலையிலே உத்திராட்சத்தையே கிரீடமாக வைத்துக்கொண்டு, கைகளிலும் மார்பிலும் அக்கமணி மாலைகளை அணிந்துகொண்டு நடராஜ தாண்டவத்தையே ஆடிக்கொண்டு இருந்தார்.

மற்றொரு புறத்தில், ஒரு மேடையின் மேல் ஐந்து ஆறு பேர்கள் உட்கார்ந்துகொண்டு, கையிலே டேப் முதலியவைகளை அடித்துக் கொண்டு 'மன்மத லாவணி' பாடிக்கொண்டிருந்தார்கள்.

**" மாடுமனை வீடுவாசல் மாப்பிளை மருமகளும்**
**மன்மதன் எரிஞ்சிருந்தால் உண்டோ உண்டோ?**

என்று அவர்கள் பாடிய போது, அங்கு மறைந்திருந்த மன்மதனும் இதைக் கேட்டுச் சிரித்தான்.

இந்தக் கோலாகலத்தின் இடையே அதிர்வேட்டுச் சத்தம் கேட்டது. ஸ்வாமி ரிஷப வாகனத்தில் புறப்பட்டுவிட்டது என்பதை அது எடுத்துக் காட்டியது. உடனே கூட்டம் முழுவதும் விட்ட வாசலை நோக்கி ஓடியது.

திருவாரூரிலே ஆலயத்தில் நெய் வார்த்துத்தான் விளக்கேற்ற வேண்டும். அக்காலத்தில் சோழ மண்டலத்தில் பசு வளத்திற்குக் குறைவில்லை. அப்படி இருந்துங்கூட ஒரு நாள் நமிநந்தியடிகள் என்ற சிவனடியாரிடம் விளக்கேற்றத் திரியும் இருந்தது, அகலும் இருந்தது. ஆனால் நெய் இல்லை. பக்கத்து வீட்டில் இருந்த சமணர் ஒருவரிடம் போய் நெய் கேட்டார். சமணர் தர மறுத்துவிட்டார். அதோடு நில்லாமல் "ஒளிக்கடவுளுக்கு விளக்கு ஏன்? எதற்கு நெய்? நீரை வார்த்து ஏற்றும்!" எனச் சினந்தார். இதைக் கேட்ட அடிகளார் "இறைவனே, நெய் இல்லை. ஆனால் கை இருக்கிறது. என்னுடைய பக்தியையே நெய்யாக ஏற்றுக்கொள்" என்று கூறி, கமலாலயத்தி லிருந்து ஒரு கையால் தண்ணீரை எடுத்து அகலில் ஊற்றினாராம். அது நெய்யாக மாறியதாம். உடனே நெய் விளக்கு ஏற்றினாராம். நாவுக்கரசர் பெருமான் இந்த அற்புதத்தை,

**" ஆரூர் நறுமலர் நாதன்**
**அடித்தொண்டன் நம்பி நந்தி**
**நீரால் திருவிளக் கிட்டமை**
**நீணா டறியு மன்றே."**

எனப் பாடி அருளியுள்ளார்.

ஆனால் இன்று உள்துறையாருடைய நிர்வாகத் திறமையினால் நெய்க்காகக் கமலாலயத் தண்ணீரை நாடவேண்டிய அவசிய மில்லாமல் போய்விட்டது. குடம் குடமாக நெய் வந்திருந்தது. அத்தனையையும் தீவட்டிகளில் அள்ளி ஊற்றி எங்கு பார்த்தாலும் நெய்த்தீவட்டிகள் எரிந்துகொண்டிருந்தன.

விடையேறும் பெருமான் வீதி வலம் வந்தார். வெள்ளி ரிஷப வாகனத்தின் மேல் அவர் அமர்ந்திருந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது !

இளநீர் மணமும், கற்பூர மணமும் எங்கும் பரவியது. அந்த மணத்திற்கு மேலே சாமிக்கண்ணு நாதசுரக்காரரின் 'மல்லாரி' அற்புதமாகக் கேட்டது. அவருக்கு அருகே மன்மதன் நடந்து வருவது போல் அரையிலே மயில்கண் வேஷ்டியை மடி வைத்துக் கட்டிக் கொண்டு, அதன் மேல் மாம்பிஞ்சு போட்ட பனாரஸ் பீதாம்பரத்துடன், கழுத்தில் தங்கச் சங்கிலியும், அதில் மைசூர் மஹாராஜா அளித்த சாமுண்டீச்வரி பதக்கமும் மின்ன, விரல்களில் வைர மோதிரங்கள் விளங்க 'இவனழகைக் கண்டுதான் காமன் அனங்கன் ஆனானோ' என்று எல்லோரும் சொல்லும் வண்ணம் சிக்கல் சண்முகசுந்தரம் நடந்து வந்தான்.

சிக்கலில் பிறந்தவர்களுக்கே ஒரு அழகு உண்டு. அங்குதான் சிங்காரவேலன் கோயில் கொண்டிருக்கிறார். அறிவுக்கே ஒரு அழகு உண்டு. அது என்றைக்கும் வாடாத அழகு. இயற்கையிலேயே சண்முகம் சிவந்த மேனியன். எடுப்பான பார்வை, துடுக்கான பேச்சு, மிடுக்கான இளநகை. இறைவனை மந்தகாச வதனன் என்று சொல்லுவார்கள். கலைஞனும் மந்தகாச வதனனாக இருக்கவேண்டும். அது சண்முகத்திடம் அமைந்திருந்தது. ஆளைப் பார்ப்பதற்கே ஆயிரக் கணக்கான கூட்டம் கூடியிருந்தது. அவன் நடையில் மயங்கினர் பலர். அவன் உடையில் மயங்கினர் பலர். ஆனால் எப்பொழுது அவன் வாசிக்கும் இன்பத் தேனைப் பருகுவோம் என்று எல்லோரும் ஏங்கியும் நின்றனர்.

ராஜ வாத்தியத்திற்குப் பெயர் போனது தஞ்சை மாவட்டம். தங்களுள் ஒருவர் இவ்வளவு அற்புதமாக வாசிக்கிறாரே என்று அங்குள்ள இசை வேளாளர்களுக்கெல்லாம் சண்முகத்தினிடம் தனி அன்பு. அவனை யாரும் சண்முகம் என்று சொல்வதில்லை. சிக்கலார் என்றுகூட அழைப்பதில்லை. நாயனக்காரர், நாயனக்காரர் என்றே தங்கள் நயனம் போல் அவனை நேசித்து வந்தார்கள். வயது முதிர்ந்தவர்கள், சிக்கல் தம்பி என்று சொல்லுவார்கள். 'அது வந்தது, ஊதிச்சு' என்று இறைவனையும் துறவிகளையும் அஃறிணையில் அழைப்பது போல் சண்முகசுந்தர நாதசுரக்காரரை அந்த மரியாதையுடன் அழைப்பார்கள்.

இன்று அவர்களுள் பலர் மேளத்தின் கூடவே வந்தார்கள்.

இளம் வயது. சண்முகத்தின் வயதையும் கலையையும் கணக்கு வைத்துப் பார்த்தால், இந்த வயதிற்குள் இவ்வளவு வாசிப்பு எப்படி வந்தது என்றுதான் கேட்கத் தோன்றும். கற்று வருவதல்ல கலை. அது கடவுள் தருவது. ஒரு பிறவியில் வருவதல்ல கலை. பல பிறவிகளின்



பாக்கியம் ஒன்றுசேருவதுதான் அது. அத்தனையும் சண்முகத்திடம் தான் பொருத்தமாகக் குடிகொண்டிருக்கின்றன என்று அவர்கள் ஆனந்தப்பட்டுக்கொண்டே வந்தார்கள்.

ஸ ரி க ம ப த நி என்னும் ஏழிசைதான் சங்கீதம். ஒரு குழல்தான் ஊதுகிறது. ஆனால் அந்த நாதத்திலும் வாசிப்பிலுந்தான் ஒருவருக்கொருவர் எவ்வளவு வித்தியாசம்!

சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர் கையிலிருந்து சண்முகத்தின் கையில் பாரி நாதஸ்வரத்தைக் கொடுத்தார். "தம்பி, வாசியுங்கள்" என்று முகமலர்ந்து கூறினார். சண்முகம் அதை வாங்கிக்கொண்டு அவரைக் கும்பிட்டான். முத்துராக்குவின் தவில் முழங்கியது. "பீ பீ" கிளி கொஞ்சியது. சண்முகத்தின் சீவாளிச் சத்தத்தைக் கேட்ட உடனேயே, "ஆஹா, ஆஹா சண்முகம்! சண்முகம்" என்று ஆயிரக்கணக்கான குரல்கள் ஏக காலத்தில் ஒலித்தன. ஆம் நாதசுர சகாப்தத்தில் அன்று ஒரு புதிய மாறுதல். அன்றுவரை திமிரி நாதசுரத்தில் தீஞ்சுவை பரப்பிய சண்முகம் இன்று பாரி நாயனத்தில் பண் இசைக்கிறான் ! அது பாலா, தேனா, பழ ரசமா! இவையெல்லாம் பருகப் பருகத் திகட்டுவதன்றோ? என்றும் திகட்டாத தேவகானத்தைப் பாரி நாதசுரத்தின் வழியே விரல் நடவிப் பரிமாறினான் இசைச் செல்வன் சண்முகம்.

**ஸ்ரீ சுப்ரஹ்மண்யாய நமஸ்தே**
**நமஸ்தே**
**மனஸிஜ கோடி கோடி லாவண்யாய**
**தீன சரண்யாய - (ஸ்ரீ)**

காவேரிப் படகில் வாசித்த சாவேரியை இன்றைய காம்போதி தூக்கியடித்துவிட்டது. விரிகடலைச் சிறுகுடத்தில் அடைத்த அகத்தியன் போல் சண்முகம், காம்போதி ராகத்தை நாவே மூர்ச்சனையில் அற்புதமாக, எல்லோரும் பிரமிக்கும்வண்ணம் வாசித்துவிட்டு, ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் அருளிய மேற்கண்ட கீர்த்தனத்தை வாசிக்க ஆரம்பித்தான்.

ஆயிரம் கீர்த்தனைகளைத் தேடுவோம். இம்மாதிரி ஒரு கீர்த்தனை அகப்படுமா? கந்த முருகா மனம் உகந்த முருகா என்று ஒருவர் முருகனை அழைக்கும் போதே நம் உள்ளம் உருகுகிறது.

"பேராதரிக்கும் அடியவர்தம்" என்ற பிள்ளைத்தமிழை யார் பாடினாலும், செந்தமிழ் நாட்டு மக்கள் மயங்குகிறார்கள். கந்தன் என்றும் எமக்குச் சொந்தன் என்றும், தத்தம் குடும்பத்தின் தனிக் கடவுளாக எல்லோரும் கொண்டாடும் தெய்வம் முருகன்.

அவனைப் புகழ்ந்ததால் தமிழ் பெருமை பெற்றிருக்கிறது. உலகில் எத்தனை புகழ்கள் இருந்தாலும் அவனைப் புகழ்ந்த பாட்டின்தான் "திருப்புகழ்" என்று ஆயிற்று.

"கும்பிடத் தெய்வம், கொண்டாடக் குழந்தை. நம்பின பேர்களுக்கு நானென்று முன் வருவான் செந்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் தெய்வம், மொய்தார் அணி குழல் வள்ளி மணவாளன், கண் கண்ட தெய்வம், கலியுக வரதன் . பண் கொண்ட முருகன் - பாடலுக்கரசன், பைந்தமிழ்ச் செல்வன், சந்தமிகு செந்தமிழில் சிந்தை மகிழ்ந்தாடி, வந்தருள் காந்திடும் கந்த வடிவேலன் !"

இவ்வாறு அறிவு வந்தவர்கள் அவனைப் பாடி இருக்கிறார்கள். கண் பெற்றவர்கள் எல்லாம் அவனைத் தரிசித்து இருக்கிறார்கள் கால் உடையவர்கள் எல்லாம் அவன் மலையேறி இருக்கிறார்கள். இவ்வாறு தமிழ்நாட்டின் அன்புத் தெய்வமாக விளங்கும் முருகப் பெருமானைப் பற்றிப் பாடியிருக்கும் கோடிக் கணக்கான பாடல்களிலே, கொடிமரம் போன்றது. ஸ்ரீ சுப்ரமண்யாய நமஸ்தே என்னும் தீக்ஷிதரின் காம்போதி ராக கிருதி.

அந்தப் பாடலிலே ஆறுமுகப் பெருமானை அள்ளி அணைத்துக் கொஞ்சுகிறது காம்போதி ராகம். கார்த்திகைப் பெண்களிடமிருந்து முருகன் சிறு வயதிலேயே, உமையம்மையால் பிரிக்கப்பட்டுவிட்டான். ஆனால் காம்போதியிடமிருந்து முருகனை யாரும் பிரிக்க முடியாது.

அன்று சண்முகசுந்தரம், ஸ்ரீ சுப்ரமண்யாய நமஸ்தே, நமஸ்தே என்று நாதஸ்வரத்திலே பல்லவியைத் தொட்டவுடன் பக்தர்கள் மயங்கினார்கள். 'முருகா' என்று கூறிப் பரதேசி மயங்கினார். இசையன்பர்கள் மயங்கினார்கள். ஏன், ஈசனும் மயங்கினான். இடப வாகனத்தில் இருக்கும் இறைவன், தன் மைந்தனின் புகழைக் கேட்டான். அல்லியங்கோதை அம்பிகை, முருகனை இடக்கரத்தால் தடவிக் கொடுத்தாள்.

சண்முகம் வாசிக்க வாசிக்க "இறைவன் மேல் சாத்தியிருந்த செங்கழுநீர் மலர் இதழ்கள் பொல பொலவென்று உதிர்ந்தன. அதைப் பார்த்த இறைவனின் அன்பர்கள், "ஓம்_ஹரா_ஹரா" என்று கூவிக் கும்பிட்டார்கள். உதிர்ந்த மலர்களை இரு கைகளாலும் தாங்கினார் பரமானந்தப் பரதேசியார். அப்படியே கொண்டுபோய், பரமானந்தத்துடன் சண்முகசுந்தரத்தின் சிரசின் மேல் பொழிந்தார்.

"கோடி கோடி லாவண்யாய" என்று சண்முகசுந்தரம் வாசித்த போது, பாரி நாயனத்தின் பண்ணொலி விண்ணில் நிறைந்தது. வான வீதியில் குழந்தை முருகன் தோன்றினான். கோல் ஏந்திய தண்டாயுதபாணி ஒரு புறம் வந்து நின்றான். சக்திவேல் பிடித்த கந்தன் காட்சி தந்தான். ஞான பண்டிதன், சிவபெருமான் காதில் உபதேசம் செய்தான். வள்ளியை மணம் புணர, வேலன், வளைக்காரன் உருவத்தில் வந்தான். பண்டார வேடத்தில் நின்று பாவையைப் பார்த்து, கண்டார் மயங்கக் குறுநகை புரிந்தான்.

இவ்வாறு வான வீதி எங்கும் அழகெனும் பேர்கொண்ட தெய்வம் கோடி கோடி லாவண்யத்துடன் ஆயிரம் ஆயிரம்



திருவுருவத்தில் காட்சி அளித்தது. சண்முகத்தின் வாசிப்பில் மக்கள் பரவசமடைந்தார்கள். எல்லோருடைய கண்களும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தன. அப்போது "தீன சரண்யாய" என்ற பதம் வந்தவுடனே வான வீதியெல்லாம் காட்சிகள் மாறின.

பால் காவடி எடுக்கிறார் ஒருவர், வேல் காவடி எடுக்கிறார் இன்னொருவர், அரும்பு போன்ற குழந்தையைக் கரும்பிலே தூளி கட்டி மலைவலம் வருகிறார் ஒருவர். தெருவெங்கும் பால் பொங்குகிறது வழியெங்கும் பால் ஓடுகிறது பத்து வண்டி விறகைக் கொளுத்தி, பரப்பியிருந்த பெரும் நெருப்பில், பக்தன் ஒருவன் விளையாடுகிறான். மாசிப் பச்சையையும், மருக்கொழுந்தையும் மாலை கட்டிப் போட்டுக்கொண்டு அந்த நெருப்பிலே இறங்கி நீந்துகிறான், குதிக்கிறான். திரிபுரம் எரித்த சிவபெருமானைப்போல அவன் செம்மேனியுடன் தாண்டவம் செய்கிறான். அந்தப் பக்தனுடைய உடல், கொழுந்துவிட்டெரியும் அக்கினி போல் தோற்றமளிக்கிறது பூ மஞ்சத்தின் மேல் துள்ளி விளையாடும் குழந்தை போல் தெருவெங்கும் பரப்பியிருக்கும் தீ மேல் விளையாடுகிறான். பார்ப்பவர்கள் எல்லோரும் "வள்ளி மணவாளனுக்கு அரோஹரா_ வண்ண மயில் வேலனுக்கு அரோஹரா ! வேல்_வேல்_வடிவேல் !" என்று சிரமேற் கை கூப்பி சிந்தை களித்து, ஆர்ப்பரிக்கிறார்கள்.

◆ ◆ ◆

வாய், பேச மறந்தது. மனம் நின்றுவிட்டது; புலன்கள் ஒடுபட்டன. தலை ஆடவில்லை. மூச்சுக்கூட மெதுவாக வருகின்றது. எல்லோரும் ஸ்தம்பித்துவிட்டார்கள். ஏன்?

**பூஸுராதி சமஸ்த ஜன**

**பூஜிதாப்ஜ சரணாய**

என்ற சரணத்திலே, குழந்தை முருகனின் சரணத்திலே, காம்போதியின் பூரணப் பொலிவைக்கொண்ட சரணத்திலே லயித்துவிட்டான் சண்முகம். தன்னை மறந்துவிட்டான். காம்போதியுடன் கணத்திலே ஒன்றிவிட்டான். கலைஞன் ஒன்றிய உடனே, ரசிகர்களும் அதில் ஒன்றிவிட்டார்கள்.

இசையே, உன் பெருமையை என்னவென்று சொல்ல ! எட்டய புரத்திற்குச் செல்லும் பாதை; ஒரு மகான் செல்லுகிறார். அப்பொழுது அவர் கண்ணில் அங்கு நிலங்கள் தண்ணீர் இன்றி வரண்டு இருப்பதும், பூமி வெடித்து இருப்பதும் தெரிகின்றது. அவர் இதயத்தில் அருள் சுரக்கிறது. வாய் திறக்கிறது. எவ்வாறு எழுந்தாய் எழுதுவது?

"தாயே பவானி ! மழை பொழிக ! மழை பொழிக ! வர்ஷய ! வர்ஷய !" என்று அமிருத வர்ஷணி ராகத்திலே ஒரு பாடல் பிறக்கிறது

உடனே அமுத வெள்ளம் போல் மழை பொழிகிறது. இது தீக்ஷிதர் அவர்களின் இசை மகத்துவம்.

சரப சாஸ்திரிகள் புல்லாங்குழலை ஊதினார். நல்ல பாம்பு வந்து படம் எடுத்து ஆடி, பால் பருகிவிட்டுச் சென்றது. தியாகையர் பாடினார், கிணற்றில் தவறி விழுந்து இறந்தவர் பிழைத்தார். சிவகன் யாழ் எடுத்து மீட்டினான், யானைக் கூட்டம் ஓடி வந்தது. வள்ளி அம்மை கவண் எடுத்து ஆலோலம் பாடினாள். கிளிகள் தினைக் கதிர்களை உண்ணாமல் பாட்டைக் கேட்டுக்கொண்டு இருந்தன. கண்ணன் குழல் எடுத்து ஊதினான், மாடும் கன்றும், மானும் மயிலும் செயல் மறந்து நின்றன.

உலகை இசை மயக்குகிறது. இதயத்தை இசை களிப்பாக்குகிறது. எல்லோரையும் அன்பால் ஒன்றாகச் சேர்த்து, நெஞ்சத்தை அன்பின் கோயிலாகச் செய்கிறது. இன்று அந்தக் காட்சி திருவாரூரிலே அப்படியே இருந்தது.

எத்தனை மகான்களை ஈன்றிருக்கிறாள் காவேரி ! பண்ணும், பரதமும், கீர்த்தனையும் அவள் கரையில் பிறந்ததைப் போல, எந்த நாட்டிலும் பிறந்ததில்லை. "ஹரி நாராயணா, ஹரி நாராயணா" என்று தாலரைத் தட்டினால் மருதாநல்லூர்தான் முன் வந்து நிற்கின்றது. "ஜயஜய கோகுல பாலா" என்ற பாடல் வரகூரில்தான் பிறந்தது. "வருகலாமோ ஐயா" என்று வாயுருகிப் பாடிய நந்தன் சரித்திரக் கீர்த்தனை; பெரிய புராணக் கீர்த்தனை; முத்துத் தாண்டவர், மாரிமுத்தா பிள்ளை என்று எத்தனையோ வாக்கேயகாரர்கள் அங்குதான் உதித்து இருக்கிறார்கள்.

"காவேரிக்கரை மண்டபங்களே, நீங்கள், எத்தனை பாடல்களைக் கேட்டிருப்பீர்கள் ! உங்கள் கரையிலே எத்தனை மகான்கள் கீதம் இசைத்திருக்கிறார்கள் ! காவேரியே, எத்தனை வித்துவான்கள் உன் நீரில் நின்று பாடி உள்ளார்கள் ! அன்னையே, நீ தஞ்சை ஜில்லாவுக்குள் ஏன் மெல்ல நடக்கின்றாய் தெரியுமா? மாயூரத்தில் ஓட மனமின்றித் தொய்ந்து நடக்கின்றாயே, ஏன் தெரியுமா? உனக்கு அந்த மண்ணை விட்டுப் போக மனமில்லை. கடல் ஆகிய கணவன் வீட்டுக்குப் போகும்போதுகூட நீ பாட்டைக் கேட்டு மயங்குகிறாய். நீயே மயங்கும்போது, உன் பிள்ளைகள் ஆகிய தஞ்சை ஜில்லா வாசிகள் மயங்குவதற்குச் சொல்ல வேண்டுமா? ஆயிரக்கணக்கான மக்களும் அப்படித்தான் மயங்கியிருந்தார்கள்.

சிவலைச் சீவி வாயிலே போட்டவர்கள், வெற்றிலை போட மறந்து வாசிப்பைக் கேட்டார்கள். விசிறி மடிப்புத் துப்பட்டா கீழே வழுக்கி விழுவதைக்கூடக் கவனிக்கவில்லை ஒருவர். நெற்றியில் இட்ட ஜவ்வாதுப் பொட்டு வேர்வையில் கரைந்து ஒழுகிக்கொண்டே இருக்க அதைக்கூடத் துடைக்காமல் வாசிப்பைக் கேட்டார் ஒருவர்.



சண்முகத்தின் ஒவ்வொரு சஞ்சாரத்திலும் அங்கு கூடியுள்ளவர்களின் மனமும் கூடவே சென்றது.

அந்த ஜில்லாவில் உள்ள செல்வர்கள் எல்லாம் அங்கு நின்றார்கள். சிங்கபுரம் மைனர், வைத்தி முதலியவர்களும் அங்கு நின்றார்கள். 'இடபாதி கொண்டான் உமை, வடபாதி கொண்டான் எமை' என்று இறைவன் சொல்லும் வண்ணம் ஆரூரன் தொண்டு செய்யும் வடபாதி மங்கலத்தார் அங்கு நின்றுகொண்டிருந்தார்கள். கூட்டம் மெல்ல மெல்ல ராஜாங்கக் கோடியை அணுகியது.

தீவட்டிப் புகை, பூமியை நீல வானமாக்கியது. வைரக் கடுக்கன், வைரத்தோடு, வைர அட்டிகை போன்ற வைர நகைகள் நட்சத்திர வரிசைகள் போல ஜொலித்துக்கொண்டிருந்தன. சண்முகசுந்தரம் கந்தர்வ கீதத்தை முழக்கினான். ஆரூர் வீதி, வான வீதிபோலக் காட்சி அளித்தது. அப்போது எல்லோருடைய கண்களும் அங்கிருந்த அரண்மனையின் உப்பரிகை மேல் சென்றன.

வான வீதியிலே கலைமகள் வந்து நிற்பது போல, உப்பரிகையின் மீது, தூய வெண்பட்டாடை உடுத்தி, மல்லிகை மலரை அணிந்து, கண்களுக்கு மை இட்டு, நெற்றியில் திலகமிட்டு, பொன் மேனியுடன் புன்னகை துலங்க மோகனாம்பாள் ஜகன்மோகினியாக நின்றாள்.

ஏக்கம் பிடித்த இரண்டு கண்கள் ஸ்ரீமான் சிங்கபுரம் மைனருடையவை. அவை அவள் எழிலையே பார்த்தன. சூழ்ச்சி மிகுந்த வைத்தியின் கண்கள் அவள் சுந்தர முகத்தையே நோக்கின. அருள் மிகுந்த பரதேசியாரின் கண்கள் அவளுக்கு ஆசியைப் பொழிந்தன. ஆச்சரியம் மிகுந்த மங்கையர்க்கரசி மரகதத்தின் கண்கள், மறைவில் நின்று அவளையே கவனித்தன. கோபம் மிகுந்த கடம்பவனத்தின் கண்கள், கூட்டத்துக்குப் பின்னே இருந்து பார்த்தன. இதைத் தவிர இரண்டு கண்கள் எரி நெருப்புப் போன்றவை, ஒரு மூலையிலிருந்து அவளையே பார்த்தன. இன்னும் ஆயிரக்கணக்கான கண்கள் அன்போடு, ஆவலோடு அவளை நோக்கின. அத்தனை கண்களின் அன்பும் அவளுக்குப் புதிய தெம்பை அளித்தது. அத்தனை ரசிகர்களின் உள்ளக் குதூகலமும் அவளுக்குக் குதூகலத்தை அளித்தது.

இவ்வளவு நேரம்வரை சங்கீதம் கேட்டு அதில் மயங்கியிருந்த மக்கள் இப்பொழுது மோகனாவின் நாட்டியத்தைப் பார்க்க ஆவல் மிகுந்தவர்களானார்கள். அத்தனை ஆயிரம் மக்களும் அப்படி அப்படியே தரையில் உட்கார்ந்தார்கள். செல்வர்கள் எல்லோரும் மண்டபத்தின் சுவரை அடுத்துப் போட்டிருந்த நாற்காலிகளில் அமர்ந்தார்கள். சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரரும், பரமானந்த பரதேசியாரும், தஞ்சாவூர்ப் பண்டிதரும், பந்தணைநல்லூர் தட்சிணாமூர்த்தி நட்டுவனாரும், வெற்றி தோல்வியைக் கண்டு சொல்லும் பஞ்சாயத்தார்களாக அமர்ந்தார்கள். அப்போது

கூட்டத்தில் ஒரு சலசலப்பு ஏற்பட்டது. "மோகனாதான் ஜெயிப்பாள், மூன்று வேலி பந்தயம்" என்று நாட்டிய ரசிகர் ஒருவர் பந்தயம் கட்டினார். "நாயனக்காரர்தான் ஜெயிப்பாரு, நாலு வேலி பந்தயம்" என்று சங்கீத ரசிகர் ஒருவர் மறு பந்தயம் கட்டினார்.

## ஐம்பத்து ஆறாம் அத்தியாயம்

# "காணாத கண் என்ன கண்ணே !"



''போட்டி'' என்று சொன்னாலே உடனே அத்தனை படைப்புக்கும் அதில் ஒரு அக்கறை ஏற்பட்டுவிடுகிறது. போட்டியில் அக்கறை யில்லாத மனிதர்களே கிடையாது. பம்பரம் சுற்றுவது, பாண்டி விளையாடுவதில் ஆரம்பித்து, பட்டம் பதவி வரை இது யாரையும் விடுவதில்லை. வண்டியிலே ஒன்றையொன்று முந்தப் போட்டி. வாழ்க்கையிலே ஒருவரை ஒருவர் முந்தப் போட்டி. நாதசுர வித்வான் சண்முகத்துக்கும், நாட்டியமணி மோகனாவுக்கும் போட்டி என்றால் கூட்டத்தைப் பற்றிக் கேட்க வேண்டுமா?

"சார், மோகனா ஆடறாளே, இது ஏன் தெரியுமா? சுயம்வரம் சார், சுயம்வரம்! சண்முகத்தின் தில்லானாவுக்கு அவள் ஆடிவிட்டால், அவளையே கட்டிக்கிறேன்னு சொல்லிவிட்டானாம் சண்முகம்" என்றார் ஒருவர்.

"அப்படி இல்லை சார். அவள் ஆடிச் செயித்தால் காலுக்குத் தங்கக் கொலுசு போடப் போறானாம்."

"இல்லீங்க, அவள்தான் சண்முகத்துக்குச் சங்கிலி பரிசளிக்கப் போறாளாம்."

"இது போகட்டும், சிங்கபுரம் மைனர் வேறே தங்க நாயனம் பிரசண்ட் பண்ணப் போறாராமே! இவருக்கு என்ன சங்கீதத்தில் அக்கறை?"

"அப்படி இல்லை ஐயா, மனுஷன் பணக்காரர். ஏதோ நல்ல விஷயத்திலேயும் கொஞ்சம் பணம் போகட்டுமே என்று பார்க்கிறார்" என்றார் ஒரு கிண்டல்காரர்.

இம்மாதிரி பேசிக்கொண்டே, இடத்துக்கு முந்தினார்கள் எல்லோரும். இதுவரை பின்னால் இருந்த பெண்கள் எல்லோரும் முண்டி அடித்துக்கொண்டு முன்னே வந்தார்கள்.

இந்தச் சமயம் பார்த்து வெற்றிலை போட்டுக்கொள்ளச் சென்ற வைத்தி வெளியே அகப்பட்டுக்கொண்டார். நெருக்கி



அடித்துக்கொண்டு உள்ளே வரப் பார்த்தார். முன்னே இருந்த கூட்டம் வழிவிடுவதாகக் காணோம்! அவருக்கு ஒரு யுக்தி தோன்றியது.

திருவிழாவுக்கென்று ஒரு திண்ணையிலே பாத்திரக் கடை போட்டிருந்தார் ஒருவர். அந்தக் கடையில் போய், "சார், உங்க கிட்டே ஒரு கூஜா இருந்தால் கொடுங்கள்!" என்றார்.

"கடை கட்டிவிட்டோமே!" என்று கொட்டாவி விட்டுக் கொண்டே கூறினார் கடைக்காரர்.

"இல்லை, மோகனா குடிதண்ணீர்க் கூஜாவைக் கொண்டுவர மறந்துவிட்டாள். ஒரு கூஜா இருந்தால் தேவலை என்று பார்த்தேன். அதுக்காக என்ன, வேறே எங்கேயாவது பாத்துக்கறேன்" என்று சொல்லிப் பிகுவுடன் நகர்ந்தார் வைத்தி.

"அப்படியா விஷயம்! அதை முன்னாலே சொல்லலைங்களே! இந்தாங்க, வாங்கிட்டுப் போங்க. நான் வேணா நம்ம பையனை எடுத்துக்கிட்டு வரச் சொல்லவா?" என்று அக்கறையுடன் கேட்டார் கடைக்காரர்.

"சே, உங்களுக்கு எதுக்குச் சிரமம்?" என்று கூறிவிட்டு, கூஜாவைக் கையில் வாங்கி, அதைத் தலைக்குமேல் உயர்த்திப் பிடித்தபடியே, "மோகனா, கூஜா இதோ இருக்கு! இதோ இருக்கு!" என்று உயரப் பார்த்துச் சொல்லிக்கொண்டே உள்ளே புகுந்தார் வைத்தி. கூட்டம் உடனே வழிவிட்டது. மேடை அருகில் போய், கூஜாவை மைனர் பக்கத்தில் வைத்துவிட்டுத் தம் நாற்காலியில் உட்கார்ந்தார்.

இத்தனை பிரபுக்களுக்கு மத்தியில் வைத்தி அவர் அருகில் உட்காருவது மைனருக்குக் கொஞ்சம் சிரமமாகத்தான் இருந்தது. இருந்தாலும் வைத்தியைப் பாராதவர் போல் உயர இருக்கும் மோகனாவையே பார்த்தார் மைனர்.

நாதஸ்வரத்தைத் தள்ளி இருந்து கேட்கலாம். நாட்டியம் தள்ளி இருந்தால் ரசிக்குமா?

மேடையைச் சுற்றிக் கூட்டம் தாங்க முடியவில்லை.

சண்முகத்தைச் சுற்றி முப்பது மேளக்காரர்கள் நின்றார்கள். அத்தனை பேரும் விரலைத் தீட்டிக்கொண்டு தில்லானாவுக்குத் தாளத்தைக் காட்டுவதற்குத் தயாராய் இருந்தார்கள். சண்முகமோ, காம்போதி கீர்த்தனையின் கடைசிச் சரணத்தை வாசித்துக் கொண்டிருந்தான்.

உப்பரிகையில் நிற்கும் மோகனாவின் அழகு புதிதாகப் பூத்த செங்கழுநீர்ப் பூப்போல இருந்தது. பிரம்மன் செய்த புண்ணியம், அவள் மேனியில் அதிக நகையில்லை. நங்கையின் அழகை நகை மறைக்கவில்லை. அவள் முகத்தைப் பார்த்தால், இவள்தான் இந்து மதியோ என்று சொல்லத் தோன்றியது. சுந்தரமுகமும் சந்திரபிம்பமோ என்று எல்லோரும் வைத்த கண் வாங்காமல் அவளையே பார்த்தனர்.

ஆண்கள்தாம் அழகைப் பார்த்தார்கள் என்றால், பெண்களும் அல்லவா அப்படிப் பார்த்தார்கள்!

ஒவ்வொரு பெண்ணும், "இவ அழகாத்தாண்டி இருக்கிறாள்" என்று சொல்லிக்கொண்டனர்.

அப்படி எல்லோரும் அவளுடைய அழகை ரசித்துக் கொண்டிருக்கையில், மோகனாவின் கண்கள், கீழே நோக்கியபடி அங்கு வாசிக்கும் சண்முகத்தின் அழகைப் பார்த்துக்கொண்டே இருந்தன. காம்போதி அவள் காதில் விழவே இல்லை. கண்களை அவளால் வசப்படுத்த முடியவில்லை. 'அவர் நம் எதிரி, அவரைப் பாராதே' என்று கண்களைத் திருப்புகிறாள். அவை அவளையும் கேட்காமல் ஓடி, அவனைப் பார்க்கின்றன. அவன் மேனி முழுவதையும் பார்வையால் தொடுகின்றன. தலை குனிகிறாள். ஆனால் கண் என்னவோ, அங்கேதான் ஓடுகிறது. அவளால் அடக்க முடியவில்லை. 'சரி, நன்றாகப் பார், உனக்கு எத்தனை ஆசை உண்டோ, அத்தனை ஆசையும் தீரப் பார்!" என்று சொல்லிவிட்டுக் கண்களை அதன் போக்கில் விட்டுவிட்டாள்.

பார்த்துக்கொண்டே இருந்தன கண்கள். அப்போது பாழும் மனம் ஒரு திரையை அவள் கண்ணில் போட்டது. எதிரில் நின்ற அவன் எழில் உருவம் மங்கியது, மறைந்தது. 'ஐயோ, ஏன் பார்க்க மாட்டேன்கிறாய்?' என்று அவள் கேட்டாள். 'நான் பார்க்கிறேன். ஆனால், பாழும் கண்ணீர் மறைக்கிறது' என்றன கண்கள்.

'இந்த அழகனுக்கும் நமக்கும் இடையே சந்தேகம் என்ற திரை விழுந்தது போதாதா? இந்தக் கண்ணீரும் வந்து அவரைப் பார்க்க முடியாமல் தடுக்கிறதே!' என்று ஏங்கினாள்.

ஆனால், கையில் நாதஸ்வரத்தை வைத்து வாசிக்கும் சண்முகத்தின் கண்களும் உயரத்தான் நோக்கி இருந்தன. என்றுமில்லாத அழகுடன் மோகனா விளங்குவதைக் கண்டான். 'உலகம் எப்படிச் சொன்னால் என்ன? ஓடிப்போய் அவள் மலர்க்கையைப் பற்றிக் கொண்டுவிடுவோமா?' என்றுகூட எண்ணினான். அவனையும் அந்தத் திரை மறைத்தது. மறுபடியும் முகத்தில் மிடுக்கு வந்தது. துடுக்கு அவனை விட்டுப் போய்விடுமா? அவளை வெறுத்தவன் போல முகத்தைத் திருப்பிக்கொண்டான். 'ஐயா, மகா வித்வானே, திரும்புகிறீரா? முகத்தைத் திருப்பலாம், மோகத்தைத் திருப்ப முடியாது. தலையை வேண்டுமானால் திருப்பலாம், கண்ணை உம்மால் திருப்ப முடியாது. இது இதயத்தின் வழியே செல்வது. எழிலைப் பருகவே ஏற்பட்டது. அதன் செயலை உம்மால் தடுக்க முடியாது' என்று அறிவு கூறியது. அவன் தலையைத் திருப்பி இருக்கும்போதுகூட மோகனாவின் மீதே இருந்தன அவன் விழிகள்.

அன்று அதிர்வேட்டைக் கேட்டுப் பாதியில் நிறுத்திய சண்முகம் இப்போது அழகைப் பார்த்துக் காம்போதியை முடித்தான்.



நாதஸ்வரத்தைக் கையில் எடுத்தான். இதயத்தை நங்கையிடமிருந்து எடுக்க முடியாமல் தவித்தான்.

வாசிப்பு முடிந்தவுடன் கூட்டம் கரகோஷம் செய்தது.

இடியோசை போன்ற அந்த முழக்கத்தினிடையே கொடி மின்னல் இறங்கி வருவது போல், படிவழியே இறங்கி வந்தாள் மோகனா. தெருவில் அமைத்திருந்த மேடையின்மீது ஏறினாள். முத்துக்குமார நட்டுவனார், நிஜமான தங்கச் சங்கிலியைப் போட்டுக்கொண்டு, மோகனாவின் வலப்புறத்தில் வந்து நின்றுகொண்டார். வரதனுக்குத் தாங்கமுடியாத களிப்பு. அவன் இடப்புறத்தில் நின்றான். துத்திக்காரர், பாட்டுக்காரர் எல்லோரும் வந்து நின்றனர். வடிவாம்பாள்கூட ஆனந்தத்தோடு ஒரு ஓரத்தில் நின்றாள்.

நட்டுவனார் தாளத்தைத் தட்டினார். வரதன் கை பரபரப்புடன் முழங்கியது. எதிரில் நட்டுவனாரைக் கும்பிட்டுவிட்டு, இடப வாகனத்தில் இருக்கும் இறைவனைக் கும்பிட்டாள் மோகனா. எதிரே நின்று பரதேசியாரை வணங்கினாள்.

நெஞ்சம் திடுக்கிட்டது. 'இது என்னடா தர்மசங்கடம்' என்று யோசனை வந்தது. வித்தையை மதிப்பதா அல்லது விரோதத்தைப் பார்ப்பதா? எதிரில் நிற்கும் சண்முகத்தைக் கும்பிட்டுவிட்டு ஆரம்பிப்பதா, கூடாதா?" என்று திகைத்தாள். 'இத்தனை நாள் இதயத்தில் வைத்துக் கும்பிட்டோமே அதற்கு இவர் என்ன ஒழுங்காக நடந்துகொண்டுவிட்டார்' என்ற கோபம் வந்தது. அவரைப் பார்த்து கும்பிடவில்லை. ஆனால், இதயத்தை நோக்கி எழுந்தன கைகள்.

சிலப்பதிகாரத்தில் இருந்து அருமையான வரிப்பாடல் ஒன்றை இறை வணக்கமாகத் தேர்ந்தெடுத்திருந்தார் நட்டுவனார்.

ஆய்ச்சியர் குரவையிலுள்ள அழகான பாட்டுகளுள் இது ஒன்று. மாதவன் புகழை யாதவச் சிறுமியர் பாடும் பாடல்.

"நாராயணா என்னா
நாவென்ன நாவே"

அந்தப் பாட்டுக்கு இசைய ஒரு கோபிகையைப் போல் மோகனா ஆட ஆரம்பித்தாள்.

"மூவுலகும் ஈரடியால்
முறைநிரம்பா வகைமுடிய
தாவிய சேவடி"

'மூன்று உலகத்தையும் இரண்டடியால் தாவி உலகை அளந்தாரி திருமால்' என்னும் அதன் கருத்துக்கேற்ப மோகனா முதலில் வாமனனாகி நின்றாள். அப்படியே வாமனாவதாரத்திலிருந்து திரிவிக்ரமனாக அவள் ஓங்கி நின்ற காட்சி எல்லோருடைய உள்ளத்தையும் உலுக்கியது. மெய் சிலிர்த்தது.

'தாவிய சேவடி' என்று சொல்லிக்கொண்டு அவள் ஒரு காலை ஓங்கிப் பூமியில் வைத்த உடனே சலங்கை குலுங்கவில்லை. அண்ட சராசரமே குலுங்கியது. அடுத்தாற்போல்,

" தாவிய சேவடி சிவப்பத்
தம்பியொடுங் கான்போந்து"

என்ற இடத்தில் மோகனா வில்லேந்திய ராமனாகக் காட்சியளித்தாள்.

மாவலிச் சக்கரவர்த்தியின் தலையில் கால் வைத்த வாமனனை அப்போது காணோம். கருணை புரியும் ராமன் சடைமுடி தரித்து, 'தம்பி லட்சுமணனுடன் கால்கள் சிவக்கக் காட்டில் அலைந்தார். அந்தத் தோற்றத்தில் மோகனா நடந்தாள்.

" சோவரணும் போய்மடியத்
தொல்இலங்கை கட்டழித்த"

என்னும் பொழுது ராவண சம்ஹாரம் செய்யும் ரகுவீரனைப் போல, கோதண்டபாணியாக வில் வளைத்து அம்பு எய்யும் தெய்வத் தோற்றத்தில் நின்றாள்.

திருவாரூருக்கும் தில்லை விளாகத்துக்கும் பதினைந்து மைல். அங்கு உள்ளவர்களுக்கெல்லாம் தில்லை விளாகத்து ராமபிரானைத் தெரியும். கையிலே கோதண்டம் ஏந்தி மோகனா நின்றபோது, அவள் கையிலே பச்சை நரம்புகள் அழகுடன் தெரிந்தன: 'இது திருவாரூர்மோகனாவா அல்லது தில்லை விளாகத்து ராமனா?' என்று எல்லோரும் பிரமித்தனர்.

" மூவுலகும் ஈரடியால்
முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசிவப்ப
தம்பியொடும் கான்போந்து
சோவரணும் போய்மடியத்
தொல்இலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத
செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத
செவியென்ன செவியே."

'திருமாலின் புகழைக் கேளாத காதுகள் என்ன காதுகள் !' என்று அவள் அபிநயத்துடன் ஆடியதும், கூட்டம் முழுவதும் கரகோஷம் செய்தது. அடுத்த பாட்டில்,

" கரியவனைக் காணாத
கண்ணென்ன கண்ணே
கண்இமைத்துக் காண்போர்தம்
கண்என்ன கண்ணே"



திருமாலைக் காண்பவர்கள் அந்த அழகிலே சொக்க வேண்டும். கண்ணை இமைக்காமல் பார்க்கவேண்டும் அவன் அழகை, என்ற கருத்துடைய இந்த இடத்தை அவள் அபிநயம் பிடித்தாள். அது என்ன, கண்ணா கடலா? கடலில் எல்லா அலைகளும் ஒரே மாதிரியாகத்தான் அடிக்கின்றன. ஆகவே அது கடல் அல்ல. கண்ணை 'வேல் நெடுங்கண்' என்பார்கள். 'வேல், கொலைத் தொழில் செய்யுமே அல்லாது, இத்தனை பாவங்கள் அதற்கேது?' என்று மயங்கினான் சண்முகம்.

'கண் இமைத்து, என்ற பதத்திற்கு அன்று மோகனா எட்டு வகை அபிநயங்கள் பிடித்தாள். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரஸம். தம்பி இலக்குவனை ராமன் 'இங்கு வா' என்று அழைக்கின்றான். அதற்கு ஒரு கண் இமைப்பு 'லக்ஷ்மணா, சூர்ப்பணகையைக் கவனித்துக்கொள்' என்கிறான். இதற்கு ஒரு கண் இமைப்பு சூர்ப்பணகை ராமனைப் பார்த்து, 'உன் எழிலுக்கு இந்தச் சீதை ஏற்றவள் அல்ல. நீ என்னுடன் வந்துவிடு' என்று 'காமக்கண்ணால் காமவல்லி' அழைக்கின்றாள். அதற்கு ஒரு மாதிரியான கண் இமைப்பு 'இன்று போய் நாளை வா' என்று ராவணனிடம் ரகுவீரன் கருணையுடன் சொல்லுகிறான். அதற்கு ஒரு கண் அமைப்பு இவ்வாறு அன்று அவள், 'உலகத்தில் பேச்சுக்கே வேலையில்லை. எல்லாவற்றையும் கண்ணாலேயே பேச முடியும்' என்று முடிவு கட்டினாள் 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்பதைப் போல,

" கரியவனைக் காணாத
கண்ணென்ன கண்ணே !
கண்இமைத்துக் காண்பார்தம்
கண்என்ன கண்ணே !"

என்று பாடி, அவள், வைத்த கண் வாங்காமல் கரிய மாலின் அழகைப் பார்த்தாள். அப்போது அங்கு கூடியிருந்த கூட்டம் முழுவதும் வைத்த கண் வாங்காமல் மோகனாவின் அழகையே பார்த்தன. 'வாமனன், திரிவிக்கிரமன், ஸ்ரீராமன், பாற்கடலில் பள்ளிகொண்ட பரந்தாமன் இவர்களைப் போல் அபிநயம் பிடித்ததும் அடுத்தாற்போல் கண்ணன் வந்தான்.

கண்ணனாக வந்தவுடனே, அந்த அபிநயத்தில்தான் எத்தனை ஆனந்தம், எவ்வளவு உயிரோட்டம்! புன்முறுவல் பூத்த வாயும், கொண்டையில் மயில் பீலியும், கையில் சங்கு சக்கரமும், கதையும், தாமரையும் பூண்டு நான்கு கரங்களுடன் காட்சியளித்தாள் மோகனா. இரண்டு கைகள்தாம் நான்காகத் தோன்றின. மார்பில் துளசி மாலையும், கையில் குழலுமாக அவள் அபிநயம் பிடித்துக் காட்டியபோது, அவை அங்கங்கு நின்றன. கூட்டத்தினருள் ஒருவராவது மோகனாவைக் காணவில்லை. குழலூதும் கண்ணனைக்

கண்டார்கள்; கோவர்த்தனம் ஏந்திய கோவிந்தனைப் பார்த்தார்கள். ஆநிரை மேய்த்த அச்சுதன், வெண்ணெயைத் திருடி உண்ட கண்ணன், வீதியில் புழுதியளைந்த மாதவன் இவ்வாறு பற்பல கோலங்களில் கண்ணனையே கண்டார்கள். கடைசியாக வந்த காட்சி கருத்தைத் தொட்டது.

"மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார்
வஞ்சம் கடந்தானை"

என்று கண்ணன் யானையை அடக்கியதும், கம்சனைக் கொன்றதும் ஆகிய வீரக் கூத்தை ஆடினாள் மோகனா. அடுத்தாற்போல் அதற்கு நேர்மாறாகச் சீரடிகள் சிவக்கப் பாண்டவர்க்குத் தூது நடந்த காட்சி.

"நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே,
நாராயணா என்னா நாவென்ன நாவே."

என்று அபிநயத்துடன் தொய்ய நடந்தாள். தூது நடந்தாள். கையை வீசினாள். சங்கம் முழங்கினாள். கடைசியாகக் கண்ணனின் பாதங்கள் மண்ணில் பதிவது போல் அடி வைத்து நடந்து காட்டினாள். எல்லோரும் அக்கறையுடன் அதைப் பார்த்தார்கள். அப்போது அவள் செய்த ஒரு அபிநயம் எல்லோருக்கும் ஒரு பக்திப் பெருக்கை உண்டாக்கியது.

மண்ணில் புதைந்திருந்த, கண்ணன் திருவடித் தடங்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டாள் மோகனா. எல்லோருடைய கண்களிலும் ஆனந்த பாஷ்பம் பெருகியது. மோகரா முழங்கியது. முத்தாய்ப்பு வைத்து முடித்தான் வரதன்.

துதிப்பாடல் முடிந்துவிட்டது. கரகோஷம் கமலாலயத்தில் எதிரொலி செய்தது. அப்பொழுதுங்கூட அப்படியே பிரமித்து நின்றான் சண்முகம். 'அடேயப்பா! வித்தை என்றால் இதுவல்லவா வித்தை! துவண்டு விழும் கொடி போல் இருக்கிறாள். ஆடினால் மான் போல் துள்ளி விளையாடுகிறாள். கற்ற வித்தையையெல்லாம் இரண்டு கண்ணால் காட்டிவிட்டாளே! சபாஷ்!' என்று நினைத்தான் சண்முகம்.

'ஆம், நம்மை மயக்கியதும் அந்தக் கண்கள்தாமே! தெரியாமலா விழியில் நஞ்சு இருப்பதாகச் சொல்லுகிறார்கள்! இவளுடைய காலில் இருக்கும் சுத்தம் கருத்தில் இல்லையே!' என்று மறுகணமே துடித்தான்.

ஆட்டத்திற்கு அடுத்த பாட்டை ஆரம்பம் செய்ய இருந்த நட்டுவனார், தவில்காரர் மேளம் போட்டதைக் கண்டதும் திகைத்தார். வரதன் மத்தளத்தில் கை வைத்தான்.

ஆனால், முத்துராக்குவின் தவில் நாதம் அதையும் மீறி முழங்கியது.



நாதஸ்வரம் சீறியது. அதிலிருந்து வசந்தா ராகம் பொழிந்தது. நல்ல விரைவான காலப் பிரமாணத்தில் அவன் வாசித்த

"ராமசந்த்ரம் பாவயாமி
ரகுகுல திலகம் உபேந்த்ரம்"

என்ற பாட்டு, 'நீ மாத்திரந்தான் ராமனைப்பற்றி ஆடுவாயோ! இதோ பார், என் வாசிப்பில் ராமனையே எதிரில் கொண்டுவந்து நிறுத்துகிறேன்' என்பதைப் போலிருந்தது.

"பூமிஜா நாயகம் புக்திமுக்தி தாயகம்
நாம கீர்த்தன தாரகம்-நரவரம் சுதமாயிகம்
ஸாகேத நகரே நிவஸந்தம்"

அடேயப்பா! அந்தச் சரணத்தில்தான் என்ன கம்பீரம்! ரகுவீரனின் கம்பீரம் முழுவதும் அந்தச் சரணத்திற்கு உண்டு. அவன் வாசிப்பில் அது எதிரில் வந்து நின்றது. அதிலும் அந்த அருமையான கீர்த்தனத்தின் சிட்டஸ்வரத்தை,

"தன தானத் தானனா"

என்று தாளத்தில் அடித்து எடுத்தவுடன் முத்துராக்கு தம்மை மறந்தார், குமுறிவிட்டார். அவர் கையில் பேசிய விரலும், குழையும், தவிலும் நாதஸ்வரம் என்பதுகூடத் தெரியாமல் இரண்டும் சுத்தமாகச் சேர்ந்த ஜோடி, நாதஸ்வரம் போல் ஒலித்தன.

அந்த நடையில் மயங்கினாள் மோகனா. அவள் கால்கள் 'நான் ஆடவா, ஆடவா' என்று துடித்தன. பக்கத்தில் ஒரு குதிரை தன்னை விலக வரும் போது உயர்ந்த ஜாதிக் குதிரையின் கால் துடிப்பதைப் போல் சண்முகத்தின் பரபரப்பான வாசிப்பில் அவள் கால்கள் ஆடப் பறந்தன. கீர்த்தனம் முடிந்தது. கரகோஷம் அதிர்ந்தது; வான் முகட்டை முட்டியது. 'பேஷ், சபாஷ்' என்ற ஒலிகள்.

"பலேங்கு! தறிக்கிணைத்தோம்!" என்று மிருதங்கத்தை ஓங்கி ஒரு அறை அறைந்தான் வரதன். அடுத்த பாட்டைச் சண்முகம் எடுப்பதற்குள் நாம் முந்த வேண்டும் என்ற ஆவல் அவனுக்கு. கொன்னோரத்தைத் தட்டியவண்ணம் ரொம்பப் பதவிசாக சுந்தரமூர்த்தி நாயனாரின் தேவாரம் ஒன்றைப் பாட ஆரம்பித்தார் நட்டுவனார்.

"ஓய் வைத்தி, என்ன, தேவாரமா?" என்றார் மைனர்.

"மறுஷன் கொஞ்சம் டல்லு... விர்ருனு ஒரு சிங்காரப் பதத்தை எடுத்துவிடுவாரா? தேவாரம் பாடறாரு! கொஞ்சம் இரும், கண்டல் உண்டான்னு கேக்கறேன்" என்றார் வைத்தி.

இவ்வளவு பெரிய கூட்டத்தின் நடுவில் மோகனா சிருங்கார ரஸத்தில் பாடி ஆடுவது மைனர் மனத்துக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

அதற்குள் வைத்தி சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரரிடம் சென்றார். "நாயனக்காரரே, ஏதாவது சிருங்கார ரஸமா நடத்தச் சொல்லுங்க" என்றார்.

"ஏது, அம்யாவுக்கு நவரஸமும் அத்துபடி போலிருக்குது சாமி சன்னிதி. அவுங்க ஆடுறபடி ஆடட்டும்"

"ஏன் சிருங்கார ரஸத்தையும் சாமிதானே படைச்சார்?"

"சாமி உங்களைக்கூடத்தான் படைச்சிருக்காரு — அது அது இருக்கவேண்டிய இடத்திலே இருக்கணும் — நீங்க அப்படிப் போய் உட்காருங்க" என்றார் சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர்.

"உம்ம கிட்ட என்ன கிபார்சு? நான் போய் வடிவாம்பாள் கிட்டச் சொல்றேன்" என்று மேடையை நோக்கி, கண்டவர்கள் மேலெல்லாம் காலை வைத்துக்கொண்டு நுழைந்தார் வைத்தி.

"யாருடா மடையன்! ஆளு உட்கார்ந்திருக்கிறது தெரியல்லே?" என்று ஒரு கை அவரை வேகமாகக் கீழே இழுத்தது. வைத்தி தடுமாறி விழுந்தார். "அட நீங்களா?" என்றார் கோயில் வீட்டுக் குப்புசாமி.

இதற்குள், "சத்தம் சத்தம், உஸ் உஸ்!" என்று பல குரல்கள் எழுந்தன. வைத்தி அங்கேயே மண் தரையில் உட்கார்ந்தார். பெருமூச்சு விட்டார். 'சரி, பின்னே தேவாரத்தையாவது பார்ப்போம்' என்று ஆட்டம் நடக்கும் மேடையை நோக்கினார்.

ஆனால், நட்டுவனார் எடுத்துக்கொண்ட தேவாரம் சாதாரணமானதல்ல. உள்ளத்தை உருக்குவது வைத்தியின் உள்ளத்தை அது உருக்காவிட்டாலும், மோகனா, சண்முகசுந்தரம் ஆகிய இருவரின் உள்ளங்களையும் அது உண்மையிலேயே உருக்கிவிட்டது.

சுந்தரமூர்த்தி நாயனார் ஆரூர் அழகனிடம் மாறாத காதல் கொண்டவர். அவன் அழகை எப்பொழுதும் கண் குளிரக் காண ஆசை கொண்டவர். அப்படியிருந்தும் அவருடைய முன்வினைப் பயனால் அவரும் கசிந்துருகிக் கண்ணீர் வடிக்க வேண்டிய சமயம் ஒன்று வந்தது.

சண்முகசுந்தரம், மோகனா இருவருடைய காதலுக்கும் இடையே சந்தேகம் என்னும் திரை வந்து மூண்டது போல, சுந்தரமூர்த்திக்குத் திருவொற்றியூரில் கண்கள் மறைந்துவிட்டன. "இறைவா, ஏன் இப்படி என் கண்ணை எடுத்துக்கொண்டாய்? உன் அழகை இனி எவ்வாறு காண்பேன்?" என்று வருந்துகிறார். காஞ்சிபுரத்தில் வந்து கதறுகின்றார். அப்பொழுது ஒரு கண் மட்டும் கிடைக்கின்றது. கிடைத்தவுடனே அவருக்கு இறைவன் மேல் கோபம் வருகின்றது. 'ஒரு கண்ணைக் கொடுத்தவர், இன்னொரு கண்ணையும் கொடுக்கக்கூடாதா? இரு கண்களாலும் உன் அழகைப் பருகினால், உனக்கு என்ன குறைந்தா போய்விடும்? உன்னை அண்டியவர்களைச் சோதிக்கின்றாயே! நான் எக்கேடு கெட்டுப்போனால் உனக்கு என்ன? நீ நன்றாய் இரு' என்று அன்போடு கோபத்தை அள்ளிச் சொரிகின்றார். இந்தப் பாடலை, முத்துக்குமர நட்டுவனார் தெரிந்துதான் பாடினாரோ அல்லது தெரியாமல்தான் பாடினாரோ?



'நீர் என்னை விலக்கினாலும் நான் உம்மை விட்டு விலகிப் போக முடியாது. நான் என்றும் உமக்கே அடிமையாகிவிட்டேன்' என்று மோகனா சொல்வது போல் அமைந்தது அப்பாடல்.

"மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல உள்ளே கனன்று
முகந்தான் மிகவாடி"

என்ற அடிகளை மத்தியமாவதி ராகத்தில் திருபுடை தாளத்தில் பாடினார் முத்துக்குமர நட்டுவனார். 'உனக்கே அடிமையானேன். வேறு எவரையும் நான் விரும்ப மாட்டேன். காதல் என்னும் நெருப்பு எரியாமல் உள்ளே குமைந்து என் நெஞ்சை உருக்குகின்றதே! என் முகவாட்டத்தைப் பாரும்' என்ற கருத்துள்ள அந்தப் பாடலைச் சொல்லும் பொழுதே, மோகனாவின் உடம்பு வியர்த்தது. கண்களில் நீர் மல்கியது. ஒரு கணம் சண்முகத்தைப் பார்த்து ஏங்கினாள்.

"ஆளாய் இருக்கும் அடியார்தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர்
வாழ்ந்து போதீரே'

'நீ நன்றாக இரு. என்னுடைய கஷ்டத்தை நீ கேட்க வேண்டாம். காது கேட்காதது போல இரு; கண் தெரியாதது போல இரு' என்று சொல்லி அவள் ஆடியபோது, சண்முகத்தின் மனத்தில் ஏதோ சுருக்கென்றது.

"நாய்தான் போல் நடுவே திரிந்து
உமக்காட் பட்டோர்க்கு
வாய்தான் திறவீர் திருவாரூரீர்
வாழ்ந்து போதீரே"

'என்னை ஏன் வெறுக்கின்றாய்? நாய் போல அலையும் என்னைப் பார்த்து வாய் திறந்து ஒரு வார்த்தை பேச மாட்டாயா? சரி, நீ பேச வேண்டாம். நீ நன்றாயிருந்தால் போதும்' என்று அவள் ஆடும் பொழுது, தன்னைத்தான் இவ்வாறு கேட்கின்றாளா?' என்று சண்முகம் பிரமித்தான். இருவர் காதலுக்கும் இடையே வந்த விதியை நினைத்தான். 'மோகனா, வருந்தாதே, வருந்தாதே!' என்று ஆறுதல் சொல்ல நினைத்தான். வாய் குழறியது. ஆனால், சந்தேகப்பேய் உடனே அவனை உலுக்கியது. கலங்கினான். திரும்பினான். அடடா! இந்த நேரத்தில்தானா அவன் பார்வையில் மைனர் படவேண்டும்? அட, கண்ணில்தான் பட்டாரே சும்மாவது இருந்திருக்கக் கூடாது?

"பேஷ்! ரொம்ப நல்லா வாசிச்சீங்க! ஸ்ரீசுப்ரமண்யாய நமஸ்தே காதிலேயே நிக்குது. ஏதாவது தாகத்துக்குச் சாப்பிடறீங்களா?" என்றார் மைனர்.

"என், கூஜாப் பாலு மிச்சம் இருக்குதோ?" என்றான் சண்முகம்.

"மிச்சமா இதோ, குங்குமப்பூப் போட்டு வாங்கி வரச் சொல்றேன்" என்று திரும்பினார்.

'வேண்டாம், ஒரு குவளைப் பால் அல்ல! பாற்கடலையே குடித்தாலும் என் காந்தல் தீராது' என்று சொல்வது போல் அவரை ஒரு பார்வை பார்த்தான். திரும்பி மோகனாவை வெறுப்புடன் நோக்கினான். நாதஸ்வரத்தை அவசரமாக எடுத்து ஊத ஆரம்பித்தான்.

**"என்னடி மெத்த தளுக்குக் காட்டுறாய்**
**ஏலாதடி உந்தன் ஜாலமெல்லாம் இங்கே என்னடி"**

கூட்டத்தில் ஒரே குதூகலம், ஒரே அட்டகாசம். "பேஷ்! பேஷ்!" என்ற ஆரவாரம்.

இதைக் கேட்டதும் துடித்தாள் மோகனா. வடிவாம்பாள் முகம் சுருங்கியது. வரதன் மத்தளத்தைக் கீழே வைத்துவிட்டு முண்டாவைத் தட்ட இறங்குவான் போலிருந்தது. முத்துக்குமர நட்டுவனாருக்குச் சூடு பிறந்தது. மோகனாவே பாடி அபிநயம் பிடிக்க ஆரம்பித்தாள்.

**"எங்காணும் வரவர**
**கணிசங்கள் இல்லாமல்**
**இப்படிச் செய்துகொண்டீர்!"**

கூட்டம் கொல்லென்று சிரித்தது. பரதேசியார் புன்னகை புரிந்தார். சண்முகத்தின் முகம் சிவந்தது.

**"வெகு சம்ப்ரதாயமடி பெண்ணே இது"**

இதற்குப் பதில் சொல்லாமல் விடுவாளா மோகனா? அவள் இரத்தம் துடித்தது. பைரவி ராகப் பதத்தைப் பிடித்தாள். முகத்தை ஒரு வெட்டு வெட்டிக் கையை உதறி,

**"இனிமேல் அவருக்கும் எனக்கும்**
**ஒரு போதும் இணங்காதடி போடி"**

அவன் சிக்கலில் வாழ்ந்தால் என்ன, சிங்கார வேலனேயானாலு மென்ன?

**"கனி மிகும் தண்டலை**
**சூழும் சிகண்டி மலை**
**கந்தசாமி வலிய**
**வந்து நலஞ் சொன்னாலும்"**

என்று பாடி, துடுக்கும் மிடுக்குமாய் ஆடி வரவே, கூட்டத்தில் சிரிப்பும் கரகோஷமும் மிகுந்தன.

இளங்காளை சண்முகம் தன்னை மறந்தான். இவள் கொட்டத்தை ஒடுக்கிவிடுவது என்று நினைத்தான். நாதஸ்வரத்தில் ஒரு பிர்க்காக் கொடுத்தான். கமாக துள்ளிக் குதித்தது. ஆவேசத்துடன் தில்லானாவை முழக்கினான்.





## "தீம் தீம் தீரன்ன தீரன்ன"

காலத்தின் போக்கிலே கலைகளும் மாறுகின்றன. புதுமையில்தான் உலகம் வளர்கின்றது. தோடு, மாட்டல், திமிகி, காரை, கொடி, வங்கி, புல்லாக்கு என்று இருந்த நகைகள் மாறி, வெவ்வேறு பெயர்களுடன் புது மாதிரியாக வந்து இருக்கின்றன. ஆனாலும் பொன் ஒன்றுதான், பூஷணங்கள் வெவ்வேறு. மண் ஒன்றுதான், பாண்டங்கள் வெவ்வேறு. ஆத்மா ஒன்றுதான், சரீரங்கள் வெவ்வேறு. ஆண்டவன் ஒன்றுதான், பெயர்கள் வெவ்வேறு.

இதைப் போலவே சப்த சுரங்கள்தாம் உண்டு. அதன் உருவங்களோ, விருத்தம், தேவாரம், திருத்தாண்டகம், இசைப்பா, பதம், கீர்த்தனம் என்று உருவங்களில் வெவ்வேறாக இருந்து வருகின்றன. இது போதாது, சங்கீதத்திலும் புதுமை வேண்டுமென்று விரும்பிய சிலர் ஒவ்வொரு காலத்திலும் அதில் ஒவ்வொரு புதுமையைச் செய்தார்கள். உதாரணமாக இங்கிலிஷ் நோட்டு என்று ஒன்று உண்டு. தஞ்சாவூரில் சரபோஜி மகாராஜா காலத்திலே அது பிரபலமாகி வந்தது.

அந்த நோட்டுகளைப் போல "ரமிஞ்சுவாரெவருரா" என்று தியாகராஜ சுவாமிகள்கூட ஒரு கீர்த்தனை இசைத்திருக்கிறார்கள்.

இவ்வாறு காலத்தோடு கலை எனும் பூஞ்செடி பூத்த புது மலர்கள்தாம் ஜாவளியும், தில்லானாவும். இசையில் வடநாடு தென்னாடு என்ற வித்தியாசம் எப்பொழுதும் இருந்தது இல்லை. இங்குள்ள "ச— ரி— க—ம—ப—த—நி—" தான் அங்கும் ஆதார சுரங்கள். அயல் நாடுகளில்கூட இதை ஒட்டியேதான் ஆதார சுரங்கள் இருந்து வருகின்றன. வடநாட்டுத் தரானாதான், இங்கு தில்லானாவாகியது.

மக்களை எப்படிக் கவரலாம், அவர்களுக்கு எப்படி அதிகமான களிப்பை உண்டாக்கலாம் என்று யோசித்து, பல மகான்கள் சுமார் நூறு வருஷங்களுக்கு முன்பு நம் நாட்டில் தில்லானாவைச் செய்தார்கள். அதில் புதுமை அதிகம்.

அதனால் தில்லானாவை சண்முகசுந்தரம் வாசிக்க ஆரம்பித்தவுடனே, கூட்டம் முழுவதிலும் ஒரு குதூகலம் ஏற்பட்டது. அவனைச் சுற்றியிருந்த நாதஸ்வரக்காரர்கள் எல்லோருமே தாளத்தை விரலால் போட்டுக் காட்ட ஆரம்பித்தார்கள். அத்தனை கைகளையும் பார்த்த தாளக்காரப் பையன் தடுமாறிப் போனான். வழக்கம் போல, கண்ணை

மூடிக்கொண்டு தூங்கிவிட்டான் இப்பொழுது தொந்தரவு இல்லை அல்லவா? ஆகையால், அவன் கைகள் தாளம் தவறாமல் போட்டுக் கொண்டே இருந்தன.

ஐந்து நடைத் தில்லானா

இராகம் : கமாஸ் — திச்ரதிரிபுடை

தீம்தீம் தீரன்ன தீரன்ன தொம்திருதிருனா
திரனா தொம்திருனா
தீரதானதீரதான ததரதனி (தீம்தீம்)

அனுபல்லவி

நாதிருதானி தொம்திருதானி
நாதிருதீம்தீம் தொம்திருதீம்தீம்
தகதிலானதக
திரு திரு திர திரனா
தீரதான தீரதான ததரதனி (தீம்)
ஆதிசிவ னம்பலத்தில் நடமாட
அவனோடு அருகிலாடும் உமை
இரு விழிநிறை யருளால்
அகிலபுவன முழுது மாட கமபதநி

சொற்கட்டு

தாகதஜம்தரி தகுந்தரிகுகுந்
தரிகிடதக தித்திலானதொம்
கிடதகதரிகிடதொம் தொம்தக்
கிடதக தரிகிடதொம் தொம்தத்தி
கிட தக தரிகிட தொம் (தீம்)

மேற்கண்ட வண்ணம் சண்முகம் வாசித்தவுடனே எல்லா ஜனங்களும் அவனையே பார்த்தார்கள். எல்லாருடைய காதிலும் இசை நிரம்பியது. இன்பத் தேன் பருகிய வண்டுகள் போல, எல்லோரும் ஆடினார்கள்.

ஆனால் அந்தத் தேனைப் பருகாமல், அந்தத் தேனுக்குள்ளே என்னென்ன இருக்கின்றது என்பதைப் பார்த்துக்கொண்டே நின்றாள் மோகனா. சண்முகசுந்தரம் இரண்டு ஆவர்த்தனம் பல்லவியை வாசித்தான். முத்துராக்குவோ நடையை எடுத்துக்காட்டாமல் சர்வ லகுவாகவே வாசித்தார். எதிரில் அடைவில் அமர்ந்திருந்த மோகனா, அந்தத் தாளத்துக்கேற்ப, இசையாகிய கடலில் இருந்து வெளியே வரும் லட்சுமிபோல, பாற்கடலில் இருந்து சந்திரன் எழும்பி வந்தது போல மேலே எழுந்தாள்.

இடுப்பிலே கையை வைத்துக்கொண்டு கழுத்தை ஆட்டி 'அட்டமி' போடத் தொடங்கினாள். அவள் கழுத்துக்கு மேல் முகம்



மாத்திரம் காலப்பிரமாணத்தில் அசைந்தது. இதைப் பார்த்து ஆயிரம் தலைகள் ஆடின. அவள் விழிகள் இரண்டும் தாளத்தில் புரண்டன. இதைப் பார்த்து ஆயிரக்கணக்கான விழிகள் நிலைக்குத்தி நின்றன.

அவள் உதடு, தாளத்தில் இசைந்தது. புருவம் தாளத்தில் வளைந்தது. காது தாளத்தில் கலந்தது. ஒவ்வொரு நரம்பும் தாளத்தில் லயித்தது.

உள்ளும் மேலும் ஓடும் மூச்சு அதே தாளத்தில் ஓடியது.

இதயத் துடிப்பு அதே தாளத்தில் அமைந்தது.

உடம்பே இசையில் லயமாகிவிடவே, பார்த்தவர்கள் எல்லாம் அவள் நாட்டியத்தில் லயமாகிவிட்டனர்.

ஆனால் அவள் சித்தமோ தனித்து நின்றது.

கம்பத்தின் மேல் ஏறி கர்ணம் போடுபவன் எவ்வளவு வேகமாகச் சுற்றினாலும், எவ்வளவு கர்ணம் போட்டாலும் அவன் கைகள் எப்படிப் பிடியை விடாமல் இருக்கின்றனவோ, அதே போல் அவள் மனம் மட்டும் சண்முகத்தின் வாசிப்பை விடாமல் கவனித்துக் கொண்டே இருந்தது. அவளுக்கு விஷயம் ஒரு நொடியில் விளங்கி விட்டது.

சண்முகம் போட்டிக்கென்றே நிரடாக ஒரு தில்லானாவைப் பஞ்ச நடைகளிலும் தயார் செய்திருக்கிறான். தவுல்கார முத்துராக்கு அந்த நடைகளை வெளிக்காட்டாமலே வாசிக்கிறார் என்பதை அறிந்தவுடனே அவள் இதயம் துள்ளியது. ஜல் என்று காலால் உசியில் ஒரு தட்டுத் தட்டி மின்னல் போல் துள்ளினாள்.

'ஆஹா, ஆஹா' என்றனர் கூட்டத்தினர்.

முன்னடை நடந்தாள்; முதியவர்களும் மயங்கினர். பின்னடை நடந்தாள்; பிரமித்தனர் எல்லோரும். 'திரும்பி ஒரு முறை நடக்க மாட்டாளா? அவள் பின் அழகைக் காண மாட்டோமா?' என்று எல்லோரும் ஆவலுடன் நின்றார்கள்.

அதைப் பார்த்த சண்முகசுந்தரத்தின் கை சற்று நழுவியது. 'அவள் அழகு நம்மை வாசிக்கவிடாது போல் இருக்கிறதே' என்று எண்ணினான். 'நாம் இவள் எதிரில் உட்கார்ந்து வாசிப்பது தப்பு. இவள் நம்மைத் தாளத்திலிருந்து வாரி விட்டுவிடுவாள்' என்ற அச்சங்கூட ஏற்பட்டது. உடனே கண்ணை மூடிக்கொண்டு வாசிக்க ஆரம்பித்தான். என்ன ஏமாற்றம்? அந்தக் கண்ணுக்குள்ளே வந்து ஆடத் தொடங்கினாள் மோகனா. 'ஏ மனமே, மோசம் செய்து விடாதே, கெட்ட பெயரை வாங்கி வைத்துவிடாதே!' என்று ஒரு எச்சரிக்கை செய்துகொண்டு சங்கீத தேவதையை இதயத்தில் நிறுத்தினான், சண்முகம்.

சிந்தையை ஒருவழிப்படுத்தி, பாடுபட்டு வாசித்துக்கொண்டிருந்தான். அவன் வாசிக்க வாசிக்க மோகனாவுக்கு உற்சாகம் அதிகமாயிற்று. அவன் அழகைப் பார்த்தாள். அவன் வாசிக்கும் அற்புதத்தைக் கவனித்தாள். அவளுக்கு ஒரே லட்சியம். 'அன்றைக்கு

அழகர் கோவிலில் நம் ஆட்டத்தைப் பார்க்க மாட்டேன் என்றார் அல்லவா? இன்றைக்கு அவரே எதிரில் அமர்ந்திருக்கிறார். அவரே வாசிக்கிறார். அவர் வாசிக்க நாம் ஆடுகின்றோம். அவர் வாய்க்குக் கட்டுப்பட்டு நாம் நடக்கின்றோம். அவர் இசை, நான் தாளம்; அவர் வீணை, நான் நாதம்; அவர் விரல், நான் ஸ்வரம்' என்று எண்ணினாள். சிந்தனையை அவன்பால் செலுத்தினாள். கூட்டம் மறைந்தது. அவளுக்கு இப்பொழுது சண்முகமும் அவன் இசையுந்தான் எதிரில் நின்றன. ஆகவே, சிறிதும் சந்தேகமின்றி, தாளத்தின் நடையைத் தனதாக்கிக் கொண்டு தாவியாடினாள். இவ்வாறு காதலன், காதலி இருவரும் இசையில் ஐக்கியமானார்கள்.

வரதனும் நட்டுவனாரும் எதில் ஐக்கியமாவது என்று தெரியாமல் தடுமாறினார்கள். வரதனுக்கு ஒன்றும் புரியவே இல்லை. சண்முக சுந்தரம் எடுத்துக்கொண்ட தில்லானா, எந்த நடை, எந்தத் தாளம் என்பவற்றையெல்லாம் அவனால் யோசிக்க முடியவில்லை. காரணம் வேறொன்றுமல்ல. அவனுக்கு நிரம்ப ரசிகத் தன்மை உண்டு. சண்முகம் அற்புதமாக வாசிக்கவே அதில் லயித்துத் தன்னை மறந்துவிட்டான். அப்புறந்தான், 'ஐயோ, நாம் பக்கவாத்தியம் வாசிக்க அல்லவா வந்திருக்கிறோம்!' என்ற எண்ணம் வந்தது. தில்லானாவைக் கவனித்தான், திகைத்தான். 'சே, இந்தத் தாளக்காரனோடும், தவுல் காரனோடும் சண்முகசுந்தரம் சேர்ந்துகொண்டு சூழ்ச்சி செய்து, கரடு முரடாய்த் தயார் செய்திருக்கிறான்!' என்பது அப்பொழுதுதான் அவனுக்குப் புரிந்தது. ஏக்கத்தோடு மோகனாவின் முகத்தைப் பார்த்தான்.

இளம் தென்றல் தாமரைக்குளத்தில் விளையாடும். அப்பொழுது நாளத்தோடு கூடிய அந்த நளின மலர் ஒரே தாளத்தில் அசைந்தாடும். அதைப் போல மோகனாவும் முகத்தை ஆட்டிக்கொண்டேயிருந்தாள். அவள் கடைக்கண்ணால் வரதனை ஒரு முறை பார்த்தாள். வரதன் அதைக் கவனித்தான்.

'என்ன திகைக்கிறாய் வரதா? என்னைப் பார். என் விழியைப் பார். அதில் தெரியும் தாளம்' என்று சொல்வது போல இருந்தது அவள் விழிப்பேச்சு. இனி விடுவானா வரதன்? 'சண்முகசுந்தரத்தின் வாசிப்பு எனக்குத் தேவையில்லை. உன் காலையும் கையையும் பார்த்துக்கொண்டே, நான் வாசித்துவிடுவேன். தங்கச்சி, சமயத்தில் எனக்கு வழிகாட்டினாயே!' என்று எண்ணினான்; விரல் துடித்தது; மத்தளத்தின் குரல் எழுந்தது; "தீம் தீம்" என்று மீட்டும், சாப்பும் இசை கூட்டின.

நட்டுவனாரோ, சதுஸ்ரம், திஸ்ரம், மிஸ்ரம், கண்டம், சங்கீரணம் என்ற ஐந்து நடைகளையும் இவர்கள் கோத்து இருக்கிறார்கள். பஞ்ச பூதங்கள் போல் உள்ள இந்த ஐந்து நடைகளில்தாம் உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் இயங்குகின்றன. இலை அசைந்தாலும் தலை



அசைந்தாலும் இந்த நடைதான் என்று எண்ணினார். கின்னாரச் சொற்களில் விண்ணதிர்ந்தது ஜதியும் ஸ்வரமும் பதசாரி. வந்தவ மோகனா காலை ஒரு தட்டுத் தட்டி "தத்தீம்" என்று ஒரு குதி குதித்து ஆடினாள்.

சண்முகசுந்தரம், நாதஸ்வரத்தைக் கையில் எடுத்தான். முத்துராக்கு திகைத்தார். 'அடே! இவர்கள் இவ்வளவு சீக்கிரம் புரிந்து கொண்டுவிட்டார்களே!' என்று வியந்தார்கள். பரதேசியாரோ, 'சபாஷ், தகுந்த ஜோடி' என்று எண்ணினார்.

திருவாரூருக்கு லயம் புதியது அல்ல. கமலாலயத்தைச் சொல்லவில்லை. தியாகராஜன் திருமுன்னே சுத்த மத்தளமும் பஞ்சமுக வாத்தியமும் வாசிப்பவர்கள் நடராஜ தாண்டவம் முதல் சந்திக் கூத்துவரை அவ்வளவும் அவைகளில் வாசிக்கப்படும். அந்தக் கவுத்துவங்களைக் காதால் கேட்டே 'இப்பொழுது கோவிலில் என்ன நடக்கிறது' என்று ஊரார் சொல்லிவிடுவார்கள். ஆகவே, முத்துராக்குவின் தாள வித்தையை மோகனா புரிந்துகொண்டதில் ஆச்சரியமில்லை.

தில்லானாவில் சுரம் உண்டு; ஜதிகள் உண்டு; குழைவுகள் உண்டு. ஆனால், ஒரே மாதிரியாக வாசித்துக்கொண்டே வரவேண்டும். அப்படிச் சண்முகசுந்தரம் வாசிக்க வாசிக்க, மோகனா தன்னை மறந்தாள். அவன் இசையில் மயங்கி ஆடத் தொடங்கினாள். கண்ணன் குழலைக் கேட்டுக் கறவைகள் ஆடின. பரமாத்மாவின் இசையில் ஜீவாத்மாக்கள் ஆடின. காதலன் இசையில் கன்னிகை ஆடுகின்றாள். சண்முகத்தின் வங்கிய இசைக்கு ஏற்ப மோகனா அங்கமெல்லாம் நெகிழ ஆடிக்கொண்டே வந்தாள்.

அவன் எந்த நடை வாசித்தாலும், அந்த நடை அவள் காலில் பேசியது. அவன் எந்த விரைவில் வாசித்தாலும், அந்த விரைவு அவள் பாதச் சிலம்பில் ஒலித்தது. சுருள் சுருளாகப் பிர்க்காக்கள் வந்து விழுந்தன. மோகனா சுழன்று சுழன்று ஆடினாள். ஒரு பிருகாவை ஊதுவான்; பந்து போலக் குதிப்பாள். அவன் தலையும் உடலும் ஒரு பக்கம் சாயும்; அந்தப் பக்கத்திலேயே மோகனாவும் சாய்வாள். அவன் கீழ் நோக்கி வாசிப்பான்; மோகனா மண்டியிட்டு அடவு பிடிப்பாள். அவன் விண்ணை நோக்கி ஊதுவான். 'வானத்து நந்தவனத்திலே தாரகைகளை மலராய்ப் பறிக்கின்றாளா! சந்திரனைச் சுழங்காக ஆடுகின்றாளா?' என்று எல்லோரும் வியக்கும்வண்ணம் மோகனாவின் கைகள் அபிநயம் காட்டும். கை வளை புரள, கடைவிழி புரள, காலில் நடை பேச அவள் ஆடினாள்.

அங்கமெல்லாம் அழகு சொட்டியது. தங்கம் போன்ற மேனி தத்திக் குதித்தது. எங்கு பார்த்தாலும் மோகனா; எல்லோருடைய கண்களிலும் மோகனா. இதுவரையில் தப்புத் தாளம் போட்டுக்

கொண்டு தலையை ஆட்டிக்கொண்டிருந்த வைத்திகூட இப்போது தம்மை மறந்தார்.

ஆட்டம் உச்ச நிலையை அடைந்தது. சண்முகசுந்தரம் 'கண்ட' நடையிலே வாசித்தான். அவளுடைய தண்டைக் காலைக் கண்டவர் வியந்தனர். கையிலே மலர் எடுத்தாள்; புஷ்பாஞ்சலி பிடித்தாள். 'ஏ மன்மதா, இந்தா, அவ்வளவு மலர்களும் உனக்குத்தான்' என்று அவள் சொல்வதுபோல் இருந்தது. மன்மதனும் அத்தனை மலர்களையும் அள்ளிக்கொண்டு கரும்பு வில்லில் தொடுத்து அம்பு மழை பெய்தான். அது பலர் உடம்பில் தைத்தது. ஆட்டத்தில் மயங்கினர் பலர். அவள் அழகில் மயங்கினர் பலர். ஏன் மயங்குகிறோம் என்பதே தெரியாமல்கூட மயங்கினர் பலர்.

நாதஸ்வரத்தில் வேகம் சீறியது. அவளுடைய பாதங்கள் சிவந்தன. செம்பஞ்சுக் குழம்பு பூசியதுபோல அதுவே ஒரு அழகாக இருந்தது. காலில் கட்டிய சலங்கை, "ஜல், ஜல்,— கல்— கல்... ஜல்...ஜல்," "நில், நில், மோகனா, போதும், போதும்" என்று சொல்வது போல இருந்தது. விரால் மீன்கள் தண்ணீரில் துள்ளிக் குதிப்பது போல, அவளுடைய முழங்கால்கள் துள்ளிக் குதித்தன. இடை உண்டா, இல்லையா என்று சந்தேகிக்கும்படி அவள் இடுப்பு உடுக்கை போல் ஒடுங்கி இருந்தது.

அந்தக் கைகளில்தான் என்ன லயம், என்ன நயம், எத்தனை அபிநயம்! கை முந்துகிறதா, கண் முந்துகிறதா, மனம் முந்துகிறதா, மெய் முந்துகிறதா அல்லது அவளுடைய கற்பனைதான் முந்துகிறதா என்று ஒருவராலும் புரிந்துகொள்ள முடியாமல் கையும் காலும், மெய்யும் மனமும் ஒன்றுகலந்து, விரைந்து ஆடிக்கொண்டே இருந்தாள்.

சண்முகசுந்தரம் இன்னும் வேகமாக வாசிக்க ஆரம்பித்தான். குதிரைகள் மிக வேகமாக ஓடும்பொழுது, அவைகளின் கால்களிலிருந்து நெருப்புப் பொறி பறக்கும். அதைப் போல் இன்று மோகனாவின் ஆட்டத்தின் வேகத்தில், "கலீர்... கலீர்...!" என்று சதங்கை ஒலிகள் பறந்தன. 'அடேயப்பா, வித்தையைக் கற்றுவிட்டால் கருணையே கிடையாது. அந்தப் பூங்கொடியை இப்படி ஆட்டி வைக்கிறானே!' என்று எல்லோரும் சண்முகத்தைத் திட்டினார்கள். 'பாவிப் பயல், என்ன வாசிப்பு வாசிக்கிறான் பாரு!' என்று அன்புடன் திட்டுகள் பிறந்தன.

எட்டு நாள் பட்டினி கிடந்த மோகனா எங்கிருந்துதான் இவ்வளவு சக்தியைப் பெற்றாளோ! அவன் கை விரைவு இவள் காலில் பேசுகிறது. எவ்வளவு வேகமாக வாசித்தாலும், அதற்கும் மேல் காலத்தில் வேகமாக அவள் ஆடினாள்.

வடிவாம்பாள், சண்முகத்தைப் பார்த்த பார்வை அவளுக்குத்தான் தெரியும். அவனைக் கொன்றுவிட மாட்டோமா என்று பார்த்தாள். 'அவனுக்கு என்ன? வாயில் விரைவு இருக்கிறது, எதையும் வாசித்து



விடலாம். என் பெண் காலால் அல்லவா ஆடிக் காட்ட வேண்டும்? 'கிடதகதரி கிடதோம்' என்று வாயால் சொல்வது எளிது. அந்தக் காலால் எப்படித் தட்டிக் காட்டுவது! இந்த முத்துக்குமாரனும் வரதனும் அதைப் பார்த்துக்கொண்டு இந்த அநியாயத்துக்கும் பக்கவாத்தியம் வாசிக்கிறார்களே! அவன் பாழாய்ப்போக! உடனே போய் அவன் நாதஸ்வரத்தைப் பிடுங்கி எறிந்தால் என்ன! ஐயோ, காலை வலிக்குமே; நரம்பு பிசகிவிட்டால்? எலும்பு ஒடிந்துவிட்டால்? மூச்சுவிடக்கூட இடமில்லாமல் வாசிக்கிறானே! மயங்கி விழுந்துவிட்டால்? மூச்சு நின்றுவிட்டால்?' என்று அவளைப் பெற்ற வயிறு துடித்தது. உடம்பு பதறியது.

ஒலி முழங்கியது. ஜதிகள் முழங்கின. சண்முகசுந்தரம் நிமிர்ந்தும் குனிந்தும் வாசிக்கிறான். 'வா, அருகில் வா, என் அருகில் வா' என்று கூறுவது போல இருக்கின்றது. ஆடிக்கொண்டே அவன் அருகில் வருகிறாள் மோகனா. அவளுடைய கால்களிலே எழுத்தால் கூற முடியாத வேகம் பேசுகின்றது. அம்மமோ! சிவப்புப் புள்ளி! ஆம்; ஒரு சொட்டு ரத்தம்! குங்குமக் கோலம் இட்டது போல் அவள் ஆடிய இடத்திலே இரண்டு புள்ளிகள் விரலில் இருந்து சிதறுகின்றன. ஆனால் ஆட்டம் சிதறவில்லை, தாளம் சிதறவில்லை, அவள் மனம் சிதறவில்லை. இடசாரி, வலசாரியாக ஆடி முன்னே நடந்து அவன் அருகில் வருகிறாள். வரதனும் முத்துராக்குவும் மாறி மாறி வாசித்து ஒன்றுசேர்ந்து "தொம் தத்தி கிட தக தரிகிட தோம்" என்று முத்தாய்ப்பு முழங்கினார்கள்.

தில்லானா முடிந்தது. சண்முகம் வாசிப்பை நிறுத்தினான். மோகனாவின் ஆட்டம் நின்றது. ஆனால், கூட்டம் கரகோஷங்கூடச் செய்யவில்லை. வாய்கள் மௌனமாயின. காற்றுக்கூட நிசப்தமாக இருந்தது. தீவட்டிகளில் புகை வரவில்லை. தீக்கொழுந்துகூட ஆடவில்லை. எல்லோரும் மெய்ம்மறந்து நின்றனர்.

ஆட்டத்தை முடித்த மோகனா அப்படியே நின்றாள். கண்களை விரித்து சண்முகத்தை ஒரு முறை பார்த்தாள். மோகனாவின் உடம்பில் ஒரு நடுக்கம். கையும் காலும் வெலவெலத்தன. கண்கள் சுழன்றன. தலை துவண்டது. அவளுடைய கைகள் இரண்டும் எதையாவது பற்றிக்கொள்ளத் தேடின. கால் தளர்ந்தது. அப்படியே கொழுகொம்பை விட்ட கொடி போல் துவண்டு வீழ்ந்தாள்.

கூட்டத்திலிருந்து, "ஐயோ!" என்ற சத்தம் எழுந்தது. பெண்கள் வரிசையிலிருந்து "என்னடி ஆயிற்று?" என்று கூச்சல் கேட்டது. பலருடைய கண்களில் நீர் கசிந்தது. வடிவாம்பாள், "அடி அம்மா!" என்று அலறினாள். வரதன் மிருதங்கத்தைக் கழற்றி எறிந்துவிட்டு அருகில் ஓடி வந்தான். ஜமீனர், வைத்தி எல்லோருமே அவளைச் சூழ்ந்துகொண்டனர்.

ஆனால் இதுவரை அவளை வேம்பாக வெறுத்த சண்முகம், 'ஏ என்னைத் தொடாதே' என்று சொன்ன சண்முகம், அவளைத் தன் இரு கைகளால் தாங்கினான். தூக்கித் தன் மடியில் போட்டுக்கொண்டு அவள் முகத்தையே பார்த்தவண்ணம், 'மோகனா, மோகனா' என்று நாத் தழுதழுக்கச் சொல்லிக்கொண்டிருந்தான். அவன் கண்களிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீர் வழிந்தது. தாழம் பூவைப் பறித்துத் தரையிலே வீசி எறிந்தது போல அவள் கிடந்தாள். அவள் நெற்றியிலே வியர்வை இல்லை. உடம்பிலே வியர்வை இல்லை. உஸ்வாசம், நிஸ்வாசம் என்று சொல்லும் சிவ சக்தி தாண்டவம் மட்டும் நடந்துகொண்டிருந்தது. உள்ளும் மேலும் ஓடும் மூச்சு மட்டும் உச்ச நிலையில் ஓடிக்கொண்டு இருந்தது.

அருகில் வந்தார் பரதேசியார். அவள் உடம்பைத் தொட்டுப் பார்த்தார். மூக்கில் விரல் வைத்துப் பார்த்தார். அவர் கண்கள் கலங்கின. இரு கைகளையும் உயர்த்தித் தியாகேசனை நோக்கிக் கும்பிட்டார். கூட்டத்தை நோக்கினார். அதற்குள் கூட்டத்திலிருந்து பலர் விசும்பினார்கள். "பதறாதீர்கள் ! பதறாதீர்கள் ! ஆரூர் தியாகனின் அஜபா நடனம் நடக்கிறது. கைகளையும் கால்களையும் எவ்வளவு வேகமாக ஆட்ட முடியுமோ அவ்வளவு வேகமாக ஆட்டி ஆடிவிட்டாள். அதற்கும் வேகமாக ஆடுவது ஒன்று உண்டு. அதுதான் மூச்சு. அது இப்பொழுது தாண்டவம் செய்துகொண்டிருக்கிறது. அந்தத் தில்லானா நடை அவள் மூச்சிலே ஆடுகின்றது. யோகிகளுக்குச் சில சமயங்களில் உடல் கட்டை போட்டுவிடும். அதுபோல் இன்று சங்கீத யோகத்தில் மோகனாம்பாள் மூர்ச்சித்து இருக்கிறாள். அவளை நாம் எழுப்புவது ஆபத்து. சண்முகசுந்தரம், ஏனப்பா, பிரமித்து உட்கார்ந்து இருக்கிறாய்? அவளை உன் எதிரி என்று பார்க்கிறாயா? உன் கைகளாலேயே அவளைத் தூக்கிக்கொண்டு வா. தியாகராஜர் திரு முன்னர் சற்று நேரம் அவள் இருக்கட்டும். அவர் கருணை விழிகள் அவள் மயக்கத்தைத் தெளிவுறச் செய்யட்டும், வா !" என்று சொல்லிச் சண்முகசுந்தரமும், பரதேசியாரும் அவளைத் தங்கள் கைகளால் ஏந்தியவண்ணம் தியாகராஜருக்கு முன்னே கொண்டு போனார்கள். ஒரு விசுப்பலகையின் மேல் படுக்க வைத்தார்கள்.

கூட்டம் திகைத்து நின்றது. ஒருவர் முகத்திலாவது ஈயாடவில்லை. எல்லோருடைய உள்ளங்களும் அவள் பிழைத்து எழுந்திருக்க வேண்டும் என்று பிரார்த்தித்தன. அந்தச் சமயத்தில் தியாக விநோதப் பிரமராயர் அருகில் வந்தார். இறைவனுடைய அபிஷேக தீர்த்தத்தைக் கொண்டுவந்து முகத்தில் தெளித்தார். அங்கு இருந்தபடியே இறைவனுக்கு ஒரு கற்பூர ஹாரத்தியைக் காட்டி திருநீற்றை மோகனா தலையிலும் நெற்றியிலும் பூசினார். இவ்வளவுக்கும் கூட்டம் கவலையுடன் ஆடாமல் அசையாமல்,



அப்படியே இருந்தது. வடிவாம்பாள் என்னவாகுமோ என்று கையைப் பிசைந்துகொண்டு நின்றாள்.

இந்தச் சமயத்தில், அந்த உத்தமன், மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும் என்பதைப் போல, கூடப்பிறவாமல் உடன்பிறந்தான் ஆகிய வரதன், மிருதங்கத்தை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, மோகனா விழித்தால் சரி, இல்லையேல் மிருதங்கத்தைச் சுக்கு நூறாய் உடைத்து எறிந்துவிட்டு, கமலாலயத்தில் குதித்துவிடுவது என்ற முடிவோடு அழுதுகொண்டே நின்றுகொண்டிருந்தான்.

சண்முகசுந்தரத்தின் உள்ளத்தில் ஒன்றுமே இல்லை. மைனரின் மோசம், வடிவாம்பாளின் கோபம், பஞ்சாயத்தார் போட்டி, வெற்றி தோல்வி எல்லாவற்றையும் சாப்பிட்டுவிட்டது சங்கீதம். தேனைக் குடித்த வண்டு பூமேலே மயங்கி விழுவது போல, அவன் இன்னும் சங்கீத லகிரியில்தான் இருந்தான். ஆயினும், மோகனாவையே பார்த்துக்கொண்டு நின்றான்.

இறைவன் காலடியில் கிடந்த ஒரு மலர் இதழை எடுத்து மோகனாவின் கண்களில் லேசாக வருடிக்கொண்டிருந்தார் பரதேசியார். அவள் உடல் அசைந்தது. கூட்டத்தினரின் முகத்தில் எல்லாம் ஒரு அக்கறை வந்தது. மோகனா மெல்ல ஒரு பெருமூச்சு விட்டாள்; "அம்மா" என்று காலை அசைத்தாள். வடிவாம்பாள் துடித்தாள். பரதேசியார் மெதுவான குரலில், "குழந்தாய், குழந்தாய்" என்று அன்புடன் கூப்பிட்டார். அந்தத் துறவியின் கண்களிலும் நீர் தேங்கியிருந்தது. மெல்ல விழித்தாள் மோகனா. நிர்மால்ய மாலையைத் தூக்கிப் பிடித்தது போல எழுந்தாள். பரதேசியார் தாங்கிப் பிடித்துக்கொண்டார். எதிரில் இருக்கும் சண்முகத்தைப் பார்த்தாள். கோபம் வரவில்லை. ஆத்திரமும் வரவில்லை. எங்கிருந்தோ ஒரு வெட்கம் வந்து அவளைப் பற்றிக்கொண்டது. அப்படியே தலை குனிந்துகொண்டு, மெல்லத் தாயின் பக்கம் ஒதுங்கினாள்.

வடிவாம்பாள் மகளை இறுகக் கட்டிக்கொண்டாள். பதினாயிரம் பேர் கூடி இருப்பதையும் மறந்தாள்.

"அடி, என் கண்ணே பொழச்சயா !" என்று சொல்லி 'ஹோ' வென்று அலறினாள் வடிவாம்பாள். அத்தனை மக்களும், இதைப் பார்த்துக் கண்ணீர் விட்டனர்.

போட்டியில் யார் ஜெயித்தது, யார் தோற்றது என்ற சந்தேகம் யாருக்குமே வரவில்லை. ஆட்டம் நடந்த உச்சநிலையில் அதை மறந்துவிட்டார்கள். வெற்றி தோல்வி வேண்டாம். மோகனா உயிர் பிழைத்தால் போதும் என்ற எண்ணத்திற்கு வந்தார்கள். ஆதலால் மோகனா எழுந்தவுடன் கூட்டம் முழுவதும் "பிழைத்துவிட்டாள் ! பயமில்லை ! பயமில்லை ! மயக்கந்தான் !" என்ற பேச்சு சமுத்திரம்... வென்று ஒலித்தது அப்பொழுது. "யார் தோற்றது? யார் ஜெயித்தது"

எதையும் பஞ்சாயத்தார் சொல்லலியே!" என்று கேட்டது ஒரு குரல். அதுதான் ஸ்ரீமான் வைத்தி.

கூட்டத்துக்குள்ளே ஒரு சாரார் "சண்முகசுந்தரம்தான் ஜெயித்தார்" என்றார்கள்.

இன்னொரு சாரார் "மோகனா கால்களுக்கு முன்னே ஒண்ணும் நடக்காது ஐயா!" என்றார்கள்.

இதற்கிடையே ஒருசிலர் பூ மாலைகளை அள்ளிக்கொண்டு மேடையை நோக்கி வந்தார்கள். ஒருசிலர் சால்வைகளுடன் ஓடி வந்தார்கள். எல்லோரும் பஞ்சாயத்தார் என்ன சொல்லப் போகிறார்கள் என்று எதிர்பார்த்தார்கள். பரமானந்தப் பரதேசியார் எழுந்தார். சாமிக்கண்ணு அருகில் சென்றார்.

"இதிலே வெற்றி தோல்வி என்று என்னத்தைய்க சொல்றது? அந்தப் பிள்ளையும் தேவகானமாகத்தான் பொழிந்தது. அந்தப் பொண்ணும் அமர நாட்டியந்தான் ஆடிற்று" என்றார் சாமிக்கண்ணு.

"இன்று இசை, தாளத்தைத் தழுவியது. தாளம் இசையை அடைந்தது. இதைத்தான் அடைவு என்று சொல்லுகின்றார்கள். மோகனா அடவு பிடித்து ஆடியபோது, இதை நான் கண்டேன். "வாழ்க்கை அடவில்லை", "இசைபட வாழ்" என்பனவெல்லாம் இதைத்தான் குறிக்கின்றன. 'வெற்றி தோல்வி' என்று கூற என்னால் முடியாது' என்றார் ஆராய்ச்சியாளராகிய தஞ்சாவூர்ப் பண்டிதர்.

உடனே பரதேசியார், கூட்டத்தைப் பார்த்தார். "அருங்கலைகளில் வெற்றியும் தோல்வியும் கிடையாது. சிவம் வென்றதா, சக்தி வென்றதா என்பதையும் யாரும் கண்டறிந்ததே இல்லை. சண்முகசுந்தரம் முதலில் போட்டிக்காக வாசித்தார். பிறகு அதன் ஆனந்தத்தில் லயித்தார். அவரையும் அறியாமல் கற்பனைகளும் வேகமும் வந்தபோது மோகனாவின் கால்கள் சிவந்தன. அச்சமயம் இங்கு எல்லோருடைய கண்களும் சிவந்ததைப் பார்த்தேன். அவள் காலில் ரத்தம் வடிந்த போது, எல்லோருடைய கண்களிலும் கண்ணீர் வடிந்ததைப் பார்த்தேன். சங்கீதம் ஒரு ஆற்றோட்டம். ஏழு நதிகள் ஒன்றாக வந்து கலந்து, இறைவனை வணங்கும்போது, அதிலே இறங்கியவன் இன்ப வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்படுகிறான். இதைத்தான் இன்று சண்முகத்தின் வாசிப்பு காட்டியது.

"மோகனாவும் முதலில் போட்டிக்குத்தான் ஆட ஆரம்பித்தாள். பிறகு ஆனந்தத்தில், மகுடியில் மயங்கிய பாம்புபோல ஆடி, ஆடி, அவரிடம் போய் விழுந்தாள். இதிலே அவளுக்கு வெற்றியா, சண்முகத்துக்குத் தோல்வியா? சண்முகத்துக்கு வெற்றியா, மோகனாவுக்குத் தோல்வியா என்று நாம் யாரும் சொல்லமுடியாது. எனக்குத் தெரிந்தது ஒன்றுதான். நான் கண்டதும் ஒன்றுதான்! சண்முகசுந்தரம் தோற்றான்.



"மோகனாவும் தோற்றாள்! ஆனால், சங்கீதம் வென்றது. கலைஞர்கள் தோற்றார்கள், கலை வென்றது" என்று சொல்லி, இசைப் பொருளாகிய இறைவனை வணங்கினார் பரதேசியார்.

கூட்டம் முழுவதும் "ஆஹா ஆஹா" என்றது.

"அல்ல ஸ்வாமி! நான்தான் தோற்றேன்" என்றாள் மோகனா. கூட்டம் திகைத்தது. மோகனா பரதேசியாரின் அருகில் வந்தாள். மெலிந்த குரலில் பேசினாள்.

"அதுதான் உண்மை. இன்றைக்கு நான் நன்றாகத்தான் ஆடினேன். என் வாழ்வில் இது போல எப்பொழுதுமே ஆடியது இல்லை. அது எனக்குத் தெரியும். ஆனால் நான் ஆடியதற்குக் காரணம், நான் அல்ல. அவருடைய வாசிப்பு என்னை ஆட வைத்தது. எதிரில் அவர் இருந்தது என்னை ஆடச் செய்தது. அன்று அழகர் கோவிலில், என்னைப் பிரமாதமாக ஆடச்செய்தது அவருடைய துடுக்குப் பேச்சுத்தான். இன்று என்னை ஆடச் செய்தது, என் கண்முன் அவர் இருந்த வாசித்த வாசிப்பு. தோற்றவள் நான்தான்!"

இதைச் சொன்னதும் சற்று திகைத்தாள். பிறகு மனத்தை அடக்கிக்கொண்டு மேலே பேசினாள். பேச வாய் வரவில்லை. தன் கழுத்தில் இருந்த ஒரு தங்கச் சங்கிலியை எடுத்தாள். "இந்தாருங்கள், ஸ்வாமி. இது அவரால் எனக்குக் கிடைத்த பரிசு. இந்த ஒரு ஆசையில்தான் இன்றுவரை நான் உயிர் வாழ்ந்தேன். இதை எனக்குத் தந்த உங்கள் கையாலேயே அவருக்கு அணியுங்கள். நான் என்னென்னவோ நினைத்தேன். ஆனால், இந்தத் தங்கச் சங்கிலியைத்தான் அவருக்கு என்னால் போடக் கொடுத்து வைத்தது. அதுவும் என் கையால் போட்டால், அவர் கழற்றி எறிந்தாலும் எறிந்துவிடுவார்."

மோகனா விசும்பினாள். கண்ணீர் கன்னத்தில் வழிந்தது. "என்னை வேம்பிலும் கசப்பாக வெறுக்கிறார். அவர் ஆண்பிள்ளை எதுவும் செய்யலாம். நான், கேவலம் தாசிக்குலத்தில் பிறந்தவள். அவதூறுக்கே ஆளாகப் பிறந்தவள். உலகத்தின் விளையாட்டுப் பொம்மை. என்னை யாரும் விலை கேட்கலாம். வாங்கப் போவதாகச் சொல்லலாம். இதை அவர் நம்பவும் நம்பலாம். அழுக்கு ஒட்டிக் கொண்டால் துடைக்கலாம். ஸ்வாமி, அவமானம் வந்தால் துடைக்க முடியுமா? அவர் என்னை வெறுப்பது சரி. ஆனால்... ஆனால் ஆண்டவன் என்னை வெறுக்கமாட்டார். அவர் என்னை அறிவார். இந்தச் சங்கிலியை அவரிடம் கொடுங்கள். இந்த ஆசை நிறைவேறினால் எனக்குப் போதும். அன்பு நிறைவேற வேண்டாம். மோகனாவின் ஞாபகத்திற்காக இந்தச் சங்கிலி எப்போதும் அவர் கழுத்தில் இருக்கட்டும்" என்று சொல்லி, தன் கையில் இருந்த அழகர் கோவில் சங்கிலியைப் பரதேசியாரிடம் கொடுத்தாள் மோகனா.

இதைக் கேட்கக் கேட்கச் சண்முகசுந்தரம் துடித்தான். எங்கேயோ, ஏதோ பிசகு நடந்திருக்கிறது என்று மட்டும் எண்ணினான். ஆனால் எதிரில் இருக்கும் மைனரை அவனால் பார்க்காமல் இருக்க முடியவில்லை

ஐம்பத்து எட்டாம் அத்தியாயம்

## காதல் பாதையில் கல்லும் முள்ளும்



**வி**த்து முதலில் வந்ததா, மரம் முதலில் வந்ததா என்ற சந்தேகம் ஞானிகளுக்கு உண்டு. ஆனால், சாதாரண மக்களுக்கு மலர் முதலில் வந்ததா, வண்டு முதலில் வந்ததா என்ற சந்தேகந்தான் உண்டு. மலைரைப் பூச்சி கடிப்பது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயம் மனத்தில் சந்தேகம் வருவதும்.

பித்தளையிலே சாம்பல் பட்டால் மெருகு ஏறுகிறது; பொன்னாகின்றது. புளி பட்டால் களிம்பு ஏறுகின்றது. அந்தக் களிம்பை அலம்பிவிடும்வரை விஷம் அதிகப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. இதைப் போன்றதுதான் சந்தேகமும்.

மோகனா, பரதேசியாரிடம் சொல்வதைக் கேட்டுக்கொண்டே இருந்த சண்முகசுந்தரம் ஓரளவுக்கு மோகனா சொல்வதை நம்பக் கூடத் தயாராக இருந்தான். ஆனால், இந்தச் சமயம் பார்த்துத்தானா அவன் எதிரில் வைத்தியும் மைனரும் நிற்கவேண்டும்?

மைனரும் வைத்தியும் சிரித்துப் பேசிக்கொண்டார்கள்.

"ஓய், வைத்தி, ஆட்டம் எப்படி?"

"ஆட்டமா? அவ ஆடி முடிச்சு நாலு நாழி ஆச்சு, இப்போதாங்காணும் என் மனசு ஒரு நிலைக்கு வந்தது. சலங்கை பேசறதே! சே, அந்தக் கையிலேதான் என்ன பாவம்! காலிலே என்ன அபிநயம்?"

"ஓய், என்னாங்காணும் காலிலே அபிநயமா?"

"பின்னே என்ன? நாட்டியத்தைப் பற்றி எனக்குச் சொல்லிக் கொடுக்க வந்துவிட்டீரே!"

"சரி, வாசிப்பு எப்படி?"

"ஏன், எடுத்த புஸ்தகம் படிப்பாளே! தமிழ், கன்னடம், தெலுங்கு எல்லாம் வரும்."

"அதைக் கேட்கலேங்காணும். மேள வாசிப்பு எப்படின்னு கேட்கிறேன்."



"அற்புதம்! அவள் தலைக்குடுமி அவிழ்ந்து ஆடினதே போதும். அதிலே சிரிப்பே வந்துடுத்து!"

"நான் தவுலைச் சொல்லலேங்காணும், நாதஸ்வரம் எப்படின்னு கேட்கிறேன்."

"ஓஹோ, அதுவா! அற்புதம் கல்யாணி ஒண்ணே போதுமே!"

ராத்திரி ரொம்ப நேரம் ஆகிவிட்டதால் வைத்திக்கு நிலை தடுமாறிவிட்டது தூக்கந்தான்! வைத்தியின் பதிலைக் கேட்டு மைனர் சிரித்தார்.

"இன்னிக்கு வாசிச்சது கல்யாணி இல்லே ஐயா, காம்போதி!"

"சரிதாங்காணும், சர்க்கரைப் பொங்கலுக்கும் கல்கண்டு சாதத்துக்கும் என்ன வித்தியாசம்? கல்யாணின்னா என்ன, காம்போதின்னா என்ன! நான் இந்த 'மைனர் மேட்டர்' எல்லாம் பாக்கிறதில்லே."

"என்னமோ பிரமாதமாகத் தலையை ஆட்டினீரே!"

"தலையை ஆட்டினா சங்கீதம் தெரியணும்னு அர்த்தமா? கேட்கிறவன் எல்லாம் கச்சேரி பண்ணணும்னா, முடியுமா?"

"சரி வைத்தி, எங்கே அது?"

"எது?"

"அதான், தங்க நாதஸ்வரம்."

"எதுக்கு இப்போ?"

"பிரசண்ட் பண்ணறேன்னு சொல்லியிருக்கிறோம் இல்லையா? கொடுக்க வேண்டாமா?"

"மைனர்வாள், எனக்கு ஒரு சந்தேகம். உமக்கு எப்படிச் சங்கீதத்திலே இவ்வளவு ஞானம் வந்தது!"

"ஏன் வைத்தி?"

"உங்க மாமாவும் நானும் அவுட் ஆடுவோம். அவருக்குத் தோத்துப் போகும் 'வைத்தி, ஆட்டத்தை நிறுத்து'ன்னு சொல்லுவார். நான் நிறுத்த மாட்டேன். உடனே அவர் பாட ஆரம்பித்துவிடுவார். அப்புறம் ஓட்டந்தான். அவர் மருமான்தானே நீர்! உமக்கு எப்படி சங்கீத ஞானம் வந்ததுன்னு சந்தேகம்!"

"வைத்தி, அப்படின்னா எனக்குக் காம்போதி ராகம் கூடவா தெரியாது?"

"எப்படித் தெரியும்? நானே கல்யாணி என்கிறேனே!"

"இல்லையே, சாமிக்கண்ணு சொன்னாரே காம்போதின்னு..."

"அப்படின்னா நானும் ஒப்புக்கிறேன். சாமிக்கண்ணு சொன்னார்னா சரியாகத்தான் இருக்கும்."

"எங்கேங்காணும் நாதஸ்வரம்?"

"ரூமிலே இருக்கு!"

"போய் எடுத்துக்கிட்டு வாரும்."

"ஜெயிச்சாத்தானே! அதுதான் இரண்டு பேருமே தோத்துப் போனதாகப் பஞ்சாயத்தார்கள் சொல்லிவிட்டார்களே!"

"அவர்கள் மரியாதையாக அப்படிச் சொல்லியிருக்கிறார்கள்."

"பின்னே, சண்முகம் தோக்கல்லியா?"

"இல்லே!"

"அப்படின்னா தோத்தது யாரு? நீரா, நானா?" என்றார் வைத்தி.

இந்தக் கேள்விக்கு மைனரால் பதில் சொல்ல முடியவில்லை. சற்று நேரம் யோசித்தார். "சரி, அதெல்லாம் என் சொந்தம் விஷயம். நீர் போய் வாத்தியத்தை எடுத்து வாரும்" என்று உத்தரவிட்டார் மைனர்.

"சரி, பின்னே சாவியைக் கொடும்" என்று சொல்லி, மைனரின் பெட்டிச்சாவியை வாங்கிக்கொண்டு, சின்னச்சாமி கடைக்குச் சென்றார் வைத்தி.

இவர்கள் பேசுவதையே எட்டி நின்று கவனித்துக் கொண்டிருந்தான் சண்முகசுந்தரம். இவர்களுடைய சிரிப்பும், பேச்சும், அவனை என்னவோ செய்தன. ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு நின்றான். அதற்குள் பஞ்சாயத்தார்கள் எழுந்து அருகில் வந்தார்கள்.

"தம்பீ, அற்புதமாக வாசிச்சீங்க. பாரி நாயனத்துடைய நாதத்தை இன்னிக்கு பாலாட்டம் பருகினேன்," என்றார் சாமிக்கண்ணு.

காரைக்கால் நடேசன் ஓடி வந்தார். அவர் கையில் இரண்டு ஜவ்வாது மாலைகள் இருந்தன. ஒரு மாலையைச் சண்முகத்தின் கழுத்தில் போட்டு, மற்றொன்றை வடிவாம்பாளிடம் கொடுத்து, மோகனாவுக்கு அணிவிக்கச் செய்தார்.

மாலைகள் வந்து குவிந்தன. வரகரிசி மாலைகள், நெல்மணி மாலைகள், மல்லிகைப்பூ மாலைகள், நெட்டி மாலைகள், ஜரிகை மாலைகள் இவைகள் எல்லாம் வந்து இருவருக்கும் கழுத்துக் கொள்ளாமல் குவிந்தன. கூட்டம் முழுவதும் சந்தோஷ ஆரவாரமும், கூக்குரலும் நிறைந்திருந்தன.

சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர் பேசினார் :

"இன்றைக்குத்தான் பாரி நாயனத்தை இவ்வளவு அற்புதமாக மற்றவர்களும் வாசிக்க முடியும் என்பதைக் கண்டேன். தியாகராஜனின் கிருபையா, தேவ வாத்தியத்தின் பெருமையா? அல்லது தம்பி சண்முகத்தின் வித்தையா? என்னால் இன்னது என்றே சொல்ல முடியவில்லை.

"இன்றைக்குத் தம்பி வாசித்த வாசிப்பில் எனக்கு மாத்திரமல்ல, எங்கள் இனத்தார்கள் எல்லோருக்குமே பெருமை. மற்றவர்கள் எல்லாம் ஏடுகளைப் படிச்சு, பெரிய மனுஷன் என்று பெயர் வாங்குவார்கள். எங்களுக்கு ச...ரி...க...ம...ப...த...நி... என்ற ஏழு அச்சரங்களிலேயே உலகமெல்லாம் பெயர் வாங்குகிற பாக்கியம் இருக்கு.

"சில பேர் கல்வியை ரொம்பப் படிச்சு இருப்பாங்க. ஆனால், அதனால் நல்லது செய்ய மாட்டாங்க. ஐயோ, படிச்சுப்பிட்டாங்களே,



மனைரயே கெடுக்கிறாங்களேன்னு சொல்லத் தோணும். ஆனால், எங்களுக்கு ஆண்டவன் கொடுத்த வாசிப்பு, என்றைக்கும் பிறருக்கு இன்பத்தைக் கொடுக்கிறதுதான்" என்று அவர் சொல்லிக்கொண்டே இருக்கும்பொழுது, கூட்டத்தில் இருந்த கோடி வீட்டுக் குப்புசாமி குறுக்கே எழுந்து போனார். கூட்டம் கொல் என்று சிரித்தது. சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரர் ஜாடையாக அதைக் கவனித்தார்.

"ஆனால், பிறருக்கு இன்பத்தை உண்டாக்குவதற்கும் முன் ஜன்மத்திலே புண்ணியம் பண்ணி இருக்கணும். சுகிர்தான் முக்கியம். சுநாதந்தான் முக்கியம். அந்த இரண்டையும் விட்டுவிட்டு, கீர்த்தனையிலே வக்கிரம், நடையிலே வக்கிரம் என்று வாசிச்சாலோ அது ஒருவருக்கும் பிரயோசனப்படாது. சாமிகூடக் கோவிலை விட்டு எழுந்திருச்சுப் போயிடுவாரு. அந்த மாதிரியும் சில பேரு இருக்காங்க.

"ஆனால், சிக்கல் தம்பீ முருகன் சன்னிதியிலே பிறந்தது. அங்கு போய் வாசிக்காத நாதஸ்வரக்காரர்கள் இல்லை. அங்கு பாடாத பாட்டு இல்லை. அதைக் கேட்டுக் கேட்டு, தம்பி இந்த வாசிப்பு வாசிக்கிறது.

இன்னிக்குச் சிக்கல் தம்பி வாசிச்ச வாசிப்பு, அடேயப்பா, சொன்னால் உடம்பு நடுங்குகிறது; மயிர் சிலிர்க்கிறது; கண்களில் ஆனந்தக் கண்ணீர் வருகிறது. அந்த ஸ்ரீ சுப்ரமணியாய நமஸ்தே ஒண்ணே போதும்.

"எல்லாத்தையும்விட பாரி நாயனத்தின் குணத்தை இன்னிக்குத் தான் பார் எங்கும் பரவிற்று. அதற்காகத் திமிரி நாயனம் மட்டம்னு நான் சொல்லலே. இதை லட்சம் பேர் கேட்கலாம். ராஜா வீட்டு ரதம் ராஜபாட்டையிலேதான் போகணும். திருவாரூர் தேர், தேரோடும் வீதியிலேதான் போகணும். அந்த மாதிரி பாரி நாயனத்துடைய ஓசை நிரம்பப் பேருக்குக் கேட்கும். குணமையும் ஜாஸ்தி, இனிமையும் ஜாஸ்தி.

"சங்கீத உலகத்திற்கே ஒரு வழக்கம் உண்டு. ஒரு புது வர்ணமெட்டைக் கேட்டாலும் சரி, ஒரு புது பிடி வாசித்தாலும் சரி, அது நாடு முழுவதும் உடனே பரவிவிடும். மற்றது எல்லாம் காகிதத்திலே எழுதிப் பரவணும். காற்றோடே பரவுகிற கலை சங்கீதம்.

"சண்முகத்தால் நாதஸ்வர சரித்திரத்திலேயே ஏற்பட்ட பெரிய மாறுதல் இது. கொஞ்சம் கொஞ்சமா எங்க இனத்தார் எல்லாம் இனி பாரி நாயனம் மாதிரி செய்து, வாசிக்க ஆரம்பிச்சிடுவாங்க என்று எனக்குத் தோணுது. தம்பி வாசித்த வாசிப்புக்குத் தேவஸ்தானத்தார் பூ மாலை போடச் சொல்லி எனக்கு உத்தரவு கொடுத்தாங்க. அதை அவருக்கு உங்களுக்கு முன்னாலே போடுகிறேன்" என்று சண்முகத்தின் அருகில் வந்தார்.

"தம்பீ, எத்தனையோ ராஜாக்கள் மாலை போடலாம். ஆனால் தியாகராஜர் முன்னாலே நாதஸ்வரம் வாசிச்சு, மாலை போட்டுக்கிற

பாக்கியம் எங்களுக்குக்கூடக் கிட்டியது இல்லே. நீ நாதராசா. அவன் தியாகராசா! அவன் போடற மாலை இது!" என்று சொல்லி மாலையை அவன் கழுத்தில் போட்டார். உடனே "இசை மன்னன் வாழ்க!" என்ற குரல்கள் நாலாபுறமும் எழுந்தன.

"இன்னொரு வார்த்தை. மோகனா எங்க ஊர்ப் பொண்ணு. சின்ன வயசிலேருந்து தியாகராஜரோட நடனத்தைப் பார்த்துப் பார்த்துப் பழகின பொண்ணு. அதைப்பத்தி, நான் அதிகமா புகழப்படாது. அது ஆடின ஆட்டம், இன்னைக்கு அந்தச் சிவகாமி அம்மையே வந்து எதிரில் நிக்கிறமாதிரி இருந்தது. அவ்வளவு அற்புதமா ஆடிற்று. அந்தப் பாதத்திலே சக்தி, கூத்தாடினாள். அந்தக் கைகளிலே கலைமகளே இருந்து அபிநயத்துக்கு உயிர் கொடுத்தாள். முகத்திலே லட்சுமி தேவி குடியிருக்கிறாள். அதனுடைய ஆட்டம் தேவ நாட்டியம். அது நெடுங்காலம் நல்லா இருக்கணும். அதனுடைய ஆசைகள் எல்லாம் நிறைவேறணும். அதனாலே இந்தத் திருவாரூரே பெருமை அடையணும்னு ஆசைப்படறேன். வடிவாம்பாள், நல்ல மகளைப் பெத்து இருக்கே! நல்லா காப்பாத்து" என்று மறைபொருளாகச் சொல்லிவிட்டு, மாலையை வடிவாம்பாளிடம் கொடுத்தார் சாமிக்கண்ணு.

மோகனா தரையில் விழுந்து அவரை நமஸ்கரித்தாள். மாலையைத் தாயிடமிருந்து வாங்கிப் போட்டுக்கொண்டாள்.

அதுவரை, இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டே ஆனந்தத்தில் லயித்திருந்த பரதேசியார், "தம்பி, மோகனா கொடுத்த சன்மானத்தை நீ வாங்கிக்கல்லியே! இந்தா!" என்று அந்தச் சங்கிலியை சண்முகத்திடம் கொடுத்தார்.

இதுவரை, சாமிக்கண்ணு நாதஸ்வரக்காரரின் பேச்சில் தன்னையே மறந்திருந்த சண்முகசுந்தரம் சங்கிலியை வாங்கிய வுடனேயே மறுபடியும் பழைய சண்முகமாக மாறினான். பரதேசியார் கையால் கொடுக்கும்போது, அதை வேண்டாமென்று சொல்லவும் அவனால் முடியவில்லை. மற்றவர்கள் கண்ணுக்குத் தங்கமாகத் தோன்றிய அந்தச் சங்கிலி, அவன் கையில் பாம்பு போல் நெளிந்தது. சற்று நேரம் குழம்பினான். ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன்போல மாலைகளைக் கழற்றி தருமனிடம் கொடுத்துவிட்டு, அந்த நாட்டிய மேடையின் மேல் ஏறி, சங்கிலியைக் கையில் வைத்துக்கொண்டு, "பெரியவங்களுக்கெல்லாம் ஒரு வார்த்தை" என்று அடக்கமாக ஆரம்பித்தான்.

"இன்னைக்கு நான் பாரி நாயனத்தை வாசித்துவிட்டேன் என்று எல்லோரும் ஆனந்தப்படுகிறீர்கள். எனக்குங்கூட ஒரு விதத்தில் சந்தோஷந்தான் அது நாதத்திலே குளுமையைக் கண்டவர்கள் அதை மறுபடியும் மறுபடியும் கேட்க நினைப்பார்கள். நான் கோவிலாரைக் கேட்டுக்கொள்வது ஒன்று உண்டு. நமது கோவில் நாயனம் மாதிரி



நாதஸ்வரத்தைச் செய்துகொண்டு எல்லோரும் வாசிப்பதற்கு நீங்கள் அனுமதி கொடுக்கணும்னு மாத்திரம் கேட்டுக்கிறேன்."

உடனே பஞ்சாயத்தார்கள், "அதற்கென்ன தாராளமாகச் செய்யலாம்" என்று சொன்னார்கள். அப்பொழுது கூட்டத்திலிருந்து "அதற்கு நான் நட்சத்திரம் ஒன்றும் பார்க்க வேண்டாம். இப்பொழுதே அந்த மாதிரி பாரி நாயனத்தை வைத்து நீங்களே வாசிக்கலாம்" என்று குரல் வந்தது.

ஸ்ரீமான் சிங்கபுரம் மைனர் சண்முகத்தின் எதிரில் வந்து நின்றார். அவர் கையிலே சுமார் முப்பது பவுன்களைப் போட்டுச் செய்த அழகான தங்க நாதஸ்வரம் ஒன்று நீண்ட குழலும், சிறிய சீவாளியுமாகக் காட்சி அளித்தது. அடிக்கடி நடனம் ஆடும் அந்தத் தீவட்டி வெளிச்சத்தின் நடுவே, அவர் கையில் தூக்கிப் பிடித்திருந்த தங்க நாயனம் மின்னல் போல ஜொலித்தது. அதிலே அழகான சிவப்புப் பட்டுக் கயிறு தொங்கியது. அந்தப் பட்டுக்கயிற்றின் அடியிலே ஒரு தங்க மணி கட்டி இருந்தது. அந்தத் தங்க மணியின் நாக்கு நுனியிலே ஒரு வைரம் இழைக்கப்பட்டிருந்தது. காற்றிலே நாக்கு ஆடியபோது, அதிலிருந்து ஏழு வர்ணங்களும் உதிர்ந்தன. அது ஏழு இசையே பொங்கி வருவது போலக் காட்சி அளித்தது.

அதைப் பார்த்த சண்முகம் பிரமித்தான். ஆனால், அதை வைத்திருக்கும் ஆளைப் பார்த்ததும், ஆத்திரத்தால் துடித்தான். அவன் பாடு தர்மசங்கடமாகிவிட்டது. இவ்வளவு பெரிய கூட்டத்தின் நடுவில், அந்த மனிதனை ஏளனம் செய்யவும் மனம் இடம் தரவில்லை. அதே சமயத்தில் அதைப் பெற்றுக்கொள்ளவும் அவனுக்கு இஷ்டமில்லை. "ஐயா, இது எனக்கு வேண்டாம்!" என்றான் மரியாதையோடு.

"அப்படிச் சொல்லப்படாது. இது உனக்காகவே செய்தது" என்றார் மைனர்.

சண்முகம் தன்னை அடக்கிக்கொண்டான். "உங்களுக்குச் சங்கீதத்திலே நல்ல பழக்கம் உண்டோ?"

"இது எல்லாம் என்ன கேள்வி?"

"இல்லே, தங்க நாயனம் பார்க்க நல்லா இருக்கும். மர நாயனம் கேட்க நல்லா இருக்கும். இனிமே தங்க நாயனத்தாலே என் சங்கீதம் அதிகப்படியாகிப் பெயர் எடுக்கப் போவதில்லே. எனக்கு என் மர நாயனமே போதும். இதை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்."

"ஏம்பா, கையிலே கிடைக்கிறதை விடறே? இந்த வித்வான்களுக்கு மாத்திரம் சமய சந்தர்ப்பம் தெரியறதில்லே!" என்றார் வைத்தி.

"எனக்குச் சமயத்துக்குத் தகுந்தபடி பேசத் தெரியாது. சந்தர்ப்பம் பார்த்துப் புளுகவும் தெரியாது. ஆனால், சங்கீதம் தெரியும்" என்று வெறுப்போடு கூறினான் சண்முகம்.

மைனர் வைத்தியை ஒருமுறை பார்த்தார். மறுபடியும் சண்முகத்திடம் திரும்பி, "நாதஸ்வரக்காரரே, நீங்க வாசிச்ச வாசிப்பு ரொம்ப அற்புதம். அதுக்காகவே இதைச் செய்யச் சொன்னேன். இதை வாங்கிக்கொள்ளுங்கள்" என்றார்.

"வேண்டாமய்யா. நீங்க கொடுக்கிற தங்க நாயனத்தைவிட ஒரு ரசிகர் தலையை ஆட்டறது எனக்குப் பெரிசு. இதை வேறு யாருக்காவது கொண்டுபோய்க் கொடுங்க. இல்லாட்டி, உருக்கி அழிச்சு ஒட்டியாணமா செய்யுங்க. தங்க நாயனத்தைக் கையிலே எடுத்து வாசிக்கிறபோது சங்கீதம் மறந்து போகும். தங்க நாயனத்திலேதான் மனசு இருக்கும். கேட்கிறவர்களுக்கெல்லாம் பாட்டுக் கேட்காது. பளபளப்புத்தான் கண்ணில் படும். உங்களுக்கு ஒரு நமஸ்காரம். போங்க!" என்று கண்டிப்பாகச் சொன்னான் சண்முகசுந்தரம்.

இதைக் கேட்டவுடனே மைனரின் முகம் கன்றியது. சண்முகத்தின் பேச்சைக் கேட்ட மக்கள், "கையிலே கொடுத்த பரிசை வேண்டாம் என்று தள்ளுகிறானே!" என்று பிரமித்தார்கள். சண்முகம் மறுபடியும் பேசத் தொடங்கினான்.

"மைனர் பெரிய வீட்டுப் பிள்ளை. பெரிய பெரிய காரியங்களைச் செய்தவரு. அவர் பெரிய மனுஷத் தன்மையை எங்கிட்டே காட்டி இருக்காரு. அவர் பெரிய பரம்பரையிலே வந்தவர் இல்லையா? ஆனால், நான் அதைவிடப் பெரிய பரம்பரையிலே வந்தவன். தியாகராஜா, தீக்ஷிதர், முத்துத்தாண்டவர், அருணகிரிநாதர் போன்ற மகான்கள் பரம்பரையிலே வந்தவன். இவர் பரம்பரை பணத்தால் உயர்ந்தது. எங்கள் பரம்பரை மனத்தால் உயர்ந்தது. இவர் கொடுக்கும் பரிசை இந்தத் தலை வணங்கி ஏற்காது. மைனர் அவர்களே, நீங்கள் யார் என்பது எனக்கும் தெரியும், இந்த ஊருக்கும் தெரியும்" என்று சொன்னபோது, கூட்டத்தில் உள்ளவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். 'எதைச் சொல்லுகிறான்? இதற்கு என்ன அர்த்தம்?' என்று பார்த்தார்கள்.

ஆனால், வடிவாம்பாள் மாத்திரம், விஷயத்தைப் புரிந்து கொண்டு, மூகவாய்க்கட்டையை நொடித்துக்கொண்டாள்.

"பாத்தியா முத்துக்குமரு, நாக்குத் துடிப்பா பேசறதே! அந்தத் துடுக்கு எங்கே போகும்?" என்று முத்துக்குமருவிடம் சொன்னாள்.

சண்முகசுந்தரம் பெருமூச்சு விட்டுக்கொண்டே சற்று நேரம் நின்றான். பிறகு, தன் கையில் இருக்கும் சங்கிலியைப் பார்த்தான். ஒரு முறை கனைத்துக்கொண்டான். "இன்றைக்கு அந்தப் பெண் மோகனாம்பாள் 'நான்தான் தோற்றேன்' என்று கூறினாள். அதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. இன்றைக்கு நான் வாசிக்க ஆரம்பித்த போது, இந்தத் தில்லானாவுக்கு அவள் எப்படி ஆடப் போகிறாள் என்ற சந்தேகம் எனக்கு வந்தது. இந்தப் போட்டியில் அவளைத் தோற்கடிக்க வேண்டுமென்றே, முத்துராக்கு ரொம்பப் பாடுபட்டு இந்தத் தில்லானாவைத் தயார் செய்தார். தாளத்தைக் காட்டாமல் கூட வாசித்தார். ஆனால், அந்தப் பொண்ணு, அதை முதல் ஆவர்த்தனத்திலேயே புரிந்துகொண்டாள்."



சண்முகத்தின் பேச்சைக் கேட்டு மோகனாவின் முகம் சிவந்தது. தன்னை அவன் புகழ்வதைக் கேட்டவுடனே ஒரு வெட்கம் அவளைப் பிடித்துக்கொண்டது. தரையைப் பார்த்துக்கொண்டே, கால் நகத்தால் தரையைக் கீறினாள். இன்னும் என்ன சொல்லுகிறான், கேட்க வேண்டுமென்று துடித்தது மனம். அவளுடைய களைப்பு எல்லாம் எங்கேயோ ஓடி மறைந்தது. அவனுடைய ஒவ்வொரு வார்த்தையும் அவளுக்குப் புதிய தெம்பைக் கொடுத்தது. வாடிக்கிடந்த பயிருக்குப் பாய்ச்சிய நீர்போலே, அவள் மேனி முழுவதும் புல்லரித்தது. வரதனைக் கடைக்கண்ணால் பார்த்தாள். வரதன் புன்சிரிப்புச் சிரித்தான்.

'சும்மா இரு, வரதா' என்று கோபிப்பவள் போல் அவனைப் பார்த்துவிட்டு, சண்முகத்தின் பேச்சைக் கேட்டாள்.

"எவ்வளவு நெரடாக வாசிக்க முடியுமோ அவ்வளவு நெரடாக நான் வாசித்தேன். ஆடி ஆடி அவள் காலை ஒடித்துவிடச் செய்வது என்ற எண்ணத்தில்தான் வாசித்தேன். ஒரு பெண்ணுக்கு இவ்வளவு திமிரா? 'எங்கே, திருவாரூர் நாயனத்தை எடுத்து வாசிப்பாயா?' என்று என்னைக் கேட்டாளே என்ற கோபத்தில்தான் வாசித்தேன். நான் வாசிக்க வாசிக்க அவள் பம்பரம் போல் ஆடினாள். எவ்வளவுக்கெவ்வளவு நான் விரைவாக வாசித்தேனோ, அதற்கும் மேல்காலத்தில் அவள் ஆடினாள். இதுவரை நான் இந்த மாதிரி நாட்டியத்தைப் பார்த்தது இல்லை. ஒவ்வொரு நடையும் அவள் காலில் பேசும்போது, புதிய ஜீவனுடன் விளங்கியது. என் நாதஸ்வரத்தின் மேலே அவள் நாட்டியம் ஆடுவதுபோல எனக்குத் தோன்றியது" என்று சண்முகம் தொடர்ந்து பேசிக்கொண்டு போனபோது, "தங்கச்சி" என்றான் வரதன்.

"சும்மா இரு வரதா! பானகத்தில் விழுந்த துரும்பு மாதிரி குறுக்கே பேசாதே!" என்றாள் மோகனா.

ஆனால், இதே பானகம், வடிவாம்பாள் காதில் படு விஷம் போல் ஒலித்தது. 'என்னடா, மேலே மேலே ஓட்டறானே?' என்று அவள் எண்ணினாள். 'ஆட்டம் முடிந்தவுடனே, வீட்டுக்குப் போய் இருக்கக் கூடாதா? ஏற்செனவே இந்தப் பொண்ணு பித்துப் பிடித்து அலையுது. இந்தப் பாவிப் பய பேச்சை வேறு கேட்டுப்பிட்டா, என்ன ஆகுமோ? இனிக்க இனிக்கப் பேசறதுக்கு எங்கேதான் கத்துக்கிட்டானோ?' என்று எண்ணினாள். "வா, மோகனா, போவோம்" என்று மோகனாவின் கையைக்கூடப் பிடித்தாள். ஆனால், அதற்குள் இன்னும் யாராவது, சன்மானம் செய்ய வேண்டியிருந்தால், நடுவிலே

நாம் சென்றுவிட்டால், நன்றாக இருக்காதே என்று ஒரு சபலமும் வரவே, சண்முகத்தை மனத்தில் வைதுகொண்டே நின்றாள் வடிவாம்பாள்.

சண்முகசுந்தரம் பேசினான்: "அவளுடைய ஆட்டம் சற்று நேரம் என்னையே பிரமிக்க வைத்துவிட்டது. தாளம் தவறிவிடக்கூடாதே, காலப் பிரமாணம் நழுவிவிடக்கூடாதே என்று நானே பயந்தேன். அந்தப் பொண்ணு அடக்கத்தினால் 'நான்தான் தோற்றேன்' என்று கூறியிருக்கிறாள். அது தவறு. இன்றைக்கு அவள்தான் வெற்றி அடைந்தாள்" என்று அவன் சொன்னவுடனே கூட்டம் முழுவதும் கரகோஷம் செய்தது.

கடைக்கண்ணிலே படிந்த ஆனந்தக் கண்ணீரைச் சுண்டுவிரல் நுகத்தால் தட்டிவிட்டாள் மோகனா.

சண்முகத்தைப் பார்த்தாள். அவன் முகத்தில் அழகு பொங்கியது. அந்தப் பேச்சுக்கள் எல்லாம் அமிர்தத்தின் துளிகள் போல, அவன் வாயிலிருந்து வெளிவந்தன. அப்படியே அவனைப் பார்த்துப் பார்த்து மயங்கினாள் மோகனா.

'ஐயா, நான் உன்னை என்னவெல்லாமோ நினைத்தேனே! என் அன்பே, உனக்கு இதயம் இல்லை என்று எண்ணினேனே! நீ இப்பொழுது சொல்லும் ஒரு வார்த்தையே போதுமே! இன்னும் ஆயிரம் வருஷங்கள் வேண்டுமானாலும் உனக்காக நான் காத்துக் கொண்டிருப்பேனே!' என்று கலங்கினாள்.

சண்முகசுந்தரம் மேலும் பேசினான்: "நாத வெள்ளத்தில் அவள் பாதச் சிலம்பு ஒலித்தது. தில்லானா ஆடுவது என்பது லேசான காரியமல்ல. கையும் காலும், கண்ணும் புருவமும், கழுத்தும் ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு அஷ்டாவதானம் செய்ய வேண்டும். இந்தத் திருவாரூரிலே தேர் அழகு என்று சொல்லுவார்கள். இனி அதோடுகூட தில்லானா அழகும் சேர்ந்துவிட்டது. அவளை இனி சாதாரணமாக, மோகனாம்பாள் என்று சொல்வதைக் காட்டிலும், 'தில்லானா மோகனாம்பாள்' என்றே அழைக்க வேண்டும்.

"இது வெறும் புகழ்ச்சி அல்ல. சப்த சுரங்களைச் சொல்லும் வாயால் சொல்லுகிறேன். இனி அவள் தில்லானா மோகனாம்பாளே தான்!" என்று அவன் சொன்னபோது, நட்டுவனார் வரிசையிலிருந்தும் பெண்களின் வரிசையிலிருந்தும், "ஆஹா, பேஷ், சபாஷ்!" என்ற குரல்கள் கிளம்பின. கமலாலயம் எதிரொலித்தது.

மோகனாவுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. சண்முகத்தைப் பார்த்தாள். ஒருவரும் அறியாமல் கை எடுத்துக் கும்பிட்டாள். அவளை எத்தனையோ பேர்கள் புகழ்ந்திருக்கிறார்கள். அன்றைக்கு அழகர் கோயிலில் பரதேசியார் புகழ்ந்தார். அப்பொழுது அந்த வார்த்தைகள் அவள் காதில்கூட ஏறவில்லை. இன்றைக்கு அவன்



வாயால் சொன்ன உடனே அந்தப் பேதையின் உள்ளம் நெகிழ்ந்தது. கள் உண்டவள் போல் கண்கள் சிவந்தன. உடம்பில் புது அழகு ஏற்பட்டது. பூரித்துப் போனாள். அப்பொழுது நாராசம் போல அவள் காதில் இன்னொன்றும் கேட்டது.

"அவள் அழகைக் கண்டு நான் சொல்லவில்லை. அழகு எப்படி இருந்தாலும் எனக்கு அதில் அக்கறை இல்லை. நல்லபாம்புகூடத்தான் அழகாக இருக்கிறது. நான் சொல்வது எல்லாம் வித்தையைப் பொறுத்துத்தான். எதிரி என்றாலும் அவள் வித்தையைப் பாராட்டுவதுதான் முறை. அவள்தான் வென்றாள்; நான் தோற்றேன். நான்தான் அவளைத் "தில்லானா வாசிக்கிறேன், ஆடிவிடுவாயா?" என்று கேட்டேன். அவள் அதை நிறைவேற்றிவிட்டாள். அன்றைக்கு அழகர் கோவிலிலே அவள் ஆட்டத்தை மறைந்து இருந்து பார்த்தேன். அவளிடம் ஓடி 'சபாஷ்' என்று சொல்ல முடியவில்லையே என்று ஏங்கினேன். இன்றைக்கு எதிரிலேயே உட்கார்ந்திருந்து பார்த்துவிட்டேன். அவளிடம் வித்தை இருக்கிறது, சக்தி இருக்கிறது, எதையும் செய்யும் ஆற்றலும் இருக்கிறது. இன்னும் என்னென்ன செய்வாளோ? சாமி, இந்தாங்க, இந்தச் சங்கிலியை அவகிட்டவே கொடுத்துவிடுங்கள்' என்று சொல்லிப் பரதேசியாரிடம் கொடுத்துவிட்டு, 'வா, முத்துராக்கு' என்று தவில்காரரை அழைத்துக்கொண்டு வேகமாக நடந்தான் சண்முகசுந்தரம்.

மோகனா திடுக்கிட்டாள். அவனையே கவனித்தாள். மழை பெய்யும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கையில் பெரும் இடி இடித்துவிட்டு, வானம் வெளி வாங்கினால் எப்படியிருக்குமோ, அப்படி இருந்தது அவன் செய்கை.

"அவன் புகழ்ச்சியெல்லாம் வெறும் புகழ்ச்சிதானா? உறவு கிடைக்கவில்லை; ஆனால், உதடு பேசியிருக்கிறது" என்று எண்ணினாள்.

மோகனாவுக்கு அவளை அறியாமல் ஆத்திரமும் அழுகையும் வந்தன. தாயின் கையிலிருந்து திமிறிக்கொண்டு சண்முகத்தின் அருகில் ஓடினாள். "இந்தப் புகழ்ச்சியெல்லாம் எனக்குத் தேவை இல்லை. நீங்கள் கொடுத்த பட்டமும் எனக்கு வேண்டாம்" என்றாள்.

"உனக்கு வேறு என்ன வேண்டும்?" என்றான் சண்முகம்.

"நான் ஆடி உங்களிடம் பெயர் வாங்கவேண்டுமென்று ஆடவில்லை. இனி யாரிடமும் பெயர் வாங்க வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை. உங்கள் வாயால் என்னைப் புகழ வேண்டாம். இகழாமல் இருந்தால் போதும். 'உன் மேல் சந்தேகம் இல்லை,' என்று ஒரு வார்த்தை சொன்னால் போதும்" என்று சொல்லிவிட்டு, குமுறி என்று அழுதாள் மோகனா. சண்முகம் பிரமித்து நின்றான்.

"தில்லானா மோகனாம்பாள் என்ற பட்டத்தைத் திருப்பி நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள். சந்தேகப்பட்டேன் என்று ஒரு வார்த்தை

சொல்லுங்க, போதும். ஏன், மனக இல்லியா? வாய் திறந்து சொல்லுங்கள், சந்தேகம் இல்லை என்று சொல்லுங்கள்"

"அதை எப்படிச் சொல்வது? எனக்குப் பொய் சொல்லத் தெரியாது" என்றான் சண்முகம்.

"உலகத்திலே நீங்கள் மாத்திரந்தான் அப்படி என்பதில்லை. எல்லோருக்கும் மானம் உண்டு" என்றாள் மோகனா.

இதுவரை தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டிருந்த சண்முகம், அணையை உடைத்துக்கொண்டு வரும் ஆற்று வெள்ளம் போலச் சீறினான்.

"எப்படி உன் மேல் சந்தேகம் இல்லேன்னு சொல்றது? அப்படி என் வாயால் சொல்ல முடியுமானால், இங்கே சொல்லாமே இருப்பேனா? உன் வீட்டின் வாசலிலே மைனரின் வண்டி வந்து நின்னதைக் கேட்டவுடனேயே நான் என்ன துடிதுடித்தேன் தெரியுமா? உனக்காக மிட்டாயும், கல்கண்டும் வாங்கிக் கூஜா நிறைய அடைத்துக்கொண்டு வந்து திரும்பிப் போகும்போது, விஷத்தை அல்லவா என் நெஞ்சில் எடுத்துக்கொண்டு போனேன்! உன் வீட்டு வாசலிலே மைனர் வண்டி வந்து நின்றது பொய்யா? மைனர் நின்றது பொய்யா? சர்க்கஸ் கம்பெனியிலே வைத்தி என்னை மேளத்திற்கு அழைத்தது பொய்யா? நீங்களெல்லோரும் மைனருடன் சர்க்கஸ் பார்க்க வந்தது பொய்யா? எது பொய்? நான் கண்ணால் கண்டது பொய்யா? காதால் கேட்டது பொய்யா?

"எரிகிற நெருப்பிலே எண்ணெயை ஊற்றாதே! எனக்கு அறிவும் ஞானமும் இருக்கும்வரையில், கண்ணும் காதும் இருக்கும்வரை, எனக்கு உயிர் இருக்கும்வரையில் நான் உன்னை நம்ப மாட்டேன்!" என்று சொல்லிவிட்டு வேகமாக நடந்தான் சண்முகம்.

அவனுடைய ஒவ்வொரு சொல்லும் விஷம் தோய்ந்த அம்பு போல் மோகனாவின் மனத்தில் தைத்தது. உயிர் இருக்கும்வரை உன்னை நம்ப முடியாது என்ற சொல் அவள் உள்ளத்தை சில் சில்லாக உடைத்தது. அந்த இடத்திலே நின்றவண்ணம் இரண்டு கைகளாலும் தன் முகத்தைப் பொத்திக்கொண்டு, "ஹோ" என்று அலறினாள் மோகனா.

இவர்கள் இருவரும் பேசுவதை ஆரம்பத்திலிருந்தே பார்த்துக் கொண்டிருந்த மைனரின் கண்கள் கலங்கின. அவர் இதயத்தில் வைத்தி வைத்த தீ அணைந்தது. காதலின் கண்ணீரிலே காமக் கனல் அவிந்தது. அறிவுடைய மைனர் துடித்தார். 'நம்மால் இருவருடைய வாழ்வும் பாழாகின்றதே' என்ற எண்ணத்தில் "சண்முகம், நில்லுங்கள்!" என்று சொல்லிக்கொண்டே ஓடினார். அப்போது, "அம்மா!" என்று வீறிட்டு அலறினான் சண்முகம்.

அத்தனை கூட்டத்தையும் கிழித்துக்கொண்டு அவன் குரல் கேட்டது. இருளில் பாய்ந்து வந்த ஒரு கத்தி சண்முகத்தின்



இடத்தோளில் சதக் என்று தைத்தது. 'ஐயோ' என்று அலறி விழுந்தான் சண்முகம். அவன் அருகில் ஓடி வந்த மைனர் அவனைத் தாங்கிப் பிடித்துக்கொண்டார். பரதேசியார் ஓடி வந்தார். மோகனாவும், "என்ன அது?" என்று ஓடி வந்தாள்.

சண்முகத்தின் தோளிலிருந்து ரத்தம் குபுகுபுவென்று வழிந்தது. பயத்துடன் நோக்கினாள் மோகனா. அவள் தலை சுழன்றது. உலகமே சூன்யமாயிற்று. "ஐயோ அத்தான்!" என்று அலறிக்கொண்டே அடியற்ற மரம் போல் விழுந்தாள்.

அப்பொழுது மொட்டை மாடியிலிருந்து அந்தக் கொள்ளிக் கண்ணனின் உருவம் பக்கத்தில் இருந்த ஆலம் விழுதைப் பிடித்துக் கொண்டே சரசரவென்று இறங்கி இருளில் மறைந்தது.

139560

ஐம்பத்து ஒன்பதாம் அத்தியாயம் H842704

## "மூர்க்கனுக்கு மோகம் வந்தால்-?"



உலகத்திலே பணத்தை வைத்துக் கொண்டு விளையாடுகிறவர்கள் குறைவு. ஆனால், மனத்தை வைத்துக்கொண்டு விளையாடுகிறவர்கள்தாம் அதிகம். கடவுள் எல்லோருக்கும் பணத்தைக் கொடுக்க வில்லை. ஆனால், எல்லோருக்கும் மனத்தைக் கொடுத்திருக்கிறார். மனம் ஒரு பேய். அதை அடக்கி ஆளத்தெரிந்தவர்கள் அடக்கிவிடு கிறார்கள். அடக்கத் தெரியாதவர்களோ, அதன் வழியே சென்று மந்திரவாதி பேய்க்கு அடிமையாவது போல, அதற்கு அடிமையாகிவிடுகிறார்கள். இம்மாதிரி அடிமையானவர்களுள் ஒருவர் நாகலிங்கம். அதிலும் குற்றவாளிகளுடைய மனம் குரங்கு போன்றது. அது ஒரு கொம்பைப் பிடித்துக்கொண்டால், லேசில் விடுவது இல்லை. குரங்குப் பிடிதான். அம்மாதிரி பிடித்துக்கொண்டவர்தாம் நாகலிங்கம்.

சண்முகசுந்தரத்தின் மேல் கத்தியை எறிந்த கொள்ளிக்கண்ணன் யார் என்ற சந்தேகம் வாசகர்களுக்கு இருக்கமுடியாது. ஆனால், அவன் எப்படி அங்கு வந்தான் என்று நினைக்கத் தோன்றியிருக்கும்.

ரமாமணிக்கு ஜாமீன் கொடுப்பதற்குச் சண்முகத்தை அழைத்து வரச்சென்ற பரதேசியார் திக்கலுக்கு வந்து சேர்ந்தார். அவர் சொல்படி தருமலிங்கம் வண்டியைக் கட்டிக்கொண்டு திருவாரூர் சென்று, சண்முகத்திடம் விஷயத்தைச் சொன்னான்.

சண்முகசுந்தரம் வாழ்வையே வெறுத்து கச்சேரிகளையே வேண்டாமென்று இருந்தவன் மலாயா நாட்டுக்குப் புறப்படவும்

தயாராய் இருந்தவன். இந்தப் போட்டி ஒன்றுக்காகத்தான் உயிர் வாழ்ந்தான் திருவாரூரே கதி என்று. ஆத்திரமும் ரோஷமும், மனம் நிறைந்த வெறுப்பும் கொண்டு அவன் இருந்தபோதுகூட, பரதேசியாரின் அழைப்பை அவனால் தட்டமுடியவில்லை. அவர் சொல்லியதை அவன் உத்தரவாகவே கருதினான். உலகில் வேறு எதுவும் முக்கியமல்ல. அவர் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியது ஒன்றுதான் முக்கியம் என்று அவனுக்குத் தோன்றியது.

"கற்றாரைக் கற்றாரே காமுறுவர்." சண்முகத்தின் வித்தை அபரிமிதமானது. அந்த வாத்தியத்தில் அவனைப் போல வேறு யாரும் ஊதிவிட முடியாது. அதோடு யாருக்கும் தலை வணங்காத குணமும் உடையவன். அப்படி இருந்தும் பரதேசியாருக்கு அவன் தலை வணங்கினான். காரணம் வேறு ஒன்றும் இல்லை. பரதேசியாரிடம் பக்தியும், சங்கீதமும், பாலும் பழமும் போல் கலந்திருந்தன. அவர் சங்கீதத்தைப் பிறர் இஷ்டத்துக்குப் பாடுவதே இல்லை. ஆனால், நல்ல பாட்டைப் பிறர் ஆனந்தத்திற்குப் பாடவும் மறுப்பது இல்லை. சண்முகத்தின் காதுக்கு ஒரு பாட்டு இனிக்கவேண்டுமென்றால், அது பரதேசியாரிடந்தான் இருந்தது.

அவர் ஒரு மகான்; அதிலும் வித்வான். காட்டுக்குச் சென்று, தவம் செய்வதைக்காட்டிலும், மக்கள் கருத்து இனிக்கப் பாடிக்கொண்டிருப்பது ஆண்டவனுக்கு இஷ்டமென்று கருதியவர். சன்னிதி சன்னிதியாகச் சென்று, சங்கீதத்தை அர்ப்பணம் செய்துகொண்டு இருந்த பழைய சங்கீத பரம்பரையிலே அவர் ஒருவர்தாம் அன்று வாழ்ந்து வந்தார். அவர் அழைத்தார் என்பதைக் கேட்டவுடனே, சண்முகசுந்தரம் சிக்கலுக்குப் புறப்பட்டு வந்தான்.

அவன் வரும்வரை, பரதேசியார் உணவு அருந்தவில்லை. அவனைக் கண்டவுடனே, "உடம்பு என் உனக்கு இளைத்து இருக்கிறது" என்ற கேள்வியைத்தான் கேட்டார். அவனால் எதுவும் பதில் சொல்ல முடியவில்லை. தனக்கும் ஒரு பெண்ணுக்கும் ஏற்பட்ட பிணக்கை ஒரு துறவியிடம் எப்படிச் சொல்வது என்று அடக்கிக் கொண்டான். அதற்காகப் பொய்யும் சொல்லவில்லை.

"என் விதி சாமி!" என்று சொல்லி நின்றான். பரதேசியார் அவனை வற்புறுத்தவில்லை. அது எப்படி முடியுமென்று அவருக்குத் தெரியும். ஆதலால், அவனிடம் அதைப்பற்றிக் கேட்கவே இல்லை.

"தம்பி, உன்னாலே ஒரு வேலை ஆக வேண்டியிருக்கே!"

"என்ன சாமி? காத்துக்கிட்டு இருக்கேன்."

"ரமாமணி, நாகபட்டினம் 'லாக்கப்'பில் இருக்கிறாள். அவளை நீதான் ஜாமீன் கொடுத்து வெளியே கூப்பிட்டுக்கிட்டு வரணும்."

ரமாமணி சிறையில் இருக்கிறாள் என்பதைக் கேட்டவுடனே, சண்முகசுந்தரம் திடுக்கிட்டான். அப்படிப்பட்ட ஒரு நல்ல பெண்



சிறையில் எப்படித் தவிப்பாளோ? தனக்குச் சகோதரி போல புகலிடம் கொடுத்தாளே! உயிருக்குப் பயந்து மறைந்து இருந்தவளாயிற்றே என்ற கவலை வந்தது. அவன் சிந்தையில் தாங்க முடியாத வேதனை ஏற்பட்டது. தன்னை அவள் எவ்வாறு மதித்தாள். எசினாள், பேசினாள்? தன் கோபத்தைக்கூடப் பாராட்டாமல் ஆதரித்துக் கொண்டு இருந்தாளே என்று எல்லாம் எண்ணினான்.

"சரி சாமி, புறப்படுங்க!" என்றான்.

இருவரும் புறப்பட்டு நாகபட்டினம் வந்தார்கள். நாகபட்டின மாஜிஸ்டிரேட் பத்மநாப முதலியார் என்பவர், நல்ல சங்கீத ரசிகர். வடலூர் அன்பர். சாதுக்களிடம் பக்தி உடையவர். பரதேசியாரை வணங்கி வரவேற்றார். அவருக்கு ஆசனம் அளித்து "விஷயத்தைச் சொல்லுங்கள்" என்று மரியாதையுடன் கேட்டார். சங்கீத வித்வானுக்கு உரிய மரியாதையைச் சண்முகத்துக்கு அளித்தார். இதைப் பார்த்து, சண்முகமும் பரதேசியாரும் விஷயம் சுலபமாக முடிந்துவிடுமென்றுதான் எண்ணினார்கள். ஆனால், ஜாமீன் என்ற வார்த்தையைக் கேட்டவுடன், மாஜிஸ்டிரேட் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

"சட்டப்படி கொடுக்க இடமில்லை. நெருப்பு வைத்த வழக்கு" என்று ஒரே வார்த்தையில் முடித்துவிட்டார்.

சண்முகசுந்தரம் தன்னுடைய சொத்து பூராவையும் ஜாமீன் கொடுக்கத் தயாராக இருந்தான். இதைத் தவிர நூறு மெடல்களை கையிலே அள்ளிக்கொண்டு வந்திருந்தான். எந்த நிமிஷமும் அவைகளை விற்று, எத்தனை ஆயிரம் வேண்டுமானாலும் கட்டி, ரமாமணியை விடுதலை செய்ய அவன் உள்ளம் நினைத்தது. என்ன செய்வது? சட்டம் பொதுவாகப் பணத்திற்கு அடங்குவதில்லை. மாஜிஸ்டிரேட் இப்படிச் சொன்னவுடன் அவன் கண்கள் கலங்கின.

"எல்லாம் நல்லதுக்குத்தான் தம்பி!" என்றார் பரதேசியார்.

சண்முகம் வெறித்துப் பார்த்தான். அவனை அழைத்துக்கொண்டு வெளியே சென்றார் பரதேசியார்.

"கடமை இடம் கொடுத்திருக்குமானால், மாஜிஸ்டிரேட் மறுத்து இருக்க மாட்டார். நாம் முயற்சி செய்ததில் குறைவு இல்லை. அப்படியும் அவள் விடுதலையாகவில்லை என்றால் இறைவனுக்கு அது இஷ்டம் இல்லை என்றுதான் கருதவேண்டும். ஒரு சமயம், நாகலிங்கத்துக்கும் யாரேனும் ஜாமீன் கொடுத்துவிடலாம். நாகலிங்கம், ரமாமணி இருவரும் வெளியே இருந்தார்களானால், அந்தப் பாம்பு எப்படியும் ரமாமணியைக் கொத்திவிடும். இதற்காகவே, கடவுள் அவளை விடுதலை செய்யாமலும் இருக்கலாம். வா, போவோம்" என்று சண்முகத்தை அழைத்துக்கொண்டு வெளியே நடந்தார். கோர்ட்டை விட்டு வெளியே வந்தவுடன், சண்முகசுந்தரம்

ரமாமணியை 'லாக்கப்'பில் சென்று பார்க்க வேண்டுமென்று துடித்தான்.

பரதேசியார் கூறினார், "பார்த்துப் பயன் இல்லை. அவன் துக்கத்தைத்தான் அதிகப்படுத்துவோம்" என்றார்.

'ஐயோ, இந்தத் துறவிகளுக்கே உணர்ச்சி கிடையாதா? சற்றும் கருணையின்றிச் சொல்லுகிறாரே!' என்று எண்ணினான் சண்முகசுந்தரம்.

"அப்பா, கருணைக்கும் முயற்சிக்கும் ஒரு அளவு உண்டு. அதற்கு மேல் கடவுள் இஷ்டம். நம்மால் முடியாத ஒன்றை முடியும் என்று நினைத்துக்கொள்வது மாயை. இது எனக்கு இரண்டாவது அனுபவம். ஒரு இடத்தில் நான் பரதேசி என்பதற்காக, என் வார்த்தையை போலீஸ் மதிக்கவில்லை. இன்னொரு இடத்திலே பரதேசியை மதித்தார்கள். சட்டம் இடம் கொடுக்கவில்லை. ஆகவே, எனக்கு இந்தப் பாசம் எல்லாம் உதவாது போலிருக்கிறது." என்று சொல்லி அவர் சிரித்தார்.

ஞானிகளின் நடவடிக்கைகளை நாம் நிச்சயம் செய்துவிட முடியாது. நிறைகுடம் போன்றது என்று சொல்லுவார்கள். எப்படி, சில பணக்காரர்கள் ஏழையைப் போல இருக்க விரும்புகிறார்களோ, ஏழைக்கும் ஏழையாக நடந்துகொள்ளுகிறார்களோ, அரண்மனையிலே பிறந்த கண்ணன் ஆயர்பாடியிலே எவ்வளவு எளிமையுடன் வாழ்ந்தானோ, அதைப் போல ஞானிகளும் உலக மக்களிடம் பழகுவார்கள். அவர்கள் பேசுவார்கள், பாடுவார்கள், ஆடுவார்கள், அழுவார்கள். ஆனால், 'முத்தர் மனம் இருக்கும் மோனத்தே' என்பது போலச் சித்தத்தைச் சிவன்பாலே வைத்திருப்பார்கள். ஆகவே பரதேசியாரைப்பற்றி அவருடைய குணத்தை ஆராய்வதற்கு நாம் யார்?' என்ற எண்ணம் சண்முகத்துக்கு வந்தது. 'லாக்கப்'பில் போய் ரமாமணியைப் பார்க்கும் எண்ணத்தை அடக்கிக்கொண்டு அவர் கூடவே நடந்தான்.

எண்ணத்தை அடக்கலாம். இதய வேதனையை அடக்க முடியுமா? ஏற்கெனவே காற்றுக் கொடுத்து, ஊதிச் சல்லடைத்துளை போல இருந்த அவன் இதயத்தில் இந்தச் சகோதரியின் துயரமும் தைத்தவுடன், அவனுக்கு மார்புவலி வந்துவிட்டது. நெஞ்சைப் பிடித்துக்கொண்டே திணறினான். அதைக் கவனித்தார், பரதேசியார், ஏதோ ஒன்றை வெற்றிலையில் வைத்துக் கொடுத்தார். அவன் உடம்பு பழைய நிலைக்கு வந்தது. இருவரும் சிக்கலுக்கு வந்து சேர்ந்தார்கள். அன்று இரவு சண்முகத்துக்குச் சிக்கல் ஆண்டவனைப் பரதேசியார் தரிசனம் செய்து வைத்தார்.

இவ்வாறு நமது விரக்தர் ரமாமணியைக் கைவிட்டாலும், ஸ்ரீமான் நாகலிங்கம் அவளைக் கைவிடவில்லை. பக்கத்து அறையில் இருக்கும் ரமாமணியைப் பரிபூர்ணமாய் ஆட்கொண்டுவிட்டார்.



உலகில் காரணம் இல்லாமல் எதற்கும் பெயர் வைக்க மாட்டார்கள். நாகப்பாம்பை நல்லபாம்பு என்று எப்படி உலகம் அழைத்தது? அதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்கத்தான் வேண்டும். அது சத்தியத்துக்குக் கட்டுப்படும் என்கிறார்கள். மந்திரத்தால் கட்டுண்டு இருக்கும் என்கிறார்கள். மகுடியில் ஆடுகிறது என்கிறார்கள். கண்ணுக்கு அழகாக இருக்கிறது. படமெடுத்துச் சீறும்போதுகூட, அது பார்வைக்கு அழகாக இருக்கிறது.

ஒரு சித்திரக்காரர் கையிலே 'பிரஷை' எடுத்து வைத்துக்கொண்டு பாம்பின் தோலில் இருப்பது போன்ற வர்ணங்களைத் தீட்ட ஆரம்பித்தாராம். அந்தப் பளபளப்பையும், மினுமினுப்பையும், நெளிவையும் உயிரையும் எப்படிக் கொடுக்க முடியும்? மாதுளம்பூப் போன்ற நடைபாவாடையில் கட்டங்களும், சித்திரங்களும் போட்டது போலக் காட்சி அளிக்கும் அந்தி வானத்தை அவன் கை சித்திரிக்குமா? பவழமல்லிப் பூவின் அழகை ஒருவன் கற்பனையேனும் செய்ய முடியுமா? மேலே வெண்மலரும், கீழே சிவப்புத் தக்கையும் அமைந்திருக்கிறதே!

அடேயப்பா, இறைவன் பெரிய வர்ணக்காரன்! அவன் கோலங்களை இட்டு இட்டு அழித்துக்கொண்டேயிருக்கிறான். அணிலைப் படைத்து, அது தாவுவதைப் பார்த்து மயங்குகின்றான். குயிலைப் படைத்து, அது கூவுவதைக் கேட்டு இன்புறுகின்றான். மனிதர்களைப் படைத்து, அவர்கள் மாயையில் விழுவதைப் பார்த்துச் சிரிக்கின்றான். அவனேதான் நாகலிங்கத்தையும் படைத்திருக்கிறான். அவன் தன் கழுத்தில் நாகத்தின் அழகை மெச்சி ஆபரணம் ஆக அணிந்தவனல்லவா? நாகலிங்கம் நயமானவர்தாம். ஆனால் கடிக்கும் குணத்தை அவர் விட்டுவிடப்போவதில்லை. தரையில் இருந்தாலும் சரி, சிறையில் இருந்தாலும் சரி, நாற்காலியில் இருந்தாலும் சரி, 'லாக்கப்'பில் இருந்தாலும் சரி அவர் தீய எண்ணம் அவரை விட்டுப் போகாது.

ரமாமணியோடு தனியே விடப்பட்ட நாகலிங்கம், அன்று முழுவதும் என்னென்னவோ யோசனைகள் செய்தார். அவனுக்கு ஜாமீன் மறுக்கப்பட்டது என்பதைக் கேள்விப்பட்டவுடன் அவருக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. பாராக்காரர்கள் இல்லாத போதெல்லாம் அவளைப் பல பல விதமாகப் பேசினார்.

"ஏ! கருப்பாயி உன்னை ஜாமீனிலே விடமாட்டேன்னுட்டாங்களாமே? உனக்கு வெளியே போகணும்னு ஆசையிருந்தா, என்கிட்டே சொல்லப்படாது? நானே யாரையாச்சும் உனக்கு ஜாமீனுக்கு ஏற்பாடு பண்ணுவேனே!" என்று குழைந்தார்.

"இந்தா, நீ சும்மா கிடய்யா, உன் கிட்டே யாரு இதெல்லாம் கேட்டாங்க?" என்று கோபித்தாள் ரமாமணி.

நாகலிங்கம் சற்று நேரம் சும்மா இருந்தார். ஆனால், அவர் மனத்திலே யோசனைகள் ஓடின. 'இந்தப் பரதேசிக்கு இந்தப் பொண்ணு மேலே ஏன் அக்கறை? இவன் சொல்லித்தானே, அவரு திருவாரூர்ப் பொண்ணைக் காப்பாத்தினாரு. அதைக் காப்பாத்தினது மாத்திரமில்லே, இவளையும் காப்பாத்துகிறதுக்கு வேறே அந்த ஆளு வந்துட்டான். வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் நேரத்திலே, பாவி பரதேசி வந்து நம்மையே பிடித்துவிட்டானே ! பரதேசி, மோகனாம்பாள், ரமாமணி மூணு பேரும் அடுப்புக் கல்லுப்போலே ஒரு கூட்டுப் போலே இருக்கு. மோகனாம்பாள் விசயத்தை ரமாமணியைக் கேட்டா கொஞ்சம் புரிஞ்சுக்கலாம்' என்று நிச்சயித்தார். ஆனால், புரிஞ்சுக்கிட்டுத்தான் நம்ம என்ன பண்ணப் போறோம்? நம்ப தலைக்கு மேலே மலைபோல நிக்குது' என்று வருந்தினார். அதே சமயம்.

'டேய், நாகலிங்கம் உனக்கு வயதாகிவிட்டதா என்ன? மலை போல வந்ததையெல்லாம் பனிபோல நினைக்கும் நீ, கேவலம், இந்த விஷயத்திற்குக் கலங்குகிறாயே !' என்று அவருக்கு ஊக்கம் கொடுத்தது அவர் அறிவு.

ஆம், அறிவு அவருக்கும் உண்டு. குற்றவாளிகளின் மூளையைப் போல் கூரான மூளை வேறு எதுவும் இல்லை. அதற்கு அவ்வப்போது தோன்றும் கற்பனைகளும், தந்திரங்களும் எந்த ஞானிகளுக்கும் தோன்றியது இல்லை. நல்ல வேளையாக நல்ல காரியங்களில் அவர்களுடைய சிந்தனைகள் செல்வது இல்லை. அப்படி ஒரு நாள் சென்றால் பெரிய குற்றவாளியாக இருந்தவர்கள், அடுத்த நாளே பெரிய ஞானிகளாக மாறிவிடுகிறார்கள். விளக்கில் இருக்கும் கண்ணாடி பழுக்கச் சூடு ஏறி இருக்கிறது. அந்தச் சமயத்தில் ஒரு சொட்டுத் தண்ணீர் பட்டால் அது உடைந்துவிடுவது போல, குற்றவாளிகளின் சூடு ஏறிய சிந்தனை ஒரு சொட்டு ஞானத்தால் உடைந்து போவதும் உண்டு. அது இல்லாமல், உடைந்து பிறரைக் காயப்படுத்துவதும் உண்டு.

நாகலிங்கத்தின் மூளையும் 'லாக்கப்'பில் அப்படித்தான் வேலை செய்தது. அவர் அறிவு தூண்டத்தூண்ட ஆசை தலைக்கேறியது. 'எந்த நிமிஷமும் நாம் இங்கிருந்து தப்பிவிடலாம். எப்படியாவது காவற்காரர்களை ஏமாற்றிவிடலாம். அப்படி ஏமாற்ற முடியவில்லையானாலும் நமக்கு எத்தனையோ வக்கீல்களின் நேசம் இருக்கிறது. அவர்களுடைய மூளை பலமும், நமது பண பலமும் நம்மைக் காப்பாற்றலாம். அப்படியும் காப்பாற்றப்படவில்லையென்றால் என்ன, இரண்டு வருஷம்...! அதை இரண்டே நாளாகக் கழித்துவிட்டு மோகனா வீட்டு வாசற்படியில் போய்க் குதிக்கலாம். 'உலகத்துக்குப் பயந்தவங்களில்ல மானம், வெட்கத்துக்கு யோசனை பண்ணணும்?, நம்பதான் தனிக்காட்டு ராஜாவாச்சே' என்ற தைரியமும் அவருக்கு



வந்தது. அதனால்தான் ரமாமணியின் உள்ளத்தை அவர் பந்தாடிக் கொண்டிருந்தார்.

பெண்கள்தாம் ஆண்களை ஏமாற்றுவார்கள் என்று சொல்லுவார்கள். அது எல்லாம் இரண்டு நாளைக்குத்தான். பெண் உள்ளத்திலே கடவுள் முக்கால் பாகம் தாய்மையை வைத்துவிட்டார். அதுபோகக் கால்பாகந்தான் காமகுரோதம் முதலிய குணங்களை வைத்திருக்கிறார். அவர்கள் நம்மை மிரட்டுவது போலவும், மினுக்குவது போலவும், மயக்குவது போலவும் நமக்குத் தோன்றுவதெல்லாம் நம்முடைய கண்ணின் தவறு. ஆசை என்னும் பூதக் கண்ணாடியின் வேலையே தவிர, அவர்கள் செய்வது கொஞ்சம். ஆனால், நாகலிங்கம் போன்றவர்களின் மூளைதான் அதிகக் கெடுதல் செய்வது.

இந்தத் தத்துவ ஆராய்ச்சிகளில் நாகலிங்கம் இறங்கவில்லை. இருந்தாலும் அவருடைய கூர்மையான மூளைக்கு முன்னே ரமாமணி ஒரு சிறு கீரைத்தண்டு என்பதை அறிந்தார்.

திடீரென்று ரமாமணியின் காதில் யாரோ விசும்பி அழுவது கேட்டது. நாகலிங்கம் இருக்கும் அறைப்பக்கம் திரும்பினாள். அங்கே அவர் அழுதுகொண்டு இருப்பதைக் கண்டாள். 'நல்லா அழட்டும். தன்னை நினைச்சு கவலைப்படறான் போலிருக்கு' என்று எண்ணினாள். நாகலிங்கம் மேலும் விசும்பினார். துண்டால் கண்ணைத் துடைத்துக்கொண்டார். 'இது என்னடா, சனியனா போச்சு. பக்கத்திலே இருந்து அழுதுக்கிட்டு...' என்ற வெறுப்பு அவளுக்கு வந்தது.

"ஏய்யா, எதுக்கய்யா அழுறே?" என்ற வார்த்தையையும் வேறு கேட்டாள். கேள்வி ஆரம்பந்தான் ரொம்பவும் கிண்டலாக இருந்தது. முடிக்கும்போது, அவள் குரலில் கருணை தொனித்தது. நாகலிங்கம் ஒரு முறை அவளைப் பார்த்தார். பார்த்துவிட்டு வாய்விட்டு அழவே ஆரம்பித்தார்.

"ஏய்யா, ஆம்பிளே, அழுறே?" மறுபடியும் அவள் முகத்தைப் பார்த்தார். பார்த்துக்கொண்டே இருந்தார்.

"இந்தாய்யா, உன்னைத்தான் கேக்குறேன்."

"என்னமோ, என் இஷ்டம், நான் அழுறேன்."

"அவத்தைப் பார்த்து அழுதா உன்னை யாரய்யா கேக்கப் போறா? என்னைப் பாத்துல்லே அழுறே? அதனாலேதான் கேட்டேன்."

"இத்தனை நாள் உன்னைப் பார்க்கக் கொடுத்து வைக்கலே. இன்னிக்குத்தான் தெரியுது உன் முகம் எவ்வளவு அழகுன்னு" என்றார் நாகலிங்கம்.

"அட சீ ! கம்பிக்குள்ளே இருந்துக்கிட்டும் உன் சல்லித்தனம் போகலியே !"

"கருப்பாயி, நீ என்னை என்ன வேணாலும் சொல்லு. எப்படி வேணாலும் பேசு. நான் பண்ணின குத்தத்துக்கு இப்பத்தான் வருத்தப் படறேன். உனக்குப் பண்ணின துரோகம் சாமான்யமா? அது என்னைப் பிடிச்சுடுத்து. உம். உன் முகம் இப்ப எப்படி இருக்கு தெரியுமா? அன்னிக்கு கள்ளப்பார்ட் போட்டுட்டு ஆடிவேயே நல்லூர்க் கூத்திலே, அப்படியே இருக்குது. அழகு சொட்டுது."

"இந்தாய்யா போதும் வாயை மூடு."

"முடியாது. என் ஆத்திரம், நான் சொல்றேன். நான் இனிமேல் உன்னைப் பார்க்கப் போறேனா? உன் கிட்டேதான் பேசப் போறேனா! நீதான் இந்தப் பாவியை நினைச்சு ஒரு வார்த்தை சொல்லப் போறியா!"

"என்னய்யா, ஏதாவது ரகசியமா வாங்கிக் கொண்டாந்து சாப்பிட்டுட்டயா?"

"அது எதுக்கு? உன் முகமே போதுமே. உன் முகத்துக்கு முன்னாலே, மொந்தை என்ன பண்ணும்? உன் கண் இரண்டும் என்னைக் கொல்லுது கருப்பாயி!" என்று விசும்பி அழுதார்.

ரமாமணிக்கு என்னவோ செய்வது போலிருந்தது. 'இந்த முரடனுக்குக்கூட மனம் மாறி இருக்குமா? நிசமாகவே நம்மைப் புகழ்கிறானா? காலையிலே கத்தி எடுத்துக் குத்த வந்தவன், மாலையிலே நம்மைப் பார்த்து இப்படி மயங்க முடியுமா? அடேயப்பா! இவன் பொல்லாத ஆளாயிற்றே! இவனை நம்பக்கூடாது' என்று நிச்சயம் செய்துகொண்டாள். வேறு பக்கம் திரும்பி உட்கார்ந்தாள்.

"ஏ புள்ளே—" என்றார் நாகலிங்கம்.

"இந்தா. உன் சங்காத்தம் எல்லாம் வேண்டாம்" என்றாள் ரமாமணி.

"இல்லே, இனிமே கூப்பிடவில்லை. உன்னை அப்படிக் கூப்பிட எனக்கு என்ன அக்குக இருக்குது? என்னமோ அடிபட்ட நாய் வாலை ஆட்ற மாதிரி ஆடறேன். ராத்திரியாச்சன்னா, நீ எங்கேயோ, நான் எங்கேயோ!" என்று ஒரு பெருமூச்சும் விட்டார் நாகலிங்கம்.

"இந்தா புள்ளே!"

"ம்" என்றாள் ரமாமணி.

"கொஞ்சமும் கருணை காட்டாதே. கோர்ட்டிலே உன்னை நிறுத்தி வச்சு கிராசு கேள்வி கேட்பாங்க, உன்னைக் கத்தியாலே குத்த வந்தது யாருன்னு?"

"நான் என்ன பதில் சொல்லப் போறேன்?"

"அதான் கூடாது. கேட்கிற கேள்விக்குப் பக்பக்குன்னு பதில் சொல்லணும்! என் மேலே கொஞ்சங்கூடப் பிரியம் காட்டாதே. நான் அதுக்கு லாயக்கில்லே. உன் அழகைத் தெரிஞ்சுக்காமே, உனக்கு



மோசம் பண்ணினேன் பாரு. அவுங்க கேட்டால் ஆமாம். அழகர் கோவில்லே, பாவி நாகலிங்கம் வந்தான். வீட்டுக்குள்ளே என்னை வச்சு பூட்டினான். அவனே நெருப்பு வச்சுட்டுப் போயிட்டான்னு சொல்லு."

"நான் ஏன் பொய் சொல்லணும்? நான்தானே தப்பிக்கிறதுக்காக இரண்டு துணியிலே நெருப்பு வச்சேன்—"

"உம், இரைஞ்சு பேசாதே. யாராவது கேட்டுடப்போறாங்க. அந்தக் குத்தத்தையும் என் தலையிலேயே போட்டுடு. கடவிலே படகிலே ஏறி, கத்தியாலே குத்த வந்தேன்னு சொல்லு. நான் செய்த பாவத்துக்கு நான் இந்த உலகத்தை விட்டுப் போயிடறேன். நீயாச்சும் தப்பிச்சுக்கிட்டுப் போய்—" நாகலிங்கம் அழுதார். கண்ணைத் துடைத்துக்கொண்டார் தொடர்ந்து, "நல்லூரிலே கொஞ்சம் நிலம் இருக்குது. வீடு. வாசல் ஏதோ கடனுக்குப் போனாலும் உன் ஒரு வயித்துச் சாப்பாட்டுக்குக் காணும். அதை வச்சு நீ சாப்பிட்டுக்கிட்டு இரு. இனி இந்தப் பாவி பெயரை நினைக்காதே. சொல்லாதே. திவசம், திதி, விழாக்கூடப் பண்ணாதே!" என்று சொல்லி மூசு, மூசு என்று அழுதார்.

ரமாமணிக்குத் தர்மசங்கடமாகிவிட்டது. "இந்தா அத்தான், நிசமாகத்தான் பேசிறியா?" என்றாள். அவளுக்கும் துக்கம் நெஞ்சை அடைத்தது.

"இந்தா, இன்னும் ஒருவாட்டி கூப்பிடு. இன்னும் ஒருவாட்டி அப்படி கூப்பிட்டிடு. ஐயோ கருப்பாயி! இவ்வளவு பிரியம் என் மேலே வச்சிருந்தேன்னு தெரிஞ்சா, நான் இத்தனை கொடுமை பண்ணியிருக்க மாட்டேன்" என்று நாகலிங்கம் குழைந்தார்.

ரமாமணியோ, 'ஐயோ, இவ்வளவு நல்லவனாக இருக்கிறானே!' என்று வருத்தப்பட்டாள். அவருடைய பசப்பு வார்த்தைகளைக் கேட்டதும் அவளுடைய பெண் இதயம் இளகிவிட்டது.

இதற்குள் நாகலிங்கம் ஏதோ ஒரு யோசனை செய்து முடிவுக்கு வந்தார்.

"ஆமாம், நீ ஏன் அந்தத் திருவாரூர்ப் பொண்ணு மேலே பிரியம் வச்சே? அந்தக் கழுதை உன் கால் தூசி விலை காணுமா"?

"இந்தா, அப்படிச் சொல்லாதே. அவ உத்தமி."

"என்ன உத்தமப்பொண்ணு? உன்னைப்போல உத்தமப் பொண்ணு யாரு இருக்கா? இந்தப் பாவியைக்கூட நீ மன்னிச்சுட்டியே! நீ இம்புட்டு உபகாரம் செஞ்சியே, அவ உன்னை நாகபட்டினத்திலே வந்து பார்த்தாளா?"

"அப்படி இருக்குமா அந்தப் பொண்ணு? உன்னைப் போல நன்னி கெட்ட ஜாதியா? வந்திச்சு— என்னோட சண்டை போட வந்திட்டு, சமாதானமாகப் போய்க் கை எடுத்துக் கும்பிட்டுப் போச்சு."

"என்ன, உன்னோடு சண்டையா?"

"ஆமாம், இந்த ஆம்பளைங்களுக்கே குரங்குப்புத்திதானே! அங்கு ஒரு கொலைக்கேடன் இருக்கிறான். அந்தப் பொண்ணு அவன் மேலே ஆசை வச்சுட்டா" என்று ஆரம்பித்துச் சண்முகசுந்தரம் - மோகனாம்பாள் தகராறு எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னாள் ரமாமணி.

நாகலிங்கம் எல்லாவற்றையும் ரொம்ப அக்கறையுடன் கேட்டார். மோகனா சண்முகத்தை எக்காலமும் விடமாட்டாள் என்பதை அறிந்தவுடனே, அவர் கோபம் முழுவதும் சண்முகத்தின் மேல் திரும்பியது. 'இப்ப வெளியே இருந்தால் அந்தப் பாவியை ஒழிச்சுவிடுவேனே!' என்று எண்ணினார். இருவரும் திருவாரூரில் ஒன்றாக இருப்பதைக் கேள்விப்பட்டவுடன், அவர்களுக்குள் ஒற்றுமை வந்துவிடக்கூடாதே என்று துடித்தார். ஒரு முடிவுக்கு வந்தார்.

"ஏன் அவனைப்பற்றி இவ்வளவு அக்கறையா கேக்குறே?" என்றாள் ரமாமணி.

"என்ன செய்யறது! அப்படி ஆசைப்படறவங்களைப் பிரிக்க நினைச்சேன். பாரு! அந்தப் பாவத்துக்குத்தான் இப்போ நீ ஒரு கூட்டிலேயும் நான் ஒரு கூட்டிலேயும் அடைபட்டுக் கிடக்கிறோம்" என்று சொல்லிக் கண்ணைத் துடைத்துக்கொண்டார்.

அன்று அவர் ரமாமணியைப் புகழ்ந்த புகழ்ச்சிக்கு எல்லை இல்லை.

ராத்திரி ரயிலில் இருவரும் ஏற்றப்பட்டார்கள். மதுரையிலே கொண்டுபோய், கேஸ் விசாரணை நடத்துவதற்காக இருவரும் கன்னையா நாயுடுவால் அழைத்துச் செல்லப்பட்டார்கள். நாகலிங்கம் பலத்த ரௌடி என்பதால், தனியாக ஒரு மூன்றாம் வகுப்புப் பெட்டியிலேயே அவரையும், ரமாமணியையும் ஏற்றி, கூடவே ஆறு போலீஸ்காரர்கள் காவலுக்குச் சென்றார்கள்.

எட்டு கன்னையா நாயுடுவோ பெரிய கேஸ் பிடித்த சந்தோஷத்தில் இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்துவந்தார். அவருக்கு அரைத்தூக்கம். ஒரு கனவு கண்டார். போலீஸ் மேலதிகாரியிடமிருந்து ஒரு உத்தரவு வந்திருக்கிறது: "நாகலிங்கம் என்கிற பலத்த ரௌடியைப் பிடித்ததற்காக, உம்மை சப் இன்ஸ்பெக்டர் உத்தியோகத்திற்கு உயர்த்தி இருக்கிறது."

உத்தரவைப் படிக்கிறார். ஆனந்தம் தாங்க முடியவில்லை. உடனே தமக்கு வயதாகிவிட்டதே, வேலையை ஒப்புக்கொண்டால், ஒரு மாசத்தில் ரிடையர் ஆக வேண்டுமே என்பதை நினைத்துத் துடிக்கிறார். அப்பொழுது போலீஸ் சூப்பிரண்டெண்டெண்ட் அவர் எதிரில் வந்து, "கன்னையா நாயுடு, நீர் இன்னும் அஞ்சு வருசம் கழிச்சு



ரிடையர் ஆகலாம்" என்று சொல்வது போல் ஒரு தோற்றம். தூக்கத்திலே சூப்பிரண்டெண்டெண்டை பிரத்யட்சமாகக் கண்டவுடன் அவர் அவசரமாக ஒரு சல்யூட் அடித்தார். பக்கத்தில் இருந்த டிரங் பெட்டியின் மேல் தடார் என்று கை விழுந்து "அப்பா" என்று அலறிக்கொண்டே எழுந்தார். அப்பொழுது ஒரு பாட்டுக் கேட்டது.

"என்னடா, நடுராத்திரியிலேகூடவா பிச்சைக்காரங்க!" என்று தமக்குள்ளே சொல்லிக்கொண்டார். ஆனால், பாடியது பிச்சைக்காரன் அல்ல.

ஸ்ரீமதி ஜில்ஜில் ரமாமணிதான் நாகலிங்கத்தின் சந்தோஷத்திற்காகப் பாடிக்கொண்டே வருகிறாள். அந்தப் பெண்ணின் மனத்தை நாகலிங்கம் நொடியில் கவர்ந்துவிட்டார். அவருடைய சத்தியமும் கஷ்டங்களும், தன்னை அவர் எட்டு வருஷம் படுத்திய பாடும், அவளுக்கு ஞாபகமே இல்லை. 'ஐயோ, பாவம், இரண்டு மூன்று குத்தங்களுக்காகப் பிடிச்சுக்கிட்டுப் போறாங்களே, எத்தனை வருஷம் தண்டிப்பாங்களோ?" என்ற பச்சாத்தாபம் வந்துவிட்டது. பாட்டை நிறுத்தினாள்.

"கருப்பாயி, உன் பாட்டை நிறுத்தவே நிறுத்தாதே. கோர்ட்டார் என்னைத் தண்டிச்சதுக்கப்புறம் உன் பாட்டை நான் கேட்க முடியுமா? இல்லே, உன் அழகைத்தான் நான் பார்க்க முடியுமா? இந்தா, எனக்கு ஏதாச்சும் ஆச்சுன்னா நீ அழ மாட்டேன்னு சத்தியம் பண்ணிக் கொடு" என்று அழுபவர்போலப் பாசாங்கு செய்து கொண்டே கையை நீட்டினார் நாகலிங்கம்.

"அப்படியெல்லாம் சொல்லாதீங்க அத்தான். கப்பலுக்கு வாங்கின பணம் அப்படியே வச்சிருக்கேன். உனக்காக என் நகை எல்லாத்தையும் வித்தாவது செலவு பண்ணறேன்."

"வேண்டாம், இந்தப் பயலுக்குப் புத்தியில்லே. இவன் உனக்கு எந்த நிமிஷத்திலும் துரோகம் பண்ணுவான். நன்றி மறந்த பயல். இவனுக்காக நீ சல்லி செலவழிக்கப்படாது. நான் உயில்லே அப்படித் தான் எழுதினேன்."

"என்ன, உயிலா?"

"ஆமாம். நான் சொன்னா நீ கோபிச்சுப்பேன்னு உனக்குத் தெரியாமே எழுதிட்டேன்."

"எப்போ?"

"மத்தியானம். என் சொத்து எல்லாத்தையும் எனக்கு வேண்டியவர்களுக்கு எழுதி வச்சுட்டேன். அதை விக்கவோ, கிக்கவோ கூடாது. அப்படீன்னு ஒரு கண்டிஷன் போட்டுட்டேன்."

"யாருக்கு எழுதி வச்சே?"

"வேறு யாரு இருக்காங்க எனக்கு. நீதான். நீ ஒருத்திதான் எனக்காகக் கண்ணீர் விடுவே. எல்லாத்தையும் உனக்கே எழுதி வச்சுட்டேன்" என்று ரொம்பவும் வருத்தப்பட்டுக்கொண்டே சொன்னார்.

"உன் காசை யாருக்கு வேணுமானாலும் கொடு. எனக்கு நீதான் வேணும்."

"இந்தா, இது கிட்டாத பழம், தட்டிப் பறிச்சால் அதுவே எட்டிக் காயாக மாறினாலும் மாறிவிடும். இந்த நாகலிங்கம் ஆயுசு முழுக்க ஜெயிலிலே கிடக்கிறதுதான் சரி. ஆனால், எனக்கு ஒரு ஆசை."

"என்ன செய்யணும்?"

"கன்னப்பார்ட்டு போட்டுக்கிட்டு நீ பாடுவே பாரு, முதல் நாள் நான் கூத்து மேடையிலே பார்க்கிறபோது பாடினியே, நான் மயங்கினேனே, அந்தப் பாட்டை மாத்திரம் ஒரு தடவை பாடு. என் காது குளிரக் கேட்டுவிட்டு மடியுறேன்."

"வேண்டாம், யாராவது பார்த்தால் சிரிப்பாங்க. போலீசுலே பிடிபட்டவருக்குப் பாட்டு என்னான்னு கேட்பாங்க."

"பிடிபட்டால் என்ன? நீ குற்றவாளியா? என் ரத்தினம் அல்ல! நீ என் சந்தோஷத்துக்கில்லே பாடப் போறே! சும்மா பாடு" என்று சொல்லித் திரும்பி, "எய்யா, பாடப்படாதா?" என்றார் போலீஸ்காரனைப் பார்த்து.

"சும்மா பாடுங்க. ஆனால், ரொம்ப சத்தம் இல்லாமே....." என்றார்கள் அந்தச் சங்கீத ரசிகர்கள். ரமாமணி பாட ஆரம்பித்தாள்.

"தந்தானமடி தந்தானமடி தந்தானக் குயிலே
பலப வந்தேனடி மயிலே
சொகுசா வந்தேனடி மயிலே
தந்தானத்தான் பாட்டுப்பாடி வந்தேனடி மயிலே"

என்று அவள் பாட ஆரம்பித்தவுடனே, "அச்சா, அச்சா" என்றார் நாகலிங்கம். காவலுக்கு இருந்தவர்கள் பெஞ்சப் பலகையிலே தாளம் போட ஆரம்பித்தார்கள். ரமாமணியும் அவர்கள் சந்தோஷத்தைப் பார்த்து, குஷியாகப் பாடினாள்.

"கொஞ்சம் ஆட்டம்" என்றார் நாகலிங்கம்.

"ஐயோ, வேண்டாமுங்க" என்று சொல்லிக்கொண்டே ரமாமணி அவளுடைய ஆட்டத்தை ஆரம்பித்தாள். உற்சாகம் எல்லை கடந்தது. எல்லோரும் ரமாமணியையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது, ஒரு பாலத்தின் மேல் ரயில் போய்க்கொண்டிருந்தது.

"இது என்ன ஆத்திலே தண்ணீயா, பாருங்க" என்றார் நாகலிங்கம். எல்லோரும் ஆற்றைக் குனிந்து பார்த்தார்கள். அப்பொழுது, "தொப்" என்று ஒரு சத்தம் கேட்டது.



"ஐயோ, யாரோ ஆற்றிலே விழுந்துட்டானே!" என்று எல்லோரும் ஆற்றைப் பார்த்தார்கள்.

ரமாமணியும் ஓடித் தண்ணீரைப் பார்த்தாள். திரும்பி வண்டிக்குள் பார்த்தால், ஸ்ரீமான் நாகலிங்கத்தைக் காணவில்லை! வண்டி நிறுத்தப்பட்டது. எல்லோரும் இறங்கித் தேடினார்கள்.

பிறந்து வளர்ந்தது முதல் உலக வாழ்க்கையில் முக்குளித்துப் பழகியவர் நாகலிங்கம். அவர் இந்தக் கால்வாயிலே அகப்படுவாரா? ஜனசஞ்சாரமற்ற ஓர் இடத்தில் கரையேறினார். ராத்திரி முழுவதும் ஒரு மரத்தில் ஒண்டிக்கொண்டிருந்தார்.

அதன்பின் தாடியையும் மீசையையும் கட்டிக்கொண்டு, தலையில் ஒரு தொப்பியை வைத்து மறைத்துக்கொண்டு, அதிராம் பட்டணத்து மரக்காயர் போல ஆட்டம் நடக்கும் தினத்தன்று திருவாரூருக்கே வந்துவிட்டார்.

முதலில் சண்முகத்தை ஒழித்துக்கட்டுவது. நடுவே சிங்கபுரம் மைனர் குறுக்கிட்டால் அவரையும் சாய்த்துவிடுவது. இரவில் மோகனாவின் வீட்டில் புகுந்து அவளையும் தூக்கிக்கொண்டு ஓடிவிடுவது. அவர் உயிரோடு இருப்பதற்குள் ஒருமுறை எப்படியாவது மோகனாவை அடைந்துவிடுவது என்ற குரங்குப்பிடியில் நாகலிங்கம் அலைந்துகொண்டிருந்தார்.

கூட்டத்திற்குள் வந்தால், இந்தப் பரதேசியின் கூரிய கண்கள் தன்னைக் காட்டிக்கொடுத்துவிடுமோ என்ற ஒரே பயத்தில்தான் தள்ளி நின்று பார்த்துக்கொண்டே இருந்தார். மோகனா ஆடிய ஆட்டத்தில் சொக்கினார். சண்முகசுந்தரம் அவளை உதாசீனம் செய்துவிட்டுப் போகும்பொழுது சந்தோஷப்பட்டார்.

ஆனால் மோகனா, அவன் வழியை மறைத்தவுடனே 'சே இவன் உயிரோடு இருந்தால் அந்தப் பொண்ணு எக்காலத்திலும் வேறு யாரையும் திரும்பிப் பார்க்கமாட்டாள்' என்ற நிச்சயத்துக்கு வந்தார். எப்பொழுது சமயம் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டே இருந்தார். சண்முகசுந்தரம் முன்னால் போகவும், பின்னால் மைனர் போகவும், இதுதான் சமயம் என்று கண்டுகொண்டார்.

ஒரே கல்லில் இரண்டு பேரைத் தட்டிவிடுவோம் என்ற எண்ணத்தில் நன்றாகக் குறி பார்த்துத்தான் கத்தியை எறிந்தார். சண்முகம் நடு முதுகில் தைத்து இருக்க வேண்டிய கத்தி, பின்னால் தொடர்ந்து வரும் மைனரின் குரலைக் கேட்டு அவன் திரும்பியதால், கடவுள் அருளால், அவன் தோளில் பாய்ந்தது.

சண்முகசுந்தரம் அலறிக் கீழே விழுந்தவுடன் நாகலிங்கம் 'தீர்ந்தான்!' என்று எண்ணி ஓடி இருளில் மறைந்தார்.

# கண்ணை விழிப்பானா? கவலை தீருமா?



சண்முகசுந்தரம் "ஆ" என்று அலறி விழுந்தவுடனே கூட்டம் முழுவதும் அவன் அருகில் ஓடி வந்தது. அந்த அதிர்ச்சியில் மோகனா துவண்டு விழுந்ததைக் கண்ட வடிவாம்பாள், "மகளே" என்று தாங்கிக் கொண்டாள்.

நட்டுவனாரும் அருகில் வந்து உபசாரம் செய்ய ஆரம்பித்தார். ஆனால் வரதனின் கூரான கண்களுக்குக் கத்தி பறந்து வந்தது தெரிந்ததால், கத்தி வந்த திக்கை நோக்கி ஓடினான். அவனைத் தொடர்ந்து கொலைகாரனைப் பிடிக்க இன்னொருவனும் ஓடினான். அவன்தான் தருமன்.

இருவரும் ஓடி, அந்த மொட்டை மாடியின் மேல் சரசரவென்று ஏறினார்கள். நல்ல பின்னிருட்டு. அங்கு யாரும் இல்லை.

"இங்கிருந்துதானே கத்தி வந்தது?" என்றான் வரதன்.

"என் முட்டுக்காரரே, யார் எறிஞ்சிருப்பாங்க?" என்றான் தருமன்.

"அட நீயா அய்யா? தேடிக் கண்டுபிடிச்சாப்பிலேதான். ஆமா, உங்க நாயனக்காரருக்கு யாராச்சும் எதிரிகள் உண்டா, ஐயா?"

"எனக்குத் தெரிஞ்ச உங்களைத் தவிர வேறு யாருமில்லை"

"அட சும்மா வாயை மூடிக்க ஐயா. எதைப் பேசினாலும் அதருமம். எங்கே அட்வான்ஸ் வாங்கிட்டுப் போகாமல் இருந்திங்களோ! புடிச்சுப் போட்டுட்டான். இறங்கித் தேடிப் பாரு அய்யா!" என்று கூறிக்கொண்டே படி வழியாக இறங்கித் தேடி வந்தான் வரதன்.

அவனுடைய கூர்மையான கண்களுக்கு மாடியின் ஓரத்திலே யாரோ வெள்ளையாகச் சுருண்டு படுத்திருப்பது தெரிந்தது.

"அடி தனாங்கு நதிங்கிணதோம்! தூங்கறாப்பலேயா கிடக்கறே?" என்று மெல்ல நெருங்கினான்.

தருமனுக்குப் பயம் "மத்தளக்காரரே, உஷார்! கையிலே கத்தி வச்சிருக்கப் போறான்" என்று ரகசியமாய்க் கூறினான்.

"அதுதான் எறிஞ்சுட்டானே. தருமண்ணே நீங்க அந்தப் பக்கமா வாங்க. நான் இப்படி வரேன் ரெண்டு பேரும் சேர்ந்து அமுக்கிப்பிடுவம்!"

"ஏன்? நான் கீழே இறங்கிப் போய் போலீசுக்காரனைக் கூட்டியாந்துடறேனே"



"அட, எய்யா பயப்படாதே!"

"பயம் இல்லே, சும்மா ஒரு அச்சம். அவ்வளவுதான்" என்று நடுங்கினான் தருமன்.

இதைப் பொருட்படுத்தாமல் மெல்ல அந்த ஆளின் பக்கம் வரதன் நெருங்கினான். அப்படியே மிருதங்கத்தைத் தூக்குவது போல அந்த ஆளைக் குண்டுக் கட்டாய்த் தூக்கினான்.

"ஐயையோ! பிசாசு! பிசாசு! மைனர்வாள்!" என்ற குரல் கேட்டது. வெடவெடவென்று நடுங்கிக்கொண்டே எழுந்தார் வைத்தி.

"அடச் சீ! நீ பிசாசா, நான் பிசாசா? செய்யறதெல்லாம் செய்துட்டு இங்கேயா படுத்திருக்கே. எழுந்திரு ஐயா" என்று இழுத்தான் வரதன்.

"ஏன் என்னை எழுப்பறே? தூங்கறபோது 'டிஸ்டர்ப்' பண்ணாதே!" என்று கொட்டாவி விட்டார் வைத்தி.

வரதனுக்கு வைத்தி பாசாங்கு செய்கிறார் என்று தோன்றியது. "ஏன் ஐயா அப்படிச் செய்தே? சண்முகசுந்தரம் உனக்கு என்னய்யா செய்தாரு?"

வைத்திக்குச் சண்முகம் குத்தப்பட்டது தெரியாது இருந்தாலும் தம் கௌரவத்தை விட்டுக்கொடுக்காதவர். ஆதலால், "என்ன செய்தானா? மைனருக்குப் போட்டியா ஏன் வர்ரான்?"

"அதுக்காக இப்படியா செய்யறது?"

"ஏன் செய்யக்கூடாது?"

இதற்கு மேல் வரதனால் பொறுக்க முடியவில்லை.

"ஏன் செய்யக்கூடாதா! உம்மைத் தூக்கிக் கீழே போட்டுடறேன் பாரும்" என்று வரதன் வைத்தியைத் தூக்கினான்.

இதற்குள் தருமனுக்கு வந்த பயத்தில் 'கொலை கொலை' என்று சத்தம் போட்டுவிடவே கூட்டம் மொட்டை மாடியை நோக்கி ஓடி வந்தது. வைத்தியோ, தூக்கக் கலக்கத்தில் என்ன விஷயமென்று தெரியாமல் திண்டாடினார்.

கூட்டத்தோடு ஓடி வந்த போலீஸ்காரர்கள், "என்ன, என்ன, அகப்பட்டானா?" என்று அருகில் நெருங்கினார்கள்.

"இந்தா பாருங்க எசமான், கத்தியை எறிஞ்சிட்டுப் படுத்துத் தூங்கறாப்பலே கிடக்காரு" என்றான் வரதன்.

"கத்தி எரியறதா! ஒரு கத்தி விலை என்ன தெரியுமா? அதை யாராவது தூக்கி எறிவாங்களா? ஏன் உங்களுக்குக் 'காமன் சென்ஸ்' இல்லே?" என்றார் வைத்தி.

"ஏன் சார், நீங்களா எறிஞ்சிங்க, சண்முகத்தின் மேலே கத்தியை?" என்றார் போலீஸ்காரர்.

"என்ன, சண்முகத்தின் மேலே கத்தியை எறிஞ்சேனா!" வைத்தி திடுக்கிட்டார்! அவர் தூக்கம் ஓடியது. "அடேடே, எனக்குத் தூக்கம்

வந்தது. கொஞ்சம் ரெஸ்டு எடுத்துக்கலாம்னு நான் இங்கே வந்தேன். ஆனால் எனக்கு முன்னாலே ஒரு தாடிக்காரன் நின்றான். 'ஏன் சார் நாட்டியம் முடிஞ்சு போச்சே, கீழே இறங்கிப் போகலியா'ன்னு கேட்டேன். அதுதான் தெரியுதேன்னு கிண்டலா பதில் சொன்னான். சரி, இவனைக் காலம்பர கவனிப்பம்னு நான் தூங்கிப் போயிட்டேன்."

இந்த விவரத்தைக் கேட்டவுடனே எல்லோரும் தாடிக்காரனைத் தேடினர். ஆலமரத்தின் வழியே வரதன் இறங்கினான். போலீஸ்காரர் இறங்கினார். அவர்கள் மரத்தடியில் இறங்கியதும் வரதனின் காலிலே ஏதோ குத்தியது. கீழே குனிந்து பார்த்தான். அதைக் கையில் எடுத்தான். அது இரு புறமும் கம்பியால் வளைத்துக் காதில் மாட்டிக்கொள்ளும் ஒரு பொய்த்தாடி.

அந்த ஆள் இந்தப் பக்கந்தான் ஓடிப் போயிருக்க வேண்டும் என்று எல்லோரும் நாலா பக்கமும் தேடினர். அவன் அதற்குள் எங்கோ ஓடி மறைந்துவிட்டான்.

திருவிளையாடல் புராணத்திலே ஒரு அழகான கதை உண்டு. ஒரு கல்யாண வீட்டிற்குச் சென்றான் பாண்டியன். அங்கே மேள தாளங்கள் முழங்கின. மணப்பந்தலில் மாப்பிள்ளை அலங்கரிக்கப் பட்டு அமர்ந்திருந்தான். அப்பொழுது காலதேவனின் தூதுவர்களுள் இருவர் பேசிக்கொண்டார்கள். "நான் போய் அந்த மாட்டின் கொம்பில் இருக்கிறேன். தாலி கட்டுகையில் கெட்டி மேளம் முழங்கும் போது, மாடு வெறித்துக்கொண்டு கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடிப்போய் மாப்பிள்ளைமேல் பாய்ந்துவிடும்" என்று அவர்களுள் ஒருவர் பேசும் குரல் கேட்டது. கேட்டது மாத்திரமல்ல. மாடு வெறித்து மணமகனைக் குத்தியது. மணமகன் வீழ்ந்தான். ஆனந்தம் மிகுந்திருந்த அதே இடத்தில் அழுகைக் குரல்கள் கேட்டன. பாண்டியன் விதியின் செயலைப் புரிந்துகொண்டான்.

மாப்பிள்ளை மீது மாடு பாயுமென்று யாரேனும் எண்ணி இருப்பார்களா? விதியின் செயலால், அன்று கல்யாண வீட்டிற்கு வந்தவர்கள் எல்லோரும் கண்ணீரும் கம்பலையுமாக நின்றது போல, இன்று சண்முகசுந்தரத்தைச் சுற்றித் திருவிழாப் பார்க்க வந்தவர்கள் எல்லோரும் நின்றுகொண்டிருந்தார்கள்.

ஒருவரின் முகத்திலேயும் ஈயாடவில்லை. அவன் வாசித்த அமுத கீதம் எல்லோருடைய காதிலும் இன்னும் ஒலித்துக்கொண்டிருக்கையில், அவன் தன் நினைவு இல்லாமல், மயக்கம் போட்டு, ரத்தவெள்ளத்தில் கிடப்பதைப் பார்த்தவர்கள் எல்லோரும் துடித்தனர்.

உலகில் காதால் கேட்டவுடனே பயம் தருவது ஒன்று. பார்த்தவுடனே பயம் தருவது ஒன்று. பாம்பு என்ற சொல்லைக் கேட்டவுடன், எல்லோருக்கும் பயம் ஏற்படும். அதைப் போலவே, ரத்தத்தைப் பார்த்தவுடன் எல்லோரும் பயப்படுவது இயற்கை. சற்று



முன் இருந்த திருநாள் கூட்டம் முழுவதும், எப்படித்தான் இவ்வளவு சீக்கிரத்தில் கலைந்ததோ? ரத்தத்தைப் பார்க்கச் சகியாமல் பலர் புறப்பட்டார்கள். 'சே, என்ன பரிதாபம்' என்ற உணர்ச்சியில் இன்னும் பலர் புறப்பட்டார்கள்.

'நாளைக்குச் சாட்சி, சம்மன் என்று கூப்பிடுவார்களே. வாயிதாவுக்குப் போக வேண்டியிருக்குமே!' என்று பயந்து புறப்பட்டவர்களும் உண்டு. அப்படியிருந்தும் இன்னும் நூறு பேருக்கு மேல கூட்டம் அவனைச் சுற்றிக்கொண்டே இருந்தது. 'ஐயோ, பிழைக்க வேண்டுமே!' என்று எல்லோரும் கண்ணீர் விட்டார்கள். முத்துராக்கும் மைனரும், சண்முகத்தைத் தாங்கிப் பிடித்தபடி, சண்முகசுந்தரத்தின் ஜாகையில் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள்.

எங்கிருந்துதான் இவ்வளவு அக்கறை பிறந்ததோ சிங்கபுரம் மைனருக்கு? அவர் வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை. ஆனால் எத்தனை லட்சம் ரூபாய் செலவானாலும் சரி, சண்முகத்தைக் காப்பாற்றிவிடுவதென்று ஒரு தீவிர எண்ணம் மாத்திரம் அவர் மனத்தில் ஓடிக்கொண்டேயிருந்தது. தாம் சொல்ல நினைத்த ஒன்றைச் சொல்லி முடிப்பதற்குள் அவனுக்கு இம்மாதிரியான ஒரு ஆபத்து ஏற்பட்டதும், அவர் மனம் உடைந்தே போய்விட்டது.

தன்னாலே பிரிக்கப்பட்ட அவ்விருவருடைய நேசமும் மறுபடியும் ஒன்றுகூடாமலேயே போய்விடுமோ? அவர்களுடைய வாழ்க்கையைப் பிரித்த பெரும்பழி நம் மேல் சுமத்தப்பட்டுவிடுமோ? என்று எண்ணும்பொழுதெல்லாம் மைனருடைய உள்ளத்தில், தாங்க முடியாத வேதனை ஏற்பட்டுக்கொண்டிருந்தது. தம்முடைய தங்க நாதஸ்வரத்தைச் சண்முகசுந்தரம் திருப்பிக் கொடுத்ததும் 'உனக்கு சங்கீதத்தில் ஞானம் அதிகமோ' என்று அவன் கேட்டதும் அவருக்குக் குற்றமாகத் தோன்றவில்லை. தாம் ஏதோ ஒரு பெரிய குற்றத்தைச் செய்துவிட்டது போலவும், தம்மால்தான் சண்முகசுந்தரத்துக்கு இந்த ஆபத்து வந்தது போலவுந்தான் அவர் துடித்தார்.

பண்பாடும், நல்ல படிப்பும், இள வயதும், பெரும் செல்வமும் உடைய அந்த மனிதர் சற்று நேரத்திற்கு முன்வரை 'மைன'ராக இருந்தார். ஆனால் மோகனாவின் கண்ணீரும், சண்முகசுந்தரத்தின் தன்மானமும் அவரை 'மேஜ'ராக்கிவிட்டன. சண்முகத்தின் நிலையில் தாம் இருந்திருந்தால் என்னென்ன செய்திருப்போம். எத்தனை அடியாள்கள் விளையாடியிருப்பார்கள். பணம் என்ன கொடுமை செய்திருக்கும் என்ற எண்ணத்திலே தம்மையே எடை போட்டுக் கொண்டார் மைனர்.

பாரி நாதஸ்வரம் பழகி வெற்றிக்குத் தயார் செய்த அதே வீட்டில் கட்டிலில் கிடத்தப்பட்டான் சண்முகம். "அம்மா— அப்பா" என்று அவன் துடித்தான். முத்துராக்கு, தருமன் எல்லோரும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டனர். பரதேசியார் சண்முகத்தின் பக்கத்தில்

நின்றார். போலீஸ்காரர்கள் வந்து, ஒரு பக்கத்தில் கூடி, அந்தக் கத்தியைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டு அதை அளப்பதும், எல்லோரிடமும் கையெழுத்து வாங்குவதும், அவர்களுக்குள்ளேயே ஏதோ பேசிக்கொள்வதுமாக, வழக்கு விவரங்களைச் சேகரித்துக் கொண்டு இருந்தார்கள். ஆனால், மைனரோ உடனே டாக்டரை அழைத்துவர ஆள் அனுப்பினார்.

'லோகல் பண்ட்' ஆஸ்பத்திரி டாக்டர் ஓடோடி வந்தார். பாவம், அந்த டாக்டர் என்றைக்குத் திருவாரூருக்கு வந்தாரோ அன்று முதல் அவருக்கு ஓய்வு.

அந்தக் காலத்தில் வைட்டமின் மாத்திரைகள் வரவேயில்லை. ஊசி குத்தும் பழக்கங்கூட அப்பொழுதுதான் ஆரம்பித்தது. எதற்கெடுத்தாலும் மருந்து சாப்பிடும் வழக்கமும் இல்லை. ஏதோ, காலில் நிலைப்படி இடித்தது, செருப்புக் கடித்தது போன்ற காயங்களுக்குத்தான் வைத்தியம் பார்த்திருக்கிறாரே ஒழிய, கத்திக்குத்து போன்ற காயங்களை அந்த வட்டாரத்தில் அவர் கண்ணால் கண்டதே இல்லை.

'நாம் வக்கீலுக்குப் படித்திருக்கக்கூடாதா? ஏன் டாக்டர் படிப்புப் படித்தோம்? இந்த ஜில்லாவில் வழக்கெல்லாம் காகிதத்தில்தானே நடைபெறுகிறது!' என எண்ணினார். ஊர் மக்களுக்கும் அவர் சேவை அதிகமாகத் தேவையில்லை. காய்ச்சல் வந்தால், மூன்று நாளைக்கு மருந்து சாப்பிடமாட்டார்கள். எதற்கும், பார்த்துக்கொள்வோம் என்றுதான் சொல்வார்கள். அக்காலத்தில் மக்கள், சாவுக்கு அஞ்சவில்லையாதலால், அந்த டாக்டருக்குப் பிழைப்பும் அதிகம் இல்லை. சர்க்கார் சாட்சிக்காக வேண்டி, வருஷத்தில் இரண்டு தடவை அல்லது மூன்று தடவை உயிரற்ற சில சடலங்களை அவர் கவனிக்க வேண்டிவரும். அதைத் தவிர, வேறு கேசுகள் அவருக்குக் கிடைப்பது இல்லை.

இன்றைக்குச் சண்முகத்தைக் கண்டவுடனே, அவருக்கு உள்ளம் துள்ளியது. உற்சாகம் மேலிட்டது. உள்ளே நுழையும்போதே "எல்லோரும் வெளியே போங்க; கூட்டம் போடாதீர்கள்!" என்று அதிகாரம் செய்துகொண்டே நுழைந்தார். பிறகு, "எல்லாம் ஒண்ணும் கவலைப்படாதீங்க. அவர் உடம்புக்கு நான் 'காரண்டி'. ஆனால், அவருடைய கையைப் பத்தி நான் உத்தரவாதம் சொல்ல முடியாது. கத்தியிலே எந்த விஷம் இருக்கிறதோ! அல்லது துருப்பிடித்து இருந்தாலும் போதும், பெரிய ஆபத்து உண்டாகிவிடும். எதற்கும் பார்த்துச் சொல்றேன். ஒரு சமயம் கையை எடுக்க வேண்டி வந்துவிட்டால், நீங்கள் கவலைப்படக்கூடாது" என்று அதிகக் கெட்டிக்காரத்தனத்துடன் ஒரு முன் எச்சரிக்கையும் கொடுத்தார். இதைக் கேட்டவுடன் தருமனும் முத்துராக்குவும் ஏக காலத்தில் "ஐயோ" என்றார்கள். மெல்ல அவர் பக்கத்தில் வந்து நின்றார்கள்.



"எங்களுக்கு உங்க வைத்தியமே வேண்டாம்! நீங்க போனாப் நாங்க எப்படியாச்சும் பாத்துக்குறோம்" என்று கோபித்தான் முத்துராக்கு.

"அது எப்படி அய்யா, துணிஞ்சு கையை எடுக்கலாம்னு சொல்லலாம்? நாளைக்குத் தம்பி நாதசுரம் வாசிக்காட்டி நீர் வாசிப்பீரோ?" என்று சத்தம் போட ஆரம்பித்தான் தருமன். ஆனால் அந்த இங்கிலீஷ் வைத்தியர் இதை எல்லாம் கவனிக்கவில்லை. சண்முகத்தின் உடலைப் பரிசோதித்தார். அவர் முகம் அடிக்கடி மாறியது.

"ரத்தம் நிரம்பவும் சேதமாயிருக்கிறது. காயம் ரொம்ப ஆழம். எதற்கும் மருந்து வைத்துக் கட்டுகிறேன். என் சொல்படி நீங்கள் கேட்க மறுத்தால் என்னால் வைத்தியம் பார்க்க முடியாது" என்று சொல்லி மருந்தைக் கட்டிவிட்டுக் கையில் பெட்டியை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். தருமன் அவரை வழி மறித்தான். "அப்படியானா கையை எடுத்துவிடுவீங்களா?" "அது இப்பச் சொல்ல முடியாது. சாயங்காலம் சொல்றேன்" என்று கூறி 'டக்டக்' என்று புறப்பட்டார் டாக்டர்.

சண்முகசுந்தரத்துக்கு இன்னும் தன் நினைவு வரவில்லை. டாக்டரின் சொல்லைக் கேட்ட முத்துராக்கு ஸ்தம்பித்து நின்றார். அந்த வார்த்தையையே அவரால் நினைக்க முடியவில்லை.

"சண்முகத்தின் கையை எடுப்பதா? ஐயோ, நாதஸ்வர உலகம் இருண்டுவிடுமே. அவன் வாசிப்பை இழந்து அவன் இப்போது பிழைத்தாலும் பிறகு அதிக நாள் வாழ மாட்டானே. அவனுக்குப் பக்க வாத்தியம் வாசித்த நாம் இனி யாருக்கு வாசிப்பது? எதற்கு வாசிப்பது? அவன் கையோடு நம் வாழ்வும் போகட்டும். இனி அந்தக் காம்போதியையும் கல்யாணியையும் எவர் வாசிப்பது? சங்கீதத்தைத் தெய்வம் என்கிறார்களே, அது பொய்யா? சண்முகத்தைக் காப்பாற்றாத சங்கீதம், என்ன சங்கீதம்! அமுதம் வடியும் அதை இனி யார் வாசித்து உலகம் கேட்கப்போகிறது! ஏகலைவனிடம் விரலை வாங்கியது போல், இந்த டாக்டர் சண்முகத்தின் கையையே காணிக்கை கேட்கிறாரே. முருகா! சண்முகத்தைக் காப்பாற்று. உன் கோயிலுக்கு வரச்சொல்லுகிறேன். கதிர்காமத்தில் ஆடி வேலுக்கு வந்து வாசிக்கச் சொல்லுகிறேன். அவன் கையைக் காப்பாற்று. அதன் மூலம் என் கையைக் காப்பாற்று" என்று கண்ணீர் கரை புரண்டோட எல்லாத் தெய்வங்களையும் கையெடுத்தார் முத்துராக்கு.

தருமன் ஒரு பக்கம் எதையோ சொல்ல ஆரம்பித்தான். "முத்துராக்கு, நீங்க கொஞ்சம் பார்த்துக்கோங்க. நான் வடம்போக்கித் தெருவிலே போயி அந்த வள்ளுவனைக் கூட்டியாந்துடறேன்."

"அதான், மருந்து வச்சுக் கட்டியிருக்காரே! வள்ளுவன் எதுக்கு அண்ணே?"

"அப்படிச் சொல்லாதீங்க முத்துராக்கு. உங்களுக்கு அந்த வள்ளுவன் வைத்தியம் தெரியாது. இந்த இங்கிலீசு வைத்தியர் வந்து பார்த்தாரே, வாயைத் திறந்து ஏதாவது நல்ல வார்த்தை சொன்னாரா?"

"நீதான் ஏதாவது வாயைத் திறந்து அவர் கிட்ட கேட்டியா?"

"அவருகிட்டே எப்படிங்க கேக்கிறது? அவருதான் வரப்பவே சிடுசிடுன்னு வராரே. ஒரு மனுஷன் வைத்தியம் பாத்தா, பக்கத்திலே இருக்கிறவங்க கிட்டேயும் ஒரு ஆறுதல் சொல்லணும்னு கிடையாது."

"வடம்போக்கி வைத்தியரு என்ன அண்ணே செஞ்சுடப்போறாரு?"

"அப்படியெல்லாம் இல்லிங்க, தவுல்காரரே. ஜல்லிக்கட்டுக் காளை முட்டி, ஒருத்தனுக்கு குடலே வெளியே வந்துவிட்டது. உடனே அந்த வள்ளுவனைக் கூட்டியாந்தோம். அப்படியே தலைகாணியிலே பஞ்சு அமுக்கிற மாதிரி குடலை ஒரே அமுக்கா உள்ளே அமுக்கி ஒரு தையல் போட்டுட்டுப் போனானுங்க. அன்னிக்குக் கட்டின காரச்சீரலைதான். காயம் ஆறின பிறகுதான் அவுத்தாங்க. நீங்க கொஞ்சம் பார்த்துக்குங்க. நான் போயி கூட்டிக்கிட்டு வர்ரேன். இடையிலே டாக்டர் வந்தா கையை எடுக்க விட்டுவிடாதீங்க. உங்களைக் கையெடுத்துக் கும்பிடறேன்" என்று கூறிப் புறப்பட்டு விட்டான் தருமன். முத்துராக்குவுக்கும் தருமன் சொல்வது நியாயமென்று பட்டது. அப்போது இதுவரையில் சும்மா இருந்த பரதேசியார் தருமனைத் தடுத்தார். "தம்பி வேண்டாம். பார்க்க வேண்டிய வைத்தியத்தை டாக்டர் பார்த்திருக்கிறார்."

"அந்த டாக்டரு என்ன சொன்னாரு பாத்திங்களில்லே. கையை எடுக்கணுமாமில்லே."

"அப்பா, கையைக் கொடுத்தவன் ஒருவன். அதை அவன் உத்தரவின்றிப் பிறரால் எடுக்க முடியாது. இன்னும் எத்தனையோ ஆலயங்களில் உள்ள மூர்த்திகள் அவன் இசையைக் கேட்கக் காத்திருக்கின்றன. அந்தத் தெய்வங்களுக்கு இல்லாத கவலை நமக்கு எதற்கு?"

"காயம் ஆறி, புது ரத்தம் ஊறும்வரை, நாம் அவனை ஜாக்கிரதையாய்க் கவனித்துக்கொண்டால் போதும்" என்று சொல்லிவிட்டு, அவரும் சண்முகத்தின் தலைமாட்டிலேயே உட்கார்ந்துகொண்டார்.

அன்று இரவு முழுவதும் ஒருவரும் தூங்கவில்லை. சண்முகம் வலியால் துடிக்கும்போதெல்லாம் பரதேசியார் "முருகா" என்று அவனைத் தடவிக்கொண்டே இருந்தார். மைனரோ, தம் கையில் ஒரு விசிறியை வைத்துக்கொண்டு அவனுக்கு விசிறியவண்ணம் இருந்தார். காலை ஏழு மணியாயிற்று. பரதேசியார் சண்முகத்தின் நாடியைப் பிடித்துப் பார்த்தார். "கவலை ஒன்றுமில்லை. சற்று நேரம் நீங்கள் எல்லோரும் உறங்குங்கள். சண்முகத்தைத் தொந்தரவு செய்ய வேண்டாம். அவன் விழித்துக்கொண்டால் டாக்டர் சொல்லிய எதையும் அவனிடம் சொல்ல வேண்டாம்" என்று எச்சரித்துவிட்டு, அனுஷ்டானங்களை முடித்து வர வெளியே சென்றார். தருமன் அவரிடம் அவசரமாக ஓடினான்.



"முழிச்சுக்கிட்டா, குப்பு சிப்பு ஏதனாச்சும் கொடுக்கலாமா?" என்று கேட்டான்.

"ஒன்றும் கொடுக்க வேண்டாம். நல்ல புழுங்கலரிசிக் கஞ்சி மாத்திரம் போட்டுக் கொடுங்கள்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

தருமனுக்குச் சண்முகத்தின் மேல் உயிர். அவன் அப்படி மயங்கிக் கிடப்பதை அவனால் பார்க்க முடியவில்லை. 'தம்பி எப்பொழுது விழிக்கும்? வாய் திறந்து ஒரு வார்த்தை பேச மாட்டானா?' என்ற எண்ணத்தில் சண்முகத்தின் முகத்தைப் பார்த்துக்கொண்டே நின்றான். முத்துராக்குவோ, கண்ணீரும் கம்பலையுமாகச் சண்முக சுந்தரத்தின் கையைக் கடவுள் காக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டே இருந்தார்.

இப்படி எல்லோரும் அவரவர்கள் கவலையைப் பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர, ஒருவராவது மைனரை "எழுந்திருங்கள், பல் தேய்த்துவிட்டு வாருங்கள்" என்றுகூடச் சொல்லவில்லை. அந்த வீட்டுக்குள்ளே அவர், அந்நியன் போல் கருதப்பட்டார். அந்நியன் போல் என்ன? ஒரு விரோதி போலவே கருதப்பட்டார். ஆனால் அவரோ, இந்த உதாசீனங்களையெல்லாம் பொருட்படுத்தவில்லை. 'எப்பொழுது சண்முகசுந்தரம் விழிப்பான்? எப்பொழுது அவனிடம் தம் எண்ணத்தைச் சொல்லலாம்' என்ற ஒரே நோக்கத்தில் அமர்ந்திருந்தார். காலை பத்து மணியிருக்கும் வைத்தி உள்ளே வந்து சேர்ந்தார்.

"என்ன மைனர்வாள்! இங்கேயா இருக்கிறேள்? நான் உங்களை ஊர்முழுதும் தேடறேன்," என்று ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்தார்.

"வைத்தி, தயவு செய்து சத்தம் போடாதீர். அதோ சட்டைப் பையில் மணிபர்ஸ் இருக்கிறது. உமக்கு ஏதாவது ரூபாய் வேண்டுமானால் எடுத்துக்கொண்டு போகலாம்."

"எனக்கு ரூபாய்க்கு என்னன்னா, ஒண்ணும் அவசரம் இல்லை. நீங்க இன்னும் பல் கில் தேய்க்கலே போலிருக்கே! சின்னசாமி கடையில் இளம் வெந்நீரா போடச் சொல்லி இருக்கிறேன். அங்கு போய் ஸ்நானம் பண்ணிவிட்டு வந்திடுங்க" என்று வருந்தி அழைத்தார்.

"பாதகமில்லே, கொஞ்சம் காப்பி மாத்திரம் அனுப்பும்" என்றார் மைனர்.

"நீங்க என்ன வைத்தியமா பண்ணறீங்க? முழிச்சிக்கிட்டா சொல்லி அனுப்பச் சொல்லிட்டு வாங்களேன்."

"வைத்தி, நீங்கள் போகலாம்" என்றார் மைனர்.

"இந்தப் பணக்காரர்களே இப்படித்தான். அவாளுக்கா இஷ்டமிருந்தா கூப்பிட்டுவச்சுப் பேசுவா. இஷ்டமில்லேன்னா திரும்பிக் கூடப் பார்க்க மாட்டாங்க"

"சரி, நீரும் திரும்பிப் பார்க்காமலே போகலாம்" என்று கடுகடுப்பாக மைனர் சொல்லவே வைத்தி அங்கிருந்து நடையைக் கட்டினார். ஆனாலும் அவசரத்துக்காகக் கொஞ்சம் ரூபாயை மைனர் சட்டைப்பையில் இருந்து எடுத்துப் போனார்.

தருமன் முத்துராக்கு இருவரையும் மைனர் அருகில் அழைத்தார்.

"நீங்க இரண்டு பேரும் போய்க் காப்பி சாப்பிட்டு வாங்க. நான் இருக்கேன். நீங்க வந்த பிறகு நான் போகிறேன்" என்று சொன்னார் அவர்.

"எஜமான் அப்படிச் சொல்லப்படாது. நாங்க இருக்கோம். தம்பி படுத்து இருக்கிறபோது எங்களுக்கு என்ன காப்பி வேண்டியிருக்கு" என்று தருமன் சொல்லிவிட்டு அவர்களும் பக்கத்திலே அமர்ந்தார்கள். மைனரோ, சண்முகம் எப்பொழுது விழிப்பான் என்று காத்திருந்தார்.

✦ ✦ ✦

வடிவாம்பாள், வீட்டில் இரவு நெடுநேரம்வரையில் விழித்திருந்தாள். தன் மகள் அயர்ந்து தூங்குவதைக் கண்டு, சற்று போய் தலைசாய்க்கலாம் என்று படுத்தாள். அவளுடைய மனத்திலே ஆயிரம் எண்ணங்கள் தோன்றின. 'சண்முகத்தை யார் தாக்கியது? எதற்காகக் கத்தியை எறிந்தான்? அந்த வைத்தி அன்றைக்குக் கோவில் வாசலிலே 'சண்முகசுந்தரத்தைத் நீத்துக் கட்டுவதாக நிச்சயம் செய்துவிட்டோம்' என்று சொன்னாரே! அவர்தம் ஆட்களை வைத்துச் சண்முகத்தைக் குத்தச் சொல்லி இருப்பாரோ?' என்று எண்ணியவுடன் அவளுக்கு உடம்பெல்லாம் நடுங்கியது.

ஒரு பெருமூச்சு விட்டாள். உடனே இன்னொரு யோசனை வந்தது. "இந்தப் பொண்ணு அவ்வளவு நகையையும் கழட்டி வச்சுடுத்தே. நாளைக் காலையிலே வைத்தி வருவதாகச் சொல்லி இருக்கிறாரே! பதினாறாயிரம் ரூபாயைக் கையிலே கொடு என்று கேட்டு, அவ்வளவு நகைகளையும் வாங்கிக்கொண்டு போய்விட்டால் என்ன செய்வது? நகையைக் கொடுக்காவிட்டால் நம்மிடமும் அவன் கைவரிசையைக் காட்ட ஆரம்பிப்பானே!" என்று எண்ணியபோது அவளுக்குக் கையும் காலும் வெலவெலத்துவிட்டன. உடம்பெல்லாம் வியர்த்தது.

'அடேயப்பா, ஒவ்வொரு நகைக்கும் என்ன பாடுபட்டேன்! ஒரு கச்சேரியில் தங்கத்தை வாங்குவேன், இன்னொரு கச்சேரியிலே கிடைத்த பணத்திற்கு வைரமும் சிவப்புக் கல்களுமாக வாங்குவேன்.



அஞ்சு, பத்தாகக் கூலியைக் கொடுத்து ஆசாரியிடம் அண்ணா தம்பி என்று சொல்லி, நான் தவறாமல் பட்டறையில் காத்துக் கிடந்து நகைகளைச் செய்தேனே! இவளுக்குத்தான் என்ன தைரியம்! நகையைக் கழட்டி, வரதன்கிட்டே கொடுத்து, வித்துவிட்டு வா என்று சொன்னாளே! என்னிடம் ஒரு வார்த்தை கேட்டாளா? வரவர, பெத்த தாய் என்ற எண்ணங்கூட இல்லாமல் போய்விட்டதே.

நாளைக் காலை அந்த வைத்தி வந்து கத்தியும் கையுமாய் நின்றால் அவ்வளவு நகைகளையும் அள்ளி அவனிடம் கொடுத்துவிட வேண்டியதுதானே! சாமி, ஆண்டவனே, இந்த வைத்தியின் பேரிலே ஒரு சந்தேகம் வரப்படாதா! என்கிட்டே அவர் சொன்ன வார்த்தையை இன்னும் இரண்டு பேருகிட்டே அவரே சொல்லி இருக்கப்படாதா? போலீஸ்காரர்கள் இப்போதே அவரைப் பிடித்துக்கொண்டு போய்விட்டால் நாளைக்கு நகையைக் கேட்க வர மாட்டாரே' என்ற அற்புதமான யோசனை வரவே, இன்னொரு பெருமூச்சு விட்டாள்.

களவு போன நகைகளுக்குப் பதிலாகத் தன் செல்வத்தை அள்ளிக் கொடுக்க மனம் வரவில்லை. இந்தப் பயம் தெளியவே நெடுநேரம் ஆகிவிட்டது. கடைசியில் ஒரு சந்தோஷமும் வந்தது. "என்ன இருந்தாலும் என் மகள் கெட்டிக்காரிதான். அவள் கற்ற வித்தையெல்லாந்தான் காட்டினாள். அதுக்கு அவன் விட்டுக்கொடுத்தானா?

'நாளைக்குத் தஞ்சாவூர், கும்பகோணம், மன்னார்குடி எங்கே பார்த்தாலும் இதே பேச்சாகத்தானே இருக்கும். 'வடிவாம்பாள் மகள் திருவாரூரிலே தில்லானா ஆடினா பாரு, அவ்வளவு அற்புதமாக ஆடிவிட்டாள்' என்றுதானே எல்லோரும் பேசிக்கொள்வார்கள். 'நீ முந்தி, நான் முந்தி' என்று கச்சேரி பேச வருவார்கள். இனிமே அதிகமாகக் கச்சேரிகள் ஒதுக்கப்படாது. நாலு கச்சேரிக்குக் கேட்கற பணத்தை ஒரு கச்சேரிக்குக் கேட்டுவிட்டால் போகிறது! கேட்பதைக் கொடுத்தா ஆடறது, இல்லாட்டி முடியாதுன்னு சொல்றது! இப்போது கிடைத்திருக்கிற கியாதிக்கு மாதத்துக்கு முப்பது தேதி போதாதே! — என்னமோ நம்ப கண்ணை மூடறதுக்குள்ளே, கும்பகோணத்திலேயாவது தஞ்சாவூரிலேயாவது, இல்லே இரண்டு ஊரிலுமாவது ஒரு பெரிய வீட்டைக் கட்டிடணும். நம்ப செய்கிறதைச் செய்திடுவோம். அப்புறம் பொண்ணு இஷ்டம்' என்று எண்ணியவுடனே ஒரு நீண்ட பெருமூச்சு அவளையும் அறியாமல் வந்தது.

'என்ன இருந்தாலும் பணம் அவசியம் வேணும். பணம் இல்லாதவங்களை யாரு மதிப்பாங்க? நாளைக்கு நம்ப பொண்ணு ஒத்தை வைரத்திலே பத்துக் காரட்டிலே ஒரு வைர மோதிரம் போட்டிருந்தா நமக்குத்தானே கௌரவம். அதுக்குத்தான் என்ன தெரியும்? நேத்திக்குப் பொறந்த பொண்ணு. என்னமோ உடம்பு

வளத்தியா வளர்ந்திருக்கே ஒழிய, நல்லது கெட்டது எல்லாம் தெரிகிற வயசா இது? இன்னிக்குவரை நம்ப சொன்னதைத் தட்டியதே இல்லை. எந்த ஊரில் கச்சேரி, என்ன 'ரேட்'டுப் பேசி இருக்கே என்று ஒரு வார்த்தை நம்மைக் கேட்பது உண்டா? அடி, நான் பெத்த மகளே, நீ நல்லா இருந்தா போதும்' என்று எண்ணிக்கொண்டாள்.

அவளுடைய ஆனந்தக் கண்ணீர் தலையணையை நனைத்தது. மகள் என்ன செய்கிறாள் பார்ப்போம் என்று உள்ளே போய்ப் பார்த்தாள். மோகனா அயர்ந்து படுத்திருந்தாள். மகளைத் தடவிக் கொடுத்தாள். கால்மாட்டில் உட்கார்ந்துகொண்டு ஐயோ, ஆடின கால் வலிக்குமே என்ற வாஞ்சையில், மகளின் பூப்போன்ற மெல்லிய பாதத்தை, தாய் தன்னுடைய அன்புக்கரங்களால் லேசாக அமுக்கி விட்டாள். உள்ளங்காலைத் தடவினாள். 'ஐயோ, கால் கன்னிப் போய்விட்டதே' என்று எண்ணினாள்.

பக்கத்தில் இருந்த பெட்ரூம் லைட்டை எடுத்துக்கொண்டு வந்து, மகளின் காலை ஒரு முறை பார்த்தாள். 'எங்கிருந்தோ ரத்தம் வந்ததே' என்ற எண்ணத்தில் பார்த்துக்கொண்டே வரும்போது, மோகனாவின் கண்டுவிரலில் நகம் லேசாகப் பெயர்ந்து இருப்பதைக் கண்டாள். அடக்க மாட்டாத அழுகை வந்தது. மகள் காலைப் பிடித்துக்கொண்டு மூசு மூசு என்று அழுதாள் வடிவாம்பாள். அவளுடைய கண்ணீர் மோகனாவின் கால் மீது சிந்தியது. மோகனா காலை இழுத்துக் கொண்டு ஒரு பெருமூச்சு விட்டாள். பக்கத்திலே நின்று மகளின் முகத்தைப் பார்த்தாள். மோகனாவின் நெற்றி வியர்த்திருந்தது.

"ஏன் இப்படித் தூங்குகிறபோது நெற்றி வியர்க்குது? கல்யாணம் ஆகாத பெண்களுக்கு வியர்க்கும் என்று சொல்லுவாங்களே! என்ன, சொப்பனம் கிப்பனம் கண்டாளோ என்னவோ? என்ன வேண்டி யிருக்குது கல்யாணம்? கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு என்ன சுகத்தைக் கண்டாங்க? நாலு காசைச் சேத்துக்கிட்டு, விற்க வாங்க சுதந்திரம் இல்லாமே, கொஞ்சம் நிலத்தை வாங்கிப் போட்டுப்பிட்டு நாமே நல்ல பணக்காரனா பாத்து ஒரு கல்யாணத்தைப் பண்ணி வச்சுட வேண்டியதுதான். உம், இந்தப் பாழும் மைனர் செய்தி ஒண்ணும் புரியவில்லையே' என்று எண்ணினாள். மகள் முகத்திலே ஏதோ ஏக்கம் பொங்குவதைக் கண்டாள். மோகனாவின் வாய் ஏதோ முணுமுணுத்தது. 'தூக்கத்திலேகூட அம்மா நினைவுதான் அதுக்கு' என்று எண்ணினாள் வடிவாம்பாள், ஆனால் மோகனா முனகியது, 'அவர்— அவர்' என்ற வார்த்தைகள்.

"சீ, தூக்கத்திலேகூட அவன் நினைப்புத்தானா? நல்லா வந்து சேர்ந்தான். இந்தச் சண்டாளப் பயலை ஏன் நினைக்கிறாள்? அவனுக்கு இரக்கமிருந்தா, இப்படி ஆட விட்டிருப்பானா? ஐந்து நடை தில்லானாவை அல்ல தயார் பண்ணிக்கிட்டு வந்திருக்கிறான்! ஏன், பத்து நடையிலேதான் பண்ணிக்கிட்டு வரட்டுமே! இந்த



வடிவாம்பாள் மகளை வெல்ல முடியுமா?' என்று எண்ணிக் கொண்டே இருக்கும் போது மோகனா விழித்தாள்.

"அம்மா, அவரு எப்படி இருக்காரு அம்மா?" என்று பதறிக் கொண்டே கேட்டாள்.

"ஆமாம், நான் தபால் ஆபீசு வச்சிருக்கேன் பாரு ஊரிலே எவன் எவன் எப்படி இருக்கான்னுதான் பார்த்துக்கிட்டு இருக்கேன்" என்றாள் வடிவாம்பாள்.

"இப்போ நான் எங்கேம்மா இருக்கேன்? எனக்கு என்னவோ பண்ணுது அம்மா" என்றாள் மகள்.

"என்னடியம்மா செய்யுது? ஐயோ, என்னமோ பேசறயேடி" என்று அருகில் வந்து, மோகனாவின் கண்ணைப் பார்த்தாள் வடிவாம்பாள். மோகனா மிரள மிரள விழித்தாள்.

"அவரு எப்படியிருக்காரு அம்மா? ஐயோ கத்தி— கத்தி" என்று அலறினாள் மோகனா.

'ஏன் கண்ணு பயந்துக்கிட்டியா? எனக்கு அப்பவே நீ மயக்கமா விழுகிறபோதே தெரியும். தூங்கம்மா, தூங்கு"

"அம்மா, எனக்குத் தூக்கம் வரலையம்மா. அவர் உடம்பில் கத்தி பட்டதே, என்ன ஆச்சு?"

'இந்தா மோகனா, கத்தி பட்டா என்ன? தில்லானா வாசிச்ச அந்தக் கையிலேதானே பட்டது! உன்னை மனுசின்னு நினைச்சானா? வாசிச்சு உன் காலை ஒடிக்கிறேன்னு சொன்னானில்லே! அதுக்குத் தான் கடவுள் அவனுக்கு அதே கையிலே கொடுத்தாரு."

'அப்படிச் சொல்லாதே அம்மா!"

"ஏண்டி சொல்லப்படாது? என் பெத்த வயிறு பத்தி எரியுதடி."

"அம்மா, உன் கோபத்துக்கு இதுதானா நேரம்? அவரு விழித்துக் கொண்டாரா? காயம் எப்படி இருக்கு? நான் போறேன் அம்மா! நான் போறேன்."

"எங்கே போகப் போறே? இந்த வடிவாம்பாளைத் தாண்டிக்கிட்டு தான் நீ போகணும்."

"அம்மா, டாக்டர் வந்து பார்த்தாரா? அவரையும் இங்கேதானே கூட்டிட்டுக்கிட்டு வந்திருக்கே?"

"தூங்கு கண்ணு, உனக்கே இப்போதான் நினைப்பு வந்திச்சு. நமக்கும் அவனுக்கும் என்ன அம்மா வச்சு இருக்குது? அவன்தான் உன்னைக் கேவலமாய்ப் பேசினானே!"

"இல்லேம்மா, அவர் என்னைக் கேவலமாப் பேசவில்லை. அவர் சந்தேகம் என்னைக் கேவலமாய்ப் பேசியது. இப்போது எங்கே அம்மா இருக்கார் அவர்?"

"பாரி நாயனம் பழகின வீட்டிலே, படுத்த படுக்கையா இருக்கிறான். நான் ஒண்ணு சொல்லறேன் மோகனா, இந்தக் கலை

காலத்திலே மாத்திரம் செய்தாருக்குச் செய்தது இந்த ஜன்மத்திலே உண்டு!"

"அம்மா, நீங்க சும்மா இருக்க மாட்டீங்களா? ஏன் அவரை இப்படிக் கரிக்கிறீங்க?"

"கண்ணிலே எண்ணெய் பட்டா அப்படித்தானடி கரிக்கும். என் கண்ணல்ல நீ. அவன் உடம்பைப்பத்தி எனக்கு அக்கறையில்லை தூங்கு நீ" என்று சொல்லிவிட்டு வடிவாம்பாள் வெளியே சென்றாள். கூடவே அந்தக் கதவும் படாரென்று சாத்திக்கொண்டது.

மோகனாவுக்கு இருப்புக்கொள்ளவில்லை. சண்முகத்தின் தோளிலிருந்து ரத்தம் பொங்கிய காட்சி அவளுக்கு நினைவு வந்தது. குலுங்கக் குலுங்க அழுதாள். 'அவர் வழியை ஏன் மறைத்தோம்? அவர் வீட்டுக்குப் போகும் போது, பாதையில் போய் நின்று இனிமேல் சந்தேகம் இல்லை என்று சொல்லுங்கள் என்று ஏன் கேட்டோம்? வேறு யார் சந்தேகப்பட்டார்கள். அவர்தானே சந்தேகப்பட்டார். இந்தச் சந்தேகத்தைத் தீர்க்க நாம் பாதையில் போய் நிற்காவிட்டால், அவருக்கு இந்த ஆபத்து வந்திருக்காதே! அப்பொழுதே வீட்டுக்குப் போயிருப்பாரே! நம்மால்தானே அவருக்கு இவ்வளவு கஷ்டம். அடேயப்பா, சென்ற இரண்டு மாத காலமாக அவர் நம்மால் என்ன பாடு பட்டுவிட்டார்!

நன்றாகக் கேட்டார். உன் வீட்டு வாசலில் வண்டி நின்றது பொய்யா? நான் மைனரைப் பார்த்தது பொய்யா? சர்க்கஸுக்கு மைனர் வந்தது பொய்யா?—அடியம்மா, கட்டின புருஷன்கூட இப்படிக் காவல் காக்க மாட்டானே! என் மேல் அன்பு இருக்கக் கொண்டுதானே அப்படிக் காவல் காத்திருக்கிறார்! அதற்கு என்ன செய்வது? எனக்குக் கொடுத்து வைக்கவில்லை. இல்லாவிட்டால் இந்தக் கத்தி ஏன் அவர் மேல் பாய்கிறது?—ஐயோ எவ்வளவு ரத்தம்! என் கண் முன்னாலேயே அவருக்குக் காயம் ஏற்பட்டதே! இந்தப் பாவி பார்த்துக்கொண்டும் சும்மா நின்றேனே! அவர் அந்த வாடகை வீட்டிலேயோ போய்க் கிடக்கவேண்டும்! அவரை யார் கவனிப்பார்கள்? தண்ணீர் வேண்டும் என்றால் யார் கொடுப்பார்கள்? அவர் முக்கி முனகிக்கொண்டு ஐயோ என்றால், ஏன் என்று கேட்பார்கள் யார்?

"இந்த அம்மாளின் பிடிவாதம் என்னைக் கட்டிப் போடுகிறதே! நான் என்ன செய்வது? இந்தப் பாவியாலேதானே அவர் திருவாரூருக்கு வந்தார். என்னாலேதானே அவர் தில்லானா ஊதினார். இந்த ஊரில்தானே கத்திக் குத்தும் ஏற்பட்டது. ஐயோ, உண்மை உண்மை! உன்னைப் பாத்து நான் படும் பாடு போதும் என்று அவர் அன்றைக்குச் சந்நிதியிலே சொன்னது உண்மை. ரொம்பச் சரி, அவருக்கு வந்த கஷ்டமெல்லாம் என்னாலேதான்' என்று சொல்லித்



கொண்டே இரு விழிகளில் இருந்து அருவி போல கண்ணீர் வடிய அப்படியே தலையணை மேல் சாய்ந்தாள் மோகனா.

அறுபத்து ஒன்றாம் அத்தியாயம்

# இடியும் மின்னலும் இதயத்தைத் தாக்கின



பேசத் தெரியாத கன்றுக்குட்டி "அம்மா" என்று அலறுகிறது. பேச்சைத் துறந்த ஞானியும் அதே அம்மாவைத்தான் கஷ்டம் வந்த காலத்தில் கூப்பிடுகிறான். தன் நினைவு அற்ற நோயாளிக்கும் தாய் நினைவு இருக்கிறது. அவனும் ஸ்மரணையற்ற நிலையில் "அம்மா" என்கிறான். அஷ்டாட்சரம், பஞ்சாட்சரம், ஷடாட்சரம் என்ற கடவுளின் பெயர்கள் எல்லாம் பின்னால் வந்தவை. ஆனால், இந்த "அம்மா" என்ற மூவெழுத்து மந்திரந்தான் மூலமந்திரம். ஆதலால், கனை தெளியும் நேரத்தில் சண்முகம் அதையே ஓதினான்.

சண்முகத்துக்கு இப்போதுதான் லேசாய்த் தன் நினைவு வர ஆரம்பித்தது. "அம்மா", "அம்மா" என்று அவன் படுக்கையில் புரண்டபோது "அப்பா சண்முகம், என்னடா செய்யுது?" என்று கேட்க அவனுக்குத் தாய் இல்லை.

ஆனால் தருமனும் முத்துராக்குவும் பக்கத்தில் இருந்தார்கள்.

"முத்துராக்கு அருகில் வந்து சண்முகத்தின் முகத்தைப் பார்த்தார். தம்பி, இப்போ எப்படி இருக்குது?" என்றார் அவர்.

"ஏன் நிக்கிறீங்க? உட்காருங்க" என்று அவன் கைஜாடையால் சொல்லவே, அவன் அருகில் உட்கார்ந்து அவனைத் தடவிக் கொடுத்தார் முத்துராக்கு.

"தம்பி, நான் நிக்கிறேனே, என்னைத் தெரியலையா உனக்கு?" என்றான் தருமன்.

"தருமண்ணே, ஒத்தா ஊதுறே. ஏன் தள்ளி நிக்கறே?" என்று நா குழறிக்கொண்டே கேட்டான் சண்முகம். தனக்கு வேண்டியவர்கள் வருந்தக்கூடாதே என்று அவன் இந்த நிலைமையிலும் ஹாஸ்யமாகப் பேசினாலும், இதுவரை அடக்கி வைத்திருந்த துயரம் அவ்வளவும் தருமன் முகத்தைப் பார்த்தவுடன் பொங்கி வழிய ஆரம்பித்தது. பால் பொங்கி வழிந்தால்தான், பக்குவம் அடைகின்றது. மனமும் ஒருமுறை பொங்கி வழிந்த பின்தான் நிதானம் அடைகின்றது. சண்முகத்தின் கண்ணீரைப் பார்த்த தருமன் கதறி அழுதான்.

"எனக்கு ஒன்னும் இல்லேண்ணே! கொஞ்சம் வலி இருக்குது. அது ஒன்னும் செய்யாது" என்றான் சண்முகம்.

"ஒருத்தருக்கும் கேடு நினைக்காதவன் நீ. உனக்கு இப்படி வந்திடுச்சே தம்பி!"

"யாரையாவது இடக்கா பேசியிருப்பேன், யார் மனசையாவது புண்படுத்தியிருப்பேன். இல்லாட்டி எனக்கு ஏன் அண்ணே காயம் படுது?"

"காயத்தைப்பத்திக் கவலைப் படலே தம்பி. அந்த டாக்டர் சொன்னதை நினைச்சா..."

இதற்குள் முத்துராக்கு ஒரு தடவை தருமனை விழித்துப் பார்க்கவே தருமன் அடக்கிக்கொண்டான்.

இதைப் பார்த்த சண்முகம், "டாக்டரு என்ன சொன்னாரு?" என்றான்.

"உடம்பை அலட்டிக்காமல் இருக்கணும்னாரு" என்று முத்துராக்கு பேச்சை மறைத்துவிட்டார்.

சண்முகம் அதைப் பொருட்படுத்தவில்லை. அவன் கண்கள் அரை மயக்கத்தில், இன்னும் யார் யார் அங்கு இருக்கிறார்கள் என்பதைத் தேடின. திருவிழாக் கூட்டத்திலிருந்து தன்னை வீட்டில் கொண்டுவந்து போட்டிருப்பதை அறிந்தான். தலைமாட்டுப் பக்கத்தில் நாற்காலியில் யாரோ அமர்ந்திருப்பதைப் பார்த்தான். ஆவலுடன் கவனித்தான். மைனர் என்பதைக் கண்டான். அவன் உள்ளத்தில் ஒரு வெறுப்புப் பிறந்தது. மைனரைப் பார்த்து, 'சே, நீ இங்கேயும் வந்துவிட்டாயா?' என்று கேட்பதுபோல், முகத்தைத் திருப்பிக்கொண்டான். அவன் தோளில் பட்ட காயத்தின் வலியைக்காட்டிலும் அவன் உள்ளத்தில் தாங்க முடியாத ஒரு வேதனை உண்டாயிற்று. ஆனால் மைனர் அதைப் பொருட்படுத்தவில்லை, முத்துராக்குவிடமும் தருமனிடமும் "சற்று வெளியே செல்லுங்கள்" என்று கண்ணைக் காட்டினார். இருவரும் வெளியே சென்றார்கள்.

சண்முகத்தின் அருகில் வந்தார். வருத்தத்துடன் பார்த்தார். "சண்முகம், உடம்பு எப்படி இருக்குது?" என்று கேட்டார்.

"அதுக்கும் உசிருக்கும் இன்னும் கொஞ்சம் சம்பந்தம் இருக்கு" என்று கடுகடுப்புடன் கூறினான் அவன்.

"சங்கீதம் தெரிஞ்சாப் போறாது சண்முகம், உலகத்தையும் தெரிஞ்சுக்கணும்."

"இனிமேலா தெரிஞ்சுக்கப் போறேன்? எனக்குத்தான் நல்லாத் தெரியறாப்புலே பாடம் கத்துவைச்சுட்டீங்களே!"

"இல்லை, நீங்க சங்கீதத்துக்குத்தான் அடிமைப்பட்டிருந்தீங்க. இப்போது சந்தேகத்திற்கு அடிமைப்பட்டுவிட்டீங்க."



"ஆமா, பெரிய ஞானிகள்! நீங்கள் சொல்லிவிட்டா கேக்க வேண்டியதுதான். குட்டிச்சுவத்திலே முட்டிக்க வெள்ளெழுத்தா? தயவுசெய்து போங்கள். என் கண் முன் நிற்காதீர்கள்' என்று ஆத்திரத்துடன் சொல்லிவிட்டு, பரபரப்புடன் சாய்ந்தான் சண்முகம். மைனருக்கு அவன் பேச்சு மேலும் வருத்தத்தை உண்டாக்கியது.

"நாயனக்காரரே, நான் இரண்டொரு வார்த்தைகள் உங்களிடம் சொல்ல வேண்டும்."

"சொல்ல என்ன இருக்குதுங்க? அதுதான் எனக்கு எல்லாம் தெரியுமே!" என்று வெறுப்புடன் சொல்லிவிட்டு இந்த மனிதன் இந்த இடத்தைவிட்டுப் போக மாட்டானா என்று துடித்தான் சண்முகம். மைனருக்கோ போக மனமில்லை.

"நாயனக்காரரே, நான் சொல்வதைப் பொறுமையாய்க் கேட்டு எனக்கு சந்தோஷத்தைக் கொடுப்பீரா?"

"நான் கொடுக்க என்னங்க இருக்குது? இந்த விசயங்களிலே கொடுக்கவும் தடுக்கவும் யாராலேயும் முடியாது. அவுங்க அவுங்க மனம் கொண்டது மாளிகை. நான் தடுக்க வருவேனோ என்ற சந்தேகம் உங்களுக்கு இருக்கலாம். இனிமே என்னாலே ஒரு தடையும் இருக்காது" என்று சிரமப்பட்டுக்கொண்டே சொன்னான் சண்முகம்.

'மோகனா விஷயத்தில் நாம் சஞ்சலப்படக்கூடாது என்று கேட்க அல்லவா வந்திருக்கிறான் இந்த மனிதன்' என்ற எண்ணத்தில் அவனுக்கு மைனர் மேல் தாங்கமுடியாத கோபம் வந்தது. கோபத்தினால் அவனுக்குக் களைப்பு உண்டாயிற்று. தலை துவண்டது. மைனர் தலையைத் தாங்கிக்கொண்டார். தலையணை மேல் அவனைச் சாத்தி வைத்தார். அதற்குள் அவருடைய வேலையாள் அவருக்குக் காப்பி கொண்டுவந்தான். அந்தக் காப்பியை எடுத்து மைனர் சண்முகத்தின் வாயில் கொடுக்கப் போனார். சண்முகம் இருந்த நிலையில் வேறு யார் கையாலாவது விஷத்தைக் கொடுத்திருந்தால்கூட சந்தோஷமாய்க் குடித்திருப்பான். மைனர் கொடுத்த காப்பியை அவனால் விழுங்க முடியவில்லை. அப்படியே கீழே துப்பிவிட்டான். "ஐயா, என்னை ஏன் உயிருடன் வைத்துக் கொல்லுகிறீர்கள்? என்னை விடுங்கள். நீங்களும் அவளும் எக்கேடு கெட்டாலும் சரி."

"சண்முகம், உனக்கும் மோகனாவுக்கும் இவ்வளவு அன்பு இருக்கிறது என்று தெரிந்திருந்தால் நான் இந்த விஷயத்திலே தலையிட்டிருக்கவே மாட்டேன்" என்று பரிதாபகரமாகக் கூறினார் மைனர்.

இதைக் கேட்டதும் அவனுக்குச் சிரிப்பு வந்தது. ஆனாலும் உடம்பில் உள்ள வலி அவனைச் சிரிக்கவிடவில்லை.

"ஓஹோ! குத்தவாளியே சாட்சியா மாறுகிறாரோ?" என்றான் குத்தலாக.

"அவளை நீ இன்னும் சந்தேகிக்காதே" என்று கெஞ்சினார் மைனர்.

சந்தேகம் என்பது ஒருவர் சொல்லி வருவது இல்லை. மனத்தில் சிறிய புண். அது மனம் ஆறினால்தான் சந்தேகம் தீரும். மைனரின் சமாதானத்தை சண்முகம் ஏற்கவில்லை.

"எங்க தருமன் சொன்னது பொய்யா? உங்க வண்டி, வாசலில் கிடந்ததாமே?" என்றான் சண்முகம்.

"நீ பார்த்த வண்டி, என் மாமாவிடமிருந்து அவளைக் காப்பதற்காக நான் அனுப்பியது" என்றார் மைனர்.

சண்முகம் அவரைக் கோபமாகப் பார்த்தான். 'ஏனையா பொய் சொல்லுகிறாய்?' என்பது போல் இருந்தது அந்தப் பார்வை. தம்மை மோகனா வீட்டு வாசலில் சண்முகம் இவ்வாறு பார்த்துவிட்டுப் போனது அவருக்கு ஞாபகம் வந்தது.

"அது மாத்திரமல்ல. அவள் வீட்டு வாசலில் நீ என்னைப் பார்த்த போது மோகனா வீட்டில் இல்லை. கோவிலுக்குப் போயிருந்தாள். அவள் இல்லாத நேரத்தில் வடிவாம்பாளைப் பார்த்துப் பேச நான் போனேன். வீணில் அவளைச் சந்தேகிக்காதே" என்று வேண்டிக் கொண்டார் மைனர்.

சண்முகத்தின் சிந்தை குழம்பியது. 'என்னிடம் மோகனாவைப் பற்றிச் சிபாரிசு செய்ய இவன் யார்? இவனுக்கு என்ன அக்கறை? இதுவும் மோகனாவின் சூழ்ச்சியாக இருக்குமோ? அடேயப்பா, பெண்களையே நம்பக்கூடாது. இரண்டு பேரும் சேர்ந்து நம்மைப் பந்தாடுகிறார்களா? இந்த மாதிரிச் சூழ்ச்சியால் என்ன பயன்? நான் ஒரு வித்வான். நான்கு பேர்களிடம் பேசக்கூடியவன். என் வாயிலிருந்து ஏதாவது கெட்ட வார்த்தைகள் வந்துவிட்டால், நான்கு இடங்களில் கச்சேரி நடக்காது என்று எதிர்பார்க்கிறார்கள் போலிருக்கிறது' என்று சண்முகசுந்தரம் எண்ணவே, அவனுக்கே ஒரு சிரிப்பு வந்தது.

'இது முட்டாள்தனம், நாம் சொல்லியா இதுவரை அவளுக்குக் கச்சேரி நடந்துவந்தது. அவளுடைய வித்தையே வேறு நம்முடைய வித்தையே வேறு. நம்முடைய வித்தையை சங்கீத ஞானம் உடையவர்கள்தான் ரசிக்கலாம். அவளுடைய நாட்டியத்தைக் கண்ணும் காதும் உடைய எல்லோரும் ரசிக்கலாம். நம்மைத் தனது பண்ணிக்கொள்ளுவதில் அவளுக்கு என்ன மிச்சம்? சரிதான், என்னை ஏமாற்றிவிட்டாள் என்று நான் தூற்றாமல் இருப்பதற்காக இப்படிச் சொல்லுகிறாள் போலிருக்கிறது! இதில்தான் அவளுக்கு என்ன அவமானம்? நம்முடன் வாழ்ந்தால் என்ன, மைனருடன் வாழ்ந்தால் என்ன? என்றைக்குப் பெண்ணாகப் பிறந்தாளோ அன்றைக்கே ஒரு ஆளுடன் வாழ்ந்துதானே ஆகவேண்டும்! அதிலும் ஒரு தாசிப் பெண் நம்முடன் வாழ்வதைக்காட்டிலும் மைனருடன் வாழ்ந்தால்



ஊர் மணக்க வாழலாம். அவன் பணம் என் கலையைக்கூட விலை பேசும். அதை விட்டு என்னோடு அவள் வந்து சேர்ந்தால், "பாரடா, புடிச்சாலும் புடிச்சா, கம்பிளிப் பூச்சி முருங்கை மாத்திலே ஒட்டின மாதிரி அவன் பாடலாம், அவள் ஆடலாம் பேய், கையிலே கிண்ணை எடுத்து வச்சுக்க, நாம் போடலாம்" என்று செல்வர்கள் கேலி செய்வார்கள். மைனரோடு அவள் இருந்தால் கோயில்களில் மாலை மரியாதைகள் கூடக் கிடைக்கும். இதிலே வெட்கப்பட அவளுக்கு என்ன இருக்கிறது? என்னைச் சமாதானம் செய்துகொண்டு அவளுக்கு என்ன ஆக வேண்டும்? சே, இதுவும் தவறு.

"ஆனால், அவளுக்காக நம்மிடம் இந்த மைனர் ஏன் வந்து சொல்கிறார்? இந்த மைனரைப் போல் உள்ள பெரிய மனிதர்கள் 'அந்தப் பெண்ணிடம் எனக்கு நேசம். இந்தப் பெண்ணிடம் எனக்கு நேசம். என்னைப் பார்த்துவிட்டால் அவள் காப்பிகூடக் குடிக்க மாட்டாள். இவள் காதுத் தோட்டுக்குத் திருகுகூடப் போட மாட்டாள்' என்று ஊர் எல்லாம் பெண்களைப்பற்றித் தண்டோரா போடுவார்கள். இதுவே ஒரு உல்லாசம்! அப்படி இருக்க இந்த சிங்கபுரம் மைனர், வெட்கத்தையும் பாராமல் என்னிடம் வந்து 'நான்தான் மோகனாவின் மேல் ஆசை கொண்டேன். அவள் ஆசை கொள்ளவில்லை' என்று சொல்கிறாரே! இதை எப்படி நம்புவது? நேற்றுவரையில் வேஷம் போட்டுத் திரிந்தவன், இன்றைக்கு ஒரு வேதாந்தியாக மாறிவிட்டானா? ஒரு நாளிலா ஞானம் வந்துவிட்டது?" என்று எண்ணினான். மைனரின் முகத்தைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தான்.

இதுவரை சண்முகத்தின் முகபாவங்களையே பார்த்துக் கொண்டிருந்த மைனர், "என்ன சண்முகம், ஏன் சிரிக்கிறாய்? என்னைப் பார்த்து நகைக்கிறாயா? வைத்தியின் சொல்லைக் கேட்டு நான் வழி தவறி நடக்க இருந்ததைப் பார்த்து நகைக்கிறாயா?" என்றார்.

"அல்ல. கேப்பையிலே நெய் ஒழுகுது என்றானாம் ஒருவன். அதைக் கேட்டுக்கொண்டு நின்றானாம் ஒருவன். நீர் சொல்லுவது விந்தையாக இருக்கிறதே என்றுதான் சிரித்தேன்."

"விந்தைதான். ஆனால், அந்த ஆச்சரியத்துக்கும் அவள்தான் காரணம். அவள் என்னைத் திரும்பிக்கூடப் பார்த்ததில்லை" என்றார் மைனர்.

இதைக் கேட்ட சண்முகம், 'இது உண்மையாக இருக்குமோ? நாம் தான் தவறு செய்திருக்கிறோமோ?' என்று யோசித்தான்.

'ஆம், சர்க்கஸ் கொட்டகையில் நம்மை ஏன் சண்டைக்கு இழுத்தான்?' என்ற எண்ணமும் கூடவே வந்தது. அவன் யோசிப்பதைக் கண்டார் மைனர்.

"என்ன யோசனை சண்முகம்? நான் சொல்வதை நம்பு."

"எப்படி ஐயா நம்புகிறது? நீங்க ரெண்டு பேரும் சர்க்கஸ் பார்க்க வந்தீங்களே அதுவும் பொய்யா?"

"அல்ல. அதுவும் தவறு. அவன் உன்னைப் பார்க்க வந்தான். உன் பயணத்தைத் தடுக்க வம்புக்கு இழுத்தான். நானும் வைத்தியும் அவனைத் தொடர்ந்து அங்கு வந்தோம்."

'என்ன? கண்ணால் கண்டதெல்லாம் பொய்யா? என் பயணத்தைத் தடுக்க வம்புக்கு இழுத்தானா? நம் சந்தேகம் நம் கண்ணை மறைத்துவிட்டதா? 'வலுச்சண்டைக்கு இழுக்கிறான்; வாக்கைக் காப்பாற்றச் சொல்லுகிறான்' என்று ஆத்திரம் அடைந்தோமே! அது தவறா?- இருக்கலாம். அன்று பஞ்சாயத்தின் போது. நமக்குப் பாரிநாயனம் கற்றுக் கொடுக்கக்கூடாது என்று சொன்னவுடன், நாம் ஊரைவிட்டு ஓடப் புறப்பட்டோமே, அப்போதும் 'போகாதே போகாதே' என்று கையைப் பிடித்தாளே! 'நான் தோற்றேன், நான் தோற்றேன்' என்று சொல்லி அலறி என் காலடியில் விழுந்தாளே! அவளை எத்தித் தள்ளினேனே! என்னைப் பிரிய முடியாமல்தானே அலறி இருக்கிறாள்?

'இந்த மைனர் சொல்வது உண்மையாக இருந்தால், ஐயோ, அந்தப் பெண்ணின் வாழ்வைப் பாழ்படுத்திவிட்டோமா? அந்தக் கலையரசியின் கருத்தை நோகச் செய்துவிட்டோமா?

'அந்த அழகு வாடிவிட்டதே. மல்லிகை மொட்டைப் பறித்து வெயிலில் போட்டது போல அவள் உடல் காய்ந்துவிட்டதே. அழகர் கோவிலில் நாம் பார்த்த போது இருந்த அழகு என்ன! நேற்று நாம் பார்த்த போது இருந்த அழகு என்ன! அன்றைக்குக் கலியாணத்தில் சந்தனப் பேலாவைத் தூக்கி எறிந்தவள், தன் கையால் பிறருக்குச் சந்தனம் பூச மாட்டேன் என்று சொன்னவள், மைனரை விரும்பி இருப்பாளா? முத்துராக்கு அப்பொழுதே சொன்னாரே!

நேற்று அவள் ஆட்டத்தைப் புகழ்ந்துவிட்டு, அந்த வாயாலேயே அவளைக் குற்றம் சொன்னோமே. அவள் என்ன பாடு பட்டிருப்பாள்? அந்தக் கூட்டத்தில் என்னிடம் ஓடி வந்து, 'நீ கொடுத்த தில்லானா மோகனாம்பாள் பட்டம் எனக்கு வேண்டியதில்லை, என் மானத்தை எனக்குத் திருப்பிக் கொடு. உன் வாயால் சந்தேகம் இல்லை என்று ஒரு வார்த்தை சொல்' என்று அழுதாளே! இந்தப் பாவி சொன்னேனா? ஐயோ, என் மேல் அன்பு இருக்கக்கொண்டுதானே. ஓடி வந்து கேட்டாள்? என் மேல் கொண்ட காதலால்தானே அவள் வெற்றி பெற்றும் அந்தச் சங்கிலியை, ஆரம்பத்தில் நாம் சந்தித்த போது அவளுக்குக் கிடைத்த பரிசை, அன்பின் சின்னத்தை, எனக்கு மாலையிட வந்தாள்! அவள் உள்ளத்தைப் புரிந்துகொள்ளாமல் போனேனே! புரிந்துகொள்ளும் தறுவாயில் இப்படி ஒரு ஆபத்தும் வந்துவிட்டதே! இனி நான் உயிர் வாழ வேண்டுமா? வாழ்ந்தாலும் அவள் முகத்தில் எப்படி விழிப்பது? அவளுக்குச் செய்த பெரிய



கொடுமையை எப்படி மாற்றுவது? அவள் காலில் விழுந்தால் போதுமா? நான் தவறு செய்துவிட்டேன் என்று அலறினால் போதுமா?

'பெண்ணுக்கு உயிர், கற்பு. அதிலே களங்கம் கற்பித்தோமே! வேறு சுரங்களைக் கலந்து ஒரு ராகத்தைக் களங்கப்படுத்தக் கூடாது என்று எண்ணிய நாம் ஒரு நாட்டிய தேவதையையே களங்கப்படுத்தி விட்டோமே! மங்கையின் மாண்புக்கு மாசு கற்பித்தோமே! கிட்டக் கிட்ட வந்த அவளை எட்ட எட்ட விரட்டினோமே! கட்டி அணைக்க வந்த அவளைக் காலால் எத்தினோமே! தொட்டுப் பேச வந்த அவளைத் 'தூர நில்' என்று சொன்னோமே!' என்று எண்ண எண்ண அவன் கண்கள் பொங்கி வழிந்தன. உடம்பு முழுவதும் ஒரு சோர்வு உண்டாகியது. மார்புவலி தாங்க முடியவில்லை. ஆனாலும் எப்படியாவது பிழைக்க வேண்டும். எப்படியாவது அவள் மனத் துயரத்தை மாற்ற வேண்டும் என்ற ஆசை மட்டும் வந்தது.

விசும்பி விசும்பி அழுதான் சண்முகம். மைனரின் கைகளைப் பிடித்துக்கொண்டான். "தம்பி, உங்களுக்கு அவ மேலே இவ்வளவு அக்கறை எப்படி வந்தது? அவள் உங்களை விரும்பாதபோது உங்களுக்குக் கோபமல்லவா வரும்?" என்று கேட்டான்.

"சண்முகசுந்தரம், அவள் என்னை விரும்பினாள். ஆனால் நான் கெடுவதை விரும்பவில்லை. நான் நன்றாக என் மனைவியுடன் வாழ வேண்டுமென்று விரும்பினாள்." இதைச் சொல்லும்போது மைனருக்குத் துக்கம் தாங்க முடியவில்லை. வாய் விட்டு அழுதார். "இந்தப் பாவியின் மனைவியை உங்களுக்குத் தெரியாது. அவள் பெயர் மரகதம். அது ஒரு பச்சைக்கிளி. விவரம் தெரியாதவள். அவளுக்காக என்னிடம் வாதாடினாள் மோகனா. 'உங்கள் மனைவியின் கண்ணீரைத் துடையுங்கள்' என்று என்னிடம் மன்றாடினாள். அந்த மரகதம் செய்த பாக்கியந்தான் என் மனசு மாறியது. என் வீட்டிலே விளக்கு ஏற்றி வைத்தாள். என் உள்ளத்திலும் ஒளியை உண்டாக்கினாள். இனி அவள் என் சகோதரி. உன்னைக் கையெடுத்துக் கும்பிடுகிறேன். அவளைச் சந்தேகப்படாதே" என்று சொல்லிவிட்டு, வருத்தம் தாங்காதவராக வெளியே சென்றார் மைனர்.

சண்முகத்தின் உடம்பு ஏற்கெனவே ரத்த சேதத்தால் தண்ணீர் சண்டிய வாழைத்தண்டு போல் இருந்தது. இந்த மனமாற்றத்தால் ஏற்பட்ட அதிர்ச்சி அவனுக்கு மார்பு வலியை அதிகமாக உண்டாக்கி விடவே, அவன் திணறிக்கொண்டே இருந்தான். போதாததற்குக் கண்ணீர் வேறு பொங்கி வடிந்துகொண்டிருந்தது. அவனுக்கு முன் மோகனா வந்து நின்றாள். 'அன்று ரயிலில் என் கண்ணில் விழுந்த தூசியை உன் வாயால் ஊதி எடுத்தாயே! இன்று என் காதலில் களங்கம் கற்பித்துவிட்டாயே. இது சரியா?' என்று கேட்பது போல் இருந்தது. சண்முகத்தின் உள்ளம் தாங்க முடியாத உணர்ச்சியால்

தத்தளித்தது. இப்பொழுதே மோகனாவைப் பார்க்கவேண்டும் என்று துடியாய்த் துடித்தான். இந்தச் சமயத்தில் தருமன் உள்ளே நுழைந்தான். "தருமண்ணே" என்று முனகினான் சண்முகம். தருமன் அருகில் வந்தான். சண்முகம் அழுதுகொண்டிருப்பதைப் பார்த்தான். தூக்கி வாரிப்போட்டது. 'ஐயோ, யாரோ கையை எடுக்கப் போகும் சேதியைச் சொல்லிக் காரியத்தைக் கெடுத்துவிட்டார்களே!' என்று எண்ணினான். "என்ன தம்பி, உன்கிட்டே சொல்லிட்டாங்களா?" என்று கேட்டான்.

சண்முகசுந்தரம் உணர்ச்சிவசப்பட்டுப் பேச முடியாமல் தவித்தான்.

"யார் சொன்னா உன் கிட்டே மைனர் சொல்லிவிட்டாரா?"

"ஆமாம் அண்ணே, இவ்வளவு பெரிய பாவியாகிவிட்டேனே!"

"கவலைப்படாதே தம்பி, எனக்கும் முத்துராக்குவுக்கும் கொடுத்து வச்சது அவ்வளவுதான். நாங்க இரண்டு பேரும் பண்ணின பாவம், உன் கையை எடுக்கப் போறாங்க."

'கையை எடுக்கப் போறாங்க' என்ற வார்த்தையைக் கேட்டதும் சண்முகத்துக்குப் பேய் அறைந்தது போல் இருந்தது. 'என் கையை எடுப்பதா? ஏதோ புதிதாகச் சொல்கிறானே!' என்று தாங்க முடியாத வருத்தம் வந்தது.

"கையிலே விஷம் பரவிச்சானா புரையோடி உடம்பு கெட்டுப் போகும். கையை எடுத்துவிட வேண்டியதுதான், அப்படின்னு டாக்டர் என்கிட்டே சொன்னாரு. நானும் முத்துராக்குவும் உன்கிட்டே சொல்லப்படாதுன்னு இருந்தோம். அதுக்குள்ளே இந்த மைனர் பாவி சொல்லிக் கெடுத்துட்டானே! கவலைப்படாதே தம்பீ, உன் ஒரு கை போச்சுன்னா, என் கை இரண்டும் இருக்குது. முத்துராக்கு கை இரண்டிருக்கு. இந்த நாலு கையாலேயும் பிச்சை எடுத்தாவது உன்னை ராஜாவாட்டம் வச்சுக்கிட்டிருப்போம்" என்று சொல்லிவிட்டு, தருமன் 'ஹோ' என்று அலறிவிட்டான்.

நடுக்காட்டில் நள்ளிரவில் ஒருவன் நடந்தான். பாதை தவறிவிட்டது. எப்படிப் போவது என்று வழி தெரியாமல் திகைத்தபோது ஒரு கொடிமின்னல் பளிச்சிட்டது. அந்த மின்னல் வெளிச்சத்தில் ஒரு பாதையைக் கண்டான். ஆனந்தமாக அந்தப் பாதையில் நடைபோடும் போது அவன் தலையில் டமால் என்று ஓர் இடி வீழ்ந்தால் எவ்வாறு இருக்குமோ, அவ்வாறு துடித்தான் சண்முகம். 'சற்று நேரத்திற்கு முன் மோகனாவுக்காக உயிரை இறுக்கிப் பிடித்துக் கொள்ளவேண்டும் என்று நினைத்த சண்முகம், தன் கலை தன்னை விட்டுப் போகப் போகிறது. தன் கையை எடுத்துவிடப் போகிறார்கள். இனி நாம் நாதஸ்வரம் வாசிக்க முடியாது. மோகனாவை அடைந்தாலும் அவளுக்குப் பாரமாக இருக்க வேண்டும். எந்தச்



சங்கீதத்தில் அவன் மயங்கினானோ அதை இழந்துவிட்டு அவள் முகத்தில் நாம் எப்படி விழிப்பது?' என்று பலவாறாக நினைத்தவுடன் அவன் கண்கள் இருண்டன. காதடைத்தது. மார்பில் பளீர் பளீர் என்று தாக்கியது. "அம்மா!" என்று அலறிக்கொண்டே கட்டிலிலிருந்து புரண்டு கீழே விழுந்தான்.

இந்தக் கூச்சலைக் கேட்ட முத்துராக்கு, மைனர், எல்லோரும் உள்ளே ஓடி வந்தார்கள். சண்முகத்துக்குப் பேச்சு மூச்சு இல்லை. "எங்கே பரதேசியார், எங்கே பரதேசியார்?" என்று அலறினார் மைனர். "சரி, ஓடிப்போய் டாக்டரைக் கூப்பிட்டுவிட்டு வா" என்று உத்தரவிட்டார்.

அவசர அவசரமாக வந்த முத்துராக்கு குனிந்து பார்த்தார். "நாயனக்காரரே" என்று கதறினார். தருமனோ திகைப்பூண்டை மிதித்தவன் போல் நின்றான்.

அனுட்டானத்தை முடித்துக்கொண்டு பரதேசியாரும், அவர் கூடவே வரதனும் அங்கு வந்தார்கள். சண்முகத்தைப் பார்த்தவுடனே பரதேசியாரின் முகம் வெளிறியது. அவசரமாக ஓடிப் போய் அவன் கையைப் பிடித்து நாடியைப் பார்த்தார். வருத்தத்துடன் நிமிர்ந்து மைனரைப் பார்த்தார். அதிலே 'என்ன நடந்தது?' என்ற கேள்விக்குறி தொனித்தது.

"மைனரய்யா ஏதோ சொன்னாப்பிலே இருக்குது. தம்பிக்கு வருத்தம் தாங்கல்லே" என்றான் தருமன்.

"என்ன சொன்னீர்கள்?" என்றார் பரதேசியார்.

"'மோகனாவைச் சந்தேகப்படக்கூடாது. அவள் உத்தமி. குற்றமெல்லாம் என்னுடையதுதான்' என்று சொன்னேன்."

"ஐயா, உமது பெயரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக அவன் உயிருக்கு ஆபத்தை உண்டாக்கிவிட்டீரே!" என்று பரதேசியார் சொல்லவும், தருமன், "சாமி, மன்னிச்சுடுங்க சாமி. நான்தான் தப்பு செய்துவிட்டேன். மைனர் அதைத்தான் சொன்னாராக்கும்னு நினைச்சுக்கிட்டுத் தம்பி கிட்ட கை விஷயத்தைச் சொல்லிவிட்டேன். அதுதான் ஆபத்தா போச்சு. என் உயிரை வேணாலும் கொடுக்கிறேன். தம்பியைக் காப்பாத்துங்க சாமி" என்று அவரைக் கும்பிட்டவண்ணம் கெஞ்சினான்.

"என்ன? என்ன?" என்று கேட்டுக்கொண்டே அப்போது டாக்டர் உள்ளே வந்தார். அவரைக் கண்டவுடன், அறை முழுவதும் நிசப்தம் நிலவியது. டாக்டர் பலவாறு சண்முகத்தைப் பரிசோதித்தார். அவர் முகத்தில் ஈ ஆடவில்லை.

"நிலைமை ரொம்பக் கவலைக்கிடம். ரத்தம் ரொம்பப் போய்விட்டது. சென்னை பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனால் அங்கு தகுந்த சாதனங்கள் இருக்கின்றன. அவர்

பிழைக்கலாம்" என்று சொல்லி ஏதோ மருந்தை எடுத்து அவனுடைய உடலில் ஊசியால் ஏற்றினார்.

இதைக் கேட்ட வாதன் துயரம் தாளாமல் அழுதுகொண்டே வெளியே சென்றுவிட்டான்.

"ஐயா, இனி நாளைதானே சென்னைக்கு ரயில் இருக்கிறது. என்ன செய்வது? நாளைவரை உயிரைக் காப்பாற்றிவிட முடியாதா டாக்டர்?" என்று கெஞ்சினார் மைனர்.

"இதற்குப் பிராண வாய்வு கொடுக்கணும். ரத்தம் கொடுக்க வேண்டும். திருவாரூரில் இவை இரண்டும் இருந்தால் இப்பொழுதே கொடுத்திருப்பேன்" என்று சொல்லிவிட்டு டாக்டர் வருத்தத்துடன் புறப்பட்டார்.

"டாக்டர் அவர்களே! இந்த அடிமை ஏதாவது மருந்து கொடுக்கலாமா?" என்றது பரதேசியாரின் குரல்.

"தாராளமாய்க் கொடுங்கள். ஆனால் அவரால் எதுவும் இப்போது உள்ளே விழுங்க முடியாது" என்று சொல்லி, டாக்டர் சென்று விட்டார்.

பரதேசியார் இதைக் கேட்டவுடன் ஆடாமல் அசையாமல் கற்சிலை போல் சற்று நேரம் ஏதோ யோசனையில் நின்றார். பிறகு "நான் சற்று வெளியே போய்விட்டு, இறைவன் அருள் இருந்தால் சீக்கிரம் வருகிறேன். அதுவரை ஒருவரும் அவனுக்குத் தொந்தரவு கொடுக்காமல் இருங்கள்" என்று கூறிவிட்டுப் பரதேசியார் எங்கோ புறப்பட்டார்.

எல்லோரும் திரும்பி அவரைப் பார்ப்பதற்குள் அந்த மகான் தஞ்சாவூர்ப் பாதையில் நெடுந்தூரம் போய்விட்டார்.

✦ ✦ ✦

சண்முகத்தின் வீட்டில் இருந்து வருத்தத்துடன் வெளியே வந்த வாதன் வெகு நேரம் யோசித்தான். "ஐயோ, போய்ப் பார்த்துவிட்டு வா என்று ஒருவருக்கும் தெரியாமல் மோகனா அனுப்பினாளே. அவளை எப்படிப் பார்ப்பது? அவளிடம் எப்படி இதைச் சொல்வது? ஆபத்து என்று சொன்னால் அவள் அங்கேயே விழுந்து துடித்து விடுவாளே! வாதா, இந்தச் சேதியையா கொண்டுவந்தாய் என்று அவள் அலறினால் என்ன செய்வது? நாம் அங்கு போகவும் வேண்டாம். இதை அவளிடம் சொல்லவும் வேண்டாம். இப்படியே பரதேசம் போய்விடுவோம்' என்று குடவரை வாசலில் போய் கண்ணைக் கசக்கிக்கொண்டு உட்கார்ந்துவிட்டான்.

"இதைக் கேட்டால் மோகனா என்ன செய்வாள்? உடனே சண்முகத்தைப் பார்க்கப் புறப்படுவாள், வடிவாம்பாள் அம்மாள் குறுக்கே வந்து மறிப்பாள். அவளால் வெளியேயும் வரமுடியாது, உள்ளேயும் நிற்க முடியாது. ஐயோ என்று அலறுவாள். அதைப் பார்த்துக்கொண்டு நாம் மரம் போல் சும்மா நிற்க வேண்டும். நமக்கு ஏன் இந்தத் துயரம்? எங்கேயாவது ஓடிவிடுவதுதான் நல்லது" என்ற நிச்சயத்துக்கு வந்தான்.



அப்போது கோவிலில் மணி அடித்தார்கள். ஏதோ ஒரு நினைவு வரவே கோவிலின் உள்ளே ஓடினான் வாதன். அங்கே உள்ள ரணவிமோசனர் சந்நிதியில் போய் நின்றான். ரணவிமோசனர் வரப்பிரசாதி. ஆறாத புண்களையெல்லாம் ஆற்றிவைப்பார். தீராத வியாதிகளை எல்லாம் தீர்த்து வைப்பார். அவருக்கு ஒரு படி உப்பு வாங்கிப் போட்டால் போதும் என்ற நம்பிக்கை அவனுக்கு வந்தது. "சுவாமி ஆண்டவனே, சண்முகத்தின் உடல் புண்ணை ஆற்று. மோகனாவின் மனப்புண்ணை ஆற்று, வடிவாம்பாளின் ஆசைப் புண்ணை அகற்று" என்று சொல்லி நெடுஞ்சாண்கிடையாக நிலத்தில் விழுந்தான் அந்தப் பரோபகாரி. கண்ணும் கண்ணீருமாய்க் கனிவுடன் அவருக்கு நூற்றெட்டு நமஸ்காரங்கள் செய்தான். இதன் பயனாக அவன் மனத்தில் இருந்த கோழைத்தனம் அகன்றது. துணிவுடன் ஓடோடி வந்து மோகனாவின் வீட்டிற்குள் நுழைந்தான்.

"மோகனா, புறப்படு, ஆபத்து. சண்முகத்தின் உடம்பு நல்லா இல்லே" என்று உத்தரவு போட்டான்.

"அவ எதுக்குடா வரதா? உடம்பு நல்லா இல்லேன்னா டாக்டரைக் கூப்பிடறது. இவளை ஏன் கூப்பிடறே?" என்று சொல்லிக் கொண்டே குறுக்கே வந்தாள் வடிவாம்பாள். வரதன் சொல்லியதைக் கேட்ட மோகனா பக்கத்தில் இருந்த ஒரு தூணின் மேல் சாய்ந்து விட்டாள். தன் வாழ்வே அந்தரத்தில் தொங்குவது போல் இருந்தது. சாதாரணமாக அழத் தொடங்கும் அவள் இந்த அதிர்ச்சியில் திகைத்து நின்றாள். வடிவாம்பாள் ஓடி வந்து, மோகனாவைப் பிடித்தாள். "இந்தா மோகனா, என்ன இது? ஏண்டி?" என்று அவள் உடம்பைத் தொட்டு ஆட்டினாள்.

"ஐயோ அம்மா, என் மேலே உனக்கு ஆசை எனக்குக் காசு கிடைக்கணும்னு பாத்தே" என்று சிரித்தாள் மோகனா.

"தாயே பத்ரகாளி, நீதான் காப்பாத்தணும்" என்று துடித்தாள் வடிவாம்பாள்.

"அம்மா எனக்குப் புத்தி பேதலிக்கவில்லை. பைத்தியம் பிடித்தால் மனக்கஷ்டங்கள் தெரியாது. கவலைப்பட முடியாது. அவரைப்பற்றிக் கவலைப்படுவதிலேயேதான் நான் காலங் கழிக்கிறேன். அதனால்தான் நான் இன்னும் உயிரை வைத்துக்கொண்டு இருக்கிறேன். இப்போது நீ போகணும்னு சொல்லறியா, வேண்டாம்னு சொல்லறியா?"

"வேண்டாம் கண்ணு, நாம் எல்லாம் அங்கே போனா நல்லா இருக்காது அம்மா!"

"வீட்டிலே இருந்தா உங்க மக நல்லா இருக்கமாட்டா அம்மா உங்களுக்கு மோகனா வேணும்னா, அதை இப்போதாவது

அனுப்புங்க. இல்லாட்டி, தாயே குழந்தைக்குச் சத்துருவாய்ப் போவீங்க" என்று வரதன் கோபித்துக்கொண்டான்.

"சரிதாண்டா, நீ ரொம்பக் கண்டுட்டே. பெத்தவளுக்குத் தெரியாது பாரு, மகனை!"

"அம்மா, சும்மா இருங்க. காசைச் சேர்த்துச் சேர்த்து யாருக்குக் கொடுக்கப் போறீங்க? அந்த மகளோட ஆசையைக் கெடுத்து உங்க ஆசையை நிறைவேற்றுவதிலே என்ன லாபம்? உங்களுக்கு அத்தனை காசும் மிஞ்சும். அதை வைத்துக்கொண்டு வாழ மகள் கிடைக்க மாட்டாள். உங்க காலில் விழுந்து கேட்கிறேன். மோகனாவை இப்பவே அனுப்புங்க. அது போய் ஒரு வாட்டி அவரைப் பார்க்கட்டும். இல்லாட்டி இந்த வீட்டிலே இனிமே ஜாலர் முழங்காது, மத்தளம் கேட்காது, ஆடற கால் ஆடாது. தாயே என்னைப் பெத்தவள் நீ, என் தங்கச்சியைக் காப்பாத்து" என்று வரதன் வடிவாம்பாளின் காலில் விழுந்து இரு கால்களையும் பிடித்துக் கொண்டு கதறினான்.

வடிவாம்பாள் சிலை போல் நின்றாள். வரதனுடைய ஒவ்வொரு சொல்லும் அவள் காதில் ஒலித்துக்கொண்டே இருந்தன. அவனுடைய மத்தளச் சொல்லை அவள் மதித்ததே இல்லை. ஆனால் அவன் மனம் திறந்து பேசிய அன்புச் சொல் இன்று வடிவாம்பாளின் அகக் கண்ணைத் திறந்தது.

## அறுபத்து இரண்டாம் அத்தியாயம்

# உயிர் தளிர்த்தது; உணர்ச்சி பூத்தது!



சண்முகத்தின் உயிரைக் காக்கும் சஞ்சீவியைத் தேடிப் புறப்பட்ட பரதேசியார், ஓடம் போக்கி ஆற்று ஓரமாகவே நடந்து வந்தார். பச்சை செழித்த இடங்களில் ஏதோ ஒரு பச்சிலையைத் தேடினார். அது அங்கு கிடைக்கவில்லை. நேரமோ, ஆகிக் கொண்டே இருந்தது. ஒவ்வொரு நிமிஷமும் அவன் உயிருக்கு ஆபத்து என்ற எண்ணம் வரவே, அவருக்குத் திடீர் என்று ஒரு யோசனை வந்தது. உச்சியை நோக்கி பொழுதைப் பார்த்தார். அஸ்தமிக்க இன்னும் ஏழெட்டு நாழிகை இருந்தது. உடனே ஒரு முடிவுக்கு வந்தவராய்த் தஞ்சாவூர்ச் சாலையில் ஏறி நடந்தார்.

குதிரையைப் பரிமா என்பார்கள். காற்று வேகத்தில் செல்லும் என்பார்கள். அதைக்காட்டிலும் வேகமாக நடந்தார் பரதேசியார்.



காற்றின் வேகத்தைக்காட்டிலும் கருணையின் வேகம் அதிகம் போலும். திருவாரூருக்கும் தஞ்சைக்கும் ரயில் உண்டு. அவர் புறப்பட்ட நேரத்தில் ரயில் இல்லை. அப்படியே அந்த ரயில் கிடைத்தாலும் அவர் அதில் ஏறப் போவதில்லை. ஏனெனில், அந்தக் காலத்தில் தஞ்சாவூர் ரயில் வேகத்தில் பெயர் போனது. ஆனால் தாயை நாடிச் செல்லும் குழந்தையின் வேகமும், ராமனை நாடிச் செல்லும் பக்தனின் வேகமும், இரையை நாடிச் செல்லும் பருந்தின் வேகமும் அவர் நடையில் இருந்தன.

பரதேசியார் எங்கு செல்கிறார், ஏன் செல்கிறார், திருவாரூரில் கிடைக்காத எப்பொருளை நாடித் தஞ்சாவூர் செல்கிறார் என்பதைப் பார்ப்போம்.

தஞ்சையை நாடி அவர் சென்ற மூலிகையைத் தந்தி கொடுத்துத் தருவிக்க முடியாது. ஏனென்று கேட்டால் அக்காலத்தில் நம் நாட்டு வைத்திய சாஸ்திரத்தில் மூலிகையின் பெயர்கள் எல்லாம் மறைபொருளாக இருந்து வந்தன. கையாந்தகரை என்றால் கரிசிலாங்கண்ணி என்று அக்காலத்தில் புரியாது. இக்காலத்திலே அப்படியல்ல; இரண்டுமே புரியாது!

இன்று நம் நோய்கள் விஷயத்தில் நம் தலையெழுத்துப் பிறரை நம்பி இருக்கிறது. நம் உடல் நோய்களைத் தீர்ப்பதற்கு நல்ல மருந்து வேண்டுமானால் நாம் பிற நாட்டின் கையைத்தான் பார்க்க வேண்டி இருக்கிறது. அக்காலத்திய நிலை அப்படி இல்லை.

சோற்றுக்கு நெல் விளைய வயல்கள் இருப்பது போல் நோய்க்குப் பச்சிலை விளையும் பல தோட்டங்கள் இருந்தன. ஊருக்கு ஊர் பல தருமவான்கள் மூலிகைத் தோட்டங்கள் வைத்து இருந்தார்கள். அவைகளுக்குத் தண்ணீர் பாய்ச்சித் தக்க காவல் காத்து வளர்த்து வந்தார்கள். இறைவனுக்காகப் போடும் நந்தவனங்களில், நடமாடும் தெய்வங்களாகிய மாந்தர் பிணி தீர்க்க என்றே ஒரு பகுதியை ஒதுக்கி இருந்தார்கள். விஷக்கடி, வெட்டுக் காயம், தேன் கொட்டு முதலியவைகளுக்கெல்லாம் நம் நாட்டு வைத்திய முறைகளில் பல பச்சிலைகளைக் கையாண்டு வந்தார்கள். ஊருக்கு ஊர் சில தனவந்தர்கள், வீடுகளில் பேறு காலத்திற்கு வேண்டிய கஸ்தூரி, கோரோசனை போன்ற மருந்துகளையும், காரச் சரக்கு மருந்து களையும் எந்த நேரத்தில் எழுப்பிக் கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் இலவசமாகக் கொடுத்து வந்தார்கள். ஆதலால் 'மருந்து வாங்கப் பணமில்லாமல் நோயாளி இறந்தான்' என்ற அவச்சொல் அக்காலத்தில் கிடையாது. கண்ட மருந்தைத் தின்று இறந்தான் என்று வேண்டுமானால் பேச்சு இருந்திருக்கலாம்.

"பச்சைவெட்டு மருந்து தின்றார்: அதனால் பல், கொட்டிவிட்டது. நேர்வாளம் அதிகமாப் போச்சு. அதனாலே ஆளே

போச்சு' என்ற குரல்கள் சில சமயங்களில் கேட்பதுண்டு. ஆனால் அவையெல்லாம் அனுபவமற்ற சில வைத்தியர்களால் வந்த அவச்சொற்களே தவிர, நம் நாட்டு ஏழைகளுக்கேற்ற வைத்தியம் அக்காலத்தில் நம் நாட்டில் இருந்துதான் வந்தது.

அதோடு, வைத்தியத்தால் தமிழும் வளர்ந்தது. மாட்டு வாகடம் முதல், மனித வைத்தியம்வரை அத்தனை வைத்திய நூல்களும் பாட்டு வடிவத்தில்தான் இருந்தன.

ஆஹா ! அந்தக் காலத்திலே ஒரு வீட்டில் நோய் வந்துவிட்டால் சுக்கு, திப்பிலி மணம் ஊரே மணக்கும். வீட்டில், மருந்து தின்டினால் அந்த மருந்தை நாமும் தின்ன மாட்டோமா என்று தோன்றும். செந்தூரத்தில் தேன் மணக்கும். தைலத்தில் பால் மணக்கும், பாட்டில் வாய் மணக்கும், லேகியத்தில் நெய் மணக்கும்.

"சுவிக்கம், திரி, புகை, கலுவம், புடம், கட்டு, உரைத்தல், பஸ்பம், மெழுகு, மாத்திரை முதலான வார்த்தைகள் சர்வ சாதாரணமாக இருக்கும்.

இன்று நம் வைத்திய நிலை அப்படி இல்லை. தலைவலிக்கொரு மாத்திரை, இடுப்பு வலிக்கு இன்னொரு மாத்திரை என்றாகிவிட்டது. கை நாடி பார்ப்பதே இல்லை. மோட்டாரைப் பிரித்து மாட்டுவது போல் அவர்கள் மனித உடலைப் பிரித்து மாட்டுகிறார்கள். நம் உடம்பில் உள்ள அத்தனை உறுப்புகளுக்கும் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் மருந்துகளைச் செய்து வைத்திருக்கிறார்கள். உலகத்தை அழிக்கும் அணுகுண்டுகளைக் கண்டுபிடித்த அதே நாட்டு மேதாவிகள், உலகத்துக்கே ஒரு சஞ்சீவியாகிய 'பென்சிலி'னைக்கூடக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இன்று நம் நாட்டு மூலிகை வைத்தியமோ மூல வேருடன் அழிந்துவிட்டது.

அக்காலத்தில், தஞ்சைமாநகர், நாட்டு வைத்தியத்தில் பெயர் பெற்றிருந்தது. சரஸ்வதி மஹாலில் ஏராளமான வைத்திய ஏட்டுச் சுவடிகள் இருந்தன. அந்த ஏடுகளில் கண்ட மூலிகைகளில் பல அங்கு ஒரு தோட்டத்தில் பயிராக்கப்பட்டிருந்தன.

ஒரு மகான் அப்போது தஞ்சையில் வாழ்ந்து வந்தார். ஏசுநாதரின் போதனைகளில் ஈடுபட்ட அந்தப் பண்டிதர் மனித வர்க்கத்தின் நலனுக்கு மத மாற்றம் செய்யாமலே உழைத்தார். உடற்பிணியைத் தீர்த்தார். சஞ்சீவி கோரோசனை போன்ற அவசியமான மாத்திரைகளைச் சொற்ப விலைக்கு விற்று ஏழைக் குழந்தைகளைக் காப்பற்றினார். கருணையால் விளைந்த ஆனந்தத்தை அனுபவித்தார்.

சுமார் இருபது ஏக்கரா நிலத்தில் ஒரு பெரிய தோட்டம் வைத்தார். அதில் செடிகளைச் செல்லமாகப் பேணி வளர்த்தார். உலகில் உள்ள மூலிகை வகைகள் எல்லாம் அவர் தோட்டத்தில் இருந்தன. உடல் நோய்க்கு இவ்வாறு சஞ்சீவி அளித்து வந்த அவர்,



உள்ளத்திற்குச் சஞ்சீவியாக சங்கீதக் கலையைப் பல காலம் ஆராய்ந்து பல அரிய பெரிய கருத்துக்களை அவ்வப்போது வெளியிட்டு வந்தார்.

அவருடைய நற்செய்கையால் பரதேசியாருக்கு அவர் மேல் அன்பு. பரதேசியாரின் சங்கீதத்தில் அந்தப் பண்டிதருக்கு உயிர்.

திருவாரூரில் புறப்பட்ட பரதேசியார் தஞ்சையில் வந்து அவருடைய தோட்டத்தில்தான் நின்றார். பரதேசியாரைக் கண்டதும் பண்டிதர், "சுவாமி வரவேண்டும், வரவேண்டும், வரவேண்டும்" என்று உபசரித்து வரவேற்றார்.

பரதேசியாரோ, தாம் வந்த காரியத்தைக் கூறி ஏதோ ஒரு மூலிகையின் பெயரைச் சொல்லி 'அது வேண்டும்' எனக் கேட்டார்.

"சுவாமி, தங்களுக்கு இல்லாததா?" என்றார் பண்டிதர்.

பரதேசியார் உடனே ஓடிச்சென்று அங்கு இருந்த பெரிய கிணற்றில் தலை முழுகிவிட்டு, ஈரத்துணியுடன் ஒரு பச்சிலைச்செடி அருகில் சென்று நின்றார். சற்று தியானித்தார். தரையில் ஊறி அதன் வேர் எந்தப் பக்கம் போகிறதென்று பார்த்தார். அவருக்குத் திருப்தி ஏற்பட்டது. அதில் நாலே நாலு பச்சிலைகளைக் கிள்ளினார். பண்டிதரிடமே இரண்டு மிளகை வாங்கிப் பச்சிலையுடன் வைத்து அதைத் தம் கைகளால் தேய்த்தவண்ணம், மறுபடியும் திருவாரூரை நோக்கி நடையைக் கட்டினார். அவர் வேட்டியின் ஈரம் உலரவில்லை. அதற்குள் பாதி வழி வந்துவிட்டார்.

உடலில் ஊசி குத்த இடம் இல்லை என்று சில நோய்களின் போது தெரிவிப்பார்கள். ஆனால் திருவாரூர் டாக்டர், சண்முகத்தின் உடலில் ஊசியால் குத்திக் குத்தி அவனை வேர்க்காவடி எடுப்பவன் போல் ஆக்கிவிட்டார். மைனருடைய ஜாக்கிரதையான ஏற்பாட்டின்படி மூன்று மணிக்கு ஒரு தடவை அவன் உடம்பில் ஏதோ மருந்து ஏற்றியவண்ணம் ஜீவசக்தியைப் பிடித்து நிறுத்திக்கொண்டிருந்தார் டாக்டர். இம்மாதிரி அவன் உடம்பைக் குத்திக் குத்திப் புண்படுத்துகிறார்களே என்று தருமனுக்குத் தாங்க முடியாத வருத்தம் இருந்தாலும் ஊசி குத்தும்போது சண்முகம் முகத்தைச் சுளிப்பதையும், முணுகுவதையும் கண்டு அவன் சற்று ஆறுதல் அடைந்தான். தம்பிக்குத் தன் நினைவு இருக்கிறது என்ற அற்ப சந்தோஷந்தான் அது.

சண்முகத்திற்குப் பேச்சு மூச்சு இல்லை. முக்கல் முனகல்கூட அதிகமாக இல்லை. ஆனால், எப்பொழுதாவது அவன் பார்க்க விழிப்பான். கண்கள் எதையோ தேடும். உடனே பக்கத்தில் யாராவது சென்று, "என்ன செய்கிறது!" என்று கேட்பார்கள். பதில் இருக்காது. சற்று நேரத்தில் கண்ணை மூடிக்கொண்டுவிடுவான். இப்படியே நாள் முழுவதும் படுக்கையில் கிடந்தான் சண்முகம்.

மாலை சுமார் ஏழு மணி இருக்கும். வெப்பம் அடங்கி, குளுமை படரும் நேரம். இரவில் மலரும் மலர்கள் இதழ் விரியும் தருணம்

அப்போது சண்முகத்தின் கண்கள் மறுபடியும் திறந்தன. நோயாளிக்கு அருகில் இருப்பவர்களுக்கு அந்நேரத்தில் ஏற்படும் கவலை எல்லோருக்கும் இருந்தது. இரவுப் பொழுது நல்ல பொழுதாகக் கழியவேண்டுமே என்ற திகில்தான் அது.

சண்முகத்தின் கண்கள் வழக்கம்போல் இந்தத் தடவை ஒளியிழந்து இருக்கவில்லை. மருள விழிக்கவில்லை.

தருமன் ஒரு சிறிய உத்தரணியினால் பாலை எடுத்து வாயருகில் கொண்டுவந்தான். சண்முகம் வாயைத் திறக்கவில்லை. ஆனால் அந்தச் சமயத்தில் அவன் கண்களில் சற்று அதிகமான ஒளி உண்டாயிற்று. அவனுடைய ஜன்னி வேகத்தில் தன் கண்களுக்கு முன்னே யாரோ ஒரு பெண் வந்து நிற்பது போல் அவனுக்குத் தோன்றியது. 'நாயனக்காரரே, உடம்பு எப்படி இருக்கிறது?' என்றாள் அந்தப் பெண்.

"அதுதான் கிடக்கிறேன், பார்க்கிறாயே! நீ எப்படி இங்கே வந்தாய்?" என்று சண்முகத்தின் மனம் கேட்கிறது.

"உங்க உடம்பு இப்படி இருக்கும்போது நான் அதைக் கேட்டுக் கொண்டு சும்மா இருக்க முடியுமா? கேள்விப்பட்டேன்; ஓட்டமாய் ஓடி வந்தேன். நான் அப்பொழுதே சந்தேகம் கூடாது என்று சொன்னேனே, கேட்டீரா? இப்பொழுது என்ன ஆயிற்று? மன்னிப்புக் கேட்க நினைக்கிறீர். ஆனால், வாய் பேச வரவில்லை. பார்க்க நினைக்கிறீர். அதைச் சொல்லக் குரல் எழும்பவில்லை. கட்டி அணைத்துக்கொள்ள நினைக்கிறீர். உம்முடைய கைகள் உம் வசத்தில் இல்லை. காலம் தவறிய பின் கலங்கிப் பயன் என்ன? இந்த உடம்பும் மனமும் எப்பொழுதும் நம்மிடந்தானே இருக்கப்போகிறது; சந்தேகப்படலாம் என்று பிடிவாதம் பிடித்தீரே! 'எப்போதாகிலும் திடீரென்று நமன் வருவான்' என்ற எண்ணம் சிறிதும் இல்லாமல் நாளைக் கடத்தினீரே! நான் சொல்லச் சொல்லக் கோபித்தீரே! 'உன்னைப் போல் அவளும் ஒருத்தி' என்று என் மேல் எரிந்து விழுந்தீரே! உமக்கு இருந்த ஆத்திரத்தில் என்னையும் 'புறப்படு, புறப்படு' என்று கூறிப் புறப்படச் செய்தீரே! ஐயோ, நீரா ஆண்பிள்ளை? உறுதி வேண்டாமா? கோழை! உம்மாலே அவள் கெட்டாள். உம்மாலே நானும் மதுரைச் சிறையில் இருந்து தத்தளிக்கிறேன். நீரோ, இப்படிக் கிடக்கிறீர்! இனி என்ன செய்வீர், இனி என்ன செய்வீர்?" என்று ரமாமணி ஏசுகிறாள்.

சண்முகத்தின் இரு விழிகளிலும் நீர் சுரக்கிறது. ஆம், ரமாமணி மதுரைச் சிறையில் கிடந்தாலும் இப்போது அவன் மனத்திரையில் வந்து நிற்கிறாள்.

"ஐயோ! அவள் அன்றே சொன்னாளே, அதைக் கேட்காமல் போய்விட்டேனே! இனி எப்படி மோகனாவைத் தேற்றுவேன்?" என்ற சிந்தனை ஓடுகிறது அவன் உள்ளத்தில்.



'ரமாமணி, நீ மட்டும் வந்தாயா? மோகனா வரவில்லையா?'

'அவள் ஏன் வருவாள்? நேற்று உன்னிடம் கெஞ்சினாளாமே, நீ இரக்கம் காட்டினாயா? இப்பொழுது வந்த புத்தி நேற்று வந்திருக்கக் கூடாதா? கடைசியில் விளக்கு படர்ந்து எரிவது போல் இப்போது தான் ஞானம் வருகிறதா? திரி தன்னையே எரித்துக்கொள்வது போல இப்போதுதான் நீ தன்னை உணருகிறாயா? என்னை அறிகிறாயா? தான் என்பதை அழித்துக்கொள்கிறாயா? அதோ பார் அவளை, அலறிக் கொண்டு நிற்கிறாள்' என்கிறாள் ரமாமணி.

ஆம் அவன் கண்களில் இப்போது மோகனா தோன்றிவிட்டாள். ஆனால், அந்தப் பசுமை நிறைந்த பூங்கொடி அல்ல; பறித்து எறியப்பட்ட அல்லித்தண்டு. இதழ் விரிந்து எழில் பரந்த கமல மலரல்ல; இதழ் எல்லாம் உதிர்ந்த ஒரு காம்பு. அவள் அழகு எங்கே, அவள் சிரிப்பு எங்கே, அவள் ஒயில் எங்கே! ஐயோ, அந்த மோகனாவின் மோகனப் புன்னகை எங்கே?... என்ன, நமக்குத்தான் கண் பஞ்சடைந்திருக்கிறதா? பட்டுப்புடவை இல்லை. கட்டுக்கட்டாய் தலையில் மலர் இல்லை. உடலில் ஒரு நகையும் இல்லை. நெற்றியில் பொட்டுக்கூட இல்லை. அழகர் கோயில் சங்கிலியை மட்டும் அவள் அணிந்திருக்கிறாள்.

அவளைக் கண்ட சண்முகம் அன்போடு "மோகனா, வா, என் அருகில் வா' என்று அழைக்கின்றான்.

'நீ எங்கு இருக்கிறாய்? நான் எப்படி உன் அருகில் வருவது?' என்கிறாள் மோகனா.

தான் உயிரோடு இருக்கிறோமா, இல்லையா என்ற சந்தேகம் வருகிறது அவனுக்கு. ஆனால், எதிரில் நிற்கும் மோகனாவைக் கண்டவுடன் உயிருடன்தான் இருக்கிறோம் என்ற நிச்சயத்திற்கு வருகிறான். 'மோகனா, என் மேல் கோபமா?'

'இல்லையே!'

'எங்கே, உன் வாயைத் திறந்து சிரி!'

'சிரிப்பா? அதைக் காணோமே, அதை யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டார்களே!'

'எங்கே உன் அழகெல்லாம்?'

'அதையும் யாரோ திருடிவிட்டார்கள்.'

'எங்கே உன் ஆனந்தம்?'

'அதையும் யாரோ பறித்துக்கொண்டு போய்விட்டார்கள்.'

'யார் அந்தத் திருடன்? என் மோகனாவின் எழிலைப் பறித்தவன் யார்? அவள் தலையில் சூட்டிய மலரைப் பறித்தவன் யார்? அவள் மலர் விழியில் இட்ட மையைக் கவர்ந்தவன் யார்? மது ஒழுகும் புன்சிரிப்பைக் கொள்ளை கொண்டவன் யார்? மோகனா, சொல், யார் அந்தப் பாவி? யார் அந்தப் பாவி?

மோகனா பதில் சொல்லாமல் நிற்கிறாள். குலுங்கக் குலுங்க அழுகிறாள் பிறகு. 'நீங்கள்... நீங்களேதான்!' என்கிறாள். 'என் எதிரில் நீங்கள் வந்த அன்றே என் அழகை இழந்தேன். என் எதிரில் நீங்கள் வந்த அன்றே என் இதயத்தை இழந்தேன். என் களிப்பை இழந்தேன். என் வாழ்வைக் குரங்கின் கைப் பூமாலையாக ஆக்கினீர். பிய்த்து எறிந்தீர். என் ஆசை இதயத்தைக்கூட என்னிடம் திருப்பித் தராமல் நீர் எடுத்துக்கொண்டு ஓடிவிட்டீர். கோயிலில் என்னைக் குற்றம் சாட்டினீர்களே, நீங்கள் குற்றவாளியா, நான் குற்றவாளியா, நினைத்துப் பாரும்' என்று கோபிக்கிறாள். அடுத்த கணமே அன்புடன் 'அத்தான், அத்தான்! என் அழகைக் கொடு. இளமையைக் கொடு. என் அன்பைக் கொடு. என் வாழ்வைக் கொடு' என்று எட்டி நின்று அலறுகிறாள் மோகனா.

இதைக் கண்ட சண்முகம் திகைக்கிறான். அவன் நெஞ்சை அடைக்கிறது. மேல்மூச்சு வாங்குகிறது. மிரள மிரள விழிக்கிறான். அன்பெனும் சாவி அவன் இதயப் பூட்டைத் திறக்கிறது. அடிவயிற்றில் இருந்து ஒரு நாதம் கிளம்புகிறது. "ஆ மோகனா, மோகனா!" என்று அலறுகிறான்! ஆனால், குரல் வெளியே வரவில்லை.

அப்போது வாயிற்கதவு திறந்தது. "ஐயோ, உடம்பு எப்படி இருக்கு?" என்ற குரல் கேட்டது. எல்லோரும் திரும்பினார்கள். "அத்தான், அத்தான்!" என்று அலறியவண்ணம் சரேல் என்று மோகனாம்பாள் ஓடி வந்து அவன் அருகில் நின்றாள். அவன் விழிகள் பரக்கப் பார்த்தபடி இருந்தன. "இதோ, நான் வந்திருக்கிறேன், அத்தான்! நீங்கள் என்னை மன்னிக்க வேண்டாம், வாய் திறந்து பேச வேண்டாம், வா என்று சொல்ல வேண்டாம். என்னைப் பாருங்கள். போதும். அத்தான்! என்னைப் பாருங்கள்" என்று கதறினாள் மோகனா.

உடனே, அழக்கூடாது என்ற எண்ணத்தில், கண்ணைத் துடைத்துக்கொண்டு, அவன் உடம்பைத் தொட்டாள். திடுக்கிட்டாள். "அம்மா! ஐயோ" என்றாள். "அம்மா, உடம்பு ஜில்லிட்டிருக்குதே! சூடே இல்லையே அம்மா!"

"அட சும்மா இரு தங்கச்சி. உன் கையிலே இருக்கிற கண்ணீரோடே தொட்டுப் பார்த்தா...!" என்று கண்ணீர் வடியக் கூறினான் வரதன்.

ஆம், அந்தப் பேதை, கண்களில் பொங்கி வழிந்த கண்ணீரைத் துடைத்த கையால் அவனைத் தொட்டுவிட்டாள். உடனே தன் கையைத் துடைத்துக்கொண்டாள். அவன் உடம்பை மறுபடியும் தொட்டுப் பார்த்தாள். உடம்பில் சிறிது சூடு இருந்தது. ஆனால் அவள் விரும்பியது வெறும் சூடல்ல. தன் கையால் தொட்டால் அவன் உடம்பு அசையும், உணர்வு வரும் என்று நினைத்தாள். ஏமாந்தாள். சண்முகம் அசையவில்லை. அவன் முகத்தைப் பார்த்தாள். கண்கள்



விழித்தபடிதான் இருந்தன. பாவையும் ஆடியது. அவள் உருவங்கூட அதில் தெரிந்தது. ஆனால், அவனுடைய புறக்கண்ணுக்கு அவள் அருகில் இருப்பதுகூடத் தெரியவில்லை. ஒரு வேளை, அவன் மனத்துக்கு தெரிந்திருக்குமோ?

அப்படித் தோன்றியிருந்தால் கண்களில் ஒளி வந்திருக்குமே. உதடு அசைந்திருக்குமே. உடம்பில் சிறிது மாறுதல் இருந்திருக்குமே என்று நினைத்தாள். அதோடு கூடவே இன்னொரு எண்ணமும் வந்தது. 'நாம் அவரைத் தொடுவதே உடம்புக்கு இடையூறாக முடியுமோ? நம்மை அவர் வெறுக்கிறாரே, நாம் அவர் கண் எதிரில் நிற்பதைக் கண்டு அவர் மனத்தில் அதிர்ச்சி ஏற்படுமோ!' என்று எண்ணினாள். 'எது எப்படி இருந்தாலும் பாதகமில்லை. அவர் பிழைத்தால் போதும். என்னை அவர் ஏறெடுத்துக்கூடப் பார்க்க வேண்டாம். அவர் விழித்துப் பார்த்து 'சீ' என்று என்னை ஏசட்டும். 'ஏன் வந்தாய்? போ வெளியே' என்று வேண்டுமானாலும் கூறட்டும்' என்று எண்ணினாள். ஆனால், மனம் கேட்கவில்லை. மறுபடியும் அவளை அறியாமல் அவன் அருகில் வந்தாள்.

"அத்தான், அத்தான்" என்று அழைத்தாள். 'அத்தான் என்ன? அவரை எப்படி நான் அந்தப் பெயர் சொல்லி அழைப்பது? நான் மாத்திரம் உறவு கொண்டாடினால் போதுமா?' என்று எண்ணி அவள் மனம் பொருமியது.

"ஐயா, ஐயா நாதஸ்வரக்காரரே!" என்று பல்லைக் கடித்துக் கொண்டே தன்னை அடக்கிக்கொண்டு கூப்பிட்டாள். அப்போது இம்மாதிரிக் கூப்பிட நேர்ந்ததில் உள்ள வருத்தம் மேலும் அவள் நெஞ்சைப் பிளந்தது. "இந்தாங்க, கண்ணை முழிச்சுக்குங்க. யார் வந்திருக்கிறது என்று பாருங்கள்" என்று சொல்லி அவனையே பார்த்தாள். அப்போது அவன் மறுமுறை கண்ணை மூடித் திறந்தான்.

வரதன் கையில் வைத்திருந்த ஒரு சிறு கூடையைத் தன் கையில் வாங்கினாள். அதில் இருந்து இரண்டு நார்த்தம் பழங்களை எடுத்து, கையால் அன்புடன் உரித்தாள். "இதைச் சாப்பிடுங்கள். இந்தாங்க" என்று ஒரு சுளையை எடுத்து அவன் வாயில் ஊட்டினாள்.

அவன் வாய் திறக்கவில்லை. அவளுக்கு என்னவோ தோன்றியது. நெஞ்சு பொருமியது. சில நாளைக்கு முன் சண்முகம் கையால் தனக்கென்று தஞ்சாவூரிலிருந்து வாங்கி வந்த திராட்சைப் பழங்களைத் தன் தாய் குப்பையில் கொட்டிய காட்சி தோன்றியது. 'அதைப் போல நானும் இந்தப் பழங்களைக் குப்பையில் போடும்படி வந்துவிடக்கூடாதே! கொல்லையில் இருந்து என் கையால் அவருக்கு என்று பறித்து வந்தேனே!' என்று துடித்தாள்.

"ஐயோ, அத்தான்" என்று அவளையும் அறியாமல் அலறினாள்.

அப்போது கதவைத் திறந்துகொண்டு, "என்ன அம்மா?" என்று கேட்டவண்ணம், பரமானந்தப் பரதேசியார் உள்ளே வந்தார். அவர்

கண்கள் சிவந்திருந்தன. உடல் முழுவதும் செம்புழுதி படிந்திருந்தது. முழங்கால்வரை சிவப்பு மண் ஒட்டியிருந்தது. வெள்ளை வேட்டிப் பரதேசியாக விளங்கியவர் இப்போது பொன்னாடையுடன் விளங்கினார். அந்தச் சிவப்புக் காவிக்குள் அருள் பழுத்த பழம் போல் அவர் உருவம் அனைவருக்கும் தோன்றியது.

"சாமி, நீங்கள்தான் காப்பாற்றவேண்டும்" என்று இரு கைகளையும் கூப்பினாள் மோகனா. ஆனால், பரதேசியாரோ, முதலில் சண்முகசுந்தரத்தின் கையைப் பிடித்து நாடியைப் பார்த்தார். சற்று நேரம் சிந்தனை செய்தார். வடிவாம்பாள் கைகளைக் கட்டிக் கொண்டாள். வரதன் அவரையே நோக்கினான். எல்லோரும் அவர் அருகில் வந்தார்கள்.

"சாமி, எப்படி இருக்கிறது? என் உயிரையே வேண்டுமானாலும் தருகிறேன். அவரைக் காப்பாற்றுங்கள்" என்றாள் மோகனா.

"மோகனா, அவன் விதியை அவன்தானே அனுபவிக்க வேண்டும்? உன் உயிரை எதற்கம்மா கொடுக்கிறாய்?"

"என்னால்தான் அவருக்குக் கத்திக் குத்துப் பட்டிருக்க வேண்டும். அவருக்கு இந்த உலகத்தில் எதிரிகளே கிடையாது."

"உனக்கு மாத்திரம் எதிரிகள் உண்டா?"

"என்னை ஆண்டவன் அழகு இல்லாமல் படைத்திருந்தால் எல்லோருடைய கருணைக்கும் நானும் பாத்திரமாகி இருப்பேன். நான் பெண்ணாகப் பிறந்திருக்காவிட்டால் எல்லோருடைய இரக்கத்துக்கும் பாத்திரமாகி இருப்பேன். பாழும் பெண் ஜன்மம்! அவரை ஒழித்துவிட்டால் என்னை அடையலாம் என்று யாரோ ஒரு சத்துரு அவர் மேல் கத்தியை எறிந்துவிட்டான்.

"இதற்குக் காரணம் நான்தான். அவரால் எனக்குக் கிடைத்த பரிசுகள் பட்டும் சங்கிலியும். என்னால் அவருக்குக் கிடைத்த பரிசு இந்தக் கத்திக்குத்து. சாமி, என் உயிரைக் கொடுக்கிறேன், அவரைக் காப்பாற்றுங்கள், அவரைக் காப்பாற்றுங்கள்!" என்று காலில் விழப்போனாள் மோகனா. பரதேசியார் அவளைத் தூக்கினார்.

"குழந்தாய், உனக்குக் காலில் மட்டும் ஞானம் இருந்தால் போதாது. கருத்தில் இருக்க வேண்டும். கையில் லயம் இருந்தால் போதாது. மனம் லயிக்க வேண்டும். பேதைமையால் ஏன் பிதற்றுகிறாய்? உயிரைக் கொடுப்பதும், எடுப்பதும் நம் கையில் இல்லை அம்மா. அடுத்த வீட்டில் பால் வாங்கி வந்து எனக்குப் பருகக் கொடுப்பது போல, உன் உயிரை இரவல் வாங்கிச் சண்முகத்துக்குக் கொடுக்கும் அளவுக்கு இறைவன் ஏழையல்ல. எவ்வுயிரையும் படைப்பவனும் அவன், துடைப்பவனும் அவன். அவன் மனம் வைத்தால், செத்த பிணத்துக்குக்கூட உயிர் கொடுப்பான். அன்றைக்குச் சிறுத்தொண்டனைக் காக்க வரவில்லையா? அவனை வேண்டிக் கொள் அம்மா."



"சாமி, அவர் உடம்பில் சூடே இல்லையே! அவர் பேசவே இல்லையே! கண் விழித்தபடி இருக்கிறது. பார்வையே இல்லையே!"

"ஆம் குழந்தாய். நீ இங்கு வராமல் இருப்பாய். உன்னைக் காணும் ஆசையில் அவன் உயிர் துடித்துக்கொண்டிருக்கும். அதற்குள் நாம் வந்துவிடலாம் என்றுதான் மருந்து கொண்டுவரப் போனேன். எனக்கு முன்னால் நீ வந்துவிட்டாய். ஆபத்தும் சம்பத்தும் சொல்லிக் கொண்டா வருகின்றன? உன்னை அவன் பார்த்திருக்கலாம். பார்த்து விட்டோமே என்ற இன்பத்தில் இனி அவன் இறைவனிடம் லயித்தாலும் லயிக்கலாம். அல்லது பார்த்த ஆசையில், நீர் வார்த்த செடியைப் போல உன் அன்பால் அவன் பிழைத்தாலும் பிழைக்கலாம். வைத்தியன் மருந்தைத்தான் கொடுப்பான் அம்மா! உயிரைக் கொடுக்க முடியாது" என்று பரதேசியார் சொல்லவே வடிவாம்பாள் ஒரு முறை சூள் கொட்டினாள்.

'இவ்வளவுதானா? இவரும் மருந்துதானா குடுக்கப் போறாரு? நாம் என்னமோ சித்தர் கித்தரு, தொட்டா பொழைச்சுடுவான்னு நினைச்சோமே! சே, சே, ஒரு சிப்பு வாழைப்பழமில்ல வீணா போச்சு' என்று நினைத்தாள். உடனே இவ்வாறு நினைத்தது தவறோ என்ற பயம் வரவே, கையை இறுகக் கட்டிக்கொண்டாள். ஆனால் மோகனாவோ, "சாமி, என்ன சாமி இப்படிச் சொல்லுகிறீர்கள்?" என்று துடித்தாள்.

"குழந்தாய், இன்பதுன்பங்களை எதிர்த்து நிற்கும் அறிவுதான் அறிவு. விவேகம் இல்லாவிட்டால் வித்தையால் பயன் இல்லை. இறைவனை நம்பு. 'அவனைத் துதி' என்று அழுத்தமாய்ச் சொல்லி விட்டு, "இங்கு ஒரு தீப்பெட்டி இருந்தால் கொண்டுவாருங்கள்" என்றார் பரதேசியார்.

தருமன் ஓடிப் போய், ஒரு தீப்பெட்டியைக் கொண்டுவந்தான்.

அவர் என்ன மருந்து கொடுக்கப்போகிறார், சண்முகம் பிழைப்பானா என்று தருமன், வரதன், முத்துராக்கு, ஏன் வைத்தி உள்பட எல்லோரும் அவரைப் பார்த்தார்கள்.

பரதேசியாரின் கையில் இரண்டு திரிகள் இருந்தன. துணியைச் சுருட்டித் திரித்த திரிகள்தாம் அவை. அவர் தஞ்சையில் பறித்த மூலிகையைச் சாறு பிழிந்து அதனுடன் எதையோ கூட்டி அந்த மருந்தை ஊட்டியிருந்தார். ஒரு திரியைப் பற்ற வைத்து, சண்முகத்தின் மூக்குக்கு நேரே பிடித்தார்.

திரி, புகைய ஆரம்பித்தது. அந்தத் திரியிலிருந்து வரும் புகையை அவன் மூச்சை இழுக்கும்போது மூச்சுக் காற்றுடன் உள்ளே செலுத்த ஆரம்பித்தார். எல்லோரும் அவரையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர் முகத்தில் கவலை தெரிந்தது. சற்று நேரம் ஆயிற்று.

"சுவாமி, நான் என்ன செய்வேன்?"

"இறைவனைத் துதி அம்மா. அவனை வேண்டிக்கொள். மருந்தும் மந்திரமும் சோட்டும்."

'எப்படி வேண்டிக்கொள்வேன் சுவாமி? என் மனம் என்னிடத்தில் இல்லையே! என்ன செய்யவேண்டும் சுவாமி?"

"ஆடு —— ஆடு. இறைவன் அருளை வேண்டி ஆடு சித்தத்தை சிவன்பாலே நிறுத்தி ஆடு நான் பாடித் தொழ வேண்டும். நீ ஆடித்தான் தொழ வேண்டும். ஆரூரான் மூச்சுக் காற்றாகத்தான் ஆடுகின்றான். அவனை எண்ணி நீயும் ஆடு சண்முகத்தின் மூச்சை திருப்பித் தர வேண்டும் என்று வேண்டிக்கொண்டு நாட்டியம் செய்" என்று வருத்தத்துடன் பரதேசியார் சொன்னார். மோகனா ஒன்றும் புரியாமல் கல் போல் நின்றாள்.

"நல்லா இருக்குது ஆடற இடம்!" என்றாள் வடிவாம்பாள்.

"வடிவாம்பா, ஆடுவதற்கு அனுமதி கொடு. அவன் ஆடினால் ஒரு உயிர் பிழைக்கும். சற்றுக் கருணை காட்டு. ஆடச் சொல்."

"என்ன சுவாமி, இப்படிச் சொல்லறீங்களே! அந்த ஆளு இப்படிக் கிடக்கிறபோது அவளுக்குத்தான் எப்படி ஆட மனசு வரும்? நான்தான் எப்படி ஆடச் சொல்றது? இன்னொருத்தர் வீட்டிலே வந்து ஆடலாமா? ஆடறத்துக்கும் ஒரு இடம் கிடையாதா?"

"இதைவிடப் பெரிய இடம் ஏதம்மா இருக்கிறது? ஆண்டவன் சன்னிதியைக்காட்டிலும் அன்பின் சன்னிதி பெரிது. நேற்றுவரை உன் சொல்படி உன் மகள் ஆடினாள். ஆனால், எப்போதும் தாய் சொல்படி மகள் ஆட மாட்டாள். இறைவன் சொல்படி ஆடும் பிறவிகளைப் போல் அவளும் இன்னொருவன் சொல்படி ஆடும் காலம் வரும். மகளிடம் தாய்க்குள்ள கடமை எந்த அளவு என்பதை நீ உணர வேண்டும்" என்று அவர் கடிந்து சொல்லவே, மோகனா தன்னை மறந்தாள்.

"வரதா! ஓடிப்போய் என் சலங்கையை எடுத்துக்கொண்டு வா" என்று திரும்பி, பக்கத்தில் வரதன் இருப்பதாக எண்ணி உத்தரவு இட்டாள். ஆனால், வரதன் அருகில் இல்லை. வாசலில் இருந்து உள்ளே ஓடி வந்தான். தன் கையில் இருந்த சலங்கையை அவளிடம் கொடுத்தான்!

"அதற்குள்ளே எப்படி எடுத்து வந்தாய்?"

"சாமி உன்னை ஆடச் சொல்றபோதே, நான் வெளியே ஓடி விட்டேனே! வீட்டுக்குப் போய்க் கொண்டாந்தேன் —— ஆடு தங்கச்சி, ஆடு."

"இது என்ன வேடிக்கை! ஒருவன் மரணப் படுக்கையில் கிடக்கிறான். பக்கத்தில் ஒருத்தி ஆடிக்கொண்டு இருப்பதா! எங்கேயும் இது நடக்குமா?" என்று எல்லோரும் வியப்புடன் விசித்திரமாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அறை முழுவதும் ஒரு



மணம் கமழ்ந்தது. அது சாம்பிராணியின் மணமா, அகில் கட்டையின் மணமா அல்லது தெய்வ மணமா? எது என்று எவராலும் சொல்ல முடியாதபடி அமைந்திருந்தது. அந்தத் திரியின் இருந்து வந்த புகைதான் அது அறை முழுவதும் சிறு புகை இருள் போல் பரவியது. அதன் நடுவே சுடர் போல் பரமானந்தப் பரதேசி ஒரு ஒளிப்பிழம்பாக பத்மாசனமிட்டு அமர்ந்து காட்சி அளித்தார். தட்சிணாமூர்த்தியே எதிரில் வந்து அமர்ந்திருப்பதுபோல் அவருடைய திருமுகத்தில் ஒரு தெய்வீகக் களை தவழ்ந்தது.

பரதேசியார் கையில் இருக்கும் திரியை நோக்கினாள் மோகனா. அந்தத் திரியில் இருக்கும் தீச்சுடர் அவளுக்கு உயிரொளியாய்த் தோன்றியது. 'ஒரு தீப்பொறி போன்றதுதானே உயிர்! அதை அணையாமல் காப்பவன் யார்? சிவபெருமானே! சண்முகத்தின் உயிரைக் காப்பாற்று! என் வாழ்வின் ஒளியை அணையாமல் காப்பாற்று! என் வாழ்க்கையில் இருள் படாமல் காப்பாற்று!

"இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே"

"மனத்தில் ஒளி நீ. மனத்துயர் போக்கும் ஒளியும் நீ. வாக்கில் ஒளி நீ, வழி காட்டும் சோதி நீ. காணும் பொருள் நீ. கண்ணுக்குள் ஒளியாகி நின்று காணச்செய்வதும் நீ சிவபெருமானே, சொற்றுணை வேதியனே, சோதி வானவனே. நற்றுணையாகிய நமச்சிவாயமே. நீயே அபயம். கல்லைக் கட்டிக் கடலில் வீழ்த்திய நாவுக்கரசனைக் காப்பாற்றிய நமச்சிவாயப் பொருளே! என் சிந்தைக்கரசனைக் காப்பாற்று" என்ற குழைவு அந்தப் பாட்டிலே தொனித்தது. அவள் உடல் சிலிர்த்தது. இன்று அவள் குரல் பாடவில்லை. இதயம் பாடியது. அதிலே ராகம் இல்லை. ஆனால், பாவம் தலை தூக்கி நின்றது.

ஆடிக்காற்றில் அகப்பட்ட பூங்கொடி கொம்பைத் தேடுவது போல் இறைவனைத் தேடினாள். இதயம் கனிந்து ஆடினாள். சண்முகத்தைப் பார்த்தாள். 'அவன் உயிரைக் கவர வந்திருக்கும் கூற்றுவன் பெரியவனா, தான் பணியும் சிவபெருமான் பெரியவரா?' என எண்ணினாள்.

இறைவனே, உன் திருநீறு அவன் நெற்றியில் இருக்கும்போது மறலி வருவானா?

"நீற்றினையும் நெற்றிமேல் இட்டார் போலும்
நீங்காமே வெள்ளெலும்பு பூண்டார் போலும்
காற்றினையும் கடிதாக நடந்தார் போலும்
கண்ணின்மேல் கண்ஒன்று உடையார் போலும்
கூற்றினையும் குரைகழலால் உதைத்தார் போலும்"

காற்றிலும் கடிதாக வந்து நீ காப்பாற்ற மாட்டாயா? எங்களுக்கு அருள் பாலிக்கத்தானே நீ முக்கண்ணனாக இருக்கிறாய்?

**"கூற்றினையும் குரைகழலால் உதைத்தார் போலும்"**

என்று அந்த வார்த்தைகளைத் திரும்பத் திரும்பப் பாடிப் பாடி அவள் ஆடுகையில் அந்தப் பரமனையே கண்டாள் மோகனா. சிவபெருமான் கால்களால் மறலியை உதைப்பதைக் கண்டாள். தன்னை மறந்தாள். இறைவன் வசமானாள். ஆவேசத்துடன் ஆடிக்கொண்டே இருந்தாள்.

ஜல் ஜல் என்று சலங்கை ஒலி முழங்கியது.

சண்முகத்தின் மூக்கில் ஏறிய புகை அவனுக்கு மெதுவாக உணர்ச்சியைக் கொடுத்துக்கொண்டே வருகிறது. அவன் உடம்பு சிறிது ஆடியது. உயிர்ச்சத்து உண்டாயிற்று. அதுவரை தடைப்பட்டுத் தட்டுத் தட்டென்று ஓடிக்கொண்டிருந்த மூச்சு நன்றாக ஓட ஆரம்பித்தது. அவனுடைய உயிர் தளிர்த்தது; உணர்ச்சி பூத்தது. அப்போது காதிலே கல்—கல் என்ற சலங்கை ஒலி கேட்டது.

தாய் தன் குழந்தையின் காலடிச் சத்தத்தை அறிகின்றாள். கடவுள், பக்தனின் ஓலத்தை அறிகின்றார். மோகனாவின் கால் சதங்கையின் புலம்பலைச் சண்முகம் அறிந்தான். அது சலங்கை ஒலி அல்ல, காதில் புகட்டிய அமிர்தம் போல் இருந்தது. சிறிது சிறிதாக உயிர் வந்தது. மனத்தில் பற்றுதல் வர வர, அவன் உடம்பிலே பலம் வரலாயிற்று. கண்ணை விழித்தான் சண்முகம். எதிரில் அமர்ந்திருக்கும் பரதேசியாரைப் பார்த்தான். கடவுளையே காணுவது போல் இருந்தது.

கண்ணால் வணங்கினான். கண்ணீரால் கால் துடைத்தான். விழியைப் புரட்டினான். அவன் எதிரிலே மோகனா ஆடிக் கொண்டிருந்தாள். அவள் அஞ்சலி செய்வதைக் கண்ணால் கண்டான். அவளுடைய அன்பில் விளையும் அமிர்தத்தைக் கண்ணால் பருகினான்.

அவன் நா துடித்தது பேச வரும்போல் இருந்தது. மெதுவாக, "மோகனா !" என்ற வார்த்தை துள்ளிக்கொண்டு வெளியே வந்தது. "அத்தான்" என்று அருகில் ஓடி வந்தாள் மோகனா.

"எங்கே சொல்லுங்கள் ! இன்னொரு முறை கூப்பிடுங்கள் !" என்று அவன் முகத்தையே பார்த்துக் கேட்டாள்.

"மோகனா, அவனுக்கு உன் கையால் ஏதேனும் ஆகாரம் கொடு" என்றார் பரதேசியார்.

"சாமி, நார்த்தம்பழம் இருக்குது. கொடுக்கலாமா?"

"உன் கையால் நஞ்சைக் கொடுத்தாலும் அது அவனுக்கு அமிர்தமாக இருக்கும். நார்த்தம்பழம் என்ன, கொடு !" என்றார் பரதேசியார்.

ஆனந்தக் கண்ணீருடன் சுளையை அவன் வாயில் ஊட்டினாள் மோகனா. சண்முகம் சுவைத்துத் தின்றான்.

அசோக் நகர், சென்னை-83,



"தம்பீ, பிழைச்சுட்டியா?" என்று ஓடி வந்தான் தருமன்.

"பதறாதே தருமா, சிறிது நம்பிக்கை வந்திருக்கிறது. அவ்வளவு தான். அவன் பிழைத்துக்கொண்டான் என்று அதற்குள் மகிழ்ந்துவிட வேண்டாம்" என்று கையமர்த்திவிட்டுப் பரதேசியார் மோகனா பக்கம் திரும்பி "மோகனா, அவனுக்கு இப்பொழுதுதான் நினைவு வர ஆரம்பித்திருக்கிறது. ஜன்னி குறைகிறது. இனி ரத்தம் ஊற வேண்டும். உடம்பில் கொஞ்சம் தெம்பு வரவேண்டும். அப்பொழுதுதான் நாளை இரவு சென்னைக்கு அவனைக் கொண்டு போகலாம். இரவு முழுவதும் நீயும் நானும் விழித்திருக்கவேண்டும். அது உன்னால் முடியுமா?" என்றார்.

"சுவாமி, என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? எனக்கு இதைத் தவிர வேறு என்ன வேலை!"

"அப்படியானால் அருகில் வந்து உட்கார். அவன் விழிக்கும் போது நீ அடிக்கடி இந்தப் பாலை அவனுக்குக் கொடுத்துக் கொண்டிரு. இந்தத் திரி அணைந்துவிடாமல் நான் புகை போட்டுக் கொண்டே இருக்கிறேன்."

"சாமி, அது திரி அல்ல, என் வாழ்க்கையே அதுதான். அதை அணைய விட்டுவிடாதீர்கள்" என்று கெஞ்சியவண்ணம் கையில் பால் டம்ளருடன் அருகில் அமர்ந்தாள் மோகனா. 139560

## அறுபத்து மூன்றாம் அத்தியாயம் 484704

# கண்ணை விழித்தான்; அவள் கண்ணைத் துடைத்தான்!



சண்முகம் கட்டிலில் படுத்திருந்தான். மோகனா மறுபடியும் அவனுக்குத் தெளிவு வருகிறதா என்று அவனையே பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள். தருமனும் முத்துராக்குவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார்கள்.

"நீங்க வேண்டுமானா சாப்பிட்டுவிட்டு வாருங்களேன் !" என்று அவர்களைப் பார்த்து மைனர் சொன்னார்.

அதுவரை அங்கே மைனர் உட்கார்ந்து இருந்ததை மோகனா கவனிக்கவே இல்லை. இப்போது அவரைப் பார்த்தவுடன், "ஐயோ! இந்த மனிதன் இங்கேயும் வந்துவிட்டானா?" என்ற எண்ணந்தான் அவளுக்கு வந்தது. ஆனால், மைனரோ மோகனா இருக்கும் பக்கத்தைக்கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. 'எழுந்து வெளியே போய் விடுவோமா?' என்றுகூட அவருக்குத் தோன்றியது. இருந்தாலும்,

சண்முகசுந்தரம் பூரணமாகப் பிழைக்கவேண்டும் என்ற ஆசையிலே அவரால் எழுந்து போகவும் முடியவில்லை.

இப்படி எல்லோரும் விழித்துக்கொண்டிருக்கையில் வடிவாம்பாள் ஒருத்தி மாத்திரம் வழக்கம் போல் தூங்க முடியுமா? அவளும் விழித்துக்கொண்டுதான் இருந்தாள். ஆனால், என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக்கொண்டிருந்தாள்.

தனக்கு எதிரில் இருக்கும் மைனரைப் பார்க்கப் பார்க்க 'பணக்கார மைனர் தேவலையா, படுக்கையில் படுத்திருக்கும் சண்முகசுந்தரம் தேவலையா? யார் தன் மகளுக்கு ஏற்றவன்?' என்ற எண்ணந்தான் அவளுக்கு வந்தது.

எண்ணங்கள் எந்த இடத்திலும் வரும். அதற்குக் கடிவாளம் கிடையாது. ஆனால் இடம், பொருள், ஏவல் முதலியவைகளை அனுசரித்து அவைகளை மனிதன் அடக்கிக்கொள்கிறான். வடிவாம்பாளும் தன் எண்ணத்தை அடக்கிக்கொண்டாள். இருந்தாலும் அவளுக்கு அதற்கு மேல் அங்கு இருக்கப் பிடிக்கவில்லை.

" சாமி, நாங்க வீட்டுக்குப் போயிட்டு வரோம். காலம்பர உடம்பு எப்படி இருக்குன்னு சொல்லி அனுப்புங்க. மோகனாவைக் கூட்டிக்கிட்டு வரேன்" என்று விடை கேட்டாள்.

பரதேசியார் சிரித்தார். " மோகனா, உன் தாய் அழைக்கிறாள்" என்றார்.

" இவரை இந்த நிலையில் விட்டுவிட்டா? எப்படிப் போவேன் சுவாமி? அம்மா, இங்கேயே இருப்போம் அம்மா. அவருக்கு மறுபடியும் நினைவு வரவில்லை."

" இது என்ன கண்ணு பிடிவாதம்? பார்க்கணும்னு சொன்னே, கூட்டியாந்தேன். இப்போ பக்கத்திலேயே இருக்கணும்னா முடியுமா? நாலு பேர் நாலு பேச மாட்டாங்களா?"

"அப்படி ஊரார் பேசறாப்பிலே நாம் என்ன செய்திட்டோம்? அவருக்கு உடம்பு இப்படி இருக்கே அம்மா !"

" உடம்பும் உசிரும் நம்ப கையிலேயா இருக்குது? கடவுள் சித்தம் போல் நடக்குது. அதற்கு நம்ப கவலைப்பட்டு என்னம்மா ஆகும்?"

'அட, வடிவாம்பாளுக்குக்கூட இவ்வளவு ஞானம் வந்துவிட்டதே!' என்று சிரித்தார் பரதேசியார்.

ஆனால், இந்த ஞானம் எல்லாம் அவளுடைய காரியத்துக்குத் தான் என்பதும் அவருக்குத் தெரியாதது அல்ல.

"வா மோகனா" என்று மகளின் கையைப் பிடித்து இழுத்தாள் வடிவாம்பாள்.

'இப்போ நான் வர முடியாது அம்மா. நீ என்ன சொன்னாலும் சரி. அவர் என் காதலர். அவருக்கு அருகில் நான் இருப்பது என் கடமை. பெண்ணுக்குத் தாய் பெரிதல்ல. காதலன்தான் பெரிது. உன்



சொல்லை நான் கேட்க முடியாது' என்று சொல்லும் அளவுக்கு மோகனாவுக்குத் தைரியம் வரவில்லை. ஆனால், அந்தத் தைரியத்திற்குப் பதிலாக அழுகைதான் வந்தது. அந்தப் பேதைமையிலே பெண்மை ஒளி வீசியது.

" இல்லையம்மா, ராத்திரி மாத்திரம் இங்கு இருப்போம்."

" நம்ப என்னம்மா செய்கிறோம் இங்கே? சாமி இருக்காங்க. மருந்து கொடுக்கிறாங்க."

"அவரு முழிச்சுக்கிட்டா நான் பாலு கொடுக்கணும் அம்மா."

"ஓ, அதைச் சொல்றியா! ஏ... வாதா, சும்மா பார்த்துக்கிட்டிருக்கியே நீ இங்கே இருந்து அவரு முழிச்சுக்கிட்டா பாலு கொடு. ரொம்பக் குடுத்துடாதே. புரையேறிடும். பழியும் பாவமும் உன் தலையிலே வந்து விழும்!" என்று அவனுக்கு உத்தரவு கொடுத்துவிட்டு, மகளிடம் திரும்பினாள். "ஏன் மோகனா, இது என்ன ஆஸ்பத்திரியா, பார்த்துக்கிட்டு பக்கத்திலேயே இருக்கிறதுக்கு? இன்னொருத்தர் வீட்டிலே வந்து நாம்ப ராத் தங்கலாமா? புறப்படு கண்ணு..." என்றாள்.

வடிவாம்பாளுக்கென்று எப்படித்தான் வாதங்கள் கிடைக்குமோ? அவள் சொல்வது இடத்துக்குப் பொருத்தமாகவும் இருந்தது. ஆனால் மோகனாவின் மனத்துக்கு மாத்திரம் அது பொருத்தமாக இல்லை. பரதேசியாரின் முகத்தைப் பரிதாபத்துடன் பார்த்தாள், மோகனா.

"சுவாமி நீங்களாவது அம்மாவுக்குச் சொல்லுங்களேன்" என்றாள்.

"மோகனா, உன் தாய்க்கு ஏதேனும் தெரியாமல் இருந்தால் அல்லவா நான் சொல்ல வேண்டும்? அவள் இஷ்டம்" என்று பரதேசியார் சொல்லிவிடவே வடிவாம்பாள் மோகனாவின் கையைப் பலமாகப் பிடித்து "சரி, வா" என்று இழுத்தாள்.

மோகனாவுக்கு வந்த ஆத்திரத்தில் அந்த இடத்தை விட்டுப் போகவே மனம் இல்லை. தாயோடு சண்டை பிடித்துக்கொள்ளக் கூடத் தைரியம் வந்தது. ஆனால் பெண்ணின் தைரியம் ஓரளவுக்குத் தான். எதிரில் மைனரும் மற்றவர்களும் இருக்கும்போது அவளால் ஒன்றும் பேச முடியவில்லை. 'இந்தச் சமயத்தில் அம்மாவை எதிர்த்தால், அதன் மூலம் பெரிய சண்டை வந்துவிடுமே. அதைப் பார்த்து அவர்கள் சிரிப்பார்களே' என்று வெட்கினாள். தாய் இதைத் தெரிந்துகொண்டு பலமாகச் சண்டை பிடிக்கவும் தயாராக ஆனாள்.

"என்ன, 'வடிவாம்பாள் அம்மா! இருந்துட்டுத்தான் போங்களேன்" என்றார் மைனர்.

"நீங்களும் அதுவும் ஒரு வீட்டிலே இருந்தா அவ்வளவு நல்லா இருக்காதுங்க" என்று வடிவாம்பாள் வெடுக்கென்று சொல்லவே, மைனர், தலையில் இடி பட்டவர் போல் தலையைக் கவிழ்த்துக் கொண்டார்.

"சரி, வா, பொண்ணே!" என்று முகத்தைச் சிடுசிடுப்பாக வைத்துக்கொண்டு கூப்பிட்டாள், வடிவாம்பாள்.

'சுவாமி, நீங்கதான் அவரைக் காப்பாற்றணும்' என்ற பாவத்தில் மோகனா, பரதேசியாரின் முகத்தைப் பார்த்தாள்.

"வடிவாம்பா, இரவு நேரம், நடு நிசி, இருட்டு. என் கையில் இந்தத் திரி இல்லாவிட்டால், நானே உங்களை வீட்டுவரையில் கொண்டு வந்து விட்டுவருவேன். வரதா, நீயும் போ. பாதையில் பூச்சிகள் நடமாடலாம்" என்று ஒரு எச்சரிக்கை செய்தார் பரதேசியார்.

வழியில் பூச்சிகள் இருக்கும் என்றவுடன் வடிவாம்பாள் திடுக்கிட்டாள். ஜோசியர்கள், சித்தர்கள் முதலியவர்கள் ஏதாவது சொன்னால் அதற்கு ஒரு மறைபொருள் இருக்கும் என்பது அவள் நம்பிக்கை. அதனால் முதலில் அவளுக்கு வந்த பயம் என்னவென்றால் நேற்று சண்முகத்தைக் குத்தியவன் இன்று பாதையில் காத்திருந்து மோகனாவையும் கத்தியால் குத்திவிடுவானோ என்ற அச்சந்தான். மகளுக்கு ஆபத்து என்று நினைத்ததுமே, வடிவாம்பாளுக்கு உடல் நடுங்கியது. 'சரி, பின்னே இருந்துவிடுவோம்' என்று எண்ணினாள்.

ஆனால், அப்போது இன்னொரு பயம் எழுந்தது. 'வீட்டில் வேறு ஆள் இல்லையே, வரதனும் இங்கு இருக்கிறானே. இந்தச் சமயத்தில் திருடன் வந்து புகுந்துவிட்டால் என்ன செய்கிறது?'

இதை நினைத்தவுடனே, வைர அட்டிகை களவு போய்விட்டதே, அதை யார் எடுத்திருப்பார்கள் என்ற எண்ணம் வந்தது. 'நகையைக் கொடுத்த மனிதன் எதிரில் உட்கார்ந்திருக்கிறான். அன்றைக்கே வைத்தியை விட்டுக் கேட்டு வரச் செய்தான். இன்றைக்கு இப்படி அந்தப் பெண் அவன் கண்ணுக்கு எதிரிலேயே சண்முகத்தின் கட்டிலைச் சுற்றிச் சுற்றி வந்தால் அந்த மைனர் பொறுப்பானா? அவளை விட்டுவிடுவான். ஆனால் நம்மிடம், 'என்ன வடிவாம்பா, உங்க மக சமாசாரம் புரிஞ்சு போச்சு. இனி நம்ம அட்டிகைக்கு வழியைச் சொல்லுங்கள். உங்க கிட்டத்தானே குடுத்தேன்?' என்று கேட்டால்— நாம் இங்கே அதிக நேரம் இருக்கக்கூடாது. இருந்தால் ஆபத்து' என்று எண்ணினாள்.

'இப்ப இந்த மைனர் மேற்கொண்டு நம்மிடம் பேசறதுக்கு முன்னாலே வீட்டுக்குப் போய்விடவேணும். இன்னிக்கு ஒரு ராத்திரி மோகனா இங்கு இருக்கிறதாலே என்ன நஷ்டம்? அதுதான் பரதேசியார் இருக்கார். எல்லோரும் இருக்கிறாங்க. அவனும் இன்னும் சரியா முழிச்சிக்கல்லே, ஆனதாலே அவ இங்கேயே இருக்கட்டும். பாதையிலே பயம்னு பரதேசி வாயாலே சொல்றபோது அது நிஜமாயிட்டா என்ன செய்கிறது? அவளை இங்கே விட்டுவிட்டுப் போய், நமக்கும் வீட்டிலே உட்கார்ந்து யோசித்தாத்தான் நல்லது' என்று நிச்சயம் செய்துகொண்டு, "சரி! அது இங்கே இருக்கட்டும்.



நான் வரேன். வரதா, நீ வீடுவரையில் வந்துட்டு வா!" என்று சொல்லி விருட்டென்று நடந்தாள் வடிவாம்பாள்.

தன் தாய் தன்னிடம் சொல்லிக்கொள்ளாமல்கூடப் போவதைக் கண்ட மோகனா திகைத்தாள். இடி இடித்துவிட்டது. இனி பெருமழை வரப்போகிறது என்ற அச்சம் தோன்றியது. ஆனால் சண்முகத்தின் உடல் நிலை அவள் மனத்தை வேறு பக்கம் செல்லவிடாமல் தடுத்தது.

வடிவாம்பாள் புறப்பட்டபோது இரவு ஒரு மணி இருக்கும். ஆத்திரத்தில் வழியெல்லாம் மொடுமொடுத்துக்கொண்டே சென்றாள். 'வாங்க என்று யாராவது சொன்னார்களா? நம்மை உட்காரக்கூடச் சொல்லவில்லை. அந்த வீட்டில் நமக்கு யாராவது ஒரு மரியாதை செய்தார்களா?' என்று எண்ணிப் பொருமினாள்.

"ஏண்டா வரதா, இந்தச் சண்முகத்துக்கு ஏதாவது சொத்து பத்து இருக்கா?"

"அப்படி ஒண்ணும் தெரியல்லே அம்மா. சொத்து பத்து இருந்தாத்தானா?"

"பத்து இருந்தால் தேய்ச்சிக்கிட்டே இருக்கலாமில்லியா? பாத்துப் புடிச்சிங்களே, பகல் வேஷக்காரனை! உங்களை எல்லாம் என்ன செய்யணும் தெரியுமா?"

"என் அம்மா திடீர்னு என் மேலே பாயுறீங்க?"

"ஆமடா, நீங்க எல்லாம் சேந்துதானே அவளை இந்தமட்டிலே ஆக்கி வச்சிருக்கீங்க?"

"இத்தாங்கம்மா, நம்ம கையிலே என்ன இருக்குது? அட தானமா, ஆதி தானமான்னு கேக்க நான் யாரு? ஆதிரியா, வாசிக்கறேன். அவ்வளவுதான். நீங்கதான் அதைப் போக்கிலே விட்டுத் திருப்பணும்."

"பொண்ணையும் புத்தியையும் போக்கிலே விட்டுட்டா திருப்பறது எது? ஆமா, ஏண்டா, அந்தச் சிங்கபுரம் மைனர் அங்கேயே உட்கார்ந்திருக்காரு?"

"அது எனக்கும் தெரியல்லே அம்மா. ஆனால், அந்த ஆளைப் பார்த்தா நல்லவராத்தான் தெரியுது."

"இப்பத்தான் தெரியுதோ? நான் சொல்றபோதெல்லாம் தெரியல்லை, அல்ல?" என்று சொல்லி மைனரால் வந்த ஏமாற்றத்தை எண்ணிக்கொண்டே நடந்தாள் வடிவாம்பாள்.

சண்முகத்தின் ஜாகையில் சண்முகசுந்தரம் இன்னும் படுக்கையில் படுத்தபடியே கிடந்தான். பரதேசியாரோ, திரியைக் கொளுத்திப் பிடித்து, புகையை மூச்சோடு கலந்தவண்ணம் அமர்ந்திருந்தார். சண்முகத்தின் அருகில் ஒரு முக்காலியைப் போட்டுக்கொண்டு, அதன் மேல் கையில் பால் குவளையுடன் உட்கார்ந்திருந்தாள் மோகனா.

பரதேசியாருக்கோ வேலை இருக்கிறது. மோகனாவோ, எப்பொழுது அவன் விழிப்பான் என்று காத்திருக்கிறாள். இருவரும் அப்படி இருப்பதால் அவர்களுக்குத் தூக்கம் வரவில்லை. தருமனும் முத்துராக்குவும் உட்கார்ந்த இடத்திலேயே தூங்கி விழுந்து கொண்டிருந்தார்கள்.

மனிதனுக்கு மறக்கத் தெரிய வேண்டும். இப்பொழுது சிலருக்கு அது ஓரளவு தெரிந்திருக்கிறது. அதாவது, நல்லது செய்தால் அதை மறந்துவிடுகிறார்கள். ஆனால், கெடுதல் செய்தாலோ மறப்பதே இல்லை. அதுவும் பிறர் செய்த கெடுதலை மறப்பதே இல்லை. ஆனால், மைனரோ, தான் செய்த கெடுதலுக்குப் பரிகாரம் செய்ய விரும்பித் தவம் இருக்கிறார். சண்முகசுந்தரம் பிழைக்கவேண்டுமென்று மைனர் பாடுபடுவதால் தூங்கவே இல்லை.

பரதேசியார் வந்த நிமிஷம் முதலே அவருக்கு ஒரு நம்பிக்கை. அந்த நம்பிக்கை வந்த உடனே அவர் தவம் நிறைவேறியது. தூக்கமும் எங்கிருந்தோ வந்தது. தருமனும் முத்துராக்குவும் தரையிலேயே படுத்து விட்டார்கள். மைனருக்கு அது பழக்கம் இல்லை. நன்றாகத் தலையணை வைத்துக்கொண்டு நீட்டி, நிமிர்ந்து படுத்தால்தான் தூங்குவார். இன்னொரு சிரமமுங்கூட, எதிரில் மோகனா உட்கார்ந்து இருக்கும் போது அங்கே தூங்கவே அவர் விரும்பவில்லை. ஆதலால், மெதுவாக எழுந்து கண்ணைக் கசக்கிக்கொண்டே திண்ணைப்பக்கம் போய்விட்டார். திண்ணையிலே திண்டு, தலையணை இல்லா விட்டாலும் யாரோ ஒரு புண்ணியவான் மாப்பிள்ளைத் தலையணை வைத்திருந்தார். மண்ணாலே கட்டிய தலையணை. அதன் மேல் தலை வைத்துக்கொண்டு தரையில் படுத்தார். தம்மை மறந்தார்.

மெத்தையில் படுத்த போதெல்லாம் நித்திரை பிடிக்காத மைனர் இப்போது மண்ணில் படுத்தவுடன் குறட்டை விட்டார். காரணம்? மனத்தில் கனம் இல்லை. அதோடு சண்முகசுந்தரம் பிழைத்து விடுவான் என்ற எண்ணத்திலே அவருக்கு நல்ல தூக்கம் வந்தது. தூங்கிவிட்டார்.

கோழி கூவியது. பறவைகள் பாட ஆரம்பித்தன. இயற்கை, கட்டியங்கள் முழங்க, மாணிக்கமிழைத்த நடை பாவாடையின் மேல் கதிரவன் நடந்தான். உலகம் உயிர் பெற்றது. அப்போது விடியற்காலை ஐந்தரை மணி இருக்கும்.

பரதேசியார் கையில் இருந்த திரி எரிந்து தீர்ந்தது. சண்முகத்தின் முகத்தைப் பார்த்தார். அவன் சுய நினைவில் தூங்குவது போல் இருந்தது. "மோகனா, நீ சற்று தூங்கு அம்மா" என்றார்.

"எனக்குத் தூக்கம் வரவில்லை சுவாமி."

"சரி, அப்படியானால் விழித்துக்கொண்டே இரு. சண்முகம் நன்றாகத் தூங்குகிறான். இனி மருந்து வேண்டாம். அவனை எழுப்பாதே. தானே விழித்தால் அவனுக்குக் கொஞ்சம் பாலைக் கொடு. நான் சென்று அனுட்டானம் செய்துவிட்டு வருகிறேன்" என்று உரைத்தார் பரதேசியார்.



"சுவாமி, தாங்கள் இங்கே இருக்க வேண்டாமா?" என்க் கவலை யுடன் கேட்டாள் மோகனா.

"போய்விட்டு வருகிறேன் என்று வைத்தியன் சொன்னால் மட்டும் தடுக்காதே. சந்தோஷமாக விடை கொடு. அவன் வாயால், 'நான் இனி மேல் இங்கு இருக்க வேண்டிய அவசியம் இல்லை!' என்று சொன்னால், அதுவே வியாதி தீர்ந்துவிட்டது என்று அடையாளம். கவலைப்படாதே, அம்மா! சண்முகம் சற்று நேரத்தில் விழித்துக் கொள்வான்" என்று சொல்லிவிட்டுப் பரதேசியார் வெளியே கிளம்பினார்.

மோகனா சண்முகத்தின் அருகிலேயே அமர்ந்து அவன் முகத்தைப் பார்த்தவண்ணம் இருந்தாள்.

அதே சண்முகம். அதே முகம். அன்றிரவு மதுரையிலிருந்து வரும்பொழுது ரயிலில், நெற்றியில் ஜவ்வாதுப் பொட்டும், மார்பிலே சந்தனப் பூச்சும், வாயிலே பாட்டும் முழங்கிக்கொண்டிருந்த அதே அழகு மாப்பிள்ளை, இன்று கையில் கட்டுடன் தன் நினைவு இல்லாமல் படுக்கையில் கிடப்பதைப் பார்த்தாள். கண்ணீர் மல்கியது. "மறுபடியும் அந்த அழகுடன் அவரைப் பார்ப்போமா? மறுபடியும் அவர் நம் கண்ணைத் துடைப்பாரா, அன்போடு பேசுவாரா?" என்று எண்ணினாள். தனியே இருக்கிறோம் என்ற தைரியத்தில் விசும்பி விசும்பி அழுதாள். உடனே, சாமியார்தாம் சொல்லிவிட்டாரே, பிழைத்துவிடுவார் என்ற நம்பிக்கை வந்தது.

அவன் முகத்தை உற்று நோக்கினாள். அந்த நிலையில்கூட அவன் முகத்தில் இளமுறுவல் இருந்தது. 'நல்ல சிரித்த முகம்...! பேச்சோடு பேச்சாக அன்றைக்கு மெல்ல, அம்மாவை, 'அத்தை' என்று கூப்பிட்டாரே. என்ன குறும்பு இருக்க வேண்டும்! மறுபடியும் அந்தக் குறும்புப் பேச்சு வருமா? அதைக் காது குளிரக் கேட்போமா...?" என்று எண்ணினாள்.

இப்பொழுது அவளுக்கு அவர்கள் இருவரும் தனிமையில் இருப்பதில் ஒரு சங்கோசம் வந்தது. 'நாம் தனியாக இருக்கும்பொழுது அவர் விழித்துக்கொண்டால் நாம் வெட்கப்படுவதா, இல்லை அருகில் நிற்பதா? ஐயோ, பாலைக் கொடுக்கச் சொல்லிப் பரதேசியார் சொல்லி இருக்கிறாரே, நான் எப்படிக் கொடுப்பேன்? என் கை வெடவெடவென்று நடுங்குமே! வெட்கம் தடுக்குமே! என்ன செய்வது?' என்று எண்ணிக்கொண்டே இருக்கும்பொழுது, 'அம்மா' என்றான் சண்முகம்.

ஒரு முறை புரண்டு படுத்தான். தலையணை நழுவியது.

உடனே மோகனா தலையணையை எடுத்துச் சரியாக வைத்து விட்டாள். ஆனால், 'அவனை எப்படி ஒழுங்காகத் தலையணையில் எடுத்துச் சாத்துவது? தொட்டுத் தூக்க வேண்டுமே! அதனால் என்ன! அவர் நோயாக இருக்கிறார். நாம் தொட்டுத் தூக்கத்தான் வேண்டும். ஐயோ, எனக்கு உடம்பு என்னவோ செய்கிறதே! அவரை எப்படித் தொடுவது? கூச்சமாக இருக்கிறதே! ஆஸ்பத்திரியில் நர்ஸ் தூக்கவில்லையா? அவளுக்குக் கூச்சமாக இருக்கிறதா? அவளுக்கு என் உணர்ச்சி கிடையாது. கடமை என்று தொட்டுத் தூக்குகிறாள். ஆனால், என்னைப் போல அவளுக்கும் எண்ணம் குடி கொண்டிருந்தால் லேசில் தொடுவாளா? இது என்ன முட்டாள்தனம்! நாம் யோசித்துக்கொண்டே இருக்கிறோமே! அவர் தலையைத் தொங்க விட்டுக்கொண்டே இருக்கிறாரே!' என்று எண்ணினாள். அடுத்த கணமே சண்முகத்தைத் தொட்டுத் தூக்கினாள். இரண்டு கைகளாலும் அவனைத் தூக்கித் தலையணையில் படுக்க வைத்தாள்.

அடே அப்பா! அதில்தான் அவளுக்கு என்ன இன்பம்! வெட்கம் முகத்தில் வியர்த்தது. ஆனந்தத்தில் உடல் பூரித்தது. நெஞ்சு விம்மியது. கையிலும் காலிலும் ஏதோ சொல்லமுடியாத உணர்ச்சியால் புல்லரித்தது.

அந்தக் கைகளுக்குத்தாம் என்ன சக்தி! தாய் குழந்தையை அணைத்துக்கொள்கிறாள்; அதிலே ஒரு உணர்ச்சி. காதலி காதலனை அணைத்துக்கொள்கிறாள்; அதிலே ஒரு உணர்ச்சி. இரண்டு எதிரிகள் கட்டிப் புரளுகிறார்கள்; அதிலே ஒரு உணர்ச்சி. இன்று மோகனா சண்முகத்தைத் தூக்கியதும் அன்பு, வெட்கம், துயரம் அத்தனையும் கலந்து என்னவோ செய்தன அவளுக்கு. ஆனால் சண்முகத்துக்கோ! அவன் வாழ்க்கையையே தொட்டுத் தூக்கியது. அவள் கரங்கள்தாம்.

சண்முகம் விழித்தான். அவன் உடம்பு முழுவதும் அமிர்தம் பரவியது போல் ஒரு உணர்ச்சி வந்தது. அவனுடைய நோய் விடை பெற்றுக்கொண்டது. கை வலி தெரியவில்லை. கண்ணைத் திறந்து இங்குமங்கும் பார்த்தான். தன்னைத் தூக்கிப் படுக்கையில் வைத்தது மோகனாவின் கைகள் என்பதை அவன் அறிந்தான். அப்படியே அவள் அழகை இரு விழிகளால் பருகினான். அன்பை நினைத்து உருகினான். எதிரில் மோகனாவைக் கண்டவுடன் அரும்பு போல் இருந்த அவன் உள்ளம், தென்றல் பட்டு அரும்பு மலர்வது போல மலர்ந்தது.

"மோகனா, நீயா!" என்று அன்பும் ஆச்சரியமும் கலந்த குரலில் கூறினான்.

"ஆமாம், நான்தான்" என்று தலையைக் குனிந்துகொண்டு கடைக் கண்ணால் அவனை நோக்கியபடி கூறினாள், மோகனா. உடனே கடமை உணர்ச்சி வந்தது. பால் குவளையைக் கையில் எடுத்தாள். "கொஞ்சம் பால் சாப்பிடறீங்களா?" என்றாள்.



"கொடு" என்று முகத்தை ஏக்கத்துடன் பார்த்தான் சண்முகம். ஸ்பூனால் பாலை எடுத்து, அவன் வாயில் ஊட்டினாள் மோகனா. ஸ்பூன் நடுங்கியது. சண்முகம் குடித்தான். மறுபடியும் ஸ்பூனால் ஊட்டினாள். மறுபடியும் குடித்தான். பாத்திரத்தைக் கீழே வைத்து அவன் வாயைச் சவுக்கத்தால் துடைத்தாள்.

"இன்னும் கொஞ்சம் கொடுக்க மாட்டியா?"

"ஐயோ, அதிகம் கொடுத்தால் ஏதாவது செய்யுமே! பரதேசியார் கோபித்துக்கொள்வார்" என்றாள்.

சண்முகத்தின் முகத்தில் சிறிது வெட்கம் வந்தது. 'பரதேசியார் அருகில் இருக்கிறாரோ' என்று அவன் கடைக்கண்ணால் பார்த்தான். பரதேசியார் இல்லை.

"சுவாமி எங்கே?"

"அனுஷ்டானம் செய்யப் போயிருக்கிறார்."

"நீ பக்கத்திலே உட்காரேன்."

"பக்கத்திலேதானே இருக்கிறேன்!"

"இன்னும் பக்கத்திலே வா."

மோகனா அவன் அருகில் சென்றாள். அவன் அறியாமல் தன் கண்களை ஒரு முறை துடைத்துக்கொண்டாள். அவனைப் பாராமலே "கை ரொம்ப வலிக்கிறதா?" என்று கேட்டாள்.

"ஆமாம்..."

மோகனா மெதுவாக அவன் கையைத் தடவிக் கொடுத்தாள். அந்தப் புண்ணுக்கு அவள் கையால் தடவியது ஆஸ்பத்திரி மருந்துக்கு மேல் ஆயிரம் பங்கு இதமாக இருந்தது. சண்முகம் எதையெதையோ எண்ணினான். அவன் கண்களில் கண்ணீர் சுரந்தது.

"நீ மட்டுமா இங்கு இருக்கிறாய்?"

"இல்லையே, நீங்களும் இருக்கீங்களே!"

"மோகனா, நேற்று எவ்வளவு நல்லா ஆடினே தெரியுமா?"

அவள் ஒரு முறை அவன் முகத்தைப் பார்த்தாள். உடனே வெட்கத்தால் திரும்பிக்கொண்டாள்.

"நேற்றல்ல முந்தாநாள்..."

"இரண்டு நாளாகவா நான் படுக்கையில் கிடக்கிறேன்?"

"ஆமாம் ரொம்பப் பேசாதீங்க. உடம்புக்கு ஆகாது."

"இல்லை மோகனா, என் உடம்பு இப்ப நல்லா இருக்கே...!"

"இல்லை, நேற்று நீங்கள் பிழைப்பீர்களா, பிழைக்க மாட்டீர்களா என்றுகூட எல்லாரும் சந்தேகப்பட்டுவிட்டார்கள்" என்று சொல்லும் போது அவளுக்குத் தொண்டை கம்மியது. சற்று நேரம் பேசாமல் இருந்து சமாளித்துக்கொண்டாள். "அப்புறம், அப்புறம், பரதேசியாருடைய கைராசிதான் உங்களைக் காப்பாற்றியது. அவர் நடையாக நடந்து தஞ்சாவூருக்குப் போய் மருந்து பறிச்சுக்கிட்டு

வந்தார். அவர்தான் எல்லார் வயிற்றிலேயும் பாலை வார்த்தார்' என்று சொல்லி உணர்ச்சி வசத்தில் ஆழ்ந்துவிட்டாள். மோகனா. அவள் இதயம் பரதேசியார் சென்ற திக்கை நோக்கிக் கும்பிட்டது.

சண்முகத்துக்கு என்னவோ செய்தது. உலகத்தையே துறந்த ஒருவர், தனக்காக இந்தப் பாடு பட்டிருக்கிறாரே என்பதை எண்ணினான். அவனுடைய இதயம் நன்றியில் நனைந்தது. அவரை நமஸ்காரம் செய்தது.

"நீ எப்படி வந்தே? நான் உனக்குச் சொல்லி அனுப்பலாம்னு நினைச்சேன்..." என்றான்.

"நீங்க நினைச்சீங்க, நான் வந்துட்டேன்."

"நான் இன்னொன்றுகூட நினைச்சேன்."

"என்ன நினைச்சீங்க?"

"உன்னைப் பாத்துட்டுச் செத்துப் போகலாம்னு நினைச்சேன்" என்று சொல்லிக்கொண்டே சண்முகசுந்தரம் அழுதான். மோகனா அவன் கண்ணீரைத் துடைத்தாள். ஆனால், அவளுடைய கண்களில் இருந்து ஊற்றுப் போலக் கண்ணீர் வடிந்தது.

"அப்படியெல்லாம் சொல்லாதீங்க. நீங்க மகாவித்வான். உங்க சங்கீதத்தை உலகத்திலே ரொம்பப் பேர் கேட்கிறாங்க. உங்களாலே உலகத்துக்கே சந்தோஷம். நீங்க நல்லா இருக்கணும்" என்றாள்.

"உலகத்துக்கு என்னாலே சந்தோஷம். ஆனால் ஒருத்தருக்கு என்னாலே கஷ்டம்" என்று சண்முகம் மோகனாவின் முகத்தைப் பார்த்தான்.

"ஒருத்தருக்கும் நீங்க தொந்தரவு கொடுக்க மாட்டீங்க. உங்களாலே ஒருத்தருக்கும் கெடுதல் செய்ய முடியாது."

"இல்லே மோகனா! செய்யாதவங்களுக்குக் கெடுதல் செய்திட்டேன். பூவைப் பறிச்சுக் கொதிக்கிற தண்ணியிலே போட்ட மாதிரி, மீனை எடுத்துக் கரையிலே போட்ட மாதிரி ஒருத்தரைத் துடிக்கவச்சுட்டேன். அந்தப் பாவந்தான் இப்போ நான் குத்துப்பட்டுத் துடியாய்த் துடிக்கிறேன்" என்று கூறி, அதற்கு மேல் சொல்ல முடியாமல் தவித்தான் சண்முகம். அவன் உதடுகள் துடித்தன. கண்கள் கலங்கிச் சிவந்தன.

அவன் பரபரப்பையும், சோகத்தில் அவன் ஆழ்ந்திருப்பதையும் கண்ட மோகனா, மறுபடியும் உடம்புக்கு வந்துவிடக்கூடாதே என்று பயந்தாள். பாலை எடுத்தாள். "உடம்பை அலட்டிக்காதீங்க. இந்தாங்க!" என்று கூறி, இன்னும் கொஞ்சம் பாலை அவன் வாயில் ஊட்டினாள்.

ஆனால் ஸ்பூனால் கொடுக்கவில்லை. டம்ளராலேயே கொடுத்தாள், கொடுத்தாள், கொடுத்தாள். அவனோ குடித்தான், குடித்தான், குடித்தான். இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். பால் பாத்திரம் காலி. அப்பொழுதுதான்



அவனுக்கு அளவுக்குமேல் ஆகாரம் கொடுத்துவிட்டோமோ என்ற பயம் வந்தது.

"நீங்க அவ்வளவு பாலையும் குடிச்சிட்டீங்களா?"

"மோகனா, எனக்குப் பசிக்கிறது. உன்னைப் பார்த்தது முதல் எனக்குப் புதிய பலம் வந்துவிட்டது" என்று சொன்னான் சண்முகம்.

அவன் உடம்பில் சிறிது வியர்வை வந்தது. மோகனா பக்கத்தில் இருந்த விசிறியை எடுத்துக்கொண்டு வந்தாள். விசிறிக்கொண்டே பக்கத்தில் நின்றாள். அவன், கண்ணால் அவளைப் பார்த்தான். "உட்கார்" என்று ஜாடை காட்டினான். உட்கார்ந்தாள். வியர்த்திருப்பதைக் கண்டாள். அவன் முகத்தைத் தன் முன்றானையால் துடைத்தாள். சவுக்கத்தால் அல்ல.

"நான் யாருக்குத் துரோகம் பண்ணினேன்னு நீ கேட்கலியே?" என்றான் சண்முகம்.

"யாராய் இருந்தால் என்ன? அதற்கு இப்போதான் நேரமா? உடம்பு சௌக்கியமாகட்டும்."

"மோகனா, உனக்குத்தான் நான் துரோகம் செய்துவிட்டேன்" என்று சொல்லிக்கொண்டே சண்முகம் மூசுமூசுவென்று அழுதான்.

"ஐயோ! எனக்கா? நீங்களா? ஒரு நாளும் செய்யமாட்டீங்களே! என் ஆட்டத்தை அன்றைக்குப் பார்த்ததிலேயே நான் புரிந்து கொண்டேனே! ஐ அப்பா, என்ன புகழ்ச்சி! 'தில்லானா மோகனாம்பாள்' என்றுகூடப் பட்டம் கொடுத்தீர்களே! நீங்கள் எனக்குத் துரோகம் செய்யவே மாட்டீர்கள்!" என்று தன் மனத்தில் இருக்கும் வருத்தத்தையெல்லாம் மறந்து கூறினாள் மோகனா.

"இல்லே மோகனா, உன் ஆட்டத்தை ரசித்தேன். ஆனால் உன்னை நான் அறிந்துகொள்ளவில்லை. வீணில் உன் மனத்தைப் புண்ணாக்கினேன். நான் புண் பட்டேன். உன்னோடு போட்டி யிட்டேன். இப்பொழுது எமனோடு போட்டியிடுகிறேன். வீணில் உன் மேல் குற்றம் சாட்டி உன் கற்புக்கு மாசு கற்பித்தேன். என் உடம்பில் இப்பொழுது நீங்காத வடு ஏற்பட்டுவிட்டது. ஐயோ மோகனா! என்னை மன்னித்துவிடு! மோகனா, மன்னித்துவிடு! ரமாமணி சொன்னாள். முத்துராக்கு சொன்னார். காரைக்கால் நடேசன் சொன்னார். நீயும் காலில் விழுந்தாய். அப்பொழுது எல்லாம் என் புத்தி தெளியவே இல்லை. நேற்றுத்தான் அந்தப் புண்ணியவான், யாரை எதிரி என்று நினைத்தேனோ அந்த மைனர் என்னிடம் சொன்னார். 'அவள் உத்தமி. என் மனைவிக்காக என்னிடம் கெஞ்சினாள். சண்முகம், அவளைச் சந்தேகப்படாதே' என்று என்னிடம் மன்றாடினார். அப்பொழுதுதான் என் புத்தி தெளிந்தது. மோகனா, என்னை மன்னித்துவிடு! என்னை மன்னித்துவிடு! உன்னைக் கும்பிடக்கூட என் கை என் வசத்தில் இல்லையே! நான் பாவியாகி விட்டேனே!" என்று சொல்லிக்கொண்டே, இரு

கைகளையும் தூக்கிக் கும்பிடப் போனான் சண்முகம். ஆனால் உடம்போடு சேர்த்துக் கட்டியிருந்த இடக்கை எழும்பவில்லை.

அதைப் பார்த்த மோகனா, "ஐயோ, அப்படியெல்லாம் சொல்லாதீர்கள் அத்தான்! சந்தேகத்தால் நீங்கள் என்னைக் கொன்றாலும் பாதகம் இல்லை. அன்பால் என்னைக் கொல்லாதீர்கள். நான் பெண் ஜன்மம். என்னை நீங்கள் சந்தேகப்பட்டது இயற்கை. என் வீட்டு வாசலிலே மைனர் வண்டி நின்றால் உங்கள் மனது சும்மா இருக்குமா? என் வீட்டு வாசலிலே மைனர் நின்றதை, நீங்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? வீதியிலே போகிறவளையா பார்த்துச் சந்தேகப்பட்டீர்கள்? என்மேலேதானே சந்தேகப் பட்டீர்கள்? உங்கள் ஆசைக்குக் குறுக்கே யாரோ வருகிறான் என்றுதானே சந்தேகப்பட்டீர்கள்? உங்கள் காலால் என்னை எத்துங்கள்; கையால் கும்பிடாதீர்கள். உங்கள் வாயால் என்னைத் திட்டுங்கள்; மன்னிப்புக் கேட்காதீர்கள். இப்படியெல்லாம் சொன்னால் நான் இங்கிருந்து ஓடியே போயிடுவேன்" என்று மூச்சு முட்டக் கூறினாள் மோகனா.

"இல்லே மோகனா, இனிமேல் நான் இறந்தாலும் பாதகம் இல்லை. என்னை மன்னித்தேன் என்று சொல்லு..."

"மறுபடியும் மறுபடியும் அந்த வார்த்தையைப் பேசாதீங்க. என்னைக்கு உங்களைப் பார்த்தேனோ அன்னைக்கே, அன்னைக்கே நான் உங்கள் அடிமை. உங்கள் கால் தூசிகூடப் பெறமாட்டேன் நான். என்கிட்டே நீங்கள் இப்படிப் பேசலாமா?"

"மோகனா, அழகர் கோவிலிலே மறைந்து நின்று உன் நாட்டியத்தைப் பார்த்தேன். அப்பொழுதே என்ன நினைச்சேன் தெரியுமா? 'ஓடிவந்து உன் எதிரில் நிற்போமா? உன்னை மதிக்காதது தப்பு என்று சொல்லுவோமா?' என்று எண்ணினேன். அப்படி ஆடினே நீ அன்றைக்கு ராத்திரியெல்லாம் உன்னைக் கனவு கண்டுக்கிட்டிருந்தேன். ஐயோ, அந்தக் கால் வலிக்குமே என்று எண்ணிக்கொண்டே... மோகனா, ஒன்று சொல்லுகிறேன். சிரிக்காதே! உன் கால் என்று நினைச்சுக்கிட்டு என் காலை அமுக்கிக் கொண்டே இருந்தேன் மோகனா...!"

மோகனாவின் முகத்தில் அழுகையும் சிரிப்பும் ஏக காலத்தில் வந்தன. மலர்ந்த பூவும் அதன் மேல் பனித்துளியும் போல அவள் முகத்தில் அழகு குலுங்கியது.

"இப்படிப் பேசுங்க. கேட்கிறேன். குறும்பைப் பாரு. படுக்கையில் படுத்து இருக்காரு; அதிலேயும் குறும்பு."

"அடுத்த நாள் ரயிலடியில் உன்னைப் பார்க்கலாமென்று எண்ணினேன். நீ வரவில்லை. உடனே நான் பிரயாணத்தை நிறுத்திவிட்டேன்."



"அதனால்தானா எனக்கு அவர் வண்டியில் இடம் கிடைத்தது?" என்று எண்ணினாள் மோகனா. "ஜாஸ்தி பேசாதீங்க. உடம்புக்கு ஆகாது" என்றாள்.

"இல்லே மோகனா, ஜாஸ்தி பேசலே."

"நான் ஒன்னு சொல்கிறேன். கேட்கிறீங்களா? முதல்லே இந்த வீட்டை விட்டுக் காலி செய்யுங்க. இது வேண்டாம். இது நம்முடைய சண்டைக்காகப் பிடித்த வீடு."

"இல்லையே! இங்கேதான் என் சந்தேகம் தீர்ந்தது. இது ரொம்ப ராசியான வீடு. பாரி நாயனத்தை இங்கேதானே பழகிக்கொண்டேன்."

"ஆமாம், அன்று நாகபட்டினத்தில் எதற்காக வந்தாய் சர்க்கஸுக்கு?"

"நான் கோவிலுக்குப் போய்விட்டு வந்தேன். பாதையிலே உங்கள் வண்டி போயிற்று. நீங்கள் வண்டிக்குள் கோபமாக உட்கார்ந்திருந்தீர்கள். வரதனை விட்டு அவரைக் கூப்பிடு என்று சொன்னேன்."

"எங்கே? திருவாரூரிலா?"

"ஆமாம். வரதன் உங்க வண்டிக்குப் பின்னாலே ஓடி வந்தான்."

"ஆமாம், ஒரு ஆள் வண்டிக்குப் பின்னாலே ஓடி வந்தான். நீதானா கூப்பிடச் சொன்னே! ஐயோ, அப்பொழுதே உன்னைப் பார்த்திருந்தால், இவ்வளவு கஷ்டங்கள் வந்திருக்காதே!"

"என்ன செய்வது! என் தலைவிதி. நான் உங்களைப் பார்க்கவில்லை. நீங்கள் என்னைப் பார்க்கவில்லை. சந்தேகம் முற்றிவிட்டது. சரி, வரதனை உங்களிடம் அனுப்புவோம் என்று அனுப்பினேன்."

இதைக் கேட்ட சண்முகம் நினைத்தான். "வரதன் வந்து என்ன சொன்னான்?"

"என்னமோ உளறினான்! அதை என்னத்துக்கு இப்போது கேட்கிறீங்க?"

"சும்மா சொல்லு. நான் பைத்தியம் என்றானா? கோபமாக இருக்கிறேன் என்றானா? உலகத்தையே வெறுத்துவிட்டேன் என்றானா?"

"அப்படியெல்லாம் சொன்னால்தான் பாதகம் இல்லையே! என்னமோ பைத்தியம்..."

"என்ன பைத்தியம்? என்ன சொன்னான்?"

"நாகபட்டினத்திலே நீங்க யாரோ ஒரு...... அதெல்லாம் கேட்காதீங்க. உங்க மனசுக்குக் கஷ்டமாயிருக்கும்."

"ஐயோ, ரமாமணியோடு நான் இருப்பதைப் பார்த்து ஏதாவது சந்தேகமாகச் சொன்னானா?"

"உம்" என்றாள் மோகனா.

சண்முகத்தின் மனம் பொருமியது. 'இதோ, நீங்களும் நானும் உட்கார்ந்து இருக்கிறோம். இதை ஊரார் பார்த்தால் என்ன

சொல்லுவார்கள்?' என்று ரமாமணி கேட்டது ஞாபகம் வந்தது. வரதன் வந்து தன்னைப்பற்றி அவதூறாகச் சொல்லியும், மோகனா மறுபடியும் அவனைக் காதலிப்பதைப் பார்த்தபோது சண்முகத்துக்கு நெஞ்சம் உருகியது.

"மோகனா, அந்த வார்த்தையைக் கேட்ட பிறகுமா என்னை நீ விரும்பினாய்? அதற்குப் பிறகுமா என்னிடம் கருணை காட்டினாய்! ஐயோ, உனக்கு இருந்த அறிவு எனக்கு இல்லாமல் போய்விட்டதே!"

"அதுக்காக, யார் சொன்னாலும் நம்பிவிடணுமா?"

"நான் அப்படித்தானே நம்பினேன்! நீ என்னைத் தடுத்து, என் காதலுக்குப் பயந்து கப்பலில் ஓடாதே என்று சொன்னபோதுகூட எனக்குப் புரியவில்லையே! கோவில் வாசலில் என் காலில் விழுந்தபோது, உன்னை 'சீ, போ' என்று தள்ளினேன். மோகனா, நான் மகா பாவி. உன் பெருமையை அறியாமல் நான் உன்னைப் படாத பாடு படுத்தி விட்டேன். என்னை மன்னித்துவிடு" என்று மறுபடியும் அவன் கெஞ்சவே மோகனா துடித்தாள். கட்டிலை விட்டு எழுந்தாள்.

கண்களில் கண்ணீர் பொங்கி வடியப் பேசினாள்.

"இந்தாங்க, அப்படியெல்லாம் சொல்லாதீங்க. உங்கள் மனசு தெரியாமல் ஆசையாலே ஏதோ என் ஆட்டத்தைப் பாருங்க என்று சொல்லிக் கூப்பிட்டேன். நீங்க பார்க்க மாட்டேன்னீங்க. அதனாலே திமிராக உங்களோடே சண்டை பிடித்தேன். சொல்லத்தகாத வார்த்தைகளையெல்லாம் சொன்னேன். 'இந்தத் திருவாரூர் நாயனத்தை எடுத்து ஊதுவீங்களா? என் காலிலே பேசற நடை உங்க கையிலே பேசுமா?' என்றெல்லாம் நான் கேட்டேன். நான் சொன்னதால்தானே உங்களுக்கு இத்தனை கஷ்டம்? இல்லாவிட்டால் நீங்கள் திருவாரூருக்கு வரப்போறீங்களா? பாரி நாயனத்தை எடுத்து ஊதப் போறீங்களா? ஒரு பொண்ணுக்குப் பக்க வாத்தியம் வாசிக்கப் போறீங்களா? இப்படி எல்லோர் கண் முன்னாலேயும் கத்திக் குத்துப்பட்டுத்தான் இருப்பீங்களா?

"அது பிறத்தியார் குத்தின கத்திக் குத்தல்ல. என் கையாலேயே உங்களைக் குத்தின மாதிரி. உங்க கஷ்டங்களுக்கெல்லாம் காரணம் இந்தப் பாவிதான். என்னை மன்னிச்சுடுங்க! 'மன்னிச்சேன்' என்று சொல்லுங்க! நீங்கள் என்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டாம். நான்தான் உங்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்" என்று அவனுடைய இரு கால்களையும் பிடித்துக்கொண்டாள் மோகனா. கண்ணில் ஒற்றிக்கொண்டாள். "ஹோ" என்று கதறினாள்.



## வடிவாம்பாள் வழி மறைத்தாள்!



சண்முகத்தின் கால்களைப் பிடித்துக் கொண்டு மோகனா கதறியவுடன் அவன் திடுக்கிட்டுச் சரேலென்று படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தான். பிறர் உதவி இல்லாமலே அவன் எழுந்து உட்கார்ந்ததைக் கண்டவுடனே, மோகனா அருகில் ஓடி வந்தாள். "எப்படி எழுந்தீங்க? ஆச்சரியமாக இருக்கே!" என்று உடம்பைத் தடவிக் கொடுத்தாள்.

"மோகனா, அப்படிச் சொல்லாதே. எனக்கு உயிர் வந்துடுத்து. இப்ப நான் எந்திருச்சு ஓடக்கூடத் தயார்" என்று அவன் சொல்லிக்கொண்டிருக்கும்போது, "நோயாளிக்குப் பக்கத்திலே வந்து பேசப்படாது என்றுதான் நான் சொல்றேன்" என்று சொல்லிக்கொண்டே டாக்டர் உள்ளே நுழைந்தார்.

சண்முகம் தலையணையில் சாய்ந்துகொண்டு உட்கார்ந்திருந்ததைப் பார்த்த டாக்டர் திகைத்தார். அவருக்கு மட்டுமல்லாமல் அதைப் பார்த்த எல்லோருக்குமே அது ஆச்சரியமாக இருந்தது.

'அட, தேத்துப் பிழைக்காதான்னு கிடந்தது இப்போ எழுந்திருச்சு உட்கார்ந்திருக்குதே!' என்று எண்ணினான் தருமன். "உட்காராதே தம்பி! திருஷ்டி வந்துடும். பேசாமே படுத்துக்க" என்றான்.

"என்ன, நாதஸ்வரக்காரரே, எப்படி இருக்கீங்க?" என்றார் டாக்டர்.

"ஐயா வீட்டிலே எப்போ கல்யாணம்? நம்ம கச்சேரி உண்டல்லே" என்றான் சண்முகம்.

டாக்டருக்குத் தாங்க முடியாத சந்தோஷம். அவன் அருகில் வந்தார். முதுகில் லேசாகத் தடவினார். "உடம்பு ரொம்பத் தேவலையே. ராத்திரி மதராஸ் புறப்படலாமா? எதுக்கும் அங்கே போய்ப் பார்க்கிறது நல்லது" என்றார்.

"அங்கே ஐயாவும் வந்தாத்தான் போகலாம். தம்பி, இவுங்க கைராசிக்காரங்க!" என்றார் முத்துராக்கு.

"சும்மா இருங்க தவுல்காரரே. இவரு அங்கேயும் வந்து கையைக் காலைன்னு ஏதாவது சொல்லிடுவாரு!" என்று முத்துராக்குவின் காதில் முணுமுணுத்தான் தருமன்.

"கொஞ்சம் இருங்கோ. காயத்தைப் பார்த்துடறேன்" என்று சொல்லி, கட்டைப் பிரித்தார். காயத்தைப் பார்த்தார். வேறு ஏதோ மருந்து வைத்துக் கட்டினார்.

'தேவலே, இதே நிலையில் இருந்துன்னா ஒன்றும் ஆபத்து இல்லே நான் ஒரு கடிதம் தருகிறேன். அதை எடுத்துக்கொண்டு, நீங்கள் ராத்திரி மதராஸ் போய் பெரிய ஆஸ்பத்திரியில் பார்த்துக் கொள்வது நல்லது உங்க கையை நம்பியே ரசிக உலகம் இருக்குது"

"என்ன, இனிமே ஆபத்து ஒன்றும் இல்லையே?" என்றார் மைனர்.

"இப்பவே சிட்டு ரிசர்வ் பண்ணச் சொல்லுங்க. ஜாக்கிரதையா, அதிர்ச்சி இல்லாமே மதராஸ் கொண்டுபோகணும். இந்த விஷயத்தில் மட்டும் ஜாக்கிரதையாக இருப்பது அவசியம். சரி, நான் வரேன்" என்று டாக்டர் புறப்பட்டார்.

"இந்த ஊரிலேயே இருந்து பார்க்க முடியாதா? இங்கேன்னா அவுங்களுக்கு வேணும்கிறதைப் பார்த்துக் கவனிச்சுக்கலாம்" என்றாள் மோகனா.

"இல்லையம்மா. மதராசிலே மட்டும் மனிதர்கள் இல்லையா? அந்த ஆஸ்பத்திரிக்குள்ளே போயிட்டாலே வெளியிலே வர மனசு வராது. அவ்வளவு நல்லா இருக்கும். நவீன வசதிகள் இருக்கு. படம் பிடிக்கலாம், எலும்பு சரியா இருக்கான்னு பார்க்கலாம். இல்லாவிட்டால் கைக்கே ஆபத்து வந்துவிடும்" என்று கூறி டாக்டர் புறப்பட்டார். சண்முகம் ஊரை விட்டே போகப் போகிறான் என்று அறிந்த மோகனா துடித்தாள்.

நேற்று வரை பாராமல் இருந்தாள். இன்று பார்த்தாள், பேசினாள். இதோடு திருப்தியடையக்கூடாதா? இல்லை, பார்த்த மனம் இப்போது பிரிய மறுக்கிறது.

✦ ✦ ✦

வீட்டுக்கு வந்த வடிவாம்பாள் ராத்திரி முழுவதும் தூங்கவேயில்லை. காலை ஐந்து மணியிலிருந்தே அடிக்கடி வாசலில் நின்று கொண்டு பாதையைப் பார்த்துக்கொண்டிருந்தாள். 'ஏன், மோகனா இன்னும் வரவில்லை? மணி ஆறாயிற்றே, ஏழாயிற்றே' என்று துடித்துக்கொண்டே இருந்தாள்.

'ராத்திரி அவளைத் தனியாக அந்த வீட்டில் விட்டது தப்பு! அவனும் அவளும் என்னதான் பேசிக்கொள்வார்களோ? எப்படிப் பேசுவது? அவனுக்குத்தான் பிரக்ஞையே இல்லையே! இவள் எதுக்காக அங்கே உட்கார்ந்திருக்கணும்? பார்த்தாச்சுன்னா வர வேண்டியதுதானே! ஏன் இன்னும் வரவில்லை? அவனுக்கு உடம்பு ஏதாவது அதிகமாகப் போயிடுச்சா? ஐயோ! ஏதாவது ஆயிருந்தா, இவ வெட்கத்தை விட்டு அழுதால், நன்றாக இருக்காதே! நாம் போவோமா? நான் எப்படி அங்கே போவது? என்னை யாராவது மதித்தாங்களா? எல்லோரும் அவன் வாயைத்தானே பார்த்தார்கள்!

'இந்த வரதனையும் காணோமே! அவனுக்கு என்ன! என்கிட்டே சம்பளம் வாங்கிக்கிற எண்ணமே கிடையாது. இந்த வரதன்,



நட்டுவனார், எல்லோரும் சேர்ந்து, அந்தப் பெண்ணின் மனசைக் கெடுத்துவிட்டார்கள். ஏன் இன்னும் வரவில்லை?

'விஷயம் முற்றிவிட்டது. நம்மை விட்டு அவள் ஒரு நாளாவது பிரிந்தது உண்டா? ஐந்து நிமிஷம் அம்மாவைக் காணோம்னா, 'எம்மா, எங்கே போயிருந்தே? என்னம்மா, கோவிலுக்குப் போயிட்டு வர இவ்வளவு நேரமா? காய்கறி வாங்க நீங்கதானா போகணும்?' என்று சொல்லி அழுற பொண்ணு, இந்த அழகர் கோவிலுக்குப் போய் வந்தது முதல், எதிர்த்துப் பேசறது, என்னென்னவோ கேக்குது, கிண்டல் பண்ணுது. அட கடவுளே! எதுக்காக என்னைத் தாயாகப் படைச்சே? வளர்த்த கடா மார்லே பாய்ந்த மாதிரி நேற்று நான் அவளுக்குப் பால் கொடுத்தது ஞாபகம் இருக்குது. இன்னிக்கு அதுவே நம்ப எதிரிலே உயரமாக வந்து நிற்குது. 'என்னம்மா, அவரை இப்படிப் பேசறீங்க?' என்று கேட்குது. அவராம், அவ்லை. அவரு! பெரிய மன்மதன். மயங்கிட்டா! என் புத்தியைச் சொல்லணும்.

'பார்க்கப் போனா, இந்த் வீட்டு வாசலிலே இரட்டைக் குதிரை பீட்டனிலே வந்து நிற்கணும்! அவனுக்கு ஒரு மாட்டுவண்டிக்குக் கூட வகையில்லை. இருக்கிறது வாடகை வீடு. எடுப்புச் சாப்பாடு. பெரிய மகாவித்துவான். சிக்கலாரு! அதிலே போய் சிக்கிட்டா? 'அம்மா வீட்டுக்குப் போயிட்டாளே, கூடவே ஓடி வாரணும்' என்கிற எண்ணம் இல்லே. அவன் வீட்டிலேயே உட்கார்ந்திருக்காளே! என்ன துணிச்சல்? இன்னிக்கு நாலு மணி நேரம் உட்கார்ந்திருப்பாள். நாளைக்கு நாலு நாள் திரும்பிப் பார்க்கமாட்டாள். அப்புறம் ஆராரோ ஆரிரரோ, நீ யாரோ, நான் யாரோதான்!

'நான்தான் பார்த்திருக்கேனே! பசுவின் கன்னுக்குட்டியை அவிழ்த்துவிட்டவுடனே அம்மான்னு துள்ளிக்கிட்டு ஓடி வரும். எல்லாம் பாலு குடிக்கிறவரைக்குந்தான், அப்புறம் அதுவே ஒரு நாள் பசுவை வயிற்றிலே முட்டிக் கொம்பாலே கிழிச்சுடுதே!

'உம்... ஏன் இன்னும் அவள் வரவில்லை?' என்றெல்லாம் எண்ணியவள், "ஏ... அபரஞ்சி, இங்கே வா" என்று கூப்பிட்டாள்.

வாசலில் கோலம் போட்டுக்கொண்டிருந்த அபரஞ்சி அஞ்சிக் கொண்டே வந்தாள்.

"உனக்கு அவன் வீடு தெரியுமா?" என்று கேட்டாள் வடிவாம்பாள்.

"எவனம்மா? காலை வேளையிலே கூப்பிட்டுக் கண்டபடியெல்லாம் கேட்கிறீங்க?"

"என்னடி, கண்டதைக் கேட்கிறேன்? என்கிட்டே ஒன்றும் மறைக்காதே! அவன் வீடு தெரியுமா, தெரியாதா?"

இதைக் கேட்ட அந்தப் பெண்ணுக்கு ரொம்பக் கோபம் வந்து விட்டது.

"எனக்கு ஒருத்தர் வீடும் தெரியாது. நான் ஒண்ணும் ஒடு காலி இல்லை. அவன் வீடு தெரியுமா, இவன் வீடு தெரியுமா அப்படின்னு கேட்டா, என்னம்மா அர்த்தம்?"

"இல்லேடி. அந்த நாயனக்காரர் வீடு தெரியுமான்னு கேக்கறேன்."

"அப்படி விவரமாகச் சொல்லுங்க. தெரியும். சாமிக்கண்ணு அய்யா வீடுதானே?"

"ஆமா. நீ தெரிஞ்சுக்கிட்ட லட்சணம் இதுதான்! சாமிக்கண்ணு அண்ணன் வீட்டுலே போய் வேறே, என் மானத்தை வாங்காதே! அந்தச் சிக்கலான் குடிசையிலே போய் இந்த மோகனா என்ன பண்ணுதுன்னு பாத்துக்கிட்டு வா!"

"நீங்க கூப்பிடறீங்கன்னு சொல்லவா?"

"ஏன், அவளுக்குப் புத்தி எங்கே போச்சு? நான் சொல்லி அனுப்பணுமா? அதெல்லாம் வேண்டாம். சும்மா நீ போய்ப் பாத்துட்டு வா, போதும்."

அபரஞ்சி வேகமாகப் புறப்பட்டாள். "நீயும் அவளைப் பாத்துக்கிட்டு, அவள் அழகிலே மயங்கி அங்கேயே உட்கார்ந்து விடாதே!" என்று அதட்டினாள் வடிவாம்பாள்.

அபரஞ்சிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. "நான் அங்கே போகவே இல்லேம்மா!" என்று திரும்பிவிட்டாள்.

"போகாட்டி உன்னை நாளைக்கே விலக்கிடறேன் பாரு."

"இப்பவே வேணுமானாலும் விலக்குங்க. மோகனா முகத்துக்காக வேலை பாக்கிறேன், உங்களுக்காகவா?"

"அடச் சீ! உள்ளே போ!"

"எம்மா உள்ள போறது? வெளியேலே போயிடறேனே!"

"என்ன, வெளியிலே போறியா? என்னடி, நீயுமா என்னை எதிர்த்துப் பேச ஆரம்பிச்சுட்டே? இந்த வீட்டிலே யாரு என்னை மதிக்கிறாங்க? வயித்துலே பொறந்த பொண்ணே மதிக்கல்லே. வாசல் கூட்ட வந்தவ மதிப்பியா?"

"ஏ அம்மா, அம்மா, வார்த்தையை அளந்து பேசுங்க. ஆமா, இல்லாட்டி எனக்கும் பேசத் தெரியும்" என்று சேலை முன்றானையை இடுப்பில் வரிந்து கட்டினாள் அபரஞ்சி.

"ஆமாடி, பேசு அடி, என்ன வேணுமானாலும் செய். என் பெண் அடங்கியிருந்தா இதெல்லாம் வருமாடி? அவளே 'போடி சக்கைங்கிற போது?..." என்று அழ ஆரம்பித்தாள் வடிவாம்பாள். "இது என்ன வம்பு?" என்று சொல்லிக்கொண்டே உள்ளே போனாள் அபரஞ்சி.

வடிவாம்பாள் தன் வேலைக்காரர்களுக்குக் கையில் ஒன்றும் கொடுத்துவிட மாட்டாளாயினும், கருணையாய்ப் பேசக்கூடியவள். இன்று அவளுக்கு இருந்த ஆத்திரத்தில் யாரைப் பேசலாம், யாரை வையலாம் என்று துடித்த நேரத்தில்தான் அபரஞ்சி வந்து



அகப்பட்டுக் கொண்டாள். அவளைத் திட்டிவிட்டு வடிவாம்பாள் அழுது கொண்டிருக்கையில், "என்ன வடிவாம்பாள் அம்மாள், இப்போவே அழ ஆரம்பிச்சுட்டீங்க போலிருக்கு!" என்று சொல்லிக்கொண்டே உள்ளே வைத்தி நுழைந்தார்.

வைத்தியைக் கண்டவுடனே, வடிவாம்பாள் திடுக்கிட்டாள். வயிற்றில் பகீர் என்றது. 'அடப்பாவி, பதினாறாயிரம் ரூபாய் பணத்தைக் கேட்க வந்திருக்கிறானே' என்ற எண்ணம் வந்தது.

ஆனால் புத்தியில் இரண்டு விதம் உண்டு. சாதாரண சமயங்களில் அற்புதமாயிருக்கும்; பழைய 'பாட்டரி' விளக்கு மாதிரி தேவையான சமயத்தில் எரியாது. இன்னொன்று சும்மா துருப்பிடித்துக்கிடக்கும். அலாவுதீன் விளக்குப்போல! தேய்த்தால் பொறி பறக்கும்; தேவையான சமயத்தில் அற்புதமாகப் பிரகாசிக்கும். அலாவுதீன் விளக்குத்தான் வடிவாம்பாளின் மூளை. பணம் என்ற விசையை அழுத்தினால், அவள் மூளை உடனே வேலை செய்யும்.

சில சமயம் அவள் தூங்க ஆரம்பித்தால் யாராலும் எழுப்ப முடியாது. ஒரு காலணாவைத் தரையில் உருட்டிவிட்டால் போதும், சுரீரென்று விழித்துக்கொள்வாள். அதைக் கையில் எடுத்தவுடன் தூங்கியும்விடுவாள். காலணாவுக்கே அப்படி என்றால் ரூபாய் பதினாறாயிரம் என்றால் சும்மாவா இருப்பாள்?

வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் பேச ஆரம்பித்தாள்.

"வாங்க வைத்தி, உங்க எஜமானர் எப்படி இருக்கிறாரு?"

"பணக்கார வீட்டுப் பிள்ளை, உலகத்துக்காகப் பாதி, தனக்காகப் பாதி. அப்படித்தான்."

"அப்படின்னா புரியல்லையே!"

"என்ன, பாடப் புத்தகமா, புரிஞ்சுக்க? பணக்காரர் மனம் இல்லே! நாலு நாளா சண்முகம் விஷயத்திலே ரொம்ப அக்கறையாய் இருக்கார்...."

"குழந்தையைக் கிள்ளி விட்டுட்டுத் தொட்டிலையும் ஆட்டுறாராக்கும்!"

"அதென்ன, யார் குழந்தையை யார் கிள்ளிவிட்டா?" என்றார் வைத்தி. வடிவாம்பாளின் புதிர் அவருக்குப் புரியவில்லை.

"தனுக்குப் போட்டு, ஜிமிக்கி போட்டு, கம்மல் போட்டு, காதோலையும் போட்டு அதைக் கழட்டியும் விட்டேன்னு நீங்க எனக்கே காது குத்துறீங்களே!"

"என்ன அது, அடடா, அப்படியெல்லாம் சொல்லப்படாது."

"நீங்களும் ஒரு வாட்டி சத்தியத்தைக் காப்பாத்திட்டீங்க."

"எப்போவும் நான் சொன்னா சொன்னதுதான்."

"அது தெரியும் எனக்கு. சொல்றதைச் செய்ய மாட்டீங்கன்னு

"எந்த விஷயத்திலே?"

"அதான், கோவில் வாசலிலே சொன்னீங்களே!"

"என்ன சொன்னேன்?"

"சண்முகத்தைத் தீர்த்துக்கட்டிவிடப் போறேன்னு"

அதைக் கேட்டவுடனே வைத்தி திடுக்கிட்டுவிட்டார். நேற்று போலீஸ்காரன் பிடித்து விட்டுவிட்டான். இன்றைக்கு வடிவாம்பாள் பிடித்துக்கொண்டுவிட்டாள். என்ன செய்வது?

தான் முயற்சி செய்த நல்ல காரியம் அந்த மைனரின் சிறு பிள்ளைத்தனத்தினால் கெட்டுவிட்டதே! உலகத்தில் இல்லாத விதமாய் இவர் நம்மைக் காலை வாரிவிட்டுவிட்டாரே! கறவைப்பசு என்று ஒரு பசுவைத் திருடி வந்தோம். ஆனால் அது மரத்த பசுவாகி, இப்போது வைக்கோல் போட்டுக் காப்பாற்றவேண்டியும் வந்துவிட்டதே!

இந்த மைனர் இப்போது பெரிய மனிதனாகிவிட்டானே என்று ஏங்கினார் வைத்தி.

அதுவும் போதாதென்று காக்கை ஏறவும், பனம்பழம் விழுந்தது போல், தான் மாடியில் இருக்கவும், போலீஸ்காரன் பிடிக்கவும் சரியாய் இருந்ததை நினைத்து ரொம்ப வருந்தினார். சதிர் நடக்கும் ஒரு சமயத்தில் தவிர, மற்ற நேரங்களில் கோவிலுக்கே போகாத வைத்தி, சண்முகம் பிழைத்தால் கோவிலுக்கு வருவதாகக்கூட வேண்டிக் கொண்டார். இந்த நிலையில் வடிவாம்பாள் தம்மை அந்தக் கேடன் பிணைப்பதைப் பார்த்த சவடால் வைத்தி சலசலத்துப் போனார்.

"என்ன செய்கிறது பெரிய குடும்பத்தில் பிறந்து, நல்லா வளர்ந்து, நாலு மனுசான் கிட்டே நல்ல பெயர் வாங்கி, நல்லாத்தான் வந்தீங்க. உங்க தலையெழுத்து 'கம்பி எண்ண'னும்னு எழுதி இருக்கும் போலிருக்கு" என்று வடிவாம்பாள் பரிதாபப்பட்டாள். அவளுடைய உள்ளத்தில் ஒரு பெரிய யோசனை ஓடிக்கொண்டிருந்தது. 'வைத்தி வாயைத் திறந்து நகையைக் கொடு என்று கேட்பதற்குள் தன் கைவசம் உள்ள சரக்கை அவனிடம் காட்டிவிடவேண்டும்' என்று நிச்சயத்தில் பேசினாள் வடிவாம்பாள். வைத்தியோ, பிரமித்து உட்கார்ந்திருந்தார்.

"ஏய்யா, நான் கேக்கிறேன். அவன் மேலே எறிஞ்ச கத்தி மைனர் மேலேயே பட்டிருந்தா என்னய்யா ஆகியிருக்கும்?"

"வடிவாம்பாள் அம்மான், நீங்க விஷயம் தெரியாதே பேசாதீங்க. எதெல்லாம் ஆபத்து. என் கிட்டே சொன்ன மாதிரி இரண்டு பேருகிட்டே சொல்லிவிட்டீங்கன்னா..."

"நான் எய்யா சொல்லப் போறேன்? உங்களைக் கெடுக்கிறதிலே எனக்கு என்ன மிச்சம்? நாளைக்கு போலீஸ்காரன் என் வீட்டு வாசலில் வந்து நின்னுக்கிட்டு, நீங்க சொல்லித்தான் ஆகவேண்டும்னு சொன்னா, நான் சொல்லாமே இருக்க முடியுமா?"



"இல்லேம்மா, நான் வேறே விஷயத்தைச் சொன்னேன்."

"வேறயாவது, விஷமமாவது! நீங்க போங்க மலை போல என் கிட்டத்தானே சொன்னீங்க! சரி, நீங்க எதுக்காக இப்ப இங்கே வந்தீங்க?"

வைத்திக்கு இப்பொழுது வெளியே போகவே பயம் வந்துவிட்டது. இருந்தாலும் மனத்தைச் சமாளித்துக்கொண்டார்.

"நான் சொன்னதை நீங்க நிஜம்னு நம்பிட்டீங்களா?"

"கண்ணாலே பார்த்த பிறகு நம்பாமே என்ன பண்ணறது? நீங்கதான் கத்தியை எறிஞ்சிட்டு மறைஞ்சிருந்தீங்களாம். எங்க வாதன் கூட உங்களை மாடியிலே பார்த்தானாமே!"

"வடிவாம்பாள் அம்மான், நான் ஒரு பாவத்தையும் அறியேன். எனக்கு இந்த லெச்சர் கிச்சர் எல்லாம் கேட்கப் பிடிக்காது. ஏதோ, பரதேசியாரும், பஞ்சாயத்தாரும் மாதி மாதிப் பேச ஆரம்பிச்சாங்க. எனக்குத் தூக்கம் வந்துடுத்து. போய்ப் படுத்தேன். அம்மளவுதான் தெரியும்."

"என் கிட்டே ஏன் ஐயா இதெல்லாம் சொல்லறீங்க? இன்ஸ்பெக்டர் கிட்டே சொல்லுங்க."

வைத்தியின் உடம்பு வெலவெலத்தது. இது என்னடா, சந்தர்ப்ப சாட்சியம் உருவாகி வருகிறது போலிருக்கிறதே! இதற்காகத்தான் போலீஸ்காரர்கள் நம்மை விட்டு வைத்திருக்கிறார்கள் போலிருக்கிறது. திருப்பிக்கொண்டால் ஆபத்தில் வந்து விடுமே!' என்று எண்ணினார்.

இந்தச் சமயம் வடிவாம்பாள், "சரிங்க, இப்போது நீங்க எதுக்கு வந்தீங்க? பதினாறாயிரம் பணம் கேக்க வந்தீங்களா?" என்றாள்.

வைத்திக்கு மூளையில் ஒரு மின்னல் மின்னியது. பதினாறாயிர ரூபாய் கிடைத்தால் வாங்கிக்கொண்டு பட்டணத்தைப் பார்க்கப் போய்விடலாமே என்று யோசித்தார்.

"ஆமாம்... அது..." என்று இழுத்தார் வைத்தி.

"மோகனா, நகைகளையெல்லாம் கழட்டிக் கொடுத்திருக்கு. நான் வித்து வைக்கிறேன். நீங்க மைனரைக் கூட்டிக்கிட்டு வாங்க. அவர் கையிலே பதினாறாயிரத்தையும் கொடுத்துவிடுகிறேன்."

வைத்தி மறுமுறையும் வடிவாம்பாளிடம் ஏமாந்தார். அதை வெளிக்காட்டாமல், "நான் அதுக்காக இப்போ வரலே" என்றார்.

"என்னத்துக்கு உங்க பணம் எங்களுக்கு?"

"இல்லேம்மா, நான் வந்து..."

"இருந்தாங்க ஐயா. எனக்குத் திருட்டு, கொலை இது எல்லாம் பிடிக்காது. சொன்னா சொன்னபடி பணம் தரேன். வாங்கிக்கிட்டுப் போங்க."

"அம்மா, மைனருக்கே அக்கறையில்லேன்னா, எனக்கு எதுக்குப் பணம்? ஒண்ணும் வேண்டாம். நீங்க இந்த விஷயத்தை மாத்திரம் பிறத்தியாருக்குச் சொல்லாமல் இருந்தால் போதும்"

"ஏன், எதுக்காகக் கவலைப்படறீங்க? நாலு வருஷம் இருந்துட்டுத் தான் வந்துடறது!"

"ஐயோ, நினைச்சாலே நடுங்குதே! அங்கே போய் கிளாஸ்கோ வேட்டி கட்டிக்க முடியுமா? மல் ஜிப்பா போட முடியுமா?"

"கொஞ்ச நாளைக்குச் செலவில்லாம வேட்டி கட்டுகிறது! உம். போங்க. உங்களைத் தேடிக்கிட்டு எவனாவது போலீஸ்காரன் இங்கே உள்ளே வந்து நுழைஞ்சுடப் போறான்!"

வடிவாம்பாள் விரட்ட விரட்ட வைத்தி யோசித்தார். அவள் வாயிலிருந்து ரகசியம் வெளியாகிவிடக்கூடாதே என்று எண்ணி, வண்டியை வேறு பாதையில் திருப்பினார்.

"இதோ பாருங்கோ, வடிவாம்பாம்மா! நீங்களும் மோசம் போயிட்டீங்க, நானும் மோசம் போயிட்டேன். நான் மைனரை நம்பி மோசம் போனேன். நீங்க மகளை நம்பி மோசம் போனீங்க."

"என் மக ஒண்ணும் மோசம் பண்ணலே"

"இதுக்கு மேலே என்னம்மா இருக்குது? உங்களுக்கு வேறே என்ன செல்வம்? வீட்டிலே புருஷன் இருக்கிறாரா, ஏதோ கணவன் அன்பிலேயாவது கஷ்டத்தை மறக்கலாம் என்கிறதுக்கு! அவளைத் தானே உயிருக்கு உயிராக வளர்த்தேன்? அவள் பாட்டுக்கு நாதஸ்வரக்காரனுக்கு சிச்ருஷை செய்துகிட்டு இருந்தா, நாளைக்கு உங்க கதி என்ன ஆகிறது?"

"ஏது, வைத்திக்கு என் மேலேகூட இரக்கம் வர ஆரம்பித்துடுத்து?"

"இந்தா வடிவாம்பாள், நீ என்னைப்பத்தி போலீஸ்லே சொன்னாலும் சொல்லு, நான் அங்கேயும் போய் இருந்து உனக்காகத் தான் கண்ணீர் வடிப்பேன். இந்தத் திருவிடைமருதூர் பொண்ணைப் பாத்தியோ? நல்லா அதுக்கு மாசம் இரண்டு மூன்று கச்சேரி நடந்துக் கிட்டிருந்தது. திவ்யமாகப் பாடிக்கிட்டிருந்தாள். அவளுக்குன்னு ஒருத்தன் வந்து சேர்ந்தான். இப்போ பாரு கச்சேரியும் கிடையாது, பாட்டும் போச்சு. அவள் தாலாட்டுப் பாடினாக்கூட சகிக்காமல் குழந்தை கத்தறது! வித்தை போச்சு, பணம் போச்சு. அம்மாவை வீட்டைவிட்டு விரட்டிவிட்டாள். அம்மாக்காரி வந்து, 'வைத்தி சாமி, எங்கேயாவது காப்பி கிளப்பிலே வேலையிருந்தால் பாத்துக் கொடுங்களேன்' என்று என்னைக் கேட்கிறாள். நாளைக்கு உங்க பெண்ணும் அப்படிச் செய்யமாட்டாள்னு என்ன 'கியாரண்டி?'"

வடிவாம்பாள் துடித்தாள். நாளை தன் கதியும் அப்படித்தான் ஆகிவிடுமோவென்று எண்ணினாள்.

"என் மக அப்படியெல்லாம் செய்ய மாட்டாள்" என்று மேன் மினுக்காகக் கூறினாள்.



"நீ ஒண்ணு. உனக்கு வெளுத்ததெல்லாம் பாலு. பெத்த மனம் பித்து. புள்ளை மனம் கல்லுன்னு சொல்லப்பட்டது இல்லே? அன்னைக்கே நான் பார்த்தேனே! தாய்க்கு அடங்கின பொண்ணாகவா இருந்தாள்? அந்தக் கூட்டத்திலே அவ அந்த நாயனக்காரன் கிட்டே அவ்வளவு பேசியிருக்கப்படாது. ஊரிலே எல்லாம் என்ன பேசறாங்க தெரியுமா?" என்றார் வைத்தி.

இப்போது வைத்தியின் வத்தி புகைய ஆரம்பித்தது. வடிவாம்பாள் பெருமூச்சு விட்டு அதை மேலும் ஊதிவிட்டாள். விடுவாரா வைத்தி?

"கமலாலயத்தின் கரைக்குப் பல் தேய்க்கப் போயிருந்தேன். அங்கே யாரோ புடைவை தோய்ச்சிக்கிட்டு இருந்தா. ஒருத்தர் சொன்னார்! 'அதோ பாருடா வடிவாம்பாளை' என்றார். நான் பார்த்தேன். அவ ஒரு கிழவி. உடனே எனக்குக் கோபம் வந்தது. 'வடிவாம்பாள் தலையிலே அப்படி ஒண்ணும் எழுதலே. அவள் ஒண்ணும் புடைவை தோய்க்க மாட்டாள்' அப்படின்னு சொன்னேன். 'சரிதாங்காணும், இன்னும் ஐந்து வருசம் கழிச்சப்பாரும். அவ கையாலே புடைவை என்ன, நாதஸ்வரக்காரன் வேட்டியையும் கூடவே தோய்ப்பாள்' என்று அதிகப்பிரசங்கித்தனமாகப் பேசினான். எனக்கு வந்த கோபத்திலே அவனை ஓங்கி ஒரு அறை அறைந்துவிட்டு நேரே உன் வீட்டுக்கு வந்துட்டேன்" என்று ஆத்திரம் துடிக்கக் கூறினார் வைத்தி.

இதைக் கேட்ட வடிவாம்பாள்? "ஆமா வைத்தி, அவங்க சோசியம் என்னமோ உண்மைதான்" என்று தலையை ஆட்டினாள்.

"என்னம்மா ஜோசியம்? உலகத்திலே இந்த மைனரைவிடப் பணக்காரர்கள் இல்லையா? இந்த மைனர் போனா இன்னொரு மேஜர் வர்ரான். இப்போகூட ஒண்ணும் மோசம் போகல்லே. கொஞ்சம் கயிற்றை இழுத்துப் பிடிச்சுக்கோங்கோ"

"நான் என்ன செய்யணும் வைத்தி, சொல்லுங்க?"

"அவளையும் அந்த நாதஸ்வரக்காரனையும் சேர விடாதீங்க. பாலியூர் ஜமீன்தார் இருக்கிறார். கோடி ரூபாய் பணத்தை வைத்துக் கிட்டு என்ன செய்றதுன்னு தெரியாம தவிக்கிறார். நாளைக்கே நான் முடிச்சைப் போட்டுடறேன். எனக்கு உங்க குடும்பம் நல்லா இருக்கணும். உங்க பொண்ணு நல்லா இருக்கணும். அவ்வளவுதான். சரி, பின்னே நான் வரேன்" என்று பிகுவுடன் எழுந்தார் வைத்தி.

"இருங்க வைத்தி, காப்பி கீப்பி சாப்பிடாம போறீங்களே?"

"எனக்குக் காப்பி கீப்பி ஒண்ணும் வேண்டாம்! நீங்க மாத்திரம் அந்தச் சேதியை ஒருத்தர்கிட்டேயும் சொல்லிவிடாதீங்க" என்று சொல்லிவிட்டு, வைத்தி நடந்தார்.

வடிவாம்பாளின் சாமர்த்தியம் அவளுக்கே வியப்பை அளித்தது. முதல் காரியம், பதினாறாயிரம் ரூபாய் மிச்சம். இரண்டாவது,

பாளியூர் ஜமீன்தார் இத்தனைக்கும் இடையூறாயிருப்பது மகளின் பிடிவாதமும் சிக்கலான் சிக்கலுந்தாம். மகள் மாத்திரம் தன் சொற்படி கேட்டால் எவ்வளவு நன்றாக வாழலாம் என்று எண்ணினாள்.

வடிவாம்பாள் கூடத்தில் வந்து உட்கார்ந்தாள். மோகனா இல்லாத வீடு வெறிச்சென்று இருந்தது. இதற்குள் பத்துத் தரம் வளைய வந்திருப்பாளே, நாலு தரம் 'அம்மா' என்று கூப்பிட்டிருப்பாளே என்று எண்ணினாள். அவளுக்குக் கண் கலங்கியது.

இதுவரை ஒரு நாளும் அவள் மோகனாவை விட்டுப் பிரிந்து இருந்ததில்லை. எங்கு சென்றாலும் தாயும் மகளும் ஒன்றாகத்தான் செல்வார்கள். யார் எதைக் கேட்டாலும் தாயிடந்தான் கேட்பார்கள்.

இனி இதெல்லாம் எங்கே என்று நினைத்தாள் வடிவாம்பாள்.

இந்த நிலை எல்லாத் தாய்க்கும் உண்டு. தன் மகளைக் கணவன் வீட்டுக்கு அனுப்பிவிட்டு, ஆயுள் பூராவும் தாயும் தந்தையும் தனித்து இருக்கிறார்கள். மகளின் குழந்தைப் பருவத்தை எண்ணி, எண்ணிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அது துன்பம் கலந்த இன்பம். புளிப்புக் கலந்த ஜிலேபி போன்றது. சாதாரண இனிப்பைக்காட்டிலும் இதில் இனிப்பு அதிகம்.

ஆனால், வடிவாம்பாளுக்கு அந்தக் கவலை இல்லை. மகளின் நல்வாழ்வு பணத்தில்தான் என்று அவளை நிச்சயமாக நம்பும்படி செய்திருந்தது சமூகம்.

ஊஞ்சலில் உட்கார்ந்து யோசித்துக்கொண்டிருந்தாள் வடிவாம்பாள். வாசற்கதவை யாரோ திறக்கும் சத்தம் கேட்டது. சடக்கென்று கண்ணைத் துடைத்துக்கொண்டாள். அவசரமாக வாசலுக்குப் போனாள். ஆனால் வந்தவள் மோகனா அல்ல, காற்றில் கதவு சாத்தப்பட்டது என்று அறிந்தாள். உடனே நாதாங்கியை எடுத்து மாட்டினாள். அவளுக்கு ஒரு எண்ணம் வந்தது.

'நாம் இப்படி அடிக்கடி கதவு சரியாய்ச் சாத்தியிருக்கிறதா, தாழ்ப்பாள் போட்டிருக்கிறதா என்று வீட்டில் உள்ள பொருளை எல்லாம் சரி பார்க்கிறோமே, இந்த மோகனாவுக்கு இது எல்லாம் தெரியுமா? இல்லை. பார்க்கத்தான் பார்ப்பாளா? பணம் காசிலே அக்கறை இருந்தால்தானே இதெல்லாம் வரும்? எங்கே, பத்து நாளைக்கு இந்த அம்மா இல்லாமல் அவள் குடித்தனம் செய்யட்டும்? அப்பத்தான் தெரியும். வீட்டிலே ஒரு துரும்பு இருக்காது. எல்லாம் வந்தவன் போனவன் தூக்கிக்கொண்டு போய்விடுவான்!' என்று நினைத்துக்கொண்டே உள்ளே வந்தாள்.

'அவளுக்குத்தான் காசு பணம் வேண்டாமே! கலைதானே வேண்டும்! இந்தக் கலை என்ன சும்மாவா வந்தது? நான் கத்து வச்சதுதானே? இல்லாட்டா இவள் ஆடிவிடுவாளா? ஆத்தாக்காரி கையால் பொட்டை வச்சுத் தலையை வாரிப் பின்னி பூ வைத்தால் எல்லாருந்தான் அழகு அழகு என்பார்கள். இனிமேல் யாரு



அதெல்லாம் என் மாதிரி செய்வார்கள்?' இதை எண்ணும்போது வடிவாம்பாளுக்கு மனம் என்னவோ செய்தது. அழுகைகூட வந்தது.

தன் மகள் அழகை அவளைப்போல் யாரும் ரசித்திருக்க மாட்டார்கள். மோகனாவை அழகு பொங்கி வரச் சிங்காரிப்பாள். வாசலில் போய் நிற்பவள் போல் தள்ளி நின்று தன் மகளைக் கடைக் கண்ணால் பார்ப்பாள். கூடவே கூட்டிக்கொண்டு கோயிலுக்குப் போய் வருவாள். அங்கு யார் யார் அவள் அழகைப் பார்க்கிறார்கள் என்பதையும் கடைக்கண்ணால் பார்ப்பாள். அதில் பூரிப்பாள். யாராவது உன் மகள் ரொம்ப நன்றாக இருக்கிறாள் என்று சொல்லி விட்டால் 'ஆமா, இது வகிடும் பொட்டும் நல்லாவா இருக்கு?' என்று அவர்கள் முன் தன் மகளைத் தூற்றுவாள். ஆனால், அழகைப் புகழ்ந்தவர்கள் அந்தப் பக்கம் போனவுடன் அவர்கள் காலடி மண்ணை அள்ளித் தன் மடியில் கட்டிக்கொள்ள மறக்கமாட்டாள். வீட்டுக்கு வந்தவுடன் அதை நெருப்பில் போட்டு மகளுக்குத் திருஷ்டி கழித்துத் தலைப்பின்னலைக் கலைத்துவிட்டுத்தான் மறு வேலை பார்ப்பாள்.

'இப்படி அருமையாக வளர்த்த பெண்ணுக்கு இனி நான் ஏன் தலை சீவுகிறேன், ஏன் பொட்டு வைக்கிறேன்!' என்று ஆத்திரத்தில் எண்ணக்கூட அந்தத் தாய் உள்ளம் பொறுக்கவில்லை. கண்ணீர் வடித்தாள்.

'ஆனால் இனி அவள் வந்து, 'அம்மா, இந்தப் புடவை நல்லா இருக்கா? இந்தப் பூவைக் கொஞ்சம் வைத்துவிடம்மா!' என்று நம்மிடம் கேட்பாளா? அந்தச் சிக்கலான் கிட்டத்தானே போய்க் கேட்பாள்!

'இனி இந்த வீட்டுக் கூடத்தில் ஊஞ்சல் பலகையில் நான் உட்கார முடியுமா? இப்போது வாசலில் வரும்போதே 'வடிவாம்பா அம்மா இருக்காங்களா?' என்று கேட்பவர்கள் எல்லாம், நாளை நம்மையே பார்த்து 'நாயனக்காரர் இருக்காருங்களா?' என்று கேட்பார்களே! நாம் வேலைக்காரிபோல் 'இதோ பார்த்துவிட்டு வந்து சொல்கிறேன்' என்று சொல்ல வேண்டி வரும்.

'நம் வீட்டில் இன்னொருத்தர் அதிகாரம்; நான் வேலைக்காரி! இப்படி வாழ்வதைவிட 'இந்த வீட்டில் இல்லாமல் போய்விடுவதே மேல். இந்தப் பெண்ணுக்குப் புத்தி வந்து 'அம்மா அம்மா' என்று அலறட்டும்.

'இந்தப் பயகள் குணந்தான் தெரியுமே! அவளையும் ஆடவிட மாட்டான். இவனும் கச்சேரி ஒத்துக்க மாட்டான். அம்மாக்காரி பாடுபட்டுச் சேர்த்தது எல்லாம் குங்குமப் பூவுக்கும், மல்லிகைப் பூவுக்குந்தான் சரியாக இருக்கும். ஆறே மாசம்! சல்லாதுப் பொட்டிலிருந்து சாந்துப் பொட்டுக்கு வந்துவிடுவாங்க. எப்ப பார்த்தாலும் வீட்டு வாசல்லே பத்துப் பேர் கூட்டம். பார்க்கிறவங்க

கச்சேரி பேச வந்திருக்காங்கன்னு நினைச்சிப்பாங்க. கிட்டத்திலே போய்ப் பார்த்தால் தெரியும்! ஜவுளிக் கடைக்காரன் முதல் பால்காரன் வரைக்கும் பணத்துக்குக் காத்துக்கிட்டு இருப்பாங்க.

'இந்தக் கஷ்டத்தை நான் ஏன் பார்க்கனும்? ஒன்று, அவள் என் சொல்படி கேட்டால் கேட்கட்டும். இல்லே, அந்தச் சிக்கலான் பாடு இந்தச் சிங்காரவல்லி பாடு. நமக்கு என்ன வந்தது?' என்று நினைத்தாள் வடிவாம்பாள்.

பெட்டிகள் திறக்கப்பட்டன. அங்குமிங்கும் புடைவைகள் வாரி வீசப்பட்டன. அவைகள் நாலைந்து மூட்டை முடிச்சுகளாயின. இடையிடையே பெருமூச்சும், கொஞ்சம் நெடுமூச்சும் கேட்டன.

அப்போது வாசல் கதவைத் திறந்துகொண்டு மோகனா அவசரமாக உள்ளே வந்தாள். கூடவே வரதனும் வந்தான். இந்தச் சமயம் பார்த்துத்தானா அபரஞ்சியும் காய்கறிகளை வாங்கி வரவேண்டும்?

மூவரும் ரேழியில் சந்தித்தனர்.

"எப்படி அம்மா இருக்குது?" என்றாள் அபரஞ்சி.

"சாமி காப்பத்தினார்" என்றாள் மோகனா.

"எந்தச் சாமி?" என்றாள் அபரஞ்சி.

"பரதேசியாரும் பகவானுந்தான். ஆமா, நீ என்ன காய்கறி வாங்கிட்டு வந்திருக்கே?"

"உருளைக் கிழங்கு, கருணைக் கிழங்கு, வெங்காயம், காரட்டு."

"ஏய் அபரஞ்சி, என்ன எல்லாமே கிழங்கா வாங்கியாந்துட்டே? உன் புத்தி போலேதானே நீ வாங்குவே!" என்றான் வரதன்.

"என்னைக் குத்தம் சொன்னா? நானா வாங்கறேன்? பெரியம்மா தான் சொன்னாங்க. கிழங்கு வாங்கினா நாலு நாளைக்கு இருக்கும்னு."

"எங்கே, வவுத்திலேயா?"

இந்தப் பேச்சைக் கேட்டதும் வடிவாம்பாளுக்கு ஆத்திரம் பொங்கி எழுந்தது. 'ஓசிச் சாப்பாட்டுக்கு உருளைக்கிழங்கு பத்தாதோ' என்று எண்ணினாள். 'இந்த வரதன் பச்சைக் காரட்டைப் பல்லிலே கடிச்சுத் திங்கறான். பாரு, பேசற பேச்சை! எல்லாம் அவள் குடுக்கிற இடம். ஆனால் நமக்கு என்ன? இனிமேல் நல்ல காய்கறிகளாக வாங்கிச் சாப்பிட்டுமே. நானா தடுக்கப் போகிறேன்?' என்று நினைத்துக்கொண்டாள். அதற்குள் மோகனாவின் குரல் அவள் காதில் கேட்டது.

"அம்மாகிட்டே சில்லறை வாங்கிட்டுப் போய் நல்ல பிஞ்சுக் கத்திரிக்காயும், புடலம் பிஞ்சும் வாங்கிட்டு வா. அவருக்குப் புளிவிடாமல் பொரிச்ச குழம்பு செய்து, ரசம் சாதமும் கொடுக்கலாம் என்று சாமியார் சொல்லியிருக்காரு. எங்கே, சீக்கிரமாக வந்து சமையல் செய்" என்றாள் மோகனா.



"ஏன் தங்கச்சி, அது உப்பை அள்ளிப் போட்டுடும். நீயே செய்திடுவே!" என்றான் வரதன்.

"இல்லை வரதா, அபரஞ்சி செய்யட்டும். நான் அதற்குள் ஒரு நொடியில் குளிச்சிட்டு வந்துடறேன்" என்று சொல்லிவிட்டு அவசரமாக உள்ளே நுழைந்தாள் மோகனா.

ஆனால், கூடத்தில் அவள் கண்ட காட்சி அவளைத் திடுக்கிடச் செய்தது.

வடிவாம்பாள் கண்ணீர் வழிய ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு எதிரில் நாலைந்து துணி மூட்டைகளும் ஒரு மஞ்சள் பெட்டியும் இருந்தன. பார்த்தால், எங்கேயோ புறப்படத் தயாராக இருப்பது போல் தெரிந்தது.

"அம்மா!" என்றாள் மோகனா.

"ரெண்டு வெந்தயத்தையும் அள்ளிப் போடு" என்றாள் தாய்.

உடனே மோகனா, "அபரஞ்சி, பொரிச்ச குழம்பிலே ரெண்டு வெந்தயமும் போடச் சொல்றாங்க அம்மா!" என்றாள்.

"பொரிச்ச குழம்புக்கில்லேடி. உங்க அம்மா தலையிலே! அம்மாவாமில்லே, அம்மா! இப்பத்தான் நான் வீட்டிலே இருக்கிறது கண்ணு தெரிஞ்சதோ? வீட்டுக்கு வந்தவள், நான் ஒருத்தி இருக்கேனான்னு பாத்தியா? அம்மான்னு கூப்பிட்டியா? அம்மா எங்கேன்னு கேட்டியா? அவங்க சாப்பிட்டாங்களான்னு கேட்டியா? புருசனுக்குப் பொரிச்ச குழம்பிலேதானே புத்தி போகுது! பிஞ்சுக் கத்திரிக்காய் வேணுமாமில்ல, அவன் கெட்ட கேட்டுக்கு!"

"ஏம்மா இவ்வளவு கோவம்?"

"கோவமில்லே அம்மா, சந்தோசம்! உன்னைப் பெத்துப்புட்டேனில்லே, அதனாலே—"

"நான் என்னம்மா செய்தேன்?"

"நீ என்ன, செய்தியா, ராத்திரி எங்கேடி போயிருந்தே?"

மோகனா திடுக்கிட்டாள்!

"என்னம்மா, இப்படிக் கேக்கிறே? நீதானே விட்டுட்டு வந்தே?"

"ஆமாடி, நானா விட்டுட்டு வந்தேன்! என்னைப் பாத்துச் சொல்லு. நீ கூப்பிட்டவுடனே வராட்டி நான் உன்னை இழுக்கிறதா? நடு ராத்திரியிலே நடந்து வந்தேனே, ஒரு பூச்சி பொட்டுக் கடிச்சிருந்தா என்ன ஆகிறது? உனக்கு இனிமேல் நான் எதுக்குடி?"

"அம்மா, இப்படி எல்லாம் பேசாதீங்க அம்மா. ஏற்கெனவேயே என் மனது நொந்து கிடக்கு."

"இனிமே நோகாது. இனி இந்த வடிவாம்பா உன் வம்புக்கு வரமாட்டா. இதோ பாத்தியா மூட்டை? இனி உன் வீடு, உன் வாசல், உன் அதிகாரம். சிக்கலான் நட்டுவம் போடுவான். நீ நாட்டியமாடிக்கிட்டே இரு. நான் புறப்பட்டுட்டேன். இந்தச் சாவியை உன்கிட்ட கொடுக்கறதுக்குத்தான் இந்நேரம் காத்துக்கிட்டு இருந்தேன்" என்று

சொல்லித் சாவிக் கொத்தை மோகனாவின் காலடியில் தூக்கி எறிந்தாள் வடிவாம்பாள்.

அறுபத்து ஐந்தாம் அத்தியாயம்



## அன்னையே பகையானால் யாரிடம் சொல்வது ?

வீட்டுச் சாவியைத் தூக்கித் தன் முன் எறிந்ததும் மோகனா உண்மையிலேயே நடுங்கிவிட்டாள் வடிவாம்பாளுக்குப் பல முறை கோபம் வந்தது உண்டு. அப்போதெல்லாம் தடிப்பான வார்த்தைகள் தாம் வரும். கொத்துச்சாவி வந்ததே இல்லை. அவள் நன்றாகத் தூங்கும் போது எவ்வளவு தட்டி எழுப்பினாலும் எழுந்திருக்க மாட்டாள். தலையணையின் கீழ் இருக்கும் சாவியை எடுத்தால் போதும், உடனே எழுந்துவிடுவாள்! அப்படி உயிருக்கும் மேலாகக் கருதும் சாவியை ஒரு நொடியில் தூக்கி எறிந்ததைக் கண்டதும், வாதன், மோகனா இருவருமே நடுங்கிவிட்டார்கள்.

இதுதான் சமயம் என்று வடிவாம்பாளும் ஊஞ்சலை விட்டு எழுந்து தலையில் இரு மூட்டைகளும் கையில் ஒரு மூட்டையுமாக எடுத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டாள்.

தன் தாய் தலையில் மூட்டையை எடுத்துக்கொண்டு புறப்பட்டதைக் கண்டதும் மோகனா ஓடிப்போய் அவளைத் தடுத்து நிறுத்தினாள். "அம்மா, இதெல்லாம் என்ன கோலம் அம்மா? எங்கேம்மா புறப்பட்டுட்டே?" என்று கேட்டாள்.

"ஆமா, எனக்குக் கோவம். நான் உன் நாத்தினா பாரு. நீ உன் புருசன் கிட்ட கொஞ்சிப் பேசறது எனக்குப் புடிக்கல்லே! எனக்கென்னடி வம்பு ? நான் போறேன்."

"எங்கேம்மா போறீங்க?"

"எங்கே போனா உனக்கென்ன?"

இவ்வளவு நேரம் வாதன் இதைப் பார்த்துக்கொண்டே சும்மா இருந்தான். இனி சும்மா இருக்கக் கூடாது என்று தீர்மானித்தான்.

"அம்மா, நீங்க எங்கே போனாலும் சரி. இவ்வளவு மூட்டைகளை எடுத்துக்கிட்டுப் போகாதீங்க. ரயிலிலே வக்கேக போட்டுடுவான். சும்மா போர்ட்டர் கூலி கொடுத்தே மாளாது புடுங்கித் தின்னுடுவா ஆங்க" என்றான்.



"என்னடா, நான் என்ன வைக்கோல் போரா, என்னைத் திங்க? இன்னும் ரெண்டு மூட்டை இருந்தாலும் நானே எடுத்துக்கிட்டுப் போவேன்டா? இந்தா மோகனா, விடு. என்னைத் தடுக்காதே."

"வீட்டை விட்டுப் போகாதீங்கம்மா உங்களைக் கும்பிடுறேன்."

"என்னை என்னடி கும்பிடுறே? அவனைக் கும்பிடு! எனக்கு வீடு வெறுத்துப்போச்சு காசிக்குப் போறேன்."

"அடேடே, காசிக்கா! சரி, பின்னே புறப்படுங்க, வயசுக் காலத்திலே போயிட்டு வரவேண்டியதுதான். இந்தா மோகனா, அவங்க ஆசையை ஏன் கெடுக்கறே! அம்மா நீங்க போயிட்டு வர பாதையிலே பண்டரீ புரத்துக்கும் வந்துட்டு வாங்க. இதென்னம்மா, மூட்டையைக் கோன கொளன்னு கட்டியிருக்கீங்க" என்று சொல்லி, ஒரு கயிற்றை எடுத்து வந்து, தொங்கிய மூட்டை ஒன்றை இழுத்து இறுக்கிக் கட்ட ஆரம்பித்தான்.

"அங்கே நல்ல காசிக்கயிறு கொஞ்சம் வாங்கி அனுப்புங்க ஒரு சிவப்புலேஞ்சி விற்பாங்க, எட்டணாத்தான் இருக்கும். அதிலே ஒரு ரெண்டு வாங்கி அனுப்புங்க. ஏம்மா, அங்கே எத்தனை மாசம் 'கியாம்பு?'" என்றான் வாதன்.

"ஆமா, என்னை அனுப்பிச்சுட்டா நல்லா உக்காந்து திங்கலாமில்ல? கட்டு, கட்டு! அந்த மூட்டைக்குள்ளேயே என்னையும் சேத்து வச்சுக் கட்டிப்பிடு. எனக்கென்ன, உங்க பாடு" என்றாள் வடிவாம்பாள்.

"இல்லேம்மா, இதெல்லாம் இப்படித்தான்; நினைச்சால் உடனே கிளம்பிடணும். இல்லாட்டி கிடைக்காது நான் போய் ஒரு வண்டி கொண்டுவரவா?" என்றான் வாதன் மேலும் ஹாஸ்யமாக.

"அம்மா, நான் என்ன தப்புச் செய்தேன் அம்மா?" என்றாள் மோகனா.

"ஏன், என்கிட்டே இதெல்லாம் கேக்கிறே? ஹூம், குளிச்சுட்டுப் போ. நேரமாச்சில்லே? நாயனக்காரரு காத்துக்கிட்டு இருப்பாரு."

"அம்மா, அப்படியெல்லாம் பேசாதீங்க அம்மா. என்னாலே தானே அவருக்குக் காயம் பட்டது?"

"உன்னாலே இல்லடி, என்னாலே! நான் பெத்து வளக்காட்டி நீ போட்டிக்குக் கூப்பிட்டிருப்பியா?

"உடம்பு முடியாம இருக்கிறபோது நான் பார்க்காமே இருக்கலாமா அம்மா?"

"ஆமா? நீ டாக்டரு ஊரிலே யாருக்காவது உடம்பு முடியாட்டி நீதான் பார்க்கிறதுக்குப் போகணும்! போ. போ. என்னென்னமோ எண்ணி உன்னை வளர்த்தேன் உன் தலை எழுத்து இப்படி இருக்குது"

"பின்னே என்னை என்னம்மா செய்யச் சொல்றீங்க?"

"சொன்னா மட்டும் கேட்டுடப் போறியா?"

"சொல்லுங்க அம்மா. நீங்க சொல்றபடி கேக்கிறேன்."

"ஒரு வண்டியைக் கொண்டாரச் சொல்லு. என் மூட்டை முடிச்சு எல்லாத்தையும் அதிலே ஏத்து. என்னையும் தூக்கி உக்காத்தி வை வண்டி. தெருவிலே போகும். கூடவே பத்து அடி நடந்து வா. அதுக்கப்புறம் ஓடம் போக்கி ஆத்திலே போய் முழுகிவிட்டு, "எங்க அம்மா தொலைஞ்சாங்க"ன்னு சொல்லிட்டு, நேரே அவன் ஜாகைக்குப் போ. அவனையும் கூட்டிக்கிட்டு இந்த வீட்டிலே வந்து உட்கார்ந்துக்க. அவ்வளவுதான். உன்னைப் பெத்ததுக்கு நீ இதைச் செய்தாலே போதும்."

இவ்வாறு வடிவாம்பாள் எரிந்து விழுந்துகொண்டு சொல்லவே மோகனாவுக்குக் கண்ணீர் பொங்கியது.

"அம்மா, அப்படிச் சொல்லாதீங்க அம்மா! நீங்க என்னைத் தனியா வச்சுட்டுப் போயிட்டீங்கன்னா நான் என்னம்மா பண்ணுவேன்?"

"இந்தா பாரு, ஒன்னு. இந்த வீட்டிலே நான் இருக்கணும், இல்லாட்டி அந்தச் சிக்கலான் இருக்கணும். என் மக எனக்கு அடங்கி நடக்கணும். இல்லாட்டி அவனுக்கு அடங்கி நடக்கணும். என்னடி, நேத்து முளைச்சவ நீ! இன்னும் முந்தாணியைச் சரியாக முடிஞ்சுக்கத் தெரியல்லே! அதுக்குள்ளே என்ன, அவ்வளவு ஆசை வந்துடுத்தோ? பத்துக்காசு பணம் சேர்த்துக்கிட்டுக் கவுரவமா வாழாமல் காதலாமில்லே, காதல்! நல்ல மரத்திலே புல்லுருவி பாஞ்சாப்பிலே இது ஒன்னு எங்கிருந்துதான் முளைக்குதோ! என்னமோ அவன் ஊதினானாம்! இவ ஆடினாளாம், உருகிட்டாளாம்! இன்னிக்கு மட்டும் நீ அங்கே போ, நான் என்ன செய்யறேன் பாரு!"

"ஐயோ, அவர் சாப்பிடாமே காத்துக்கிட்டு இருப்பாரே, அம்மா!"

"நான் சாப்பிடாமே இருக்கேனே, உனக்குத் தெரிஞ்சுதா? அவன் சாப்பிட்டா சாப்பிடறான், சாப்பிடாட்டிப் போறான்."

"ஊரெல்லாம் சிரிக்குது. நேத்திக்கு என்னடான்னா, அத்தனை பெரிய கூட்டத்துக்கு நடுவிலே, அவன் கிட்டே போய் பேசினே. ராத்திரி என் கண் காண அவன் படுக்கைக்குப் பக்கத்திலே போய் உட்கார்ந்தே. அத்தானாமில்லே, அத்தான்!"

"அவர் உங்களை ரயிலிலே அத்தைன்னு கூப்பிட்டாரே, நீங்க அப்ப மட்டும் ஏன் சிரிச்சிங்களாம்!"

"என்னமோ கூப்பிட்டுட்டுப் போறான்னு விட்டேன். 'நீ' ன்னு சொன்னா வாய் வெந்துபோகுமா! இப்படி மாமியா முறை கொண்டாட வருவான்னு அப்ப எனக்குத் தெரியுமா?"

"அவர் அப்படியெல்லாம் ஒன்னும் இல்லே. சும்மா நீங்களா நினைச்சுக்கிட்டுப் பேசறீங்க."

"ஆமாடி! எனக்குத் தெரியாது பாரு. அப்படி அவன் ஒரு யோக்கியனாக இருந்தா, நாலு பெரிய மனுசனை வச்சுக்கிட்டு



இவ்வளவு நகை போடறேன், இவ்வளவுக்குச் செய்யறேன்னு சொல்லி வடிவாம்பா கிட்டே வந்து பொண்ணைக் கேட்கணும். அதை விட்டு, என்னை அந்தப் பயல் திரும்பிக்கூடப் பார்க்கல்லே. நேத்து முழுக்க நான் நின்னேனே, ஏன் நிக்கிறீங்கன்னு ஒரு வார்த்தை கேட்டானா? என்னை அவன் திரும்பியாவது பார்த்தானா? பேசினானா?"

"அவருக்குத்தான் பிரக்ஞையே இல்லையே அம்மா!"

"அதெல்லாம் டவுட்டு! 'ஹா – மோனா'ன்னு கூப்பிட மட்டும் பிரக்ஞை இருந்ததாக்கும்! வடிவாம்பாளைக் கண்டதும் போயிடுச்சு! இந்தா மோகனா, இந்தக் கதையெல்லாம் எனக்கு வேண்டாம். அவன் யாரு, எதுக்கு வந்தான்னு எனக்குத் தெரியும். நீ நல்லா ஆடிக்கிட்டு இருக்கே. கொத்திக்கிட்டுப் போகலாம்னு சுத்திக்கிட்டு இருந்தான். இல்லாட்டி, கூஜாவிலே திராட்சை பழுக்குமா? நான்தான் குப்பையிலே கொட்டுவேனா? சரி, அதெல்லாம் கிடந்துட்டுப் போகுது. இப்ப அவன் பொழச்சுட்டான் இல்லே?"

"பிழைத்துவிட்டார் அம்மா!"

"சரி! அந்த மட்டும் சந்தோசம். இனி அவனுக்கும் உனக்கும் ஒன்னுமில்லே. ஏதோ சபதம் போட்டீங்க, ஆடினீங்க, அதோடே போகட்டும். அது வந்து உன் பிழைப்பைக் கெடுக்கக் கூடாது."

"சரி அம்மா. ஆனால் நான் சமையல் செய்துகொண்டு வரேன் என்று சொல்லிவிட்டு வந்தேன் அம்மா!"

"ஏ – அபரஞ்சி, அவ சொன்ன மாதிரி சமையல் எல்லாம் பண்ணி வரதன் கிட்ட கொடுத்து அனுப்பு."

"அப்படிச் சொல்லாதே அம்மா! நான் போய் ஒரு தடவை பார்த்துட்டு உடனே வந்துடறேன், அம்மா!"

"அங்கே என்ன டிராமாவா நடக்குது, அடிக்கடி போய்ப் பார்க்க? வரதா, அது எல்லாத்தையும் நீ கொண்டுபோய்க் கொடு அவனுக்கு."

இதைக் கேட்ட வரதனுக்குச் சிரிப்பு ஒரு பக்கமும் ஆத்திரம் ஒரு பக்கமும் வந்தது.

"உங்களுக்கு என்னம்மா? குழந்தை சந்தோசத்தைக் கவனிக்க வேணுங்கிற எண்ணமே இல்லே!" என்று பரிந்து பேசினான்.

"ஆமாண்டா, நீ எட்டுக் குழந்தை பெத்தவன், எனக்குப் புத்தி சொல்ல வந்துட்டே! மத்தளம் அடிக்க வந்தியா, மத்தியஸ்தம் செய்ய வந்தியா? நீ கொண்டுபோய்க் கொடுக்கிறயா, இல்லை, நானே கொண்டுபோய்க் கொடுக்கவா?" என்று வரிந்து கட்டினாள் வடிவாம்பாள்.

"அப்படியானால் காசிப்பயணம் என்ன ஆச்சு? அம்மா, கோயில் குளத்துக்கு ஒருவாட்டி புறப்பட்டுட்டா நிறுத்தப்படாதம்மா!"

"ஏன், நான் இங்கே இருக்கறது உனக்குப் புடிக்கல்லியா?"

"அப்படி நான் சொன்னேனா அம்மா? நீங்க பாட்டுக்குத் தாளத்தைப் புரிஞ்சிக்காமல் தனி ஆவர்த்தனம் வாசிச்சா?"

"நீ அவனுக்குப் பக்கவாத்தியக்காரன். அவ போடற தாளத்துக்கு நீ ஒத்துப்போகணும். நான் அப்படி இல்லை. நான் அவ அம்மா. நான்தான் சுருதி. எனக்கு இசைந்துதான் அவள் பாடணும்."

"சரிதான். சுருதியிலும் சாரணி, அனுசாரணி சேரணும். நீங்க அனுசரணைக் குறைவு."

"அது உன்னைக் கேட்டு நான் தெரிஞ்சுக்கவேண்டாம். இப்ப இந்தச் சாப்பாட்டை அவனுக்கு எடுத்துக்கிட்டுப் போறியா, இல்லியா?" என்று கோபத்துடன் கேட்டாள் வடிவாம்பாள்.

வரதன் நிமிர்ந்தான். "கொண்டு போகாட்டி?" என்று கேட்டான்.

"என்ன செய்வேன் தெரியுமா?"

"என்ன செய்வீங்க?"

"அதைச் சொல்லணுமா?"

"என்னை வேலையைவிட்டுப் போகச் சொல்லுவீங்க. அவ்வளவு தானே?"

"அபரஞ்சி சமையல் செய்கிற வரையில் காத்திருந்து நானே அதை எல்லாம் பாத்திரத்திலே வச்சு எடுத்துக்கிட்டுப் போய்க் கொல்லையிலே கொட்டுவேன்."

இவ்வாறு வடிவாம்பாள் சொன்னவுடன், வரதனே திகைத்து விட்டான். சண்டை முற்றித் தன்னை விரட்டினாலும் பாதகமில்லை என்று நிமிர்ந்து நின்ற வரதனுக்கு, சண்முகத்திற்காக மோகனா சமைத்த சமையலைக் குப்பையில் கொட்ட மனமில்லை. ஆனால் அவன் தன் கௌரவத்தை அவளுக்காகக் குப்பையில் போட்டுவிடச் சம்மதித்தான். "அம்மா, அப்படியெல்லாம் சொல்லாதீங்க அம்மா. நானே கொண்டுபோய்க் கொடுத்துட்டு வந்துடறேன்!" என்று சொல்லிவிட்டு வெளியே சென்றான்.

வடிவாம்பாள் தன்னுடைய வெற்றியை எண்ணிப் பெருமையுடன் மூட்டைகளை எடுத்து அறையில் போட்டாள்.

தாயுடன் பேசி அவளை வெல்ல முடியாத மோகனா வருத்தத்துடன் சமையல் கட்டுப் பக்கம் வந்தாள். அங்கு அபரஞ்சி காய்கறிகளைத் தரையில் வைத்துவிட்டு ஒரு புறம் உட்கார்ந்திருந்தாள். அடுப்பு எரிந்துகொண்டிருந்தது. அதன்மேல் உலைநீர் கொதித்துக் கொண்டிருந்தது. அரிசி கழுவியபடி உலையில் இடாமல் கிடந்தது. இதைப் பார்த்த மோகனாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"ஏன் அபரஞ்சி, உனக்கும் என் மேல் கோபமா?"

"உம் மேலே கோபம் வந்தாத்தான் எங்களுக்கு யோகம் வந்துடுமே. நானும் வரதனும் உனக்கு வேண்டியவங்கன்னுட்டுத்தான் எங்க மேலே உங்க அம்மாவுக்கு ஆத்திரம்."

"ஆமா. நீ ஏன் உலையிடவில்லை?"



"உங்க அம்மாவைக் கேளு. இந்த அத்தர்க்காரன் கடையிலே ஒரு புனுகுப்பூனை இருக்குது பாரு. அது குறுக்கும் நெடுக்குமா ஓடிக் கிட்டே இருக்கும்; நடுப்பற ஒரு தடவை கம்பியைப் பிறாண்டும். இது மாதிரி உங்கம்மா காலம்பற குடுகுடுன்னு திரிஞ்சாங்க. நடுப்பற எனக்கும் ஒண்ணு குடுத்தாங்க. என்னை வேலையை விட்டுப் போகச் சொல்லிட்டாங்க."

"அப்புறம்?"

"அப்புறம் என்ன, உனக்காகத்தான் சும்மா இருந்தேன். இப்ப உனக்கும் பெப்பேன்னுட்டாங்க. நான் சமைக்கல்லே!" என்று அசாதாரணமான கண்டிப்புடன் கூறினாள் அபரஞ்சி.

மோகனாவுக்கும் ஒருவிதத்தில் சந்தோஷம். வரதனும் அபரஞ்சியும் தன் மேல் இவ்வளவு அன்புடன் இருக்கிறார்களே என்று ஆனந்தப்பட்டாள். ஆனால் 'நாயகர் பக்ஷமடி, எனக்கது ஆயிரம் லக்ஷமடி' என்பது போல் அன்புடன் இருக்கவேண்டியவர்கள் அன்பு காட்டாத போது யார் அன்பு காட்டினால்தான் என்ன பலன்?

சில சமயங்களில் நம் வீட்டு நாள் கிழமைகளில் கறி, குழம்பு, ரசம், பாயசம், வடை எல்லாம் அருமையாக அமைந்திருக்கும். ஆனால் சாதம் மட்டும் குழைந்தோ அல்லது நறுக்கரிசியாகவோ வெந்தும் வேகாததுமாக இருந்துவிடும். அம்மாதிரி உள்ள சாப்பாட்டில் இன்பம் உண்டா? பக்கவாத்தியக்காரர்கள் நன்றாக வாசித்தாலும் வித்வானுக்குத் தொண்டை கட்டிவிட்டால் கச்சேரி ரசிக்குமா? அதைப் போலவே தன்னிடம் எல்லோரும் அன்பு காட்டினாலும் தாய் மாத்திரம் தன் முயற்சிக்கு இடையூறாக இருக்கிறாளே என்ற வருத்தம் அதிகமாய் உண்டாயிற்று. அபரஞ்சியின் முகத்தைப் பார்த்தாள் மோகனா.

"அம்மா கோபந்தான் உனக்குத் தெரியுமே, அபரஞ்சி! அவங்க சொன்னாங்கன்னுட்டு நீ கோபிக்கலாமா?"

"சும்மா இரு மோகனா! நீயா இருக்கக் கண்டு அம்மா சொல்றதுக்குப் பயந்துக்கிட்டு இப்படி இருக்கறே. அவுங்க அதைப் புரிஞ்சிக்காமல் ரொம்பவும் கட்டுக் காவல் வைக்கிறாங்க. வேறே பெண்ணா இருந்தா என்ன செய்யும் தெரியுமா?"

"என்ன செய்யும்?"

"பட்டணத்துலே போய்க் குந்திக்கிட்டு காயிதம் போடும்; இல்லாட்டி பணம் அனுப்புன்னு எழுதும்."

"அது அவமானமில்லையா, அபரஞ்சி?"

"யாருக்கு அவமானம்? உங்கம்மாவுக்குத்தானே? அதுதான் அவங்களுக்குத் தெரியல்லியே!"

"அம்மாவுக்கில்லே அபரஞ்சி, எனக்கு அவமானமில்லையா?"

"ஆசைக்கு வெட்கம் கிடையாது தங்கச்சி. நடுராத்திரியிலே, பேயாடிக்கிற காட்டுக்குள்ளே, பாம்பை மிதிச்சுக்கிட்டுக் காதலனைத்

தேடிக் கன்னிகை நடந்தான்னு கதைகளிலே படிச்சதில்லே? சும்மா இதெல்லாம் பார்க்கப்படாது மோகனா..."

"அபரஞ்சி, கொதிக்குது அபரஞ்சி!"

"ஆமா, கொதிக்கத்தான் கொதிக்கும்."

"ஆமா, விறகையாவது எடுத்துடு. இல்லை, உலையையாவது இறக்கிவிடு. இல்லை, அரிசியைப் போட்டுச் சோறு வடிச்சா அஞ்சாறு பேருக்குப் பசி தீரும்."

அபரஞ்சி கடகடவென்று சிரித்தாள். "இப்படிப் பேசித்தான் நீயும் சிரிச்சுக்கறே. நெஞ்சு கொதிக்குதோன்னு கேட்டா தண்ணி கொதிக்குதாமில்லே. சரி சரி! இந்தா, சோறு வடிக்கிறேன்" என்று அரிசியை உலையில் இட்டாள் அபரஞ்சி.

அவள் கொண்டுவந்திருந்த கத்தரிப் பிஞ்சுகளையும் முருங்கைப் பிஞ்சுகளையும் தன் கையாலேயே அரிந்தாள் மோகனா. அவள் காய்கறிகளை நறுக்கிய அழகைப் பார்த்து அபரஞ்சியே வியந்தாள். 'அட இது ஆட்டத்திலேதான் கச்சிதமா ஆடுதுன்னா, காய்கறிகூடன்னா கச்சிதமா நறுக்குது. முருங்கைப் பிஞ்சு வேக நேரமாகும் கத்தரிப்பிஞ்சு சீக்கிரம் வெந்துவிடும். ஆதலால், முருங்கைக்காயைச் சிறிது சிறிதாக அரிகிறாள்' என்பதைக் கண்டாள் அபரஞ்சி. மனத்துக்குள்ளாகவே மோகனாவின் சாதுர்யத்தையும் சண்முகத்தின் மேல் அவளுக்குள்ள அன்பையும் எண்ணி வியந்தாள். பிறகு பேசினாள்:

"இந்தா மோகனா, இந்தச் சிக்கலார் வம்பு உனக்கு வேண்டாம்."

"அபரஞ்சி, என்ன நீயும் ஆரம்பிச்சுட்டே?"

"இல்லை, இப்பவே இவ்வளவு அக்கறையா காய்கறி நறுக்க ஆரம்பிச்சுட்டியே. நாளைக்கே அவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா அபரஞ்சியை அடுப்படிக்கே வரவிடமாட்டே. வேலையை விட்டே போகச் சொல்லிடுவே— எனக்குப் பயமா இருக்குது."

இதைக் கேட்ட மோகனா வெட்கத்தால் குன்றினாள். அரிவாள்மனை சற்று விசாரித்தது. இவ்வளவு மென்மையான புஷ்பம் போன்ற விரல்கள் இதுவரையில் அதன்மேல் பட்டதில்லை. அதனால் ஏற்பட்ட உற்சாகத்தில் கட்டைவிரலை மெதுவாய்ப் பதம் பார்த்துவிட்டது அரிவாள்மனை. மோகனா சுதாரித்தாள். வாய் பேசவில்லை. காய்கறியை அன்புடன் நறுக்கினாள்.

அபரஞ்சியுடன் ஓடியாடி பாசிப் பருப்பை வேகவைத்தாள். கொல்லையில் போய்த் தன் கையாலேயே கறிவேப்பிலைக் கொழுந்தைக் கிள்ளி வந்தாள்.

"அபரஞ்சி! ஓடிப்போய் ரெண்டு கொத்துமல்லி வாங்கிட்டு வா!" என்றாள்.

ஆம், சமையற்கட்டு மணத்தது. ஆனால் அவள் உள்ளமோ ஒரு பக்கம் இன்பத்தாலும் மறுபக்கம் துன்பத்தாலும் கனத்தது. சமையல் நடுவில் அபரஞ்சியைப் பார்த்து, "அபரஞ்சி, இதைப் பாரு. உப்பு சரியா இருக்குமா?" என்று கேட்டபோது "என் கொழுந்தன் கூடத்தான் போட்டுப் பாருவே, கண்டுக்கிடறாரா பார்ப்போம். உறவுக்கும் பசிக்கும் ருசி தெரியாதும்மா!" என்று அபரஞ்சி பதில் சொல்லவே மோகனா அந்த இன்பத்தில் லயித்தாள். அன்று அபரஞ்சி சமைத்தாள் என்று பேர்தானே ஒழிய மோகனாவேதான் சமைத்தாள்.



இவ்வாறு தன் கையால் சமையல் செய்து தானே எடுத்துக் கொண்டு போகமுடியவில்லையே என்ற கவலை அவளுக்கு. ஆனால் அவள் ஊதுகுழலால் அடுப்பை ஊதும் போதெல்லாம் இன்னொரு உள்ளம் பற்றி எரிந்தது. அவள் தாளிதம் போடுகையில் இன்னொருவள் முகத்தில் கடுகு வெடித்தது. அது வேறு யாருமல்ல. அவளைப் பெற்ற தாய் வடிவாம்பாளுக்குத்தான்.

ஆம், அன்று வடிவாம்பாள் மோகனாவை வெளியே போகவே விடவில்லை. சமையல் ஆகும்போது இடையில் ஒரு முறை உள்ளே வந்து மோகனா இருக்கும் ஆனந்தத்தைப் பார்த்தாள். அடுத்த நிமிஷமே சுக்கை அரைத்துத் தலையில் தடவிக்கொண்டு முக்கவும் முனகவும் ஆரம்பித்துவிட்டாள்.

தன் உடம்புக்கு ஆறுதல் கொடுத்துவந்த அந்த தெய்வ மங்கை விக்கிரகத்தை ரொம்ப நேரமாக எதிரில் காணாமல் இருக்கவே சண்முகத்துக்குக் கவலை அதிகமாகியது. அதோடு பசியும் சேர்ந்து கொண்டது.

"தம்பி, என்ன வாங்கியாற?" என்று தருமன் கேட்டவண்ணம் இருந்தான். அவனுக்கு ஒரு வைத்தியம் தெரியும். அதாவது காயம் பட்ட மனிதனுக்குக் கொஞ்சம் சரக்குப் போட்டுவிட்டு, சூப்பு வைத்துக் கொடுத்தால் உடம்பு சரியாகிவிடும் என்ற எண்ணம்.

பன்னிரண்டு மணிக்கு வரதன் வந்தான். கையில் சாதம் குழம்பு எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு மோகனாவுக்குப் பதில் வரதன் வருவதைக் கண்டவுடனே சண்முகம், "என்ன மத்தளக்காரரே, அது வரவில்லையா?" என்று கேட்டான்.

"மழை விட்டது. தூவானம் விடலே."

"என்ன?"

"ஆமாங்க. தூத்தல் ஆரம்பிச்சுடுத்து. அதுக்குப் பயந்து வீட்டிலேயே உட்கார்ந்து இருக்குது."

"என்ன, தூத்தலா?"

"ஆமா, வடிவாம்பாள் அம்மா தூத்த ஆரம்பிச்சுட்டாங்க. வயலிலே தூத்தினா நெல்லு உதிரும். வாயாலே தூத்தினா பதர்தானே வரும்? அவங்க கண்டபடி பேசி, கண்டிப்புப் பண்ணிட்டாங்க."

"என்ன மத்தளக்காரரே, என்ன சொன்னாங்க?" என்று குறுக்கே வந்தான் தருமன்.

"உங்க துத்தியை ஊதிக்கிட்டுச் சும்மா இருக்கச் சொன்னாங்க" என்றான் வரதன்.

"இல்லே வரதண்ணே, சும்மா சொல்லுங்க!"

"இல்லே தருமண்ணே, மோகனா வந்து ஆசையோடு எல்லாம் செய்தது. சாப்பாடு நீ கொண்டுபோக வேண்டாம்னு மோகனாவைக் கண்டிசன் செய்துட்டாங்க."

"நானும் தம்பியைச் சாப்பிட வேண்டாம்னு கண்டிசன் பண்றேன். தம்பி, அந்தச் சாப்பாட்டை உங்க கையாலே தொடாதீங்க. அப்படியே திருப்பி அனுப்பிச்சுடுங்க. இதைவிடப் பத்து மடங்கு நல்ல சாப்பாடு நான் கொண்டுவர்றேன். இந்தாங்க மத்தளக்காரரே, இதை எடுத்துக்கிட்டுப் போங்க" என்று சத்தம் போட்டான் தருமன்.

வரதனும் கோபமாய், "அப்படியே செய்துடறேன்! இது நல்லதுக்குக் காலம் இல்லை. பாவம், ஓடியோடி தன் கையாலேயே சமையல்பண்ணி அனுப்பியிருக்குது. அதைச் சாப்பிடக் குடுத்து வைக்க வேண்டாம்!" என்று பாத்திரத்தைத் தூக்க ஆரம்பித்தான்.

அப்போது சண்முகம் குறுக்கிட்டு, "மத்தளக்காரரே, சாப்பாடு எனக்குக் கொண்டாந்தீங்களா, தருமனுக்குக் கொண்டாந்தீங்களா?" என்று கேட்டதும் வரதன், தூக்கிய பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டுத் தருமனைப் பார்த்து வெற்றியுடன் முறைத்தான்.

ஓட்டல் சாப்பாட்டில் உப்பும் புளியும் சரியாக இருக்கலாம். ஆனால் உள்ளன்பு கலந்திருக்க முடியாதல்லவா?

சண்முகம் சற்று நேரம் மௌனமாக இருந்தான். பிறகு வரதன் கொண்டுவந்த ஆகாரத்தைச் சாப்பிட்டான். சாப்பிடும்போதே மோகனாவின் அன்பை நினைத்து உருகினான்.

'நம்மை எதற்காக வடிவாம்பாள் வெறுக்கிறாள், மைனரை எதற்காக வரவேற்கிறாள்' என்பது அவனுக்கும் புரியாமல் இல்லை. நம்மிடம் பணம் இல்லை. தாய், பொன்னை விரும்புகிறாள்; பெண் நம்மை விரும்புகிறாள். நாம் எப்படியாவது அந்தத் தாயின் கையில் கொஞ்சம் பணம் கொடுக்க வேண்டும் என்று தோன்றியது.

நம்மிடம் என்ன பணம் இருக்கிறது? பங்குப் பணம் கொடுத்தது போக, பாக்கி பத்துப் பதினைந்து துப்பட்டாக்களும், ஐந்து ஆறு மெடல்களுந்தாம் இருக்குது. இதில் வடிவாம்பாள் திருப்தி அடைவாளா? நம்மாலேதானே மைனர் சம்பந்தம் அவளுக்குக் கையை விட்டுப் போயிற்று? மைனரின் செல்வம் எங்கே, நாம் எங்கே? வீணுக்கு ஆசைப்பட்டு அவள் வாழ்வை வீணாக்கிவிட்டோமா? அல்ல. நாம் நினைத்தால் பணம் பெரிதல்ல. நமது உடம்பு சௌக்கியமாக வேண்டும். எத்தனை கச்சேரிகள் வந்தாலும் ஒப்புக்கொள்ள வேண்டும். கொஞ்ச நாளைக்குத் தேங்காய் மூடிக் கச்சேரிகளே செய்யக் கூடாது. வருகிற பணத்தை வாங்கி, வாங்கி



வடிவாம்பாள் பேரில் பாங்கிலே போட்டுவிட வேண்டும். இவ்வளவும் செய்ய நம் கை நமக்கு வேண்டும். கை குணமாகவேண்டும். அது சீக்கிரம்.

'ஐயோ, அவள் எவ்வளவு கஷ்டப்படுகிறாளோ? இதோ வருகிறேன் என்று வீட்டுக்குப் போனவளை, கிளியைப் பிடித்துக் கூட்டில் அடைத்தது போல வடிவாம்பாள் அடைத்துவிட்டாளே! அந்தக் கிளி இறக்கையை அடித்துக்கொள்ளுமே! 'ரங்கா ரங்கா' என்று கத்துமே! அவள் கண்ணைத் துடைக்க அங்கு யார் இருக்கிறார்கள்?' என்று எண்ணவே அவன் மனத்தில் வருத்தம் உண்டாயிற்று. கை வலி அதிகமாகத் தெரிந்தது. "அம்மா!" என்று கையைப் பிடித்துக்கொண்டான். இன்று மதராசுக்குப் புறப்பட வேண்டாம் என்ற முடிவுக்குக்கூட வந்தான். ஆனால் தருமனும் முத்துராக்குவும் அவனைச் சமாதானம் செய்தார்கள்.

✤ ✤ ✤

மாலை நேரம். மைனரின் வண்டி ரயில்வே ஸ்டேஷனை நோக்கிப் புறப்பட்டது. சண்முகம் துடியாய்த் துடித்தான். "வண்டியை அது வீட்டு வழியாவே விடச் சொல்லுங்க" என்று சொன்னான்.

வடிவாம்பாளின் வீட்டு வாசலில் வண்டி வந்து நின்றது. குதிரைச் சத்தம் கேட்டதும் வடிவாம்பாளே வாசலில் வந்தாள்.

"பட்டினத்துக்குப் போறீங்களா, தம்பி? உடம்பை சாக்கிரதையா பார்த்துக்குங்க. உடம்புதான் முக்கியம். நாளைக்கு அது கெட்டுப் போயிடுத்துன்னா ஒன்னுக்கும் ஆகாது" என்று சண்முகத்திற்குப் புத்தி சொல்ல ஆரம்பித்தாள்.

"அது வீட்டிலே இல்லையா?" என்று கேட்டான் தருமன்.

"ஏன்? காலம்பறவே வந்து சொல்லிச்சு, கஞ்சியெல்லாம் கொடுத்து அனுப்பிச்சேனே?"

"இல்லே, இப்ப இல்லியான்னு கேக்கிறேன்."

"ராத்திரி முழுக்க தூக்கம் முழிச்சுட்டா பாரு. அசந்து படுத்திருக்கா. 'நான் தூங்கப் போறேன். எழுப்ப வேண்டாம்'னு சொல்லிட்டுப் படுத்திருக்கா..."

இதைக் கேட்ட சண்முகம் திகைத்தான்.

அவன் கண்கள் அந்த வீடு முழுவதையுமே தேடின. அப்பொழுது மாடியில் ஜன்னலுக்கருகே மோகனா நின்றுகொண்டிருப்பது தெரிந்தது. அவள் தள்ளி நின்றாலும், அவள் கண்களிலிருந்து வடியும் கண்ணீரைச் சண்முகம் பார்த்தான். இருவர் கண்களும் சந்தித்தன. ஆனால், அன்றைக்கு எந்த வண்டி தன் வாழ்வில் இடையூறாய் வந்து புகுந்ததோ, அதே வண்டி இன்று அவனை ஏற்றிக்கொண்டு வேறு திசையில் போவதைப் பார்த்ததும் மோகனா பதறினாள்.

## பாவம் பணத்தாசை



தாமரை இலைத் தண்ணீரும், தவசிகள் மனமும் ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கும் என்பதற்கு உதாரணமாக விளங்கினார் பரமானந்தப் பரதேசியார். சண்முகத்தின் நோய் தீர்ந்தவுடனே பரதேசியார், அவனை மோகனாவின் பாதுகாப்பில் விட்டுவிட்டு, "இதோ அனுஷ்டானம் செய்துவிட்டு வருகிறேன்" என்று வெளியே சென்றவர் அன்று முழுவதும் திரும்பவேயில்லை.

யாரும் அழைத்து அவர் வரவில்லை. அதே போல் யாரிடமும் சொல்லிக்கொண்டும் போகவில்லை. திருவருளும் இப்படித்தான். சண்முகம் பிழைத்தான். மோகனா சந்தித்தாள். அவர்களுக்குள் இருந்த சந்தேகம் நீங்கியது. அந்தத் திரை விலகியதும் திரையை விலக்கிய பரதேசியார் எங்கேயோ சென்றுவிட்டார்.

சண்முகசுந்தரம் ஊருக்குப் போகும்போது பரதேசியாரிடம் சொல்லிக்கொள்ள வேண்டும் என்று எவ்வளவோ பாடுபட்டான். தருமனும், முத்துராக்குவும் ஊர் முழுவதும் சல்லடை போட்டுத் தேடினார்கள். அவர்களே சலித்தும் போனார்கள். ஆனால், பரதேசியார் கிடைக்கவில்லை.

அப்படியிருந்த பரதேசியார் சண்முகம் ஊருக்குப்போன அடுத்த நாள் அதிகாலையில் வடிவாம்பாள் வீட்டு வாசலில் வந்து நின்றார். அவரை வாசலில் கண்டவுடனே வரதன் வணங்கினான். உள்ளே ஓடிப்போய் வடிவாம்பாளிடம் "பரதேசியார் வந்திருக்கிறார்" என்று சொன்னான்.

வடிவாம்பாள் பாடு தர்மசங்கடமாகிவிட்டது. பரதேசியாரை வரவேற்பதா, அல்லது பாராததுபோல் இருந்துவிடுவதா என்று யோசித்தாள். அவள் மனத்திலே, 'ஏதோ பரதேசியார் என்றால், ஒரு காய்ச்சல் தலைவலி வந்த போது, இரண்டு விபூதியைக் கொடுப்பார்; ஒரு பேய் பிசாசு பிடித்திருந்தால் வேப்பிலை இல்லாமலே விரட்டுவார்; ரொம்ப முக்கியமாக வேண்டியவர்களுக்குக் கையிலே ஒரு காலணாவைக் கொடுப்பார். அந்தக் காலணா தங்கமாக மாறிவிடும்' என்ற உயர்ந்த அபிப்பிராயந்தான் உண்டு.

இந்தப் பரதேசியாரிடம் அதையெல்லாம் காணோம்! இவரும் மருந்தைத்தான் தேடுகிறார் என்பதை அறிந்தது முதலே அவளுக்குப் பரதேசியாரிடம் கொஞ்சம் மதிப்புக் குறையலாயிற்று. ஆனால், மதிப்புக் குறைந்தாலும் பயம் குறையவில்லை. சண்முகம் பிழைத்தது



அவரால்தான். அவர் கையிலே இருக்கும் மருந்து அற்புதமானது என்ற ஒரு எண்ணமே அவளை அவரிடம் அதிகம் பயப்படும்படி செய்தது. ஆனால், அதே சமயத்தில் அவர்மேல் கோபமும் வந்தது. 'இந்த சண்முகம் எக்கேடு கெட்டுப்போனால் என்ன? அவனை எதற்காக இவர் பிழைக்கவைக்க வேண்டும்?' அவனைப் பிழைக்க வைத்தது மாத்திரமல்ல; சண்முகம் மோகனா இருவருக்கும் இடையே செத்துக் கொண்டிருந்த காதலை மறுபடியும் எதற்காக அவர் தண்ணீர் விட்டு வளர்க்கவேண்டும்? இந்தப் பெண்ணைக் கூட்டிவிட்டு நீயும் ஆடு என்று சொல்வானேன்? ஏதோ சாது சந்நியாசின்னா உலக விவகாரங்களிலே சம்பந்தப்படாமல் ஒதுங்கி இருப்பாங்க. இவரு கல்யாணத்தையே இல்லே பண்ணிவைக்கப் பார்க்கிறாரு" என்று அவள் எண்ணிய போது, பரதேசியார்மேல் கோபம் வந்தது.

அகந்தையில் பிறப்பது கோபம்; ஆளை அழிப்பது கோபம். அது இரு தரப்பாருக்கும் நன்மை செய்யப் போவதில்லை என்பதுதான் நூல்களின் கருத்து. ஆனால், வடிவாம்பாள் அதிகம் படிக்கவில்லையாயினும், பொது அறிவு அவளுக்கு அதிகம். 'பரதேசியாரை நம்முடைய கோபம் ஒன்றும் செய்துவிடாது. நாம் அவர்மேல் கோபித்துக்கொண்டிருக்கிறோம் என்பது தெரிந்தால், அது நமக்கே இடையூறைச் செய்யலாம்' என்று எண்ணிக் கோபத்தை அடக்கிக் கொண்டாள். அப்பொழுது இன்னொரு பயமும் வந்து சேர்ந்தது. 'பரதேசியார் உள்ளும் புறமும் தெரிந்தவராயிற்றே. இவள் கோபத்தை உள்ளே அடக்கிக்கொண்டால், நம்மைக் குப்பிடுகிறாள் என்று அவர் ஞானதிருஷ்டியால் அறிந்துவிட்டால் என்ன செய்வது?' என்ற பேதைமையும் ஏற்பட்டது.

இப்படி இவள் யோசித்துக்கொண்டே இருக்கையில், மோகனா வந்து பரதேசியாரைப் பார்த்தாள்.

"என்ன குழந்தாய், சௌக்கியமா?" என்று கேட்டார் பரதேசியார்.

"இருக்கிறேன் ஸ்வாமி."

"சண்முகம் மதுராக்குப் போய்விட்டானா?"

"போயிருப்பார். எனக்குத் தெரியாது."

"நீயும் கூடப் போயிருந்தால், அவன் உடம்பு நன்றாக இருக்குமே."

அப்பொழுது வடிவாம்பாள் குரல் கேட்டது.

"அதை எப்படிங்க போக விடறது? சாமி நாளும் தெரிஞ்சவங்க முக்காலமும் கண்டவங்க!"

"அதனால்தான் சொல்லுகிறேன். போயிருந்தால் இருவருக்கும் நல்லதாக இருக்கும். அவனுக்கு இப்பொழுது தகுந்த துணை தேவை."

"இது தெரிஞ்சிருந்தா நானாவது போயிருப்பேன்" என்றாள் வடிவாம்பாள். அவளுடைய குறும்பு அவளையும் மீறியது.

பரதேசியார் சிரித்தார். "நீயும் சென்றிருக்கலாம். இந்த ஊரிலே நீயும் உன் மகளும் தனியாக இருப்பதைக்காட்டிலும் சென்னைக்குப்

போயிருந்தால் உங்களுக்கும் நன்மை. என்ன செய்வது? இறைவன் திரு உள்ளம் நீங்கள் இங்கே இருக்கவேண்டுமென்று இருக்கிறது. அதை நான் தடுக்க முயன்றால் முடியுமா?" என்றார்.

"அது என்னாங்க அப்படிச் சொல்றீங்க? அன்னிக்கின்னா, பாதையிலே பூச்சி பொட்டு இருக்கும்னீங்க. இன்னிக்கி என்னான்னா ஊரை விட்டே போயிருக்கலாம்னு சொல்றீங்க. எனக்கு என்னமோ ஒன்னும் புரியலையே !"

"வடிவாம்பாள், உனக்கு இப்ப புரியாது. பட்டால்தான் புரியும்."

"இனிமே என்ன ஆபத்து வர இருக்குதுங்க? அன்னிக்கே நகையைத் திருடிக்கிட்டுப் போயிட்டான் ஒருத்தன். இங்கே இனி திருட ஒன்னும் கிடையாது. தவிர, யாருக்கோ உடம்பு முடியலே என்கிறதுக்காக, நானும் என் மகளும் கூடக்கூடப் போயிக்கிட்டு இருந்தா நல்லா இருக்குமா?" என்று அங்கலாய்த்தாள். அதற்கு மேல் தன் அபிப்பிராயத்தைப் பரதேசியாரிடம் மறைத்து வைக்கக் கூடாது என்று தோன்றியது. அதைப் பக்குவமாக எப்படித் தெரிவிப்பது? 'சாமி, என் மகளுக்கு நான் சண்முகத்தை விரும்பவில்லை' என்று சொன்னால் நன்றாக இருக்குமா? அதனால் வடிவாம்பாள் கெட்டிக் காரத்தனமாக ஒரு வேலை செய்தாள்.

"மோகனா, சும்மா நிக்கிறயே. சாமி வந்து இருக்காங்க, வந்தவங்களைக் கும்பிடு" என்று சொன்னாள். மோகனா, மறுபடியும் கும்பிட்டாள்.

அவள் கும்பிடும்போது, "சாமி, உங்க வாயாலே சொல்லுங்க. நல்ல புருஷனா, லட்சாதிபதியாகக் கிடைக்கணும்னு சொல்லி ஆசீர்வாதம் பண்ணுங்க" என்று சொல்லிக்கொண்டே வடிவாம்பாளும் கும்பிட்டாள்.

இதைக் கண்ட பரதேசியார் தனக்குள் சிரித்துக்கொண்டார். "வடிவாம்பா, உன் மகளுடைய இஷ்டப்படி கணவன் கிடைப்பான். நிதியும் கணவனும் விதியின் பயனாலே வருவது" என்று ஆசீர்வதித்தார். "சரி, நான் வருகிறேன், ஜாக்கிரதை" என்று சொல்லி விட்டுக் கிளம்பினார். அதற்குள் மோகனா, "என்ன ஸ்வாமி, வந்தீங்க, புறப்பட்டுட்டீங்களே !" என்றாள்.

"இல்லேம்மா, அன்றைக்கு நான் பயந்தேன். ஆனால், அந்த ஆபத்து உனக்கு வரவில்லை. சண்முகத்துக்கு வந்தது. நீ எப்படி இருக்கிறாய், உன்னைப் பார்த்துப் போகலாம் என்றுதான் இப்போது வந்தேன்."

"ஸ்வாமி, நீங்களும் இங்கே இருக்கக்கூடாதா? இருந்தால் எனக்குப் பயமில்லாமல் இருக்குமே !" என்று கெஞ்சினாள் மோகனா.

அதற்குள் வடிவாம்பாள், "அவங்களுக்கு எத்தனையோ காரியம் இருக்கும். நம்மைப் போல வேளாவேளைக்குத் தின்னுப்புட்டு



திண்ணையிலே தூங்கறவங்களா? தடுக்கலாமா? நாலு கோவிலுக்குப் போறவங்களாச்சே !" என்று சாமியாருக்குப் பரிந்து பேசுவது போல் பதில் சொல்லவே, பரதேசியார் புரிந்துகொண்டார்.

'நாம் இங்கே இருக்க விரும்பினாலும், வடிவாம்பாள் நம்மை இருக்க விடமாட்டாள்' என்பதை எண்ணிச் சிரித்துக்கொண்டே "நான் வருகிறேன் மோகனா" என்று கிளம்பினார்.

✦ ✦ ✦

அவர் மனத்தில் ஒரு பெரும் போராட்டம். சண்முகத்தைக் குத்தியவன் யாராய் இருக்கக்கூடும் என்று அவர் நிச்சயம் செய்து விட்டார். அவனால் மோகனாவுக்கு இடையூறு ஏற்படும். அது எந்த உருவத்தில் என்ற சந்தேகந்தான் இப்பொழுது இருந்தது. அதை எதிர்பார்த்து எப்பொழுதும் அவள் அருகில் யாராவது காவல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் வந்தார். ஆனால் வடிவாம்பாளோ, பிடிகொடுக்கவில்லை. ஆதலால், அவர் யோசனை செய்துகொண்டே அந்த வீட்டை விட்டுக் கிளம்பினார். வீதியில் போய்க்கொண்டே இருந்தவர் வழியில் முத்துக்குமர நட்டுவனாரைக் கண்டார்.

"என்ன முத்துக்குமரா, அன்றைக்கு உன்னுடைய மாணவி ரொம்ப அற்புதமாக ஆடினாளே !"

"ஆடி, என்னத்தைக் கண்டுது சாமி, அதுக்குத்தான் மனசு சந்தோஷம் இல்லையே !"

"நீ வடிவாம்பாளிடம் சொல்வதுதானே !"

"இது எல்லாம் நம்ப சொல்லப்படாதுங்க. தானம் தட்ட வந்தியா, இல்லை, மாலை மாத்த வந்தியான்னு அந்த அம்மா கேட்டுவிடுவாங்க. அந்தப் பொண்ணு, அந்த நாதஸ்வரக்காரர் மேலே ரொம்பப் பிரியமாக இருக்குது. நாதஸ்வரக்காரரும் அது மேலே உயிரையே வச்சு இருக்கிறாரு. ஆனா, வடிவாம்பா அம்மாளுக்குப் பணத்து மேலே குறியாக இருக்குது. பிறத்தியார் சொல்லி அந்த அம்மா கேட்டாங்கன்னு எப்பவுமே கிடையாது."

"சரி, வா போவோம்" என்று பரதேசியார் அழைத்தவுடனே கூடவே புறப்பட்டார் நட்டுவனார். இருவரும் ஆற்றங்கரைப் பக்கமாக உலாவிக்கொண்டே வந்தார்கள்.

"முத்துக்குமரு, நீ என்ன போட்டு பல் விளக்கிறது?" என்றார் பரதேசியார்.

"கல்நார் பல் பொடிதான் தேய்க்கிறது. பல்லிலே குடைச்சல் இருந்தால் அது கொஞ்சம் கேக்குது."

"உனக்குப் பல்வலி இருக்கா?"

"அதுக்குத்தானே பல்லே இருக்குது?"

"இந்தக் குச்சியைத் தேய்த்திருக்கிறாயா?" என்று ஒரு செடியைக் காட்டினார் பரதேசியார்.

"என்ன, இதைத் தேய்ச்சா பல்லு வலிக்கு நல்லதா?"

"இல்லை. பல்லுக்கு நல்லது நாயுருவியைப்போல இதுவும் ஒரு நல்ல மருந்து. தேய்த்துப் பாரேன்" என்றார் பரதேசியார்.

முத்துக்குமார நட்டுவனாருக்கு அடிக்கடி பல்வலி வருவது உண்டு. ஒரு முறை பல்வலி வந்தால், பட்டணம் பொடி, வெறும் புகையிலை, கிராம்புத் தைலம், பச்சைக் கற்பூரம் முதலிய மருந்துகளை வைத்து அழுக்கி வாய் முழுவதும் புண்ணாகும் வரையில் நட்டுவனார் விட மாட்டார். பரதேசியார் வாயால், 'இந்தப் பச்சிலையைத் தேய்த்துப் பார்' என்று சொன்னவுடனே முத்துக்குமார நட்டுவனாருக்குப் பரம சந்தோஷம். அவசர அவசரமாக அந்தச் செடியை வேரோடு பிடுங்கி, குச்சியை ஒடித்துப் பல் தேய்த்தார். பரதேசியாரும் பல் துலக்கிக் கொண்டே, "முத்துக்குமரு, நீ கொஞ்சம் ஜாக்கிரதையாக அந்தப் பெண்ணைப் பார்த்துக்கொள். இந்து ஆறு நாளைக்கு நீயும் அந்த வீட்டிலேயே இருக்கணுமே!" என்றார்.

"அதெல்லாம் ஒழுங்கு இல்லே சாமி. பாடம் முடிஞ்சா அதுக்குப் பிறகு அங்கே ஒரு வெத்திலை போட்டுக்கிறதுகூடத் தப்பு. நமக்கும் குரு என்கிற மரியாதை போயிடும். அவுங்களுக்கும் இளக்காரமாயிடும். நாளைக்குக் காலையிலே பாடத்துக்கு வரும்போது வழியிலே வாழைக்காய் வித்தால், இரண்டு வாங்கிக்கிட்டு வாங்களேன் என்று வடிவாம்பாள் அம்மா சொல்வாங்க."

"சரி, பல் துலக்கிட்டியா?" என்றார் பரதேசியார்.

"தேய்ச்சுட்டேன், சாமி!"

"சரி, பின்னே வாயைக் கொப்புளித்துவிட்டு நீ வீட்டுக்குப் போ. இரண்டு நாளைக்கு வெந்நீரே சாப்பிடு" என்று சொல்லிவிட்டு, பரதேசியார் நடந்துவிட்டார்.

✦ ✦ ✦

வடிவாம்பாளின் வீட்டுக்குள் ஜமக்காளம் விரித்து, பாடத்துக்கு எல்லாம் தயாராக இருந்தது. நட்டுவனார் நெற்றி நிறைய விபூதிப் பூச்சுடன் வந்து உட்கார்ந்துகொண்டு, சங்கராபரண ராகத்தில் உள்ள "சாமி நின்னே கோரி" என்ற தான வர்ணத்தைப் பாடித் தட்ட ஆரம்பித்தார். வரதனின் குமுக்கி முழங்கியது. வடிவாம்பாள் வந்து அமர்ந்தாள்.

பா - தநிஸ் - ஸநிதப - மகரி காமா -
பாம தாப ஸநி தப - மகம ரிகம -
நீ - இ - இ - இ. ர அ-அ-அ அ ஐ
அஅ - ஆ - ஆ - கஷி இ - இ- இ -
நீ இ - இ - இ - பை -இ-இ-இஇஇ... (நீ)

என்று சவுக்க காலத்தில் எத்துக்கடைப் பல்லவியை அமர்க்களமாக எடுத்துப் பாடினார் முத்துக்குமரனார்.



நட்டுவனார் வாயைத் திறந்து "நீ... இ - இ - இ" என்று பாடும்பொழுது எல்லாம் வடிவாம்பாள் அவரையே கூர்ந்து நோக்கினாள்.

"இ-இ-இ-" என்று பல்லைத் திறக்கும்போதெல்லாம் அந்தப் பற்களில் இருந்த எதையோ கண்டு அவள் உள்ளம் பொருமியது.

"இந்தா முத்துக்குமரு, நிறுத்து" என்றாள் வடிவாம்பாள். நட்டுவனாருக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்ன, என்ன, ஒண்ணும் தப்பு இல்லையே பாட்டிலே?"

"பாட்டிலே ஒண்ணும் தப்பு இல்லேப்பா. நேற்றைக்குச் சாயங் காலம் உன்னைப் பார்த்தேன். பேசிக்கிட்டு இருந்தோம். அப்போது இல்லாத தங்கம் இப்போது எப்படி உனக்கு வந்திச்சு?"

"தங்கமா... என் கிட்டே அது ஏதும்மா?"

"இதுதானே வேண்டாங்கிறது. நீ நல்லா இருக்கிறதிலே எனக்கு வருத்தமா? என்னப்பா, குறைந்தது இருநூற்றைம்பது ரூபாயாவது வாங்கிக்கிட்டு இருப்பானே!"

வரதன் நட்டுவனாரைப் பார்த்தான். சிரிப்பை அடக்கிக் கொண்டான்.

"எதுக்கம்மா இருநூற்றைம்பது ரூபாய்? எனக்கு ஒண்ணும் புரியலியே!" என்றார் நட்டுவனார்.

"அதுதானே கிண்டல் பண்ணாதேங்கிறது. அம்புட்டுப் பல்லையும் கழட்டி யார் கடையிலே கொடுத்தே? காலம்பாத்துக்குள்ளே எப்படித் தங்கம் கட்டினான் அவன்?" என்றாள் வடிவாம்பாள்.

"வெத்திலைக் காவியைத் தவிர வேறு ஒண்ணையும் அறியேன் அம்மா. சும்மா கேலி பண்ணாதீங்க" என்றார் நட்டுவனார்.

"பாத்தீங்களா அம்மா, ஒரு தமுர் இல்லே, ஆணி இல்லே, துணை தெரியாமல் நல்லா கட்டி இருக்கிறான்" என்றான் வரதன். நட்டுவனார் விழித்தார்.

"முத்துக்குமரு, நீ நல்லா இருக்கிறதை நான் வேண்டாங்கிறேனா? நீ என் பல்லுக்குத் தங்கம் கட்டிக்கிட்டேன்னு நான் கேக்கப் போறேனா? நீ ஒரு கில்டு சங்கிலியைப் போட்டுக்கிட்டுத் திண்டாடினதும் எனக்குத் தெரியும். இன்னிக்கு நீ தங்கப் பல்லைக் கட்டிக்கிட்டு வடிவாம்பாள் முன்னாலே வந்து உக்காந்துக்கிட்டு 'நீ இ, இ, இன்னு' பல்லை இளிக்கிறதும் எனக்குத் தெரியும். ஆனால் என்னைக் கேட்டிருந்தால் இத்தனை வயசுக்கு மேலே உனக்கு இது வேண்டாம்னு சொல்லியிருப்பேன். தங்கத்திலே ஒரு பொடி டப்பா பண்ணியிருக்கலாம். திருடன் வந்து அடிச்சான்னா, டப்பாவை மாத்திரந்தான் எடுத்துக்கிட்டுப் போவான். பல்லிலே தங்கம் இருக்குதுன்னு கண்டுக்கிட்டான்னா விடுவானா?"

நட்டுவனார் மனம் நாட்டியம் ஆடத்தொடங்கியது. 'வடிவாம்பாள் எதைச் சொல்கிறாள்? பல்லுக்கு எங்கே பணம்?'

என்று எண்ணிக்கொண்டே ஓடிப்போய் நிலைக்கண்ணாடியில் பார்த்தார். வாயை நன்றாகத் திறந்தார்! திடுக்கிட்டார்! முகமெல்லாம் வியர்த்தது. தம் முகந்தானா அது என்ற சந்தேகங்கூட ஏற்பட்டது. அத்தனை பற்களும் தங்கமாக மின்னின. பளபள என்று தங்கம் குருத்துவிட்டது போல இருந்தது. அது வாயாகவே தெரியவில்லை. ஏதோ ஈச்சம் குலை தொங்குவதுபோலத் தோன்றியது. ஓடி வந்தார்.

"அம்மா, அம்மா! இதையா சொன்னீங்க? எனக்கே ஆச்சரியமாக இருக்கே அம்மா! எப்படிப் பல் முழுக்கத் தங்கமாச்சு?"

"ராத்திரி தூங்கறபோது, தாயே மகாலட்சுமி எனக்குப் பணத்தைக் கொடுன்னு வேண்டிக்கிட்டிருப்பீங்க. மகாலட்சுமி வந்து பல் எல்லாம் தங்கம் கட்டி இருப்பாங்க!" என்றான் வரதன்.

நட்டுவனார் நடுங்கினார். ஆனால், திடீரென்று ஞாபகம் வரவே "இப்போதுதான் அம்மா ஞாபகம் வரது. இது அந்தப் புண்ணியவானுடைய வேலை!" என்றார்.

"எந்தப் புண்ணியவான்?"

"அதுதான் பரமானந்தப் பரதேசியார். கொஞ்ச நேரத்துக்கு முன்னே, ஒரு பச்சிலையைக் கொடுத்துப் பல் விளக்கச் சொன்னாரு. அதுதான் பல்லை எல்லாம் தங்கமாக்கிவிட்டது!" என்று படபடப்புடன் கூறினார் நட்டுவனார்.

வடிவாம்பாள் ஒரு துள்ளு துள்ளினாள். "அப்படிச் சொல்லு! இல்லாட்டி இவ்வளவு தங்கம் உனக்கு ஏது? ஒரு பல்லுக்கு ஒரு விராகன் எடை வைத்தாலும் முப்பத்திரண்டு விராகன் எடை ஆச்சே!" என்றாள் வடிவாம்பாள். "கிட்டத்தட்டப் பதினைந்து பவுனாச்சு" என்றான் வரதன். "இப்ப பவுன் விக்கிற விலைக்கு ஐந்நூறு ரூபாய் கண்டெடுத்துட்டியே!" என்று ஆவலுடன் கூறி அவர் பல்லையே பார்த்தாள் வடிவாம்பாள். ஏதோ யோசித்தாள்.

"ஆமாம், இப்போ பரதேசியார் எங்கே இருக்கிறார்?" என்ற கேள்வி தானாகவே அவள் வாயிலிருந்து வந்தது.

"தெரியலியே அம்மா!"

"சரி, அவர் கொடுத்தாருன்னே பாரு, அந்தப் பச்சிலை, அது உனக்குத் தெரியுமில்லே?"

"நான் அதைக் கவனிக்கலியே, அம்மா!"

"நீ ஒடிச்சது போக மிச்சச் செடி அங்கே கிடக்குமில்லே?"

"இல்லேம்மா, நான் செடியை வேரோடு பிடுங்கிட்டேனே!"

"அட போங்கண்ணே! அத்திட்டத்தையே வேரோடே புடுங்கிட்டீங்க" என்றான் வரதன்.

"டே வரதா, சும்மா இரு. எங்கே பார்த்தே அந்தப் பச்சிலையை?" என்றாள் வடிவாம்பாள்.

"இடம் தெரியும் எனக்கு."



"நீ போய் அந்த மாதிரிச் செடி ஒன்றைக் கிள்ளிக்கிட்டு வா."

"எதுக்கம்மா?" என்றார் நட்டுவனார். வடிவாம்பாள் சொல்வாளா? சாதாரணமான பல்லை ஒரு பச்சிலை தங்கமாக்குகிறது என்றால், அந்தப் பச்சிலை மாத்திரம் நமக்குத் தெரிந்திருந்தால் எவ்வளவு பணம் கிடைக்கும்!

'இந்த வீட்டிலே இருக்கிற நாதாங்கி, தாழ்ப்பாள், கிணற்று ராட்டினம், பாதாளக் கரண்டி, இவைகள் எல்லாவற்றையுமே தங்கமாக்கிவிடலாமே! இந்த முத்துக்குமாரன் பச்சிலையைக் கண்டும் அதைச் சும்மா விட்டுவிட்டு வந்து இருக்கானே! பாவி! செடியை வேரோடு பிடுங்கிட்டானாமே! செல்வத்தை அல்லவா வேருடன் பறித்து விட்டான்! பணத்துடைய அருமை தெரியலியே இவனுக்கு!'

'அவனிடம் செடி எதற்கு என்று விஷயத்தைச் சொன்னால், அது மோசமாக முடிந்தாலும் முடியலாம். இருபத்திரண்டு ரூபாய் சம்பளத்தில் இங்கு உட்கார்ந்து நட்டுவதைவிட இந்த உத்தியோகமே வேண்டாம், இந்தப் பச்சிலை ஒன்றே போதும் என்றெண்ணிச் செடியைப் பிடுங்கிக்கொண்டு வைத்தீஸ்வரன் கோயிலைப் பார்த்த நடையைக் கட்டிவிட்டால் என்ன செய்வது?' என்று என்னென்னவோ யோசனைகள் செய்து, முடிவில், "முத்துக்குமரு, எனக்குந்தான் பல்வலி இருக்குது என்று உனக்குத் தெரியுமே. அந்தப் பச்சிலையை எனக்குக் காட்டறியா?" என்று சொல்லிவிட்டு, ஞாபகமாக இரும்புச் சாவிக் கொத்தையும் எடுத்துக்கொண்டு ஆற்றங்கரையை நோக்கிப் புறப்பட்டாள் வடிவாம்பாள். முத்துக்குமரனார் வாயைத் திறவாமல் கூடவே சென்றார்.

அதிகாலையில் வடிவாம்பாளை ஆற்றங்கரையில் கண்டவுடனே அங்கு தண்ணீர் எடுக்க வந்த பெண்கள் ஆச்சரியப்பட்டு, ஆளுக்கு ஒரு கேள்வியைக் கேட்க ஆரம்பித்தார்கள். "என்ன இந்தப் பக்கம் வந்திங்க?" என்றாள் ஒருத்தி.

"என்ன, ஏதோ பச்சிலை பறிக்கிறீங்களே!" என்றாள் இன்னொருத்தி.

வடிவாம்பாள் சாமர்த்தியக்காரி அல்லவா? "ஒரு தலைவலி. அதுக்குத் தைலம் வச்சுத் தேய்ச்சுக்கிட்டா தேவலைன்னு [illegible] வைத்தியர் சொன்னாரு. அதுக்குத்தான் பச்சிலை பறிச்சுக்கிட்டு இருக்கேன்" என்ற பதில் கூறினாள்.

"என்ன பச்சிலை?"

"பச்சிலை இல்லையா? பேரைச் சொல்லப்படாதே" என்று மழுப்பினாள்.

பாவம், பத்து மணிவரை தேடியும் இந்த முத்துக்குமரு நட்டுவனாருக்கு அந்தப் பச்சிலை கிடைக்கவே இல்லை. விராலி இலை, பொன்னாவாரை முதலிய பல மூலிகைகள் சாவிக்கொத்தில் தேய்க்கப்பட்டன. பல் தேய்த்துவிட்டுக் குச்சியையும் நட்டுவனார்

ஆற்றிலே போட்டுவிட்டார். ஆதலால், அந்த அடையாளமும் ஆற்றோடு அடித்துக்கொண்டு போகப்பட்டுவிட்டது.

வடிவாம்பாள் தன் அதிர்ஷ்டமே ஆற்றோடு போய்விட்டதாக எண்ணினாள். கிடைத்த புதையலை விட்டுவிட்டுப் போகிறோமே, எதையும் தங்கமாக்கும் மருந்தை இந்தப் பாவி வீணாக்கிவிட்டாரே என்ற ஆத்திரத்தில் நட்டுவனார் மேல் கோபம் கோபமாக வந்தது. ஆனால், இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளைக்காவது அவருக்கு ஞாபகம் வாராதா என்ற எண்ணத்தில் அவரைக் கோபித்துக் கொள்ளவும் இல்லை. ஒன்று மாத்திரம் நிச்சயம் செய்துகொண்டாள். இந்தப் பரதேசியாரைக் காலையில் சும்மா அனுப்பியது தப்பு. அவரை உபசரித்து, அவர் காலில் விழுந்து, அவருக்குத் தொண்டு செய்து, பாலும் பழமும் கொடுத்து எப்படியாவது இந்தாறு நாளைக்குப் பாடுபட்டு இந்தப் பச்சிலையை நான் அவரிடமிருந்து அறிந்து கொண்டுவிட்டால் போதும் என்ற முடிவுடன் வீட்டுக்கு வந்தாள்.

✦ ✦ ✦

ஆற்றங்கரை வழியாகச் சென்றுகொண்டிருந்த பரதேசியார், கரையோரத்தில் இருந்த ஒரு அரசமரத்தடியில் போய் உட்கார்ந்து கொண்டார். ஏதோ அவருக்குத் தோன்றிய ஒரு ராகத்தைப் பாடிக் கொண்டே சங்கீத யோகத்தில் அமர்ந்தார்.

அப்பொழுது இரண்டு பேர் மறைந்து இருந்து அவரைப் பார்த்தார்கள். ஒருவன் ஜாடை செய்தான். இன்னொருவன் 'ஆமாம்' என்றான். உடனே போலீஸ் ஊதுகுழல் கேட்டது. புதரிலிருந்து நான்கு பேர் திடீர் என்று கிளம்பிப் பரதேசியாரைக் குண்டுக் கட்டாகப் பிடித்துக்கொண்டார்கள்.

"ஐயா, நான் துறவி, என்னை விடுங்கள்" என்றார் பரதேசியார்.

"அது எல்லாம் என்கிட்டே சொல்லாதே ஐயா! தாடியை ஒட்டிக்கிட்டு ஊரை ஏமாத்தலாம்னா பார்த்தே?" என்று சொல்லிக் கொண்டே அவர்களுள் ஒருவன் ஒரு ஊதலை எடுத்து ஊதினான். பூட்ஸ்கள் சத்தம் கேட்டன. எதிரிலே தொந்தியும் தொப்பியுமாக ஒருவர் ஓடி வந்தார்.

"என்ன, கிடைச்சுட்டானா? ஹேண்ட்ஸ் அப்!" என்று துப்பாக்கியை நீட்டினார். பரதேசியார் முகத்தின் எதிரில் துப்பாக்கியைக் கண்டதும் பரதேசியார் நிமிர்ந்து பார்த்தார். துப்பாக்கி கீழே விழுந்தது. அதைப் பிடித்திருந்த ஆள், "சாமி, நீங்களா!" என்று சொல்லிக்கொண்டே காலில் விழுந்து கும்பிட்டார்.

அது வேறு யாரும் இல்லை. நமது பழம்புலி கன்னையா நாயுடு அவர்கள்தான்.

"அடே, நீங்களா!" என்றார் பரதேசியார்.

"ஆமாம், சாமி. அந்தப் படுபாவி மோசம் பண்ணிட்டான்."



"அவன் மோசம் செய்யவில்லையப்பா, நீ மோசம் போய் விட்டாய். நீ கடமை தவறிவிட்டாய்" என்றார் பரதேசியார்.

"இது என்ன சாமி, மேலாவிலே சொல்றதையே நீங்களும் சொல்றீங்களே! நான் என்னதான் செய்ய முடியும்? ஆறுபேர் பாராவுடன்தான் அனுப்பிச்சேன். எல்லாருக்கும் டிமிக்கி கொடுத்து ஆத்திலே குதிச்சிட்டான். இங்கே மூணு நாளாத் தேடறேன்."

"நல்ல வேளை, இப்போதாவது பிடித்துவிட்டாயே!"

"எங்கே பிடித்தேன்?"

"அதான் உன்னுடைய ஆட்கள் என்னைப் பிடித்தார்களே, போதாதா?"

"அது தப்புங்க. மன்னிச்சுக்குங்க. அவன் தாடி வச்சிக்கிட்டு மாறு வேசத்திலே போறான்னு ஒரு 'இன்பர்மேஷன்' கிடைத்தது. நான் அதை ஆட்கள் கிட்டச் சொல்லி வைச்சிருந்தேன். காலம்பர மோகனா வீட்டுக்கு முன்னாலே ஒரு ஆள் தாடியோடு நடமாடறதாக எனக்கு ஒரு நியூஸ் கிடைத்தது. 'பாலோ' பண்ணிக்கிட்டே வந்தாங்க. நீங்கதான் என்று எண்ணிப் பிடிச்சுட்டாங்க, மன்னிக்கணும்."

"ஆமாம், அவன்தான் தாடியைக் கழற்றி எறிந்துவிட்டதாகச் செய்தி வந்ததே. திருவாரூர் போலீசார் மரத்தடியில் தாடியைக் கண்டு எடுத்தார்களே!"

"அது என்னங்க! ஒரு டசன் தாடியை வாங்கி வச்சிருப்பான். ஒன்றைக் கழட்டி எறிந்துவிட்டு இன்னொன்றை மாட்டிக்கிட்டிருப்பான். திருடனுங்க மூளையே 'கிளவர் மைண்டுங்க!'"

"வேறு ஏதாவது துப்புக் கிடைத்ததா?"

"ஒன்னும் கிடைக்கலீங்க. ஆனா, திருவாரூருக்குள்ளேதான் அவன் திரிவான்னு சந்தேகம் இருக்குது. முன்னாடியே இரண்டு சார்ஜ். இப்போ நாதஸ்வரக்காரனைக் கத்தியாலே குத்தினான்னு மூணாவது சார்ஜ் வேறே இருக்குது. ஒவ்வொன்றுக்கும் பதினஞ்சு வருஷம் தீட்டிவிடலாங்க."

"ஆள் அகப்பட்டால்!" என்று சிரித்தார் பரதேசியார்.

"கிடைத்துவிடுவானுங்க. ஆனா நீங்களும் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருங்க."

"நான் எதற்கப்பா ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்?"

"நாதஸ்வரக்காரர் என்ன பண்ணினாரு? அவர் மேல் ஏன் கத்தியை எறிந்தான்? அதைப் போலவே நீங்கதான் அந்தப் பொண்ணைக் காப்பாத்தி இருக்கீங்க என்கிறதுக்காக உங்க மேலேயும் எறியலாம். உங்களுக்கு ஏதாவது ஆபத்துன்னா எனக்குத் திருவாரூர் ஸ்டேசன்லே சொல்லியனுப்புங்க."

"இல்லை அப்பனே, என்னைக் கப்பாற்றக் கடவுள் இருக்கிறார் உன் வேலையை நீ காப்பாற்றிக்கொள்" என்று சொல்லிவிட்டுப் பரதேசியார் மறுபடியும் பாட ஆரம்பித்துவிட்டார்.

❖ ❖ ❖

நேற்றைய தினம் வைத்தி, வடிவாம்பாள் வீட்டில் வந்து சொன்ன செய்தி அதற்குள் நிஜமாகும் என்று வைத்திக்கே தெரியாது. இன்று இந்தப் பாவியூர் ஜமீன்தாரே நேரில் வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டதுமே வைத்தி திகைத்தார். அப்போது இரவு எட்டு மணி இருக்கும். 'உள்ளே வரச் சொல்லு' என்று சின்னசாமி கடைப்பையனிடம் சொன்னார். பையன் தயங்கி நின்றான்.

"ஏண்டா நிற்கிறே? ஆசாமி வந்து, ஏதாவது என் கையிலே கிடைச்சா உனக்கும் தாரேன்."

"அதுதான் தருவீங்களே சார். நான் நின்னது அதுக்கு இல்லை. அவருக்கு உங்களைத் தனியாய்ப் பார்க்கணுமாம்."

"இங்கே வரவன் எல்லாம் தனியாகத்தான் பார்க்க வருவான், தனியா இருக்கிறேன், வரலாம்னு சொல்."

பையன் வெளியே ஓடினான். உடனே சுமார் நாற்பத்தைந்து வயது மதிக்கத் தக்க ஒருவர் உள்ளே நுழைந்தார். நல்ல கட்டுமஸ்தான உடம்பு அவர். தலையை மொட்டை அடித்திருந்தார். மீசைகூட இல்லை.

"வரவேணும், வரவேணும்! நீங்க என்னை இருட்டின பிறகு பார்க்க விரும்பறதாக உங்கள் ஆள் நேத்தித்தான் சொன்னான். ரொம்ப சந்தோஷம். ஆமா, பாவியூர்னா, எந்தப் பாவியூர்? நம்ம ஜில்லாவா? இல்லை, திருச்சி டிஸ்டிரிக்டோ?"

"பாவியூரில்லைங்க, பாரியூர்னு பேரு. நம்ம தஞ்சாவூர் ஜில்லா தான்."

"இந்த ஜில்லாவிலே பாரியூர்னு நான் கேள்விப்பட்டதே இல்லையே!—"

"கேள்விப்பட்டிருக்க மாட்டீங்க. நான்தான் அந்த ஊரை விலைக்கு வாங்கினேன். என் பாரியாள் பேராலே பாரியூர்னு பேர் வைச்சேன்."

"ரொம்ப நல்ல காரியம். மனுஷனுக்குப் பாரியாள் மேலே பிரியம் இருக்க வேண்டியதுதான். ஆமா, உங்க கிராமம் எத்தனை வேலியோ?"

"வேலி எல்லாம் தாழம்பூதான்."

"என்ன, தாழம்பூ வேலியா! ரொம்ப நல்லா பேசுறீங்களே! நான் கேட்டது நிலம்? வேலி எத்தனை என்று?"

"ஓ, அதுவா! அது சுமார் இரண்டாயிரம் மூவாயிரம் வேலி இருக்கும்."

வைத்தி நிமிர்ந்து உட்கார்ந்தார். "உங்களுக்குப் பூர்வீகம் எந்த ஜில்லா?" என்று கேட்டார்.



"நான் எல்லா ஜில்லாவிலேயும் இருந்திருக்கிறேன். மூனு வருசம், திருச்சியிலே நாலு வருசம், என், மதுரையிலேகூட ரெண்டு வருசம் இருந்திருக்கேன். ஏன் கேட்கிறீங்க?"

"இல்லை, இந்த ஜில்லாவானால் வேலி என்றதும் முன் வேலியைச் சொல்ல மாட்டாங்க. அதனாலே கேட்டேன். ஆமா, காவேரிப் பாய்ச்சலிலே இரண்டாயிரம் வேலியா?"

"காவிரிப் பாய்ச்சலில்லீங்க. அதை நம்பிப் பிரயோசனம் இல்லீங்க. அது எட்டு மாசம் பாயும். நாலு மாசம் காயும். நம்ம நிலத்திலே கடலே பாயுது."

"என்ன, கடல் பாயுதா?"

"ஆமாங்க. நமக்கு உப்பு வியாபாரம். காவேரி வத்தினாலும் கடல் வத்தாது பாருங்க. அதுலே தண்ணியே பணமாயிடும். ஏன் இவ்வளவு அக்கறையாகக் கேக்கிறீங்க? நான் ஏதாச்சும் கிராமம் விக்க வந்திருக்கேனோன்னு பார்த்தீங்களா?"

"இல்லே, இல்லே. இந்த ஜில்லாவிலே எனக்குத் தெரியாதவர்களே கிடையாது. நீங்க புதுசா இருக்கீங்களே என்ற காரணத்தாலே கேட்டேன். ஆமா, உங்க உப்பளம், கிராமம் எல்லாம் எங்கே இருக்கிறது?"

"அதிராம்பட்டணத்திலே இறங்கி ஐந்து மைல் போகணும். நம்ம உப்பளத்திலே உங்களாலே ஒரு காரியம் நடக்கணும்."

"எதாயிருந்தாலும் செய்து தரேன். என் கிட்டே ஹெல்ப்'னு வரவங்களை நான் வெறுங்கையோடே விடுறதில்லை."

"அப்பிடியானா இந்தாங்க. இதைக் கையிலே பிடியுங்க" என்று பாரியூர் ஜமீன்தார் வைத்தியின் கையிலே ஒரு ஐந்நூறு ரூபாயைக் கொடுத்தார்.

வைத்தியின் உடம்பில் சாந்தம் பாய்ந்தது. "ஆமா. அதனாலே பாதகமில்லை. விஷயத்தைச் சொல்லுங்க."

"நம்ப ஊரிலே உங்க ஆளு டான்ஸ் செய்யணும்."

"என் ஆளா? யாரைச் சொல்றீங்க?"

"என்னங்க, சும்மா என்னையே ஏமாத்தறீங்களே! உங்க மோகனாப் பொண்ணு."

"அடேடே, அவளா! அதுக்கு நான் என்ன செய்யறது?"

"நீங்க சொன்னால் அது அவசியம் செய்யுமாம். அன்னைக்கு சாமிக்கு முன்னாலே அற்புதமா ஆடிச்சு. அதிலே இருந்து ஒரு ஆசை..."

"ஆமா, இப்ப கல்யாண மாசமில்லையே!"

"இல்லீங்க, மாரி அம்மன் கோவில் ஒண்ணு, லட்ச ரூபாயிலே கட்டியிருக்கிறேன். அதிலே கும்பாபிஷேகம் வைச்சிருக்கு."

"என்னைக்கு?"

வைச்சக்கலாம்."

வைத்திக்கு அவர் பேச்சில் சிறிது சந்தேகம் உண்டாயிற்று. கச்சேரி தேதிக்காக, கல்யாணத்தை வேணுமானால் தள்ளிவைப்பது உண்டு. இவர் கும்பாபிஷேகத்தையே தள்ளி வைக்கிறாரே என்று யோசித்தார்.

"என்ன யோசிக்கிறீங்க? இன்னும் நாலு நாளைக்கி நல்ல முகூர்த்தம் இருக்கிறது. அவர்களுக்கு எந்தத் தேதி சௌகரியம்னு சொன்னா அதிலே செய்துடலாம். கூட்டம் கூடும், பாருங்க."

வைத்தியின் சந்தேகம் தீர்ந்தது. "உம்... பணம் அதிகம் செலவாகுமே!"

"அது எப்படீங்க? இரண்டாயிரந்தான் என் திட்டம். அதற்குள்ளே முடியுங்க."

"அவளுக்கே ரெண்டாயிரம் கறக்கணும். அப்புறம் எனக்கு, அவ அம்மாளுக்கு..."

"சரி, கூட இருநூறு வைச்சக்குங்க."

"பின்னே, வரீங்களா? மோகனா வீட்டுக்குப் போய் வருவோம்."

இதைக் கேட்டதும் ஜமீன்தார் உள்ளம் பூரித்தார். இருந்தாலும் ஏதோ யோசித்தார்.

"அது நான் இப்ப வரப்படாதுங்க."

"ஏன் ஐயா?"

"ஊரிலே ஏதாவது சொல்லிடுவாங்க. நம்ப தரத்திற்கு அவுங்க வீட்டுக்கு நான் போறது லாயக்கில்லீங்க. நீங்களே பேசி முடிச்சிட்டு வாங்க."

"ஏன் ஐயா வெட்கப்படுகிறீர்?"

"என் தலையைப் பார்த்தீங்க இல்லே. இந்தத் தலையோட..."

"ஏன் இப்படி மொட்டையடித்திருக்கிறீர்?"

"அது ஒரு பிரார்த்தனை."

"என்ன, மோகனா கிடைக்கணும்னா? அந்த மட்டிலே நீர் கெட்டிக்காரர்தான். இந்த மாதிரி விஷயங்களிலே இறங்கறதுக்கு முன்னாலேயே மொட்டை அடித்துக்கொண்டுவிட்டீர். சரி, பின்னே நான் போயிட்டு வரேன். நீங்க ஒரு மணி கழிச்சு வாங்க."

"ஏன்? நீங்க போயிட்டு வாங்க. நான் இங்கேயே இருக்கேன்" என்றார் ஜமீன்தார்.

வைத்தி அங்கவஸ்திரத்தைப் போட்டுக்கொண்டு மோகனாவின் வீட்டை நோக்கிப் புறப்பட்டார். ஜமீன்தாரோ வைத்தியின் அறையில் ஒரு மூலையில் போய் உட்கார்ந்துகொண்டார்.

அறுபத்து ஏழாம் அத்தியாயம்

## ஆசை அங்கே, பாசம் இங்கே!



மனத்தைக் கடவுளின்பால் வைத்து உலகத்தில் வாழ்வது இயற்கை. ஆனால் மனத்தைக் காதலின்பால் வைத்துவிட்டு வேறொரு ஊரில் இருப்பதுகூட முடியாத காரியம். ஆனால் பெண்ணைப் படைத்த கடவுள், கூடவே அடக்கத்தையும் படைத்து இருக்கிறார். அந்த அடக்கமே பெண்ணுக்கு அழகு தருகிறது. அதுவே பெண்மையின் ஒளியாகப் பிரகாசிக்கின்றது. அதனால்தான் மோகனா சண்முகத்தைப் பிரிந்து ஒருநாள் ஆகியும் இன்னும் திருவாரூரில் இருந்தாள்.

"ஆசையும் நேசமும் ஆனந்தமும் அங்கே, பேசலும் பாசமும் பிதற்றலும் இங்கே" என்று கோபாலகிருஷ்ண பாரதியார் அருமையாகப் பாடியிருக்கிறார். அவர் பாடிய நந்தனின் கருத்து இன்று மோகனாவுக்கும் அமைந்ததுதான் ஆச்சரியம். இங்கும் மோகனா, அம்மா என்று பேசி அழைக்கிறாள். அதில் தாய்ப்பாசமும் இருக்கிறது. 'ரயில் சரியாகப் போயிருக்குமா?' என்று பிதற்றுகிறாள். இவ்வாறு பேசலும் பாசமும் பிதற்றலும் இருந்தாலும், அவள் மனத்தில் ஆசையும் நேசமும் சென்னையிலேயே இருக்கின்றன.

'அவர் சௌக்கியமாகப் போயிருக்க வேண்டுமே! இப்போது பார்க்கும் பட்டணத்து டாக்டர் அவர் கையை எடுக்காமல் இருக்க வேண்டுமே! அவர் உடம்பு சீக்கிரம் குணமாக வேண்டுமே! நம்மை விட்டுப் பிரிந்த வருத்தத்தில், அவருக்கு உடம்பு அதிகமாகிவிடக் கூடாதே! என்னால் வந்த இன்னல் என்னாலேயே தீர்ந்துவிடுமென்று எண்ணினேனே! ஆனால் என் தாய் வேறு விதமாக எண்ணியிருக்கிறாளே! அவருக்கு ஏதாவது ஆகிவிட்டால், நான் எப்படி இங்கிருக்க முடியும்? 'திருவாரூருக்குப் போனார், கையில் குத்துப்பட்டார், கையை எடுத்துவிட்டார்கள்' என்று உலகம் சொல்வதைக் கேட்டுக்கொண்டு, நான் உயிரோடு வாழ முடியுமா?' என்று நினைப்பாள். மறுகணமே 'என்னத்திற்கு இந்தக் கவலை? அவருக்கு அப்படியாகிவிட்டால் தான் எனக்கே உயிர் இருக்காதே' என்று சமாதானம் செய்து கொள்வாள்.

'எப்படி உடம்பு என்று நாம் ஒரு கடிதமாவது எழுதுவோமா? ஏன், எழுதிப்போட்டால்தான் என்ன? அதிலே என்ன குற்றம் வந்துவிடப் போகிறது?'

'நம்முடைய ஆபத்துக்கு ஒரு கடிதம் எழுதக்கூட உபயோகப் படாவிட்டால், நான் படித்துத்தான் என்ன பயன்? இன்றைக்கே

எழுதிப் போடுகிறேன்' என்று நிச்சயிப்பாள். 'எப்படி எழுதுவது? அவரை எப்படி அழைப்பது? அன்பார்ந்த— ஐயோ, நன்றாய் இல்லை! யாராவது பார்த்துச் சிரித்தால்? இல்லை, அவரே பார்த்துச் சிரித்தால்? பெயரையே போட்டுவிடலாமா? எப்படிப் பெயரை எழுதுவது? ஒன்றுமே போடாமல் எழுதிவிடுவோமே! நன்றாய் இருக்கிறது! யாருக்கு எழுதினோம் என்று அவர் கண்டாரா? ஏற்கெனவே சந்தேகப் பிராணி. இதிலும் மேல் விலாசம் எழுதாமல் காதல் காகிதம் போட்டாள்?' என்று பல யோசனை செய்தாள். 'அடி அசடே! இது என்ன பேதைமை! அவர் சென்னைக்குப் போயிருக்கிறார் என்பதுதான் உனக்குத் தெரியும். அங்கு எந்த இடத்தில் இருக்கிறார் என்பது தெரியாது. நீதான் ஜெயில் மாதிரி ஜன்னலுக்குப் பக்கத்தில் நின்றாயே' என்று ஒரு பெருமூச்சு விட்டாள். 'ஐயோ, விலாசத்தைக்கூடக் கேட்டுக்கொள்ளத் தவறிவிட்டோமே! இந்த வரதனுக்காவது தெரிந்து இருக்குமா?'

கீழே ஓடிப்போய் வரதனிடம் கேட்க வேண்டுமென்று அவள் மனம் துடித்தது. மெதுவாக மாடிப்படி வழியாக இறங்கி, வரதனின் காதில் மாத்திரம் கேட்கும்படி "வரதா" என்று கூப்பிட்டாள்.

உலகத்திலே பகிரங்கப் பேச்சினால் கேடு வருவதில்லை. ரகசியம் என்றவுடனே அதற்கு ஒரு கனம் வருகிறது. அதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அக்கறையும் கூடவே வருகிறது.

மோகனா, "வரதா" என்று மெல்லக் கூப்பிட்டது, வரதன் காதில் விழுந்ததோ என்னவோ! வடிவாம்பாள் பாம்புச் செவியில் அது விழுந்துவிட்டது. ஆனால் வடிவாம்பாள் திரும்பவே இல்லை. கவனிக்காதது போல இருந்துவிட்டாள். மோகனாவைப் பார்த்து வரதன் மெல்ல நடந்து சென்றான். மாடிப் படியின் முடிவிலே உயரே மோகனா நின்றுகொண்டிருந்தாள்.

"என் வரதா, அவரு பட்டணத்துக்குப் போயிருக்காரே, எங்கேன்னு உனக்குத் தெரியுமா?" என்றாள்.

"வாயிலே இருக்குது வார்த்தை. பட்டணத்துக்குப் போனா ஒரு நிமிசத்திலே கண்டுக்கிறது"

"ஆமாம், பட்டணத்துக்கு நம்ப எப்படிப் போக முடியும்? அவருக்கு உடம்பு எப்படியிருக்குதுன்னு ஒரு தந்தி கொடுத்தால் என்ன?"

"கொடுத்துடறது. சண்முகசுந்தரம், மதராசுன்னு போட்டால் அலறிக்கிட்டுப் போய்ச் சேருது"

"அது எப்படிப் போய்ச் சேரும்?"

"அவர் பெயர்தானே சண்முகசுந்தரம்? அவர் கிட்டேதான் கொடுப்பான். இல்லாட்டி, இன்னொரு நாதஸ்வரக்காரன் அந்தப் பேரிலே பொறக்கணும் மோகனா."



"போ வரதா, உனக்குச் சமயத்திலே மூளை இருக்காது. அவ்வளவு பெரிய பட்டணத்திலே அவரை யாருக்குத் தெரியும்? தந்தி போய்க் கொடுபடாது. பின்னாலேயே அது நமக்கே திரும்பி வரும். என் கஷ்ட காலம், அப்ப நான் வீட்டில் இருக்க மாட்டேன். அம்மா கையிலே கிடைக்கும். இன்னும் வம்புதான். நீ சாமிக்கண்ணு அண்ணன் வீட்டிலே போய் அவரு பட்டணத்திலே எங்கே இருக்காருன்னு கேட்டுக்கிட்டு வாயேன்"

"அவங்களுக்கு மாத்திரம் எப்படித் தெரியும்? நாயனக்காரர் மகனே கேட்டார் என் கிட்டே. அவரு அட்ரஸ் தெரிஞ்சாச் சொல்லு. ஒரு காகிதம் எழுதிப் போடணும்னு"

"ஐயோ, அப்படியானால் பின்னே எப்படி அவருக்கு எழுதுவது?"

"நீ எழுதி என்கிட்டே கொடு. நான் அதை எடுத்துக்கிட்டுப் போய் மைனர் வீட்டிலே கேட்டுத் தெரிஞ்சுக்கிறேன்"

"சே! அவரிடம் போய்க் கேட்டால் நன்றாய் இராது"

"இதெல்லாம் என்னத்துக்கு மோகனா. நான் ஒண்ணு சொல்லறேன், கேக்கிறியா? நீயே பட்டணத்துக்குப் புறப்பட்டுடு"

"அம்மா போகவிட மாட்டாங்களே!"

"இதுக்கு அம்மா தயவு எதுக்கு? ரயிலிலே ஏறி உட்கார்ந்துக்கிட்டா கொண்டுபோய் நிறுத்தறான். நானும் கூட வர்றேன். எங்கேயாவது தேடிக் கண்டுபிடிச்சுடுவோம்."

மோகனாவின் மனம் உடனே பட்டணத்துக்குப் போகவேண்டுமென்று எண்ணியது. வரதன் சொல்கிற யோசனைதான் சரி. அம்மாவுக்குப் பயந்து பயந்து இருந்தால், இதற்கு ஒரு முடிவே ஏற்படாது. துணிந்து போய்க் கேட்டுவிடுவோம் என்று நினைத்தாள்.

"ஆமாம் வரதா, நான் அம்மாவைக் கேக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, இதுவரையில் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தது தெரியாதவண்ணம் மெதுவாக இறங்கிக் கீழே வந்துவிட்டாள் வடிவாம்பாள். மோகனா தயக்கத்துடன் இறங்கி வந்தாள்.

"அம்மா!"

"என்ன தங்கம்? என்னடாப்பா, என்ன வேணும்?" என்று பசப்பினாள் தாய்.

"ஒண்ணும் வேண்டாம்மா, உங்ககிட்டே ஒரு வார்த்தை."

"ஏது, ஆலாவரணம் ரொம்ப பலமாக இருக்குதே! சும்மா பல்லவியைச் சொல்லு"

"இல்லேம்மா, அவரு பட்டணத்துக்குப் போனாரே..."

"அதான் போயிட்டாரே!"

"அவருக்கு உடம்பு எப்படி இருக்கோ?"

"சௌக்கியமாகத்தான் இருப்பான். இல்லாட்டித்தான் தந்தி வந்திருக்குமே"

இந்த வார்த்தையைக் கேட்டவுடனே மோகனாவின் உடல் முழுவதும் ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்தது. இரக்கமே உருவாகிய தாயா, இவ்வளவு கல் நெஞ்சத்துடன் பேசுகிறாள் என்று தயக்கம் உண்டாகியது.

"அவுங்க அப்படியெல்லாம் தந்தி கொடுக்கமாட்டாங்க அம்மா. நீங்க பொல்லாதவங்கன்னு எல்லோருக்கும் தெரியும்" என்றான் வரதன்.

"நான் பொல்லாதவள்னு இன்னிக்குத்தான் தெரியுமா? என்னைக்கு ஒரு பெண்ணைப் பெத்தேனோ, அன்னிக்கே தெரிஞ்சு இருக்குமே! இந்த உலகத்திலே இளவட்டப் பசங்களுக்கு எல்லாம் என்னைப் போல் உள்ள எல்லோரும் பொல்லாதவங்களாத்தான் தெரியும்."

"அது சரியம்மா, மோகனா சொல்ல வந்ததைக் கேக்கலியே நீங்க" என்றான் வரதன். வடிவாம்பாளின் கோபம் பீறிட்டது.

"அவ சொன்னதை நான் கேட்டது எல்லாம் போதும். இனிமே நான் சொல்றதைத்தான் அவ கேக்கணும். ஆமா, என்ன சொல்ல வந்தே?" என்று முகத்தை மாற்றி வைத்துக்கொண்டு மோகனாவிடம் கேட்டாள் வடிவாம்பாள்.

"இல்லேம்மா, ஒரு தடவை பட்டணத்துக்குப் போய்விட்டு வரலாம்னு தோணித்து" என்று மோகனா துணிந்து சொல்லியே விட்டாள். வடிவாம்பாள் கடகடவென்று சிரித்தாள்.

"அட அசடே, இதுக்குத்தானா? எனக்குக்கூட உன்னைப் பட்டணத்துக்குக் கூட்டிக்கிட்டுப் போய் உயிர்காலேஜு, செத்த காலேஜு எல்லாம் காண்பிக்கணும்னு ஆசை. ஏதாவது கச்சேரி வரட்டும். இல்லாட்டி இந்த வருசம் கிறிஸ்மசு பண்டிகைக்குப் போவோம். இவ்வளவு சம்பாதிக்கிற பெண் பட்டணத்துக்குப் போகணும்னா, நான் வேண்டாம்னு சொல்வேனா?"

"அம்மா விளையாடாதீங்க அம்மா. எனக்கு அவரைப் போய்ப் பார்த்துவிட்டு வரணும்னு இருக்கு."

"அப்படிச் சொல்லுன்னானாம்! புறப்படு, இன்னிக்கே புறப்படு. நீயா பேசறே! இந்த மத்தளக்காரன் சொல்லிக் கொடுத்தில்லே பேசறே!"

"அம்மா, அம்மா, சும்மா இருங்க. நான் மத்தளத்தை அடிச்ச பாவத்துக்கு நீங்க என்னை அடிக்காதீங்க" என்றான் வரதன்.

"எனக்குத் தெரியும்டா, இரண்டு பேரும் மாடிப்படியிலே என்ன பேசிக்கிட்டு இருந்தீங்கன்னு. உன்னை உள்ள உக்காத்தி வச்சு சோறு போட்டது பிசகு. இந்தா மோகனா, இந்தப் பேச்சு எல்லாம்



என்கிட்டே வச்சுக்காதே. நான் சொல்றவரைக்கும் நீ நாட்டியம் பண்ணணும். பணத்தைக் காசைச் சேர்க்கணும். அப்புறம் நான் இஷ்டப்பட்டு யாருக்குக் கட்டிக் கொடுக்கிறேனோ அவனைத்தான் நீ கட்டிக்கணும். அவன் குருடனா நொண்டியான்னு கேட்கப்படாது. நடுப்பற பட்டணத்துக்குப் போறேன், சிங்கப்பூருக்குப் போறேன் அப்படி இப்படின்னு பேசிக்கிட்டு இருந்தினா என்னை நீ இங்கே உசிரோடே பார்க்க முடியாது!"

"என்ன அம்மா பிடிவாதம்? நீங்களும் வாருங்கள். அங்கே போவோம். அவருக்கு உடம்பு சௌக்கியமான உடனே திரும்பி வந்து விடுவோம்" என்றாள் மோகனா.

"ஆமாண்டி, நாலு பாக்கு வெத்திலையும் எடுத்துக்கிட்டு வர்றேன். நீதானே உடனே வருவே? உள்ளூரிலேயே ஒன்பது மணி நேரம் வழிச்சு வந்தியே! பட்டணத்துக்குப் போனா விடுவியா? அங்கேயே உக்காந்துகிட்டு, 'இவ எனக்கு அம்மாவில்லே. இவங்களுக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லே'ன்னு வக்கீல் நோட்டீஸ் விட்டு, போலீசிலே பிடிச்சுக் கொடுத்திடுவே. ஏ பொண்ணு, உனக்கு எத்தனை வயசு ஆகுது தெரியுமா?"

"பெத்தவங்களுக்குத்தான் தெரியும்! நான் பொறக்கிற போதே பஞ்சாங்கத்தைப் பார்த்துக்கிட்டா பொறந்தேன்?"

"பேச்சிலே ஒண்ணும் குறைச்சலில்லே! ஆனா, இந்த வடிவாம்பாள் வயத்திலே பிறக்கிறோம்னு தெரிஞ்சிருந்தா, நீ அப்படியே மாட்டேன்னு இருப்பே, அது நிச்சயம்!"

"ஏம்மா இப்படிச் சொல்றீங்க? நான் எப்பவாவது உங்களைக் கேவலமாகப் பேசி இருக்கேனா, நீங்க இப்படி எல்லாம் சொல்றதுக்கு?"

"நீ கேவலமாகப் பேசு, கேக்கிறேன். நீ இரண்டு அடி அடிச்சாலும் பட்டுக்கிறேன். குழந்தையாக இருக்கிறபோது அடிச்சதே அதே போல இப்பவும் அடிக்குதுன்னு நினைச்சுக்கிறேன். ஆனால் நான் நல்லதைச் சொல்லி நீ கேக்கமாட்டேன்னா அப்புறம் உன் இஷ்டம். வயசு இன்னும் இருபது ஆகலே. நேத்தி வரையில் நான் கிழிச்ச கோட்டைத் தாண்டாமே இருந்தே. ஆடி மாசம் வந்தாலும் வந்தது. ஆடிக் காத்திலே அரசமரம் சலசலத்தாப்பிலே ஆரம்பிச்சுட்டியே!"

"அம்மா, ஒரு தடவை போய்ப் பார்த்துவிட்டு வந்துவிடுவோம்."

"என்னடி பார்வை அவனை? சனி பார்வை இருந்தாலும் இருக்கலாம். அந்தச் சண்முகம் பார்வை உனக்கு உதவாது. இரண்டு மாசமா நீயும் அவனும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கிட்டிருந்தீங்களே. சிங்கப்பூர் கச்சேரியைத் தவிர வேறு ஏதாவது கச்சேரி வந்ததா? அவன் இந்த வீட்டு வாசல்படியை மிதித்தான், கச்சேரியே நின்னு போச்சேடி. கச்சேரிக்குக் கூப்பிடறேன்னு எவனாவது

வந்தானா? கடை மாம்பழந்தான் விக்கும், தோட்டத்துப் பழத்தை யாராவது விலைக்குக் கேப்பானா? இந்த வயசிலே இதெல்லாம் கூடாது. பட்டணத்துக்குப் போறானாம். பார்த்தானைப் பார்க்கிறானாம். அம்மா வந்து ஒட்டுக் கேட்டுட்டானே என்கிறதுக்குத் தானே. இப்ப நீ என்கிட்டே வந்து சொல்றே? இல்லாட்டி, நீயும் வாதனும், கொல்லைப்பாதை வழியா இந்நேரம் ரயிலுக்குப் போயிருப்பீங்களே!"

"அம்மா, அப்படிச் சொல்லாதீங்க அம்மா" என்று ஓடிப்போய்த் தாயின் கைகளைப் பிடித்துக்கொண்டாள் மோகனா. அவளுக்குக் கண்ணீர் சொரிந்தது.

"என்னடி அழுவறே? என் மக விடற கண்ணீர் எது நிசம், எது பொய்யின்னு எனக்குத் தெரியாதா? அவன்தான் சொன்னானே பட்டணத்துக்குப் புறப்படு, போய்த் தேடுவோம், நானும் வரேன்னானே. நீ என்னைப் பாத்துட்டுத்தானே அம்மாவைக் கேக்கறேன்னே? ஏதோ நான் பண்ணின பாவம். அழுக்குத் துணி கிடக்குமே அள்ளித் தோய்க்கலாம்னு மாடிக்கு வந்தா, அது வம்பாய்ப் போச்சு. இல்லாட்டி இன்னிக்கு ராத்திரி வடிவாம்பாள் கைப்பெட்டி உடைக்கப்பட்டு இருக்கும். நூறு ரூபாய் பணம் காணாமல் போயிருக்கும். 'அம்மா வருத்தப்படாதேங்க, செத்துப் போங்க. நாங்க அண்ணனும் தங்கச்சியும் பட்டணத்துக்குப் போறோம்' அப்படின்னு காகிதம் எழுதி வச்சிருப்பே. இதுக்காடி உன்னைப் படிக்க வச்சது? இப்படி நடுப்பாதியிலே விட்டு ஓடறதுக்குத்தானா உனக்கு நாட்டியம் கத்து வச்சேன்? ஏண்டி என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கறே? இந்தச் சண்முகசுந்தரம் நல்லா இருப்பானா? இந்தப் பாவி, கூடவே இருந்து சொல்லிக் கொடுக்கிறானே. இந்த வாதன் நல்லா இருப்பானா? ஐயோ. அஞ்சு வருசத்துக்கு முன்னாலே ஒரு வாட்டி கொல்லையிலே வழுக்கி விழுந்தேனே, அன்னிக்கே நான் போயிருக்கப் படாதா? இப்படி ஆத்தாளையும் மகளையும் பிரிக்கிறானுங்களே பாவிகள்!" என்று அழுகையில் ஆரம்பித்துவிட்டாள் வடிவாம்பாள்.

வாதனுக்குக் கோபம் தாங்க முடியாமல் வந்துவிட்டது. உள்ளே ஓடினான். மிருதங்கத்தைக் கட்டி எடுத்துக்கொண்டான். இன்னொரு கையில் கர்லாக் கட்டையை மூட்டை கட்டிக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு வேகமாக வந்தான்.

"வடிவாம்பாள் அம்மா, இந்தா பாருங்க. நேத்து வரைக்கும் மானம், வெக்கம் எல்லாத்தையும் விட்டுவிட்டு நான் உங்க வீட்டிலே இருந்தேன். நீங்க பேசற பேச்செல்லாம் கேட்டுக்கிட்டு மோகனாவுடைய கலைக்காக எல்லாத்தையும் சகிச்சுக்கிட்டுத்தான் இருந்தேன். இனி என்னாலே சகிக்க முடியாது. இந்தாங்க, உங்க வீட்டிலே சம்பாதிச்ச நான் மிச்சம் பிடிச்ச பணம், பத்து ரூபாய் மூணே முக்காலணா. இந்தக் காசை நீங்களே வச்சிக்குங்க" என்று சொல்லி



தோட்டையும் காசையும் வடிவாம்பாள் காலடியில் வைத்தான். மோகனா பக்கம் திரும்பினான்.

"மோகனா, உன் தலையெழுத்து நல்லாயில்லே. உனக்குத் தைரியமும் இல்லே. நான் கண்டிப்பாகச் சொல்றேன். உங்க அம்மா உன்னை வாழ விடமாட்டாங்க. இந்தக் கண்றாவியைப் பார்த்துக்கிட்டு என்னாலே இனிமே இந்த வீட்டிலே இருக்க முடியாது."

"ஆமாண்டா, நீ இந்த வடிவாம்பா வயத்திலே பொறந்தவன். தங்கச்சிக்குப் பரிஞ்சு பேச வரே!"

"அட, பெத்தவங்களே சத்துருவா இருக்கிறபோது, கூடப் பொறந்தவன் என்னம்மா பண்ணிடப் போறான்? மோகனா மாத்திரம் என் கூடப் பொறந்ததா இருந்துச்சுன்னா இத்தனை நாள் நானே சண்முகத்தையும் மோகனாவையும் ஒப்பிலியப்பன் கோவிலுக்குக் கூட்டிக்கிட்டுப் போய் ஒரு தாலியைக் கட்டச் சொல்லி, 'அம்மா, பாரு. உன் மகளையும் மருமகனையும்'னு சொல்லியிருப்பேன். நீங்களும், தாய்க்கு மூத்த பிள்ளை சொல்றானேன்னு அடங்கிக் கிடப்பீங்க. அதுவுமில்லே இல்லாமப் போச்சு."

"டேய் வாதா, வாயை அடக்கிப் பேசு. நீ நினைக்கிறது உன் கையிலேயே பேசாது காரியத்திலேயா நடக்கும்?" என்றாள் வடிவாம்பாள்.

"சரிதான் அம்மா. சும்மா இருங்க. நான் மகா வித்வான்னு பேரை எடுக்கணும்னு ஆசைப்பட்டா ஏன் உங்க வீட்டிலே வந்து வாசிக்கறேன்? எனக்கு 'மகா வித்வான்' பட்டம் வேண்டாம். மனுஷன்கிற பட்டம் இருந்தா போதும். இந்த உலகத்திலே எல்லாரும் அந்தப் பெண்ணைக் கைவிட்டுட்டுப் போகிறபோது, ஒருத்தனாவது அவளுக்காகக் கண்ணீர் விட்டானென்கிற பெயர் இருந்தா போதும்." இந்தச் சமயம் வாதனுக்கு உணர்ச்சி தொண்டையை அடைத்தது.

"அம்மா, உங்களைப் பெத்த தாய் மாதிரி நினைச்சேன். செத்துப் போன என் தாயாரைக்கூட மறந்து நீங்கதான் தாய்னு இருந்தேன். உங்களுக்குக் கோபத்திலே என் அருமையைத் தெரிஞ்சுக்க முடியலே.

"வாதன் சொன்னதைக் கேக்கலியேன்னு நீங்க கண்ணீர் விடற காலம் வரும். மோகனா, உனக்குக் கொடுத்து வச்சது அவ்வளவுதான். இனி உன் கஷ்டத்தைப் பார்த்துக்கிட்டு என்னாலே இருக்க முடியாது. நான் போறேன்" என்று வெளியே புறப்பட்டான்.

"வாதா, வாதா! போகாதே வாதா" என்று ஓடினாள் மோகனா.

வடிவாம்பாள் மனத்திலே அதற்குள் ஒரு மின்னல் பாய்ந்தது. வாதன் வீட்டை விட்டுப் போவதற்கு எக்காலத்திலும் வடிவாம்பாள் சம்மதிக்க மாட்டாள். பெற்ற பிள்ளையாக இருந்தால் செலவுக்குப் பணம் கேட்பான். வாதன் அதைக்கூடக் கேட்க மாட்டான் என்பது அவளுக்குத் தெரியும். எப்படி வாதனை நிறுத்துவது என்ற யோசனை

ஒரு கணத்தில் அவள் மனத்தில் உருப்பெற்றுவிட்டது. வடிவாம்பாள் குரல் எழுந்தது.

"போ வாதா. போ நீ எங்கே போறேன்னு எனக்குத் தெரியும்" என்றாள்.

"எங்கே போறேன்? என்ன தெரியும் உங்களுக்கு? என்னமோ பல்லவி இடத்தைக் கண்ட மாதிரி பேசுறீங்களே!" என்றான் வரதன்.

"ஆமாண்டா கிருஷ்ணபகவான் தூது போனாரு பாரு துரியோதனன் கிட்டே அந்த மாதிரி நாடகம் ஆடி என் கண்ணை மறைச்சுப்பிடலாம்னு இரண்டு பேரும் பாக்கறீங்க. உன் தங்கை மோகனாவுக்குப் பரிஞ்சுக்கிட்டு, நீ பட்டணத்துக்குத் தூது போறே."

வடிவாம்பாளின் கற்பனையில் வரதனே அயர்ந்து போனான். ஒரு கணம் திகைத்தே விட்டான்.

"அம்மா, அம்மா, அபாண்டமாகச் சொல்லாதீங்க அம்மா! இப்படிப் பொய் சொன்னால் இடிதான் விழும்."

"நீ இருக்கிறபோது இடி என்னத்துக்கடா! நான் தூங்கறபோது, என் தலையிலே கல்லையுங்கூடப் போட்டுடுவே."

"நான் ஒண்ணும் பட்டணத்துக்குப் போகல்லே, அதுக்காகப் புறப்படவும் இல்லே."

"போ, நான் யாரு உன்னைத் தடுக்க? என் கையைச் சொல்லணும்! கொழும்பும் சோறும் பிசைஞ்சு உருட்டி உருட்டி உன் கையிலே போட்டேன் பாரு, பெத்த பிள்ளைக்குப் போடற மாதிரி. அந்தப் பாவத்துக்கு இதுவும் வேணும், இன்னும் வேணும் என்னைக்கும் ஊரார் புள்ளை, ஊரார் புள்ளைதானே?" என்று கரிசனமாக அழ ஆரம்பித்தாள் வடிவாம்பாள். வரதன் மிருதங்கத்தைக் கீழே வைத்தான்.

"அம்மா, நான் போகல்லே அம்மா. உங்க பெண் அருமை உங்களுக்கே தெரியலேன்னா நான் யாரு? சரி மோகனா, கண்ணைத் துடைச்சுக்கோ. திருவாரூரிலே காப்பாத்தின தெய்வம் பட்டணத்திலேயும் இருக்கு" என்று சொல்லிவிட்டு, மிருதங்கத்தை எடுத்து ரேழியில் வைத்தான். ஆனால் வடிவாம்பாள் அதோடு விட்டுவிடவில்லை.

"இந்த வாதா, இதோ பாருங்க, நான் ஒரே வார்த்தையிலே சொல்விடறேன். உங்களுக்குப் பட்டணத்துக்குப் போகணும்னு தோணித்துன்னா, இரண்டு பேரும் இப்பவே புறப்படுங்க. இல்லே, நான் சொல்றதைக் கேட்டுக்கிட்டு இங்கே இருக்கேன்னு என் தலையிலே அடித்துச் சத்தியம் பண்ணுங்க."

"அம்மா, அதெல்லாம் சொல்லாதீங்க அம்மா, பாவம். நீங்க சொல்லுறதை அதுவும் நானும் கேக்கிறோம்" என்று வரதன் சொன்ன பிறகுதான் வடிவாம்பாள் அடங்கினாள்.

அன்று நெடுநேரம் வரையில் வடிவாம்பாள் அழுத முகத்தோடு இருந்தாள். சாயங்காலம் ஐந்து மணி இருக்கும். வால் கிண்ணத்தில்



எண்ணெய் எடுத்துக்கொண்டு சீப்போடு வந்து மோகனாவின் அருகில் உட்கார்ந்தாள். அவளிடம் வாயால் பேசாமலேயே தலையில் எண்ணெய் தடவி வார ஆரம்பித்தாள். ஆனால் வாய் பேசவில்லையாயினும், மனம் பேசிக்கொண்டே இருந்தது.

குழந்தைக்கு மருந்தைப் புகட்டும் தாய், சித்தரத்தையும், சுக்கும் உறைக்கும் என்பதைத் தெரிந்தே புகட்டுகிறாள். குடித்த குழந்தையின் கண்ணீரையும், அழுகையையும் பார்க்கும்போது அவளுக்கும் வருத்தமாகத்தான் இருக்கிறது. ஆனால், அதைத் தாய் வெளியே காட்டிக்கொள்வது இல்லை.

அதைப் போலவே பணத்தாசை பிடித்த வடிவாம்பாளும், தன் மகளுக்குக் கார மருந்தைக் கொடுத்துவிட்டு, கையில் சர்க்கரையைக் கொடுப்பதுபோல், அன்பால் அரவணைக்கவும் ஆரம்பித்தாள். ஆனால் எப்போதும் தலையை வாரி, ஜடை போட்டு, ஒரு கூடை பூ வைத்து அலங்காரம் பண்ணும் தாயார், இன்று அத்தனை புஷ்பங்களையும் அள்ளிச் செருகவில்லை. மகளின் வருத்தம் தாய்க்கும் உறுத்தியதா? ஏன் இன்று நாலே நாலு மல்லிகைப் பூவைச் செருகினாள் என்பது நம்மால் கண்டுபிடிக்க முடியாது.

✦ ✦ ✦

சில குடும்பங்களில், நாலு, ஐந்து ஆண் குழந்தைகள் இருப்பார்கள். அவர்களுள் ஒரு பையனைத் தன் தங்கைக்கோ தம்பிக்கோ ஸ்வீகாரமாகக் கொடுத்துவிடுவார்கள். ஆனால் தத்துப் போன அந்த மகன், மற்றவர்களைக்காட்டிலும் தாய் தந்தையின் மேல் பிரியமாக இருப்பான். பெற்ற தாயும் தந்தையும் அவனைப்பற்றியே சதா எண்ணிக்கொண்டிருப்பார்கள். இதைப் போன்றவர்கள்தாம் இலங்கையில் வாழும் தமிழ் மக்கள்.

தமிழ் நாட்டிடம் அவர்களுக்கு உள்ள அன்பு, ஆராய்ச்சிக்கு அடங்காது. 'சிவனை முழுவதும் மறவாத சிந்தையன்' என்று நந்திக் கலம்பகம் கூறுகின்றது. அதைப் போலவே, தமிழை மறவாதவர்கள் இலங்கைத் தமிழர்கள் என்று சொல்வது பொருந்தும். அதிலே திருசிற்றம்பலம் குமாரசாமி போன்றவர்கள் இலங்கையில் இருந்தாலும், இங்கிலாந்தில் இருந்தாலும், தமிழ் நாட்டையே நினைத்துக்கொண்டிருப்பவர்கள்.

சிற்றம்பலம் குமாரசாமி யாழ்ப்பாணத்து நல்லூரில் பிறந்தவர். தமிழ் தந்த நாவலர் பெருமான் அவதரித்த ஊர் அது. அவரும் தமிழ் நன்கு பயின்றவர்.

வருஷம் தவறினாலும் சிற்றம்பலம் குமாரசாமி தாயகத்தைத் தரிசிக்காமல் இருக்கமாட்டார். சீஸனுக்குக் குற்றாலத்திற்கு வருவார். அங்கு கம்பன் கவிதையையும், கன்னித் தமிழையும் அருவி நீர் போல் அநுபவிப்பார்.

இந்த முறை சிதம்பரம் சென்று நடராஜப் பெருமானைத் தரிசித்து விட்டு, அப்படியே மோகனாவைப் பார்ப்பதற்காகத் திருவாரூருக்கு வந்தார். அவர் வந்த நாளில் மோகனாவின் ஆட்டமும், சண்முகத்தின் வாசிப்பும் அமைந்தன. அவற்றைப் பார்த்தார். 'அடேயப்பா, இத்தகைய சங்கீதத்தை இலங்கைத் தமிழ் மக்கள் கேட்க வேண்டாமா? இத்தகைய நாட்டியத்தை யாழ்ப்பாணத்து அன்பர்கள் எல்லோரும் பார்க்க வேண்டாமா? தியாகராசன் திருமுன்னர் ஆடிய இந்த நாட்டியம் அந்த வாசிப்பு இரண்டும் கதிர்காமக் கந்தனுக்கு ஏற்றதாயிற்றே?" என்ற ஆசையும் வந்தது. இன்று வடிவாம்பாள் வீடு தேடி அவரே வந்துவிட்டார்.

அவர் இந்த நாட்டில் பிறந்திருந்தால், அவருடைய செல்வத்திற்கும் பெருமைக்கும் வடிவாம்பாள் வீடு தேடிப் போயிருக்க மாட்டார். ஆனால், ஆணுக்குப் பெண் சரி சமம் என்கிற தத்துவத்திலும், கலை கடவுளைப் போன்றது என்ற நம்பிக்கையிலும் ஊறியவர். ஆதலால் வடிவாம்பாளின் வீட்டுக்கு வருவதைத் தவறு என்று அவர் நினைக்கவில்லை. ஒரு கலைச்செல்வியின் வீட்டுக்குச் செல்கின்றோம், இது ஒரு பாக்கியம் என்ற எண்ணத்திலே வந்து சேர்ந்தார்.

வீட்டுக்குள்ளே ஒரு புது மனிதர் வந்ததைக் கண்டதும் தலைவாரிப் பின்னிக்கொண்டிருந்த வடிவாம்பாள் எழுந்தாள், மோகனா எழுந்து சென்று திரை மறைவில் நின்றாள். அவருடைய கால் சட்டையையும், தலைப்பாகையையும் கண்ட வடிவாம்பாள், யாரோ அதிகாரி என்ற எண்ணத்தில் நடுங்கினாள். கூடவே வந்து பயபக்தியுடன் நின்ற வேலைக்காரரைக் கண்டதும், வந்தவர் யாரோ பெரிய மனிதராயிருக்க வேண்டும் என்று எண்ணினாள்.

"மன்னிக்கவேண்டும். நான் உங்களைத் தொந்தரவு செய்து விட்டேன்" என்று கூறினார் குமாரசாமி.

"அதனாலே பாதகம் இல்லே ஐயா யாரு, தெரியலியே!" என்று பயந்துகொண்டே கேட்டாள் வடிவாம்பாள்.

"நான் இருப்பது இலங்கை. மோகனாம்பிகையைப் பார்த்து விட்டுப் போகலாமென்று வந்தேன்" என்று சொல்லிக் கூடத்தில் ஓரத்தில் நிற்கும் மோகனாவைப் பார்த்தார் குமாரசாமி.

வடிவாம்பாளுக்குச் சுருக்கென்றது. 'பின்னே என்ன, வரதனையா பார்க்க வருவாங்க?' என்று மனத்துக்குள் சொல்லிக்கொண்டாள்.

"என் மகதான் அது" என்று சொன்னாள்.

"தெரியுமே, அன்றைக்குச் சாமிக்கு முன்னாலே உங்களையும் பார்த்தேனே. அதன் நாட்டியம் ரொம்ப நயம். போட்டியிலே உங்கள் பெண் மிகமிக நன்றாக ஆடினாள்"

வடிவாம்பாள் சிரித்தாள். "அதெல்லாம் என்ன போட்டிங்க? நான் சொல்லப்படாது. இருந்தாலும் அது ஆடறத்துக்குன்னே பொறந்தது"



"அப்படித்தான் இருந்தது. முதல் நாள் தில்லையிலே நடராசப் பெருமானைத் தரிசனம் செய்துவிட்டு வந்தேன். அவன் ஆடும் அரசன். அடுத்த நாள் திருவாரூரிலே ஆடும் அரசியைக் கண்டேன். இந்தாருங்கள்" என்று திரும்பினார். கூட வந்தவர் ஒரு ஜெர்மன் சில்வர் தட்டு நிறையப் பழங்களை எடுத்து வைத்தார்.

"இதெல்லாம் என்னத்துக்குங்க" என்று சொல்லிலே வாங்கிக் கொண்டாள் வடிவாம்பாள்.

"அப்படி இல்லேம்மா! கடவுள் சன்னதிக்கும், கலைஞர்கள் வீட்டுக்கும் வெறும் கையோடு போகக்கூடாது. இதெல்லாம் ஒருவருக்குப் புண்ணியத்தால் வருவது. ஆட்டத்தைப் பார்க்கத் தெரியும் எங்களுக்கு. அது போல ஆடத் தெரியுமா?"

"நீங்க சொல்லறது ரொம்ப நிசம். எனக்கே அது ஆடறபோது பிரமித்துப் போகும். சும்மாவா? பத்து வருசமில்ல கத்துக் கொடுத்திருக்கேன்! வேளைக்குச் சாப்பிடாட்டாலும் பாதகமில்லை ஆனா, பாடம் கண்டிப்பா நடக்கணும்னு கண்டிஷனாக வளர்த்தேன், ஆடுது" என்று வடிவாம்பாள் தான் வளர்த்த பெருமையைக் கூற ஆரம்பித்தாள்.

"ஊரெல்லாம் இப்போது தில்லானா மோகனாம்பாள் பேச்சுத்தான் திருவாரூர் நாட்டியம் செந்தமிழ் நாட்டுக்கே பெருமை"

"ஐயோ, நின்னுக்கிட்டே பேசிக்கிட்டு இருக்கீங்களே, உக்காருங்க" என்று அதற்கு மேல் உபசாரம் செய்ய ஆரம்பித்தாள் வடிவாம்பாள்.

"ஊரிலே என்ன பேசிக்கிறாங்க?"

"எங்கும் இதே பேச்சுத்தான். ரயிலில் போனால், காப்பிக் கடைக்குள் நுழைந்தால், கோவிலுக்குப் போனால், நாலு பேர் கூடினால் உங்கள் மகள் பெருமைதான்"

"ஏய் அபரஞ்சி, அய்யாவுக்குக் காப்பி கொண்டுவா"

"அதெல்லாம் வேண்டாம். நான் காப்பி அதிகமாகச் சாப்பிடுவதில்லை. உங்கள் மகள் ஆட்டத்தைப் போல நான் காணவே இல்லை"

"ரொம்ப சந்தோஷம். இந்த மாதிரி நாலு பெரியவங்க நல்லா இருக்குன்னு சொன்னாலே போதும். நான் பட்ட பாட்டுக்கு அதுதான் வேணும். ஐயா வந்தது ரொம்ப சந்தோசம். உம்... கோவிலுக்குப் போகலாம்னு நினைச்சேன்" என்று பழத்தை வாங்கிக் கொண்டு ஆசாமியை வெளியே அனுப்ப யோசித்தாள் வடிவாம்பாள்.

"மறந்துவிட்டேன் அம்மா" என்று குமாரசாமி ஒரு கடிதத்தை எடுத்துக் கொடுத்தார்.

"என்ன காகிதம்?"

"என் அன்பர் ஒருவர், அவர் உங்களுக்கும் தெரிந்தவர். நான் திருவாரூர் போவதாகச் சொன்னேன். ஒரு அறிமுகக் கடிதம் கொடுத்தார்."

வடிவாம்பாளுக்குக் கடுதாசி தெரிந்தது. ஆனால் படிக்கத்தான் தெரியவில்லை. காகிதத்தைக் கையில் வாங்கி வடிவாம்பாள் அதை அழகு பார்த்துக்கொண்டே கௌரவமாக, "ஹ—ஹ" என்று சிரித்தாள்.

"நீங்களே நேரிலே வந்திருக்கிறபோது அறிமுகக் காகிதம் என்னத்துக்குங்க? யார் என்ன எழுதியிருக்காங்க? சும்மா சொல்லுங்க" என்றாள்.

"இல்லை, நீங்களே படித்துப் பாருங்களேன்."

அவளுக்குப் படிக்கத் தெரியாது என்று சொல்லிக்கொள்வதற்கு இந்த வயதில் வெட்கம்.

"கண்ணாடி போடாமே படிக்க வரதில்லே. இந்தா மோகனா, இதைப் படி" என்று சொல்லி மோகனாவைக் கூப்பிட்டுக் கடிதத்தைக் கொடுத்தாள் வடிவாம்பாள். மோகனா கடிதத்தைப் பிரித்தாள். மெதுவாகப் படித்தாள்:

"தில்லை நடராஜன் திருவருளால், கலைச்செல்வி திருமதி மோகனாம்பாளுக்கு ராமன் செட்டியார் எழுதிக்கொண்டது. இந்தக் கடிதம் தருபவர்கள் இலங்கையிலே ஒரு சீமான். சிற்றம்பலம் குமாரசாமி என்று சொன்னால் இங்குள்ளவர்கள் அனைவருக்கும் தெரியும். கடவுள் பக்தியிலும், கலைகளிலும் பெரிதும் ஈடுபட்டவர்; சிவ சிந்தை உடையவர். அவர்களுடைய ஊரில் கந்தசுவாமி கோவில் என்று ஒரு கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலுக்கு அவர்கள் ஈடுபட்டவர்கள். அதில் நீங்கள் வந்து நாட்டியம் செய்யவேண்டும் என்று அவருக்கு ஆசை. பண விஷயம் பெரிதல்ல, அதை அவர்களே பேசிக்கொள்வார்கள். யாழ்ப்பாணத்தில் நமது கடை இருக்கிறது. நானும் இங்குதான் இருக்கிறேன். தாங்கள் கோஷ்டியுடன் இங்கு வந்தால் எனக்கும் அவர்களுக்கும் ரொம்ப சந்தோஷமாக இருக்கும். வேணும், மற்றவை பின்" என்று கடிதத்தை மோகனா படிக்கப் படிக்க வடிவாம்பாளுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. வந்தவர் கோடீஸ்வரர் என்று அறிந்ததுமே அவளுடைய உள்ளத்தில் ஒரு புது எண்ணம் வரலாயிற்று. அதுவரை, யாரோ சும்மா வந்தவன் என்று எண்ணிக்கொண்டிருந்த வடிவாம்பாள், இப்பொழுது அதிக உபசாரத்தில் ஈடுபட்டாள்.

"நல்லாயிருக்கு போங்க. உங்க முகத்தைப் பார்த்தாலே தெரியுதே நீங்க பெரியவங்கன்னு. இதுக்காகக் கடுதாசு வேணுமா? ஆனா ராமன் செட்டியார் எழுதியிருக்காரு. அவர் அழகர் கோவிலிலே நல்ல மாதிரியா கவனிச்சுக்கிட்டாரு. உங்களுக்கு எந்த மாசம் கச்சேரி பண்ணணும்?" என்று கேட்டாள்.

"அம்மா, கொஞ்சம் இங்கே வாயேன்" என்று கூப்பிட்டுவிட்டு உள்ளே போனாள் மோகனா.

"என்ன கண்ணு?" என்று சொல்லிக்கொண்டே வடிவாம்பாள் உள்பக்கம் வந்தாள்.



"அம்மா, கச்சேரி எதுவும் ஒப்புக்கொள்ளவேண்டாம். எனக்கு மனசு சரியில்லே" என்று மோகனா கெஞ்சினாள்.

"இதைச் சொல்லத்தான் கூப்பிட்டியா? ஆகட்டும். இனிமே கேட்டுக்கிட்டு செய்யறேன்" என்று கோபமாகச் சொல்லிவிட்டு வெளியே வந்தாள் வடிவாம்பாள்.

"என்ன சொன்னாங்க?"

"'ரொம்ப சந்தோஷம்' அப்படீன்னு சொன்னாள். 'இலங்கையாக இருக்கே. போக வரவே பத்து நாளைக்கு மேலே ஆகிவிடுமே. ஒரு கச்சேரிக்கு இங்கிருந்து போனா, பத்துக் கச்சேரி கெட்டுப் போகுமே' அப்படீன்னு சொல்லுது."

"உண்மைதான். அதனால் பாதகம் இல்லை. அங்கேயே ஏழெட்டுக் கச்சேரிகள் நடக்கும். இங்கிருந்து இலங்கைக்கு வருபவர்கள் பத்து நாளில் திரும்பிவிட முடியாது. எங்கள் யாழ்ப்பாணத்தில் உங்கள் பிள்ளைக்கு ரொம்ப நல்ல பெயர் உண்டு. குறைந்தது இரண்டு மாதம் ஆகும்."

வடிவாம்பாள் மனத்தில் புது யோசனை ஒன்று ஓட ஆரம்பித்தது. 'இரண்டு மாதம் என்றால் இந்த ஊரை விட்டு இரண்டு மாதம் வெளியூருக்குப் போவதே நல்லது. இவள் மதராசுக்குப் போக வேண்டுமென்று துடிக்கிறாள். நாளை நம்மால் தடுக்க முடியாமல் போனாலும் போகலாம். பஞ்சையும் நெருப்பையும் பக்கத்தில் இருக்க விடாமல் பிரித்து வைத்துவிடுவதுதான் நல்லது' என்று நிச்சயமான முடிவுக்கு வந்தாள்.

"அதுவும் நிசந்தானுங்க. இந்த ஊரெல்லாம் ஒரு நிறுக யாராவது கப்பல்லே போயிட்டு வந்தாங்கன்னா, ஒரு கப்பல் நிறையப் பணம் கொண்டுக்கிட்டு வந்திருக்காங்கன்னு நினைச்சப்பாங்க. கண்டிக்குப் போவான் ஒருத்தன். இரண்டு சட்டையும் நாலு பொத்தானும் புதிதாக வாங்கிக்கிட்டு வருவான். அதைப் பார்த்தவுடனே கண்டிப் பணக்காரன், புதுப் பணக்காரன்னு சொல்லுவாங்க. உள்ளே பார்த்தா ஒண்ணும் இருக்காது. அந்த மாதிரி போயிட்டு வந்தா நல்லா இருக்குங்களா?"

"அதற்கெல்லாம் வழியுண்டு. எங்கள் நாட்டில் கலைக்கு ஆதரவு அதிகம். அதுவும் வடக்கத்தியார்கள் வந்தால்—"

"என்ன? வடக்கத்தியாரா?"

"ஆமாம். யாழ்ப்பாணத்துக்கு வடக்கேதானே இருக்கிறது தமிழ் நாடு. தமிழ்நாட்டிலிருந்து யாராவது வந்தால் ரொம்பப் பிரியம். என் கச்சேரிக்கு ஒப்புக்கொள்ளச் சொல்லுங்கள். பிறகு நானே, நாலு ஐந்து கச்சேரிகளுக்கு ஏற்பாடு செய்கிறேன்" என்றார்.

வடிவாம்பாள் கச்சேரிக்கு முதலிலேயே ஒப்புக்கொள்ளத் திட்டமிட்டுவிட்டாள். இருந்தாலும் அதை அவரிடம் சொன்னால்

பணத்தைக் குறைத்துவிடுவார் என்ற எண்ணத்தில், "இருக்கட்டும் நட்டுவனார் வந்திடட்டும். தேதியைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன்"

"ஏன், சமீபத்தில் ஏதாவது கச்சேரிகள் ஒப்புக்கொண்டு இருக்கிறீர்களா?"

"அது ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியுமா? நாளைக்குக்கூட நாகபட்டினத்திலே ஒரு கச்சேரி இருக்கு. அதுக்கு மறுநாள் திருவனந்தபுரத்திலே ஒரு கச்சேரி."

"அதனால் என்ன? ஒரு வாரம் கழித்துப் புறப்படலாமே! இது இருக்கட்டும் கையிலே" என்று சொல்லிவிட்டு, ஒரு உண்டியல் புத்தகத்தை எடுத்தார். அதிலே அவர் தொகையைப் போடும் பொழுது வடிவாம்பாள் மிகவும் கூர்மையுடன் கவனித்தாள்.

"பெயர் என்ன எழுதறது?"

"மோகனான்னு போடுங்க."

"அப்படி இல்லேம்மா, என் கையால் கொடுக்கிற முதல் உண்டியல். அன்றைக்குக் கிடைத்த பட்டத்தையே போட்டு விடுகிறேன்" என்று தில்லானா மோகனாம்பாள் என்று எழுதினார்.

"என்ன போட்டிருக்கிங்க?" என்று தொகையைக் கேட்டாள் வடிவாம்பாள்.

"தில்லானா மோகனாம்பாள் என்று போட்டிருக்கிறேன். அம்மா, இந்த உண்டியலைத் தஞ்சாவூர் ராமன் செட்டியார் கடையில் மாற்றிக் கொள்ளலாம். நாம் ஊருக்குப் போய்த் தேதி எழுதுகிறேன். ஒரு ஏழு எட்டுக் கச்சேரிகளுக்கும் ஏற்பாடு செய்கிறேன். இது அட்வான்ஸாக இருக்கட்டும். அங்கு வேண்டிய சன்மானங்கள் எல்லாம் நானே நேரில் செய்கிறேன்," என்று சொல்லிவிட்டு எழுந்தார். வடிவாம்பாளுக்கு அவர் அந்தக் காகிதத்தில் எவ்வளவு பணம் போட்டிருக்கிறார் என்பதைப் பார்க்கவேண்டுமென்று ஆசை. ஆனால், அதைப்பற்றி அவரிடம் ஒன்றும் கேட்காமல், "ஏதோ, வெளி ஊருக்கு வரோம். இங்கே நான் தவறினாலும் நாட்டியம் தவறாது. தகுந்த முறையிலே நீங்கள் சன்மானம் செய்யணும்" என்றாள்.

"மோகனா, ஐயா புறப்படறாங்களே" என்றவுடனே மோகனா வெளியே வந்தாள். தன் வருத்தத்தை அடக்கிக்கொண்டு மரியாதைக்காக அவரைக் கும்பிட்டாள். சிற்றம்பலம் குமாரசாமி புறப்பட்டு வெளியே சென்றார்.

"பட்டணத்துக்குப் போகணும்னியே பட்டணத்துக்கு போயிருந்தா, இந்தப் பணம் வந்திருக்குமா? இந்தா உன் பணந்தானே. எவ்வளவு போட்டிருக்குன்னு பாரு" என்று மோகனாவிடம் அதிகாரமாகக் கூறினாள் வடிவாம்பாள்.

"யாருக்கு வேணும் இந்தப் பணம்? நான் வேண்டாம் வேண்டாமென்கிறபோது நீங்கள் ஏன் கச்சேரி பேசுகிறீர்கள்?"



"ஆமாண்டி. கையிலே கிடைக்கிற சீதேவியைக் காலாலே எத்து வாங்களா? எவ்வளவு போட்டிருக்குன்னு பாரு. நூறு போட்டிருக்கப் போறாரு!"

"அதெல்லாம் இல்லே. இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் போட்டிருக்கிறார்" என்றாள் மோகனா.

வடிவாம்பாளுக்கு வாய் எல்லாம் பல். 'அச்சாரமே இரண்டாயிரத்தைந்நூறு' கொடுத்தால், கச்சேரிக்கு எவ்வளவு கொடுப்பாரோ?' என்ற ஆவல் ஏற்பட்டது. அந்த உண்டியலைக் கொண்டுபோய் அலமாரியில் வைத்துப் பூட்டினாள்.

"அலமாரியை ஏன் பூட்டறேள்? திறந்தே இருக்கட்டும்" என்று சொல்லிக்கொண்டே அப்போது நுழைந்தார் வைத்தி.

வடிவாம்பாள் திரும்பிப் பார்த்தாள். வைத்தியின் தலையைக் கண்டதும், குறும்பாகத் "திருடர்களுக்குப் பயந்துதான் பூட்டறேன்" என்றாள்.

அறுபத்து எட்டாம் அத்தியாயம்

## பணம் குவிகிறது; மனம் மறைகிறது!



இந்த உலகத்தில் வைத்திகூடத் தம்மை நல்லவர் என்றுதான் நினைக்கிறார். வடிவாம்பாளும் அப்படித்தான். ஆனால் இருவரும் தங்களைத் தவிர மற்றவர்கள் கெட்டவர்கள் என்று நினைக்கிறார்கள். அதனால்தான் வைத்தியின் தலையைக் கண்டதும், வடிவாம்பாள் "திருடனுக்குப் பயந்துதான் அலமாரியைப் பூட்டுகிறேன்" என்றாள்.

தம்மைத்தான் வடிவாம்பாள் திருடன் என்று சொல்கிறாளோ என்று வைத்தி திகைத்தார். ஆனால், திருடனைப் பார்த்து 'வைத்தி' என்று கூப்பிட்டால், அந்தத் திருடன் என்ன நினைப்பான் என்பதை வைத்தி யோசிக்கவில்லை.

குறும்பு பேசுவதற்கு அடிப்படை, கர்வம். கர்வத்திற்கு அடிப்படை, உயர்வு. இதற்கு அடிப்படை பெரும்பாலும் பணம். வடிவாம்பாள் கையில் இரண்டாயிரத்தைந்நூறு ரூபாய்க்கு உண்டியல் இருக்கையில் சும்மா இருப்பாளா? "என்ன வைத்தி, இந்நேரத்திலே?" என்று கூறிக்கொண்டே அலமாரியைப் பூட்டி, சாவிக்கொத்தை இடுப்பில் செருகிக்கொண்டு வைத்தியை வரவேற்றாள் வடிவாம்பாள்.

"இல்லே, இந்தப் பணத்தையும் வச்சுப் பூட்டுங்கோன்னு சொன்னேன்" என்று சொல்லி, பாரியூர் ஜமீன்தார் கொடுத்த இந்நூறில் நானூறு ரூபாயை வைத்தி வடிவாம்பாளிடம் கொடுத்தார்.

"இது எதுக்கு நானூறு ரூபாய்?"

"ஒரு கச்சேரி."

வடிவாம்பாள் தன் அதிர்ஷ்டத்தை நினைத்து ஆனந்தமடைந்தாள் 'நாட்டியப் போட்டியும் ஒரு நல்லதைச் செய்திருக்கிறது. போட்டியிட்டுக்கொண்டு பலர் கூப்பிட வருகிறார்கள்' என்று நினைத்தாள். இருந்தாலும் பிகு பண்ணினாள்.

"அதெல்லாம் முடியாது. நாங்க கொளும்புக்குப் போறோம்."

"கொளும்புக்குப் போனாலும் சரி, சோத்துக்குப் போனாலும் சரி. இன்றைக்கேயா புறப்படப் போறேள்? அதுக்கு இப்பவே ஏற்பாடு பண்ண ஆரம்பித்தாலும் இன்னும் பத்து நாளாவது ஆகுமே! இது பக்கத்து ஊர்க் கச்சேரிதான், சும்மா ஒத்துக்குங்க."

"சும்மாதானே? சரி, ஆடிட்டுப் போக" என்று சிரித்தாள் வடிவாம்பாள். "ஆமா, கையிலே நானூறு ரூபாயைக் கொடுத்துக் கச்சேரி பண்ணனுன்னு சொன்னா எப்படி அய்யா பண்ணறது? எந்த ஊர், என்ன விசயம்? அதெல்லாம் சொல்லுங்க. என்னமோ பவுண்டிலே அடைச்ச மாட்டுக்கு வைக்கோலைக் கண்ணுலே காட்டின மாதிரி, நாலு பச்சை நோட்டைக் கண்ணிலே காண்பிச்சுட்டா, ஆடுவாள் என்று நினைக்கிறீங்களா?" என்று கிண்டலாகப் பேசினாள். ஆனால், அவள் மனத்திலே இதே நானூறு, ஐந்நூறாக இருந்தால் இன்று அலமாரிப் பணம் மூவாயிரமாக இருக்குமே என்ற எண்ணமும் இல்லாமல் இல்லை.

"அதிராம்பட்டணத்துக்குப் பக்கத்திலே ஒரு கிராமம். அங்கே ஆடணும்."

"என்ன! அதிராம்பட்டணத்துக்குப் பக்கத்திலா? அங்கே கூடவா நம்ம கியாதி பரவிவிட்டது!"

"இங்கே செய்கிற ஒத்திகையை அங்கே போய்ச் செய்யலாம். பாவம், முத்திரை, 'அபிநயம்னு ஒரு பாவத்தையும் அந்தப் பட்டிக்காட்டிலே பாக்க மாட்டாங்க. 'எஸ்'ன்னு சொல்லுங்க."

"ஏன், பார்த்தால் என்ன? விட்டுக் குடுத்துடவா போறோம். ஒத்துக்கலாம். ஆனால், ஆள் எப்படியோ? சிங்கபுரம் கச்சேரிக்குப் போய் நாங்க பட்ட பாடு தெரியுமில்ல?"

"பாரியூர் ஜமீன்தார் அந்த மாதிரி ஆள் இல்லே."

"அவரா! அவரைப்பத்திதானே நேத்திக்குச் சொன்னீங்க?"

"ஆமாம், நேத்திக்கு என்னைப் பார்க்க வரேன்னு சொல்லி இருந்தார். அந்த இன்பர்மேஷனைக் கொடுத்தேன். இன்னிக்கு அவரே நேரில் வந்துவிட்டார்."



ஜமீன்தார் நேரில் வந்துவிட்டார் என்றவுடனே வடிவாம்பாள் சடக்கென்று ஆசனத்தை விட்டு எழுந்தாள். அவர் கோடி ரூபாய் பணத்தை வைத்துக்கொண்டு, என்ன செய்வது என்று தெரியாமல் விழிப்பதாக வைத்தி சொன்னது ஞாபகம் வந்தது. வைத்தி பக்கம் கோபத்தோடு திரும்பினாள்.

"என்னங்க வைத்தி, அவங்களை வெளியே காக்க வைச்சுப்பிட்டு நீங்க மட்டும் உள்ளே வந்திருக்கீங்களே?"

"இல்லே. அவரு இங்கே வரலே."

"ஏன்?"

"மானத்துக்குப் பயந்தவரு."

இதைக் கேட்டதும் வடிவாம்பாளுக்குச் சுருக்கென்றது.

"ஏன், மழை வந்திடும்னு பயப்படறாரோ?"

"ஆமா. அவருக்கு உப்பளம் பிஸினஸ், மழை பெய்தா ஆபத்துதானே?"

"என்ன ஐயா, ஜமீன்தாருங்கிறீங்க, உப்பளமுங்கிறீங்க, என்ன?"

"நமக்கு யாராயிருந்தா என்ன? உப்பு வித்த காசு கரிக்கப் போகுதா?"

"இப்போ எங்கே நாட்டியம் பண்ணணும்?"

"அவர் ஜமீன்லே, ஒரு மாரியம்மன் கோவில் கட்டியிருக்கிறாரு."

வடிவாம்பாள் கடகடவென்று சிரித்தாள்.

"மாரியம்மன் கோவிலா? என் மகளுக்குக் கரகம் ஆடத் தெரியாதே வைத்தி?" என்றாள்.

"கரகம்னா நாலு ரூபாயோடே போகும். உங்க அதிஷ்டம், அவர் நாட்டியந்தான் வேண்டுமென்கிறார். மனுஷன் என் ஜாகையிலேயே வந்து இருந்துக்கிட்டு, 'ஓய் வைத்தி, நீர் போய் பேசிக்கிட்டு வந்தால்தானாச்சு'ன்னு அட்வான்சு பணத்தையும் கையிலே குடுத்தனுப்பி இருக்காரு."

"அவங்க ஏன் இங்கே வரலே?"

"வெட்கப்படறாரு. நான் இப்போ அங்கே வரவேண்டாமுன்னு சொல்லிவிட்டார்."

எதைச் சாக்குவைத்து மோகனா வீட்டுக்கு வரலாம் என்று மற்றவர்கள் இருக்கும்போது, இந்த ஒரு மனுஷன் பணத்தைக் கொடுத்துவிட்டு, வேறொரு இடத்தில் இருக்கிறாரே. ரொம்பப் பெரிய மனுஷன் போலிருக்கிறதே என்ற எண்ணம் வடிவாம்பாளுக்கு உண்டாயிற்று. அதை வெளியே காட்டிக்கொள்ளாமல், "இந்தாங்க வைத்தி, அது வேண்டாமுங்க. உப்பளத்தில் போய் ஆடினா, கால் எல்லாம் உப்பு ஒட்டிக்கொள்ளும்."

"அட, உப்பிலேயா குதிக்கச் சொல்லப் போறாங்க லட்சம் ரூபா செலவிலே கோவிலைக் கட்டி, கும்பாபிஷேகம் பண்ணற மனுஷன் ஒரு ஜமுக்காளத்தை விரிக்க மாட்டானா? பேசாமே ஒப்புக்குங்க."

"ஆமா வைத்தி, ஆளைத் தெரியாமல் அட்வான்ஸ் வாங்கிப் பிட்டால்?"

"ஆளைத் தெரியட்டும், தெரியாமல் போகட்டும். எனக்குப் பணத்தை மோசம் செய்யப்படாது. அவ்வளவுதானே?"

"ஆமா, நாங்க நாட்டியத்தையும் ஆடிப்பிட்டு, பணத்துக்கு அவன் பின்னாலே ஆடப்படாது. தேதி எப்ப?"

"நாளைக்கு, நாளன்னைக்கு, நாலாம் நாள் இந்த மூணு நாளிலே எது சௌகரியம் சொல்லுங்க?"

"விடிஞ்சா கலியாணம், புடி பாக்கு வெத்திலேன்னா எப்படி ஐயா ஒத்துக்கிறது? நாளைக்குப் பட்டுக்கோட்டையிலே போயி ஆடி விட்டு, காலிலே கருவமுள்ளைக் குத்திக்கிட்டு வந்தா? ஆமாம் வைத்தி, பணம் எவ்வளவு?"

"ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் தந்துடறேன்கறாரு."

"அதை அவருகிட்டேயே வச்சுக்கச் சொல்லுங்க. இப்ப நாங்க அட்வான்சே இரண்டாயிரத்தைந்நூறு ரூபாய் வாங்கறோம், தெரியுமில்ல?"

"சரி வடிவாம்பாள் அம்மா, அதிராம்பட்டணம் இந்தா இருக்கு சாயங்காலம் போகலாம். ஆடிப்புட்டு ராத்திரியே திரும்பி வந்து விடலாம். கூட இருநூறு தரச் சொல்லறேன். ஆயிரத்தி எழுநூறு."

அந்த காலத்தில் நாட்டியத்துக்கு உயர்ந்த ரேட்டு ஐந்நூறு அறுநூறுதான் என்றாலும், வடிவாம்பாள் சாமர்த்தியத்தால் அதிகமாகக் கறந்து வந்தாள். அதிலும் இப்போது ஆயிரத்தெழுநூறு வரும்போது சும்மா இருப்பாளா? "சரி வைத்தி, பணத்தை முதலிலே கையிலே கொடுத்துடணும், நீங்க போய் மிச்சப் பணத்தையும் வாங்கிட்டு வாங்க" என்றாள் வடிவாம்பாள்.

"உங்களுக்கு எந்தத் தேதி சௌகரியம்? அதைச் சொல்லல்லியே?" என்றார் வைத்தி.

வடிவாம்பாளுக்கு ஒரு யோசனை வந்தது. இன்று காலை முதல் ஏதோ புதிதாக ஒரு யோகம் வந்திருப்பதாக அவள் எண்ணினாள். முத்துக்குமரன் பல்லைப் பார்த்தது முதலே, அவள் ஜாதகத்திலே ஒரு பெரிய மாறுதல் வந்திருப்பதாகத் தெரிந்தது. பணத்துக்கு மேல் பணம் குவிவதைக் கண்டாள். வரும் சமயத்தில் அதிருஷ்டத்தை விட்டுவிடக் கூடாதென்று தோன்றியது. ஆதலால் ஊருக்குப் போகுமுன் ஒரு முறை பரதேசியாரையும் பார்த்து, அந்தப் பச்சிலையைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆசை உண்டாயிற்று.

"நாளன்னைக்கு வச்சுப்போம்" என்றாள்.

வைத்தியும் சரியென்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

"இந்தாங்க வைத்தி, அந்த நானூறு ரூபாயைக் கொடுத்துவிட்டுப் போங்க."



"இல்லே, அந்த ஆயிரத்து முந்நூறையும் வாங்கிக்கொண்டு வந்துடறேனே!"

"நீங்க காலம்பர வருவீங்க. அதுக்குள்ளே, திருவிடமருதூரிலே ஒரு கச்சேரி வந்துதுன்னா, நான் ஒத்துக்கிறதா வேண்டாமா? எதுக்கும் அட்வான்ஸ் இருக்கட்டும்" என்று சொல்லி, வைத்தியிடமிருந்து நானூறு ரூபாயை வாங்கிக்கொண்டுதான், வடிவாம்பாள் அவனை அனுப்பினாள். வைத்தி போனவுடன், மறுபடியும் அலமாரியைத் திறந்தாள். அந்த இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாயோடு, இந்த நானூறு ரூபாயையும் போட்டு, வேறு ஒரு பெட்டியைத் திறந்து, அதிலிருந்து ஒரு நூறு ரூபாயை எடுத்து அந்தப் பழுக்கா மரவையில் மூவாயிரத்தையும் முழுசாக வைத்த பிறகுதான் அவளுக்கு நிம்மதி வந்தது.

அன்று இரவு வடிவாம்பாள் ஒரு கனவு கண்டாள். கொல்லையில் ஏதோ புதிதாக ஒரு செடி முளைக்கிறது. மோகனா அதை வெட்டி விடுங்கள் என்கிறாள். வடிவாம்பாள் வெட்டக்கூடாதென்கிறாள். அவள் கண் முன்னே அந்தச் செடி வளர்ந்து, மரமாகி, புஷ்பிக்கிறது. தங்கமலர்களைப்போல் சரக்கொன்றை மலர்ந்திருக்கிறது. அந்த மலர்களைப் பார்த்தால், தங்கத் தகட்டில் அடித்து மெருகேற்றி வைத்தது போல் தகதகவென்று பிரகாசிக்கின்றன. அப்போது ஒரு குயில் அதன்மீது வந்து அமர்ந்து கூவுகிறது. அதன் இனிமையான குரலைக் கேட்ட வடிவாம்பாள், "ஆகா! தங்க மரத்தின்மேல் உட்கார்ந்திருப்பதால்தானே இத்தனை இனிமையாகக் கூவுகிறது?" என்று நினைக்கிறாள், மகிழ்கிறாள். அந்தக் கொன்றைப் பூவையே பார்க்கிறாள். அப்போது அந்தப் பூ எல்லாம் காயாகிறது. அந்தக் காய்கள் நீண்டு கறுத்துத் தொங்குகின்றன. காற்றடிக்கும் போதெல்லாம் அந்தக் காய்களுக்குள்ளேயிருந்து கலகலவென்று சத்தம் கேட்கிறது.

வடிவாம்பாள் ஒருவரும் அறியாமல் போய் அந்தக் கொன்றைக் காய்களை உலுக்குகின்றாள். காய்கள் கீழே விழுகின்றன. விழுந்த வேகத்தில் வெடிக்கின்றன. உள்ளே இருக்கும் விதைகள் அவ்வளவும் முத்திரை போட்ட தங்கக்கட்டிகளாகச் சிதறி விழுகின்றன. அள்ளி வடிவாம்பாள் மடியில் கட்டிக்கொள்ளுகிறாள். தூக்க முடியாமல், தூக்கிக்கொண்டு வீட்டுக்குள்ளே வருகிறாள்.

அவள் வீடு அரண்மனையாக மாறுகிறது. எங்கு பார்த்தாலும் ரத்தினக் கம்பளங்கள் விரிக்கப்பட்டு இருக்கின்றன. அண்டா, செம்பு முதலிய பாத்திரங்கள் எல்லாம் வெள்ளியாக இருக்கின்றன.

கூடத்தின் நடுவிலே ஒரு அழகான ஊஞ்சல் போடப்பட்டிருக்கின்றது. அந்த ஊஞ்சலிலே ஒரு தேவ மங்கை உட்கார்ந்திருக்கிறாள். தெய்வப் பெண் ஆதலால், அவள் காலிலே தங்கக் கொலுசு போட்டிருக்கிறாள். அந்தத் தங்கக் கொலுசிலே வைர

மணிகள் தொங்குகின்றன. அவள் தலையிலே அணிந்துள்ள கிரீடத்தில் ஒரு வைரமணி தொங்குகிறது. எங்கு பார்த்தாலும் குளோபுகளும், லஸ்தர்களும் எரிகின்றன. அவை வீசும் ஒளிக்கதிரில் அந்தத் தேவ மங்கையின் உடம்பில் இருக்கும் வைரங்களும், சிவப்புகளும் பளபளவென்று டால் அடிக்கின்றன. வடிவாம்பாள் அருகில் வருகிறாள். அந்தப் பெண்ணைத் தொட்டுத் தன் கையை நெட்டிமுரித்துக் திருஷ்டி கழிக்கிறாள்! அந்த மகராசி வேறு யாருமில்லை, மோகனாதான்!

"மோகனா, கச்சேரிகளை ஒத்துக்காட்டி இவ்வளவு பணமும் வந்திருக்குமா?" என்று வடிவாம்பாள் கேட்கிறாள்.

"நீ சொன்னதுதான் அம்மா நிஜம். நான் அந்தச் சண்முகத்தை விட்டுட்டேன். அடேயப்பா, எவ்வளவு பணம்!" என்றாள் மோகனா.

"இன்னும் பாரு, எவ்வளவு பணம் சேர்த்து வைக்கிறேன்னு!"

"என்னம்மா, நீ மட்டும் பழம்புடைவையைக் கட்டிக்கிட்டிருக்கே, களஞ்சியத்தைத் திறந்து நீயும் கொஞ்சம் நகைகளை அள்ளிப் போட்டுக்கொள்" என்கிறாள் மோகனா.

"எனக்கு நீதான் நகை. எனக்கு நீதான் செல்வம்" என்று மகளின் முகத்தில் இருக்கும் வேர்வையைத் துடைக்கிறாள் வடிவாம்பாள்— உடனே மகளைக் காணோம்!—"மோகனா! மோகனா! ஐயோ, உனக்காகத்தானே இவ்வளவு பணமும் சேர்த்தேன்! நீ எங்கே போய் விட்டாய்? மோகனா, மோகனா" என்று அலறுகிறாள்.

இம்மாதிரி எத்தனையோ கனவுகளைக் கண்டே அன்றிரவைக் கழித்தாள் வடிவாம்பாள்.

அதிகாலையில் விழித்தெழுந்தாள். ஜன்னலின் வழியாக வெளியே பார்த்தாள். ஆகாயம் முழுவதும் மாணிக்கம் பதித்ததுபோலச் சிவந்து கிடந்தது. அதன் நடுவே பொன் நிறத்தில் சூரியன் உதயமானான்.

"ஐயோ, அத்தனையும் தங்கமாக இருக்கக் கூடாதா?" என்று எண்ணினாள் வடிவாம்பாள்.

ஆனால், அன்று சூரியன் உதித்த வேளை நல்ல வேளைதான். ஏனெனில், எட்டு மணிக்கே வைத்தி ரூபாயுடன் வந்தார். வடிவாம்பாள் கையில் பதினொன்று நோட்டுகளைத் தந்தார். இரண்டு முறை எண்ணினாள். ஏதோ தவறுதலாக நூறு ரூபாய் அதிகமாக தந்து விட்டாரோ என்று அவள் தன் யோசனையை ஓட்டினாள்.

"நூறு ரூபாய் போக வரச் செலவுக்கு" என்றார் வைத்தி.

"ஆமாம், கூட யாரு வராங்க?"

"ஜமீன்தார் கும்பாபிஷேக ஏற்பாடுகளைக் கவனிக்கணும்னு ராத்திரியே ஊருக்குப் போயிட்டாரு. அதிராம்பட்டணம் ஸ்டேஷனுக்கு வண்டி அனுப்பறேன்னு சொல்லி இருக்கார். சாயங்காலம் பாசஞ்சரிலே புறப்பட்டோம்னா, அங்கே ராத்திரி



ஒன்பது மணிக்குப் போயிடலாம். அப்புறம் நாலு மைல், நம்ம போய் கிராமத்திலே இறங்க வேண்டியது. ஆட வேண்டியது. காலை வண்டியிலே புறப்பட வேண்டியது. அவ்வளவுதான்."

"ஆமாம் வைத்தி, டிக்கெட் எல்லாம் வாங்கணுமே!"

"நான் டிக்கெட்டெல்லாம் வாங்கிக்கிட்டு ரயிலடியில் இருக்கிறேன். நீங்க சாயங்காலம் ரயிலடிக்கு வந்துடுங்க. வண்டி ஐந்து மணிக்குப் புறப்படறது" என்று சொல்லிவிட்டு, வைத்தி கிளம்பினார். வடிவாம்பாள் பரதேசியாரைச் சந்திக்கத் தயாரானாள்.

## அறுபத்து ஒன்பதாம் அத்தியாயம்

## பாண்டு மாஸ்டர் பங்காரு



பரமானந்தப் பரதேசியார் திருவாரூரில் உள்ள கல் தேருக்கருகில் அமர்ந்து மனு நீதிச் சோழன், தன் மைந்தனைத் தேர்க்காலில் கிடத்தியிருக்கும் அற்புதமான சிலையைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தார். அவருடைய மனதிலே பல எண்ணங்கள் ஓடின. இதோ ஒரு தந்தை, தன் மகனைத் தேர்ச்சக்கரத்தில் இடுகிறான். இது எதற்கு? தன் நீதியை நிலை நாட்ட. இதோ வடிவாம்பாள், தன் மகளைப் பணம் என்னும் உருண்டோடும் சக்கரத்தின் காலில் கிடத்துகிறாள். இது எதற்கு? தன் நீதியை நிலைநாட்ட பாவம், சோழன் நீதியைப் பெரிதாக நினைத்தார் என்று சிரித்துக்கொண்டார்.

"சாமி, கும்பிடறேனுங்க" என்ற குரல் கேட்டது. திரும்பினார். ஸ்ரீமதி வடிவாம்பாளே எதிரில் வந்து நின்றாள்.

அவளுக்குப் பக்கத்தில் அபரஞ்சி ஒரு தாம்பாளம் நிறைய ஏதோ வைத்து மூடிக்கொண்டு வந்திருந்தாள். வரதன் பயபக்தியுடன் நின்றான்.

"அடேடே, வடிவாம்பாளா! ஏது இப்படி வந்தது!"

"என்ன சாமி இப்படிக் கேக்கிறீங்களே! நேத்திக்கு ஏதோ அவசரத்திலே, வந்தவங்களுக்கு ஒரு பாலும் பழமுங்கூடக் கொடுக்காமே போகச் சொல்லிட்டேன். என் மனசு ராத்திரிக் கெல்லாம் பட்ட பாடு, எனக்குத்தான் தெரியும். காலையிலே எழுந்திருச்சதும் தேடி வந்தேன்" என்று சொல்லித் தன் கையிலிருந்த பால் பழம் எல்லாவற்றையும் எடுத்துப் பரதேசியாரின் பாதத்தில் வைத்துவிட்டு, காலில் விழுந்து நமஸ்கரித்தாள்.

இந்தக் கும்பிடு எதற்கு என்று பரதேசியார் யோசித்தார். அவள் கொண்டுவந்த தாம்பாளத்தைப் பார்த்தார். அதிலே நான்கு மாதுளம் பழங்கள் உடைத்து வைக்கப்பட்டிருந்தன. இரண்டு டஜன் வாழைப்பழங்கள் உரித்து வைக்கப்பட்டிருந்தன. ஆரஞ்சுப் பழங்களைச் சுளைக்கு மேல் இருக்கும் பூந்தோலைக் கிள்ளிக் கோதி எடுத்துச் சாப்பிடும் அளவுக்குப் பக்குவமாக வைக்கப்பட்டிருந்தன. ஒரு படி பசும்பாலை, கால் படியாகக் காய்ச்சி, அதிலே சீனாக் கல்கண்டு, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ போட்டு, வெள்ளிச் செம்பில் வைக்கப்பட்டிருந்தது. பரதேசியார் கடகடவென்று சிரித்தார்.

"எங்கே அம்மா கொண்டுபோகிறாய்? கமலாம்பிகைக்கா?"

"கமலாம்பிகைக்கு நம்ம கொடுத்தா ரொம்பப் போகுது? இல்லை சாப்பிடத்தான் போறாளா? உங்களைப் போலக் கண் கண்ட தெய்வத்துக்குக் கொடுத்து, நீங்க சாப்பிட்டீங்கன்னா ஒரு திருப்தி ஏற்படும். சாப்பிடுங்க சாமி, சாப்பிடுங்க" என்று சொல்லிவிட்டு, கையைக் கட்டிக்கொண்டு நின்றாள் வடிவாம்பாள்.

பரதேசியார் யோசித்தார்.

'பழங்களுக்கே ஐந்தாறு ரூபாய் செலவழித்து இருப்பாள் போலிருக்கிறதே. காரணமில்லாமல் வடிவாம்பாள் செலவு பண்ணமாட்டாளே' என்று எண்ணினார். "என்ன விசேஷம் வடிவாம்பாள், என்னைத் தேடிக்கொண்டு வந்து பிக்ஷை போடும் அளவுக்கு?"

"இல்லே சாமி. உங்க மாதிரி மகான் உலகத்திலே யாரு இருக்காங்க? அன்னிக்கு அந்தச் சண்முகம் சீக்கா கிடந்தானே, ஒரு மருந்துலே காப்பாத்தினீங்களே. இந்த டாக்டரு குழாயை வச்சு வச்சுப் பார்த்தாரே, காப்பாத்தினாரா?"

"சண்முகத்தைக் காப்பாத்தியதற்காகவா இப்போது விருந்து?"

"விருந்து ஒண்ணுமில்லிங்க. நீங்க நினைச்சா, இந்தப் பழமெல்லாம் பெரிசா? உங்க வாயாலே சொன்னா செடியே முளைக்கும், பழமே பழுக்கும். இந்தச் செம்பே தங்கமா மாறினாலும் மாறிடும். ஏதோ என் மனசுக்கு ஒரு ஆறாமை."

"அப்படியா? உனக்கு என்ன செய்ய வேண்டும்?"

இந்தக் கேள்வியைத்தான் வடிவாம்பாள் எதிர்பார்த்தாள். ரொம்ப பயபக்தியாக மேலாக்கை இழுத்துப் போர்த்திக்கொண்டு வினயத்துடன் உரைத்தாள்.

"பத்து வருசமா பல் வலிங்க. நானும் என்னென்னமோ எல்லாம் தேய்ச்சுப் பாத்துட்டேன். அது ஒண்ணுத்திலேயும் குணமாகலே."

"அடேடே, அப்படியென்றால் என்னிடம் முன்பே சொல்லியிருக்கக் கூடாதோ?"

"எதுக்கும் காலம், நேரம் ஒத்து வர வேண்டாமா சாமி? தேத்திக்கித்தான் ஞாபகம் வந்தது."



"ஏன், முத்துக்குமரன் ஏதாவது சொன்னானா?"

"ஆமாங்க. எப்பவும் பல்வலின்னு உட்கார்ந்து துடிச்சுத் தேத்திக்கு இ- இ- இன்னு சிரிச்சுக்கிட்டே பாடிக்கிட்டு இருந்தது."

பரதேசியார் திகைத்தார். சிரித்தும் விட்டானா என்று நினைத்தார்.

"உனக்குப் பல்வலி தீர்க்க வேண்டும். அதுதானே?"

"ஆமாங்க. நீங்க அந்தப் பச்சிலையை மாத்திரம் காண்பிச்சுடுங்க. போதும். மத்ததையெல்லாம் நான் பார்த்துக்கிறேன்."

"இரண்டு நாள் கழித்து வா, சொல்லுகிறேன்."

"ஐயோ, தாங்காதுங்க. பல்லைப் போட்டுக் குடையுது. பல்லுக்குள்ளே எல்லாம் ஏதோ ஊருகிற மாதிரி, யாரோ நடமாடறாப்பிலே தெரியுது."

"ஏதோ, இத்தனை நாள் பொறுத்துக்கொண்டுவிட்டாய்! இன்னும் இரண்டு நாள் பொறுத்துக்கொள்ளக்கூடாதா? பச்சிலையெல்லாம் நாள் கிழமை எல்லாம் பார்த்துப் பறிக்க வேண்டும்."

வடிவாம்பாள் விழித்தாள்.

"சாமி, இன்னிக்கே பார்த்துத் தந்தா நல்லா இருக்கும்" என்றான் வரதன்.

"ஏன்?" என்றார் பரதேசியார்.

"நாளைக்கு நாங்க வெளியூருக்குப் போறோம்" என்றாள் வடிவாம்பாள்.

"எங்கே, பட்டணத்துக்கா?"

"இல்லிங்க, அதிராம்பட்டணத்துக்கு" என்றான் வரதன்.

அதிராம்பட்டணத்துக்குப் போகிறோம் என்று கேட்டவுடனே பரதேசியார், அங்கே 'முஸ்லிம் அன்பர்கள் வீட்டில் கலியாணம் இருக்கலாம். அவர்கள் இந்து முஸ்லிம் என்ற வித்தியாசமில்லாமல் கலந்து வாழுகிறவர்கள். ஆதலால் மோகனாவின் கச்சேரிக்கு அங்கு ஏற்பாடு செய்திருக்கலாம்' என்றுகூட நினைத்தார். இருந்தாலும் இப்போது அவர்கள் வெளியூருக்குப் போவதை அவர் விரும்பவில்லை. ஆதலால், விஷயத்தை நன்றாகப் புரிந்துகொள்ள எண்ணினார்.

"அதிராம்பட்டணத்திலே என்ன கச்சேரி?"

"அதிராம்பட்டணத்திலே இல்லீங்க! அந்த வரதனுக்கு ஒண்ணும் தெரியாது. பக்கத்திலே ஐந்து மைல் தள்ளி பாவியூருன்னு ஒரு கிராமம் இருக்குது."

"பாவியூராவது, புண்ணிய புரியாவது! அங்கே என்ன விசேஷம்?" என்றார்.

"யாரோ புண்ணியவான் கோவில் கட்டிக் கும்பாபிஷேகம் பண்ணறாங்களாம். சாமி காரியம், சரின்னு ஒத்துக்கிட்டோம். பணமா

பெரிசுங்க. கொஞ்சம் பக்தியும் இருக்கணும் பாருங்க" என்று குழைந்தாள் வடிவாம்பாள்.

பரதேசியாருக்குச் சிந்தனை எங்கேயோ சென்றது. மற்ற விஷயங்கள் அவருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் ஊர் ஊராகச் சென்று, திருத்தலங்களை சேவித்துக்கொண்டே இருப்பவராதலால் 'எங்கே கோவில் கட்டுகிறார்கள், எங்கே கும்பாபிஷேகம் செய்கிறார்கள்?' என்பது அவருக்குத் தெரியாமல் இருக்காது. 'யாரு மேளம், யாரு சதிர்?' என்று ஊரெல்லாம் பேசப்படும் நிகழ்ச்சி அது. அப்படி உள்ள ஒன்று, ரகசியமாக நடக்கிறதே என்று எண்ணினார் பரதேசியார்.

"ம்... எவ்வளவு பணம் பேசியிருக்கே?"

"என்னமோ, நூறு, இருநூறு கொடுப்பாங்க!"

"யாரு வந்து பேசினார்கள்? நம்பிக்கையான இடந்தானா?"

"அதைப்பத்திக் கவலை ஒண்ணும் இல்லீங்க. பணத்தை முன்னாலேயே கொடுத்துட்டாங்க" என்று வாய் தவறிச் சொன்னாள் வடிவாம்பாள்.

பரதேசியார் சிரித்துக்கொண்டார். 'அவளுக்கு முதலில் பணந்தான் ஞாபகம் வருகிறதே தவிர, தன் பெண்ணின் ஞாபகம் வரவில்லையே' என்று வருந்தினார்.

"நேற்றைக்கு மோகனாவைப் பார்த்தேனே, அவள் சொல்லவில்லையே!"

"நேத்து ராத்திரிதானே நிச்சயம் ஆச்சு. காலம்பரதான் அச்சாரம் கொடுத்தாங்க. நாளைக்குக் கச்சேரி. அதிருஷ்டம் வந்தா அப்படித்தானுங்க வரும். நேத்திக்கு சாமி, வீட்டுக்கு வந்து காலடி எடுத்து வச்சுது. கச்சேரி கூடவே வந்தது" என்றாள் வடிவாம்பாள்.

"ரொம்ப சரி, ஜாக்கிரதையாகப் போய்விட்டு வா."

"பச்சிலை விசயம் மறந்துவிடப்படாதுங்க!"

"நிச்சயம் நான் பார்த்து வைக்கிறேன். நீ போய் வா" என்றவுடனே வடிவாம்பாள் அதிருப்தியுடன் அவரை மூன்று சுற்றுச் சுற்றி ஒரு முறை கும்பிட்டாள்.

"நான் இப்பவே நீங்க பச்சிலை கொடுப்பீங்கன்னு நம்பிக்கிட்டு வந்தேன்."

"அதைவிட இன்னும் எவ்வளவோ பெரிய காரியங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆமா, நீங்கள் எப்பொழுது புறப்படுகிறீர்கள்?"

"சாயங்காலம் அஞ்சு மணி வண்டிக்கு" என்று சொல்லி வீட்டுக்குப் புறப்பட்டாள் வடிவாம்பாள். அவள் போகும் வரையில் பார்த்துக்கொண்டே இருந்தார் பரதேசியார்.

"அதிராம்பட்டணத்துக்கு ஐந்து மைல் தள்ளி, நாளை இரவில் பயணம், கூட்டமில்லாமல் கும்பாபிஷேகம்" என்று அவர் வாய்



முணுமுணுத்தது. வடிவாம்பாள் கொடுத்த பொருள்களை வீதியில் விளையாடிய குழந்தைகளிடம் கொடுத்துவிட்டு அவசரமாக எங்கோ சென்றார்.

அன்று பயணத்தில் மோகனாவுக்கும் வரதனுக்கும் இஷ்டமில்லை. ஆனால், வேறொரு காரணத்தால் முத்துக்குமார நட்டுவனாருக்கும் இஷ்டமில்லை. அவரே வாயைத் திறக்காமல் இருக்கும்போது, தங்கப்பல் என்ற காரணத்தால் திருடனுக்குப் பயப்படுகிறார் என்று நாம் சொல்வது தவறு.

வரதனோ முதலில் ஒரு காரணம் சொன்னான். "அம்மா, மிருதங்கத்திலே சோறு இல்லீங்க; கதியே சேரமாட்டேங்குது" என்றான். 'அந்த ஊருக்குப் பாதகமில்லை" என்றுவிட்டாள் வடிவாம்பாள். கடைசியில் "சீப்பு இல்லாட்டி கல்யாணம் நிக்குமா?" என்று உறுதியாய்ச் சொல்லிவிடவே, வரதனும் புறப்படச் சம்மதித்தான்.

வயதானவர்களுக்குப் பிடிவாதம் வராது. வந்தாலோ போகாது. ஆகவே, அம்மாளுடன் தகராறு வைத்துக்கொள்ள மகள் விரும்பவில்லை. இந்தச் சமயத்தில் கடைசி அஸ்திரமாக வரதன் ஒரு அஸ்திரத்தை வீசினான்.

"ஏம்மா, கொஞ்சம் இப்படி வாங்க" என்று வடிவாம்பாளைத் தனியாய் அழைத்தான். வடிவாம்பாள் "என்னடா ரகசியம்" என்றாள்.

"ஆமா, வீட்டைத் தனியாய்ப் போட்டுட்டுப் போறோமே" என்றான் வரதன்.

"பின்னே என்ன, அதையுமா தலையிலே தூக்கிக்கிட்டுப் போவாங்க?"

"இல்லே, வைர அட்டிகை களவு போனதிலே இருந்து எனக்கு இந்த வீட்டிலேயே பயமுங்க."

வடிவாம்பாள் சற்று யோசித்தாள். வரதன் அற்ப சந்தோஷம் அடைந்தான். ஆனால், அந்தக் கெட்டிக்காரியோ அவ்வளவு நகைகளையும் ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டினாள். மடப்புரம் முதலியார் வீட்டுக்குப் போய், இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டச் சொன்னாள். புறப்பட்டுவிட்டாள்.

ரயிலடிக்கு வடிவாம்பாள் வரும்போது, நாலேமுக்கால் மணி இருக்கும். வரதன் முயற்சிகள் பிரயோசனமின்றிப் போனதால் அவன் முகத்தில் களையே இல்லை. ஆனால் மோகனாவின் முகத்தில் எவ்விதமான உணர்ச்சியும் தெரியவில்லை.

நான்கு நாளைக்கு முன்தான் லட்சக்கணக்கான கூட்டத்தின் நடுவில் மோகனா ஆடினாள். அப்போது மக்கள் பார்த்திருந்தாலும் மறுபடியும் இப்போது அவளை ரயிலடியில் கண்டதும் மக்கள் கூட்டம் கூடிவிட்டது.

ரயில் பிளாட்பாரத்தில் மோகனா வந்ததும், வைத்தி ஓடி வந்து "என்ன மோகனா, ஏன் இவ்வளவு நேரம்?" என்று கூட்டத்தின் நடுவில் உறவு கொண்டாட ஆரம்பித்தார். ஆனால் விருப்போ வெறுப்போ எதையும் முகத்தில் காட்டாமல், காதில் ஏதும் விழாதவள் போல் நின்றாள் மோகனா.

அவர்களுக்காகப் போட்டிருந்த வண்டியை நோக்கி நடந்தார்கள். வைத்தி இங்கும் அங்கும் பார்ப்பதும், யாரேனும் பணக்காரர்களைக் கண்டால், "என்ன சௌக்கியமா? கொஞ்சம் அவசரம். அதிராம் பட்டணம் வரையில் போகிறேன். நம்ம மோகிக்கு ஒரு கச்சேரி" என்று தாமே சொல்லுவதுமாக வண்டியை நெருங்கினார். அப்போது அவரைப் பார்த்து ஒருவர் கும்பிடு போடவே வைத்தி அயர்ந்து நின்றார்.

"கும்பிடறேனுங்க. எசமானும் இந்த வண்டியில்தானா போறீங்க?" ஆள் பயபக்தியுடன் கேட்டார். வைத்தி அந்த ஆளை முறைத்துப் பார்த்தார். அந்த ஆசாமியின் தலையில் குல்லாயும் காதில் கடுக்கனும் உடம்பில் வெள்ளைக் கோட்டும், வெள்ளை நிசாரும், சரிகை வேலைகளையும் பார்த்தவுடன் அவர் யாரோ பியாண்டுக்காரர் என்பதை வைத்தி புரிந்துகொண்டார். ஆனால், அந்த ஆள் யார் என்பதை அவர் புரிந்துகொள்ளவில்லை.

இருந்தாலும் நீங்கள் யார் என்று எப்படிக் கேட்பது? கேட்டால் ஒரு கும்பிடு நஷ்டமாகிவிடுமே.

இந்த மாதிரி நிகழ்ச்சிகள் எல்லாருக்கும் ஏற்படுவது உண்டு. நாம் வீதியில் போய்க்கொண்டிருப்போம். நம்மைப் பார்த்து ஒருவர் கும்பிடுவார். அவரிடம் போய் "எனக்கு உம்மைத் தெரியவில்லையே நீர் யார்?" என்று கேட்க முடியுமா? அவ்வளவு உண்மையோடு இருந்தால் உலகத்தில் உப்பு உறைப்பேது? பதிலுக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு அசட்டுச் சிரிப்புடன் அந்த இடத்தை விட்டே போய் விடுவோம். ஆனால், வைத்தி ஒரு மாதிரியான வியாபாரி. அவர் வியாபாரத்துக்கு எல்லோரும் அவருக்கு வேண்டும்.

ஆதலால் கும்பிட்டவரைத் தெரிந்துகொள்ளாமலே தெரிந்தவர் போல் பேச ஆரம்பித்தார். "என்ன சௌக்கியமா? ஆமா நீ..." என்று ஞாபக மறதிபோல் இழுத்தார்.

"ஆமா, நான்தான்."

"அட, அந்த அவுரு"

"ஆமாங்க, அவர் மகன்தானுங்க நான்" என்று கூறிவிட்டு வைத்தியின் முகத்தைப் பார்த்தார். ஆனால், வைத்தியோ வடிவாம்பாள் முகத்தைப் பார்த்தார்.

அதற்குள் அந்தப் பாண்டுக்காரர் வைத்தியிடம் காரியம் ஆக வேண்டியவர் ஆதலால் "அவடத்துக்கு மறதி போலே இருக்குது



எத்தனையோ அலுவல் நான்தான் தஞ்சாவூர் ஹார்மோனிஸ்ட் முத்துக் கிருஷ்ண நாயுடு மகன்."

"அடடே, நம்ம முத்துக்கிருஷ்ணன் மகனா? அதுதானே பார்த்தேன். எங்கே புறப்பட்டுட்டீங்க? தியாகராஜ உத்சவமா?" என்று ஒரு போடு போட்டார் வைத்தி.

"அது இப்ப எங்கே, ஏப்ரலில் இல்லே வரும்?" என்று மறு போடு போட்டார் பாண்டுக்காரர்.

"ஆமா, எங்கே புறப்பட்டே?"

"இந்த ரயிலிலேதான் வரோம். எல்லாம் எஜமானோட தயவுதான்."

"அட, பாரியூருக்கா?"

"ஆமாங்க."

"என்ன ஆமாங்க? பாரியூர்னு சொல்லு."

"ஆமாங்க."

"அதுக்கும் ஆமாங்கதானா? அடேயப்பா, ரொம்பச் செட்டிக்காரனுங்க 'ஆமா, ஆமா'ன்னு சொல்லியே புழைச்சிடுவீங்க முத்துக்கிருஷ்ணா, நீ புழைச்சுக்குவே."

"அது எங்க நாயனா பேருங்க. நா பேரு பங்காருங்க."

"என்ன, பங்காருவா! பாரியூரிலே உங்க பியாண்டா?"

"என்னங்க, இப்படிச் சொல்றீங்க? நீங்கதானே ஜமீன்தார் அய்யா கிட்டச் சொன்னீங்களாம்?"

சும்மா கிடைக்கிற கவுரவத்தை வைத்தி விடுவாரா? "ஆமாம், யாரைப் பேசலாம்னு கேட்டார். நான் உங்க அப்பா பேரைச் சொன்னேன். ஆமா, நீ தஞ்சாவூரிலே ஏறவேண்டியவன், திருவாரூரிலே எங்கே வந்தே?"

"இங்கே அம்மையப்பனிலே ஒரு சேவுகம். அய்யா தயவு இருக்கணும்."

"என் தயவுக்கென்ன? வண்டி வண்டியா இருக்கு. நீ வண்டியை விட்டுவிடாதே" என்று வைத்தி சொல்லவே பாண்டு மாஸ்டர் பங்காரு, வண்டியை நோக்கிப் போனார்.

'தஞ்சாவூர் முத்துக்கிருஷ்ணனா? அப்படிக் கேள்விப்பட்டதே இல்லியே' என்று யோசித்துக்கொண்டே நின்றார் வைத்தி. ரயில் ஊதியது. பியாண்டுக் கோஷ்டியினர் மோகனாவின் வண்டிக்கு இருபுறமும் உள்ள, மூன்றாவது வகுப்பு வண்டிகளில் ஏறிக் கொண்டனர். தாயின் பணத்தாசை தாங்காமல் மகள் பெருமூச்சு விட்டாள். ஆனால், அந்த ரெயில் எஞ்சினோ ஓடி அயர்ந்த காளை போல அனல் மூச்சு விட்டுக்கொண்டே புறப்பட்டது.

## சென்னையில் சண்முகம்



திருவாரூரை விட்டுப் புறப்பட்டுச் சென்னை வந்து சேர்ந்தான் சண்முகம். சென்னைக்கு அவன் வருவதாகச் சிங்கபுரம் மைனர், ராவ்சாகிப் பொன்னம்பலத்தா பிள்ளைக்குத் தந்தி கொடுத்திருந்தார். ஆதலால் பொன்னம்பலத்தாபிள்ளை தம் பீட்டனையும், செக்ரடரியையும் எழும்பூர் ஸ்டேஷனுக்கு அனுப்பியிருந்தார்.

ரயிலை விட்டு இறங்கியதும் சண்முகத்தை ஜாக்கிரதையாக அழைத்துக்கொண்டு போய், பூந்தமல்லி ஹைரோட்டில் அப்பொழுது பிரபலமாக இருந்த ஒரு டாக்டரிடம் காட்டினார்கள். அந்த டாக்டர் கைராசிக்காரர். அவர் தொட்டாலே ஆறாத புண்கள் எல்லாம் ஆறிவிடும். ஆனால் அந்த டாக்டர் பணத்தை மாத்திரம் தொடுவதில்லை.

பணத்தைத் தொடுவதில்லை, கேசையும் விடுவதில்லை. வைத்திய சாஸ்திரத்தின் மதிப்பை, ஆபத்தான கேசுகளை எடுத்துக்கொள்வதன் மூலம் உயர்த்தி வந்தார். அந்த டாக்டர் சண்முகத்தைப் பார்த்தவுடன் சற்று யோசித்தார்: "நான் சீட்டுக் கொடுக்கிறேன். அந்தச் சீட்டை எடுத்துக்கொண்டு போய்ப் பெரிய ஆஸ்பத்திரியில் இவரைச் சேர்த்து விடுங்கள்" என்று பெரிய ஆஸ்பத்திரிக்கு ஒரு கடிதம் கொடுத்து அழைத்துப் போகச் சொன்னார்.

பாவம், பெரிய ஆஸ்பத்திரிக்கு வந்ததும் தருமனும் முத்துராக்குவும் தனித்துவிட்டார்கள். டாக்டர்கள் பக்கமே அவர்கள் நெருங்க முடியவில்லை. முகத்தைப் பார்த்தும் புரிந்துகொள்ள முடியவில்லை. எல்லாம் மூடு மந்திரமாக இருந்தது.

"இதென்ன அண்ணே, வம்பாய்ப் போச்சு. இந்த டாக்டர்கள் கிட்ட ஒரு வார்த்தை கேட்பம்னா வாயைத் துணி போட்டுக் கட்டிக்கிட்டிருக்காங்க" என்று அங்கலாய்த்தான் தருமன்.

இந்நிலையில் தடதடவென்று ஏழெட்டு ஆள்கள் சண்முகத்தின் அறையில் நுழைந்து, அவனைக் கால்முதல் தலைவரை போர்த்தி 'ஸ்ட்ரெச்ச'ரில் தூக்கிப் போவதைப் பார்த்த தருமன் நடுங்கியே விட்டான்.

பெரிய டாக்டர் வந்து சேர்ந்தார். செய்ய வேண்டிய வேலைகள் செய்யப்பட்டன. காயத்தைப் பார்த்தவுடன், "ஆபத்து அதிகமில்லை. ஆனால் காயம் ரொம்ப ஆழமானது" என்றார். அதற்கான சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்தார். அப்போது சண்முகம், நாத்தழுதழுக்கப்



பின்வருமாறு வேண்டிக்கொண்டான்: "நான் இறந்தாலும் பாதகம் இல்லை. ஆனால், என் கையை வெட்டிவிட்டு என்னை உயிருடன் விடாதீர்கள்" என்று அவன் சொல்லவே, அந்த டாக்டர் "உங்கள் கையை எடுக்க வேண்டி வராது. உங்கள் சங்கீதத்தைக் கேட்டு இந்த உலகமே உங்களுக்குக் கை எடுக்கும்" என்று ஆறுதல் சொன்னார்.

நல்ல உடற்சத்து அளிக்கும் ஊசி மருந்துகளும், சேதமான ரத்தத்திற்குப் பதிலாகப் புது ரத்தமும் ஏற்றும்படி உத்தரவிட்டார். சண்முகத்தின் அறையிலேயே பிறகு சிகிச்சைகள் நடைபெற்றன.

உடம்பு மாத்திரம் சௌக்கியமாக இருந்தால் ஆஸ்பத்திரி வாழ்க்கையைப் போல் இனிமையானது வேறு ஒன்றுமில்லை. ஆனால் அந்தப் பாழும் ஆஸ்பத்திரியில் உடம்பு நன்றாக இருந்தால் தான் உள்ளே சேர்க்க மாட்டார்களே! ஆஸ்பத்திரியில் சண்முக சுந்தரத்துக்கு என்று ஒரு தனி அறையும், அவன் உதவியாளர்கள் தங்குவதற்கென்று ஒரு தனி அறையும் ஸ்பெஷல் வார்டில் கொடுக்கப்பட்டிருந்தன. அங்குள்ள அத்தனை டாக்டர்களும் நர்சுகளும் அவனை மிகவும் அன்போடு கவனித்துக்கொண்டு வந்தார்கள். எப்பொழுதும் அவனைச் சுற்றி டாக்டர்களும் நர்சுகளும் ஒரு கூட்டம் இருந்துகொண்டே இருந்தது. தருமனுக்கும் முத்துராக்குவுக்கும் அவனோடு பேசவே நேரம் கிடைப்பது அரிதாக இருந்தது. அதோடு தருமனுக்கு மற்ற எல்லா சௌகரியங்களும் அங்கு இருந்தாலும், முக்கியமான ஒரு சௌகரியம் அங்கு இல்லை. தருமன் அடிக்கடி வெற்றிலை பாக்கு புகையிலை போடுவான். அவற்றைப் போட்டுக்கொண்டால் உமிழ்வதற்குக் கீழே இறங்கிப் போக வேண்டும். வெற்றிலை துப்புவதற்கோ நாள் ஒன்றுக்கு முப்பது நாற்பது தடவை மேலுக்கும் கீழுக்கும் நடந்து வந்தான். போதாததற்கு அந்தக் கட்டடத்திலே உட்கார்ந்து அவனுக்குச் சலிப்பு ஏற்பட்டு விட்டது! திடீரென்று முத்துராக்குவிடம், "அண்ணே, கண்ணே எரியுது அண்ணே!" என்றான்.

"ஏன், என்னெனைத் தேய்ச்சுக்கிட்டு நானாச்சே?"

"இல்லே தவுல்காரரே. இந்தப் பியால் காத்து நமக்கு ஒத்துக்கலே."

"அப்படின்னா, தாவாரத்திலே போய் நிக்கிறதுதானே?"

"அங்கே யாராவது நாகங்க குறுக்கேயும் நெடுக்கேயும் போயிக்கிட்டு இருக்காங்க. என்னைக் கண்டதும், மஞ்சி விரட்டு மாடு சாயச் சேலையைப் பார்க்கிற மாதிரி வெறிச்சுப் பாக்கறாங்க."

"நீங்க ரொம்ப அழகா இருக்கீங்களேன்னு பாக்கறாங்க போல இருக்கு."

"அது இல்லே அண்ணே, குடுமித் தலையைக் கண்டாலே அவங்களுக்கு ஒரு கேலி."

"அது மாத்திரமல்ல அண்ணே உன் கழுத்துலே கவுடு, நீ பனியனை மாத்திரம் போட்டுக்கிட்டு நிக்கிறது. இதெல்லாம் அவங்களுக்கு அழகா தெரியுது"

"சரி, கொஞ்சம் வெளியே போய்விட்டு வருவோம், வரீங்களா? நாளைக்குத் தம்பி எழுந்திரிச்சதுன்னா, நம்மை ஒரு பக்கமும் போக விடாது. நமக்கு இப்போதுதான் சான்ச" என்றான் தருமன். இருவரும் சண்முகத்தின் அறைக்குள் வந்தார்கள்.

"என்ன தருமண்ணே?" என்றான் சண்முகசுந்தரம்.

"என்ன தம்பி, உனக்கு ரொட்டிகிட்டி ஏதுனாச்சும் வாங்கணுமா?" என்றான் தருமன். அதற்குள் சண்முகத்தின் அருகில் இருந்த நர்ஸ் மேரி, "அதெல்லாம் ஆஸ்பத்திரியிலே கொடுப்பாங்க. உங்க அழுக்குப் புடிச்ச கையாலே நீங்க ஒண்ணும் வாங்கிக்கிட்டு வர வேண்டாம்" என்றாள்.

"எது அம்மா அழுக்குப் புடிச்ச கை? இது ஒத்து நாயனம் புடிச்ச கை. அது தவுல் புடிச்ச கை. ஏதோ வைத்தியம் பாத்துக்க வந்தால் தம்பியை உங்களுக்கேவா தத்தம் பண்ணிட்டோம்!" என்றான் தருமன்.

ஆனால் சண்முகசுந்தரம், "என்ன தருமண்ணே, இங்கே அடைச்சுக் கிடக்கிறது சிரமமாக இருக்குதா?" என்றான்.

ஏது சண்முகங்கூட நம்மைத் தானே விரட்டப் பார்க்கிறான் என்று தருமன் முதலில் திகைத்தான். பிறகு, "சிரமம் ஒண்ணுமில்லை தம்பி. இங்கே பொழுதே போகல்லே. தவுல்காரருக்கு ஏதோ வெத்திலைபாக்கு வாங்கணுமாம்" என்றான்.

"பின்னே, வாங்கிக்கிட்டு ஊரைச் சுத்திப் பாத்துக்கிட்டு வாயேன். இந்தா, சட்டைப் பையிலிருந்து பணம் எடுத்துக்கிட்டுப் போ" என்றான் சண்முகசுந்தரம்.

"பணத்துக்கு என்ன இப்போ" என்று சொல்லிக்கொண்டே இருபது ரூபாயை எடுத்துக்கொண்டு தருமன் கிளம்பிவிட்டான்.

படி இறங்கும்போதே, "பாத்தீங்களா தவுல்காரரே, பணம் காக வேணும்னாலும் தரேன். இங்கே நிக்காதேன்னுதானே அர்த்தம்" என்றான் தருமன்.

"சே, அதெல்லாமில்லே, தருமண்ணே. உங்க மேலே நாயனக்காரருக்கு ஒரு தனி அபிமானம்."

"உம்" என்ற பெருமூச்சு விட்டான் தருமன்.

இருவரும் ஜெனரல் ஆஸ்பத்திரியின் வாசலுக்கு வந்தார்கள். அப்பொழுது கணகணவென்று மணி அடித்துக்கொண்டே, ஒரு டிராம் கார் வந்தது. உடனே தன்னை மறந்து மேல் வேஷ்டியை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு கும்பிட்டான் தருமன்.

"என்ன அண்ணே, கோவில்னு பாத்தியா?" என்றார் முத்துராக்கு.

தருமன் தன் தவற்றை உணர்ந்தான். இருந்தாலும் சும்மா இருப்பானா? "அதோ தெரியுது பாருங்க கோபுரம், அது கோவில்



அதைப் பார்த்துத்தான் இந்த வண்டி, மணி அடிக்குது" என்று சென்டிரல் ஸ்டேஷனைக் காண்பித்துச் சமாளித்தான்.

"தவுல்காரரே, அது என்ன வண்டி தெரியுமா?"

"டிராம் காரு"

"டிராம் காரு இல்லே அண்ணே. சரியாகச் சொல்லுங்க டிராமா காரு—"

"இல்லே தருமண்ணே, டிராம் காருதான். இல்லாட்டி தகரத்திலே தட்டின மாதிரி 'டாங் டிடங்'னு சத்தம் போடுமா? அண்ணே, இந்தக் காரிலே ஒரு நாளைக்கு ஊரெல்லாம் சுத்திப் பாக்கணும். ஞாயித்துக்கிழமை பாதி ஸார்ஜுதாம்" என்றார் முத்துராக்கு.

அப்பொழுது "என்னா ஸாமி, வரியா?" என்று ஒரு குரல் கேட்டது.

அவர்கள் மேல் உரசிக்கொண்டே ஒருவன் ரிக்ஷாவை வைத்தான். அவர்களை ஏற இறங்கப் பார்த்தான் தருமன். இந்த ஊருக்கு வரும் முன்பே ரிக்ஷாக்காரர்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறான் போலும். ஆதலால் ரொம்பவும் கெட்டிக்காரத்தனமாகப் பேசினான்.

"என்னய்யா ரிக்ஷாக்காரரே, எங்களை ஏச்சுட முடியாது. நாங்கல்லாம் பட்டிக்காட்டான்தானே, பணத்தை அதிகம் வாங்கிடலாம்னு நினைக்காதே. நான் கொடுத்தாலும் கொடுத்துடுவேன். எங்க அண்ணன் தவுல்காரரு கொடுக்கமாட்டாரு."

"எங்கே நயினா போவணும்?"

"சத்தத்தை ஒழுங்கா கேட்டியானா, இடம் சொல்றேன்."

"எடத்தைச் சொன்னாத்தானே துட்டுக் கேழ்க்கலாம். ஸாய்ஸா சொல்லு நாயினா?"

"எங்களுக்கு மோர் மார்க்கட்டுக்குப் போகணும்" என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னான் தருமன். இதோ எதிரே இருக்கும் மூர் மார்க்கெட்டுக்கு ரிக்ஷாவிலே போகவேணும் என்று சொல்றானே என்று ரிக்ஷாக்காரன் சற்று யோசித்தான். அதற்குள் தருமன் முந்திக்கொண்டான்.

"என்னய்யா யோசிக்கிறே? மூணு மைல் இருக்குது. நாலு மைல் இருக்குதுனு பொய் சொல்லி வாடகையைக் கறந்துடலாம்னு பாக்கிறியா? நான் ஏமாந்தவன் இல்லே."

"சரி நாயினா, நீ கொடுக்கிறதைக் கொடு."

"ஹாய்ம், அதெல்லாம் முடியாது. கண்டிப்புன்னா கண்டிப்புதான். எட்டணா தர்றேன். சம்மதமா?" என்றான் தருமன். ரிக்ஷாக்காரனுக்கு தூக்கி வாரிப் போட்டது.

"என்ன ஸாமி வெள்ளாட்றியா?"

"வெள்ளாடும் இல்லே, செம்மறி ஆடுமில்லே. அதற்கு மேலே தர முடியாது? சரி, பத்தணா, என்ன சொல்லறே?"

இதைக் கேட்டதும் ரிக்ஷாக்காரனுக்கு மேலும் தூக்கி வாரிப் போட்டது. 'இதோ இருக்கிற மூர்மார்க்கெட்டுக்குப் பத்தணா தருவதாகச் சொல்கிறானே, நாம் ஏன் இடையில் பேசி அதிர்ஷ்டத்தைக் கெடுத்துக்கொள்ளவேண்டும் என்று எண்ணி, "நான் ஒன்னும் கேக்கமாட்டேன் சாமி, நீ கொடுக்கிறதே கொடு" என்றான்.

"அட போய்யா. நீ இப்படித்தான் சொல்லுவே. இறங்குறபோது தகராறு பண்ணுவே. ஒரே வார்த்தை. பன்னிரண்டணா, சம்மதமா?"

ரிக்ஷாக்காரனின் மனச்சாட்சி உறுத்தியது.

"ஸாமி, இந்த ராங் ஸைடு ரெங்கன் அப்படியெல்லாம் தகராறு பன்ன மாட்டேன். ஏறிக் குந்து ஸாமி. கொண்டுபோய் வுட்டுடறேன்."

"சரி, ஒரு ரூபாய். சரின்னு சொல்லு."

ரிக்ஷாக்காரன் மனத்தை அடக்கிக்கொண்டு, "சரி சாமி, குந்து சாமி" என்று சொன்ன பிறகுதான், வண்டியில் ஏறி அமர்ந்தார்கள் தருமனும் முத்துராக்குவும்.

"தவில்காரரே. இந்த ஊரிலே ரிக்ஷாவிலே மட்டும் சத்தம் பேசறபோது கண்டிப்பாக இருக்கணும்" என்று தருமன் தன் கெட்டிக்காரத்தனத்தை விளம்பரம் செய்துகொண்டான்.

இருவரும் போகும்போதே நடுவிலே ஒரு ஆறு ஓடுவதைக் கண்டான் தருமன்.

"அது என்ன அய்யா?" என்றான்.

"இதுதான் கூவம்..."

"எங்க ஊரிலே குயில் கூவும். உங்க ஊரிலே ஆறுகூடவா கூவும்?"

"கூவும் இல்லே சாமி, கூவம். இத்தான் கூவம் வாராவதி."

ஏற்கெனவேயே தருமனுக்குக் கூவம் என்றால் புரியவில்லை. மேலும் வாராவதி என்று சொல்லவே, 'இது என்னடா, அவதி' என்று எண்ணினான்.

"ஏன் தவுல்காரரே, வாராவதின்னா என்ன?"

"சும்மா இருங்க அண்ணே, அது என்ன பாடாவதியோ, நமக்கு என்ன?"

வண்டி மூர்மார்க்கெட்டைத் தாண்டிப் போய்க்கொண்டே இருந்தது.

"இதுதாங்க வி.பி. ஹாலு..."

"அப்படின்னா?"

"அதுதான் நம்ம ஊருக்கெல்லாம் பட்டணம் பொடி வி.பி. வருதில்ல? அதையெல்லாம் கட்டி பார்சல் பண்ணற இடம்" என்றார் முத்துராக்கு.

அடுத்த கட்டடத்தின் வாசலில் போனவுடனே, "இதாங்க, ரிப்பன் பில்டிங்" என்றான் ரிக்ஷாக்காரன்.



"நிறுத்து, நிறுத்து" என்றான் தருமன்.

"என்ன தருமண்ணே?"

"தவுல்காரரே, இந்தக் கட்டடத்தைக் கொஞ்சம் பார்த்து வச்சுக்குங்க."

"ஏன், வாங்கப் போறீங்களா?"

"ஆமாம், வீட்டிலே பொம்பளைங்க, பட்டணத்திலே ரிப்பன் வாங்கிட்டு வரணும்னு சொன்னாங்க. திரும்பி வரப்ப இங்கே இறங்கி இரண்டு கெஜம் வாங்கிக்கிட்டுப் போவணும்."

ரிக்ஷாக்காரன் சிரித்தான். "என்னய்யா காட்டான் மாதிரி பேசறீங்க! இங்கே ரிப்பனா விப்பாங்க?"

"இந்தா ரிக்ஷாக்காரரே, காட்டான் கீட்டான்னு பேசிக்கிட்டு இருக்காதே. என்னைய்யா காட்டானைக் கண்டுட்டே..."

"காட்டான்னு சொன்னா மிஷ்டேக் இல்லிங்க. பட்டிக்காடுன்னு அர்த்தம்!"

"என்னய்யா, சொல்றதையும் சொல்லிவிட்டு இங்கிலீசுலே அர்த்தம் வேறயா சொல்லறே?" என்று தருமன் குடுமியைத் தட்டினான்.

"சரி அண்ணே, வந்த இடத்திலே சண்டை எதுக்கு?" என்று முத்துராக்கு சொன்ன பின்தான் தருமன் சும்மா இருந்தான்.

அவன் வாங்கிய பணத்துக்கு அந்த ரிக்ஷாக்காரன், அவர்களை பெரியமேட்டு வழியாக அழைத்துச் சென்றான்.

"இதோ, இதாங்க மரக்கடை..."

"என்னய்யா, மரக்கடை, புயக்கடை! உன் பட்டணத்துப் பேச்சும் லட்சணமும்! மரவாடின்னு சொல்லய்யா" என்றான் தருமன்.

"வாடி போடின்னு எல்லாம் இந்த ஊரிலே சொல்லப்படாதுங்க. டாணாக்காரன் இஸ்துகினு பூடுவான்" என்று அவன் சொல்லவே, "இஸ்துகின்னு பூடுவானா?" என்று திருப்பிச் சொல்லித் தருமன் சிரித்தான். ஒரு வழியாக அவர்களைக் கொண்டுவந்து மூர்மார்க்கெட்டில் இறக்கினான் ரிக்ஷாக்காரன்.

தருமனும், முத்துராக்குவும் மூர்மார்க்கெட்டுக்குள் நுழைந்தார்கள். தருமனுக்கு இந்தப் பட்டணத்திலே, பாய்க்கடை பூக்கடை என்று ஒவ்வொன்றும் தனித்தனியாக இருக்கிறதே. இதே போல, இந்த இடத்திலே நல்ல மோராக வைத்திருப்பார்கள். அதில் ஒரு குவளை வாங்கிக் குடிக்கலாம் என்று எண்ணம் வந்தது. சுற்றிச் சுற்றிப் பார்த்தான். அடேயப்பா, அது என்ன காட்சி! எல்லாச் சாமான்களும் பளபளப்பாக இருந்தன. குவியல் குவியலாக பவுண்டன் பேனாக்கள் ஒரு புறம் கிடந்தன. பழைய கால் சட்டைகளை ஒரு பக்கம் குவித்திருந்தார்கள்.

"தவுல்காரரே, ஒரு கால் சட்டை வாங்கலாமா?" என்றான் தருமன்.

"அது எதாச்சும் செத்தவன் சட்டையாக இருக்கும் அண்ணே" என்றார் முத்துராக்கு. இருவரும் ஒவ்வொரு கடையாகப் பார்த்துக் கொண்டே வந்தார்கள். அப்பொழுது ஒரு ஆள் தருமன் மேலே வந்து விழுந்தான்.

"என்னய்யா, கண்ணா தெரியலே?" என்றான் தருமன்.

"அடேடே, நீங்களா!" என்றான் அவன்.

"ஒண்ணுமில்லிங்க..." என்று ஏதோ கூறப் போகும்போது, அவன் பின்னாலேயே வந்த ஒருவன், "சரியப்பா, நாலு ரூபாய் கொடுத்துட றேன், கொடு" என்றான்.

"இந்தா பாருங்க சார், நீங்களே சொல்லுங்க, உங்களைப் பார்த்தால் பெரிய மனுஷங்க மாதிரி தெரியுது. இந்த மூக்குக் கண்ணாடி எங்க துரை போட்டுக்கிட்டிருந்தது. அவரு சீமைக்குப் போறப்போ, எனக்கு பிரசண்ட் பண்ணிப்பிட்டுப் போனாரு. லண்டன்மேக் சார். அங்கேயே அண்ரட் ரூபீஸ் விலை சார். நம்பள்க்கு கொஞ்சம் பணம் தேவை இருக்குது. வித்து விடலாம்னு பார்த்தால், நூறு ரூபாய்க் கண்ணாடியை நாலு ரூபாய்க்குக் கேக்கிறான், கொடுக்கலாமா சார்? நீயே சொல்லு சார்!" என்று அந்த ஆள் கேட்டான். தருமனுக்கு சார், சார் என்று அவன் பல முறை கூப்பிட்டதுந்தான் தன் கௌரவம் தெரிந்தது.

நூறு ரூபாய்க் கண்ணாடியை நாலு ரூபாய்க்குப் போக விடுவது தப்பு என்று எண்ணினான். "சே, சே. அப்படியெல்லாம் கொடுக்கப் படாதுங்க" என்று தருமன் தர்ம நியாயத்தைச் சொன்னான்.

உடனே அந்தக் கண்ணாடிக்காரர், "நான் நினைச்சது சரியாக இருக்குது சார். உங்களைப் போல உள்ளவங்க தப்பு பேச மாட்டாங்க. என் கையிலே மாத்திரம் பணம் இருந்திச்சுன்னா, உங்களுக்கே சும்மா கொடுத்திடுவேன் சார். இதோ பாருங்க கண்ணாடியை," என்று கண்ணாடிப் பெட்டியை அவன் கையில் கொடுத்தான்.

தருமன் அதைக் கையில் வாங்கிப் பார்த்தான். இரண்டு பக்கத்திலே மிருதுவான தோலும், பளபள என்று இருந்த 'கிலிட்டு' பிரேமும் குழியாக வளைந்த கண்ணாடிகளும் அவன் மனத்தைக் கவ்வியது. "நல்லா இருக்குதுங்க" என்று சொல்லித் திருப்பிக் கொடுத்தான்.

"நீங்களே வச்சுக்கோங்க சார். ஒரு அஞ்சு ரூபாய் கொடுங்க. அதைத் திருப்பிக் கொடுத்துட்டு இந்தக் கண்ணாடியை வாங்கிக்கிறேன்" என்றான் கண்ணாடிக்காரன்.

முன்பின் தெரியாத ஒருவன், தன்னை இவ்வளவு தூரம் நம்புகிறானே என்று தருமனுக்கு ஆனந்தம் மேலிட்டது. இருந்தாலும் "வேண்டாமுங்க அதெல்லாம்" என்றான்.



"என்ன சார், திருப்பிக் கொடுக்க மாட்டேன்னு பாக்கிறீங்களா? சரி, பத்து ரூபாய் கையிலே கொடுங்க. நீங்களே வச்சுக்கோங்க. இது எனக்கு நல்ல மனுஷன்கிட்டே இருக்கணும்."

தருமன் முத்துராக்குவைப் பார்த்தான். முத்துராக்கு வேண்டாமென்று தலையை ஆட்டினார். தருமனுக்கு முத்துராக்குவின் மேல் கோபம் வந்தது. நல்ல பொருள் பத்து ரூபாய்க்குக் கிடைக்கும் போது அபசகுனம் போல் தடுக்கிறாரே என்று எண்ணினான்.

"சரி ஐயா, ஆறு ரூபாய் தர்றேன், கொடு ஐயா!" என்றான் தருமன்.

"இல்லே சார், ஏழு ரூபாய் வச்சுக்கோங்க சார்" என்று அவன் சொல்லவே, தருமன் ஏழு ரூபாயைக் கொடுத்து வாங்கிக்கொண்டான்.

"என்ன தவுல்காரரே, இன்னிக்கு நான் யார் முகத்திலே முழிச்சிருப்பேன்?" என்றான் தருமன்.

"என் முகத்திலே இல்லீங்க" என்றார் முத்துராக்கு.

"உங்க முகத்திலே இல்லே, நர்ஸ் மேரி முகத்தில் முழிச்சேன். அது ஒரு நல்ல முகமுங்க. இல்லாட்டி கண்ணாடி இவ்வளவு சீப்பா கிடைத்திருக்காது" என்று சந்தோஷப்பட்டுக்கொண்டான் தருமன்.

இந்த நல்ல நாளிலேயே ஒரு பவுண்டன் பேனாவையும் வாங்கி, பையில் செருகிக்கொள்ள வேண்டுமென்று ஆசை வந்தது அவனுக்கு. முத்துராக்கு ஒரு டஜன் கொண்டை ஊசி மாத்திரம் வாங்கிக் கொண்டார். அதற்குள் முக்கால் ரூபாயில், ஒரு பவுண்டன் பேனாவை வாங்கிவிட்டான் தருமன்.

"சரி தருமண்ணே, பேனா வாங்கிக்கிட்டீங்க. எப்போ படிக்கப் போறீங்க?"

தருமன் சிரித்தான். "பேனா படிக்கறத்துக்கு இல்லீங்க. எழுதறத்துக்கு..."

"சரி அண்ணே, படிப்பு இருந்தாத்தானே, எழுதலாம்!"

"அதுக்கு என்ன, படிச்சவங்க கிட்ட கொடுத்து எழுதச் சொல்றேன்" என்று சொல்லிக்கொண்டே தருமன் சந்தோஷமாகக் கண்ணாடியை எடுத்து மாட்டிக்கொண்டான்.

இருவரும் புறப்பட்டார்கள். அப்போது சட்டைப் பையிலிருந்து மை கசிந்தது. நீளமாக நீலத்தில் ஒரு கோடு தெரிந்தது. "என்ன அண்ணே, பேனா ஒழுகுது?" என்றார் முத்துராக்கு.

"மோசம் பண்ணிட்டான் போலிருக்குதே!"

"அதனால் பாதகமில்லே தருமண்ணே. மையைக் கொட்டிட்டு வச்சுக்கோ. நீதான் எழுதப்போறது இல்லையே... அழகுக்குத்தானே" என்றார் முத்துராக்கு. இருவரும் ஆஸ்பத்திரிக்குப் போகப் புறப்பட்டார்கள்.

புதுச் சட்டை வாங்கியவர்களும் புதுச் செருப்பு வாங்கியவர்களும் நாலு பேர் நடுவில் அதைப் போட்டுக்கொண்டு நடந்து பார்க்க

ஆசைப்படுவது இயற்கை. ஆனால், புதிதாக மூக்குக் கண்ணாடி போட்டுக்கொண்டவர்கள் நடந்து பார்க்க ஆசைப்படுவது தவறு என்பதைத் தருமன் நிரூபித்தான்.

தருமன் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு, "என்ன தவுல்காரரே, கொஞ்ச தூரம் நடந்து போவோமே" என்றான்.

"நான் செத்தாலும் இந்தப் பட்டணத்திலே நடக்க மாட்டேன்."

"ஏன், நடந்தா என்ன?"

"இந்த ரோட்டில் தார் போட்டிருக்காங்க. காலிலே பட்டா கண்ணிலே தாக்கும், உடம்பு கெட்டுப்போகும்" என்று முத்துராக்கு சொல்லவே தருமன் கடகடவென்று சிரித்தான்.

"என்ன தருமண்ணே, சிரிக்கிறீங்க?"

"இல்லே தவுல்காரரே, நான் எதுக்குக் கண்ணாடி வாங்கினேன்னு இப்ப தெரியுதில்லே. இது கண்ணுக்குக் குளிர்ச்சி !"

"கண்ணுக்குக் குளிர்ச்சி இல்லே, பார்வைக்குத்தான் குளிர்ச்சி, போட்டுக் கழட்டினவுடனே எரியும்."

"செலவுக்குப் பயந்துக்கிட்டு எரியும்கிறீங்களாக்கும்! இந்தா நான் போட்டுக்கிட்டு இருக்கேனே, எரியுதா? நாளைக்கு ஒரு ஊர்வலம் வருது. தம்பி வாசிக்க ஒத்துக்குதுன்னு வைச்சுக்குங்க. நான் இதைப் போட்டுக்கிட்டே ராத்திரி முழுக்க நடந்து ஒத்து நாயனம் வாசிப்பேன்."

"ரொம்ப நல்லது. நீங்க தூங்கறது வெளியே தெரியாது" என்றார் முத்துராக்கு.

அப்போது தருமன் ஒரு முறை தவறி விழப்போனான். முத்துராக்கு பிடித்துக்கொண்டார்.

இதற்குள் மார்க்கெட் வாசல் வந்துவிடவே தருமன் கிழக்கே திரும்பிப் பார்த்தான். ஜெனரல் ஆஸ்பத்திரிக் கட்டடம் தெரிந்தது. அவனுக்கு அடிவயிற்றில் பகீர் என்றது.

"தவுல்காரரே, தவுல்காரரே, மோசம் பண்ணிட்டான்."

"யாரு? கண்ணாடிக்காரனா? பேனாக்காரனா?"

"இல்லே, ரிக்ஷாக்காரன். இந்தா எதித்தாப்பிலே இருக்கிற கட்டடத்துக்கு ஒரு ரூபாய் வாங்கிட்டான் !"

"அது சரி, பாத்து நடங்க, வீதியிலே விழுந்திடாமல்."

மறுபடியும் தருமன் தடுக்கி விழுந்தான். அவன் கண்ணுக்கு எதிரில் ரோடே பள்ளமாக இருப்பது போல் தெரிந்தது. ஒரு நிமிஷத்தில், தானே நாலு அடி உயரம் அதிகமாக வளர்ந்து விட்டதாகத் தோன்றியது. அவன் ஒவ்வொரு காலை அடி எடுத்து வைக்கும் போதும் பள்ளத்தில் காலை வைப்பது போல் பயந்து, வேட்டியைத் தூக்கிப் பிடித்துக்கொண்டான். முத்துராக்குவோ தருமனையே சந்தேகப்பட ஆரம்பித்தார்.



"என்ன தருமண்ணே, ஏதாச்சும் உடம் – ரொம்ப ஆட்டம் போடறீங்களே!"

"சே சாமி சத்தியமா அதெல்லாம் இல்லீங்க. இந்தக் கண்ணாடி."

"ஏன், குளுமை ரொம்ப ஜாஸ்தியோ? உடம்பே நடுங்குதே"

"இல்லேண்ணே. பள்ளம் மேடாட்டம் தெரியுது. மேடு பள்ளமாட்டம் தெரியுது. கழட்டினா தலையைச் சுத்துபோன்னு பயமா இருக்கு. என்னமோ, துரை போட்டுக்கிட்டிருந்த கண்ணாடின்னு சொன்னான். இப்ப பார்த்தா இது துரியோதனன் போட்டுக்கிட்டு இருந்த கண்ணாடி போலே தோணுது"

"ஏன், சமதரையே குளமாட்டம் தெரியுதோ? சரி சரி, கழட்டி எறியுங்க."

"கழட்டி எறிஞ்சா யாரு காலிலேயாவது குத்துமே. இருக்கட்டும், குழந்தைகளுக்குக் கொடுப்பம்."

"ஏண்ணே, உன் கண்ணு கெட்டது போதாதுன்னு கொழந்தைகள் கண்ணையும் கெடுக்கறே! வா அண்ணே" என்று வீதியைக் கடக்க ஆரம்பித்தார் முத்துராக்கு.

அப்போது தருமன் 'ஆ' வென அலறினான். நாலு அடி துள்ளி பின்னாலே குதித்தான். காரணம், வேறு ஒன்றும் அல்ல. அரை பர்லாங்கு தூரத்தில் ஒரு டிராம் வண்டி வந்தது. அவன் கண்ணாடியின் மகத்துவத்தால் அது அவன் தலைமேலே ஏற வருவது போல் தெரிந்தது. அவன் குதித்த வேகத்தில் கண்ணாடி தவறி விழுந்து உடைந்தது. நல்ல வேளை, கண் பிழைத்தது.

இவ்வாறு தினந்தோறும் வேளைக்குச் சாப்பிடுவது, வெளியே சுற்றுவது என்று இரண்டு நாட்கள் அவர்களுக்கு இரண்டு நிமிஷங்கள் போல் கழிந்தன.

ஆனால், இந்த இரண்டு நாட்களை இரண்டு வருஷங்களாகக் கழித்தான் சண்முகம்.

"மரம் இங்கே, மலர் அங்கே" என்று பாமா விஜயத்தில் ஒரு பாட்டுப் பாடுவார்கள். அதைப் போலவே சண்முகம் உடல் இங்கும் உள்ளம் திருவாரூரிலுமாகத் திண்டாடினான்.

இந்தத் திண்டாட்டத்துக்குக் காரணம் இல்லாமலும் இல்லை. அந்த ஆஸ்பத்திரி நர்ஸ் மேரி ஒருத்தியே போதாதா?

அவள் குறுகுறுப்பும் துருதுருப்பும் ஓடி ஆடுவதும், சண்முகத்தின் உடம்பைத் தொட்டுப் பார்ப்பதும் சண்முகத்துக்கு என்னவோ போல் இருந்தது.

அவனுடைய ஸ்பெஷல் வார்டுக்கு அவளை நர்ஸாகப் போட்டிருந்தார்கள். கந்தர்வப் பெண்கள் இறகுடன் இருப்பார்கள் என்று சண்முகம் படித்திருந்தான். ஆனால் அந்த மேரி பறந்து பறந்து வருவதைப் பார்த்த பிறகு, இவள்தான் கந்தர்வ உலகத்துப்

பெண்ணோ. இவன் தலைத்துணிதான் இறகோ என்றுகூட நினைத்தான் சண்முகம்.

மேரி ஒரு சிரிப்புச் சிரிப்பாள். சண்முகத்தின் வியாதிக்கு அந்தச் சிரிப்பே இதமாக இருக்கும். ஆனால் தருமனுக்கு அந்தச் சிரிப்பு ஆயிரமாயிரம் அர்த்தங்களைக் கொடுக்கும்.

சண்முகத்தின் கை நாடியைப் பிடித்துக்கொண்டே கடிகாரத்தை ஒரு கண்ணால் பார்ப்பாள் மேரி. சண்முகத்தை ஒரு கண்ணால் பார்ப்பாள். இந்தப் பார்வையில் சொக்குவான் தருமன்.

அதோடு, இரவு பகல் எந்த நேரத்திலும் மேரி சண்முகத்தின் அருகில் நிற்பதைப் பார்த்துத் தருமன் அவனுக்கே ஏற்பட்ட முறையில் ஒருவாறு விஷயத்தைப் புரிந்துகொண்டான்.

"தவுல்காரரே, உமக்கு எப்பவாவது உடம்புக்கு வந்திருக்குதாய்யா?" என்றான் தருமன்.

"முத்துராக்குவுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"நம்ம உடம்பு வைரங்க. நம்ம வாசிப்புக்கே உடம்பு நல்லா இருக்கும்" என்றான் முத்துராக்கு.

"அட போங்கண்ணே! அந்தக் குட்டியைப் பார்த்தீங்களா? சண்முகத்தையே சுத்துது"

"சும்மாவா சுத்துது? சம்பளமில்லே!"

"அது கிடக்குதுங்க. நம்ம வீட்டிலேயும் இருக்குதுங்களே! தாகத்துக்குத் தண்ணி குடுன்னு கேட்டா, எடுத்துக் குடிச்சுட்டுப் போன்னு சொல்லுது. இவ ஆர்லீக கரைச்சுக் குடுக்கற அழகு ஒண்ணே போதும், அண்ணே..."

"என்ன தருமண்ணே?"

"இல்லே தவுல்காரரே, நானும் நாலு நாளா கவனிச்சுக்கிட்டு வர்ரேன். இந்தக் குட்டி இங்கிலீசுலேயே பேசி மயக்கிடுவா போலே இருக்குதே அவ பேசற அழகைப் பாத்தீங்களா? சுதி சுத்தமா இருக்குது அண்ணே."

"அவ பேச்சுதான் உனக்குப் புரியாதே! நீ எப்படி மயக்கறான்னு கண்டுக்கிட்டே?"

"அதுதான் நயன பாஷை. இப்போ நீங்க வாசிக்கிறீங்க புரிஞ்சுக்காமலா நல்லா இருக்குதுங்கறாங்க. அவ என்னண்ணே, தாவாரத்திலே போறப்பவே சண்முகத்தைப் பாத்துச் சிரிக்குறா. பக்கத்திலேதான் நானும் நிக்கறேன். என்னைப் பாத்தா மூஞ்சியைத் தூக்கிக்கிட்டுப் போறா! அதன் கையைப் பிடிச்சுக்கிட்டா விடமாட்டேங்கிறா. நம்ம அறைக்குள்ளே போனா விரட்டுறா. உம், நமக்காவது ஒரு காச்சல் கீச்சல் வந்திச்சா?"

"காச்சல் வரும். ஆனால், மேரியை நர்சா போட மாட்டாங்களே!"



"இல்லீங்க, நம்ம வரிசேயுந்தான் வைத்தியன் இருக்கான். எந்த வைத்தியனாவது சும்மா கையைத் தொடறானா? தொடறானான்னு கேக்கிறேன். மேலே பட்டுப் போட்டுத்தானே கை பார்க்கிறான் இல்லையா? இந்தப் பொம்பளை மாத்திரம் சண்முகத்தின் கையை எப்படி சும்மா தொடலாம்?"

"தருமண்ணே, அவர் கையை அது தொடுது இதிலே உனக்கு என்ன வருத்தம்?"

"அப்படி இல்லீங்க. நாளைக்கு அதுக்கும் இதுக்கும் ஒண்ணு ஆச்சுன்னு வைச்சுக்கோங்க. அந்தத் திருவாரூரா பொண்ணு கதி என்ன ஆகுறது? உம்ம்"

"எனக்கு என்னமோ அது உன் கிட்டே பேசாமே சண்முகத்துக் கிட்டே பேசறது நியாயம்னுதான் படறது"

"என்?"

"நீ போய்க் கண்ணாடியிலே முகத்தைப் பாத்துக்க" என்றார் முத்துராக்கு.

தருமனுக்குக் கோபமே வந்துவிட்டது. முத்துராக்குவின்மீது அல்ல, பாழும் கண்ணாடி மீதுதான். அது ஒரு நாளைக்காவது அவன் முகத்தை அழகாகக் காட்டியதே இல்லை.

பாவம், தருமனுக்கு மேரியின்மீது கோபம் ஒருபுறம். தன்னை அவள் மதிக்கவில்லையே என்ற வருத்தம் ஒரு புறம். அன்றைய சாயங்காலம், தருமன் மெல்ல அந்த மேரியின் அருகில் வந்தான்.

"இந்தா நர்சம்மா. நம்பளைக் கொஞ்சம் கவனியேன்" என்றான்.

"உன்னைக் கவனிச்சுக்கிட்டுதான் வரேன்" என்றாள் மேரி.

'உன்னை' என்று தருமனை மேரி தன் வாயால் சொன்னவுடனே தருமனுக்குத் தன் உடம்பு இருபது வயது இளமையானதாகத் தோன்றியது.

"கொஞ்சம் உடம்பு சரியில்லே. கொஞ்சம் கையைப் பிடிச்சுப் பார்த்துச் சொல்லுவே" என்று தருமன் கையை நீட்டினான்.

தன் கையைப் பிடித்துப் பார்ப்பாள், தர்மா மீட்டரைத் தருவாள் என்றெல்லாம் இன்ப உலகத்திலே அவன் சஞ்சரித்துக் கொண்டிருக்கும்போதே அவள் "என்ன மேன் செய்யுது?" என்றாள்.

"தலையை வலிக்குது, கிளப்பு சோறு ஒத்துக்கல்லே. வயித்தே என்னமோ பண்ணுது" என்று அடுக்கினான்.

உடனே அவள் எங்கோ ஓடினாள். கையில் ஒரு மாத்திரையை எடுத்துக்கொண்டு வந்தாள். "இதை முழுங்கு, மேன். சும்மா முழுங்கு கசக்கும், முழுங்கிட்டுக் கொஞ்சம் பச்சைத் தண்ணி குடி" என்று சொல்லிவிட்டு அங்கு நிற்காமலே போய்விட்டாள்.

"என்ன அண்ணே. என்ன சொன்னா?" என்று ரகசியமாய்க் கேட்டுக்கொண்டே முத்துராக்கு வந்தார்.

"இந்தக் கசப்பு மாத்திரையை முழுங்கணுமாம். பச்சைத் தண்ணியை அள்ளிக் குடிக்கணுமாம். அவ கையாலே எனக்குத் தண்ணிகூடக் கொடுக்கமாட்டாளாம்" என்று வருந்தினான் தருமன்.

எழுபத்து ஒன்றாம் அத்தியாயம்

## நேசம் மறக்குதில்லை நெஞ்சம்



கடல் கொந்தளித்தால் அலை; கருத்து கொந்தளித்தால் கனவு. இதைப் போலவே தன் பொருள் போன்ற ஒன்றைப் பிற இடத்தில் பார்க்கும்போது வருவது நினைவு. எட்டிப் போக எட்டிப் போக உள்ளத்தைக் கட்டி இழுப்பது காதல். எதைப் பார்த்தாலும் அதைப் போல் தன் வாழ்வில் நடந்த சம்பவத்தை நினைப்பூட்டுவது காதல்.

சென்னையில் சண்முகம் இந்தப் பாடுதான் பட்டான். ஒருவர் இருக்க வேண்டிய இடத்தில் இன்னொருவர் இருந்துகொண்டு பணிவிடைகள் புரிவதைப் பார்த்து மலைத்தான். ஆனால், சண்முகத்தைச் சுற்றிக்கொண்டே இருந்தாள் அந்த மேரி. மணிக்கு ஒரு தடவை அவனை விசாரிப்பாள். சிரித்த முகத்துடன் பேசுவாள். அவனைப் படுக்கையில் தூக்கி உட்கார்த்துவாள். அவன் எதைச் சாப்பிட்டாலும் அவன் வாயைத் துடைப்பாள்.

இவைகளைப் பார்க்கப் பார்க்க, இதே மாதிரி மோகனா தனக்குப் பணிவிடை செய்தது எல்லாம் சண்முகத்துக்கு ஞாபகம் வந்தன. ஆனால், அந்த நினைவில் இருக்கிற சுகத்தைக்கூட இதில் அவன் காணவில்லை.

"அவள் இங்கு வந்திருப்பாளானால், நமக்கு எவ்வளவு உபகாரமாக இருக்கும்? இந்த மேரி எவ்வளவு உபசாரம் செய்தாலும், இவள் அந்நியப் பெண்தானே!" என்று எண்ணினான்.

மேரியோ இன்னும் அதிகம் நெருங்கினாள். அவன் உடம்பு குணம் ஆகஆக அவளுடைய அன்பு உச்சநிலைக்கு வந்தது. சண்முகத்துக்குப் பல சந்தேகங்கள் தோன்றின. 'இவளுக்கு ஏன் நம்மீது இவ்வளவு அக்கறை? எதிரில் பார்த்துச் சிரிப்பது மாத்திரமல்ல தாழ்வாரத்தில் நடந்தால் நம்மையே பார்த்துச் சிரித்துக் கொண்டு நடக்கிறாளே! அன்று ஒரு நாள் வேறு இரண்டு நர்சுகளைக் கூட்டிக் கொண்டு வந்து, தன்னைச் சுட்டிக் காட்டி ஏதோ பேசினாளே! 'ஒரு போட்டோ இருந்தால் கொடுங்கள்' என்று கேட்டாளே! இது என்ன விபரீதம்?' என்று வியந்தான்.



அவன் மனத்தில் ஒரு சிறு அருவருப்புக்கூட ஏற்பட்டது. அவனுக்காக ஒருத்தி அங்கே காத்துக்கொண்டிருக்கையில், தன் மேல் அன்பு முழுவதையும் வைத்துவிட்டு வெறும் சடலமாக ஒருத்தி திருவாரூரில் உலாவிக்கொண்டிருக்கையில், தான் மேரியிடம் பேசுவது கூடப் பிசகு; அவள் தன்னைத் தொடவிடுவதுகூடப் பிசகு என்று எண்ணினான்.

அப்போது அவனுக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுத்தாள் மேரி. அதைக் கையில் வாங்கக் கூசினான். "அப்படி வை!" என்று சொன்னான்.

மேரி கீழே வைக்கவில்லை. "ஏன், என் கை அழுக்கா இருக்குதா?" என்று சிரித்தாள்.

"இல்லே, நல்லாதான் இருக்குது. ஆனால்?_"

"என்ன — ஆனால்?_"

"எங்க ஊரிலே எல்லாம் பொம்பளைங்க இப்படி ஆண்பிள்ளை கையிலே கொடுக்க மாட்டாங்க."

"ஏன், கையிலே கொடுத்தா, கற்பு போயிடுமா? இந்தாங்க, சும்மா சாப்பிடுங்க" என்று அவள் கொடுத்தாள். சண்முகம் அதை வாங்கி மருந்து போல் குடித்தான்.

"மேரி, உனக்குக் கலியாணம் ஆகிருக்கிறதா?" என்று கேட்டான்.

"ஏன் ஸார், என்னை 'மாரி' பண்ணிக்கலாமான்னு பார்க்கிறீங்களா?" என்று கேட்டுவிட்டுச் சிரித்துக்கொண்டே ஓடினாள் மேரி.

சண்முகம் திகைத்தான். ஆனால் தருமனோ 'விஷயம்' முற்றிவிட்டது. ஆஸ்பத்திரியிலிருந்து ராத்திரியே வெளியேறிவிட்டால் கூடத் தேவலை. இல்லாவிட்டால், சண்முகம் இனி மதராசிலேயே இருந்துவிடுவான்' என்றுகூடப் பயந்துவிட்டான்.

ஆனால், அடுத்த நாள் சண்முகம் உடம்பு சௌரியமாகி ஆஸ்பத்திரியிலிருந்து விடைபெற்றுக்கொள்ளும்போது நடந்த ஒரு சம்பவத்தில் அவன் கண்களில் நீர் மல்கியது.

சண்முகத்தை 'டிஸ்சார்ஜ்' செய்யும் போது, மேரியும் அங்கு நின்றாள். ராவ்சாகிப் பொன்னம்பலத்தா பிள்ளை, மேரியின் கையில் ஒருவருக்கும் தெரியாமல் இருபத்தைந்து ரூபாய்களைக் கொடுத்தார். மேரி அதை வாங்கிக்கொள்ளாமல், திருப்பிக் கொடுத்துவிட்டாள். ஆனால், விடை கொடுத்துச் சண்முகத்தின் கையைக் குலுக்கும் போது அவள் கண்களில் இரண்டு சொட்டுக் கண்ணீர் வந்தது. "என்ன மேரி, ஏன் அழறே?" என்று சண்முகம் பரிவுடன் கேட்டான்.

மேரி பதில் சொன்னாள்: "சார், என் தகப்பனார் ஒரு மியூசிஷன். நல்லா வயலின் 'பிளே' பண்ணுவார். நீங்க 'பைப்'பிலே பெரிய வித்வான்னு சொன்னாரு. உங்களுக்கு 'டூட்டி' செய்ய எனக்குக் கொடுத்து வச்சதே என் பாக்கியம் போயிட்டு வாங்க. இதிலே ஒரு

கையெழுத்துப் போடுங்க" என்று தன்னுடைய கையெழுத்து நோட்டுப் புத்தகத்தையும் பவுண்டன் பேனாவையும் எடுத்து நீட்டினான்.

அவன் அன்று தன்னிடம் சிரித்ததும், தன்னிடம் இவ்வளவு பரிவுடன் நடந்துகொண்டதும், இரண்டு பெண்களை அழைத்து வந்து தன்னைக் காட்டியதும், தன் போட்டோவைக் கேட்டதும் கெட்ட எண்ணத்தால் அல்ல, தான் ஒரு வித்வான் என்ற பெரிய எண்ணத்தில் தான் என்பதை அறிந்தவுடனே, சண்முகத்துக்கு ஆனந்தக் கண்ணீர் வந்தது. உடனே அவன் கொடுத்த நோட்டுப் புத்தகத்தில் கையொப்பமிட்டான். வெறும் மையால் அல்ல, கருணையால்.

ஆனால் தருமனோ, "என்ன இருந்தாலும் தம்பி, நீங்க அதிலே கையெழுத்துப் போட்டிருக்கப்படாது. பின்னாலே என்ன ஆகுமோ?" என்றான்.

"கையெழுத்துப் போடல்லே அண்ணே, சும்மா என் பேரைத்தான் போட்டேன்!" என்று சமாதானம் செய்த பிறகுதான் தருமன் அடங்கினான்.

சென்னையில் சண்முகம் ஆஸ்பத்திரியை விட்டு வந்தவுடனேயே அங்குள்ள சங்கீத உலகத்திலேயே பெரும்புரட்சி ஏற்பட்டது. அப்பொழுது ஏராளமான சபைகள் கிடையாது. இரண்டொரு சபைகள்தாம் இருந்தன. ஆதலால், உண்மையாகவே சங்கீதம் கேட்டார்கள். ஒவ்வொரு சபைக்காரரும் சண்முகத்தை வாசிக்க வேண்டுமென்று கூப்பிட்டார்கள். அதோடு அவனைப் பரிவுடன் உபசாரம் செய்த ராவ்சாகிப் பொன்னம்பலத்தா பிள்ளையே சொல்லும்போது அவனால் தட்ட முடியுமா?

இந்த உலகில் சிலர் பணத்தாசை பிடித்து அலைவார்கள். சிலர் பெண்ணாசையில் உழல்வார்கள். சிலரோ, மவுண்ட் ரோடு முழுவதும் வாங்கித் தகரக் கொட்டகையாகவே கட்டி, ஒரு ஷெட்டுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் வாடகைக்கு விட்டுவிடத் துடிப்பார்கள். ஆனால், நமது ராவ்சாகிப் பொன்னம்பலத்தா பிள்ளைக்கு ஒரே ஒரு ஆசைதான். அது என்ன? இந்த ஜன்மத்துக்குள் 'ஸர்' பட்டம் வாங்கிவிட வேணும். சீமைக்குப் போய்' மகாராணியின் காலில் விழுந்து எழுந்துவிட வேணும் என்ற ஒரே ஆசையில் அவர், நெடுநாளாகத் தினந்தோறும் கண்ட கண்ட தெய்வத்தையெல்லாம் கும்பிட்டு வந்தார். அவர் உயிரை விட்டாலும் விடுவார், ராவ் சாகிப்பை விடமாட்டார்!

ஒரு நாளைக்கு அவர் நாலைந்து 'மீட்டிங்கு'களுக்குத் தலைமை வகிப்பார். ரோஜாப்பூ மாலைகளைப் போட்டுப் போட்டு, அவைகளில் உள்ள சிவப்புச் சாயத்தால் அவர் கோட்டுகளில் எல்லாம் கழுத்தைச் சுற்றிச் சிவப்பு கலந்திருக்கும். அக்காலத்தில் மைக்குகள் அதிகம் வரவில்லை. அதனால் பொதுக்கூட்டங்களில்



பேசுபவர்களுக்குத் தொண்டைத் தண்ணீர் வறண்டுவிடும். ஆனால் அதே சமயத்தில் குறைவாகவும் பேசுவார்கள். நமது ராவ் சாகிப் பிள்ளைக்குத் தொண்டையைப்பற்றிய தொந்தரவு கிடையாது. ஏனெனில், இவர் பெயரைப் போட்டாலே கூட்டம் வருவதில்லை. இவர் ஆங்கிலத்தில்தான் பேசுவார். அதனால் இங்கிலீஷ் தெரியாதவர்களுக்கு இவர் பேச்சுப் புரியாது. தெரிந்தவர்களுக்கோ அது பிடிக்காது. ஆனால் அதற்காக அவர் சலிப்பதில்லை. நிஷ்காம கர்மத்தில் நம்பிக்கை உடையவர் ஆதலால், தம் பேச்சைப் பிறர் கேட்க வேண்டுமென்ற ஆசை இல்லாமல் தம் கடமையைச் செய்வார்.

இவரைத் தலைமை வகிக்க அழைத்தால் 'மீட்டிங்' செலவுக்கு 'டொனேஷ'னும் தருவார். ஆதலால், இவருக்குக் கிராக்கி அதிகம். அவருக்குத் தம் பெயர் பேப்பரில் வந்தால் போதும்; 'குரூப் போட்டோ'வில் படம் வந்தால் போதும்.

இவருடைய நித்யகர்மானுஷ்டானங்கள் அலாதியானவை. காலை ஐந்து மணிக்கு எழுந்துவிடுவார். ஏழு மணிக்குத் தலைப்பாகை கட்டிக்கொள்வார். ஒன்பது மணிக்குள் பத்து உத்தியோகஸ்தர்களைத் தரிசனம் செய்துவிடுவார். சும்மா அல்ல. அவருக்கு அத்தனை பேரிடமும் ஏதாவது வேலை இருக்கும்.

இம்மாதிரிப் பல நண்பர்களை உடையவர் ஆதலால், சண்முக சுந்தரம் இவர் வீட்டில் தங்கியிருக்கிறார் என்ற செய்தி ஊரெங்கும் பறந்தது. அவர்களுள் ஒருவர் சங்கீதத்தில் அக்கறை கொண்ட மயிலாப்பூர் வக்கீல் கமாஸ் கிட்டாவையர்.

கமாஸ் கிட்டாவையர் வீட்டில் அவருடைய மகளுக்குக் கல்யாணம். அந்தக் கல்யாணத்தில் சண்முகம் வாசிக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார். உடம்பு முடியாமல் படுத்திருந்து, மறுபடியும் தன் கையில் நாதஸ்வரத்தைத் தூக்க முடியுமா, வாசிக்கப் போகிறோமா என்று ஏங்கிக்கொண்டிருந்த ஒருவன், மயிலாப்பூர் ரசிகர்களிடையே கச்சேரி வரும்போது விட்டுவிட முடியுமா? சண்முகம் ஒப்புக்கொள்ளத் தயாராகத்தான் இருந்தான்.

கிட்டாவையர் சொன்னார்: "திருவாரூரிலே நீங்கள் பாரி நாயனத்தைப் பழகி வாசித்தீர்களாம். அதிலே ஏதோ கமாசுலே ஒரு தில்லானா வாசித்ததாகச் சொன்னார்கள். அன்னைக்கு முதல் கொண்டு எனக்கு அதைக் கேட்க வேணும்னு ஆசை. இந்தா பாருங்கோ, எனக்கு கமாஸ்னாலே உயிர்."

"அதென்ன, கமாசுலே அத்தனை பிரியம்?"

"அந்தப் பேரே ஒரு சுகம் சார். அந்த ராகத்தைப் பாடினாலே பதினெட்டு வயசுப் பொண்ணு நேர் எதிரே வந்து குதிக்கிறாப்பலே இருக்கு! மத்த ராகத்துக்கு எல்லாம் யாராவது வந்து நாட்டியம் ஆடணும். கமாசுக்கு அப்படி இல்லை. ராகமே நாட்டியமாடும்!"

"நீங்க சொல்றது நிசந்தான். அந்தப் பேரை நாலுவாட்டி சொன்னாலே சுகமா, சுகமான்னு கேட்கும். தவிர, அது நம்ம ஊருக்குப் புதிசு. வடக்கே இருந்து வந்த ராகம். சங்கீதத்திலேயும் கொஞ்சம் புதுமை இருக்கணும்."

"அப்படிச் சொல்லுங்கோ. நீங்கதான் திருவாரூரிலே பிரமாதமாக வாசித்தீர்களாமே! நம்ம வீட்டுக் கல்யாணத்திலே நீங்க கமாஸ ஜமாச்சுப்பிடணும்" என்றார் கிட்டாவையர். அவருக்கு இந்த உலகில் இரண்டு விஷயத்தில்தான் பிரியம் உண்டு. ஒன்று, அவர் தர்மபத்தினி. இரண்டாவது, கமாச ராகம்.

அவர் ஒரு பெரிய லாயர். அதிலும் கிரிமினல் புலி. கமாச ராகத்தை நன்றாகக் கேட்டுவிட்டுக் கோர்ட்டுக்குப் போனால், அன்றைக்கு நாலைந்து உயிர்களைக் காப்பாற்றிவிடுவார்.

அடுத்த நாள் பதில் சொல்வதாகக் கூறிச் சண்முகம் அவரை அனுப்பினான். ஆனால், திருவாரூரைப்பற்றி அவர் சொல்லிய சொற்கள் அவன் மனத்தில் விளையாட ஆரம்பித்தன. தில்லானா போட்டிக் காட்சிகள் அவன் கண் முன் ஓடின.

'நான் அங்கு வாசித்த வாசிப்பை இனிமேல் வாசிக்கப் போகிறேனா? அன்று வந்த வாசிப்பு அவளுக்காக அல்லவா வந்தது!

'நான் எவ்வளவு வாசித்துத்தான் என்ன பயன்? நேற்றுவரை சங்கீதத்தை மாத்திரம் ஆராதித்துக்கொண்டு வந்தேன். இன்றைக்கு அவளும் என் அகத்தில் புகுந்துவிட்டாள். அவளை என்ன பாடு படுத்தினேன்! அத்தனையையும் பொறுத்துக்கொண்டிருந்தாளே! ஆணுக்கு இத்தனை அடக்கம் இருக்குமா? ஐயோ, மாடியிலிருந்து அவள் பார்த்த பார்வை இன்னும் என் கண்ணை விட்டுப் போக வில்லையே! வாசலுக்குக்கூட வரவேண்டாமென்று அவள் தாய் தடுத்துவிட்டாளே! இப்பொழுது அவள் எங்கு இருக்கிறாளோ? என்ன பாடு படுகிறாளோ! அல்லும் பகலும் அறுபது நாழிகையும் என்னையே நினைத்துக்கொண்டு, ஏங்கி ஏங்கித் தவித்தால் என்ன செய்வது? ஒரு பெண்ணால் என்னதான் செய்ய முடியும்? அவள் மானத்திற்குப் பயப்படவேண்டும், ஊருக்குப் பயப்பட வேண்டும், உறவினருக்குப் பயப்பட வேண்டும், அம்மாவுக்குப் பயப்பட வேண்டும். அவ்வளவு பேரையும் தாண்டிக்கொண்டு, அவள் எனக்கு முன்னால் அன்று போட்டியில் ஆடியதே பெரிது.

'இரவு நேரத்தில் ஓடி வந்து என் உயிரைக் காப்பாற்றுவதற்குப் பாலை ஊட்டியதே பெரிது. எல்லாவற்றையும்விட சுநாதமான இசையமுதைப் பொழிந்து, கால் சதங்கை ஒலியால் என் உயிரைக் குலுங்க வைத்தாளே! இதை வேறு யார் செய்வார்கள்? இதற்கு மேல் அவள் தன் தாயிடம், 'இல்லை, நான் சண்முகத்தைத்தான் மணந்து கொள்வேன். இல்லாவிட்டால் அவரோடு ஓடிப் போய்விடுவேன்' என்று சொல்லமுடியுமா? சே! அவள் வீட்டைவிட்டு ஓடிவந்தால் நமக்குத்தான் அவள் மேல் இவ்வளவு நன்மதிப்பு இருக்குமா?



'அவளை மதிக்கும் நமது மனம் நாளை இதே போல அவளை மதிக்குமா? அறுபது நாழிகையும் அவளைச் சந்தேகப்பட்டுக் கொண்டல்லவா இருப்பேன்! நல்ல பலனை அடையக்கூட கெட்ட வழியை உபயோகிப்பவர்கள் கெட்டவர்களாகத்தானே மதிக்கப் படுவார்கள்! அவள் அங்கு இருப்பதுதான் சரி. ஆனால், அவளைக் காப்பாற்ற வேண்டியது நம்முடைய கடமை.

"நாம் போய் ஏன் அவளைக் கூட்டி வரக்கூடாது? இரவு நேரத்தில் போவோம். வாசலில் வண்டியை வைத்துக்கொண்டு காத்திருப்போம். முன்னாடியே அவளுக்குத் தெரிவித்துவிடுவது. அவள் இறங்கி வருவாள். வண்டியில் உட்காரச் சொல்லி ஓட்டிக்கொண்டு ஓடிப் போய்விடுவோம். ஆஹா! உலகம் நம்மை நன்றாக மதிக்கும்! நேற்றுவரை பாடுபட்டு ஒவ்வொரு செங்கல்லாக வைத்துக் கட்டிய வீடு போல, ஒவ்வொரு ராகமாக வாசித்து, ஒவ்வொரு கச்சேரியிலும் சிறிது சிறிதாகச் சேர்த்த நம் செல்வம் இந்தப் புகழ்தானே? அந்தப் பெரும் புகழைத் தாங்கி நிற்பதல்லவா சண்முகம் என்ற பெயர். இதை ஒரு நிமிஷத்தில் நாம் வீணாக்கிக்கொள்வதா? இந்தக் காதல் என்பது கட்டுப்பட்டவனுக்குத் கூடாது. எல்லாவற்றையும் விட்டவனுக்குத்தான் வேண்டும். ஏன், நாமுந்தான் விட்டுவிட்டால் என்ன? சே! உலகம் ஒரு தேர். அதன் அச்சாணி கட்டுப்பாடு. அதைக் கழற்றிவிட்டால் தவறு நாளை உலகம் நகைக்கும்' என்று சமாதானம் செய்துகொண்டான்.

இந்தச் சமாதானமே அவன் மனத்தைக் கிளறியது. 'அவள் என்றைக்கும் நமக்காகக் காத்திருப்பாள். அதுவரையில் ஒவ்வொரு சொட்டுக் கண்ணீராக அவள் கண்களில் இருந்து கீழே விழுந்து கொண்டிருக்கும். ஏங்குவாள்; பெருமூச்சு விடுவாள்; உடல் இளைப்பாள்; 'அத்தான்' என்று பிதற்றுவாள்; ஏங்கி ஏங்கி, எலும்பும் தோலுமாக ஆகிவிடுவாள். நாம் நம் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டு இங்கு இருப்போம்' என்று நினைத்தவுடனே அவன் மனத்தில் தாங்க முடியாத வேதனை உண்டாயிற்று. 'எப்படியாவது மோகனாவைப் பார்க்க வேண்டும்' என்று நிச்சயம் செய்து கொண்டான்.

அடுத்த நாள் கிட்டாவையர் வந்தார். அவரிடம் "நான் வாசிக்கிறேன், அதோடுகூட மோகனாவின் நாட்டியத்தையும் ஏற்பாடு செய்யுங்கள்" என்று கேட்டுக்கொண்டான்.

பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல இருந்தது அவருக்கு. "ஆஹா, அதற்கென்ன, அப்படியே செய்கிறேன். நீங்கள் எழுதி வரவழைத்துவிடுங்கள்!"

"அது கௌரவமாக இருக்காது. நீங்களே ஒரு தந்தி கொடுங்கள்" என்று சொல்லவே, கிட்டாவையர் ஆனந்தத்துடன் புறப்பட்டார்.

சண்முகத்திற்கு மனத்தில் அதுவும் திருப்தி அளிக்கவில்லை. என்ன செய்யலாம்? எப்படி மோகனாவை இங்கே வரவழைக்கலாம் என்று யோசித்துக்கொண்டே இருந்தான்.

## எழுபத்து இரண்டாம் அத்தியாயம்

# பாம்பின் வாய்த் தேரை



அதே ரயில் வண்டிதான். அதே மோகனாதான், அதே இரவுந்தான். ஆனால் அன்று மதுரையில் இருந்து அவனுடன் வரும்போது இருந்த இன்பம் இப்போது அவளுக்கு இல்லை. விளக்கு இருக்கிறது. அன்பு எனும் பொறி அதில் இல்லாவிட்டால் ஒளி இருப்பதில்லை. மோகனாவின் மனம் தடுமாறியது. 'விதி தன்னோடு விளையாடுகிறது. அவரை வடக்கே அனுப்பியது. தன்னை இந்தப் பக்கம் அனுப்புகிறது. காற்று அடித்தால்கூட மரங்கள் ஒரு பக்கமாகத்தான் சாயும். ஆனால், நாம்தாம் தோப்பு மரமில்லையே! தனி மரந்தானே!' என்று நொந்துகொண்டே ரயிலில் சென்றாள் மோகனா.

பக்கத்து வண்டியில் வரும் பாண்டுக்கார பங்காரு நாயுடுவும் அவன் கோஷ்டியாரும் ஜன்னல் வழியாக மோகனாவின் வண்டியைப் பார்ப்பதும் ஏதோ பேசுவதுமாக இருந்தார்கள்.

மோகனாவின் வண்டி திருவாரூரை விட்டுப் புறப்படும்போது மணி ஐந்து. அந்த ஊர் கை காட்டி மரத்தைத் தாண்டும் பொழுதோ மணி ஐந்தேகால்! அவ்வளவு வேகம் அந்த வண்டிக்கு. 'அறந்தாங்கியில் போய்த் தூங்குகிறதை இன்னும் அரை மணி நேரம் கழித்துத் தூங்கினால்தான் என்ன? ஏன் மோகனாவைச் சீக்கிரம் இறக்கிட வேண்டும்?' என்ற எண்ணத்தில் அந்த வண்டி ராஜநடை போட்டது. வரதனும் மோகனாவும், ஜன்னல் வழியே வெளியே பார்த்துக்கொண்டு வந்தார்கள்.

தஞ்சாவூர் ஜில்லாவில் பட்டுக்கோட்டை தாலூகா அக்காலத்தில் விவசாயத்தில் மட்டந்தான் என்றாலும், மற்ற ஜில்லாக்களைவிட மட்டமானது அல்ல. வயலும் வரப்பும், தென்னையும் ஓடையும், ஆம்பலும் அல்லியும் அங்கும் இருக்கத்தான் செய்தன. செந்நெல் இல்லாவிட்டாலும் தென்னை காய்த்துக் குலுங்கியது. ரயிலோடு போட்டி போட்டுக்கொண்டு, நீ முந்தியா, நான் முந்தியா என்று



சொல்லியவண்ணம், வயலில் மேய்ந்த மாடுகள், வீட்டை நோக்கி ஓடி, போட்டியில் ஜெயித்துக்கொண்டிருந்தன. அந்த ரயிலும் பெரிய பண்ணையாரைப் போல்தான் நடந்தது. மோகனாவின் கண்களுக்கு வெளிப்புறக் காட்சிகள் பிடிக்கவில்லை. மனதை நோக்கினாலோ, அங்கு பற்றுக்கொம்பு இல்லாமல் பரிதவிக்கும் உள்ளம் அவளை மேன்மேலும் துன்புறுத்தியது.

இந்தக் கவலை, காதல் எல்லாம் ரயிலுக்கு இல்லையானாலும் இருட்ட இருட்ட அதுவும் நடுங்கிக்கொண்டே சென்றது. அந்தப் பாதையில் ரயிலுக்கே பயம் போலும். அடிக்கடி 'ஊவ் ஊவ்' என்று கத்திக்கொண்டே இருந்தது. அது ஒரு பழைய காலத்து எஞ்சின். அதன் புகைபோக்கி மண்ணெண்ணெய் வேம்பாவைப்போல் இருக்கும். அது புகையைக் கக்கவில்லை. நெருப்பைத்தான் கக்கிக்கொண்டே சென்றது. கார்த்திகை மாதத்தில் பையன்கள் பனம் பூவைக் காயவைத்து, அதில் நெருப்பை வைத்து விர்விர் என்று கனியக் கனியச் சுற்றுவார்கள். அந்தப் பொறி பறந்து வருவது போல, இந்த ரயில் பொறியும் ஆகாயத்தில் பறந்துகொண்டே வந்தது.

பொறி பழைய 'பொறி'. முன்பே ஒரு முறை மோகனாவிடம் க்ஷேமம் விசாரித்திருக்கிறது. இப்பொழுதும் வண்டிக்குள் மோகனா இருப்பதைக் கண்டவுடனே அது ஓடோடி வந்தது. அவள் கண்களிலும் விழுந்தது. ஆனால், துடைப்பவன் எங்கே? இன்றைக்கு யார் நம் கண்ணைத் துடைப்பார்கள் என்று பொருமிக்கொண்டே எதிரில் இருக்கும் தன் தாயிடம்கூடத் தன் கண்ணைக் காட்டாமல் தானே துடைத்துக்கொண்டாள் மோகனா. தாயிடம் கண்ணைக் காட்டலாம். ஆனால் தாய், 'நான் ஏன் ஊதறேன், அந்தச் சிக்கலாரை வந்து ஊதச் சொல்லு' என்று ஏசினால்?

ரயிலில் போகும்போதெல்லாம் விளையாடிக்கொண்டு, 'அதோ பார் தென்னை மரத்தில் எழு கிளை! இதோ பார் தாழம்பூ! அதோ கைகாட்டி!' என்று எல்லாம் சொல்லிக்கொண்டே வரும் தன் மகள், இன்றைக்குச் சோகத்தில் அமர்ந்திருப்பதைப் பார்த்தாள் வடிவாம்பாள். குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது. 'அவள் அபிப்பிராயத்துக்கு மாறாக ஆட அழைத்துச் செல்கிறோம். இந்தக் குட்டி இவ்வளவையும் மனசிலே வச்சுக்கிட்டு அங்கே போய் ஆடமாட்டேன்னு சொன்னா என்ன பண்ணுறது? நம்ப ஆட முடியுமா? எங்கே சொல்லிவிடுவாளா, பார்ப்போம்' அப்படி இவ சொன்னா நான் அங்கே இருந்தே நடையைக் கட்டிவிட மாட்டேன்?' என்று திமிராகவும் எண்ணிக்கொண்டாள்.

இப்படி இருவர் மனமும் போராடிக்கொண்டிருந்தன. ஆனால் வைத்திக்கு ஒரு போராட்டமும் இல்லை. பயணம் குஷியாக இருக்குமே என்ற எண்ணத்தில்தான் ரயிலில் ஏறினார். ஆதலால் அவர் பேசாமல் இருக்க முடியுமா?

"என்ன மோகனா, ஏதாவது பாடேன்" என்றார் வைத்தி.

"அதுக்குச் சங்கீதமெல்லாம் நல்லா தெரியும். ஆனால் நான்தான் பாடவேண்டாமுன்னு சொல்லிட்டேன்" என்று வடிவாம்பாளே பதில் சொன்னாள்.

"ஏன் அப்படிச் சொன்னீங்க?"

"அது என்னங்க! பாட்டுக் கச்சேரியிலே கிடைக்கிற பணம் பக்கவாத்தியக்காரனுக்குக் கொடுக்கவே காணாது. என்ன இருந்தாலும் ஆடறது மாதிரி வருமா?"

"நீங்க சும்மா இருங்க. நான் மோகனாவைக் கேட்கிறேன். ஏம்மா, உனக்கு ஆடறதுக்குப் பிரியமா, பாடறதுக்குப் பிரியமா?" என்று அவளுடைய பதிலுக்கு ஆசைப்பட்டுக் கேட்டார் வைத்தி.

"ஒருவரும் குறுக்கே பேசாமே இருக்கிறதுதான் பிரியம். அது இன்னிக்கி என்ன ஆடறதுங்கிறதைப்பத்தி யோசித்துக்கிட்டு வரது" என்று வைத்தியின் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தாள் வடிவாம்பாள்.

வைத்தியால் ஒரு நிமிஷங்கூடப் பேசாமல் இருக்க முடியாது. நட்டுவனார் மாத்திரம் பேசாமல் இருக்கிறாரே. அது என்ன ரகசியம் என்பதைப் புரிந்துகொண்ட வைத்தி, தாமும் வெற்றிலைப் பெட்டியைத் திறந்தார்.

வண்டி தம்பிக்கோட்டை ஸ்டேஷனைத் தாண்டிவிட்டது. இருட்ட இருட்ட ஒவ்வொரு தென்னை மரமும் பேய் போல் நின்றது. இருபுறமும் உள்ள தாழம்புதர்களில் எல்லாம் மின்மினிப் பூச்சிகள் சுற்றிக்கொண்டே இருந்தன. அப்போது எங்கே இருந்தோ ஒரு தவளை கத்தும் சத்தம் "ம்யூவ் ம்யூ" என்று கேட்டது. அதைக் கேட்டதும் மோகனாவின் உடல் வியர்த்தது. "அது என்ன வரதா?" என்றாள்.

தன்னுடைய கெட்டிக்காரத்தனத்தைக் காட்டி அவளுடன் பேச ஒரு சந்தர்ப்பம் வந்துவிட்டதைக் கண்டார் வைத்தி. அந்த அவசரத்தில், "தவளை பாம்பை முழுங்கறது!" என்று கூறினார்.

வரதன் சிரித்தான்: "அது இல்லீங்க. தவளை தாழம்புதரை முழுங்குது. வாயிலே முள் குத்திட்டுது, கத்துது!" என்று சொல்லி விட்டு, மோகனாவின் பக்கம் திரும்பினான். "பாம்பு தவளையை முழுங்குது" என்றான்.

"அப்படியானால் தவளை இவ்வளவு கத்துமா?"

"ஆமா மோகனா, பாம்புக்கு ஒரே வாயில் தவளையை முழுங்க முடியாது. பின்னால் வந்து லபக்குனு தவளையைப் பிடித்துக் கொள்ளும். கொஞ்சம் கொஞ்சமாகத் தவளையை முழுங்கிக் கொண்டே போகும். தவளை கத்த ஆரம்பிக்கும். கத்திக்கொண்டே இருக்கும். கடைசியில் சில தவளைகள், பாம்பின் வயிற்றுக்குள்ளே



போன பிறகுகூட கத்திக்கொண்டு இருக்கும். அதனால்தான் முதலில் அதிகமாகக் கேட்கிற தவளையின் சத்தம் [illegible] கைக்காரனுக்கு மிருதங்கம் இறங்கிறாப்பிலே, போகப் போகச் சுருதி குறைந்துவிடும்" என்று வரதன் விவரமாகச் சொன்னான்.

மோகனா, அவன் முகத்தையே பயத்துடன் பார்த்தாள், திகைத்தாள். அவள் மனத்திலே தாயின் பணத்தாசை தன்னை விழுங்கு வதைக் கண்டாள். தான் எவ்வளவு அலறியும், அது விடவில்லை. முதலில் எதிர்த்தோம். அப்பொழுதும் விடவில்லை. பிறகு கெஞ்சினோம். அப்பொழுதும் இரங்கவில்லை. இப்பொழுது சத்தம் போட முடியாமல் உட்கார்ந்திருக்கிறோம் என்று அவள் எண்ணிய போது அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது.

வைத்தி, "ஏன் அழறே?" என்று கேட்டார். வடிவாம்பாள் சற்றுத் திகைத்தாள். இருந்தாலும், "ஏய் வரதா, உனக்கு மூளை கீளை இருக்குதா? ராத்திரி பத்து மணிக்கு இந்த மாதிரி பயங்கரமான கதை எல்லாம் சொன்னா, பாவம், பாம்பு வாயில் தேரை போயிடுத்துன்னு அவ வருத்தப்படறா! இதோ பாரு மோகனா, தேரையைப் பாம்பு பிடிக்கும். பாம்பை மனுஷன் அடிப்பான். அந்த மனுஷனை அவனைவிடப் பலமான அதிகாரி அடிப்பான். அதுதான் உலகம்" என்றார்.

அதற்குள் வரதன், "அம்மா, எது உலகமோ எனக்குத் தெரியாது. ஆனால், அதுதான் அதிராம்பட்டணம்" என்று தூரத்தில் தெரிந்த விளக்கைக் காட்டினான்.

வண்டி அதிராம்பட்டணத்துக்கு வரும்போது, இரவு மணி பத்து இருக்கும். அந்த ஸ்டேஷனில் அப்பொழுதுதான் ஏற்றி வைக்கப் பட்டிருந்த மண்ணெண்ணெய் விளக்கு திரியில் ஒட்டியும் ஒட்டாமலும் வேதாந்திகள் போல மினுக்மினுக்கென்று தெரிந்தது. பொத்தான்களைப் போட்டும் போடாமலும் ஸ்டேஷன் மாஸ்டர் அங்குமிங்குமாக ஓடினார். அவர் ஒருவர் ஓடுவதுதான் அந்த ஸ்டேஷனில் ஆள் நடமாட்டத்தை உண்டாக்கியது. அப்போது பியான்டு கோஷ்டி பங்காரு நாயக்கர், வைத்தியின் அருகில் வந்தார். "நீங்க போங்க, நாங்க ஊருக்குள்ளே போய் ஏதாவது ஆகாரம் பண்ணிக்கிட்டு வாரோம்" என்றார்.

"ஆமாம், உங்களுக்கு வண்டி?" என்றார் வைத்தி.

"செலவு சேர்த்துத்தான் பேச்சு. நாலு இஞ்சு மைல்தானே இருக்குது? நடந்தே வந்துடறோம்!" என்று சொல்லிவிட்டு அவசரமாகப் போய்விட்டார்.

ஸ்டேஷன் வாசலில் வந்த வைத்தி அங்குமிங்கும் பார்த்தார். வண்டியையே காணோம். அரை பர்லாங்கு தள்ளி ஒரு ஆலமரத்தடியில் இரண்டு வண்டிகள் அவிழ்த்துப் போட்டிருப்பதைக்

கண்டார் அங்கு சென்று, "என்னடா, பாவிநூர் ஜமீன்தார் வண்டி வாவியா?" என்றார் வைத்தி.

வண்டிக்காரன் முண்டாசை இறுகக் கட்டிக்கொண்டு "எசமான், மன்னிக்கணுமுங்க தூங்கிப்புட்டேன். நீங்கதான் வைத்தி ஐயாவா?" என்று அடித்தொண்டையால் பேசினான்.

"ஆமாண்டா, இப்படிப் பனியிலே தூங்கினியானா என்ன அர்த்தம்? அந்தப் பொண்ணு வந்து நாலு நாழியா நிக்குது—!"

"ஐயோ, சமீன்தார் கிட்டே சொல்லிடாதீங்க. இந்தா, வண்டியைக் கட்டச் சொல்லறேன். நீங்க அவங்களைக் கூட்டிக்கிட்டு வந்துடுங்க" என்றான் வண்டிக்காரன்.

"என்ன, வண்டியிலே விளக்குக்கூட இல்லையா?"

"இருக்கிற விளக்கெல்லாம் கும்பாபிஷேகத்துக்கு எடுத்துக்கிட்டுப் போயிட்டாங்க. அதெல்லாம் ஒண்ணும் பயப்படாதீங்க. நம்ப மாடுகள் கண்ணை மூடிக்கிட்டே போகும்" என்று அவன் சமாதானம் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, வடிவாம்பாள் எல்லோருடனும் வந்து சேர்ந்தாள்.

மோகனாவுக்கோ, தரையில் காலை வைக்கவே பயம். நாகப்பாம்பு தேரையைப் பிடிக்கும் ஞாபகம் வந்துகொண்டே இருந்தது.

வண்டிகள் பூட்டப்பட்டதும் மோகனாவும் வடிவாம்பாளும் முன் வண்டியில் உட்கார்ந்துகொண்டார்கள். வரதன், வைத்தி, நட்டுவனார் ஆகியோர் பின் வண்டியில் ஏறிக்கொண்டார்கள். வண்டிகள் அந்தப் பாவிநூரை நோக்கிப் புறப்பட்டன. மணலில் ஆரக்கால் பதிந்தது. "உங்உங்" என்று சாணை பிடிப்பது போல் வண்டிச் சக்கரங்கள் கருதி கூட்டின. இப்படி இருக்கையில், இடையே வண்டிகள் பாதையை விட்டு எங்கேயோ வயலுக்குள்ளே இறங்கிச் செல்வது போல் இருந்தது. வடிவாம்பாள் அழகர் கோவில் பயணத்தை எண்ணிக்கொண்டாள். பயம் பிடித்துக்கொண்டது. மூச்சைக்கூட பலமாய் விடாமல் உட்கார்ந்தாள்.

பாதையின் இரண்டு பக்கத்திலும் உடை மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன. ஏற்கெனவே இருட்டு. கொஞ்சம் வந்த வெளிச்சத்தையும் அந்த உடை மரங்கள் மறைத்துவிட்டன. சோவென்று கடல் இரைச்சல் கேட்டது. இவ்வாறு வண்டி போய்க்கொண்டே இருந்தபோது, இரவு நடு நிசி இருக்கும். வண்டியின் வலச்சக்கரம் ஒரு பள்ளத்தில் சதக்கென்று இறங்கியது. வண்டியே குடை கவிழ்ந்துவிடும் போல் தோன்றியது. "ஐயோ!" என்றாள் வடிவாம்பாள். "என்னப்பா?" என்றாள்.

"ஒண்ணுமில்லேம்மா, கொஞ்சம் உளைங்க சக்கரம் இறங்கிட்டுது" என்று சொல்லி மாட்டைத் தட்டினான், வண்டிக்காரன். உடனே இதுவரை மேட்டில் இருந்த இடச்சக்கரமும் சகதியில் 'பொதுக்கென்று' இறங்கியது.



"அம்மா, கொஞ்சம் கீழே இறங்குறீங்களா?" என்றான் வண்டிக்காரன்.

"ஏம்பா?"

"வண்டி மாட்டிக்கிட்டுதுங்க. எடுக்கிறதுக்கு ஏழு எட்டு ஆளு வேணும். அதோ அங்கேதான் இருக்குது கும்பாபிஷேகப் பொட்டல். நாலு எட்டுலே நடந்தே போய்விடலாம்" என்றான் வண்டிக்காரன்.

வடிவாம்பாளுக்கு இந்தக் குரலை எங்கோ கேட்டது போல் தோன்றியது. வண்டியை விட்டு இறங்குவதற்கே பயம் ஏற்பட்டது. அதற்குள் "அம்மா! இறங்காதீங்க அம்மா. இங்கேயெல்லாம் தரையிலே காக்கா முள் இருக்கும். காலிலே குத்திக்கிட்டுதும்னா ஆறு மாசத்துக்கு ஆறாது" என்று சொல்லிக்கொண்டே வரதன் ஓடி வந்தான். கூடவே, வைத்தியும் மற்றவர்களும் இறங்கி அந்த வண்டியின் அருகில் வந்துவிட்டார்கள். அவர்களைப் பார்த்தவுடனே வடிவாம்பாளுக்குக் கொஞ்சம் பயம் நீங்கியது.

"என்னய்யா, உங்க பேச்சைக் கேட்டுச் சகதியிலே மாட்டிக் கிட்டோம்!" என்று வைத்தியைத் திட்டிக்கொண்டே இறங்கினாள் வடிவாம்பாள். தரையில் கால் வழுக்கியது. "ஏது, டான்ஸ் இங்கேயே ஆரம்பமாயிட்டாப்பிலே இருக்கு?" என்று சமயம் தெரியாமல் ஹாஸ்யம் பேசினார் வைத்தி.

வடிவாம்பாளின் கால் வழுக்கியதைப் பார்த்த வரதன், "நீ இறங்காதே மோகனா. இந்தாங்க, வைத்தி ஐயா! இந்தச் சக்கரத்தைத் தூக்குங்க" என்றான்.

எல்லோரும் தள்ளினார்கள். ஆனால், அவர்களே முழங்கால் சகதியில் நிற்கும்போது வண்டி எப்படி நகரும்? மோகனாவும் வேறு கதியில்லையே என்று இறங்கினாள்.

"எங்கேயப்பா இருக்குது கும்பாபிஷேகம் நடக்கிற இடம்?" என்றார் வைத்தி.

"என்ன கேக்கிறீங்க?" என்றான் வண்டிக்காரன்.

"இல்லே, கும்பாபிஷேகம்னா, காந்த விளக்கு, வாண வேடிக்கை, அது இது எல்லாம் இருக்குமே! இங்கே சுற்றி ஒரு கைமனுக்கு வெளிச்சத்தையே காணோமே!" என்று கேட்டார் வைத்தி.

"இதெல்லாம் பட்டிக்காடுங்க. லைட்டுக்கு நேத்திக்கே சொல்லி விட்டோம். இனிமேதான் வரும். அதோ தெரியுதே விளக்கு. அது தான் நம்ப ஜமீன்தார் ஊரு" என்று அடித்தொண்டையால் அடுக்கிக் கொண்டே போனான் வண்டிக்காரன். வைத்தி பார்த்த இடத்தில் ஒரு தென்னை மரத்தின் உச்சியில் ஒரு விளக்கு தெரிந்தது.

"ஆமாம், ஏன் விளக்கை இவ்வளவு உயரத்திலே வச்சிருக்காங்க" என்றார் வைத்தி.

"நம்ப வண்டிக்கு அடையாளமாகத்தான் வச்சிருக்காங்க காட்டுப்பாதையில்லே?" என்று சொல்லிக்கொண்டே வண்டிக்காரன் முன்னால் நடந்தான்.

ஆனால் அந்த விளக்கு இரவில் கடலில் மீன் பிடிக்கும் படகுகளுக்காக அங்குள்ள செம்படவர்களால் வைக்கப்பட்டது என்று வைத்திக்குத் தெரியுமா?

வடிவாம்பாள் வாயைத் திறக்கவே இல்லை. நட்டுவனார் ஆறாத் துயரத்துடன் நடந்தார். வரதன் மத்தளத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, வண்டிக்காரனைத் தொடர்ந்தான். மோகனாவின் கையை வடிவாம்பாள் இறுகப் பிடித்துக்கொண்டாள். அவளுடைய பெற்ற வயிறு துடித்தது. பணத்திற்கு ஆசைப்பட்டு, அருமைப் பெண்ணை இந்தப் பாழாய்ப்போன இருட்டில் சகதியில் அழைத்துக்கொண்டு செல்லுகிறோமே, வழுக்கி விழுந்துவிட்டால் என்ன செய்வது? நாளைக்கு ஒரு ஜலதோஷம் பிடித்துவிட்டால் என்ன செய்வது?" என்ற பயங்கள் எல்லாம் இப்போதுதான் வந்தன. மோகனாவின் முகத்தைப் பார்ப்பதற்கே அவளுக்கு வெட்கமாக இருந்தது.

இருந்தாலும், தாயின் அன்பு மோகனாவைப் பிடித்துக்கொண்டு நடந்தது. அந்த உளையில் கால்கள் அமுங்கிக்கொண்டால் எடுக்கவே முடியாது போல் இருந்தது. அப்படியிருக்கும் போது வரதன், "அம்மா, நில்லுங்கம்மா!" என்றான். அவன் முகத்தில் உக்கிரமான கோபம்.

"இதோ வந்துட்டோமுங்க. இன்னும் கொஞ்சத் தொலைவுதான்" என்றான் வண்டிக்காரன்.

"எங்கேய்யா வந்துட்டோம்? இது என்ன அநியாயம்? இப்படிச் சகதியாக இருக்கும்னு ஏய்யா சொல்லலே?"

"என்னாங்க, கோயிலு கட்டி கும்பாபிஷேகம் பண்ணினா மழை பெய்யாமே இருக்குமா?"

"என்னய்யா கோவிலாம், கும்பாபிஷேகமாம்! இந்த மோசக்கார வைத்தி கூப்பிடறபோதே சந்தேசப்பட்டேன். எங்களுக்கு வேண்டாமய்யா உங்க கச்சேரி!"

"என்ன மத்தளக்காரரே, நீங்களே ஆடறமாதிரி பேசறீங்களே!" என்றார் வைத்தி.

"அட, நீ சும்மா இரு அய்யா! இந்தப் பக்கங்களில் எல்லாம் பொதை மண் இருக்கும். அதிலே காலை வச்சா ஆளே பொதைஞ்சு போக வேண்டியதுதான்!" என்றான் வரதன்.

"நான் முன்னாலே போறேன். நான் பொதைஞ்சாத்தானே நீங்க பொதைவீங்க" என்றான் வண்டிக்காரன்.

"நீ மாத்திரம் புதையாதே! இந்த வைத்தியையும் சேத்துக்கிட்டுப் புதைஞ்சு போ! நாங்க வர முடியாது" என்றான் வரதன்.



அப்பொழுது வண்டிக்காரன், மெதுவாக ஒரு சீட்டி அடித்தான்.

"ஏனய்யா சீட்டி அடிக்கிறே?"

"இருட்டிலே தனியாக நடந்து பழக்கமில்லிங்க. சீட்டி அடித்துக்கொண்டே போறது" என்றான் வண்டிக்காரன்.

வரதனின் சந்தேகம் அதிகமாயிற்று. தன் மத்தளத்தை ஓங்கி, வண்டிக்காரனின் பிடரியில் ஒரு அடி அடித்தான்.

"ஐயோ, அம்மா" என்று அலறினான் வண்டிக்காரன். சகதியில் விழுந்தான். விழுந்ததும் வரதன் மோகனாவின் கையைப் பிடித்துக்கொண்டான். "திரும்புங்க அம்மா! இது ஏதோ மோசமாக இருக்குது" என்று கூறி அவர்களைத் திரும்ப அழைத்தான்.

அப்பொழுது வைத்தி, "ஏம்பா, இரண்டாயிரம் ரூபாய் பணம் கொடுத்தவங்களா மோசம் பண்ணுவாங்க?" என்று பாதையை மறிக்கவே, வரதன் வைத்தியை, "அட நீ!" என்று சொல்லி ஓங்கி ஒரு அறை அறைந்தான்.

வைத்தியின் கண்ணாடி சகதியில் விழுந்தது. வைத்தி மல்லாக்க விழுந்தார். "திருட்டுப் பயல்கள்!" என்று சொல்லிவிட்டு வரதன் மோகனாவை இழுக்கப் போகும் நேரத்தில் பக்கத்தில் இருந்த தாழம் புதரிலிருந்து பத்துப் பேர்கள் அவர்கள் மேல் வந்து விழுந்தார்கள்.

"ஐயோ!" என்று அலறினாள் வடிவாம்பாள். வரதனோ, இடசாரி வலசாரியாக மத்தளத்தால் நாலு பேரைச் சாய்த்தான். அப்போது வண்டிக்காரன் எழுந்து தன் கம்பால் வரதன் தலையில் ஒரு போடு போட்டான். வரதனின் தலையில் இருந்து ரத்தம் பீறிட்டது. "அம்மா!" என்று சகதியில் விழுந்தான்.

அந்தச் சமயம் பார்த்து மோகனாவைப் பிடித்துத் தூக்கினான் வண்டிக்காரன். கீழே கிடந்த வரதன் வண்டிக்காரனின் வயிற்றில் ஓங்கி ஒரு உதை உதைக்கவே, வண்டிக்காரன் "அம்மாடி!" என்று அலறி மல்லாக்க விழுந்தான். அவன் தலைமுண்டாசு சுழன்றது. மொட்டைத் தலையுடன் மீசையுமில்லாமல் அவன் இருந்தாலும் அந்தக் கொள்ளிக் கண்கள் அவனைக் காட்டிக் கொடுத்தன.

"ஐயோ, நாகலிங்கம்" என்று அலறினாள் வடிவாம்பாள். "ஜமீன்தார்" என்றார் வைத்தி.

அப்போது எங்கோ இருந்து "டும்டு, டும்டு, டும் டும்" என்று பியாண்டுச்சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுகள் பறந்தன. பங்காருவும் பியாண்டுக்காரர்களும் இந்தக் கூட்டத்தை நோக்கி ஓடி வந்தார்கள்.

இதைக் கண்ட நாகலிங்கத்தின் ஆட்கள், ஆளுக்கு ஒரு பக்கம் ஓடலானார்கள். நாகலிங்கம் கடலை நோக்கி ஓட்டமாய் ஓடினான். பியாண்டு மாஸ்டர் பங்காரு அந்த இருட்டில் குறி பார்த்து அவனைச் சுட்டார்.

"ஐயோ !" என்று அலறித் துடித்தான் நாகலிங்கம். அவன் காலில் குண்டு தைத்தது. ஆயினும் சுடுண்ட மிருகம் போல் பறந்தான்.

துரத்திக்கொண்டே ஓடினார் பங்காரு. யாரோ கடலில் குதிக்கும் சத்தம் கேட்டது. துப்பாக்கியால் தண்ணீரின் மேல் சுட்டுக்கொண்டே நின்றார், பங்காரு நாயக்கர். ஆனால், நாகலிங்கம் கடலில் முக்குளித்துக்கொண்டே சென்று ஒரு கட்டுமரத்தில் தாவி வெகு தூரம் போய்விட்டான்.

## எழுபத்து மூன்றாம் அத்தியாயம்

# எத்தன் வைத்தி!



அலைகள் எல்லாம் தலைகளாகத் தெரியும் கடலில் எப்படி ஆளைக் கண்டு பிடிப்பது? உயிருக்குத் துணிந்து கடலில் குதித்தவனை உயிர் மேல் ஆசை உள்ளவன் எப்படித் தேடுவது? இப்படியெல்லாம் யோசித்துக்கொண்டே கடலைப் பார்த்தபடி கைகளில் துப்பாக்கிகளுடன் நின்றார்கள் பங்காரு நாயக்கர் கோஷ்டியினர். ஆனால் அந்த ஒரு குண்டே போதுமானதாய் இருந்தது.

நாகலிங்கத்தின் காலில் தாங்க முடியாத வலி. இரத்தம் பெருக்கெடுத்தோடியது. புண்ணிலே புளி பட்டது போல் கடல் நீரின் உப்பு கால் காயத்தில் பட்டுச் சுள் என்று எரிந்தது. கட்டுமரத்தை வெகு சிரமத்துடன் தள்ளினான். வெகு தூரத்தில் நங்கூரம் போட்டிருந்த படகு ஒன்றன் மறைவில் அதை நிறுத்திவிட்டு அந்தப் படகில் தொத்தினான். அங்கிருந்து கரையைப் பார்த்தான். பங்காரு நாயக்கர் வகையறா ஆசாமிகள் நிற்பது நிழற்படம் போல் தெரிந்தது. படகின் அருகில்கூட குண்டுகள் வந்து விழுந்தன. இருந்தாலும் படகை வலித்துக்கொண்டே கடலுக்குள் சென்றுவிட்டான் நாகலிங்கம்.

தயங்கி நின்றார் பங்காரு. நாகலிங்கத்துக்குப் பெரிய காயம் ஏற்பட்டிருக்கும். அந்தக் காயத்தோடு, அரை மணி நேரங்கூட அவனால் நீந்த முடியாது. எப்படியும் கரையில் வந்து ஏறுவான், தம்முடைய பக்க வாத்தியக்காரர்கள் எல்லோரையும் கூப்பிட்டுக் கடலின் கரையில் பர்லாங்குக்கு ஒருவர் வீதம் பாரா போட்டு அவனைப் பிடித்துவிடலாம் என்று நினைத்தார். ஆனால், பத்துப் போலீஸ்காரர்களை எத்தனை பர்லாங்குக்குப் பாரா நிறுத்த முடியும்?



பாழாய்ப்போகாத சோழ மண்டலக் கரை பல நூறு மைல்கள் நீளம் இருக்கிறதே என்று வருத்தப்பட்டுக்கொண்டே திரும்பினார்.

திரும்பி வந்து பார்த்தபோது, நாகலிங்கத்தின் ஆட்களில் சிலரை அவருடைய பக்க வாத்தியக்காரர்கள் பிடித்துக் கட்டி வைத்திருந்தார்கள். ஒருவனிடம் போய் "நீ எந்த ஊர்?" என்று கேட்டார்.

அவன் பதிலே பேசவில்லை. அந்தக் காலத்தில் மனிதர்களைப் போலீஸ்காரர்கள் மிருகங்களைப் போல அடிப்பார்கள். அடிக்குப் பயந்துகொண்டே, திருடாதவர்கள்கூடத் திருடியதாக ஒப்புக் கொள்வதும் உண்டு.

நாகலிங்கத்தைக் கோட்டை விட்ட கோபத்தில் அந்த பேண்ட் மாஸ்டர் தம் கோட்டைக் கழற்றி எறிந்தார். ஆம், அவர் பேண்டுக்காரர் அல்ல. நமது எட்டு, பழம்புலி கண்ணையா நாயுடுவே தான். அவருக்கு வந்த கோபத்தில் இடுப்பில் இருந்த பெல்ட்டைக் கழற்றினார். அவர் கொடுத்த அடிகளுக்கு வேறு யாராவது ஆளாயிருந்தால் பூகோளத்தில் உள்ள அத்தனை ஊர்களையுமே ஒப்பித்திருப்பான். ஆனால், அந்தத் திருடர்கள் யாரும் பதிலே சொல்லவில்லை. உண்மையைச் சொன்னாலும் அடிக்கப்போகிறார், பொய்யைச் சொன்னாலும் அதேதான் என்று சும்மா இருந்தார்களோ என்னவோ?

கண்ணையா நாயுடுவுக்குக் கை சோர்ந்துவிட்டது. பெல்டும் கிழிந்துவிட்டது. எல்லோரையும் விலங்கிட்டு அழைத்துப் போக உத்தரவிட்டார். மோகனாவின் பக்கம் வந்தார்.

வாதன் தலையில் ரத்தம் ஒழுக, கீழே கிடந்தான். மோகனா அவனுடைய காயத்தில் இருந்த ரத்தத்தைத் துடைத்து, "என்ன வாதா, எப்படியிருக்கு?" என்றாள்.

"நான் செத்துப்போனால் யாருக்கும் நஷ்டமில்லை மோகனா. இந்த மட்டில் உன்னை விட்டார்களே" என்றான் வாதன். இதைக் கேட்டதும் மோகனாவின் கண்களில் கண்ணீர் வந்தது. வடிவாம்பாளுக்கோ, பயத்தில் காய்ச்சலே வந்துவிட்டது. வைத்தி ஒருவர் மாத்திரந்தான், போலீஸ்காரரின் அடிச் சத்தத்தில் நடுங்கிக் கொண்டிருந்தார். நட்டுவனார் முதலியவர்கள் பயத்தாலும் குளிராலும் நடுங்கிக்கொண்டு சகதியில் உட்கார்ந்திருந்தார்கள்.

வைத்தியின் அருகில் வந்தார் கண்ணையா நாயுடு. அவர் எந்த ஜோரிலேயே பழம்புலி நம்மீது பாய வருகிறது என்று கண்டு கொண்டார் வைத்தி. அசட்டுச் சிரிப்புடன் "சார், நீங்க யாரு சார்? பேண்டுக்காரன்னு சொல்லி என்னை ஏமாத்திப்பிட்டீங்களே!" என்றார்.

"என்ன மேன்? நீ ஏமாத்திப் பிட்டியா, நான் ஏமாத்திப் பிட்டேனா?"

"என்ன இப்படி மரியாதை இல்லாமல் 'மேன்னு' கேட்கிறேன்? நான் ஒரு பிளான் பண்ணியிருக்கேன் சார். ஊருக்குப் போனவுடனே உங்க டிஎஸ்பி கிட்ட சொல்லி, உங்களுக்கு ஒரு 'ரிவார்டு'க்கு ஏற்பாடு பண்ணப் போறேன்."

"என்ன மேன்! நீயா எனக்கு ரிவார்டு கொடுக்கப் போறே? நான் கொடுக்கிறேன் மேன் ரிவார்டு உனக்கு!" என்று தம் சொந்த பாஷையில் பேசினார் நாயுடு. வைத்தி யோசித்தார்.

திருடர்களை நாயுடு அடிப்பதைக் கண்டபோதே வைத்தியின் குடல் நடுங்கியது. குற்றமுள்ள நெஞ்சம் குடைந்தது. நான் குடுக்கிறேன் ரிவார்டு என்று நாயுடு சொன்னதும், கையில் காப்பைப் போட்டு விடுவாரோ என்று அஞ்சினார். உடனே வைத்தியின் சாமர்த்தியம் தலைதூக்கியது.

"நீதானேய்யா இவங்களை இங்கே கூட்டிக்கிட்டு வந்தே? நீதானே கச்சேரின்னு சொல்லிப் பேசினே?" என்று இரண்டு கேள்விகளை வீசினார் நாயுடு.

வைத்தி பதில் சொல்லவில்லை. கன்னையா நாயுடுவின் முகத்தைக் கோபத்துடன் பார்த்தார்.

"ஓய், நான் யாருன்னு தெரியுமா? போலீஸ்! என்கிட்டே உன் வேலையெல்லாம் காண்பிக்காதே. எங்கேயாவது மைனர் பசங்க இருந்தா, அவங்கிட்டே போய்ப் புளுகு. ஏம்மா, இவருதானே உங்களைக் கச்சேரிக்குப் பேசினாரு?"

"ஆமாம்" என்றாள் வடிவாம்பாள்.

"இப்ப என்ன சொல்றே மேன்? அவனை உனக்கு எத்தனை நாளா தெரியும்?" என்று கேட்டு அதிகார தோரணையா பார்த்தார் ஏட்டு.

"நீங்க யாரு சார்? பியாண்டுக்காரனா, இல்லை, போலீஸ் இன்ஸ்பெக்டரா? இல்லை, மாஜிஸ்டிரேட்டா?" என்றார் வைத்தி.

"என்ன மேன் என்னையே திருப்பிக் கேள்வி கேட்கிறே?"

"ஏன் மேன் கேட்கப்படாது? லண்டன்லே உங்க மாதிரி ஒரு ஏட்டு இப்படிக் கேட்டா என்ன நடக்கும் தெரியுமா? கன்சர்வேடிவ்கள் போடுகிற சத்தத்திலே பார்லிமெண்டே இடிஞ்சு போகும். முதலிலே ஒரு ஜென்டில்மேன்கிட்ட எப்படிப் பேசணும்னு தெரிஞ்சுக்குங்க சார்."

ஏட் கன்னையா நாயுடுவுக்குக் கொஞ்சம் கடபுடா என்றது.

"உங்களை யாரு சார், லண்டனைப்பற்றிக் கேட்டாங்க? நாகலிங்கத்தை உங்களுக்குத் தெரியுமான்னு கேட்டால்...?"

"அதைக் கேட்க நீங்க யாரு சார்...? உத்தியோகத்துக்கு வந்துட்டீங்க, கண்டபடி கேள்வி கேட்கிறீங்க. ஒழிஞ்ச நேரத்திலே 'லா' படிக்கணும் சார். ஆமா, நீ மோகனாவைக் காப்பாத்த வந்தியா, திருடனைப் பிடிக்க வந்தியா?" என்று நாயுடுவையே திருப்பினார் வைத்தி.



"இதிலே உமக்கென்ன சந்தேகம்?"

"சந்தேகம் இல்லே மிஸ்டர். அதுதான் என் பாயிண்ட். நீர் திருடனைப் பிடிப்பதற்காக மோகனாவை ஆபத்துக்குள்ளாக்கினீர். உமக்குப் பிரமோஷன் கிடைக்கறதுக்காக ஒரு புகழ் பெற்ற கலா தேவியை நடுக்காட்டில் சிக்க வைத்தீர் என்று நான் குற்றம் சாட்டுகிறேன். ஐ அக்யூஸ் யூ" என்றார் வைத்தி.

"நீங்க சொல்றது ஒண்ணும் விளங்கல்லிங்களே."

"இப்ப விளங்காது சார்! நாளைக்கு மெட்ராஸ் ஹைகோர்ட்டிலே நார்ட்டன் கேட்கிறபோது விளங்கும்! ஆமா சார், உங்களுக்குத்தான் மோகனாவுக்கு ஆபத்து வருதுன்னு தெரியுமே, நீங்கள் ஏன் அதிராம்பட்டணத்திலேயே மோகனாவை எச்சரிக்கை செய்யல்லே? ஏன் சார், அகப்பட்டுக்க விட்டீங்க? உங்க கையில் இருந்த துப்பாக்கி நாகலிங்கம் கையிலே இருந்ததுன்னு வச்சுக்குங்க, மோகனா கதி என்ன ஆகும்? திருடனைப் பிடிக்கிறது மட்டும் உங்க டியூடி இல்லை சார், பப்ளிக்கைக் காப்பாத்தறதும் உங்க டியூடி. "ஸேப்டி பஸ்டு. டு யூ, அண்டர்ஸ்டேண்ட்," என்று சரமாரியாய்ப் பொழிந்தார் வைத்தி. கன்னையா நாயுடு அயர்ந்தே போனார்.

"சரி, எல்லோரும் வண்டியிலே ஏறுங்க!" என்றார் எட் கான்ஸ்டேபிள்.

"தாங்க்யூ!" என்று சொல்லிக்கொண்டே அவசரமாக வண்டியில் ஏறினார் வைத்தி.

'சரி வைத்தி, நீ போ, திருவாரூருக்கு உன்னைக் கவனிச்சுக்கிறேன்' என்று சொல்வது போல் ஏட்டு முறைத்துப் பார்த்தார். இருந்தாலும், பாதுகாப்புக்காக வண்டிகளின் கூடவே ஸ்டேஷனுக்கு வந்தார் கன்னையா நாயுடு.

அன்று அதிராம்பட்டணத்திலிருந்து திருவாரூர் செல்லும் ரயிலில் மூன்றாவது வகுப்பில் பல கைதிகளும், போலீஸ்காரர்களும் ஏறினார்கள். வடிவாம்பாளும் மற்றவர்களும் முதல் வகுப்பு வண்டியில் அமர்ந்தார்கள். வைத்தியோ, திரிசங்கு சொர்க்கத்தில் ஊசலாடிக்கொண்டிருந்தார். அதாவது இண்டர் கிளாசில் அல்ல. 'சந்தர்ப்ப வசத்தால் நாம் இந்த வழக்கில் மாட்டிக்கொண்டோமே! இந்த ஹெட்கான்ஸ்டபிள் நம்மைக் கைது செய்யப் போகிறாரா? இல்லை, நம் பேச்சில் லயித்து விட்டுவிடுவாரா?' என்ற யோசனைதான் அது.

கன்னையா நாயுடுவும் கூடவே பிரயாணம் செய்தார். ஆதலால் அடிக்கடி இறங்கி வந்து, அழகர் கோவிலிலிருந்து வரும் வழியில் நடந்த செய்திகளையெல்லாம் விசாரித்து அறிந்துகொண்டார். மோகனாவும், வடிவாம்பாளும், அங்கு நடந்தவற்றைச் சொன்னார்கள்.

"உங்க வீட்டிலே வேறு ஏதாச்சும் விசேஷம் நடந்துச்சா? ஆமா அந்த மூக்குத்தி என்ன ஆச்சு?" என்றார் நாயுடு.

"அதைத்தான் அவன் முகத்திலே விட்டு எறிஞ்சுடுத்தே என் பொண்ணு!" என்றாள் வடிவாம்பாள்.

"நாகலிங்கம் அப்படிச் சொல்லலியே! நீங்களே எடுத்துக்கிட்டுப் போனதாகச் சொன்னானே?"

அப்பொழுது நட்டுவனார், "இல்லே சார், அது எல்லாம் தப்பு. என் கண்ணாலே பாத்தேன். மோகனா அதை டப்பாவோடே தூக்கி எறிஞ்சுடுத்து" என்று இடையில் பேசினார்.

நட்டுவனார் பேசியவுடன், வடிவாம்பாளுக்கு வயிற்றில் சுரீர் என்றது. காரணம், வேறு ஒன்றுமில்லை. அவருடைய தங்கப் பற்களைக் காணோம். வெண்மையான பற்கள் பழைய முறையில் தெரிந்தன. சகதியை அலம்பி, முகம் கழுவி வாய் கொப்புளித்துவிட்டு, அதிராம்பட்டணத்தில் ரயில் ஏறினார். அப்போது அவருடைய பற்களில் பச்சைத் தண்ணீர் பட்டுவிட்டது.

"என் முத்துக்குமரு, பல்வலி எப்படி இருக்கு?" என்றாள் வடிவாம்பாள்.

"யாரோ செம்மைக்குப் புடரியிலே ஒரு போடு போட்டுட்டான் அம்மா. புடரி வலியிலே பல் வலி தெரியலே" என்றார் நட்டுவனார்.

"ஏம்மா, உங்க வீட்டுக்கு நாகலிங்கம் வந்தானா? இல்லை, வேறு ஏதாவது சந்தேகமான ஆள் நடமாட்டம் இருந்ததா?" என்று கேட்டார் நாயுடு.

"அப்படி ஒன்னும் இல்லீங்க. ஆனால், வைர அட்டிகையை அலமாரியிலே வைத்திருந்தேன். அதை யாரோ தூக்கிக்கிட்டுப் போயிட்டான்."

"நீங்க அதை அலமாரியில்தான் வைக்கிறீங்கன்னு யாருக்காச்சும் தெரியுமா?"

"எங்க வீட்டுக்குள்ளே ஒருத்தரையும் வரவிடமாட்டேன். அப்படித் தெரியும்னு சொன்னா, இந்த வைத்திக்குத்தான் தெரிஞ்சிருக்கும்" என்றாள் வடிவாம்பாள்.

வைத்தியை, 'ஓய், நீ நம்ம கையிலே இருந்து தப்ப முடியாது' என்ற பாவனையில் முறைத்துப் பார்த்தார் நாயுடு.

இவ்வாறு ஏட்டையாவும் வைத்தியும் கிளித்தட்டு மறுகிக் கொண்டே திருவாரூருக்கு வந்து சேர்ந்தார்கள்.

வீட்டுக்கு வந்தது முதல் வடிவாம்பாளுக்கு நடுக்கமும் குளிரும், காய்ச்சலும் இருந்துகொண்டே இருந்தன. மோகனாவோ, பிரமித்திருந்தாள். வரதனின் அடிக்கு சர்க்கார் வைத்தியசாலையில் மருந்து போட்டார்கள். வரதனுக்கு மருந்தே வேண்டாம், விட்டால் போதும் என்று தோன்றியது. அவ்வளவு நேரம் அவனை ஆஸ்பத்திரியில் வைத்துவிட்டார்கள். தலையில் 'பாண்டேஜ்' ஜைக் கட்டிக்கொண்டு, வீட்டுக்குள் நுழைந்தான் வரதன். வடிவாம்பாள் எதிரில் வந்து நின்றான்.



"என்ன அம்மா? உடம்பு எப்படி இருக்குது?" என்று கேட்டான். வடிவாம்பாளோ, முக்கி முனகிக்கொண்டு இருந்தாள். அவனுடைய நெற்றில் கையை வைத்துப் பார்த்தான் வரதன். தலை கொதிக்குது. "அம்மா, அம்மா, என்னம்மா செய்யுது? வைத்தியரைக் கூட்டிக்கிட்டு வரவா?" என்று வரதன் கேட்டவுடனே மலங்க மலங்க விழித்தாள் வடிவாம்பாள். அவனை ஏற இறங்கப் பார்த்தாள். அவன் தலைக் கட்டைக் கண்டாள்; "அப்பா, உனக்குக் காயம் அதிகமா?" என்று கேட்டாள்.

"காயம் அதிகம் இல்லீங்க! கட்டுத்தான் அதிகம் கம்மா ஒரு சாப்புக்குக் குத்திருக்கான், காதுதான் கொய்ங்குது!" என்று அவள் அருகில் உட்கார்ந்துகொண்டு தலையை அமுக்கிவிட்டான் வரதன்.

அன்றைக்கு வடிவாம்பாள் அங்கு வரதனைக் காணவில்லை. அவளுக்குச் சிறுவயதில் ஒரு பிள்ளை பிறந்து இறந்துவிட்டது. இன்று அந்தப் பிள்ளையே அவள் அருகில் அமர்ந்து இருப்பது போல ஒரு உணர்ச்சி வந்தது. "அப்பா வரதா! நான் மோசம் போயிட்டேன். என்னாலே உனக்கும் அடிபட்டுடிச்சு. பாவி, பணத்துக்கு ஆசைப்பட்டு இந்தக் குடும்பத்தையே கெடுத்துட இருந்தேன், வரதா!" என்று சொல்லி 'ஹோ' வென்று அலறினாள்.

அவளுக்கு ஒரு சுபாவம். மை இருட்டிலே மின்னல் வருவது போல் சில சமயம் அவள் மனத்தில் உண்மைகளும் வந்து மறையும். இதைக் கேட்டதும் வரதனின் கண்கள் கலங்கின. வடிவாம்பாளுக்கும் இதயம் உண்டு என்பதைப் பார்த்துப் பிரமித்துப்போனான்.

அப்போது, "திருச்சிற்றம்பலம்" என்ற குரல் கேட்டது. பரதேசியார் உள்ளே வந்தார்.

"என்ன வடிவாம்பாள், சௌக்கியமா?"

"சாமி, என் குழந்தையை நீங்க காப்பாத்தினீங்க, நான் மறுபடியும் நேத்து பறிகொடுக்க இருந்தேன். நல்ல வேளையாக, ஏட்டையா வந்து காப்பாத்தினாரு" என்று அழுதாள்.

"அழாதே அம்மா! இனிமேல் இம்மாதிரி முன்பின் தெரியாத இடங்களில் கச்சேரிக்கு ஒப்புக்கொள்ளாதே!" என்று கூறி, "குழந்தாய், அருகில் வா" என்று மோகனாவை அழைத்தார். மோகனா அருகில் வந்து நின்றாள்.

"உனக்கு வந்த கஷ்டம் நீங்கிவிட்டது. இனி அந்தப் பயல் திருவாரூர்ப்பக்கம் வரமாட்டான்" என்றார்.

"அது எப்படி சுவாமி?"

"அவன்தான் கடலில் விழுந்து ஓடிவிட்டானாமே!" என்று சொல்லிச் சிரித்தார். "இந்தா, வடிவாம்பாளுக்கு இந்த விபூதியை இடு. நீயும் இட்டுக்கொள்" என்று கையில் சிறிது விபூதியைக் கொடுத்து விட்டு, விடை பெற்றுக்கொண்டார் பரதேசியார்.

ஆனால், அந்த மகான், 'நானேதான், கன்னையா நாயுடுவிடம் செய்தியைச் சொல்லி பாண்டுக்காரன் வேஷத்தில் உங்கள்கூட அனுப்பினேன்' என்று சொல்வாரா?

எழுபத்து நான்காம் அத்தியாயம்

## தாயின் சந்தேகம்



மூன்று எழுத்துகளிலே இரண்டு வார்த்தைகள். அந்த இரண்டையும் காதால் கேட்டவுடனே கருத்து நடுங்கும். ஆனால், ஒன்றை அடித்தால் சந்தோஷம். இன்னொன்றை அடித்தால் பயம். பாம்பும், தந்தியுந்தான் அவைகள்!

இரவு பதினொரு மணிக்குத் தந்திச் சேவகன் வாசலில் வந்து நின்று சைக்கிள் மணியை அடித்தவுடனே, வடிவாம்பாள் எழுந்து ஓடி வந்தாள்.

அவளுக்கு வயிற்றில் பகீர் என்றது. 'என்ன கஷ்ட காலமோ, யாருக்கு உடம்பு முடியாமே தந்தி அடிச்சு இருக்காங்களோ?' என்று பயந்துகொண்டே தந்தியை வாங்கினாள். அதிகமாக உறவினர்கள் இல்லையென்றாலும் தந்தி தந்திதானே? அவளுடைய கைகள் பழைய தம்புராத் தந்தியைப் போல் வெடவெடவென்று நடுங்கின. வீட்டிற்குள்ளே வருவதற்குள் முகம் எல்லாம் வியர்த்துவிட்டது.

"என்னம்மா?" என்று கேட்டுக்கொண்டே மோகனா வந்தாள். வரதனும் அருகில் வந்தான்.

நல்ல வேளையாகத் தந்தியைப் படிப்பதற்குப் பள்ளிக்கூட வாத்தியாரையோ, டாக்டரையோ, போஸ்ட்மாஸ்டரையோ தேட அவசியமில்லை. மோகனாவே தந்தியைப் பிரித்தாள். அதன் தலைப்பிலே 'மெட்ராஸ்' என்று போட்டிருந்தது. அதைப் படித்ததும் அதற்குக் கீழேயுள்ள வார்த்தைகளில் அவள் கண்கள் செல்லவில்லை.

அவளுடைய நெஞ்சம் எந்த ஊரில் இருக்கிறதோ, அந்த ஊரிலிருந்தே தந்தி வந்திருப்பதைப் பார்த்தவுடனே பதறினாள்! கண் கருத்துக்கும் கண்ணுக்கும் என்னதான் சம்பந்தம் இருக்கிறதோ? கண் பார்த்தவுடனே கருத்து இயங்குகிறது. காதலும் அப்படித்தான். கவலையும் அப்படித்தான். அவள் கை நடுங்குவதையும், கண் கலங்குவதையும் கண்ட வடிவாம்பாளும் வரதனும் அவள் முகத்தையே பார்த்தார்கள்.

என்னவோ ஏதோ என்று எண்ணிய வடிவாம்பாளுக்கு அழத்தோன்றியது. மோகனா தந்தியைத் தனக்குள் படித்தாள். "22ஆம்



தேதி வெள்ளிக்கிழமை, நம் வீட்டுக் கல்யாணத்தில் கச்சேரி தயவு செய்து ஒப்புக்கொள்ளவும், பதில் - கிட்டா" என்று இருந்தது.

படிக்க ஆரம்பித்தவுடனே வருத்தப்பட்ட அவள் மனத்துக்கு மதராசில் கச்சேரி வந்திருக்கிறது என்பதைப் படித்தவுடனே, இதைச் சாக்கிட்டாவது மதராசுக்குப் போய் வர மாட்டோமா என்று சந்தோஷம் தோன்றியது. அங்கு போவது போலவும், சண்முகத்தைச் சந்திப்பது போலவும், அவனுடன் அளவளாவிப் பேசுவது போலவும் பல தோற்றங்கள் அவள் மனத்தில் தோன்றின.

மனோ வேகத்திற்கு எல்லையே கிடையாது. எழுதவும், படிக்கவும் நேரம் ஆகும். அது நாம் செய்வது. இதய வேகமோ இறைவன் செய்வது.

"என்னடி, உன்னைப் படிக்க வச்ச லட்சணம்? தந்தியைக் கையிலேயே வச்சுக்கிட்டு நிக்கிறியே! இந்தப் பாழாபோன இங்கிலீசை நானாவது படிச்சுக்கிட்டேனா?" என்றாள் வடிவாம்பாள்.

"என்ன தங்கச்சி எழுதியிருக்கு? அவருக்கு உடம்புக்கு ஏதாச்சும்..." என்றான் வரதன். மோகனா அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

"அவனா தந்தி குடுத்திருக்கிறான்? படிக்க வேண்டாம், கிழிச்சு எறி. மோகனான்னு பெயர் போட்டுத் தந்தி வந்ததுமே, என்னடான்னு பார்த்தேன். தமிழிலே காயிதம் எழுதினா, இந்த அம்மாக்காரி படிச்சடுவான்னு நினைச்சு இங்கிலீசிலே தந்தி அடிச்சிருக்கான்" என்று துப்புக் கண்டுபிடித்தாள் வடிவாம்பாள்.

"அவரு தந்தி இல்லேம்மா!"

"வேறு யாரு தந்தி?"

"யாரோ, கிட்டாவய்யர்னு ஒருத்தர் கொடுத்திருக்கிறாரு. வர வெள்ளிக்கிழமை கச்சேரி ஒப்புக்கொள்ளணுமுன்னு கேட்டிருக்கிறார்" என்று வருத்தத்துடன் கூறினாள் மோகனா. இதைக் கேட்ட பிறகும் வடிவாம்பாளின் சந்தேகம் தீரவில்லை. கிண்டலாகப் பேசினாள்.

"நீங்க பட்டணத்திலே வந்து பத்து நாளைக்கு இருக்கணும்னில்லே எழுதியிருக்கும்?..."

"அதெல்லாம் உங்க மனசிலே இருக்கும் தந்தியிலே இல்லை!"

"ஏண்டி, என்னையே ஏமாத்த பார்க்கிறியே. இங்கிலீசிலே எதையோ படிச்சிட்டு எதையோ அர்த்தம் சொல்றே நீ?"

"அதை எப்படி நீங்க கண்டீங்க?"

"இல்லாட்டி கையிலே தந்தியை வாங்கினதும் அப்படி மலைப்பாயா? எனக்கா தெரியாது! ஏ வரதா, இந்தத் தந்தியைக் கொண்டுட்டுப் போய், பள்ளிக்கூட வாத்தியார்கிட்டே குடுத்து என்ன எழுதியிருக்குன்னு கேட்டுக்கிட்டு வா!"

மோகனாவுக்குக் கோபம் வந்தது. "அம்மா, நான் படிச்சுச் சொல்லறேன். அப்புறம் வாத்தியார்கிட்டே அனுப்பிச்சா?"

"அட என் சத்தம் போட்றே. உன் ரகசியத்தை வாத்தியார் பார்த்துடப் போறாரேன்னு தோணுதா?"

"உங்களுக்கு என்னைவிட வாத்தியார்கிட்டே நம்பிக்கை போலிருக்கு?"

"மத்த விஷயத்துக்கெல்லாம் உன்னை நம்புவேன். இந்த மதராசு விஷயத்திலே மாத்திரம் நான் நம்ப மாட்டேன். ஏ..."

"நீ போகாதே, வரதா. அவங்களே போய்ப் படிச்சுக்கட்டும்."

"சரி, கொடு என்கிட்டே" என்று வாங்கிக்கொண்டே, வாத்தியார் ராமசிவம் பிள்ளை வீட்டை நோக்கி ஓடினாள் வடிவாம்பாள்.

சந்தேகத்துக்குச் சிறிதாவது காரணம் இருந்தால் சமாதானம் செய்யலாம். வேண்டுமென்றே சந்தேகப்பட்டால் என்ன செய்வது என்று வருத்தத்துடன் நின்றாள் மோகனா. அப்போது வரதன் மோகனாவைப் பார்த்துச் சிரித்தான். "என்ன மோகனா, வாத்தியாரு தந்தியைப் படிச்சா நிசத்தைச் சொல்லிப்பிடுவாரே!" என்று கேட்டான்.

"வரதா, நீயுமா என்னைச் சந்தேகப்படறே?"

"சந்தேகப்படலே மோகனா. அவரு கொடுத்திருப்பாரோன்னு ஒரு சமுசயம்."

வடிவாம்பாளும் சந்தேகப்பட்டாள். வரதனுந்தான் சந்தேகப் படுகிறான். ஆனால், அம்மாவின் சந்தேகத்தில் கோபம் கொண்ட மோகனா வரதனின் சந்தேகத்தில் ஆனந்தம் அடைந்தாள், சிரித்தாள்! வெட்கம் வந்தது. "அதெல்லாம் இல்லே. மதராசுலே கச்சேரின்னுதான் தந்தி வந்திருக்கு. அதை ஒத்துக்கொண்டால், நம்ம மதராசுக்குப் போகலாம். அவரையும் பார்க்கலாம்."

"சரி, ஒத்துக்கொண்டா போவுது" என்றான் வரதன்.

"நம்ப ஒத்துக்கொண்டா, அம்மா ஒத்துக்க மாட்டாங்களே!"

அதற்குள் வடிவாம்பாள் தந்தியைப் படித்து விஷயத்தைப் புரிந்து கொண்டு வந்துவிட்டாள்.

"என்னம்மா?" என்றான் வரதன்.

"அதான், மோகனா படிச்சுச் சொன்னதே!"

"நான் படிச்ச சொன்னாத்தான் உங்களுக்குச் சரியா இருக்காதே!"

"சரியா இருக்காதா? நீதான் நல்லா படிச்சே. அந்த வாத்தியாரு கையிலே தந்தியை வச்சுக்கிட்டுத் தடவினாரு..."

"ஏன், இங்கிலீசு தெரியலையா?" என்றான் வரதன்.

"இங்கிலீசு தெரியாமல் இல்லே. எழுத்துத் தெரியலே ராத்திரி நேரம் பாரு. வெள்ளெழுத்து. தந்தியைக் கிட்ட வச்சா எழுத்து தெரியலே. தள்ளி வச்சா கை நீளம் பத்தல்லே! ஒரு வழியா அர்த்தத்தைப் புரிஞ்சு சொன்னாரு."



"நீங்க என்ன சொல்றீங்க மதராசுக்குப் போகா?" என்றான் வரதன்.

"ஆளு யாரோ, எவரோ?"

"பணம் என்ன போட்டிருக்காங்களாம்?"

"பணம் ஒன்னும் அவரு படிக்கல்லியே!"

"தந்திக்கு மேலே 1845-ன்னு போட்டிருக்காயே, மோகனா சொல்லிச்சே!" என்றான் வரதன்.

"என்ன, ஆயிரத்தி எண்ணூத்தி நாற்பத்தஞ்சா? வாத்தியார் மத்த படிக்கவே இல்லையே!" என்றாள் வடிவாம்பாள். அவசரமாகத் தந்தியைப் பிரித்து மோகனாவிடம் கொடுத்தாள். பணம் என்றவுடனே தாயின் அக்கறை கச்சேரியின் பக்கம் திரும்புவதைக் கண்டாள் மோகனா. இருந்தாலும் தாயை ஏமாற்ற மனம் வரவில்லை.

"அது சாயங்காலம் ஆறு மணி நாற்பத்தைந்து நிமிஷம்னு போட்டிருக்காங்க, அம்மா!"

வரதனும் மோகனாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். "அவ்வளவுதானா! ஏம்மா, போயிட்டுத்தான் வந்துடுவோமே?" என்றான் வரதன்.

"ஏன், உனக்கு ஏதாவது வேலையிருக்குதா? என்னைக் கூட்டிக்கிட்டுப் போவீங்க இரண்டு பேரும். அங்கே ஒருத்தருக்கும் தெரியாமே, ஆஸ்பத்திரிக்குப் போய் அவனைப் பார்த்துவிட்டு வருவீங்க. இதெல்லாம் வேண்டாம். 'முடியாது'ன்னு பதில் தந்தி கொடுத்துவிடு" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள் வடிவாம்பாள்.

"முடியாது" என்று தந்தி கொடுத்தாலும் அதே சமயத்தில் வடிவாம்பாளுக்கு ஒரு வருத்தமும் ஏற்பட்டது. 'பட்டணத்துக் கச்சேரியை விட்டுவிட்டோமே, சே! இந்தச் சிக்கலான் வந்து தொந்தரவா போச்சே! அவன் போற ஊருக்கு நாம்ப போகப்படாதுன்னு வச்சா, பணம் ரொம்ப நஷ்டமாகும் போல இருக்கே!' என்று யோசித்துக்கொண்டே இருந்தாள்.

அப்பொழுது திடீரென்று இன்னொரு பயமும் வந்தது. 'பாவி நாகலிங்கம் ஏற்கெனவே திருடன் அவன் கையிலிருந்து நோட்டை வாங்கியிருக்கிறோம். இந்த நோட்டு அவ்வளவும் கள்ள நோட்டாக இருந்தால்...? என்னடா வம்பா போச்சு இதை எப்படி மாத்தறது? இந்த வைத்திகிட்டே கொடுத்து மாத்தச் சொல்வோமா? ஆனால் அவரிடம் கொடுத்தால் திரும்பி வராதே! எதற்கும் காலம்பற மலையாள ஜோஸ்யர் கிட்டே கொண்டுபோய் ஒரு நோட்டைக் கொடுப்போம். அவரு வேறே பணம் பணம்னு நச்சரிக்கிறாரு. ஒரு நோட்டைக் கொடுத்து, ஐம்பது போக ஐம்பது கொடுங்கன்னு கேட்போம் சே, பாவம், ஜோஸ்யரைப் பிடிச்சுட்டாங்கன்னா...?'

"சே, சே, அவருக்குத்தான், கள்ள நோட்டா, நல்ல நோட்டான்னு ஜோஸ்யத்திலேயே தெரியுமே! அப்படி பிடிக்கக்கிட்டாதான் என்ன? யாருக்கு என்ன பலன் சொன்னாரோ அந்தப் பாவத்துக்குப்

பிடிபடுகிறோர்' என்று பல யோசனைகள் அவளுக்கு ஓடிக்கொண்டே இருந்தன.

அடுத்த நாள் காலை ஏழு மணி இருக்கும் வாசலில் இரண்டு காளைகள் பூட்டிய அழகான பெட்டி வண்டி ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து காரைக்கால் நடேசன் இறங்கினார். அவருடைய சில்க் சட்டையையும், சில்க் வேஷ்டியையும் பார்த்த வடிவாம்பாள், யாரோ பலமான புள்ளி என்று எண்ணினாள்.

"வாங்க" என்று கூப்பிட்டாள்!

"நான் இருப்பது காரைக்கால் என்னை நடேசன் என்று சொல்லுவாங்க."

நடேசன் உள்ளே வந்தார். கூடவே இரண்டு ஆட்கள் இரண்டு நீளமான பெட்டிகளை உள்ளே கொண்டுவந்து வைத்தார்கள். வடிவாம்பாள், 'பெட்டிக்குள்ளே என்ன இருக்கும்? ஏதாவது, தம்புரா வியாபாரியோ?' என்று எண்ணினாள். நடேசன் பெட்டியைத் திறந்தார். அதில் இருந்த அழகான பாரிஸ் வெல்வெட்டு ரோல்கள் கண்ணைப் பறித்தன.

வடிவாம்பாளுக்குச் சடக்கென்று ஒரு யோசனை தோன்றியது. தன்னிடம் இருக்கும் கள்ள நோட்டுகளைக் கொடுத்து, துணியாக வாவது வாங்கி வைத்துவிடலாம் என்று எண்ணினாள். அதற்குள், 'இது சுங்க வரி கொடுக்காத சரக்காயிற்றே. யாராவது பிடித்துக் கொண்டால், என்ற பயமும் வந்தது.

"எங்க வீட்டிலே வெல்வெட்டு நிறைய இருக்கே!" என்றாள் வடிவாம்பாள்.

நடேசன் சிரித்தார். "நான் வெல்வெட் வியாபாரி இல்லீங்க. இன்னிக்கு இந்தப் பக்கம் வந்தேன். வெறுங்கையோடே வரவேண்டாம்னுட்டு கொண்டுவந்தேன். எடுத்து வைக்கச் சொல்லுங்கள்" என்று சொல்லவே, வடிவாம்பாள் "வேறு என்ன விசேஷமோ?" என்றாள்.

"இல்லே, பட்டணத்திலே இருந்து உங்களுக்கு ஏதாவது தந்தி வந்ததோ?"

"ஆமாம், ஒரு கச்சேரிக்கு ஒத்துக்கணும்னாங்க... நான்தான் முடியாதுன்னு தந்தி கொடுக்கச் சொல்லிவிட்டேன்."

சண்முகம் ஏற்கெனவே நடேச பிள்ளைக்கு 'நான் வாசிக்கிறேன் என்று தெரிந்தால் ஒரு சமயம் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆதலால், அதைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை' என்று எழுதியிருந்தான். வடிவாம்பாளும் இப்படிச் சொல்லவே, நடேச பிள்ளை விழித்துக்கொண்டார்.

"உங்களுக்குத் திருப்தியில்லே போலிருக்கு" என்று ஆரம்பித்தார்.

"பட்டணம், புது இடம்."



"நீங்கள் அப்படி நினைப்பது தவறு. இந்த ஊரிலே பெயர் எடுக்கலாம். ஆனால், பட்டணத்திலேதான் பணம் கிடைக்கும். நாள் தவறாமல் கச்சேரி நடக்கும். எல்லா வித்வான்களும் பட்டணத்துக்குப் போகணும்னு துடிக்கிறாங்க. நீங்க அங்கே போக வேண்டாமென்று இருக்கிறீர்களே! ஆச்சரியமாயிருக்கிறதே."

நடேச பிள்ளை சொல்லச் சொல்லப் பட்டணத்துக்குப் போக வேண்டுமென்று ஆசை வந்தது வடிவாம்பாளுக்கு. "கச்சேரின்னா இடம், எங்கே, யாரு?" என்று கேட்டாள்.

"அந்த ஊருக்கே பெரிய வக்கீல். ஆயிரம் ரூபாய் பணம், எனக்கு அட்வான்ஸ் அனுப்பியிருக்கிறார். கவர்னர்கூட கலியாணத்திற்கு வருவார் என்று எழுதியிருக்கிறார். ரொம்ப நல்ல சான்ஸ். நீங்க வேண்டாமென்று சொன்னால், நான் உங்களை வற்புறுத்தப் போவதில்லை. இருக்கிற விஷயத்தைச் சொல்கிறேன்" என்று மெல்ல ஒதுங்கினார் நடேச பிள்ளை.

"அப்படிப் பெரிய மனுசங்க எல்லோரும் வருவாங்கன்னா ஒத்துக்கலாம்னுதான் தோணுது. எதுக்கும் என் பெண்ணைக் கேட்டுச் சொல்லறேன்" என்று உள்ளே சென்றாள், வடிவாம்பாள்.

மோகனாவோ, மறுபடியும் பட்டணத்துப் பேச்சு வந்திருப்பதைக் கேட்டவுடன் ஆனந்தம் கொண்டாள். இருந்தாலும் தாயாரைக் கண்டவுடனே ஒன்றும் தெரியாதவள் போல் இருந்தாள்.

"மோகனா, பட்டணத்திலே இருந்து தந்தி வந்ததே கச்சேரிக்கு அதை ஒத்துக்கிறதா, வேண்டாமா?"

"உங்க இஷ்டம், இனிமே! நீங்க ஆடணும்னு சொன்னா ஆடறேன், இல்லேன்னா ஆடலே!" என்று சொல்லிவிட்டுத் தாயின் முகத்தைப் பார்த்தாள் மோகனா.

வடிவாம்பாள் விரும்பியதும் அதைத்தான். "சரி, பின்னே ஒத்துக்குவோம்" என்று சொல்லி 'அட்வான்ஸ்' ஆயிரம் ரூபாய் பணத்தையும் பெற்றுக்கொண்டாள். அலமாரியைத் திறந்தாள்.

எழுபத்து ஐந்தாம் அத்தியாயம்



## சந்நிதியில் கண்டான், சந்தோஷம் கொண்டான்!

ஊர் ராசியும் பெயர் ராசியும் ஒன்றாய் அமையவேண்டும். அந்த ஊருக்கு யார்தான் எழும் ஊர் என்ற பெயரிட்டார்களோ! அவர்கள் தீர்க்கதரிசிகள். ஏனெனில், காலை பத்து மணிவரைக்கும் தூங்குபவர்கள்கூட ரயிலில் வந்து ஆறரை மணிக்கே எழும் ஊர் அல்லவா அந்த ஊர்!

எழும்பூர் ரயில் நிலையத்தில் போட் மெயில் வண்டி வந்து நின்றது. பிரயாணிகள் எல்லோரும் வண்டியை விட்டு அவசரமாக இறங்கினார்கள். ஏற்கெனவே ஊர் எங்கும் தெரிந்திருந்தபடியால் தில்லானா மோகனாம்பாளைப் பார்க்கவும் வரவேற்கவும் நூற்றுக்கணக்கான மக்கள் அங்கு கூடியிருந்தார்கள்.

குறுக்கும் நெடுக்குமாய் பிளாட்பாரத்தில் நாலைந்து பேர்கள் பூ மாலைகளுடன் ஓடினர். அவர்கள் வரும் வேகத்தில் யார் கழுத்திலாவது மாலையைப் போட்டுவிடுவார்கள் என்று தோன்றியது. வண்டியில் உட்கார்ந்தபடி அதைப் பார்த்த சிலர் போர்ட்டர்களைக் கூப்பிடக்கூடக் கழுத்தை வெளியே நீட்டப் பயப்பட்டனர். ஆனால் நம் மோகனா கோஷ்டியாருக்குப் பட்டணம் புதிதானதயால், கச்சேரிக்கு அவர்கள் வண்டியை விட்டு இறங்கவேண்டாம், அழைத்தவர்கள் வரட்டும். பிறகு இறங்கலாம் என்று இருந்து விட்டார்கள்.

அப்போது அவர்கள் காதில், "தில்லானா மோகனாம்பாளுக்கு ஜே", "நாட்டிய கலா ராணிக்கு ஜே" என்ற கோஷம் கேட்டது. வடிவாம்பாள் நடுங்கினாள் "இது என்னடா, இந்த ஊரில் வந்ததும் வராததுமாய்க் கலகம் வந்துவிட்டதே! நம் மகள் பேரைச் சொல்லி யாரோ கூச்சலிடுகிறார்களே!" என்று அஞ்சினாள். இதையடுத்து, "யாரு சார் நீங்க? உங்களை யாரு சார் எனக்கு மாலை போடச் சொன்னாங்க?" என்று ஒரு பெண் ஆத்திரத்துடன் கேட்கும் குரல் வந்தது. வடிவாம்பாளும் மோகனாவும் குரல் வந்த திசையில் எட்டிப் பார்த்தனர்.

அங்கு ஒரு பெண் கோணல் வகிடும், முகத்தில் பவுடருமாக உடையெல்லாம் அயலார் கண்ணைக் கவரும் வண்ணமாக உடுத்தி, உதட்டுச் சாயத்துடன் நின்றுகொண்டிருந்தாள். அவள் கழுத்தில் பல மாலைகள் கிடந்தன. அவள் நின்ற கோபத்தில் மாலையில் இருந்த மலர்கள் எல்லாம் பயந்து நடுங்கி விழுந்துகொண்டிருந்தன. மாலை போட்டவர்களும் நடுங்கினார்கள்.

"தயவு செய்து மன்னிக்க வேண்டும். நாங்கள் 'ஆர்ட் யூத் அகாடமி மெம்பர்ஸ்' தங்கள் உடையும் அலங்காரமும் 'பெரிய டான்ஸிங் கேள்' மாதிரி இருந்தது. நீங்கள்தான் தில்லானா மோகனாம்பாளாக்கும் என்று நினைத்துவிட்டோம்" என்றார் மாலை போட்டவர்.

"நான் ஒன்றும் தில்லானா மோகனாம்பாள் இல்லை. மை நேம் இஸ் லேடி கனகாம்பரம்" என்றார் அந்த அம்மையார்.

"அதனால் ஒன்றும் பரவாயில்லை. லேடி கனகாம்பரத்துக்கு—" என்றார் மாலை போட்டவர்.

"ஜே!" என்ற கோஷம் எழுந்தது. அந்த அம்மாளின் முகத்தில் புன்னகை அரும்பியது. அவர் கணவர் அவர் அருகில் வந்தார்.



"நான்தான் வேண்டாம் வேண்டாம் என்று தலையில் அடித்துக் கொண்டேனே, கேட்டியா? இந்தக் கோணல் வகிடும், பவுடரும் புடவைக் கட்டும் படுத்தின பாட்டைப் பார்!" என்று மறுபடியும் ஒருமுறை தலையில் அடித்துக்கொண்டார்.

அப்போது, கூட்டம் இன்னொரு பக்கம் ஓடியது. அதற்குள் ஒரு குடுமித் தலை அன்பர் மோகனா இருந்த வண்டியில் ஏறினார். சுற்று முற்றும் பார்த்தார். வடிவாம்பாளிடம், "தில்லானா மோகனாம்பாள் வல்லியோ?" என்றார்.

"ஏன், நீங்க கண்ணாடி போட்டுக்கல்லியோ? அதோ உட்கார்ந்திருக்குதே!" என்று மோகனாவைக் காட்டினான் வரதன்.

"அடாடா, இவாளா! ரொம்ப சிம்பிள் டிரஸ் அதனாலேதான் புரியவில்லை! வர வேணும், வர வேணும்! நான்தான் வக்கீல் கிட்டா ஐயர்வாளுடைய குமாஸ்தா ராமஸ்வாமின்னு சொல்லுவா. இறங்குங்களேன்" என்று அவர் மோகனாவிடம் கூறினார்.

மோகனா தாயாரிடம், "இறங்கும்மா!" என்றாள்.

"உன்னைத்தானே இறங்கச் சொன்னாரு. நீ இறங்கு" என்று முகத்தில் அடித்தாற்போல் பதில் சொன்னாள் வடிவாம்பாள். அவள் முகத்தில் கோபம் ஜொலித்தது. வந்த மனிதன் மகளிடம் பேசினான், தன்னை ஏறெடுத்துக்கூடப் பார்க்கவில்லை என்ற ஆத்திரம் அதில் தெரிந்தது. ஆயினும் மோகனா, விஷயம் தெரிந்தவள் ஆகையால், "அம்மாவுக்குச் சொந்தக்காரர்கள் இங்கு இருக்கிறார்கள். அங்கே போய்த் தங்கலாமென்று நினைக்கிறார்கள்" என்று அம்மாவைக் காட்டினாள்.

"சேச்சே! அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. எஜமான் என்னைக் கொன்னு போட்டுடுவார். நம்ம வீட்டுக் கல்யாணத்துக்கு வந்தவங்க நம்ம வீட்டிலேதான் தங்கணும். வாங்கோ! இறங்குங்கோ" என்று வடிவாம்பாள் பக்கம் உபசாரம் திரும்பவே, வடிவாம்பாள் மனம் சிறிது குளிர்ந்தது.

"அதெப்படிங்க? கல்யாணத்துக்கு வரச் சொல்லிட்டு ரயிலடிக்கு அவங்க வராமல் குமாஸ்தாவை அனுப்பியிருக்காங்களே!"

"இல்லை, அய்யர்வாளேதான் வருவதாக இருந்தார். மதனபூர் மகாராஜா வரார். உங்க நாட்டியம் இருக்குன்னு அவருக்கு எழுதியிருந்தோம்!"

"என் நாட்டியம் இல்லீங்க. என் மகள் நாட்டியம்."

"ஸாரி, பிளீஸ் எக்ஸ்கியூஸ்மி மகாராஜாவுக்கு நாட்டியம். நாம் இரண்டிலும் உயிர். அவாளை வரவேற்கப் போயிருக்கா ஐயர்வாள் உங்களைக் கூட்டிக்கொண்டு போய் ஜாகையில் விட்டதும் அவாளே வந்து பார்ப்பதாகச் சொல்லி இருக்கா."

"யாரு, மகாராஜாவா?" என்றாள் வடிவாம்பாள்.

"இல்லே, அய்யர்வாள்!" என்றார் ராமஸ்வாமி.

வடிவாம்பாள் ரயிலை விட்டு இறங்கினாள். அதற்குள் மோகனா வந்திருக்கும் செய்தியும், அவள் எளிய உடை கட்டியிருப்பதும் மெட்ராஸ்"க்குத் தெரிந்துவிட்டது. எழும்பூர் ஸ்டேஷன் வாசலுக்கு வருவதற்குள் கூட்டம் கூடிவிட்டது. வாசலில் நின்ற பீட்டனில் ஏறி அமர்ந்தாள் மோகனா. அதே சமயத்தில், "அதோ, அங்கே யாரு, பாரு!" என்றாள் வடிவாம்பாள். வரதன் திரும்பினான். அங்கே அதிகாலையில் எழும்பூர் ஸ்டேஷன் வாசலில் கொண்டைக் குச்சியால் தலையை ஆற்றிக்கொண்டு அபசகுனம் போல் நின்றான் தருமன்.

அன்று அதே சமயத்தில் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் கோமாளி போல் விசித்திர உடுப்பு அணிந்த நான்கு வில்லைச் சேவகர்கள் தரையில் ரத்தினக் கம்பளங்களை நீளமாக விரித்து வந்தார்கள். அதை விரித்த பிறகு, சுமார் முப்பத்தைந்து வயது மதிக்கத்தகுந்த ஒரு சுந்தரபுருஷர் முதல் வகுப்பில் இருந்து இறங்கினார். அவர் விரிப்பில் கால்வைத்ததும் 'டமார் டமார்' என்று ஏழு குண்டுகள் போடப்பட்டன. ரயில்வே நிலையத்தைச் சுற்றிலும் போலீஸ் பாரா பலமாக இருந்தது.

அவர் இறங்கியபோது, அவர் கூடவே சுமார் நாற்பது வயது மதிக்கத்தக்க வெள்ளைக்காரப் பெண்மணி ஒருத்தி இந்திய உடை தரித்து முக்காட்டுடன் இறங்கினாள். இருவரையும் சென்னை நகரப் பிரமுகர் பலரும், கவர்னரின் காரியதரிசியும் வரவேற்றார்கள். உடனே சற்றுத் தள்ளி நின்றவர்களுள் ஒருவராகிய வக்கீல் கிட்டாவையரைப் பார்த்து அவர், 'நமஸ்தே' என்று வணக்கம் தெரிவித்துக்கொண்டார். கிட்டாவையர் மகாராஜா அருகில் வந்தார். 'உங்கள் மோகன் எப்படி இருக்கிறான்?" என்றார்.

"கொஞ்சம் உடம்பு சரியில்லை. டிரீட்மெண்டுக்கும் சேர்த்துத் தான் வந்திருக்கிறேன். அவனை ஊட்டியில் விட்டுவிட்டுப் போகலாம் என்று உத்தேசம். ராஜஸ்தான் உஷ்ணம் அவன் உடம்புக்கு ஒத்துக் கொள்ளவில்லை" என்றார்.

"இப்போ மோகன் எங்கே?"

"அவன் வண்டியிலே இருக்கிறான்."

இதற்குள் மகாராஜா நடக்க ஆரம்பித்தார். அவர் நடக்கும்போதே அவருக்கு முன் இரண்டு வடநாட்டு வைதிகர்கள் ஏதோ மந்திரத்தைச் சொல்லியவண்ணம் வெள்ளிக்கிண்டியில் இருந்து மாவிலையால் கங்கைத் தண்ணீரைத் தரையில் தெளித்துக்கொண்டே வந்தார்கள். இரண்டு டவாலிச் சேவகர்கள் தங்கத்தடி பிடித்து முன்னே நடந்தார்கள். மகாராஜா நடந்தவுடன் அவர் மிதித்த ரத்ன கம்பளத்தைப் பின்னால் இருந்த இருவர் சுருட்டி வந்தார்கள். இருவர் அதை வாங்கிக்கொண்டு ஓடிப்போய் முன்னால் விரித்தார்கள்.



இவ்வாறு ரயிலை விட்டு இறங்கிய இருபதாவது நிமிஷத்தில் அவர் ஸ்டேஷன் வாசலுக்கு வந்து சேர்ந்தார். வாசலில் அப்பொழுது சென்னை கவர்னராக இருந்த ஆங்கிலேயரின் கோச்சு வண்டி காத்திருந்தது. அதில் ஏறி அமர்ந்தார் மகாராஜா.

"தாங்கள் எப்பொழுது இந்த ஏழையின் குடிசைக்கு விஜயம் செய்கிறீர்கள்?" என்றார் கிட்டாவையர்.

நான் இப்பொழுது நேரே கவர்னர் மாளிகைக்குப் போகிறேன். அங்கு போய் முதல் காரியம் பூஜை. அது முடிந்தவுடன் வேட்டை. வேட்டை சீக்கிரம் கிடைத்துவிட்டால் தங்கள் ஜாகைக்கு மாலை 4-20க்கு வருவேன்" என்று சொல்லி விடை பெற்றார் மகாராஜா. "அந்த நாட்டியப் பெண் வந்திருக்கிறாளா?" என்றார்.

"வந்துவிட்டாள். இன்று மாப்பிள்ளை அழைப்பு. மேளம், நாளை மாலை நாட்டியம்" என்றார் கிட்டாவையர்.

"வெரிகுட்" என்று சொல்லிப் புறப்பட்டார் மகாராஜா.

மதன்பூர் மகாராஜா ஒரு விசித்திர மனிதர். காலில் தங்கக் கொலுசு போடும் பரம்பரையிலே வந்தவர். வருஷத்தில் ஆறு மாசம் இந்தியாவிலும், ஆறு மாசம் மேல் நாட்டிலுமாக அவர் வாசம் செய்துவந்தார். அவருடைய தர்மபத்தினி ஸ்ரீமதி ஆலிஸ்ஜேன் அம்மையார். அந்த அம்மை அவர்கள் ஸ்விட்ஜர்லாந்தில் உள்ள ஒரு ஹோட்டலில் மகாராஜாவைச் சந்தித்தார். அங்கு மகாராஜாவுடன் நாட்டியம் ஆடும்போது அவருடைய அழகில் மயங்கி, அவருடைய குணத்தில் பரவசப்பட்டு, அவரைத் தம் நாயகனாக வரிப்பதாகத் தம் அன்பை வெளியிட்டார். மகாராஜாவும் அதே நிமிஷத்தில் அவளைத் தம்முடைய பட்ட மகிஷி ஆக்கிக்கொண்டார். இந்தச் செய்தியைக் கேட்ட உடனே சமஸ்தானத்தில் இருந்த பல வைதிகர்களின் எதிர்ப்பு வந்தது. ஹிந்துவாக இருந்தால்தான் சிம்மாசனத்தில் அமரலாம் என்று சில பிரஜைகள் எதிர்த்தார்கள்.

இவைகளைக் கண்ட மகாராஜா, பிரஜைகள் அபிப்பிராயத்திற்கு இணங்க, முதல் காரியமாக அந்த அம்மையை ஹிந்து மதத்திற்கு மாற்றி ஆஷாலதாதேவி என்ற ஹிந்துப் பெயரை அவளுக்குச் சூட்டி, நெற்றியில் குங்குமத்தைத் திலகமிட்டார் - பிறகுதான் அந்த அம்மையாரின் இந்து தர்மப்பற்றை எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள். பல சுலோகங்களும் பிரபந்தங்களும் மகாராஜாவின் திருமணத்தை ஒட்டிப் பாடப்பட்டன.

இந்த விவாகத்திற்குப் பிறகு இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர் இடையே மகாராஜாவுக்கு மதிப்பும் உயர்ந்தது.

அவர் இரண்டும் கெட்டான் அல்ல. இரண்டும் கலந்த ஒருவர். காலையில் போலோ விளையாடுவார். உடனே சூரிய நமஸ்காரம் செய்வார். டின்களில் வந்த பொருள்களைத்தான் சாப்பிடுவார்.

ஆனால் அவைகளில் கங்கைத் தண்ணீரைத் தெளித்த பிறகுதான் உண்பார். ராமாயண பாராயணம் செய்வார். அப்போது புகை பிடிக்க மாட்டார். பகலில் பூஜை செய்வார். அதன் பிறகு எங்கு இருந்தாலும் உலக சம்ரட்சணார்த்தமாக ராஜாக்கள் செய்ய வேண்டிய கடமையாகிய வேட்டையையும் நடத்துவார். ஒரு நாளைக்கு ஒரு ஆண் மானைச் சுடாவிட்டால் அன்று அவர் ஆகாரம் எடுத்துக் கொள்ளமாட்டார். ராஜாக்கள் மிருகங்களைக் கொன்று மக்களைக் காப்பாற்றித்தான் ஆக வேண்டும் என்கிற தர்ம சிந்தனையில் கடுகிறாரே தவிர, மதன்பூரில் இருக்கும் தம் பிரஜைகளைக் காப்பாற்ற மதராஸ் காட்டில் மானைச் சுடுவதில்லை!

இதுவரையில் அவருடைய கால்கள் தரையில் பட்டதில்லை. அவர் தலையிலும் வெயில் பட்டதில்லை. அவர் எங்கு சென்றாலும், அவருடைய சிப்பந்திகள் நூறு பேராவது கூடவே வருவார்கள். அவருடைய தாராள மனப்பான்மையைக் கண்டு, 'இவருடைய அரண்மனையில் வேலை ஆளாக இருப்பதைக்காட்டிலும் இவருடைய குதிரை லாயத்தில் ஒரு ரேஸ் குதிரையாகப் பிறக்க மாட்டோமா' என்று அவர்கள் ஏங்குவார்கள். ஏனெனில், குதிரைகள் விஷயத்தில் அவர் அவ்வளவு தாராளம்.

குதிரை மட்டும் என்ன? நாய்கள் விஷயத்திலும் அப்படித்தான். அவருடைய நாய்ப்பண்ணை ரொம்பப் பெரியது.

மோகன் என்று நாம் முன்பு கூறினோமே, அதுவும் நாய்தான். ஜெர்மன் தேசத்திலிருந்து வரவழைத்த நாய் அது. அந்த நாயின் மூலமாகத்தான் ஸ்ரீ கிட்டாவையரின் நட்பு மகாராஜாவுக்குக் கிடைத்தது. அவர் பல பாடு பட்டு, அந்த நாயை வரவழைத்து, அதற்கு வைதிக முறைப்படி கப்பலில் வந்ததற்கு பிராயச்சித்தமெல்லாம் செய்து, அதை இந்திய நாய் ஆக்கி, மோகன் என்று அருமையாக நாமகரணமும் செய்தார். இவ்வளவு செய்தும் அந்தச் சனியன் உதக மண்டலத்தில் ஒரு ஆங்கிலேயப் பிரமுகரைக் கடித்துவிட்டது. இதற்குக் காரணம் இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் உள்ள பரம்பரை பகைமையாகவும் இருக்கலாம். அந்த ஆங்கிலேயர் ஆத்திரத்தோடு அப்போது இருந்த சட்டப்படி வைஸ்ராயிடம் அனுமதி வாங்கி மகாராஜா மீது கோர்ட்டில் கேஸ் போட்டுவிட்டார். கிரிமினல் கேஸ் வந்தவுடனே மகாராஜா மலைத்தார். "நீதிக்குத் தாயகமாக விளங்கும் மகாராஜாவாகிய நான் நீதி சபையில் போய் நிற்கக்கூடாது" என்ற ஒரே பிடிவாதத்தில், கிட்டாவையர் அவர்களுக்கு லட்சம் ரூபாய்க்கு மேல் கொடுத்துவிட்டார். கடைசியில் வழக்கு தள்ளுபடியாயிற்று. கிட்டாவையர் அவர்கள் சமஸ்தான ஆலோசகர் ஆனார்!

இவ்வளவையும் தவிர, மகாராஜாவுக்குக் கலை என்றால் உயிர். அவருடைய கலை ஆர்வத்திற்கு வேறு உதாரணமே தேவையில்லை. சென்னையிலே திம்மாச்சி ராதாகிருஷ்ண செட்டி என்று ஒரு



வெண்கலக் கடை வியாபாரி இருந்தார். அவர் பழைய பித்தளை, பழைய வெண்கலம் முதலியவைகளை நிரம்ப வாங்குவார். 'ஆங்கில நாட்டிலே பீரங்கி செய்கிறார்கள். அதற்காக இவைகளை வாங்குகிறார்' என்று ஊரில் எல்லோரும் பேசிக்கொண்டார்கள்.

எந்த ஊரில் பீரங்கி செய்ய அவர் பித்தளையை அனுப்பினாரோ நமக்குத் தெரியாது. ஆனால் கால் உடைந்த விக்கிரகங்கள், கை ஒடிந்த சிலைகள், தலை இல்லாத அபூர்வப் பொருள்கள் முதலியவைகளை யெல்லாம் அவர் மதன்பூர் மகாராஜாவுக்குத்தான் அனுப்பி வந்தார். இப்பொழுதுகூட அவரிடமிருந்து ஒரு ரகசியக் கடிதம் மகாராஜாவுக்கு வந்திருக்கிறது. மகாராஜாவின் மூதாதையர்களுள் ஒருவரான சம்மக் பகதூர்சிங் மகாராஜா அவர்கள் ராமேச்வர யாத்திரை வந்திருந்தாராம். அப்பொழுது சென்னைக்குப் பக்கத்தில் உள்ள திருமுல்லைவாயில் என்ற க்ஷேத்திரத்திற்குத் தரிசனத்திற்காகச் சென்றிருந்தாராம். அந்நாளில் புழலேரி அருகில் பெரிய காடாக இருந்ததாம். அதில் பரம்பரை வழக்கப்படி வேட்டையாடினாராம். ஒரு யானை எதிர்ப்பட்டதாம். அவருடைய உடைவாளால் யானையை எய்தாராம். அந்த யானை வாளைத் தாங்கிக்கொண்டே அலறியவண்ணம் காட்டுக்குள் ஓடிவிட்டது என்றும், புழலேரியில் தண்ணீர் குடிக்க இறங்கி சகதியில் அழுங்கிவிட்டதென்றும், சமீபத்தில் புழலேரியைத் தூர்வை எடுத்த போது வாளின் கைப்பிடி மட்டும் அகப்பட்டிருப்பதாகவும், அதில் மதன்பூர் என்பதில் பல எழுத்துகள் தேய்ந்து "தன்" என்ற இரண்டு எழுத்துகள் மட்டும் இருப்பதாகவும் - விஷயம் ரகசியம் என்றும் வெண்கலக்கடை செட்டியார் எழுதியிருந்தார். அவ்வளவு பழைய பொருளை எப்படியாவது வாங்கிவிட வேண்டும் என்பதும் மகாராஜாவுடைய ஆசை.

இவ்வாறாகப் பல முக்கியமான காரணங்களை வைத்துக் கொண்டுதான் மதன்பூர் மகாராஜா சீமைப் பயணத்தையும் ஒத்தி வைத்துவிட்டுச் சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

ஸ்ரீ கிட்டாவையர், நாட்டியக் கலையில் வல்லவளாகிய தில்லானா மோகனாம்பாள் சென்னைக்கு வருகிறாள் என்பதை எழுதியவுடனே, அவளைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையும் அவருக்கு வந்தது. அது கலைக்கா, அழகுக்கா என்ற சர்ச்சையில் நாம் இப்பொழுது இறங்க வேண்டியதில்லை. மகாராஜா என்ன செய்கிறார் என்று பொறுத்துப் பார்ப்போம்.

✦ ✦ ✦

மயிலாப்பூரில் உள்ள ஒரு அழகிய பங்களாவில் மோகனா முதலியவர்கள் இறக்கி வைக்கப்பட்டார்கள். பட்டணத்தில் உள்ள ஒவ்வொரு தெருவையும் பார்த்துப் பார்த்து, வாயைப் பிளந்து கொண்டு வந்தான் வடிவாம்பாள். ஆனால் மோகனாவோ, பட்டணத்தில் காலை வைத்த நிமிஷம் முதலே சண்முகத்தைப் பார்க்க

வேண்டும் என்ற எண்ணத்தில் அடித்துக்கொண்டிருந்தான். ஜாகையில் வந்து இறங்கிய சற்று நேரத்திற்கெல்லாம் வரதனைச் சந்தித்தான்.

"வரதா, அவர் எங்கே இருக்கிறார்? நீ போய்ப் பார்த்துட்டு வந்திடுறியா? நான் இங்கு வந்திருக்கிறேன் என்பதைத் தெரிவிக்கிறியா அவருக்கு?"

"இதைத் தெரிவிக்கிறது என்ன தங்கச்சி? அதான் ஊருக்கே தெரியும் போலிருக்கே! ரயிலடியிலே தருமன் திரிஞ்சுக்கிட்டிருந்தானே! அவன் போய் இந்நேரம் சொல்லி இருக்க மாட்டானா?" என்றான் வரதன்.

ஆம். உண்மையில் தருமன் சண்முகத்திடம் ஓடி வந்துதான் சொன்னான்.

தருமன் சொல்லிய செய்தியைக் கேட்டவுடன் சண்முகம் கடகடவென்று சிரித்தான்.

தவுல்கார முத்துராக்குவிடம், "அண்ணே, கேட்டீங்களா? மோகனாவாக்கும்னு நினைச்சுக்கிட்டு வேறு யாரோ ஒரு பொண்ணு கழுத்திலே மாலையைப் போட்டுட்டாங்களாம்!" என்றான்.

"ஆமா தம்பி. அந்தத் திருவாரூர்ப் பெண் டிரஸ் கிஸ்ஸெல்லாம் ஜோரா செய்துக்காமல் கட்டுப்பொட்டியாட்டம் வந்திருக்கும். அதுக்குத்தான் கொஞ்சங்கூட நாகரிகம் தெரியாதே!"

"அது என்ன அண்ணே?"

"ஆமாங்க, கொஞ்சம் மடக்கா இருக்க வேண்டாம்? நான்தான் பார்த்தேனே, ரயிலை எதுக்கு அத்தினி நேரம் செங்கல்பட்டிலே நிறுத்துறாங்களாம்? அங்கேயே எந்திரிச்சி, ஒரு பீங்கான் காப்பியை உள்ளே தள்ளிட்டு, முகம் கழுவி, பவுடர் போட்டுத் தலையை வாரி, பொட்டு வச்சு, முதல் நாள் கழட்டி உசக்க வச்ச பூவைத் தலையில் வச்சுக்கிட்டு, பெட்டியைத் திறந்து, பொடவையை எடுத்துக் கட்டி, கையில் புத்தகத்தை எடுத்து வச்சுக்கிட்டு பூனையாட்டம் மாத்திரம் அந்தப் பொண்ணு உக்கார்ந்திருந்தா பூமாலையை இன்னொருத்தர் கழுத்திலே போடுவாங்களா? கலை தெரிஞ்சாலும் காலம் தெரியாட்டி கலைக்கு உதவாது தம்பி!"

"அடேயப்பா, மதராஸுக்கு வந்த நாலு நாளைக்குள்ளே நீங்க ரொம்பப் படிச்சுட்டீங்களே!"

"ஆமாங்க, நமக்கெல்லாம் பார்த்துப் படிக்கிறதுதானே படிப்பு, இல்லாட்டி பள்ளிக்கூடத்திலேயா படிச்சம்? இப்ப இந்தப் பொண்ணு மாத்திரம் கெட்டிக்காரத்தனமா நடந்துக்கிட்டா இந்த ஊரிலேயே கல்யாணத்தை முடிச்சுடறேன் பாருங்க..."

"இவ்வளவு சுலபமா முடிக்கலாம்னு நீங்க இதுவரையில் சொல்லவே இல்லியே!"



"எனக்கே நேத்துத்தானே தெரியும்! இந்தக் கல்யாணம் நடக்குதே லஸ் தெருவு, அதுக்குப் பக்கத்திலேயே ரிஸ்தர் ஆபீசு இருக்குதாம். அங்கே பெண்ணைக் கூட்டிக்கிட்டுப் போக வேண்டியது. ரிஸ்தார் இருப்பார் 'உனக்குச் சம்மதமா, உனக்குச் சம்மதமா'ன்னு மூணுவாட்டி கேட்பாரு. சம்மதம் சம்மதம்னு சொல்ல வேண்டியது. கையிலே முக்கால் ரூபாயைக் குடுத்தா கல்யாணம் ஆச்சுன்னு கணக்கிலே பதிஞ்சுக்குவாராம். புருஷனும் பெண்சாதியும் பக்கத்திலே பக்கத்திலே கையெழுத்துப் போட வேண்டியது. குதிரைவண்டி ஏறிக்கிட்டு ஓட வேண்டியது. அப்புறம் அந்தக் கல்யாணத்தை வடிவாம்பா இல்லே அவுங்க அம்மா வந்தாலும் அசைக்க முடியாது!"

"அட, முக்காலும் காலும் ஒரு ரூபாயிலே முடிஞ்சு போகுதே அப்படி இருக்கறபோது இந்த வக்கீல் ஐயா ஏன் பதினாயிரக் கணக்கிலே செலவு பண்றாரு?"

"நம்மைப் போலே உள்ளவங்க பிழைக்கத்தான். எல்லோரும் ரிஸ்தர்லேயே முடிச்சுக்கிட்டா மேளக்காரர், சமையல்காரர், புரோகிதர் எல்லோரும் எப்படிப் பிழைக்கிறது?"

"ஆமா, அந்தக் கல்யாணத்திலே வேறே என்ன விசேஷம்?"

"உனக்குச் சந்தேகம் இருந்திச்சு வில்லங்க சர்டிபிகேட் எடுத்துப் பாத்துக்கலாம்..."

"அது நிலத்துக்கில்லே..."

"அட நிலத்துக்கு ஒண்ணு, மனிசனுக்கு ஒண்ணுன்னு இருக்குதா? சட்டம் பொதுதானே? பொண் ஆகட்டும் ஆண் ஆகட்டும் பொறக்குறபோதே பதிஞ்சுடணும். கல்யாணம் நடந்தாலும் பதிஞ்சுடணும். அப்புறம் என்னை ஒருத்தி கட்டிக்கிறான்னு வச்சுக்கோ. நேரே ரிஸ்தர் ஆபீசுக்குப் போ, அந்த ஆம்பிளை பேரைச் சொல்லி, கால் ரூபாயைக் கையிலே கொடுத்து, ஒரு வில்லங்க சர்டிபிகேட் கேளு. நாலு நாளிலே ரிக்கார்டைப் பார்த்து வில்லங்கம் ஏதும் இல்லைன்னு எழுதி முத்திரை போட்டுக் கொடுத்திடுவாங்க அவ கண்ணை மூடிக்கிட்டு கட்டிக்கலாம்..."

இதைக் கேட்டதும் சண்முகம் கடகடவென்று சிரித்தான்.

"என் விஷயத்திலே ஏன் அண்ணே உங்களுக்கு இந்த யோசனை வந்திச்சு?"

"இல்லே தம்பி, இப்ப வக்கீல் ஐயா வீட்டிலே கல்யாணம் நடக்குது. நீங்க மேளம் வாசிக்கிறீங்க. சரியா போகுது. நாளைக்கு உங்களுக்கும் மோகனாவுக்கும் கல்யாணம்னு வச்சிக்குங்க இதுக்கு யாரு மேளம் வாசிக்கிறது, யாரு நாட்டியம் ஆடறது? உங்க ரெண்டு பேருக்கும் மேலே பெரிய வித்வானா கிடைக்குமான்னு யோசிச்சேன் உடனே இது ஞாபகம் வந்திச்சு தவிரவும் தம்பி, இனியும் கல்யாணத்தை இழுத்துப் போடப்படாது..."

"அது ஏன் அண்ணே?"

"ஏதோ ரெண்டு பேரும் பாத்துக்கிட்டீங்க! முளிச்ச நேரம் நல்ல நேரம் போட்டி வந்திச்சு. அதுவும் நல்லபடியா நீந்தது. இன்னும் கல்யாணத்தை நடத்தாமல் இருந்தால் அது நல்லா இல்லே."

"நான் தயார்தான் அண்ணே. வில்லை ஒடிக்கணுமா, அம்பு எய்யணுமா? கல்லைப் புரட்டணுமா, காளையைப் பிடிக்கணுமா? எதுக்கும் நான் தயார்தான். ஆனா, இப்பத்தான் அந்தக் காலம் மலையேறிப் போச்சே! அந்த அம்மாவுக்குப் பணம் இல்ல வேணும்!"

"நீங்க சொல்றதும் நிசந்தான். எனக்கு அந்த வடிவாம்பா அம்மாளை நினைச்சாலே கோவம் வருது. அது மாத்திரம் எனக்குத் தாயா இருந்தா..."

"என்ன செய்வீங்க?— சொல்லுங்க. அதை விட்டுவிட்டு ஓடி வந்திடுவீங்களா? பெத்தவள் வேண்டாம், காதலிதான் வேணும் என்று சொல்வீங்களா?"

"அட என்ன நாயனக்காரரே! பெத்தவங்க எத்தனை வருஷம் இருப்பாங்க? காதலன்தானே பெண்ணுக்கு முக்கியம். நேத்து நான் ஒரு நாடகம் பார்த்தேன். அதிலே ஒரு குட்டி, அப்பன் ஆயா எல்லாத்தையும் விட்டுவிட்டுப் புருசனோடே ஓடியாந்துடுது. ஒரே கை தட்டல்."

"அது சரி அண்ணே. நாடகத்திலே நடக்கும், நடப்பில் நடக்கணுமே!"

"அதைப் பார்த்த பிறகுதான் இந்த யோசனை வந்திச்சு. நீங்க மட்டும் மோகனாவைப் பார்த்து, அதை மெல்ல ரிஸ்தர் கல்யாணத்துக்குச் சம்மதிக்க வச்சிருங்க. அவங்க அம்மாக்காரி மத்தியானம் தூங்கி முளிக்கிறதுக்குள்ளே நம்ம போய் கல்யாணத்தை முடிச்சிக்கிட்டு வந்துடுவோம்" என்று சொல்லிவிட்டு முத்துராக்கு சிரித்தார்.

சண்முகமும் கூடச் சிரித்தான். ஆயினும், அவன் உள்ளம் வருந்தியது. "அது சரி அண்ணே. பார்ப்போம். நாதஸ்வரத்தைத் தொட்டு ஒரு மாசம் ஆச்சு. அதை எடுத்து வரச் சொல்லுங்க, தருமண்ணனை...!" என்று அவருக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு யோசனையில் ஆழ்ந்தான்.

'மோகனாவைச் சென்னைக்கு வரவழைத்துவிட்டோம். ஆனால் நாம் இன்று கல்யாணத்தில் வாசிக்கப்போவது அவளுக்குத் தெரியாது. ஆஸ்பத்திரியில் போய் நம்மைத் தேடினாலும் தேடுவாள். அதற்கும் தாய் இடம் கொடுக்க மாட்டாள். அவளுக்கு வேண்டியது பணம். நம்மிடம் இல்லாததும் அதுதான். எத்தனை பாடுபட்டுச் சம்பாதித்தாலும் வடிவாம்பாள் கை நிறையப் பணம் கொடுக்க நம்மால் இயலாது. ஆதலால் எவ்வாறேனும் மோகனாவைச் சந்தித்து



முத்துராக்கு சொல்கிறபடியேனும் விவாகத்தைச் செய்துகொண்டு விடுவோமா?

'ஆனால்? அந்தக் கல்யாணம் ஒரு நிமிஷத்தில் ஆய்விடும். அதனால் வரும் கஷ்டம் துன்பம் முழுவதும் தீராதே! தாய் தகப்பன் சம்மதித்துக் கல்யாணம் செய்தால் வாழ்க்கை இன்பமாக இருக்கும். வெறும் கணவனும் மனைவியுந்தானா உலகம்? சுற்றமும் நட்பும் தேவைதானே! தாயன்பும் தேவைதானே!' என்று பல எண்ணங்கள் அவன் மனத்தில் ஓடிக்கொண்டிருந்தன. அப்போது தருமன் நாதஸ்வரத்தைக் கொண்டுவரவே சண்முகம் அதைக் கையில் எடுத்தான்.

சண்முகம் பொன்னம்பலத்தா பிள்ளையின் வீட்டில் இவ்வாறு தவிக்கும் அதே சமயத்தில் மோகனா அவனை எண்ணியே தவித்தாள். ஆனால், அதற்கு மாற்று மருந்து தருவதுபோல் ஏழு, எட்டு இளம் பெண்கள் மோகனாவைப் பார்க்க வந்து சேர்ந்தார்கள்.

பெண்களுக்கே ஒரு தனிக் குணம். அவர்கள் இனத்தில் ஒருவர் மிகவும் ஜோதியுடன் விளங்கினால், அதை மிகவும் பாராட்டுவார்கள், நேரம் கொண்டாடுவார்கள். அதே சமயத்தில் அவர்களைவிடத் தான் அழகி என்று எண்ணிக்கொள்ளுவார்கள். மோகனாவைப் பார்க்க வந்த பெண்கள், 'அவள் என்ன நகை போட்டுக்கொண்டிருக்கிறாள்? அவள் எப்படிச் சேலை கட்டுகிறாள்? அவள் புடைவை பார்டர் எப்படி இருக்கிறது? அவள் நெற்றி இவ்வளவு அழகாக இருப்பதற்குக் காரணம் என்ன?' என்றெல்லாம் யோசிக்கத் தலைப்பட்டார்கள்.

கல்யாணப்பெண் கமலா, மோகனாவிடம் ரொம்ப அன்பாகப் பேசினாள். அவளைச் சாக்கிட்டு, அவளுடைய தோழிகள் எல்லோரும் மோகனாவின் உறவைப் பிடித்தார்கள். அன்றைக்குச் சாயங்காலத்திற்குள் மோகனாவின் 'ஸ்டைல்' ஊருக்குள் பரவியது.

மோகனாவின் காதோரத்தில் குழல் சுருண்டு இருக்கிறது என்பதைக் கண்ட ஒரு பெண், ரொம்பச் சிரமப்பட்டு மெழுகைத் தடவி தன் முன்நெற்றி மயிரைச் சுருட்டிக்கொண்டாள். மோகனா நெற்றியில் சந்திரப்பிறை போல் பொட்டு இட்டிருக்கிறாள் என்பதைக் கண்ட ஒருத்தி, சாயங்காலம் முழுவதும் அந்தப் பொட்டுக்காகச் சிரமப்பட்டு நெற்றி முழுவதும் சாந்தைத் தீற்றிக் கறுப்பாக்கிக் கொண்டாள். இன்னொரு பெண்ணோ, மோகனா கண்ணில் லேசாக மை இட்டிருக்கும் அழகைப் பார்த்து, அவளும் அது போல அஞ்சனம் தீட்டிக்கொள்வதற்கு முயன்று கண்ணைக் குத்திக் கொண்டாள். இவ்வாறு எங்கு பார்த்தாலும் மோகனா, மோகனா என்ற பேச்சே எழுந்தது.

மாப்பிள்ளை அழைப்புக்கு மோகனா வர வேண்டும் என்று கல்யாண வீட்டார் வற்புறுத்திக் கூப்பிட்டதால் தாயார்

வடிவாம்பாள் அன்றைக்கு மோகனாவைத் தன் கையாலேயே சிங்காரிக்க ஆரம்பித்தாள். அவளுடைய ஆசை, 'பட்டணத்துக்கு வந்திருக்கும் பெண்ணுக்கு நாகரிகமாகக் கோணல் வகிடு எடுக்க வேண்டும். இரட்டைப் பின்னல் போட வேண்டும்' என்று எல்லாம் துடித்தது. ஆனால் மோகனாவோ, "போங்கம்மா, கோணல் வகிடு எடுத்துக்கிட்டு 'நடனம் ஆடினார்' என்று பாடி ஆடினால் நல்லாத்தான் இருக்கும்!" என்று கடிந்துகொண்டாள்.

"அதுக்கு என்ன? ஆடறபோது அப்படி இருக்கிறது. சாதாரண நேரத்திலே நல்லா நாகரிகமா இருக்கலாமே!"

"எனக்கு அதெல்லாம் பிடிக்கலேம்மா. நம்ப ஊருக்கின்னு ஒரு வழக்கம் வச்சிருக்காங்க. அதிலே இல்லாத அழகு வேறு எதிலே வந்திடப்போகுது!" என்று மறுத்துவிட்டாள்.

மாலை நான்கு மணியாயிற்று. கல்யாண வீட்டில் தடபுடலாக ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. அன்றைக்குத்தான் மாப்பிளை அழைப்பு. கபாலீச்வரர் கோவில் சந்நிதியிலிருந்து மாப்பிள்ளையை அழைக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். பாவம், அவள் வீட்டில் கலியாணம் நடந்தே பார்த்ததில்லையாகையால் மாப்பிள்ளை அழைப்புக்குப் போய்விட்டு, கோவிலையும் ஒரு முறை பார்த்துவிட வேண்டுமென்று வடிவாம்பாளுக்கு ஆசை. அதோடு தன் அழகிய மகளையும் அவ்வளவு பெரிய கூட்டத்துக்குள் அழைத்துக்கொண்டு போனால், அது நாட்டியத் தொழில் முறைக்கும் நன்மை செய்யும் என்ற எண்ணமும் உண்டு.

"மோகனா, வா! கோவிலுக்குப் போவோம். வண்டி வந்து காத்துக்கிட்டிருக்கு" என்றாள் வடிவாம்பாள்.

"என்னத்துக்கம்மா அந்தக் கூட்டத்திலே?"

"இல்லே கண்ணு!" என்று வற்புறுத்தி, மோகனாவை அழைத்துக் கொண்டு புறப்பட்டாள் வடிவாம்பாள்.

திருமயிலையின் அழகில் மயங்காதவர்கள் இந்நாட்டில் இல்லை. கண் படைத்தவர்கள் எல்லாரும் கபாலீச்சரத்தைக் காணவேண்டும்.

கண்ணைக் கவரும் மாடவீதிகளும், எங்கு பார்த்தாலும் அகல்விளக்கை ஏற்றி வைத்தது போல், தாமரை பூத்த திருக்குளமும், அதன் நடுவே நீராழி மண்டபமும், வரிசை வரிசையாக நிற்கும் தென்னை மரங்களின் அழகும் நிறைந்த திருமயிலையைக் கண்டவுடனே, இது சிதம்பரமா, கோவிலூரா, திருவாரூரா, கமலாலயத்தின் சிறு வடிவமா என்று யோசித்தாள் மோகனா.

வடக்கு மாட வீதி ஓரத்தில் போகும்போது, கோவிலுக்குள் இருந்து நாதஸ்வரத்தில் பூரி கல்யாணி ராகம் கேட்டது. அந்தப் பூரி கல்யாணியில் மோகனாவின் உள்ளம் பூரித்தது. அவள் காதுகள் அந்த இசை உயிர்ச்சத்து போல் படிந்தது. துன்பத்திலே தவித்த அவளுடைய



உள்ளத்திலே இன்பத்தேனை வார்த்தது போல, அணைந்து கொண்டிருக்கும் அகலிலே வார்த்த நெய் போல, பசித்தவன் வயிற்றில் வார்த்த பாலைப் போல விரகதாபத்தில் ஏங்கிக் கொண்டிருந்த மோகனா அந்த இனிய கீதத்தைக் கேட்டவுடன் புது மழையால் பூத்த பூஞ்செடி போல புன்னகை பூத்தாள். ஒரு கணம் அவளுக்கு உலகமே இன்ப மயமாகத் தோன்றியது.

"அது யார் நாதஸ்வரம் என்ற சந்தேகம் அவளுக்கு வரவில்லை. கண்ணனின் குழலைக் கேட்ட ராதைக்குச் சந்தேகம் வருமா? அது சண்முகத்தின் வாசிப்புத்தான் என்பதை அவள் அறிந்தாள். கோவிலுக்குள் ஓட வேண்டுமென்று தோன்றியது. ஆனால் வடிவாம்பாளுக்கோ சங்கீத ஞானம் குறைவு. புதிய ஊரின் அழகைப் பார்ப்பதிலும், விலை பேசித் தேங்காய் பழம் வாங்குவதிலும் இருந்தாளே தவிர நாதஸ்வரம் அவள் காதில் விழவே இல்லை.

இருவரும் கோயிலுக்குள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். முருகனின் சந்நிதியில் மாப்பிள்ளை அமர்ந்திருந்தார். அவருக்கு எதிரில் மேளக்கச்சேரி நடந்துகொண்டிருந்தது. கச்சேரி நடுவிலே ஒரு கரகோஷம். கூடவே "மோகனா, மோகனா" என்ற குரல் எழுந்தது. கூட்டம் வழிவிட்டது. ஜகஜ்ஜோதியாய் எழிலே வடிவாய் மோகனாம்பாள் அங்கு வந்து நின்றாள். அவளுடைய இஷ்ட தெய்வமே எதிரில் அமர்ந்து குழல் இசைப்பதைக் கண்டாள், பிரமித்தாள்!

எழுபத்து ஆறாம் அத்தியாயம்

## கற்பகமே, என்றன் கவலைகள் தீராயோ?



மாம்பழத்தை நறுக்குகிறோம். சில பழங்களில் கொட்டையிலிருந்து ஒரு வண்டு கிளம்பி விர் என்று பறக்கிறது. பழத்தின் இனிப்பை அது தின்றுகொண்டிருக்கவில்லை. கொட்டையின் துவர்க்குள்தான் அடைபட்டுக் கிடந்தது. அப்படியிருந்தும் ஏன் உயிர் வாழ்ந்தது என்று பார்த்தால் அது என்றேனும் ஒரு நாள் விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் உயிர் வைத்திருந்தது என்று நிச்சயம் செய்யலாம். அதே போல், மோகனாவும் இன்றுவரை வெளிப் பார்வைக்குச் கவைக்சட்டி போல் தெரிந்த அவள், வீட்டுச் சிறையில் தான் கிடந்தாள். இன்றுதான் அவள் நம்பிக்கை பலித்தது. எதிரில்

அமர்ந்து நாதஸ்வரம் வாசித்த சண்முகத்தைப் பார்த்த கண்கள் பார்த்தபடி நின்றாள் மோகனா.

சண்முகத்தின் வாசிப்பிலே அவளும் மெய்ம்மறந்து நிற்கிறாள் என்றுதான் எல்லோரும் எண்ணினார்கள். ஆனால் அவளுடைய பார்வையெல்லாம் அவன் தோளில் இருக்கும் ஜரிகை பீதாம்பரத்தின் மீதே இருந்தது. அவனுடைய உள்ளத்தையே ஊடுருவிப் பார்த்த அவள் கண்கள், இப்போது மெல்லிய பட்டுப் பீதாம்பரத்துக்குள்ளே அவன் அழகிய தோளில் கட்டு இருக்கிறதா என்பதைப் பார்த்தன. கட்டு இல்லை. ஆனால், கத்திக்குத்துப் பட்ட இடத்தில் பெரிய 'பிளாஸ்திரி' ஒட்டி இருப்பது தெரிந்தது. அதை மறைத்துக் கொள்ளுவதற்காக, பீதாம்பரத்தை அடிக்கடி அவன் சரி செய்வதும் தெரிந்தது.

அவனும் ஒரு பார்வை பார்த்துவிட்டு ராகத்தை வாசித்து உருப்படி வாசித்துக்கொண்டிருந்தான்.

அவனுடைய உடம்பு மெலிந்து இருப்பதையும், கண்கள் ரத்தம் இழந்து ஒளி குன்றி இருப்பதையும், பொன்மேனி வாடியிருப்பதையும், நெற்றியில் வியர்வை பூத்திருப்பதையும் கண்ட மோகனா, பத்து நாளைக்குள் பாதி உடம்பாகிவிட்டாரே என்று நினைத்தாள். அவள் கண்களிலிருந்து முத்துப்போல் பொலபொலவென்று கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன. அருகில் நின்றும் பேச முடியவில்லையே என்று பொருமினாள். ஆனால் உலகத்தில் காதல் ஒன்று மட்டும் எப்படியோ பேசிக்கொண்டுவிடுகிறது! திடீரென்று, "கண்டேன், கண்டேன், கண்டேன் சீதையைக் கண்டேன், ராகவா" என்று சண்முகத்தின் நாதஸ்வரம். அருணாசலக் கவிராயரின் ஆனந்த கீதத்தை இசைத்தது. ஆவலும் ஆவேசமும் நிறைந்த அந்தப் பாடலின் பாவத்திலே முகாரியின் கம்பீரமும், இதய வேதனையும் நிறைந்திருந்தன.

எல்லோரும் மோகனாவின் அழகில் மயங்கியிருக்கும்போது அவனும், "கண்டேன், கண்டேன்" என்று வாசிக்க ஆரம்பித்தது, ரசிக மக்களிடையே ஒரு கிளர்ச்சியை உண்டாக்கியது. இந்தக் கிளர்ச்சியை விட அவன் அங்கு வாசித்துக்கொண்டிருப்பது வடிவாம்பாளின் நெஞ்சைப் புண்ணாக்கியது.

ஆனால், மோகனாவுக்கோ, அவர் வாய் திறந்து பேச முடியாத நேரத்தில், வாத்தியத்தில் பேசுகின்றார் என்றுதான் தெரிந்தது.

அவளுடைய காதில் சண்முகத்தின் வாசிப்பு, தேனாகப் பாய்ந்தது. உட்கார்ந்தபடியே, தன்னுடைய கடைக்கண்ணால் சண்முகத்தை நோக்கினாள்.

அவன் கண்களும் அவளையே நோக்குவதைக் கண்டாள். இதற்கு இடையிலே தான் கடைக்கண்ணால் நோக்குவதைக் கூட்டத்தினர் பார்த்து ஏதாவது சொல்லிவிடக் கூடாதே என்று வெட்கமும் வந்தது.



பக்கத்தில் ஒரு நிலைக்கண்ணாடி மாட்டப்பட்டிருந்தது. அதன் பக்கம் திரும்பினாள். கண்ட இடமெல்லாம் காணும் அவன் காட்சி அந்தக் கண்ணாடிக்குள்ளும் தெரிந்தது. அதையே பார்த்தாள் மோகனா.

இதைக் கவனித்த வடிவாம்பாள் சரேலென்று இழுக்கவே மோகனாவும் எழுந்து, சாமி தரிசனம் செய்யப் புறப்பட்டாள்.

அன்றைக்குக் கற்பகாம்பிகையின் சந்நிதியில் மோகனாவின் உள்ளம் பேசியது: 'அன்னையே, கற்பகமே, உன் நிழலில் நிற்கிறேன். எனக்கு வேண்டியதைத் தா! அன்று எறும்புக்குப் பெண் உருவம் அளித்தாய்! இன்று நான் பெண்ணாகப் பிறந்தும் எறும்பாகி வருகிறேன். என் ஆசையைப் பூர்த்தி செய்து என்னை மறுபடியும் பெண்ணாக்க மாட்டாயா? ஆளுடைய பிள்ளையாம் அழகிய சம்பந்தரின் பாட்டுக்காகத்தானே பூம்பாவை அவரை மணக்க விரதம் எடுத்தாள்? பணம் என்னும் பெயரை உடைய படம் எடுக்கும் பாம்புதானே அவனையும் அன்று கடித்தது! உன் சந்நிதியில் அவர் பாட்டைக் கேட்டுத்தானே அவன் மறுபடியும் உயிர் பெற்றான்! இன்று என் காதலுக்கும் உயிர் ஊட்டு.

"உன்னிடம் வேண்டி என்ன செய்வது? நீயே சிவபெருமானை அடைய மயிலாக இருந்து இங்கு நெடுங்காலம் தவம் செய்தாய் என்று புலவர் பாடியிருக்கிறார்கள். நானும் மயிலாகத்தான் இருக்கிறேன். அழகாகத் தோகை விரித்து ஆடுகின்றேன். சண்முகம் எனக்குக் கிடைக்க வேண்டுமென்று எப்போதும் துடித்துக்கொண்டுதான் இருக்கிறேன். அவர் எப்பொழுது கிடைப்பாரோ? நீ காலத்தை வென்றவள். எவ்வளவு நாள் வேண்டுமானாலும் நீ தவம் செய்யலாம். என் நிலை வேறு.

"புலர்ந்து மயங்கும் ஒவ்வொரு நாளும், என் வாழ்வின் கணக்கில் ஏறிக்கொண்டே போகின்றன. நான் எத்தனை காலம் ஏங்கித் தவிப்பது? எத்தனை காலம் தவம் செய்வது? இளமையெல்லாம் தவத்தில் கழிவதா? கற்பகமே, கண் பாராய்' என்று விழிகளில் நீர் சோர வேண்டிக்கொண்டே நிற்கும் மோகனாவைக் கண்டாள். அன்னை கருணை தளிர்த்தது. அதற்கு இணங்க அன்னையின் திருவிளக்கிலிருந்து ஒரு சுடர் கீழே விழுந்தது.

கோவிலில் இருந்து மாப்பிள்ளை அழைப்புத் தொடங்கியது. நான்கு குதிரைகள் பூட்டிய கோச்சு வண்டி ஒன்று உண்மையான மலர்களால் அலங்கரிக்கப்பட்டு நின்றுகொண்டிருந்தது. அதில் மாப்பிள்ளை ஏறி அமர்ந்தார். கூடவே அங்கிருந்த பெண்கள் தங்கள் குழந்தைகளை அள்ளி வண்டியில் திணித்தார்கள். மாப்பிள்ளைக்கு அதைப் பார்த்ததும் சிரிப்பு வந்தது. இன்றைக்கே இத்தனை குழந்தைகளையும் நம்கூட ஏற்றுகின்றார்களே என்று எண்ணிக்கொண்டார்.

பெண்கள் வரிசையிலே மோகனாவும் வடிவாம்பாளும் நடந்து வந்தார்கள். சாரட்டுக்கு முன்னே சண்முகம் வண்டியைப் பார்த்து அற்புதமாக வாசித்துக்கொண்டு சென்றான்.

மாட வீதியில் நெருக்கொள்ள முடியாத கூட்டம். 'நீ முந்தி, நான் முந்தி' என்று மக்கள் போட்டி போட்டுக்கொண்டு ஓடி வந்தார்கள். ஒவ்வொரு பெண்மணியும், மேலே சால்வையைப் போர்த்திக்கொண்டு மோகன சுந்தர வடிவத்துடன் முகத்திலே புன்முறுவலுடன் வாசித்துக்கொண்டிருக்கும் சண்முகத்தை ஒரு முறை பார்ப்பார்கள்; அதே கண்கள் மோகனாவின் பக்கம் திரும்பும். "அடியே, அழகும் வித்தையும் கூடி இருக்குடி! இவா இரண்டு பேருந்தான் தகுந்த ஜோடி." என்பார்கள்.

காட்டுக்கோவில் தெருவுக்கு மாப்பிள்ளை ஊர்வலம் வந்து சேர நான்கு மணி நேரமாகிவிட்டது. இந்த நான்கு மணி நேரத்துக்குள் நடை கொஞ்சமாய் இருந்தாலும் நின்றது அதிகமாதலால் எல்லோருடைய கால்களிலும் வலி எடுத்துவிட்டது. வண்டியை இழுத்த குதிரைகூடக் காலை உதறி உதறித் தேய்த்தது. ஆனால் வாசித்த சண்முகத்துக்கு மாத்திரம் கால் வலி தெரியவில்லை. அதைப் போலவே கூடவே நடந்து வந்த மோகனாவுக்கும் கால் வலி தெரியவில்லை.

அவன் அழகைப் பார்த்துப் பருகி நடந்தாள் மோகனா. அவளைப் பார்த்துப் பார்த்து உருகி நடந்தான் சண்முகம். 'ஏன் கோவிலை மாத்திரம் சுற்றிவந்தார்கள்; இந்த மதராஸையே சுற்றி வந்திருக்கக் கூடாதா?' என்று இருவருக்கும் தோன்றியது.

மாப்பிள்ளை, வண்டியை விட்டு இறங்கினார். பெண்மணிகளின் கூட்டமும் வீட்டை நோக்கி விரைந்தது. அதோடு மோகனாம்பாளும் போக வேண்டியதாயிற்று. இதுவரை இருவர் மனமும் பேசத் துடித்தது. இப்போதோ, பார்த்துக்கொண்டிருந்தாலாவது போதும் என்று தவித்தது.

நாதஸ்வரத்தைப் பையனிடம் கொடுத்துவிட்டு, மெல்ல வடிவாம்பாள் இருக்கும் பக்கம் வந்தான் சண்முகம். அவன் வருவதைக் கண்ட வடிவாம்பாள், ஏதோ அவசர வேலையாய்ப் போவது போல் மகளை அழைத்துக்கொண்டு, வக்கீல் வீட்டுப் பெண்களின் நடுவிலே புகுந்துவிட்டாள். இதைக் கண்ட சண்முகம் தயங்கி நின்றான். பெருமூச்செறிந்தான். கூட்டத்துக்குள் சென்று மோகனாவைக் கூப்பிட்டுப் பேசத் துணிந்தான். வீட்டுக்குள்ளேயே நுழைந்தான்.

"யார், என்னைத்தானே தேடுகிறீர்கள்? வண்டி தயாராய் இருக்கு. ஜாகைக்குப் போகலாமா?" என்று கேட்டுக்கொண்டே ஓடி வந்தார் வக்கீல் குமாஸ்தா ராமஸ்வாமி. 'அட, கடவுளே!' என்று சண்முகம் பெருமூச்செறிந்தான். வருத்தத்துடன் வீடு சென்றான்.



'அவர் வருகிறார். ஏதேனும் சாக்கிட்டுப் பேசுவார்' என்று துடித்தது மோகனாவின் மனம். ஆனால், வக்கீல் குமாஸ்தா ராமஸ்வாமி பாணக்கத் துரும்பாக வருவார் என்று அவள் எண்ணவே இல்லை. இது போதாமல் வடிவாம்பாளின் கோபமும் ஜாகைக்கு வந்தவுடன் மோகனாவின் மேல் பாய்ந்தது.

"நீ எதுக்காகக் கச்சேரியிலே அவன் முகத்தையே பாத்துக்கிட்டு இருந்தே?"

"யாரு முகத்தை?"

"அதுதான், அந்தச் சிக்கல் மன்மதன்."

"அதுக்காக, எதிர்த்தாப்பிலே உக்காந்திருந்தா பாக்காமே இருக்க முடியுமா?"

"அந்தக் கூட்டத்திலே நான் ஒன்னும் சொல்லப்படாதுன்னு இருந்தேன். பக்கத்திலே இருந்த நிலைக்கண்ணாடியிலே நீ அவனைத் தானே பாத்தே?"

"ஏம்மா, கோவிலிலே கண்ணாடியை நானா வைக்கச் சொன்னேன்? அவுங்க வச்சு இருக்காங்க. கண்ணாடியைக் கண்டால் பொம்பளைங்க பாக்க மாட்டாங்களா?"

"எனக்கு வந்த ஆத்திரத்திலே அந்தக் கண்ணாடியைச் சுக்கு நூறாக உடைச்சு இருப்பேன்."

"ஐயோ, கோவில் கண்ணாடி அம்மா, பாவம்" என்றான் வரதன்.

"அதை உடைக்காமே விட்டுட்டீங்களே அம்மா! நீங்க மாத்திரம் உடைச்சு இருந்திங்கன்னா, ஒரு உருவத்துக்குப் பதில் நூறு உருவம் தெரியுமே அதிலே?" என்றாள் மோகனா.

"ஆமாண்டி, நீயா பேசறே, பட்டணத்துக்கு வந்ததும் மண்டைக் கிறுக்கு தலைக்கு ஏறிப் போச்சு. சரி போதும், கச்சேரி வேண்டாம், ஊருக்குப் புறப்படு."

"தேவா, நான் ரெடி அம்மா. நீங்க போயிப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துட்டு, ஆட மாட்டேன்னு சொல்லிவிட்டு வந்துடுங்க."

"ஏன், கொடுக்காட்டி என்ன செய்வாங்களாம்?"

"என்ன செய்வாங்களா? அங்கே எத்தனை போலீஸ் நிக்குது பார்த்தீங்களா?" என்றான் வரதன்.

"ஏ வரதா, ஒன்னை ஒன்னு கேக்கிறேன், சிக்கலான் வாசிக்கிறான்னு அவரு எழுதியிருக்கணுமா, இல்லையா?"

"உங்களுக்குள்ளே ஆயிரம் சிக்கல் இருக்கும். அவங்களுக்கு என்ன அம்மா அக்கறை?" என்றான் வரதன்.

"நான்தான் அப்பவே சந்தேகப்பட்டேனே. இந்தத் தந்தி சிக்கலான் குடுத்ததுன்னு."

மோகனாவுக்கு ஆத்திரம் வந்தது. "நான்தான் அவர் ஆளு ஆசைப்படறேன், பொய் சொல்லியிருப்பேன். பன்னிக்கூட

வாத்தியாருமா அவரைக் காதலிச்சாரு? அவரு என் பொய் சொல்லணும்?"

"ஆமாண்டி. அவரு உன் வாத்தியாருதானே! நீயா பேசறே, அவனைப் பார்த்த திமிரிலேல்லே பேசறே! அவன் கண்ணாலே சொல்லியிருப்பான், அம்மாவைப் பிடிச்சு பேசன்னுட்டு."

"அட போங்கம்மா, வந்த இடத்திலே வாயைக் கட்டிக்கிட்டு இருக்காமே... நம்ப சண்டையெல்லாம் மெட்ராசிலே வச்சுக்க வேண்டாம்" என்று வரதன் பேசப் புகுந்தான்.

"சரி, சரி. நாளைக்கு ராத்திரியே நாட்டியம் முடிஞ்சதும், ஊருக்குப் போகணும். புறப்படத் தயாராயிருங்க."

"அதெல்லாம் முடியாது. எனக்கு ஊரெல்லாம் சுத்திப் பாக்கணும்" என்றாள் மோகனா.

"அதெல்லாம் முடியாது. எனக்கு இந்த ஊர்த்தண்ணி பிடிக்கல்லே."

"சரி, பின்னே வெந்நீர் போட்டுச் சாப்பிடுங்க" என்றான் வரதன்.

"எனக்கு வெந்நீர் வேண்டாமுடா. என் தலையிலே நெருப்பையே அள்ளிப் போட்டுடுங்க" என்று சொல்லிக்கொண்டே உள்ளே போய் தரையில் படுத்துவிட்டாள் வடிவாம்பாள்.

'நிழலாவது இருளில் நீங்கிவிடும். அம்மாளின் நிஷ்டூரம் நீங்க வில்லையே' என்று யோசித்தாள் மோகனா.

அன்று இரவு முழுவதும் மோகனா, அதே கவலையில் இருந்தாள். 'எனக்காக அவர் எவ்வளவு கஷ்டங்களைத்தான் படுவது? அவருக்கு இருக்கும் யோக்கியதை என்ன! சென்றவிடமெல்லாம் சிறப்பு அடையும் வித்தையல்லவா அவரிடம் இருக்கிறது! அதை வைத்துக் கொண்டு, கேவலம், என்னை மறந்து அவர் சந்தோஷமாக இருக்கலாம். என்னால் எனக்கும் சுகமில்லை, அவருக்கும் சுகமில்லை. எதற்கும் காலையில் சீக்கிரம் எழுந்து முகூர்த்தத்துக்கும் போய் அவரைப் பார்த்துக்கொண்டாவது இருக்கலாம்' என்று எண்ணிக் கொண்டே படுக்கையில் புரண்டாள் மோகனா. மோகனாவின் ஆவலைப் பார்த்த சந்திரன், நாம் ஏன் காதலுக்குக் குறுக்கே நிற்க வேண்டும் என்று வேகமாய் ஓடினான்.

பொழுது புலர்ந்தது. வடிவாம்பாள் மனத்தில் புதிதாக ஒரு யோசனை மலர்ந்தது. பஞ்சும் நெருப்பும் பக்கத்தில் இருக்கக் கூடாதென்று எண்ணினாள். 'ஏ, மோகனா, கல்யாண வீட்டிலே வேணும்னா ஒரு வண்டி கேட்டு வாங்கிக்கிட்டு, செத்த காலேஜைப் போய்ப் பாத்துட்டு வருவோமா?" என்றாள்.

"நீங்க வேணும்னா போயிட்டு வாங்களேன் அம்மா."

"திருவாரூரிலேருந்து பட்டணத்துக்கு வந்து, இதுகளைப் பாக்காமே இருந்தா நல்லா இருக்குமா?"



"இல்லேம்மா, முகூர்த்தத்துக்கு நம்ப இல்லேன்னு சொல்லு வாங்களே!"

"நீ எதுக்கு? நீயா தாலி கட்டிக்கப் போறே?"

இந்த வார்த்தைகளைச் சொன்னவுடனே வடிவாம்பாளே நடுங்கிவிட்டாள். அவள் வயிற்றில் பகீர் என்றது. தாலி என்பதற்காக ஊரார் பேசும் கேவலமான சொல்லை தாமே கேட்டுவிட்டோமே என்று நினைத்துத் துடித்தாள். எதிரில் நின்ற மோகனா அனலில் வீழ்ந்த புழுப் போல் உளம் கன்றி, உடல் குன்றினாள். அழுகை பீறிட்டு வந்தது.

"அம்மா, அம்மா, என்னை உயிருடன் கொல்லாதீர்கள். ஊரார் சொல்லும் வார்த்தையை நீங்களும் சொல்லாதீர்கள். ஐயோ! என்னைப் பெற்று இதைக் கேட்கவா வளர்த்தீர்கள்? கல்யாண வீட்டிலே நான் ஒருத்தி மட்டும் அதிசயப் பொருளாய் இருக்கிறேனே, அது ஏன் என்று தெரியவில்லையா? பெண்ணாகப் பிறந்தும் பெண்ணாக வாழ முடியாமல் தவிக்கிறேனே! அது தெரிய வில்லையா? ஆடப் பிறந்த எனக்கு முகூர்த்தத்தில் என்ன அம்மா வேலை? அம்மா, நான் கலியாணம் பண்ணிக்கப் பிறக்க வில்லையம்மா! அதைப் பார்க்கத்தான் பிறந்தேன்" என்று தேம்பி அலறினாள் மோகனா.

இதைக் கேட்ட வடிவாம்பாளும் உள்ளம் துடித்தாள்.

இதன் பிறகு முகூர்த்த வேளையில் அங்கு போய் நிற்பதே மோகனாவுக்கு அவமானமாகப் பட்டது. இவர்கள் போகாமலேதான் முகூர்த்தம் நடந்தது.

ஆனால், வரதன் சும்மா இருக்கவில்லை.

சண்முகத்தின் ஜாகைக்குப் போய்ச் சேர்ந்தான்.

அவனைப் பார்த்தவுடன், "என்ன முட்டுக்காரரே, தலையில் கட்டு கட்டிக்கிட்டு இருக்கீங்க?" என்றான் தருமன்.

"அதுனாலே பாதகம் இல்லீங்க. நாட்டியத்துக்குத்தான் தலையப்பா கட்டிக்கிட்டே வாசிக்கலாமே! உங்களுக்குத் தலையிலே அடி விழுந்துடுத்துன்னாத்தான் ஒண்ணும் பண்ண முடியாது."

"என் தலையிலே வந்து எவன் அடிக்கப் போறான்? நான் ஏன் செவரு ஏறிக் குதிக்கப் போறேன்?"

"நான் நாயனக்காரரைக் கொஞ்சம் பார்க்கணுமே" எப்போதும் மறுத்துப் பேசும் தருமன், அவனைக் கூட்டிக்கொண்டு போய்ச் சண்முகத்தின் அறையில் விட்டான்.

"என்ன வரதா, மோகனா ஏதாவது சொல்லி அனுப்பிச்சா?"

"சொல்லி அனுப்ப என்ன இருக்குதுங்க? இரண்டு பேரும் சௌரவம் பாக்கறீங்க. இப்படி இருந்தா என்னைக்கிதான் நல்ல காலம் வரப் போவுதோ!"

"நான் என்ன செய்வேன் வரதா? மோகனாவை ஆட்டத்துக்குக் கூப்பிட வேண்டுமென்று நான்தான் சொன்னேன். பழம் நழுவிப் பாலில் விழுந்தது என்று ஏற்றுக்கொண்டார்கள். நேத்திக்கு நான் அதைப் பார்த்ததும் பேசக்கூட முடியவில்லை. ஏன் வரதா, அது ரொம்ப இளைச்சாப்பிலே இருக்குது!"

"நீங்க மாத்திரம் என்ன, சாண்டோ மாதிரியா இருக்கீங்க? இப்படி எண்ணி எண்ணி இளைத்துத் துரும்பாகாமல் இருக்க எனக்குத் தோணுது— நீங்க வந்து திமுதிமுன்னு பூந்திடுங்க. யாரு என்ன செய்யப் போறாங்க?"

"வடிவாம்பாள் அம்மா ஏதாவது பேசினா?"

"பேசினா என்ன? உங்களுக்குத் தெரியும், எனக்குத் தெரியும். நான் ஒருத்தர் கிட்டேயும் சொல்லலே, நீங்களும் மறந்துடுங்க. பிறத்தியாருக்குத் தெரிந்தால்தானே பொல்லாப்பு!"

"அப்படியில்லே வரதா. நான் அங்கு பணமில்லாமல் வருவதனால் பயன் ஒன்றும் விளையாது."

"ஆனா, உங்களையும் அதையும் பிரிக்கிறதுக்கு அம்மா சூழ்ச்சி பண்ணிட்டாங்க. இந்த ஊர்க் கச்சேரி முடிந்ததும் ராத்திரியே புறப்பட்டுப் போயிடப் போறாங்க. ஒரு இரண்டு மாசம் கொழும்புக்குப் போறதுன்னு பிளான் போட்டிருக்காங்க. அப்புறம் ஆறின கஞ்சி பழங்கஞ்சியாகப் போயிடும். கஞ்சி ஆறலாம், காதல் ஆறுவதில்லை" என்றான்.

அதைக் கேட்ட சண்முகம் திடுக்கிட்டான், "என்ன! கொழும்புக்குப் போகிறார்களா?" என்றான்.

"ஆமா."

அதற்குள் ஒரு ஆள் ஓடி வந்து, "நாட்டியம் ஆரம்பிக்கப் போறாங்க. உங்களை அவசியம் வரணும்னு சொன்னாங்க" என்று சண்முகத்தை அழைத்துவிட்டுச் சென்றான்.

வரதன் வேகம் வேகமாக ஜாகைக்கு ஓடி வந்தான். அவன் கையில் அழகான பீதாம்பரம் ஒன்று இருந்தது.

"இது எதுக்கு வரதா?" என்று கேட்டாள் மோகனா.

"தலையிலே காயம் தெரியாமல் கட்டிக்கிட்டு வாசிக்கிறதுக்காக அவரு தந்தாரு" என்றான் வரதன்.

"அவரைப் பாத்தியா?" என்றாள் மோகனா.

அதற்குள் கையில் புஷ்பங்களை எடுத்துக்கொண்டு, மகளை அலங்கரிக்க வந்துவிட்டாள் வடிவாம்பாள். மோகனாவுக்கு மனத்தில் வருத்தம் இருந்தாலும், சண்முகத்தின் எதிரில்தான் ஆடப் போகிறோம் என்ற எண்ணத்தில் அழகு இரண்டு மடங்கு அதிகமாயிற்று.



கல்யாணக் கொட்டகையில் தாங்க முடியாத கூட்டம். திருவாரூரில் போட்டியைப் பார்க்க முடியாதவர்கள் எல்லாம் இப்பொழுது கூடியிருந்தார்கள்.

ஒன்று வைரம், மற்றொன்று வக்கீல். இவை இரண்டும் மயிலாப்பூருக்குப் பெருமை அளித்தன. உயர்ந்த "புளு ஜாகர்" வைரங்களை "மயிலாப்பூர் குவாலிட்டி" என்பார்கள். இந்தியாவிலுள்ள எந்தக் கோர்ட்டிலும் வக்கீல்கள் பேசும் போது, இது மயிலாப்பூர் வக்கீலின் வாதம் என்று சொல்லுவார்கள்.

அவ்வாறு உலகப்புகழ் பெற்ற பல வக்கீல்களும் அங்கு அமர்ந்திருந்தார்கள். எங்கு பார்த்தாலும் ஒற்றைக்கல் வைரக் கடுக்கனும், அல்பாகா கோட்டுகளும், தும்பைப்பூ போன்ற வெள்ளை டர்பன்களும் காட்சி அளித்தன. வெள்ளைக்காரர்கள், அவர்களுடைய மனைவிமார்களுடன் வந்து முன் வரிசையில் அமர்ந்திருந்தார்கள். மதன்பூர் மகாராஜா தமது சஹதர்மிணியுடன் அமர்ந்திருந்தார். அவருக்குப் பக்கத்தில் ஸ்ரீமதி லேடி கனகாம்பரம் அம்மையார் விளங்கினார். அப்பொழுது சென்னையில் பிரபலமாக இருந்த வித்துவான்கள் எல்லோரும் சண்முகத்தை நடுவாக வைத்துக்கொண்டு அமர்ந்திருந்தார்கள். எங்கு பார்த்தாலும் அறிவுச் சுடர் வீசும் முகங்கள், கருணை உள்ளங்கள் அங்கு அமர்ந்திருந்த ஒவ்வொருவரும் ஒரு கலைக் கோவில்.

அந்தச் சபை நடுவே மோகனா ஆடுகிறாள் என்றால் கேட்க வேண்டுமா? "தீம், தையா" என்ற முதல் தட்டிலேயே மேளம் கட்டிவிட்டது.

எட்டாத உயரத்திலே கார்முகில் இருக்கிறது. எத்தனை தவம் செய்தாலும் அது அருகில் வரப்போவதில்லை. ஆனால், அந்த மேகத்தைக் கண்டவுடனே மயில் ஆடுகிறது. பூரணச் சந்திரனும் அப்படியே எட்டாத உயரத்தில்தான் இருக்கிறது. ஆனால், கடலரசியோ பௌர்ணமிச் சந்திரனைக் கண்டவுடன், இன்றுங்கூடக் காதல் கொண்டு களிநடம் செய்கின்றாள். தன் அலைக்கரங்களில் முத்துவளை குலுங்க கலீர் கலீர் என ஆடுகிறாள்.

இதைப் போலவேதான் அன்றைக்கு மோகனாவும் ஆடினாள். எட்டாத தூரத்தில் சண்முகசுந்தரம் இருக்கிறான். அவளுக்கும் அவனுக்கும் இடையே பணம் என்னும் படுகடல் பெரிதாகக் கிடக்கிறது. ஆயினும், மோகனாவின் ஆட்டம் அற்புதமாக அமைந்தது.

அவள் எடுத்துக்கொண்ட துதிப் பாடலிலேயே கூட்டத்தின் கவனம் முழுவதும் அவள் பக்கம் சென்றது.

"கற்பக நாயகியே காவா— நீ—வா—வா" என்று பாடி, கா—வா—நீ வா...வா என்பதற்கு அவள் கைகள் பிடித்த அபிநயத்தையும், கண்களின் அழைப்பையும் கண்டவுடனே, ஒரு மைல் தள்ளியிருந்த

கற்பகநாயகியே கல்யாணப் பந்தலை நோக்கி விரைந்து வந்தாள். கற்சிலையாய் நிற்கும் கற்பகமே வரும்போது, மற்றவர்கள் வருவதற்குக் கேட்க வேண்டுமா? ஒவ்வொரு நாற்காலியும் முன்னே நகர்ந்தது.

இயற்கையிலேயே, மோகனா அழகி. எடுப்பான தோற்றம். பூங்கொடி போன்ற தளதளப்பும், கொடிக்கேற்ற பருமனும் உடையவள். கருகரு என்று சுருண்டு வளர்ந்த கூந்தல் நீருண்ட மேகம் போல அமைந்திருந்தது. அந்த கூந்தலின் அடியிலே விளங்கும் அவள் திருமுகம் சந்திரன் போலக் காணப்பட்டது. சந்திரனின் களங்கமோ மை கொட்டி அழித்தது போலத் தோன்றும். ஆனால் அவளுடைய முகத்திலே மை இட்டு, இரு விழிகள் மலர்ந்திருந்தன. அந்த வில்லுப் புருவங்களிலிருந்து விழி அம்புகள் வெளிப்பட்டன. அதை வெல்ல முடியாமல் பலர் தோற்றனர். நடைக்குத் தோற்றார் ஒருவர். நளின விழிக்குத் தோற்றார் ஒருவர். அபிநயத்தில் அமிழ்ந்தார் ஒருவர். சேலைக் கட்டுக்கும் சிந்தூரப் பொட்டுக்கும் தோற்றனர் பலர்.

முகத்திலே திலகம் இடுவதைக் கண்டுபிடித்தவர்கள் யாரோ, அஞ்சனம் தீட்ட முதலில் ஆரம்பித்தவர்கள் யாரோ என்றெல்லாம் அழகு ஆராய்ச்சியில் இறங்கினர் பலர். இளம் வெற்றிலையால் சிவப்பு ஏறிய அவளுடைய உதடுகள் இன்ப ரசத்தை அள்ளிக் கொட்டிக் கொண்டிருந்தன. அவளுடைய இதயத்திலே இருக்கும் காதல், ஒவ்வொரு அவயவங்களிலும் பொங்கி வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. கன்னத்தில் சிவப்பை அள்ளி ஒத்திக்கொள்ள வேண்டியதில்லை. காதல் வந்தால் கன்னம் சிவக்கும் என்பதை எடுத்துக் காட்டின அவள் கன்னங்கள். இளம் வேர்வை அரும்பியது. இதயம் பூரித்து விம்மியது. கடைவிழிகள் புரண்டன. காதலை அள்ளி வீசின. அத்தனையும் சண்முகத்துக்கென்று அவளுக்குத் தெரியும். யாருக்காக மழை பெய்தால் என்ன? ஊருக்கெல்லாம் நன்மைதானே என்பது போல் அவளுடைய காதல் மழை எல்லோருடைய உள்ளத்தையும் களிவித்துக்கொண்டிருந்தது.

"வொண்டர்புல்— வொண்டர்புல்" என்றார் மகாராஜா. பக்கத்திலே அமர்ந்திருந்த லேடி கனகாம்பரம் அம்மையார் பரத நாட்டியத்தின் உயர்வை அவருக்குப் பாகு போல் ஆங்கிலத்தில் விளக்கிக்கொண்டிருந்தார்கள். சிலருக்கு அது தலைவேதனையாயிருந்தாலும் பொறுத்துக்கொண்டிருந்தார்கள்.

"இடோ—பாரத் நாச்" என்றார் மகாராஜா.

"பாரத் நாச் நஹீ! பரத நாட்டியம்!"

"எஸ்-எஸ்! இங்கே இருந்து ஒரு நூறு வருஷத்துக்கு முன்னாலே, நாலு பரத நாட்டிய வித்வான்களை எங்க பரோடா மகாராஜா கூட்டிக்கிட்டு வந்தார். வட நாட்டிலே பரத நாட்டியம் பரவியது" என்று கூறிவிட்டு, அந்த வெள்ளைக்காரர்கள் நாட்டியத்தை ரசிப்பதையே கூர்மையாகப் பார்த்தார் மகாராஜா.



"இப்பொழுது அடுத்த ஆட்டம் ஆரம்பமாகப் போகிறது. மயிலாப்பூரிலே கற்பகவல்லி."

"ஹாவ் - இஸ் - கற்பகவல்லி?"

"தி காண்ஸார்ட் ஆப் காட் கப்பாலி. கற்பகவல்லி தோட்டத்திலே பந்தாடினாள். கபாலீச்வரர் நந்தி வாகனத்தின் மேல் ஏறிக்கொண்டு வீதி வழியே போனார். அதைப் பார்த்த கற்பகாம்பிகை அவர்மேல் காதல் கொண்டாள். ஒரு நாள் ஒரு குறத்தி வந்தாள். கற்பகாம்பிகைக்குக் குறி சொன்னாள். அப்படியொரு 'மயிலாப்பூர் குறவஞ்சி'யை இப்போ ஆடப் போறா" என்று அம்மையார் சொல்லிக்கொண்டிருக்கும் போது,

ஆனந்த பைரவி

பல்லவி

மயிலைக் குறமாது வந்தாள்
மனமகிழ மலர்நெகிழும்
திருவெனவே அழகொழுக – (திருமயி)

அநுபல்லவி

கயலைப் பழிக்கும்விழி
கரும்பி னிக்கும்மொழி
செயலைப் பழிக்கும்நடை
செகத்தை மயக்குமுடை (மயி)

என்ற பாட்டு ஆனந்த பைரவியில் முழங்கியது. வந்தாள், வந்தாள் என்று சொல்லிக்கொண்டே இருக்கையில், உள்ளே இருந்து பளீர் என்று ஒரு மின்னல் தோன்றியது. சபையோர்கள் எல்லோரும் ஆவலுடன் பார்த்தார்கள்.

ஆம். மோகனாவேதான் சற்று நேரத்திற்கு முன் தேவ குஞ்சரி போல் காட்சி அளித்த மோகனா, இப்போது வள்ளி அம்மை போலக் காட்சி அளித்தாள்.

குறத்தி என்றாலே தனி அழகுதான். அதுவும் குறத்தியாக அவள் வந்ததுமே, சபையில் இருந்தவர்கள் எல்லோரும் தாமும் அவளிடம் சென்று குறி கேட்க மாட்டோமா என்று ஆசைப்பட்டார்கள்.

மதன்பூர் மகாராஜா கூலிங் கிளாஸைக் கழற்றிவிட்டுப் பார்த்தார். குறத்தி கொண்டையைத் தூக்கிக் கட்டிக்கொண்டிருந்தாள். கொண்டைக்குப்பின்னே, குருவியின் வால்போலச் சுருண்ட கேசங்கள் தொங்கின. அவள் முகத்திலே பச்சை, நெற்றியிலே ஒரு நாமக்கீற்று கண்ணுக்குப் பக்கத்திலே திருஷ்டிப் பொட்டு, கழுத்திலே பாசிவடம், எடுத்துக் கட்டிய கச்சகள், பட்டு ரவிக்கை, அதிலே பதிந்த ஒரு வங்கி, கரும்பின் இதயம் போல் உண்டு, இல்லை என்று சந்தேகிக்கும் படியாக இடை. காலிலே வெள்ளிக்காப்புக் கொலுசு. மிஞ்சியின் சத்தம் கொஞ்சிக் கொஞ்சிப் பேசியது. ஆட்டத்திலே ஒரு எளிமை

அந்த எளிமையிலும் கலை வழுவாத எளிமை. 'தினதெந்தினா தினதெந்தினா தினதெந்தினா தினனா!' என்று பாடப் பாட, அவளுடைய ஆட்டத்தில் எல்லோரும் மயங்கினார்கள்.

"என்ன தம்பி, உங்க கையைக் கொஞ்சம் காண்பிக்கறதுதானே?" என்றான் சண்முகத்திடம் தருமன்.

"இந்தக் கை பிறத்தியார் கையைப் பாக்கிற கையில்லையே, அண்ணே."

"இல்லே, கல்யாணம் எப்போ ஆகும்னு அது வாயாலேயே சொல்லிக் கேட்டுடலாமே!"

"இப்படியெல்லாம் கையைப் பாத்துக் கல்யாணம் முடியாது அண்ணே, இது பையைப் பாத்துத்தான் முடியும். சரி, குறுக்கே பேசாதே! ஆட்டத்தைப் பார்ப்போம்" என்றான் சண்முகம்.

கையைத் தாராய் அம்மே
கையைத் தாராய் - இந்தக்
காசினிக்கும் படியளக்கும்
கையைத் தாராய்
பையைப் பாராய் - சுருக்குப்
பையைப் பாராய் - உன்
பார்வையில் பணம்நிரம்பப்
பையைப் பாராய்!

என்று நட்டுவனார் பாடினார். குறத்தி கற்பகவல்லியம்மையின் கையைப் பார்த்துக் குறி பார்ப்பது போல் குனிந்து கும்பிட்டாள். கூட்டத்தினர் பக்தியில் மெய்மறந்தனர்.

உலகமெல்லாம் பாக்குதம்மா
உந்தன்கையைத் தானே
உனதுகையைப் பார்க்கநானும்
ஓடியேவந் தேனே
கூத்தாடும் விநாயகன்உன்
மூத்தபிள்ளை யானான்
குறமாதைச் சிங்காரவேலன்
கூட்டிஓடிப் போனான்
அதிகார நந்தியின்மேல்
ஆண்டிஒருவன் வந்தான்
அவன்மீது மையல்கொண்டு
அரையுடம்பாய் ஆனாய்
காதல்நிறை வேறிச்சுனா
கையிலென்ன தருவாய்



கற்பகமே நினைப்பதெல்லாம்
களிப்புடன் தரவேணும் !

என்று பாடிப் பாடி மோகனா குறி சொல்லி ஆடினாள். கூட்டத்தினர் கற்பகவல்லியையும் குறத்தியையும் கண்டனர்.

கூட்டத்தில் கரகோஷம் எழுந்தது. கிட்டாவையர் எழுந்து மேடையை நோக்கி ஓடி வந்தார். "எல்லோருக்கும் ஒரு வார்த்தை. எனக்கு கமாஸ் ராகம்னா உயிர் என்று எல்லோருக்கும் தெரியும். இப்பொழுது கடைசி 'ஐட்டம்' ஆக மோகனாவைத் தில்லானா ஆடும்படி கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திருவாரூரில் ஆடிய கமாஸ் தில்லானாவையே இங்கும் ஆட வேண்டும். திருவாரூரில் வாசித்த அதே சண்முகம் அவர்களே தில்லானாவை இங்கும் வாசிக்க வேண்டும்" என்று அவர் கேட்டுக்கொண்டவுடனே கூட்டம் முழுவதிலும் குதூகலம் ஏற்பட்டது.

எல்லோரும் சண்முகத்தின் பக்கம் திரும்பினார்கள். கிட்டாவையரின் காரியஸ்தர் ராமஸ்வாமி அவனிடம் ஓடி வந்தார். சண்முகத்தின் மேல் ஒரு பீதாம்பரத்தைப் போர்த்தினார். அவனைக் கையைப் பிடித்து மேடைக்கு இழுத்தார். அம்மாதிரி வேறு ஒருவர் உத்தரவு போட்டிருந்தால், "நீங்களே ஊதுங்க" என்று சொல்லியிருப்பான் சண்முகம். இப்போது அன்புக்கு இடையே அகப்பட்டுத் தவித்தான். ஆனால் வடிவாம்பாளோ இதைக் கேட்டவுடன் வரிந்து கட்டினாள்.

எழுபத்து ஏழாம் அத்தியாயம்

## காதலன் வந்தான், கணையாழி தந்தான்



எப்போதுமே ஆட்டம் நடக்கும் மேடையைக்காட்டிலும் திரைக்குப் பின்தான் பரபரப்பு அதிகம் காணப்படும். அதிலும் "சண்முகம் ஊதட்டும், மோகனா ஆட்டும்!" என்றவுடனே இன்னும் பரபரப்பு அதிகம் ஆயிற்று. வடிவாம்பாளோ ஆத்திரத்தில் ஆடத் தொடங்கினாள்.

அளவுக்கு மீறி ஓட்டினால் சில வண்டி மாடுகள் படுத்துவிடும். அரையணாப் பொடியைப் போட்ட பிறகுதான் எழுந்திருக்கும். அதைப்போல்தான் மூளையும். ஆத்திரமும் அவசரமும் வரும்போது குழப்பத்தில் படுத்துவிடும். வெறும் சத்தந்தான் மிஞ்சும்.

"அவன் ஊதுவதாம், இவள் ஆடுவதாம்! இதெல்லாம் என்ன வேடிக்கை? இதற்குச் சம்மதிக்க முடியாது. கூப்பிடு மோகனாவை. கூப்பிடு! ஏன் சும்மா நிற்கிறாய்?" என்று அபரஞ்சியின் மேல் பாய்ந்தாள் வடிவாம்பாள்.

"எப்படி அம்மா கூப்பிடறது? மேடையிலே நிற்குதே!"

"மேடையில் நின்னா என்னா? நான் கூப்பிடுறேன் என்று சொல்லு."

"எப்படி அம்மா சொல்றது?"

"இங்கிலீசிலே சொல்லு; மூதேவி, எதிர்த்து எதிர்த்துப் பேசிக்கிட்டு— போய்ச் சொல்லுடின்னா?"

"மேடை நடுவிலே நான் போய்ச் சொல்ல முடியாதும்மா இல்லாட்டி நான் ஏன் மாட்டேன்கறேன்."

"இந்தா, நான் போய்ச் சொல்லுறேன். எடு அந்தப் பட்டு ரவிக்கையை!"

அபரஞ்சி ஒரு வெண்பட்டு ரவிக்கையை எடுத்தாள். வடிவாம்பாள் அதை வாங்கிக்கொண்டு போய், பசு மாட்டிற்குப் புல்லைக் காட்டுவது போல் தட்டி மறைவில் நின்று எடுத்துக் காட்டினாள். அதைக் கண்ட மோகனா, தாயார் உடை மாற்ற அழைக்கிறாள் என்ற எண்ணத்தில் உள்ளே ஓடி வந்தாள். உடனே பின்பாட்டுக்காரர்கள் இருவரும்,

"பேயாண்டி தனைக்கண்டு
நீஏண்டி மையல் கொண்டாய்
பெண்ணரசியே உமையே..."

என்ற பாடலைப் பிரமாதமாகப் பாட ஆரம்பித்தனர். வடிவாம்பாள் ஆத்திரத்தோடு அவர்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு உள்ளே வந்தாள்.

அவசரமாகத் தில்லானாவுக்கு உடைகளை மாற்ற ஆரம்பம் செய்தாள் மோகனா. தாயின் கையில் இருந்த ரவிக்கையை வாங்கக் கையை நீட்டினாள். ஆனால், எப்போதும் கூட இருந்து உதவும் வடிவாம்பாள் கோபத்துடன், "யாரைக் கேட்டு உடையெல்லாம் மாத்திக்கறே?" என்றாள்.

"ஏன் அம்மா?"

"அவன் ஊதுறதும் நீ ஆடுறதும். இது என்ன மகுடி ஊதிப் பாம்பு புடிக்கிறானோ? அதெல்லாம் முடியாது."

"ஏன் முடியாது? ஒரு தில்லானா இல்லே, ஒம்பது தில்லானா ஊதினாலும் என் சிஷ்யப் பொண்ணு ஆடும்" என்று சொல்லிக் கொண்டே முத்துக்குமார நட்டுவனார் உள்ளே வந்தார்.

"நீ சும்மா இரு முத்துக்குமரு."

"நீங்க சும்மா இருங்கம்மா!"



"நான் பெத்தவள்."

"நான் வாத்தியார்."

"எனக்குத்தான் தெரியும்."

"எனக்குத்தான் தெரியும்."

"என்ன தெரியும்."

"எதைச் சொன்னீங்க?"

"அதெப்படி முத்துக்குமரு தில்லானா ஆடுறது? நாட்டியம் ஆட வந்தோமா, அவங்க சொல்றபடி ஆட வந்தோமா? வந்த இடத்திலே நான் ஊதறேன், நீ ஆடுன்னா என்ன அர்த்தம்?"

"ஓ, அதுவா! ஜனங்கள் விரும்பறாங்க."

"எதைத்தான் விரும்ப மாட்டாங்க? ரெண்டு பேரு அடிச்சுக்கிட்டு நின்னா ஊருக்கு வேடிக்கையாத்தான் இருக்கும்."

"அம்மா, உங்க மகளுக்கு விளக்கெண்ணெய் குடுக்கணும்னு நீங்க சொல்லுங்க, நான் வேண்டாம்னு சொல்லவில்லை. இந்த வித்தை விஷயத்தை மட்டும் என்கிட்டே விட்டுடுங்க. இந்தப் பட்டணத்திலே ஆடாமல் அது எங்கே போய் ஆடி, எனக்குப் பேரை எடுத்துத் தரப்போகுது? நீங்க சும்மா இருங்க."

"இல்லை முத்துக்குமரு, இது அந்தச் சிக்கலான் வேலை."

"எவன் வேலையா இருந்தா என்னம்மா? பேசப் போகுதா? பாடப்போகுதா? ஆயிரம் பேருக்கு முன்னாலே ஆடப் போகுது. அந்தப் புள்ளையாண்டான்தான் என்ன, இங்கிதம் தெரியாதவரா?"

இதற்குள் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. எல்லோரும் மேடையையே பார்த்தனர். உள்ளே சென்ற மோகனா திரும்பி மேடைக்கு வராத ஒவ்வொரு கணமும் அவர்களுக்கு ஒரு யுகமாய்த் தோன்றியது. தருமன் சும்மா இருப்பானா? நாதஸ்வரப் பையுடன் சண்முகத்திடம் வந்தான்.

"தம்பி, போட்டிக்குத் திருவாரூரிலே வாசிச்சது சரி, பட்டணத்திலேயும் வந்து பரத நாட்டியத்துக்குப் பக்க வாத்தியம் வாசிச்சா நல்லா இருக்குமா? நம்ம தொழில் என்ன, நாமென்ன?"

"ஒத்துக்காரர் சொல்றதும் நிசந்தான்" என்றான் முத்துராக்கு.

தனக்கு ஒரு ஆமோதிப்புக் கிடைத்தவுடனே தருமன் இன்னும் கடுமையாக வாதிக்க ஆரம்பித்தான். "ஆமா, நம்ப ஊரிலே பெரிய மிருதங்கக்காரர்கள் எல்லாம் பொம்பிளை கச்சேரிக்கு வாசிக்கிறாங்களா? இப்ப தம்பி மட்டும் பொம்புளை நாட்டியத்துக்கு வாசிக்கலாமா?" என்று ஆணித்தரமாகக் கேட்டான்.

இதைக் கேட்ட சண்முகம் சிரித்தான். "தருமண்ணே! சபாஷ் அப்படிக் கேளு! அதோடு நிறுத்தாதே. பொம்புளை வவுத்திலே பொறக்கலாமான்னு கேளு!" என்றான். தவில்காரரும் ஒத்துக்காரரும் திகைத்தார்கள். சண்முகம் சமாதானம் சொல்ல ஆரம்பித்தான்.

"அண்ணே, நான் பிச்சைக்காரன் பாட்டைக்கூடக் கேட்டு ரசிக்கிறவன். எனக்கு ஆண், பெண், பக்க வாத்தியம் இந்தத் தகராறெல்லாம் தெரியாது. பரத சாஸ்திரந்தான் சங்கீதத்திலேயே முதலில் கிடைத்த சாஸ்திரம். இருக்கிற நூல்களிலே எல்லாம் அதிலேதான் ராக தாளத்தைப்பத்தி நல்லா சொல்லப்பட்டிருக்குது.

"சூரியன், சந்திர, நாகசுர முதலிய துளை தோற்கருவி வாத்திய விலக்கணம் சுவேத முனி முதலியோர்க்குச் சொற்றனன்' என்று பரத சேனாபதிய ஏடு சொல்லுது. சங்கீதம் என்ற தாய்க்கு நாட்டியமும் நாதசுரமும் இரண்டு பிள்ளைகள். இதிலே என்ன சண்டை? முகவீணையும், புல்லாங்குழலும் முழங்குறபோது நம்ம மட்டும் என்ன தள்ளுபடியா?" என்று கேட்டான்.

"அது சரி, சாஸ்திரத்திலே இருந்தால் சரிதான். பின்னாலே நாலு நாயனக்காரர்கள் கூடுற இடத்திலே சிக்கல் தம்பி அப்படிச் செஞ்சடுச்சன்னு சொல்லுவாங்களேன்னு பார்த்தேன்."

"தப்பு ஒண்ணும் செய்யலியே அண்ணே! காம்போதியிலே காகலி நிஷாதம் புடிக்கிறோம். சுமாகலே காகரப்பிரியாவைக் கலக்கிறோமா? காதுக்கு ரசனையைக் குடுக்கறோம். அதிலே என்ன குத்தம்? இந்தா பாருங்க—

"நினைக்கிறது பாவம். நினைக்கிறதை அசைக்கிறது அபிநயம். இது ரெண்டும் இல்லாதவங்க யாரு?"

"ஒருத்தருமில்லே!"

"பாவம், ராகம், தாளம், அபிநயம், பாதக்கிரமம் இந்த அஞ்சும் தான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய அஞ்சு தொழிலும். இதுதான் நாட்டியம். ஓயாத நாட்டியந்தான் உலகமே. நாம் பேசினாலும் பாடினாலும், தூங்கினாலும் முழிச்சுக்கிட்டு இருந்தாலும், மூச்சு விட்டாலும் இருமினாலும் தாளம் தவறாமல்தான் அது நடக்குது. நாம்ப கும்பிடற தெய்வமே கூத்தாடற போது, நான் நாட்டியத்துக்கு வாசிச்சால் கேவலம் இல்லை. ஆட எடுத்த பாதம் நமக்கு அருள எடுத்த பாதம். இதுதானே நமக்கு வேதம்!"

"அது சரி தம்பி, நீங்க சொன்னா!"

"நான் வாசிக்கத்தான் போறேன்— உங்களுக்கு—?"

"உனக்குச் சம்மதம்னா எங்களுக்கும் சரிதான்" என்றான் தருமன். வாசிக்க அமர்ந்தான் சண்முகம்.

"எந்த ஊரும் என் ஊர்தான், எந்தச் சாப்பாடும் நான் சாப்பிடுவேன். எந்தச் சங்கீதமும் கேட்பேன்' என்று சிலர் சொல்லுவார்கள். நாலு நாள் உப்பில்லாப் பத்தியம் கிடந்தாலும், ஊர் விட்டு ஊர் போனாலும் தெரியும், அவர்கள் படும் பாடு. 'தூத்பேடாவும் பாதாம்கீரும் வேண்டாம். கொஞ்சம் துவையல் கிடைத்தால் போதும்' என்பார்கள்.



இதைப் போலவேதான் மதன்பூர் மகாராஜாவும். நாட்டியத்தில் பாடிய ஆனந்த பைரவியை ரசித்தார். உட்கார்ந்த சிறிது நேரத்துக்கு அவருக்கு உலகமே தெரியவில்லை. மோகனாவின் அழகில் சங்கீதம் கூடக் காதில் கேட்காமல் இருந்தது. மோகனா குறத்தியாக வந்தவுடன் அந்தச் சௌந்தர்யத்தில் சற்று நேரம் அயர்ந்திருந்தார். சற்று நேரம் ஸ்ரீமதி லேடி கனகாம்பரம் அம்மையாரிடம் குறத்திகளைப்பற்றியும், ஜிப்சிகளைப்பற்றியும், இந்தியாவில் உள்ள ஆதிவாசிகள் முதலியவர்களைப்பற்றியும், ஆங்கிலப் பாதிரிமார்கள் எழுதியுள்ள அருமையான நூல்கள் பற்றியும் பேசி ஆராய்ச்சிகள் நடத்திக் கொண்டிருந்தார்.

பாவம், அவருக்குக் குறத்தி என்ற வகுப்பினர் இந்தியாவில் இருப்பதே தெரியவில்லை. உண்மையில் அவர்கள்தாம் வேட்டையாடும் வகுப்பினர் என்பதும் தெரியாது. சில சீமைப் பத்திரிகைகளில் இந்தியாவில் இம்மாதிரி வகுப்பினர் இருப்பதாகப் படம் பார்த்திருக்கிறார்; படித்தும் இருக்கிறார். அதைத் தவிர அவர் அந்தஸ்து எங்கே, நம் நாட்டுக் குறத்தி எங்கே? ஏற்கெனவே அவர் ராஜா; நல்ல சட்டை போட்டவர்களைத்தாம் அவர் பார்க்க முடியும். அப்படி இருக்கையில் தமிழ்நாட்டுக் குறத்தியை அவர் கண்டதேது?

குறத்தி கை பார்த்துக் குறி சொல்லும் கட்டத்தில் மட்டும் அவர் கையும் அரித்தது. தம் கையைப் பார்த்துக்கொண்டார். உடனே அவர் சகதர்மிணி, கையில் என்னவென்று கேட்கவே, அதையும் மறைத்துக்கொண்டார்.

இந்நிலையில் ஒன்றுமே புரியாமல் இருந்த அவருக்குச் சண்முகத்தின் தில்லானா காதில் விழுந்தவுடன் குடிகாரன் காதில் மது என்ற சொல் விழுந்தது போல் இருந்தது. "வாரே வா ஷெனாய்!" என்று சபாஷ் போட்டார்.

அவர்கள் ஊரில் உள்ள ஷெனாய் என்ற துளைக்கருவியும் நமது திமிரி நாதஸ்வரமும் சத்தத்தில் ஒரே மாதிரி இருந்ததே இந்த ஆனந்தத்திற்குக் காரணம். அதைத் தொடர்ந்து "திரனா திமத திரனா" என்று தில்லானாவும் வந்துவிடவே, மகாராஜா தம் தொடையில் தாளம் போட ஆரம்பித்தார். அவரைப் பார்த்து மற்றவர்களும் தாளம் போட்டனர். போதாததற்கு ராகமும் கமாஸ். அவர்கள் இந்துஸ்தானி சங்கீதத்தின் சாயை அதில் இருந்தது. எல்லாம் சேர்ந்து மகாராஜவுக்கு 'பகுத் குஷி'யை உண்டாக்கியது.

இதற்கேற்றாற்போல மோகனாவின் தூய வெண்பட்டு உடை அலங்காரமும் அவர் கண்களைக் கவர்ந்தது. மகாராஜா மதிமயங்கினார். ஆட்டமும் வாசிப்பும் அழகும் நாதமும் அவரை மயக்கின. "அச்சா! அச்சா!" என்றார்.

யாரோ ஒரு சங்கீத வித்வான் நாடகத்திலே இருந்தாராம். அவர் தோடி ராகத்தை மிகவும் அற்புதமாகப் பாடுவாராம். நாளொரு

மேனியும் பொழுதொரு வண்ணமுமாகக் குழந்தையை வளர்ப்பது போல, ஒரு நாளைக்கு ஒரு சங்கதி வீதம் கற்பனைகள் செய்து, தோடி ராகத்தை அவர் வளர்த்துக்கொண்டு வந்தாராம். நாடகம் பார்க்கச் செல்லும் சிலர், அவர் ஒரு முறை தோடியைப் பாடியவுடனே, இனி வேறு எதையும் கேட்டுக் காதைக் கெடுத்துக்கொள்ளக்கூடாதென்ற எண்ணத்தில், வீட்டுக்கு வந்துவிடுவார்களாம். இப்படித் தோடி பாடிய அவருக்கு ஒரு சமயம் கோடி வேட்டி வாங்கப் பணம் இல்லை. பணமுடை ஏற்பட்டது.

எப்படிப் பிறரிடம் போய், 'என் கையில் பணமில்லை' என்று கேட்பது? ரொம்ப யோசித்தார். கடைசியில் ஒரு வட்டிக் கடைக்குப் போய்ச் சேர்ந்தார். "ஐயா, என்னை நம்பி பத்து ரூபாய் கடன் கொடுப்பீர்களா?" என்று கேட்டார். அந்த வட்டிக் கடைக்காரர் சங்கீத ரசிகர் அல்ல. ஆனால், சாமர்த்தியமான வியாபாரி. தோடி ராகத்தை அடகு பிடித்துக்கொண்டு, அவருக்கு வேண்டிய பணத்தில் தருமத்துக்கும் பிடித்துக்கொண்டு மீதத்தை அவரிடம் கொடுத்தார் அந்த வியாபாரி. அதன் பிறகு, ஒரு நாடகத்திலே அவரைத் தோடி பாடச் சொன்ன போது, "கோடி கொடுத்தாலும் தோடி பாட இயலாது. அந்த ராகத்தை நான் அடகு வைத்துவிட்டேன்" என்று அவர் சொன்னாராம். அதைக் கேட்டவுடனே அங்கிருந்த மக்கள் கண்ணீர் விட்டார்கள். உடனே பணத்தைக் கொடுத்து அடகைத் திருப்பினார்கள்.

அன்று முதல் அவர் வாழ்க்கையில் அடைமானம் வைக்க வேண்டிய அவசியம் நேராமல் அவரைச் செல்வத்தோடு வைத்துக் காப்பாற்றினார்கள் என்று சொல்வார்கள். அவருக்கு எல்லா ராகங்களும் தெரிந்திருக்கலாம். ஆனால், தோடி மாத்திரம் அவரிடம் தனி அம்சமாக இருந்தது.

அதைப் போலவே, எல்லா ராகங்களையும் அற்புதமாய் வாசிக்கும் சண்முகத்துக்கும் கமாஸில் தனியாக ஒரு கவர்ச்சி இருப்பதாகவே மகாராஜா கண்டார். அதே போலவே மோகனாவுக்கும் தில்லானா ஆட்டத்தில் ஒரு விசேஷம் இருப்பது புலப்பட்டது. அதை ஆடுவதற்கு அங்க அமைப்பும் இருப்பதைக் கண்டார். கொடி போன்ற உடலும், துடி போன்ற இடையும், அடியெடுத்த அழகும் அத்தனை பேரையும் கவர்ந்தன.

இதுவரையில் இம்மாதிரியாக, ஒரு மகாவித்துவானின் நாதஸ்வரமும் ஒரு நாட்டியத் திலகத்தின் நாட்டியமும் சேர்ந்து அமைந்தது இல்லை. புதுமையே அழகு. அதிலும் இரண்டு கலைஞர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். கேட்க வேண்டுமா? திருவாரூரில் ஆடியதைக்காட்டிலும் பன்மடங்கு அழகாக ஆடினாள் மோகனா. சண்முகசுந்தரமும் அப்படியே வாசித்தான். 'இது ஒரு நல்ல சந்தர்ப்பம். நம்மை யாரும் இங்கு வந்து பிரிக்கமாட்டார்கள். நாமாகவே



முடித்தால்தான்!' என்ற எண்ணம் இருந்ததனால் மகுடி ஊதி பாம்பை ஆட வைக்கும் பிடாரனைப் போல, சண்முகசுந்தரம் புதுப்புது சங்கதிகளை ஊதிக்கொண்டே போனான். மோகனாவும் புதுப்புது அடவுகளைப் பிடித்துக்கொண்டு வந்தாள்.

சலங்கை ஆர்த்தது. ஜனங்களின் விழிகள் அங்கேயே பார்த்தன. நளின மலர்க் கரங்கள் நவரசங்களை அள்ளி வீசின. நாவாலே பேச முடியாத சொற்கள் அவளது நலங்கு மஞ்சள் இட்ட கால்களில் பேசியதைக் கண்டு எல்லோரும் அயர்ந்தனர். 'தேவமகள் இறங்கி வந்து ஆடுகின்றாளா? அவளுடைய கால்கள் தரையில் பாவுகின்றனவா? வான வீதியே ஒரு மலர் வனம் போலவும், அந்த நந்தவனத்தில் மலர் கொம்பும் மடமங்கை போலவும், "மந்தாரமே செருந்தி மாமரமே, நீர் எனக்கு சந்தாபம் தீரத் தரிக்க மலர் தாரீரோ" என்ற பாவத்தில் உயரத்தில் ஒரு பார்வையும், கையில் அபிநயமும், காலில் அடவும் ஆக அஷ்டாவதானம் செய்து அவள் ஆடிக்கொண்டே இருந்தாள். ஒவ்வொரு நடைக்கும் கரகோஷம் முழங்கியது. அவளுடைய விழி வெட்டுக்குக் கை தட்டல்கள் பலமாக இருந்தன.

மக்களே இப்படிப் பார்க்கையில் மகாராஜா சும்மா இருப்பாரா? மதன்பூர் மகாராஜா வைத்த கண் வாங்கவில்லை. இதுதான் மதனபுரி. நாம்தாம் ராஜா. மதனம்புகள்தாம் அவள் விழிமலர்கள் என்று மறுகியது அவர் பார்வை. இந்த ஒரு சமயத்தில் மாத்திரம் அவருடைய சகதர்மிணி அவரைக் கோபித்துக்கொள்ளவில்லை. காரணம் வேறு ஒன்றுமில்லை. அந்த அம்மையாரும் மோகனாவையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். லேடி கனகாம்பரங்கூட வாய் திறந்து பேசி எதையும் ஆராய்ச்சி செய்யவில்லை. வக்கீல் கிட்டாவையரின் வைரக் கடுக்கன்கள், அவருடைய உள்ளத்தில் பூரிப்பை அள்ளிக் கொட்டிக் கொண்டிருந்தன. அவர் தலையை ஆட்டிய ஆட்டத்தில், 'ஐயோ! அப்பாவுக்குக் கழுத்து வலிக்கப் போகிறதே!' என்று அவருடைய மகள் கமலா எண்ணினாள். பெரிய இடத்துப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்ட புது மாப்பிள்ளை, நாட்டியத்தைப் பார்க்க அஞ்சிக் கடைக்கண்ணால் பார்த்தான். வடிவாம்பாள்கூட ஒரு கணம் நாதஸ்வரமும் தில்லானாவும் சேர்ந்திருக்கும் அழகைப் பார்த்து மயங்கினாள். நட்டுவனார் முத்துக்குமரரோ, 'இனி நமக்குச் 'சான்ஸ்' கிடைக்காதோ!' என்று எண்ணினார். வைத்தி ஒருவன்தான், மோகனாவின் காலையும் பார்க்கவில்லை, சண்முகத்தின் கையையும் பார்க்கவில்லை. இருவரின் கண்களையே பார்த்து, இதயத்தில் ஆனந்தம் அடைந்துகொண்டிருந்தான்.

ஆட்டம் முடிந்தது. "சபாஷ்!" என்றார் கிட்டாவையர். "அச்சா! பகுத் அச்சா!" என்றார் மதன்பூர் மன்னர். கிட்டாவையரும் அவர் குமாஸ்தா ராமஸ்வாமியும் மேடைமீது ஏறி வந்தார்கள். அவர்

கையிலே இரண்டு அழகான வைர மோதிரங்கள் மின்னின. ஒரு வைர மோதிரத்தைக் கையில் எடுத்தார்.

"இன்றைய சுமாருக்குக் கல் இழைத்த மோதிரம் பெரிதல்ல. அந்தக் காலுக்கு வைரக் கொலுசு போட வேண்டும். ஆனால் இது என்னுடைய பரிசு. இதை ஸ்ரீமதி மோகனாம்பாளுக்கு நாதஸ்வரக்காரரின் கையால் அணிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்" என்று சண்முகத்திடம் கொடுத்தார்.

"ஏன், நீங்களே!..." என்றான் சண்முகம்.

"நான் எந்த விதத்தில் கொடுக்க முடியும்? சட்டத்தின் வித்வானாக இருந்தால், நான் சன்மானம் செய்யலாம். சங்கீதக் கலைக்கு நான் எப்படிச் சன்மானம் செய்வது? இதை உங்கள் கையாலேயேதான் கொடுக்க வேண்டும்" என்று கூறவே, சண்முகசுந்தரம் பிரமித்தான். வடிவாம்பாள் திகைத்தாள். சபையோர் எல்லோரும் மோகனா மறுபடியும் உள்ளே இருந்து வருவாள் என்று ஆவலுடன் எதிர்பார்த்தார்கள். ஆனால், அந்தப் பொல்லாத பெண் மோகனா வெளியே வாராமல் ஓரத்திலேயே நின்றாள். 'வாயைத் திறந்து, மோகனா, இங்கு வா என்றுதான் அவர் கூப்பிடட்டுமே!' என்று எண்ணினாள். அவன் கூப்பிடாமல் இருக்கும் ஒவ்வொரு கணமும் அவளுக்கு ஒரு யுகமாக இருந்தது. 'வித்வானாம்! சமயம் வந்திருக்கும்பொழுது கூப்பிடாமல் பேந்தப் பேந்த விழிப்பதைப் பார்!' என்று மனத்தில் சொல்லிக்கொண்டே இருந்தாள். சண்முகசுந்தரத்துக்கும் மனத்திலே ஒரு எழுச்சி வந்தது. "மோகனா!" என்று கூப்பிட்டான்.

அந்த ஒரு வார்த்தையிலேயே மோகனாவின் உள்ளம் குளிர்ந்தது. ஆடும் மயில் போல, அசைந்தாடி வந்தாள். அந்த நடையில் ஒரு அழகு. கை வீச்சில் ஒரு அழகு. சண்முகசுந்தரத்தின் அருகில் வந்து நின்றாள். சண்முகசுந்தரம் மோதிரத்தை கையில் எடுத்துக்கொண்டு, 'இப்பொழுதே இவள் கையில் கொடுத்தால் வாங்கிக்கொண்டு உள்ளே போய்விடுவாளே! என்ன செய்யலாம்?' என்று யோசித்தான். அதற்குள் கிட்டாவையர், "இரண்டு வார்த்தை சொல்லிவிட்டுக் கொடுக்கணும்" என்றார்.

சண்முகசுந்தரம் பேசினான் : "மோகனாம்பாளுடைய வித்தைக்கு எதையும் பரிசாகக் கொடுக்கலாம். உலகத்தையே கொடுக்கலாம். உலகம் நம் ஒருவருடையதல்ல. ஆதலால் உள்ளத்தைக் கொடுக்கலாம். வக்கீல் ஐயா அதனாலேதான் அவுங்க கையிலே உள்ளத்தைக் கொடுத்திருக்காங்க. மயிலாப்பூர்வாசிகள், சங்கீதத்திலே நிபுணர்கள். இந்த ஊரிலே ஒவ்வொரு வீட்டிலேயும் சங்கீத தேவதை வாசம் செய்கிறாள். அவர்களே பார்த்து மெச்சி, இந்த வைர மோதிரத்தை சன்மானம் செய்திருக்கிறார்கள். இது ஒரு பெரும் பாக்கியம்" என்று கண்ணியமாகப் பேசிவிட்டு, "மோகனா! இந்த மோதிரத்தைக்



கொடுக்கிறவங்களுக்கு, எப்பவும் இதை உன் கையை விட்டு நீ கழட்டாமல் இருக்கணும் என்று ஆசை" என்று சொல்லி மோதிரத்தை அவள் கையில் கொடுத்தான் சண்முகசுந்தரம்.

கூட்டத்திலிருந்து கரகோஷம் கலகலவென்று எழுந்தது. மோகனாவின் முகத்திலும் வியர்வை பொங்கிக்கொண்டு வந்தது. ஒரு கணத்தில் முகம் சிவந்தது. மோதிரத்தைக் கையில் வாங்கிக்கொண்டு அவனைக் கும்பிட்டாள். கண்களில் செல்லமாய் வைதுபோவது கூடத் தோன்றியது. அவன் முகத்தைப் பார்த்தாள். அவன் முகத்திலே புன்சிரிப்பு தவழ்ந்தது. அவன் முகத்தைப் பார்த்தபடி மோதிரத்தைத் தன் விரலில் போட்டுக்கொண்டாள். அவனைப் பார்த்து எங்கிய வண்ணம், சபையை வணங்கிவிட்டு உள்ளே சென்றாள். சண்முகசுந்தரத்திற்கும் அதே மாதிரி ஒரு மோதிரம் பரிசு அணிக்கப்பட்டது. சண்முகசுந்தரம் சிரித்தான்.

"ஐயா வக்கீல் இல்லையா! இரண்டு பேரும் வித்வானாச்சே. முதலில் யாருக்குக் கொடுக்கிறதுன்னு யோசிச்சிருக்காங்க. என் கையிலே கொடுத்து அதுக்குக் கொடுக்கச் சொன்னா நான் திருப்திப்பட்டுவிடுவேன் என்று நினைச்சுத்தான் அப்படிச் செய்திருக்காங்க. என் வித்தைக்கு மோகனாவின் வித்தை எந்த விதத்திலும் தாழ்ந்ததல்ல. அதன் கையாலேயே எனக்குக் கொடுக்கச் சொல்லியிருந்தா இன்னும் நல்லா இருந்திருக்கும். ஏதோ வக்கீல் ஐயா கையாலேயாவது, கொடுக்கட்டும்" என்று அவன் சொன்னவுடனே சபையில் எல்லோரும் சிரித்தார்கள். மோகனாவோ, 'குறும்பைப் பார்: உள் அர்த்தம் வைத்துப் பேசுகிறார்' என்று பூரித்தாள்.

திடீரென்று கூட்டம் முழுவதும் எழுந்தது. ஏனென்றால் மகாராஜா எழுந்தார். கிட்டாவையர் அவர் அருகில் சென்றார்.

மகாராஜா வெளியில் புறப்பட்டார். கூடவே அவருடைய சஹதர்மணியும், லேடி கனகாம்பாளும் சென்றார்கள்.

வடிவாம்பாளுக்கு அந்த மோதிரத்தை வாங்கிப் பார்க்க வேண்டுமென்ற ஆசை. அதில் எத்தனை கல் வைத்திருக்கிறது, எத்தனை காரட் இருக்கும் என்ற கவலையல்ல. அவன் கையாலே மோதிரத்தைக் கொடுத்து இருக்கிறானே, ஏதாவது மந்திரிச்சுக் கொடுத்திருக்கப்போறான் என்ற பயந்தான். இந்தச் சமயத்தில் மோகனாவே தாயின் அருகில் வந்தாள்.

"இந்தாம்மா, பாரு" என்று அதை விரலிலிருந்து கழட்டினாள்.

"அதுக்குள்ளே விரலிலே போட்டுக்கிட்டியா?... சரி, ஏன் கழட்டறே?" என்று வடிவாம்பாள் ஆத்திரத்தோடு சொன்னாள்.

அதுவும் நல்லதுக்குத்தான் என்ற எண்ணத்தில், "சரிம்மா, கழட்டலே" என்று சொல்லிவிட்டு, மோகனா அவளை நமஸ்கரித்தாள்.

அப்போது அவள் கண்களில் ஆனந்தம் காந்தத்தைத் நாயார் கவனிக்கவில்லை.

ஜாகைக்கு வந்து சேர்ந்தவுடனே, முதற்காரியமாக வடிவாம்பாள், மூட்டை கட்ட ஆரம்பித்தாள்.

"எதுக்கம்மா மூட்டையைக் கட்டறீங்க? இனிமே வண்டி கிடையாதே ஊருக்கு" என்றான் வரதன்.

"ஏன், பத்து மணி வண்டி இருக்குதே"

"அது பாசஞ்சர் இல்லே"

"இவரு பெரிய மதன்பூர் மகாராஜா, பாசஞ்சரிலே போக மாட்டாரு!"

"அது ஊர் ஊரா நின்னு போகும்மா."

"அதான் நல்ல வண்டி. ஒவ்வொரு ஊரா பாத்துக்கிட்டே போகலாம். சரி சரி, மூட்டையைக் கட்டு" என்று சொல்லிக் கொண்டே மூட்டைகளைக் கட்டினாள் வடிவாம்பாள். அவளுடைய உள்ளத்தில் 'இனி ஒரு நிமிஷங்கூட இந்த ஊரில் தங்கக்கூடாது. அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்வதும், சாடை சாடையாய்ப் பேசிக்கொள்வதும் ஆபத்தாக முடியும்' என்ற பயம் ஏற்பட்டது.

இந்தச் சமயத்தில் மோகனா, "எம்மா, அவுங்ககிட்டே சொல்லிக்காமே புறப்பட்டுவிடலாமா?" என்றாள்.

"ஏன், நீ வேணுமின்னா அவர் ஜாகைக்குப் போய், சந்தனம், வெற்றிலை பாக்கு வச்சு, காலிலே விழுந்து கும்பிட்டு, சொல்லிக்கிட்டு வாயேன். பெரிய துஷ்யந்த மகாராஜா மோதிரம் மாற்றி இருக்காருல்லே?"

"அட எம்மா, தோசித்தனமா அந்த மகாராஜாவைச் சொல்லுறீங்க! அவர் மோதிரத்தைக் குடுத்தார், முகத்தை மறந்துட்டார்!" என்றான் வரதன்.

வடிவாம்பாளுக்கு ஏதோ நெஞ்சில் சுருக் என்று முள் தைத்தது போல் இருந்தது. "சரி சரி, உன் வேலையைப் பாரு" என்று வரதனை அடக்கினாள்.

"நான் நாயனக்காரரைச் சொல்லலே அம்மா! வக்கீல் ஐயாகிட்டே சொல்லிக்காமே புறப்படலாமான்னுதான் கேட்கிறேன்" என்றாள் மோகனா.

"அது எனக்கும் தெரியும். வரதா, நீ போய் வக்கீல் அய்யாகிட்ட நாங்க புறப்படலாமான்னு கேட்டுக்கிட்டு வா" என்றாள்.

வரதன் வெளியே சென்றான். மோகனாவுக்குத் துயரம் தாளவில்லை. ஊருக்குப் போய்விட்டால் அவரை எப்படிப் பார்ப்பது என்று நினைத்தாள்.

"இல்லேம்மா, நாலு நாள் கழிச்சுப் போகலாமே!"



"நம்ப என்ன சொந்தக்காரங்களா, நாலு நாள் கல்யாணத்துக்கும் இருந்திட்டுப் போக? ஏதோ ஆட வந்தோம், ஆட்டம் முடிந்தது, ஓடவேண்டியதுதானே?"

"அதுக்காக, பட்டணம் வரையில் வந்துவிட்டு, ஊரைப் பாக்காமே போக முடியுமா?"

"சரிதான் புள்ளே, ஊரையும் பாக்க வேண்டாம், யாரையும் பாக்க வேண்டாம். பாத்ததெல்லாம் போதும்!" என்று சொல்லிக்கொண்டே மோகனாவை ஒரு முறை கோபத்தோடு பார்த்தாள். அவள் பார்த்த பார்வையில் பருந்தைக் கண்ட பெட்டைக்கோழி தன் குஞ்சுகளைத் தன்னுடைய இறக்கைக்குள் அணைத்துக்கொள்ளுமே, அப்படி அவள் பயப்படுவதும் தெரிந்தது.

இந்தச் சமயத்தில் வாசலில் டாக் டாக் என்று வண்டி வந்து நிற்கும் சத்தம் கேட்டது. மோகனா சரேல் என்று உட்சென்றாள். வடிவாம்பாளோ கிட்டாவையர்தான் பணத்துடன் வந்திருக்கிறார் என்ற எண்ணத்தில் வாசல் பக்கம் பார்த்தாள். அப்போது கதவில் லொட், லொட், லொட் என்று லேசாக மூன்று முறை தட்டும் சத்தம் கேட்டது.

வடிவாம்பாள் முகம் சிவந்தது. கோபம் வந்தது. தன் வீட்டுக் கதவை இரவில் யார் இப்படி ரகசியமாகத் தட்டுவது என்ற ஆத்திரமும், அவமானமும் ஏற்பட்டன. "கதவு திறந்துதான் இருக்குது" என்றாள்.

"மே ஐ கமின்?" என்று ஒரு குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து ஸ்ரீமதி லேடி கனகாம்பரம் அம்மையார் உள்ளே நுழைந்தார்கள். அவரைத் தொடர்ந்து ஒரு வாசனைக் கடையே உள்ளே நுழைந்தது போல் மேக்கப்புச் சாயங்களின் வாசனையும் தொடர்ந்தது.

"மோகனா, இதோ யாரு வந்திருக்காங்க பாத்தியா?" என்றாள் வடிவாம்பாள்.

மோகனா வந்தாள். லேடியைப் பார்த்ததும் அவளுக்குச் சிரிப்பு வந்தது. அதை அடக்கிக்கொண்டாள்.

"நேற்றுக் காலம்பர ரயில்வே ஸ்டேஷன்லே மாலையும் கழுத்துமா நின்னாங்களே, அவுங்க!" என்று வடிவாம்பாள் விவரித்தாள். லேடி கனகாம்பரத்தின் சிரித்த முகம் இதைக் கேட்டு வாடியது. ஆனால், உடனே சமாளித்துக்கொண்டு, "நானா, நான் ரயிலுக்கே வரல்லையே! வேறே யாராவதாயிருக்கும்" என்று மெய் போன்ற பொய் ஒன்றைச் சொன்னார்கள்.

இதைக் கேட்டதும் மோகனா விஷயத்தைப் புரிந்துகொண்டு உதவிக்கு வந்தாள். "ஆமா அம்மா! நீங்க யாரையோ பாத்துட்டுச் சொல்றீங்க" என்றாள்.

"என்னடி எனக்கு அஞ்சு ரூபாய் நோட்டுக்கும் பத்து ரூபாய் நோட்டுக்கும் வேனா வித்தியாசம் தெரியாது ஆளுக்கு ஆள் கூடவா தெரியாது? இந்த அம்மாளேதான்_"

"எங்க அம்மா எப்பவும் அப்படித்தான் பிடிச்சா பிடிச்சதுதான். வாங்க உட்காருங்க" என்று மோகனா கூறவே, கனகாம்பரம் அம்மையார் ஆசனத்தில் அமர்ந்தார்கள் உடனே தன் கையிலிருந்த பையைத் திறந்து, அதில் இருந்த ஒரு கார்டை எடுத்து, மோகனாவிடம் கொடுத்தார்கள்.

"என்ன, கார்டு வைக்கிறீங்க? கல்யாணமா?" என்றாள் வடிவாம்பாள்.

அந்தக் கார்டில் "கனகாம்பரம் - ஆர்ட் செகரடரி, மதன்பூர் ஸ்டேட்" என்று அச்சிட்டிருப்பதைக் கண்ட மோகனா, "இல்லை அம்மா விசிட்டிங் கார்டு, இந்த அம்மாதான் மதன்பூர் மகாராஜாவின் கலைக் காரியதரிசியாம்" என்றாள்.

மகாராஜா என்றதும் வடிவாம்பாள் ஆனந்தம் அடைந்தாள். கனகாம்பரம் அம்மாள் எதற்காக வந்திருக்கிறார்கள், நாம் என்ன பேசலாம் என்று அவள் காரியச் சிந்தை தீவிரமாக யோசித்தது அதற்குள், "மகாராஜா ஒங்களைப் பார்க்க விரும்புகிறார் வண்டி அனுப்பி இருக்கிறார்" என்றாள் கனகாம்பரம்.

மோகனா திடுக்கிட்டாள். "நாங்கள் ஊருக்குப் புறப்பட்டு விட்டோமே !" என்றாள்.

வடிவாம்பாளுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் இல்லை, வாயில் விழுந்தது போல் இருந்தது. தான் கண்ட கனவு பலிக்கப்போகிறது, பொன் காய்க்கும் செடி பழுக்கப்போகிறது என்று எண்ணினாள்.

"கூட்டிக்கிட்டு வரச்சொன்னாங்களா? ஏன், என்ன விஷயம்?"

"எனக்குத் தெரியும். ஆனால் நான் சொல்லக்கூடாது."

மோகனா கலங்கினாள். வடிவாம்பாள் துடியாய்த் துடித்தாள்.

"மகாராஜா எங்கே இருக்கிறார்?"

"பீச்சிலே இருக்கார். நீங்களும் மோகனாவும் வந்தால் பாத்துப் பேசிவிட்டு, உடனே திரும்பிவிடலாம்" என்றாள் கனகாம்பரம்.

"மோகனா, புறப்படு. போய்விட்டு வருவோம்."

"எம்மா, ஊருக்குப் போக வேண்டாமா?"

"ஊருக்குத்தான் எப்பவும் போகலாமே!"

"இல்லை அம்மா, எனக்கு நாட்டியம் ஆடிக் கால் எல்லாம் வலிக்கிறது. நான் இப்ப வர முடியாது."

"இந்தா பாரு, ராஜாக்களைப் பாக்கறதே பெரும் புண்ணியம். போய்ப் பாத்துட்டு வந்துடுவோம்."



"புண்ணியத்துக்கென்னம்மா! ஆடுறதே புண்ணியந்தான். எனக்கு உடம்பு சரியில்லை அம்மா. நாளைக் காலை அவர்களே இங்கு வரட்டுமே_!"

"இல்லை, அவர்கள் இங்கு வருவது நன்றாக இருக்காது" என்றாள் கனகாம்பரம்.

"நான் அங்கு வருவது மட்டும் நன்றாய் இருக்குமா?" என்றாள் மோகனா.

"இதென்னடி, கண்ணு, பிடிவாதம்?"

"பிடிவாதமில்லேம்மா. இனிமேல் இந்த ஜென்மத்தில் இன்னொருவர் வண்டியில் நான் ஏற மாட்டேன்" என்று கூறிவிட்டு மோகனா உட்சென்றுவிட்டாள். கனகாம்பரம் திகைத்து நின்றாள்.

"ஏன், வண்டி என்றால் என்ன பயம்?" என்று கனகாம்பரம் கேட்டாள்.

வடிவாம்பாள் உண்மையைச் சொல்லுவாளா? "அது — வண்டியில் அதிராம்பட்டினம் போனோம். வழியிலே திருடன் வந்து."

கனகாம்பரம் சிரித்தாள் "அப்படியா?"

"சரி, பிறகு நான் மகாராஜாவுக்கு என்ன சொல்வது?"

"இதோ நான் வருகிறேன். அதுக்கு உடம்பு சரியில்லை என்று நானே வந்து நேரில் சொல்லிவிட்டு அவங்க என்ன உத்தரவு செய்கிறாங்கன்னு கேட்டுக்கிட்டு வருகிறேன்" என்று வடிவாம்பாள் அவசரம் அவசரமாக வாசலுக்கு வந்து வண்டியில் ஏறி அமர்ந்தாள்.

"அம்மா, சற்று உள்ளே வந்துவிட்டுப் போங்க !" என்றாள் மோகனா.

"இதோ வந்துட்டேன் கண்ணு" என்று அவசரமாக உள்ளே வந்தாள் வடிவாம்பாள். ஆனால் மோகனாவின் அருகில் வந்தவுடனே, ஆத்திரத்தோடு "ஏன்? எதுக்குச் சகுனத் தடையாட்டம் கூப்பிடறே" என்றாள்.

"ஆமா, அபசகுனந்தான். நீங்க இந்த நேரத்திலே அந்த வண்டியிலே போறது எனக்குப் பிடிக்கல்லே"

"ஏன், போனா என்ன?"

"அவமானம்."

"எனக்குத் தெரியும், சும்மா இரு" என்று சொல்லிவிட்டு வடிவாம்பாள் போய்விட்டாள். மோகனா வருத்தத்துடன் நின்றாள்.

"இந்த மகாராஜா யார்? எதற்காகக் கூப்பிடுகிறார்? இந்த வண்டி நம் வீட்டு வாசலில் நின்றது சண்முகத்துக்குத் தெரியாமல் போகுமா? நம் தாய் அந்த வண்டியில் செல்வதால் அவருக்கு எவ்வளவு சந்தேகம் உண்டாகும்?" என்றெல்லாம் நினைக்க நினைக்க அவள் நெஞ்சம் பகீர் என்றது. தன் கையில் இருந்த மோதிரத்தைப் பார்த்தாள். விளக்கு வெளிச்சத்தில் அது அவளைப் பார்த்துச் சிரித்தது.

'எப்பவும் உன் கையை விட்டுக் கழட்டக்கூடாது என்று சொல்றாங்க' என்று கூறினாரே அதில் எத்தனை விநயம்! அதில்தான் எத்தனை அர்த்தம்! அவரை விட்டுப் பிரிக்க விதியே இப்போது சதி செய்கிறதே என்று நினைத்தாள் அவள் மனத்தில் சண்முகத்தின் முகம் எதிரில் வந்து நின்றது.

அப்போது, "மோகனா" என்று சண்முகத்தின் குரலும் கேட்டது வாசற்பக்கம் திரும்பினாள் ஆம், அவனே எதிரில் நின்றான்.

"அத்தான்!" என்று கூப்பிட்டுக்கொண்டே சதனை நோக்கி ஓடினாள் மோகனா.

## எழுபத்து எட்டாம் அத்தியாயம்

## "சிப்பிக்குள் முத்துப் போல்"



மனிதன் என்ற வார்த்தைக்கு நான் பொருள் தேடினேன். நான் பார்த்த புத்தகங்களில் கிடைக்கவில்லை. 'இதைப் போய்ப் புத்தகத்தில் தேடுவானேன், மனிதன்தான் எதிரிலேயே இருக்கிறானே, அவனைப் பார்த்துப் பொருளைப் புரிந்து கொள்ளலாமே' என்று என் மனம் கூறியது. எதிரில் இருந்த மனிதரைப் பார்த்தேன். மடுவின் ஆழத்தைப் புரிந்துகொண்டாலும் கொள்ளலாம், அவர் ஆழத்தைப் புரிந்து கொள்ள இயலவில்லை. ஆகவே நான் சோர்ந்துவிடலானேன். அப்போதுதான் எனக்கு 'நாமும் மனிதன்தானே? இது இவ்வளவு நேரம் நமக்குத் தோன்றவில்லையே!' என்ற ஞாபகம் வந்தது உடனே என்னையே ஆராய்ந்தேன் என் விஷயத்தில் மனிதன் என்ற பெயர் பொருத்தமாகப் படவில்லை.

அதற்குப் பதிலாக, மனதின் என்ற பெயர் ரொம்பச் சரி என்று தோன்றியது ஏனெனில், மனதின் வழி நடப்பவன்தானே மனிதன்! அதை அடக்கியவன் தேவன் ஆதலால் மனிதன் என்ற பெயரைக் காட்டிலும் "மனதின்" என்ற பெயர்தான் எனக்குப் பொருந்தும் என்ற முடிவுக்கு வந்தேன்.

நான் மட்டும் என்ன, மகாவித்வான் சண்முகமுங்கூடத்தான் மனதின்வழி நடக்கிறான். இல்லாவிட்டால் கோவிலில் மோகனாவைக் கண்ட பின்னும் ஏன் அவள் நினைவாகவே இருக்கிறான்? இந்தப் பாழும் மனம் இருக்கிறதே இது ஒரு கம்பளிப் பூச்சி மாதிரி. பட்டால் அரிக்கும். அதைத் தடவிவிட்டால் தடிக்கும்.



அதைத் தடவிவிட்டால் புண்ணாகும். இவ்வாறு அதை தாஜா பண்ணைப் பண்ண மேலே போய்க்கொண்டே இருக்கும். இராமாயணக் கவடியைப் பூச்சி அரிப்பது போல் நம்மையே அரித்துவிடும். அதன் வழியே மனிதனை ஆட்டி வைப்பதில் அதற்கு இணை அதுதான்.

ஸ்வாமிக்குக்கூட மனது மாறிவிடும் என்று நினைத்துத்தான் எந்த மேதாவியோ 'தெய்வமாயிருந்தாலும் சரி, கல்லில் சிலை சமைத்துவிடு' என்று கூறியிருக்கிறான். இல்லாவிட்டால் தெய்வமும் மனிதன் ஆகி, பிறகு மனதின் ஆகித் திண்டாடி இருக்கும்.

"என்ன சார், பொடியா?"

"ஆமா!"

"எங்கே, கொஞ்சம் குடுங்க!"

"இந்தாங்க!"

"போடலாமா?"

"போடுங்களேன்!"

"ரொம்ப நல்லாருக்கே - அச்... அச்... உங்க ஊரிலே மழை எப்படி? —அச்... வெயில் எப்படி? அச்... காத்து வருதா? அச்..."

"ஸார், மட்டையைத் திருப்பித் தருகிறீர்களா?"

இதுதான் மனதின் வளர்ச்சியும் தாராளமும். கொடுக்கலும் வாங்கலுந்தான் மனிதன் அணாவிலிருந்து அன்புவரை அதுதான்.

தந்தி கொடுக்கச் செய்தான் சண்முகம். மோகனா வந்தாள். அவள் கொழும்புக்குப் போவதாக வரதன் சொன்னான். இதிலிருந்து வந்தது வினை. இதற்காகவேதான் சண்முகம் ஆட்டம் பார்க்க வந்தான் வந்த இடத்தில் அங்கிருந்தவர்கள் வாசிக்கச் சொன்னவுடனே தட்டாமல் வாசித்தான். தடுத்த முத்துராக்குவுக்கு எட்டைத் தேடிச் சமாதானம் சொன்னான். அதுவும் சாதாரண சமாதானமா? பழைய நூலில் இருந்தல்லவா மேற்கோள் எடுத்துக்காட்டினான்?

'இந்த மோதிரத்தை உன் கையிலேயே போட்டுக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் விருப்பம்' என்று அவன் கூறியபோது அவன் உள்ளம் கண்ணீர் விட்டது. 'இனி நான் உன்னைச் சந்திக்க இயலாது போல் இருக்கிறது. ஆதலால நீ, என் அடையாளமாக இந்த மோதிரத்தைப் போட்டுக்கொள்' என்று அவன் கூறியது அவனுக்கே வெட்கமாக இருந்தது. யார் வீட்டு மோதிரத்தை யார் கொடுப்பது என்று ஏங்கினான்.

ஆனால் அந்தக் கூட்டத்தை விட்டுச் சென்றவுடன் அவன் பட்ட துயரம் அளவில் அடங்காது. மோகனா இரவே புறப்படப் போகிறாள். அடுத்த வாரம் கொழும்புப் பயணம் இனி இரண்டு மூன்று மாதங்களுக்குச் சாதாரணமாய்க் கச்சேரியில்கூட அவளைக் காண முடியாது என்பதை நினைத்து வருந்தினான்.

இரவு நேரம் ஆக ஆக ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகமாகத் தோன்றியது. இன்று பார்த்தால்தான் அவளைப் பார்க்கலாம் என்பதை எண்ண எண்ண அவன் மனம் துடித்தது. இந்தச் சமயத்தில் தாளக்காரப் பையன் ஓடி வந்தான் 'புறப்பட்டுட்டாங்க. ரயிலுக்குப் போக வாசலில் வண்டி வந்து நிக்குது" என்றான்.

இதைக் கேட்டவுடன் சண்முகம் எதையும் யோசிக்கவில்லை. 'வந்தது வரட்டும். பெண்ணுக்கு மாத்திரந்தானா காதல்? ஆண் என்ன மட்டமா? அவளைப் பார்க்க நாம் ஏன் அஞ்ச வேண்டும்?' என்ற எண்ணம் தோன்றியது.

ஆனால், கௌரவம் குறுக்கே நின்று தடுத்தது. பெண்ணுக்கு வெட்கமும் ஆணுக்குக் கௌரவமும் அணிகலன் போன்றவை. இருவரும் இரண்டையும் பாராது போனால் அவர்கள் வாழ்வு கடிவாளம் இல்லாத குதிரை போல்தான். ஆசையை வெட்கம் தடுக்கும். அழிவைக் கௌரவம் தடுக்கும். இதையேதான் மானம் என்பார்கள். இத்தனை ஏழைகள் நிறைந்த உலகில் ஏன் திருட்டு அதிகம் இல்லாமல் இருக்கிறது? இத்தனை ஆசை உள்ள உலகில் ஏன் இன்னும் ஒழுக்கம் இருக்கிறது? அதுதான் மானமும் வெட்கமும் செய்யும் உதவி. மனிதன் உடலுக்கு வேட்டி கட்டுவது போல் உள்ளத்துக்கும் சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. ஆதலால் சண்முகம் போகும்போது, தான் மட்டும் செல்லாமல் தவுல்கார முத்துராக்குவையும் அழைத்துக்கொண்டுதான் அங்கு சென்றான். வழியில் முத்துராக்கு, "இதோ கொஞ்சம் போயிலை வாங்கிட்டு வந்துடறேன்" என்று சொல்லவே, சண்முகம் மாத்திரம் மோகனாவின் வீட்டுக் கதவடியில் வந்து நின்றான்.

வாசலில் நிற்கும் சண்முகசுந்தரத்தைக் கண்டவுடனே, மோகனாவின் உள்ளம் துள்ளியோடி அணைத்துக்கொண்டது. ஆனால் உடல் இரண்டும் நடுவே, உலகம் நின்று தடுத்தது. "அத்தான்!" என்று கூப்பிட்டவள் மறு வார்த்தை பேசாமல் அப்படியே நின்றாள். அதைப் போலவே, சண்முகம், "மோகனா" என்று அழைத்தவன் வேறு என்ன பேசுவது என்று தெரியாமல் நின்றான்.

'பக்கத்தில் யாரேனும் இருப்பார்களே, அவர்கள் பார்த்து விட்டால் என்ன செய்வது?' என்று பயப்படுவதுதான் உலக இயற்கை. ஆனால் இப்பொழுது சண்முகசுந்தரமும் மோகனாவும், பக்கத்தில் ஒருவரும் இல்லையே என்றுதான் பயந்தார்கள். அவளைப் பார்க்க வேண்டும் என்று ஓடோடி வந்த சண்முகசுந்தரத்துக்கு 'வழியில் முத்துராக்கு நழுவிவிட்டானே, காத்திராமல் நாம் மட்டும் ஏன் வந்தோம்?' என்றுகூடத் தோன்றியது. மோகனாவுக்கும் அவன் வந்ததில் சந்தோஷந்தான். இருந்தாலும், 'அம்மா இல்லாதபோது வந்திருக்கிறாரே!' என்ற நடுக்கமும் ஏற்பட்டது. இருவரும் என்ன பேசுவது என்று தெரியாமல் திண்டாடினார்கள். கால்கள் நடுங்கின.



முகம் வியர்த்தது. வந்த வழியே திரும்பிவிடலாமா என்றுகூட இருவருக்கும் தோன்றியது.

இருவரும் எதிரும் எதிருமாகத்தான் நின்றனர். இதயம் இரண்டும் பேசின. ஏனோ வாய் அடைத்துவிட்டது! சிந்தை கலந்தால் போதும் என்ற நிலை இப்போது இல்லை. காவியத்தில் நாம் காணும் காதல் கட்டாந்தரையான இந்த உலகில் நடப்பதில்லை. இருவருக்கும் எத்தனையோ கட்டுப்பாடுகள் இருக்கின்றன. 'முதலில் யார் அதை மீறுவது? யார் பேசுவது?' என்ற எண்ணம் வந்தது.

மோகனா அவனைக் கடைக்கண்ணால் ஒரு பார்வை பார்த்தாள். அந்தப் பார்வையில் அவன் சொக்கினான்.

'கண்டால் –

கிறுக்க வைக்கும் கிளியே'

என்று பாடினார்களே அதைப் போன்ற உணர்ச்சியில் நின்றான் சண்முகம்.

ஆனால், அந்தப் பச்சைக் கிளியோ தன் பவள வாயைத் திறந்து பேசாமலே நிற்பதைக் கண்டான்.

கிளியைப் பார்த்த எவருக்கும் பேச ஆசை வருகிறதல்லவா! ரங்கா, ரங்கா என்றாவது சொல்லித் திருப்தி அடைகிறோம் அல்லவா? அதுபோல் சண்முகமும் அர்த்தமில்லாமல் அவளிடம் எதையோ கேட்டான்.

"என்ன, இன்னைக்கித் தில்லானா வாசிப்பு எப்படி இருந்தது?"

மோகனாவின் குனிந்த தலை நிமிர்ந்தது. குறுநகை மலர்ந்தது.

"என்னைக் கேட்டால்? என்னைப் போல் ஞானமில்லாதவர்களுக்கு எப்படித் தெரியும்?" என்றாள் அவள்.

இதைக் கேட்ட சண்முகம் கிண்டலில் இறங்கினான். "நீயா ஞானமில்லாதவள்? ஞானந்தான் உங்க திருவாரூர் சொத்தாச்சே!"

"அதிலே என்ன சந்தேகம்? யாரோ அங்கே வந்துகூட சாமிக்கண்ணு தாத்தாகிட்டே கத்துக்கிட்டாங்களே!" என்றாள் அவள்.

சண்முகத்தின் குறும்பு அதிகமாயிற்று.

"ஞானத்திலேயே பிறந்து ஞானத்திலேயே வளர்ந்ததுதான் அப்படி நிக்கிதா? உன் வீடு தேடி வந்திருக்கிறேன். வாங்கன்னுகூட சொல்லலியே" என்றான் சண்முகம்.

இதற்கு அவளுடைய பதிலும் அதே சுருதியில்தான் வந்தது. "வாங்கன்னு ஆலாத்தி எடுத்து அழைக்கிறவங்க இங்கே இல்லையே!" என்றாள்.

"அது யாரு?"

"அன்னைக்கி ரயிலிலே அத்தைன்னு கூப்பிட்டீங்களே, அவுங்க"

"அப்படீன்னா, உன்னை இங்கே விட்டுட்டு அவுங்க மாத்திரம் ஊருக்குப் போயிட்டாங்களா?" என்று ஆவலாய்க் கேட்டான்.

"அந்தத் தைரியத்தில்தான் வந்தீங்களா?" என்று சிரித்தாள் மோகனா.

சண்முகமும் கூடச் சிரித்தான் "இல்லை, அவுங்களை வீட்டில் காணோமே என்று பார்த்தேன்."

"இவ்வளவு பெரிய ஊரிலே என்னைத் தனியா விட்டுட்டுப் போவாங்களா? துணைக்கு யாராவது இருந்தா விட்டுட்டுப் போவாங்க."

"துணையா இல்லை? அவனைத் துணை என்று உன் தாயார்தான் ஒப்புக்கொள்ளவில்லையே!" என்று பெருமூச்செறிந்தான்.

"அம்மாவைப்பத்திப் பேசத்தான் இங்கு வந்தீர்களா?" என்று அவளும் பெருமூச்செறிந்தாள்.

"வேறு யாரைப்பத்தி நாம் பேசுவது? நம் இருவரிடையே பேசுவதற்கு என்ன இருக்கிறது?" என்று கேலியாகப் பார்த்தான்.

"கொஞ்ச நேரம் சங்கராபரணத்தைப்பத்திப் பேசுவோமா?" என்றாள் மோகனா.

"அது பேசினா அவ்வளவு நல்லா இருக்காதே!"

"உங்களைக் கண்டால், என்னென்னமோ கேட்க வேண்டுமென்று நினைத்தேன். இப்போது உங்களைப் பார்த்ததும் எல்லாம் மறந்து போச்சு. கை இப்போது எப்படி இருக்கிறது?"

"ஒரு வழியா சௌக்கியமாகிவிட்டது. இன்னும் அது என்ன பாடுபட வேண்டுமோ? யார் யாரைக் கும்பிட வேண்டுமோ? யார் யார் கொடுப்பதை வாங்கிக்கொள்ள வேண்டுமோ?"

"யாருக்கோ அந்தக் கையாலே வைர மோதிரங்கூடக் கொடுத்தீர்களாமே?" என்று மெதுவாகக் கிண்டலுடன் மோகனா கேட்டாள்.

"நானா கொடுத்தேன்? வக்கீலுக்கு வக்காலத்து வாங்கிக்கிட்டு வந்து நின்னேன். திருவாரூரிலே பட்டம் கொடுத்தேன். அதை அந்தப் பொண்ணு என் முகத்திலேயே விட்டெறிஞ்சுவிட்டது. இப்ப வைரம் பதிச்ச மோதிரத்தைக் குடுத்ததும் வாங்கிப் போட்டுக்கொண்டு விட்டது."

"ஆமாம், மோதிரம் கொடுத்தா சும்மா கொடுக்கிறது! இனிமே இதைக் கையை விட்டுக் கழட்டாதேன்னு உத்தரவு போட்டீங்களாமே. அது சரியா?"

"அவங்கதானே அப்படிச் சொன்னாங்க ...!"

"அவங்க சொன்னா நான் கேட்கணும்னு எனக்குத் தலையெழுத்தா? இந்தாங்க, இதோ உங்க எதிரிலேயே கழட்டிப் போட்டுடறேன்" என்று கோபித்துக்கொள்ளுபவள் போல் மோதிரத்தைக் கழட்டப்போனாள் மோகனா.



"ஹூ"ம் ஹூ"ம்_ஹூ"ம், கழட்டாதே. நான் கொடுத்த மோதிரம் இல்லியா?" என்று சண்முகம் விரலைப் பிடிக்க வந்தவுடன் மோகனா வெட்கத்துடன் விலகினாள்.

"பின்னே, அது உங்க விருப்பம்னு சொல்லுங்க."

"சொல்லணுமா?"

"ஆமாம், நான் மாத்திரம் எல்லாவற்றையும் மனசை விட்டுச் சொல்லணும். நீங்க உதட்டிலே ஒண்ணு, உள்ளத்திலே ஒண்ணு என்று பேசணும்."

"இல்லையே! என் உள்ளம் நினைக்கிறதைத்தானே என் உதடும் பேசும்? எப்பொழுது என் குருநாதர் கிட்டே கத்துக்கிட்டேனோ, அன்றையிலிருந்தே அப்படித்தான்."

"ஓஹோ! நாதஸ்வர வித்வான் வந்திருக்காங்களா?"

"வேறு யாரு, உங்கள் வீட்டு வண்டிக்காரன்னு பாத்தியா?"

"ஐயோ, அப்படியிருந்தால்தான் நன்றாக இருக்குமே! வண்டியிலே உட்கார்ந்துகொண்டு இன்ப உலகுக்கு ஓட்டுங்கள் என்று சொல்வேனே!"

"என்ன செய்வது? நானும் வண்டிக்காரனாக வேண்டுமென்றுதான் பார்க்கிறேன்."

"உங்களை யாரு வேண்டாமென்றது?"

"சக்கரம் ரிப்பேர்."

"அது என்ன சக்கரம்?"

"அதுதான் பணம். வண்டி ஓடணும்னா சக்கரம் வேணும். வாழ்க்கை ஓடணும்னா பணம் வேணும். அதுதானே உங்க அம்மாவின் தத்துவம்!"

மோகனாவின் முகம் சுண்டியது.

"அம்மாவுக்கு முன்னாலே பேச உங்களுக்கு வாய் கிடையாது. எனக்கு முன்னாலே நின்னுக்கிட்டு அம்மாவை வையறீங்க. ஏன் நின்னுக்கிட்டு பேசறீங்க? உட்கார்ந்தா என்ன? வெட்கமா, இல்லை பயமா?"

"சொல்லாதவங்க வீட்டிலே உட்காருவதில்லே."

"சொந்த வீட்டிலே சொல்றதுல்லே. நீங்க உட்கார வேண்டாம்."

"சரி உட்கார்ந்திட்டேன்" என்று சண்முகம் ஒரு சோபாவில் உட்கார்ந்தான். மோகனா அவன் அருகில் வந்தாள்.

"உங்க கை எப்படி இருக்குது?"

"எத்தனை தடவை கேப்பே?"

"தெரிஞ்சுக்கிற வரையில் கேக்கத்தானே வேண்டும்!"

"ஒருத்தனுக்குக் கையே போயிடும் போலிருந்தது. 'ஆண்டவனே, உனக்கு அர்ச்சனை பண்ணின கையாச்சே, அதை எடுத்துடாதே' என்று கெஞ்சினான். உடனே பகவான் பிரத்யட்சமாகி 'பக்தா, கை

போனால் பாதகம் இல்லை, மனசு இருக்கு. அதனாலே பூஜை பண்ணலாம்' என்றாராம்."

"'ஐயோ ஆண்டவனே ! அப்படி உத்தரவாகக் கூடாது. உன் பூஜை போனால் போகிறது. என் குழந்தையைத் தூக்கி வைத்துக்கொள்ளக் கை வேணும்' என்று கெஞ்சினாளா?"

"இங்கே மனுஷன் கலியாணத்துக்கே திண்டாடிக்கிட்டிருக்கான், அதிலே குழந்தையாம் !" என்றான் சண்முகம்.

இருவரும் சிரித்தார்கள். மோகனாவின் கண்களில் அந்தச் சிரிப்பிலும் சிறு கண்ணீர் சுரந்தது.

"அத்தான் ! கையைக் காட்டுங்களேன் !" என்று மோகனா அவன் அருகில் வந்தாள். சண்முகம், தான் போர்த்தியிருந்த பீதாம்பரத்தை எடுத்துவிட்டு, தன் கையில் இருந்த தழும்பைக் காட்டினான். மாங்காய் பிளவுண்டதுபோல, பிளவுண்டு வெண்மை மாறாமல் இருக்கும் அந்தத் தழும்பை அவள் பார்த்தவுடனே, தன்னையும் அறியாமல் அவளுடைய கைகள் தழும்பின் மேல் தடவின.

"ஐயோ ! வலிக்கிறதே !" என்றான் சண்முகசுந்தரம்.

"தழும்புகூட வலிக்குமா?"

"கையை எடுத்துட்டா வலிக்கும்."

"ஆமாம், உங்களை இந்தக் கையோட நேத்து யாரு வரச் சொன்னாங்க?"

"அதைப் பார்த்தால் உன்னை நான் இங்கே பாத்திருக்க முடியுமா? மோகனா, சங்கீதந்தான் உன்னைத் தந்தது. இன்றும் அதுதான் உன்னைச் சந்திக்க வைத்தது" என்று சொல்லும்போது அந்த ஆண் மகனுக்கு நாவடைத்தது. பேசத் திணறினான். மோகனா பதில் சொல்லாமல் தழும்பையே பார்த்தவண்ணம் இருந்தாள். அவளுடைய கருவிழிகளில கண்ணீர் பொங்கி வழிவதைக் கண்டான் சண்முகம்.

"ஏ புள்ளே, ஏன் அழறே?"

"என்னாலே முடிந்தது இது ஒன்றுதானே !" என்றாள் மோகனா. "அத்தான், இந்தக் காயம் என்னாலேதானே பட்டது?"

"இந்தக் காயம் இல்லை. உன்னாலே பட்ட காயம் நெஞ்சிலே இருக்கிறது. அது ஆறாத காயம். ஆசுபத்திரி மருந்திலே சொஸ்தம் ஆகாது."

"போதும் கேலி. அந்தப் பாவி என்னைக் குறிவைத்திருந்தான். குறி பார்த்து உங்களைக் கொல்லத்தான் கத்தியை வீசி இருக்கிறான்."

கலை உள்ளம் பசுமை நிறைந்தது. அங்கு கருணைக்குத்தான் இடமுண்டு. இதுவரை சண்முகம் தன்னை யார் குத்தினான் என்றே கவலைப்பட்டதில்லை. அவனுடைய உள்ளத்தில் வஞ்சம் தீர்க்கும் எண்ணம் வர முடியாது. ஆனால் தன் அருமை மோகனாவை ஒருவன் அடைய நினைத்தான் என்றவுடன் திடுக்கிட்டான்.



"என்ன, உன்னையா? யார் அவன்?"

"அழகர் கோயில்லே ஒரு அயோக்கியன் என்மேல் அவனுக்குக் கெட்ட எண்ணம். அதனாலேதான் நீங்கள் அவனுக்குப் போட்டி என்று கத்தியை எறிஞ்சு உங்களைக் குத்திவிட்டு ஓடிப் போய் விட்டான்."

"அட, அப்படியா விஷயம்?" சண்முகம் கடகடவென்று சிரித்தான். "இந்தத் தழும்பு காதலின் அடையாளமா? இருக்கட்டும். நான் அந்தத் தழும்பிலே மோகனா என்று உன் பேரைப் பச்சைக் குத்திக்கொள்கிறேன்" என்று கேலியாகக் கூறினான்.

"சே சே ! பச்சை குத்திக்கொள்வதா ! அநாகரிகம் !"

"இதிலே என்ன அநாகரிகம் ! நெஞ்சிலே பெயர் இருக்கலாம். தோளில் இருக்கக்கூடாதோ? இப்படிலே மயிலாப்பூருக்குப் போகிறேன். நேத்து ஆடிக்கிட்டு வந்தா பாரு ஒரு குறத்தி, அவளிடம்..."

"எப்பொழுது பார்த்தாலும் கேலிதானா? போங்கள், பேச்சுக்குச் சொல்ல வந்தால்?"

"அவன்தான் என்னைக் கத்தியால் குத்தினான் என்று உனக்கு எப்படித் தெரிந்தது?"

மோகனா, அதிராம்பட்டணத்தின் காட்டிலே நடந்த செய்தியைச் சொல்ல நினைத்தாள். அன்றுமுதல் இன்றுவரையில் அவள் அதை யாரிடமும் சொல்லவில்லை. அதை நினைத்து வருத்தப்பட்டதும் இல்லை. ஆயினும் தன் காதலனிடம் அதைச் சொல்ல நினைத்ததுமே நெடுநேரம் தாயைக் காணாது ஏங்கிய குழந்தை, தாயைக் கண்டவுடனே 'ஹோ' என்று அழுவது போல் அழுதாள் மோகனா.

"மறுபடியும் உங்களைப் பாக்கக் கொடுத்து வைச்சிருக்குது. இல்லாட்டி அன்றைக்கு என்ன ஆகியிருக்குமோ அத்தான் !" என்று அவள் சொன்னவுடனே சண்முகசுந்தரம், நடந்ததை ஒன்றுவிடாமல் சொல்லும்படி கேட்டான். கேட்கக் கேட்க அவனுக்கும் கண்ணீர் பொங்கியது. "இனி ஒருவரை ஒருவர் ஒரு கணங்கூட விட்டுப் பிரியக்கூடாது' என எண்ணினான். "மோகனா ! வருந்தாதே. நம்ப இரண்டு பேருக்கும் விட்ட குறை, தொட்ட குறை இருக்குது. இல்லாட்டி இவ்வளவு ஆபத்து வந்தும் நாம் பிழைத்திருக்க மாட்டோம்."

"இல்லே அத்தான். ஆபத்தில் பிழைத்தது எல்லாம் மறுபடியும் கஷ்டப்படத்தான்..."

"இல்லை மோகனா. இன்றைக்கே நான் உன் தாயிடத்தில் கேட்டு விடுகிறேன் !"

"என்ன கேட்கப் போகிறீர்கள்?"

"என்னுடைய ஆசையைச் சொல்லி, நீங்கள் தயவு செய்ய வேண்டுமென்று கேட்பேன் !"

"அத்தான், என் மேலே பிரியம் இருந்ததுன்னா, அதை ஒன்னு மாத்திரம் கேக்காதீங்க. உங்களுக்கு எதற்கு அத்தான் சிபார்சு? உங்களுக்கு யோக்கியதை இல்லையா, அழகு இல்லையா, வித்தை இல்லையா? நீங்க எதுக்காக அவங்ககிட்டே கையை எடுத்துக் கும்பிடணும்?"

"உன் தாயிடந்தானே கும்பிடுகிறேன் !"

"கலியாணம் பண்ணி வச்சா காலிலே விழுந்து கும்பிடுங்க உங்களை மதிக்காதவங்களை நீங்கள் கெஞ்சுவது எனக்குப் பிடிக்கலே"

"பிறகு நம் கதி?"

"எதித்தாப்பிலே இருந்தால்தானா அன்பு? இரண்டு பேரும் சேர்ந்து இருந்தால்தானா வாழ்வு? எங்கே இருந்தாலும், ராகத்திலே தாளம் இருக்கிற மாதிரி, சுருதியிலே ஸ்வரம் இருக்கிற மாதிரி, சிப்பியிலே முத்து இருக்கிற மாதிரி என் சிந்தையிலே நீங்கள் இருப்பீர்கள்."

"நீ படும் கஷ்டங்களை எல்லாம் நான் பாத்துக்கொண்டு சும்மா இருக்க வேண்டுமா?"

"எத்தனை நாளுக்குத்தான் கஷ்டம் இருக்கும்? எப்பொழுதாவது பொழுது விடியத்தானே வேண்டும்! எந்த அரும்பும் மலராமல் இருந்ததில்லை. எந்தக் காயும் பழுக்காமல் இருந்ததில்லை !"

"இல்லை மோகனா, அரும்பிலே உதிர்ந்துவிடுவதும் உண்டு காயிலே வெம்பிப் போவதும் உண்டு. காட்டுப்பாதையிலே உன்னைப் பிடிக்க வந்த கள்ளர்கள் தூக்கிப் போய் இருந்தால்_"

"உங்களை எண்ணிக்கொண்டே உயிர் விட்டிருப்பேன்_ _"

"அன்பே ! அப்படி எல்லாம் சொல்லாதே. நான் மட்டும் பிறகு உயிரோடு இருப்பேன் என்று எதிர்பார்க்கிறாயா?"

"நீங்கள் எதற்கு அத்தான் வருத்தப்பட வேண்டும்? காலுக்கு உதவாத ஒன்றைக் கழட்ட வேண்டியதுதானே ! நீங்கள் ஆண் பிள்ளை. நான் இல்லாவிட்டால், இன்னும் எத்தனையோ பேர். யாரையேனும் கல்யாணம் செய்துகொண்டு, சுகமாக வாழலாம்."

இதைக் கேட்ட சண்முகம் துடித்தான். அவன் இதயம் வெடித்து விடும்போல் இருந்தது.

"மோகனா, நிசமாகவே சொல்லறியா?"

"ஆம் திருவாரூரில் கஞ்சி கொண்டுவரேன்னு சொன்னவள் கொண்டுவர முடியாமல் போனது எனக்கு ஞாபகம் இருக்கு. அத்தான் உங்கள் மனைவியாக இருந்தால் பசிக்குக் கஞ்சி கொடுத்திருக்க மாட்டாளா? உங்களை இன்று வாசிக்க விட்டிருப்பாளா? பாதி உடம்பாகிவிட்டீர்களே ! இன்றைக்கு வாசிக்கும்போது பாத்தேன், உங்கள் கை, வலி தாங்காமல் நடுங்கியதை. இது எல்லாம் என்னாலேதானே? என்னை மறந்துவிடுங்கள். நான் என் தாயையும் மீற முடியாது. உங்களையும் அடைய முடியாது நான் குப்பை மேட்டிலே உதிர்ந்த பவழமல்லிகை."



"அல்ல நீ குப்பையில் கிடந்த குன்றுமணி"

"குழந்தைகள் அதைப் பொறுக்கி விளையாடுவார்கள் பெரியவர்களுக்கு அது ஏன்?"

"அசடே, அப்படிச் சொல்லாதே நான் இரண்டு கையாலேயும் சம்பாதிப்பேன், காசு சேர்ப்பேன். உன் அம்மாவின் ஆசையைத் தீர்ப்பேன். உன்னை நிச்சயம் அடைவேன்."

"அத்தான், வேண்டாம். கடலை, மணல் போட்டு நிரப்பினாலும் நிரப்பலாம், எங்கம்மாவின் காசாசையை நிரப்பவே முடியாது எனக்காக நீங்கள் காசுக்கு அடிமையாக வேண்டாம். உங்கள் கலையை விற்க வேண்டாம்."

"கலையை விற்காவிட்டால் எப்படிக் காதலை அடைவது"

"என்னை ஏன் காதலிக்கிறீர்கள்? உங்கள் கலையையே காதலியுங்கள். அது நீங்கள் கூப்பிட்ட நேரத்துக்கு வரும். தனிமையில் கூட உங்களுக்குச் சந்தோஷத்தைத் தரும். என் அழகு நிச்சயமா? உடல் நிச்சயமா? உயிர்தான் நிச்சயமா? அழியப்போகும் என் மேல் ஆசை வைக்காதீர்கள். அழியாத கலையில் அன்பைச் செலுத்துங்கள். நான் உங்களை எண்ணி எண்ணி, ஆடியாடித் தவம் செய்து அடுத்த பிறவியிலாவது உங்களை அடைகிறேன். எங்கேனும் ஏழை வீட்டில் உழவுமாடாகப் பிறந்து இருவரும் ஒரே ஜோடியாக வாழுவோம் !"

இதற்கு மேல் மோகனாவால் பேச முடியவில்லை. கண்ணீர் பொங்கியது. நெஞ்சம் விம்மியது. விம்மி விம்மி குழந்தை போல அழுதாள்.

அவசரமாகத் தன் கழுத்தில் கையிட்டாள். அதில் இருந்த அழகர் கோவில் சங்கிலியை எடுத்தாள்.

"அத்தான், இந்தாருங்கள்"

"இது ஏன் மோகனா?"

"அடையாளமாக நீங்கள் மோதிரம் தரவில்லையா? அது போல ஊரிலே மற்றவர்கள் ஆசைப்பட்டுக் காதலித்தால் வேறு அடையாளம் கழுத்தில் இருக்கும். தாசியின் காதலுக்குத் தங்க நகைதான் அடையாளம். உங்கள் நினைவுக்கு மோதிரம் இருக்கிறது. இந்தாங்க, இதை என் ஞாபகமாக உங்கள் கழுத்தில் போட்டுக் கொள்ளுங்கள். நான் நாலு நாளில் கொழும்புக்குப் போகிறேன். திரும்பி வருவேனோ இல்லையோ, தெரியாது. இந்தாருங்கள். திருவாரூரில் விட்டெறிந்தது போல் இதை இன்றும் விட்டெறிந்து விடாதீர்கள்" என்றாள் மோகனா. அவளுடைய குரல் கதறியது. உடல் பதறியது.

சண்முகம் தன் தலையைக் குனிந்தான். அவனாலும் பேச இயலவில்லை. மோகனா அவன் கழுத்தில் அதை மாலையிட்டாள்.

இருவரும் கண்ணீர் விட்டுக்கொண்டே எதிரும் புதிருமாக நின்றார்கள் "அத்தான், புறப்படுங்கள். இனி இந்த வீட்டில் நீங்கள் நின்றால் அவமானம். என் தாய் வந்துவிடுவாள். எதுவும் பேசுவாள்."

"அன்பே ! உனக்காக யார் பேசினாலும் தாங்குவேன்."

"நீங்கள் தாங்கலாம். என்னால் பொறுக்க முடியாது. தன் கணவனை மரியாதைக் குறைவாய்ப் பேசினார்கள் என்பதற்காகத்தான் பிறந்த வீட்டிலேயே பெருநெருப்பில் வீழ்ந்தார்கள் உமாதேவியார். அத்தான் ! அழகர் கோவிலில் இரண்டு ஆறுகள் ஒன்றுகலந்தன. அன்பு வெள்ளமாக ஓடி வந்தன. ஆனால், ஆற்று வெள்ளத்தைப் பெரும்பாறை பிளப்பது போல் என் அம்மா பிரித்துவிட்டாள். நீங்கள் பட்டணத்துப்பக்கம் ஓடுகிறீர்கள். நான் கொழும்புப்பக்கம் ஓடுகிறேன்."

"ஆண்டவனே பிரித்தாலும் ஆறு ஒன்றுகூடிவிடும் மோகனா. ஸ்ரீரங்கத்தைப் பாரு. காவிரியை பெருமானே, பிரித்துப் பார்த்தார். ஒரு நமஸ்காரம் போட்டுவிட்டு ஒன்றுகூடிவிடவில்லையா? அதைப் போல் நம்மையும் ஒன்றுசேர்ப்பார். மோகனா, எந்தச் சோதனை வந்தாலும் தாங்கு. இன்னும் ஆறு மாதம், ஆறே மாதம். உன் தாயின் கையை நிரப்புகிறேன். உன்னை அடைகிறேன்."

மோகனாவின் முகத்தை நோக்கினான் சண்முகம். அவள் விழிசோர நின்றாள். அவன் மூச்சு, தட்டுத் தடுமாறி வந்தது.

"கண்ணே ! உன்னை அழகர் கோயிலில் பார்த்தபோது இருந்த உடம்பில் பாதிகூட இப்போது இல்லை. உடல் இளைத்துவிட்டாய்."

"இல்லையே ! தவத்தால் உடம்பு இளைக்குமாமே ! பார்வதி தேவிக்குக்கூட கங்கணம் நழுவி விழுந்ததாமே ! இளைத்தால் அழகு போய்விடுமா அத்தான்?"

"அழகு போனாலும் பரவாயில்லை. நீ இளைத்து இளைத்து நான் அளித்த மோதிரம் நழுவி விழுந்தாலும் பரவாயில்லை. ஆனால் கண்ணீர் விட்டுக் கண்ணீர் விட்டு, நீ— நீ—"

"நானா கண்ணீர் விடுகிறேன்? அதுவாகவே வருகிறது. அழகர் கோயிலில் உங்களைப் பார்த்த பிறகு ஆறு தடவை பார்த்தேன். ஆனால் இன்னும் உங்கள் மேனி முழுவதையும் கண் குளிரப் பார்க்க வில்லை அத்தான் ! பாழும் கண்ணீர் வந்து ஒவ்வொரு தடவையும் பார்வையை மறைக்கிறது" என்று தேம்பினாள்.

"அன்பே, அழாதே ! வனத்தில் நெருப்புப் பிடித்தால் மழை அணைத்துவிடும். மனத்தில் நெருப்புப் பிடித்தால் அணைக்க முடியுமா? நெருப்பு இருக்கும் இடத்தில் அல்லவா நீரை ஊற்ற வேண்டும்? உள்ளே நெருப்பை வைத்துக்கொண்டு வெளியே கண்ணீரை விட்டால் பயனுண்டா? கண்ணீரால் பயனில்லை. அதை அடக்கு—"



"அத்தான், என் நெஞ்சமே வெடித்துவிடும் போலிருக்கிறது. வெள்ளரிப் பழத்துக்கு நூல் கட்டின மாதிரி உங்கள் ஆசைக்கயிறு என்னை எத்தனை நாளைக்குத்தான் கட்டி வைக்கிறதோ பார்க்கிறேன். நீங்கள் புறப்படுங்கள், அம்மா வந்துவிடுவார்கள்."

"ஆருயிரே, ஆறே மாசம்" என்று சொல்லிவிட்டு, சண்முகம் நகர்ந்தான். அவன் கால்கள் தள்ளாடின. அவன் மன வேதனை மார்பில் வலியை உண்டாக்கியது.

"அத்தான் ! ஒரு வார்த்தை" என்றாள் மோகனா. சண்முகம் நின்றான். "என் தொழில் அப்படிப்பட்டது. ஆடுவேன்; ஆனால், கால் இடறாது. சதிர் நடக்கும்; ஆனால், தாளம் தவறாது. பட்டாடை கட்டுவேன், பகட்டி மினுக்குவேன்; ஆனால், பாசம் மாறாது. ஆகவே இனி எது நடந்தாலும் என்னைச் சந்தேகிப்பதில்லை என்று உறுதியளியுங்கள்."

"ஏன் மோகனா, இந்தக் கேள்வி?"

"ஆம். அத்தான் ! விதி வந்தால் எறும்புக்குக்கூட இறகு முளைக்கும். அது கடிக்கும். ஈசல்கூட விளக்கை மறைத்துவிடும். என் அம்மா இப்போது எந்த ஆபத்தை விலைக்கு வாங்கப் போயிருக்கிறாளோ ! அதனால்தான் சொன்னேன். சரி, வந்துவிடுவாள், நீங்கள் புறப்படுங்கள்" என்றாள்.

சண்முகம் தயங்கினான். மோகனாவும் அவனைப் பிரிய வருந்தினாள். அப்போது முத்துராக்குவும் இனி அவர்களைத் தனியே விட்டிருப்பது சரியல்ல என்ற எண்ணத்தில் உள்ளே நுழைந்தார். அவரைக் கண்டதும் மோகனா எட்டிப் போய் நின்றாள்.

"என்னங்க, போவோமா?" என்றார்.

"இந்நேரம் எங்கே போயிருந்தீங்க?" என்றான் சண்முகம்.

"இல்லே, வெத்திலையைத் துப்பிட்டு வரலாம்னு—"

அப்பொழுது வாசலில் வண்டி வரும் சத்தம் கேட்டது. திடுக்கிட்டாள் மோகனா; சண்முகசுந்தரத்துக்கும் என்னவோ போல் இருந்தது.

அந்தச் சமயத்தில் வடிவாம்பாளே உள்ளே நுழைந்தாள். சண்முக சுந்தரம், மோகனா, முத்துராக்கு மூவரும் தகுந்த மரியாதை கிடைக்கப் போகிறது என்று எண்ணினார்கள். ஆனால், வடிவாம்பாளோ, சண்முகத்தைப் பார்த்தவுடன், "வாங்க தம்பி. வழி தெரிஞ்சதா? வந்து இரண்டு நாளாச்சே, உடம்பு சௌக்கியமாயிருக்கேன், இல்லே, அப்படீன்னு ஒரு வார்த்தை சொல்லக்கூட உனக்குத் தோணலியே! எங்கே புறப்பட்டுட்டே? உக்காரு. ஏ, மோகனா, தம்பிக்கு காப்பி கீப்பி ஏதாச்சும் கொண்டுவந்து கொடுத்தியா?" என்றாள்.

## அம்மா ஆடிய நாடகம் !



மின்னாமல் மழை வருவது இயற்கை. கண்டவுடன் காதல் வருவதும் உண்டு. ஆனால் ஒருவர் மேல் ஒருவர் கொண்ட கெட்ட எண்ணம் காரணமில்லாமல் மாறுவதை நாம் கண்டதில்லை.

வடிவாம்பாள் திடீர் என்று, "வாங்க தம்பி, வழி தெரிஞ்சுதா?" என்று கேட்கவே, சண்முகத்துக்கு உண்மையிலேயே வழி தெரியவில்லை. இருந்தாலும், "நீங்க ஊருக்குப் போவதாகச் சொன்னாங்க. பாக்கலாம்னுதான் வந்தேன்" என்றான்.

"உன்னைப் பாக்காமல் ஊருக்குப் போயிடுவோமா? நீதான் கச்சேரி மேளம் வாசிச்சவன், நாங்க வந்தபோது திரும்பிக்கூடப் பார்க்கல்லே. சாயங்காலம் தில்லானா ஊதினபோது நானும் மேடை மேலேதானே இருந்தேன். 'அத்தை, சுகமா இருக்கீங்களா'ன்னு ஒரு வார்த்தை கேட்டியா? வீட்டுக்கு வந்தியா? என்ன தவுல்காரரே, நீங்களே சொல்லுங்க!" என்றாள் வடிவாம்பாள்.

தவுல்கார முத்துராக்கு, அவர் தவுல் படும்பாடு பட்டார். "இல்லை, நாயனக்காரர்கூட வந்து பாக்கணும்னுதான் சொன்னாரு. சேவுகத்துக்கு வந்த இடத்திலே நேரம் இல்லை."

"ஆமா தம்பி, நீ அவருக்குப் பக்கவாத்தியந்தானே, விட்டுக் குடுப்பியா? என்ன நாயனக்காரத் தம்பி, உடம்பு சொகமா இருக்கியா? அட, பட்டணத்துக்கு வந்தவன், ஒரு காலணா கார்டு போட மாட்டே. உடம்பு எப்படி இருக்குதுன்னு."

சண்முகத்துக்கு வடிவாம்பாள் வைகிறாளா, வாழ்த்துகிறாளா என்பதே புரியவில்லை. இருந்தாலும் உண்மையைச் சொல்லி விட்டான்.

"நீங்கதான் ஊருக்குப் போறேன்னு நான் சொல்லிக்க வரப்போ, முகம் கொடுத்தே பேசல்லியே! ஏதாவது வருத்தமோன்னு பாத்தேன்" என்றான்.

"ஆமா தம்பி, உம்மேலேதான் நான் வருத்தப்படணும்! அன்னிக்கு என்னமோ வகுத்திலே ஒரே வலி. போதாத்துக்கு அது வேறே அறுதுகிட்டே இருந்தது."

"ஏன்?"

"என்னைக் கேக்குறியே, அதையே கேளு. மனிசனுக்கு உடம்பிலே காயம் பட்டா ஆறும், மனசிலே காயம் பட்டா ஆறுமா?"



"நம்முடைய காதல் விஷயத்தில் அத்தைக் பகை இல்லை போலிருக்கிறதே! நாமல்லவா தவறுதலாய் எண்ணிவிட்டோம்" என்று சண்முகம் தவித்தான்.

"ஏன் அப்படி? அதை யாரு என்ன சொன்னாங்க?"

"ஆமா தவுல்காரரே, அரமனையாட்டம் நம்ம வீடு கிடக்குது. நீ போய் ஒரு ஓட்டைக் குடிசையிலே படுத்துக்கிடந்தா நல்லா இருக்குமா? காயம் பட்ட மனுசன் நேரே வீட்டுக்குத்தானே வரணும்!"

இதைக் கேட்ட கூட்டமே திகைத்தது. வடிவாம்பாள் முழுப் பூசணிக்காயைப் பருக்கையில் அமுக்குகிறாள் என்று தெரிந்து ஆச்சரியப்பட்டனர். அம்மாளின் இத்தனை ஆர்ப்பாட்டமும் எதற்கு அஸ்திவாரமோ என்று அயர்ந்தாள் மோகனா.

ஆனால் வடிவாம்பாளோ, "இந்த அபரஞ்சி எங்கே? ஏய் அபரஞ்சி!" என்று கூப்பிட்டுக்கொண்டே உள்பக்கம் போனாள். அந்த அவசரத்திலும் உள்ளே போய்விடாமல் வாசற்படிவருகிலேயே நின்று, "அபரஞ்சி, ஏய் அபரஞ்சி" என்று இரண்டு சத்தம் போட்டாள்.

அபரஞ்சி தூக்கக் கலக்கத்திலே வந்தான்.

"ஓடிப்போய்க் கல்யாண வீட்டிலே அஞ்சாறு கலர் கேட்டு வாங்கிட்டு வா."

விட்டால் போதும் என்று ஓடினான் அபரஞ்சி.

"அட, முழுக்கக் கேட்டுக்கிட்டுப் போ. பல்லுக் கொட்டுற தண்ணியை வாங்கிட்டு வந்துடாதே. வித்வான் குடிக்கறதுன்னு சொல்லி, பனிக்கட்டு போடாமல் நல்ல கலரா வாங்கிட்டு வா."

"சரி அம்மா" என்று போனான் அபரஞ்சி.

"உப்புச் சோடா வேண்டாம்."

"அதுவும் சரிதான் அம்மா."

"உடைக்கிற கட்டையும் வாங்கிட்டு வா."

"சரி அம்மா."

"சொல்லிக்கிட்டே இருக்கேன், நிக்கிறியே!"

"இன்னும் ஏதாவது இருந்தால் சொல்லிடுங்க."

"அதோடு ஆறு கிளாசும், கொஞ்சம் நல்ல வாசனைப் பாக்கும் வாங்கிக்க. வெத்திலை, துளிரா இருந்தா நாலு கேட்டு வாங்கிக்க."

"வெத்திலைத் துளிர்தான் இங்கே இருக்குதே அம்மா!"

"இதிலே வெத்திலைத் துளிர் எங்கே இருக்குது? கேழ்வரகுத் துளிர்தான் இருக்குது. அதுதான் வெத்திலை பழுத்துப் போச்சே. போ, ஓடு" என்றாள். அபரஞ்சி புறப்பட்டான்.

"ஏய் அபரஞ்சி, கலர்ச் சுண்ணாம்பு ஒரு டப்பா எடுத்துக்கிட்டு வா" என்றும் வடிவாம்பாள் சொல்லி அனுப்பினாள். ஆனால் அவள் வாய்தான் வார்த்தைகளைப் பேசினதே தவிர, அவள் கண்கள் தன் மகளையும் சண்முகத்தையுமே கூர்மையாய்ப் பார்த்துக்கொண்டிருந்தன.

அபரஞ்சி போனவுடன் வடிவாம்பாள் நடுக்கூடத்துக்கு வந்தாள். சண்முகத்தின் எதிரில் தரையில் அமர்ந்தாள்.

"என்ன நாயனக்காரத் தம்பி, உடம்பைப் பாத்துக்கணும் தம்பி. சும்மா ஊதி ஊதி சம்பாதிச்சு யாருக்குக் கொடுக்கப் போறீங்க? காசா பெரிசு? செவத்தை வச்சிக்கிட்டல்ல சித்திரம் எழுதணும்?"

"பட்டணத்துக் கடல் காத்து நல்ல காத்தும்பாங்க" என்றார் முத்துராக்கு.

"ஏன், என்ன தவுல்காரரே அப்படிச் சொல்றே?"

"இல்லை, அந்தக் காத்து பணத்தாசையைக்கூட சொஸ்தப் படுத்திவிடும் போலே இருக்குதே. நீங்க எல்லாம் தெரிஞ்சவங்க. உங்க வாயாலேயே காசு எதுக்குன்னு கேக்கறீங்களே!"

"அட அதுக்குச் சொல்றீங்களா! அது உப்பங்காத்து தம்பி, மேலே படப்பட உலகத்திலே ருசியை உண்டாக்கும். அது கிடந்துட்டுப் போகுது. நான் எதுக்குச் சொல்றேன்னா..."

"சரிதான் போங்க. ஊதினாத்தானே இவங்களுக்கெல்லாம் பங்குப் பணம் கொடுக்கலாம். நம்ம தருமண்ணனுக்குப் பாருங்க, எழு பிள்ளைங்க."

"அட அது சரி தம்பி. உலகத்தையே நம்ப காப்பாத்த முடியுமா? மரம் வைச்சவன் தண்ணி ஊத்துவான். நீ ஒண்டி ஆளுதானே! எதுக்குக் கஷ்டப்படணும்? உன் உடம்பை நீ கவனிச்சுக் கிட்டாத்தானே அது உன்னைக் கவனிக்கும்?"

'பெற்ற தாய்க்குக்கூட இல்லாத அக்கறை, தன் மேல் வடிவாம்பாளுக்கு வந்துவிட்டதே. இது எந்தத் தெருவில் நடந்ததால் வந்த மகிமையோ' என்று யோசித்தான் சண்முகம்.

"என்ன யோசிக்கிறே? வாய்க்கு நல்லா செய்து சாப்பிடணும். இரண்டிலே மூணுலே எண்ணெய் தேய்த்துத் தலை முழுகணும். ஒரு குப்பு மிப்பு வச்சுச் சாப்பிடணும்."

'அம்மாளுக்கு அவர் மேல் இவ்வளவு இரக்கம் வந்துவிட்டதே, இது ஏதோ ஆபத்துக்குத்தான்' என்று எண்ணினாள் மோகனா.

சண்முகத்துக்கு அந்த அளவுக்கு ஆபத்து எதும் தோன்றவில்லை என்றாலும், ஏதோ நாடகம் என்பது மட்டும் மனத்தில் பட்டது. அவன் குறும்பும் தலை தூக்கியது.

"அது அத்தை சொல்றதும் நிசந்தான். எங்க அம்மா இருந்தா எல்லாம் கவனிக்கும். அதுதான் இல்லையே!"

மோகனா கலீரென்று சிரித்தாள். அம்மாள் கோபிப்பாள் என்று அஞ்சி அடக்கினாள். வடிவாம்பாள் இதைக் கவனித்தும் கவனியாதவள் போல் பேசினாள்.

"அதுக்காக ஏன் அவங்களைக் கைலாசத்திலே இருந்து திரும்பக் கூப்பிடணும்? நான் செய்து தாரேன். என் மோகனா வேறே, நீ வேறயா எனக்கு?" என்றாள் வடிவாம்பாள்.



"நான்கூட ஒரு பதினைஞ்சு நாள் குத்தாலம் போய் இருந்துவிட்டு வரலாம்னு இருக்கேன்" என்றான் சண்முகம்.

"அட, சும்மா நீ ஒண்ணு. நாமெல்லாம் குத்தாலம் எங்கே போறது? தென்காசி ரயில்வே ஸ்டேஷனோடே சரி. குத்தாலத்திலே போய் இறங்குவே, 'கோயமுத்தூருக்கு வா'ன்னு தந்தி வரும். இதெல்லாம் நம்மைப் போல ஓடியாடி உழைக்கிறவங்களுக்கு லாயக்கில்லே... என்ன அபரஞ்சி, வாங்கியாந்தியா?"

அபரஞ்சியின் கூடவே ஒரு பையன் கலர், கட்டை முதலியவை களுடன் வந்தான்.

"எங்கே இந்த வரதனைக்கூடக் காணும்? ஏய் மோகனா, நீதான் அதிலே ஒரு கலரை உடைச்சுக் கிளாசிலே ஊத்தி அவருக்குக் கொடு தம்பி. இந்த ஜோடா உடைக்கறதுன்னாலே எனக்குப் பயம்" என்று வடிவாம்பாள் தன் பயத்தால் மகளுக்கு உத்தரவு போட்டாள்.

சண்முகத்துக்குச் சோடா கலர் சாப்பிடுவதே பிடிக்காது. அதைச் சாப்பிட்டுவிட்டு நாயனம் ஊதும்போது ஏப்பம் வரும் என்று கேலி செய்வான். இருந்தாலும் மோகனா கையால் கிடைக்கிறதே என்ற ஆசை வேறு.

"இந்தா, நாயனக்காரருக்கு என்ன உடைக்கிறே? நல்ல கோலா இருந்தா கொடு" என்றாள் வடிவாம்பாள்.

"கோலா இல்லியே அம்மா" என்றாள் மெதுவாக மோகனா.

"கோலா இல்லாட்டி வேறே என்ன இருக்கு?"

"லைம்ஜூஸ் இருக்கு."

"லைம்ஜூஸா! அது சங்கீதக்காரனுக்குச் சரிப்பட்டு வராது. குடிச்சா எலுமிச்சம்பழம் தொண்டையைக் கட்டிக்கும். அது என்ன?"

"ஜிஞ்சர்பீர்."

"அது இருக்கில்ல, பின்னே எதுக்கு முழிக்கிறே? அதையே உடைச்சுக் கொடு. உடம்புக்கு நல்லது" என்றாள் வடிவாம்பாள்.

அதன் பெயரைச் சொல்லும்போதே சண்முகத்துக்கு வயிற்றில் காந்தல் எடுத்தது.

"என்னத்துக்குங்க, வீட்டிலே போய்ச் சாப்பாடு சாப்பிட வேண்டியதுதானே!" என்றான் சண்முகம்.

"அட, நீ ஒண்ணு, வீடு தேடி வந்த மனுசன் வெறும் வயித்தோட போறதா?"

"பின்னே என்ன காத்துக்கிட்டே போறதா? சரி, பின்னே தவுல்காரருக்கும் கொடுக்கச் சொல்லுங்க" என்றான் சண்முகம்.

"உ, உ, நான் வெத்திலை போட்டிருக்கேன்" என்றார் தவுல்காரர்.

"அட, சரிதான், சும்மா எல்லோரும் சாப்பிடுங்க" என்றாள் வடிவாம்பாள்.

மோகனா சிரித்த முகத்துடன் பாட்டிலைத் திறந்து சண்முகத்தைக் கடைக்கண்ணால் பார்த்தவண்ணம், அதை வெள்ளி டம்ளரில் வார்த்தாள். சண்முகம் தன் கடைக்கண்ணால் அவளுக்குச் சைகை காட்டியபடி, "கொஞ்சம் போதும்" என்றான்.

"சேச்சே! நீ அப்படி எல்லாம் சொல்லக் கூடாது" என்றாள் வடிவாம்பாள்.

சண்முகம் தர்மசங்கடத்தில் அகப்பட்டுத் தவித்தான். அதைப் பார்த்த மோகனாவோ, குறும்புடன் அந்த பாட்டிலில் இருந்த பானம் முழுவதையும் அந்த டம்ளரில் ஊற்றி, கையில் எடுத்துக்கொண்டு அவன் அருகில் வந்தாள். சண்முகம் இந்த இஞ்சி சுரஸத்தை எப்படி மடா குடிப்பது என்று கவலைப்பட்டுக்கொண்டே, "அது வகுத்திலே போனதும் காத்துமுங்க" என்று கூறி டம்ளரைக் கையில் வாங்கினான். மோகனாவின் முகத்தைப் பார்த்துக்கொண்டே, மடக்மடக்கென்று குடித்தான். வாயில் புளித்தது, மனத்தில் இனித்தது. நல்ல வேளைக்கு அது ஜிஞ்சர்பீர் இல்லை, லைம்ஜூஸ்தான். சண்முகத்தின் மனம் குளிர்ந்திருக்கும் சமயத்தில், வடிவாம்பாள் மேலும் தொடர்ந்தாள்.

"ஆமா, குத்தாலம் வேண்டாம் தம்பி. எங்கேயாவது கப்பல் பிரயாணம் போறதுதானே?" என்றாள் வடிவாம்பாள்.

"எங்கே போறதுங்க? போனால் கொழும்புக்கு வேணா போகலாம்" என்றான் சண்முகம். வடிவாம்பாள் சிரித்தாள்.

"அதிலே போனா சுகம் மிஞ்சாது. அம்மைத் தழும்புதான் மிஞ்சும். பத்து நாளைக்குப் பாடுபட்டு அம்மைப் பாலும், அதுவும் இதுவுமா அலைஞ்சு திரிஞ்சு, ஒம்பது நாள் கஸ்டம்ஸிலே காத்துக் கிடந்து, ஒரு நாள் கப்பலிலே போனால் போதுமா? ஏன், சீமைக்கு ஒரு வாட்டி போயிட்டு வருவமே, ஒரு ஆறு மாசம்!" என்று வடிவாம்பாள், இத்தனை நாழிகையாக இதயத்தில் அடக்கி வைத்திருந்த பிரும்மாஸ்திரத்தைத் தூக்கி எறிந்தாள்.

அதைக் கேட்ட சண்முகம், மோகனா எல்லாருமே திகைத்தார்கள். மோகனா மட்டும் விஷயத்தைச் சிறிது ஊகித்துக்கொண்டாள்.

"சீமைக்கா!" என்றார் தவில்காரர்.

சண்முகசுந்தரமோ "சீமைக்குப் போறதுன்னா சும்மாவா இருக்கு?" என்றான்.

"சரி, சும்மா கூட்டிக்கிட்டுப் போகச்சொல்றேன், புறப்படுறிகளா?" என்றாள் வடிவாம்பாள்.

"இங்கே கச்சேரிகள் கெட்டுப்போகுமே!"

"சும்மா நீ ஒண்ணு. சீமைக்குப் போயிட்டு வந்தேன்னு சொன்னா இங்கே நாள் தவறாமல் கச்சேரி கிடைக்கும். கால்சட்டை போட்டுக்கிட்டுக்கூட வாசிக்கலாம். இப்ப எல்லாம் 'நம்ம மேளந்தானே. இது என்ன பிரமாதமா'ன்னு சொல்றவங்க எல்லாம் நாளைக்குக் கூப்பிட்டு உனக்கு மட்டும் பார்ட்டி இல்ல வைப்பாங்க. நீ மாத்திரம் சரின்னு சொல்லு, நான் ஏற்பாடு செய்யுறேன்."



"ஏன் அம்மா, அங்கே ரொம்பக் குளிருமாமே?" என்றாள் மோகனா.

"குளிரினா என்ன! வித்வானுக்கு மேல் துண்டுக்கா பஞ்சம்? இந்த ஊரிலே போட்ட சால்வை எல்லாம் அந்த ஊரிலே போர்த்திக்கிறது" என்று வடிவாம்பாள் கூறவே, எல்லோரும் சிரித்தனர்.

வடிவாம்பாளின் மனத்தில் இருப்பதைப் புரிந்துகொள்ளத் துடித்தான் சண்முகம். "ஏன் அத்தை, இந்தச் சீமைக்குப் போற யோசனை உங்களுக்கு எப்படி வந்தது?" என்றான்.

"அட, நம்ம மகாராஜா இருக்கிறார் இல்லை, அவரு கூப்பிட்டு விட்டாரு. அந்தப் பொண்ணு நம்ம பக்கத்துப் பொண்ணாம்."

"யாரு, அந்த வெள்ளைக்காரியா?" என்றாள் மோகனா.

"இல்லை, அந்தப் பகுடர்காரி. அதுதான் சொல்லிச்சு, சீமை ரொம்ப நல்லா இருக்கும். ஒரு வாட்டி போயிட்டு வாலாம்னு."

"மகாராஜா என்ன சொன்னாரு?" என்றான் சண்முகம்.

"நாட்டியத்துக்குச் சீமையிலே நல்ல மவுசாம். ஆண் பெண் அடங்கலும் ஆடுவாங்களாம். பரதநாட்டியம்னு சொன்னா, பவுன் பவுனாகக் கொட்டுவாங்களாம். மோகனா அவசியம் வரணும்னு சொன்னாரு. நான் கண்டிப்பாச் சொல்லிட்டேன் 'மோகனா வரணும்னா, சண்முகமும் வரட்டும். ரெண்டும் நல்ல சோடியா இருக்கும். சீமையிலேயும் நம்ம சங்கீதம், நாட்டியம் ரெண்டுக்கும் நல்ல பேரு கிடைக்கும்' என்று சொன்னேன். மகாராஜாவும் யோசிச்சுப்பிட்டு ஒத்துக்கிட்டார். ஆனால், நான் நம்ம ரெண்டு பேருக்கும் தெரியும்னே காட்டிக்கல்லே தம்பி."

சண்முகத்தின் மனம் குழம்பியது. தன் சங்கீதம் வடிவாம்பாள் சிபாரிசு செய்ய வேண்டிய நிலைக்கு வந்துவிட்டதா என்று எண்ணினான். பதில் சொல்லாமல் அமர்ந்திருந்தான்.

இந்தச் சமயம் வரதன், கையில் ஒரு டிபன் செட்டுடன் வந்து சேர்ந்தான். அவன் கூடத் தருமனும் கையில் ஒரு பலூனை ஊதிக் கொண்டே உள்ளே வந்தான்.

"இதென்ன வரதா?"

"சாப்பாடுங்கம்மா. வராதவங்க வந்திருக்காங்க, கலியாணச் சாப்பாடு எடுத்தாந்தேன்" என்று சொல்லி, மோகனா சண்முகம் இருவரையும் பார்த்தான். அதற்குள் தருமன் தன் வாயில் இருந்த பலூனை எடுத்துத் தவில்காரரிடம் காட்டி, "என்ன தவில்காரரே, இந்த லப்பரைப் பாத்திங்களா? ஒரு நிமிசம் ஊதினா ரெண்டு நிமிசம் 'பீ'ன்னு கத்துதே! இந்த மாதிரி ஒத்துலே ஒண்ணும் கண்டுபிடிக்க முடியாதோ? இதைக் கேக்கத்தான் வந்தேன்" என்றான்.

"அதெல்லாம் இல்லீங்க டிபன் செட்டைப் பாத்துட்டுக் கூடவே வராரு" என்றான் வரதன்.

"சரி, சரி, இலையைப் போடு தம்பி எழுந்திருங்க, சாப்பிடுங்க" என்றாள் வடிவாம்பாள்.

"இல்லே, எனக்குப் பசியில்லே நான் ஜாகைக்குப் போய்விட்டு வருகிறேன்" என்று சண்முகம் எழுந்திருக்கவே, கூடவே தவுல்கார முத்துராக்குவும் எழுந்தார்.

"அப்புறம் தம்பி, சீமைப் பயணம்?" என்றாள் வடிவாம்பாள்.

"அதுக்கு இப்ப என்னங்க அவசரம்? பார்ப்போம்" என்று சொல்லிவிட்டுச் சண்முகம் புறப்பட்டான். இவ்வாறு அவன் திடீர் என்று எழுந்து செல்வதைக் கண்ட மோகனா பிரமித்தாள்.

வீட்டுக்கு வந்ததும் சண்முகம் யோசிக்கத் தொடங்கினான்.

சங்கீதம் உயர்ந்த கலை. அதைக் கையாளும் சிறந்த வித்வான்கள் பட்டினி கிடந்தாலும் கிடப்பார்கள். கலையின் மதிப்பை நழுவவிட மாட்டார்கள்.

இப்போது சண்முகத்துக்கோ இரண்டு கஷ்டங்கள் சேர்ந்து கொண்டன. மோகனாவைப் பிரிவதா? அல்லது தான் வடிவாம்பாள் சிபாரிசில் பிழைப்பதா? இரண்டினுள் எது நலம் என்று அவனால் நிச்சயம் செய்ய முடியவில்லை.

'அன்புக்காக நாம் ஒப்புக்கொள்ளுவோமே. ஆஹா, எவ்வளவு உல்லாசமாக இருக்கும்! அவளும் நாமும் ஒரே கப்பலில் போகலாம். அடிக்கடி மோகனா நம்மிடம் வருவாள். 'அத்தான், அத்தான்' என்று அழைப்பாள். இருவரும் கப்பலின் மேல்தட்டில், இரவில், நல்ல நிலவில் உலாவலாம். இன்பமாய்ப் பேசலாம். சில நாளில், நமது காதல் முதிர்ச்சியைக் கண்டு, வடிவாம்பாள் அம்மாளே ஒப்புக்கொண்டு விடுவாள். நானும் அவளும் ஒன்றாய் இருப்போம்' என்று சிறிது நேரம் எண்ணி எண்ணி ஆனந்தித்தான்.

ஆனால், அடுத்த நிமிஷத்திலேயே ஒரு பயம் வந்தது. 'இந்த மகாராஜா யார்? இவருக்குக் கலையில் என்ன அக்கறை? குறவஞ்சி ஆட்டம் நடக்கும்போது இவர் பேசிக்கொண்டுதானே இருந்தார். இது மோகனாவை அடையச் செய்த சூழ்ச்சியாக இருக்குமோ?

'ஆனால், நான் அவள் அருகில் இருந்தால், அவளுக்கு ஆறுதலாக இருக்கும். அவளுக்கு இவரால் ஆபத்துகளும் நேராது. நமக்குக் காவல்காரன் உத்தியோகம். நல்ல உத்தியோகம்—ஆனால், நாம் கூடப் போகாவிட்டால் அவளுக்கு ஆபத்தாக முடியலாமே!

'சே சே, இது என்ன யோசனை? பெண்ணை ஆண் காவல் காக்க முடியாது. அப்படி இருந்தால் பொன்னுக்கும் பெண்ணுக்கும் என்ன வித்தியாசம்?

'பெண்ணுக்கு மனம் உண்டு. மானம் உண்டு. சீறியெழுந்தால் சிங்கத்தைக்காட்டிலும் பெண்ணுக்கு வலிமை உண்டு. தன்னையும்



காப்பாற்றி உலகையும் காக்கும் தாய்க்குலம் அல்லவா அவள்? அவளுக்கு நீ என்ன காவல்?

'ஆனால், அவளை எப்படித் தனியே அனுப்புவது? அவள் எடுப்பார் கைப்பிள்ளை அல்ல. உயிரைக்காட்டிலும் மானத்தைப் பெரிதென மதிப்பவள்— —ஆனால், அவள் உயிரோடிருப்பதும் நமக்கு அவசியமாயிற்றே!

'ஐயோ, ஆறு மாசம் அவளைப் பிரிந்திருக்க வேண்டுமே' என்று எண்ணினான். அவள் முகம் எதிரில் வந்தது. 'அத்தான், நீங்களும் வாருங்கள்' என்று அழைத்தது. 'என் தாய்க்காகக் கலையை விற்காதீர்கள்' என்று கூறிய அவளே கலையைக் கட்டி வைத்துவிட்டுக் காவலுக்கு வாருங்கள் என்று கூப்பிடுவது போல தோன்றியது. 'ஆம், போனால்தான் என்ன? ஆனானப்பட்ட ராமனே சீதையைப் பிரிந்த சோகத்தில் காட்டில் கதறி அழுதார். நாம் எம்மாத்திரம்? சிவபெருமானே தேவியைக் குறித்துத் தவம் செய்தார். வெள்ளி மலையை ஆளப் பிறந்த முருகன், வள்ளிமலைக் காட்டில் வளை வேடனாகத் திரிந்தான். அவர்களே இப்படி அலைபட்டிருக்கையில் நாம் எம்மாத்திரம்? கையெடுக்கும் தெய்வங்களே, காதலுக்குக் கட்டுப்பட்டுத் தவிக்கும்போது, நாம் கவுரவத்துக்காகக் காதலியைக் கைவிடுவது சரியல்ல. எது வந்தாலும் சரி, நாமும் சீமைக்குப் புறப்படுவது' என்ற முடிவுக்கு வந்தான்.

அடுத்த நாள் காலையில் கிட்டாவய்யரிடமிருந்து ஆள் வந்ததும் சண்முகம் அங்கு சென்றான்.

"மகாராஜாவுக்கு உங்கள் வாசிப்பு ரொம்பப் பிடித்துவிட்டதாம். அங்கிருந்த வெள்ளைக்காரர்கள் எல்லாம் பிரமாதமாக ரசித்தார்களாம். அதைப் பார்த்ததுமே இந்த டிரிப் உங்களையும் மோகனாவையும் சீமைக்கு அழைத்துப் போவதாக முடிவு செய்து விட்டார். நேற்றே அந்த வடிவாம்பாள் அம்மாளைக்கூடக் கூப்பிட்டுப் பேசினாராம்."

"என்ன சொன்னாங்களாம்?"

"அவுங்க தயாருட்டாங்களாம். நீங்கள் அவர்களுடன் வரவேண்டும் என்று மகாராஜா கேட்டதும், 'என்னத்துக்கு நம்ம கிட்டேயே முகவீணைக்கு ஒரு பையன் இருக்கிறான்' என்று சொன்னாற்போல் இருக்கிறது."

சண்முகம் திடுக்கிட்டான்.

"இல்லை, யாரோ சொந்தக்காரப் பையன் போலிருக்கு. நாதஸ்வரம் எதற்கு? முகவீணையே போதுமே" என்று சொன்னார்களாம்.

சண்முகம் வடிவாம்பாளின் வஞ்சகத்தைக் கேட்டு மனம் நொந்தான். "அப்புறம்?"

"மகாராஜாதான் அது முடியாது நாதஸ்வரமும் வேணும்னுட்டா ராம். ஆனா, அந்த அம்மாளை முதலில் கூப்பிட்டுப் பேசினது நல்லதாகத்தான் போயிற்று."

"என்ன நல்லது?"

"என்னிடத்தில் மகாராஜா ஒவ்வொருவருக்கும் இருபதாயிரம் ரூபாய் தருவதாகச் சொன்னார். அந்தம்மா பேச்சிலே மயங்கி ஆளுக்கு முப்பதாயிரம் தருவதாக ஒப்புக்கொண்டார்."

இதைக் கேட்ட சண்முகம், ஆனந்தத்தில் துள்ளினான். காதல் பலிக்கப்போகிறது என்று எண்ணினான். நீட்டிய இடத்தில் கையெழுத்திடத் தயாரானான்.

எண்பதாம் அத்தியாயம்

## காவேரி கலா நிலையம்



இவ்வாறு சண்முகமும் கிட்டாவய்யரும் பேசிக்கொண்டிருக்கையில், மதன்பூர் மகாராஜா தங்கியிருக்கும் அரசாங்க விருந்தினர் மாளிகையில் நாம் எதிர்பாராத ஆச்சரிய சம்பவம் ஒன்று நடந்தது. ஸ்ரீமதி லேடி கனகாம்பரம் அவர்களிடம் ஒரு ஆள் ஓடிவந்து ஒரு சீட்டைக் கொடுத்தான். அதில் 'மிஸ்டர் வைத்தி, பிரசிடெண்ட், காவேரி கலா நிலையம், சோழமண்டலம்' என்று அச்சிட்டு இருந்தது. உடனே அந்த அம்மையார் அவசரமாக வெளியே வந்தார்கள். அங்கே நமது ஸ்ரீமான் வைத்தியே ஒரு சோபாவில் அமர்ந்திருந்தார்.

கனகாம்பரம் அம்மையாரைக் கண்டதும் வைத்தி எழுந்தார்.

"வரவேணும், நமஸ்காரம். தாங்கள் எட்டு மணிக்கு வரச் சொன்னீர்கள். நான் 7.55க்கே வந்துவிட்டேன்" என்றார் வைத்தி.

ஸ்ரீமதி கனகாம்பரம் விழித்தாள். "உங்களை எட்டு மணிக்கு வரச் சொன்னேனா? ஆர் யூ ஷ்யூர்? நான் ஒருவரையும் வரச் சொல்லவில்லையே" என்றாள்.

"பின்னே, இதுதானே ஹிஸ் ஹைனஸ் மதன்பூர் மகாராஜா தங்கி இருக்கும் இடம்?"

"ஆமா!"

"அப்படியானா நீங்க ஒரு உபகாரம் செய்கிறீர்களா? எனக்காகக் கொஞ்சம் உள்ளே போய், அங்கு ஒரு பெண் இருக்கும். சுமார் 30 வயசுதான் இருக்கும். அதுக்குள்ளே கலைகள் எல்லாத்தையும்



கரைச்சுக் குடிச்சுட்டு, ஒண்ணும் தெரியாதது மாதிரியா இருக்கும். அவாளைக் கொஞ்சம் இங்கே வரச் சொல்லுங்க."

"நீங்க சொல்றது யாரை? எனக்குத் தெரியல்லியே."

"கலைக் காரியதரிசி கனகாம்பரம்னு சொன்னால், சந்தைக் காராளெல்லாம் வாயைப் பொத்திக்கறான். அரண்மனையிலேயே இருக்கிற உங்களுக்குத் தெரியல்லை என்றால், நான் என்ன செய்றது? போய் ஸ்ரீமதி கனகாம்பரம் அம்மாளை வரச் சொல்லுங்கோ."

ஸ்ரீமதி கனகாம்பரம் சிரித்தாள். உடனே வெட்கம் வந்து வாயைப் பொத்திக்கொண்டாள்.

"மிஸ்டர், நான்தான் அந்தக் கனகாம்பரம்."

"ஹா, நீங்களா! அடாடா, மன்னிக்கணும். பாத்தா எய்ட்டீன்கூட இருக்காது போல் இருக்கிறது. உங்களுக்கு இந்த வயசிலே இந்த ஞானம் எங்கிருந்து அம்மா வந்தது? நீங்க மாத்திரம் அமெரிக்காவிலே பிறந்திருந்தா——— எனக்கு உங்க போட்டோகிராப் ஒண்ணு வேணுமே..."

கனகாம்பரம், ஆனந்தத்தில், தான் இருப்பது ஆகாயமா பூமியா என்பது தெரியாமல் திகைத்தாள்.

"நீங்கள் யார்?" என்றாள்.

"நான்தான் வைத்தி. நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்களே! காவேரி கலா நிலையம் ஆனரரி பிரெசிடெண்டு! நம்ம ஜில்லா, கலைகளுக்கே பேர் போனது. ஆட்டர் சரபோஜி அதைக் கவனிக்க ஆளில்லை. இப்ப நான்தான் நம்ம கலைகளை எல்லாம் புனருத்தாரணம் செய்ய முயற்சி பண்ணிண்டிருக்கேன். நேத்து கங்கை கொண்ட சோழபுரம் போயிருந்தேன். அப்படியே அந்தக் கோபுரத்தைப் பார்த்துட்டு 'ஐ ஷெட் டியர்ஸ்' கண்ணீர் விட்டுட்டேன். புவர் சோளன். ஒருத்தரும் கவனிக்கல்லே. அந்தக் கோபுரத்தை எடுத்துக் கட்டிப்பிடறதுன்னு ஒரு பிளான் போட்டிருக்கேன்."

"அது சம்பந்தமா மகாராஜா 'ஹெல்ப்' ஏதாவது வேணுமா?"

"கலைக்காக நான் எந்தப் பய கிட்டேயும் கை நீட்டி யாசகம் வாங்க மாட்டேன். யாராவது டொனேஷன் கொடுத்தால் தடுக்கவும் மாட்டேன். எதுக்கு யாசகம் வாங்கணும்! நம்ம ஊரிலே கலைஞர்களா இல்லே? நாலு கலைஞன் மனசு வைத்தால், நாலே நாளிலே கோபுரம் உசந்துடும்!"

"உங்க பிரின்சிபிள் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது."

"ஆமா, பைதிபை, நீங்க இப்ப சமீபத்திலே டாஞ்சூர் பக்கம் வந்தீர்களாமே?"

"ஆமா."

"மகாராஜா ஊர் போவதற்காக ஏதோ ஆர்டிஸ்ட் செலக்ஷனுக்காக வந்திங்களாம். கும்பகோணத்திலே நீங்க ஆர்ட்டைப் பத்தி ரொம்ப எக்ஸலண்டா பேசினதாகச் சொன்னா."

"கும்பகோணத்திலே இல்லியே, தாராசுரத்திலே."

"எஸ், தாராசுரத்திலேதான். உங்க பேச்சிலே என் பிரண்ட் மயங்கிப் போயிட்டார். ஓடி வந்து, 'வைத்தி சார், வைத்தி சார், இனி கலையைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். பெண் குலம் முன் வந்து விட்டது' என்றார். உங்க பேரைச் சொன்னார். அன்னைக்கிருந்து உங்களைப் பாக்கணும்னு ஒரு ஆசை. உடனே ஒரு காயிதம் எழுதினேன். நேற்றுதான் என் செக்ரடரி சொன்னான், நாளைக் காலை எட்டு மணிக்கு அப்பாயின்ட்மெண்ட்னு."

"இல்லையே, நான் அப்படி யாருக்கும் எழுதல்லியே!"

"நீங்க எழுதாட்டா, உங்க மகாராஜா எழுதியிருப்பார்."

இதைக் கேட்ட ஸ்ரீமதி கனகாம்பரம், அதுவும் நிஜமாக இருக்கலாம் என்று நம்பினான்.

"அந்த லெட்டர் உங்ககிட்டே இருக்கோ?"

"இருக்கே, அது டாக்குமெண்டாச்சே ! அதைக் கிழிப்பேனா? எங்க ஆபீச பைலில் இருக்கு ! என்ன யோசிக்கிறீர்கள்? அதனாலே பரவாயில்லை. மகாராஜாவை இன்னொரு நாளைக்குப் பார்த்துக் கொண்டால் போகிறது. நானே அவர்களுக்கு ரயில் சார்ஜைக் கொடுத்துப் போகச் சொல்லிவிடுகிறேன்."

"யாருக்கு? உங்க கூட வேறே யாராவது?"

"இந்த வைத்தி வந்தால் வெறும் கையோடே வரமாட்டான். போனாலும் வெறும் கையோடே போகமாட்டான். கோயிலுக்குத் தேங்காய், குழந்தைக்கு மிட்டாய், மன்னர்களைப் பார்க்க வந்தால் கலைஞர்களோடேதான் வருவேன். இப்ப எட்டுப் பேர் டான்ஸ் ஆர்ட்டிஸ்டை அழைத்துக்கொண்டு வந்திருக்கேன்."

"அடாடா, டான்ஸா ! ஐ ஆம் வெரி ஸாரி ! எல்லாம் பேசி ஆயிடுத்தே."

"இது அந்த டான்ஸ் இல்லே, இந்தியாவின் லரியண்டல் டான்ஸ்."

"அப்படி என்ன?"

"டான்ஸிங் டம்மி ஹார்ஸ் என்று கேள்விப்பட்டதில்லையோ?"

"ஐயோ, பொய்க்கால் குதிரை !"

"அதுவேதான். அதுதானே டான்சுகளுக்கெல்லாம் ஆதி பிதா! வெங்கோஜி ஒரு வெள்ளைக் குதிரை வாங்கினார். சாரட்டிலே பூட்டினதும் அது பின்னாலேயே டான்ஸ் பண்ணிக்கிண்டு போச்சு. அவர் ஆர்ட்டிலே எக்ஸ்பர்ட் இல்லையா? உடனே இந்தப் பொய்க்கால் குதிரையைக் கண்டுபிடிச்சார். ஆகா, இதைப் பாத்தா இங்கிலாந்திலேயும் அமெரிக்காவிலேயும் மகாராஜாவை மறக்கவே மாட்டாங்க."



"சரி, பின்னே இருங்கோ. நான் போய் மகாராஜா கிட்டே நீங்கள் வந்திருப்பதாகச் சொல்றேன்" என்று கனகாம்பரம் உட்சென்றான்.

வைத்தி இருந்த இடத்தில், அத்தர் பெட்டி கீழே விழுந்து உடைந்த நாற்றம் வந்துகொண்டிருந்தது. உள்ளே நுழைந்த மகாராஜா, இது சகியாமல் மூக்கைச் சுளித்துக்கொண்டே நுழைந்தார்.

மகாராஜா வருவதைக் கடைக்கண்ணால் பார்த்துவிட்டு, நியூஸ் பேப்பரில் எதையோ அக்கறையாய்ப் படித்துக்கொண்டு இருந்தார் வைத்தி. இதைக் கண்ட மகாராஜா தமக்கு முன் ஒருவர் உட்கார்ந்திருப்பது சரியில்லை என்பதைத் தெரிவிப்பது போல் கனைத்தார். உடனே வைத்தி திரும்பினார்.

"ஓ. யுவர் எக்ஸலன்ஸி, நமஸ்தே. நான் பாக்கல்லே."

"எஸ், என்ன கொண்டுவந்திருக்கிறீர்கள்?"

"நீங்க கான்டினென்ட் டூர் போவதாக உங்க செக்ரடரி எனக்கு எழுதியிருந்தார்கள். இந்த இந்தியாவிலேயே இது மாதிரி ஏதாவது ஆகணும்னா எனக்குத்தான் எழுதுவா. நானும் தகுந்த முறையிலே பழைய ஆர்ட்டா பார்த்து ஏற்பாடு பண்ணிவிட்டேன்."

"அப்படீன்னா?"

"அலங்காரக் குதிரை ஆட்டம்னு சொல்லுவா. யு-தோ-டிராய் முற்றுகையில் வரல்லே மரக்குதிரை - அது மாதிரி இது பொய்க்கால் குதிரை. பழைய லிட்டரிச்சரில் எல்லாம் இதைப்பத்திதான்..."

"ஓஹோ, டம்மி ஹார்ஸா?"

"என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள். பிளாஸி முற்றுகையிலே இதை வச்சுத்தானே சண்டையையே ஜயிச்சாங்க."

"ஆமா! அந்த நாளிலே நம்மிடம் குதிரை கிடையாது. அரேபியாவில் இருந்து வந்தாத்தான் உண்டு. அப்புறந்தான் நம்ம மாஸ்டர் மைண்டு இதைக் கண்டுபிடித்தது. ஆயிரம் ரெண்டாயிரம் பொய்க்கால் குதிரைகளைச் செய்து, உள்ளே ஆளை நிறுத்தி யுத்த களத்திலே விட்டாங்க. குடைக்குக் குடையாச்சு, குதிரைக்குக் குதிரையாச்சு."

"நான் ஆட்டத்தை எப்ப பார்க்கலாம்?"

"இப்பவே பார்க்கலாம். பொய்க்கால் குதிரை பொன்னன் என்று ஒருத்தன். ஸ்பெஷலா அவனைத் தேடிப் பிடிச்சுக் கூட்டிக்கொண்டு வந்திருக்கேன்."

அரசாங்க மாளிகையின் முற்றத்தில் பொய்க்கால் குதிரை பொன்னன் வெளுத்து வாங்கினான். பம்பை பக்கிரியோ, அந்தக் கட்டடத்தின் செங்கல் ஒவ்வொன்றையும் பெயர்த்துக் கொண்டிருந்தான். மகாராஜாவும் அவர் தர்மபத்தினியும் அதைப் பார்த்து ஆனந்த சாகரத்தில் மூழ்கினார்கள். ஸ்ரீமதி ஆஷா லதா தேவி, அந்த ஆட்டம் தன் ஊருக்கு அமோகமாகப் பிடிக்கும் என்றாள்.

மகாராஜாவின் கலாரசனைக்கும் அது அற்புதமாகவே இருந்தது. அதில் மயங்கினார். இந்தப் பொய்க்கால் குதிரை மேல் மோகனாவை ஏற்றி வைத்து, இங்கிலாந்தையே பிடித்துவிட நினைத்தார். அவரது தர்ம பத்தினியோ இந்த ஆட்டத்துக்குச் சண்முகத்தின் நாதஸ்வரமும் சேர்ந்தால் அற்புதமாயிருக்கும் என்று எண்ணினாள்.

## எண்பத்து ஒன்றாம் அத்தியாயம்

# கலையை வெல்லுமோ காதல்?



'நாயனக்காரத் தம்பி நீயும் வா. இல்லாவிட்டால் மகாராஜா மோகனாவை மாத்திரம் கூட்டிப் போகத் தயாரில்லை. நீ வருவதாக ஒப்புக்கொண்டால் எனக்கு முப்பதாயிரம் கிடைக்கும்' என்றுதான் வடிவாம்பாள் அம்மாள் கூறட்டுமே! அல்லது 'மோகனாவை நீயே கட்டிக்கொள். இருவர் பணமும் சேர்ந்தால் அறுபதினாயிரம் ரூபாய் ஆகும். இதை வைத்துக் கொண்டு நன்றாய் வாழ்க்கை நடத்துங்கள்' என்றாவது கூறட்டுமே! இரண்டும் இல்லாமல் எதற்கு இந்த வடிவாம்பாள் அம்மாள் என்னிடம் வஞ்சகமாகப் பேச வேண்டும்? ஏதோ இந்த மகாராஜா தனக்கு வேண்டியவர்போலும், தன் சிபாரிசினால்தான் என்னையே அவர் அழைப்பது போலும் என்னிடம் சொல்லி என்னை ஒப்புக்கொள்ளச்செய்து தன் கௌரவத்தை நிலை நாட்டுகிறாளா? அல்லது 'இந்தச் சீமைப் பயணத்துக்கே நான்தான் காரணம்!" என்று என்னிடம் காட்டிக் கொள்ள விரும்புகிறாளா!' என்று யோசித்தவண்ணம் அமர்ந்திருந்தான், சண்முகம்.

அவன் எதிரில் இருந்த மோகனாவோ, 'பாய்மரத்தில் உட்கார்ந்த காக்கை போல் விதி எப்பக்கம் வேண்டுமானாலும் நம்மைக் கொண்டு போய் விடட்டும். ஆனால் எனக்குப் பாய்மரமாகச் சண்முகம் மட்டும் இருக்கட்டும்' என்று அவன் கூடச்செல்லும் ஆனந்தத்தில் அமர்ந்திருந்தாள்.

அரசாங்க விருந்தினர்கள் மாளிகையின் ஹாலில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் ஒரு வரிசையில் வடிவாம்பாள், மோகனா முதலியவர்கள் அமர்ந்திருந்தார்கள். எதிர் வரிசையில் சண்முகசுந்தரம் கிட்டாவய்யர் முதலியவர்கள் அமர்ந்திருந்தார்கள். சண்முகத்துக்கு இதுவரையில், எந்த வித்வானுடைய கச்சேரியையும் கேட்பதற்காகக் காத்திருந்து பழக்கம் கிடையாது. தனக்காகப் பிறரைக்



காக்க வைத்த பழக்கமும் அவனுக்கு இல்லை. ஆகவே, இப்பொழுது மகாராஜாவைப் பேட்டி காண்பதற்காகக் காத்திருக்கும் ஒவ்வொரு நிமிஷமும், ஒவ்வொரு யுகமாகத் தோன்றியது. அவனுக்கு எதிரும் புதிருமாக இருவரும் உட்கார்ந்திருந்தும் ஒருவரை ஒருவர் அறியாதவர் போல் உட்கார்ந்திருந்தார்கள். இவர்கள் அமர்ந்திருந்த ஆசனங்களுக்கு எதிர்ப்புறத்தில் நடுவே, பொன்னால் ஆன ஆசனம் ஒன்று மேடைமீது போடப்பட்டிருந்தது.

இருந்தாற்போலிருந்து நாலு சேவகர்கள் அதை நோக்கி ஓடி வந்தார்கள். அவர்களைக் கண்டவுடனே வடிவாம்பாள் எழுந்தாள். அதைக் கண்டு மற்றவர்கள் எழுந்தார்கள். சண்முகசுந்தரமும் எழுந்தான். ஆனால் அவர்களோ, "கொஞ்சம் இருங்க. மகாராஜா இதோ வந்திடுவார்" என்று சொல்லிவிட்டு, ஆசனத்திற்கு ஆறு அடிக்கு மேல் ஒரு வெல்வெட்டு மேல்கட்டியைக் கட்டினார்கள். உடனே, உள்ளிருந்து இன்னொரு டவாலிச் சேவகன் ஓடி வந்தான். "மகாராஜா வருவாரு. மான் – மான் – அதாவது, மரியாதையாக இருங்கள்" என்றான்.

சண்முகசுந்தரம் இதைக் கேட்டவுடனே, சிடுசுப் பார்வையாக அவனை ஒரு பார்வை பார்த்தான். அவன் அருகில் நின்ற பலரும் மேல் வேஷ்டியை இடுப்பிலே கட்டிக்கொண்டார்கள். அடுத்த கணத்தில், உள்ளிருந்து ஒருவன் வெள்ளித் தடியைப் பிடித்துக் கொண்டு வந்தான். அந்தத் தடியால் ஓங்கித் தரையில் மூன்று முறை தட்டி, 'உஷ் உஷ்' என்றான்.

'என்னடா, நாய்க்குட்டியைக் கூப்பிடறாங்க" என்று எண்ணினான் சண்முகசுந்தரம். எல்லோரும் எழுந்தார்கள். சண்முகசுந்தரம் மறுமுறை எழுந்தான். "சம்பளம், இதுக்கே சரியாப் போய்விடும் போலிருக்கே" என்றான் சண்முகம் கிட்டாவய்யரிடம். அவர் சிரித்துக்கொண்டார்.

"ரோமாபுரிக்குப் போனால் நீங்களும் ரோமாபுரிக்காரராகிவிட வேணும்" என்றார் அவர். அப்பொழுது 'சத்தம்' என்று குரல் வந்தது. எல்லோரும் நிசப்தமாக நின்றார்கள். தங்கத்தடி பிடித்த சேவகர் இருவர் முன்னே வர, இருவர் சாமரம் போட்டு வர, மகாராஜா உள்ளிருந்து வெளியே வந்தார். அவருக்குப் பின் லேடி கனகாம்பாள் வர, அவருக்குப்பின் ஸ்ரீமான் வைத்தியும் வந்து சேர்ந்தார்.

காற்றாடச் சற்று நேரம் உலாவி வரலாம் என்று ஒரு நந்தவனத்துக்குப் போகிறோம். அங்கு ஒரு அழகான பெஞ்சு போடப்பட்டு இருக்கிறது. அதில் அமருகிறோம். இனிமையான சங்கீதம் காற்றுவாக்கில் கேட்கிறது. இஷ்டப்பட்ட இடத்தை நாமே ரசிக்கிறோம். நமது உள்ளம் உல்லாச உலகத்துக்குச் செல்லுகிறது. மெல்ல கஷ்ட உலகை மறக்கிறோம். இளம் தூக்கம் வருகிறது. அந்தச் சமயம் புஸ் என்று ஒரு சத்தம் கேட்கிறது. கண் திறந்து பார்த்தால்

நமது காலடியில் ஒரு நல்ல பாம்பு படமெடுத்து நிற்கிறது. அதைக் கண்டால் நமக்கு என்ன அதிர்ச்சி ஏற்படுமோ அந்த அதிர்ச்சியை வைத்தியைக் கண்டவுடன் அடைந்தாள் மோகனா.

ராமேச்வரம் போனாலும் சனீச்வரன் விடவில்லை என்பார்கள். சமுத்திர ஸ்நானம் செய்தால் பீடை விலகலாம். ஆனால், தன்னைப் பட்டுத் தலை எழுத்து அழிந்துவிடாது. ஜாதகனுக்குக் கூடவே பிறந்த கோள்கள் நிலை மாறிவிடா. ஆனால், வைத்தியோ கூடப்பிறவாத கோள். இடையிலே வந்த வியாதி போன்றவர்.

அவனால் வந்த இன்னல்கள் நீங்கி வரும் தருணத்தில் மறுபடியும் அவனே பிரத்யட்சம் ஆனதைக் கண்டவுடனே மோகனா திடுக்கிட்டாள்.

'இவர் எங்கு வந்தார்? மகாராஜாவிடம் இவருக்கு என்ன செல்வாக்கு?' என்று அவள் எண்ணிக்கொண்டிருக்கும் அதே சமயத்தில் வடிவாம்பாளும் அதைப்பற்றியேதான் சிந்தனை செய்தாள். ஆனால், அவள் உள்ளம் எந்தத் திசையில் பிரயாணம் செய்யும் என்பதை நாம் சொல்ல வேண்டுவதில்லை.

ஆசனத்தில் அமர்ந்த மகாராஜா சற்று விச்ராந்தி செய்து கொண்டு எதிரில் இருப்பவர்களைப் பார்த்தார். அதுவரை எதிரில் நிற்பவர்கள் நின்றுகொண்டே இருந்தார்கள். ஆனால் சண்முகசுந்தரம் தன்னுடைய ஆசனத்தை ஒரு முறை பார்த்தான். இதைக் கண்ட மகாராஜா, "அச்சா, ஆப் பைடியே" என்றார். எல்லோரும் உட்கார்ந்தார்கள். சண்முகசுந்தரமும் உட்கார்ந்தான். கட்டுக்கடங்காத காளை போல் அவன் தன் கௌரவத்தை அடக்கிக்கொள்ள முடியாமல் தவிப்பதைக் கண்ட மோகனா ரசித்தாள். அப்பொழுது மகாராஜா, கிட்டாவய்யரிடம் ஆங்கிலத்தில் பின்வருமாறு பேசினார்:

"ஆறு மாசம் பிரயாணம். அடுத்த வெள்ளிக்கிழமையே புறப்பட வேண்டும். எல்லாரிடத்திலேயும் 'எக்கிரிமெண்'டிலே கையெழுத்து வாங்கிவிடுங்கள். சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடக்க வேண்டுமென்று சொல்லிவிடுங்கள். எனக்குக் கொஞ்சம் இந்த வித்வான்கள் சமாசாரம் தெரியும். அவர்கள் எல்லாம் உணர்ச்சியால் துடிப்பவர்கள். ஆங்கில நாட்டுக்குக் கூட்டிக்கொண்டு போகிறேன். அங்கு மானம் மரியாதை சரியாக இருக்கவேணும்" என்று சொல்லிவிட்டு, பொய்க்கால் குதிரை ஆட்டத்தின் மீதியைப் பார்க்க எழுந்து போய் விட்டார். கூடவே வைத்தியும் அவர்களை விழித்துப் பார்த்த வண்ணம் போனார்.

சண்முகசுந்தரத்துக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'வாருங்கள்' என்றுகூடச் சொல்லவில்லை. சௌக்கியமா என்று ஒரு வார்த்தை கேட்கவில்லை. தன்னைப் பார்த்தாரா, பார்க்கவில்லையா என்பது கூடத் தெரியவில்லை. மரியாதை தெரியாத மனிதர் போலிருக்கிறது



என்று சிந்தித்தான். கிட்டாவய்யர், "சரி, நம்ப ஆபீசுக்குப் போவோமா?" என்றார். பின்னர் இரண்டு வண்டிகள் அவருடைய ஆபீசை நோக்கிப் பறந்தன.

ஆசை ஒரு புறம், கௌரவம் மற்றொரு புறமாக, சண்முகசுந்தரம் தவித்தான். "ஒப்பந்தத்தை ஒரு முறை படித்துச் சொல்லிவிடவா?" என்று கேட்டார் கிட்டாவய்யர்.

"ஒத்துக்கிறதுன்னு நிச்சயம் பண்ணிட்டேன். அப்புறம் படிக்க என்ன இருக்கு?" என்று சொல்லிவிட்டான் சண்முகம்.

அவன் முகத்தில் என்னும் கொள்ளும் வெடிப்பதைக் கண்டாள் மோகனா. இந்தக் கையொப்பம் தனக்காகத்தான் என்பதை உணர்ந்தாள். 'நேற்று கலையை விற்க வேண்டாமென்று எவ்வளவோ கூறினேன். இன்று காதலுக்காகக் கலையை விற்க முன் வந்திருக்கிறார். ஆனால், அவர் அவமானத்துக்கு உள்ளாகக்கூடாது. அவருக்கு வருகின்ற மான, அவமானம் என்னுடையது' என்ற எண்ணத்தில் அவளும் ஒப்பந்தத்தைப் படிக்கவில்லை. ஆனால், 'அட்வான்ஸ்' பணத்தை நன்றாக எண்ணிப் பார்த்துவிட்டு மகளுக்காக வடிவாம்பாள் கையொப்பமிட்டாள்.

சண்முகத்தின் கையில் பேனாவைக் கொடுத்த கிட்டாவய்யர் "தயவு செய்து சற்று உள்ளே வாருங்கள்" என்று அழைத்தார். இருவரும் உட்சென்றார்கள். "சண்முகம், நான் சொல்கிறேன் என்று கோபித்துக்கொள்ளக்கூடாது. இந்த மகாராஜாவைப் போல நான் எத்தனையோ மகாராஜாக்களைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் வீம்புக்காகச் செலவு செய்வார்கள். விஷயம் இருக்காது. ஒரு நாய்க்காக அவர் இரண்டு லட்சம் ரூபாய் செலவழித்து இருக்கிறார். அவருக்கு நாட்டியத்தை விஷயம் தெரிந்து ரசிக்கத் தெரியாது. சங்கீதத்தையும் அப்படித்தான். ஆனால், அவர் ஒரு பணக்காரர். அவர் பணம் கொடுத்தால் அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு நீங்கள் நிரம்ப ஏழைகளுக்குத் தொண்டு செய்யலாம் என்ற முறையில்தான் நீங்கள் இதை ஒத்துக்கொள்ளவேண்டும்" என்றார்.

"எதுக்காக இந்தச் சமாதானம் எல்லாம் சொல்றீங்க?"

"இல்லே சண்முகம், நாளை நீங்கள் என் ரசிகத் தன்மையைச் சந்தேகப்பட்டுவிடக்கூடாது. எனக்கு ஆசை, நீங்கள் ரொம்ப வசதியோடு வாழவேண்டும் என்று. இதை ஒரு 'ஜாலி டிரிப்'பாக வைத்துக்கொள்ளுங்கள். ஆனால், முக்கியமான விஷயம், மகாராஜா ஒரு தொட்டால் சிணுங்கி. ஜாக்கிரதை. அவர் உள்ளத்தைத் தொட்டுவிடாதீர்கள்" என்று சொல்லிவிட்டு, அவன் கையில் தம் வீட்டுக் கல்யாணத்தில் வாசித்ததற்காக, ஒரு ஆயிரம் ரூபாயைக் கொடுத்தார்.

"வேண்டவே வேண்டாம். எனக்கு நீங்கள் பணமே தரக்கூடாது" என்றான் சண்முகம்.

"உம்: அப்படிச் சொல்லக்கூடாது."

"அப்படி இல்லிங்க, கையே போயிடுத்து. இனிமே வாசிக்கப் போறோமான்னு இருந்தேன். அந்தச் சமயத்திலே நீங்க வந்து கபாலீச்வரர் சன்னிதியிலே உக்காந்து வாசிக்கச் சொன்னீங்க. வாசிச்சேன். மறுபடியும் வாசிக்கக் கொடுத்து வச்சதே பாக்கியம். உங்ககிட்டே பணம் வாங்கமாட்டேன்."

"தம்பி, இந்த ஆயிரம் ரூபாய், கமாஸ் ராகத்தின் தில்லானா காத்துக்குக்கூட ஆகாது. இதை நீ வைத்துக்கொள்ளத்தான் வேண்டும்."

"என்ன சொன்னாலும் நான் வாங்கமாட்டேன்" என்று சொல்லிவிட்டு, எக்ரிமெண்டில் கையெழுத்துப் போட்டுவிட்டு, அட்வான்சை வாங்கிக்கொண்டு வெளியே சென்றான் சண்முகம்.

கிட்டாவய்யர் சங்கீத ரசிகர் மட்டுமல்ல, ரொம்ப இங்கிதமும் தெரிந்தவர். ஆதலால், எப்படி இதற்குப் பதில் உபகாரம் செய்யலாமென்று யோசித்தார்.

அட்வான்ஸ் பணத்தோடு ஜாகைக்குப் போனவுடன் வடிவாம்பாள், "பெரிய வணங்காமுடி மன்னன். மகாராஜாவுக்கு முன்னாலே கம்பாட்டம் நிக்கறான் பாரு. குனிஞ்சு ஒரு கும்பிடு போட்டாத்தான் என்னவாம்!" என்றாள் மோகனாவிடம்.

"அவரு சமஸ்தான ராஜாவாயிருந்தா, இவரு சங்கீதத்திலே ராஜா. அந்த மகாராஜாதான் 'வாங்க'ன்னு ஒரு கும்பிடு போட்டா என்னவாம்?" என்றாள் மோகனா.

"இதோ பாரு மோகனா, நான் சொல்றேன் கேளு. சங்கராபரணம் வந்து சாப்பாடு போடுமா? இல்லே, காம்போதி ஒரு கப் காப்பி கொடுக்குமா? நேத்து, கலியாணத்துலே வீதி நெடுக ஊதிக்கிட்டு வரலே? நலுங்காமே ஆறு மாசம் கப்பலிலே கூட்டிக்கிட்டுப் போறேன்னு சொன்னா இவருக்கு வலிக்குது போலிருக்கு."

"ஏம்மா, கலியாணத்திலே ஊதினா என்ன அம்மா தப்பு? எந்த வணங்காமுடியும் தாயாரை மதிக்காம இருக்க முடியாது. கலியாணமும் மேளமும் கழுத்தும் தாலியும் மாதிரி. ஒண்ணை விட்டு ஒண்ணைப் பிரிக்க முடியாது. மேளம்னாலே கலியாணம்னுதான் அர்த்தம். கலியாணத்திலே ஊதினா கேவலமா?"

"நான் கேவலத்துக்காகச் சொல்லலே. ஆயிரம் ரூபாய்க்கு அஞ்சு நாள் கலியாணத்திலே ஊதறவன், முப்பதாயிரம் கொடுக்கிற மகாராஜாவை முழிச்சுப் பாத்தானில்ல? நேத்திக்கு நான் சொல்றப்போ முடியாதுன்னுட்டு ரப்பா போனானே, இன்னிக்கு என்ன வந்ததாம்?"

"நீங்க உங்க மக ஆட்டத்தாலேதான் அவருக்கு அழைப்புன்னு சொன்னீங்க. இப்ப அவரு தன்னாலேதான் ஆட்டம்கிறாரு!"

"அதெல்லாமில்லே. நீ சொல்லி அனுப்பியிருப்பே வரதன்கிட்டே நீங்க ஒத்துக்கிட்டாதான் நான் போவேன்னு."



இதைக் கேட்ட மோகனா ஆத்திரம் அடைந்தாள். "அம்மா, நான் வரலே அம்மா. இந்த ஆறு மாசத்துக்குள்ளே என்னைக் கொன்னு எடுத்துடுவீங்க. அகஸ்மாத்தா அவரைச் சந்திச்சாகூட 'நீ ஏண்டி அவனைப் பார்த்தே' என்பீங்க. ஒரு இடத்திலே சேர்ந்து உக்காந்திருந்தாக்கூட உங்களுக்குக் கோபம் வந்துடும். கூடவே தகராறையும் கூட்டிக்கிட்டு எங்கேயும் போகப்படாது. எனக்குக் கப்பலும் வேண்டாம், சீமையும் வேண்டாம்."

"ஆமாண்டி, சீமைக்குப் போகாட்டி, ராணிக்கு முன்னாலே ஆட முடியுமா...?"

"ராணிக்கு முன்னாலே ஆடினாதானா ஆட்டம்! இந்த ஊரிலே ஆடினா போதும்."

"இந்தா மோகனா, சும்மா என் கிட்டே இந்த வம்பெல்லாம் பேசப்படாது."

"பின்னே, நீங்க இனிமே இந்த மாதிரி ஒண்ணும் சொல்றது இல்லேன்னு சொல்லுங்க."

"சரி, நான் ஒண்ணும் சொல்லலே. ஆனால் நீ கப்பலிலே என்னை விட்டுப் பிரியப்படாது. அவன் கிட்டே பேசக்கூடப்படாது. நம்ப வேலை உண்டு, நாம் உண்டுன்னு இருக்கணும்."

"ஆறு மாசம் ஜெயிலிலே அடைபட்டுக் கிடக்கணும்கிறீங்க!"

"ஆமாம், முப்பதாயிரம் ரூபாய் சும்மா இல்லே" என்று வடிவாம்பாள் சொல்லவே, அப்பொழுது வரதனும் முத்துக்குமார நட்டுவனாரும் வந்தார்கள்.

"ஏம்மா, நீங்க பாட்டிலே சீமைக்கு ஒத்துக்கிட்டீங்களே, இப்ப கொழும்புக்காரரு அட்வான்ஸ் கொடுத்தாரே, என்ன ஆகிறது?" என்றான் வரதன்.

"இதெல்லாம் உன்னை யார் கேட்டாங்க? உடம்பு முடியல்லேன்னு ஒரு தந்தி கொடுத்தால் போவுது."

"அவங்க நம்பினாத்தானே?"

"நம்பாட்டி போறாங்க. நாம என்ன கையெழுத்தா போட்டுக் கொடுத்தோம்?"

"கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாத்தானா? வாயாலே சொன்னா சொன்னதுதானே?"

"ஏண்டா, அவரு சும்மா இருந்தாலும் நீ சும்மா இருக்கமாட்டே போல் இருக்கே. சும்மா இரு நீ. பணம் கொடுத்தவன் சும்மா இருக்கான். பக்க வாத்தியக்காரன் பதறுறான்."

"எனக்கென்னம்மா? மோகனா பேருதானே கெடும்!"

"அதைப்பத்தி நீ கவலைப்பட வேண்டாம். நான் என்ன அவங்க பணத்தை வாங்கிச் செலவா பண்ணிட்டேன்? இந்தா முத்துகுமரு, நீ ஒரு காயிதம் எழுதிப் போடு. அவரைக் கொழும்புத் துறைமுகத்திலே வந்து சந்திக்கச் சொல்லு. நான் பேசிக்கிறேன்."

"இல்லேம்மா, அவரு சொல்லி நமக்கு 'விசா' கிடைச்சிருக்குது நம்ம கொழும்புக்கு வரணும்னுட்டு அந்த மனுசன் கலியாண ஏற்பாடெல்லாம் செய்திருப்பாரு. இப்ப மாட்டேன்னு சொன்னா நல்லா இருக்குமா?"

"சரி சரி, நீயும் சும்மா இரு."

"அம்மா நான் வேண்டுமானால் அவருக்கு ஒரு கடிதம் எழுதவா?" என்றாள் மோகனா.

"என்ன எழுதப்போறே?"

"நாங்கள் வருவதாகத்தான் இருந்தோம். சீமைக்குப் போக ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்ததனால் வர இயலவில்லை என்று எழுதுகிறேனே."

"ஆமா, அதோடு எங்க சண்முகம் கூட வருவதனால் நான் வர முடியவில்லை என்று எழுது. என்னமோ எழுதறானாம் பதில். சரி, நீங்க தேதி வச்சு எழுதுவீங்கனு பார்த்தோம்; காயிதம் வரல்லே! நாங்க சீமைக்குப் புறப்பட்டுட்டம்னு நானே எழுதிப் போட்டுடறேன்." என்று முடித்தாள் வடிவாம்பாள்.

வடிவாம்பாளின் போராட்டம் பெரிது. அவளுக்குக் கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை. சண்முகம் தனக்கு அடங்கிக் கூடவே வருவான், தன் மகளுக்குப் பக்க வாத்தியக்காரன்போல் இருப்பான் என்று அவள் எதிர்பார்த்தாள். ஆனால், அந்தப் புலிக்குட்டி பயப்பட வில்லை. அதற்காக வர முடியாதென்று இருந்துவிடவும் இல்லை. வர ஒப்புக்கொண்டுவிட்டான்.

அதற்குக் காரணம் அவனுக்குத் தன் மகள் மேல் உள்ள பிரியம் தான் என்பதும் அவளுக்குத் தெரிந்தது. அதே சமயத்தில் அவன் தகுந்த மாப்பிள்ளை அல்ல என்பதையும் அவள் கண்டாள். இந்நிலையில் ஆறு மாதம் அவர்கள் இருவரையும் எப்படிச் சேரவிடாமல் தடுப்பது என்ற சிந்தனையில் இறங்கி ஒரு முடிவுக்கும் வந்தாள். உடனே நட்டுவனாரை அழைத்தாள்.

"முத்துக்குமரு, உன் சிஷ்யப் பொண்ணே கூட்டிக்கிட்டுக் கடைக்குப் போயிட்டு வா. அங்கே போறதுன்னா ஏதோ கம்பளிச் சட்டையெல்லாம் வேணுமாம். அதுகளுக்கெல்லாம் அளவு பாத்துத் தைச்சுக்கிட்டு வா. உடுப்புக்குன்னு மூவாயிரம் ரூபாய் கொடுத்து இருக்காங்க. மூவாயிரத்தையும் செலவழிக்காமே ஏதோ வேணுங்கறதைப் பார்த்து வாங்கிக்கிட்டு வாங்க" என்றாள்.

"எனக்கு ஒண்ணும் வேண்டாம். நீங்களும் வந்தா கடைக்குப் போவேன். இல்லாட்டி, வேண்டாம்" என்றாள் மோகனா.

வடிவாம்பாளுக்குத் தன் மகளை எப்படி அடக்குவது என்று தெரியும். அவளும் கோபித்துக்கொள்வது போல் கோபித்துக் கொண்டு கூடவே புறப்பட்டாள். அழகான கம்பளிக் கோட்டு



ஒன்றைப் போட்டு, தன் மகளைச் சேட்டு ஜவுளிக் கடை கண்ணாடியில் பார்த்தவுடனே, அப்படியே கட்டி முத்தம் இட்டுக்கொள்ள வேண்டும் என்று தோன்றியது அவளுக்கு. மோகனாவின் அழகைப் பார்த்த வாதன், ஆஹா, சண்முகம் அம்மாவா இதைப் பார்க்க வேண்டும் என்று எண்ணினான். கூட வந்திருந்த லேடி கனகாம்பரம் அம்மையார், அவர்களுக்கு வேண்டிய கை உறைகள், மேக்கப் சாமான்கள் முதற்கொண்டு கடையில் வாங்கித் தந்தாள்.

## எண்பத்து இரண்டாம் அத்தியாயம்

## மங்கையர் மாண்பே! மரகதமே!



தெரு வழியே பத்துப் பேரைக் கைது செய்துகொண்டு போனார்கள் என்று சொன்னால், அக்காலத்தில் ஊர் முழுவதும் அதே பேச்சாக இருக்கும். திருடன் எப்படி இருக்கிறான், பார்க்க வேண்டும் என்று பலர் துடிப்பார்கள். அவனும் மனிதன்தான் என்ற எண்ணம் வருவது இல்லை. திருடன் என்று சொன்னாலே, தலை பரட்டையாக இருக்கும். ஆள் கறுப்பாக இருப்பான், இடுப்பிலே கத்தி வைத்திருப்பான், கண் சிவந்திருக்கும் என்றெல்லாம் தீர்மானித்துக்கொள்வார்கள். திருட்டு சகஜமாக இல்லாத காலம் அது. சமூகம் செய்த கொடுமையினால்தான் மனிதன் திருடனாக மாறுகின்றான் என்று தத்துவம் பேசி, திருட்டுக்கும் புரட்டுக்கும் வக்காலத்து வாங்குபவர்கள் அதிகம் இல்லாத காலம். அப்போது இருந்த மக்கள் எல்லோரும் அறியாமையால் திருட்டு ஒரு குற்றந்தான் என்று எண்ணி வந்தார்கள்.

திருவாரூர் தெரு ஒன்றில் சிலரை விலங்கிட்டு அழைத்துப்போன செய்தி காட்டுத்தீ போல் எங்கும் பரவிவிட்டது. உடன் அதிராம்பட்டினம் திருட்டைப்பற்றியும் ஜனங்கள் அறிந்தார்கள்.

பலர் வடிவாம்பாள் வீட்டைத் தேடிவந்தார்கள். அவர்களுள் ஒருவர் ஸ்ரீமான் கடம்பவனம் பிள்ளை. அவர் வடிவாம்பாள் வீட்டுக்குள் நுழைந்தவுடன், "என்ன வடிவாம்பாள், இந்த வைத்திப் பய ஏதோ கைவரிசையைக் காட்டிவிட்டானாமே?" என்றுதான் முதலில் கேள்வியைக் கேட்டார். பதில் சொல்ல ஆள் இல்லை. அவர்கள் சென்னைக்குப் போயிருப்பதாக வீட்டுக்காரி சொல்லவே, கடம்பவனம் பிள்ளை ஊருக்குப் போய்ச் சேர்ந்தார்.

அன்று சிங்கபுரத்தில் கடம்பவனம் பிள்ளை வெகு உற்சாகமாகக் காணப்பட்டார். சாதாரணமாகவே அவர் ஒரு கடபுடா. இந்தச் செய்தி வேறு கிடைத்துவிட்டால் கேட்கவா வேண்டும்?

"மரகதம், மரகதம், சேதி தெரியுமா? அடிச்சு நொறுக்கிப் பிட்டாங்க—"

"யாரை அப்பா? யாரை?" என்று ஓடிவந்தாள் மரகதம்.

"இது என்ன கேள்வி? யாரை அடிக்கணுமோ அவங்களைத்தான். அதிராம்பட்டினம் காட்டிலே மடக்கிக்கிட்டுக் கொன்னுட்டாங்க கொன்னு. எனக்குத் துரோகம் நினைச்சா——"

மரகதம் நடுங்கினாள். தன் தகப்பனாருக்கும் கணவனுக்கும் உறவு சரியில்லை என்ற எண்ணம் வந்தது.

"யாரை அப்பா? உங்க மாப்பிள்ளைக்கு ஏதாவது...?"

"என் மாப்பிள்ளைக்கு இல்லே. என் மாப்பிள்ளையை இன்னொருத்தி தன் வாயாலே மாப்பிள்ளைன்னு கூப்பிட நினைச்சாளில்லே, அவளுடைய பொண்ணுக்கு."

"யாருக்கப்பா? மோகனாவுக்கா?"

"ஆமாம்."

அதைக் கேட்ட மரகதம் வெலவெலவென்று நடுங்கினாள்.

"என்னத்துக்கப்பா? என்னப்பா? எப்படி இருக்கப்பா உடம்பு?"

"எப்படியிருக்குது என்ன? அந்தப் பய சுத்திக் குத்துப்பட்டுப் பட்டினம் போனான். இவ கயவாளிகள் கையிலே அடிபட்டுப் பட்டணம் போயிருக்கா. திருவாரூர் போயிருந்தேன் அங்கே, அதிராம்பட்டினத்துக் காட்டிலே அடிப்பட்டாங்கன்னு சொன்னாங்க. அப்புறம் எனக்குப் பாக்கணும்னு ஆசையாயிருந்தது."

"ஏம்பா, ஆசையாயிருந்தா பாத்துட்டு வரதுதானே! எனக்குக் கூட பாக்கணும்னு ஆசையா இருக்குது அப்பா."

"அதுக்கு என்ன பண்றது? இந்தத் தடவைதான் நமக்குப் பாக்கக் கொடுத்துவைக்கலே. இன்னொரு தடவை நாமே நாலு ஆளை விட்டு அடிக்கச் சொல்லிப் பாத்துடலாம்" என்று அற்புதமாகத் தம் முகத்தில் ஆனந்தம் ததும்பக் கூறினார், ஸ்ரீமான் கடம்பவனம் பிள்ளை.

"நீங்க எதுக்கப்பா திருவாரூர் போனீங்க?"

"அங்கே ஒரு பிரண்டைப் பார்க்கப் போனேன்."

"யாரப்பா பிரண்டு?"

"அதான், நம்ப வைத்தி இருக்கான்லே..."

"வைத்தியா?" என்றாள் மரகதம்.

அவள் முகத்தில் கலவரமான குறி தோன்றியது. ஆனால் கடம்பவனம் பிள்ளையோ, "ஆமாம் அம்மா. வைத்திதான். ஒரு ஐம்பது ரூபாய் தாணும். அதைக் கேக்கிறதுக்காகப் போனேன்.



அவனும் பட்டணம் போய்விட்டானாம். இல்லாட்டா நான் ஏன் போறேன்? எனக்கும் அவனுக்கும் என்ன இருக்குது? எங்கே இந்தப் பயலை. வண்டி மாட்டைக் கட்டச் சொன்னேனே. பருத்திக் கொட்டை வைக்காமே போய்விட்டான்!" என்று சொல்லிக் கொண்டே பேச்சை மாற்றினார் கடம்பவனம்.

மோகனா அடிபட்டாள் என்பதைக் கேட்டது முதலே மரகதத்திற்கு என்னவோ போல் இருந்தது. அவள் மனம் நிலை கொள்ளவில்லை.

"எதுக்கப்பா மோகனாவை அடித்தார்கள்?"

"ஆமாம், பின்னே அடிக்காமே என்ன செய்வாங்க? எந்தக் குடும்பத்தைக் கெடுத்தாளோ? எவன் ஆத்திரம் வச்சிருந்தானோ?"

"போங்கப்பா, உங்களுக்கு மூளை கிடையாது. அது ஒரு குடும்பத்தையும் கெடுக்காது."

"ஏன் கெடுக்காது? ஏது, உன் புருஷன் புத்தி உனக்கும் வந்திடுத்து! அவளுக்கு வக்காலத்து வாங்கிக்கிட்டுப் பேசறே!"

"அப்பா அவளை ஒண்ணும் சொல்லாதீங்க. அவளு தங்கம்!"

"தங்கம் இல்லே, தங்க நாயனத்தைப் பிரசண்ட் பண்ணினான் இல்லே, தங்கம் நாயனம்! இதோ பாரு, நீ என் பொண்ணுதான் சொன்னா வெக்கம் இல்லே. இம்மாதிரிக் காரியங்களில் நான் இறங்க மாட்டேன். இறங்கினேன்னா கடைசிவரையில் விடமாட்டேன். இவன் பணத்தைச் செலவழிச்சப்பிட்டு அந்த நாயனக்காரனுக்கு வைத்தியம் பாத்தானில்லே..."

"என்னப்பா தப்பு அதிலே?"

"தப்பு இல்லேம்மா, நாளைக்கு ஊர் என்ன சொல்லும்?"

"நல்லவர்னு சொல்லமாட்டாங்களாப்பா?"

"நல்லவனோ கெட்டவனோ, இறங்கப்படாது. இறங்கினா விடப்படாது."

அப்பொழுது சிங்கபுரம் மைனர், ஆபீஸ் ரூமை விட்டு வெளியே வந்தார். அதைப் பார்த்த கடம்பவனம் வாயை அடக்கிக்கொண்டார்.

அப்போது மைனர், கையில் ஒரு கவருடன் அவளை நோக்கி வந்தார்.

அவரைப் பார்த்ததும் மரகதம், "அத்தான், செய்தி கேட்டீங்களா?" என்றாள்.

"என்ன மரகதம்?"

"மோகனாவுக்கு அடிபட்டுடுத்தாம்."

"என்ன, மோகனாவுக்கு அடிபட்டுடுத்தா? எங்கே? என்ன?"

"இல்லே அத்தான், அதிராம்பட்டணம் பாதையிலே, திருடன்கள் அடிச்சுட்டாங்களாம்."

மைனர் சிரித்தார். அவருடைய மனம் சீமைக்குப் போகும் மோகனாவைப் பார்க்க வேண்டுமென்று எண்ணியது. ஆனால், தம் மனைவியிடம் அதை எப்படிச் சொல்வது என்று கலங்கினார். அவர் நிற்பதைப் பார்த்தாள் மரகதம்.

"அத்தான், நம்ப திருவாரூருக்குப் போயிட்டு வரலாமா?"

"ஏன் மரகதம், கோவிலுக்குப் போகணுமா?"

"ஆமா, விளக்கு எற்றிவைக்கணும். என் வாழ்வைக் காப்பாத்தியது அந்த மோகனா, அவளுக்கு அடிபட்டிருக்குன்னு கேள்விப்பட்டதும் எனக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்குது அத்தான்."

"சரி, நீ போய்ப் பாத்துவிட்டு வாயேன்."

"இல்லே அத்தான், நீங்களும் வாங்க."

"என்னை மறுபடியும் அங்கே வரச் சொல்கிறாயா? நான் அங்கே போனால் உனக்குச் சந்தோஷமா இருக்குமா?"

"அக்கா வீட்டுக்குத் தங்கச்சி போறது இல்லியா, அந்த மாதிரி தான் அத்தான். நீங்க எந்தக் காலத்திலும் தப்பு செய்யமாட்டீங்க. நான் அப்பவே அப்பாகிட்டே சொல்லியிருக்கேன். வாங்க, போய்ப் பார்த்துட்டு வருவோம்."

மைனருக்கு மரகதம் சொல்லும் ஒவ்வொரு சொல்லும் அமிர்தம் போல் தோன்றியது. அவளை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும் என்று எண்ணினார்.

"சரி ! வண்டியைக் கட்டச்சொல்லு. திருவாரூருக்குப் போய் அப்படியே மதராசுக்குப் போவோம். மோகனாவுக்கு அடிபடல்லே! அவளும் சண்முகமும் சீமைக்குப் போறாங்க. கிட்டாவய்யா அவுங்களை வழியனுப்ப ஒரு விருந்து வைத்திருக்கிறார். இதோ பார், அழைப்பு !" என்றார் மைனர்.

பட்டணத்துக்குக் கூட்டிப்போகப் போகிறார் என்றவுடனே மரகதத்திற்கு ஆனந்தம். அதிலும் மோகனா சீமைக்குப் போகும் செய்தி அவளை மேலும் சந்தோஷத்திற்கு ஆளாக்கியது. ஏதோ யோசித்தாள். தயங்கியபடி அவர் அருகில் வந்து நின்றாள். "அத்தான், அந்த இரும்புப் பெட்டிச் சாவியைக் கொடுங்க" என்றாள்.

"ஏன்?"

"பார்க்கப் போறப்போ வெறும் கையோடு போகக்கூடாது !"

"அதான் கையிலே வளைகள் எல்லாம் போட்டுக்கிட்டிருக்கியே !"

"சாவியைக் கொடுங்களேன்."

"என்ன எடுக்கப் போறே?"

"கோவிச்சுக்காதிங்க..."

"உன்னை நான் ஏன் கோபிக்கறேன்?"

"ஒரு விசயம். உங்களுக்குத் தெரியாது. சொல்லப் பயந்துக்கிட்டு இருந்தேன்."



"எதற்குப் பயம்? என்னிடம் என்ன வேண்டுமானாலும் சொல்லலாமே ! என் குற்றத்தையெல்லாம் மன்னித்தவள் ஆயிற்றே !"

"நீங்க என்ன அத்தான் குற்றம் பண்ணினீங்க? அப்பாவும் நானும் அன்னிக்குத் திருவாரூரிலே நாட்டியம் நடக்கிறபோது, உங்க கண்ணிலே படாமே பாத்துக்கிட்டிருந்தோம். அந்தப் பொண்ணு சண்முகம் கிட்ட போயி, 'என் மேலே குற்றம் இல்லேன்னு சொல்லுங்க' அப்படின்னு கேக்கிறபோது, நான் அழுதுட்டேன் அத்தான். ஆனால் நீங்க அப்போ நடந்துக்கிட்டீங்க பாருங்க, அந்தச் சண்முகசுந்தரத்துக்கிட்டே போய்ப் பேசினீங்க பாருங்க, அது ஒண்ணுக்கே, நான் உங்களை ஆயிரம் தடவை மாலை இடணும் அத்தான் ! எங்க அத்தானுடைய நல்ல குணத்தை அத்தை இருந்து பார்க்கவில்லையேன்னு நினைச்சேன்."

"மரகதம், என்னை ரொம்பப் புகழாதே. அந்த மோகனாவுக்கும் சண்முகத்துக்கும் சீமைக்குப் போய் வந்ததும் கல்யாணம் செஞ்சு வச்சாத்தான் என் மனசு ஆறும். நீ எதுக்குச் சாவியைக் கேட்டே..."

"என்னை மன்னித்தேன்னு சொல்லுங்க !"

"குற்றம் தெரியாமே எப்படிச் சொல்வது?"

"எங்க அப்பாவை மன்னிக்கிறேன்னு சொல்லுங்க."

"சரி, உன்னை மன்னிக்கிறேன், உங்கப்பாவை மன்னிக்கிறேன், உங்க தாத்தாவையும் மன்னிக்கிறேன். விஷயத்தைச் சொல்லு."

"சாவியைக் கொடுங்க."

மைனர் இடுப்பிலிருந்து சாவியை எடுத்துக் கொடுத்தார். மரகதம் ஓடிப்போய் பெட்டகத்தைத் திறந்தாள். அதிலிருந்து ஒரு சதுரமான பெட்டியை எடுத்துக்கொண்டு வந்தாள். "இதோ பாருங்க" என்று அதை மைனர் கையில் கொடுத்தாள்.

மைனர், பெட்டியைத் திறந்தார். மோகனாவின் வீட்டிலிருந்து களவு போன வைர அட்டிகை அதற்குள் இருந்து அவரைப் பார்த்துச் சிரித்தது. அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. மனைவியின் முகத்தைப் பார்த்தார். அவள் மூசுமூசுவென்று அழுதுகொண்டிருந்தாள்.

"இது எப்படி இங்கே வந்தது?" என்றார் மைனர்.

"எங்க அப்பா, நீங்க நாகபட்டணம் போன அன்னிக்குப் பெட்டியைத் திறந்து பார்த்தாங்க. இது இல்லே. ஆளை விட்டு மோகனா வீட்டிலே இருந்து திருடிக்கிட்டு வரச்சொன்னாங்க. எங்க அப்பாவை மன்னிச்சுடுங்க" என்று மரகதம் அவர் காலில் விழுந்து கெஞ்சினாள். மைனருக்கு மாமனார்மேல் தாங்க முடியாத கோபம் உண்டாயிற்று. தானம் கொடுத்த ஒரு பொருளை, அவர் திருடிக் கொண்டு வந்தார். அந்தப் பொருள் தம் வீட்டிலேயே இருந்தது என்பதை எண்ணி எண்ணிக் குன்றினார். மனத்தை ஒருவாறு சமாதானப்படுத்திக்கொண்டார்.

"இதை எதுக்கு என்கிட்டே காண்பிக்கறே?"

"இதை அவளுக்கே கொடுத்திடணும் அத்தான். எங்கப்பா இதைக் கொண்டாந்து கொடுத்தது முதல், நான் இதைக் கழுத்திலே போட்டுக்கவே இல்லை. பாவம், அவர் பொண்ணுக்குச் செய்த நகை தாசி போட்டுக்கிறதா என்று ஆத்திரத்திலே திருடிவரச் சொல்லிட்டாரு. ஆனா, நான் அதைத் தொடவே இல்லை. என்னை மன்னிச்சுடுங்க!" என்று அவர் பாதத்தில் விழுந்தாள் மரகதம்.

கீழே கிடந்த மரகதத்தை மைனர் வாரித் தூக்கினார். அப்படியே அணைத்துக்கொண்டார். அவர்கள் வண்டி திருவாரூர் ஸ்டேஷனை நோக்கிப் புறப்பட்டது.

## எண்பத்து மூன்றாம் அத்தியாயம்

# பரிசும் பாராட்டும்



'இன்று மட்டும் ஏன் இவ்வளவு அழகாயிருக்கிறாள். பெற்று வளர்த்து இத்தனை வருஷங்கள் ஆகியும் நான் இந்த அழகைக் கண்டதில்லேயே! ஆஹா, புஷ்பமே அழகுதான். அவ்வளவு சீக்கிரம் வாடிவிடும் பொருளாக இருப்பதால்தான், அதற்கு இறைவன் அத்தனை அழகைக் கொடுத்தானோ? உம். இந்தப் பூமாலையைக் கட்டிக் கடையில் தொங்கவிட்டிருந்தாலே அழகாய் இருக்கிறது. சுவரில் மாட்டினால்கூட சுவருக்கே ஒரு அழகைக் கொடுக்கிறது. அதிலும் போடுகிறவர் கழுத்தில் மாலையைப் போட்டால் அதைவிட அழகாயிருக்கிறது. என் மகளுக்கு என்ன? ஏற்கெனவே அழகி. அதிலும் பருவம். அதிலும் கலைப்பொக்கிஷம் அவள் கழுத்தில் மாலை கிடந்தால் தனி அழகுதான். ஆனால் இன்று அதைக்காட்டிலும் அழகாக இருக்கிறதே. அது ஏன்? அந்தச் சண்முகம் அருகில் இருப்பதனாலா? அல்லது அவன், அவள் இருவரும் கழுத்தில் மாலையுடன் ஒருவர் பக்கத்தில் ஒருவர் அமர்ந்திருப்பதனாலா? ஆஹா! பார்த்தால் கலியாணப் பெண்ணும் மாப்பிள்ளையும் போல அல்லவா இருக்கிறது. ஆமா, அப்படித்தான் இருக்கு! ஐயோ இந்தச் சண்முகம் மட்டும் பணக்காரப் பையனாக இருந்தால் இவனுக்கே கொடுத்திருப்பேனே!" என்று நினைத்தவண்ணம் டீ பார்ட்டிக்காகக் கழுத்தில் மாலையுடன் உட்கார்ந்திருக்கும் சண்முகத்தையும் தன் மகளையும் பார்த்துப் பார்த்து மயங்கினாள் வடிவாம்பாள்.



இன்னொரு ஆத்மாவும் இதே சிந்தனையில் இருந்தது. இருவரும் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து 'ஆஹா! நாற்காலியைத் தள்ளிப் போட்டுவிட்டார்களே. எனக்குத் தெரிந்தால் நெருக்கியாவது போட்டிருப்பேனே!' என்று நினைத்தான், வரதன். "அம்மா பாத்தீங்களா, எவ்வளவு அழகா இருக்கு பாருங்க" என்றான் வடிவாம்பாளிடம்.

"ஆமா, அழகாகத்தானிருக்கும் பொண்ணுக்குப் பூ அழகில்லாமல் இருக்குமா? அந்தச் சண்முகம் குடுமியும் தலையும்தான் சகிக்கலே" என்றாள் வடிவாம்பாள். வரதன் "அடி அம்மா, உனக்கு இல்லையா?" என்று நினைத்தான்.

ஆனால் பார்ட்டியில் உட்கார்ந்திருந்த மோகனா, சண்முகம் இருவரும் அருகில் இருந்தும் தள்ளி இருந்தார்கள். அன்பால் பிணைக்கப்பட்டிருந்தும், அம்மாவால் பிரிக்கப்பட்டிருந்தார்கள். இருவர் கண்களும் அடிக்கடி சந்தித்தன. புன்முறுவலும் வந்தது. ஒருவர் அழகை ஒருவர் ரசித்தார்கள். இருந்தும் வாய் பேசா மௌனியாக அமர்ந்திருந்தார்கள். ஆனால், சண்முகம் மெல்ல வம்புக்கு இழுத்தான்.

'நடேசண்ணே, இன்னொரு மாலை இல்லையா? இருந்தா அத்தைக்குப் போடுங்க. அவங்க சிபார்சு இல்லாட்டி மகாராஜா என்னை எங்கே கூப்பிடறது' என்றான்.

இதைப் புரிந்துகொண்ட வடிவாம்பாளோ, "அய்யோ, எனக்கு எதுக்கு? அந்த வாடையே எனக்கு உதவாது. சலதோஷம் பிடிச்சிக்கும். நான் என்ன ஆடப்போறேனா, ஊதப்போறேனா?" என்றாள். எல்லோரும் சிரித்தனர்.

அக்காலத்தில் ஆறாயிரம் மைல் கடந்து சீமைக்கு ஒருவர் போவது என்றால் அது சாதாரண விஷயம் அல்ல. அதிலும் தமிழ் நாட்டில் சிறந்த நாதஸ்வரக் கலைஞர் சண்முகசுந்தரம், நாட்டியக் கலையரசி மோகனா இருவரும் சீமைக்குப் போகிறார்கள் என்பதைக் கேட்டவுடனே, அவர்களை வழி அனுப்பும் விழாவுக்கு ஏராளமான கூட்டம் கூடியிருந்தது. சென்னையிலே உள்ள ஒரு பெரிய ஹோட்டல் தோட்டத்திலே வழியனுப்புக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள் வக்கீல் கிட்டாவய்யரும். நகரத்திலுள்ள பல பிரமுகர்களும் அங்கு விஜயம் செய்திருந்தார்கள். ஸ்ரீ மதன்பூர் மகாராஜா ஊட்டிக்குச் சென்றுவிட்டபடியால், அந்தக் கூட்டத்துக்கு அவர் வரவில்லை.

சில அதிகாரிகளை ஊரை விட்டு ஊர் மாற்றுவார்கள். உடனே அவர்களுக்குக் கீழ் வேலை பார்த்தவர்கள் ஆளுக்கு ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் வசூலித்து, பார்ட்டி வைத்து அனுப்புவார்கள். அடாடா, அன்றைக்கு அந்தக் கீழ் அதிகாரிகளின் சந்தோஷத்தைப் பார்க்க வேண்டுமே! மேல் அதிகாரியும், 'இவர்கள் எதற்காகத் தேரீ

விருந்து வைத்திருக்கிறார்கள்? நாம் அடுத்த ஊரிலாவது போய் அன்போடு நடக்க வேண்டும் என்று இதன் மூலம் கூறுகிறார்களா?' என்று நினைப்பார். இருந்தாலும் அதை வெளிக்காட்டாமல், ஒரு பிரசங்கத்தை அடித்துவிட்டு ஊருக்குச் செல்லுவார். ஆனால் கலைஞர்களுக்கு வைக்கும் விருந்து அப்படியல்ல, இது ஊருக்குப் பெருமை. அதனால் ஒவ்வொருவரும் அன்புடன் ஈடுபடுவார்கள் இந்த விருந்தை ஸ்ரீமான் பொன்னம்பலத்தா பிள்ளை அவர்களே நேரில் இருந்து நடத்தினார்.

விருந்துக்குச் சென்னையிலே உள்ள பெரும் பெரும் வித்வான்களும் ரஸிகர்களும் வந்திருந்தார்கள். அவர்களிடையே ஒருவர், சண்முகம் மோகனா இருவரையும் அருகில் வைத்து, அழகான மாலை போட்டு அலங்கரித்துக் கண்குளிரப் பார்த்தார். மைனர் காரைக்கால் நடேசன் தம் சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொண்டார். "நான் நடத்திப் பார்க்க நினைத்த விருந்து வேறு, ஆனால், அதற்கும் என்றைக்கேனும் ஒரு காலம் வரும். அன்று கலை அன்பர்கள் ஒன்றுகூடி வாழ்த்துவார்கள்" என்று அவர் கூறியபோது மோகனா சண்முகம் இருவரின் கண்களும் சந்தித்தன.

"ஸ்ரீசண்முகம் அவர்களுக்குத் திருவாரூரில் நான் சன்மானம் பண்ண நினைத்த இந்தத் தங்க நாயனத்தை, அன்று அங்கு கொடுக்க முடியவில்லை. இன்றைக்கு அந்த நாதஸ்வரத்தைப் பரிசு அளிக்கிறேன். அவர் சீமைக்குச் செல்லுகிறார். அங்கே வைரம் பதித்த தங்கச் செங்கோலுக்கு முன், இந்தத் தமிழ்நாட்டின் கலைச்செங்கோல் ஒலிக்கட்டும். இன்னொரு வார்த்தை. என் மனைவி மரகதம், ஸ்ரீமதி மோகனாம்பாளுக்கு ஏதோ பரிசு கொண்டுவந்து இருக்கிறாள். அதைப் பார்த்து அவர்கள் மலைத்துவிடக்கூடாது. 'வேண்டும், வேண்டாம், ஏன், ஏது,' என்று ஒன்றும் கேட்கக்கூடாது. ஒரு சகோதரி இன்னொரு சகோதரிக்கு அளிக்கும் அன்பாக அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். கொடு மரகதம், உன் கையாலேயே கொடு" என்றார் மைனர்.

மரகதம் வந்து நின்றாள். அவளுக்கு வெட்கம், தலை நிமிரவே முடியவில்லை. கையில் இருந்த வைர அட்டிகைப் பெட்டியைத் திறந்தாள். அட்டிகையைக் கையில் எடுத்தாள். "அக்கா, இந்தா" என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டு, முத்து முத்தாய் ஆனந்தக் கண்ணீர் விட்டாள். மோகனாவும், வடிவாம்பாளும் பெட்டியைப் பார்த்த வுடனே திகைத்தார்கள். மரகதம் அதைக் கவனித்தாள்.

"மோகனா, திகைக்காதே. இது உனக்குத்தான். எனக்கு நீ செஞ்சிருக்கிற உபகாரத்துக்குச் சன்மானம் கொடுத்தால் போதாது. இதை எப்போவும் நீங்க கழுத்திலே போட்டுக்கிட்டு இருக்கணும்னு சொல்லறேன்" என்று சொல்லி, வைர அட்டிகையை மோகனாவின் அருகில் கொண்டுவந்தாள். திருட்டுப்போன நகை இவள் கையில்



எப்படி வந்தது என்று யோசித்தாள் வடிவாம்பாள். இந்தச் சமயத்தில் மரகதத்தின் கையிலிருந்த வைர அட்டிகையைத் திடீர் என்று ஒரு கை பறித்தது. மரகதம் சரேல் என்று திரும்பினாள்.

"இல்லே சும்மா பாத்துட்டுக் கொடுத்துடறேன்" என்றார் அதைப் பறித்தவர்.

'யாரு ஐயா நீ?' என்றார் மைனர்.

"இல்லிங்க, சும்மா பாத்தேன், இந்தாங்க" என்று அந்தப் பார்த்த மனிதர் மரியாதையுடன் திருப்பிக் கொடுத்தார். வடிவாம்பாள் அந்த ஆளையே கூர்ந்து நோக்கினாள். அதற்குள் வைத்தி அருகில் ஓடி வந்தார். "ஏய், யார் நீ? யார் பர்மிஷன் கேட்டு உள்ளே வந்தே?" என்று கோபமாய்க் கேட்டார். ஆனால் வடிவாம்பாளுக்கு அந்த ஆளை எங்கேயோ பார்த்திருப்பது போல் தோன்றியது. "வரதா, இங்கே வா. இவரு யாரு?" என்று தனியாகக் கேட்டாள்.

"அந்தப் பியாண்டுக்கார பங்காரு நாயக்கர் மாதிரி இருக்குது" என்றான் வரதன்.

"கன்னையா நாயுடுவை அங்கே பார்த்ததும் வடிவாம்பாள், மோகனா இருவருமே திடுக்கிட்டார்கள். ஆனால் கன்னையா நாயுடுவோ, "பயப்படாதீங்கம்மா. இன்னிக்கு நான் பழைய ஹெட் கான்ஸ்டேபிள் கன்னையா நாயுடு அல்ல. நான் வேலையை விட்டே ரிடையராகப் போறேன். சும்மா உங்களுக்கு ஏதோ டீ பார்ட்டி கொடுக்கிறாங்களே, அதைப் பார்க்கலாம்னுதான் வந்தேன்" என்றார்.

தேநீர் விருந்து முடிந்தது. எல்லோரும் ஏராளமான சன்மானங்களை அளித்தனர். கிட்டாவய்யர், தம் பணத்திற்குப் பதிலாகச் சண்முகத்துக்கு அழகான சங்கிலியும், அதன் நடுவே ஒரு வைரப் பதக்கமும் அளித்தார். காரைக்கால் நடேசன் சண்முகத்தின் குணம் தெரிந்தவர். ஆதலால், கைச்செலவுக்கு இருக்கட்டும் என்று ஒரு பெருந்தொகையை அவனிடம் வற்புறுத்திக் கொடுத்தார். மைனரும் அவ்விதமே செய்தார். அந்தச் சமயம், வடிவாம்பாள் கன்னையா நாயுடுவைக் குசலம் விசாரித்தார்.

"அன்னிக்கு நீங்க வரலேன்னா குழந்தை பாடு ஆபத்தாதான் முடிஞ்சு இருக்கும்."

"இப்ப உங்களைக் காப்பாத்தினது எனக்கு ஆபத்தா முடிஞ்சுது அம்மா."

"என்னையா ஆபத்து?" என்றார் வைத்தி.

"போங்க சார். நீங்கதான் ஏதோ எழுதிட்டீங்க போலிருக்கு கவர்ன்மெண்டுக்கு. ஐ. ஜி. கிட்டே இருந்து உத்தரவு வந்தது. என்னடான்னு மெட்ராசுக்கு வந்தா, "உன்னை ரிடையர் பண்ணியிருக்கிறோம், போ"ன்னு சொல்லிட்டாங்க. ரொம்பக் கெஞ்சி அவங்ககிட்டே காலிலே விழுந்து, நானா ரிடையர் ஆகிவிடுகிறேன்

அதுக்கு முன்னே ஆறு மாசம் லீவு கொடுங்கன்னு கேட்டு வாங்கிட்டிருக்கேன்" என்றார் கன்னையா நாயுடு.

"என்ன சார், லீவு சம்பளம் உண்டா இல்லையா?" என்றார் வைத்தி.

"உண்டுங்க."

"இது எல்லாம் பப்ளிக் மணிதானே? அதுக்குத்தான் நான் இண்டிபென்டென்ஸ் வரணும்னு சொல்லறேன்."

"வாட்டுங்க உங்களைப் போல உள்ளவங்களுக்கு இண்டிபெண்டென்ஸ் வந்தாலும் ஒன்னுதான். வராவிட்டாலும் ஒன்னுதான். எப்பவும் நீங்க சௌக்கியமா இருப்பீங்க."

"சரி, இனிமே என்ன பண்ணறதாக உத்தேசம்?"

"இனிமே என்ன செய்யறதுங்க. கப்பலிலே பியாண்டு வாசிக்க வேண்டியதுதான்."

"எப்பா, நீ வேஷந்தானே போடுவே. உனக்கு ஊதத் தெரியாதே."

"அதுக்குத்தாங்க இப்போ நல்ல காலம் நாலுந்தான் ஓடியாடி அந்தத் திருட்டுப் பசங்ககிட்டே மல்லுக்கு நின்னுபிடிச்சேன். டிபார்ட்மெண்டிலே என் சர்வீஸை மதிக்கலே, வீட்டுக்குப் போடான்னு சொல்லத் தயாராக இருந்தாங்க. சரிங்க, நான் வரேனுங்க" என்று சொல்லிவிட்டு, கன்னையா நாயுடு புறப்பட்டார்.

அதற்குள் வைத்தி அவரைக் கூப்பிட்டார்.

"என்னய்யா, நிசமா பேசறியா அல்லது பொய்யா?"

"இதோ பாருங்க ஆர்டரை!" என்று ஆர்டரை எடுத்துக் காட்டினார் கன்னையா நாயுடு. ஆமாம், அதிலே அவருக்கு ஆறு மாசம் லீவு கொடுக்கப்பட்டிருந்தது.

"சரி, அப்போ இனிமேயாவது கெட்டிக்காரத்தனமா பிழை" என்றார் வைத்தி.

"உத்தரவுங்க. ஆனா உங்க கெட்டிக்காரத்தனம் நமக்கு வருமா?" என்று சொல்லிவிட்டுச் சென்றார் கன்னையா நாயுடு. ஆனால், போகும் போது வைத்தியை அவர் பார்த்த பார்வை மட்டும் அவ்வளவு சரியாக இல்லை.

எண்பத்து நான்காம் அத்தியாயம்

# கடமை பெரிதெனக் கண்டார்



அடிக்க அடிக்கப் பந்து எழுகின்றது. அடக்க அடக்க அன்பு வளருகின்றது. அணை கட்டக் கட்ட ஆறு சீறிப் பாய்கின்றது. இவற்றைப் போல விரட்ட விரட்ட ஓடினான் நாகலிங்கம். ஓட ஓடப் பிடிக்க முயன்றார் எட்டையா. அவருக்கு முன் எத்தனையோ எட்டையாக்கள் அந்த 'அவுட்போஸ்டி'ல் இருந்திருக்கிறார்கள். பாவம், இப்பொழுது அவர்களுக்கெல்லாம் போஸ்டல் அட்ரஸ் அவுட்டு. அத்தனை கொடுமை அங்கு நடந்திருக்கிறது. அந்தப் போலீஸ் உத்தியோகத்திற்கே விட்டுக் கட்டத் தெரியவேண்டும். பூனை பதுங்கியிருந்து எலிமேல் பாய்வது போல, போலீஸ்காரர்களும் முதலில் தம்மைப் பாதுகாத்துக்கொண்டு குற்றவாளிகளின் மேல் பாயவேண்டும். இதில் கன்னையா நாயுடு பழம் புலி. அவருடைய ஆசையெல்லாம், தாம் ரிடையர் ஆவதற்கு முன் ஒரு முறையாவது போலீஸ் இன்ஸ்பெக்டர் உத்தியோகத்தை எட்டிப் பிடித்துவிட வேண்டும். பரம்பரையாக வரும் 'எட்டையா வீடு' என்ற பெயர் மாறி 'இன்ஸ்பெக்டரையா வீடு' என்று ஆகிவிடவேண்டும் என்பதுதான்.

அவர் முதலில் ஊரைத் தமது பண்ணிக்கொள்வார். பிறகு திருடர்களுள் பெரும்புள்ளிகளைத் தாஜா பண்ணிக்கொள்ளுவார். அவரைப் பார்த்தால், திருடனுக்குக்கூடச் சிரிப்பு வரும். பட்டை நாமமும், பன்னிரண்டு திருமண்ணும், ஏகாதசி விரதமும் பஜனைக் கோஷ்டிக்குப் போய் ஆர்மோனியத்தை வைத்துக்கொண்டு பாடுவதும், யாரைக் கண்டாலும் கும்பிடு போடுவதும், அதிகாரிகள் வந்துவிட்டால் வெடவெடவென்று ஆடுவதும் பிறர் நகைக்க இடமாக இருக்கும்.

ஆனால், இது ஒன்று மட்டும் நிச்சயம். தம்மைப் பார்த்து ஒரு காலமும் அவர் நகைத்துக்கொண்டதில்லை. அவர் மனச்சாட்சி, "நீ தப்பு செய்துவிட்டாய்" என்று இதுவரை கேட்டதே இல்லை. அவ்வாறு தம் வேலையைத் தமக்கே திருப்தி தரும் விதத்தில் பார்த்து வந்தவர்களுள் அவர் ஒரு அதிகாரி. இவ்வளவு திறமையுடன் வேலை செய்தவரை இந்த நாகலிங்கம் விஷயம் ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. சட்டப்படி அவர் கடமை தவறவில்லையாயினும், மனிதருக்கு வரும் தோல்வி உணர்ச்சி அவரை ஒரு ஆட்டு ஆட்டிவிட்டது. இந்நிலையில் திருவாரூரில் இருந்து நேரே மதுரை போய்ச் சேர்ந்தார்.

'பேதை மனமே, பெண் மனமே, உன் எண்ணந்தான் என்ன? ஏன் உலக இயற்கைக்கு மாறுபட நடந்து, எழுத்தாளன் கற்பனைகளை எல்லாம் கவிழ்க்கிறாய்? உனக்குக் கண்ணீர் விடத்தான் தெரிகிறது. மனத்தைக் கல்லாக்கிக்கொள்ளத் தெரியவில்லை. உனக்குத் துரோகம் செய்வதையே தொழிலாகக்கொண்ட அந்த நாகலிங்கத்தைக்கூட விரோதியாகக் கருத உனக்குத் தெரியவில்லை. என்றைக்கு அவன் கையைப் பிடித்தாயோ, அன்றைக்கே உன் மான அவமான உணர்ச்சி கூட அவனுக்கு அடிமையாகிவிட்டதா? அன்பு இல்லாவிட்டாலும் உன் உடம்பில் ஊறிப்போன இந்த நாட்டின் பண்பாடு உன்னை நாசம் செய்கிறதா?

'அவன் உனக்கு எத்தனையோ முறை துரோகம் செய்துவிட்டான். நாடகத்தில் நடித்துக்கொண்டிருந்த உன்னை, அவனுடைய கபட நாடகம் மயக்கியது. உன்னை ராணியாக்கிவிடுவான் என்று எண்ணினாய். ஆனால் உன்னைப் பிச்சைக்காரி ஆக்கினான். மாட்டை அடிக்கும் கம்பால் உன்னை அடித்தான். இரவோடு இரவாக நீ உயிருக்குப் பயந்து தப்பி ஓடினாய். அழகர் கோயிலில் உன் கண் முன்னாலேயே அந்த மோகனாவை அடைய முயன்றான். உன் காலை ஒடிப்பேன் என்றான். அப்பொழுதும் நீ அவன் வீட்டுக்குப் போய், அவன் காலில் விழுந்தாய். உன்னைக் காலால் எத்தினான். கத்தி எடுத்துக் குத்த வந்தான். அவன் வீட்டுக்கு நீ நெருப்பு வைக்கவில்லை. அவன் பாவமே, நெருப்பாகப் பற்றிக்கொண்டது. ஒரு பக்கம் இரக்கம், இன்னொரு பக்கம் அவன் கையைப் பிடித்த பாசம். இரண்டுக்கும் இடையில் அகப்பட்டுக்கொண்டு நீ பல நாள் மாறுவேஷம் போட்டுக் கொண்டு உயிரைச் சுமந்து திரிந்தாய். அப்படியிருந்தும், கடைசியில் ஒரு நாள் அவனுடைய நாடகத்தில் மயங்கிவிட்டாயே ! இதைப் பெண்ணின் பெருமை என்று போற்றுவதா அல்லது பெண்ணின் சிறுமை என்று தூற்றுவதா?'

ரமாமணியின் உள்ளத்தில் இவ்வளவு போராட்டங்களும் மாறி மாறி வந்துகொண்டிருந்தன. நாகலிங்கம் தப்பித்துவிட்டான். மோகனாவுக்குக் கெடுதல் செய்வான்; சண்முகத்தைப் பழி தீர்ப்பான். தனக்குக் கிடைக்காத பாலை பூனை தட்டிக் கவிழ்ப்பது போல, தன்னுடைய சோற்றைப் பிறர் தின்றுவிடக்கூடாது என்று எண்ணி நாய் வட்டிச் சோற்றில் மண்ணைத் தூவுவது போல, அந்த மனித விலங்கு எத்தகைய கொடுமையையும் செய்யும் என்று எண்ணி, ரமாமணி துடித்தாள். பாம்புப் பிடாரன், பெட்டியில் இருந்த நல்ல பாம்பு ஒன்று காணாமல் போய்விட்டால் என்ன பாடுபடுவானோ, அப்படிப் பாடுபட்டது அவள் மனம். ஒவ்வொரு நாளும் அவள் எண்ணங்கள் மோகனாவின்பால் சென்றன. ஒவ்வொரு நிமிஷமும் 'கள்ளங் கபடமற்ற சண்முகத்தைக் கடவுளே காப்பாற்று' என்று கூறியது. இவ்வாறு அவள் கண்ணீர் வடித்தவண்ணம் ரிமாண்டில்



இருக்கையில் சிறைக்கூடத்தின் கதவு திறக்கப்பட்டது. எட்டண்ணையா நாயுடு அங்கு விஜயம் செய்தார்.

"யாரு, எட்டையாவா?" என்றாள் ரமாமணி.

"எட்டய்யா இல்லாமே, உங்க பாட்டய்யாவா இங்கே வருவாரு?"

"நான் ஒருத்தி இங்கே வந்தது போதாதா? என் பாட்டையா ஏன இங்கே வராரு? நீங்க ஏன் இங்கே வந்தீங்க? நானும் தப்பிச்சு ஓடிப் போயிட்டேனான்னு பாக்கறதுக்கா?"

"தப்பிச்சு ஓடினா, சர்க்கார் சும்மா விட்டுடுமில்லே!"

"சர்க்கார் சும்மா விடாது. ஆனால் அதிலே உங்க மாதிரி ஆளுகள் அதிகம் இருக்காங்களே."

எனக்கென்னம்மா குறை?"

"சட்டை போட்டா நல்லாத்தானிருக்கு; சாமர்த்தியந்தான் இல்லை. இல்லாட்டி அந்த ஆளைத் தண்ணியிலே குதிக்க விடுவீங்களா?"

"நானா குதிக்கவிட்டேன். நீயும் அவனும் கூட்டாகப் பேசிக்கிட்டு ரயில்லே டான்ஸ் கச்சேரி பண்ணி எங்க ஆளுகளை ஏமாத்திட்டீங்க."

"அடி சல்வாக ரூனை நல்லாத்தான் வேலை செய்யுது அவன் சொன்னான். நான் ஆடினேன். நீங்க எய்யா ஏமாந்தீங்க? ஏமாந்ததும் இல்லாமே, என்மேலே குத்தம் சொல்லறீங்களே. எனக்கு எல்லாம் தெரியும்."

"என்ன தெரியும்!"

"அந்த ஆளைத் தண்டிக்க உங்களுக்குப் பயம். ஒரு கையிலே கத்தி வச்சிருக்கான். ஒரு கையிலே பணம் வச்சிருக்கான். இல்லாட்டி அன்னிக்கு அந்த வண்டியிலே இரண்டாம் வகுப்பிலே வருவீங்களா?"

"ஏ ரமாமணி, என்னை என்ன வேணுமானாலும் சொல்லு. என் டூட்டியைப்பத்தி மட்டும் கேவலமா பேசாதே."

"நீங்க என்னய்யா என் மாமனா, மச்சானா, உங்களைப்பத்தி நான் என்ன வேணுமானாலும் சொல்லறதுக்கு? உங்க டூட்டியைக் கோட்டை விட்டுட்டீங்கன்னுதான் சொல்லறேன். இரண்டு மாசமா என்னை அடைச்சு வச்சிருக்கீங்களே, நான் உங்க தங்கச்சியாக இருந்தா, உங்க வயித்திலே பிறந்த பெண்ணாக இருந்தா, என்னை இப்படி ரிமாண்டிலே அடைச்சுப் போட்டிருப்பீங்களா? நீங்கள் எப்ப அவனைப் பிடிக்கிறது, எப்ப என்னை விசாரிக்கிறது? இந்தாய்யா, என்மேலே கேசு எடுத்து என்னை ஜெயிலுக்குள்ளே போட்டுடுங்க, இல்லே, தூக்கிலேயாச்சும் போட்டுடுங்க. இல்லே என்னை இப்பவே வெளியே விட்டுடுங்க."

"இரண்டும் என்னாலே முடியாது."

"பின்னே எதுக்காக இங்கே வந்தீங்க?"

"அதிராம்பட்டினம் பக்கத்திலே அவனுக்குத் தெரிஞ்சவங்க யாராவது இருக்காங்களான்னு உன்னை விசாரிக்க வந்தேன்."

அவன் ரயிலில் இருந்து தப்பியது, சண்முகத்தைக் குத்தியது, பாரியூர் ஜமீன்தாராக வந்தது, மோகனாவை அடைய முயன்றது, தப்பி ஓடியது எல்லாவற்றையும் கன்னையா நாயுடு எடுத்துரைத்தார். ரமாமணிக்கு அவர் பேசப் பேச அவர் மேல் ஆத்திரம் மூண்டது. ஆளை விட்டுவிட்டு, துப்பு விசாரிக்கத் தன்னிடம் வந்திருப்பது அவளுக்கு நகைப்பை உண்டாக்கியது.

"நீங்க அதிராம்பட்டினம் பக்கத்திலே நாகலிங்கத்துக்குத் தெரிஞ்ச ஆள் இருக்குதான்னுதானே கேட்கிறீங்க?" என்றாள்.

"ஆமா."

"இருக்காங்க !" என்றாள் ரமாமணி. கன்னையா நாயுடு மகிழ்ந்தார். அவனுக்குக் காலில் காயம் பட்டிருக்கிறது. எப்படியும் பத்து நாளைக்கு ஒரு வீட்டில் தங்கித்தான் ஆகவேண்டும். யார் வீட்டில் தங்குகிறான் என்பது தமக்குத் தெரிந்தால், லபக் என்று கொத்திவிடலாம் என்ற அக்கறை அதிகமாயிற்று.

"இந்தா ரமாமணி, உன்மேலே கேசு ஒன்றும் ஸ்டிராங்கில்லே. சந்தேகந்தான். நான் உனக்கு ஹெல்ப் பண்ணறேன். முடியும்னா விடுதலையே வாங்கித் தரேன். நீ மாத்திரம் அவனுக்குத் தெரிஞ்சவங்க யாரு என்கிறதைச் சொல்லிவிடு."

"சொல்றேனுங்க. இவ்வளவு அக்கறையா நீங்க கேக்கிறபோது நான் சொல்லாம இருக்கலாமா?"

"சொல், யாரு? எப்படியிருப்பான்? எந்த ஊரு?"

"வயசு இம்பதிருக்கும். நல்ல தொந்தியும் தொப்பையுமாக இருப்பான்."

"அப்புறம்?"

"நெத்தியிலே நாமம் போட்டிருப்பான்."

"உம். நாமமா? பெயரு?"

"எட்டு கன்னையா நாயுடுன்னு பெயரு. நீதான் அய்யா அந்த ஆளுக்கு வேண்டியவன். உன்னைத் தவிர வேறு இன்ஸ்பெக்டராக இருந்தா, இத்தனை நாள் பிடிச்சிருக்கமாட்டாரு? 'நான் அடிக்கிற மாதிரி அடிக்கிறேன், நீ அழுகிற மாதிரி அழு' என்றுதானே அவனைப் பிடிச்சுப் பிடிச்சு விட்டுடறே?"

"கருப்பாயி, அபாண்டமாகச் சொல்லாதே."

"இந்தாய்யா, கருப்பாயின்னு கூப்பிடாதே. பின்னே என்ன அர்த்தம்? அந்த ஆளு வெளியே இருந்தா எவ்வளவு ஆபத்துன்னு உமக்குத் தெரியுமா? அந்தச் சண்முகத்தைக் குத்தினான்னு சொல்லறீங்க. நாளைக்கு மோகனாவைக் கத்தியாலே எறிஞ்சா? என்னமோ அவனைத் தப்பவிட்டுட்டு என்கிட்டே வந்து துப்புக் கேக்கிறாரு. துப்புக் கெட்டவரு?



"எட்டய்யா, உனக்குப் புள்ளை குட்டி இருக்காய்யா? என்னைப் பத்திக் கவலைப்படாதே. எனக்கு ஜெயிலிலே இருந்தாலும் ஒண்ணுதான், வெளியிலே இருந்தாலும் ஒண்ணுதான். இனி இந்த ரமாமணி எதுக்கும் ஆசைப்படல்லே. எப்போ, நான் படர்ந்த மரம் பட்டமரமாச்சோ, அப்போதே எனக்கும் உலகம் வெறுத்துப்போச்சு. ஆனா ஒரே ஒரு எண்ணம், 'அந்தப் பொண்ணுக்கு ஒரு ஆபத்தும் வந்துவிடப்படாது. அந்தச் சண்முகத்துக்கு எந்த ஆபத்தும் வந்துவிடப்படாது' அப்படின்னுதான் தவிக்கிறேன். உங்களுக்குக் கொஞ்சமாவது சவு இரக்கம் பச்சாதாபம் எதனாச்சும் இருந்ததுன்னா, அவனை நீங்களாவது புடியுங்க. இல்லை, வேலையை விட்டாவது விலகுங்க" என்று ஆத்திரமும் அழுகையுமாகக் கூறி, அவரைக் கும்பிட்டாள் ரமாமணி.

கன்னையா நாயுடுவுக்கு ரமாமணியின் கண்ணீரைப் பார்க்கப் பார்க்க மனம் கலங்கியது. மாஜிஸ்ட்ரேட்டிடம் சென்றார். இருக்கும் நிலைமைகளைச் சொன்னார். மாஜிஸ்ட்ரேட்டோ, "அவளை இனிமேல் ரிமாண்டில் வைத்திருக்கக்கூடாது. விடுதலை செய்ய வேண்டு"மென்று வற்புறுத்தினார். ஆனால், கன்னையா நாயுடு, நாகலிங்கத்தால் அவளுக்கு ஆபத்து ஏற்படும் என்று மாஜிஸ்ட்ரேட்டிடம் மன்றாடி மேற்கொண்டு ரிமாண்டுக்கு உத்தரவு வாங்கிக்கொண்டார். வீட்டுக்கு வந்தார். அவருடைய மனம் 'என்னவோ செய்தது. தம்மை ஒரு கைதி இப்படித் தூற்றும்படியாகி விட்டதே' என்று வருந்தினார். நெருப்பிலே போடப்பட்ட பொன் இன்னும் அதிகமாக மாற்று ஏறுவது போல, அவருடைய மனம் கனிந்து பழுப்பேறியது.

அப்போது, அவருடைய தகப்பனார் எட்டு ராமையா நாயுடு எதிரில் வந்து நின்றார். "உரே நாயினா, கேவலம், பதினெட்டு ரூபாய் சம்பளத்திற்காக நான் போலீஸ் உத்தியோகம் பார்க்கவில்லை. ஊருக்கு நல்லது செய்யும் வேலை என்பதற்காகத்தான் உயிருள்ள வரைக்கும் பார்த்து வந்தேன். அதற்காகவே உன்னையும் அந்த வேலையில் அமர்த்தினேன். உனக்கு உன் உயிரும், உத்தியோக உயர்வும் பெரிதாகிவிட்டது. துணிவு போதவில்லை' என்று தந்தை சொல்வது போல் இருந்தது. தவித்தார் கன்னையா நாயுடு. அடுத்த நாளே சென்னை உயர்தர போலீஸ் அதிகாரியின் வீட்டு வாசலில் போய் நின்றார்.

திடீரென்று அந்த மனிதர் "நான் ராஜினாமா செய்துவிடுகிறேன். வேறு யாரையேனும் அழகர் கோவிலுக்கு அனுப்புங்கள்" என்று கேட்டுக்கொண்டு பெல்ட்டைக் கழற்றி வைத்தவுடனே, தலைமை போலீஸ் அதிகாரி ஆச்சரியம் அடைந்தார்.

"என்ன மேன், அப்படிச் சொல்லறே? உனக்கு மேலே எத்தனையோ சீனியர் இருக்காங்க. அவங்களுக்கே இன்னும்

இன்ஸ்பெக்டர் உத்தியோகம் ஆகலே. உன்னை எப்படி மேன், இன்ஸ்பெக்டர் ஆக்குவது?"

"எட்டு வேலைக்கே தானம் போடுது. இன்ஸ்பெக்டர் வேலை வேண்டாமுங்க. இப்போ அதைப்பத்தி நான் கேட்கலே இல்லிங்க ஸார்."

"நீ கேக்கலே. ஆனால் இன்ஸ்பெக்டர் உத்தியோகம் கிடைக்கலே, ராஜினாமா செய்யலாமென்கிற எண்ணந்தானே உனக்கு? அட போ, மேன். இரண்டு வருஷத்திலே ரிடயர் ஆகப்போறே. ஏதோ பென்ஷனை வாங்கிக் குழந்தை குட்டிகளுக்குக் கொடுப்பியா?"

"அப்படியில்லிங்க, இதுவரை பெருமானுக்குப் பொதுவா வேலையைப் பாத்து இருக்கேன்."

"இப்போ தப்பு செஞ்சேன்னு யாரு சொன்னாங்க?"

"என் மனது சொல்லுதுங்க. அந்த நாகலிங்கத்தைப் பிடிக்க மூணுவாட்டி முனைஞ்சேனுங்க. அப்பவும் தண்ணீலே விழுந்து தப்பி ஓடிவிட்டான். என்னாலே போலீஸ் இலாகாவுக்கே கெட்ட பெயரு. என்னை விட்டுடுங்க. நான் விலகிக்கிறேன்."

"போ நாயுடு. அப்படி இருந்தால் அதே வேலையாக இருந்து தேடிக் கண்டுபிடி. காரணம் இல்லாமல் உன் ராஜினாமாவை நான் ஏற்றுக்கொள்ள முடியாது."

"இல்லீங்க. என்னை விட்டுடுங்க. இனிமே இந்த அவமானத்தைத் தாங்கிக்கிட்டு நான் உயிர் வாழவேண்டாம்" என்று உணர்ச்சி வசத்தால் கண்ணையா நாயுடு கண்ணீர் விட்டார். போலீஸ் அதிகாரி அவரைத் தட்டிக்கொடுத்தார்.

"உன் ராஜினாமாவை ஏற்றுக்கொள்ளவே முடியாது! வெற்றியுடன் விலகு. உனக்கு நான் ஆறு மாசம் லீவு தருகிறேன். நீ அதற்குள் அவன் எங்கிருந்தாலும் கண்டுபிடிக்க முயற்சி செய்" என்று சொல்லி, அவருக்கு லீவும் அளித்தார்.

இப்பொழுது அவர் வாழ்க்கையில் ஒரே லட்சியம், ரிடயர்டு ஆவதற்குள் நாகலிங்கம் உயிரோடிருந்தால் அவனைப் பிடித்துவிட வேண்டும் என்ற ஒன்றுதான். இதன் காரணமாகத்தான் மோகனாவுக்கு வழி அனுப்பு உபசாரணை நடக்கும்போது அங்கு வந்து சேர்ந்தார்.

வீட்டுக்கு போனாள் வடிவாம்பாள். அவளுக்குப் பட்டணத்தில் நடப்பதெல்லாம் ஏதோ கனவு போலிருந்தது. திடீரென்று வைர அட்டிகை கிடைத்ததை எண்ணினாள். ஆனால் இந்த ஆறு மாசம் மகளைக் கண் போலக் காப்பாற்ற வேண்டுமே என்பதை எண்ண எண்ண அவளுக்குப் பொறுப்பு அதிகமாயிற்று. அதே சமயத்தில், கப்பல் யாத்திரையில் ஒரு பயமும் வரலாயிற்று.

வண்டியில் எப்பொழுதும் அவள் தூங்குவாள். கப்பலிலே அதே மாதிரி தூங்கிவிடக்கூடாதே. சண்முகம் கூட வருகிறானே என்ற பயம்



வந்தது. ஏற்கெனவே பட்டினத்துத் தண்ணீர் அவளுக்கு ஒத்துக்கொள்ளவில்லை. இன்று மாலை காற்றும் விருந்தும் வேறு சேர்ந்துகொண்டன. மனம், பாய்மரம் போல் பறந்தது. இப்பொழுது ஒரு கப்பல் பயமும் சேர்ந்துகொண்டது. அவளை அறியாமல் ஒரு நடுக்கமும் உதறலும் வந்தன. போதாததற்குக் கண்ணையா நாயுடுவைப் பார்த்ததில் கலக்கம் வேறு ஏற்பட்டது. 'அந்த நாகலிங்கம் இங்கும் வந்திருப்பானோ? அவனைத் தேடிக்கொண்டுதான் நாயுடு வந்திருக்கிறாரோ? தரையில் இருக்கும் வரையில் நமக்கு ஆபத்துதான். நம் மகளுக்கும் ஆபத்துதான்' என்று எண்ணினாள். உடம்பு வெடவெடவென்று நடுங்கியது.

"என்னம்மா உடம்பு? சோர்ந்தாப்பலே இருக்கிங்க!" என்றான் வரதன்.

"காச்சல் அடிக்குதா பாரு வரதா!" என்றாள். ஆமாம், உண்மையிலேயே வடிவாம்பாளுக்குக் காய்ச்சல் வந்துவிட்டது. ஏதேனும் பெரிய காரியங்கள் நிகழ்வதற்கு முன்னால், உடம்புக்கு ஆபத்து வரும் என்ற ஒரு மூட நம்பிக்கை வேறு. காய்ச்சல் என்று வரதன் சொன்னவுடனே, அவள் சிந்தனை எங்கோ ஓடியது. 'வீட்டை விட்டு, வாசலை விட்டு, வெளிநாட்டுக்குப் போகிறோம். முன்பின் தெரியாத மதன்பூர் மகாராஜாவை நம்பிப் புறப்படுகிறோம். பயணம் எப்படியிருக்குமோ? பாதையில் என்ன நடக்குமோ? மகாராஜா நம்ப பொண்ணை மகாராணி ஆக்கிக்கொண்டால் எவ்வளவோ நன்றாகத்தான் இருக்கும். அவருக்குத்தான் வெள்ளைக்கார ராணி இருக்கிறாளே. அந்தப்புரத்தில் பல பேர் இருக்கிறார்களே. இவர் நம் மகளையும் கட்டிக்கொண்டு என்ன மிச்சம்' என்பதை எண்ணியவுடனே புதையலை இழந்தது போல் பதறினாள். காய்ச்சல் ஒரு டிகிரி அதிகமாயிற்று. 'இந்தக் காய்ச்சல் கப்பலில் போகிறபோது ஜன்னியாக மாறிவிட்டால் என்ன செய்வது?' என்று எண்ணினாள். இதை எண்ணவும் ஜன்னியே பிறந்துவிடும் போல் இருந்தது. உடம்பைத் தொட்டுப் பார்த்துக்கொண்டாள். மூச்சுக்கூட சரியாய் வருவதாக அவளுக்குத் தோன்றவில்லை. அவளை அறியாமல் அவள் உயிர்மேல் ஒரு பயம் வரலாயிற்று. உடனே எண்ணம் திசை மாறியது.

நம்மை விட்டால் நம் மகளுக்கு வேறு யார் இருக்கிறார்கள்?

"இந்த வைத்தி! முதலில் அவன் இருக்கும் இடத்தில் நம் பெண் இருப்பதே தப்பு. அவன் என்னென்ன வம்பு செய்வானோ? என்னென்ன வழக்குகளை உண்டாக்குவானோ? இந்த மகாராஜாவைத்தான் எப்படி நம்புவது? தண்ணீர் வேண்டுமென்று நாம் தமிழில் கேட்டால், அவர் சோடா கொண்டுவரச் சொல்லுவார். முதலிலே பாஷையே தெரியாது. நாம் நினைத்தால் அவரைப் பார்க்கவும் முடியாது. போதாததற்கு இந்த வெள்ளைக்காரி! வேறு அவன் இடுப்பிலே துப்பாக்கியைச் செருகிக்கொண்டிருக்கிறான்.

நமக்கு இருக்கிற துணை எல்லாம் இந்த வாதன்தான். வாதனாலே என்ன செய்ய முடியும்?

"இவனுக்கு இங்கிலீசும் தெரியாது, ஹிந்தியும் தெரியாது. எனக்கு ஒரு காய்ச்சல் அடித்தால், தலையை வலித்தால், என் மகளை யார் காப்பாத்துவார்கள்?" என்று எண்ணிக்கொண்டு, தன் உடம்பை மறுபடியும் தொட்டுப் பார்த்தாள். 110 டிகிரி ஜுரம் அடிப்பது போல் தோன்றியது. குருட்டுத்தனமாக ஒரு யோசனை வந்தது. 'அவளைக் காப்பாற்ற அவன் ஒருவன்தான் இருக்கிறான். அவளுக்காகத் தன் உயிரையும் விடத் தயாராக இருக்கிறான். நான் இவ்வளவு வஞ்சகமாக நடந்துகொண்டும், அவள் மேலுள்ள ஆசையால் அவனும் சிறைக்குப் புறப்பட்டிருக்கிறான். புள்ளேதான் நல்லா இல்லியா? வித்தையிலே தான் குறைவா? அழகிலே மன்மதன் மாதிரி இருக்கான்! மாலையும் கழுத்துமா இரண்டு பேரும் உட்கார்ந்திருந்த அழகு ஒண்ணே போதுமே! நம்ப மகளை அவன் கைவிட மாட்டான், காப்பாத்துவான்' என்று அவளுடைய மூளையின் ஓரத்தில் ஒரு யோசனை வந்தது. ஒரு மின்னல் மின்னியது. "மோகனா, மோகனா" என்று கூப்பிட்டாள்.

மோகனா ஓடி வந்தாள்.

"என்னம்மா, என்னம்மா?" என்றாள்.

"என் உடம்பைத் தொட்டுப் பாரு."

"ஒண்ணும் இல்லேம்மா."

"ஆமாண்டி, எனக்குக் காச்சல் வந்தா, உனக்கு ஒண்ணும் இல்லேன்னுதான் தோன்றும். நல்லா பாரு."

"நல்லா பாத்துட்டேன் அம்மா. சும்மாதான் இருக்கீங்க. வைர அட்டிகையைப் பாத்துட்டு வந்த படபடப்பு அப்படி இருக்குது."

"ஆமா, அவனுக்குக் காலிலே கல்லு பட்டால் உனக்குக் கண்ணிலே கண்ணீர் வரும். எனக்கு எது வந்தாலும் நல்லா இருக்கிறாதாத்தான் தோணும்."

"என்னம்மா, அவரை இழுக்காவிட்டால் உங்களுக்குப் பொழுதே போகாதோ? இன்றைக்கு டீப்பார்ட்டியிலேகூட நான் அவர் பக்கமே திரும்பலே. அவரும் நம்ப பக்கம் திரும்பல்லே."

"நான் உனக்குப் பக்கத்திலே உக்கார்ந்திருந்தேன். அதுக்காக அவன் திரும்பல்லே. இந்தா, முத்துராக்கு வந்துட்டானா? வேண்டாம் நீயே போய் என் பெட்டியைத் திறந்து, எல்லையம்மன் கோவில் விபூதி இருக்குது. அதைக் கொண்டாந்து என் நெத்தியிலே பூசு. உன் நெத்தியிலேயும் இட்டுக்க" என்று கேட்டுக்கொண்டாள் வடிவாம்பாள்.

மோகனா ஓடிப்போய், விபூதியை எடுத்துக்கொண்டு வந்து, அவள் நெற்றியில் இட்டாள். தன் நெற்றியிலும் தரித்துக்கொண்டாள். வடிவாம்பாள் முகம் வியர்த்தது. மோகனாவின் கையைப் பிடித்துக்



கொண்டு, சற்று நேரம் அப்படியே அவள் மேல் சாய்ந்திருந்தாள். அவளுடைய மரண பயம் நீங்கியது. நன்றாய்த் தூங்கினாள். பொழுது விடிந்தது. புது மலர்கள் பூத்தன. வடிவாம்பாளும், பழைய வடிவாம்பாளானாள்.

139560
H842M04

எண்பத்து ஐந்தாம் அத்தியாயம்

## அலை மோதும் கடல் மேலே



அலை பெற்ற கடலுக்கு மேலே சக்தி அருளென்னும் தோணியில் வாழ்வதுதான் மனித வாழ்க்கை. கடல்தான் உலகு. வாழ்வுதான் படகு. சக்தி இருந்தால்தான் செயல் உண்டு. சக்தியற்றவன் செயலற்றவன். செயலற்றவர்களோ உலகத்துக்குச் சுமை. இதே செயலற்ற தன்மையை, "சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம்" எனப் புகழ்வாரும் உண்டு. அது ஞானியர்க்கு ஏற்றதாகக் கொண்டிருந்த பழங்கொள்கை. ஆனால் புதிய சமுதாயமோ, ஞானிகளும் கர்மாவைச் செய்ய வேண்டும் என எண்ணுகின்றது. இந்தப் புதுக் கொள்கையின் பிரதிநிதியாக எழுந்தவர்தான் விவேகானந்தர் போன்றவர்கள். ஆனால், ஒரு கர்மாவையும் செய்யாமல் மேற்கண்ட பாட்டை மட்டும் பாடிக்கொண்டிருக்கத் தகுதியான இடம் கப்பல்தான்.

தரையில் போட்ட மீன் எவ்வாறு செயலற்றுவிடுகிறதோ அவ்வாறு, கடலில் போட்ட மனிதனும் செயலற்றவனாகிவிடுகிறான். ஆனால், மனிதனுக்கு நல்லதோ கெட்டதோ ஏதாவது செய்துகொண்டே இருக்க வேண்டும். சில வியாபாரிகளிடம் வாங்கிய கடிகாரங்கள், ஒன்று, வேகமாக ஓடும்; அல்லது மெதுவாக ஓடும்; சரியாக மாத்திரம் ஓடாது.

இதைப் போல் வைத்தியைப் போன்ற சிலரும், செயல் செய்து கொண்டே இருப்பார்கள். ஆனால், சரியாக மாத்திரம் செய்யவே மாட்டார்கள். அவர்களுக்குங்கூடக் கப்பலைப் போல் நல்ல இடம் கிடையாது.

மிதம், மிதப்பு இரண்டும் நேர் எதிரிடையானவை. மிதம், உழைக்க வைக்கும்; மிதப்பு, உழைப்பைக் கெடுக்கும். கப்பல் மிதக்கும். ஆதலால், அதை மிதப்பு இனம் என அழைக்கலாம். மிதப்பில் பிரயாணம் செல்வதே ஒரு இன்பம். சின்ன வயதில் திருவிழாவுக்கு விடும் தெப்பத்தில் ஏற எவ்வளவு ஆசைப்பட்டிருக்கிறோம்?

ஆடும் கப்பலில் நாம் நடக்கும்போது நம்மை அறியாமலே ஒரு இன்பம் வரும். அதோடு நாம் விழாமல் நடக்க வேண்டும் என்ற அக்கறையும் வரும். அக்கறைதான் வாழ்க்கை. வாழ்க்கையில்கூட எத்தனையோ புயல்கள் நம்மீது மோதுகின்றன. புயலில் வாழைக் கொல்லை சாயும்; வாழத் தெரிந்த மனிதன் சாயமாட்டான். கர்ணம் போடுபவன் தவறி விழாமல் இருப்பது போல், உலக வித்தையில் ஈடுபடுவதுதான் அறிவின் பயன். ஆகவே கப்பலில் போகும் ஒருவர் தவறி விழாமல் நடப்பதில் ஒரு வெற்றியும் இருக்கிறது.

அம்மாதிரியெல்லாம் உல்லாசமாகப் போகக்கூடிய கப்பல்களுள் ஒன்றுதான் எஸ்.எஸ். **நீலமணி** என்னும் கப்பல். இது கல்கத்தாவி லிருந்து சென்னை வந்து, கொழும்பு போய், சீமைக்கும் போகும் கப்பல். இதில்தான் நமது மகாராஜாவின் கோஷ்டியினர் புறப் பட்டார்கள்.

கடலுக்குக் கொந்தளிப்பு இயற்கை. ஆனால் அந்தக் கொந்தளிப்பு சென்னைத் துறைமுகத்தில் தெரியவில்லை. அங்கே பல மைல்கள் நீளத்திற்குக் கடலைக் குளமாக்கி, அதன் மேல் கப்பலை மிதக்க விட்டிருந்தார்கள். அங்கு நின்ற கப்பல் ஆடவில்லை. ஆனால் கப்பலில் கலைஞர்களை அனுப்ப வந்திருந்த எல்லோரும் ஆடினார்கள், பாடினார்கள்.

அடேயப்பா, அந்தக் கப்பல் அடியில்தான் அன்று எவ்வளவு கூட்டம்! சண்முகமும், மோகனாவும் இந்தக் கப்பலில் போகிறார்கள் என்ற செய்தி பரவியிருந்ததால் துறைமுகத்தைச் சுற்றி ஏராளமான மக்கள் கூடியிருந்தார்கள். அன்றைக்கு வெள்ளிக்கிழமை. பன்னிரண்டு மணிவரை ராகு காலம் என்ற பயத்தில், பிரயாணிகள் அதிகாலை ஆறு மணியிலிருந்தே வர ஆரம்பித்துவிட்டார்கள். ரயிலை விட்டால் அடுத்த நாள் போகலாம், கப்பலை விட்டால் எத்தனை நாள் காத்திருப்பது?

கல்யாண வீடுகளில் ஒரு முக்கியமானவர் இருப்பார். அவர்தாம் ஸ்ரீமான் அழையா விருந்தாளி. அவரை யாரும் கூப்பிட வேண்டாம். கூப்பிடவில்லையே என்று கோபித்துக்கொள்ளவும் மாட்டார். கல்யாண வீட்டு வாசலில் எல்லோரையும் வரவேற்கும் கூட்டத்தில் அவர் முக்கியஸ்தராக இருப்பார். "வாங்க, வாங்க, தம்பீ அவங்களுக்குச் சந்தனம் கொடு. எங்கே வெத்திலை பாக்கு?" என்று சொல்லிக்கொண்டே தம் கையிலும், உடையிலும் அழுக்குப் படாமல் உத்தியோகம் பார்ப்பார். உக்கிராணத்திலிருந்து பந்தி விசாரணை வரை பழக ஆரம்பித்துவிடுவார். மணிபர்சைக் காணோம், கழற்றி வைத்திருந்த கோட்டைக் காணோம் என்ற பேச்சுகள் கல்யாண வீட்டில் அடிபடும். அப்போதும் அவர்தாம் மத்தியஸ்தம் செய்வார். கடைசியில் அந்த ஆசாமியே அவைகளுக்குக்கெல்லாம் காரணமாகவும் இருப்பார்.



நம் வைத்தி அம்மாதிரித் திருட்டு வேலையில் நம்பிக்கை உடையவர் இல்லை. இரவில் திருடிவிட்டு, பகலெல்லாம் வெளியே வர முடியாமல் பயந்துகொண்டு வாழ்வது அவருக்குப் பிடிக்காது ஆகையால், அவர் வேலைகள் எல்லாம் பகலில்தான். அவர் எப்படித்தான் ஒட்டிக்கொள்வாரோ? வச்சிரங்கூட நடவினால்தான் ஒட்டும். வைத்தி தாமாகவே ஒட்டிவிடுவார் எந்த இடத்தில் போய்ப் பழகினாலும் இரண்டு நாளில் அவர் தம்மை ஒரு முக்கியமான மனிதராக ஆக்கிக்கொண்டுவிடுவார். மதன்பூர் மகாராஜாவின் தயவுக்கு வைத்தி பாத்திரமாகிவிட்டார். வைத்தியைப் பார்த்த மகாராஜாவின் சிப்பந்திகள் 'இவரும் ஒரு வித்வானோ' என்று நினைத்துக்கொண்டார்கள். வித்துவான்களோ' இவர் ஒரு ஆபீசரோ என்று எண்ணிக்கொண்டார்கள். இவ்வாறே இரண்டு மூன்று நாளில் வைத்தி, மகாராஜாவுக்கு அருகில் நெருங்கிப் பேசுவதற்கும் உரியவராகி விட்டார். மகாராஜா உதகமண்டலத்திலிருந்து வந்தவுடன் வைத்தி நெருங்கி, தமிழ்நாட்டின் விசேஷங்களை யெல்லாம் எடுத்துச் சொல்ல ஆரம்பித்தார். வைத்தியைப் போல் ஒருவர் கிடைக்க முடியாது என்ற நம்பிக்கையை மகாராஜாவுக்கு உண்டாக்கிவிட்டார்.

பொய்க்கால் குதிரைப் பொன்னன், பாவம், கையெழுத்துக்கூடப் போடத் தெரியாதவர். அக்கிரிமெண்டையும் படிக்கத் தெரியாது. அவர் ரேகைதான் வைத்தார். ஆனால், அந்த ரேகை வழியாக அவருடைய ரத்தத்தை உறிஞ்சிவிட்டார் வைத்தி. பொன்னன் திருவிழாவுக்குப் போனால் ஒரு நாளைக்கு மூன்று ரூபாயும், முக்கால் படி அரிசியுந்தான் சம்பளம் வாங்குவார். 'நிஜக்கால் குதிரையாக இருந்தால், கொள்ளு, புல்லு முதலிய செலவுகளே அதிகமாகும். மனிதன் சொல்படி நிஜக்குதிரை ஆடவும் ஆடாது. பொன்னனின் வயிற்றுக் கொடுமை அவரை வைத்தியின் தாளத்துக்கு ஆட வைத்தது. "டே, பொன்னா! நீ ஆடினாலும், ஆடாவிட்டாலும் நாள் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் சம்பளம்" என்று வைத்தி சொன்னவுடனே பொன்னன் ஒப்புக்கொண்டார். பம்பைப் பக்கிரி பணமே கேட்கவில்லை. போதாததற்கு வைத்தி தம் கையிலிருந்தே அவருக்குத் தினந்தோறும் சாயங்காலம் முழுசாக ஒரு ரூபாய் கொடுத்துக்கொண்டு வந்தார்.

ஆகவே, பொன்னன் மகாராஜாவைப் பார்ப்பதே இல்லை. "பெரிய இடம், நாம் எதிரில் போகக் கூடாது" என்று ஒதுங்கிப் போய்விடுவார். வைத்தியும் அவரை மகாராஜா பக்கமே வரவிடுவதில்லை. பொன்னன் சம்பளப்பணத்தைத் தம் கையில் கொடுத்துவிடும்படியும், அவன் குடும்பத்துக்குத் தாம் ஏதாவது செய்யவேண்டிய அவசியம் இருப்பதாகவும், இம்மாதிரிக் கலைஞனுக்கு இம்மாதிரிப் பழக்கங்கள் இருப்பது இயற்கை என்றும், ஸ்ரீமதி கனகாம்பாளிடம் கூறி, அனுமதியும் வாங்கிவிட்டார். ஆகவே

பொன்னனின் அறியாமையால் வைத்திக்குப் போன் கிடைத்தது. மகாராஜாவின் தயவால் செல்வாக்கு உயர்ந்தது. இன்று கப்பலில் வரும் வித்வான்கள் கோஷ்டியை எல்லாம் வரவேற்று, "வாருங்கள், உங்கள் ரூம் இது" என்று அவர்களுடைய அறைகளைக் காட்டி அவர்களை ஜாகையில் அமர்த்துவதைக்கூட வைத்தி தம் தலையிலே போட்டுக்கொண்டார்.

மோகனாவும் வடிவாம்பாளும் கப்பலில் ஏறினார்கள். மரகதமும் மைனரும் கூடவே வந்தார்கள். மோகனாவின் கண்கள் தேடின. கூட்டம் முழுவதையும் ஊடுருவிப் பார்த்தன. அங்கு அவள் தேடும் தெய்வம் இல்லை. கப்பலின் தட்டில் தேடினாள். அங்கு தெய்வத்திற்குப் பதிலாக பேய் நின்றது.

அவன் அருகே ஓடி வந்து "வா, மோஹி, வாங்க வடிவாம்பா அம்மா, உங்களுக்கு முதல் நம்பர் ரூம்" என்று சொல்லிக் கப்பலின் தலைப்பக்கத்திலுள்ள முதல் நம்பர் காபினில் அவர்களை இறக்கியும் வைத்தது.

சில கப்பல்களில் உள்ளே நுழைந்து வெளியே வந்தவுடனேயே நிலக்கரிச் சுரங்கத்துக்குப் போய்விட்டு வெளியே வந்தது போல உடம்பு எல்லாம் கரி பூசிக்கொள்ளும். கரி, கயிறு, வெங்காயம், பினாயில் இந்த நான்கும் கப்பலில் ஏற்பட்ட முக்கியமான அம்சங்கள். எங்காவது கையை வைத்துவிட்டால், கரி ஒட்டிக்கொள்ளும். ஆனால் அந்தக் கப்பல் ஒரு ஏழு அடுக்கு மாளிகை. தண்ணீர் மட்டத்துக்கு மேல் நாலு அடுக்குகள். தண்ணீர் மட்டத்துக்குக் கீழே மூன்று அடுக்குகள். வெள்ளை வர்ணம் பூசிய அந்தக் கப்பல், சமுத்திரத்தில் தண்ணீரில் போகும் போது ஒரு ராஜ ஹம்சம் தண்ணீரில் நீந்துவது போல, அவ்வளவு அழகாக இருக்கும். உள்ளே புகுந்துவிட்டால் அங்கும் பலர் தண்ணீயில் மிதப்பார்கள். அது கப்பல் அல்ல; உல்லாச மாளிகை.

கப்பல் அடியில் சடசடவென்று கரகோஷம் கேட்டது. பொன்னம்பலத்தா பிள்ளையும் வக்கீல் கிட்டாவையரும் வழியனுப்ப, கலைஞன் சண்முகசுந்தரம் படிக்கட்டுகள் வழியே ஏறி வந்தான். தட்டின் மேல் வைத்தி நிற்பதைப் பார்த்தான். இவருக்கு இந்தக் கப்பலில் என்ன வேலை என்று யோசித்தான். அதற்குள் வைத்தியே அவன் அருகில் வந்தார். "என்ன சண்முகம் பிள்ளை உங்களுக்குக் கப்பலில் உங்க இஷ்டப்படி வாசிக்க வேணும் இல்லியா?"

"ஆமாங்க."

"அதுக்காகச் சவுகரியமா இருக்கட்டும்னுட்டு ஸ்பெஷல் ரூம் நானே ஏற்பாடு பண்ணிட்டேன்."

"ரொம்ப சந்தோஷம். பக்கத்திலே யாராவது ஞானஸ்தா இருப்பாங்களில்லே?"



"அதென்ன அப்படிக் கேட்டுவிட்டீர்கள்? சுதகனி ரூம் உங்களுக்கு அடுத்தது."

சண்முகத்தின் முகம் சுண்டியது. "ஆமா நீங்க...?"

"என் ரூமுக்கும் உங்க ரூமுக்கும் அரை பர்லாங்கு இருக்கும்."

"அதுவரைக்கும் ரொம்ப சந்தோஷம். ரூமைக் காட்டச் சொல்கிறீர்களா?"

"மிஸ் கனகாம்பரம், அந்த ரூமைக் காட்டுங்க" என்றார் வைத்தி.

"கனகாம்பரம் அம்மாள் குழைந்தாள். ஐயோ! அவள் நாணமும், குலுக்கும், மினுக்கும் கன்றாவியாக இருந்தன.

"வார், வரீங்களா?" என்று கப்பலின் வால் புறத்திற்கு அவனை அழைத்துக்கொண்டு சென்றாள். அங்குதான் அவனுக்காக ஒதுக்கப்பட்ட அறை இருந்தது.

அடேயப்பா! அழகு என்பதன் மறு பெயர்தான் கப்பலா? மூன்று அடி அகலங்கூட இல்லாத அந்தச் சந்தில்தான் எத்தனை அலங்காரம்! இருபுறமும் வரிசை வரிசையாக அறைகள் இருந்தன. ஒவ்வொரு அறை வாசலிலும் ஒரு சிறிய விளக்கு. தரை நெடுக பிரெஞ்சு தேசத்து சிவப்பு வெல்வெட்டு விரிக்கப்பட்டிருந்தது. நல்ல தேக்கு மரத்தைக் கண்ணாடி போல் இழைத்து, அதில் வளைவுகளும் குழைவுகளும் கொடுத்து நன்கு பாலிஷ் செய்த சுவர்கள். அந்தப் பலகையில் பார்த்தாலே முகம் தெரியும். அது போதாதென்று நாலடிக்கு ஒரு நிலைக்கண்ணாடி மாட்டப்பட்டிருந்தது. கனகாம்பரம் வழி காட்டச் சண்முகம் தன் காபினுக்குள் நுழைந்தான். எல்லா வசதிகளும் பொருந்திய சண்முகத்தின் காபின், அவன் அந்தஸ்திற்கு ஏற்ப அமைந்திருந்தது.

அது ஒரு எட்டடிக் குச்சேதான். நீளம் சுமார் 12 அடி இருக்கலாம். அகலம் 8 அடி இருக்கும். அதற்குள் சுவரில் இரண்டு நிலைக் கண்ணாடிகள். சிகரெட்டு சாம்பல் தட்டும் பீங்கான். ஒரு சிறிய முகம் கழுவும் பேசின். அதிலே வெந்நீர், தண்ணீர் இரண்டும் வரும் குழாய்கள். மெத்தென்றிருக்கும் இரண்டு படுக்கைகள். அந்த இரண்டு படுக்கைக்கும் இடையில் கனத்த வெல்வெட்டுத் திரை. உட்கார ஒரு நாற்காலி. இவ்வளவும் அமைந்திருந்தன. கப்பல் பலகணியாகிய வட்டவடிவச் சாளரத்தின் மூலம் வெளிக்காற்று 'குபுகுபு'வென்று அடித்தது. சண்முகம் உள்ளே வந்து படுக்கையில் அமர்ந்தான்.

தருமன் வருத்தம் நிறைந்த முகத்துடன், "என் தம்பி, உங்க படுக்கையை எந்த சீட்டிலே போட...?" என்றான்.

"இரண்டிலேயுமா போடுங்களேன்" என்றான் சண்முகம். ஸ்ரீமதி கனகாம்பரம் சிரித்தாள். "நீங்க சௌகரியமாக இருங்கள். நான் மற்றவர்களுக்கு ஏற்பாடு செய்துவிட்டு வரேன்" என்று சொல்லி வெளியே சென்றாள். சண்முகம் "ஏம்மா" என்று எதையோ கேட்க எண்ணினான். இருந்தாலும் சற்று அடக்கிக்கொண்டான்.

அவன் சற்று தூரம் போன பிறகு "என்ன தருமனண்ணே, அவங்களுக்கெல்லாம் எங்கே இடம் கொடுத்திருக்காங்க?"

"எனக்கும் முத்துராக்கு அண்ணனுக்கும் 'பி' கிளாசிலே அறை போட்டிருக்காங்க. தாளக்காரப் பயலைத் தட்டிலே விட்டுட்டாங்க."

"அதுதான் தெரியுமே. அவங்களுக்கு?"

"எவுங்களுக்குத் தம்பி? நல்லாத்தான் சொல்லுங்களேன்!"

"அட இதுதானே! அந்த மோகனாவுக்கு?"

"பூ. அதுவா? இந்தா பாத்துட்டு வந்து சொல்றேன்" என்று தருமன் அழாத குறையாய்க் கப்பலைச் சுற்ற ஆரம்பித்தான்.

சண்முகம் தன் அறையை விட்டு வெளியே வந்தான். அவன் தலையைக் கண்டவுடனே கீழே இருந்தவர்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். பதிலுக்கு ஒரு கும்பிடு போட்டான். ஆனால் அவன் கண்கள் அங்கும் இங்கும் தேடின. எந்தப் பொருளை நாடி இந்தப் பிரயாணத்தை மேற்கொண்டானோ, அந்தப் பொருள் இவன் பக்கத்தில்கூட வர முடியாமல் பிரிக்கப்பட்டிருப்பதை அவன் அறியவில்லை.

அன்று மதுரை ஜங்ஷன் பிளாட்பாரத்தில் ஒவ்வொரு வண்டியாக அந்த இன்ப உருவத்தைத் தேடியது நினைவு வந்தது. உலகமே ஒரு பிளாட்பாரந்தான். எத்தனையோ பேர்கள் வருகிறார்கள். எத்தனையோ பேர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இதில்தான் அன்பு அன்பைத் தேடுவதும், இதயம் இதயத்தைத் தேடுவதும் நடந்து வருகிறது.

சண்முகம் கீழே இருந்த கூட்டத்தினரை மறுபடியும் வணங்கி விட்டுத் தன் அறைக்கு வந்தான். அங்கிருந்த வராந்தாவின் வழியாக ஒவ்வொரு காபினாகப் பார்த்துக்கொண்டே சென்றான். நல்ல வேளை, கப்பல் இன்னும் புறப்படாததால் எல்லாக் காபின்களும் திறந்திருந்தன.

அடுத்த காபினுக்குள் சண்முகம் தலையை நீட்டியவுடனே "வரட்டே" என்றார் ஒருவர்.

அவரைப் பார்த்தால் வயது ஐம்பது இருக்கலாம். பொன்னிற மேனி. தலையைத் தூக்கிக் கட்டியிருந்தார். நெற்றியில் சந்தனக்கீற்று. மேலே தும்பைப் பூ நிறத்தில் ஒரு மல் சொக்காய். கையில் ரகைஷக் கயிறு. சுண்டுவிரலில் ஒரு பித்தளைச் சாவியைக் கோத்திருந்தார். அவர் கையில் பித்தளை செல்லப் பெட்டி. எதிரில் நாலு சிஷ்யர்கள் கைகட்டி நின்றார்கள். இதைப் பார்த்த சண்முகம் "வணக்கமுங்க—" என்றான்.

அவரோ, வாயிலிருந்த வெற்றிலை பாக்கை ஒருபுறம் ஒதுக்கிக் கொண்டு, "நமஸ்தே. நான் உங்கள் வாசிப்புக் கேட்டிருக்கிறேன். நீங்கள் குருவாயூரப்பன் சந்நிதியில் வாசிச்சப்போ—நீங்கள் மகா வித்வான்" என்றார்.



"தங்களை நான்—" என்று சண்முகம் இழுத்தான்.

"என்னைக் கதகளி கருணாகர மேனன் என்பார்கள். கொஞ்சம் இரிக்கட்டே முறுக்கான்" என்று வெற்றிலைப் பெட்டியை எடுத்து அதிலிருந்து ஒரு பச்சைக் கொட்டைப் பாக்கைக் கத்தியால் சீவ ஆரம்பித்தார்.

சண்முகம் மரியாதையாக, "நான் இதோ வருகிறேன்" என்று புறப்பட்டு, அடுத்த அறை வாசலுக்கு வந்தான். அங்கு அவன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிட வைத்தது. கப்பலில் ஏறியதும் ஏறாததுமாக தபலா மாஸ்டர் சம்பு பிரசாதும், டான்ஸ் மாஸ்டர் மால்கோஷ் பாபுவும், ஐந்தாறு கோஷ்டி நாட்டிய கோவாப் பெண்மணிகளுமாக உட்கார்ந்து சீட்டு ஆடிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் அப்பொழுதே ஐந்தாறு போத்தல்கள் காலியாகி உருண்டு கிடந்தன. சண்முகம் முகத்தைத் திருப்பிக் கொண்டு அடுத்த அறைப்பக்கம் சென்றான்.

அங்கு சாரங்கிவாலா சந்தாமியான் சாயபு, உச்சி வேளைத் தொழுகையை நடத்திக்கொண்டிருந்தார். கப்பல் போனாலும் சரி, போகாவிட்டாலும் சரி, ஒரு வேளைத் தொழுகை போய்விடக் கூடாது என்றிருக்கும் அந்த உத்தமரைப் பார்த்துவிட்டு, அடுத்த அறைப்பக்கம் நடந்தான்.

ஆம், அந்த வரிசை முழுவதும் பார்த்தும் அவன் தேடிய மோகன உருவம் அவன் கண்களில் படவில்லை. ஷெனாய் வாசிக்கும் கரீம்கான், மணிபுரி நடனம் மங்கேஷ்கர் முதலியவர்களைத்தாம் கண்டான்.

கடைசி அறைப்பக்கம் வரும்போது உள்ளிருந்து ஒரு பெண் ஓடி வந்தாள். வந்த வேகத்தில் அவன்மீது ஒரு மோது மோதிக் கீழே விழப்போனாள். நல்ல வேளை சமாளித்துக்கொண்டாள்.

"மாப் கீஜியே!" என்றாள்.

இந்த ஒரு வார்த்தையைப் பேசி முடிப்பதற்குள் அவளுடைய கன்னம், கண், புருவம், கழுத்து எல்லாமே ஒரு கோணல் கோணி நிமிர்ந்தன.

"அதனால் பாதகம் இல்லை" என்றான் சண்முகம். அவன் அவளையே கவனித்தான்.

"ஓ ஆப்?" என்று கூறி அவன் முதுகில் ஒரு சாப்புக் கொடுத்தாள்.

சண்முகம் இந்த மாதிரி உறவு கொண்டாடும் விதத்தைப் பார்த்துச் சிரித்தான். ஆனால் அவளோ அந்தச் சிரிப்பைப் பொருட்படுத்தாமல், "நான்தான் டான்ஸிங் பியூட்டி தில்ரூபா" என்றாள்.

"ஆத்தா, நீ நின்னாலே ஆடுறியே, இன்னும் ஆட வேறே வேணுமா?" என்று சொல்லிக்கொண்டே சண்முகம் தன் அறைக்குத் திரும்பினான்.

எதிர் வரிசையில் ஆஸ்தான ஜோதிடர் அனுமான் பிரசாத் ஒரு கூடை சோழிகளைக் கீழே கொட்டி எண்ணிக்கொண்டிருந்தார். அடுத்த அறையில் கவி மகராஜ் காசிநாத பட்டாசார்யா, மகாராஜாவின் பிறந்த நாளுக்கான வாழ்த்துப்பா ஒன்றைப் புனைந்து கொண்டிருந்தார்.

"சிராவண மாசம் வந்தது. என் காதலன் முற்றத்தில் வந்து நின்றான். மது புளித்தது. மனம் இனித்தது. "ஜெய ஜெய மகாராஜா!" என்ற வீர கோஷத்தில் உன் எதிரிகள் செத்துவிழுந்தார்கள்" என்று அருமையாக ஒரு கவிதை புனைந்துகொண்டிருந்தார்.

அடுத்த அறையில் இருந்து "குடாக்கு" ஊதும் சத்தம் 'கொடகொட'வென்று கேட்டது. யூனானி வைத்தியர் ஹக்கீம் நஜ்மல் ஹுசேன் ஹுக்காவை ரசித்தவண்ணம் ஏதோ லேகியத்தை உருட்டி வாயில் போட்டார்.

இவ்வாறு அவன் தேடியவர்களைத் தவிர, அத்தனை பேரும் அங்கு இருந்தார்கள்.

ஆனால், அதே சமயத்தில் தருமன் வருத்தத்தோடு "தம்பீ! நான் இறங்கிடுறேன்" என்றான்.

"ஏன் தருமண்ணே?"

"நான் வயிற்றுப் பொருமலுக்காக லேகியம் வச்சிருந்தேன். பாருங்க. அதை கஸ்டம்ஸ்காரன் எடுத்துக்கிட்டான்."

"திங்க நல்லா இருந்திருக்கும்; எடுத்திருப்பான். பாவம், அவங்கதான் சாப்பிடட்டுமே."

"இல்லை தம்பி! அதுலே ஏதோ மயக்க மருந்து இருக்குன்னு சந்தேகப்பட்டுட்டான்."

"சந்தேகப்படாதே. நிசமாகவே இருக்குன்னு சொல்றதுதானே அண்ணே?"

"அடே போங்க தம்பி, நீங்க! அதெல்லாம் ஒண்ணும் அதிலே கிடையாது" என்று சொல்லிக்கொண்டே அறைப்பக்கம் திரும்பினான் தருமன்.

"என்ன அண்ணே! அவுங்க எங்கே இருக்காங்க?"

"கப்பல் மூக்குக்குப் பக்கத்திலே முதல் ரூம்."

ஆம், வடிவாம்பாளின் வேண்டுகோளின்படி, சண்முகத்தை வானிலும், மோகனாவைத் தலையிலுமாகத்தான் இறக்கியிருந்தார் வைத்தி.

இந்தக் கப்பல் பிரயாணத்தில் ஆரம்பத்திலும் முடிவிலுந்தான் 'கஸ்டம்ஸ்' இன்பம் இடையில்தான்: இந்தக் கஸ்டம்ஸ் தொந்தரவில் தருமன் சிக்கிவிட்டான். அதற்குக் காரணம், கஸ்டம்ஸ் அதிகாரி ஒரு வெள்ளைக்காரன். அவன் குரலைக் கேட்டாலே நடுக்கம் வரும். ஜான்புல் இனத்தானாகிய அவனுடைய குரல், குலைப்பதுபோல் இருக்கும். திருட்டுத்தனமாக வந்தவர்கள் அதைக் கேட்டவுடனேயே



நடுங்கிப்போய் உண்மையை ஒப்புக்கொண்டுவிடுவார்கள். அவனை யாரும் ஏமாற்ற முடியாது.

மகாராஜாவின் ஆட்களை அவன் சந்தேகிக்கவில்லை. சும்மா பேரை மட்டும் கேட்டு உள்ளே அனுப்பிக்கொண்டிருந்தான். வரிசையாக மகாராஜாவின் கோஷ்டியினர் வந்தார்கள். இடையே வேற்றாள் ஒருவன் மட்டும் வேண்டும் என்றே முகத்தில் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு கையில் ஒரு ரொட்டிப் பெட்டியுடன் வந்தான். அதிகாரியை நெருங்கியதும் தன் கையில் இருந்த ரொட்டிப் பெட்டியைத் தருமனுக்குத் தருமம் செய்துவிட்டான்.

ரொட்டிப் பெட்டியுடன் தருமன் அதிகாரியின் எதிரில் வரும்போது வெள்ளைக்காரன் தலையைக் குனிந்துகொண்டே, 'வாட்ஸ் யுவர் நேம்?' என்று வள்ளென்று விழுந்தான். அவன் இடிக்குரலில் பயந்து போய்த் தருமன், "இது என் ரொட்டிப் பெட்டி இல்லிங்க" என்று பதிலை உளறினான். வெள்ளைக்காரன் தலைநிமிர்ந்தான். ரொட்டிப் பெட்டியைக் கையில் வாங்கித் திறந்தான். உள்ளே வரிசை வரிசையாக கிரீம் பிஸ்கட்டுகள் அடுக்கப்பட்டிருந்தன. ஒரே மாதிரியான இரண்டு ரொட்டிகளுக்கு நடுவில் வெண்ணெய் 'கிரீம்' எல்லாம் வைத்து அழகாய் இருந்தது. அதைப் பார்த்த துரைக்குப் பசியோ என்னவோ, ஒரு ரொட்டியை எடுத்து விண்டான். உள்ளே இருந்த வெள்ளைக்கு நடுவே அபினி இருந்தது! உடனே கஸ்டம்ஸ் ஆபீஸ் முழுவதும் ஒரு பரபரப்பு உண்டாகிவிட்டது. திருடன் பிடிபட்டான். தருமன் தவித்தான்.

இதன் பயனாகத் தருமனின் பூரணாதி லேகிய டப்பா பறிபோயிற்று. முத்துக்குமார நட்டுவனாரின் ஒரு சத்தை சிவபுரி புகையிலை போயிற்று. வரதன் கையில் இருந்த மத்தளத்தை வாங்கி, அதில் இருந்த கருப்புநிறச் சாதம் அவ்வளவையும் கத்தியால் சுரண்டிவிட்டான்.

இதே சமயத்தில் மோகனாவின் அறையில் மரகதமும் மோகனாவும் பின்வருமாறு பேசிக்கொண்டிருந்தார்கள். "இல்லை மரகதம், நீங்கள் எனக்கு இந்தச் சன்மானம் செய்யவே கூடாது. நான் உங்களுக்கு என்ன நன்மை செய்துட்டேன்?" என்றாள் மோகனா.

"ஏன் அக்கா, என் கல்யாணத்திலே நீ வந்து ஆடவில்லையா?"

"நான் ஆடியதுக்குத்தான் பணமும் வைரத்தோடும் தந்தீங்களே!"

"மோகனா, என் கல்யாணத்தால்தான் உன் காதல் வாழ்க்கையே வீணாயிற்று. எங்கள் வீட்டு வண்டியால்தான் உங்க வாழ்வுக்குப் பங்கம் வந்தது. என் புருஷனாலேதான் உங்க அத்தான் உன் மேலே கோபிச்சுக்கிட்டாரு."

"இல்லை மரகதம், நானும் அவரும் நெருங்கிப் பழக உங்க அத்தான்தான் காரணமாக இருந்தார். அவராலேதாம் இவர் பிழைத்தார்."

"அதெல்லாம் இல்லை. நீ இந்த அட்டிகையை வேண்டாம் என்று சொல்லக்கூடாது!"

"இல்லை மரகதம். இது என் பொருள் அல்ல. அதைப் பார்க்கும் பொழுதெல்லாம் என் அவலப்பிறவி என் நினைவுக்கு வரும், எங்கம்மாவின் தவறெல்லாம் நினைவு வரும்."

மயக்கத்தில் கிடந்த வடிவாம்பாள் தலையைத் தூக்கிப் பார்த்தாள்.

"இல்லை மோகனா, நீ அதை வேண்டாம் என்று சொல்லாதே. என்னமோ அந்த நகையைப் போட்டுக்கொண்டால் உன் குலம் உனக்கு ஞாபகம் வரும் என்கிறாய். அது தப்பு. உன் குணந்தான் ஞாபகம் வரும். நீ எங்க அத்தானிடம் என்ன சொன்னாய், நினைத்துப் பார். 'ஐயா, உங்கள் மனைவியின் வாழ்க்கையை வீணாக்காதீர்கள், அந்தப் பச்சைக் கிளியைப் பாழ்படுத்தாதீர்கள்' என்று சொன்னியாமே. அந்த வார்த்தை ஒண்ணொண்ணும் ஒரு வைரம் இல்லையா? அதற்கு இந்த அட்டிகை ஈடாகுமா? அக்கா, ஒரு குடும்பப் பெண் உனக்குக் குடுத்த பரிசாக இது இருக்கட்டும். மோகனா, உன்கிட்டச் சொன்னால் தப்பு இல்லை. எங்க அத்தான் நீ சொன்ன வார்த்தையை எங்கிட்ட சொல்றபோது அப்படியே அழுதுட்டாங்க. 'உனக்கு அவர் செய்த தப்புக்கு உன் காலில் விழுவேன்' என்றுகூடச் சொன்னார் அக்கா. இதை வேண்டாம்னு சொல்லாதே. நீ இதை வாங்கிக்கொள்ளத்தான் வேண்டும்" என்று மரகதம் இரு கைகளையும் கூப்பிக் கெஞ்சினாள்.

மோகனாவோ இக்கட்டான நிலையில் தவித்தாள். நல்ல வேளைக்கு அப்போது வரதன், "ஆமா மோகனா, இதிலே ஒன்னும் தப்பு இல்லே. சும்மா தங்கச்சி குடுக்குது, வாங்கிக்கோ" என்றான்.

வடிவாம்பாளுக்கோ ஏற்கனவே மயக்கம். அதில் இந்த நகையை வேறு திருப்பிக் கொடுப்பதாகச் சொன்னதும் தலை சுற்றி ஆடினாள். மோகனா அதை மரகதத்தின் கையில் இருந்து திரும்பவும் பெற்றுக் கொண்ட பிறகுதான், தலையில் இருந்த கையை எடுத்தாள். மரகதமும் இதுவரை வெளியே நின்ற மைனரும் கீழே இறங்கி வந்தார்கள். இறங்கும் வழியில் தட்டில் வைத்தி நின்றார். "ஏது மைனர்வாள், கடைசியாக வழி அனுப்ப வந்தாப்பலே இருக்கு" என்றார் வைத்தி.

"நீ இங்கிலாந்திலேயே இருந்துவிடமாட்டே! தஞ்சாவூர்ப் பக்கம் வருவே" என்றார் மைனர்.

"எங்கே சார் அதுக்கெல்லாம் டயம்? மைனர் விட்டாலும் மகாராஜா விடமாட்டேங்கறாரே!"

"வைத்தி குணம் இன்னும் புரியல்லே போலிருக்கு!"

"நான் என்ன சார் ரௌடியா, போக்கிரியா, ஜமீன்தாரா? அடி ஆள் வச்சிருக்கேனா! என் கலை உண்டு, நான் உண்டு. சரி, நீங்க போயிட்டு வரேனா? கப்பல் புறப்பட்டுடும்" என்று சொல்லிக் கொண்டே அந்த இடத்தை விட்டு நகர்ந்தார் வைத்தி.



சண்முகத்தின் அறைக்கு வந்தார் மைனர். தன்னைக் காப்பாற்றும் விஷயத்தில் மைனர் காட்டிய அக்கறைக்கு வணக்கம் செலுத்தினான் சண்முகம்.

ஆனால் மைனரோ, "அதெல்லாம் சரிதான். மோகனாவைக் கவனிச்சுக்குங்க. அவ அம்மா பகை வந்தாலும் பாதகமில்லே."

"என்ன சொல்றீங்க, புரியல்லியே!"

இல்லை, வைத்தி வருகிறான், ஜாக்கிரதை" என்றார் மைனர்.

சண்முகம் சிரித்தான். அதற்குள் மரகதம், "ஏன் நாயனக்காரரே, என்ன, கப்பலிலேகூடத் தள்ளி உட்கார்ந்துட்டீங்க!" என்றாள்.

"நம்மைத்தான் விலக்கி வைச்சுட்டாங்களே தங்கச்சி!"

"எப்ப கல்யாணம்?"

"என் தங்கச்சி?"

"என் கல்யாணத்திலேதான் வாசிக்க வராமல் ஏமாத்திப்பிட்டீங்க. உங்க கல்யாணத்துக்காவது நாங்க வரலாம் இல்லியா?"

"அதுக்காகக் கவலைப்படாதே தங்கச்சி. உன் மகன் காது குத்துக்கு வந்து வாசிக்கிறேன்" என்றான் சண்முகம்.

"அதெல்லாம் சரி, நீங்க பாட்டிலே அங்கே ஏதாச்சும் கோவிலிலே மோதிரத்தை மாத்திக்கிட்டு வந்துடாதீங்க. எங்க அத்தான் உங்க கல்யாணத்துக்குக் கோவில் மேளக்காரனுக்குச் சொல்லி இருக்காரு" என்று அந்த மணிமொழியாள் வாய் முத்து உதிர்க்கவே, சண்முகம் சிரித்தான். இவ்வாறு சிரிப்பும் களிப்புமாகத் தம் உயிர்த் தோழனாக ஆகிய சண்முகத்திடமிருந்து விடை பெற்றார், அந்த உத்தமர் சிங்கபுரம் மைனர்.

அப்பொழுது மணி பன்னிரண்டு. ஆனால், மகாராஜா இன்னும் வரவில்லை. ஸ்ரீமதி கனகாம்பரமும், வைத்தியும் வித்துவானும் மகாராஜாவுக்காக வழியைப் பார்த்தவண்ணம் நின்றார்கள்.

மணி ஒன்று ஆயிற்று. மகாராஜாவோ வரக் காணோம். கப்பலில் இறக்கி இருந்த ஏணிகள் எல்லாம் ஒவ்வொன்றாக எடுக்கப்பட்டன.

மணி இரண்டு ஆயிற்று. மூன்றும் ஆயிற்று. கப்பல் புறப்படுவதாக இல்லை. வித்துவான்களுக்குள் கசமுச என்று பேச்சுக் கிளம்பியது.

"வேட்டை கிடைத்திருக்காது. அதனால் பூஜை ஆயிருக்காது. அதனால் பயணம் தடைப்பட்டிருக்கும்" என்றார் ஜோதிடர்.

"இல்லையே, வேட்டைக்கு நேற்றைக்கே ஏற்பாடு செய்தாச்சே" என்றாள் கனகாம்பரம்.

"என்ன, நேத்திக்கே கட்டாச்சா?" என்றார் வைத்தி.

"இல்லை, நேற்றே ஒரு மானைப் பிடித்து மாத்திலே கட்டி வைத்திருந்தார்கள். மகாராஜா அவசரமாக ஊருக்குப் போகணும்னா

அதுதான் வழக்கமாம். வந்து, மரத்திலே இருக்கிற மானைத் சுட்டுவிட்டு, அப்புறந்தான் புறப்படுவாராம்" என்றார் கதகளிக்காரர்.

"இப்ப ஏன் ஊட்டிக்குப் போனார்?"

"நாய்க்கு உடம்பு சரியில்லை. அதை ஊட்டியிலே விட்டுட்டு வரலாம்னு போனார். அது அவரைப் பிரிய முடியாமல் கத்தி இருக்குது. வயத்திலே ஏதோ கோளாறாம்!"

"ஏன், நாலு நாளைக்குப் பட்டினி போட்டா போகுது" என்றார் கதகளிக்காரர்.

"எப்படிப் போட முடியும்? அந்தப் புஸ்தகத்திலே கண்டபடி ஆகாரம் குடுக்க வேண்டாமா? முட்டையிலேதான் ஏதோ கெடுதல்."

"ஏன், முட்டையிலே என்ன?"

"ஏதோ ஒரு ஜாதிக் கோழி இருக்காம். அது விஜிடபின் முட்டை இடுமாம்" என்றார் கருணாகரர்.

"கத்தரிக்கா முட்டை இடுமா?" இது வைத்தி.

"இல்லை. அந்த முட்டையிலே குஞ்சே வராதாம். அந்த முட்டையைக் கொடுக்கச் சொல்லிப் புஸ்தகத்திலே எழுதியிருக்கான். மகாராஜாவும் அதற்காகவே 12 கோழி வளர்த்தார். பாவம், அந்தக் கோழிகள் இருக்கும்வரை நாய் நல்லாத்தான் இருந்தது" - இது ஜோதிடர்.

"ஏன், கோழிக்கு என்ன ஆச்சு? கோமாரியோ?" இது ஹக்கீம்.

"இல்லை ஒரு நாள் அந்தக் கோழிகளை எல்லாம், இந்த நாய் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடிப் போய்க் கடிச்சுக் குதறிவிட்டது. அதுக்கப்புறம் எந்த முட்டையைக் கொடுத்தாலும் நாய் திங்கறதில்லையாம்" என்றார் ஜோதிடர்.

"சரிதான் ஓய். முட்டையைத் தின்னப் புடிக்காமல்தான் நாய் கோழிகளைக் கொன்றிருக்கிறது. அது புரியாமல் மறுபடியும் முட்டையையே கொடுத்தால்?" என்றார் கவிஞர். இதே சமயம் கப்பல் மணி கணகணவென்று அடித்தது.

"மதன்பூர் மகாராஜாவின் கோஷ்டியாருக்கெல்லாம் ஒரு வார்த்தை. ஸ்ரீ மகாராஜா அவர்கள் ஏதோ கஸ்டம்ஸ் தகராறினால் இந்தக் கப்பலில் பிரயாணம் செய்வதை நிறுத்திவிட்டார்கள். ஆதலால், அவருடைய கோஷ்டிக்காரர்கள் எல்லாம் இது கண்ட ஐந்து நிமிஷத்தில் கீழே இறங்கிவிடவும்" என்று காப்டன் டம்பு தமிழ் போன்ற ஒரு பாஷையில் கூறினார்.

கப்பலில் ஒரு குண்டு விழுந்து இருந்தால்கூட, இவ்வளவு ரகளை ஏற்பட்டு இருக்காது. இந்த வார்த்தையைக் கேட்டவுடனே குழப்பமும், கூச்சலும் அதிகமாயிற்று. வடிவாம்பாள் வயிற்றில் நெருப்புப் பிடித்தது போல் இருந்தது. மோகனாவுக்குத் தங்கள் இருவரையும் தாய் பிரித்து வைப்பதைக் கண்ட போதே, பயணத்தில் உள்ள அக்கறை போய்விட்டது. இப்பொழுது ஊருக்குப் போக



வில்லையென்ற செய்தி கேட்டதும், ஆனந்தம் ஏற்பட்டது. முதலிலே ஓடிப் போய்ப் படிகளில் நிற்போம். சண்முகம் இறங்கும்போதாவது பார்ப்போம்' என்று "அம்மா, புறப்படுங்க" என்றாள்.

சண்முகத்தின் அறையில் முத்துராக்கு தவுல்களைத் தூக்கிக் கொண்டார். தருமன் படுக்கையையும் நாதஸ்வரத்தையும் தூக்கிக் கொண்டான். சந்தாமியான் ஒரு கையில் சாரங்கிப் பெட்டியையும் இன்னொரு கையில் வெற்றிலைப் படிக்கத்தையும் எடுத்துக் கொண்டார். வேடி கனகாம்பரம், தம்முடைய தோல் பையைத் தேடினார். பொய்க்கால்குதிரை பொன்னன் குதிரைக்குள் புகுந்து கொண்டான். அதை வேறு தலையில் தூக்கிக்கொண்டு இறங்காமல், படி வழியே ஆடிக்கொண்டே இறங்கிவிடலாம் என்ற உத்தேசம் அவனுக்கு. எங்கும் குழப்பமாக இருந்தது.

இந்நிலையில் ஸ்ரீமான் மதன்பூர் மகாராஜாவே, தம் பரிவார சகிதமாகப் படிகளின் மேல் ஏறி வந்தார். அப்போது மறுபடியும் காப்டனின் குரல் ஒலித்தது. "த்ரீ சீர்ஸ் பார் மகாராஜா" என்றார் காப்டன்.

என்ன, ஏது என்று புரியாமலே "ஹிப் ஹிப் உரே!" என்றார் வைத்தி. கூட்டமும் "ஹிப் ஹிப் உரே" போட்டது. மகாராஜா சிரித்த முகத்துடன் காணப்பட்டார்.

அவருக்குப் பின்னால் நாலு கால்களிலும் ஊசி குத்தி நடக்க முடியாமல் நொண்டிக்கொண்டே அந்த 'மோகன்' வந்தது.

## எண்பத்து ஆறாம் அத்தியாயம்

# மிஸ்டர் வைத்திஜி



மகாராஜா கப்பலில் வரமாட்டார், அவருடைய ஆட்கள் இறங்கலாம் என்று காப்டன் விடுத்த அறிக்கையும், அடுத்த நிமிஷத்தில் அதே காப்டனின் வரவேற்பையும், மகாராஜாவே ஜாம்ஜாம் என்று நடந்து வந்து கப்பலில் ஏறிய அழகையும் கண்டு எல்லோரும் திகைத்தனர். ஆனால் திகைப்பை வெளிக்காட்டாமல் நின்றார் வைத்தி. அவருக்கும் ஏன் இந்தத் தகராறு என்று அறிய ஆவல் உண்டு.

மெல்ல முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு மகாராஜாவின் பின்னே நடந்தார். அடிக்கடி நொண்டி நடக்கும் அந்த நாயைப் பார்த்தார். ஒரு தரம் வருத்தம் ததும்பும் முகத்துடன் "உச் உச்" என்று சூள் கொட்டினார். இதற்கு அந்த நாய் திரும்பவில்லை. ஆனால், மகாராஜா திரும்பினார்.

"க்யா வைத்திஜி?" என்றார்.

"புவர் மோஹன்" என்றார் வைத்தி.

"நோ, அவன் ரிச் மோகன். என் ராஜாங்கமே போனாலும் நான் மோகனை விடமாட்டேன். என்னைச் சுற்றி இருக்கிறவங்கள் எல்லாரிலேயும் அவன் ஒருத்தன்தான் யோக்யன், வைத்திஜி."

வைத்திக்கு இந்த வார்த்தை என்னவோ செய்தது. இருந்தாலும் அவர் விஷயம் தெரிந்தவர் ஆதலால், மகாராஜா இதில் நம்மைச் சேர்த்துப் பேசவில்லை என்று நிச்சயம் செய்துகொண்டார்.

"எஸ், யுவர் ஹைனஸ். ஆனால், சே சே! நாலு காலும் சின்னச்சாமி கடை அப்பமாட்டமா வீங்கிப் போச்சே" என்றார் வைத்தி.

மகாராஜாவிடம் கருணை காட்டியிருந்தால்கூட, அவர் இவ்வளவு அன்பு பாராட்டியிருக்கமாட்டார். மோகன் விஷயத்தில் வைத்தி காட்டிய அக்கறை மகாராஜாவின் இதயத்தைத் தொட்டுவிட்டது. மகாராஜா கம்பீரமாகப் பேச ஆரம்பித்தார்.

"நம்ப கிட்டியா இவங்க ரூல்ஸ் எல்லாம் காண்பிக்கிறாங்க. நான் மாத்திரம் நினைச்சா—"

"இந்தக் கப்பலையே விலைக்கு வாங்கிடமாட்டீங்களா?"

"பயணத்தையே ரத்து பண்ணிடமாட்டேனா? நான் அப்படிச் சொன்ன பிறகுதானே அவுங்க ஒத்துக்கிட்டாங்க."

"போறான் விடுங்க. அவங்களுக்கு என்ன தெரியும்?"

"நம்ப பைஸா கொடுக்கிறோம் வைத்திஜி, சும்மா இல்லே."

"எஸ் யுவர் ஹைனஸ்."

ஒரு ரகசியம். இன்னும் வைத்திக்கு மகாராஜா எதைப்பற்றிப் பேசுகிறார் என்பது தெரியாது. அவர் சொல்லும் பதிலுக்கு அது அவசியமும் இல்லை. ஆனால், கூடியவரையில் பட்டுக்கொள்ளாமலேயே பதில் சொல்லிக்கொண்டு வந்தார்.

"க்யா வைத்திஜி, அறுபது டிக்கெட் வாங்கியிருக்கேன். இருபது பஸ்ட் கிளாஸ்! ஏ காபின் முழுவதும் ரிஸர்வ் பண்ணியிருக்கேன். ஒரு ஆளுக்கு லண்டனுக்கு என்ன சார்ஜ் தெரியுமா?"

"எஸ் யுவர் ஹைனஸ்."

"என்ன?"

"சொல்லுங்கோ !"

"ஒரு ஆளுக்கு 85 பவுன்."

"எஸ் யுவர் ஹைனஸ்."

"இவ்வளவு பணத்தைக் கொடுத்துவிட்டு இவங்கள் சொல்படி கேட்டு நடக்க நான் என்ன முட்டாளா?"

"எஸ் யுவர் ஹைனஸ்."

"என்ன எஸ்?"



"நல்ல கேள்வி ஹைனஸ்."

"இந்த கஸ்டம்ஸ் ஆபீசர் மாத்திரம் நான் சொன்னதுக்கு ஒத்துக்கலே. நான் சீமைக்கு டெலிகிராம் பண்ணி, நேரே பேசுவதாக இருந்தேன். இந்தக் கப்பலிலே நான் வரணும்னா என் நாயும் வரணும்."

"எஸ் யுவர் ஹைனஸ், உங்க இரண்டு பேரையும் பிரிக்க முடியுமா?" என்றார் வைத்தி. அவருக்கு இப்போதுதான் நாய் விஷயமாக கஸ்டம்ஸில் ஏதோ தகராறு என்றும், அதனால்தான் மகாராஜா புறப்படத் தாமதம் என்பதும் புரிந்தது.

"என்ன, மோகனுக்கா இடம் இல்லேனுட்டான்! இடியட்! இவங்களுக்கு மோகனைப்பத்தி என்ன தெரியும்? இவங்க மாத்திரம் அதை ஏதாவது கேவலமாகப் பேசியிருந்தாங்கன்னா, நான் மான நஷ்ட வழக்குப் போடச் சொல்லுவேன் யுவர் ஹைனஸ்."

"நோ நோ—கேவலமாக ஒன்னும் பேசலே. அதைக் கப்பலிலே ஏத்த மாட்டேன்னான்."

"ஏன்?"

"அதை லண்டனிலே இறங்கவிட மாட்டாங்கன்னான்."

"மகாராஜா, எனக்கு ரொம்பக் கோபம் வரது. இன்னிக்கு நாய்க்குச் சொல்றவன், நாளைக்கு நமக்கே சொல்ல மாட்டான்னு என்ன கியாரண்டீ."

"அது இல்லே வைத்திஜி. உம்மை ஏத்தமாட்டேன்னு சொன்னா, எனக்குப் பாதகம் இல்லே. நாயைச் சொல்லப்படாது பாருங்கோ. நீங்க அடுத்த கப்பலிலே வரலாம். நாய் என்னோடு கூடத்தானே வரணும்."

"ஓகோ— அதுவா பாயிண்டு. என்னதான் சொன்னாங்க?"

"எங்கே சார் நாய்க்கு லைசென்ஸ்னு கேட்டான்."

"உங்க நாய்க்குக்கூடவா? ஏது, இனிமே உங்களுக்கும் கேட்பான் போலிருக்கே. உம்... அப்புறம்?"

"விவசாய மந்திரிகிட்டே லைசென்ஸ் வாங்கணும். அப்படீன்னு ரூல் பேசினான்."

"இது என்ன வெண்டைக்காயா, கத்தரிக்காயா? விவசாய மந்திரிகிட்ட என்ன லைசென்ஸ்?"

"லைசென்ஸ் இல்லாட்டி நாயை இறங்கவிட மாட்டாங்களாம்."

"இவங்க என்ன இறக்கிவிடுவது? நீங்க இறங்குறபோது, அது தானே வாலை ஆட்டிக்கொண்டு பின்னாலேயே இறங்குது!"

"அதாவது லண்டனிலே ஒரு நாய் இறங்கணும்னா, முன்னாலேயே அக்ரிகல்சர் மினிஸ்டர் கிட்டே லைசென்ஸ் வாங்கினாத்தான் அதை அந்த ஊரிலே இறங்கவிடுவாங்களாம். இல்லேன்னா, ஆறு மாசம் 'குவாரண்டைன்'லே அடைச்சுப் போட்டுடுவானாம்."

"ஸில்லி! குவாரண்டைன்லே நாய் செத்துப் போய்விட்டால்?"

"நான் ஸைட் போட்டு ஆயிரம் பவுன் வாங்கிட மாட்டேன்!"

"ஆயிரம் பவுன் என்ன ஹைனெஸ் உங்களுக்கு. ஒரு மணி நேரச் செலவு. புவர் மோகன் கிடைப்பானா?"

"சபாஷ் வைத்திஜி, டைட்டியே வைத்திஜி, நிற்கிறீங்களே!"

"ஐயோ அபசாரம். பின்னே எப்படி நாயைக் கூட்டிக்கிட்டுப் போறது அங்கே?"

"இங்கேயிருந்தே, 'விவசாய மந்திரி, ஒயிட் ஹால், லண்டன்'னு அட்ரஸ் போட்டு கப்பல் கம்பெனி மூலமாக லைசென்சுக்கு மனுப் பண்ணணும். நாம் போய் அங்கே இறங்கும்போது, லைசென்சு காத்துக்கிட்டு இருக்கும்."

"இரண்டு மாதத்துக்கு முன்னாலே எப்படி சார் வாங்கறது? நடு வழியிலே கப்பலிலே நாய் செத்துப் போகுது. (கடவுள் தடுப்பாராக) அப்புறம் லைசென்ஸை நம்ப கழுத்திலே கட்டிக்கிட்டு இறங்கிறதா? உம். அப்படிச் சொன்னாங்கன்னா ஒருவரி எழுதிட்டுப் போக."

"அதிலேதானே வந்தது தகராறு. நான் எழுதிக்கொள்ளச் சொன்னேன். அங்க அடையாளங்களைக் கேட்டான்."

"யாரு கிட்ட, மோகன் கிட்டவா?"

"என்னிடம்."

"இதை உங்ககிட்டே கேட்பானேன்? நாயைப் பாத்தால் தெரிகிறது. நீங்கள் இந்த ஸில்லி கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லக் கூடாது!"

"அச்சாஜி, எக்ஸிபாத். நான் சொல்லவில்லை. நாயைப் பாத்துக்கனு சொன்னேன். மோகன், கிட்டத்திலே வரவிடுவானா? ஒரு சத்தம் போட்டது பாருங்க, பயந்து விழுந்துட்டாங்க. அப்புறம் தள்ளி நின்றே, கருப்புலே வெள்ளை 17 புள்ளிகள், வாலில் மயிர் அதிகம், முகம் எஜிப்தியன் மம்மி மூஞ்சி மாதிரி இருக்கும். எல்லாம் எழுதிக் கொண்டான். பிறகு என்னிடம் ஜாதி, மதம், தொழில், பெயர், தாயார், தகப்பனார், ஆணா பெண்ணா, வயசு என்ன, என்ன சாப்பிடும், கல்யாணம் ஆகியிருக்கா என்று எல்லா விவரமும் கேட்டான். சொன்னேன், கடைசியிலே அதுக்கு லண்டனிலே என்ன விலாசம்னு கேட்டான்."

"நல்ல வேளையா போச்சு. நாய்க்கு எப்படி விலாசம் சொல்றது? அதுபாட்டிலே சங்கிலியை அறுத்துக்கொண்டு வீதியிலே ஓடி விட்டால்?"

"நாய் விலாசத்தைக் கேக்கலே சார். நம்ப விலாசத்தைக் கேக்கிறான். நீ எப்போ வந்து அங்கே இறங்குவே, நாயை எங்கே எங்கே கூட்டிக்கிட்டுப் போவே?"

"என்ன சார் அக்கிரமம்! நாய் மூலமா நம்ப மூவ்மென்டை தெரிஞ்சுக்கப் பாக்கறானே!"



"நான் இஷ்டப்பட்ட இடத்துக்குப் போவேன். நாயைக் கூட்டிக் கிட்டுப்போவேன் என்பது என்ன நிச்சயம் என்று கேட்டேன். நான் அடுத்த கேள்வியைப் பாரும். நாய்க்கு நீ எந்த மிருக வைத்தியர் கிட்டே வைத்தியம் பார்ப்பே?"

"இதுக்கெல்லாம் எப்படி ஹைனெஸ் பதில் சொல்றது? ஸில்லி கொஸ்சின்ஸ்."

"பதில் சொல்லணுமான்னு கேட்டேன். முடியாதுன்னா இறக்கி விடுவேன்னான். நீ என்னடா சொல்றது, நானே இறங்கறேன் என்று சொன்னேன்."

"எக்ஸலெண்ட் ஹைனெஸ், அப்புறம்?"

"ஏதோ ஒரு டாக்டர் பேரைக் கப்பல்காரன் சொன்னான். அவன் எழுதிக்கொண்டான். பாரத்திலேயும் கையெழுத்து வாங்கிக் கொண்டான். 'மகாராஜா கோவிச்சிக்காதீங்கோ, இறங்காதீங்கோ, எக்ஸ்யூஸ்மீ' என்று அந்த வெள்ளைக்காரன் சொன்ன பிறகுதான் நான் கப்பலில் ஏறினேன்."

"சபாஷ் மகாராஜ், சபாஷ். இந்த வெள்ளைக்காரன்கள்கிட்டே மாத்திரம் விட்டுக் கொடுக்கப்படாது."

"நோ... நோ... நான் எங்க ரெசிடெண்டுக்குக்கூட பயப்பட மாட்டேனே" என்று நடுக்கத்துடன் சொன்னார் மகாராஜா.

"ஆமா, மோகன் கால் நொண்டுதே, என்ன?"

"புவர் மோகன் கொன்னுப்பிடப் பாத்தாங்க வைத்திஜி. டைப்பாய்ட், காலரா, மஞ்சள் காய்ச்சல், நீலக் காய்ச்சல், வைத்தியம், வங்கு, சொறி, வெறின்னு எட்டு ஊசியை இரண்டு காலிலேயும் குத்திப்பிட்டாங்க."

"அட பாவிகளா? சீமையிலே போய் அது இறங்கப்படாதுன்னே செய்திருக்காங்க" என்று கண்ணீர் விட்டார் வைத்தி.

அவருக்கு வந்த பரிதாபத்தில் மகாராஜாவைக்கூடத் தடவிக் கொடுத்திருப்பார். அவர் தலை எங்கே போய்விடப் போகிறது இன்னும் பத்து நாள் கழித்துப் பார்த்துக்கொள்வோம் என்று விட்டுவிட்டார். இருந்தாலும் தம் பச்சாதாபத்தை மகாராஜா அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசையில், "புவர் மோகன்" என்று சொல்லி, மெதுவாகப் போய் மோகனைத் தடவிக் கொடுத்தார். அந்தப் பாழும் நாய் வைத்தியின் கருணையைப் புரிந்துகொள்ளாமல் "ளொள்" என்று சீறி விழுந்து கடிக்க வந்தது.

மேல்தளத்தில் உள்ள ஸ்பெஷல் வகுப்பில் மகாராஜா போய் அமர்ந்ததும், "என்ன கனகாம்பரம், எல்லாரும் வந்தாச்சா, அட்டென்டென்ஸிலே கையெழுத்து வாங்கினீர்களா!" என்றார் மகாராஜா.

அந்த அம்மாளோ, "எல்லாரும் போட்டுவிட்டார்கள். அந்த மிஸ்டர் சண்முகசுந்தரம் மாத்திரம் போடவில்லை" என்றாள்.

"ஏன்?"

"அவர் பாட வந்திருக்கிறாராம், படிக்க வரவில்லையாம்."

மகாராஜாவின் முகம் சிவந்தது. இதைப் பார்த்த வைத்தி, "யுவர் ஹைனஸ், கோவிச்சுக்கப்படாது. அந்த ஆள் குணம் அப்படி. நல்லவர் தாம். ஆனால் கொஞ்சம் அதிகப் பிரசங்கி" என்றார்.

✦ ✦ ✦

கப்பல் புறப்பட்டது. "ஏண்டா, எத்தனை மைல் சொன்னாங்க?" என்று மயக்கத்தில் ஆடியவண்ணம் கேட்டாள் வடிவாம்பாள்.

"'ஓ ஜகதம்பா' கீர்த்தனம் பாடி முடிச்சுடலாமுங்க. எண்ணூறு காத வழியாம்" என்றான் வரதன்.

"ஐயோ, எப்படிடா? இங்கிருந்து கொழும்பு?"

"அது 590 மைலாம்."

"இருக்காது வரதா. நம்ம வேதாரண்யத்திலே கட்டுமரத்திலே ஏறினா, விளக்கு வைக்கப் போயிடலாமாமே."

"அது கட்டுமரத்துக்கு. மகாராஜா கப்பல் அப்பிடியா போகும். அது கண்டி, கதிர்காமம், திரிகோணமலை, சிவனடிபாதம் எல்லாம் சுத்தி, இலங்கையைப் பிரதட்சிணம் பண்ணிக்கிட்டில்லே போகுது!"

"ஏண்டா அப்பிடி சுத்துது?"

"சீதையம்மன் சிறை இருந்த இடமில்லே? அரமனை சோசியர் அனுமான் பிரசாத் அப்படித்தான் சொல்லி இருக்காராம். கொழும்பிலிருந்து பம்பாய் 890 மைல்."

"என்ன, பம்பாய்க்கு வந்தா போகணும். ஏன் இவரு கழுத்தைச் சுத்தி மூக்கைத் தொடராரு?"

"நடுப்பர மகாராஜாவுக்குப் புறந்த நாள் வருதாம். அதைக் கப்பலிலேயே கொண்டாடப் போறாங்களாம்."

"அப்பிடியா? அன்னிக்கு மகாராஜாவைப் பார்த்து ஒரு கும்பிடு போட்டுடணும். மகாராஜான்னா மகாவிஷ்ணு அம்சம், தெரியுமில்லே. ஆமா-- பம்பாயிலே இருந்து--"

"மக்கம்-மதினம் இருக்குதில்ல, அரபு நாடு. அங்கே ஏடன்னு ஒரு ஊரு. இது 1665 மைல்."

"அட, நம்ம நாகூர் ஹாஜியாரு அங்கேதானா போயிட்டு வராரு, வருஷாவருஷம். உம், அப்புறம்?"

"செங்கடல்னு பேராம். கடலே ரத்தம் ஆட்டம் இருக்குமாம். அங்கே சூயஸ் கால்வாய்னு ஒண்ணு இருக்குதாம். கப்பல் போறதுக்காகவே ஆழமா வெட்டியிருக்காங்களாம். அந்த சையது துறைமுகம் ஏடனிலே இருந்து 1310 மைல். அப்புறம் மால்டான்னு குங்குமப் பொட்டாட்டம் ஒரு தீவு இருக்குது. அது 940 மைல். அப்புறம் ஸ்பெயின் தேசம் வருது. அங்கு ஜிப்ரால்டர்னு ஒரு ஊரு தாண்டி, 2310 மைல் போனா லண்டன் வருது."



"அம்மாடியோ! ஆமா, நீ இந்த விஷயமெல்லாம் யாரு கிட்டத்திலே கேட்டே?"

"கப்பல்லே ஒரு மாலுமி இருக்கிறாரு. அவருக்கு மிருதங்கத்திலே பைத்தியம். அவருதான் இதெல்லாம் சொன்னாரு."

"ஆக மொத்தம்?"

"ஆக மொத்தம்-ஏழாயிரத்து எழுநூத்து அஞ்சு மைல்."

"சரி எட்டாயிரம். ஆமா, ஏண்டா, கடல்லே ரோடா, கைகாட்டி மரமா! ஏண்டா, வழி கிழி தவறிடாதே?"

"தவறினா என்ன? செட்டி கப்பலுக்குச் சிக்கலான்தான் துணை."

"சிக்கலான் இல்லே, செந்தூரான்னு சொல்லு" என்று ஆத்திரத்துடன் மகனைப் பார்த்தாள் வடிவாம்பாள்.

ஏற்கெனவே கொஞ்சம் கிறுகிறுப்புண்டு. எட்டாயிரம் மைல் கப்பலில் போக வேண்டுமென்று கேள்விப்பட்டவுடனே, வடிவாம்பாளுக்கு மேலும் தலைசுற்ற ஆரம்பித்தது. கப்பலில் இயந்திரங்கள் ஓடிக்கொண்டே இருப்பதால், கப்பல் எப்பொழுதும் நடுங்கிக்கொண்டே இருக்கும். அந்தக் கப்பல் நடுக்கமும், வடிவாம்பாளின் நடுக்கமும் ஒன்றுசேர்ந்துகொண்டன. தலையில் கையை வைத்துப் படுத்தாள்.

"அம்மா, ஒரு எலுமிச்சம் பழத்தைக் கடிச்சுப் பாருங்கோம்மா. சரியா போயிடும்."

"ஐயோ, பல்லு போயிடும்டா, எனக்கு வேண்டாமே. இந்தக் கப்பலை நிறுத்தச் சொல்லேன், இறங்கிடுறேன்."

"உரலிலே தலையைக் கொடுத்தா விட்டுடுவாங்களா? இன்னும் இரண்டு மாசம் கழிச்சுதான் இறங்கணும்."

"ஐயோ, 60 நாளா! எப்படியடா ரெண்டு மாசம் பட்டினி கிடப்பேன்?"

"எதுக்காகப் பட்டினி கிடக்கணும்? இந்த மயக்கம் இப்படித்தான் அம்மா வருமாம். சாப்பிட்டா உடனே போயிடுமாம்."

"ஏதுடா? சாப்பிட்றதா? இல்லே வரதா. இது மயக்கம் இல்லே. எனக்கு உடம்பு என்னமோ பண்ணுது."

"நான் வேணும்னா கப்பல் டாக்டரைக் கூட்டிக்கிட்டு வரவா அம்மா?"

"ஐயோ, வேண்டாம். கப்பலிலே சீக்கு வந்தா, தொலைஞ்சோம். டாக்டர் சீக்காளியைத் தனியா கொண்டுபோய் அடைச்சுடுவாராம். ஏன் வரதா, கப்பல் புறப்பட்டுடுத்தோ?"

"இந்தா, அதுதான் ஆடுதே, தெரியலே!"

"மோகனா எங்கே வரதா?"

"ஏம்மா, நான்தான் இங்கே உட்கார்ந்திருக்கேனே, பாத்திங்களே" என்றாள் மோகனா.

"ஐயோ, மோகனா! என்னமோ பண்ணுது கண்ணு."

"வெத்திலை பாக்கு போட்டுக்கோங்கம்மா, சரியா போயிடும்."

"இதோ பாரு, இந்த மயக்கம் போகாது. நீ என்னை விட்டுட்டு எங்கேயும் போய்விடாதே" என்று சொல்லிக்கொண்டே வெற்றிலைப் பெட்டியைத் திறந்தாள் வடிவாம்பாள்.

'அம்மாவின் மயக்கமும் ஒரு நடிப்புத்தானோ' என்று நினைத்தாள் மோகனா.

## எண்பத்து ஏழாம் அத்தியாயம்

# அலை வீசினாலும் அணையா விளக்கு



இனி இரண்டு மாதங்களுக்குப் பிறந்த பூமியின் மண்ணை மிதிக்கமுடியாது. இனி அறுபது நாட்களுக்குக் கால், தரையில் பாவாது என்ற எண்ணம் வந்தது மோகனாவுக்கு. ஆடிய பாதத்துக்கு அல்லவா தெரியும், அருமைத் தரையின் பெருமை.

இன்றைய சமூகத்தில் பலர், சமையல் அறைவரை செருப்புப் போட்டுக்கொண்டு நடக்கிறார்கள். சாப்பிடும் பொழுதுகூடச் செருப்பைக் கழற்றுவதில்லை. தப்பித் தவறி ஒரு நாளைக்கு அவர்களும் தரையில் காலை வைக்கும்போது, அவர்களை அறியாமலே அதில் ஒரு இன்பம் உண்டாவதைப் பார்க்கலாம்.

"கடலே, கடலே, நீ ஆதிசேடனின் நாக்குகள் போல, உலகத்தைச் சூழ்ந்து நிற்கின்றாய். அலை நாவால் உலகை அழித்துவிடலாம் என்று எண்ணித் தரையை ஓங்கி, ஓங்கி அடிக்கின்றாய். கடலே, நீ தரைக்குப் பங்காளியா? அலைக்கரத்தால் அடிப்பது ஏன்? சோ, சோவென்று விரட்டுவது ஏன்? அல்லது பூமியில் உள்ள அத்தனை இன்பங்களையும் காண வேண்டுமென்று ஆவல் கொண்டு, கிணற்றில் விழுந்தவர் ஏற முடியாமல் தவிப்பது போல், நீயும் கரையேற முடியாமல் தவிக்கின்றாயா?

'அல்ல, நிலமும் கடலும் சக்களத்திகள். உலகின் இரு மனைவியர்கள். கடலுக்குத் தரையைக் கண்டால் பொறாமை. நிலமடந்தை பல மானிடப் பிள்ளைகளைப் பெற்றிருக்கிறாள். கடலுக்குப் பிள்ளையே இல்லை. நிலமடந்தையின் மைந்தர்கள் ஒவ்வொருவரும் உழைப்பில் சிறந்தவர்கள். மாட மாளிகைகளையும், கூட கோபுரங்களையும் கட்டி, அன்னை நிலத்துக்கு அணி செய்திருக்கிறார்கள். பசும்புல்வெளியையும், பச்சைத் தருக்களையும்,



பல நிறப் பனி மலர்களையும் வளர்த்து எங்கும் நிறைத்து அவள் பொன் மேனியிலே பூச்சொரிந்து இருக்கிறார்கள். ஆலயங்களும், அணிமாடவீதிகளும் இருக்கின்றன. வேதமும், கீதமும், வெண்கல மணியின் நாதமும் எங்கு பார்த்தாலும் முழங்கி அவள் துதியைப் பாடுகின்றன. பொழுது விடிந்தால், எறும்புச்சாரி போலச் சுறுசுறுப்புடன் அவள் மக்கள் எங்கும் அலைகிறார்கள், உழைக்கிறார்கள். இரவு வந்தால், நிலமடந்தையின் மனம் மகிழ நின்று ஆடுகிறார்கள். காதல் கீதம் பாடுகிறார்கள். ஆடிக் களிக்கும் அருமைக் குழந்தைகளைக் கண்டு அந்த அன்னை ஆனந்திக்கிறாள். அவள் மடியிலே தலையை வைத்துத் தூங்குகிறார்கள். இருள் என்னும் போர்வையில் கண்மூடி, தாயின் மடி மேல் அந்தக் குழந்தைகள் தூங்குவதே ஒரு தனி அழகு. இவ்வாறு புத்திரச் செல்வம் படைத்த பூமியைப் பார்த்து கடலரசி பொறாமைப்படுவது இயற்கைதானே.

"அவள் மேல் அழகிய கட்டடங்கள் இல்லை. அவள் மேல் வட்டமும் இல்லை, சதுரமும் இல்லை. ஒரு பூ மலருவதும் இல்லை. ஒரு கொடி படருவதும் இல்லை. யாரும் அவள் மேல் காலால் மிதித்து நடப்பதில்லை. மலடிபோல் அவள் மனம் புழுங்கி, நுரை வியர்த்து, அலை பெருமூச்சிட்டு, தலைவிரி கோலமாக ஆடி ஆடி ஐயோ என்று அலறுகிறாள். அலைக்கரங்களால் தன் வயிற்றில் அடித்துக்கொள்கிறாள். ஆத்திரத்தில், ஓடி வந்து தரையை அடிக்கிறாள். அந்தப் பொறாமை பிடித்த கடலுக்கு, நிலமடந்தையின் மகன் புத்தி சொல்கிறான். "கடலே, கடலே கதறாதே. கைகளை வீசிச் சிதறாதே. என் அருமைச் சிற்றன்னையே, தாமரை பூப்பதில்லை என்று வருந்தாதே. எத்தனையோ கப்பல்களைப் பூப்போல் உன் மேனியின் மேல் மிதக்க விடுகிறோம்" என்று சொல்லி, பல கப்பல்களையும் சிறு சிறு படகுகளையும் விடுகிறான்.'

ஆம், துறைமுகத்தில் நின்ற அந்தக் கப்பல்களையும், மீன் பிடிக்கும் படகுகளையும் பார்த்தவுடன் மோகனாவுக்கு இந்த நினைவுதான் வந்தது. மாயூரத்தான் மனத்தில் தோன்றியது. அதிகாலையில் கோயில் நிர்மாலிய மலர்களைக் காவிரி ஆற்றில் விடுவார்கள். பிறர் காலில் மிதிபடக்கூடாது என்ற எண்ணத்திலே, ஆற்றில் விடப்பட்ட அந்த நிர்மாலிய மலர்கள் ஆகிய தங்கரளி, அரளி, பவழமல்லிகை, பன்னீர், நந்தியாவட்டை முதலிய மலர்கள் காற்றிலே ஆடி அசைந்து, காவிரியில் மிதந்து வருவது போல, இந்தக் கடலில் பல படகுகள் வெண்மையான பாய்மரங்களை விரித்த வண்ணம், கரையோரமாக மிதப்பதைக் கண்டாள் மோகனா. உடனே கரையைச் சிறிது பார்ப்போம் என்ற ஆசை வந்தது. திரும்பக் கரையைப் பார்த்தாள்.

நீதியை நிலை நிறுத்துவதற்கு வான வீதியில் கொடி கட்டியது போல் உயர்ந்து விளங்கும் சென்னை ஹைகோர்ட் கட்டடம் நிழல் படம் போலத் தெரிந்தது. ஒளிக்கரத்தால் கை காட்டி, மகனே, கடலில்

தவறிவிடாதே. வா, வா என வருந்தி அழைக்கும் கலங்கரை விளக்கக் கட்டடம் புகை நடுவில் தெரிவது போல் காட்சி அளித்தது. சென்னைக் கரையோரத்தில் இருக்கும் அழகிய பொருள்கள் எல்லாம், அந்தி மாலையில் தெரியும் பனங்கும்பல் போலத் தோன்றி, சிறிது சிறிதாகத் தரையே மறைந்தது. தரை மறைந்தாலும் தன்னை மறக்க முடியுமா? "ஆசைப்பட்டுக் கப்பலுக்குள் ஏறினோம். ஆசை முகத்தைக் காணவில்லையே" என்ற ஏக்கத்தில் அவள் அம்மாவை விட்டு எழுந்தாள்.

"தனியாகப் போகாதே அம்மா" என்று யாரோ சொல்லும் சத்தம் கேட்டது. திரும்பினாள். தாய், கூடவே தொடர்ந்தாள்.

தாயின் அன்பு சில சமயங்களில் கோபமாக மாறித் தொந்தரவு கொடுக்கிறது. பல சமயங்களில் அன்பாக இருந்தும் தொந்தரவு கொடுக்கிறது. "அண்ணா, துரியோதனன் கோபத்தைக்காட்டிலும், உன் அன்பு என்னைக் கொல்லுகிறது" என்று பீமசேனன், தர்மபுத்திரரிடம் கேட்டார். ஆனால் மோகனா, அம்மாதிரி ஒன்றும் கேட்காமல், தாய்கூடத் தன் அறைக்குத் திரும்பி வந்தாள்.

வரும்போது, வானில் கீச் கீச் என்று ஒரு தாய்க்குருவி கத்தியது. ஆகாயத்தைப் பார்த்தாள். அங்கு ஒரு தாய்ப்பறவை தன் குஞ்சுகளுடன் பறந்துகொண்டிருந்தது. அது தன் குஞ்சுகளை நோக்கி, "இனிமேல் கடலில் போகாதீர்கள். நம்மால் திரும்பி வரமுடியாது. இறகுகள் எய்த்துவிடும். கரைக்குத் திரும்பி விடுவோம்" என்று சொல்லித் தன் குஞ்சுகளுடன் கரையை நோக்கித் திரும்பியது. அந்தோ. கடலில் திரும்பலாம். காதலில்?

❖ ❖ ❖

"மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே!" எனப் பாடிய பெரியார், கப்பலின் மேடையைத்தான் கூறுகின்றாரோ? இந்த மெல்லிய பூங்காற்று யாருக்காக அடிக்கிறது? இந்த மாலை நேரம் மிகக் குளுமையாக இருக்கின்றதே, இது யாருக்காக? கடல்மேல் நான் மேற்கொண்ட இந்தப் பிரயாணம் யாருக்காக? எல்லாம் அவளுக்காக அல்லவா' என்று எண்ணி எண்ணி ஏங்கினான் சண்முகம். நாம் இவ்வாறு ஒதுங்கி, ஒதுங்கிப் போய்விட்டால் மறுபடி சந்திப்பதே முடியாமல் போய்விடலாம். நாமாகவே அந்த முதல் நம்பர் ரூம் பக்கம் போய்விட்டு வருவோம் என்று நிச்சயித்தான்.

உடனே அவன், அறையில் இருந்த குளிக்கும் அறைக்குள் நுழைந்து தொட்டியில் உட்கார்ந்தான். காரைக்கால் நடேசனா இங்கிருக்கிறார், உபசரணை செய்ய. தானே குழாயைத் திறந்தான். "குபுகுபு" என்று தண்ணீர் கொட்டியது. இரண்டு கை நிறையத் தண்ணீரை அள்ளி வாய் கொப்புளிக்க உறிஞ்சினான். ஐயோ, உப்புக்கசம். கடல் தண்ணீர். "எங்கும் தண்ணீர் தண்ணீர்; ஆனால்



எடுத்துக் குடிக்க இயலாது" என்று ஒருவர் கடலைப் பற்றிப் பாடியது நினைவுக்கு வந்தது. இரண்டு குவளைத் தரைத்தண்ணீரை விட்டுக் குளித்தான். தரையில் பிறந்த செல்வன் பெட்டியைத் திறந்து நல்ல பட்டுக்கரை வேஷ்டியை எடுத்துக் கட்டினான். நல்ல பட்டுச் சட்டையைப் போட்டுக்கொண்டான். தும்பைப்பூப்போல் கும்பகோணம் சலவைத்துப்பட்டா ஒன்றை எடுத்து. அதன் விசிறி மடிப்பைப் பிரித்து உதறி மேலே போட்டுக்கொண்டான். உயர்ந்த மைசூர் கதம்ப அத்தரைச் லேசாகத் துப்பட்டாவில் தடவினான். இன்னும் இரண்டு மாதத்திற்கு ஒரு மலரையும் காணமுடியாத அந்தக் கப்பலிலே மல்லிகையும், மணமிகு வெட்டிவேரும் மணக்க ஆரம்பித்தன.

கடல் பிரயாணத்தில் ஒரு பூவைப் பார்க்க முடியுமா? இளந்தளிரைக் காண முடியுமா? காற்றுடனாவது புழுதி கலந்து வருமா? மழை பெய்தால் மண்வாடை வீசுமே. அந்த வாடையாவது வீசுமா? ஒன்றும் இல்லை!

கதம்ப அத்தரைப் பூசியவுடன், முகத்தில் சிறு வேர்வை வந்தது. அதையும் பாராமல் நல்ல நெற்றியில் ஜவ்வாதை வைத்து ஒரு பொட்டு இட்டுக்கொண்டான்.

அமைதியை நாடி இவ்வளவு அலங்காரங்களையும் செய்து கொண்டு கப்பல் கண்ணாடியில் தன்னை ஒரு முறை பார்த்துக் கொண்டான். அழகு, தனிமை உணர்ச்சியை அதிகப்படுத்தியது. அறையை விட்டு வெளியே வரக் கதவைத் திறந்தான். அங்கு அவன் கண்ட காட்சி அவனைத் திகைக்க வைத்தது.

ஸ்ரீமதி லேடி கனகாம்பரமும் மற்ற வடநாட்டு வித்வான்களும் அங்கு நின்றுகொண்டிருந்தார்கள். எல்லோரும் சண்முகத்தைப் பார்த்ததும், "ராம் ராம்" என்றனர். சந்தாமியான் சாயபும், கரீம்கானும் "அஸ்லாமு அலைக்கும்" என்று வணங்கினர். இந்தக் கலைஞர்களைக் கண்ட மாத்திரத்தில், அவன் கவலையும் காதலும் சற்று நேரம் விடை பெற்றன. வந்த வித்வான்களைக் கைகூப்பி வணங்கினான். 'வாருங்கள்' என உள்ளே அழைத்தான்.

"இவ்வளவு நேரம் வெளியே ஏன் நின்றீர்கள்? கதவைத் தட்டக்கூடாதா?" என்றான்.

"இவர்களை அறிமுகம் செய்து வைக்க வந்தேன். கதவைத் தட்டிப் பார்த்தேன். நீங்கள் திறக்கவில்லை" என்றாள் கனகாம்பரம்.

அவனுக்கு அதைக் கேட்க வெட்கமாக இருந்தது. காதல் கண்ணைத்தான் மறைக்கும் என்பார்கள். காதையும் அது அடைத்து விட்டதே என்று வெட்கினான்.

"இல்லை, அவர்கள் எங்கோ வெளியே புறப்படுகிறார்கள் போலிருக்கிறதே" என்றார் கரீம்கான்.

"அத்தர் மணம் ரொம்பக் குஷி" என்றார் சந்தாமியான்.

சண்முகம் அத்தர் பெட்டியைத் திறந்தான். அதைப் பஞ்சில் நனைத்துச் சுருட்டி காதில் செருகிக்கொண்டார் சந்தாமியான். அவருக்கு அந்த வாசனை தம் மூக்குப் பக்கங்கூட வரக்கூடாது. மற்றவர்கள் மூக்கைத்தான் துளைக்கவேண்டும் என்ற எண்ணம் போலும்.

வெற்றிலைப்பெட்டி திறக்கப்பட்டது. வெறும் சீவலை மட்டும் எல்லோரும் விரும்பிப் போட்டுக்கொண்டனர். தில்ருபாதேவி ஆசைப் பட்டு வெற்றிலையைப் போட்டுக்கொண்டு, சுண்ணாம்புக் காரம் தாங்காமல் உயிர் போவது போல், "சுத்தா நஹி, சுத்தா நஹி" என்று கத்தினாள். சுண்ணாம்பில் சுத்தைக் காம்பு கலக்காததே காரணம்.

வித்வான்கள் கூடிவிட்டால் வேறு பேச்சு உண்டா? சங்கீத விஷயமாகப் பேச்சு திரும்பியது. அவர்களுடைய ஆவலைக் கண்ட சண்முகம் நாதஸ்வரப் பையைக் கையில் எடுத்தான். வாசிக்க ஆரம்பித்தான். மோகனத்தை ஒரே சுருளாக ஆரோகண அவரோகணத்தைப் பிடித்து "நன்னு பாலிம்ப நடசிவச்சிதிவோ" என்றவுடனே அவர்களுள் ஒருவர், 'ஹே ராம்' என்றார். 'யா அல்லாஹ்' என்றார் கரீம்கான். சந்தாமியான் சாயபுவோ 'அச்சாஜி பூப் ஹேனா' என்றார்.

ஆம், நமது மோகனம் அவர்களுடைய பூப் ராகம் போலிருந்தது. அதற்குள் தருமன் ஓடிவந்து ஒத்து ஊதினான். வாசிப்பு களைகட்டி விட்டது. ரஸிப்பு உயர்ந்தது.

கல்யாணம், எமன் - இந்த இரண்டுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? சண்முகம் கல்யாணியைச் சிறிது தொட்டான். "எமன் எமன்" என்றார் கரீம்கான். எமனுக்கும் இவருக்கும் என்ன சம்பந்தம் என்று தருமன் சந்தேகம் கொண்டான். ஆனால், கல்யாணி ராகத்திற்கு அவர்கள் ஊரில் "யமன்" என்று பெயர் என்பதைக் கேட்டதும், ஒத்து ஊதுகிறதையும் மறந்து தருமன் சிரித்தான்.

சற்று நேரத்தில் அங்கு சந்தோஷ சாகரமே வந்துவிட்டது. எல்லோரும் ஆனந்தத்தில் ஒன்றானார்கள். சண்முகம் வாசிக்க, அதன் பின் சாரங்கியில் சந்தாமியான் சாயபு சிறிது நேரம் வாசித்தார். கடைசியில் சண்முகம் வாசித்த அடாணா ராகமும், அதில் அமைந்துள்ள மதிப்பற்ற மாணிக்கமாகிய 'ஏலா நீ தயராது' என்ற கீர்த்தனமும் முத்துக் கோத்தாற்போல்,

"பால கனகமயசேல சுஜனபரி பாலஸ்ரீரமா
லோல வித்ருதசர ஜால சுபத கருணால வாலகன
நீல நவ்யவன மாலிகாபரண"

என்று எழுத்தெண்ணும் சேர்த்தாற்போல் இதயத்தில் தொடுத்த இசை மணிமாலையின் அழகிலும், அவன் அடாணா ராக சரட்டிலும்



தம்மை மறந்து தலையாட்டினர் அந்த வித்வான்கள். இசைக் கடலில் மிதக்கும் தோணிகளாக எல்லோரும் ஆடிக்கொண்டே இருந்தனர். ஒவ்வொரு வடநாட்டு வித்வானும், சண்முகத்தின் சிறிது நேர வாசிப்பில் மயங்கினார்கள். அவன் வேறு, நாம் வேறு, அவன் நாடு வேறு, நம் நாடு வேறு என்ற எண்ணம் சற்றும் வரவில்லை. இவ்வாறு கப்பல் முழுவதும் ஆனந்த மயமாக இருக்கின்ற தருணத்திலே, மணி அடித்தது. மாலை காப்பிக்காக.

எல்லோரும் கப்பலின் சாப்பாட்டு அறைக்குச் சென்றார்கள். மகாராஜாவும் அங்கு வந்து அமர்ந்திருந்தார்.

கப்பல் ஒரு சிறிய உலகம். அதிலே சாப்பிடும் அறை சிறிய மாளிகை. அங்குள்ள ஒவ்வொரு நாற்காலியும் இது இடம் சிறியது என்பதை எடுத்துக்காட்டியது. சின்ன நாற்காலிதான். ஆனால் அதன் மேல் அழகிய மெத்தை, அழகிய வேலைப்பாடுகள். அதற்கு எதிரில் ஒரு மேஜை. அதில் நாலு பேர்கள் சாப்பிட வேண்டும்.

யானை அடி அளவுக்கு அப்பளம் பொறிக்கப்போகிறார்களா, அல்லது பூர்ண சந்திரன் போல் தோசைதான் வார்க்கப் போகிறார்களா? நாலு தோசையை, நாலு பேர் வைத்துச் சாப்பிட அந்த மேஜையில் இடமிருக்காது. சிறிய பீங்கான் தட்டுகளில் ரொட்டிகளை எடுத்துவந்து பரிமாறினார்கள். ஆளுக்கு நாலு ரொட்டி. அவற்றை வைத்துக்கொண்டே ஒவ்வொருவரும் தின்றோம் என்று பெயர் பண்ணினார்கள். சந்தாமியான் சாயபு சிரிக்கச் சிரிக்கப் பேசுவார். அவருக்கு அருகில் தில்ருபா வந்து நின்றாள்.

"பீபி, முதலில் நீ இஸ்லாம் மார்க்கத்துலே சேந்துடு. அதற்குப் பிறகு என்கிட்டத்திலே வந்து உக்காரு. நான் நிக்காஹ் வேணுமானாலும் செய்துக்கிறேன்" என்றார் அவர். அவள் சிரித்தாள்.

இதைப் போலச் சண்முகத்தின் அருகிலே வந்து உட்கார வேண்டு மென்று ஒரு உள்ளம் துடித்தது. ஆனால் அதுவும் வடிவாம்பாளும் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தன. எங்கு உட்கார்ந்திருந்தால் என்ன? இருவரும் கப்பலில்தான் இருக்கிறோம், என்று காதலர் கண்கள் பேசிக்கொண்டன. சண்முகசுந்தரம் அவள் அருகில் வந்தான்.

"என்ன அத்தே, கப்பல் பிரயாணம் எப்படியிருக்குது?" என்றான்.

"தலையைச் சுத்துது" என்றாள் வடிவாம்பாள்.

"எது தலையைச் சுத்துது, என்னைப் பாத்தா?"

"உன்னைப் பார்த்தா எனக்கு ஏன் தலையைச் சுத்தணும்?"

அதற்குள் மோகனாவின் கண்கள் அவனைச் சந்தித்தன. 'வம்பிழுக்காதீர்கள்' என்று கூறின. வடிவாம்பாளுக்கு எதிரில் சண்முகம் நின்று கொண்டிருந்தும், 'தம்பி, உட்காரேன்' என்று அவள் சொல்லவில்லை. 'மகாராஜாவுக்கு எதிரில் இவனை நம் அருகில் உட்காரும்படி நாம் அனுமதிக்கலாமா?' என்று அவள் யோசித்தாள்.

அவள் யோசனையை யார் பொருட்படுத்துகிறார்கள்? சண்முகம் உட்கார்ந்தேவிட்டான்.

"என்ன மோகனா, கப்பல் கிறுகிறுப்பு உனக்கும் இருக்குதோ?" என்று அவளைக் கேட்டான்.

" கப்பல் கிறுகிறுப்பு இல்லை !" என்றாள் மோகனா.

வடிவாம்பாளோ ஒரு தடவை முறைத்துப் பார்த்தாள்.

" நீதான் அந்த மூலையிலே போய் உட்காந்துட்டியே ! ஏதோ சாப்பிட வந்த இடத்திலே பேசனுங்கறதுக்காகப் பேசறே" என்றாள் வடிவாம்பாள்.

அதற்குள் அவர்களைப் பார்த்த வைத்தி, மகாராஜாவின் அருகில் சென்று, "இத்தனை வித்வான்கள் இருந்தும், ஒரு கச்சேரி கிச்சேரி இல்லாமல் இருக்கிறது நல்லா இல்லையே" என்றார்.

"கவலைப்படாதீர்கள் இன்று இரவு மகாராஜாவுக்கு என்னுடைய விருந்து. அப்போது பாருங்கள்" என்று கூறினார் கேப்டன். உடனே கரகோஷம் அதிர்ந்தது.

"இரவு ஏழு மணிக்கு எல்லோரும் விருந்துக்காக மேல் தட்டில் கூடுவோம்." என்று எழுந்தார் மகாராஜா.

எண்பத்து எட்டாம் அத்தியாயம்

# ஆட்டத்தில் கப்பலே ஆடியது



கலையில் எளிமை வேண்டும். அது மக்களுக்குப் புரியவேண்டும். மனத்தில் இனிமையை உண்டாக்க வேண்டும். உள்ளத்தை உயர்த்த வேண்டும். இது எந்தக் கலைக்கும் பொருந்தும்.

இந்த அடிப்படையில் தமிழ்நாடு பாக்கியம் செய்த நாடு. உலக நாகரிகத்திலேயே இன்றிருப்பதில் நமது நாகரிகந்தான் மிகவும் பழமையானது அதைப் போலவே கலைகளும் இன்னும் பழமை மாறாமல் இங்குதான் இருக்கின்றன. இதற்கு முதல் காரணம், நமது கலைஞர்களின் கலைப்பக்தி. அவர்கள் சன்மானத்தைக்கூட விட்டுக் கொடுத்துவிடுவார்கள். தன்மானத்தை விடமாட்டார்கள். சிறிது நேரத்துக்கு இனிமை பயக்கும் என்பதற்காகப் பெரியோர்கள் அமைத்த வழிகளை லேசில் மாற்றிவிட மாட்டார்கள். இவ்வளவுக்கும் அடிப்படை என்னவென்றால், தன்னைக்காட்டிலும் தான் கையாளும் கலை உயர்ந்தது என்ற திடமான பக்தியே ஆகும்.



இரண்டாவது, ரஸிகர்கள். இந்நாட்டு ரஸிகர்கள் அவர்களது ரத்தத்தில் ஊறிய பழங்கலைகளாகிய சங்கீதம், பரத நாட்டியம் முதலியவைகளுக்கு மதிப்புக் கொடுப்பவர்கள். கல்யாணி, தோடி, காம்போதி முதலிய ராகங்களைத் தெய்விகமாகக் கருதிக் கேட்டு ரஸிப்பவர்கள்.

மூன்றாவது, நம்முடைய பழமையான பண்பாடு. நம் மூதாதையர்கள் இம்மாதிரி சுந்தருவக் கலைகளையெல்லாம் நன்கு ஆராய்ந்து, இவைகளைக் கடவுளின் வசமாக்கி வைத்துவிட்டார்கள். எந்த ராகமானாலும் இறைவனைப் புகழும் பாடல்களையே அதில் இசைப்பார்கள். இறைவன் முன்பே ஆடற்கலைகளை நிகழ்த்துவார். உயர்ந்த கலைகள், உயர்ந்த ரத்தினங்கள், உயர்ந்த சிற்பங்கள், உயர்ந்த நூல்கள் எல்லாவற்றையும் இறைவன் உடைமையாக்கி, ஊரிலே உயர்ந்த கட்டடத்தை அமைத்து, அதைக் கோயில் என அழைத்து, அந்தப் பொது உடைமையை அவன் சந்நிதியில் தாங்களும் அநுபவிப்பது என்று அமைத்துவிட்டார்கள். இதனால் கலையில் பக்தி கலந்தது. பக்தியால் கலை உயர்ந்தது. அதனால் உள்ளம் உயரலாயிற்று. கலை பொதுச் சொத்தாயிற்று கலைஞர்கள் பொது மக்களால் போற்றப்படுபவர்கள் ஆனார்கள்.

இதே நிலைதான் வட நாட்டிலும் இருந்து வந்தது. அங்கு இன்று கூடச் சில சங்கீத வித்துவான்கள் கல்யாணம் முதலியவற்றில் கச்சேரி செய்வதில்லை. கலை விழாக்களிலும், கலைஞர்கள் நிறைந்த சபைகளிலுந்தான் கச்சேரி செய்வார்கள்; இறைவன் புகழைத்தான் பாடுவார்கள்.

ஆனால் நாட்டியம் போன்ற கலைகளில் வடநாட்டில் கலப்பு அதிகமாகிவிட்டது. ஆண்கள் தொப்பி அணியவும், பெண்கள் முகத்தைத் திரை போட்டு மூடிக்கொள்ளவும் வேண்டும் அளவுக்கு அந்நிய ஆட்சியும் அடக்கு முறையும் வந்த காலத்தில், ஜல்சா, தமாஷா என்று அது, கேவலம், காமக்கூத்தாக ஆகிவிட்டது.

இன்றுகூட அங்கும் மணிப்புரி, கதக் போன்ற நாட்டியங்கள் இறைவனுக்கே ஏற்றனவாகவும், இறைவன் திருமுன் ஆடுவனவாகவும், தெய்வ நெறியையே அருளுவனவாகவும் அமைந்துள்ளன.

காவிரிப்பூம்பட்டினத்தில் மாதவி ஆடியது காமக்கூத்தல்ல. கோவலன் மயங்கியதும் அங்க அசைப்பில் அல்ல. அவன் கலையில் அவன் மயங்கினான். அந்த மாதவியோ கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கி, இயற்கையின் நியதிப்படி கணிகையாக வாழ்ந்து கடைசியில் துறவியாக ஆனாள்.

" இந்திரன் சபையில் நான்கு தாசிகள் ஆடவில்லையா? ஊர்வசியையும் மேனகையையும் அனுப்பி, பிறர் தவங்களைக் கெடுக்க வில்லையா?" என்று கேட்கலாம். இந்திரன் சபையைப்பற்றி நமக்குத்

தெரியாது. ஆனால் இராஜேந்திரன், இராஜராஜன் முதலிய சோழ மன்னர்கள், கலையைக் கோவிலுடன் கலந்துவிட்டார்கள் என்பது மட்டும் தெரியும்.

இப்பொழுது நாம் நாட்டியத்தைக் கடவுளிடமிருந்து பிரித்து விட்டோம். இருந்தாலும் கடவுள் அதை விட்டுப் பிரியவில்லை. கோயிலில் இருந்து கலையை ஓட்டிவிட்டோம். ஆனால், கலை இருக்குமிடம் கோயிலாகிவிடுவதைக் காண்கிறோம்.

இதே காட்சிதான், மேல் தட்டில் விருந்துக்கு வந்த சேர்ந்த வித்துவான்களிடையேயும் இருந்தது. சண்முகம் நடுநாயகமாக அமர்ந்திருந்தான். அவனைச் சுற்றி மற்ற வித்துவான்கள் எல்லோரும் அவை அடக்கத்துடன் அமர்ந்திருந்தனர். மாலையில் சண்முகத்தின் வாசிப்பில் மயங்கிய அந்த வடநாட்டுக் கலைஞர்கள் அத்தனை பேரும் தரம் குறையாமல், கலையின் புனிதத்தைக் காத்துவரும் அந்தத் தமிழ்நாட்டு வித்வானைத் தம் உயிர் போல் மதித்தனர்.

சற்று தூரத்தில் ஸ்ரீமதி ஆஷலதா தேவி, சிரித்த முகத்துடன் காணப்பட்டார். பாவம், அந்த ஆங்கிலப் பெண்மணி தெரிந்தோ தெரியாமலோ, மகாராஜாவை மணந்துகொண்டுவிட்டாள். ஆனால் இந்திய நாட்டுக்கு வந்தாலோ இங்கு எல்லாம் அவளுடைய நாட்டு இயல்புக்கு மாறுபட்டிருந்தன. சமஸ்தான மக்கள் எல்லோரும் அவளைச் சந்தேகக் கண்களுடன் பார்த்தார்கள். அரண்மனைச் சிப்பந்திகள்கூட அவளை ஒரு அதிகாரியாகத்தான் எண்ணினார்கள். மகாராணியாகக் கருதவே இல்லை. மகாராஜாவின் அன்புக்கு அவள் எவ்வளவுதான் பாத்திரமாக இருந்தாலும், இந்தியச் சூழ்நிலை அவளை ராஜாவின் மனைவியாகக் கருதவில்லை. ஓநாயும், ஆடும் கல்யாணம் செய்துகொண்டது போல, ஆளும் வர்க்கத்தில் பிறந்த அந்த அம்மையார், அடிமை இந்தியனைக் கல்யாணம் செய்துகொண்டுவிட்டோம் என்று எண்ணினாள். கப்பலில் ஏறிய பிறகுதான், தன் ஊருக்குப் போகிறோம் என்ற ஆசையால் சந்தோஷம் அவளுக்கு வந்தது. அவரும் கப்பல் காப்டனும் ஒரு புறமாக உலாவிக்கொண்டிருந்தனர்.

ஸ்ரீமான் வைத்தி இன்று டிப்டாப்பாகக் காணப்பட்டார். டின்னர் ஸூட்டுடன் அவர் ட்வின்டெக்கில் படிக்கட்டு வழியாக இறங்கியதும், பொய்க்கால் குதிரைப் பொன்னன் திடுக்கிட்டு விட்டான்.

வைத்தி வந்த வேகத்தில், " ஏ பொன்னா, இந்தா இன்னிக்கு ரெண்டு ரூபாய்" என்றார். பொன்னன் ஆவலுடன் வாங்கிக் கொண்டான்.

"என்ன எசமான் இன்னிக்கி?"

"காப்டன் மேல் தட்டிலே விருந்து வச்சிருக்காரு. அதிலே நீ ஆடணும்."



"எங்கே எசமான் ஆடறது? இங்கேதான் நின்னாலே தள்ளாடுதே!"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது நீ ஒழுங்காக நடக்கலேன்னா நான் உன்னை டிஸ்மிஸ் செய்துடச் சொல்லுவேன்."

"சரி, சொல்லுங்க, போங்க."

"ஏய், நீ நிசமாத்தான் பேசறியா?"

"அட போங்க சாமி நீங்க குடுக்கிற பணத்துக்குப் பொய் வேறே சொல்லுவாங்களாக்கும்! இங்கே கப்பல் மயக்கம் தலையைச் சுத்துது சோழிக்கிடாப்பாட்டம். இங்கே கொண்டாந்து அடைச்சு வச்சிட்டீங்க. எங்கே பார்த்தாலும் ஏணியா இருக்குது. எந்த ஏணியிலே ஏறினோம், எதுலே இறங்கணும்னு தெரியல்லே. இதிலே நீங்க வேறே ஆடுடான்னா, எங்கே ஆடறது? சரி இன்னும் ஒரு ரூபா போடுங்க" என்று கையை நீட்டினான் பொன்னன்.

வைத்தி மேலும் எட்டணாவைக் கொடுத்த பிறகுதான், அவன் மனசு திருப்தியடைந்தது. " இதோ, போங்க வந்துட்டேன்" என்று சொல்லிவிட்டு, "டேய் பக்கிரி, இந்தக் குதிரையைத் தூசியைத் தட்டி விட்டு, கம்பு, நாடா, துணி எல்லாம் எடுத்து வை" என்று சொல்லி, அவசரமாகக் கப்பல் கடையை நோக்கி ஓடினான்.

பொன்னனைத் தயார் செய்துவிட்டு, வைத்தி, முத்துராக்குவின் அறைக்குள் வந்தார்.

வரும்போதே "என்ன ஐயா, இந்தச் சங்கேதக்காரர்கள் சொன்னால் சொன்ன டயத்துக்குத் தயாராய் இருக்கிறதே இல்லை. ஏ, தவுல்காரா, உம், புறப்படு" என்றார்.

இதற்குள் தருமன், "அடேடே, வைத்தி ஐயாவா? பார்த்தால் பெரிய மனுசன் மாதிரி இருக்கீங்களே" என்றான்.

"பின்னே என்னடா?"

"டா போடாதீங்க. திருவாரூர் வீதியிலே ராத்திரியெல்லாம் அலைந்து திரிஞ்சது நினைப்பில்லையாக்கும். சரி, போங்க" என்றான் தருமன்.

"இந்தக் கிருது மட்டும் உங்களுக்குப் போகாது" என்று கூறி நகர்ந்தார் வைத்தி.

மோகனாவின் அறைக்கு அவர் வந்ததும் வடிவாம்பாள் "வாங்க வைத்தி, உட்காருங்க" என்றாள்.

'இந்த உலகில் தனக்கு மரியாதை கொடுக்க அவள் ஒருத்தியாவது இருக்கிறாளே' என்று வைத்தி ஆனந்தமடைந்தார்.

"இந்த வைத்தியை நீங்கள் விட்டுட்டாலும், வைத்தி உங்களை விடமாட்டான்" என்றார்.

"அதுக்கு ஏதாவது பரிகாரம் செய்யணும் மோகனா" என்றான் வரதன்.

"என்ன முட்டுக்காரரே, என்ன தட்டுக்கெட்டுப் பேசுறீர்?"

"உங்களுக்கு ஒண்ணுமில்லிங்க சனிக்கிழமையிலே திருநள்ளாறுக்குப் போய் எள்ளுப் பொட்டலம் போடணும் அப்பத்தான் சனி விலகும்னு சொல்லிக்கொண்டிருந்தேன்."

"டே, இப்ப அப்படித்தான் தெரியும். லண்டன்லே வந்து உன் மத்தளத்துக்கு ரவை வேணும்னா என் காலிலேதான் விழணும்."

"தொப்பி மேலே ரெண்டு தட்டுத் தட்டினா தானே இறங்குது."

"பாத்திங்களா, பாத்திங்களா அம்மா, அடிக்கிறேன் என்கிறான்."

"உங்களை நான் ஏன் அய்யா அடிக்கிறேன்? ஆண்டவன் அடிக்கிறான், நான் மத்தளத்தைச் சொன்னா, நீங்க..."

"ஏய் வரதா, சும்மா இருக்க மாட்டே? இப்ப அவர் யார் தெரியுமா? மகாராஜாவுக்குச் செக்ரடரி" என்றாள் வடிவாம்பாள்.

"ஓ, சிகரெட்டு எரியா? சரிதான், அதிராம்பட்டணத்திலேயே செம்மைக்குச் சுதி சேத்திருக்கணும், தப்பிப் போச்சு" என்று சலித்துக் கொண்டான் வரதன்.

"இப்ப நான் எதுக்கு வந்தேன்னு கேட்டா" என்றார் வைத்தி.

"அதுதான் அம்மா கேக்க மாட்டாங்களே. எதுக்கு வந்திங்க?"

"மகாராஜாவுக்கு உங்க..."

"...பொண் மேலே ரொம்பப் பிரியம்னுதானே சொல்லப் போறீங்க? கப்பலிலே வந்தும் உங்க குணம்..."

வைத்திக்குக் கோபம் வந்துவிட்டது. "அம்மா, நான் உங்களுக்கும் மோகனாவுக்கும் பார்க்கிறேன். அந்த மத்தளக்காரன் என்னை மதிக்கிறதே இல்லை."

"நானுந்தான் ஐயாவை மதிக்கணும், ஒரு நாளைக்காவது மரியாதை பண்ணணும்னு பாக்குறேன். அதுக்கு ஒரு சமயம் வராமலா போகப் போகுது? அம்மா, நான் வரேன்" என்று வெளியே சென்றான் வரதன்.

வைத்தி மோகனாவின் பக்கம் திரும்பினார். "என்ன, இன்னும் விருந்துக்கு டிரஸ் பண்ணிக்கலே போலிருக்கே! மகாராஜா ஸ்பெஷலா சொல்லிட்டு வரச் சொன்னார்."

"என்ன சொன்னார்?" என்றாள் மோகனா.

"விருந்துக்கு வரணும் என்று!"

"இது எங்களுக்கு முன்பே தெரியுமே! நீங்க போங்க வருகிறோம்" என்று மோகனா முகத்தில் அடித்தாற்போல் சொல்லவே, வைத்தி அங்கிருந்து புறப்பட்டார்.

அவர் போனவுடன் வடிவாம்பாள் மகளிடம் கோபிக்க ஆரம்பித்தாள்.

"ஏன் மோகனா, அந்த மனிசன் நமக்கு என்ன கெடுதல் பண்ணினான்? நீயும் வரதனும் ஏன் அவரை அப்படிப் பேசறீங்க?"



"என்னம்மா பேசிப்புட்டோம்? அதுதான் ராஜாவே விருந்துக்கு அழைத்தாரே, இவர் என்ன சிபார்சு?"

"இந்தா பாரு, பணம் கிடைக்கும், மனிசன் கிடைக்க மாட்டான். சரி சரி, புறப்படுங்க" என்றாள் வடிவாம்பாள்.

எல்லோரும் விருந்துக்குத் தயாராக இருக்கையில் மோகனாவும் வடிவாம்பாளும் வரதனுடன் மேல் தட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

மோகனா வந்தவுடன் ஒவ்வொரு வித்துவானும் மரியதையாக அவளை வரவேற்றனர். மோகனா பணிவுடன் அவர்களை வணங்கி விட்டு ஒரு ஆசனத்தில் அமர்ந்தாள். அந்தப் பால் போன்ற நிலவில் அவளுடைய அழகு பன்மடங்கு சோபித்தது. அன்று அவள் தலையை வாரிப் பின்னாமல், வெறும் கோடாலி முடிச்சு மாத்திரம் போட்டிருந்தாள். அதிக அலங்காரம் இல்லாமல் தந்தச் சிலையைப் போல் அமர்ந்திருக்கும் அவளையே, மகாராஜாவின் கண்கள் கூர்ந்து நோக்கின. இதைப் பார்த்த ஆஷலதாதேவி காப்டனிடம் கண்ணால் காட்டினாள்.

'டெக்சேர்' எனப்படும் நமது கான்வாஸ் சேர்கள் அங்குமிங்கும் கிடந்தன. அவற்றுள் ஒரு சேரில் ஸ்ரீமதி வடிவாம்பாளை உட்கார்த்தி வைத்தார் காப்டன். அவருடைய கண்கள் நன்கு பழகியவை ஆதலால், வடிவாம்பாள் மோகனாவின் தாய் என்பதை உணர்ந்தன. தன் கையாலேயே ஒரு அழகான கம்பளத்தை அந்த அம்மாளிடம் கொண்டு வந்து கொடுத்து "நீங்க உங்க இஷ்டம் போல் நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்துகொள்ளலாம். தூக்கம் வந்தாலும் தூங்கலாம்" என்று உபசரித்தார். வடிவாம்பாள் தூங்குவாளா? வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

மதன்பூர் மகாராஜா அவர்கள் கறுப்புக்கோட்டு, வெள்ளை ஷர்ட், காலர் முதலிய விருந்து உடையில் காட்சி அளித்தார். அவருடைய மனைவியாரோ, மருந்துக்கு மட்டும் உடை அணிந்து மெல்லிய உடையில் பட்டுப்பூச்சிபோல் பறந்துகொண்டிருந்தார்.

காப்டன் அவர்களின் மனைவியும் அங்கு வந்திருந்தாள். அந்த அம்மாள் இப்பொழுதுதான் கல்கத்தாவில் விவாகம் ஆனவர். லண்டன் போனவுடன் விவாகரத்து செய்துகொள்ளப் போகிறவர். பிரயாணிகள் ஒவ்வொரு துறைமுகத்திலும் புதிய மூட்டை முடிச்சுகளுடன் வருவது போல், நமது காப்டன் அவர்களும் ஒவ்வொரு துறைமுகத்திலும் ஒரு புதிய மனைவியைச் சம்பாதிப்பார். அடுத்த துறைமுகத்தில் இறங்குவதற்குள் அவர் குணம் அந்த அம்மாளுக்குப் புளித்துவிடும். அர்ச்சுனன் தீர்த்த யாத்திரையில் ஒரு அமிசம் மட்டும், அவருடைய தீர்த்த யாத்திரைகளிலும் உண்டு.

அழகான ரத்தினக் கம்பளத்தின் மேல் அத்தனை வித்துவான்களும் அமர்ந்திருந்த காட்சி, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

முதலில் மால்கோஷ்ஜீயின் குரூப் டான்ஸ் ஆரம்பமாயிற்று. அவருடைய பாணியே அலாதி. "ஒன்று சிற்றின்பம், இன்னொன்று பேரின்பம். பேரின்பத்தை அடைவதற்கு ஏணி சிற்றின்பந்தான். அதிலே கஷ்டங்களையெல்லாம் அனுபவித்துத்தான் மனிதன் துறவியாக மாறுகிறான்" என்பது அவர் முடிவு. ஆகவே அவருடைய கூட்டத்தில் உள்ள ஆறு பெண்களும், மஸ்லின் உடை உடுத்துக் கொண்டு, அங்கு வந்து நின்றார்கள். நாட்டியம் ஆரம்பமாயிற்று.

அது நாட்டியம் இல்லை. பலருக்கு ஒரே சமயத்தில் மனத்தில் கிளர்ச்சியை உண்டாக்கி, உலக வழியில் இழுத்துச் சென்று, உச்ச நிலையை அடையச் செய்யும் சூழ்ச்சி அது. அவர்களுடைய ஒவ்வொரு அசைவுக்கும், ஆட்டத்துக்கும் மகாராஜாவும், வைத்தியும் கேப்டனும், மற்றவர்களும் "சபாஷ்" போட்டார்கள். பணம் சிரித்தது. "நான்தான் பெரியவன். ஆறு அறிவுடையவர்களையும் எப்படி எப்படியோ ஆட்டிவைக்கிறோம். பார்த்தீர்களா?" என்று அது நகைத்தது.

அடுத்தபடியாகப் பொய்க்கால் குதிரை பொன்னன் ஆடிக் கொண்டே வந்தான். குதிரையில் அல்ல தானே, குதிரையைத் தூக்கித் தோளில் மாட்டியவுடன். அவன் கால் கட்டை ஜமக்காளத்தில் வழுக்க ஆரம்பித்தது.

"ஜமக்காளம் வழுக்குதே !" என்றான்.

ஜமக்காளத்தைச் சுருட்டிவிட்டுப் பலகையின் மேல் ஆட ஆரம்பித்தான். பலகை அதைக்காட்டிலும் வழுக்க ஆரம்பித்தது. காலிலும் கட்டை, ஆடுவதும் கட்டை. அவனால் ஆட முடியவில்லை. அவன் வழுக்கி வழுக்கி விழப்போனான். இதில் ' ஆர்ட்'டைக் கண்ட மகாராஜாவும் காப்டனும் ' ஒண்டர்புல் !'' என்று ரசித்தனர். கடைசியில் பொன்னன் வழுக்கியே விழுந்தான். எல்லோரும் கரகோஷம் செய்தார்கள்.

"கதகளி கருணாகரமேனன், அழகான ஒரு ஆட்டத்தைத் தயார் செய்து இருந்தார். பிரஹலாதன் நாடகம் அது. ஐந்து வயதுப் பையன் ஒருவன் பிரஹலாதனாக வந்து நின்றான். அவன் முகத்தில் இருந்த களையிலும், அவன் இரு கண்களிலும் மை இட்டுக்கொண்டிருந்த அழகிலுமே அவர்கள் மயங்கினார்கள். கதகளி உடையும், அவர்கள் முகத்தில் பூசியிருந்த வர்ணங்களும் நம்முடைய பழங்கால நாடகங்களை நினைவூட்டின. புஜகீர்த்தி, வாகுவலயம், கவசம் முதலியவை அணிந்து ஆடினார்கள். அந்தப் பச்சைக் குழந்தை இரண்ய கசிபுவிடம் "அவன் தூணிலும் இருக்கிறான், துரும்பிலும் இருக்கிறான்" என்று பெற்ற தந்தைக்குப் பிள்ளை உபதேசிக்கும் கட்டத்தில், கலைஞர்கள் எல்லோரும் கண்ணீர் விட்டார்கள். சண்டை வாத்தியம் முழங்கியது. சாலர்கள் அதிர்ந்தன. இரண்யன் காலால் தூணை ஓங்கி உதைத்தான். தூண் இரண்டாகப் பிளந்தது.



அதிலே இருந்து நரசிங்கம் வந்தது. "ஹோ" என்று அலறி மயக்கம் போட்டு விழுந்தாள் ஸ்ரீமதி ஆஷலதாதேவி. ஆட்டம் அதோடு நிறுத்தப்பட்டது.

" ஹாரிபிள், ஹாரிபிள்" என்றாள் அவள்.

"இதெல்லாம் டான்ஸா? எதுக்காக, கடவுளை இங்கே இழுக்கிறீர்கள்? மூட நம்பிக்கையில் மூழ்கிய இந்தியா" என்று திட்டினாள்.

அடுத்தபடியாக சாரங்கி சந்தாமியான் வாசிக்க ஆரம்பித்தார். அந்த வாத்தியத்தில் உள்ள முப்பத்தாறு தந்திகளையும் அவர் சுருதி சேர்ப்பதற்குள்ளே "போதும், எழுந்திரு" என்றார் மகாராஜா.

"இதைப் பார்த்த சண்முகத்திற்குச் சிறிது ஆத்திரம் வந்தது. இந்தச் சமயத்தில், "நீங்க கொஞ்சம் வாசிக்கணும்" என்றார் வைத்தி.

"எவ்வளவு நேரம் வாசிக்கிறது?" என்றான் சண்முகம்.

"சுமார் ஐந்து நிமிஷம்."

"ஆஹா, வாசிக்கிறேன்" என்று நாதஸ்வரத்தை கையில் எடுத்தான். எதிரில் மதுபானங்கள் தயாராக வைத்திருப்பதைப் பார்த்தான். கப்பலின் மேல் தட்டில் ஆந்தோளிகா ராகம் அலை வீசியது. வித்வான்கள் எல்லோரும் அசையாமல் கேட்டனர். "இசை என்னும் அமுதத்தைப் பருகி இன்பம் பெறுங்கள், ஏனிந்தப் பானம்?" என்று கேட்பது போல் "ராக சுதாரஸ பானமு ஜேஸி ராஜில்லவே-ஓமனஸா" என்ற கீர்த்தனத்தை ஐந்தே நிமிஷத்தில் வாசித்து முடித்தான் சண்முகம். கப்பல் காப்டன் அந்த வாத்தியத்திலே சொக்கிவிட்டார்.

"இவ்வளவு இனிமையான நாதத்தைக் கேட்டதில்லை. நான் ஒரு பிசிர் இல்லை. ஒரு டிராமெலோ இல்லை. எங்கள் நாட்டில் வீரத்தைப் பரப்புவதற்குத்தான் வாத்தியம் வாசிப்பார்கள். சண்டைக்கு ஜெயபேரிகை முழங்குவோம். ஆனால், இன்று மிஸ்டர் சண்முகசுந்தரம் வாசித்த வாசிப்பில், நான் என்னை மறந்தேன். ஏதோ ஒரு இன்பத்தை அடைந்தேன்" என்று புகழ்ந்தார்.

மகாராஜாவுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை.

"இதைத் தேர்ந்தெடுத்தவன் நான்தான்" என்று மார் தட்டிக் கொண்டார்.

"பின்னே என்ன? அவர் ஒரு மகாவித்வான்! நீங்க ஒரு மகாராஜா! இதே வாசிப்பு எங்க ஊரிலே வாசிச்சு இருந்தா, மகாமகக் கூட்டம் கூடியிருக்குமே" என்றார் வைத்தி.

"ஐயா மகா ரசிகர் !" என்றான் சண்முகம் கிண்டலாக.

காப்டனுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. ஆங்கிலத்தில் ஏதோ ஒரு சத்தம் போட்டான். உடனே ஒரு பையன் கையில் ஒரு பிளேட்டில் இரு கிளாசுடன் மதுபானத்தை எடுத்துக்கொண்டு வந்தான்.

"எஸ், மிஸ்டர் ஷண்முகம், இந்தாங்க" என்று மதுவை எடுத்து நீட்டினான். இதைக் கண்ட சண்முகம் சிரித்தான்.

"இது சாப்பிட்டால்தானா மயக்கம் வரும்? என் வாத்தியத்தை வாசித்தால் நானே மயங்குவேன்! பழக்கம் இல்லிங்க."

"நீங்க இதை மதுவென்று எண்ணாதீர்கள். தண்ணீர் என்று எண்ணுங்கள். பருகுங்கள், மயக்கம் வராது" என்றார் காப்டன்.

"அப்படியானால் தண்ணியையே ரெண்டு கிளாஸ் குடித்து விடுகிறேன்" என்று சண்முகம் சொல்லவே, எல்லோரும் சிரித்தனர்.

உடனே மதுவைப் பல சிப்பந்திகள் சிறு சிறு அழகிய கிளாஸ்களில் ஊற்றி, அழகான தட்டுகளில் வைத்து ஒவ்வொருவருக்கும் கொண்டுவந்து நீட்டினார்கள். தவுல்கார முத்துராக்கு வாயால் வேண்டாம் என்று சொன்னார். தருமனோ அதைக் கையால் தொட்டுப் பார்த்து, சண்முகம் பக்கம் திரும்பிவிட்டு, "சர்பத்தாக்கும்னு பார்த்தேன்" என்றான். வரதன் 'ராமா, ராமா' என்றான்.

ஆனால் நமது வைத்தி அவர்கள் சமயத்துக்குத் தகுந்தபடி பழகத் தெரிந்தவர். ஆதலால் மானர்ஸ் தெரிந்து நடக்கவேண்டும் என்பதை உத்தேசித்துக் கலந்துகொண்டார். பிறகு சோடாவையும் கலந்து கொள்ளாமல் மகாராஜாவின் ஆரோக்கியத்துக்காக அருந்தினார். டான்ஸிங் தில்ரூபா தேவி மகாராணியின் மனம் வருந்தக்கூடாதே என்று கலந்துகொண்டார். மகாராஜா அவர்கள் இது ராஜ தர்மம் ஆதலால் இதில் இறங்கினார். சந்தாமியான் சாயபு இது ஹராம் என்று கூறிவிட்டுத் தொழுகைக்குப் போய்விட்டார்.

கதகளி கருணாகர மேனன் "நம்ம ஆட்டமே மதி" என்று கூறிவிட்டார். ஆஸ்தான கவிஞர் ஸ்ரீமான் அநுமான் பிரசாத் இதைப் பார்த்ததுமே மயங்கிவிட்டார். அவர் வாயிலிருந்து கஜல்களும் உமர்கய்யாமும் காளிதாசரும் கலந்து வந்தார்கள். சற்று நேரத்தில் எல்லோரும் கப்பலைக்காட்டிலும் அதிகமாக ஆட்டம் போட ஆரம்பித்தனர். ஸ்ரீமான் வைத்தி, சண்முகத்தின் அருகில் வந்தார்.

"என்ன பிள்ளைவாள், நீங்க சும்மா இருக்கீங்களே!" என்றார் வைத்தி, சண்முகத்திடம்.

"நான் தொடறதில்லைங்க" என்றான் சண்முகம்.

"நானும் தொடவில்லையே. இது தொடாமல் தயாரித்துத் தொடாமல் பருகுவதாயிற்றே!"

"இல்லை, அது அவ்விடத்துக்கே இருக்கட்டும்."

"கொஞ்சம் மேனர்ஸ் தெரியணும். வேண்டாம்னு சொல்லாமே சும்மா ஒரு வாய் சாப்பிட்டா போகுது."

"எது போகுது? அறிவா?"



வைத்திக்குக் கோபம் வந்தது. "என்ன பிள்ளை, அறிவைப்பத்திப் பிரமாதமாய்ப் பேசுகிறீர்! உங்களுக்கு வாசிக்கத் தெரியலேன்னு மகாராஜா சொன்னாரே!"

"மகாராஜாதானே சொன்னாரு. வேறு ஒருத்தரும் ஞானஸ்தர்கள் சொல்லலியே?"

"சங்கீதமில்லேங்காணும் உமக்கு எழுதப் படிக்கத் தெரியாதோன்னு மகாராஜா என்கிட்டக் கேட்டார்."

"நீங்க பெரிய பண்டிதர்னு எண்ணிக் கேட்டாரோ?"

"இல்லேங்காணும். ஆஜர் பட்டியிலே நீர் கையெழுத்துப் போட மாட்டேன்னுட்டீராமே?"

"என் வாசிப்பைக் கேட்க அவங்களில்ல வந்து ஆஜராகணும். இது என்ன பள்ளிக்கூடமா?"

"கையெழுத்திருந்தால்தானே ஆடிட்டர் சம்பளம் கொடுப்பார்?"

"வைத்தி! சங்கீதத்துக்கு யாரும் சம்பளம் கொடுக்க முடியாது" என்றான் சண்முகம்.

அப்போது யாரோ கலகலவென்று சிரிக்கும் சத்தம் கேட்கவே எல்லோரும் திரும்பினார்கள்.

ஆஸ்தான கவிராயர் அநுமான் பிரசாத் அவர்கள், கையில் மதுக் கிண்ணத்தைப் பிடித்துக்கொண்டு அற்புதமான பாடல் ஒன்றை இசைத்தார்கள்.

"அருந்து அருந்து அருந்து - இது
அறிவை வெல்லும் மருந்து
விருந்து விருந்து விருந்து - இது
விதியை மாற்றும் விருந்து
உன்னை மறக்க அருந்து - இந்த
உலகை மறக்க அருந்து
தன்னை மறக்கும் மருந்து - இதில்
தண்ணி விடாமல் அருந்து"

என்று அவர் பாடிவிட்டுக் கடகடவென்று அவரே சிரித்தார். இவருக்கு ஒரு குணம், மது அருந்தினால் சிரிப்பு தாங்க முடியாது. மகாராஜா இதற்கு நேர் எதிரிடை. அவருக்கு மது அருந்தினால் மனம் இளகி அழுகை வந்துவிடும்.

ஆஸ்தானக் கவிஞர் சிரிக்க சிரிக்க, மகாராஜா அழ ஆரம்பித்தார். மதுவைக் குறித்து அவர் ஆஸ்தான வித்வான், "உன்னை மறக்க அருந்து; இந்த உலகை மறக்க அருந்து" என்றவுடனே, அவர் அழுது கொண்டே "அச்சா, அச்சா" என்றார்.

இப்படி ஒருவர் அழவும், ஒருவர் சிரிக்கவுமாக இருக்கும் இக்காட்சியைக் கண்ட கலைக் கூட்டத்தினர் 'நாம் அழுவதா சிரிப்பதா? எது மகாராஜாவுக்குப் பிடிக்கும்' எனத் திகைத்தார்கள்.

வெறி ஆட்டம் உச்சநிலையை அடைந்தது. மனிதர்கள் என்பதற்காக ஏற்பட்ட கட்டுகள் தளர்ந்து, அவர்கள் விலங்குகளாக மாறும் அழகான மாறுதலை ரஸிக்க மோகனாவால் இயலவில்லை. ஏழு மணிக்கே ஆரம்பித்த கொம்மாளம், மணி பத்தாகியும் தீரவில்லை. கப்பலின் மேல் தட்டில் அமைந்திருந்த நாற்காலிகளும் மேசைகளும் கூட ஆடிக்கொண்டிருந்தன. நல்லவேளையாக அவைகளைச் சங்கிலி போட்டுத் தளத்துடன் பிணைத்திருந்ததால், அவை சாயவில்லை. ஆனால் மனிதர்களோ சங்கிலி அறுந்து சாயத் தொடங்கினார்கள்.

மோகனாவுக்குக் கண் கலங்கியது. முகம் சிவந்தது. அந்த இடத்தை விட்டு எழுந்து செல்லவும் பயமாயிருந்தது. ஆனால் சண்முகம் அருகில் இருந்ததால் பயம் தெளிந்தது. திருடர் கூட்டத்தில் அகப்பட்டபோதுகூடப் பயப்படாத அவள், அந்த வெறியாட்டத்தைக் கண்டு வேட்டை நாய்களுக்கிடையில் சிக்கிய மான் போல் தவித்தாள். அவளை அறியாமல் அவள் கண்கள் அடிக்கடி சண்முகத்தைப் பார்த்தன.

அதில் காணும் பயத்தைக் கண்டான் சண்முகம். எழுந்து போக நினைத்த சண்முகம் தயங்கினான். அவள் கண்கள் 'என்னைத் தனியே விட்டுப் போகாதே. இரு. ஏதோ ஆபத்து' என்று சொல்வது போல் இருந்தன. மறுபடியும் உட்கார்ந்தான்.

இந்தச் சமயம் நமது காப்டன் அவர்கள் அங்கிருந்த ஒரு பெட்டியைத் திறந்து அதிலிருந்த ஒரு விசையை அமுக்கினார். அந்த விக்ட்ரோலா மிஷினிலிருந்து ஒரு சங்கீதம் கிளம்பியது. அந்தச் சங்கீதத்தைக் கேட்டவுடனே, வெறிக்கூட்டத்தில் ஒரு ஆனந்தம். காப்டன்ஸ் பால் ஆட்டம் ஆரம்பமாயிற்று. காப்டன் அவர்கள் ஸ்ரீமதி ஆஷலதா தேவி அவர்கள் இடுப்பைச் சுற்றிக் கையை அணைத்தார். இருவரும் பால் டான்ஸ் உருளத் தொடங்கினார்கள். ஆளுக்கு ஆள் ஒரு அம்மையாரைத் தேடினார்கள்.

தில்ரூபா தேவியும், ஆஸ்தானக் கவிஞரும் ஜோடி சேர்ந்தார்கள். ஸ்ரீமான் வைத்தியும் ஸ்ரீமதி கனகாம்பரமும் நன்றாய்த்தான் ஆடினார்கள். ஸ்ரீ மகாராஜா அவர்கள் காப்டன் மனைவியுடன் ஆட ஆரம்பித்தார். அடிக்கடி கண்களைத் துடைத்துக்கொண்டார். விக்ட்ரோலா மிஷினிலிருந்து லலல லலல லலலலா டர்ரலா டர்ரல டர்ரலா என்று ஒரே தாளத்தில் அருமையான வால்ட்ஸ் சங்கீதம் வந்துகொண்டிருந்தது. ஆட்டமும் தன்னை மறந்து நடந்து கொண்டிருந்தது. வரதன் உள்ளூரச் சிரித்துக்கொண்டான். தருமன் தானும் ஆட முடியவில்லையே என்று வருந்தினான். பாட்டு உச்சநிலைக்கு வந்ததும்—பாவம், அப்போது அதனுடைய ஊசி பிளேட்டில் சிக்கிக்கொண்டது. திரும்பத் திரும்ப அதே டட்ட டட்ட டட்ட என்று! என்று! என்று! முழங்கத் தொடங்கியது. இதுகூடத் தெரியாமல் ஆடியவர்கள் வெறியில் வேகம் வேகமாக ஆடவே,



மகாராஜா தள்ளாடி விழுந்தார். மகாராணி சிரித்தாள். கூட்டத்தில் கரகோஷம் உண்டாயிற்று. கீழே விழுந்த மகாராஜா எழுந்தார். நான்கு பேர் ஓடி வந்து அவர் உடம்பில் ஒட்டிய தூசியைத் தட்டினார்கள். அவரும் கடகடவென்று சிரித்துக்கொண்டே தம் கண்களைத் துடைத்துக்கொண்டார். மோகனாவின் பக்கம் அவர் பார்வை விழுந்தது. அவளுடைய சுந்தர வடிவம் காந்தம் போல் அவரை இழுத்தது. ஆடிக்கொண்டே அருகில் வந்தார். அதைக் கண்ட மோகனா நடுங்கினாள்.

அந்த ஆட்டத்திலும் நிதானம் தவறாமல், "வில் யூ ப்ளீஸ் டான்ஸ் வித் மி?" என்றார்.

மோகனாவுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. ஆனால் பதில் சொல்லும் அவசியத்தை அவளுக்கு வைக்கவில்லை சண்முகசுந்தரம்.

"அவுங்களுக்குப் பரதநாட்டியந்தானே ஆடத் தெரியும்; பால் டான்சு ஆடத் தெரியாதே."

"நெவர் மைண்ட். அதனால் பாதகம் இல்லே. பரத நாட்டியம் தெரிந்த கால்களுக்கு, பால் டான்சு சிரமமில்லை. கொஞ்சம் ஆடட்டும்" என்றார் மகாராஜா.

"இல்லே, அது ஆடினா நல்லா இருக்காது. வேண்டாம், விட்டுடுங்க."

"உம்மை யாருங்காணும் கேட்டா? பெரிய இடத்திலே நீர் போய்க் குறுக்கே பேசலாமோ?" என்றார் வைத்தி.

சண்முகத்தின் கண்களில் தீப்பொறி பறந்தது. வைத்தியை ஒரு பார்வை பார்த்தான். 'நீயும் கொஞ்சம் குறுக்கே பேசாமே இருந்தா நல்லா இருக்கும்' என்று சொல்வதுபோல் இருந்தது அந்தப் பார்வை.

"மிஸ்டர் பிள்ளை, நான் உம்மை என்னோடு ஆடும்படியாகச் சொல்லலே" என்றார் மகாராஜா.

"இல்லே, எங்க ஊர்ப் பெண்கள் சாதாரணமாக, வேறு ஆண்களுடன் பேசறது இல்லே. அதிலும் நீங்க இருக்கிற நிலையிலே பேசவே பேசாது. அதனால்தான் நான் சொல்கிறேன்."

"நோ, எனக்கு அவள் பதில் சொல்லணும்" என்று ஆடினார் மகாராஜா.

"அவர்கள் சும்மா உக்காந்து இருக்கிற போதே தெரியவில்லையா, முடியாதுன்னு வாயைத் திறந்தா சொல்லுவார்கள்?"

"பாவா நதி, பாத்துக்கறேன்" என்று சொல்லிவிட்டு, மகாராஜா தில்ரூபாவிடம் கையை நீட்டினார். தில்ரூபா ஓடிப்போய் அவரைத் தழுவிக்கொண்டாள். அவர் ஆடப் புறப்பட்டார்.

"என்னய்யா நாயனக்காரரே, இங்கே வந்தும் உம் குறும்பை விடமாட்டேங்கறீரே!" என்றார் வைத்தி.

"முத்துராக்கு, அவர் என்னமோ கேட்கிறார், பதில் சொல்லு" என்றார் சண்முகம்.

முத்துராக்கு தவுல் கம்புடன் வைத்தியின் அருகில் வந்தார்.

"வைத்தி ஐயா. நீர் இந்தக் கேள்வியெல்லாம் கேட்கப்படாது. என்னய்யா அது. பரத நாட்டியம் ஆடற பொண்ணுன்னு பாத்திங்களா, இல்லை, பால் டான்சு ஆடற பொண்ணுன்னு பாத்திங்களா?"

"இது பால் டான்ஸ் இல்லிங்க, கள்ளு டான்ஸ்" என்றான் வரதன்.

"நீ சும்மா இரு தருமண்ணே! ஏன் வைத்தி ஐயா, கண்ட இடத்திலே கண்டவங்களோடு ஆடிக்கிட்டிருக்கவா இங்கே வந்தோம்? மனுஷன் என்னமோ விருந்துன்னு கூப்பிட்டான். குடிச்சிக்கிட்டு ஆடிக்கிட்டிருந்தா, மத்தவங்க எல்லாம் இதைப் பார்த்துக்கிட்டு பட்டினி கிடக்கிறதா?" என்றார் முத்துராக்கு.

"இல்லை மோகனா. இது எல்லாம் மேனர்ஸ். இவ்வளவு பெரிய மகாராஜா கூப்பிடறாரு. ரெப்யூஸ் பண்ணிட்டீங்களே" என்றான் கனகாம்பரம்.

"மகாராஜா இதுக்குக் கூப்பிடலே எங்களை!" என்றான் வரதன்.

"நீட்டிய கையைத் தள்ளப்படாது. இது எல்லாம் வெள்ளைக்கார நாகரிகம். சும்மா ஆடலாம், குத்தமில்லே!"

"ஒத்தரையொத்தர் கட்டிப் பிடிச்சுக்கிட்டு ஆடறது குத்தமில்லியா?"

"அவா ஊரிலே யாரும் மாட்டேன்னு சொல்லமாட்டா. அதெல்லாம் எட்டிகேட்!"

"என்ன எட்டிக் கொட்டையா? அது நஞ்சு ஆச்சே! ஆத்தா! நீங்களே ஆடுங்க. அது பரத நாட்டியந்தான் ஆடும்" என்றான் வரதன்.

இதற்குள் வைத்தி சண்முகத்திடம் வந்தார். "மிஸ்டர் சண்முகசுந்தரம், வீணாக அந்தப் பெண்ணுடைய வாழ்வைக் கெடுக்காதீர்கள். இந்த அவமானத்தில் மகாராஜாவுடைய மனது என்ன பாடு படும்?" என்றார் வைத்தி.

"என்னய்யா, உம்முடைய ஜாதகத்திலே என்றைக்காவது ஒரு பெண்ணுடைய மனது என்ன பாடுபடும்னு யோசித்திருக்கிறீரா? உம்மை யாரய்யா மத்தியஸ்தத்துக்குக் கூப்பிட்டார்கள்? மோகனா, எழுந்திருச்சி நீ உள்ளே போ" என்று சண்முகசுந்தரம் ஆத்திரத்துடன் கூறவே, மோகனா அந்த இடத்தை விட்டு எழுந்தாள்.

இதுவரையில் பயந்துகொண்டே எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த வடிவாம்பாளுக்கு, தன் மகள் பால் டான்ஸ் ஆடுவதும் பிடிக்கவில்லை, அங்கிருந்து எழுந்து செல்வதும் பிடிக்கவில்லை. இருந்தாலும் வேறு கதியில்லாமல், அவளுடன் கூடவே எழுந்து சென்றாள். சண்முகம் கீழே இறங்கித் தன் அறைக்குச் சென்றான்.



மகாராஜாவும் வைத்தியும் அவர்கள் எழுந்து செல்வதை ஆத்திரத்தோடு பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

## எண்பத்து ஒன்பதாம் அத்தியாயம்

# பிழைக்கத் தெரியாத பெண்ணே!



"ஒருவனைப்பற்றி ஒரகத்திரு" என்று முதுமொழி கூறுகின்றது. இறைவன் விஷயத்தில்தான் இது பொருந்தும். மனிதர்கள் விஷயத்தில் பொருந்தாது என்பது ஆண்களின் எண்ணம். கண்டவர்களுக்கெல்லாம் கும்பிடு போடுவதும், எதிரில் வருபவரையெல்லாம் பார்த்துச் சிரிப்பதும், உலகில் எல்லோருடைய தயவையும் நாடிப் பிழைப்பதும் ஆணாய்ப் பிறந்த அன்றே நம் தலையில் எழுதப்பட்டுவிட்டது என்ற அபிப்பிராயம் நமக்கு. ஆனால் பெண்களுக்கு அப்படியல்ல. இந்த ஒரு விதத்தில் அவர்கள் ஆண்களைக்காட்டிலும் பாக்கியசாலிகள். தங்கள் கணவனைத் தவிர மற்ற ஆண்கள் எல்லாம் அவர்களுக்கு அந்நியர்கள்தாம். இந்த அருமையான தாய்க்குலத்தில்தான் மோகனாவும் பிறந்தாள். இறைவன் அருளால் கலைகள் அவளிடம் தஞ்சம் அடைந்தன. உலகம் அவளைப் பாராட்டியது. பிறர் தயவை நாடாமல் வாழ முடிந்தது. கலையில் ஆர்வமும் கலையைத் தானே ரசிக்கும் தன்மையும் அளவுக்கு மீறி இருந்ததால், ஆடல் கலை அவளைக் களிப்பூட்டி ஆட்கொண்டது. அதனால் கிடைக்கும் புகழில் அவள் தன்னை மறந்து இருந்தாள். ஆனால், இந்தக் கப்பல் பிரயாணமும், விருந்தின்போது மகாராஜா நீட்டிய கையும் மோகனாவின் சிந்தனையைக் கிளறியது! 'ஏன் இந்தப் பிரயாணத்துக்கு ஒப்புக்கொண்டோம்! முப்பதாயிரத்துக்கு அடிமையாகிவிட்டோம்' என நினைத்து ஒரு பெருமூச்சு விட்டாள்.

கன்றுக்குட்டி துள்ளி ஓடுகிறதே, காரணம் என்ன தெரியுமா? 'கட்டிய கயிற்றில் இருந்து விடுதலை பெற்றோம்' என்பதுதான். இதன் பிறகு கீரைப் பாத்தியில் வாய் வைத்து மேய்வது, தன் உணவைத் தானே சம்பாதிக்க வேண்டுமென்ற முயற்சியால்தான். இதே கன்றுக்குட்டி பெரிய மாடாக ஆன பிறகு, அவிழ்த்துவிட்டாலும் துள்ளுவதில்லை. பச்சைப் புல்லைக் கண்டாலும் மேய்வதில்லை. துள்ளாமல் நிற்கிறது. தும்பைக் காட்டினால் ஓடி வருகிறது. இது ஏன்? அடிமைச்சுகம் ஊறிப் போய்விட்டது. தன் முயற்சி குன்றி விட்டது.

இந்நிலை கன்றுக்குட்டிக்கு மட்டுமல்ல, கலைஞர்களுக்கும் சில சமயம் வந்துவிடும். புகழ் என்னும் பொற்கயிற்றால் அவர்கள் கட்டப்பட்டவுடன் புதுமையைச் செய்யவே பயப்படுவார்கள். பணம் என்னும் பழைய கட்டுத்துறையிலேயே இருக்க நினைப்பார்கள். புதிய கீர்த்தனங்கள், புதிய ராகங்கள் இவைகளை அசைபோட அஞ்சுவார்கள். சத்து அற்றுப்போன பழைய வைக்கோலையேதான் விரும்புவார்கள். 'இந்தக் கீர்த்தனந்தான் எனக்குப் புகழைத் தந்தது. அதை விடவே மாட்டேன்' என்று எல்லாக் கச்சேரிகளிலும் அதையே திருப்பித் திருப்பிப் பாடுவார்கள். ஆனால், இதே கீர்த்தனம் நெடுநாளாய்ப் புத்தகத்தில் இருந்ததே, அப்போது அது ஒருவருக்கும் புகழ் வாங்கித் தரவில்லையே. இதை நாம் பாடிய விதத்தில்தானே புகழ் கிடைத்தது என்பதை அறிந்தவர்கள் சிலர், கற்பனைத்திறத்தை மேலும் வளர்த்து மேன்மேலும் புகழடைவார்கள். மோகனாவும் சண்முகசுந்தரமும், இம்மாதிரி வளரும் கலைஞர்கள். இருவருக்கும் தம் கலையை விருத்தி செய்வதில் மிகுந்த ஆசை. அதற்கும் இந்தக் கப்பல் பயணம் இடந்தரவில்லை. நாள்தோறும் வீட்டில் நடக்கும் நாட்டியப் பாடங்கள் கப்பலில் நின்றுவிட்டன. அருமையான தேவார திருவாசகங்களுக்கு அர்த்தம் கேட்பதும், அதற்கிணங்க பாவம் பிடிப்பதும், நெக்குருகித் தொழுவதும் நின்றுவிட்டன. கப்பல் பிரயாணத்தை மேற்கொள்வதற்குக் காரணமாயிருந்த இன்பமும் கிடைக்கவில்லை. 'அவர் அருகில் இருக்கலாம், அவர் வாசிப்பதைக் கேட்கலாம், அவருடைய பேச்சைக் கேட்கலாம் என்று நாம் ஆசைப்பட்டதெல்லாம் நடைபெறவில்லையே!' என மோகனா எண்ணினாள்: 'ஏன் அவரை நம்மை விட்டு இந்த அம்மான் பிரிக்க வேண்டும்? இவர்கள் அனுமதிக்காகத்தானே இருவரும் தவம் கிடக்கிறோம்? இதை ஏன் அம்மா தெரிந்துகொள்ளவில்லை? அன்றைக்கு அம்மா இல்லாதபோதுதானே அவர் நம் வீட்டுக்கு வந்தார். அம்மா இல்லை என்பதை அறிந்ததும், கடைசிவரையில் உட்காரக்கூட இல்லையே. அருகில் வந்து, "ஒரு குவளைத் தண்ணீர் கொடு" என்றுகூடக் கேட்கவில்லையே. நான் அழுதபோது அன்பின் மிகுதியால் "ஏ பிள்ளே, ஏன் அழுகிறே?" என்று ஒரு வார்த்தையைச் சொந்தமாய்க் கேட்டுவிட்டு, அவர் பட்ட பாடு எனக்கல்லவா தெரியும். பல்லால் நாவைக் கடித்துக்கொண்டாரே. நான்தான் ஏதாவது தவறுதலாக நடக்கிறேனா? இருவரும் மனமொத்துவிட்ட பின், இந்த அம்மானுக்கு என்ன வந்தது? அவரை நான் அடைந்தால் ஆடமாட்டேன் என்று நினைக்கிறானா? தொழிலை நிறுத்திவிடுவேன் என்று பயப்படுகிறானா? என்னை வைத்துச் சோறு போடவும், நாளைக்கு இரண்டு பட்டுப் புடைவை வாங்கித் தரவும் அவர் என்ன செல்வச் சீமானா? இல்லை. நான்தான் அவருக்குக் கஷ்டத்தைக் கொடுப்பேனா? அவர் ஒரு சிட்டுக்குருவி போல் பறப்பவர். அவர்



உல்லாசத்துக்கு நான் இடையூறாகிவிட மாட்டேன். அவர் தன்மானம் மிகுந்தவர். அவருடைய கௌரவம் என்னால் கெட்டு விடக்கூடாது. என்னைக் காப்பாற்றப் பணம் வேண்டும் என்று அவர் இன்னொருவரிடம் கை கட்டிப் பிழைக்க நானா விடுவேன்? நான் என் ஆட்டத்தை ஏன் நிறுத்தப்போகிறேன்? இதில் ஏன் அம்மானுக்குச் சந்தேகம்?

'இத்தனை பேர்கள் மேல்தட்டில் உட்கார்ந்திருந்தார்களே! என் ராஜா ஒருவர்தான் ராஜா மாதிரி இருந்தார். பாவம், அந்த ராஜாவின் ஆடம்பரம் இவருக்கு முன் நிற்கவில்லையே! ராஜா என்றால் அழகாக இருக்க வேண்டாமோ? என் ராஜாவைத்தானே அங்கு உள்ள எல்லோரும் பார்த்தார்கள். பாவி, அந்த தில்ருபாவிற்குத்தான் என்ன திமிர்! அவரை அவரைப் பார்க்கிறான். எனக்கு வந்த கோபத்தில் 'அம்மா, பார்த்தது போதும். கண்ணை வலிக்கப் போகுது' என்று சொல்லி இருப்பேன். போனால் போகிறது. இவன் பார்த்தா குறைந்து விடப் போகிறது! மேல்தட்டில் வந்துதான் உட்கார்ந்தாரே. என்ன கம்பீரம்! அந்தப் பீதாம்பரத்தைக் கழுத்தை விட்டு எடுத்தாரா? அந்தச் சாரங்கிக்காரரைக் கையெடுத்துக் கும்பிட்டவர், இந்த ராஜாவைக் கண்டஞ்சினாரா? வாசிக்கச் சொன்னவுடன் என்ன குறும்பு! எங்கிருந்துதான் கற்பனை வருமோ? "ராகதாரா"வைத் தேடி எடுத்தாரே. அவர் அல்லவா கலைஞர்... அப்புறம் அந்த இதைக் கையில் கொடுத்து இந்தக் கனகாம்பரமும் நந்தியாவட்டையும் என்னென்னமோ சொல்லிப் பார்த்தாங்களே. கேட்டாரா? தொடமாட்டேன் என்று சொல்லிவிட்டாரே! "இந்த அம்மானுக்கு ஏன் இதெல்லாம் தெரியவில்லை? சொன்னால் சொன்னதுதான். ஒரு மாட ஒரு பாணமும் ஒரு பத்தினி விரதந்தான்...

'அடி அசடே! இதற்குள் உனக்குப் பேராசை. 'ஏகபத்தினி விரதமாமே' தாரந்தான் யார் என்பது தெரியவில்லை. ஐயோ, உனக்கும் அவருக்கும் முடிச்சுப் போட்டிருந்தால் உன்னைப் படைத்தவன் இத்தனை நாள் இழுத்தடித்திருப்பானா? திருவாரூர் வீதியிலேயே மேளம் கொட்டியிருக்காதா? அன்று மதராஸ் விருந்தில் இருவரும் பக்கத்தில் பக்கத்தில் மாலை போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தோமே, அவ்வளவுதான் கொடுத்து வைத்தது போலிருக்கிறது'

அவளையுமறியாமல் அடிவயிற்றில் இருந்து ஒரு சாந்தலும் பெருமூச்சும் வந்தன.

'பாழும் மனமே, உனக்குச் சமயமே தெரியாது! அவர் அருகில் இல்லாதபோது ஆகாசக் கோட்டை கட்டுவாய். அவரைக் கண்டவுடன் எங்குதான் போகுமோ உன் தைரியம் எல்லாம்? மாலையைப் போட்டுக்கொண்டு உன்னைப் பார்த்துச் சிரித்தாரே, நீ சிரித்தாயா? ஏன் தலையைக் குனிந்தாய்? அங்கே கோட்டை விட்டுவிட்டு வீட்டுக்கு வந்த பிறகு, 'ஐயோ! பார்க்கவில்லையே'

என்று ஏன் அடித்துக்கொள்கிறாய்? பெண் புத்தி பின்புத்தி என்பது சரியாய் இருக்கிறது இந்தப் பின்புத்தி கீர்த்தனம் பாடம் பண்ணுவதில் வரவில்லையே.

'நீ மேல் தட்டுக்குப் போனவள் அவர் பக்கத்தில் போய் உட்கார்வதுதானே? ஏன் தன்னி உட்கார்ந்தாய்? இந்தத் தில்ருபாவுக்கும் மணிபுரி நாட்டியக்காரிக்கும் உள்ள சொந்தம் உனக்கு இல்லையா? அவர்கள் எல்லாம் அருகில் உரசிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்களே. நீ ஓரத்தில் போய் உட்கார்ந்ததால்தானே இவ்வளவு துன்பமும் வந்தது. நீ அவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தால் அந்த மகாராஜா உன்னைப் பார்த்து அவ்வளவு தைரியமாகக் கையை நீட்டியிருப்பாரா?

'இது என்ன கேவலம்! நாம் சீமைக்கு நாட்டியம் ஆடப் போகிறோம். கால் ஓயும்வரை ஆடச் சொல்லட்டும். இந்த விருந்துக்கு ராஜா கூப்பிடவில்லை என்று யார் அழுதார்கள்? இந்தக் கஷ்டத்தை எல்லாம் பார்க்கவேண்டும் என்று எனக்கு வந்ததே! இது ஒரு நாகரிகமா? நம் ஊரில் இம்மாதிரி உண்டா? ஒரு பெண்ணுக்கு முன்னாலே இப்படி எல்லாம் குடிப்பார்களா? எல்லாம் இந்த அம்மாவால் வந்த வினை. வேண்டாம் என்றால் விடுகிறார்களா? ஆபத்து வேளையிலே அவர் வந்து குறுக்கே நிற்காவிட்டால், நம் கதி என்ன ஆகியிருக்கும்.....?" இதை நினைத்தவுடன் அவள் கடைவிழியில் நீர் சேரலாயிற்று. மேல்தட்டில் உட்கார்ந்திருந்த வரைக்கும், முன் மேல் உட்கார்ந்திருப்பது போல இருந்ததை எண்ணினாள். சண்முகம் வந்து மகாராஜாவுடன் பேசிய காட்சி ஞாபகம் வந்தது. அவன் நிமிர்ந்து நின்ற அழகையும், ராஜாவுக்குச் சரிக்குச் சரியாய்ப் பதில் சொல்லிய கம்பீரத்தையும் எண்ணிப் பார்த்தாள்.

'அட, அதிகாரத்தைப் பாரு. 'மோகனா, எழுந்திருச்சு உள்ளே போ'வாமே என்ன துணிச்சல்! இதைக் கேட்டுவிட்டு அங்கு இருந்தவர்கள் எல்லாம் என்ன நினைத்திருப்பார்கள்?— நினைத்தால் நினைக்கட்டுமே. இனிமேல் யாரும் அவர் பக்கத்திலே போய் உட்காரமாட்டார்கள் இல்லையா?—' என்று சிரித்துக்கொண்டாள். ஒரு நாளும் இல்லாமல் இன்று அவர் தன்னைப் பார்த்து அதிகாரம் செய்ததை எண்ணி எண்ணிப் பூரித்தாள் மோகனா. அதே சமயம் வடிவாம்பாளின் சிந்தனை கனிந்து ஒரு தீப்பொறி உதிர்ந்தது.

"ஆமா, நமக்குச் சம்பளம் ராஜா குடுக்கிறாரா, வேறு எவனாவது குடுக்கிறானா?" என்றாள் வடிவாம்பாள்.

"ஏன் இந்தச் சந்தேகம்?"

"நாலு பேருக்கு நடுவிலே உன்னைப் பார்த்து, 'ஏ மோகனா, எந்திரிச்சு உள்ளே போ'ன்னு சொல்ல இவன் யாரு?"

"பின்னே என்னம்மா! மகாராஜாவோட ஆடணுமா?"



"ஏன், ஆடினா என்ன? அதிலே என்ன குத்தம் வந்துட்டுது? மனசிலேதான் களங்கம் இல்லாமல் இருக்கணும்."

"நிஜமாவேதான் சொல்றீங்களா அம்மா?"

"நிசம் பொய் எல்லாம் உன்னைக் கேட்கவில்லை. பணம் கொடுக்கற மகாராஜா ஆடுங்கறாரு. பணத்தைக் கை நீட்டி வாங்கினவள் நான் பக்கத்தில் இருக்கேன். நடுப்பற இவன் ஏன் வரணும்? சேச்சே, இவனாலே நம்ம பிழைக்கிற பிழைப்பே இல்லே கெட்டுப்போகும் போலே இருக்கு!"

"நமக்கென்னம்மா அவராலே நஷ்டம்?"

"ஆமா. அது ஆடாதுன்னு இவன் சொன்னா எல்லோரும் என்ன நினைப்பாங்க? இவன் எதுக்கு வந்து பேசறான்? பத்துப் பேருக்கு நடுவிலே அந்தப் பெண் எனக்கு அடங்கினவள்னு கித்தாப்புக் காட்டிக்கிறாப்போலிருக்கு!"

"அவரென்னம்மா அப்படிச் சொல்லிட்டாரு?"

"என்னவா? நீ ஆடமாட்டேன்னு அவன் சொன்னான். அதைக் கேட்டுட்டு நீ தலையை ஆட்டினே. இது போதாதா மகாராஜாவுடைய கோவத்துக்கு?"

"உண்மையைத்தானே சொன்னாரு?"

"ஆமா, இவரு அரிச்சந்திரன் பேரன், உண்மையைச் சொல்றாரு. உண்மையைச் சொல்ல இவன் யாருன்னு கேக்கிறேன்—நான் சொல்லியிருக்கமாட்டேன். 'அது கப்பல்லே நடந்திச்சு, காலிலே முள்ளு குத்திடுச்சு'ன்னு சொல்லிட்டுப் போறேன், மகாராஜா என்ன காலைப் புடிச்சா பாக்கப் போறாரு?"

"கப்பல்லே ஏது முள்ளுன்னு கேட்டா?"

"கேட்டுடுவாரோ? அவருக்குத்தான் பொய்னு தெரியுமே. ஏதோ ஆட இஷ்டமில்லே போலிருக்குது. மரியாதைக்குச் சாக்குச் சொல்லறாங்கன்னு விட்டுடுவாரு. இப்படி நேருக்கு நேர் பகைச்சுக்கலாமா? பெரிய இடத்துப் பகையாச்சே. இந்தா பாரு, இனி அவன் கார்டியனா, நான் கார்டியனாங்கறது தெரியணும். என் மகள் விஷயத்திலே அவன் இஷ்டம் போலத் தலையிட்டுப் பேசக்கூடாது."

"நீங்களே அவர் கிட்டச் சொல்றதுதானே!"

"நான் ஏண்டி சொல்றேன்? நீ இல்லே சொல்லணும். 'நீ சும்மா இருய்யா, எனக்குப் பெரியவங்க இருக்காங்க! அவங்க பேசட்டும்'னுட்டு இதெல்லாம் நல்லாவா இருக்கு?" என்று கூறிவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டாள் வடிவாம்பாள்.

இதோ சமயம் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. இரவு மணி பதினொன்றுக்கு மேல் ஆகியதால் வடிவாம்பாள் திடுக்கிட்டாள். மகாராஜாதான் குடி வெறியில் கீழே இறங்கி வந்துவிட்டாரோ, ஆட வற்புறுத்துவாரோ என்று சந்தேகம் வந்தது.

வாதனும் இல்லையே என்று அஞ்சினாள் இல்லை, சண்முகமாக இருக்குமோ? என்று நினைத்தாள். ஆனால் அவன் இவ்வாறு வந்து மரியாதை தெரியாமல் கதவைத் தட்டமாட்டானே! அவன் தட்ட நினைத்தாலும் அவன் கர்வம் தட்டவிடாதே என்று எண்ணினாள்.

அப்போது கதவு தட்டும் சத்தம் அதிகப்பட்டது. மோகனாவின் முகத்தில் பயமும் அதிகமாயிற்று. வடிவாம்பாள் நடுங்கினாள். அறையில் ஒரு புருஷத் துணையில்லையே என்றுகூட எண்ணினாள். கைகள் நடுங்கக் கதவைத் திறந்தாள். அறை வாசலில் தபலா மாஸ்டர் சம்பு பிரசாத், ஒரு டும்ரியைப் பாடிக்கொண்டு தடுமாறிக்கொண்டு நின்றான்.

"எங்கு அய்யா வந்தீர்?" என்றாள்.

"மாப்கிஜியே! ஹி ஹி ஹி! என் ரூமாக்கும்னு பார்த்தேன். இது உங்க ரூமா? கப்பல்லே பார்த்தா எல்லாக் கதவும் ஒன்றாக இருக்கு. ஹி ஹி ஹி!" என்றார்.

"நல்ல வேளை, கப்பலும் கடலும் ஒண்ணா இருக்குன்னு அதிலே குதிக்காமே இருந்தியே!" என்று சொல்லி 'படார்' என்று கதவைச் சாத்தினாள் வடிவாம்பாள். அவள் முகம் பயத்தால் சிவந்தது. மோகனாவின் பக்கம் திரும்பினாள். மோகனாவோ ஆத்திரமும் அழுகையும் பீறிட்ட குரலில் "அம்மா, எனக்கு இந்த அறையிலே தனியாய் இருக்கப் பிடிக்கலே இல்லை" என்றாள்.

இதைக் கேட்ட வடிவாம்பாள், மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்தாள்.

இதே சமயத்தில் மறுமுறையும் கதவு தட்டப்படும் சத்தம் கேட்கவே, "என்னய்யா, உனக்கு வேறு வேலை கிடையாதா? அட்சீ, போ" என்று சொல்லிக்கொண்டே கதவைத் திறந்தாள் வடிவாம்பாள்.

அங்கே மகாராஜாவின் டவாலிச் சேவகன் ஒருவன் புஸ்தி மீசையுடன் நின்றுகொண்டிருந்தான். அவன் கையில் ஒரு கடிதம் இருந்தது. அதை வடிவாம்பாளின் கையில் கொடுத்துவிட்டு, தன்னுடைய நோட் புத்தகத்தில் ஒரு கையெழுத்துப் போடச் சொன்னான். வடிவாம்பாள் கை நடுக்கத்தில் போட்ட கையெழுத்தே, ஒரு பக்கம் முழுவதையும் அடைத்துக்கொண்டது. ஆபத்துக்கு மேல் ஆபத்துகள் வருவதைக் கண்டு அஞ்சினாள் வடிவாம்பாள். கடிதத்தைப் பிரிக்க நினைக்கும் போதே, மகாராஜா உருவிய கத்தியுடன் எதிரில் நிற்பது போல் தோன்றியது. சிப்பாய்கள் ஓடி வருவது போலும், தன் மகளைக் கட்டித் தூக்கிப் போவது போலும், அவளைப் பாராவில் வைக்கும்படி உத்தரவிடுவது போலும் தோன்றியது.

கடிதத்தைக் கையில் வைத்தபடி பிரமித்துவிட்டாள். தன் கையில் இருந்த கடிதத்தை மோகனா வாங்கியதுகூட அவளுக்குத்



தெரியவில்லை. மோகனா கடிதத்தைப் பிரித்தாள், படித்தாள். அதில் கீழ்க்கண்ட விதம் எழுதப்பட்டிருந்தது.

"எல்லாக் கலைஞர்களுக்கும் மகாராஜாவின் உத்தரவு :

"நாளை மறுதினம் அஷ்டமியன்று மகாராஜா அவர்களின் பிறந்த நாள், கப்பலில் விமரிசையாகக் கொண்டாடப்படும். காலை 4 மணி முதல் இரவு 12 மணி வரை எல்லா வித்வான்களும் எந்த நிமிஷத்தில் அழைப்பு வந்தாலும் புறப்படத் தயாராக இருக்கும் வண்ணம், தர்பாருக்கு ஏற்ற உடையுடன் தயாராக இருக்கவும். விழாவில் தவறாமல் கலந்துகொண்டு, விழாவை வெற்றியடையச் செய்ய வித்வான்கள் ஒத்துழைப்பு கோரப்படுகிறது.

இங்ஙனம்
பை ஆர்டர்
வைத்தி

பின்குறிப்பு : எக்காரணத்தைக் கொண்டும், தர்பாரில் வந்து சுருதி சேர்ப்பது அனுமதிக்கப்படமாட்டாது.

இதைப் படித்ததும் மோகனா சிரித்தாள். "அம்மா, வைத்திக்கு பட்டம் உசந்து போச்சு. பின்னாலே ஒரு சீ சேர்ந்திருக்கு" என்றாள்.

"பிழைக்கத் தெரிஞ்ச மனிசன். அவர் என்ன வித்வானா?" என்று சபாஷ் போட்டாள் வடிவாம்பாள்.

## தொண்ணூறாம் அத்தியாயம்

# பள்ளி எழுந்தால் பயனுண்டோ?



மகாராஜாவின் அறையில் அவருக்கு எதிரில் ஆஸ்தான சோதிடர் சூரியபந்தும் வைத்தியும் நின்றுகொண்டிருந்தார்கள். கையில் ஒரு சிறிய அட்டையும் காகிதமும் வைத்துக்கொண்டு மகாராஜா சொல்வதை வைத்தி குறித்துக்கொண்டே இருந்தார். "காலை எழுந்திருப்பது எத்தனை மணிக்கு?" என்றார் வைத்தி.

"எட்டு மணிதான்" என்றார் மகாராஜா. வைத்தி சிரித்தார். "அது எப்பொழுதும் அல்லவா? பிறந்த நாளன்று எழுந்திருப்பது எத்தனை மணிக்கு?"

"ஆறு மணிக்கு எழுந்தால் போதாதா?"

"எதற்கும் ஜோசியர் சொல்லட்டும்."

உடனே ஜோசியர் பஞ்சாங்கத்தைப் புரட்டினார். "காலை ஐம்பத்தி நாலு நாழிகை இருபத்திமூனே முக்கால் விநாடிக்கு

ஸப்தமி போய், அஷ்டமி வந்துவிடுகிறது. ஆனதாலே மகாராஜா அஷ்டமியில் பள்ளி எழக்கூடாது" என்று இழுத்தார்.

"சரி, நவமி எப்ப வருகிறது? அப்ப விழித்தால் போகிறது" என்றார் வைத்தி.

"அப்படியில்லை. அஷ்டமி பிறக்கிறபோது மகாராஜா முழிச்சுக்கப்படாது. அஷ்டமிக்கு முன்னாலேயே முழிச்சுண்டுட்டா நல்லது."

"சரி. வைத்திஜி, 'எழுந்திருப்பது நாலு மணிக்கு' என்று எழுதிக் கொள்ளுங்கள்" என்றார் மகாராஜா. வைத்தி எழுதிக்கொண்டார்.

"சரி, எழுந்தவுடன்?" என்றார் வைத்தி.

"டீ" என்றார் மகாராஜா.

"மன்னிக்க வேண்டும். எழுந்தவுடன் மங்கள ஸ்நானம், கங்கா அபிஷேகம், புண்யாக வாசனம், நவக்ரக ஹோமம், நவக்ரக தானம், நவக்ரக சாந்தி, நவக்ரக ஜபம், ஆயுஷ்ய ஹோமம்."

"என்ன ஜோஸ்யர்வாள், இதெல்லாம் நடத்தவே ஒரு நாள் போறாது போலிருக்கே."

"வெத்திலை பாக்கிலே தட்சிணையை வைத்து எங்கிட்டக் கொடுத்துடட்டும். நானே என் ரூம்லே செய்துக்கறேன். ஆமாம், முக்யமானது மறந்து போச்சே, அதை எழுதிக்குங்க."

"என்ன?" என்றார் வைத்தி.

"முண்டன்."

"முண்டனா, அவன் எதற்கு?"

"முண்டன் என்றால் தலையலங்காரம்."

"ஓ, அதுவா? தட்சிணையை வைத்துக் கொடுத்துடறேன், அதையும் நீங்களே செய்துக்குங்கோ."

"அதெப்படி நான் செய்துக்கறது? மகாராஜாதான் செய்து கொள்ள வேணும்."

"சரி, கப்பல்லேயே பார்பர் ஷாப் இருக்கு. அவரைக் கூப்பிட்டுப் பத்து ரூபா நோட்டைக் கையிலே குடுத்தா சரீங்கறார்."

"அப்படியானால் வைத்திஜி, கத்தி ஒன்று புதுசா வாங்கிக் குடுத்துடுங்கோ" என்றார் மகாராஜா.

"கத்தியை வேணும்னா புதுசா வாங்கிக் கொடுத்துடலாம். கையை புதுசா வாங்க முடியுமா? எப்படி இருந்தாலும் பல்லைக் கடிச்சிண்டு பொறுத்துக்கத்தான் வேணும்."

"இல்லை வைத்திஜி, பிறந்த நாளன்று அவன் முகத்தை வெட்டி விட்டுட்டா?"

"பின்னே, ஷேவிங் ஸெட்டுனு ஒண்ணு வந்திருக்கு."

"வைத்திஜி சப்கரோ! என்ன கேவலம்! செங்கோல் புடிக்கிற கையிலே ஷேவிங் செட் புடிக்கிறதா? அதுவும் பிறந்த நாளன்று? அந்த



பார்பரே செய்யட்டும். என்ன மகாராஜ்" என்று தம் ராஜபக்தியை வெளியிட்டார் ஜோதிடர். மகாராஜா புன்னகை செய்தார்.

"ஆமா, காலையிலே வைதிக காரியங்கள், மாலையிலே வித்வான்கள் ஸதஸ். சரி, காலை நாலு மணிக்குத் திருப்பள்ளி யெழுச்சி. வாத்தியங்கள் எல்லாம் வாசிக்கணும். மகாராஜா எழுந்திருந்ததும், காராம் பசுவைத் தரிசனம் பண்ணணும்" என்று தொடர்ந்தார் ஜோதிடர்.

"கப்பல்லே பசு மார்க் பால் கிடைக்கும். பசு கிடைக்காதே" என்றார் வைத்தி.

"இல்லேன்னா கருங்குரங்கையாவது தரிசனம் பண்ணணும்."

இதைக் கேட்ட மகாராஜா பிரமித்துவிட்டார். "இங்கே கருங்குரங்கும் அகப்படாதே வைத்திஜி!" என்றார்.

"பின்னே, உங்க முகத்தையே கண்ணாடியிலே பாத்துக் கொண்டால் போச்சு!"

"கண்ணாடி, பித்தன், கருங்குரங்கு, காட்டானை இந்த நாலையும் பார்க்கலாம்னு சாஸ்திரத்திலே சொல்றது. சரி, காலையிலே எழுந்தவுடன் கண்ணாடியில் பார்த்தால் இந்த நாலையுமே பார்த்துக்கலாம். உம்—"

"சரி, அப்புறம்?" என்றார் மகாராஜா.

"10 மணிக்கு வேட்டை" என்றார் குருஜி.

"கப்பலில் எதை வேட்டையாடுவது?" என்றார் மகாராஜா.

"அதுக்காக என்ன, நம்ம ஆஸ்தான ஜோசியர் இருக்கவே இருக்கார்."

"என்ன வைத்திஜி, என்னையா வேட்டையாடச் சொல்றீங்க?"

"என்ன, உம்மையா? உம்மை வேட்டையாடினால் பாவந்தானே வரும்! நீர் என்ன மிருகமா? உம்மை வேட்டையாடினால் தோலுகூட உபயோகப்படாது. நீர் ஏதாவது ஒரு யோசனை சொல்வீர் என்று சொன்னேன்?" என்றார் வைத்திஜி.

பிறகு சர்க்கரையால் புலியைப் போல் ஒரு மிட்டாயைச் செய்து, அதைச் சுட்டுப் போடுவது என்று நிச்சயம் ஆயிற்று.

"ராத்திரி என்ன புரோகிராம்?" என்றார் வைத்தி.

"பால் டான்ஸ். நம்முடைய விருந்து. ஆமா வைத்திஜி உமக்கு அந்த மோகனாவைத் தெரியுமோ?" என்றார் மகாராஜா.

"தெரியுமாவா? எனக்கா? என்ன இப்படிக் கேட்டுவிட்டீர்கள்?"

"ரொம்ப நானா தெரியுமோ?"

"தெரியவே தெரியாது. நாங்கள் எல்லாம் எங்களூரிலே அவாளோடே முகம் கொடுத்துப் பேசவே மாட்டோம்."

"ஏன் அவ்வளவு கோவம்?"

"அவர்கள் கலையை விற்கிறார்கள். நாட்டியம் செய்து பணம் சம்பாதிப்பது பாவம் என்று சாஸ்திரம் சொல்லுகிறது. அதனாலே நாங்கள் அந்தப் பக்கம் நெருங்குவதில்லை."

"அப்படி இருந்தால், நேற்று அவள் என்னுடன் ஏன் ஆட மறுத்தாள்?"

"அந்த நாதஸ்வர வித்வான்தான் காரணம். அவரிடத்தில் அவளுக்குப் பயம்."

"ஏன், அவர் அவ்வளவு பொல்லாதவரா?"

"இல்லை, கொஞ்சம் போக்கிரி."

"நேற்று அவளை ஆடக்கூடாது என்று ஏன் தடுத்தார்?"

"பொறாமைதான். அந்தப் பையனுக்கு அவள் மேலே ஆசை. அவள் தாயாருக்குக் கட்டோடே பிடிக்கவில்லே."

"அப்படியானால் அந்தப் பெண்ணுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லையா?"

"இல்லே, இல்லே, இல்லே. 'அவசரப்படாதே, நல்ல இடமா பார்த்து நான் செய்து வைக்கிறேன்' என்று சொல்லி இருக்கிறேன்."

"அப்படியானால் அவள் நமது ஆஸ்தானத்திலேயே ராஜ நர்த்தகியாக இருந்துவிடுவாளா?"

"அவள் அம்மாவைக் கேட்கிறேன்."

"அம்மாவை இல்லை வைத்தி, அந்தப் பெண்."

"எதாவது ஒரு ஆஸ்தானத்தில் இருந்துதானே ஆகவேண்டும். நம்ம ஆஸ்தானத்திலே இருக்க வலிக்கிறதா? மெல்ல மகாராணியை விட்டு ஒரு வார்த்தை கேட்கச் சொல்லுங்களேன்!"

"மகாராணியா! அவள் ஒரு சந்தேகம் பிடித்தவள்."

"ஓஹோ, அப்படியா விஷயம்! நானே கேட்கிறேன்" என்றார் வைத்தி.

✦ ✦ ✦

அடுத்த நாள் பகல் நாலு மணி முதலே கப்பலில் மேல்தட்டு அல்லோலகல்லோலப்பட்டது.

தோரணங்களும் யூனியன் ஜாக்குகளும் கட்டப்பட்டன. தன்னுடைய பிறந்த நாளில் யூனியன் ஜாக்கைக் கட்டாவிட்டால், அது தன்னுடைய ராஜ விசுவாசத்திற்கே குறைவாகும் என்ற எண்ணத்தில் மகாராஜா அதை அவசியம் கட்ட வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தார். முதல் நாள் பால் டான்ஸ் நடைபெற்ற இடம் பூராவும் கழுவிச் சுத்தம் செய்யப்பட்டது. கூடவே கொண்டுவந்திருந்த கங்கைத் தண்ணீரைத் தெளித்துப் புண்ணியாகவாசனம் செய்யப்பட்டது. அதன் மேல் கங்கை மண்ணும், சேது மணலும் கலந்து தெளிக்கப்பட்டன. இரவு முழுவதும் மகாராஜா தம் சிப்பந்திகளுக்கு என்னென்ன சன்மானங்கள் அளிப்பது என்று லிஸ்டு போட்டுக் கொண்டிருந்தார்.



இவ்வளவு ஏற்பாடுகளையும் கண்ட ஆஸ்தான தேவியார், தம் தூக்கத்துக்கு இடையூறாக இருக்கிறது என்று வேறு அறையில் போய்ப் படுக்கையை விரித்துக்கொண்டார்.

ஆஸ்தான கவிஞர் அனுமான் பிரசாத் ராத்திரி முழுவதும் கண் விழித்துக்கொண்டு மகாராஜாவுடைய எதிரிகளின் மனைவிகள் புலம்பி அழுவதாக ஒரு கவிதையை மகாராஜாவின் பிறந்த நாளை உத்தேசித்துப் பாடுவதற்குத் தாமே பாடித் தயார் செய்து கொண்டிருந்தார்.

டான்ஸ் மாஸ்டர் மால்கோஸ்ஜி முதல் நாள் இரவே பெண்களுக்கு வேஷம் போடும் வேலையில் முனைந்துவிட்டார்.

சாரங்கி சந்தாமியான் மூன்று வாத்தியங்களைச் சுருதி சேர்த்துக் கொண்டு, ஒரே நரம்புக் குவியலின் நடுவில் அமர்ந்திருந்தார்.

கரீம்கான் கோஷ்டியினர் தூங்கினால் விழிப்பு வராது என்ற எண்ணத்தில், இரவுத் தூக்கத்தையே தியாகம் செய்து வாசித்துக் கொண்டிருந்தார்கள்.

தபேலா மாஸ்டர் சம்பூபிரசாத், காலையில் குளிக்கும் அறையில் கூட்டம் அதிகமாக இருக்கும் என நினைத்து, இரவே குளித்துவிட்டு பூப்போட்ட புதுச் சட்டை ஒன்றும் போட்டுக்கொண்டுவிட்டார்.

காலை மூன்று மணிக்குக் 'கணகண' வென்று கப்பல் மணி அடிக்கப்பட்டது. உடனே மேல்தட்டில் எங்கு பார்த்தாலும் விளக்குகள் ஏற்றப்பட்டன. கூடு கலைந்த தேனீக்கள் பறப்பது போல எங்கு பார்த்தாலும் மகாராஜாவின் சிப்பந்திகளும், கப்பல் சிப்பந்திகளும் அலைந்துகொண்டிருந்தார்கள்.

"மூன்று மணியாச்சு, எழுந்திரு, எழுந்திரு" என்று சண்முகத்தின் அறை வாசலில் வைத்தி ஓடி வந்து கதவைத் 'தடதட'வென்று தட்டினார்.

ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த சண்முகம் திடீரென்று எழுந்தான்.

"யாரையா அது, நேரம் தெரியாமல்?" என்று சொல்லிக் கொண்டே கதவைத் திறந்தான்.

"நேரம் தெரியாமல் நீர் தூங்குகிறீரா, நான் எழுப்பறேனா? ரெடி பண்ணிக்குங்க பின்னே. மகாராஜா படுக்கையிலேயே இருக்கார் உம், சீக்கிரம் வாரும். நீர் வந்து வாசிச்சப்புறந்தான் கண்ணைத் திறக்கணும்னு காத்திண்டிருக்கார்."

"ஏது, நான் வந்து வாசிக்கிறதா? இப்ப அதிகாலையிலே என்ன விசேஷம்?"

"திருப்பள்ளி எழுச்சி வாசிக்க வேண்டாமா?"

"கப்பலிலே ஏதாவது கோயில் இருக்குதா?"

"கப்பல்தான் கோயில் மகாராஜாதான் தெய்வம். ராஜாக்கள் பள்ளியெழுந்திருக்கிற போது, சங்கீதம் முழங்கணும் இல்லையா?"

"பள்ளிகொண்ட பெருமாளுக்கு வாசிக்கலாம். இல்லாட்டி தில்லை நடராஜனுக்கு வாசிக்கலாம். மனிதர்கள் தூங்கி எழுவதற்கு திருப்பள்ளி எழுச்சி வாசிக்கணுமா?"

"ஏன், வாசிச்சா என்ன?"

"இவர் தூங்கினாத்தான் என்ன, முழிச்சுக்கிட்டிருந்தாத்தான் என்ன?"

"அது அவர் இஷ்டம்."

"வாசிக்கறதும் என் இஷ்டம். இவருக்குப் பள்ளியறை சீதமும் பள்ளியெழுச்சியும் வாசிக்க என்னைத்தான் பார்த்தீர்களா?"

"சும்மா வாசிக்கச் சொல்லலேங்காணும். முப்பதாயிரம் பணத்தைக் கொடுத்துவிட்டு வாசிக்கச் சொல்றார்."

"சும்மாவும் வாசிப்பேன். ஆனால், அதுக்கு இடம் உண்டுங்க."

"இப்ப நீர் வரீரா இல்லையா?"

"ஒருகாலும் நான் வர முடியாது. ஆண்டவனைத் துயில் எழுப்பினால் உலகத்துக்கு நன்மை. அதற்குத்தான் என் கை வாசிக்கும்."

"சண்முகம் பிள்ளை, உமக்காக மகாராஜா காத்திண்டிருக்கார்."

"இருக்கட்டுமுங்க. அவுங்ககிட்டே, கலை வந்து அவர் காலடியிலே நிக்காதாம். அவங்கதான் அதைத் தேடிக்கொண்டு வாவேண்டும் என்று சொல்லுங்க" என்று கூறிக் கதவைச் சாத்தினான் சண்முகம்.

வைத்தி ஆத்திரம் தாங்காமல் மகாராஜாவின் அறையை நோக்கி ஓடினார்.

## தொண்ணூற்று ஒன்றாம் அத்தியாயம்

# இசையே என் இறைவன்



**கா**ற்றடைத்த பந்து பாய்ந்து வந்து கல்லின் மேல் மோதுகிறது. கல் அசைவதில்லை. பந்தோ பறந்தோடுகிறது. ஏன்? பந்துக்குள் சத்தில்லை, வெறும் காற்று. கல்லோ, உள்ளே கனப்பொருளை உடையதாக இருக்கிறது. இதே கல்லின் மேல் ஒரு கனியோ அல்லது தேங்காயோ வந்து மோதினால் தோல்வி அடைந்து திரும்பி ஓடாது. தனக்கு வெற்றி கிடைக்காவிட்டாலும் உடைந்து சிதறி உயிரையாவது விட்டுவிடும்.

ஸ்ரீ வைத்தி மனிதத் தன்மைகளே அற்ற ஒரு பந்து போன்றவர். ஆதலால்தான் சண்முகத்தின் மேல் வந்து மோதியதும் அந்தக்

139560
484704



கரும்பாறை அசையாமல் நிற்பதைக் கண்டு ஆத்திரத்தோடு மகாராஜா இருக்கும் இடம் நோக்கி ஓடினார். ஆனால் சண்முகமோ, வைத்தி வந்ததையும், தன்னை வாசிக்கும்படி கூறியதையும், தான் மறுத்ததையும் ஒரு பொருட்டாகவே கருதாமல் தன் படுக்கையில் ஏறிப் படுத்துக் கொண்டான்.

ஆயினும் அவனை நிம்மதியாகத் தூங்கவிடாமல் பம்பைக் கொட்டு முழங்க ஆரம்பித்தது. மேல் தட்டில் மகாராஜாவின் ஆசார வாசலில் பம்பை பக்கிரி ஒரே ததிங்கிணதோம்களாக வைத்துக் கொண்டே இருந்தான். இந்த ஒற்றைக்கொட்டு சிறிது நேரத்துக்கு நன்றாக இருந்தாலும் சண்முகத்தின் காதுகள் அதிக நேரம் கேட்க மறுத்தன. படுக்கையை விட்டு எழுந்தான். முகத்தைக் கழுவித் திருநீறு பூசிக்கொள்ளுகையில் தருமனும் முத்துராக்குவும் அங்கு வந்து சேர்ந்தனர்.

அவர்கள் உள் நுழைந்த அவசரத்தையும், சேவகத்துக்குத் தயாராக இருவரும் நெற்றியில் விபூதியைப் பூசிப் பொட்டு வைத்து இடையில் சலவை வேட்டி கட்டிக்கொண்டு வாத்தியங்களுடன் வந்திருப்பதையும் கண்டான் சண்முகம். அவர்கள் பார்த்த பார்வையோ, "என்ன தம்பி, ரெடியாகல்லியா?" என்று கேட்பது போல் இருந்தது. ஆனால் வேறு மாதிரியாகத் தருமன் கேட்டான்.

"என்ன தம்பி, ராவெல்லாம் யோசிச்சுக்கிட்டே இருந்தீங்க போலிருக்கு" என்று மையமாக ஒரு கேள்வியைப் போட்டான்.

"எதைப்பற்றி அண்ணே?" என்றான் சண்முகம்.

"வேறு எதைப்பற்றி நீங்க யோசிக்கப் போறீங்க? புன்னை குட்டிகளுக்குத் தீபாவளிக்கு என்ன சட்டை வாங்கறதுன்னா யோசிக்கப் போறீங்க? எல்லாம் அவுங்களைப் பத்தித்தான்" என்றான் தருமன்.

"இல்லே அண்ணே, இனிமே யோசிக்க என்ன இருக்கு? அது தான் ஒரேயடியா ஆடவேண்டாம்னு சொல்லிட்டேனே."

"ஏது, இப்படி இரண்டு பேரும் ஒரே விஷயத்தைப்பற்றிச் சொல்லி வச்சாப்பலே பேசறீங்க" என்றார் முத்துராக்கு.

"பின்னே என்ன, தருமண்ணன் நாலு களை சவுக்கம் முக்கால் எடம் பல்லவியைப்பத்தியா யோசிக்கப் போகுது? அதுக்கு யோசனை எல்லாம் கல்யாணத்தைப் பத்தித்தான்" என்றான் சண்முகம்.

"ஆமா, எண்டா செய்துவிட்டம்னு" என்றான் தருமன்.

இதைக் கேட்ட சண்முகம் சிரித்துவிட்டான். இந்தச் சிரிப்பில் அங்கிருந்தவர்கள் மனநிலை சற்று இலேசாகிவிடவே தருமன், "என்ன தம்பி, நீங்க இன்னம் குளிக்கல்லிங்களா? கப்பலே கல்யாண வீடாட்டம் இருக்குது—சரி, நீங்க எப்ப வந்து படுத்தீங்க"

"என்ன அண்ணே, விடுகதை போடுறீங்க?"

"இல்லே தம்பி ராத்திரி அத்தை எதாச்சும் சொன்னாங்களா? தங்கச்சி எதாச்சும் சொல்லிச்சான்னுதான் கேட்கிறேன்!"

"என்ன தருமண்ணே உடைசல் விடுறீங்க?"

"இதுதானே, நாயத்தைச் சொன்னால் நம்ம மேலேயே பாயுறீங்களே. பாவம், அந்தப் பொண்ணு அன்னைக்கி மகாராஜா ஆட்டத்தைக் கண்டு பயந்துட்டுது' என் தம்பி, கூட இருந்து எதாச்சும் ஆறுதல் சொன்னீங்களா?"

"அதெல்லாம் இல்லே அண்ணே. நான் இந்த அறையை விட்டு வெளியே போகவே இல்லை. ஆமா, எது ரெண்டு பேரும் சால்வை எல்லாம் போட்டுக்கிட்டு அலங்காரம் பலமாக இருக்குது?"

"அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லே தம்பி. நீ கொடுத்த சால்வைதான் இது. நடுப்பற கொஞ்சம் கிழிஞ்சிருந்தது. மிஷினிலே கொடுத்து ஒரு ஒட்டு ஒட்டிப் போட்டுக்கிட்டேன்."

"அட, கிழிசலை ஏண்ணே போட்டுக்குறே? நான் புதுசா ஒண்ணு எடுத்துத் தரவா?"

"வேண்டாம் தம்பி. அதுதான் காசிக் கவுறு, கர்சீப், பீதாம்பரம், காசிச் சொம்புன்னு எதேதோ பேசிக்கிறாங்களே!"

"யாரு பேசிக்கிறாங்க?"

"தவுல்காரருதான் சொன்னாரு. 'தருமண்ணே, என்னைச் சீக்கிரம் எழுப்பி விட்டுடுங்க. மகாராஜா இன்னிக்கு வித்வான்களுக்கெல்லாம் பிரசண்ட் செய்யப் போறாராம்'னு சொன்னாரு. நான் எழுப்பி விட்டேன். அவசரமாக முழிச்சுக்கிட்டு முதலிலேயே குளிச்சுட்டாரு. பிறகுதான் பல்லு விளக்கினாரு. இங்கே வந்து பார்த்தா தம்பி இப்பத்தான் தூங்கி முளிக்கறீங்க."

"அட, சும்மா இருங்க ஒத்துக்காரரே, காலை வேளையிலே புளுகாமல்" என்றார் முத்துராக்கு. சண்முகம் சிரித்துக்கொண்டே, "தருமண்ணே, ஒரு காசிக் கவுறு நான் வாங்கித் தந்துடறேன், நீ போய்ப் படுத்துக்க" என்றான்.

இதைக் கேட்ட தருமன் திடுக்கிட்டான்.

"என்ன தம்பி, சேவுகத்துக்குப் போக வேண்டாமா? காலை ஆறு மணியில் இருந்து ஒத்து நாயனத்தை எடுக்காமல் ஊதிக்கிட்டே இருக்கணும்னு வைத்தி எசமான் உத்தரவு போட்டிருக்காங்களே!"

"கையெழுத்தில்லே வாங்கிட்டுப் போயிருக்காங்க. சம்மன் கொடுத்தாப்பிலே" என்றார் முத்துராக்கு.

"அவர்கள் போகிறார்கள் அண்ணே, தரம் தெரியாதவர்கள் காலம்பற திருப்பள்ளி எழுச்சி வாசிக்கக் கூப்பிட்டாங்க. நான் வல்லேன்னுட்டேன்" என்றான் சண்முகம்.

முன்பு ஒரு நாள் சண்முகம் பட்டுக்கோட்டையில் ஒரு கச்சேரிக்குச் சென்றிருந்தான். அந்த ஊரிலிருந்து சிலர் அவனுடைய



கச்சேரி முடிந்ததும் ஆவுடையார் கோவிலுக்குப் புறப்பட்டார்கள். அது ஆனி மாதம். 'ஏன் அவசரம்? அங்கு என்ன விசேஷம்?' என்று விசாரித்தான். 'ஆனித் தரிசனம்' என்று சொன்னார்கள். பக்தர்கள் அங்கு செல்லும்போது தானும் செல்ல வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. உடனே அடுத்த ரயிலில் புறப்பட்டு விட்டான்.

அறந்தாங்கி செல்லும்வரை மழை கொட்டியது. அறந்தாங்கியில் இறங்கி, ஆவுடையார் கோவிலுக்கு மாட்டு வண்டியிலேறிப் போனான். வழியில் வெள்ளாறு கரைபுரண்டோடியது. வண்டிக்காரர் பயந்தார். முதல் கோழி கூவிவிட்டது. சண்முகம் திகைத்தான். அப்பொழுது திருப்பெருந்துறைக் கோவில் மணி 'டாண் டாண்' என அடித்தது. 'வா வா' என அழைத்தது. ஆற்றில் இறங்கி விட்டான் சண்முகம். தருமன், முத்துராக்கு இருவரும் வாத்தியங்களுடன் அவனைத் தொடர்ந்தார்கள். ஆனால், தாளக்காரப் பையனால் வெள்ளத்தை எதிர்த்து நடக்க இயலவில்லை. சண்முகம் உடனே தாளக்காரப் பையனைத் தன் தோளில் தூக்கிக்கொண்டு ஆற்று வெள்ளத்தில் நடந்தான்.

அன்று ஆனித் தரிசனத்தில் ஆத்மநாதர் சந்நிதியில் சண்முகம் நெக்குருகித் திருவெம்பாவை வாசித்தான். தொண்டைமான் மண்டபத்தில் அவன் வாசித்த வாசிப்பை இன்றும் புகழ்வார்கள் அந்த ஊர்க்காரர்கள். அவ்வாறு அதிகாலையில் எழுந்து சிவபெருமானுக்குத் திருப்பள்ளி எழுச்சி வாசித்த அவன், இன்று மகாராஜாவுக்கு வாசிக்க மறுத்ததைக் கண்டு தருமன், முத்துராக்கு இருவருமே ஆச்சரியப்படவில்லை.

ஆனால், இதனால் ஏதேனும் தகராறு வரும் என்று மட்டும் இருவரும் அஞ்சினார்கள்.

சண்முகம் வரவில்லை என்ற ஆத்திரத்துடன் வைத்தி மகாராஜாவின் அறையை நோக்கி ஓடிவந்தார். அவர் போகும் வேகத்தையும் பாராமல் அறை வாசலில் நின்ற ஜவான் அவரைக் கையைப் பிடித்து நிறுத்தினான். வைத்திக்கு மேலும் கோபம் வந்தது.

"நீ யார் என்னைத் தடுக்க? நான் செகரட்டரி."

"ஜீ! மாலூம்! ஆப் அந்தர் நகி ஜா ஸக்தா. மகாராஜா எழுந்ததும் உங்களைப் பார்க்கக் கூடாது" என்றான் ஜவான்.

"ஏன் பார்க்கக் கூடாது? நான் அவரை அவசரமாகப் பார்க்க வேண்டும்."

"நீங்களும் அவரைப் பார்க்கக் கூடாது."

"ஏன், இது யார் உத்தரவு?"

"பகவானின் உத்தரவு. நீங்கள் அந்தணர் இல்லையா! மகாராஜா எழுந்தவுடன் இன்று அந்தணர் முகத்தில் விழிக்க மாட்டார்."

வைத்திக்கு அப்பொழுதுதான் தாம் யார் என்பது புரிந்தது. அதற்காக இனிமேல் அவர் தம்மை மாற்றிக்கொண்டுவிட முடியுமா? மகாராஜாவைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். முதலில் பள்ளி எழுச்சிக்கு ஏற்பாடு செய்வோம் என்ற அவசரத்தில் அந்த இடத்தை விட்டு ஓடினார்.

அவர் உத்தரவுக்கு உடனே வரத் தயாராக இருந்தவன் பம்பைப் பக்கிரி ஒருவன்தான். அவனைக் கூப்பிட்டு நாலு தட்டு தட்டச் சொன்னார். பக்கிரிக்குத் தனி ஆவர்த்தனம் கிடைத்ததில் பரம சந்தோஷம். 'டங்கு டங்கு டகுடக' என்று அவன் மீசையை முறுக்கிவிட்டு முழக்க ஆரம்பித்ததுமே, ஆயிரம் வாத்தியங்கள் சேர்ந்து வாசித்தாலும் அசையாமல் கிடக்கும் மகாராஜா இரண்டே தட்டில் அலறிக்கொண்டு விழித்தார். அவருக்குத் தலை வேதனை தாங்கவில்லை. "போதும் போதும், நான் விழித்துவிட்டேன்!" என்று குரலும் கொடுத்தார்.

பாவம், அவர் எவ்வளவோ சத்தம் போட்டும் அந்தப் பம்பை வாத்தியத்தின் சத்தத்தில் அது கேட்கவில்லை. பக்கிரியின் தனி ஆவர்த்தனம் உச்சநிலையை அடைந்தது. கப்பலில் உள்ள எல்லோரையுமே அது எழுப்பிவிட்டது.

இந்நிலையில் "லொள் லொள்" என்று மகாராஜாவின் பிரியத்துக்குரிய மோகன் குலைத்துக்கொண்டு வந்து பக்கிரியின் மேல் பாயவே, பக்கிரி பயந்து அலறவும், இந்தச் சத்தத்தைக் கேட்டுக் கப்பல் காப்டனின் நாய் ஓடிவந்து மோகனின் மேல் பாயவும், அன்றைய பொழுது சண்டையில் பிறந்தது. மகாராஜாவுக்கு. மதன்பூர் மகாராஜா பள்ளி எழுந்தார். அப்பொழுது மணி ஏழு.

இதன் பிறகு நடைபெற வேண்டிய வைதிகச் சடங்குகள் எல்லாம் 'சர சர' வென்று நடந்தன. மகாராஜாவின் பிறந்த நாள் வைபவத்தை வைத்தியே கூட இருந்து நடத்திவைத்தார். அபிஷேகம், ஆயுஷ்ய ஹோமம் எல்லாம் நடைபெற்ற பிறகு, சரியாய் 10-30 மணிக்கு, மேல் தட்டில் அமைத்திருந்த விதானத்தின் கீழ் போடப்பட்டிருந்த சிம்மாசனத்தில் மகாராஜாவும் மகாராணி ஆஷலதா தேவியாரும் அமர்ந்து தர்பார் நடத்தலாயினர்.

உத்தரவுப்படி வித்வான்கள் எல்லாம் வந்து கூடியிருந்தார்கள். மகாராஜாவின் கையால் வித்வான்களுக்கு அவரவர் தரத்திற்கேற்பச் சால்வைகள் சன்மானம் செய்யப்பட்டன. முதலில் ஆஸ்தான சோதிடருக்குக் காசிப்பட்டில் ராமநாமம் எழுதப்பட்ட சால்வை ஒன்று பரிசளிக்கப்பட்டது. அவர் மகாராஜாவை ஆசீர்வதித்துப் பெற்றுக்கொண்டார். அடுத்தபடியாகச் சாரங்கி சந்தாமியான் சாயபுக்கும் அவ்வாறு ஒன்றை வழங்கப்போகையில் அவர் மரியாதையாகத் தமக்குப் பணமாகவே கொடுத்துவிடும்படி சொல்லி விட்டார். சண்முகத்தின் முறை வந்தது. ஆனால், சண்முகம்



அங்கில்லை. இதை அறிந்ததும் மகாராஜா வைத்தியைக் கோபத்துடன் ஒரு பார்வை பார்த்தார். வைத்தி பணிவுடன், "பிறகு சொல்கிறேன்" என்றார். தர்பார் முடிந்ததும் மகாராஜாவுக்கும் வைத்திக்கும் பின்வரும் சம்பாஷணை நடந்தது.

"ஏன் அந்த நாதஸ்வர வித்வான் வரவில்லை?"

"அவர் தெய்வத்துக்குத்தான் பள்ளியெழுச்சி வாசிப்பாராம். மனிதருக்கு வாசிக்க மாட்டாராம்."

"நான்சென்ஸ்! நீர் கண்டிப்பாகச் சொல்லவில்லையா?"

"நான்கூட 'தெய்வம் மனுஷ்ய ரூபேண' என்று எவ்வளவோ ஆதாரங்களுடன் சொல்லிப் பார்த்தேன். அவர் கேட்கவில்லை. பிறகு 'மகாராஜா மகாவிஷ்ணுவின் அம்சம், இதை மறக்காதே' என்றேன்."

"அதற்கு என்ன சொன்னார்?"

"அவர் மகாவிஷ்ணுவின் அம்சமாக இருந்தால், கப்பல் சங்குதான் சங்கீதத்தின் அம்சம். அதை ஊதச் சொல்லி எழுப்புங்கள்' என்று சொன்னார். நான் வந்துவிட்டேன்."

"ஏன் என்னிடத்தில் உடனே ரிப்போர்ட் செய்யவில்லை?"

"செய்யத்தான் வந்தேன். அப்புறம் திருப்பள்ளியெழுச்சிக்கு பக்கிரியை ஏற்பாடு செய்யப் போய்விட்டேன்."

"என்ன! இந்தப் பம்பை ஒரு வாத்தியமா?"

"என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்! மாரியம்மன் கோவிலிலே இதைத்தான் வாசிப்போம். இந்தச் சத்தத்தைக் கேட்டவுடனே ரெண்டு தட்டுலே தெய்வமே பிரத்யட்சமாகிவிடுமே! மகாராஜாவுக்கு ஸ்பெஷலா ——"

"உம் சரி! கனகாம்பரத்தை என்னைப் பார்க்கச் சொல்லுங்கள். மோகனாவும் ஏன் வரவில்லை!"

"எனக்குத் தெரியாது?"

"நீர் போய் சன்மானத்தைக் கொடுத்துவிட்டு விசாரித்து வாரும்" என உத்தரவிட்டார் மகாராஜா.

மோகனாவின் அறையில் வடிவாம்பாள், வரதன், நட்டுவனார் ஆகிய மூவரும் நாட்டியக் கச்சேரிக்கான உடைகளை உடுத்திக் கொண்டு காலை முதலே தயாராக இருந்தனர். மோகனா மாத்திரம் சாதாரணமான உடை உடுத்தி, தர்பாருக்குப் போக மனமில்லாமல் இருந்தாள். வைத்தி கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்ததும், வடிவாம்பாள், "வாங்க" என்றாள்.

"என்ன! அதிர்ஷ்டத்துக்குமேல் அதிர்ஷ்டம் வராப்பிலே இருக்கே!" என்றார் வைத்தி.

"என்னங்க அப்படி அதிர்ஷ்டம்?" என்றாள் வடிவாம்பாள்.

"அதுதான், வைத்தி வந்திருக்காரில்லே. இனிமேல் அதிர்ஷ்டம் அடிதடி எல்லாமே சேர்ந்து வரும்" என்றான் வரதன்.

"அட, நீ சும்மா இருப்பா. இவன் ஒருத்தன் பல்லியாட்டமா ஏதாவது சொல்லிக்கொண்டே இருப்பான்!" என்றார் வைத்தி. வரதனுக்கு அப்பொழுதுதானா கையில் அரிக்கவேண்டும். சட்டையை ஒதுக்கி முண்டாவைத் தடவி கொண்டான். இதைப் பார்த்தவுடன் வைத்தி அன்பாக, "ஏன் வரதா, என்ன சரிகை வேஷ்டி கட்டாமல் சாதாரண வேஷ்டி கட்டியிருக்கே?" என்றார் நாசுக்காக.

"என்னங்க செய்யறது? ஆம்பிளை வித்வானை அண்டியிருந்தால் ஜரிகை வேஷ்டி, துப்பட்டா எல்லாம் கிடைக்கும். நம்ம தலை எழுத்து, நாட்டியத்துக்கில்லே வாசிக்கிறதா போச்சு!"

"சரி, அதனாலே பாதகமில்லே. மகாராஜா இன்னிக்கு வித்வான்களுக்கெல்லாம் சன்மானம் செய்கிறார். உன் பேரையும் எழுதி வைச்சிருக்கேன். ஒரு காசிப் பட்டு கிடைக்கும்."

"ஏன், நான் இங்கிருக்கிறது உங்க பல்லவிக்கு இடைஞ்சலாக இருக்குமா?"

"இதுதானே ! ஐயா சொன்னால் கேளேன் வரதா" என்றாள் வடிவாம்பாள்.

"ஆகட்டும் அம்மா ! ஐயா சொல்றபடி நான் கேட்டால் நஷ்டம் ஒன்றும் வந்துவிடாது. நீங்க மாத்திரம் அவர் சொல்றது எதையும் கேட்டுவிடாதீர்கள்" என்று ஆத்திரத்துடன் சொல்லி நடந்தான் வரதன்.

"ஏய் வரதா, ரெண்டு கொட்டைப் பாக்கு வேணுமே" என்று கேட்டுக்கொண்டே நட்டுவனாரும் பட்டுக்கொள்ளாமல் அறையை விட்டு வெளியேறினார்.

இதையே எதிர்பார்த்த வடிவாம்பாளும் பேச்சைத் தொடங்கினாள்.

"ஆமா வைத்தி, ஏதோ அதிர்ஷ்டம் வந்திருக்குன்னு சொன்னீங்களே!"

"இதோ பாருங்க" என்று சொல்லி வைத்தி தம் பக்கத்தில் இருந்த மூட்டையைப் பிரித்தார். அதிலிருந்து இரண்டு அழகான பனாரஸ் சேலைகளை வெளியே எடுத்தார்.

தங்கத்தால் இழைத்தது போல் அழகான பூக்களும் கொடிகளும் அதை அலங்கரித்தன. தகடு போல் இருந்த அந்தச் சேலையின் நடுவில் செய்திருந்த பூ வேலைகளைப் பார்த்ததும் வடிவாம்பாள் மகிழ்ந்தாள். ஒரு சேலையை எடுத்துக் கையில் வைத்து அதன் கனம் எவ்வளவு இருக்கும் என்று எடை போட்டாள். 'இதில் சரிகை எத்தனை ரூபாய்க்கு இருக்கலாம்; புடைவை கிழிந்த பின் சரிகைக்காரரிடம் போடும்போது இதற்கு என்ன விலை கிடைக்கும்; என்ன பூனா பாத்திரம் வாங்கலாம்' என்றெல்லாம் அவள் யோசனை பத்து வருஷத்துக்குப் பின் ஓடியது.



இதைப் பார்த்த வைத்தி "இதை எடை போடலாம். மகாராஜாவின் இதயத்தை எடை போடமுடியாது" என்றார். ஆனால் இது வடிவாம்பாளின் காதில் விழவே இல்லை. மோகனாவிடமிருந்துதான் பதில் கிடைத்தது.

"ஆமா, அவ்வளவு உயரமும் பருமனும் இருக்காரில்லே, எப்படி எடை போடுவது?" என்றாள் மோகனா.

இந்தச் சந்தர்ப்பத்தை வைத்தி விடுவாரா? கடகடவென்று சிரித்தார்.

"சபாஷ், சபாஷ் ! மோகனா, நன்றாகச் சொன்னாய். அதனாலே தான் மகாராஜா மயங்கறார். உன் கெட்டிக்காரத்தனத்தைக் கண்டு தான் மகாராஜா, நீ வராவிட்டாலும் பாதகமில்லே. இதை நேரில் கொண்டுபோய் மரியாதையுடன் கொடுத்துவிட்டு வாரும் என்று உத்தரவிட்டிருக்கிறார். மோகனா, இன்றைக்கு அவருக்குச் சாதாரணமான பிறந்த நாள். உனக்கு அதிர்ஷ்டம் பிறந்த நாள்."

"அப்படி என்ன? இந்த ரெண்டு சேலையையும் சொல்றீங்களா?"

"இது கிடக்கட்டும். இரண்டாயிரம் ரூபாய் இருக்கப்போறது. நான் இதைப்பற்றிச் சொல்லவில்லை. இன்றைக்கு முதல் நீ மதன்பூர் மகாராஜாவின் ஆஸ்தான நாட்டியக் கலாநிதி மோகனா தேவி" என்று நல்ல சேதியைப் போட்டார் வைத்திஜி.

இதைக் கேட்டதுமே வடிவாம்பாளுக்கு உடல் புல்லரித்தது.

"என்ன ! என்ன ! உண்மையாகவே ஆஸ்தான வித்வான் உத்தியோகமா ! நிசமா சொல்லுங்க. அப்பவே அந்த மலையாள சோசியர் சொன்னாரு. மோகனாவுக்கு இன்னும் ஆறு மாசத்துலே ஒரு யோகம் அடிக்கப் போகுதுன்னு. அது பலிச்சுப் போச்சே! என்ன கண்ணு, சும்மா உக்காந்திருக்கியே !"

"என்னம்மா செய்யணும். அதுக்காக மகாராஜாவுடனே ஆடணுமா?" என்றாள் மோகனா.

வடிவாம்பாள் முகம் ஆத்திரத்தால் சிவந்தது. "இதுதானே அதிகப்பிரசங்கம்."

"என்னைக் கேட்டா உத்தியோகம் கொடுத்தாங்க? அவங்களாகத் தானே கொடுத்தாங்க."

"அதிர்ஷ்டம் உன்னைக் கேட்டுக்கிட்டா வரும்? ஒவ்வொருத்தரும் இது மாதிரி கிடைக்குமான்னு தவக இருக்காங்க. நீ இப்படித் திமிரு தண்டமாய்ப் பேசுறியே."

"சரிதான், இள வயசு, அப்படித்தான் சொல்லும். ஆனா ! உடனே ஒப்புக்கொள்கிறேன் என்று வாய்விட்டுச் சொல்லிடுவாங்களா? சரி, நான் வருகிறேன். சாயங்காலம் கச்சேரிக்கு வந்திடுங்கள்" என்று சொல்லிவிட்டு வைத்தி அந்த அறையை விட்டுப் புறப்பட்டார். வைத்தி புறப்பட்டாலும் அவர் வைத்த வத்தியின் வாசனையில்

வடிவாம்பாள் பூரித்துக்கொண்டிருந்தாள். மோகனாவோ சிந்தனையில் ஆழ்ந்தாள்.

வைத்தி மோகனாவைச் சந்தித்த அதே தருணத்தில் சண்முகத்தின் அறையில் ஸ்ரீமதி லேடி கனகாம்பரம் நுழைந்தார்.

"பிள்ளைவாள், இந்தாங்க. இதெல்லாம் மகாராஜா கொடுத்து அனுப்பினார்" என்று சொல்லி இரண்டு பீதாம்பரங்களை எதிரில் வைத்தார். முத்துராக்குவும் தருமனும் வைத்த கண் வாங்காமல் அவற்றையே பார்த்தனர்.

சண்முகமோ இக்கட்டான நிலையில் சிக்கித் தவித்தான். அந்தப் பொருள்களை வாங்கிக்கொள்ள அவனுக்கு மனம் வரவில்லை. இருந்தாலும் பெண்ணாயிற்றே. எவ்வாறு அவர்களுடன் பேசித் திருப்பி அனுப்புவது என்ற தயக்கத்தில் அவன் நிற்கும்போது, 'சாயங்காலம் வித்வான்கள் சபை வைத்திருக்கிறது. அதற்குத் தங்களை வந்துவிடச் சொன்னார்கள்" என்று அழைத்தார் ஸ்ரீமதி கனகாம்பரம்.

"சபையென்றால் என்ன?"

"எல்லோரும் வாசிக்க வேண்டியது. ஆட்டம் நடக்கும். மகாராஜாவைப் புகழ்ந்து பாட்டுகள் பாடுவார்கள். நீங்களும் வாசிப்பீர்கள்."

"ரொம்பச் சந்தோஷம். அதுக்குக் கட்டிக்கொள்ள என்கிட்டவே பீதாம்பரம் இருக்குதே" என்றான் சண்முகம்.

"அப்படிச் சொல்லாதீர்கள். நீங்கள் இதைத்தான் கட்டிக்கிட்டு வாசிக்க வேணும்" என்று சொல்லிவிட்டுக் கனகாம்பரம் பீதாம்பரங்களை வைத்துவிட்டுச் சென்றார்.

சண்முகம் யோசித்தவண்ணம் நின்றான். 'மாலையில் கச்சேரிக்குப் போவதா, இல்லையா? காலையில் வைத்தியிடம் வாசிக்க முடியாது என்று கூறிவிட்டோம். வைத்தியும் கோபத்துடன் சென்றிருக்கிறார். மாலைக் கச்சேரியில் நம்மிடம் அவர் வந்து ஏதாவது பேசினால் ரசக்குறைவாகிவிடும்.

'அதுவும் தவிர, இந்த மகாராஜா வித்தை தெரிந்தவரல்ல. அவருக்கு முன் நாம் எத்தனை நாள் வாசிப்பது? அந்த வித்வான்களுக்காக வேண்டுமானால் நாம் வாசிக்கலாம். பாவம், அவர்கள்தாம் என்ன செய்வார்கள்! அன்று தனி அறையில் நான் வாசித்தபோது ஆமோதித்த அத்தனை வித்வான்களும், மேல் தட்டில் மகாராஜாவின் முன் தலையைக்கூட ஆட்டப் பயந்துகொண்டிருந்தார்களே. ஒருவராவது வஹ்வா, சபாஷ் என்று ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. பாவம் அவர்களிடம் வாசித்துத்தான் நமக்கு என்ன பயன்? இந்த நிலையில் நாம் யாருக்காக வாசிக்க வேண்டும்? பணத்திற்காக! பணம் யாருக்காக? நமக்காக! சபாஷ்! 'அடே சண்முகம், பணத்தைச் சம்பாதித்து வடிவாம்பாள் கையில் கொடுத்து உன் காதலியை



அடையக் காம்போதியை விலை கூறுகிறாய்! அடாணாவை அடகு வைக்கிறாய்! சங்கீதத்தை விற்று சந்தோஷத்தை வாங்கப்போகிறாய். சப்த ஸ்வரங்களை ஞானமில்லாதவர்கள் காதில் பொழிந்து செல்வம் சேர்த்து உன் உடலை வளர்க்கப்போகிறாய்' என்று அவனுடைய குதர்க்க மூளை குத்திக் குத்திக் கூறியது.

அப்போது கதவு தட்டப்பட்டது. கதவைத் திறந்தான் தருமன். அவன் எதிரில் பழைய புஸ்தி மீசை டபேதார் கையில் கடிதத்துடன் நின்றான். சண்முகம் அவசரம் அவசரமாக அந்தக் கடிதத்தின் உறையைக் கிழித்தான். அதில் இருந்த செய்தியை அவன் படித்ததும் அவன் கண்கள் சிவந்தன. முகம் வியர்த்தது. உதடுகள் படபடத்தன. கடிதத்தைக் கசக்கிக் கீழே எறிந்தான். சண்முகத்தின் ஆத்திரத்தைக் கண்ட முத்துராக்கு காரணம் என்னவென்று அறிய அந்தக் கடிதத்தை எடுத்தார். அதில் கீழ்க்கண்ட வண்ணம் எழுதப்பட்டிருந்தது:

மிஸ்டர் சண்முகம்,

ஆர்ட்டிஸ்ட் நம்பர் 17.

காலையில் நீங்கள் சுப்ரபாதம் வாசிக்க வரவில்லை என்பதை அறிந்தோம். நமது உத்தரவுக்குக் கீழ்ப்படியாமல் நடந்ததற்கு உங்களை ஏன் மூன்று நாளைக்கு சஸ்பெண்டு செய்யக்கூடாது என்பதற்கான காரணங்களை இது கண்ட இருபத்திநாலு மணி நேரத்துக்குள் நமக்குத் தெரிவிக்கவும். மாலை விழாவுக்காவது வந்து சேரவும்.

இப்படிக்கு,<br>
பை ஆர்டர்,<br>
**வைத்தி.**

என்று எழுதியிருந்தது. இதைப் படித்ததும் முத்துராக்குவின் மனம் துடித்தது.

"பதில் என்ன சொல்லப் போறீங்க? நீங்க சொல்றீங்களா, இல்லை நான் சொல்லவா?" என்றான் முத்துராக்கு.

"இதோ இதுதான் பதில்!" என்று சண்முகம் ஒரு கவரை அவரிடம் காட்டிவிட்டு, மகாராஜா இருக்கும் அறையை நோக்கி நடந்தான்.

என்றுமே இல்லாத வேகம் அவன் நடையில் இருப்பதைக் கண்ட தருமன் பயந்தான். "தம்பி, நானும் வரவா?" என்றான். சண்முகம் திரும்பினான். தருமனைப் பார்த்துப் புன்முறுவல் செய்தான். "எதற் கண்ணே? நான் ஏதாவது ஆத்திரத்தில் தவறுதலாய் நடந்துவிடுவேன் என்றா?"

"இல்லை தம்பி, பெரிய இடம். பணம் பாதாளம் மட்டும் பாயும்."

"அட, போங்கண்ணே! அது என் மனசு மட்டுமே பாயலே: அது பாதாளம் மட்டும் எங்கே பாயுறது! மனம் துணிந்துவிட்டால் பணம்

முளை மழுங்கிப்போகும் அண்ணே. சும்மா பயப்படாதீங்க, வரேன்" என்று மேல் தட்டை நோக்கி நடந்தான்.

மகாராஜாவின் அறையில் மகாராஜாவும் வைத்தியும் எதிர் எதிராக நின்றுகொண்டிருந்தார்கள். "சபாஷ்! நல்ல காரியம் செய்தீர்கள். அவன் கர்வத்தை அப்படித்தான் அடக்கவேண்டும்" என்றார் மகாராஜா.

"இதோ பாருங்க. இந்த வைத்தியின் தலை, ஆண்டவன் ஒருத்தனைத்தான் வணங்கும். அதற்குப் பின்னால் நீங்கள்தாம்..... எப்போ உங்களை அவன் மதிக்கவில்லையோ—"

"வெட்டருக்குப் பதில் வரவில்லையே!" என்றார் மகாராஜா.

"இதோ நானே வந்துவிட்டேன்" என்று கூறியபடி சண்முகம் மகாராஜாவின் அறைக்குள் நுழைந்தான். வைத்தியும் மகாராஜாவும் திடுக்கிட்டார்கள்.

"பின்னை, பிளீஸ் வெயிட். நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம்" என்றார் வைத்தி.

"நான் சமாதானம் சொல்ல வந்திருக்கிறேன். அதைக் கேட்டு விட்டுப் பிறகு நீங்கள் நாள் முழுவதும் பேசிக்கொண்டே இருக்கலாம்" என்றான் சண்முகம்.

"ஏன், உங்கள் கேசை நாளைக்குக் கவனிக்கிறேன்" என்றார் மகாராஜா.

"இல்லை. இப்பொழுதே கேட்டுவிட்டால் நல்லது" என்றான் சண்முகம்.

மகாராஜா ஆசனத்தில் அமர்ந்தார். வைத்தி அவர் அருகில் போய் கை கட்டி நின்றார். சண்முகத்துடன் எப்படிப் பேசுவது என்று மகாராஜா உயரப் பார்த்துக்கொண்டே யோசித்தார். இதைப் பார்த்த சண்முகம் தனக்குப் பின்னால் இருந்த ஆசனத்தை ஒருமுறை பார்த்தான். மகாராஜாவும் இதைக் கடைக்கண்ணால் பார்த்தார். ஆனால் உட்காரச் சொல்லவில்லை. சண்முகம் தானே அதில் உட்கார்ந்துகொண்டான். இதைப் பார்த்த மகாராஜாவின் முகம் கன்றியது.

"எஸ், மிஸ்டர் சண்முகம்!"

"சொல்லுங்கள்."

"நான், நீங்கள் ஒரு பெரிய வித்வான் என்று கேள்விப்பட்டேன்."

"அப்படியெல்லாம் இல்லீங்க. என்னைக்காட்டிலும் பெரிய பெரிய வித்வான்கள் எத்தனையோ பேர் எங்கள் ஊரில் இருக்கிறார்கள்."

"அதைத் தெரிந்துகொண்டிருக்கும் வரையில் ரொம்ப சந்தோஷம்" என்றார் வைத்தி. "இது சங்கீத விஷயமுங்க. நீங்க சும்மா இருங்க" என்றான் சண்முகம். ஆனால் மகாராஜா மேலும் தொடர்ந்தார்: "கிட்டாவய்யர் உங்களைப்பற்றி ரொம்பச் சொன்னார்."



"ஆமாங்க. அவருக்கு என் நன்மையில் ரொம்ப அக்கறை."

"ஆனால், நீர் அதற்குத் தகுந்தாற்போல் நடக்கவில்லையே."

"ஏன், நான் ஒரு தவறும் செய்யவில்லையே?"

"காலையில் ஏன் வாசிக்க வர மறுத்தீர்?"

"அது உங்களுக்கும் நல்லதல்ல, எனக்கும் நல்லதல்ல. அதனாலே தான்_"

"எது நல்லது, எது கெட்டது என்று எனக்குத் தெரியும்."

"தெரியாதுங்க. உங்களுக்குத் தெரிஞ்சிருந்தா வைத்தியைக் கூட வச்சிருப்பீர்களா?"

"என்னை ஏன் சார் இழுக்கிறீங்க? நான் சிவனேன்னு இருக்கேன்" என்றார் வைத்தி.

"மகாராஜா நான் சங்கீதக்காரன். எனக்கு நீங்கள் கொடுக்கும் பணமும் மரியாதையும் கலைக்காகத்தான். உங்களுக்குத் திருப்பள்ளி எழுச்சி வாசிக்கணும்னு வைத்தி சொன்னாரு. அது கலைக்கு அவமானம். நான் முடியாதுன்னு சொன்னேன்."

"வைத்தி, குறித்துக்கொள்ளும்" என்றார் மகாராஜா.

"எஸ்!" என்றார் வைத்தி.

"நேற்று ஏன் அந்தப் பெண்ணை ஆட வேண்டாம் என்று நீர் தடுத்தீர்?" என்றார் மகாராஜா.

"அது பெண்கள் மரியாதைக்குக் குறைவு. அதனாலே_"

"அவள் என்னுடைய ஆர்டிஸ்ட். என் இஷ்டப்படி ஆடத்தான் வேண்டும் என்று சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது."

"அவள் ஆடும் கலை என்னுடைய நாட்டுக் கலை. அதைக் கெட்ட வழியில் உபயோகிக்காதே என்று சொல்ல எனக்கும் உரிமை இருக்கிறது."

"அதுதான் காரணமா, அல்லது வேறு ஏதாவது சொந்தக் காரணங்கள் உண்டா?" என்றார் வைத்தி.

சண்முகம் அவரை ஏற இறங்கப் பார்த்தான். "எங்கள் சொந்த விஷயத்தைப்பற்றி எல்லாம் இங்கே கேட்காதீர்கள்" என்றான்.

"ஏன் கேட்கக் கூடாது? நீர் என் வேலைக்காரர்" என்றார் மகாராஜா.

"என்ன சொன்னீர்? ஆம். நான் உமது வேலைக்காரன் என்பதற்காக நான் வணங்கும் தெய்வமும் உமக்கு வேலைக்காரனாகி விடாது. சங்கீதம் என் தெய்வம். என் குருநாதரால் என் வசம் ஒப்புவிக்கப்பட்ட பொக்கிஷம். அதன் மதிப்பைக் குறைத்து உமது தூக்கத்தை எழுப்ப நான் வாசிக்க முடியாது. எனக்கு மட்டுமல்ல. அப்படி நான் வாசித்தால் சங்கீதத்தை வாய் மொழியாக வழி வழியாக வளர்த்து வரும் எங்கள் சங்கீதப் பரம்பரைக்கே அது கேவலம்.

"எங்கள் தியாகராஜாவைத் தஞ்சாவூர் அரசர் தம் பேரில் ஒரு பாட்டுப் பாடச் சொன்னார். உடனே, அவர் 'மனமே, பணத்தால் என்ன சுகம்' என்று பாடி அரசனைப் பாட மறுத்துவிட்டார். இதே திருவாரூரில் ஒரு நங்கை நாட்டியமாடிக்கொண்டிருந்தாள். அவரைத் தஞ்சாவூர் அரசர் தம் சபையில் ஆடச் சொன்னார். 'வேண்டுமானால் அந்த அரசர் திருவாரூரில் வந்து பார்க்கட்டும்' என்று அந்த அம்மையார் கூறிவிட்டார்.

"உங்கள் அக்பர் சக்கரவர்த்தி சூர்தாஸை வரவழைத்துப் பாட்டுக் கேட்க விரும்பினார். ஆனால் சூர்தாஸ் அங்கு வரவில்லை. அக்பரே அவர் ஆசிரமத்துக்குச் சென்று பாட்டைக் கேட்டார். இவை யெல்லாம் தங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. தாங்களோ இசை ஞானமே இல்லாதவர்கள். உங்களுக்குப் புகழ் கிடைப்பதற்காக, இடையன் ஆட்டு மந்தையை போவது போல உங்கள் கூட வித்வான்களின் மந்தையை ஓட்டிப் போகிறீர்கள். இதற்கு நான் ஒப்புக்கொண்டதே தவறு."

"வீணில் பேசாதீர். சீமையில் உமக்குக் கிடைக்கும் புகழைக் கெடுத்துக்கொள்ளாதீர்" என்றார் மகாராஜா.

"எது, சீமையில் புகழா? பொய் வேறு, புகழ் வேறு. பொய்யைப் புகழ் என எண்ணி ஏமாற்றிக்கொள்ள நான் விரும்பவில்லை. அங்கு உள்ளவர்களுக்கு என் நாட்டு சங்கீதம் தெரியுமா? இதில் உள்ள கல்யாணியும் காம்போதியும் தெரியுமா? அந்த மக்கள் என் பாட்டுக்குத் தலையை ஆட்டினால் அது அவர்களுடைய பெருந் தன்மை. இதை நான் தவறுதலாக எண்ணிக்கொண்டால் அது என் தப்பு. என்னையும் என் கடுக்கனையும், என் உடையையும் நான் ஊதும் குழலையும் அதில் இருந்து வரும் குளிர்ந்த நாதத்தையும் பட்டிக்காட்டான் யானையைப் பார்ப்பது போல் அவர்கள் பார்க்கலாம். இதையே நான் புகழ் என்று சொல்லி ஊரை ஏமாற்றலாம். ஆனால் என் உள்ளத்தை ஏமாற்ற முடியாது. சீமைக்குப் போய் அங்கு உள்ள அந்நியர்கள் விஷயம் புரியாமல் தலையை ஆட்டுவதைவிட, என் தமிழ்நாட்டில் உள்ள ஏழை ஒருவன் என் வாசிப்பைக் கேட்டுத் தலையை ஆட்டினால் அதுவே எனக்குப் பெரிய சன்மானம். சாப்பிடத் தெரியாதவனுக்குச் சமைத்துப் பயனில்லை, ரசிக்க முடியாதவர்களிடம் வாசித்துப் பயனில்லை. சங்கீதத்தை மதிக்கத் தெரியாதவரிடம் சன்மானம் வாங்கிப் பயன் இல்லை. இந்தாருங்கள். நீங்கள் கனகாம்பரத்திடம் அனுப்பிய பட்டுப் பீதாம்பரங்கள். இந்தாருங்கள், உங்கள் பணம். இந்தாருங்கள், இதுவரை நான் கப்பலில் உங்களுடன் வந்த செலவுக்காக ஆயிரம் ரூபாய் நான் கொழும்பில் இறங்கிவிடுகிறேன்'' என்று கூறி, அட்வான்சாக அவர் தந்த செக்கையும் நடேசன் தந்த பணத்தில் ஆயிரம் ரூபாயையும் அவர் எதிரில் வைத்தான் சண்முகம்.



## சக்தி தாண்டவம்



கொதிக்கிற நீரில் குளிக்கவும் முடியாது, கொதிக்கிற பாலைக் குடிக்கவும் முடியாது. பாலும் நீருங்கூட அதிகச் சூடேறிவிட்டால் அதற்குள்ள பெருமையையே இழந்து விடுகின்றன. இதைப் போலத்தான் கோபமும். சில சமயங்களில் ஒரு சூடும் சுகமும் அதில் இருக்கிறது. ஆனால், சினம் அதிகமாகி விட்டாலோ, மனிதத் தன்மையே அடியோடு போய்விடுகிறது. சண்முகத்தின் கோபத்தில் இம்மாதிரி ஒரு குறையும் இல்லை. காய்ச்சிய பால் போல் அதில் ஒரு நிதானம் இருந்தது. அவனுடைய குணம் கோபத்தால் சிதறவில்லை. வார்த்தைகள் மணிமணியாக வந்தன. அதனாலேயே அவனுக்குச் சரியான பதில் சொல்வதற்கு மகாராஜாவால் முடியவில்லை. எந்தக் காரணத்தைக்கொண்டும் அவனை நிறுத்தி வைப்பதற்கு அவரால் முடியவில்லை.

'அயல் நாடுகளிலே இந்த அருமையான வாத்தியத்தைக்கொண்டு ஏராளமான கூட்டத்தைச் சேர்க்கலாம். எல்லோரும் மயங்குவார்கள். சண்முகம் வாசித்து மோகனாவும் ஆடிவிட்டால் தம் பெருமையே உயர்ந்துவிடும். போதாததற்குப் பொய்க்கால் குதிரைப் பொன்னன் வேறு இருக்கிறான். நாலு பேர் மயங்க ஒரு நாடகமே போட்டுவிடலாம்' என்று மனக்கோட்டை கட்டிய அவருக்கு சண்முகத்தின் நேர்மையான வாதம் கோபத்தைத்தான் ஊட்டியது. இந்தச் சமயத்தில் வைத்தி விசிறிவிட முன்வந்தார்.

"ஆமாம் நாயனக்காரரே, நீங்கபாட்டுக்கு நினைச்சபோது ஏறி இறங்க இது என்ன கப்பலா, கட்டைவண்டியா?" என்றார் வைத்தி.

"கப்பலா, வண்டியாங்கிறது என் புத்திக்குத்தாங்க நல்லா தெரியும் பாவம்! உங்களுக்குத் தெளியவே நேரமாகும்."

"ஓஹோ! இறங்கினா, எக்கிரிமெண்டு என்னவாகிறது?"

"பின்பக்கம் எழுதறதுக்கு ஆகும்!"

''ஒருகாலும் நீ இறங்க முடியாது. உன்னை இறங்கவிட மாட்டோம்."

"நீங்க என்னய்யா இறங்கவிடறது? எனக்குக் காலில்லையா? நானே இறங்கறேன்."

"உம்முடைய கால்கள் கட்டப்பட்டிருக்கின்றன."

"அது கழுதைக்கில்ல கட்டுவாங்க."

"கழுதைக்குக் கயிறாலே கட்டுவாங்க. மனிதனுக்குக் காகிதத்தாலே கட்டுவாங்க. உம்முடைய கால்கள் உம்முடைய கையாலேயே கட்டப் பட்டிருக்கின்றன. அன்னிக்கு கையெழுத்துப் போட்டீர் பாரும்!"

"இந்தாங்க வைத்தி, கையெழுத்து, கால் எழுத்து எல்லாம் எனக்குத் தெரியாது. நான் நினைச்சேன்னா இறங்கிடுவேன், அவ்வளவுதான்."

"இறங்கினா, உமது பேரில் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவோம்."

"உங்க சட்டத்திற்குள்ளே என் சங்கீதம் அடங்காது."

இப்போது மகாராஜாவே கம்பீரத்துடன்பேச ஆரம்பித்தார்.

"நோ மிஸ்டர் சண்முகம். எக்கிரிமெண்ட் இஸ் எக்கிரிமெண்ட்! ஆறு மாசம் என்னோடு வருவதாக நீர் ஒப்புக்கொண்டிருக்கிறீர். என் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நடப்பதாகக் கையெழுத்து போட்டிருக்கிறீர். நான் என்ன சொன்னாலும் அதைக் கேட்பதாக அதிலே கண்டிருக்கிறது. இப்பொழுது நீர் அதற்கு மாறுபட்டு நடந்தால், என்னிடம் உமக்கு சிபாரிசு செய்த அதே லாயரே உம்மைக் கூண்டில் ஏற்றிக் கேள்வி கேட்பார்."

"உங்களிடம் சொன்ன அதே பதிலை அங்கும் சொல்வேன்."

"ஆனால் நிச்சயம் நீ இறங்குவதை நான் தடுப்பேன்."

"மஹாராஜா! நான் மனது வைத்துவிட்டால், அரசன் அல்ல, ஆண்டவன்கூட என்னைத் தடுக்க முடியாது."

"ஆண்டவன் கோர்ட்டுகளில் ஆஜராவது இல்லை!" என்றார் வைத்தி.

"நீங்க பொய்க் கேசுக்குத்தானே போவீங்க?" என்றான் சண்முகம்.

சண்முகத்தின் பிடிவாதத்தைக் கண்ட மகாராஜா, சிறிது இறங்கினார். ஆயினும் அவரோடு பிறந்த அகந்தை இறங்காததால் பின் வருமாறு கூறினார்: "மிஸ்டர் சண்முகம், நீர் ஒரு பெரிய வித்வான் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆதலால் இம்முறை மன்னித்துவிட்டோம். நீர் போகலாம்." என்றார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் சிக்கல் சண்முகத்தின் முகம், உண்மையிலேயே சிங்கார வேலன் முகம் போல் சிவந்தது.

"நான் உம்மை மன்னிக்க முடியாது" என்றான்.

"என்ன!" என்று ஆத்திரத்துடன் கேட்டார் மகாராஜா.

"மன்னித்தோம் என்ற வார்த்தையைச் சொல்லி என்னைக் குற்றவாளியாக்கப் பார்க்கிறீரா? மகாராஜா, நான் கோபத்தில் பேசவில்லை. ஆத்திரத்தோடு பேசவில்லை. குற்றவாளி நீர். கலையை மதிக்காமல் பள்ளி அறைக்கு வாசிக்க அழைத்தவர் நீர். சந்தனம் மிஞ்சியிருந்தால் சாக்கடையில் கொட்டுவதா? பூ மாலை மிஞ்சியிருந்தால் புளிய மரத்தில் போடச்சொல்வதா? உமக்குப் பணம்



மிதமிஞ்சியிருக்கிறது என்ற எண்ணத்திலே, கலையின் உயர்வு தெரியாமல் நீர் நடந்து கொண்டுவிட்டீர். நான் உம்மை மன்னிக்க முடியாது."

"சண்முகம், ஷட் அப்."

"என் வாயை அடக்க யாராலும் முடியாது. நான் வாய் திறந்தால் தில்லை நடராஜன் காலைத் தூக்கி ஆடுவான். நான் வாய் திறந்தால் சங்கீத தேவதைகள் வான வீதியில் நின்று ஆடுவார்கள். கல்யாணியும் காம்போதியும் களிநடம் புரியும். நான் வாய் திறந்து இசை வணக்கம் செய்தால் நீர்கூட வாயை மூடிக்கொண்டு இருப்பீர். என்னைப் பார்த்தா 'ஷட் அப்' என்று சொல்லுகிறீர்?"

"நோ நோ! யு டாக் டு மச் மகாராஜா!" என்றார் வைத்தி.

"அவர் ஹனிவ்"

"அல்ல, எங்கும்."

"எனக்கல்ல! எனக்கு ராஜா, தியாகராஜா! தில்லை நடராஜா! இவர் தம்மை அரசன் என்று எண்ணுகிறார்; நான் என்னை அடிமை என்று எண்ணிக்கொள்ளவில்லை. அவரோடு சமமான அந்தஸ்தில் பேசுகிறேன்! அதை அவரால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அவருக்கு தம்முடைய காசின் அருமையே தெரியாது. கலையின் அருமை எப்படித் தெரியப் போகிறது?"

"சண்முகம், இதைக் கவனத்தில் வைத்துக்கொள். நீ இறங்கினால், உன்னை எங்கும் செல்லக்கூடாதென்று தடை வாங்குவேன். எங்கும் நீ வாசிக்க முடியாமல், உன்னுடைய கையைக் கட்டுவேன். இனி உன்னுடைய நாதஸ்வரத்தை, இந்த நாட்டு மக்கள் காதில் விழாமலே செய்வேன், உஷார்" என்று மீசை படபடக்கக் கூறினார் மகாராஜா.

"இது உம்மால் முடியாது. என்னைப் படைத்தவன் உம்மைக் காட்டிலும் மேலாகப் படைத்துவிட்டான். உமக்கு எங்கும் காசு மூட்டை கட்டிக்கொண்டு செல்லவேண்டும்; எனக்குப் போனவிடமெல்லாம் அன்பு கிடைக்கும். உமக்குக் கூடவே ஆள் மாகாணத்தைச் சேர்த்துக்கொண்டு போகவேண்டும்; எனக்கு, நான் நிற்கும் இடமெல்லாம் அன்பர்கள் வந்து கூடுவார்கள். நீர் பணத்தைக் கொடுத்து மரியாதையை விலைக்கு வாங்கவேண்டும். எனக்கு அப்படியல்ல."

"டேய்" என்றார் மகாராஜா. புஸ்தி மீசைக்காரன் ஓடி வந்தான். "இவருடைய பெட்டி படுக்கை ஒன்றையும் தொடவிடாதே" என்றார்.

"பெட்டியில் இருக்கும் பீதாம்பரம் வேண்டுமென்றால் கேளுங்கள். நானே இனாமாகத் தருகிறேன். எங்கள் மைசூர் மகாராஜா நிரம்ப இசை ஞானமுடையவர்கள். அவர்கள் கொடுத்ததை எடுத்துப் பாரும் மகாராஜா! என் செல்வம் என் பெட்டியில் இல்லை. அது என் இதயத்திலிருக்கிறது. உலகை ஆட்டிவைக்கும் தெய்வம் இசை

வடிவில் அங்கு இருக்கிறது. என்னை மறந்து நான் வாசிக்கும் போது, அத்தனை தலைகளும் ஆடுவது ஏன் தெரியுமா? என்னுள் உறையும் இறைவன் லீலை அது. வருகிறேன், வணக்கம்!" என்று சொல்லிவிட்டு சண்முகசுந்தரம் பதிலுக்குக் காத்திராமல் வெளியே சென்றான். மகாராஜா வைத்தியின் முகத்தைப் பார்த்தார். வைத்தி தரையைப் பார்த்தார்.

"இவங்களையெல்லாம் கட்டிவச்சுச் சுட வேணும்" என்றார் மகாராஜா.

"சுட்டாலும் வாசிக்கமாட்டான் போலிருக்கே! உலகத்தில் இவன் ஒருத்தன்தானா நாயனக்காரன்? என்கிட்டே சொன்னா ஆயிரம் பேர் கூட்டிக்கிண்டு வந்திருப்பேனே!"

"ஆயிரம் பேர் வந்தாலும் இவன் மாதிரி வாசிக்க மாட்டானாமே!"

"சே! அதெல்லாம் சும்மா. நாலு பேரு சேர்ந்து நன்னாயிருக்குன்னு சொல்லிட்டா, எல்லோருமே தலையை ஆட்டறா. இந்த உலகமே தலையாட்டி பொம்மைக் கடை" என்று வைத்தியே சொல்லியதைக் கேட்டு மகாராஜா சிரித்தார்.

"என்ன மகாராஜா, நகைக்கிறீர்கள்? எந்தச் சங்கீதமாக இருந்தாலும் சரி, என் தலை மட்டும் ஆடாது."

"நான் ஏதாவது சொன்னால் மட்டும் நீங்கள் தலையை ஆட்டுகிறீர்களே!"

"நானா ஆட்டுகிறேன்? உங்கள் பேச்சு மந்திரம் மாதிரி இருக்கிறது. என் தலை மணியாட்டம் ஆடுகிறது. நீங்கள் தெய்வ அம்சமாச்சே! இதுக்கெல்லாம் கொடுத்து வைக்கணும் மகாராஜா. அவன் கொட்டற மழையிலேயும், அடிக்கிற வெயிலிலேயும், காத்திலேயும் நடுத்தெருவிலே நின்னு வாசிக்கிறவன். அவனைக் கொண்டுபோய், கப்பலிலே உக்காத்தி வச்சு 'சீமைக்கு வா. அரண்மனையிலே வாசி' என்று சொன்னால் கொடுத்து வைக்க வேண்டாமா?"

"வைத்திஜி, நம்மை அவன் மதிக்கவே இல்லையே!"

"அவன் மதிச்சாத்தானா? நான் சொல்றேன், ஒருவிதத்திலே இவன் இறங்கறதே நல்லது."

"ஏன்?"

"சங்கீதக்காரர்களே ஒரு மாதிரியான கூட்டம். ஒரு தேங்காய் மூடிக்காக நாள் பூராவும் பாடுவார்கள். கோடி திரவியத்தைக் குமிச்சு வச்சாலும், தொடாமே போய்விடுவார்கள். இவன் இங்கே இருந்து மற்ற சங்கீதக்காரர்களைக் கெடுக்கிறதைவிட கொழும்பிலே இறங்குவதே தேவலை."

"இவனால் யாரைக் கெடுக்க முடியும்?"



"அன்னிக்கு உங்களோடு அந்தப் பெண்ணை ஆடப்படாதுன்னு சொன்னான். நாளைக்குப் பேசப்படாதுன்னு சொல்லுவான். அப்புறம் பார்க்காதே என்பான்."

"அது உண்மைதான் வைத்திஜி. இருந்தாலும் இவன் வாசித்து, அவள் ஆடினாள் ரொம்ப நன்றாக இருக்கும்!"

"மகுடியை வாசிக்கும்போது, பாம்பு நல்லாத்தான் ஆடுகிறது. ஆனால் அந்தச் சமயத்தில் பக்கத்திலே யாராவது போக முடியுமோ? நீங்க அதையும் யோசிக்க வேணும் பாருங்கோ."

மகாராஜாவின் பல்லெல்லாம் தெரிந்தது. அக்கறையுடன் விசாரிக்க ஆரம்பித்தார். "ஏன், அவன் கலையில் அவளுக்கு அவ்வளவு மயக்கமா?"

"அவளுக்கு மாத்திரம் என்ன! இன்னும் பத்து நாளைக்கு இங்கு வாசிக்கச் சொல்லுங்க, இந்தக் கப்பலே பிருந்தாவனமாகிவிடும். சமயத்துக்கு நீங்க கூப்பிட்டு ஆடச் சொன்னா, ஒரு பெண்கூட இங்கே இருக்கமாட்டாள். அவன் கையிலே மை இருக்கான்னுகூட எனக்குச் சந்தேகம்."

"கையிலே மையா? அவன் என்ன முனியம்ஜியா?"

"இல்லே, அவன் நெத்தியிலே வசிய மை இடுகிறானோ அல்லது நாயனத்திலேதான் ஒட்டியிருக்கானோ? நானும் ஊருக்கு ஊர் பார்க்கிறேன், அவன் வாசிச்சா, ஆணும் பெண்ணும் பைத்தியம் பிடிச்ச மாதிரி தலையை ஆட்டறதுகள். நீங்க ஒண்ணு, நான் ஒண்ணு, நாம்ப இரண்டு பேரு கிட்டேதான் அவன் வித்தை பலிக்கலே."

"என் வித்தையை அவனிடம் காட்டுகிறேன். நான் ஒரு மோகனுக்காக நாலு லட்சம் செலவழித்தவன், தெரியுமா?" என்றார் மகாராஜா.

"மோகன் இறங்கிப் போகுமா? கேட்கிறேன்" என்றார் வைத்தி.

இவ்வாறு மகாராஜாவும் வைத்தியும் 'சண்முகத்தை எவ்வாறு தடுக்கலாம்; அவன் கர்வத்தை எப்படி அடக்கலாம்?' என்று யோசித்துக்கொண்டே இருக்கையில், சண்முகசுந்தரம் நேரே தன் அறைக்குச் சென்றுவிட்டான். அங்கு அவனுக்காக முத்துராக்குவும் தருமனும் காத்திருந்தார்கள்.

"சரி, பெட்டி படுக்கையெல்லாம் கட்டுங்க. இந்தக் கூட்டிலே இருந்து விடுதலை கிடைச்சுடுத்து. வாங்க, கொழும்புலே இறங்கி நம்ம பாட்டுக்கு ஊருக்குப் போவோம்" என்றான் சண்முகசுந்தரம்.

"அட பாவி! கெடுத்தாயே. எங்களுக்கு ஐயாயிரம் ரூபாய் கிடைக்குமே. ஏழைகளின் வயிற்றில் மண் அடித்துவிட்டாயே. உன்னை நம்பி வந்தோமே' என்று அந்த பக்க வாத்திய வித்வான்கள் ஏதும் பேசவில்லை.

"ரொம்ப சந்தோஷம் தம்பி. உங்க மருவாதி எங்க மருவாதி" என்றார் முத்துராக்கு.

கப்பலிலே ஒரு மூலையிலே தீப்பிடித்தால்கூட உடனே கப்பல் முழுவதும் தெரிந்துவிடும். ஆனால், அதற்குக்கூட நேரமாகலாம். சண்முகசுந்தரம் இறங்கப் போகிறான் என்ற செய்தி, அதைக் காட்டிலும் வேகமாகப் பரவியது. ஒவ்வொரு சங்கீதக்காரரும் சண்முகத்தின் அறையை நோக்கி ஓடி வந்தார்கள்.

"கியா ஜி?" என்றார் சந்தாமியான்.

"கியா மகாராஜ்? என்ன இப்படிச் செய்துவிட்டீர்களே!" என்று அங்கலாய்த்தார் கரீம்கான்.

"மரியாதை வேணும்னா, மண்மேலேயே இருந்திருக்க வேணும். இந்தத் தண்ணியை நம்பி வரலாமோ?" என்று இரண்டர்த்தத்தில் பேசினார் கதகளிக்காரர்.

ஓடி வந்தான் தில்ரூபா. "எனக்கு இது பிடிக்கவில்லை; எனக்கு இது பிடிக்கவில்லை. என்னை நடுக்கடலில் விட்டுவிட்டுப் போகாதீர்கள்" என்று திடீரென்று கையைப் பிடித்துக்கொண்டு உறவு கொண்டாட ஆரம்பித்தான்.

இவ்வாறு எல்லோரும் அவனை எத்தனையோ சமாதானம் சொல்லியும், "பணத்துக்கு மேலே ஒண்ணு இருக்குதுங்க. அதுதான் உலகத்திலே பெரிசு" என்று சொல்லிவிட்டான் சண்முகம்.

வித்வான்கள் எல்லோரும் அவனைச் சுற்றிக்கொண்டிருக்கையில், ஸ்ரீமான் வைத்தி, மோகனாவின் அறையைச் சுற்றிக்கொண்டிருந்தார்.

அறைக்குள் இருக்கும் மோகனாவுக்கு மன நிம்மதி இல்லை. அவளுடைய வலக்கண் துடித்தது. காரணம் புரியாத மயக்கம் ஒன்று ஏற்பட்டது. கை கால்கள் எல்லாம் நடுங்கின. ஏதோ பெரிய ஆபத்து வருவது போல் தோன்றியது. அது என்னவென்று அவளுக்குப் புரியவில்லை. ஆனால், வைத்தி உள்ளே நுழைந்தவுடனே, இதுதான் ஆரம்பம் என்பது மட்டும் புரிந்தது.

"மகாராஜா, பார்த்துவிட்டு வரச் சொன்னார். அந்த பனாரஸ் புடைவையைத்தான் நீ கட்டிக்கணுமாம். குரூப் போட்டோவுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கிறார். நீ வந்துதான் எடுத்துக்கணுமாம். அதையெல்லாம் சீமைக்கு அனுப்பி பத்திரிகையிலே போடச் சொல்லணுமாம். நீ ரெடியான்னு பார்த்துட்டு வரச்சொன்னார்" என்றார் வைத்தி.

வடிவாம்பாளுக்கு மகளின் நல்ல போட்டோ ஒன்று வேண்டுமென்று ஆசை. அவள் முகத்தைப் பார்த்தாள்.

ஆனால் வரதனோ, "என்னய்யா, உங்களுக்கு வேறு வேலை இல்லையா? புடவையைக் கொண்டாந்து கொடுக்க ஒரு தடவை வந்தீங்க. இப்போ புடவை கட்டிக்கிட்டாச்சான்னு பாக்கறதுக்காக வரீங்க. அப்புறம், தலைப்பு சரியாக இருக்கான்னு பார்க்க வருவீங்க."

"இந்தா மத்தளக்காரரே, வார்த்தையை அடக்கிப் பேசு. அப்புறம், சண்முகத்துக்கான கதி உமக்கும் ஆகிவிடும்."



இதைக் கேட்டதும் மோகனா அக்கறையுடன் அவர் பக்கம் திரும்பினாள். வைத்தி இதையும் கவனித்தார்.

"என்ன அவருக்கு? என்ன கதியாச்சு," என்றான் வரதன்.

"முப்பதாயிரம் போசுக நோட்டையைக் கட்டியாச்சு, மகாராஜா வக்கீலுக்குத் தந்தி கொடுத்துவிட்டார். 'அவன் கொழும்பிலே இறங்குறானாம்.'"

"என்ன, கொழும்பிலே இறங்குகிறாரா?" என்றாள் மோகனா.

"ஆமாம், மகாராஜாவானதால் பேசாமல் இருந்தார். நானா இருந்தால் கொழும்பிலே என்னத்துக்காக இறங்குகிறது. இப்ப கடலிலேயே இறங்குன்னு தள்ளிவிட்டிருப்பேன்."

"நான் சண்முகசுந்தரமாக இருந்தால் உங்க எலும்பை நொறுக்கி எலுமிச்சஞ்செடிக்கு உரம் போட்டிருப்பேன்," என்றான் வரதன்.

"ஏய் வரதா, இது மத்தளம் அல்ல, மாத்தி அடிக்க, மறுதலை."

"அதுதான் தெரியுதே. மத்தளத்தை அடிச்சா சுத்த சாப் கேக்குது. உங்களை அடிச்சா, அபசுரந்தான் கேட்கும். அது சரி, ஏன் சண்முகம் இறங்குறேன்னுட்டாரு?"

"அவரு மனிதனுக்குப் பள்ளி எழுச்சி வாசிக்க மாட்டாராம்."

"அப்படியா சொன்னார்? உண்மையாகவா?" என்றாள் மோகனா.

"ஆமாம். மகாராஜா துப்பாக்கியிலே கையை வச்சுட்டார். நான் தான், 'போனாபோறது, புத்தியில்லாதவன்' அப்படின்னு சொன்னேன்."

"ஆமாம், நீங்க ரொம்ப புத்திசாலியில்லே. அப்படித்தான் சொல்லியிருப்பீங்க" என்று மோகனா ஆத்திரத்தில் கூறிவிடவே, வைத்தி திடுக்கிட்டார்.

"என்ன மோகனா, என்னையே இப்படிக் கேட்கிறே?"

"ஆமாம், உங்களோடு பேசுவது எனக்குத் தாமிஸமென்றுதான் இத்தனை நாள் பேசாமே இருந்தேன். அவர் புத்தியிலே கால்வாசி உங்களுக்கு உண்டா? அவரைப்பற்றிப் பேசக்கூட நீர் லாயக்கில்லாதவர்."

"அவன் முட்டாள்தனம் அவனோடு போகட்டும். நீயாவது கெட்டிக்காரத்தனமாகப் பிழை."

"யாரு முட்டாள்? அவரா முட்டாள்? தம் சௌகரியத்தைவிடச் சங்கீதம் பெரியது என்று நினைக்கிற அவரா முட்டாள்? மகாராஜாவுக்குப் பள்ளி எழுச்சி வாசித்து, மகாராணிக்கு இங்கிலீஷ் நோட் வாசித்து, உமக்குத் தாலாட்டு வாசித்து, வைரமோதிரம் போட்டுக் கொள்ள ஆசைப்படாமல் கப்பலை விட்டு இறங்கறேன்னு சொல்றாரே, அவரா தெரியாதவர்? அவரை மதிக்கத் தெரியாத நீங்களும் உங்கள் மகாராஜாவும், அவரோடு சீமைக்குப் போக ஒப்புக் கொண்டு கப்பலில் உட்கார்ந்திருக்கும் நாங்களுந்தாம் முட்டாள்கள்."

"முப்பதாயிரம் ரூபாய் கிடைக்குமானால், ஆறு மாசத்துக்கு முட்டாளானால் தப்பில்லே மோகனா !"

"இது உங்களுக்குச் சரி, எனக்கு அவசியமில்லை."

"உனக்கு எனக்குன்னு எதுக்குப் பிரிச்சுப் பேசறே இனிமேல் உன் சௌகரியந்தான், என் சௌகரியம். நீ நல்லா இருக்க வேண்டியது தான் என் லட்சியம். 'மதன்பூர் ஆஸ்தான நாட்டிய கலாவதி, திருவாரூர் மோகனாம்பாள்' அப்படின்னு சொன்னா எனக்கும், எங்க ஊருக்குந்தானே கௌரவம் !"

"மதன்பூருக்கு ஆஸ்தான வித்வான் தேவையில்லை. அவரே ஆடுவார்."

"நீ சொன்னா மகாராஜா கேட்பாரா? மத்தவங்களுக்கெல்லாம் நூறு ரூபாய்லே புடவை உனக்கு மட்டும் ஆயிரம் ரூபாய் புடவை. மத்தவங்களுக்கெல்லாம் சாயங்காலம் கச்சேரி. உனக்கு ராத்திரி கச்சேரி என்றால் என்ன அர்த்தம்? அவர்தான் நிச்சயம் பண்ணிட்டாரே !"

"என்ன நிச்சயம் பண்ணிவிட்டார்? நாயனக்காரர் ஒருத்தர்தான் கலையை மதிப்பவர், நாங்கள் எல்லாம் கலையை விலை கூறுபவர்கள் என்றா?"

"அந்த நாயனக்காரனை மறந்துடு. உன்மேல் அவனுக்குப் பிரியம் இருந்தா, அவன் கப்பலை விட்டு இறங்குவேன்னு சொல்வானா? கூட வரமாட்டான்?"

"வைத்தி, வாயை மூடுங்கள்."

"உன்னை மதன்பூர் சிம்மாசனத்திலே உட்காரவச்சு, 'மகாராணி, வைத்தி வந்திருக்கிறேன் !' அப்படின்னு சொல்ற வரையிலே, என் வாயை யாரும் மூட முடியாது."

"அம்மா, அவரை வெளியே போகச்சொல்" என்று அலறினாள், மோகனா.

"ஏன் அவர் போறாரு? உனக்கு நல்லதைத்தானே சொல்றாரு. குப்பை மேட்டிலேயா ஏத்தி வைக்கிறேன்னு சொல்றாரு? சிம்மாசனத்திலே வைக்கிறேங்கிறாரு."

"அந்தச் சிம்மாசனத்தில் இந்த வைத்தி ஏறி உட்காரட்டும். அல்லது மகாராஜாவின் மோகன் ஏறி அமரட்டும். என் சிம்மாசனம் அங்கில்லை."

"பின்னே எங்கே இருக்குது? நாகபட்டணத்துக்கு நாலு மைல் தள்ளியா?" என்றார் வைத்தி.

"இது என் சொந்த விஷயம். உம்மைப் பேசச் சொல்லவில்லை."

"இந்தா மோகனா, எனக்கு எல்லாம் தெரியும். அந்த நாயனக்காரன் உன் மனசைக் கெடுத்துட்டான். அதுக்காகத்தான் அவனைப் பிரிச்சேன்."



இதைக் கேட்ட மோகனாவின் உடம்பில், ஆயிரம் ஈட்டிகள் கொண்டு குத்தினால் எப்படி இருக்குமோ, அப்படி இருந்தது. அவள் காது கேட்க, சண்முகத்தை அலட்சியமாய்ப் பேசியதைக் கேட்டவுடன், அன்று சிவபெருமானை வைததைக் கேட்ட உமாதேவியார் எவ்வாறு துடித்தார்களோ, அவ்வாறு துடித்தாள் மோகனா.

"போ, வெளியே போ ! என் கண் முன்னே நிற்காதே" என்று வைத்தியைப் பார்த்து அழுதுகொண்டே கூறினாள்.

"உன்னைக் கேட்டுக்கிண்டு வரலே. உன்னைக் கேட்டுக்கிண்டு நான் போகவும் மாட்டேன்."

"ஆமாம், அவரு இங்கே இருந்து போக மாட்டாரு" என்றாள் வடிவாம்பாள். இதைக் கேட்ட வாதன் "ஆமாம், மரியாதையாகப் போக மாட்டாரு" என்றான்.

இதுவரை அடங்கிக் கிடந்த அந்த வாதன், இப்போது ஆவேசம் கொண்டான். சிறு வயது முதல் கர்லாக்கட்டை சுற்றிய அவன் புஜங்கள் பூரித்தன. கண்ணை உருட்டிப் பார்த்தான். எழுந்து வைத்தியின் அருகில் வந்தான்.

"நீ ஒரு மனுஷனா? உனக்கு ஏதாவது உணர்ச்சி இருக்குதா? தங்கச்சி காது கேக்க, அவரை நீ திட்டறியே ! உனக்கு ஞானமிருந்தா திட்டுவியா?"

"ஏய், நீ நான் என்று பேசாதே."

"அதுக்கும் கேவலமா பேச நாக்கு வரலே. இருந்தாலும், இப்பவே இந்த இடத்தை விட்டு எழுந்திரும் ! போம் வெளியே !"

வைத்தி 'கடகட' வென்று சிரித்தார்.

"டேய், நான் மனசு வச்சா, இப்போவே உன்னை டிஸ்மிஸ் பண்ணுவேன்" என்றார்.

"தஞ்சாவூருக்குப் போயிருக்கியா? ஐயங்கடைத்தெரு பாத்திருக்கியா? அங்கே திராட்சைப் பழத்தைக் கையாலே பிசைந்து கிஸ்மிஸ் பண்ணுவாங்களே, பாத்திருக்கியா? இப்போ உன்னை நான் அந்த மாதிரி கிஸ்மிஸ் பண்ணப்போறேன். இந்த வாதனுக்குக் கோபம் வந்தா தாங்க முடியாது !"

"யாரால் தாங்க முடியாது?"

"என்னாலேதான். நானும் ஆறு மாசமா பாக்கிறேன், அந்தப் பொண்ணுக்குச் சத்துருவாக நீ வந்துக்கிட்டே இருக்கிறே பாவி. உன்னாலே அது கொடம் கொடமாகக் கண்ணீர் விட்டு, உடம்பு துரும்பா போச்சு. அப்பவான மைனரைக் கொண்டாந்து விட்டே. பிறகு நடுக்காட்டிலே, கனவாணி கையிலே காட்டிக் கொடுத்தே. உன் சங்காத்தமே வேண்டாமுன்னு சீமைக்குப் புறப்பட்டா, சனியனாட்டம் சமுத்திரத்திலேயும் கூடவே வந்துட்டே. ஏய் வைத்தி ! இந்த வாதனுக்குப் பெருசாதி புள்ளே கிடையாது. நான் தப்பேன்

கிடையாது. எனக்குக் கோவிலிலேயும் சோறு. ஜெயிலிலேயும் சோறு. உன் தொந்திரவுக்காகத்தான் மோகனா பக்கத்திலேயே உட்கார்ந்துக் கிட்டுச் சீமைக்கும் புறப்பட்டேன். இல்லாட்டி அன்னிக்கே பண்டாரிபுரம் போயிருப்பேன்."

"ஏன், இப்பவே உன்னை கான்சல் செய்துவிடுகிறேன். இறங்கிப் போயிடேன்."

"இல்லே. இப்ப நான் பண்டாரிபுரம் போகலே. அந்தப் புண்ணியம் இங்கேயே கிடைக்கப்போகுது. நேரே போலீசுக்குப் போறேன்."

"ஏன், என்னைப் பிடிச்சுக் கொடுக்கவா?"

"சே! நீதான் போலீசிலே அகப்படறமாதிரி குற்றம் பண்ண மாட்டியே. உன்னைச் சட்டம் தண்டிக்க முடியாது. நான்தான் தண்டிக்கணும். இனி நீ இந்த அறைக்குள் வரப்படாது."

"அதைச் சொல்ல நீ யார்?"

"யாரா! போடா வெளியே!" என்று சொல்லி வைத்தியின் கழுத்தைப் பிடித்துத் தூக்கினான் வரதன்.

"என்ன, என் மேலேயா கை வைக்க வர்றே?" என்றார் வைத்தி.

"கை வைக்க வரேன்னா, கையாலே கழுத்தைப் புடிச்சிருக்கேன். ஒரு பனங்கட்டை மத்தளக்கனம் இல்லே. என்ன திமிர் உனக்கு? போங்காணும் வெளியே! உனக்கு நாக்கிலே எவ்வளவு திமிர் இருந்தா, அதைச் சிம்மாசனத்தில் ஏற்றி வைக்கிறேன்னு சொல்லுவே. போய்யா வெளியே" என்று கழுத்தைப் பிடித்து ஒரு தள்ளு தள்ளினான் வரதன். வைத்தி வாசற்படியில் போய்க் கீழே விழுந்தார்.

"மோகனாவோ 'ஹோ' என்று அலறியவண்ணம், நின்றுகொண்டிருந்தாள். வரதன் திரும்பினான் மோகனாவின் பக்கம்.

"அழு. அழு. அலறு. பெற்ற தாயை மதிக்க நினைச்சே பாரு, அதுக்கு நீ அலறத்தான் வேணும். அவங்களுக்கு மரியாதை கொடுக்க நினைச்சே பாரு. அதுக்கு நீ அலறத்தான் வேணும். கொஞ்சங்கூட ஞானம் இல்லாமே, 'எவங்களை வீட்டுக்குள்ளாற விடறது, எவங்களை விடக்கூடாது' அப்படின்னு தெரியாம கண்ட நாய்களையெல்லாம் கூப்பிட்டு உக்காத்தி வச்சுப் பேசறாங்க. பாரு, அதுக்கு அலறு. ஊர் உலகமெல்லாம் உன் ஆட்டத்தைப் பாக்க ஆசைப்பட்டுக் காத்துக்கிட்டிருக்கு. மகாராஜாகூடப் பாழும் முப்பதாயிரம் ரூபாய்க்கு ஆசைப்பட்டு, புறப்பட்டு வந்திருக்கே பாரு அதுக்கு அலறு. எல்லாத்தையும்விட இந்த வடிவாம்பாள் அம்மா வயித்திலே பிறக்கிலே. அதுக்காக அலறு! ஆத்தா பாடு, மக பாடு. எனக்கு இனிமே இங்கு என்ன வேலை?" என்று சொல்லிவிட்டு வேகமாக வெளியே வந்தான். வராந்தாவில் நின்றபடி தேம்பித் தேம்பி அழுதான்.

வரதன் வெளியே போனவுடன் வடிவாம்பாள் கதவைத் தாழிட்டாள்.



"இந்தா மோகனா, நீ ஏன்டி அழுறே? நானில்லே அழணும்? உன்னாலேதானே கண்ட நாய் எல்லாம் என்னைப் பேசுது? இந்த மத்தளக்காரப் பயல் என்ன கேட்டுட்டுப் போறான் பாத்தியா?"

"அம்மா, என்னைக் கொன்றுவிடுங்கள். என்னைக் கொன்று விடுங்கள்!" என்று மேலும் அழுதாள் மோகனா.

"உன்னைக் கொல்லறத்துக்காகத்தானா பெத்தேன்?"

"இல்லையம்மா, அருமையோடுதான் பெற்றீர்கள், அருமையாகத்தான் வளர்த்தீர்கள், அருங்கலைகள் எல்லாம் சொல்லி வைத்தீர்கள். ஆனால், என் கலையாலே ஒரு காலணா சம்பாதித்தவுடனே என்னை விட, அந்தக் காலணா உங்களுக்குப் பெரிதாகப் போய்விட்டது அம்மா!"

"மோகனா, பைத்தியம் பிடிச்ச மாதிரி பேசாதே. நாளைக்கு நீ சீமையிலே ஆடறபோது, இந்த வடிவாம்பாளுக்கா மாலை போட்டு வரவேற்கப் போறாங்க? நாளைக்கு மதன்பூர் சிம்மாசனத்தில் நீ உக்கார்ந்திருக்கிறபோது, நான்கூட உத்தரவு கேட்டுக்கிட்டு இல்லே உள்ளே வரணும்."

"அம்மா, போதும் வாயை மூடு. நானும் கொழும்பிலே இறங்கப் போகிறேன். எனக்கு இந்தப் பயணமே வேண்டாம்."

"ஹோ—! ஹோன்னானாம்! அதுவா விசயம்? என்னடா, சச்சை கட்டிக்காமல் சும்மா ஆடறான்னு பார்த்தேன். சிக்கலாரு இறங்குறாரு இல்லே!"

"ஆமாம், அவர் இல்லாத கப்பலில் இருக்க நான் தயாரா இல்லே!"

"ஏன், நான் மனுசியா தோணலியா?"

"நீங்களும் இனிமேல் இங்கு இருக்க வேண்டியதில்லை."

"அது என் இஷ்டமில்லே!"

"இல்லை. இனி என் இஷ்டந்தான்."

"ஏன், சொல்லி அனுப்பிச்சானா. இல்லே, வரதன்கிட்டே காகிதம் கொடுத்து அனுப்பிச்சானா?"

"அவர் காலடியை மிதித்தவனுக்குக்கூட அந்தப் புத்தி வராது. அவருக்குக் காதல் பெரிதில்லே அம்மா, கலைதான் பெரிது. காதல் பெரிதாயிருந்தால் அவர் என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருக்க மாட்டாரா?" என்று சொல்லிக்கொண்டே, மோகனா அலறிய வண்ணம், படுக்கையில் சாய்ந்தாள்.

அவளுடைய மனத்தில் ஒரு புயல் அடித்தது. தன்னை மகாராஜாவுடன் ஆட வேண்டாமென்று தடுத்துக் காப்பாற்றியவன், கொழும்பில் இறங்குவதாக நிச்சயம் செய்ததும் தன்னிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையே என்று எண்ணினாள். குமுறிக் குமுறி அழுதாள்.

'நாம் எக்கேடு கெட்டுப்போனால் என்ன? நாம்தானே அவரைக் காதலித்தோம்! நாம்தானே அவரைச் சபதத்துக்கு இழுத்தோம்! நாமு தானே அவர் காலிலே போய் விழுந்தோம். அதை நாம்தான் அனுபவிக்க வேண்டும். அவருக்கென்ன, நாதஸ்வரம் உண்டு. அவர் உண்டு. ஐயோ, நாதஸ்வரமே, நீ செய்த பாக்கியத்தைக்கூட நான் செய்யவில்லையே. உன்னை அவர் கையில் எடுப்பது போல், என்னை அவர் எடுக்கவில்லையே! உன்னை அவர் பார்ப்பது போலக்கூட என்னைப் பார்க்கவில்லையே!

சீ! நான் ஒரு கட்டைக்கும் கேவலமாகிவிட்டேன். என் மேல் ஆசையிருந்தால், 'மோகனா! நீயும் இறங்கிவிடு' என்று ஒரு வார்த்தை சொல்லி இருக்க மாட்டாரா? அம்மாவுக்காகப் பயப்படுகிறார் போலிருக்கிறது. அம்மா அவமரியாதையாகப் பேசிவிடுவாள் என்று அஞ்சுகிறார்! மானம், அவமானம் அவருக்கு மாத்திரந்தானா, எனக்குக் கிடையாதா? மானத்தைவிட்டுத் திருவாரூரில் வண்டியின் பின்னே ஓடினேனே! மானத்தை விட்டு, நாகபட்டினத்துக்குப் போனேனே! மானத்தை விட்டு, அவரை வாசிக்கச் சொல்லி ஆடினேனே! மானத்தை விட்டு நள்ளிரவில் அவர் வீட்டுக்குச் சென்று அவர் படுக்கை அருகில் நின்று ஆடினேனே! மானத்தை விட்டுக் கோவில் வாசலில் அவர் காலில் விழுந்து கும்பிட்டேனே! அது எல்லாம் நான் செய்த தப்பு. எனக்காக என் அம்மாவிடம் அவர் ஒரு வார்த்தை கேட்டால்தான் என்ன? இரண்டு திட்டு வாங்கினால் தான் என்ன? அவமானம் வந்தால்தான் என்ன! சே, கல்! அது ஒரு குத்துக்கல். அதற்கு இரக்கமே கிடையாது. என் விதி, அதன் காலில் நான் போய் விழுந்தேன். போகட்டுமே! இறங்கினால் எனக்கு என்ன! நீ வேண்டாமென்று அவரே இறங்கிப் போகும்போது, கையைப் பிடித்து நானா தடுக்கப்போகிறேன். போகட்டும். எங்கு வேண்டுமானாலும் போகட்டும். எனக்கு அக்கறையில்லை. எனக்கும் மானம் உண்டு. எனக்கும் வெட்கம் உண்டு.

"இனிமேல் நான் அப்படி இருக்க முடியாது. என் மானத்தை காப்பாற்றிக்கொள்ள எனக்கு வழி தெரியும். இறங்கிப் போய்விட்டால் என்னவாகும்?— அவர் இங்கில்லை என்று தெரிந்தவுடனே இந்த மகாராஜா, வைத்தி இரண்டு பேரும் இங்கே வருவார்கள். அம்மா வெற்றிலைப் பெட்டியை எடுத்து வைப்பாள். 'பெண்ணே, ஆடு' என்று பிரியமாகச் சொல்லுவாள். ஆடுகிறேன், ஆடுகிறேன்! என்னைப் பெற்றவள் சொல்கிறாள் ஆடுகிறேன். அவள் என்னை விட்டுப் போய்விட மாட்டாளே—

'ஆனால், என்னை யாரும் தொடவிட மாட்டேன்! என் உடம்பில் உயிர் இருக்கும்வரையில் மகாராஜா என்னைத் தீண்ட முடியாது. இதை எல்லாம் இப்போது நினைத்து என்ன பயன்?— நாளை மாலை கொழும்பு வந்துவிடும். இறங்கப்போகிறார், என்னைத் தவிக்கவிட்டு



இறங்கப்போகிறார்— கொழும்புத் துறைமுகத்தில் நின்று, 'மோகனா, மோகனா' என்று அலறப்போகிறார். நான் கப்பலிலே இருந்து 'அத்தான் அத்தான்' என்று அலறப்போகிறேன்— ஆமாம், விதி பிரித்துவிட்டது அத்தான்! அத்தான்! என்னைப் பெற்ற தாயே பிரித்துவிட்டாள். இந்தக் கண்ணீர் கனலாக மாறட்டும். இந்தத் துயரம் வீரமாக மாறட்டும். ஆணைப் பெற்று எடுக்கும் பெண் ஆணுக்குக் குறைந்தவளா? சீ, என்ன பேதைமை!' என்ற எண்ணம் வந்தது மோகனாவுக்கு.

நிமிர்ந்தாள்! கண்ணைத் துடைத்துக்கொண்டாள். அவிழ்ந்திருந்த தலையை எடுத்துக் கட்டினாள். அவளுக்கு எதிர்த்தாற்போல் மகாராஜா அனுப்பிய இரண்டு பீதாம்பரங்கள் தாம்பாளத்தில் இருந்தன.

'வரதா!' என்று கூப்பிட்டாள். வாசலில் நின்ற வரதன் வந்தான். மோகனாவின் முகத்தைப் பார்த்தான். பழைய மோகனா இல்லை. அவள் முகம் சிவந்திருந்தது. செந்தூர வர்ணத்தில் ரத்த நாளங்கள் எல்லாம் சிவந்து, கண் சிவந்து, கன்னம் சிவந்து, அதரங்கள் சிவந்து, கழுத்து சிவந்து, கைகள் சிவந்து, அம்பிகை துர்க்கை பவானி நிற்பது போலச் செம்பொன் ஜோதியாய்த் தகதகவென்று மின்னினாள்.

"இந்தத் தாம்பாளம் இரண்டையும் எடுத்துக் கடலில் எறி!" என்று கையைக் காட்டிச் சொன்னாள்.

அவளுடைய கம்பீரத்தைக் கண்ட வரதனே அஞ்சினான். மறுவார்த்தை சொல்லாமல், தாம்பாளத்தை எடுத்தான். வடிவாம்பாள் வரதன் கையைப் பிடித்தாள்.

"அம்மா, அவன் கையை விடுங்கள்."

"என்னடி, பத்திரகாளியாட்டம் அலறே?"

"ஆமாம் அம்மா. மாற வேண்டிய காலம் வந்துவிட்டது. என்னை இலங்கையில் இறங்கவிடப் போகிறாயா, இல்லையா?"

"முடியாது! என்ன செய்வே?"

"முடியாதா? முடியாதா? அம்மா, நீ இதற்காக வருத்தப்படுவாய்!" என்று கூறி, வரதன் கையிலே வைத்திருந்த தாம்பாளத்தை வாங்கிக் கண் இமைக்கும் நேரத்தில் கடலில் வீசி எறிந்தாள். அதைக் கண்ட வடிவாம்பாள் திடுக்கிட்டாள். மகளின் முன் நிற்கத் தாயே அஞ்சினாள். கற்சிலை போல் நின்றாள்.

# விண்மீன் விழுந்தது, வேதனை தீர்ந்தது!



மானம், அவமானம் - இந்த இரண்டும் தான் உலகம். கோபமும் பசியும் விலங்குக்கும் உண்டு, மனிதனுக்கும் உண்டு. ஆனால் விலங்குக்கும் மனிதனுக்கும் உள்ள வித்தியாசமே மான, அவமான உணர்ச்சி தான். மனித சமூகமே மானத்தில்தான் உண்டாயிற்று. என்றைக்கு அந்த மான இடன் ஆடைகளைக் கட்டிக்கொள்ள ஆரம்பித்தானோ, அன்றைக்கே எல்லாத் தொல்லைகளும் வந்து சேர்ந்தன. வேட்டிக்காகப் பஞ்சு எடுக்கவேண்டி வந்தது. பஞ்சுக்காகப் புலத்தை உழவேண்டி வந்தது. அவன் வேலை செய்யும்போது, அவனுக்குச் சோறு கொடுப்பதற்கு மனைவி வேண்டி வந்தது. அந்த மனைவிக்கு ஒரு சேலை வேண்டியிருந்தது. அவர்களுடைய இன்ப வாழ்வுக்கு ஒரு இடம் வேண்டியிருந்தது. அந்த வீடு கட்டுவதற்குச் சமூகம் சேர்ந்து தொழில் செய்யவேண்டியிருந்தது. சேர்ந்து வாழ்வதற்கு அன்பு வேண்டி வந்தது. அன்பு இப்படியே வளர்ந்து, மணமேற்குடி உப்பும், மைசூர்ப் புளியும், சாத்தூர் மிளகாயும், இலங்கைப் பக்கத்தில் விளையும் லவங்கப் பட்டையும், எங்கேயோ இருந்து வரும் கசகசாவும் ஒன்று சேர்ந்து உலகமே ஒருவன் உள்ளங்கையில் அடங்கிவிட்டது. ஒரு பிடி குழம்புச் சோற்றுக்குள் அடங்கிவிட்டது. அவ்வளவு உறவுக்கும் காரணம் மானந்தான்.

ஆனால் மானத்தை விட்டவன் ராஜாவினும் பெரியவன் என்பது போல், நமது மகாராஜாவின் அருகில் இருக்கும் வைத்தியை மட்டும் மானம் எதுவும் செய்ததில்லை. அவருக்கு 'மானம் தலைக்கு மேலே போன விஷயம். அதற்கும் நமக்கும் ரொம்பத் தூரம்' என்ற கண்கண்ட கொள்கையில்தான் அதிக நம்பிக்கை. மகாவிஷ்ணு மானத்தால் உடல் குன்றி வாமனன் ஆகலாம். ஆனால் வைத்தியின் மனத்தை மானம் தொட்டதே இல்லை. ஆகவே, நேரே தம் அறைக்குச் சென்று, நல்ல உடைகளை மாற்றிக்கொண்டிருந்தார். வரதன் தம்மைக் கீழே தள்ளி விட்டானே என்ற கோபமும் அவருக்கு வரவில்லை. அவர் நெடு நாளைக்கு முன்பே தம்மைத்தாமே கீழே தள்ளிக்கொண்டவர். இருந்தாலும் 'இந்த மத்தளத்தை அடிக்கிற பயலுக்கு இவ்வளவு முட்டாள்தனம் ஏன்?' என்பதை எண்ணிச் சிரித்தார். 'என்ன மனுஷனுங்க! இந்த உலகத்திலேயே சின்னதாய் இருக்கிறது காசுதான். இவ்வளவு சின்னதாயிருந்துகொண்டே அது உலகை ஆட்டி



வைக்கிறது என்றால், அது விஸ்வரூபம் எடுத்தால் உலகம் என்னபடி யாகும்? ஆகவே, மனிதன் இருக்கும்வரையில் காசைச் சேர்க்க வேண்டும். இந்த வரதனைப் போன்ற பையன்கள் காசு முக்கியம் என்று தெரிந்துகொள்ள மாட்டேன் என்கிறார்கள்! 'போனான் முட்டாள், பிழைக்கத் தெரியாதவன்' என்று எண்ணிக்கொண்டே சட்டையில் இருந்த அழுக்கைத் தட்டித் தம் அவமான உணர்ச்சியைத் தட்டிவிட்டார். அப்படித் தட்டியும் சட்டை கசங்கி இருந்தால், அந்த அவமானத்தைக் கழற்றி எறிந்துவிட்டு வேறொரு புதுச் சட்டையைப் போட்டுக்கொண்டார்.

அப்போது 'வைத்திஜி! மஹ்ராஜ் புலாத்தாஹே' என்றான் முந்தி மீசைக்காரன்.

"என்டா, புலாத்தாஹே, சிலாத்தாஹேன்னு பழமுறுக்கறே?" என்று சொல்லிக்கொண்டே வைத்தி, மேல் தட்டுக்கு ஓடினார்!

மேல் தட்டில் கேப்டன், கையில் ஒரு காமிராவை வைத்துக் கொண்டு காத்திருந்தார். மகாராஜாவும், மற்றவர்களும் வரிசையாக எதிரில் அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் பெண் பிள்ளை, வித்வாம்சினிகள் எல்லாம் வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் ஆண் வித்வான்கள் எல்லாம் பயபக்தியுடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார்கள். மகாராஜாவின் அன்புக்கு மிகவும் பாத்திரமான 'மோகன்' முதல் வரிசையில் முன்னே படுத்துக்கொண்டிருந்தது. அதற்கு எதிர்த்தாற் போல், கப்பல் கேப்டனின் ஆஸ்தான வித்வான் 'மேரி' என்னும் நாய் உருமி 'ஹம்' செய்துகொண்டே பயந்து படுத்துக்கொண்டிருந்தது.

மோகனா வராத ஒவ்வொரு நிமிஷமும், மகாராஜாவுக்கு ஒரு யுகமாகத் தோன்றியது. மாடிப்படியைப் பார்த்தார். பக்கத்தில் இருந்த இங்கிலீஷ் மகாராணியோ, மகாராஜாவின் முகத்தைப் பார்த்தாள்.

"அப்படி அவள் வரத் தாமதம் ஆகும் என்றால், நாம் ஏன் போட்டோவை எடுக்கக்கூடாது?" என்றாள் ஆஷலதாதேவி.

"இல்லை, அவளும் வந்துவிடட்டும்" என்றார் மகாராஜா.

"நோ—நோ. என்னால் இதுமாதிரி ஒரே போஸில் உட்கார்ந்திருக்க முடியாது. ஓ. யு. காப்டன், நீ உயிருள்ள மனிதனை போட்டோ எடுக்க லாயக்கில்லை. எனக்கு எத்தனையோ வேலைகள் இருக்கின்றன!"

"எனக்குந்தான் எத்தனையோ வேலைகள் இருக்கின்றன. வித்வான்களை எல்லாம் தர்பாருக்கு வரச் சொல்லியிருக்கிறேன். கச்சேரிகள் எல்லாம் கேட்க வேண்டும்."

'புவர் டார்லிங்' என்று சொல்லி, மகாராணி சிரித்துக் கொண்டாள். அவளும் படியைப் பார்த்தாள். மோகனா வரவில்லை. வைத்திஜி ஓடிவந்தார்.

"ஏன் வைத்திஜி, ஏன் நீங்க டான்சு பண்ணிக்கிட்டு வரீங்க? எனக்கு அந்தப் பெண் வந்து ஆடவேண்டும்" என்றார் ஹாஸ்யமாக மகாராஜா.

"போங்கோ மகாராஜா! இந்த நாசமாப்போன கேப்டன் ஆட விடாமல் கெடுத்துவிட்டான்" என்றார் வைத்தி.

"என்ன, நானா? நான் அவள் ரூமுக்குள் போனதே இல்லையே! அவளை எனக்கு யாரும் அறிமுகம் செய்ததுகூட இல்லியே. ஏன், என்னை 'இன்சல்ட்டு' செய்கிறீர்?" என்றார் கேப்டன்.

"அதுவல்ல, கேப்டன் சார்! உங்களால் வந்த வினைதான். இது அவள் டிரஸ் பண்ணிக்கொண்டு டான்சுக்காக வரத் தயாராய் இருந்தாள். திடீரென்று உங்கள் விஷயம் வந்தது. ஆட வரமுடியாதுன்னுட்டாள்."

மகாராஜாவுக்கு ஆவல் அதிகமாயிற்று.

"என்ன, டான்சுக்கு ரெடி பண்ணிக்கொண்டுவிட்டாளா? டிரஸ் செய்துகொண்டவளா வரவில்லை? கேப்டன் என்ன செய்தார்?"

"குறுக்கே வந்துட்டார். ஆட்டம் நின்றுவிட்டது. அவள் ரூமை விட்டுப் புறப்பட்டாள். பக்கவாத்தியக்காரன் மிருதங்கத்தைக் கையில் எடுத்துக்கொண்டான். வைத்தி இருந்தாங்கன்னு சொன்னாள். நானும் கையில் ஒரு பூமாலையை எடுத்துக்கொண்டேன்."

"மாலையா! எதற்கு?" என்றார் மகாராஜா.

"அதை இனிமேல் சொல்லி என்ன பிரயோசனம்? உங்க கழுத்து கொடுத்துவச்சது அவ்வளவுதான்."

"என்ன, எனக்கு மாலை போடவா?"

"ஆமாம், மகாராஜா! எங்க ஊரிலே பிணங்களுக்குக்கூட மாலை போடுவார்கள். பிறந்த நாளைக்குச் சும்மா இருப்பார்களா? இன்னிக்கு உங்களுக்கு ஒரு மாலை போடணுங்கிற எண்ணம் அவளுக்கு."

"ஐ வில் பர்மிட் ஹர்! அவள் இஷ்டப்பட்டால் நன்றாகப் போடலாமே!" என்று மகாராஜா இப்போதே ஒட்டைச்சிவிங்கி போலக் கழுத்தை நீட்ட ஆரம்பித்தார்.

"பாவி, இந்தக் கேப்டன் வளர்க்கிறார் பாருங்கோ ஒரு கறுப்புப் பூனை, கப்பலுக்கே சனியனாட்டமா காலைக் காலைச் சுத்துதே. அது குறுக்கே வந்து, சொந்தம் கொண்டாட ஆரம்பித்தது. நான் மாலையைப் பொத்துன்னு கீழே போட்டுட்டேன். மத்தளம் தடால் என்று கீழே விழுந்தது. அந்தப் பொண்ணுக்கு மனசிலே இடி விழுந்தா போல ஆகிவிட்டது. 'வைத்திஜி! மகாராஜா கிட்டே ரொம்ப கேட்டுக்கோங்கோ. நல்ல நாளும், பெரிய நாளுமா அபசகுனத்தோடே நான் அங்கு வந்து அவரைப் பார்க்க விரும்பலே. அவரு ரொம்ப நாளைக்கு நன்னா இருக்கணும்' அப்படின்னு சொல்லிக் கண்ணீரும் கம்பலையுமா மோகனா நின்னா பாருங்கோ. நான் அப்படியே



அழுதுட்டேன்" என்று வைத்தி கண்ணைத் துடைத்துக்கொண்டார். இதைப் பார்த்துப் பெருமூச்சு விட்டார் மகாராஜா. "பிரியம்னா அப்படின்னா பிரியம் இருக்கணும்" என்றார் வைத்திஜி.

"ஆமா ஆமா" என்றார் மகாராஜா. தம்மைக் காண வேண்டி மோகனா, மாலையுடன் வந்தாள் என்பதைக் கேட்டவுடன், அவருக்கு அந்தரங்கத்தில் ஏதோ செய்தது. 'இந்த இங்கிலீஷ்காரியும் இருக்கிறாளே. ஒரு நாளைக்காவது ஒரு மாலை போட்டது உண்டா? ஒரு புஷ்பத்தைக் கையால் தொட்டுக் கொடுத்ததாவது உண்டா? பூவைப் பறிக்கச் சொன்னால், கையிலே உறையை மாட்டிக்கொண்டு கத்தரிக்கோலால் பூவின் காம்பைக் கத்தரித்து, அதைச் சாமணத்தால் பிடித்து, வெந்நீரில் கொதிக்க வைத்து 'ஸ்டெரைல்' செய்த பிறகுதானே அவள் மூக்கருகில் கொண்டுபோய் முகருகிறாள். இவளுக்கு ஒரு அன்பு உண்டா, ஒரு உபசாரம் உண்டா! ஆனால் அந்த மோகனாவுக்கு என் மேல் அன்பு இருந்தால்தானே, பூனை குறுக்கே வந்தவுடன் நின்றுவிட்டாள். இந்த மோஹன்தான் மனை வைக்க இந்தப் பூனைக்குப் புத்தி சொல்லணும். ஐ வில் டீச் எ லெஸன்' என்று எண்ணிக்கொண்டே, "யெஸ், வைத்திஜி. அப்படின்னா அவ இன்று வர மாட்டாளா?" என்றார்.

"அவளைக் கொன்றாலும் வரமாட்டாள். அவதான் பயப்படறாளே."

"எதற்குப் பயம்?"

"மகாராஜாவுக்கு ஏதாவது ஆகிவிடக்கூடாதேன்னுதான். ஏற்கனவே பூனை, அதிலேயும் கறுப்பு."

"நாளை ஒரு நாளைக்காவது இந்தப் பூனையை ஒரு அலமாரியிலே போட்டுப் பூட்டி வைக்கச் சொல்லுங்க" என்றார் வைத்திஜி.

"எஸ் மிஸ்டர் காப்டன், இனி போட்டோவை எடுக்கலாம்" என்றார் மகாராஜா.

"வெய்யில் போய்விட்டது. இனி நாளைக்குத்தான்" என்றார் காப்டன்.

வைத்தியின் சிந்தனையே அலாதியானது. அவர் வந்து பத்து நாளைக்குள் மகாராணியும் மகாராஜாவும் ஒருவரோடொருவர் நெருங்காமலும், கணவன் மனைவி என்ற அன்யோன்யம் இல்லாமலும் பழகிக்கொண்டிருப்பதையும் அன்பு அதிகம் இல்லை யென்பதையும், ஆதலால் இந்த உறவு அதிக நாள் நீடித்து இருக்காது என்பதையும் கண்டுகொண்டார். தம் கையால் பலமான ஒரு முடிச்சைப் போட்டுவிட்டால் என்ன? நமக்கும் நன்மை என்ற எண்ணமும் வந்தது. அதனால்தான், மோகனா கோபித்துக் கொண்டதை மகாராஜாவிடம் சொல்லாமல் அதை மழுப்பிவிட்டார்.

மகாராஜாவுக்கோ, அன்றைய ஆர்ப்பாட்டங்களிலும், கச்சேரிகளிலும் மனம் செல்லவே இல்லை. மோகனா ஆடிப் பார்க்காத கண்கள், முகத்தில் இரண்டு புண்கள் என்ற எண்ணம் வர ஆரம்பித்தது. இந்நிலையில் அவருடைய தர்பாரில் நடந்த எந்தக் கச்சேரியும் ரசிக்கவில்லை. குரூப் டான்சைக்கூட அவர் ரசிக்கவில்லை.

"தேகோ, இதர் ராஜா— ஆப் தேகோ இதர் ராஜா" என்று தில்ருபா விழுந்து விழுந்து ஆடியும், மகாராஜாவின் மனம் அங்கு தேக்கவில்லை. அன்றைய நிகழ்ச்சிகளில் அவருக்கு ஓரளவு ரசிப்பைக் கொடுத்தது சீமைச் சரக்குகள்தான். பத்து மணிக்குள்ளேயே தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டுவிட்டார். பிடிக்காதது இன்னொன்று. அது வேறொன்றுமில்லை, காலையில் தம்மிடம் அவ்வளவு தகராறு செய்து கொண்டு போன சண்முகம், தர்பாருக்கு வந்தான். வித்வான்களோடு அமராமல், கையில் வாத்தியமும் எடுத்து வராமல், அங்கிருந்த ஆசனத்தில் விருந்தாளி போல் தனியே அமர்ந்து இருந்தான். இது அவர் கண்ணை உறுத்தியது. அதுவும் தவிர 'கச்சேரி செய்த வித்வான்கள் எல்லோரும் தம்மைப் பார்த்து ஆடாமல், தம்மைப் பார்த்துப் பாடாமல் அவனைப் பார்த்து ஆடுகிறார்களே, பாடுகிறார்களே. அவன் மகாராஜாவா, அல்லது நான் மகாராஜாவா?' என்ற ஆத்திரமும் அவருக்கு வந்தது. பாவம்! 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்பதும், ஏன் சண்முகம் அங்கு வந்தான் என்பதும் அவருக்கு எப்படித் தெரியும்?

வானம் பெரியது. கடல் போலப் பரந்து கிடக்கின்றது. ஆனால் அந்த வானம் ஒரு உள்ளங்கையில் மறைந்துவிடும். கண்ணுக்கு முன்னே உள்ளங்கையைக் காட்டினால் போதும், வானம் தெரியாது. இதைப் போல உள்ளத்தை மறைத்துக்கொள்ள உள்ளங்கை இல்லையே. தான் பெரிதாகக் கருதும் ஒன்றை இன்னொருவரிடம் விட்டுவிட்டு அவனுக்கு இறங்க மனம் வரவில்லை. அதற்காகவேதான் இங்கும் வந்தான். அவன் பெட்டியைப்பற்றி நாம் சொல்லவில்லை. பெட்டியைத் திறந்து பார்த்தால் மகாராஜா பிரமித்துவிடுவார். அவரைவிடப் பெரிய மகாராஜாக்கள் எவ்வளவோ பேர்கள் அடங்கி இருக்கிறார்கள். தென்னாட்டின் இரண்டு கண்கள் என்று கருதப்படும் மைசூர், திருவனந்தபுரம் இரண்டும் அந்த மகாவித்துவானுக்கு மரியாதை செய்து இருப்பதை அவர் காண்பார். காஞ்சியும், அகோபிலமும் மனமுவந்து ஆசியளித்திருப்பதைக் காண்பார். திருவாவடுதுறை, தருமபுரம் ஆகிய இரு ஆதீனங்கள் சால்வையும் தோடாவும் தந்திருப்பதையும் காண்பார். அந்தப் பெட்டிக்குள் இருக்கும் பெருமையைப் பார்த்து அவர் திடுக்கிடுவார். அந்தப் பெட்டியைப்பற்றிச் சண்முகம் கவலைப்படவில்லை. ஆனால், அவன் உள்ளந்தான் அவன் கருவூலம்! அதைக் கவர்ந்தவள் இங்கு வந்து இருக்கிறாளா என்று பார்க்கத்தான் அவன் தர்பாருக்கு வந்தான்.



அவன் அறைக்குச் சென்று, அவளிடம் சொல்லிக்கொண்டு வருவதற்கும் அவனால் முடியவில்லை. காதலுக்கும் மானத்துக்கும் நடுவே நின்று அவன் தவித்தான். அங்கு நடந்த கலையில் அவனுடைய மனம் ஈடுபடவில்லை. அதிலும் தில்ருபா ஆடியபோது, "ஐயா! இது என்ன ஆட்டம்! என்னைப் பார்-பார் என்று சொல்லியா அவன் பார்க்க வேண்டும்? ஏன் ஒருவனை வசீகரம் செய்வதற்கு ஆடுகின்றாள்? இவன் பார்த்தால் போதுமா? இறைவன் அல்லவா பார்க்க வேண்டும்? உலகத்தைப் படைத்த ஒருவனை நீ ஆடி வசப்படுத்திக்கொண்டால், உலகமே உன் வசமாகிவிடுமே" என்று எள்ளி நகையாடினான். என் மோகனா இப்படி ஆடுவாளா என்று எண்ணினான். மெய்ம்மறந்தான். அப்போது மேல்கட்டில் தென்றல் மெல்லிசை போல் வீசியது. அந்தத் தென்றலோடு மோகனாவின் கால் சதங்கை ஒலி அவன் காதில் பேசியது. பிரமை பிடித்தவன் போல, நாற்றிசையிலும் பார்த்தான். வானத்தில் தாரகைகள் தோன்றின. ஒவ்வொரு தாரகையும் ஒவ்வொரு மோகனாவாக ஆடியது. அட்டமிச் சந்திரனில் அவன் ஏறினான். அட்டமிகிட்டு ஆடினாள். அவனிடம் மனத்தால் ஒரு வார்த்தை சொன்னாள்.

"இறைவன்தான் நம்மைப் படைத்தான். இறைவன்தான் அன்பையும் ஆக்கினான். அவன் மனம் வைத்தால் நாம் சேருவோம் அல்லது பிரிவோம்" என்று பெருமூச்சால் பேசினாள்.

"அப்படிச் சொல்லாதீர்கள். நான் இருந்து சடைத்தாலும், நரைத்த கொண்டை முடித்தாலும், கூன் விழுந்து கோல் பிடித்து நடந்தாலும் உங்களையேதான் நான் அடைவேன். அது நிச்சயம்" என்றான் அவன்.

"இளமையில் காதல் அல்லவா இன்பம். இளமையே போன பின் நாம் இன்பத்தை எவ்வாறு அடைவது? நீ வாடிய மலராகி விடுவாயே" என்றது அவன் மனம்.

"வதங்கினால் என்ன? வாடினால் என்ன?"

"இறைவன்கூட வாடிய மலரை ஏற்றுக்கொள்வது இல்லை."

"இதயமலர் வதங்கி 'வாடினேன், வாடி வருந்தினேன்' மனத்தால் என்னும் போது இறைவன் ஆடி வருகின்றான். இதைப்போல, நீங்களும் வாடிய மலரைத் தேடி வருவீர்கள்" என்றாள் அவள்.

"எப்போது? இளமை போய் எழில் மறைந்த பின்னரா?"

"நான் முதுமையானால் என்ன? அப்போதுதானே எனக்குத் துணை தேவை. அப்பொழுது நீங்கள் என் கைகளைப் பற்றி எனக்கு வழி காட்டுவீர்கள் அல்லவா?" என்றாள் மோகனா.

"அன்பே, இப்படியெல்லாம் சொல்லாதே. ஆறு மாதம், ஆறு விநாடியில் சென்றுவிடும்."

"காதல் கைகூடினால், காலம் கணத்தில் மறையும். காதலர்களுக்குள் பிரிவு, கணத்தை யுகங்களாகக் காட்டுமே!"

"அல்ல, பொறுத்திரு. உன்னையே எண்ணிக்கொண்டிருப்பேன். நீ இந்தியாவில் எங்கு வந்து இறங்கினாலும் சரி. உன்னைக் காண உடனே ஓடி வருவேன்."

"மாட்டீர்கள். உங்கள் காம்போதி விடமாட்டான். என் எண்ணமே உங்களுக்கு வராது. இப்படித்தான் சொல்லிச் சென்றான் துஷ்யந்தன். பின்னர் மறந்தே போனான்."

"அவன் மன்னன், நான் மனிதன்."

"இப்படிச் சொன்னவர்கள் எத்தனையோ பேர்கள். மறந்தவர்களும் அவர்கள்தாம். நான் என்ன ஆண்பிள்ளையா, எங்கும் சென்று வர? ஒரு வண்டியில் ஏறி இறங்கியதற்கே நான் பட்ட பாடு எனக்கு அல்லவா தெரியும். கப்பலில் ஆறு மாசம் மகாராஜாவோடு இருந்தவள்தானே என்று நினைப்பீர்கள்!"

"மாட்டேன், இனி ஒரு காலமும் சந்தேகப்படமாட்டேன்."

"நீங்களா நினைக்கமாட்டீர்கள். ராம நீ சமான மெவரு வாசிப்பவர்கள்தானே? அந்த ராமனே சீதையை நெருப்பில் விழு என்று சொன்னாரே."

"அப்படியென்ன மகாராஜா பத்துத் தலை ராவணனா?"

"அவருக்குப் பத்துத் தலை இல்லை. ஆனால் உங்கள் சித்தம் பதினாயிரம் தலை உடையது. வேண்டாம் வீண் சந்தேகம். என்னையும் கூடவே அழைத்துச் செல்லுங்கள்."

"நான் எப்படி உன்னைக் கூப்பிடுவது? வழியில் உன் தாய் மலைபோலப் படுத்திருக்கிறாள்."

"பெற்ற தாயைத் தாண்ட என் கால்கள் நடுங்குகின்றன."

"நான்தான் அவளை எப்படித் தாண்டுவது? பாதத்தில் பணத்தைப் போட்டுக் கும்பிடவா?" என்றான் சண்முகம்.

இதைக் கேட்ட மோகனா அழுதாள்.

"கண்ணே அழாதே! உன் அன்னையின் இதயத்தைக் கனியச் செய்கிறேன். அவர்கள் காலை வேண்டுமானாலும் பிடிக்கிறேன்" என்று ஆத்திரத்தோடு சண்முகத்தின் இதயம் பேசியது.

அப்பொழுது இரவு பன்னிரண்டு மணி. எழுந்தான் சண்முகம். தயங்கி நடந்தான்! அவன் கால்கள் மோகனாவின் அறைப்பக்கம் இழுத்தன. அறை வாசலுக்கு வந்தான். அந்தோ, கதவு சாத்தியிருந்தது. சற்று நேரம் அங்கு நின்றான். கதவைத் தட்ட எண்ணினான். பாழும் மனம் ஒழுக்கம், சமூகம், மானம் எல்லாம் சேர்ந்து அவன் கையை இழுத்துப் பிடித்தன. உம்— அவன் மாத்திரம் அப்போது கதவைத் தட்டியிருந்தால், கதையே வேறு விதமாக மாறியிருக்கும்.

தலை குனிந்தவண்ணம், கோடியில் உள்ள தன் அறைக்குச் சென்றான் அந்த ஆண்மகன். படுக்கையில் போய் விழுந்தான். அவனை அறியாமல் அவன் கண்களிலிருந்து கண்ணீர் பொங்கியது. மார்பில்



தாங்கமாட்டாத வலி உண்டாயிற்று. இவ்வாறு ஒருவர் துடித்துக் கொண்டிருக்க, அதே கப்பலில் இன்னொருவர் இடைக் கவலைகள் தண்டு புரண்டுகொண்டிருந்தார். அது ஸ்ரீமதி வடிவாம்பாள்தான்.

'அதிருஷ்டம் கூடி வரும்போது ஆசை அவள் தாழியை உடைக்கின்றதே! நான் கண்ட கனவு பலிக்கபோகும் தருணத்தில் காதல் இடையூறாக இருக்கின்றதே! அன்றைக்கே கனவு கண்டேன். தொன்னைப் பூ பூத்துப் பொன்னாகக் காய்த்ததே! என் மகள் வீட்டு வாசலில் யானை நிற்கும்னு கனவு கண்டேன். மதன்பூர் வாசலிலே யானை, குதிரையெல்லாம் நிக்குமே. அவள் மகாராணியாவான்னு கனவு கண்டேன். அவள் தலையில் கிரீடம் தெரிந்ததே. மதன்பூர் மகுடந்தானே அது நாளைக்கு என் மகள் மகாராணியாகிவிட்டால், அந்த மலையாள ஜோஸ்யனுக்கு அஞ்சு ரூபா பணம் அனுப்பிடணும். மலையாள ஜோஸ்யர் சொன்ன ஜோஸ்யமெல்லாம் அப்படியே பலிக்கப் போகுது. அந்தச் சண்டாளப்பயல் கொழும்பிலே இறங்கினா என்ன, கடலில் விழுந்தால்தான் என்ன?

'தாயே, எல்லை அம்மா, என் மகளை நீதான் காப்பாத்தணும். உன் கோவிலுக்குப் பொன்னோடு போறேன். 'திருவாரூர்ப் பொண்ணு மதன்பூருக்குப் போனாள், அங்கு மகாராணியாகிவிட்டா' அப்படின்னு சொன்னா, உன் ஊருக்குக் கௌரவம், உனக்குக் கௌரவம்' என்று சாமியை தாஜா செய்துகொண்டே படுத்திருந்தாள் வடிவாம்பாள். 'யாராவது நம்ம ஊர்க்காரர் காசி யாத்திரை வந்தால் வழியிலே மதன்பூர் வருவாங்க. 'என்ன வடிவாம்பா! சௌக்கியமா?'ன்னு கேட்பாங்க. நம்ப மனுஷானுல்லே, நானும் பேட்டி குடுத்து வாங்கோன்னுதான் சொல்வேன். உக்கார வைப்பேன். ஒருவேளை சோறு போட்டு அனுப்புவேன். அவள் தங்க சிம்மாசனத்தில் அவசியம் ஏறித்தான் ஆகணும். அதை யாரும் தடுக்க விடமாட்டேன். கப்பலிலே ஏறும்போதே பிரமாண் பண்ணிக்கிட்டுத்தானே ஏறினேன். இந்தப் பொண்ணு சாப்பிடக்கூட மாட்டேன்னு பட்டினியா கிடக்குதே. பத்துத் தடவை சாப்பிடு, சாப்பிடுன்னு சொன்னேன். காது கேட்காத மாதிரி கிடக்குறாளே. நாளைக்கு ராணியாகப் போகிறவள் பட்டினி கிடந்தா உடம்பு எதுக்கு ஆகும்' என்று எண்ணிக்கொண்டே "ஏ, மோகனா! எழுந்திருச்சு ஒரு வாய் சாப்பிடு அம்மா, மணி இரண்டாகப் போகுது" என்றாள் வடிவாம்பாள். மோகனாவிடமிருந்து பதில் வரவில்லை. "என்ன கண்ணு, நான் சொல்றேன்!" என்று கண்ணை விழித்தாள். கட்டிலைப் பார்த்தாள். அவள் வயிறு பகீர் என்றது. கட்டிலில் மோகனாவைக் காணோம். இரவில் இதுவரை ஒரு நிமிஷங்கூட அவள் தன் மகளைப் பிரிந்து இருந்ததே இல்லை. பெற்றெடுத்தது முதல், பக்கத்திலே போட்டுப் பால் கொடுத்து, பின் தொட்டிலுக்குப் பக்கத்தில் படுத்துத் தூங்கி, கட்டிலில் கண் வளரச்செய்து, தரையில் படுத்த தாய் அவள்

மகள் தூங்கிய பிறகுதான் தூங்குவாள். மகள் விழிக்கும் முன் விழிப்பாள். மகள் தூங்கும்போது, அவள் அழகைப் பார்ப்பாள். அவள் நெற்றியில் வியர்க்கும் வியர்வையை தன் முன்றானையால் துடைப்பாள்; விசிறுவாள். அவள் மேலே ஒரு எறும்பு ஊரச் சகிக்காதவள். அவள் கையால் போர்வையைப் போர்த்துவாள், தூக்கம் கலையாமல் ஒழுங்குபடுத்துவாள். தன் மகள் நன்றாகத் தூங்கி விட்டாள் என்பதை அறிந்த பிறகுதான் தூங்குவாள்.

இன்று மகளைக் காணோம் என்றவுடனே இடி விழுந்ததுபோல் துடித்தாள். கோபத்தில் என்ன செய்வாளோ, ஆத்திரத்தில் எதைச் செய்துவிடுவாளோ, தாம்பாளத்தைத் தூக்கி எறிந்தது போல் தானே கடலில் விழுந்துவிட்டாள்? " ஐயோ ! மோகனா, மோகனா, மோகனா!" என்று அலறினாள். ஒரு வேளை, சண்முகத்தின் அறைக்குப் போயிருப்பாளோ என்ற எண்ணம் வந்தவுடனே அலறியவள் அடங்கினாள். அவமானம் என அஞ்சினாள். அழுகையும் ஆத்திரமுமாக அங்குமிங்கும் தேடினாள்.

ஆனால் மோகனா சண்முகத்தின் அறைக்குச் செல்லவே இல்லை. கப்பலின் மறு கோடியில் அவன் அறைக்கு மேல்தட்டிலே, அவள் தன் நினைவு இன்றி மெதுவாகச் சென்றுகொண்டிருந்தாள்.

நள்ளிரவு கடல் காற்று சில்லென்று அடித்தது. பூதங்கள் வாயைப் பிளந்துகொண்டு கப்பலை விழுங்க வருவது போல, கருநிற அலைகள் கப்பலை மோதின. எங்கு பார்த்தாலும் கருங்கடல். வானத்தின் இருட்டைப் போல, வாரியும் இருண்டு கிடந்தது. மோகனா கப்பலின் மேல்தட்டிலுள்ள கம்பியைப் பிடித்துக்கொண்டு கடலைப் பார்த்த வண்ணம் நின்றாள். 'கடகட'வென்று சிரித்தாள்.

" கடலே, உனக்கு என்ன சோகம்? நீ ஏன் இப்படி அலறுகிறாய்? என்னைப் போல நீயும் எட்டாத காதலனுக்கு ஆசைப்பட்டாயா?" என்றாள்.

அப்போது அவள் கன்னத்தில் வடிந்த ஒரு சொட்டுக் கண்ணீர் எப்படியோ அவள் கடைவாயில் புகுந்தது. உப்புக் கரித்தது. அவள் 'மூக மூ'சென்று அழுதாள்.

" கடலே ! நீ யாருடைய கண்ணீர்? என் போன்ற இளம் பெண்கள் இதயம் புழுங்கி வடித்த கண்ணீரா? கடலே உன் காதலன் யார்? அவன் வானத்தில் இருக்கிறானா? அவனை அடைய வேண்டுமென்று நீ கரையில் ஏறி வரும்போது வேலால் தடுக்கும் திருச்செந்தூர் முருகனைப்போல, என் அம்மாவும் இருக்கிறாள். உனக்கும் தெய்வம் தான் சத்துரு ! எனக்கும் என் தாய் சத்துரு ! காதலிப்பது குற்றமா? காதல் செய்தால் கஷ்டப்பட்டுக் கொண்டேதான் இருக்க வேண்டுமா?

' நாளை மாலை கொழும்பில் இறங்கப்போகிறார். நான் ஒருத்தியிருக்கிறேன் என்பதைக்கூட மறந்துவிட்டார். ஓடி வந்து



என்னிடம் ஒரு வார்த்தை சொல்ல, அவருக்குத் தாம் வலிக்குமா? 'மோகனா' என்று கூப்பிட்டால் வாய் முத்து உதிருமா? அந்நியப் பெண் என்றுதானே கருதுகிறார். அதனால்தானே இவ்வளவு பாராமுகம்?'

மனத்தில் வேதனை வந்தது: 'வீம்பினால் அவரைச் சொல்லிக் குற்றமில்லை. அவர் என்னை அடியோடு வெறுத்துவிட்டார். எனக்காகவேதான் திருவாரூருக்கு வந்தார். எனக்காகவேதான் கத்திக் குத்துப்பட்டார். எனக்காகவேதான் பேனாவை எடுத்து, அதிலே மையைத் தோய்த்து, ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டு, இதயத்தில் குத்துப்பட்டார். மோகனாவோடு பிரயாணம் செய்கிறோம், ஆசைக் கிளியுடன் கொஞ்சிப் பேசி அன்புப் படகில் செல்லுவோம் என்றுதான் எண்ணியிருப்பார். அவரை அம்மா வரவேற்கவில்லை. என்மேல் ஆசைப்பட்டதுக்கு, அவர் வித்தையைக் கூட அம்மா மதிக்கவில்லை. அவரைப் பார்த்து 'வா' என்றுகூடக் கூப்பிடவில்லை. சிரித்துப் பேசவில்லை. என்னையும் பேசவிடவில்லை. எத்தனை நாளைக்குத்தான் அவர் பொறுப்பார். அவர் ஆண் பிள்ளை. சீ ! இனி மேல் இவள்மேல் ஆசைப்படுவது அறிவீனம் என்று எண்ணி வெறுத்துவிட்டார்.'

சற்று நேரம் திகைத்து நின்றாள். பயத்தால் அவள் உடம்பு நடுங்கியது. அவள் நெஞ்சில் தோன்றிய ஓர் எண்ணம், அவளை ஒரு உலுக்கு உலுக்கியது. 'எத்தனையோ துறவிகள் இருக்கிறார்களே, அவர்களுள் காதல் நிறைவேறாமல் காஷாயம் வாங்கியவர்கள்தாமே அதிகம். ஆத்திரத்தில் நாதஸ்வரத்தைத் தூக்கி எறிந்துவிட்டு, இவர் காஷாயம் வாங்க மாட்டார் என்பது என்ன நிச்சயம்? மோகனா கிடைக்கவில்லை, இன்னொருத்தி முகத்தையும் பார்க்க மாட்டேன் என்று மனம் வெறுத்து ஆண்டியாகப் போய்விட்டால்? ஐயோ ! என்னால் அந்தக் காட்சியைப் பார்க்கவே முடியாது' என்று எண்ணினாள். 'குபு குபு'வென்று கண்ணீர் வந்தது. 'நல்ல பெண் பிறந்தேன். எனக்குத்தான் சுகமில்லையென்றால் அவருக்காவது சுகமா? சீ ! இனி ஏன் நான் வாழவேண்டும்? என் பிறவியே அவலம். வேறு பெண்ணாக இருந்தால் தாத்தா இருப்பார், அப்பா இருப்பார், உறவினர்கள் இருப்பார்கள். அம்மாவுக்குப் புத்தி சொல்வார்கள். தாசியாகப் பிறந்தால், தாசியாகத்தானா வாழ வேண்டும்? அவள் குடும்பப் பெண்ணாக வாழவே முடியாதா? கடவுளே ஏன் என்னைப் படைத்தாய்? தெய்வமே, இப்படி நான் அழுது புலம்புவது உனக்குத் தெரியவில்லையா? ஆண்டவனே, என்னைப் பார், ஆரோ அபயம்' என இரு கைகளையும் உயரத் தூக்கி அலறினாள். வானை நோக்கினாள். அப்பொழுது பளீரென்று ஒரு நட்சத்திரம் அவளைப் பார்த்துச் சிரித்தது.

'ஏ! பேதைப் பெண்ணே! ஏன் துடிக்கிறாய்? அதுதான் உலகம். நானும் ஜொலிக்கிறேன், நீயும் ஜொலிக்கிறாய். எனக்கும் பிடிப்பு இல்லை, உனக்கும் பிடிப்பில்லை. அந்தரத்தில் நின்று ஆடுகிறேன். நீயும் அந்தரத்தில்தான் நிற்கிறாய். என்னைப் பார்த்து உலக மக்கள், நட்சத்திரம் நட்சத்திரம் என்று புகழுகிறார்கள். உன்னையுந்தான் புகழுகிறார்கள். ஆனால் நானும் நீயும் ஒரு சந்திரனைக் கண்டால் மயங்கி மங்கிவிடுகிறோம். நானும் தனிச் சுடர், நீயும் தனிச் சுடர். இருவருந்தான் துடிக்கிறோம். இதோ, என் துடிப்பு தீரப்போகிறது. ஆடி ஓடி அமர்ந்து கீழே விழுவதுதான் நம் பிறவிப் பயன்" என்று சொல்லிக்கொண்டே 'சரசர'வென்று அவள் அருகில் பாய்ந்து வந்தாள். அந்த விண்மீன் வரவரப் பெரிதானாள். அருகில் கடலை நெருங்கியவுடன் இன்னும் வேகமாக வர ஆரம்பித்தாள். "என்னைப் பார். என் வழியைப் பார்' என்று மின்னி வேகமாகச் சென்று விழுந்தாள் ஆழ்கடலில்.

'எங்கே அந்த விண்மீன்? அது எங்கே மறைந்தது? மாலையில் பூத்த முல்லை, காலையில் சாம்பி வீழ்வதுபோல, விண்மீன் விழுந்ததே. இதுதான் வாழ்வா?' கடலை நோக்கினாள் மோகனா. அடுத்த கம்பியில் காலை வைத்து ஏறினாள். குனிந்தாள் அவள் தலைமயிர் கீழே தொங்கியது. "வா, வா! உன் போன்றவர்களுக்கு நான்தான் புகலிடம், வா!" விண்மீன் இப்பொழுது தண்ணீரில் விழுந்துவிட்டது. இனிமேல் அது துடிக்காது. அதற்குச் சாந்தி கிடைத்துவிட்டது. நீயும் வா" என்று அழைப்பது போல் ஒரு அலை ஓங்கியடித்து அவளை இழுக்க வந்தது. அந்த அலை வந்த வேகத்தில் அவள் கைப்பிடி தளர்ந்தது. கால் வழுக்கியது. சாய்ந்தாள். அவளுக்குப் பின்னே ஓடி வந்த ஒரு உருவம் அவளுடைய இடுப்பைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டது. "மகளே! நான் பெற்ற மகளே, ஐயோ! வேண்டாம் கண்ணு, வேண்டாம். உனக்கு யாரு இஷ்டமோ, அவனையே கட்டிக்க. அந்தச் சிக்கல் தம்பியோடேயே நீ நல்லா இரு. எனக்கு அதுவே போதும். ஆத்தா, எனக்கு நீதான் செல்வம். வா கண்ணு! என் வயித்திலே நெருப்பை வச்சுட இருந்தியே" என்று அலறியது பெற்றவள் நெஞ்சம். துவண்ட பூங்கொடி போலத் தாயின் மேல் சாய்ந்தாள் மோகனா.

"ஆத்தா, நீ நல்லா இருந்தா போதுண்டீ. நீ ஆட வேண்டாம், பாட வேண்டாம். 'அம்மா' என்று ஒரு வார்த்தை கூப்பிட்டா போதும்டீ. இந்தக் கடல் சாட்சியா சொல்றேன், இந்தக் கப்பல் சாட்சியா சொல்றேன், தியாகராஜாவுக்குப் பொதுவா சொல்றேன். வா கண்ணு. அந்தச் சிக்கலாரையே கட்டிக்க" என்று சொல்லிக் கொண்டே மெல்ல மகளை நடத்தி வந்தாள் வடிவாம்பாள். சிறிது வெளிச்சத்துக்கு வந்தவுடன் மோகனாவின் முகத்தைப் பார்த்தாள். கண்ணீர் பொங்கி வடிவதைக் கண்டாள். "என் கண்ணு, என் கண்ணு,



என் கண்ணு" என்று சொல்லிக்கொண்டே மாறி மாறி மகளை முத்தமிட்டாள். அந்த உப்புக் கண்ணீர் அன்னைக்கு அமுதத்துக்கும் மேலாக இருந்தது. "ஆத்தா, கடலிலே விழுந்துடப் பாத்தியே. என்னைத் தவிக்க விட்டுட்டுப் போக உனக்கு எப்படி மனசு வந்தது அம்மா? இந்தப் பாவி குறுக்கே நிற்கிறாளேன்னு பாத்தியா?" என்று அழுதாள் அன்னை.

"இல்லே அம்மா, நான் அப்படியெல்லாம் தப்பாகச் செய்ய மாட்டேனம்மா" என்று கூறி மகளும் அழத் தொடங்கினாள்.

"போடி கண்ணு! எனக்கல்ல தெரியும் உன் மனசைப் புண்ணாக் கிட்டேன். உன் வயிறு நோகச் செய்துட்டேன். என்ன பாடுபட்டிருப்பியோ, அதை நினைச்சாலே என் வயிறு துடிக்குது வா கண்ணு. எந்தச் சாமி புண்ணியமோ நின்னு பாத்துக்கிட்டே இருந்தேன். நல்ல வேளைக்கு நீ குனிஞ்சு கடலைப் பார்த்ததும், வந்து கட்டிப் புடிச்சிக் கிட்டேன். இல்லாட்டி — இல்லாட்டி — அடி அம்மா — மோகனா —" என்று குலுங்கக் குலுங்கக் கதறினாள் வடிவாம்பாள்.

கீழிருந்து யாரோ படிமேல் ஏறி வருவது தெரிந்தது. வரதனாக இருக்குமோ என்று எண்ணினாள். அது வரதன் அல்ல. வந்தவன் சண்முகசுந்தரம். "மோகனா, மோகனா" என்று கூப்பிட்டுக்கொண்டே வந்தான். வடிவாம்பாள் அன்றுதான் அவனைத் தன் முழுக் கண்களால் பார்த்தாள். "உன் அறையில் போய்ப் பார்த்தேன். கதவு திறந்து கிடந்தது. தேடினேன். இங்கு ஏன் வந்தாய்?" என்று கேட்டான் சண்முகம்.

வடிவாம்பாள் ஏதோ பதில் சொல்ல எண்ணினாள். சண்முகத்தின் முன் நின்று பேச நா வரவில்லை. பெண்மையின் பெருமை தலை தூக்கியது. நாணம் ஏற்பட்டது. தன் மகளின் கையைப் பிடித்துக் கொண்டே தரையைப் பார்த்து நடந்தாள். அந்த அத்தை தொடர்ந்தான், சண்முகம்.

## தொண்ணூற்று நான்காம் அத்தியாயம்

# என்னமெலாம் வண்ண மலர்



வெள்ளைப் பசு காலை நேரத்தில் தோட்டத்திலே துள்ளித் திரிந்தது. ஆனால் மாலை மூன்று மணிக்கு அதைப் பார்த்தால் படுத்திருக்கிறது. அரைக்கண் மூடியிருக்கிறது. வாலை ஆட்டவில்லை. மேலே உட்கார்ந்த காக்கையைக்கூட அது பொருட்படுத்த வில்லை. ஆனால் அதன் வாய்மாத்திரம் தாளம் தவறாமல் அசை போட்டுக்கொண்

டிருந்தது. இதைத்தான் அலை போடுதல் என்பது. இது என்ன! தூக்கமா, விழிப்பா? அல்ல, இது இரண்டுக்கும் மேற்பட்ட ஒன்று! அந்தப் பசு, தான் உண்டதை அனுபவிக்கிறது!

உலகில், உண்டதை மட்டுமல்ல, கண்டதைக் கேட்டதை எல்லாமேகூட மனிதன் அனுபவிக்கலாம். அதற்கு மனத்தின் படம் பிடிக்கும் சக்தி மட்டும் கெட்டுவிடாமல் இருக்க வேண்டும். அந்தச் சக்திதான் இப்போது மோகனா, சண்முகம், வடிவாம்பாள், வரதன், முத்துக்குமரு ஆகிய ஐவரையும் ஐவகை எண்ணத்தில், அழ வைத்திருந்தது. அவர்களிடையே மௌனம் குடிகொண்டிருந்தது. பேச்சில்லை. ஆம். அந்த ஐவரும் ஒவ்வொரு உணர்ச்சியில் ஆழ்ந்திருந்தார்கள். ஆனால் இந்த நினைவுகளும் ஆகாயம் என்னும் அரிய மேற்கட்டியில் தொங்கும் வானவில் தோரணம் போல் அன்பு என்னும் ஒரே கொடியில் பூத்த பல வண்ண மலர்கள்தாம்.

இவற்றுள் ஒன்று வெண் தாமரை. சண்முகசுந்தரத்தின் எண்ண மலர் இது. அவன் இதயமாகிய வெண் தாமரையில் இந்தக் கலையரசி மோகனா வீற்றிருப்பவள். சற்று நேரம் முன் அவள் தன்னை விட்டு விட்டுக் கடலில் விழ இருந்தாளே, தன் இதய பீடத்தைக் காலியாக்கி விட இருந்தாளே! நல்ல வேளை, அவள் பிழைத்தாள், நானும் பிழைத்தேன், என்று எண்ணி மகிழ்ந்தது அந்த வெண் தாமரை. அதற்கும் வாய்ச்சொல் வரவில்லை.

அடுத்தது செம்மலர். பெற்றவள் நெஞ்சம் அது. அவள் மனம் புண்ணாகியிருந்தது. 'மகளைக் கொடுமைப்படுத்தினோம். வயதை மதிக்கவில்லை. பருவ மலர் பாடிவரும் வண்டுக்குக் காத்திருப்பதைப் பார்க்கவில்லை. ஆசைப்பட்டுத் துயர் செய்தோம். அவள் அழிவுக்கே வழி வகுத்தோம். நான் தாயா அல்லது பேயா? என் மகள் இந்நேரம் கடலில் குதித்திருந்தால்?' என்ற கழிவிரக்கத்தில் வருந்தி வருந்திப் பொங்கிப் புண்பட்டிருந்தது அந்தச் செவ்வரளி.

அடுத்தது நட்டுவனார். அவர் மனம் பசுமை! இலை போன்றது. இறைவா, இந்நேரம் என் வித்தையெல்லாம் கடலில் விழ இருந்ததே! நான் பத்து வருஷம் பாடுபட்டுக் கண்ட கலைகளை எல்லாம் அந்தக் கருவூலத்தில்தானே வைத்துப் பூட்டினேன்! சிஷ்யனுக்குத்தான் குருவிடம் பக்தி என்று சொல்லுவார்கள். குருவுக்குச் சீடனிடம் உள்ள பரிவை உலகம் அறியுமா? அவளை முன்னே விட்டு, நான் இலை போல் பின்னே நின்றாலும் என் வித்தையின் உருவம் அவள்தானே! இதை எல்லாம் இழந்து கண்ணீர்விட இருந்தேன், நீ காப்பாற்றினாய். "கற்றைச் சடையுடையானே போற்றி, கங்கை தரித்தவனே போற்றி, எற்றைக்கும் எம்மைவிட்டு ஏகாதிருப்பவனே போற்றி, நீதான் அபயம்" என்று சிலிர்த்துக் காற்றில் அசையும் தளிர் போல ஆடியது அவர் உள்ளம்.



அடுத்தது வரதன். அவன் மஞ்சள் மலர். கதிரவன் திரும்பும் பக்கமெல்லாம் திரும்பும் சூரியகாந்தியைப் போல அவன் பெரியவன் அல்ல. ஆனால் அதே இனத்தில் வந்த நெருஞ்சிப்பூ. அவள் மோகனா எப்படித் திரும்பினாலும் சரி, அவள் கோபித்தாலும் சரி, அழுதாலும் சரி, சிரித்தாலும் சரி, அடம் பிடித்தாலும் சரி, அவள் செல்லும் பக்கந்தான் அவன் மனமும் செல்லும். காரணமில்லாமலே காணிக்கை செலுத்தும் மூடனது கடவுள் நம்பிக்கை போல ஆனது அவன் மனமலர். அதிலும் களிப்பு மணம் வீசியது. கண்ணீர்த் தேன் வழிந்தது. அன்னை பிழைத்தாள். பிழைத்தது அருள். அவளால் நானும் பிழைத்தேன் என்று அன்று ஆஞ்சநேயன் ஆடியது போல அவன் உள்ளம் ஆனந்தத்தில் தாண்டவம் போட்டது.

அடுத்தவள் மோகனா. அது நீலக்குமுதம். காலத்தைக் கண்டு மலருவது. கதிரவனே வந்தாலும் காதல் கொள்ளாது. உணர்ச்சிக் கடலில் தோன்றி உலகுக்கு உல்லாசத்தை ஊட்டி அதனால் ஆரோகண அவரோகணத்துக்கு ஆளாகும் சங்கீதச்சந்திரன், சண்முகசுந்தரம் ஒருவனுக்குத்தான் அதன் முகமும் அகமும் மலரும். அம்புலியைக் கண்டு மலரும் ஆம்பல் போல் அசைந்தாடியது அவள் மனம். காலை வேளையில் கதிரவனைக் கண்டு மலர்ந்து, முகை நெகிழ்ந்து, தலையாட்டிச் சிரித்துக் கூத்தாடிப் பத்துப் பேர் பார்க்கப் பட்டப் பகலில் வெட்கமில்லாமல் காதல் விளையாட்டில் ஈடுபடும் தாமரைப் பூவல்ல அவள். அவள் அல்லியங்கோதை. அவள் காதல் ஊருக்குத் தெரியாது. வண்டு பாடி மேளம் ஊதாது. கோவில் மணி அடித்துக் கொட்டி முழக்காது. பொன்னைப் பூட்டி வைத்துக் காப்பது போல், தன் காதலைப் பிறர் அறியாமல் வைத்திருந்து இரவில் ஊரடங்கிய நேரத்தில் அவனுடன் தனியே கலந்து ஏகாந்தத்தில் விளையாடும் அல்லியின் காதல் போன்றது மோகனாவின் காதல்.

எதிரில் இருக்கும் காதலனைப் பார்த்தவண்ணம் அவள் மயக்கத்தில் இருந்தாள். 'நான் ஏன் கடலில் விழுகிறேன்? என் கண்ணாகிய கருங்கடலில் சண்முகசுந்தரம் விழுந்திருக்கையில் நான் உப்புக் கடலில் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்ளுவேனா? காதலும் பக்தியும் என்றும் நிறைவேறக்கூடியன. காதலில் வேதனை வரும். பக்திக்குச் சோதனை வரும். இரண்டையும் கடந்தவர்கள்தாம் சித்தி முத்தியடைவார்கள். சித்தி என்பது என்ன? நினைத்தது நிறைவேறுவதுதானே சித்தி? அதில் கஷ்டம் வந்து மலைத்தால் அது தவறுதல். நான் காதலில் விழுந்தவள். ஆதலால் கடலில் விழ மாட்டேன். பிடித்துத் தள்ளினாலும் நீந்திக் கரைக்கு வந்துவிடுவேன். ஆனால் அம்மாவுக்கு வந்த இந்தத் தப்பபிப்பிராயமும் ஒரு நல்லதைத் தான் செய்தது. இல்லாவிட்டால் என் கண்ணீரால் ஆகாததைக் கடல் நீர் செய்துவிட்டதே! அம்மாவின் மனத்தை மாற்றிவிட்டதே!

'நல்ல வேளைக்கு நட்சத்திரம் பெயர்ந்தது—ஏ, தாரகையே, நீதான் எனக்குத் தாரகமானாய். என் அன்னை மனத்தில் நீதான் ஒளியை உண்டாக்கினாய். என் காதலரையும் நீதான் என் அருகில் கொண்டுவந்து சேர்த்தாய். உன்னைப் பார்க்கத்தானே நான் கடலைப் பார்த்தேன். பாவம்! நீ கடைசியாக விழும்பொழுதுகூட எனக்கு நல்லது செய்துவிட்டு மடிந்தாய். இல்லாவிட்டால் நான் எத்தனை தான் என் அம்மா காலில் விழுந்தாலும் அவள் மனம் இரங்குமா? அவள் மனப்பூட்டைத் தங்கச்சாவி போட்டுத் திறக்கப் பார்த்தார் அவர். நடக்கவில்லை. நீயல்லவா தாயன்பைக் கொண்டு திறந்தாய். விண்மீனே! உனக்கு வணக்கம். அம்மா, உனக்கு நான் எப்படி வணக்கம் செலுத்துவேன்? நீதான் என் தெய்வம். அத்தனை சண்டையையும் ஒரு நொடியில் அன்பால் வென்றுவிட்டாயே! அம்மா, ஏன் இப்படி நாணி நிற்கிறாய்? அடாடா! நாலு நிமிஷத்தில் அம்மாளுக்கு நாலு வயது அதிகமாகிவிட்டதே. நல்ல மாப்பிள்ளையிடம் பெண்ணை ஒப்புவித்துவிட்டோம் என்று பூரித்து நிற்கிறாளா? இப்பொழுதுதான் அம்மாவுக்கு அவரைத் தெரிகிறது! மேகம் விலகியதும் சூரியன் தெரிவது போல, ஆசை விலகிய பின்தான் அவர் அழகு தெரிகிறது! திரை கடலே, உன்னால்தான் திரை விலகியது. அன்பரே! ஏன் சும்மா இருக்கிறீர்? சரளி வரிசையை ஆரம்பிக்கலாமே. ஏன், பேசினால் மறுபடியும் ஏதாவது தகராறு வந்துவிடும் என்று பயப்படுகிறீர்களா? உம்...சும்மா பேசுங்கள். அன்று ரயிலில் எந்த நேரத்தில் அத்தை என்று அழைத்தீர்களோ, இதோ நிஜமாகவே அம்மா அத்தை ஆகிவிட்டாள்....' என்று நினைத்தாள், மோகனா.

அவள் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. ஆயினும் அவளும் பேச்சை மறந்திருந்தாள். தாய் துக்கத்தால் பேசவில்லை. காதலன் வெட்கத்தால் பேசவில்லை. நட்டுவனார் அந்நியர், அதனால் பேசவில்லை. ஆனால் வரதன் ஒருவனே வாய் திறந்து பேசினான்—

"ஆமா, சிரிச்சுக்க மோகனா, செய்கிறதையும் செய்துட்டுச் சிரிச்சுக்க!" என்று கண்ணீர் ததும்பக் கேட்டான் வரதன்.

மோகனா தலை நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். மறுபடியும் வெட்கத்தால் தலை குனிந்தாள். "ஏன் கடலில் விழப்போனாய்" என்று எல்லோரும் கூடி ஒரு பெண்ணைக் கேட்டதால்? அவள் மனம் படாத பாடு பட்டது. தலையைக் குனிந்தபடி "நான் என்ன செய்தேன் வரதா?" என்றாள்.

"பின்னே என்ன? கடலிலே இருட்டிலே நீ மட்டும் தனியா குதிக்கலாமா? வரதா! நான் கடலிலே குதிக்கப் போறேன்னு சொல்லு. முதல்லே நான் குதிச்சு, தங்கச்சி ஆழம் அதிகமில்லைன்னு சொல்றேன். அப்புறம் நீ குதி. நான் குதிக்க வேணாம் என்று சொல்லவில்லை. நீயா குதிச்சுட்டா நான் எங்கே போகிறது? நல்ல வேலை செஞ்சே!" என்று கோபித்தான். பிறகு "ஆண்டவனே! இந்தச் சம்பை தாள



மோகரா தட்ட வந்துவிட்டாலும் பாதகமில்லே. இந்தக் காதல் மட்டும் நமக்கு இந்தச் சன்மத்திலே வேண்டாம்" என்று தன் வருத்தத்தைப் பிறர் அறியாமல் இருக்கக் கேலியாகப் பேசினான் வரதன்.

சண்முகத்திற்கும் பேசச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. "ஏன் மத்தளக்காரரே, சம்பைதாள மோகரா அவ்வளவு கஷ்டமா?" என்றான் சண்முகம்.

"அதிலே கணக்கு அதிகம்; காதுக்கு நல்ல இருக்காது. காதலிலே கட்டுப்பாடு அதிகம்; வாழ்வுக்கு நல்லா இருக்காது; கை வழுக்கினால் ரெண்டிலேயும் காலம் நிக்காது" என்று கூறவே சண்முகம் முதலிய எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தனர்.

"ஆமா, மோகனா, நீயேன் கடலிலே விழப்போனே?" என்று வருத்தத்துடன் கேட்டான் சண்முகம்.

மோகனா சும்மா இருந்தாள்.

"சும்மா இருந்தா என்ன அர்த்தம்? எதுக்காக இந்த மாதிரி எல்லாம் தோணுது?" என்று சிறிது கோபத்துடன் கேட்டான் சண்முகம்.

"ஏன் அம்மா அதெல்லாம் கேட்கிறாங்க?" என்றாள் மோகனா தன் தாயிடம்.

"எனக்கென்ன தெரியும்?" என்று சிணுங்கினாள் தாய்.

தன்னிடம் நேரே பதில் சொல்லாமல் அவள் தன் தாயிடம் பேசுவதையும், சென்ற நிமிஷம் வரையில் இடையூறு செய்த அன்னை இப்போது தன் மகள் கட்சியில் மாறிவிட்டதையும் கண்டு ரசித்தான் சண்முகம்.

"நான் விழத்தான் போனேன். அம்மா வந்து தடுத்துட்டாங்க. நாளைக்கு அம்மாவையும் தள்ளிட்டு நானும் விழுந்துடப் போறேன்னு சொல்லுங்கம்மா" என்றாள் மோகனா.

"பாருடா அதிலேயும் ஒரவஞ்சனையை!" என்றான் சண்முகம்.

"வஞ்சனையில்லே நாயனக்காரரே! நீங்கள்தான் தொழும்பிலே இறங்கிடப் போறீங்களே!" என்றான் வரதன்.

"நீ சும்மா இரு வரதா! நாமெல்லாம் ஆடத்தானே ஐரோப்பாவிற்குப் போகிறோம். அவுங்க மாதிரி நாம் இறங்கிடுவமா?" என்று சொல்லம்பு பூட்டினாள் மோகனா.

"வேணும் வேணும், எனக்கு நல்லா வேணும். தவில் தனி ஆவர்த்தனம் விட்டவனல்ல? அந்தப் பாவம் நமக்கு இப்ப இரண்டு பக்கத்திலும் இடி" என்றான் சண்முகம்.

"அதெல்லாமில்லை வரதா, என்னாலே ஒருத்தருக்கும் கஷ்டம் வேண்டாம். அவுங்க சவுகரியமா நாளையே இறங்கிக்கட்டும்" என்று கூறி அவனைப் பார்த்தாள் மோகனா. அந்தப் பார்வை சொல்லம்பை விடச் சூடாக இருந்தது.

"உன்னை இங்கு விட்டுவிட்டா நான் இறங்குவேன்?"

"என்னைப்பத்திக் கவலைப்பட அவுங்க யாரு? என்னிடம் கேட்டாங்களா? சொன்னாங்களா? பெத்தவங்களா பாழை போகுது?" என்றாள் மோகனா.

"நான் உன்னைத் தேடிக்கிட்டு மேல்தட்டுக்குப் போய்க்கூடப் பார்த்துட்டு வந்தேன்—"

"ஆமாம், எல்லாம் பொய்!" என்று நேருக்கு நேர் சீறினாள் பெண். திடுக்கிட்டான் ஆண் மகன். "என்ன, நானா பொய் சொல்கிறேன்?"

"அங்கு போய் ஏன் தேடவேண்டும்? இங்கு வந்து தேடுவது."

"இங்குந்தான் வந்தேன். கதவு சாத்தியிருந்தது."

"கதவைத் தட்டுவது."

"எதற்கு, காலையில் பார்ப்போம் என்று போய்விட்டேன்."

"அப்படிப் போனவர்கள் இப்போது மட்டும் ஏன் வந்தீர்கள்? உங்களுக்கு உங்கள் கௌரவம் பெரிது. உங்கள் பெயர் பெரிது. நான் என்ன, கேவலம், ஆட்டக்காரிதானே! நீங்கள் இறங்குவதாக நிச்சயம் செய்தீர்களே என்னிடம் சொன்னீர்களா? நான் கடலில் விழுந்தால் என்ன, ஆகாயத்தில் பறந்தால் என்ன? உங்களுக்கு அதைப்பற்றி என்ன அக்கறை?" என்று மடமடவென்று அடுக்கினாள். ஆனால் பொலபொலவென்று மலரிலிருந்து பனி கொட்டுவது போல் அவள் விழி மலர் கண்ணீரைக் கொட்டியது.

அப்போது வரதன், "நட்டுவனாரே, உங்க பெட்டியிலே பூசைக்குக் கல்கண்டு இருக்குமே!" என்றான்.

"ஏன், இருக்குது! அது இல்லாமல் நான் எங்கும் புறப்பட மாட்டேனே" என்றார் அந்த அப்பாவி.

"அதிலே ரெண்டு கொண்டாங்களேன்! தங்கச்சி வாயிலே போடுவம்."

"வரதா! போதும் உன் கேலி" என்றாள் மோகனா.

"சரி. உனக்கு வேண்டாம்னா நாங்களாவது போட்டுக்கறோம். இனி வரவங்களுக்கு எல்லாம் சக்கரை வழங்க வேண்டியதுதானே!" என்றான் வரதன்.

இவ்வாறு சிரிப்பும் குதூகலமுமாக இருப்பதைப் பார்த்துக் கொண்டே மகிழ்ச்சிக் கடலில் நீந்தினாள் வடிவாம்பாள்.

அவள் நா தழ தழத்தது. ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. அத்தனை உள்ளங்களுக்கும் அந்தப் பொல்லாத வடிவாம்பாள் நல்லவளாக மாறினாள். தாய்மை எழுந்தது. தூய்மை ஓங்கியது. காதல் வென்றது. இதைப் பார்த்துக் கதிரவனும் எழுந்தான். பலபலவென்று பொழுது விடிந்தது. மேற்கே திரிகோணமலை தெரிந்தது.





## பொய்க்கால் பொன்னா?

"டேய் பக்கிரி, அது என்ன, மலையா?"

"இல்லை அண்ணே, தூரத்திலே அலை அடிக்குது."

"அலையா இத்தனை உசரம் அடிக்கும்?"

"பின்னே என்ன ஆலமரமா தெரியும் கடலிலே?"

"என்னடா அது, எழுந்திரிச்சுத்தான் பாருவே."

"நீங்கதான் எழுந்திருச்சுப் பாருங்களேன்."

"எனக்குக் கண்ணைச் சுத்துது."

"ராத்திரி பொறுக்காப் போட்டுட்டீங்களோ?"

"பாதிதான் நான் சாப்பிட்டேன். மீதியை அதுவே சாப்பிட்டிடுச்சு."

"எது?"

"மயக்கம்" என்று சொல்லி இருவருமே உருண்டார்கள்.

"என்னே, ராத்திரி ஆடின கால்கட்டுக்கூட அவுக்கல்லியா?"

"கால் கட்டுன்னு ஒண்ணைக் கட்டிப்பிட்டா அவுக்க முடியுமா?"

"அவர் யாரு அண்ணே? கப்பல்லே ஏறினது முதல் ரெண்டு நாளா ஒண்ணையே கத்துறாரே!"

"அவரு பள்ளிக்கூடத்திலே டிரில் மாஸ்டராம்."

"ஆமா, அவரு எதுக்கு பொய்க்கால் குதிரை ஆட்டம் கத்துக்கிறாரு?"

"அதுதான், இலங்கையிலே போயி பள்ளிக்கூடத்துப் புள்ளை களுக்குக் கத்துக் குடுக்கப் போறாராம்."

"அண்ணே, இந்த ஆளுங்களை நம்பாதே. இப்படித்தான் கத்துக்கு வாங்க. அப்புறம் நமக்குப் போட்டியா வந்துடுவாங்க."

"எதிலேடா போட்டி? பட்டினியிலேதானே? சரி! கிடந்துட்டுப் போகட்டும்."

"என்னண்ணே கூலி?"

"டே! கூலியில்லேடா. ஒரு நாளைக்கு ஐந்து ரூபாயும் அரைப் போத்தலும் குருதட்சிணை."

"அட ஒப்புராணே! நம்ம கண்ணுலே காட்டவே இல்லியே!"

"நானே, கண்ணாலே பாக்கறதில்லையே! வாங்குவேன், கட கடன்னு விட்டுடுவேன் அம்புட்டுத்தான்."

இதைக் கேட்டு "உம்" என்று பெருமூச்சு விட்டான் பக்கிரி

"அண்ணே, நமக்கு அந்தக் காலி போத்தலையாவது குடுங் கண்ணே. தொத்தியும் தொப்பையுமா நல்லா இருக்கும். குடிக்கத் தண்ணியாவது வச்சுக்கறேன்" என்றான் பக்கிரி.

அப்போது "என்ன பொன்னையா புள்ளே!" என்று கூப்பிட்டுக் கொண்டே சுமார் முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒருவர் அவன் அறைக்கு வெளியே வந்து சேர்ந்தார். இதைக் கேட்ட பொன்னன் அவசரம் அவசரமாக, "இருங்க, இதோ வந்துட்டேன்" என்று சொல்லி அரிதாரத்தை முகத்தில் அப்பிக்கொண்டு மீசையை ஒட்டிக்கொண்டு வெளியே வந்தான்.

வந்தவர் கையில் தேங்காய் பழம், இருபது ரூபாய் பணம், ஒரு முழு பாட்டில் எல்லாம் வைத்திருந்தார்.

"இதெல்லாம் எதுக்குங்க?"

"குரு தட்சிணை"

"இது ஒண்ணே போதுமே!"

"ஒண்ணு என்ன! கொழும்பிலே விலை மலிவு."

"இறங்கவிடுவாங்களா?"

"இறங்கி ஒரு மணி நேரம் சுத்திப்பிட்டு வந்து ஏறிட்டா போகுது."

"கப்பல் தெரியாமல் வேறே கப்பல்லே ஏறிட்டால்?"

"அது பாதகமில்லியே! கடலிலே விழுந்திட்டால்தான் ஆபத்து. ஆமா, இன்னிக்குப் பாடம்—"

"பாடந்தான் எல்லாம் வந்துட்டுதே. ரெண்டு நாளிலே கத்துக் கிட்டீங்களே!"

"பாடம் வந்துட்டுது. ஆனால் உங்க காலைப் பார்க்கணும்" என்று சொல்லிப் பொன்னனின் முகத்தைக் கூர்ந்து பார்த்தார் அந்த ஆள்.

பொன்னனோ அதைக் கவனியாமல் சாதாரணமாக இருந்தான். 'அடேயப்பா, இவன் பெரிய ரௌடி' என்று அவர் எண்ணினார்.

"சேசே! நீங்க என்னை விழுந்து கும்பிடக் கூடாதுங்க!" என்றான் பொன்னன்.

"அப்படியில்லே. என்ன இருந்தாலும் குரு இல்லியா? உங்க பாதத்தைத் தரிசனம் செய்துட்டு நீங்க எப்படிக் காலிலே துணி கட்டிக்கிறீங்க என்பதையும் பாத்துக் கத்துக்கணும்."

"அது ஒண்ணும் கம்பசித்திரமில்லீங்க. கட்டில் நாடா இருக்குதில்லே. அதிலே ஒரு நாலு கஜம் வாங்கிக்குங்க. காலிலே பாதத்துக்குக் கீழே இரண்டு சாண் உசரத்துக்கு உருட்டுக் கட்டையை வச்சு, அதிலேருந்து ஒரு சட்டத்தை உசக்கே கொடுத்து முடமான காலிலே சிம்பு வச்சு கட்டறமாதிரி சேத்து முழங்கால் வரைக்கும் கட்டிக்குங்க" என்றான் பொன்னன்.

"சொன்னால் புரியல்லியே! காலை அவிழ்த்துக் காட்டினால் தானே தெரியும்" என்று சொல்லிக்கொண்டே பின்புறம் பார்த்தார் அந்தப் புதிய ஆள்.



அவர் பார்த்த இடத்தில் இருந்த கயிற்றுச் சுருளுக்குள் இருந்து ஒரு துப்பாக்கியின் வாய் தெரிந்தது. அதைப் பொன்னன் மேல் குறி பார்த்தவண்ணம் இருக்கும் இரண்டு கண்களும், ஒரு நாமமும் தெரிந்தன.

இதைப் பார்த்ததுமே புதிய ஆள் பொன்னனை மேலும் வற்புறுத்தினார்.

"சும்மா கட்டை அவுங்க"

"ராசாங்க உத்தியோகம், எந்த நேரத்திலே கூப்பிட்டு ஆடச் சொல்லுவாங்களோ? அதுக்காகத்தான் நானே எப்பவும் கட்டோடே இருக்கிறேன்"

"உங்க கால் கட்டை நீங்க அவுக்கறதே இல்லியா?"

"அவுக்க வாராதுங்க, நல்லா முடி இறுகிப்போச்சு அதை அவுத்தா வேறு நாடா கிடையாதுங்க".

"எல்லாம் எனக்குத் தெரியுங்க"

"என்னாங்க?"

"அதாங்க. அவுங்க!" என்று அதிகாரமாகக் கேட்டார் புதியவர்.

"சரி, இருபது ரூபாயைக் கொடுத்து நீங்க சொல்றபோது நான் எப்படி மாட்டேங்கிறது? இந்தா வரேனுங்க" என்று உள்ளே போனான் பொன்னன்.

புதிய ஆள் அவன் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார்.

"என்னாங்க, புடிக்கிறீங்க?"

"இங்கேயே இருந்து அவுங்க!"

"ஏன், நான் ஓடிப்போயிடுவேன்னு பயமா?"

"அது ஒண்ணுமில்லே, கத்துக்க வேணுங்கிற ஆசை."

"சரி. ஏ பக்கிரி, அந்தக் கத்தியை எடுத்துக்கிட்டு வா!" என்று கத்தினான் பொன்னன்.

இதைக் கேட்டவுடனே கயிற்றுக்குள் இருந்த துப்பாக்கி, பொன்னன் நெஞ்சுக்குச் சரியாகக் குறி பார்த்தது. பக்கத்தில் இருந்த டிரில் மாஸ்டர் பயந்து வெடவெடவென்று நடுங்கினார். உள்ளே இருந்து பக்கிரி, ஒடிந்து போன பேனாக்கத்தி ஒன்றைக் கொண்டு வந்தான்.

அதை வாங்கிய பொன்னன் சரசரவென்று காலில் இருந்த நாடாவைக் கத்தியினால் அறுத்தான். அவன் கால்கள் கயிற்றைக் கட்டிக் கட்டி, கும்பிப்போயிருந்தன. ஆனால், அதில் ஒரு காயமோ, காயம் பட்ட தழும்போ எதுவும் இல்லை. அவன் கலியாணத்தின் போது போட்ட மிஞ்சி மாத்திரந்தான் விரலில் கிடந்தது. இதைப் பார்த்தவுடனே, டிரில் மாஸ்டர் அவமானத்தால் தலைகுனிந்தார். துப்பாக்கியைப் பிடித்துக் கூர்ந்து நோக்கிய ஏட் கான்ஸ்டேபிள் கண்ணையா நாயுடுவின் கண்கள் ஏமாற்றத்தால் சோர்ந்தன.

"திருப்திதானுங்களா?" என்றான் பொன்னன்.

"ரொம்ப திருப்தி, போர் மேன், போ" என்றார் டிரில் மாஸ்டர்.

"பாத்தீங்களா, வித்தையைக் கத்துக்கிட்டு குரு என்கிற மருவாதியை மறந்திட்டீங்களே!"

"உன் வித்தையும், நீயும் நாசமாப் போச்சு போ மேன், உள்ளே போ மேன்" என்று வயிற்றெரிச்சலுடன் அந்தப் பிராந்தி பாட்டிலில் கையை வைத்தார், டிரில் மாஸ்டர். இனி இருந்தால் ஆபத்து என்று குதிப் பொன்னன் அதை எடுத்துக்கொண்டு உள்ளே ஓடினான்.

வெங்காய மூட்டைக்குள்ளிருந்து ஹெட் கான்ஸ்டேபிள் கன்னையா நாயுடு வெளியே வந்தார். அவருடைய உதவி அதிகாரி பராங்குசராவ் அவர் முகத்தைப் பார்த்தார் அவர் இவர் முகத்தைப் பார்த்தார். பொன்னன் நாகலிங்கமாக இருப்பானோ என்ற சந்தேகத்தில் அவனைச் சோதனை போட்ட இருவரும் அவன் நாகலிங்கமல்ல, பொய்க்கால் குதிரைப் பொன்னன், பொன்னனேதான் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

ஆனால், உண்மையான நாகலிங்கம் எங்கு போனான்? கடல் அவனை விழுங்கிவிட்டதா? இல்லை, கருணை அவனையும் பிழைக்க வைத்துவிட்டது.

தொண்ணூற்று ஆறாம் அத்தியாயம்

## கருணைக் கடலின் அலைமோதல்



**வே**தாரண்யத்தை அடுத்த காட்டிலே ஒரு வயல்வெளி. தாழைகள் பூத்து உதிர்கின்றன. தலையில் அணிவார் இல்லை. தாழம்புதரிலே தூளி கட்டி குழந்தையைத் தாலாட்டுகிறாள் ஒரு தாய். பக்கத்திலே அவள் கணவன் வயலில் வேலை செய்து கொண்டிருக்கிறான். இருவருக்கும் பின் வருமாறு இரகசியமாய்ப் பேச்சு நடக்கின்றது. அவள் பெயர் வள்ளி. அவன் பெயர் ரத்தினம்.

"என்ன மச்சான், நமக்கு எதுக்கு இந்த வம்பு? அவன் கண்ணையும் முழிக்கக் காணோம். காலும் சுகமாகல்லே. அவன் யாராம்?" என்றாள் அவள்.

"யாராய் இருந்தா நமக்கு என்ன புள்ளே? கண்டெடுக்காமே கடலிலே விட்டிருந்தா கவலையில்லே. கண்டெடுத்துட்டோம் காப்பாத்தித்தானே ஆவணும்!"

"காப்பாத்தாட்டி என்ன? கொண்டுபோய் வேதக்காரன் கிட்டே கொடுத்தா போச்சு. அவங்க ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய், வியாதியைச் சுகப்படுத்திடுவாங்க."



"இல்லே புள்ளே அந்த ஆளுதான் இருக்கிறாரும் பாக்க மாட்டேங்கிறானே!"

"ஏதாவது கேசுக்குப் பயந்துக்கிட்டிருப்பானோ?"

"அப்படித்தான்."

"அடி ஆத்தே. நமக்கில்லே ஆபத்து!"

"ஆபத்து வந்து என்ன செஞ்சுடும் புள்ளே. நமக்கு என்ன பணம் காசு இருக்குதா? புடுங்கிகிட்டுப் போகப் போறாங்களா?"

"இல்லே மச்சான். போலீஸ்காரரு தேடிக்கிட்டு வாராங்களாம். நம்ப வீட்டிலே அந்த ஆளு இருந்தா நம்மையும் சேர்த்துப் பிடிச்சுக்குவாங்களே."

"பிடிச்சா என்ன? சோறு போடுவாங்களில்ல" இந்தா பாரு புள்ளே! நம்மாலே முடிஞ்சவரைக்கும் காப்பாத்திடணும். இல்லாட்டி கடவுள் விட்ட வழி."

"ஆமாம். என்ன சேசாம், கேட்டாயா?"

"ஏதாவது காரைக்காலிலே வாங்கிக் கொழும்புக்குக் கொண்டு போயிருப்பான். நீஞ்சி கட்டுமரத்துக்குப் போனானாம். கரா மீன் கடிச்சுடுத்தாம்."

"சாமியார் என்ன சொல்லறாரு?"

"இன்னும் ஒரு வாரம் மருந்து வச்சுக் கட்டணுங்கிறாரு."

"ஏதோ புண்ணியவான் வந்தாரு. நாலு நாளா மருந்து வச்சுக் கட்டறாரு. ஒரு காலணா குடுன்னு கேட்கல்லே" என்று சொல்லி விட்டு ரத்தினம் வியர்வையைத் துடைத்துக்கொண்டு மறுபடியும் மண்வெட்டியை ஓங்கிப் போட்டான்.

கடற்கரை ஓரமாக உள்ள இரண்டொரு குடிசைகளில் ஒரு குடிசை ரத்தினத்துடையது. அவன் ஒரு நாள் கரையோரமாகப் போய்க்கொண்டிருந்தான். கரையில் ஒரு பிணம் ஒதுங்கியிருப்பதைக் கண்டான். ஓடிப் போய்ப் பார்த்தான். அது பிணம் அல்ல. உயிரோடு தான் இருக்கிறது என்று கண்டுகொண்டான். அவனது ஏழைமை அந்த ஆளைத் தூக்கிச் செல்லவும் யோசிக்கச் செய்தது. ஊரெல்லாம் அரிசிச் சோறு சாப்பிடுகின்ற காலத்திலே அவன் குடிப்பது கேழ்வரகுக் கஞ்சி. எல்லோரும் வேட்டியும், சட்டையும் போடும் காலத்திலே அவன் உடுப்பது அரைமுழக் கந்தை. கடவுள் அவனை ஏழையாகப் படைத்து, அவன் இதயத்தில் கருணையையும் கொடுத்து விட்டார்.

அந்த ஆளைத் தூக்கினான். தன் வீட்டுக்குக் கொண்டுவந்தான். அவனுக்குச் சுடு தண்ணீர் வைத்துக் கொடுத்தான். சிறிது கஞ்சியை அவன் வாயில் ஊற்றியவுடனே, அந்த ஆள் விழித்தான். ரத்தினத்தை எதிரில் பார்த்ததும் எழுந்து ஓட முயன்றான். ஆனால் காலில் இருந்த காயத்தால் மறுபடியும் துவண்டு விழுந்தான்.

"ஏனய்யா பயப்படறீங்க?" என்றான் ரத்தினம்.

"நீ போலீஸ் ஆளா? என்னைக் காட்டிக் கொடுத்திடமாட்டியே!" என்றான்.

ரத்தினம் கண்ணீர் விட்டான். "நீ யாராயிருந்தாலும் காட்டிக் கொடுக்கமாட்டேன் ஐயா. கம்மாகிட" என்றான் ரத்தினம்.

இவ்வாறு அந்தக் குடிசைக்குள் ஒரு வார காலமாக நாகலிங்கம் கிடக்கிறான். ரத்தினத்துக்கு மாத்திரம் சந்தேகம் உண்டு. இவன் யாரோ குற்றவாளி என்பது தெரிந்தது. இருந்தாலும் 'நாம் மாத்திரம் குற்றம் செய்யாதவனா? காப்பாற்றுகிறேன் என்று சொல்லிவிட்டோம். இனி உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றிவிடுவோம்' என்று துணிந்து விட்டான்.

✤ ✤ ✤

உலகம் வேறு, தாம் வேறு என்று உள்ளவர்களுக்குத்தான் நிலவும் கடலும் வெவ்வேறாகத் தோன்றும். நாமே உலகம், உலகமே நாம் என்று இருப்பவர்களுக்கு அவர்கள் உள்ளமே கடல். கருங்கடல் அல்ல, கருணைக் கடல். அந்தச் செல்வத்தை அடைந்தவர் பரமானந்தப் பரதேசி.

பரதேசியார் போன்ற பெரியவர்களின் உள்ளத்தை நம்மால் புரிந்துகொள்ள இயலாது. மோகனாவைக் காப்பாற்றுவதில் அவருக்கு உள்ள அதே அக்கறை நாகலிங்கம் விஷயத்திலும் ஏன் வந்ததோ, இறைவன்தான் அறிவார். நாகலிங்கம் துப்பாக்கிக் காயத்துடன் கடலில் விழுந்தான் என்பதைக் கேட்டது முதல் அவருடைய கருணை உள்ளம் துடித்தது.

கடற்கரையோரமாக ஒவ்வொரு ஊராய்த் திரிந்து கொண்டிருந்தார். தமக்கு வைத்தியம் தெரியும் என்றும் பிரஸ்தாபித்துக்கொண்டார். ஏழைகளுக்கு வைத்தியம் செய்தார். அந்நிலையில்தான் பரதேசியாரை ரத்தினம் சந்தித்தான். அழைத்துச் சென்றான்.

பரதேசியார் நாகலிங்கத்தைப் பார்த்தவுடனேயே புரிந்து கொண்டார். அதை வெளியே காட்டவில்லை. அவன் உடல் இருக்கும் நிலைமையைப் பார்த்தார். காட்டுக்குள் ஓடி, பல மூலிகைகளைச் சேகரித்துக்கொண்டு வந்தார். அவன் காலைத் தொட்டார்.

நாகலிங்கத்துக்குத் திடீரென்று மனம் தெளிய ஆரம்பித்தது; பிதற்றினான். "ஏ கருப்பாயி, உன்னைக் கொன்னுபிடறேன் பாரு. கையிலே கிடைச்ச புறாவைப் பறக்க விட்டுட்டேல்ல? கூண்டிலே இருந்த கிளியைப் பரதேசிப்பய தூக்கிக்கிட்டுப் போயிட்டானே. எறிஞ்ச கத்தி மோசம் பண்ணிப்பிடிச்சே. கையிலே இருந்த கத்தியும் போச், ஆளும் தப்பிச்சுக்கிட்டானே. அந்தப் போலீஸ்காரன் விரட்டு விரட்டுன்னு விரட்டினானே, அதிராம்பட்டினம் காட்டிலே அதிர் வேட்டல்லவா போட்டான்? அடி அம்மா, வலிக்குதே!" என்று பிதற்றினான்.



அதைக் கேட்ட பரதேசியாரின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. 'ஐயோ வலி தாங்க முடியாத தருணத்திலும் அவன் இறைவனைப்பற்றி எண்ணாமல், தன் இச்சைகளையே பெரிதாக எண்ணுகிறானே! இவனைக் காப்பாற்ற முயல்கிறோமே!

'ஒருவன் அடிபட்டு விழுந்த புலிக்கு வைத்தியம் செய்தான். புலி மயக்கம் தெளிந்து எழுந்தது. வைத்தியனைக் கொன்றது என்று பெரியவர்கள் பாடியிருக்கிறார்களே! இவன் விழித்ததும் நம்மைப் பார்த்தால் அந்தக் காலால் உதைப்பானே!' என்ற எண்ணம் வந்தது. உடனே, 'இறைவா, ஏன் இந்தச் சோதனை? உனக்கு இந்தப் பரதேசியும் ஒன்று, அந்த நாகலிங்கமும் ஒன்று. நச்சுப்பாம்பைப் படைத்தவன் நீ. நல்ல மனிதனையும் படைத்துவிட்டாய். இதையறிந்து உன்னைத் தினந்தோறும் வேண்டிக்கொண்டிருக்கும் எனக்கு ஏன் இந்த மனக்குழப்பம்? யாராயிருந்தால் என்ன? அவனைக் காக்க வேண்டியது என் பொறுப்பு. இன்றைக்கு நான் அவனைக் காக்காமல் போய்விட்டால், அவன் இங்கேயே கிடந்து துடிதுடித்து இறந்துவிடுவான். இன்னொரு வைத்தியனை ஆங்கில ஆஸ்பத்திரியிலிருந்து கொண்டுவந்தால், உடம்பு எப்படிப் போனாலும் பாதகமில்லை பிடிபடக்கூடாது என்ற எண்ணத்திலே ஓடிவிடுவான். காட்டில் விழுந்து நாய் நரிகளுக்கு இரையாவான். இறைவா, உன் கோயில் அல்லவா அவன் உடல்? நாளை அவனே உன் புகழைப் பாடலாம் ஆடலாம்' என்று எண்ணினார் பரமானந்தப் பரதேசியார்.

இரு கண்களிலும் கண்ணீர் மல்க அவன் கால் கட்டுகளை அவிழ்த்துப் பார்த்தார். காலில் பாதத்தையே காணோம். அரித்துவிட்டிருந்தது. மருந்து வைத்துக் கட்டும்போது விழித்துக்கொண்டால் நம்மைப் பார்த்துவிடுவான். 'அவனைக் காப்பாற்றுவதற்கு முன் என்னைக் கொன்றுவிட்டால், அவன் கிடந்து தவிப்பானே' என்ற எண்ணம் வந்தது.

'ஒரு பச்சிலையைக் கொடுத்து அவனைப் பைத்தியமாக்கி விடுவோம். என்னையும் அடையாளம் தெரியாது. மோகனாவையும் தெரிந்துகொள்ளமாட்டான். இனி யாருக்கும் தொந்தரவு செய்ய மாட்டான். இவனால் யாதொரு கெடுதலும் இல்லாமல் உலகம் இருக்கட்டும். இவன் பித்தனாவதுதான் சரி' என்று எண்ணியது நெஞ்சம்.

அப்பொழுது, "பரமானந்தா, நீ பரமானந்தத்தை அனுபவித்துக் கொண்டிரு. அவன் பித்தனாகத் திரியட்டும். அந்தப் பித்தனுக்குள்ளும் நான் இருப்பேன்," என்று இறைவன் பேசுவது கேட்டது. பரதேசி சிரித்தார்.

பச்சிலையை மூக்குக்கருகே நீட்டினார். நாகலிங்கம் பிணம் போலக் கிடந்தான். அந்த ரணத்தைப் பரதேசியார் ஆனந்தத்துடன்

சுத்தம் செய்தார். குழந்தைக்கு வைத்தியம் செய்யும் தாயைப் போல, அன்பு கனியக் கனிய அவனுக்கு வைத்தியம் செய்தார்.

சில நாளில் அவர் கருணையால் நாகலிங்கத்தின் கால் குணமாயிற்று. இனிமேல் புண் வலிக்காது என்பதைத் தெரிந்தவுடனே, பரதேசியார் மயக்கம் கொடுப்பதையும் நிறுத்திக்கொண்டார். மனிதனை மயக்கமாக வைக்கத் தமக்கு அதிகாரம் கிடையாது, அவசியத்துக்கு மேல் என்ற எண்ணம் அவருக்கு வந்தது.

ஒரு முறை மருந்து கட்டும்போது பரதேசியாரைப் பார்த்து விட்டான். அவர் ஏன் இங்கு வந்தார் என்பதை அவனால் தெரிந்து கொள்ள முடியவில்லை. இருந்தாலும் தன்னைக் காட்டிக் கொள்ளாமல், "சாமியாரே, எனக்கு மாத்திரம் உடம்பு சௌக்கிய மாகட்டும். இனிமேல் வேணுங்கிற காசு தர்ரேன். கஞ்சாவுக்குக் கவலையே வேண்டாம்" என்றான்.

"ஆகட்டும் அப்பா, வாங்கிச் சாப்பிடுகிறேன்" என்றார் பரதேசியார். நாகலிங்கத்தின் கால் ஓரளவுக்குச் சௌக்கியமாகி விட்டது. பாதம் இருந்த இடம் மொண்ணையாக இருந்தது.

"அப்பா, நீ முழு மனிதனாக இருந்தாய். இப்பொழுது முக்கால் மனிதனாகிவிட்டாய்" என்றார் பரதேசியார்.

"என்னாங்க இது?"

"கால் குறைந்து போய்விட்டது. இறைவன் உனக்குக் கை, கால் முதலிய அவயவங்களை நன்றாகத்தான் கொடுத்திருந்தான். நீ ஏதோ தவறு செய்து உன் காலைப் போக்கிக்கொண்டாய்" என்று வருத்தத்துடன் கூறினார் பரதேசியார். நாகலிங்கத்துக்கு அவரைப் பார்க்கப் பார்க்கப் பயமாக இருந்தது.

"நீங்க சொல்றது நிஜந்தான் சாமி. நான் பல தப்புகளைச் செஞ்சுட்டேன்."

"அப்பனே, குற்றம் புரிந்திருந்தால் அதற்குரிய தண்டனையை சந்தோஷத்துடன் நீ அனுபவிக்க வேண்டும். அப்பொழுதுதான் உனக்கு இந்தப் பிறவியிலேயே பயன் உண்டாகும்."

"அப்படின்னா என்னை என்ன செய்யச் சொல்றீங்க?"

"உன்னால் ரமாமணி புதுவைச் சிறையிலே கிடக்கிறாள். உன்னால் இரண்டு காதலர்களின் உள்ளங்கள் தவிக்கின்றன. நீ உடனே போய் போலீசாரிடம் ஆஜராகிவிடு. உனக்குத் தண்டனை குறைவாகக் கிடைக்கும். அந்தக் காலத்தை நீ உன் குற்றங்களுக்காகக் கண்ணீர் வடித்து 'ஆண்டவனே, என்னை நல்லவனாக்கு' என்று வேண்டிக் கொள். இறைவன் உனக்கு அருள் செய்வார்?" என்று பரதேசியார் அவனுக்கு நல்ல புத்தி கூறினார்.

"ஆகட்டுங்க அப்படியே செய்கிறேன்" என்றான். பரதேசியார் அவன் கையில் ஒரு துணியைக் கொடுத்தார்.

நூலகம்
... சென்னை-02



"இந்தா. காரச்சீலை. நீ இதை மாத்திரம் வைத்துக் கட்டிக் கொண்டு வா. காயம் ஆறிவிடும். தலைக்கு வந்தது காலோடு போயிற்று என்று மகிழ்ச்சி கொள்" என்று கூறித் தம் கையால் பூவரசங்கட்டையை அடித்துச் செய்த ஊன்றுகோல் ஒன்றை அவனிடம் அளித்தார். "திருச்சிற்றம்பலம்!" என்று கூறி வெளியே போய்விட்டார். நாகலிங்கம் எழுந்து அதை ஊன்றி நடந்தான். மெல்லக் குடிசையின் வாசலுக்கு வந்தான். பரதேசியார் எந்தப் பக்கம் போகிறார் என்று பார்த்தான்.

139560
4842704

தொண்ணூற்று ஏழாம் அத்தியாயம்

## தமிழ்த்திருநாட்டைத் தாயென்று கும்பிடுவோர்



'தம்பி, வீட்டிலேயே உட்கார்ந்து படி' என்று சொல்லி, தந்தை வெளியே செல்கிறார். பையன், அவர் எந்தப் பக்கம் போகிறார் என்று பார்க்கிறான்.

ஆசிரியர் எந்தப் பக்கம் போகிறார் என்று மாணவன் பார்க்கிறான். பெரியவர்கள் எந்தப் பக்கம் போகிறார்கள் என்று சிறியவர்கள் பார்க்கிறார்கள். இவ்வளவும் எதற்கு? முடிந்தவரையில் அந்தப் பக்கமாகக்கூட நாம் போய்விடக்கூடாது என்பதற்காகத்தான்.

இதே போலத்தான் நாகலிங்கமும் பார்த்தான்.

பரதேசி ஒரு துறவி. மனைவி மக்களை விட்டு ஓடிப்போனவர்கள் துறவியல்ல. உலகம் மாயை என்று சொல்பவரும் அல்ல. தாம், தம்முடையன என்பதை விட்டவர்கள்தாம் துறவிகள். புகழ், பொருள் இரண்டையும் விட்டுப் பணிபுரிபவர்கள்தாம் துறவிகள். தூரவு என்றால் கேணி என்று பொருள். இது எப்படித் தானே தண்ணீரைக் குடித்துக்கொள்ளாமல் இறைக்க இறைக்க ஊறித் தோட்டத்துக்குப் பாய்கிறதோ அப்படித்தான் துறவும். இறைக்க இறைக்க வற்றாத கருணை வாரிதி.

பரமானந்தப் பரதேசியார் பாம்புக்குப் பால் வார்த்தார். அந்தப் பாம்பு என்ன செய்தது? பயந்தது. அச்சத்தால் அறிவு இழந்தது. அவர் அதன் காலைத் தொட்டார். அது அவர் தலைக்குக் குறி பார்த்தது. அவர் தம் கையாலேயே கம்பைச் சீவி அவனுக்கு ஊன்றுகோல் அளித்தார். அந்த ஊன்றுகோலைக்கொண்டே அவரைத் தாக்கவும் அவன் தயாராக இருந்தான். அவர் கருணையால் காத்தார். காட்டிக் கொடுப்பாரோ என்று சந்தேகித்தான். அவர் வெளியே சென்றவுடன்

போலீசை அழைத்துவரப் போகிறாரோ என்று அஞ்சினான். அதோடு 'காலை இழந்தேன். இனி நான் உயிர் வாழ்ந்தும் பயன் இல்லை. ஆனால் இறப்பதற்குள் இதற்குக் காரணமானவர்களைப் பழிவாங்க வேண்டும்' என்றும் கறுவினான். கால் போனவுடன் உயிர்மேல் உள்ள ஆசை முக்கால் பங்கு அதிகமாக வளர்ந்தது. இந்தப் பரதேசி திரும்புவதற்குள் நாம் எங்காவது பரதேசம் போய்விட வேண்டும் என்று எண்ணினான். உடனே ஓடினான். கடலை நாடினான்.

அன்று மாலை மறுபடியும் ரத்தினம் தன் குடிசைக்குள் வந்தபோது அங்கு ஒரு சீட்டுக் கிடந்தது. அதில் எழுதியிருந்ததைப் பரதேசியிடம் காட்டினான் ரத்தினம். பரதேசியார் படித்தார். 'இராவணத்தில் நூறு ரூபாய் வைத்திருக்கிறேன். உனக்குப் பாதி, பரதேசிக்குப் பாதி' என்று எழுதியிருந்தான். "பாதி திருந்தினான்" என்றார் பரதேசியார்.

இது நிகழ்ந்த சில நாளைக்குப் பின்தான் கப்பலில் நாம் காணும் சம்பவங்கள் நடந்துகொண்டிருந்தன.

✦ ✦ ✦

கப்பலின் மேல் தட்டிலே, மகாராஜாவின் அறைக்குப் பக்கத்தில் இருந்து இந்து. ஆறு படிகள் உள்ள ஏணி ஒன்று மேலே போயிற்று. அந்த ஏணியின் மேல் ஏறினால், அதற்குமேல் ஒரு சிறு தட்டு இருந்தது. அந்தத் தட்டில்தான் காப்டனின் அறையும், கப்பலைத் திருப்பும் சுக்கானும், முக்கியமான இயந்திரங்களும், தூரதிருஷ்டிக் கண்ணாடியும் கொண்ட கப்பலின் இதயம் இருந்தது. காப்டன் ஒரு இயந்திரத்தைப் பார்த்தவண்ணம் நின்றுகொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் இருந்த 'மேட்' சுக்கானைத் திருப்பிக்கொண்டிருந்தார்.

அப்பொழுது காப்டனின் வேலைக்கு இடையூறாக ஒரு பெரிய சத்தம் கேட்டது. காப்டன் திரும்பினார். அவருடைய கறுப்புப்பூனை உயிர் போவது போல் அலறியது. அந்த ஜெர்மனி நாய் மோகன் "ளொள், ளொள்" என்று ஆத்திரத்துடன் குலைத்துக்கொண்டே அந்தப் பூனையை ஓடஓட விரட்டிக்கொண்டிருப்பதைக் கண்டார். ஆத்திரம் கொண்டார். தம் துப்பாக்கியை எடுத்து அந்த நாயைச் சுடுவதற்கு நீட்டினார். நல்ல வேளை, சுடவில்லை. நாய் விலகியதும் புன்சிரிப்போடு கீழ்த்தட்டில் நின்றுகொண்டு இந்தக் காட்சியை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த மதன்பூர் மகாராஜாவைக் கண்டார்.

"என்ன மகாராஜா, என் பூனையைக் கொன்றுவிட வேண்டுமென்று எண்ணமா?" என்று கோபமாகக் கேட்டார் கப்பல் தலைவர்.

"நோ—நோ—கம்மா வேடிக்கை பார்த்துக்கிட்டிருக்கேன்."

"என்ன வேடிக்கை? உங்களுக்குத் தெரியுமா, நான் இதை ஆஸ்திரேலியாவில் வாங்கினேன் என்று?"



"என் நாயை ஜெர்மனியில் வாங்கினேன். அது தெரியுமா?"

"ஐ ஹேட் தி ஜெர்மன் டாக்!"

"ஐ ஹேட் தி ஆஸ்திரேலியன் புஸ்ஸி"

"அதற்காக என் பூனையைக் கொல்ல உமக்கு அதிகாரம் கிடையாது."

"என் நாயைத் திட்டவும் உமக்கு அதிகாரம் கிடையாது."

"உம் நாயை அவிழ்த்துவிட்டது, கப்பலின் சட்டப்படி குற்றம்."

"உம் பூனை என் கோஷ்டியாரின் குறுக்கே சென்றது குற்றம்."

"என்ன சண்டை! என்ன சண்டை?" என்று கேட்டுக்கொண்டே அப்போது தன் அறையிலிருந்து ஓடி வந்தாள் ஸ்ரீமதி ஆஷலதாதேவி.

காப்டனின் கோபம் எல்லாம் ஒரு பெண்ணைக் கண்டதும் அடங்கியது. முகத்தில் புன்சிரிப்புக் காட்டி "குட் மார்னிங் மேடம்" என்றார்.

"குட் மார்னிங் கேப்டன்!" என்று சொல்லி அவரிடம் கையை நீட்டினாள் ஆஷலதாதேவி.

தம்மைக் கோபித்த காப்டன் தம் மனைவியின் கையைப் பிடித்துக் குலுக்குவதைக் கண்டார் மகாராஜா! தம் குரல்வளையையே அவன் பிடித்துக் குலுக்குவது போலத் தோன்றியது. இனம் இனந்தானே என்று எண்ணினார். மனம் மோகனாவின் பக்கம் ஓடியது.

அதே சமயத்தில் ஆஷலதாதேவி "என்ன காப்டன்? என்ன சண்டை?" என்று காப்டனைப் பார்த்துக் கேட்டாள்.

"உன் புருஷன் நேற்று அந்த மோகனா ஆட வருவாள் என்று எதிர்பார்த்தார். அவள் பாதையிலே என் பூனை குறுக்கே போய்விட்டதாம். அந்தப் பொய்யை நம்பி, என் பூனையைக் கொல்ல நாயை அவிழ்த்துவிட்டிருக்கிறார்."

தம் மனைவியிடம் காப்டன் இவ்வாறு புகார் செய்வதைக் கேட்ட மகாராஜா அசட்டுச் சிரிப்பு சிரித்தார். "சே, அப்படி எல்லாம் ஒன்றுமில்லை, டார்லிங்" என்றார். ஆனால் ராணி சீறினாள்.

"ஒன்றுமில்லையா! நீதான் நேற்று அவள் வராததற்காக போட்டோவைக்கூட நிறுத்திவிட்டாயே! காத்து இருந்து கால் வலித்தது எனக்கு அல்லவா தெரியும்? நீ கொஞ்சங்கூடக் காதலிக்க லாயக்கற்றவன்" என்று ஏக வசனத்தில் இறங்கினாள்.

மகாராஜாவுக்கும் கோபம் வரும், இல்லையா?

"அப்படியா சொல்லுகிறாய்? எனக்கு ஒன்றும் காதல் புதியது அல்ல. இதுவரை இந்த மதன்பூர் மகாராஜா நூறு பேரைக் காதலித்து இருக்கிறான்" என்றார்.

"அவர்கள் எல்லாம் நீ கொடுத்த ஒன்னே முக்கால் ரூபாயை வாங்கிக்கொண்டிருப்பார்கள். நான் அப்படியல்ல. நாளை லண்டனில் போய் இறங்கியதும் உன்மேல் 'டைவர்ஸ் சூட்' போடப் போகிறேன்

உன்னுடைய எஸ்டேட்டைப் பிடுங்கிவிடுவேன்" என்று சீறினாள். அந்த ஆங்கில மாது ஆத்திரத்தில் அவள் மூக்கு பாக்குப் பழம் போல் சிவந்தது.

மகாராஜாவின் உடம்பில் ஒரு ஆட்டம் ஏற்பட்டது. திடுக்கிட்டார். அவள் இவ்வாறு ஆத்திரப்பட்டுப் பேசும்படி நாம் என்ன தவறு செய்தோம் என்பது அவருக்குப் புரியவில்லை.

அவரிடம் இருந்த பல நல்ல குணங்களுள் பின் வருவது ஒன்று. எந்தக் காரணத்தைக்கொண்டும் அவர் அம்மையின் மனத்தைப் புண் படுத்தவேமாட்டார். இப்போது அவள் வாயால் கோபித்துக் கொள்ளவும், மோகனா விஷயத்தில் தம்மீது சந்தேகப்படவும் "நீ ஏன் நேற்று போட்டோவுக்காக அவளுக்காகக் காத்திருந்தாய்?" என்று கேட்கவும் காரணம் என்ன என்று மகாராஜா திடுக்கிட்டார்.

"டார்லிங், அவள் நம்முடைய கூட்டத்தில் ஒரு வித்வான். அவளுடைய நாட்டியத்தில் சிலையில் உள்ள உனது சிநேகிதர்கள் மையல் கொள்வார்கள். அதனால்தான் அவளுக்காகக் காத்திருந்தேன்" என்று சமாதானம் கூறினார்.

"அந்த மாதிரி அக்கறை என் விஷயத்தில் உனக்கு எப்போதாவது வந்ததுண்டா? என்றைக்காவது என்னைப் படம் பிடிக்க நீ ஆசைப்பட்டதுண்டா?" என்று கேட்டாள் அந்த மனைவி.

"ஏன் கிடையாது? அத்தனை க்ஷேத்திரங்களிலும் உன்னைத்தான் போட்டோ எடுத்திருக்கிறேன். ஊட்டி, கொடைக்கானல், எலிபெண்டா, எல்லோரா, அஜந்தா, சித்தன்னவாசல், மகாபலிபுரம், கோனோராக் ஆகிய அத்தனை ஊர்களிலும் உன்னை நிறுத்திப் படம் எடுத்திருக்கிறேன். இந்நாட்டில் உள்ள உடைந்த சிலைகளுக்கெல்லாம் உன்னைத்தான் நன்றாகத் தெரியும். கங்கோத்ரி முதல் கன்யாகுமரி வரை எந்த ஊரை நாம் விட்டோம்? அவ்வளவு ஊர்களிலும் உன்னை நான் படம் எடுக்கவில்லையா?"

"நீயே ஏன் என்னைப் போட்டோ எடுத்தாய் என்று எனக்குத் தெரியும்?"

"என்ன தெரியும்?"

"ஏனென்றால் என் பக்கத்தில் நிற்க உனக்கு விருப்பம் இல்லை."

"நோ நோ! எப்பொழுதாவது நான் அப்படிச் சொன்னேனா?"

"சொல்லவும் வேண்டுமா? நான் உங்கள் ஊர் ராணியாக வந்தேனே, என் படத்தை ஒரு காலணா ஸ்டாம்பிலாவது உங்கள் ஊரில் போட்டது உண்டா?"

மகாராஜா திகைத்தார்! எதைச் சொல்லியடா சமாளிப்பது என்று திணறினார். உடனே ஒரு நல்ல யோசனை வந்தது.

"உன் தலையில் முத்திரை அடிப்பதை என் நெஞ்சு தாங்காது!"

"என்னை ஒரு நாணயத்திலாவது போட்டீரா? உங்கள் காசின் ஒரு புறத்தில் என் உருவத்தைப் போடுவது."



"சரிதான் போ! எவனாவது பையிலே எடுத்துப் போட்டுக் கொண்டு போய்விடுவான்!"

"இது கிடக்கட்டும். ஒரு நாளைக்காவது என்னைப்பற்றி நீ ஒரு கனவு கண்டது உண்டா?"

"கனவிலும் உன்னைக் காணவேண்டுமா? நீதான் பக்கத்திலேயே இருக்கிறாயே !"

"நேற்று இரவு என்ன நடந்தது தெரியுமா?"

"நான் நடந்து வந்ததே எனக்குத் தெரியாது."

"நமது படுக்கை அறைக்குள் உமது நாய் வந்து குலைத்ததே. அது தெரியுமா?"

"யார்? மோகனா? அது ஏன் அங்கு வந்தது?"

"சொல்லவா?"

"சொல்."

"நன்றி கெட்ட கணவனே, நேற்று இரவு தூக்கத்தின் நடுவில் நீர் கனவு கண்டு, மோகனா மோகனா என்று உளறினீர். உடனே உமது மோகன், தன்னைத்தான் கூப்பிடுகிறீர் என்று எண்ணி ஓடி வந்து உமது படுக்கையின்மீது தாவியது."

"பொய், நான் நம்பவே முடியாது" என்று சொல்லிவிட்டு நடுங்கினார் மகாராஜா.

"ஏன் நம்ப முடியாது? நான்தான் அதை விரட்டினேன்-புவர் மோகன், அவர் உன்னையும் கனவு காணவில்லை; என்னையும் கனவு காணவில்லை. அந்த டான்ஸிங் பியூட்டியை நினைத்து—"

"ஆஷலதா, நிறுத்து! நான் மகாராஜா."

"நான் ராஜாக்களுக்கு எல்லாம் ராஜாவாகிய ப்ரிட்டிஷ்காரி."

"எனக்குத் தெரியும்."

"இன்று தெரியாது லண்டனில் இறங்கியதும் தெரியும்!"

"என்ன செய்துவிடுவாய்?"

"என் வக்கீல் தெரிவிப்பார்" என்று சொல்லிவிட்டு, காப்டன் அறைக்குள் ஓடி மறைந்தாள் ஆஷலதாதேவி.

மகாராஜா நெடுநாளாகவே இந்த மாதிரி பல கனவுகளைக் கண்டு வந்தார். இப்படித் தூக்கத்தில் உளறிவிடுவோம், உண்மை வெளிப்படும் என்று மட்டும் அவர் நினைத்ததே இல்லை. ஆனால் உண்மைக்கு ஒரு சந்தோஷம். இவர் விழித்திருக்கும்போதுதான் நம்மை இவர் பக்கங்கூட அண்டவிட மறுக்கிறார். இந்த மட்டில் தூங்கும்போதாவது அவர் நாவில் இருந்தோமே என்று ஓர் ஆனந்தம். அப்போது தூக்கத்திலும் உண்மையைத் தம் பக்கம் வரவிடாத அந்தப் புண்ணியவான் வைத்தியி அவர் அருகில் வந்தார்.

"மிஸ்டர் வைத்தி, நான் நிச்சயம் செய்துவிட்டேன்" என்றார் மகாராஜா.

"செய்ய வேண்டியதுதான்."

"நான் அடைந்தே தீரவேண்டும்."

"நீங்கள் அடையாமல் வேறு யார் அடைவது?"

"நான் மனது வைத்தால் விடமாட்டேன்."

"விடவே கூடாது விட்டால் உங்களுக்கு அல்லவா அகௌரவம்?"

"எதைச் சொல்லுகிறீர்?"

"அதைத்தான் !"

"மோகனா விஷயம் என்னவாயிற்று?"

"இப்போதானே பொழுது விடிஞ்சு இருக்கு?"

"அவள் என்னிடம் வந்து சொல்ல வேண்டுமல்லவா?"

"எதைச் சொல்லணும்?"

"நேற்று நான் புறப்பட்டேன். பூனை குறுக்கே வந்தது. அதனால் நான் வர முடியவில்லையென்று ஒரு வார்த்தை சொன்னால், என் மனம் எவ்வளவு சந்தோஷப்படும் !"

இப்பொழுதுதான் வைத்தி சரிவர விஷயத்தைப் புரிந்து கொண்டார். அவருடைய பூமாலைப் பொய் அதற்குள் வாடிவிட அவர் மனம் விரும்பவில்லை. இருந்தாலும் இந்த மகாராஜா எப்படியும் நாசமாகத்தான் போகிறார். நாமே அந்தக் கைங்கரியத்தைச் செய்துவிடலாம் என்ற முடிவுக்கும் வந்தார்.

"நான்கூட காலம்பர அவள் ரூமுக்குப் போயிருந்தேன்."

"எங்கே, மோகனாவின் அறைக்கா?"

"ஆமாம்."

"என்ன சொன்னாள்? அவளும் தூங்கவில்லையாமா?" என்று அன்பொழுகக் கேட்டார் மகாராஜா.

"ரொம்ப வருத்தப்பட்டாள். எப்போ பூனை குறுக்கே போயிடுத்தோ, மூணு நாளைக்கு நான் அங்கே வரமாட்டேன். மகாராஜாவும் தயவு செய்து இந்தப் பக்கம் வரவேண்டாம்" என்றாள்.

"இது என்ன அபசகுனம் வைத்திஜி? நம்ப ஜோசியர் இருக்கார் அவரைக் கூப்பிட்டு—"

"நான் ஜோசியரைக் கேட்டேனே! அவர் தங்கத்திலே பூனை செய்யவேண்டும் என்கிறார். கப்பலிலே எப்படிப் பூனை பண்ணறது! இங்கே 'கோல்டு ஸ்மித்'தும் கிடையாது."

"பிறகு என்ன செய்வது?" என்று மகாராஜா யோசித்தார். அதே சமயத்தில் வைத்தியும் இனி என்ன செய்வது என்று யோசித்தார். இப்போது இருவரும் சந்தித்தால் நம் குட்டு வெளிச்சமாகிவிடும். ஆதலால் இரண்டு, மூன்று நாட்கள் கழித்து, வடிவாம்பாளைத் தயார் செய்துவிட்டு, இந்த விஷயத்தில் இறங்குவோம். அதற்குள் சண்முகசுந்தரமும் கப்பலை விட்டு இறங்கிவிடுவான், பிறகு நாம் வைத்ததுதான் சட்டம் என்று வைத்தி யோசித்துக்கொண்டிருக்கும்



போது, மகாராஜா, "வைத்திஜி, எனக்கு ஒரு ஐடியா வந்திருக்கிறது" என்றார்.

"அதுதான் வருமே !"

"எப்படிக் கண்டுபிடித்தீர்?"

"இந்த விஷயத்திலே ஐடியா வராமல் வேறு எந்த விஷயத்தில் வரப்போகிறது?"

"அச்சா பாத், என் யோசனை என்ன தெரியுமா? நாம் இருவரும் இப்பொழுது அங்கே போகிறோம்."

"ஐயோ !"

"ஐயோ என்றால் என்ன அர்த்தம்? அது ஒன்றும் அபசகுனம் இல்லியே !"

"சே, சே, அப்படியில்லை. ரொம்ப சந்தோஷமென்று அர்த்தம்."

"சரி, ஒரு காகிதம் டைப் பண்ணுங்கள். இப்பொழுதே அவளை நமது ஆஸ்தான நாட்டிய கலாவதியாக நியமித்துவிட்டோம்."

"என்ன, யோசனை பண்ணாமலேயே உத்தரவு போடறீங்களே !"

"நான் நியமிக்கவும் யோசிப்பதில்லை, விலக்கவும் யோசிப்பதில்லை. உம், சீக்கிரம் !"

"ராகுகாலம் போய்விடட்டும்."

"அது இன்னும் வரவில்லை. அதற்குள் நாம் அங்கு போய் விடுவோம்."

"ஆனா வெறும் காகிதத்தை மட்டும் கொண்டுபோகக் கூடாதே !"

"சரி, கனகாம்பரத்தைக் கூடவே நூறு சவரன் எடுத்துக்கொண்டு வரச்சொல்லுங்கள்."

வைத்திஜியின் கையில் ஒரு தாம்பாளமும் அதன்மேல் நூறு பவுன்களும், 'அப்பாயின்மெண்ட் ஆர்டரு'ம் இருந்தன. மகாராஜா ஆனந்தமாக மோகனாவின் அறைக்கு வந்தார். வைத்திக்கு உள்ளூர நடுக்கம். அந்த வரதன் அங்கே இருக்கக்கூடாதே. நமது கழுத்தில் வைத்த கையை மகாராஜாவின் கழுத்திலும் வைத்துவிடக்கூடாதே என்று எண்ணிக்கொண்டே மெதுவாகக் கதவைத் திறந்தார்.

"வாருங்கள்" என்று குரல் கேட்டது. ஆனால், வரவேற்றது மோகனா அல்ல, வடிவாம்பாளும் அல்ல, ஸ்ரீமான் சண்முகசுந்தரம். சண்முகத்தை அங்கு பார்த்தவுடனே, மகாராஜா வெறுப்பு அடைந்தார். ஆனால் மகாராஜாவை அங்கு பார்த்ததில் அங்குள்ள எல்லோருக்குமே வெறுப்பு ஏற்பட்டது. இதில் சந்தோஷம் ஏற்பட்டது ஒருவருக்குத்தாம். அவர்தாம் கேப்டன் டம்பு துரை. மகாராஜா மோகனாவின் அறைக்குள் நுழையும்போது கப்பல் தலைவர் அவருடைய காமிராவினால் ஒரு படம் பிடித்துக் கொண்டார். இதுதான் எக்ஸிபிட் நம்பர் 1. இதற்குக் காரணம் ஸ்ரீமதி ஆஷலதாதேவியின் அருமையான யோசனை.

"வாருங்கள், வாருங்கள்" என்று கூறிச் சண்முகம், தான் உட்கார்ந்திருந்த ஆசனத்தை விட்டு எழுந்தான். அவன் செய்கின்ற மரியாதை மகாராஜாவுக்கு அவமரியாதை போல் பட்டது. தம்முடைய அறைக்கு அவன் வந்தபோது அவனைத் தாம் உட்காரச் சொல்லவில்லை என்ற எண்ணமும் வந்தது. இந்த எண்ணங்களை விழுங்கியவண்ணம் ஆசனத்தில் அமர்ந்தார்.

"மகாராஜா அவர்கள் இங்கு வந்ததில் ரொம்ப சந்தோஷம். நானே அங்கு வரவேண்டுமென்று இருந்தேன்" என்றான் சண்முகம்.

"அச்சி பாத், நான் உன்னோடு பேசவரவில்லை" என்றார் மகாராஜா.

"வேறு யாரோடு பேச வேண்டும்?"

"என்னய்யா, அவருதான் உங்களோடு பேச விரும்பலியே, நீங்க ஏன் அவரோடே பேசறீங்க?" என்றார் வைத்திஜி.

"பெரிய மனுஷங்க பேசற போது குறுக்கே பேசாதீங்கன்னு எவ்வளவு தடவை சொல்லியிருக்கேன் உங்களுக்கு?" என்றான் சண்முகம். வரதனோ, விசிறிக்காம்பால் தன் முதுகைச் சொறிந்து கொண்டான். இதைப் பார்த்த வைத்தி அடங்கினார்.

"அச்சிபாத், மோகனாஜி, இன்று முதல் உன்னை நான் என் ஆஸ்தான நாட்டிய கலாவதியாக்கியிருக்கிறேன்.....இதோ, நியமனப்பத்திரம்" என்றார் மகாராஜா.

மோகனா பேசாது நின்றாள்.

"அச்சிபாத், நான் சொல்வது உங்கள் காதில் கேட்கவில்லையா?"

"கேட்கிறது. ஆனால், நான் அதற்கு ஒப்புக்கொள்ள இயலவில்லை." என்றாள் மோகனா.

"ஏன்?"

"நானும் இலங்கையில் இறங்கப் போகிறேன்."

"அச்சி பாத்" என்றார் மகாராஜா.

"என்னய்யா அச்சி பாத்? எதற்கெடுத்தாலும் அச்சி பாத்துதானா? கொஞ்சம் பகாளா பாத்தாக இருந்தால் சாப்பிடலாம்" என்று மெல்லச் சொன்னான் வரதன். மோகனா சிரித்துக்கொண்டாள்.

மகாராஜாவுக்கு வந்த கோபத்தில் சண்முகம் பக்கம் திரும்பினார். "மிஸ்டர் சண்முகம், கேஸ் வந்தாலும் சரி, உன்னைச் சுட்டுவிடுவேன். நீ என்னுடைய ஆர்டிஸ்டைக் கலைக்கிறாய். அவள் இறங்க நான் சம்மதிக்க மாட்டேன்." என்று படபடத்தார். சண்முகம் சிரித்தான்.

"என்ன சிரிக்கிறாய்? உங்கள் ரெண்டு பேரையும் கால் கைகளைக் கட்டிக் கப்பலுக்குள்ளேயே அடைத்துவிடுவேன்."

"வெள்ளைக்காரன் கொடி பறக்குது மகாராஜா! இது உங்க ராஜ்யம் இல்லே!"

"அச்சி பாத்! அரே சண்முகம், நீ வித்வானாக இருக்கலாம்.



உலகமே உன்னைப் புகழலாம். ஆனால் நீயும் சங்கீதத்தைச் சாப்பிட முடியாது. என் பணமிருந்தால்தான் நீ ரொட்டி சாப்பிடலாம். நான் பணக்காரன் என்பதை ஞாபகம் வைத்துக்கொள். ஒரு நாய்க்காக இரண்டு லட்சம் செலவழித்தவன். நான் யார் என்பதை நீ இறங்கும் போது உனக்குக் காட்டுகிறேன், ஜெராஷியார்!" என்று சொல்லிவிட்டு ஆத்திரத்தில் மகாராஜா எழுந்து நடந்தார்.

அப்பொழுது சண்முகசுந்தரம், "மகாராஜா, கொஞ்சம் தயவு செய்யவேண்டும்" என்று அழைத்தான்.

"இப்பொழுதுதான் ஞானம் ஏற்பட்டதோ?" என்று திரும்பினார் மகாராஜா.

"இதோ, உங்கள் தாம்பாளம்!" என்று நூறு பவுனும் ஆர்டரும் இருந்த தாம்பாளத்தை எடுத்து அவர் கையில் கொடுத்தான் சண்முகம்.

"வைத்திஜி, அதை வாங்கி வாரும்" என்று சொல்லிவிட்டு மகாராஜா ஆத்திரத்தோடு வெளியேறினார்.

அவர் அறைக்குள் நுழைந்ததும் மனைவி ஆஷாலதாதேவி ஆவலுடன் பின்வருமாறு வரவேற்றாள்.

"உம்முடைய தோல்வியைப் பார்ப்பதற்கு எனக்கு ரொம்ப சந்தோஷம்" என்றாள் அவள்.

"தோல்வியா, எனக்கா? உலகத்தில் உன்னைப் போல முட்டாள் கிடையாது."

"நாவை அடக்கிப் பேசுங்கள். அந்தப் பெண்ணுக்கு நீர் ஏதேனும் கெடுதல் செய்தால் இலங்கையிலுள்ள எங்கள் அரசாங்கம் உம்மைச் சும்மா விடாது."

"உங்கள் அரசாங்கத்துக்கு ஸ்டாம்புப் பணந்தான் தேவை. வைத்திஜி, வாருங்கள்" என்று சொல்லிவிட்டு, வைத்தியை அழைத்துக் கொண்டு, மகாராஜா இன்னொரு புறம் சென்றார்.

ஒரு தனி இடத்தில் போய், "வைத்திஜி! நீங்கள் கொழும்பில் இறங்குங்கள்" என்று மகாராஜா உத்தரவிடவே வைத்திக்குத் திடுக்கிட்டது.

பணம் கொடுத்து வாங்கின கறவைப் பசு ஒரு மாதத்தில் உதைக்க ஆரம்பித்தால், பால்காரர் என்ன பாடு படுவாரோ, அந்தப் பாடு பட்டார் வைத்தி. அவர் இன்றுவரை மகாராஜாவிடம் தமக்கென்று சம்பளம் பேசிக்கொள்ளாமல், பொன்னன் பணத்திலேயே பிழைத்து வந்தார். 'நீயும் இலங்கையில் இறங்கு' என்று மகாராஜா இப்போது சொன்னவுடனே, வைத்திக்குத் தூக்கி வாரிப் போட்டது. தாம் இவரை விட்டுப் பிரியக்கூடாது. நாளைக்கு தாம் திவான் பதவிக்கே உயர்ந்துவிடக்கூடும் என்ற நம்பிக்கையில், வைத்தியின் மூளை வேலை செய்தது. சாமர்த்தியமாக மகாராஜாவை மடக்கினார்.

"ஆஹா, இறங்கிவிடுகிறேன். இறங்கி என்ன செய்யணும்?" என்றார் வைத்தி.

"மெட்ராசுக்குத் தந்தி கொடுங்கள் கிட்டாவய்யர் மூலம் வழக்கைத் தொடருங்கள். அந்தச் சண்முகசுந்தரம், இந்த ஆறு மாசத்திற்கு எந்த ஊரிலும் வாசிக்கக் கூடாது. மோகனா ஆடக்கூடாது."

"அதுக்கென்னத்துக்குத் தந்தியும் தபாலும்! ஆடப்படாது, வாசிக்கக் கூடாது, அவ்வளவுதானே? செஞ்சுடறேன். கொழும்பிலே எனக்கு வேண்டிய ஆட்கள் இருக்கு. அவன் கை, அவ கால், சரியா போச்சு! எனக்குக் கோபம் வந்துடுத்துன்னா மகாராஜா—"

"ஐயோ வைத்திஜி, இரையாதீர், மெதுவா" என்று நடுங்கினார் மகாராஜா.

"நீங்க சும்மா இருங்கோ மகாராஜா. உங்க பெயரு வெளியே தெரியப்படாது. அதுக்குத்தானே பயம்? அதனாலே பாதகமில்லே. உங்க பெயர் கொஞ்சங்கூட வெளி வராமே நான் பாத்துக்கறேன்" என்று மேலும் இரைந்தார் வைத்தி.

"நோ, நோ... வைத்திஜி. ஏற்கெனவே இந்த இங்கிலீஷ்காரி சந்தேகப்பட்டுக்கொண்டு இருக்கிறாள். நீங்கள் வேறு கிரிமினல் வழியில் இறங்கினால்—"

"மகாராஜா, என்னை அடித்திருந்தால்கூட நான் இவ்வளவு பாராட்ட மாட்டேன். உங்களை அவமானம் பண்ணினா என்னால் பொறுக்க முடியாது. ஒரு இருபதாயிரம் ரூபாய் கொடுங்கோ, அதையும் அக்கவுண்டிலே எழுதாமே கொடுங்கோ."

"வைத்திஜி, வெள்ளைக்காரன் பொல்லாதவன். ஏற்கெனவே எனக்குப் பைத்தியம்னு சொல்லி, ஒரு கவிகாரம் எடுத்து வைச்சு, எஸ்டேட்டைத் தானே ஆளுவதற்குப் பிளான் போட்டுக் கிட்டிருக்கான். நான் அதற்குப் பயந்துகொண்டுதான், இந்த இங்கிலீஷ் பெண்ணைக் கல்யாணம் பண்ணிண்டேன்! இப்பொழுது நீர் பேசுவது காதிலே கேட்டா நிச்சயமாக எஸ்டேட்டைப் பறித்துக் கொண்டுவிடுவான்."

"போனா போகட்டுமே, மகாராஜா. நீங்களும் வீர பரம்பரை, நானும் வீர பரம்பரை. என்னாலே கோபத்தை அடக்க முடியவில்லை மகாராஜா" என்று கத்தினார் வைத்திஜி.

மகாராஜா, வைத்தியின் முகவாய்க்கட்டையைத் தாங்கினார். "அப்பா, வைத்தினாதா, நீ இறங்கவே வேண்டாம். என்னோடு இருந்து விடு" என்று கெஞ்சும் நிலைக்கு அவரைக் கொண்டுவந்தார் வைத்தி. அதன் பிறகுதான் அவர் கோபம் அடங்கியது. இருவரும் கூடி அந்தரங்கமாக யோசித்து, அதைச் சட்ட ரீதியாகச் செய்ய இறங்கினார்கள்.

மகாராஜா எழுந்து சென்றவுடனே வடிவாம்பாள் கண் கலங்கி விட்டாள். தாம்பாளத்தில் இருந்த நூறு பவுன்களும் அவள்



கண்ணனைவிட்டுப் போகவில்லை. "தம்பி, நான் ஒரு வார்த்தை சொல்லறேன், கேக்கிறீங்களா?" என்றாள்.

"என்ன செய்யணும்?" என்றான் சண்முகம்.

"பெரிய இடத்துப் பகை தம்பி; பணம் பாதாளம் மட்டும் பாயும்."

"நான் அவரைப் பகைத்துக்கொள்ளலே இல்லியே!"

"அப்படியில்லே தம்பி. நமக்குச் சீமையிலே என்ன கஷ்டம் வந்துடப் போவுது? பணம் கொடுக்கிற மகாராஜன் கொடுக்கப் போறான். கூப்பிடற நேரத்திலே சேவகத்தைச் செய்வோம். ஆறு மாசம் கழிச்சு கப்பலை விட்டு இறங்கினா கையிலே லட்சம் ரூபாய் பணம் இருக்கும். ஒரு வீட்டை வாசலைக் கட்டிக்கிட்டு நல்லா இருக்கலாம். இது எதுக்குத் தம்பி பிடிவாதம்?"

"அத்தே, மானத்தை விட்டுவிட்டு அவன் கிட்டே போய மறுபடியும் வேலை பார்க்கறேன்னு சொல்லவா சொல்றீங்க?"

"அதை நீங்க சொல்ல வேண்டாம். நான் சொல்லறேன். என்கிட்டே விட்டுடுங்க."

"இல்லே அத்தே. என் தீர்மானத்தை மாத்த முடியாது"

"உன் தீர்மானம் மாறலேன்னா, மோகனா மாத்திரம் மாத்த போகுதா? நான் காசுக்கு ஆசைப்பட்டுச் சொல்லலே தம்பி! வரக்கூடிய கஷ்டத்தை நினைச்சுத்தான் சொல்லறேன்."

"அத்தே, கலைக்கெல்லாம் பிறவியிலேயே கஷ்டம் ஏற்பட்டது கஷ்டம் அதிகமாக, அதிகமாகத்தான் மெருகு போட்ட தங்கம் போல் பளபளன்னு இருக்கும். என்ன மோகனா, நீ என்ன சொல்கிறாய்?"

"அம்மா, நாம் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் சரி, இந்தக் கப்பலிலே இனி இருப்பது எனக்குப் பிடிக்காது."

"இப்படிப் பிடிவாதமாகப் பேசினா நான்தான் என்ன செய்வேன்? மகாராஜா போற போக்கு நல்லா இல்லே. அவர் ராஜா, நம்ப ஏழை. அவரு நியாயத்தையே விலைக்கு வாங்குவாரு. கப்பலைவிட்டு நாம் இறங்கிறதுக்குள்ளே வந்து என்ன பாடு படுத்துவானோ, நினைச்சாலே எனக்குப் பயமாக இருக்குது" என்று உலக அனுபவத்தில் வடிவாம்பாள் கூறினாள்.

இதே சமயத்தில் மகாராஜாவின் சிப்பாய்கள் பன்னிரண்டு பேர், அந்த அறையின் வெளியே வந்து நின்றார்கள். அவர்கள் நடமாடுவதைக் கண்டவுடன் வடிவாம்பாள் தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்தாள். புஸ்தி மீசைக்காரன் உள்ளே நுழைந்தான். "ஜி! உங்கள் பெட்டி படுக்கையெல்லாம் சோதனை போட வேண்டும். மகாராஜாவின் கலிக்கத்துராய் வைரம் காணோம்" என்று கூறி, பெட்டியின் மேல் ஏறி உட்கார்ந்தான்.

டமால், டமால் என்று ஒன்பது குண்டுகள் போடப்பட்டன

முல்லைத் தீவு, மட்டக்களப்பு, கல்முனை, சம்பாம் தோட்டம் என்ற ஊர்களின் ஓரமாக கதிர்காம வேலனை வலம் வந்து கொழும்புத் துறையில் வந்து நின்றது அந்தக் கப்பல்.

எல்லோரும் மேல் தளத்திற்கு ஓடி வந்து பார்த்தார்கள். இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் கவர்னரின் அந்தரங்கக் காரியதரிசியும், அரசாங்க அதிகாரிகளும் மதன்பூர் மகாராஜாவை வரவேற்க ஏணிப் படிகள் வழியே ஏறினார்கள். மகாராஜா மேல்தட்டில் வந்து ஒய்யாரமாக நின்றார். கவர்னரின் காரியதரிசி ஒரு அழகான ஜரிகை மாலையை மகாராஜாவுக்கு அணிவித்தார். ஒவ்வொரு அதிகாரியும் அறிமுகம் செய்விக்கப்பட்டனர். மகாராஜா ஒவ்வொருவரிடமும் கைகுலுக்கிவிட்டு ஏணிக்குப் பக்கத்திலே நின்றுகொண்டிருந்தார்.

அப்போது, கட்டிய புடைவையுடன் மோகனாவும் வடிவாம்பாளும் நடுங்கிக்கொண்டே பின் தொடர அந்தக் கலைஞன் புன்முறுவலோடு மகாராஜாவின் அருகில் வந்தான்.

"மகாராஜா! வணக்கம். இன்னும் சோதனை முடியவில்லை. ஆனால் எங்கள் பெட்டிக்காக நாங்கள் காத்திருக்கப் போவதில்லை" என்றான் சண்முகசுந்தரம். அவனைக் கவனிக்காதது போல அதிகாரிகளுடன் பேசிக்கொண்டிருந்தார் மகாராஜா. ஆனால் சண்முகசுந்தரம் மேலும் பேசினான்.

"மன்னவனும் நீயோ, வளநாடும் உன்னதோ, உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன் என்று எங்கள் ஊரிலே ஒரு கவி கூறினார். இன்று நானும் அதையே உங்களிடம் திருப்பிச் சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் படிகளில் இறங்கினான்.

"மிஸ்டர் சண்முகம் புள்ளே, இப்போதுகூட நேரமாகலே, நான் மகாராஜா கிட்டே சொல்லறேன். இலங்கையிலே இறங்கித் திண்டாட வேண்டாம்" என்றார், இதற்குக் காரணமான வைத்திஜி.

சண்முகசுந்தரம் அவர் வார்த்தைகளைப் பொருட்படுத்தாமல் இறங்கினான். மோகனாவும் வடிவாம்பாளும் வரதன், முத்துராக்கு முதலியவர்களும் ஒரு பொருளையும் தொடாமல் இறங்கிப் போவதைக் கவனித்தார் மதன்பூர் மகாராஜா.

அதற்குள் அவர் கண்கள் கப்பல் அடியில் நின்றுகொண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்களைப் பார்த்தன. தம்மை வரவேற்க அவ்வளவு கூட்டம் கூடியிருப்பதைக் கண்டு மகிழ்ந்தார். தம் பெருமை உலகம் முழுவதும் பரவி இருக்கிறது என்ற ஆனந்தத்தில் இன்னும் ஒரு அங்குலம் பெருத்தார். அப்போது அவர் காதிலே "கலைஞர் சண்முகசுந்தரம் வாழ்க! கலை அரசி மோகனா வாழ்க!" என்ற வாழ்த்தொலி முழங்கியது. கீழே கூடியிருந்த அத்தனை பேரும், அவனுக்கும் மோகனாவுக்குமாகக் கூடியிருக்கிறார்கள் என்பதைக் கண்ட மகாராஜா, "இந்தத் தமிழர்களே இப்படித்தான்" என்றார், திகைத்தார்.



அப்போது சண்முகசுந்தரத்தின் கழுத்தில் ஒரு பெரிய பூமாலை விழுந்தது. இருகைகளையும் கூப்பி, "இப்படி வாருங்கள்" என்று திருவாளர் சிற்றம்பலம், மோகனாவையும் சண்முகத்தையும் அழைத்தார். சண்முகசுந்தரமும் மோகனாவும் இரண்டு நாற்காலிகளில் உட்கார்த்தி வைக்கப்பட்டார்கள். இருவருக்கும் மலர் மாலைகள் கழுத்து கொள்ளாமல் அணிவிக்கப்பட்டன. வரவேற்புப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டன. பரிசுப் பொருள்கள் குவிந்தன. ஸ்ரீமான் சிற்றம்பலம் வருத்தத்துடன் பின்வருமாறு கூறினார்:

"ஒரு மனிதன் தன்னுடைய வாழ்நாளில் செய்கின்ற பெரிய காரியம் தன் மகளுக்குச் செய்து வைக்கும் கலியாணம். அதற்கு நான் கலையரசி திருவளர்செல்வி மோகனாம்பாளின் நாட்டியம் நடைபெற வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் அவர்கள் சிறைக்குப் போகப்போகிறோம், இப்ப வர ஏலாது என்று எழுதிப் போட்டார்கள். நான் பெரிதா, என் நாடு பெரிதா என்று நான் திண்டாடுகிறேன். அவர்களுக்குச் சிறையிலே கிடைக்கும் கௌரவத்தை எண்ணி எண்ணி, என் மனது பூரிக்கின்றது. ஒருபுறம் ஆனந்தப்படுகிறேன். அதே நேரத்தில் இந்த இரண்டு கலைஞர்களும் இங்கு இருந்து, என் மகள் கலியாணத்தை நடத்தி வைக்க வேண்டும் என்ற ஆவலும் இருக்கிறது. ஆனால் இவைகள் எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு அவர்களுக்கு என் சார்பிலும் இலங்கைவாழ் தமிழ் மக்களின் சார்பிலும் நான் ஆசி அளிக்கிறேன். சென்று வாருங்கள். தமிழரின் கலைக்கொடியை ஆங்கில நாட்டிலே உயர்த்துங்கள். தமிழரின் இசைக்கலையை அங்கும் பரப்புங்கள். இசை வடிவான ஈசன், எம்பெருமான் தில்லை நடராசன் அங்கு நடம் புரியட்டும். நான் தங்கள் வருகைக்காக ஆறு மாசம் காத்திருக்கிறேன்" என்று அவர் கூறும்போது அவர் இதயம் உருகியது; நா தழதழத்தது.

அப்பொழுது சண்முகசுந்தரம் எழுந்தான்.

"அன்புருவான அண்ணலே, இலங்கைத் தமிழ் மக்களே, இசையன்பர்களே, நாங்கள் சிறைக்குச் செல்லவில்லை. உங்களிடம் அடைக்கலம் புகுந்துவிட்டோம். திருச்சிற்றம்பலம் அவர்கள் வீட்டுக் கலியாணத்திற்கு நாங்கள் இங்குதான் இருப்போம்" என்று கூறவே "சண்முகசுந்தரம் வாழ்க, மோகனா வாழ்க, கன்னித் தமிழ் வாழ்க, கலை வாழ்க" என்று, தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடும் சேய் நாட்டுத் தமிழர்களின் ஜெயகோஷம் விண்ணதிர எழுந்தது.

இதைக் கண்ட மகாராஜாவின் கண்கள் சிவந்தன. அங்கிருந்த அதிகாரிகளோடு அவர் ஏதோ தனியாக ஆலோசனை நடத்தினார்.

# உள்ளம் நிசமானால் உலகம் வசமாகும்



"இந்தா சார், உன் கூலியும் நீயும் நீயே வச்சுக்க, நாஷ்தா பண்ணு" என்று சொல்லி ரிக்ஷாக்காரன் பணத்தைக் கையிலே கொடுத்துவிட்டுப் போய்விடுவான். கூட ஒரு காலணா கொடுக்க எண்ணிய பிரபு, அதையும் மணிபர்சில் போட்டுவிட்டு, 'போடா நீ போ, நான் நாஸ்தா பண்ணறேன், போ!'' என்று ஆணவத்துடன் பதில் சொல்லுவார். ஆனால், அந்த ரிக்ஷாக் காரனின் வயிற்றுப்பசி அவனை அதிக தொலைவு நடக்கவிடாது என்பது அவருக்குத் தெரியும்.

நாலணா வாடகை கொடுப்பவரே இப்படி என்றால், நாலு ஊருக்கு ராஜாவாக இருக்கும் மதன்பூர் மகாராஜா மற்றவர்களைப் பற்றி என்ன நினைப்பார்? 'பெரிய வீரன் மாதிரி இறங்கிப் போகிறான் இந்தச் சண்முகசுந்தரம். இன்னும் இரண்டே நிமிஷத்தில் திரும்பி வந்து என் பெட்டியைக் கொடுங்கள் என்று கெஞ்சுவான்' என்றுதான் அவர் எண்ணினார். ஆனால், சண்முகசுந்தரம் சிறிதும் செல்வத்தைப் பொருட்படுத்தாமல், இறங்கிச் செல்வதைக் கண்ட போது அவருடைய மனத்தில் தீ வைத்தது போல் இருந்தது. அதே சமயத்தில் கேட்ட இலங்கைத் தமிழர்களின் ஜயகோஷம், அந்த நெருப்பில் எண்ணெய் வார்த்தது. அவருடைய கோபம் எல்லை மீறியது. இதுவரை அகந்தையால் அவருடைய கண்கள் பாதிதான் மறைந்திருந்தன. இப்பொழுது கோபமும் சேர்ந்து அவரைக் குருடனாக்கியது.

அதற்குள் கவர்னரின் காரியதரிசி சண்முகத்தைப் பார்த்துவிட்டு, ''யார் இந்த ஜெண்டில்மென்?'' என்று கேட்டார். அவனை ஜெண்டில்மென் என்று சொல்லியதே, ராஜாவுக்குப் பிடிக்கவில்லை. "அவனைப்பற்றி உங்களிடம் சில விஷயங்கள் பேச வேண்டும்" என்று சொல்லிவிட்டு, மேல் தட்டை நோக்கி வேகமாக நடந்தார். அதிகாரிகள் தொடர்ந்தார்கள்.

சண்முகசுந்தரம் இலங்கையிலேயே தங்கப்போகிறான் என்று தெரிந்தவுடனே, சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிந்தது போல இருந்தது. இலங்கையில் உள்ள கலையன்பர்களுக்கு. அவர்கள் சந்தோஷத்தில் ஆரவாரம் செய்துகொண்டிருந்தார்கள். அதே சமயம் ஒரு புறத்தில் நட்டுவனார் முணுமுணுத்தார்.



"இலங்கையிலே இருக்கிற காலம் முழுக்க இனி பட்டினியா இருக்க வேண்டியதுதான். ஏம்மா மோகனா, என் பெட்டியை மாத்திரம் வாங்கிக் கொடுத்துடேன்" என்று இரகசியமாகக் கேட்டார் முத்துக்குமர நட்டுவனார்.

"நட்டுவனாரையா, நான் எப்படிப் போய் அவங்க கிட்டே கேட்கிறது? எங்கே போகும் பெட்டி?" என்றாள் மோகனா.

"அட, பெட்டி போனாப் போகுது அம்மா. அதிலே என்ன வைரக்கடுக்கனா வைச்சிருக்கிறேன்? நம்ப பூசைப் பெட்டி அதிலே இருக்குது. சிவபூசை பண்ணாமல் எப்படிச் சாப்பிடுவது?" என்றார் நட்டுவனார்.

"நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம், அன்பே மஞ்சன நீர், பூசை கொள்ள வாராய் பராபரமே" என்று முனங்கினான் வரதன்.

"நீ சும்மா இரு வரதா. ஐயாவின் வயத்தெரிச்சலை அதிகப் படுத்தாதே! இதெல்லாம் அந்த வைத்தியின் வேலை" என்றாள் மோகனா.

"உனக்கு அவரைப்பற்றிச் சொல்லாட்டி பொழுதே போகாது. அந்த ஆளு என்ன செய்வாரு? நம்பதான் ராஜா கிட்டே 'ஏதோ நாங்க செஞ்சது தப்பு. பெட்டியைக் கொடுங்கோ'ன்னு கேக்கிறது வணங்காமே போக ஆரம்பிச்சோம். வாசப்படி இடிக்குது விரலுக்குத் தகுந்த வீக்கம் வீங்கினாத்தானே நல்லா இருக்கும்? விரை உரலானா உரல் உத்தரமாகுது" என்று மொடுமொடுத்தாள் வடிவாம்பாள்.

"சும்மா இருங்க அம்மா. அவர் பார்க்காரு."

"பார்த்தால் என்ன? இந்தா, புடவை, துணி எல்லாந்தான் பிரசண்ட் பண்ணியிருக்காங்க. எல்லாம் பதினெட்டு வயசுப் பொண்ணு கட்டிக்கிற மாதிரியாத்தான் இருக்குது. நாப்பது வயசு பொம்பளை கட்டிக்கிற மாதிரி ஒரு புடவைகூட இல்லையாம்னு சொல்லு" என்று வயிற்றெரிச்சலுடன் வரதன் பக்கம் திரும்பினாள் வடிவாம்பாள்.

"ஏய் வரதா, நீயாவது போய்க் கேக்கக் கூடாதா அந்த ராஜா கிட்டே?" என்றாள். வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த வரதன் திடுக்கிட்டுத் திரும்பினான்.

"அட எம்மா, அதைப் போயி கேட்டுக்கிட்டு அந்தக் கட்டை அதுக்கெல்லாம் மசியாது" என்றான்.

"என்னடா, மசியாது?"

"இல்லே அம்மா, அது நாலு கட்டைக் கட்டை. நான் ஐந்தரைக் கட்டைக்கு ஏற்றியிருந்தேன். இந்த வரதனைத் தவிர இன்னொரு கைக்கு அது வாசிக்க வராது. அதைப் பத்தி நீங்க கவலைப்பட வேண்டாம். தப்பித் தவறி மகாராஜா கையாலே தொட்டாரு அவரு பஜனை மடத்துக்குப் போக வேண்டியதுதான்!"

இதைக் கேட்டுச் சிரித்தாள் மோகனா.

"உனக்குச் சிரிப்பும் வருதே!" என்று சீறினாள் தாய். "ஏண்டா, நம்ப பெட்டி படுக்கையெல்லாம் எடுத்துக்கிட்டு வரணும்னா—"

"அது என்னத்துக்கம்மா? அந்த மகாராஜாவே பிழைக்கட்டும்"

"ஆமாம். உனக்கு உலகத்திலே ஏதாவது அக்கறை இருந்தால் தானே? சோறு கண்ட இடம் சொர்க்கம்."

"அதான் அம்மா எப்பவும் நல்லது ஆசைப்பட்டுச் சேத்துப்புட்டு ஐயோ காணோமேன்னு பிறகு வருத்தப்படக்கூடாது. இதெல்லாம் தெரிஞ்சுதானே, இந்தக் கட்டை கலியாணங்கூடக் கட்டிக்கல்லே!" என்று வரதன் வேதாந்தத்தில் இறங்கினான்.

தருமனும் அப்படிப்பட்ட ஆள்தான். அந்தக் தருமபுத்திரர் தருமம் கொடுத்து தர்மர் என்று பெயர் எடுத்தார் நம் தருமன் வாங்கியே பெயர் பெற்றான். இதுதான் வித்தியாசம்.

"என்ன தவுல்காரரே. ஒரு அரையணா இருந்தா கொடுங்களேன் பொடி மட்டை வாங்கணும்" என்றான் தருமன்.

"இருந்தால் ஒரு அணாவா எடுத்துக்கிட்டுப் போயி, எனக்கும் ஒரு மட்டை சேத்து வாங்கிட்டு வாங்க" என்றார் முத்துராக்கு.

"ஆமாம், தங்க நாயனத்தைப் பெட்டியிலே விட்டுட்டமே, இந்த வைத்தி சிமையிலே அதை எடுத்து....."

"ஏன், வாசிச்சிடுவாரோ?"

"அட வித்துப்பிட்டாருன்னா?"

"பின்னே என்ன, வச்சுக்கிட்டு கச்சேரி பண்ணவா போறாங்க? தம்பி பிடிவாதந்தான் தெரிஞ்சதாச்சே!"

"அது பிடிவாதத்திலே இறங்கலே தவுல்காரரே. மாமியாரும், மருமகனும் இப்ப ராசியா போயிட்டாங்க. 'இறங்கு இலங்கையி லேன்னு' அந்தப் பொண்ணு சொல்லியிருக்குது. நாயனக்காரர் இறங்கிட்டாரு. இனிமே நாளை முதற்கொண்டு நமக்குத் தனி வண்டிதான்."

"போங்க தருமண்ணே. உங்களுக்கு சமய சந்தர்ப்பம் தெரியாது. நான் தவுல் போச்சேன்னு கவலைப்படறேன். நீங்க என்னமோ காதல் வின்னியாசம் செய்யறீங்க!"

"தவுல் கப்பலிலே இருந்தா என்ன, கடலிலே இருந்தா என்ன? நமக்குத்தான் இன்னும் ஆறு மாசத்துக்குக் கச்சேரி கிடையாதே!"

"ஏன் இல்லே!"

"முதல்லே நாயனம் இல்லே. அதைப்பத்தி தம்பிக்கு இப்போ ஞாபகமும் இல்லே. ஏன் தவுல்காரரே, நான் கேக்கறேன், இந்த ஆசையிலே என்னதான் இருக்குது?" என்று தருமன் மிகுந்த விரக்தியுடன் கேட்டான்.

"உங்க இளைய குடியானைக் கேளுங்க" என்று அவர் குடாக்கப்



பதில் கொடுக்கவே, இதைக் கேட்ட தருமன் அந்தப் பேச்சை அத்துடன் நிறுத்திக்கொண்டான்.

"ஆமா, நாதஸ்வரப் பெட்டியை வச்சுட்டு எந்த வித்வானாவது இறங்குவாங்களா?"

"இறங்கினா என்ன தருமண்ணே, வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்."

"ஏன், புல்லிலே ஊதலா வரும்?"

"ஏன், கிருஷ்ண பாமாத்மா அதிலேதானே ஊதினாரு!"

"அது கிருஷ்ணனுக்குச் சரி, தவுல்காரரே நம்ப தம்பிக்கு புல்லாங்குழல் வேண்டாம் தவிலும் ஒத்தும் தன்னுடையதாகிவிடும்— கொளும்பிலே அதுக்கு இருக்கிற கிராக்கிக்கு, இன்னிக்குக் கையிலே நாதசுரம் இருந்தா ஒரு நூறு கச்சேரியாச்சும் நடக்குமே நல்ல சான்சில்லே—!"

"அட வித்துவான் நினைச்சா வாத்தியத்துக்கா பஞ்சம்?"

"இது ராசியான வாத்தியமில்லே?"

"இதைக்காட்டிலும் உங்க ஒத்து நாயனந்தான் அண்ணே ராசியானது ஊத ஆரம்பிச்சுட்டா ஊதிக்கிட்டே இருக்க வேண்டியதுதான்."

"நாதசுரம் இல்லாமே நான் எங்கே ஊதறது? இந்த நாதசுரம் கடையிலே விக்கிற வாத்தியமும் இல்லே, ஏதோ பத்து ரூபாயைக் கொடுத்தோம், ஒரு குழாயைக் கொடுத்தான், வாங்கி ஊதினோம்னு உண்டா? அட, ஒரு பியாண்டையாவது தம்பி வாசிக்கக் கத்துக்கிட்டுதா? எந்த ஊர்க் கடையிலேயும் கிடைக்கும் சும்மா உப்பு, புளி, மிளகாய் வாங்கிற மாதிரி வாங்கி ஊதிப்புடலாம்."

"தருமண்ணே, பேசாமல் நீங்க அதையே கத்துக்கங்க, உங்களுக்கு அதுதான் லாயக்கு."

"எனக்கு நல்லா வாசிக்க வருங்கிறீங்களா?" என்றான் ஆவலுடன்.

"இல்லை அண்ணே, முப்பது பேர் சேர்ந்து வாசிக்கிற வாத்தியமில்லே? கூட்டத்திலே கோவிந்தா! உங்க அபசுரம் ஒருத்தர் காதிலேயும் விழாது."

"சும்மா இருங்க தவுல்காரரே. ஒத்திலே பிசிறடிக்குதுங்கறதுக்காக கிண்டல் பண்றீங்களாக்கும்! சரி சரி, தம்பி பாக்குது" என்றான் தருமன்.

ஆமாம் சண்முகசுந்தரத்தின் பார்வை தன் பக்க வாத்தியக்காரர்களின் மேல் சென்றது தன்னுடைய அன்புக்குப் பயந்து அவர்கள் அத்தனை பேரும் விரித்துப்படுத்திருந்த படுக்கையைக்கூட எடுக்காமல் வந்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்தவுடனே, அவனுடைய நெஞ்சம் உருகியது. அவர்கள் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால், தன்னையும் கட்டுப்படுத்தி இருப்பார்கள் என்பதை உணர்ந்தான். தான் சிறு வயது முதல் பழகிய அந்த நாதசுரத்தை, தனக்கு இவ்வளவு

பெருமைகளையும் அளித்த அந்தச் செல்வத்தை, தான் கொஞ்சிக் கொஞ்சி மழலை பழகிய அந்தக் 'குழந்தை'யைக்கூட எடுத்துக் கொள்ளாமல் இறங்குகின்றோம் என்று எண்ணும்போது, அவனுக்குக் கண்ணே கலங்கியது. ஆயினும் மானமே பெரிதென மதிப்பவன் ஆகையால், தன் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டான். அப்பொழுது சிற்றம்பலம் குமாரசாமி அவர்களின் கண்கள் அங்கிருந்த சூழ்நிலையைக் கூர்ந்து நோக்கின.

திரு. சிற்றம்பலம் குமாரசாமி அவர்கள் பிறந்ததே நல்லூர். குணத்தில் நல்லார். செல்வத்திலும் குறைவற்றவர். பண்புகளை யெல்லாம் 'பால' பாடமாகவே படித்து அறிந்தவர். அரசியல் துறையில் பல தொண்டுகளில் அவர் ஈடுபட்டிருந்தாலும், அவர் ஒரு கட்சிவாதியல்ல. எந்த நல்ல காரியங்கள் செய்வதற்கும் அவரிடந்தாம் ஊர் மக்கள் முதல் கையொப்பம் வாங்குவார்கள். அவர் கையொப்பம் போட்டு ஆரம்பம் செய்த எந்தக் கட்டடமும் இன்றுவரை பாதியில் நின்றதில்லை. ஏனெனில், மீதியை அவரே கட்டிவிடுவார் !

இலங்கையில் இன்று இருப்பது போலவே அன்றும் சிங்களர், தமிழர் ஆகிய இரண்டு இனத்தாருந்தாம் இருந்தார்கள். ஆனால் இருவரும் வெள்ளையர்களுக்கு அடங்கி வாழ்ந்ததால் அன்று மிகவும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தார்கள். உரிமையும் கடமையுமில்லாத போது வேற்றுமையேது? இந்த இருசாரார் இடையேயும் சிற்றம்பலம் குமாரசாமி அவர்களுக்கு நல்ல செல்வாக்கு உண்டு. இவர் பெரும் செல்வத்துடன் இருக்கிறார் என்பதற்காகச் சிங்களவர்களில் யாரும் அவரை வெறுக்கவில்லை. தமிழர் யாரும் அவர் மேல் பொறாமை கொள்ளவில்லை. அவர் பெரிய வியாபாரி என்ற முறையில் ஆங்கில அரசாங்கமும் அவரை மதித்துப் பல பட்டங்கள் கொடுத்துத் தட்டிக் கொடுத்திருந்தது. அத்தனை செல்வாக்கு இருந்தும் அவர் மாத்திரம் மிகுந்த தன்னடக்கத்துடன் வாழ்ந்து வந்தார்.

சண்முகம் முதலியவர்களின் நிராதரவான நிலையை அவர் புரிந்து கொண்டார். புரிந்துகொண்டாலும் அதைக் காட்டிக்கொள்ளாமலும் நடந்துகொண்டார். ஒருவருக்கு இன்பம் வருங்காலத்தில் எவ்வளவு தான் அவரிடம் அதைப்பற்றிப் பேசினாலும் உள்ளம் மகிழும். ஆனால் துன்பம் வருங்காலத்தில், " சும்மா கவலைப்படாதீர்கள். நான் இருக்கிறேன்' என்று அவரிடம் சொல்வதுகூட நன்றாக இருக்காது. அனுதாபத்தை அதிகம் சகிக்கமாட்டார்கள். ஆதலால் குமாரசாமி மிகவும் வினயமாக சண்முகத்திடம் வந்தார்.

அவன் பெட்டி படுக்கை ஒன்றும் இல்லாமல் இறங்கி இருப்பதையும், மோகனாவின் முகத்திலும், வடிவாம்பாளின் முகத்திலும் வருத்தக் குறி தென்படுவதையும் பார்த்துப் பாராததுபோல் பின்வருமாறு பேசினார்.



"உங்கள் சாமான்கள் எல்லாம் பின்னால் வருகின்றனவா?" என்று வினயத்துடன் கேட்டார்.

"வந்தாலும் வரும்" என்றான் சண்முகசுந்தரம்.

"அப்படியானால் நாம் சற்று 'கஸ்டம்' ஆபீஸில் இருப்போம். எதற்கும் சுங்கவரி இலாகாவினர் சோதனை செய்யும்போது, நாமும் இருப்பது நல்லது" என்று கூறினார் சிற்றம்பலம்.

அந்த நிறைகுடம் தளும்பாமல் இருப்பதையும், அந்தக் கோமகவரனின் பேச்செல்லாம் குளிர்ந்திருப்பதையும், அடக்கம், ஒடுக்கம், முதலியவைகளுக்கு உறைவிடமாக அவர் விளங்குவதையும் கண்ட சண்முகசுந்தரம், உண்மையில் தன்னைக் கட்டிய அவாள்றோ அரசன் என்று எண்ணினான்.

"மோகனாம்பிகை, ஏன் வருத்தமாக இருக்கிறீர்கள்?" என்றார் குமாரசாமி.

"என் பெயர் மோகனாம்பிகையல்ல, மோகனாம்பாள்தான்" என்று அவள் சிரித்துக்கொண்டே சொன்னாள்.

ஆனால் வடிவாம்பாளோ, " இந்த அநியாயத்தை ஏன் கேக்கறீங்க? பெட்டி, படுக்கையெல்லாம் எடுக்கவிடாமே, என்னமோ சோதனை பண்ணறேன்னு சொல்லிக் கப்பலிலேயே வச்சுக்கிட்டாங்க" என்று கூறினாள்.

குமாரசாமி பதறவில்லை. "என்ன பிள்ளையவர்களே ! என்ன தர்க்கம் கப்பலிலே?" என்றார்.

"மகாராஜாவுக்கும் எனக்கும் சிறிது மனத்தாங்கல். அதனால் ஏதோ வைரத்தைக் காணோம் என்றும், எங்கள் பெட்டிகளைச் சோதனை போட வேண்டுமென்றும் சொன்னார்கள். ஆனால் சோதனையும் போடவில்லை. இப்படிச் சொல்லிக்கொண்டே நேரத்தைக் கடத்திவிட்டால் பெட்டிக்காக நான் கப்பலிலே தங்கிவிடுவேன். பிரயாணத்தைத் தொடர்ந்துவிடுவேன் என்று அவருக்கு எண்ணம். சிப்பை ஒளிச்சு வச்சுட்டா திருமணம் நின்று போகுமா? அதனால் பாதகமில்லை, வாருங்கள்" என்று சண்முக சுந்தரம் சொல்லவே, "சரி, வாருங்கள், போவோம்" என்று சிற்றம்பலம் குமாரசாமி அவர்களை அழைத்துக்கொண்டு வெளியே சென்றார்.

சிற்றம்பலம் குமாரசாமி அவர்கள், கப்பலிலிருந்து அவர்களைச் சிறிது நேரம் இறங்கச் சொல்லி, தமிழ்நாட்டுக் கலைஞர்களுக்கு மரியாதை செய்யும் எண்ணத்தில்தான் அங்கு வந்தார். வாசலிலே சுவாமி வருகிறது, வீட்டுக்காரர் தேங்காய் உடைக்கிறார். வாசலிலே துறவி செல்கிறார், வீட்டுக்காரர் கையெடுத்துக் கும்பிடுகிறார். முன்பின் பார்க்காத குழந்தையொன்று நாம் கடையில் தின்பண்டம் வாங்கும் போது பக்கத்தில் நிற்கிறது. அந்தக் குழந்தையின் கையில் இரண்டு பெப்பர்மிண்டை வாங்கிக் கொடுக்கிறோம். மரியாதை செலுத்துவதற்கும், வணக்கம் செலுத்துவதற்கும் அன்பைச்

காட்டுவதற்கும் முன் பின் பழகியவர்கள்தாம் வேண்டுமென்பது அவசியம் இல்லை. அப்படி இருக்கையில், நெடுநாளாக எதிர்பார்த்த இரு கலைஞர்கள் கஷ்டத்தில் இருக்கிறார்கள் என்ற செய்தியை அறிந்தவுடனே அவர் மனம் சொல்லொணா வேதனையை அடைந்தது.

எல்லோரும் வெளியே வந்தார்கள். வாசலிலே இரண்டு அழகிய குதிரைகள் பூட்டப்பட்ட பீட்டன் ஒன்று நின்றுகொண்டிருந்தது. அந்த வண்டியில் முதலில் சண்முகசுந்தரம், மோகனா, வடிவாம்பாள் முதலியவர்களை ஏறி அமரச் சொல்லி அனுப்பினார். வேறு ஒரு வண்டியில் அவர்களுடைய கோஷ்டியினரையும் அனுப்பிவிட்டு, குமாரசாமி மாத்திரம் அங்கு தங்கினார். பக்கத்தில் இருந்த காரியஸ்தரிடம், "நான் இந்தக் கேப்டனைப் பார்க்க விரும்புகிறேன்" என்று சொன்னார். அவர் சொன்னதுதான் தாமதம், சுங்க இலாகாவின் அதிகாரி ஓட்டமாய் ஓடி, கீழே நின்ற கேப்டனை அழைத்துக்கொண்டு வந்தார்.

"சண்முகசுந்தரத்தின் பொருள்களை ஏன் கப்பலிலிருந்து இறக்க வேண்டாமென்று உத்தரவிட்டீர்கள்?" என்று அவர் கேட்கவே, "நான் ஒரு உத்தரவும் போடவில்லை. அது அந்த மகாராஜாவின் சூழ்ச்சியாக இருக்கலாம்" என்றார் கேப்டன்.

"நீங்கள் உத்தரவு போடாமல் இருக்கலாம். ஆனால் கப்பலில் நடக்கும் எந்தக் காரியத்திற்கும் நீங்கள்தாமே பொறுப்பானவர்கள்? மகாராஜாவின் அநீதி உங்கள்மீது அல்லவா பிரதிபலிக்கும்?" என்று சிரித்துக்கொண்டே கூறிய குமாரசாமி அவர்கள், "நான் வருகிறேன், வணக்கம்" என்று சொல்லிவிட்டு, தமது வண்டியில் ஏறி அமர்ந்தார். கேப்டன் கீழே நின்றுகொண்டிருக்கையிலேயே அவருடைய வண்டி பறந்தது. கேப்டன் மலைத்தார். பக்கத்தில் இருந்தவரிடம், "அவர் யார்?" என்று கேட்டார்.

"அவரு யாரா! பெரிய கமக்காரர். இன்று உங்க கப்பலிலே ஏற்றிச் செல்லும் தேயிலைப் பெட்டிகள் அவ்வளவும் அவருடையன" என்று பக்கத்தில் மலை போல அடுக்கி வைக்கப்பட்டிருந்த தேயிலைப் பெட்டிகளைக் காண்பித்தார் சுங்க அதிகாரி.

ஆங்கிலேயர்கள் தாட்சண்யத்திற்காக எதையும் செய்வார்கள். ஆனால் சட்டத்தை மட்டும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். அப்படி விட்டுக்கொடுத்தாலும் அதற்கொரு சட்டம் செய்துதான் விட்டுக் கொடுப்பார்கள். தங்கள் நாட்டின் கௌரவத்தைப் பாதுகாப்பதில் அவர்களுக்கு அவர்களே நிகர். கப்பல் தலைவன் ஒரு ஆங்கிலேயன். தன்னுடைய கடமையில் மகாராஜா தலையிட்டார் என்ற கோபம் ஒரு புறம் இருக்க, தன்னுடைய வாடிக்கைக்காரர் ஒருவரின் மனம் இதனால் புண்பட்டுவிட்டதே என்ற ஆத்திரமும் கொண்டான். வெகு வேகமாக கப்பலில் ஏறினான் கேப்டன்.



மகாராஜாவின் அறையில் "அந்த மனிதன் என்னை அவமதித்து விட்டான். என்னிடம் பணத்தை வாங்கிக்கொண்டு, சீமைக்கு வரமாட்டேனென்று கூறிவிட்டான். அவனை நீங்கள் இலங்கையில் தவிக்கும்படி செய்யவேண்டும். அவனுக்கு எந்த விதமான வசதியும் இங்கே கிடைக்கக் கூடாது" என்று கவர்னரின் காரியதரிசியிடம் கூறினார் மகாராஜா.

"எஸ் யுவர் ஹைனஸ், அவன் மேல் ஏதாவது திருட்டுக் குற்றம் இருந்தால் சொல்லுங்கள். அவனுக்குப் பாடம் கற்பிக்கிறோம்" என்றார் காரியதரிசி.

அதற்குள் வைத்தி முன்வந்தார். "ஆமாம், பெரும் குற்றம் உண்டு. மகாராஜாவின் இன்னொரு ஆர்ட்டிஸ்டை அவன் கலைத்து இழுத்து விட்டான்."

"கலைக்கப்பட்டவரும் மனிதர்தானே?"

"ஆமாம்."

"அவர் ஒப்புக்கொண்டதால்தானே அவரைக் கூட்டிக்கொண்டு போய் இருக்கிறார்?"

"அல்ல, பலாத்காரமாக...!"

"அப்படி அந்தப் பெண் 'ரிப்போர்ட்' செய்தால் உடனே நாங்கள் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்கிறோம், யுவர் ஹைனஸ்" என்றார் அந்த அதிகாரி.

"என்ன சார், சமயத்திலே சட்டத்தைப்பற்றியெல்லாம் பார்க்கலாமா? முதல்லே அவனைப் புடிச்ச உள்ளே தள்ளுங்கோ சார். அப்புறம் சட்டத்தைப் பார்க்கலாம்" என்று உரிமை கொண்டாட ஆரம்பித்தார் வைத்திஜி! இந்தக் குறுக்கீட்டைக் கண்டவுடனே காரியதரிசிக்குக் கோபம் வந்தது.

"யார் இவர்?" என்று மகாராஜாவைப் பார்த்துக் கேட்டார்.

"அந்த மனிதர்தாம் அவ்வளவு குற்றத்துக்கும் காரணம்" என்று சொல்லிக்கொண்டே அப்போது கேப்டன் உள்ளே நுழைந்தார்.

"கேப்டன் சார், நாங்கள் அந்தரங்கமாகப் பேசிக்கொண்டிருக்கிறோம்" என்று மகாராஜா கேப்டனை முறைத்துப் பார்த்தார்.

"இது என்னுடைய கப்பல், நான் எங்கும் வருவதற்கு அதிகாரம் உண்டு. நீங்கள் பெரிய பிரயாணியாக இருக்கலாம். மகாராஜாவாகவும் இருக்கலாம். என் கப்பலைப் பொறுத்தவரையில் எனக்கு நீங்களும் ஒன்றுதான், சண்முகசுந்தரமும் ஒன்றுதான். இருவரும் பிரயாணிகளே! சண்முகத்தின் பொருள்களை நீங்கள் ஏன் எடுக்கவிடவில்லை?" என்று ஒரு கேள்வியைக் கேட்டார், அந்த வெள்ளைக்கார அதிகாரி.

மகாராஜா விழித்துக்கொண்டார். தாம் ராஜா என்ற கனவு கலைந்தது. கப்பலின் சட்டப்படி தாம் செய்தது பெரிய குற்றம் என்பதை உணர்ந்தார். "இம்மாதிரி சில்லறை விஷயங்களில் நான்

தலையிடுவது இல்லை ஆஸ்க் மிஸ்டர் வைத்திஜி" என்று வைத்தியின் பக்கம் ஆள்காட்டி விரலைக் காட்டினார். வைத்திக்கு வெலவெலத்தது.

"இல்லே, மகாராஜாவோடே வைரத்தைக் காணோம். அதனாலே பெட்டிகளையெல்லாம் சோதனை போடணும்னு தோணித்து."

"என் கப்பலில் உள்ள பிரயாணிகளின் பெட்டிகளைச் சோதனை போட உமக்கு அதிகாரம் ஏது?"

"பின்னே, வைரம் போச்சுன்னா பாக்காமே இருப்பாங்களா?"

"உனக்கு அந்த அதிகாரம் கிடையாது."

"அதிகாரம் பெரிசா, வைரம் பெரிசா, சார்? திருட்டுக் குடுத்தவன் தேடப்படாதுன்னு ஒரு சட்டமா?— என்ன கவர்ன்மெண்ட் சார், இது?"

"ஷட் அப். அவருடைய அறைக்கு வாரும்" என்று சொல்லி, வைத்தியை அழைத்துக்கொண்டு மோகனாவின் அறைக்குள் நுழைந்தார் கேப்டன். அவ்வளவு பொருள்களும் கேப்டனின் முன்பு சோதனை போடப்பட்டன. வைத்திதான் ரொம்ப அக்கறையாகத் தேடினார். களவு போய் இருந்தால்தானே அகப்படும்? வைத்தியின் வைரம் நெஞ்சில் அல்லவா இருக்கிறது!

"எங்கே, வைரத்தைக் காணோமே?" என்றார் கேப்டன்.

"பையிலே போட்டுக்கிட்டு வெளியே போயிருப்பாங்களோ என்னமோ?"

"மிஸ்டர் வைத்திஜி! நீர் எப்பேர்ப்பட்டவர் என்பது எனக்குத் தெரியும். நான் நினைத்துவிட்டால் உம்மை இப்பவே கைது செய்யலாம். ஜாக்கிரதை!" என்று கேப்டன் கூறினார். அதைக் கேட்ட வைத்திக்கு ஒருபுறம் கோபமும், ஒருபுறம் அதிகமாகப் பேசினால் தம்மைப் பிடித்து உள்ளே தள்ளிவிடுவானோ என்ற பயமும் ஏற்பட்டன.

இருந்தாலும் பக்குவப்பட்டவர் ஆதலால், "சரி சார், என்னைக் கைது பண்ணினாலும் பாதகமில்லே அந்த வைரத்தை மட்டும் நீங்க தான் தேடிக் கண்டுபிடிக்கணும்" என்று கேப்டனிடம் கெஞ்சினார். கேப்டன் அவர் முகத்தைக்கூடப் பார்க்காமல் தம் அறைக்குச் சென்றார்.

வைத்தி முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு மகாராஜாவின் அறைக்கு வந்து சேர்ந்தார். தம்மை வரவேற்க வந்தவர்களைக் கீழே அனுப்பிவிட்டுத் தனியே இருந்த மகாராஜாவிடம் "என்ன, ஏதாவது முடிஞ்சுதா? அதிகாரிகள் ஒத்து வந்தார்களா?" என்றார் வைத்தி.

"ஆமாம் வைத்திஜி. பூ மாலையைக் கையில் வைத்துக்கொண்டு கழுத்தில் போடக் காத்துக்கொண்டிருந்த அந்தப் பெண் எப்படி அதற்குள் மனம் மாறி அவனுடன் இறங்கினாள்?" என்று அதுபல்லவியைத் தொட்டார் மகாராஜா.



"அதுதான் மகாராஜா ஸ்திரீ சித்தம் என்கிறது. அத்திப் பூவைப் பார்க்கலாம். வெள்ளைக் காக்காயைக் காணலாம். நீரில் நீந்துகிற மீனின் கால்களைக்கூடக் கண்ணால் காணலாம். ஆனால் 'நாரி ஹிருதயஸ்திதம்'—"

"அது என்ன, நன்னாரியா? அது ஷர்ப்பத் அல்லவா?"

"ஷர்பத்தில்லை நாரி-அதாவது பெண்களின் மனத்தில் என்ன இருக்கிறது என்று பார்க்க முடியாது என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். திடீரென்று ஒரு நாளிலே 'சேஞ்ச்' பண்ணிட்டாளே மைண்டை! இந்த சாஸ்திரம் மாத்திரம் பொய்யே ஆகாது" என்று தம் புளுகுக்கு சாஸ்திரத்தில் ஆதாரம் தேடினார் வைத்தி.

"சரி, ஒரு ஸ்டாம்பு பேப்பர் எடுத்துக்கொண்டு ஒரு டைபிஸ்டை வரச் சொல்லுங்கள்" என்றார் மகாராஜா.

பாரத மாதாவின் நின்ற திருக்கோலந்தான் இந்தியா. அதன் திருவடியில் அலங்கரித்த தாமரை மொட்டுத்தான் இலங்கை.

ஆம், உண்மையில் அதுவும் ஒரு தாமரைதான். அவள் பொன்மேனி முழுவதுமே மலர் மேனி. எங்கும் வண்ண மலர், எங்கும் நறுமணம். காஷ்மீரத்தை வடநாட்டின் நந்தவனம் என்றால், இலங்கையைத் தமிழ்த்தாயின் பூந்தோட்டம் என்றே சொல்லலாம். அந்தோ! காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல் கொண்டது போல், அதுவேதான் வீட்டையும் தோட்டத்தையும் வெட்டிவிட்டதோ என்னவோ! அந்த நாட்டின் விளைபொருள்கள் யாவும் விலை பெற்ற பொருள்கள். காப்பியும், தேயிலையும், கொப்பரையும், கொக்கோவும் உலகத்துக்கு அருளும் தாய் அவள். அவள் இதழ் விரித்தால் அழகு பொங்கும் தாமரை மலர் இதழ்களைத் தனம் என்பார்கள். இலங்கைத் தனங்கள் தாம் இன்று உலகில் உள்ள பெரும்பான்மையான ரத்தினங்கள். அவள் தந்த மணி மலர்கள் சூடாத மணி மகுடங்கள் இல்லை. சிவப்பு, நீலம், புஷ்பராகம், வைடூரியம் முதலிய ரத்தினங்களால் உலகில் ஒளி வீசும் அருமைச் சகோதரி அவள்.

ஒரு வைத்தியரிடம் ஒரு நோயாளி செல்கிறார். "பார்த்துக் கொள்ளப் போகிறேன்" என்று சொல்லுகிறார். இந்த வார்த்தையில் தான் எத்தனை சந்தேகம்? இலங்கை விஷயத்தில் இந்தச் சந்தேகமே கிடையாது. முன்பெல்லாம் அங்கு செல்லும் சிலர் "பிழைக்கப் போகிறேன்" என்றே நிச்சயமாகச் சொல்லிவிட்டுச் செல்வார்கள். பிணி நோய் தீர்ப்பவள் அவள். வற்றாத செல்வமும் மாறாத வளமும் கொண்ட முற்றாத இளமுகை இலங்கை.

அந்த நாட்டின் தலைநகர் கொழும்பு. அங்கு உள்ள ஹோட்டல் என்றால் கேட்க வேண்டுமா? உள்ளேயே ஒரு கடை வீதி இருந்தது. ஹோட்டலில் நான்கு அறைகளில் இறக்கி வைக்கப்பட்டார்கள் சண்முகம் கோஷ்டியார். வடிவாம்பாள் மெல்லத் தன் அறையை விட்டு வாசலில் வந்து அந்தக் கடை வீதியில் உள்ள கடைகளை

ஒவ்வொன்றாக ஆச்சரியத்துடன் பார்த்தாள். ஒரு கடை அவள் கவனத்தைக் கவர்ந்தது.

அங்கு உள்ள வியாபாரி மிகுந்த சமரச மனப்பான்மை உடையவராகக் காட்சி அளித்தார். ஒரு மேஜையின் மேல் ஒரே உயரத்தில் இரண்டு அழகிய வெள்ளி விக்கிரகங்களை வைத்திருந்தார். இரண்டும் அபூர்வமான வேலைப்பாட்டுடன் விளங்கின. இரண்டுக்கும் கண்களில் நீலமணிகள் பதிக்கப்பட்டிருந்தன. அந்தச் சிலைகள் பேசிப் பேசி அவளை அழைத்தன. அவற்றுள் ஒன்று நடராஜ விக்கிரகம். மற்றொன்று புத்தர்பிரான். இந்த இரண்டு சிலைகளையும் வாங்கி, தன் மகள் ஆடப் பயிலும் மாடியில் அலங்கரித்து வைக்க வேண்டும் என்ற ஆசை வடிவாம்பாளுக்கு வந்தது. தாய் மனமல்லவா? கடைக்கு அருகில் சென்றாள். என்ன விலை என்று கேட்க வாயைத் திறந்தாள். ஆனால் பேச்சு வரவில்லை. கண்ணீர் வந்தது. ஆம், அப்போதுதான் அவளுக்குத் தங்களிடம் கையில் காலணாக்கூட இல்லை, எல்லாம் பெட்டியில் கப்பலில் அகப்பட்டுவிட்டன என்ற நினைவு வந்தது. அழுதுகொண்டே தன் அறைக்குள் நுழைந்தாள். எதிரில் இருந்த தன் மகள் மேல் பாய்ந்தாள்.

"இப்படித்தான் ஆகும்! தன் இஷ்டப்படி ஆடுகிறது என்று வந்தால்!" என்றாள் வடிவாம்பாள்.

"எதற்கம்மா இப்படிக் கடுகடு என்று பேசுகிறீர்கள்?"

"ஆமாம் பொண்ணே, உன் இஷ்டத்துக்கு நீயாத்தானே தேடிக்கிட்டே, திண்டாடு. உன் அளும்பு இப்ப கொளும்புலே கொண்டாந்து திண்டாட விட்டுட்டுது. சாமியே சதம் சதம்னு ஒரு சத்தத்துக்கு வழியில்லாமே ஆக்கிருச்சு. நேத்து ராத்திரி நாம்ப இருந்த இருப்பு என்ன, இப்ப இருக்கிற நிலை என்ன?"

"என்ன அம்மா திண்டாட்டம்?"

"ஆமா, பின்னே என்ன? இந்த வடிவாம்பா அம்மா அன்னிக்கு சிற்றம்பலத்துக்குக் காகிதம் எழுதாட்டி உன்னையும் நாயனக்காரனையும் இங்கு யாரு கவனிக்கப் போறாங்க? கொளும்பு வீதியிலே நிற்க வேண்டியதுதான். ஒரு மாத்துப் புடவை உண்டா? மல்லியப்பூ வாங்க ஒரு சல்லி உண்டா? ஒரு தென்னைமாரச் சல்லிக்கு வக்கில்லை! அதுக்குத்தான், குட்டுப்பட்டாலும் மோதிரக் கையாலே படணும்னு சொன்னேன்."

"அம்மா மோதிரக் கைன்னா ரொம்ப வலிக்கும் அம்மா" என்றாள் மோகனா.

"போதும் உன் விளையாட்டுப் பேச்சு. உனக்குக் கொஞ்சமாவது புத்தி இருக்குதா? அவன் ஆம்பிள்ளை, நினைச்ச இடத்திலே துண்டை உதறி மேலே போட்டுக்கிட்டுப் போயிடுவான். நமக்கு அப்படி முடியுமா? ஒரு ரூபாயா, இரண்டு ரூபாயா? ஆறாயிரம் ரூபாய், பதினாறாயிரம் ரூபாய் நெக்லஸ், போறாதுக்கு உன்னுடைய தோடு,



மாட்டல், ஜிமிக்கி, ஒட்டியாணம்-அம்பதினாயிரம் ரூபாய் சொத்தைக் கடலிலே விட்டெறிஞ்சுட்டு யாராவது இறங்குவார்களா? என் உசிரே போனாலும் சரிதான், என் பெட்டியெல்லாம் இப்ப வந்து சேரணும்!"

"அம்மா, இரைந்து பேசாதீங்கம்மா. அவர் காதிலே விழப் போவுது!"

"காதிலே விழுந்தா என்னடி? உன் இஷ்டத்துக்குத்தானே அவனைக் கட்டிக்கோன்னு சொன்னேன். கடலிலே விழுந்துடாதேன்னு சொல்லி கிணத்திலே பிடிச்சுத் தள்ளின மாதிரி அவன் காலிலே உன்னைத் தள்ளச் சம்மதிச்சேன்! இப்ப கெக்காரு உன்னை ஓட்டாண்டி ஆக்கிட்டாரு!"

இதற்குப் பதில் சொல்ல மோகனாவால் இயலவில்லை. ஆனால் அடுத்த அறையில் இருந்து இதைக் கேட்ட சண்முகம் இதற்குப் பதிலைத் தேடிக்கொண்டிருந்தான்.

உருகிய கோலத்துடன் மோகனா தன் பின்னே இறங்கியதை எண்ணி எண்ணி உருகினான். பெண்ணின் பெருமையில் அவன் கண்கள் கலங்கின. 'உலகில் தோன்றிய மகான்கள் எல்லோருமே தன்னலத்தை மறந்து வாழ வேண்டும் என்று உபதேசித்திருக்கிறார்கள். இவர்களுடைய வழிகளைப் பின்பற்றி இதுவரையில் எத்தனை ஆண்கள் நடந்திருக்கிறார்கள் என்பதைச் சொல்ல இயலவில்லை. இந்த உயர்ந்த தத்துவம் பெண்மைக்குள்தானே அடங்கி இருக்கிறது! நான் உற்றார் உறவினர்கள் அற்ற இடத்தில் அயல் நாட்டில் இறங்குகிறேன். அவளும் இறங்கிவிட்டாள். நான் இருக்கும் இடத்தில் இருப்பதைத்தான் அவள் விரும்புகிறாள். செல்வத்தை அல்ல, சுகத்தையல்ல, சீமையையல்ல, புகழை அல்ல; என் இஷ்டப்படி நடப்பதுதான் தன் கடமை என்று அவள் எண்ணுகிறாள்.

'கடமை! அவள் அந்த வார்த்தையைச் சொல்லித் தற்பெருமை பட்டிருக்க மாட்டாள். அவள் உடம்பில் ஓடும் ரத்தமே அது. இந்தியப் பெண் குலத்தின் சித்தமே அது. அரை வயிற்றுக் கஞ்சிக்குத் திண்டாடும் ஏழையை மணக்கிறாள் ஒருத்தி. கால வித்தியாசத்தால் பிறந்த வீட்டைக்காட்டிலும் ஏழையான குடும்பத்தில் புகுகின்றாள் ஒருத்தி. தன்னைக்காட்டிலும் அழகில் குறைந்தவனுக்கு மாலை போடுகிறாள் இன்னொருத்தி. ஆனால் தன் வீடு, தன் செல்வம், தன் சுகம் என்று தன் பிறந்த வீட்டைப்பற்றிப் பிறகு எண்ணுகிறாளா?

'புகுந்த வீட்டில் நுழைந்த நாள் முதல் அதுவே தன் வீடு என்று ஏற்றுக்கொள்ளும் உயர்ந்த தன்மையைப் பெண் குலத்திற்கு மட்டும் ஏன் அளித்தான் பிரமன்? பெண் வயிற்றில் பிறந்த ஆண்மகன் இவ்வாறு அன்பு வாழ்க்கையை அமைத்துக்கொள்வதில்லையே! அப்படி யாரேனும் ஒரு ஆண்மகன் செய்துவிட்டால் உலகம் அவனைக் கும்பிடுகிறது. பழம் இனித்தால் பாராட்டுவதில்லை பணியாரம் இனித்தால்தான் பேச்சு. இன்று நாம் இலங்கையில்

இருக்கிறோம்— இதை நினைத்தால் முதலில் 'சிறையிருந்த அன்னை' தான் நினைவுக்கு வருகிறாள்.

'அரண்மனையில் வளர்ந்தவள், ஜனகன் மகள் ராமன் அழைக்காத போதே மரவுரி தரித்து அவனுடன் புறப்பட்டாள்.

'அரிச்சந்திரன் மனைவி சந்திரமதி கணவனுக்காக அடிமைப் பட்டாள்.

'காரைக்காலம்மையார், கணவன் வெறுத்தான் என்றதும் பேய்க் கோலம் பூண்டார்கள்.

'இன்று இலங்கையில் எவரும் வணங்கும் கண்ணகித் தெய்வம், காதல் வாழ்வின் சுவையையே அறியாத அந்த பத்தினித் தெய்வம் தன் கணவனுக்காக எவ்வாறு போராடினாள்?

'கப்பலில் சென்ற கணவன் வரவில்லையே என்று ஏங்கி, கடலையே பார்த்துக் கல்லானாள் ஒரு தமிழ்ப் பெண்.

'காவிரி வெள்ளத்தில் வீழ்ந்த கணவனைக் கடல் வரையில் தேடிச் சென்றாள் ஆதிமந்தி.

'இவ்வாறு காலம் முழுவதும் தியாகத்தில் உருவான பெண் குலத்தில்தான் என் மோகனாவும் பிறந்திருக்கிறாள்...... சேற்றில் முளைக்கிறது செந்தாமரை.

'சிப்பியின் நாற்றத்தில் பிறக்கிறது முத்து.

'பசுவின் வயிற்றில் கிடைக்கிறது கோரோசனை.

'புழுவில் பிறக்கிறது பூம்பட்டு.

'இவைகள் எல்லாம் பிறந்த இடத்துக்கன்றோ பெருமையைத் தேடித் தருகின்றன.

'மோகனா, நான் கொடியவன் என்னை நம்பி இலங்கையில் நீ இறங்கிவிட்டாய். என் கையில் ஒரு காசில்லை. நாட்டுக்குத் திரும்பிச் செல்லக்கூட என் கையில் பணமில்லை. வந்த இடத்தில் யாரிடம் பணம் கேட்பது? கையில் பணம் இருப்பவன் கடன் கேட்டால் கிடைக்கும். சந்தனப் பொட்டு இட்டவர்களைத்தான் சாப்பிடக் கூப்பிடும் உலகம் இது. இதுவரை நான் என் இஷ்டப்படி நடந்தேன். யாதொரு பொறுப்பும் அறிந்ததில்லை.

'ஆனால் இன்றுதான் காதலிலும் இவ்வளவு பொறுப்புகள் இருக்கின்றன என்பதை உணர்ந்தேன்.

'என் அன்பே, உன் தாய் உனக்காகத்தான் வருந்துகிறாள். அது இயற்கை! ஆனால் எனக்காக நீ அத்தனையும் சகித்துக்கொண்டிருக்கிறாயே. நான் உன்னை எப்படிப் புகழுவேன்! பெண்ணின் பெருமைக்கு என்ன கைம்மாறு அளிப்பேன்!'

இப்படியெல்லாம் எண்ணிக் கலங்கினான் சண்முகம். அவனையும் அறியாமல் கண்ணீர் வடித்தான்.

அப்போது, "அட, நீ என் அய்யா, சகுனத் தடையாட்டம் இங்கேயும் வந்துட்டே?" என்று தருமன் யாரையோ கேட்பது கேட்டது.



"சகுனத் தடை இல்லேப்பா. நல்ல சகுனம்னு சொல்லு. என்னைத்தான் போர்ட்டர் ஆக்கிப்பிட்டாரே உங்க நாயனக்காரர்?" என்றார் வைத்திஜி.

## தொண்ணூற்று ஒன்பதாம் அத்தியாயம்

# வைத்திக்கு வந்த யோகம்!



பசி வயிற்றைக் கிள்ளுகிறது. ஏதாவது உண்டால் போதும் என்ற நிலை. அப்பொழுது எதிரில் ஒருவர் அழகிய தட்டில் புலால் உணவை வைத்து, பட்டுத் துண்டால் மூடிக்கொண்டு வருகிறார். புலால் உண்ணாதவர் சாப்பிட்டுவிடுவாரா? மாட்டார். பழகி வந்த சைவ உணவுப் பழக்கமும், பழைய பண்பாடும் உயிர் போகும் நேரத்தில்கூட புலாலை மறுத்துவிடும். உள்ளத்தில் ஏற்படும் அருவருப்பில் உணவு வேண்டாததாகிவிடும். இதைப் போலவே, கடலோடுபோன செல்வத்தை வைத்தி கையோடு கொண்டுவந்தபோதிலும், அவரைக் கண்டவுடன் சண்முகத்துக்கு வந்த ஆத்திரத்தில், அவன் பெட்டி, படுக்கை, நாதஸ்வரம் முதலிய பொருள்கள் திரும்பி வந்த சந்தோஷம் கூட மறைந்தது. ஆனால் வைத்தியோ, சமய சந்தர்ப்பம் தெரிந்தவர். தாம் தனியாக இருக்கிறோம் என்பதையும் உணர்ந்தவர். அந்தக் கட்டடத்திற்குள்ளே வரதன் எங்கேயாவது இருப்பான் என்பதும் அவருக்குத் தெரியும். ஆதலால் சண்முகசுந்தரத்திடம் மிகவும் நாசுக்காகப் பேச ஆரம்பித்தார்.

"என்ன பிள்ளைவாள், ஒரு பத்து நிமிஷம் 'வெயிட்' பண்ணி இருக்கப்படாதோ? உங்களுக்கு என்ன, ராஜா மாதிரி இறங்கி வந்துட்டேள்."

"ராஜா ஏனைய்யா இறங்கி வருகிறாரு? நீங்கதான் மந்திரி, இறங்கி வந்து இருக்கீங்க!"

"உண்மையிலேயே நான் மந்திரிதான். அதற்காக எங்க ஊர் சக்கரவர்த்தியைத் திண்டாட விட்டுடறது நல்லா இருக்குமா? என்ன இருந்தாலும் பிள்ளைவாள், உங்களுக்குக் கொஞ்சம் விடக் கட்டத் தெரியணும்."

"மானத்தை விடவும், வேட்டியை இடுப்பிலே கட்டவுமா?"

"சரி சரி, நீங்க வித்வான்."

"வைத்திஜிதானே மகாராஜாவின் ஆஸ்தான வித்வான்! உங்களுக்குத்தானே அங்கே முதல் தாம்பூலம்!"

"சரிதான், முட்டாளுக்கு முதல் தாம்பூலம்னு சொல்லுறீங்களாக்கும்! ஆமா, பின்னைவாள், உங்களுக்கு என்ன அவசரம்? ஏன் அவ்வளவு வேகமாக ஓடி வந்தீங்க?"

"உங்கள் சோதனை லண்டனில் போய்த்தான் முடியும். அதுவரையில் நான் காத்துக்கிட்டு இருப்பேன்னு நினைச்சீங்களா?"

"அப்படியில்லே சார். அந்த மகாராஜா ஒரு மூக்கரையன். பெட்டியையெல்லாம் சோதனை போடணும்னு சொல்லிவிட்டான். எனக்கோ, உங்க பெட்டியெல்லாத்தையும் திறந்துபாக்கிறதுக்கு மனசு இல்லே. அது உங்களுக்கும் அவமானம், எனக்கும் அவமானம், நம்ம தில்லாவுக்கும் அவமானம். அதுக்காகச் சிப்பாய்களைக் கொண்டு வந்து உட்கார்த்தி வச்சுட்டு, நான் மகாராஜாவைச் சமாதானம் பண்ணப் போனேன். அதுக்குள்ளே நீங்க அவசரமாக ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் இறங்கிவிட்டீர்கள்!"

"வைத்தி, உங்களுடைய சமாதானத்தை யெல்லாம் மகாராஜாவிடம் வைத்துக்கொள்ளுங்கள். எனக்கு இதெல்லாம் பழக்கமில்லை."

"சரி, சமாதானம் வேண்டாம், உங்கள் பெட்டிகளாவது வேண்டுமோல்லியோ?"

"இல்லாட்டி திருப்பி எடுத்துக்கிட்டுப் போயிடுவீங்களோ?" என்றார் முத்துராக்கு.

"பின்னே என்னய்யா! ஒரு மனுஷன் எல்லாத்தையும் சுமந்துகிண்டு வந்திருக்கான், வாங்கோன்னு ஒரு வார்த்தை கிடையாது உக்காருன்னு சொல்லலே. நீங்க எல்லாம் ஹோட்டலிலே சாப்பிட்டுட்டு நிம்மதியா படுத்துக்கிட்டு இருக்கீங்க. நான் இன்னும் சாப்பிடக்கூட இல்லே."

"உங்களுக்கு இந்தச் சாப்பாடு எதுக்குங்க? நீங்க மகாராஜாவையே சாப்பிட்டுடுவீங்களே!"

"சரி, தவுல்காரரே! எதுக்கு வீண் பேச்சு? சாமான்கள் சரியாக இருக்குன்னு ஒரு லெட்டர் கொடுங்கோ."

"முதல்லே நீங்க எங்க பெட்டியிலே வைரம் இல்லேன்னு ஒரு லெட்டர் கொடுங்கோ" என்றான் தருமன்.

"இந்தா, ஒத்துக்காரா ..." என்று வைத்தி ஏதோ சொல்ல ஆரம்பித்தார்.

"ஒத்துக்காரன் நானில்லீங்க. இப்போ நீங்கதான் மகாராஜாவுக்கு ஒத்து ஊதறீங்க. தேவலே, ஐயா சீமைக்குப் போகப் போறாங்க. இனிமேல் வம்பு வழக்கு எல்லாம் இங்கிலீசிலேயே நடத்துவாங்க. அந்த மட்டிலே தமிழ்நாட்டைப் புடிச்ச பீடை விட்டுடுத்து" என்றான் தருமன்.

வைத்திக்குக் கோபம் வந்தது. "ஓய், நன்றின்னு ஒண்ணு இருக்குது. தெரியுமா?" என்றார் வைத்தி.



"அப்படிக்கூட ஒண்ணு இருக்குதா?" என்றார் முத்துராக்கு.

"சரி, உங்களோடு பேசிக்கொண்டிருந்தா என் மெரிட்டுக்குக் குறைச்சல், வரேன் சார். சரி, மோகனா எங்கே இருக்கு?" என்று கேட்டுக்கொண்டே, வைத்தி அடுத்த அறைக்குள் நுழைந்தார்.

தங்கள் அறைக்குள் வைத்தி சாமான்களுடன் நுழைந்ததைக் கண்டவுடன் மோகனாவுக்கு, இவர் இங்கேயும் வந்துவிட்டாரே என்று தோன்றியது. ஆனால் வடிவாம்பாளுக்கோ, தன் பெட்டியைக் கண்டவுடன் ஆனந்தம் ஏற்பட்டது.

"வாங்க வைத்தி ஐயா, வாங்க! எனக்கு அப்பவே தெரியும், நீங்க கொண்டாந்துடுவீங்கன்னு" என்று சிரிப்பை வரவழைத்துக்கொண்டு சொன்னாள்.

"ஏதோ, இந்த மட்டிலும் நீங்க ஒருத்தராவது என்னைப் புரிஞ்சிகிட்டு இருக்கீங்களே!" என்றார் வைத்தி.

"ஏன், உக்காருங்களேன்" என்று உபசாரம் செய்தாள் வடிவாம்பாள்.

"எதுக்கம்மா நான் உட்காரணும்? அந்த நாயனக்காரன் வந்து கழுத்தைப் புடிச்சு தள்ளவா? உங்க பொண்ணு வேறே என் மேலே கோபமா இருக்கு."

"அது கிடந்துட்டுப் போகுதுங்க, விளையாட்டுப் புள்ளே!"

"இப்பச் சொன்னீங்களே, அது நிசம். இந்த ஒரு வார்த்தைக்கே உங்கள் வாய்க்குச் சர்க்கரை போடலாம். அவ விளையாட்டுனாலே தானே இப்ப அறுபதினாயிரம் ரூபாய் நஷ்டமாச்சு. இந்த மாதிரி ஒரு நல்ல 'டிரிப்' கிடைக்குமா? சீமையிலேயெல்லாம் மோகனா வராவரான்னு ஏராளமாக விளம்பரம் பண்ணி, இவளை ஒரு பெரிய புள்ளியாக்கிவிடலாம்னு நினைச்சேன். பெண் புத்தி பின் புத்தி என்கிறது சரியாபோச்சு."

மோகனாவுக்குச் சிரிப்பு வந்தது. "இப்ப ஒண்ணும் குறைவு இல்லை" என்று வைத்திக்குச் சரியாகப் பதில் சொல்ல வேண்டுமென்று தோன்றியது. ஆனால் அம்மா ஏதாவது கோபித்துக்கொண்டு விடுவாளே என்ற பயமும் ஏற்பட்டது.

"நீங்க சொல்றது ரொம்ப நிசமுங்க. சீமையிலே போயி பெயரு வாங்கறதுன்னா சும்மாவா இருக்குது?" என்று சொல்லிக்கொண்டே இடுப்பிலிருந்து கொத்துச் சாவியை எடுத்தாள் வடிவாம்பாள் தன் பெட்டியைத் திறக்கப் போனாள்.

"சரி, பின்னே நான் போகலாமா?" என்றார் வைத்தி.

"இருங்க வைத்தி. ஒரு வாட்டி வெத்திலை போட்டுக்கிட்டுப் போங்க! கப்பல் ராத்திரிதானே புறப்படுது?"

"எனக்கு எத்தனையோ வேலை இருக்கிறது. ஒரு நிமிஷம் என்னைக் காணோம்னா மகாராஜா உயிரையே விட்டுவிடுவார்!"

"போனாபோகுது, கொஞ்சம் இருங்க. பெட்டிக்குள்ளே வாசனைப் பாக்கு இருக்குது அதை எடுத்துத் தரேன். ஒரு தடவை வெற்றிலை போட்டுக்கிட்டுப் போங்க. அடேயப்பா, நாலு நாழியா எனக்கும் வெத்திலை போடாமே பல்லெல்லாம் கூசுது" என்று சொல்லிக்கொண்டே தன் பெட்டியைத் திறந்தாள்.

வெற்றிலைப் பெட்டியை எடுத்து வெளியே வைத்தாள். "இந்தாங்க வாசனைப் பாக்கு" என்று ஒரு டப்பாவையும் எடுத்து வைத்தாள். வைத்தி டப்பாவைத் திறந்து பாக்கை அள்ளி வாயிலே போட்டார். சிங்கபூரம் வாசனைப் பாக்கு சிக்கு நாற்றம் அடித்தது. வடிவாம்பாள் கையால் கொடுத்த பாக்கைத் துப்பவும் மனசில்லை வைத்திக்கு. பாக்கை மென்றுகொண்டே, "சுண்ணாம்பு டப்பா இல்லியே!" என்றார்.

"அதைத்தானே தேடறேன்!" என்று சொல்லிக்கொண்டே வடிவாம்பாள் பெட்டி முழுவதும் தேடினாள். வைத்தி இங்கு இருக்கும் போதே தன் பெட்டியில் உள்ள பொருள்களைச் சரிபார்த்துவிட வேண்டும் என்பதுதான் அவள் எண்ணம். நகை, பணம் எல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று ஒரு மூக்குத்தி விடாமல் சரி பார்த்தாள் வடிவாம்பாள். எல்லாம் திருட்டுப் போகாமல் இருந்தது. ஆனால் சிறிது கலைந்து இருந்தது. அவளுக்கு ஒரு சின்னச் சந்தேகம் ஏற்பட்டது. பெட்டியை யாரோ திறந்து பார்த்திருக்கிறார்கள். அது வைத்தியாக இருந்தால் எல்லாம் அதில் இருக்காதே என்ற சந்தேகந்தான்!

"எங்கே சுண்ணாம்பு!" என்றார் வைத்தி.

"அட இங்கே இருக்குதுங்க. மஞ்சல் பெட்டியிலே போட்டு அப்படியே மூடி இருக்கேன்."

"உங்க பெட்டியிலே நாங்கள் பார்க்கிறபோது சுண்ணாம்பு டப்பா இல்லியே" என்றார் வைத்தி.

"என், பெட்டியைத் திறந்து பார்த்திங்களா?"

"நானா பார்த்தேன்? அந்த வெள்ளைக்கார கேப்டன் பெட்டி படுக்கையெல்லாம் திறந்து சாமான்களைக் கண்டபடி அள்ளிப் போட்டுவிட்டான். நான் கூட இருந்து அதை ஒழுங்கு பண்ணிக் கொண்டு வந்தேன். உங்களுக்கு எங்கே அந்த நன்றியெல்லாம் இருக்கப் போறது?" என்று மோகனா பக்கம் திரும்பி, கடைக்கண்ணால் பார்த்தார் வைத்தி.

"முதல்லே கொடுக்க மாட்டேன்னு சொன்ன மகாராஜா இப்போ உங்களையும் கூட அனுப்பிச்சு இருக்கிறாரே, ஏன்?" என்றாள் வடிவாம்பாள்.

"அதுதான் வைத்தியின் சாமர்த்தியம்."

"அப்படிச் சொல்லுங்க!"



"மோகனா, நீயும் கேட்டுக்கோ. நான் மகாராஜாகிட்டே சொன்னேன். அது நல்ல குடும்பம். இந்தப் பொண்ணுக்குக் கொஞ்சம் முன் கோபம். அவ்வளவுதானேயொழிய வேறு ஒண்ணுமில்லே. நீங்க இந்தக் குடும்பத்தை நாசம் செய்யப்படாதுன்னு கையெடுத்துக் கும்பிட்டேன்."

"ஐயோ பாவம்! நீங்க இவ்வளவு தூரம் எங்களுக்காக வாதாடுனீங்கன்னு தெரியாமே போச்சே!" என்று மோகனா மிகுந்த அக்கறையுடன் கேட்டாள்.

"பின்னே என்ன மோகனா. நீ விளையாட்டுப் புத்தியிலே ஏதாவது சொல்லிப்பிடலாம். அதுக்காக நான் விட்டுடலாமோ? சும்மா மகாராஜாவைப் பிடிச்சு அலசிப்பிட்டேன்."

"அவர் என்ன வேட்டியா?" என்றான் வாதன்.

"ஐயா மத்தளக்காரரே, தயவு செய்து நீர் கொஞ்சம்."

"சரிங்க."

"'அப்படின்னா மோகனா நல்ல பெண்ணா?' அப்படின்னு மகாராஜா கேட்டார். 'அவ குணம் உங்களுக்குத் தெரியாது. அது ஒரு தங்கம். அவளைப் போல இந்த உலகத்திலே நாட்டியம் ஆடறவ கிடையாது. எங்க பரத நாட்டியத்துக்கே அவளால்தான் நல்ல பெயரு. பாரத தேசத்துக்கே அவளால்தான் நல்ல பெருமை. வீணாக அவ பெயரைக் கெடுத்துடாதீங்க!' அப்படின்னு கெஞ்சினேன்."

"நல்ல காரியம் செய்தீங்க. உம், அப்புறம்?"

"அப்புறந்தான் அந்த மகாராஜா சும்மா இருந்தாரு."

"இல்லாவிட்டால்...?" என்றாள் மோகனா.

"அந்த வெள்ளைக்காரன் கிட்டே சொல்லி இந்த ஊரிலே நீ ஆடப்படாதுன்னு 144 போடச் சொல்லிவிட்டாரே!"

"அது நடக்கிறபோது, ஒரு முள் தச்சதுன்னு வச்சுக்கோங்க காலை விந்தி நடக்கலாமா, கூடாதா?" என்றான் வாதன்.

"நீர் எப்படி வேணுமானாலும் நடக்கலாம். மோகனாதான் விந்தி நடக்கப்படாது. ஆகவே படாதுன்னு உத்தரவு போட்டிடுவா இன்னிக்கி சாயங்காலமே!"

"அப்படியா, நாங்க கொளும்பிலே இறங்கியும் பிரயோசனமில்லே...?" என்று பயந்தது போல் கேட்டாள் மோகனா.

"ஆமாம், கண்டிப்பா அந்தக் காரியதரிசிதான் மகாராஜாவுக்கு முன்னாலே கையைக் கட்டிக்கிட்டு நிக்கிறானே? சரி, 'இந்த ஊரிலே மோகனா ஆடப்படாதுன்னு கெஜட்டிலே போடறே'ன்னு காரியதரிசி சொல்லிவிட்டான். அப்புறம் நான் குறுக்கே புகுந்து 'நீங்க அப்படியெல்லாம் அவள் புழைப்பைக் கெடுத்துடாதீங்க. நான் சொல்லி இப்பவே கப்பலுக்குக் கூட்டிக்கிட்டு வாரேன்' அப்படீன்னு சொன்னதுக்கு அப்புறந்தான் மகாராஜா மனசு ஒருவிதமா சமாதானம் ஆச்சு; நானும் வந்தேன்."

"அடடே, பிறகு காரியமாத்தான் வந்திருக்கிங்க!" என்று சிரித்தாள் மோகனா.

"ஏன் சிரிக்கிறே?"

"உங்க கெட்டிக்காரத்தனத்துக்குத்தான்" என்றாள் மோகனா.

வைத்தி அதைக் காதில் வாங்காதவர்போல் வடிவாம்பாள் பக்கம் திரும்பினார்.

"அம்மா, நீங்க சொல்லுங்க" என்றார்.

"நான் சொல்லிக் கேக்கிற காலம் மலையேறிப் போச்சுங்க. இப்ப அது சொன்னாத்தான் கேட்கும்" என்று வடிவாம்பாள் புதிதாக ஒரு வார்த்தையைத் தூக்கிப் போட்டாள்.

"எது?"

"அவருதான்...!"

"எவரு...?"

"சிக்கலாரு."

"அவுங்க சிக்கலாரு வைக்கறதுக்கு முன்னே என்ன பண்ணுவாரு? வடிவாம்பாள் அம்மா, பேசாமே கப்பலுக்கு வாங்கோ. நான் மகாராஜா கிட்டே மதர் அலவன்ஸ் ஐந்நூறு ரூபாய் கொடுக்கணும்னு சொல்லிவிட்டேன். அவரு இன்னும் ஆயிரம் ரூபாய் சம்பளம் அதிகப்படுத்திக்கூட உங்க பெண்ணை ஆஸ்தான வித்வானாக நியமிக்கத் தயாராக இருக்காரு. அதிருஷ்டம் வருது. விட்டுடாதீங்க...!"

"அது இஷ்டம்" என்றாள் வடிவாம்பாள்.

"அப்படி நாங்க வரலேன்னா?" என்றாள் மோகனா.

"உங்க தலையெழுத்தை நீங்க அனுபவிக்கத்தான் வேணும்."

"அது இன்னைக்கில்லையே. பிறந்த அன்னிக்கே எழுதியாச்சே!"

"நீ பிறந்த அன்றைக்கு நன்றாகத்தான் எழுதினான். மத்தவங்களுக்கு எல்லாம் தலையிலே எழுதினான். உனக்குக் காலிலேயும் சேர்த்து எழுதினான். உலகத்தையே உன் காலால் மயக்கலாம். உன் காலடியில் ராஜாக்கள் எல்லாம் காத்துக்கிட்டு இருக்காங்க. ஆனா நீயோ திண்டாட்றேங்கிறே. அம்மா, நீங்க சொல்லுங்க!"

"நான்தான் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லிப் பாத்துட்டேனே!"

"வாலிபத்திலே சம்பாதிக்கணும்னு சொல்லுங்க அம்மா."

"அதையும் சொன்னேன்."

"மோகனா, நல்லா யோசிச்சுப் பாரு. நாளைக்கு உனக்கு நாயனக்காரன் என்ன பண்ணப் போறான்? நாலு பங்களா கட்டி வைக்க முடியுமா? உன்னைவிட அழகிலும், வித்தையிலும் குறைந்தவங்களெல்லாம் நம்ம ஜில்லாவிலே அற்புதமாக இருக்காங்க. வாசலிலே குதிரை வண்டி வந்து நிற்கிறது. தெருவிலே புறப்பட்டான்னா ஒரு மைலுக்கு வாசனை அடிக்குது. மோஹி, நான் சொல்றேன், கேளு. இந்த மூணு எழுத்து விவகாரம் உனக்கு வேண்டாம்."



"அது என்னாங்க மூணு எழுத்து?" என்றாள் மோகனா.

"அதுதான் வை...த்...தி! அவன் விவகாரம் வேண்டாம்" என்றான் வரதன்.

"அது இல்லே கா...த...ல். அதிலே கஷ்டத்தைத் தவிர சுகத்தை யாராவது கண்டதும் உண்டா? உன் காலடியிலே ஆம்பளைங்க விழுவதை விட்டுவிட்டு, நீ போயி அவன் காலடியிலே விழுகிறியே! என்னமோ, எனக்குத் தோணினதைச் சொல்றேன்."

"வைத்தி, வாயை மூடுங்க. உங்களுக்கு அதைத் தவிர வேறு எது தோணும்? இப்பொழுது வெளியே போகிறீரா இல்லையா?" என்றாள் மோகனா!

"அதுதான், நல்லது சொன்னா பொல்லாப்பு. நீங்க என்னோடு கப்பலுக்கு வரீங்களா, இல்லை, கஷ்டத்தை அனுபவிக்கத் தயாரா இருக்கிங்களா?"

"என்னய்யா இது, பெண்கள் இருக்கும் இடத்திலே வந்து வீராப்புப் பேசறீங்க?" என்று கேட்டுக்கொண்டே, சண்முகசுந்தரம் உள்ளே நுழைந்தான்.

வடிவாம்பாளுக்குக் கொஞ்சம் தூக்கி வாரிப்போட்டது. சண்முகம் இப்படித் தன் மகளைக் கெடுக்கிறானே என்ற கோபமும் அவளுக்கு இருந்தது. இப்பொழுது சண்முகசுந்தரம் கோபித்துக் கொண்டு உள்ளே வந்தவுடனே, "அடே, இருங்க தம்பி, அவரு சொல்றதைக் கேப்பம்" என்று துடுக்காகக் கூறினாள் வடிவாம்பாள்.

"கேளுங்க, வேண்டாமுன்னு சொல்லலே" என்று சரேல் என்று திரும்பினான் சண்முகம்.

"அத்தான்...!" என்று அருகில் சென்றாள் மோகனா. சண்முகம் நின்றான். "என்னையா கெடுத்துவிடுவீர்?" என்றான் வைத்தியிடம்.

"சீக்கிரம் புரிஞ்சுக்குவே, நான் சீமைக்குப் போகப் போறது இல்லே!" என்றார் வைத்தி.

"மகாராஜாவுக்கு நல்ல காலம்" என்றான் சண்முகம்.

"இங்கேயே இருக்கப் போகிறேன்."

"உமக்குக் கெட்ட காலம்."

"அப்படியெல்லாம் கனவு காணாதே! என்ன செய்யப் போறேன் தெரியுமா? இப்பவே நான் மெட்ராசுக்குப் போயி உங்க ரெண்டு பேர் மேலேயும் "இஞ்சங்ஷன்"——"

"ஐயோ, இஞ்சக்ஷனா? அது வலிக்குமே!" என்றான் வரதன்.

"இது ஊசியில்லே மத்தளக்காரரே, கோடாலி! இவங்க காதலை வேரோடு வெட்டிவிடுவேன். ஆடக் கூடாது, வாசிக்கக் கூடாது. அது மாத்திரமல்ல. ஆளுக்கு இரண்டு லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு தரணும்

மகாராஜா அவ்வளவுக்கும் என்கிட்டே 'பவர்' கொடுத்து என்னை அனுப்பிச்சிருக்காரு" என்று வைத்தி மீசையில் கையை வைத்தார். நல்ல வேளை, மீசை இல்லாததால் அது தப்பியது. வடிவாம்பாள் உடம்பு வெடவெடவென்று நடுங்கியது பயத்தால். சண்முகத்துக்கும் கோபத்தால் உடல் நடுங்கியது.

"ஏய், 'போர்ட்டர்', பெட்டியைக் கொண்டாந்து கொடுத்துட்டுப் போறியா, சும்மா பயமுறுத்தறியே! உன்னாலானதைப் பார்த்துக்கோ" என்றான் வரதன்.

"அப்படியா சொல்லறே? அதோ பார்! வாசல்லே போலீஸ்காரன் நிக்கிறான்" என்று ஜன்னல் வழியே வைத்தி கையை நீட்டினார்.

ஆம், உண்மையிலேயே வாசலில் இரண்டு போலீஸ்காரர்கள் பாராக் கொடுத்து நின்றுகொண்டிருந்தார்கள். இதைப் பார்த்த வடிவாம்பாள் மேலும் நடுங்கினாள். ஆனால் சண்முகசுந்தரமோ சிரித்தான்.

"என்ன வைத்தி, பீட் கான்ஸ்டேபிளையா கையைக் காண்பிக்கிறீர்? இப்போ நீர் போகிறீரா? இல்லே, நான் அவர்களைக் கூப்பிட வேண்டுமா? வரதா!..." என்றான் சண்முகம்.

அதற்குள் வைத்தி, "வரதன் எதுக்கு? வரதன் எதுக்குங்கிறேன்?" என்று முறைத்துப் பார்த்துவிட்டு வெளியேறினார். வைத்தி போகும் வேகத்தைப் பார்த்த வடிவாம்பாள் பயந்தே போனாள்.

"தம்பி, உங்களுக்குத்தான் சொல்லறேன். நாளைக்கு அந்தப் பொண்ணுக்கு ஏதாவது ஆபத்து வந்துதுன்னா என் மனசு தாங்காது!"

"என் மனசும் தாங்காது அத்தே."

"பின்னே, மகாராஜாவோட செல்வாக்கு தெரிஞ்சும் இப்படிப் பேசுறீங்களே! பட்டாளமே திரண்டு வந்துடுமே! முன்பின் தெரியாத இந்த ஊரிலே, நம்பளை அவங்க புடிச்சு உள்ளே போட்டாங்கன்னா என்ன பண்றது?"

"கஷ்டம் வந்தா அனுபவிக்கத்தான் வேண்டும் அத்தே! அதுக்காக, மானத்தைக் கப்பலிலே அனுப்பக் கூடாது" என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்குச் சென்றான் சண்முகசுந்தரம்.

வடிவாம்பாள் மகளைப் பார்த்தாள். மகள் வாசற்படியைப் பார்த்தாள். "அட கடவுளே!" என்று சொல்லித் தயங்கினாள் வடிவாம்பாள்.

நட்டுவனாருக்குப் பரம சந்தோஷம். பாவம், கொழும்பில் இறங்கிய நேரத்திலிருந்து இதுவரை, அவர் ஒரு பிடி சோறுகூடச் சாப்பிடவில்லை. அவர் பூசை பண்ணாமல் சாப்பிடுவது இல்லை. என்ன செய்வார்? ரொட்டி, பழம், இட்டிலி, தோசை இவைகளையே அடிக்கடி தின்றுகொண்டிருந்தார். பெட்டி கிடைத்தவுடன் அவர் எடுத்துக்கொண்டு போய், சிவபூஜையில் இறங்கினார். வரதன் முதல் வேலையாக, மத்தளத்தை எடுத்துத் தட்டினான்.



"என்ன வரதா? சுருதி இறங்கி இருக்கான்னு பார்க்கிறியா?" என்றாள் மோகனா.

"இது வரதன் மத்தளம் தங்கச்சி, சுதி ஏறும்" என்றான்.

"அதுதான் கச்சேரி நடுவிலே தெரியுமே...!"

"அதுக்கில்லே தங்கச்சி, இந்த வைத்தி வேணும்னாச்சும் ஒரு ஆணியை எடுத்துத் தொப்பியைப் பொத்துட்டு கொண்டாந்து இருப்பான்" என்று மீட்டை நகத்தால் கிள்ளினான் வரதன்.

இதில் என்ன விசேஷம் என்றால், வரதனும் முத்துராக்கும் முதலில் தங்கள் பெட்டியைத் திறந்து பார்க்கவில்லை. முதல் காரியமாகத் தங்கள் வாத்தியங்களைத்தான் தட்டிப் பார்த்தார்கள். சிறிது ஆத்திரம் அடங்கியவுடன் சண்முகசுந்தரமும் தன் நாதஸ்வரப் பெட்டியைத் திறந்தான். அதற்குள் இருந்த நாதஸ்வரம், "ஐயா, வித்துவானே, உங்களுக்கு என் மீதும் கோபமா?" என்று கேட்டது. கோபமாக இருப்பவர்கள் இடையே ஒரு குழந்தை வந்தால் அந்தக் குழந்தை முகத்தைப் பார்த்தவுடன் கோபம் தணிந்துவிடும்.

சண்முகத்துக்கும், மோகனாவுக்கும் இன்னும் கல்யாணமே ஆகவில்லை. ஆதலால், இனி குழந்தை பிறந்து கோபத்தைத் தணிக்க எத்தனை நாளாகுமோ? ஆனால் இப்பொழுது அவனுடைய நாதஸ்வரம், அவன் கோபத்தைத் தணித்தது. அதைக் கையிலே எடுத்தான். ஒரு முறை, 'பீ பீ' என்று ஊதிப் பார்த்தான். சென்ற இரண்டு நாளாக அவன் மனது பட்ட வேதனைகள் எல்லாம் அந்த நாதத்திலே ஓடி மறைந்தன.

பெட்டிகள் வந்த பிறகுதான் அவர்கள் எல்லோருக்கும் நிம்மதி ஏற்பட்டது. எல்லோரும் குளித்து முழுகி, நல்ல உடை உடுத்திக் கொண்டார்கள்.

✦ ✦ ✦

ஸ்ரீமான் வைத்தி வெற்றி தோல்வியைப் பாராட்டாதவர். ஒரு சுத்த வீரர். அவர் ஒரு பெரிய ஹோட்டலில் போய் ஒரு அறையில் தங்கினார். தம் சட்டைப் பையிலிருந்து நீண்ட கவர் ஒன்றை எடுத்தார், பிரித்தார். அதில் ஒன்னரை ரூபாய் ஸ்டாம்பு பேப்பரில் மகாராஜா கையெழுத்துப் போட்டு வைத்திக்கு 'பவர்' கொடுத்திருந்தார். சண்முகசுந்தரம் மோகனாம்பாள் வழக்கை நடத்துவதற்கு ஆகும் செலவுக்கென்று பல ஆயிரக்கணக்கான ரூபாய்களும் கொடுத்திருந்தார். இவைகள் எல்லாம் அந்தக் கவரில்தான் இருந்தன. இதைக்காட்டிலும் இன்னொரு மகிழ்ச்சி அவருக்கு. இறங்கும் போதே பொய்க்கால் குதிரை பொன்னனின் பணத்திலும், அவன் வீட்டில் கொடுக்க வேண்டுமென்று முந்நூறு ரூபாயை வாங்கிக்கொண்டு வந்தார்.

இந்தப் பணம் லாபம் என்று அவருக்குத் தோன்றியது. ஆகவே முதலிலே இதைச் செலவழித்துவிடுவோம். மகாராஜா வழக்கு நடத்தக்

கொடுத்த பணம் தம்முடைய பணம். அதைப் பின்னால் செலவழிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார்.

மோகனா விஷயத்தில் தம் தொழிலுக்கு இடையூறாக வந்த சண்முகத்தின் மேல் அவருக்குப் பெரும் கோபம். தம்முடைய கோபத்தை சாந்தி செய்துகொள்வதற்கு என்ன செய்யலாம் என்பதை முதலில் யோசித்தார். குளித்தால் கோபம் தீரும் என்று சொல்லுவார்கள். ஆனால் குளித்தாலும் மனம் குளிராதே! ஆகவே அவர் முழுக ஆரம்பித்தார். எதில்? அதில்தான்!......பல சோடா புட்டிகள் உடைபட்டன. பற்பல பொருள்கள் அவருக்குக் காட்சி அளித்தன. ஒரு புறம் நோட்டுகள் எல்லாம் மதுப் புட்டிகளாக மாறி நாட்டியம் செய்தன. மறுபுறம் குதிரைகள் ஓடின. 'ஆஹா, இந்தக் கொழும்பு, குதிரைப் பந்தயத்திற்குப் பெயர் பெற்றதாயிற்றே! பந்தயம் விளையாடினால் இன்னும் பணம் சம்பாதிக்கலாமே!' என்ற சபலமும் அவருக்கு வந்தது. 'எதற்கும் கொழும்பிலே ஒரு வாரம் சுற்றிவிட்டுத் தான் பட்டணத்துக்குப் போவோமே! மகாராஜா என்ன, கணக்குக் கேட்கப் போகிறாரா?" என்று முடிவு செய்தார்.

ஹோட்டல் கதவைப் பூட்டிக்கொண்டு பட்டுப்பூச்சி போல் பறந்து வெளியே சென்றார். ஒரு கடையில் 'ஒன்பதாயிரம்' கிளாஸ்கோ மல் ஒரு பீஸ் வாங்கினார். அதை ஐந்து வேட்டிகளாகக் கிழித்தார். குழாய் மல்லில் எட்டுச் சட்டைகள் தைக்க ஆர்டர் கொடுத்தார். பாவம், அப்பொழுது ஒரு ஏழைப் பிச்சைக்காரன் அவர் அருகில் வந்து நின்றான். ஏங்கிய முகத்துடன் அவரைப் பார்த்தான். அவன் பார்த்த பார்வைக்கே அவனுக்கு ஒரு பத்து ரூபாய் நோட்டைக் கொடுக்கலாம்.

ஆனால், "போடா, போ, பிச்சைக்காரப் பயலே!" என்றார் வைத்தி.

அந்தப் பிச்சைக்காரனுக்கு வந்த கோபத்தில் தம் அக்குளில் ஊன்றி நடந்த கம்பை எடுத்து அவரை ஓங்கி அடித்துவிடுவான் போல் தோன்றியது. ஆனால் அவன் அவ்வாறு ஒன்றும் செய்யாமல் தலை குனிந்தவண்ணம் கம்பை ஊன்றிக்கொண்டு, நொண்டி நொண்டி நடந்து போய்விட்டான். ஐயோ, நொண்டுகிறானே என்று பரிதாபப் பட்டு ஒரு காலணாவையாவது கொடுத்தாரா? இல்லை!

"ஒரு சட்டைக்கு ஒரு ரூபாய் கூலி" என்றான் கடைக்காரன்.

"ஒன்னேகால் ரூபாய் வாங்கிக்கொள்" என்றார் வைத்தி.

அன்றைக்கு உள்ளே வந்து கட்டிலில் படுத்தார். அவர் கண் முன் இஸ்பேட் ராஜா ராணிகள் உருண்டுகொண்டே இருந்தன.

அன்று மாலை கொழும்பு ரயில்வே நிலையத்தில் சண்முகசுந்தரம், மோகனா, சிற்றம்பலம் முதலியவர்கள் யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்டார்கள். ரயில் புறப்படப்போகும் நேரத்தில் ஸ்ரீமான் வைத்தி



ஒரு இஞ்சின் போலச் செக்கச்சிவந்த கண்களுடன் அங்கு வந்து சேர்ந்தார்.

பாவம், அந்த ஏழைப் பிச்சைக்காரனும் அந்த பிளாட்பாரத்தில் உலாவிக்கொண்டிருந்தான். இந்தப் பிரபுவின் மனம் இளகி ஏதேனும் கொடுப்பார் என்று எண்ணினானோ என்னவோ? ரயிலடியில் பத்திரிகை வாங்குவதற்கு வைத்தி பணத்தை எடுத்துக் கொடுக்கும் போது, அவர் மணிபர்சு முழுவதும் நோட்டுகளாக இருப்பதைக் கண்டான் பிச்சைக்காரன்.

ஆனால் வைத்தியோ, அதைக் கவனிக்கவில்லை. சட்டைப் பையில் பர்சைச் செருகிக்கொண்டார். வாங்கிய பேப்பரில், அன்று மகாராஜாவின் சிலோன் விஜயத்தின் படம் வந்திருந்தது. அந்தப் படத்தில் தாமும் நிற்கும் அழகை அவர் ரசிக்க ஆரம்பித்தார். 'ஏய், வைத்தி, உனக்கு யோகம்டா. இனிமே நீதான் மதன்பூர் திவான்' என்று தமக்குள்ளேயே சொல்லிக்கொண்டார்.

அப்பொழுது அந்தப் பிச்சைக்காரன் அவர் அருகில் வந்தான். "சாமி!" என்றான்.

வைத்தி அவனைப் பார்த்தார்.

"டேய், உனக்குச் சொன்னால் புத்தியில்லே? சும்மா தூரத்திலே காலணா தர மாட்டேன்" என்று எரிந்து விழுந்தார்.

"காலணா வேண்டாமுங்க. உங்க காலடியிலே உங்க மணிபர்சு விழுந்து கிடக்குதுங்க" என்றான் அவன்.

வைத்தி குனிந்தார். அவர் தலை ஒரு சுற்றுச் சுற்றியது. தள்ளாடிக் கொண்டே அந்த மணிபர்சை எடுத்துப் பையில் செருகிக்கொண்டார். இம்முறை அது பையிலேயேதான் விழுந்தது. அவர் கண்கள் அங்கு மோகனா நிற்பதைப் பார்த்தன. தம்முடைய அதிகாரத்தைச் சண்முகத்திடம் காட்ட வேண்டும். அங்கு இருக்கும் ஒரு வாரத்திற்குள் இவர்களைப் பாடாய்ப் படுத்திவிட வேண்டும் என்று எண்ணினார். அவர்கள் யாழ்ப்பாணந்தான் போகிறார்கள் என்பதை உணர்ந்தார். கையில் இருக்கும் பணத்தின் திமிரால் அவர்களுக்கு ஏதேனும் இடைஞ்சல்கள் செய்ய வேண்டுமென்று எண்ணியது மனம். தாமும் ரயிலில் ஏறி முதல் வகுப்பில் உட்கார்ந்தார். ஆனால் உட்கார்ந்தவுடன் யாரோ அவரைப் பிடித்து சீட்டில் தள்ளினார்கள். தலையை நிமிர்த்திப் பார்த்தார். தலை நிமிரவில்லை. தள்ளியவர் வேறு யாருமல்ல. அவர்தான், ஸ்ரீமான் மது அரக்கன்!

சிற்றம்பலம், சண்முகசுந்தரம், வடிவாம்பாள், மோகனா ஆகிய நால்வரும் ஒரு முதல் வகுப்பு வண்டியில் ஏறிக்கொண்டார்கள். சண்முகத்துக்கு மதுரை ஞாபகம் வந்தது. மோகனாவுக்கும் வராமல் இருக்குமா? ஆனால், அந்தப் பெட்டியில் இன்னும் இருவர் உட்கார்ந்து இருப்பது சற்று இடையூறாகத்தான் இருந்தது. வாயால்

பேச முடியவில்லை. இருவருடைய கண்கள் மாத்திரம் ஏதோ பேசிக்கொண்டே வந்தன. வெளியே பார்த்தான் சண்முகம். மினுமினு வென்று ரயில் பொறி பறந்து வருவது போல் தெரிந்தது. ஆனால், அது ரயில் பொறியல்ல.

இயற்கை அன்னை, இலங்கையில் மாத்திரம் மரங்களை ஏன் இவ்வளவு உயரமாகப் படைத்தாளோ? அடுக்கு அடுக்காக மலைச் சரிவுகள். அவைகளின் மேல் உயர்ந்தும் தணிந்தும் குரூப் போட்டோவுக்கு நிற்பது போல் நிற்கும் மரங்களைச் சுற்றிக் கோடிக்கணக்கான மின்மினிப் பூச்சிகள் பறந்துகொண்டிருந்தன. ஒவ்வொரு மின்மினிப்பூச்சியும், வைத்தியைத்தான் ஞாபகமூட்டின.

விளக்கைக் கையில் எடுத்துக்கொண்டு சிலர் வழி நடப்பார்கள். ஆனால் விளக்கைப் பின்னே பிடித்துக்கொள்வார்கள். தங்கள் நிழலைக் கண்டு தாங்களே பயப்படுவார்கள். அதைப் போல வைத்திக்கு இவ்வளவு கெட்டிக்காரத்தனம் இருந்தும், வாலில் விளக்கை வைத்துக்கொண்டிருக்கும் மின்மினிப் பூச்சிப்போல் இருக்கிறாரே, தலையிலே ஒளியில்லையே என்று எண்ணினான். அதே சமயத்தில் ரயில் ஒரு சிறிய மலைமேல் ஏறுவது போல் தெரிந்தது.

"இந்தப் பாதையிலே நீங்கள் இரவில் பிரயாணம் செய்யக் கூடாது. பகலிலே பிரயாணம் செய்தால் இயற்கை இன்பத்தை ரசிக்கலாம். தேக்கும், ரப்பரும், மிளகும், தென்னையும் இங்கு ஏராளம்" என்று குமாரசாமி கூறினார்.

யாராவது பேச்சை ஆரம்பிக்க மாட்டார்களா என்று இருந்த மோகனா "ஆமாங்க, நம்ம தஞ்சாவூர் ஜில்லா மாதிரி இருக்குது" என்றாள்.

"நம்ம தஞ்சாவூரிலே தேக்கு மரமா இருக்குது?" என்றான் சண்முகசுந்தரம்.

"தேக்கு மரம் இல்லாட்டி என்ன? தென்னை மரம் இருக்குது இல்லையா?" என்று வடிவாம்பாள் பதில் சொன்னாள்.

'அட, விளையாட்டா இரண்டு வார்த்தை பேசுவோம் என்று நினைத்தால் அத்தை பதில் சொல்கிறாளே' என்று எண்ணினான் சண்முகசுந்தரம்.

இதற்குள் இரவு ஒன்பது மணியாகிவிட்டது. எல்லோரும் அயர்ந்து தூங்கினார்கள். சண்முகம், மோகனா இருவர் மாத்திரம் தூக்கமும் வராமல் விழித்திருந்தும் பேச முடியாமல் சிற்றம்பலத்தையும், வடிவாம்பாளையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே பிரயாணம் செய்தார்கள்.

விடியற்காலையில் மணி நான்கு இருக்கும். மாங்குளம் என்ற ஸ்டேஷனில் வந்து வண்டி நின்றது. அப்பொழுது வைத்தி இருந்த கம்பார்ட்மெண்டிலிருந்து அவர் கூடப் பிரயாணம்



செய்துகொண்டிருந்த ஒருவர் கீழே இறங்கிச் சென்றார். அவர் இறங்கிச் சென்றவுடனே அடுத்த வண்டியிலிருந்து அந்தப் பிச்சைக்காரன் நொண்டிக்கொண்டே தாவி ஏறினான். வைத்தியிடம் அவனுக்கு என்னதான் வேலை இருக்குமோ?

இரவு விளக்கின் வெளிச்சத்தில் வைத்தியைக் கூர்ந்து நோக்கினான். அவன் கண்களிலிருந்து விஷம் வெளி வந்தது.

"சண்டாளப் பயலே, அவனைச் சிறைக்குக் கொண்டுபோகப் பார்த்தேல்ல?" என்று சொல்லிக்கொண்டான். அவன் கைகள் வைத்தியின் கழுத்தின் அருகில் சென்றன. அதற்குள் அவன் கண்கள் வைத்தியின் சட்டைப் பையின் மேல் சென்றன. பாவம், அந்தப் பையிலிருந்து வைத்தியின் மணிபர்ச "என்னை எடுத்துக்கொள், என்னை எடுத்துக்கொள்" என்று அந்தப் பிச்சைக்காரனைக் கூவி அழைத்தது. இவ்வளவு சொல்லும்போது அவன் என்ன செய்வான்? பர்சை எடுத்துக்கொண்டான். மதுவால் மயங்கிக் கிடந்த வைத்தி, யாரோ தம் பையைத் தொடுகிறார்கள் என்பதை அறிந்து திரும்பிப் படுத்துக்கொண்டார்.

அதிகாலையில் யாழ்ப்பாணத்தில் சவுடால் வைத்தி தடபுடலாக இறங்கினார். மோகனா, வடிவாம்பாள் முதலியவர்கள் இறங்கிச் செல்லுகையில் தாமும் இந்த ஊரில்தான் இறங்கியிருக்கிறோம் என்பதைக் காட்டிக்கொள்வதற்காக வைத்தி, அவர்கள் அருகில் சென்று ஒரு முறை கனைத்துக்கொண்டார்.

அப்பொழுது "டிக்கெட் பிளீஸ்" என்று டிக்கெட் கலெக்டர் வைத்தியிடம் கேட்டார். வைத்தி பையில் கையை வைத்தார். தேள் கொட்டியது போல் "ஐயோ !" என்று அலறினார்.

"ஏனையா, ஏமாற்றலாம் என்று பார்க்கிறீரா? சீட்டு எடுக்க இல்லையா?" என்றார் டிக்கெட் கலெக்டர்.

"இல்லே சார் - வாங்கினேன் சார். மணிபர்சே காணாம போயிடுத்தே. பதினாயிரம் ரூபாய் இருந்தது சார் !"

"உங்க முகத்தைப் பார்த்தா பதினாயிரம் ரூபாய் பணம் வச்சுக்கிட்டவங்களா தெரியலையே !" என்றான் வரதன்.

" போலீஸ் !" என்றார் டிக்கெட் கலெக்டர். வைத்தி வெடவெட என்று நடுங்கினார்.

"அம்மா, வடிவாம்பா அம்மா" என்றார் வைத்தி. வடிவாம்பாள் திரும்பினாள்.

"என்னங்க வைத்தி?" என்றாள்.

" டிக்கெட் பணம் எல்லாம், பர்சோட காணாம போயிடுத்து. இவரு போலீசிலே பிடித்துக் கொடுக்கிறேன்கிறாரு" என்று கெஞ்சினார்.

"ஆமாங்க. உங்களுக்கு இந்தக் கதிதானே வரணும் !" என்றான் வரதன்.

# ஆறுமுக வேலன் வீதிவலம் வந்தான்



உலகத்தில் எல்லோரும் நண்பர்கள் தான். ஆனால் ஒருவருடைய உதவியைப் பிறர் நாடும் பொழுதுதான் நட்புச் சோதனை வருகிறது. கையிலே தங்க மோதிரத்தைப் போட்டிருக்கிறோம். நாம் உல்லாசமாக இருக்கும்போது, அதுவும் பளபளவென்று மின்னுகிறது. பார்ப்பவர்கள் கண்ணைப் பறிக்கின்றது. அவசியம் நேரும் காலத்தில் தான் உரைத்துப் பார்க்கிறோம். அப்பொழுது தான் அது தங்கத்தைக்காட்டிலும் பத்தரை மாற்றுக்குறைவு என்பது தெரிகிறது. 'நல்லவேளை, மோதிரத்தை வலக்கையில் போட்டுக்கொள்ளாமல் போனோமே, போட்டிருந்தால் பித்தளைக் களிம்பு குழம்புடன் உள்ளே போய் இருக்குமே, தப்பினோம், என்று சந்தோஷப்படுகிறோம்.

இதைப் போலவே சிலர் நட்பும் பார்வைக்குப் பிரமாதமாகத் தோன்றும். பக்கத்திலே போனால் நினைத்த காரியம் நடக்காது. வைத்தி இருந்த இக்கட்டான நிலையில், அவருக்கு வடிவாம்பாளைத் தவிர வேறு யாரும் உதவுவதற்கு இல்லை. "அம்மா, வடிவாம்பா அம்மா!" என்று அவர் கூப்பிட்டபோதுதான் வடிவாம்பாளின் குணம் புரிந்தது.

வைத்தியால் தனக்கு இதுவரை கிட்டத்தட்ட இருபதாயிரம் ரூபாய்க்கு மேல் கிடைத்து இருக்கிறது. மற்றவைகளை மறந்தாலும் கப்பலிலிருந்து அவர் பெட்டியைக் கொண்டுவந்து ஒப்படைத்ததை அதற்குள் மறக்க முடியாது. அவர் செய்திருக்கும் உதவிக்கு ஒரு ஆயிரம் ரூபாய் கொடுத்தாலும் பாதகம் இல்லை.

வடிவாம்பாள் இவற்றையெல்லாம் உணராமல் இல்லை. உணர்ந்தாள், கொடுக்க வேண்டும் என்பதுதான் அவளுடைய எண்ணமுங்கூட. ஆனால், அவ்வளவு பெரிய ரயில்வே ஸ்டேஷனிலே, சிற்றம்பலம், சண்முகசுந்தரம். இவர்களுக்கு நடுவில், பாவம், அந்தப் பெண்பிள்ளை எப்படிப் பேசுவாள்? வெட்கம் வந்துவிட்டது. வைத்தி கூப்பிடக் கூப்பிட காது கேட்காதவள் போலப் போய்விட்டாள்.

வைத்தி நல்ல மனிதர் அல்ல, அவருக்கு உபகாரம் செய்வது பாம்புக்குப் பால் வார்ப்பது போலாகும் என்றுதான் எண்ணினாளோ? அல்லது, அவருக்குப் பணத்தைக் கொடுத்தால் அந்தப் பணத்தையும் வாங்கிக்கொண்டு நம்மிடம் ஏதேனும் தகராறு செய்வார் என்றுதான் எண்ணினாளோ? பாம்பின் காலைப் பாம்பு



அறியும் வடிவாம்பாள் வெட்கப்பட்டுக்கொண்டு வைத்தி பக்கம் ஒரு பார்வை பார்த்து விட்டுப் போய்விட்டாள்.

வைத்தியும் கூடவே போகப் புறப்பட்டார். ஆனால், வைத்தியை அந்த டிக்கெட் கலெக்டர் வாசற்பக்கம் விடத் தயாராக இல்லை.

"கொஞ்சம் விடுங்க சார், இதோ உங்களுக்கு 'டபிள் சார்ஜ்' கட்டி விடுகிறேன்."

"நீங்கள் இரட்டிப்பு சார்ஜ் கட்ட வேண்டாமய்யா சற்று உள்ளே இருங்கள் போதும். உம்மைப்போல ஒரு தமிழர், டிக்கெட் வாங்காமல் வந்து, இங்குள்ள தமிழர்களுக்கே கெட்ட பெயரை வாங்கி வைக்கிறீர்! போலீஸ்...!" என்று மறுமுறையும் கூப்பிட்டார் அந்த டிக்கெட் கலெக்டர்.

வைத்தியின் தர்மசங்கடமான நிலை சண்முகசுந்தரத்துக்குத் தெரிந்தது. அது அவன் மனத்தை உறுத்தியது. தன்னுடைய பையிலிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்தான்.

"தருமண்ணே, இதை அவருக்குக் கொடு" என்றான்.

"என்ன தம்பி, கிணற்றிலே போடச் சொல்றீங்களா? நோட்டு அதிகமாக இருந்தால் என் கிட்டக் கொடுங்க, தம்பி. நான் செலவு பண்ணிக் காட்டுகிறேன்" என்றான் தருமன். அப்போது சிற்றம்பலமும் சேர்ந்து தடுத்தார்.

"அந்த மனிதர் நல்லவர் அல்ல. நேற்றைக்கே நான் அவர் ரயிலில் ஏறும் போது பார்த்தேன். அளவுக்கு அதிகமாக மதுவை அருந்திவிட்டு ஆடிக்கொண்டே வண்டியிலே ஏறினார். அப்பொழுதே இவர் ஏதேனும் கொள்ளை கொடுப்பவர் என்று எண்ணினேன். அவர் உங்களுக்குத் தெரிந்தவரா?" என்றார் சிற்றம்பலம்.

"ஆமாம். தெரிந்தவர்தான். ரொம்பத் தெரிந்தவர். அவரை எனக்குத் தெரிந்த அளவு, வேறு யாருக்கும் தெரியாது."

"இங்கு எதற்காக வந்திருக்கிறார்?"

"என்னையும், மோகனாவையும் கண்காணிப்பதற்கு."

"அவருக்கு எதற்காக ரூபாய் கொடுக்கிறீர்கள்?"

"அவரையும் கடவுள் படைத்துவிட்டாரே!"

"அவர் நேற்று நடந்துகொண்ட முறைக்கு, ஒரு இரண்டு நாளாவது தண்டனை அனுபவிக்க வேண்டும். இந்த ஊருக்குத் தமிழ் மக்கள் வந்தால், நாங்கள் அன்புடன் வரவேற்கிறோம். எங்கள் தாய் வீட்டிலிருந்து வந்தவர்களைப் போல ஆதரிக்கிறோம். அவர்கள் வருவதால் எங்களுக்குப் பெருமை என்று நினைக்கிறோம். இவரைப் போன்ற சிலர் இங்கே வந்து இறங்கியவுடனே, மதுக் கடைக்குள் புகுந்து பொறுக்கக் குடித்துக் கொம்மாளம் அடிப்பதைப் பார்க்கும் போது இங்கேயுள்ள ஒவ்வொரு தமிழனும் தலைகுனிகிறான். இவர்களால் எங்களுக்கு அவமானம் எங்கள் தாய் நாட்டுக்கு

அவமானம் என்று எண்ணுகிறோம். நேற்றே நான் அவரைப் போலீசில் பிடித்துக் கொடுத்திருப்பேன்—"

"என்ன செய்வது? அது அவருடன் கூடப் பிறந்தது. போனால் போகிறது. கொடுத்துட்டு வா, தருமண்ணே !"

"ஐயா, ஒத்துக்காரரே, நீங்கள் கொடுக்கவேண்டாம். நான் கொடுக்கிறேன்" என்றார் சிற்றம்பலம்.

"ஐயோ நீங்களா—?"

"அப்படியல்ல. இந்த ஊரிலே நீங்கள் மணிபர்சை எடுக்கவே கூடாது ! நீங்கள் என் விருந்தினர்" என்று சொல்லி, தருமனிடம் அவர் ஒரு நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்து அனுப்பினார். சண்முகம் மலைத்தான். தருமன் வைத்தியின் பக்கம் சென்றான். எல்லோரும் வெளியே வந்தார்கள்.

"இந்தாங்க ஐயா. நூறு ரூபாய் கொடுத்திருக்காரு. எதுக்குத் தெரியுமில்லே?" என்றான் தருமன்.

"எதுக்கு?"

"இதை வாங்கிக்கிட்டு அப்படியே இந்த ரயில்வே ஸ்டேஷனிலிருந்து நேரே ஊருக்குப் போயிடணும்."

"சரிதான் ஒத்துக்காரரே, கொடு" என்றார் வைத்தி.

"என்னய்யா, நூறு ரூபாய் கையிலே கொடுக்கிறேன். சந்தோஷமா ஒரு வார்த்தை காணோமே !"

"அடேயப்பா, இங்கே மனுஷன் திண்டாடிக்கிட்டிருக்கான். நீ என்னமோ ஒரு நூறு ரூபாய்க்குப் பிரமாதமா பேசறியே ! என் பையில் பணம் எவ்வளவு இருந்தது தெரியுமா?"

"சரி, பின்னே உங்க பையிலே இருந்த பணமே வரட்டும்" என்று திரும்பினான் தருமன்.

"சரிதான், ஒத்துக்காரரே, கொடுங்க" என்று வைத்தி வாங்கிக் கொண்டு, பிறகுதான் அவனை விட்டார்.

தருமன் பணத்தைக் கொடுத்துவிட்டுப் போனவுடன் வைத்தி இரட்டிப்பு சார்ஜ் கட்டினார். விடுதலையானால் போதும் என்ற எண்ணத்தில் வெளியே வந்தார்.

அவர் இம்மாதிரி ஒரு முறைகூடப் பணத்தைத் தொலைத்தது இல்லை. பணத்தைப் பறி கொடுத்தவன் மனம் என்ன பாடுபடும் என்பதை இன்றைக்குத்தான் உணர்ந்தார். தம்மிடம் பணத்தைப் பறிகொடுத்தவர்கள் எப்படித் துடித்திருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்த்தாரா? ஒரு காலமும் கிடையாது. உலகத்தில் நம்மிடம் பணம் கொடுக்கும் போது இருக்கிற சந்தோஷம் வேறு எதிலும் யாருக்கும் கிடையாது என்ற எண்ணந்தான் அவருக்கு இருந்து வந்தது. நேற்று அவர் கையிலே கிட்டத்தட்ட மூவாயிரத்துக்கு மேல் பணம் இருந்தது.



அவ்வளவு பணமும் கனவு போய், இன்று நிராதரவான நிலையில் தாம் இருப்பதைக் கண்டார்.

நேற்று இதே நிலையில்தான் சண்முகத்தை அவர் இறக்கி விட்டார். பெட்டி, படுக்கை ஒன்றையும் அவர்கள் எடுக்காமல் இறங்கும் போதுகூட, வைத்தியின் மனத்தில் சிறிதேனும் இரக்கம் வரவில்லை. அவர்கள் கையில் காலணா இல்லாமல் தவிப்பார்களே என்ற எண்ணமும் வரவில்லை. 'கப்பல் கேப்டன் தம்மைக் கைது செய்துவிடுவார், மகாராஜாவின் மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்' என்பதை அறிந்த பிறகுதான் பெட்டிகள் எல்லாவற்றையும் அவரே எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தார். "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்று சொல்லுவார்கள். தமக்கு அப்படியே நேர்ந்ததைக் கண்டார். 'எவன் எடுத்தவன்? எப்படிக் கண்டுபிடிப்பது? நம்மோடுகூட யாரோ முதல் வகுப்பு வண்டியில் உட்கார்ந்து இருந்தார்களே ! அவர்கள் எடுத்திருப்பார்களோ?' என்ற சந்தேகம் வந்தது.

அப்பொழுது அவருடைய மூளையிலே பளிச்சென்று ஏதோ உதயமாயிற்று. நொண்டிப் பிச்சைக்காரன் முகம் அவர் கண்முன்னே தோன்றியது. தம்மை நேற்று இரண்டு இடங்களில் அவன் சுற்றி வந்தான் என்ற எண்ணமும் வந்தது. ரயிலடியில் அத்தனை பேர்கள் இருக்கும் போது, அவன் தம்மிடம் மட்டும் வந்து பிச்சை கேட்பானேன்? நான் பிச்சை போடுவேன் என்று அவன் எப்படி எதிர் பார்த்தான்? எந்தப் பிச்சைக்காரனும் நம்மிடம் இதுவரை கேட்டதே இல்லையே !' என்று எண்ணினார்.

பேயின் முகம் போல அடிக்கடி அவர் கண்முன் அவன் முகம் தோன்றியது. 'ஆம், அந்த முகத்தை எங்கேயோ பார்த்து இருக்கிறோம். அது யாருடைய முகம்?' என்று நெடுநேரம் யோசித்தார். ஒரு மின்னல் ! அட பாவி ! பாரியூர் ஜமீன்தார் அல்லவா?' என்ற எண்ணம் வந்தவுடனே அவர் உடல் வியர்த்தது. ஒரு துள்ளுத் துள்ளினார். 'இங்கேயும் வந்திருக்கிறானே ! மோகனாவிடம் கொள்ளையடிக்காமல் நம்மிடம் ஏன் கொள்ளையடித்தான்?' என்று திகைத்தார்.

'உடனே நாம் ஓடவேண்டும். சண்முகசுந்தரத்தையும் மோகனாவையும் ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லவேண்டும்' என்ற நல்ல எண்ணமும் அவருக்குக் கூடவே வந்தது. ஆனால், அந்த வடிவாம்பாள் நாம் கூப்பிடக் கூப்பிடக் காதில் கேட்காதது மாதிரிப் போனாளே. இவளுக்கு நாம் ஏன் போய் எச்சரிக்கை செய்ய வேண்டும் !' என்ற மனிதத்வம் மனத்தில் தோன்றவே அலட்சியம் உண்டாயிற்று. உடனே, யாழ்ப்பாணம் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடினார். அங்கு தம்மிடமிருந்து நோட்டுகள் பறிபோனதைப் பதிய வைத்தார். அவர்கள் "உங்களுக்கு யார்மேல் சந்தேகம்?" என்று கேட்டார்கள்.

"ஒரு நொண்டிப் பிச்சைக்காரன். அவன் பெயர் பாரியூர் ஜமீன்தார்" என்று தமக்குத் தெரிந்த விவரங்கள் எல்லாவற்றையும் சொன்னார்.

"ஆமாம். உங்கள் பையில் வைத்திருந்த நோட்டுகள் எல்லாம் இந்திய நோட்டுகளா, சிலோன் நோட்டுகளா?" என்று கேட்டார் போலீஸ்காரர். இந்தக் கணக்கு வைத்திக்கு எப்படித் தெரியும்? அவர் விழித்தார்.

"நோட்டு நெம்பர்கள் தெரியுமா?"

"நான் அதை எப்பவுமே குறிச்சு வச்சிக்கறது இல்லே!" என்றார் வைத்தி.

"உங்களுக்கு யார் கொடுத்தார்கள்?"

"மதன்பூர் மகாராஜா கொடுத்தார்."

"கப்பலுக்குத் தந்தி அடித்து நெம்பரைக் கேட்டுச் சொல்லுங்கள் இந்திய நோட்டுகளை இங்கே சிலோன் நோட்டுகளாக மாற்றிய பின்தான் செலாவணியாகும். ஆனால் திருடன் ஒரு நோட்டைப் பாதி விலைக்கு விற்றால் அது ஊர் முழுவதும் பரவிவிடக்கூடும். எதற்கும் பார்க்கிறோம்" என்று இன்ஸ்பெக்டர் கூறினார்.

வைத்தி தம் கையில் எவ்வளவு மிச்சம் இருந்தது என்று பார்த்தார். ஐம்பதுக்கு மேல் மிச்சம் இருந்தது. அவர் மனத்தில் ஏதோ சிந்தனைகள் ஓடின. முடிவில் யாழ்ப்பாணத்தில் போய் ஒரு ஹோட்டலில் தங்க நிச்சயம் செய்தார்.

வெளியில் வரும்போதே, சண்முகத்திடம் இருந்த நாதஸ்வரப் பெட்டியை, "இப்படித் தாருங்கள்" என்று சொல்லிக் கை நீட்டினார் சிற்றம்பலம்.

"இல்லே, நானே கொண்டுவருகிறேன்"

"பிளாட்பாரத்திலே உங்களை வரவேற்கப் பலர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மாலை போடுவார்கள். அப்பொழுது பெட்டி உங்கள் கையில் இருந்தால் நீங்கள் வணங்க முடியாது கொடுங்கள் இப்படி—"

"ஐயோ, நீங்கள் கோடீசுவரர். இதை நீங்கள் தூக்கக்கூடாது"

"அல்ல ஐயா, எனக்கு அதெல்லாம் கிடையாது. என் கையால் கிணற்றில் தண்ணீர் சேந்துவேன் என்னுடைய எஸ்டேட்டில் வந்து பார்த்தீர்களானால், நானும் அவர்களோடு வேலை செய்வது தெரியும். என் கையால் மேழி பிடிப்பேன். உடம்பை வளர்ப்பது உணவால் அல்ல ஐயா, உழைப்பால்தான். கொடுங்கள், இப்படி."

"மன்னிக்க வேண்டும். நான்—"

"மன்னியுங்கள். சும்மா கொடுங்கள்."

"அல்ல, இதை நான் பிறர் கையில் கொடுப்பதில்லை."

"ஏன்?"



"இதில் என் வாத்தியம் இருக்கிறது நான்தான் எடுத்து வர வேண்டும்."

"அப்படியானால் சரி"

எல்லோரும் வெளியே வந்தார்கள். வெளியே ராமன் செட்டியாரும், ஆயிரக்கணக்கான யாழ்ப்பாண மக்களும் கூடியிருந்தார்கள். ராமன் செட்டியாருக்குச் சண்முகத்தையும் மோகனாவையும் பார்த்தவுடனே ஆனந்தம் மேலிட்டது. "வாங்க, வாங்க" என்று சண்முகத்தின் கழுத்தில் மாலையை அணிவித்தார். சிற்றம்பலத்தின் மகள் சிவகாமசுந்தரி, "வணக்கம்" என்று கூறி, மோகனாவுக்கு மாலையை அணிவித்தாள். அங்கிருந்த கூட்டத்தினர் எல்லாம் தாயகத்துக்காரர்களை ஆவலோடு பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.

"இன்றைக்குச் சிற்றம்பலம் வீட்டில் விருந்தாளியாக இருங்கள். இரண்டு நாள் கழித்து என் வீட்டில் விருந்துக்கு வர வேண்டும்" என்று ராமன் செட்டியார் அழைத்தார்.

"ஆகட்டும்" என்றான் சண்முகம்.

ராமன் செட்டியாரைப் பார்த்தவுடனே, வடிவாம்பாளுக்கு அழகர் கோயில் ஞாபகம் வந்தது. 'இந்தப் புண்ணியவானால்தானே இவ்வளவு திருவிளையாடல்களும்! தன் மகளின் வாழ்க்கையிலேயே ஒரு திருப்பத்தை உண்டாக்கியது அவர்தாமே? அழகர் கோவில் பக்கத்தில் திரும்பாமல் இருந்தால், எப்படி எப்படியோ இருந்திருக்குமே!' என்று எண்ணினாள்.

சண்முகசுந்தரம் முதலியவர்கள் சிற்றம்பலத்தால் நல்லூருக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

வண்டியில் போகும் போதே, "என்ன தவுல்காரரே, இந்தக் கொழும்பிலே கொட்டப்பாக்கு ரொம்ப சவுதமாமே!" என்றான் தருமன்.

"புகையிலைக் கொட்டாங்கூட இங்கே வாங்கலாம்!"

"என் தவுல்காரரே, இது என்ன ஆச்சரியம்! எங்கே பார்த்தாலும் பனைமரமா இருக்குதே!"

"என்ன தருமண்ணே, மரத்தைக் கண்டதும் மலைக்கிறீங்க!"

"இல்லே அண்ணே, நம்ம ஊர் பனைமரத்துக்கு மேலே நாலு பங்கில்ல பருமனா இருக்குது! ஒவ்வொரு ஓலையும் எவ்வளவு பெரிசு! மரத்தைக் கையாலே கட்டிப் பிடிக்க முடியாது போலிருக்கே!"

"தென்னையும் பனையுந்தான் தெய்வம் அண்ணே. இந்த ஊரிலுள்ளவங்க பனைமரத்தை வீணாக்க மாட்டாங்க. வெட்ட மாட்டாங்க. பனங்கட்டி, பனைநார், பனையோலை, பாய், வீட்டுக்குக் கூரை, உத்தரம், விட்டம், வளை எல்லாமே இங்கே பனைமரந்தான்

அண்ணே !" என்று அவர்கள் பனையையும், தென்னையையும்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

வண்டி நல்லூரிலுள்ள சிற்றம்பலம் வீட்டு வாசலில் போய் நின்றது. அவர் வீட்டைப் பார்த்தவுடனே, சண்முகசுந்தரம் திகைத்தான். 'என்னமோ, கோடீசுவரன் என்று சொன்னார்கள். பெரிய மாளிகையை எதிர்பார்த்தோம். வீடு சாதாரணமாக இருக்கிறதே !' என்று எண்ணினான்.

வெளியே அரை பர்லாங்கு நீளத்துக்குப் புதிய தென்னைக்கிடுகுகளால் திரைச்சல் பிடித்து இருந்தார்கள். படலைத் திறந்துகொண்டு வண்டி உள்ளே சென்றது. முன் முற்றம் முழுவதும் மல்லிகையும், ரோஜாவும் பூத்துக் குலுங்கின. பூசைக்குரிய தங்கரளி, நந்தியாவட்டை முதலிய நறுமலர்களும் அங்கே நிறைந்திருந்தன. மருந்துக்குக்கூட ஒரு குரோட்டன்ஸ் செடியில்லை. அழகான பந்தலின் மேல் சாதி மல்லிகைக் கொடி படர விடப்பட்டிருந்தது. சிறு மரங்களின் மேல் முல்லைக் கொடி படர்ந்து இருந்தது. சண்முகசுந்தரம் அந்தத் தோட்டத்தை ஒரு நோட்டம் பார்த்தான்.

"என்ன, தோட்டத்தையே பார்க்கிறீங்களையா?"

"இல்லே, இலங்கையிலே அழகான குரோட்டன்ஸ் இருக்கும் என்று சொல்லுவார்களே !"

"ஐயா, நிலத்தையும் நீரையும் வீணாக்கக் கூடாது. உழைப்பும் நல்ல காரியத்துக்குப் பயன்படவேண்டும். ரோஜாவில் இல்லாத அழகும் மல்லிகையில் இல்லாத மணமும் குரோட்டன்ஸில் வந்துவிடுமா? இந்த மலர்களில் இறைவனுக்குக் கண்டு மிஞ்சியதைப் பெண்கள் தலையில் அணிவார்கள். எனக்கு குரோட்டன்ஸ் பிடிப்பதில்லை, வாருங்கள்" என்று உள்ளே அழைத்துச் சென்றார் சிற்றம்பலம்.

அந்தத் திண்ணையின் அழகைப் பார்த்தவுடன் தருமனுக்கு அங்கு சற்று நேரம் குந்தி, அந்த மாப்பிள்ளைத் திண்ணையில் சாய்ந்து கொள்ள வேண்டுமென்று தோன்றியது. சென்ற நான்கு நாட்களாக அவனுக்குக் கப்பலில் இருப்பே கொள்ளவில்லை. தரையை மிதித்து நடக்கவேண்டும் என்று ஆசை வந்துவிட்டது. ஆடிக்கொண்டே இருக்கும் கப்பல் பிரயாணத்தில் அலுப்பு ஏற்பட்டது. கொழும்பிலே தங்கின ஹோட்டலும் அவனுக்குப் பிடித்தமாக இல்லை. அதிலே தரையெங்கும் ஜமக்காளம் விரித்திருந்தார்கள். அவன் இதுவரை தரையில் கால் வைத்து நடக்கவே இல்லை. வீடுகள் ஆடுவன போல் தோன்றின. யாழ்ப்பாணத்து மண் வாடையும், மலர் மணமும் அவனுக்குத் தேவலோகத்தைவிட இன்பம் அளித்தன. திண்ணையில் போய் உட்கார்ந்தான்.

சண்முகசுந்தரத்தின் வருகையை முன்பே தெரிவித்திருந்ததால், வீட்டிலுள்ள வேலைக்காரர்கள் எல்லா ஏற்பாடுகளையும்



செய்திருந்தார்கள். விருந்தினருக்கு என்று வீட்டுக்குள் ஒரு அறையை ஒழித்துக் கொடுக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் காலைப் பலகாரம். ஒவ்வொருவரும் உண்டு தலைக்கவேண்டியது. நல்ல தலைவாழையிலை போட்டு, அதிலே செக்கச்சிவந்த இடியாப்பங்களைப் பரிமாறினார்கள். அதற்குத் தேங்கின்பாலில் தயார் செய்த சொதியை விஞ்சனமாக வைத்தார்கள். "சம்பல் வைக்க இல்லையா?" என்றார் சிற்றம்பலம். தருமன் திகைத்தான்.

"சம்பல் என்றால் சட்டினி" என்றார் சிற்றம்பலம்.

"இங்கே இட்டிலி கிடைக்காதோ?" என்றான் தருமன். பாவம், தஞ்சாவூர் ஜில்லாவில் இட்டிலியும், கொத்ஸும் சாப்பிட்டுப் பழகியவன்.

"இட்டிலி அவ்வளவு பழக்கமில்லே இங்கு" என்றார் சிற்றம்பலம்.

இதுவரையில் இடம் கிடைக்காமல் திண்டாடிய தருமன், "என்ன இருந்தாலும் தமிழ்நாடு தமிழ்நாடுதான்" என்றான். சிற்றம்பலம் சிரித்துக்கொண்டார்.

அப்போது இலையில் பல வகைப் புட்டுகள் பரிமாறப்பட்டன. குழற்புட்டு, நீத்துப்பட்டிப்புட்டு, பனைவெல்லப்புட்டு என்று பல தினுசுகள் பரிமாறப்பட்டன. தருமன் இன்று சொக்கலிங்கப் பெருமானாகவே ஆகிவிட்டான். அன்று அவர் நினைத்தவுடனே புட்டு உதிர்ந்தது. இன்று தருமன் தொட்டதுமே புட்டு உதிர்ந்தது. 'பிட்டுத் தின்னோம், என்று சொல்லிக்கொள்ள முடியாவண்ணம் அந்தப் புட்டு உருவங்கள் உதிர்ந்தன. தருமன் அதில் விளையாடினான்.

அப்பம் செய்திருந்தார்கள். "அதியதரம் போடு" என்றார் சிற்றம்பலம். நமது ஊர் அதிரசம் பரிமாறப்பட்டது.

அன்றைய தினம் சாப்பாட்டைவிட அவைகளின் பெயர்கள் மிகவும் இனித்தன. முத்துக்குமார நட்டுவனார் அதிகாலையிலேயே பூசையை முடித்துக்கொண்டுவிட்டார். நேற்று முழுக்கப் பட்டினியாய் இருந்த களைப்புத் தீர அவர் ஒரு வகையாகவே உணவு எடுத்துக்கொண்டார். எல்லோருக்கும் கோப்பி கொடுக்கப்பட்டது. காலைப் பலகாரம் முடிந்ததும் எல்லோருக்கும் கோப்பி கொடுக்கப்பட்டது. வரதன் கோப்பி வேண்டாமென்று சொல்லிவிட்டான். நீர்மோர் மாத்திரம் சாப்பிட்டான்.

ஊரைப் பார்த்தால் அது தமிழ்நாடு போலவே தோன்றியது. பேச்சில் மாத்திரம் பழந்தமிழும், சிறிது மலையாளமும் கலந்தது போல ஓசை இருந்தது. அங்குள்ள தமிழ்மக்கள் சேரநாடும் தமிழ்நாடும் ஒன்றாக இருந்த காலத்தில் இலங்கைக்குப் போனவர்கள் என்று தோன்றியது. தமிழ் நாட்டின் பண்பில் உயர்ந்த அம்சங்கள் எல்லாம் அவர்களிடம் காணப்பட்டன. பிற நாகரிகக் கலப்பு சிறிதேனும் இல்லை. கொழும்புக்குச் செல்லும்போது அவர்கள்

நாகரிக உடைகள் உடுத்திச் சென்ற போதிலும், நல்லூரில் அவர் வீட்டில் தமிழ் மணம் கமழ்ந்தது. பெண் பிள்ளைகள்கூட நெற்றி நிறைய வெண்ணீறு அணிந்திருந்தார்கள்.

சண்முகசுந்தரம் முதலியவர்களை இளைப்பாறச் சொல்லிவிட்டு ராமன் செட்டியாரும், சிற்றம்பலமும் கலந்து பேசினார்கள். ஐப்பசி வெள்ளியன்று கந்தசாமி கோவிலில் சண்முகசுந்தரம் வாசிப்பது என்று ஏற்பாடாயிற்று. ஆனால், அவர்களுக்குள் ஒரு போட்டியும் வந்தது. அன்று சுவாமி புறப்பாட்டுக்கு உபயத்தைத் தாமே செய்வதாக ராமன் செட்டியார் கூறினார். சிற்றம்பலம் அது முடியவே முடியாது என்று சொல்லிவிட்டார். அப்பொழுது உள்ளூர் அன்பர்கள் பலர் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் எல்லோரும், அந்த விழாவை ஊர்ச் செலவில்தான் நடத்த வேண்டுமென்று வற்புறுத்தினார்கள்.

சிற்றம்பலம் தாமே செய்வதாகக் கூறியும், அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. ஐப்பசி வெள்ளியன்று, சண்முகசுந்தரம் வாசிப்பதென முடிவாயிற்று.

சிற்றம்பலம் குமாரசாமி அவர்கள் மகள் கல்யாணத்தைத் தை மாதத்தில் நடத்தத் திட்டமிட்டிருந்தார். ஆகவே அதுவரை சண்முகசுந்தரம், மோகனா கோஷ்டியினர் இலங்கையிலே சுற்றிப் பார்க்க வேண்டுமென்றும், கல்யாணம் முடிந்த பிறகு ஊருக்குப் போகலாமென்றும் அவர்களைக் கேட்டுக்கொள்ள நிச்சயித்தார்.

இதற்கு நடுவிலே, அங்கு ஒரு சிறிய பரபரப்பு எழுந்தது. தவசிப் பிள்ளை வந்து பணிவாக வாய் பொத்தி நின்று குமாரசாமி அவர்களிடம், "தவுல்காரர் எதிலேயும் கை வைக்கவில்லை. அவருக்கு இந்தப் பலகாரங்கள் எதுவும் பிடிக்கவில்லை" என்று சொல்லவே, குமாரசாமி எழுந்து உள்ளே சென்றார்.

"உங்களுக்கு ஏதாவது செய்யச் சொல்லட்டுமா?" என்று முத்துராக்குவிடம் கேட்டார்.

"இல்லீங்க, அதனாலே பாதகம் இல்லே" என்றார் தவுல்காரர்.

"நீங்கள் ஒன்றுமே சாப்பிடவில்லையாமே?"

"இல்லே, நான் காலைப்பலகாரம் சாப்பிடற வழக்கமில்லை."

"சும்மா இருங்க முத்துராக்கு நீங்களா காலையிலே பலகாரம் பண்ணறது இல்லே?"

"இல்லீங்க நாயனக்காரரே. நான் ஒருபொழுது" என்றார் அவர்.

கருமன் சிரித்தான். "ஏன், நேத்து ஓட்டலிலே நல்லா கட்டிட்டீங்களோ?"

"இல்லே தருமண்ணே, எப்போ சொளும்பிலே காலடி வச்சேனோ அப்போ முதற்கொண்டே—"

"ஏன்?" என்றான் சண்முகம்.



"ஆமாங்க நான்தான் உங்ககிட்டே ஊரிலேயே சொன்னேனே கதிர்காமத்துக்குப் போயிட்டு வாறதும்னு. அதுக்குத்தான் விரதம் இருக்கேன்."

உடல் புல்லரித்தது. கண்ணீர் மல்கியது. அத்தனை பேரும் அந்த நிமிஷம் உளமுருக நின்றார்கள். கதிர்காம வேலனை நினைத்தவுடன், தமிழ்க் கடவுள் ஆகிய முருகப்பெருமானின் பேரைச் சொன்னவுடன் கன்னித் தமிழ்நாடும் இலங்கையும் இரண்டறக் கலந்தன.

"மிக்க நன்றி. கன்னித் தமிழ்நாட்டினரைக் காட்டி அழைப்பது கதிர்காமந்தான். சில நாளில் புறப்படுவோம்" என்று சொன்னார் சிற்றம்பலம்.

அன்று ஐப்பசி வெள்ளிக்கிழமை. நல்லூர்க் கந்தசாமி கோவிலைச் சுற்றி ஏராளமான கூட்டம். கோவிலின் இருபுறமும் உள்ள அசையா மணிகள் "வாருங்கள், ஓடி வாருங்கள்" என்று சொல்லி 'ஓம், ஓம்' என எங்கும் ஒலித்தன. 'மனோரா' போல இருக்கும் அந்த மணி மண்டபத்தின் பக்கத்தில், இரண்டு பேர்கள் மணி அடித்துக் கொண்டே இருந்தார்கள். கோவிலின் முன் மண்டபத்தில் ஏராளமான கியாஸ் லைட்டுகள் பொருத்தி வைக்கப்பட்டிருந்தன. பக்கத்தில் இருந்த தேர்முட்டிமீதுகூட மக்கள் உட்கார்ந்திருந்தார்கள். வீரமாகாளியம்மன் கோவில்வரை ஜனத்திரள் தாங்காது இருந்தது. பருத்தித்துறை போகும் சாலை நெடுகிலும் கூட்டம். உடுவில், இணுவில், காங்கேசன்துறை, கொக்குவில் திருநெல்வேலி, கோப்பாய், மானிப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலிருந்து எல்லாம் எறும்புச்சாரி வருவது போல மக்கள் வந்துகொண்டே இருந்தார்கள். கோயில் வாசலில் வெற்றி வடிவேலனை, வினை தீர்க்கும் கந்தனை ஆறுமுகத் திருக்கோலத்தில் அலங்கரித்து மயில் வாகனத்தில் ஆரோகணிக்கச் செய்திருந்தார்கள். யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லாச் சைவப் பெருமக்களும் அங்கு சிவச் சின்னங்களுடன் திரள் திரளாகக் குழுமியிருந்தார்கள்.

தமிழையும், சைவத்தையும் முறையே தாய் தந்தை போலக் கருதும் யாழ்ப்பாணவாசிகள் எல்லோரும் இடையிலே வேட்டியை மடித்துக் கட்டி, சால்வையை இடுப்பில் சுற்றிக்கொண்டு, திருநீர் அணிந்த திருமேனியராய்ப் பயபக்தி விசுவாசத்துடன் ஆறுமுகப் பெருமான் திருமுன் நின்ற காட்சியை ஆறுமுக நாவலர் வானகத்தில் நின்று கண்டார். அன்று அவர் ஏற்றி வைத்த திருவிளக்கு அருட்சோதியாய் விளங்குவதைக் கண்டு ஆனந்தித்தார். அங்குள்ள ஒவ்வொரு குழந்தையுங்கூட சைவப் பெருமகனாகக் காட்சியளித்தது. தமிழ்த் தொண்டாற்றும் பல பெரியார்கள் அனுட்டானங்களை முடித்துக் கொண்டு அங்கு வந்திருந்தார்கள். அவர்கள் முகத்திலே தெய்வ ஒளி வீசியது. அக்க மணி அணிந்த பலரும், தீர்க்காவி ஏறிய உடையுடன் நெஞ்சிலே தமிழ் ஈரம் நிறைந்த பலரும், அங்கு வந்து நின்று

கொண்டிருந்தார்கள். எங்கு பார்த்தாலும் தேங்காய் எண்ணெய்த் திவட்டிகள் எரிந்துகொண்டிருந்தன. இதனைக் கண்ணுற்ற யாழ்ப்பாணத்துத் தென்னைமரங்கள் "யாம் என்ன புண்ணியம் செய்தோம்' என்ற ஆனந்தத்தில் ஒரு முழம் கூட உயர்ந்தன. அதன் காய்களும் இன்னும் ஒரு சுற்றுப் பருத்தன.

வெற்றி வடிவேலன் வெளியுலா வரும் விக்கிரகம் ஐம்பொன்னால் ஆகியது அதில் பக்தியென்னும் செம்பொன்னும் கலந்து ஆறு பொன் மயமான ஆறுமுகன் புன்னகை தவழ அமர்ந்திருந்தான். அழகான கொம்புகளைத் தூக்கிய அடியார் தோள்மேல் காட்சி கொடுத்தான். அந்தமிகும் மயில், 'எம் போல பாக்கியம் செய்தவர் எவர்?' என்று கூவிக்கொண்டு நின்றது. ஆனால், வாகனத்தைத் தூக்கிக் கொண்டிருந்த பல தொண்டர்கள் வாரைகளைத் தோள்மேல் சுமந்த வண்ணம், "மயிலே, மயிலே, மமதை கொள்ளாதே! உன்னைக் காட்டிலும் நாங்கள் பாக்கியசாலிகள். எங்களுடைய தோள்மீது எம்பெருமான் எழுந்தருளியிருக்கிறார். அது மட்டுமல்ல. அதோடு உன்னையும் சுமக்கும் பாக்கியம் பெற்றோம். நீ திருத்தொண்டு செய்கிறாய். நாங்கள் ஒரே சமயத்தில் சுவாமியையும் தொண்டரையும் தூக்கும் பெருமை படைத்தோம்" என்று தங்கள் புயங்களைப் பார்த்துப் பூரித்துப் போனார்கள்.

எங்கு பார்த்தாலும் சாம்பிராணியின் நறுமணம் கமழ்ந்தது. சுவாமிக்குக் கற்பூரம் காட்டினார் குருக்கள்.

இந்தச் சமயத்தில், சண்முகசுந்தரத்தின் நாதஸ்வரத்திலிருந்து அழகான பாடல் ஒன்று வெளிப்பட்டது. 'ஆறுமுகன் ஏறுமயிலே! ஆடி வா, ஆடி வா, ஆடி வா, என் முன்னே' என்று வசந்தா ராகத்தில் ஒரு தமிழிசைப்பாடல் முழங்கியது. உருகாத நெஞ்சமெல்லாம் உருகின. 'முருகா, முருகா' என்று பாகாகக் கரைந்தன. 'அரோஹரா' என்ற குரல் ஒலித்தது. அத்தனை பேர்களுக்கும் கண்ணீர் அருவி வழிந்தது. தமிழ்த் தாயின் திருமகன், கலைஞனுக்கெல்லாம் கலைஞன், சண்முகசுந்தரத்தின் தேன் பொழியும் குழலில் இருந்து அடுத்ததாக அருணகிரிநாதரின் திருப்புகழ் வாசிக்கப்பட்டதும், அதிலுள்ள சந்தங்கள் சிந்தின. வெறும் தத்தகாரத்தில் வாசிக்கவில்லை சண்முகசுந்தரம். திருப்புகழின் ஒவ்வொரு எழுத்தும் அவன் நாதஸ்வரத்தில் பேசியது. அப்படியே மக்கள், இசையில் தம்மை மறந்து, நாத ஆதியாம் முருகனைக் கண்டு, உள்ளம் குளிர்ந்து ஆடிக்கொண்டே இருந்தார்கள்.

"செந்தில்மா நகரம் தனில் மேவிய___' என்ற காவடிச் சிந்து அடுத்தபடியாகப் புறப்பட்டது. காவடிகளிலே பாற்காவடி சருக்கரைக் காவடி, இளநீர்க் காவடி என்று பற்பல சுவையுள்ள பொருள்களைக் காணிக்கைச் செம்பில் கட்டி காவடி எடுப்பார்கள். ஆனால் சண்முகசுந்தரம் வாசித்த அந்தப் பாடலே பாலினும் தேனினும் இனிக்கும் பைந்தமிழ்ப் பாடல்; சின்னைத் தோற்கடிக்கும் செந்தமிழ்ப்பாடல். அதுவே சந்தமிகு செந்தமிழ்க் காவடி. உள்ளம் குளிர்ந்து அருள் பொங்கி அண்ணாமலை ரெட்டியார் பாடிய காவடிச் சிந்துகள் அன்று நல்லூர் திருமுன் நாதஸ்வரத்தில் முழங்கின. தமிழிலும், தமிழ் இசையிலும் பேரன்பு கொண்ட யாழ்ப்பாணத் தமிழர்கள் அந்தக் காவடிச் சிந்துக்கு ஏற்பத் தம்மையறியாமல் ஆடிக்கொண்டே இருந்தார்கள். திருப்புகழும், காவடிச்சிந்தும் தேவாரத்துக்கு அடுத்தபடியாகத் தமிழ் மக்களால் போற்றப்படுபவை என்பதை யாழ்ப்பாணத்தில் அன்று கண்டான் சண்முகசுந்தரம்.



13958 / 4844-707

தமிழ் மொழியில் பாடிப் பாடி வணங்கும் முருகனை அன்று தமிழ் மாலைகளால் அலங்கரித்தான் சண்முகசுந்தரம். இசை மணம் பரப்பினான். இதய ஜோதியை ஏற்றினான். ஆறாயிரம் மைல் சென்று, யார் யாருக்கு முன்போ வாசிக்கவிடாமல் ஆறுமுகன் முன் வாசிக்கக் கிடைத்தமைக்கு உருகினான். அவன் வாசிப்பைக் கேட்ட அந்த மக்கள் மெய்ம்மறந்து நின்றார்கள். அவன் அழகைப் பார்த்துப் பார்த்து மயங்கினார்கள். அவன் அருகில் வர எண்ணித் துடித்தார்கள். எவரும் பெருமூச்சு விடவில்லை. இரைந்து ஒரு வார்த்தை பேசவில்லை. சண்முகசுந்தரத்தைத் தொட ஆவல் கொண்டார்கள். அவன் கட்டியிருக்கும் பீதாம்பரத்தைப் பலர் தொட்டார்கள். அன்று அங்கிருந்த ஒவ்வொரு தமிழனும், "இசை எங்கள் செல்வம், தமிழ் எங்கள் செல்வம், அருணகிரி நாதரும், அண்ணாமலை ரெட்டியாரும் எங்கள் செல்வம்" என்று புதையல் தனம் கிடைத்தது போலப் பூரித்து நின்றார்கள்.

அடுத்தபடியாகச் சண்முகசுந்தரம், திருஞானசம்பந்தரின் தேவாரத்தைப் பூவாரமாக்கிச் சாத்தினான். அது திருக்கோணமலைத் தேவாரம். 'நிரைகழல் அரவம், சிலம்பொலியலம்பு நிமலர் நீறணி திருமேனி' என்னும் தேவாரப்பாடலை வாசிக்க ஆரம்பித்தவுடனே, இன்னும் சற்று அதிக கவனத்துடன் கேட்க ஆரம்பித்தார்கள்.

சண்முகசுந்தரம் சிக்கலிலே பிறந்தவன். நாகையும், ஆரூரும், தேவாரத்துக்குப் பெயர் போனவை. ஸ்ரீசாமிநாத தேசிகர் என்னும் பெரியார் நாகையில் இருந்தார். அவரிடம் சண்முகசுந்தரம் தேவாரம் முறையே பயின்றான். பண்முறை மாறாமல் வாசிப்பதிலும் அவன் வல்லவனாக இருந்தான். அந்தத் தேவாரத்தின் சுவையை யாழ்ப்பாண மக்கள் பூமாந்தும் வண்டாகப் பருகிக்கொண்டு இருந்தார்கள்.

அள்ளிக் கொடுப்பது, அளந்து கொடுப்பது என இரண்டு உண்டு. அள்ளிக் கொடுப்பது சன்மானம். அளந்து கொடுப்பது ரேட்டுக் கச்சேரி. யாழ்ப்பாண மக்களின் ரசிகத்தன்மை அள்ளிக்கொடுக்கும் வகையைச் சார்ந்தது. ஒரு காலத்தில் இலங்கையில் ஆண்ட தமிழ் அரசன் ஒருவனிடம் ஒரு பாணன் சென்று யாழ் மீட்டினான். அரசன் அவரை மெச்சி இலங்கையின் வட பகுதியில் ஒரு நாட்டையே

சன்மானம் செய்தான். அந்த நாடுதான், யாழ் வாசித்த பாணனுக்கு அளித்த அந்த நாடுதான், யாழ்ப்பாணம்.

சிங்கை என்ற ஊரில் பரராசசேகரன் என்ற மன்னன் இருந்தான். அவனும் அவன் மனைவியும் தமிழும் இசையும் அறிந்தவர்கள். அவர்களிடம் அந்தகக்கவி வீரராகவ முதலியார் என்ற மாபெரும் தமிழ்ப்புலவர் சென்றார். திருவாரூர் உலாவைப் பாடிக் காட்டினார். உடனே, அரசன் பெரும் பரிசாக ஒரு யானைக் குட்டியை அவருக்குக் கொடுத்தான். 'அப்பா, யாழ்ப்பாணத்தரசனே! ஒரு வாய்க்குச் சோறில்லாமல் உன்னைப் பாடினேன். நீ நால்வாயைக் கொடுக்கிறாயே' என்று சிலேடையாகப் பாடினார். அந்த அரசன் அவருக்கு வளநாடொன்றையும் அளித்தான். அப்போது அவன் மனைவி கூறினாள்: "ஆஹா! இவர் பாட்டைக் கேட்டு இரசிப்பதற்கு ஆதிசேஷனுக்குக் காதுகள் இல்லாமற்போயினவே! ஒரே சமயத்தில் ஈராயிரம் காதுகளால் கேட்க வேண்டிய இன்பமல்லவா இது!" என்று புகழ்ந்தார்.

இவ்வாறு ஆணும், பெண்ணும் இசையை ரசிக்கும் ஊர் யாழ்ப்பாணம். இசைக்கும், கலைக்கும், ஈசனுக்கும் அள்ளிக் கொடுக்கும் ஊர் அவ்வூர். அது மாத்திரமல்ல. அன்று திருவாரூர் பாடலுக்குப் பரிசளித்த அதே ஊரில் இன்று திருவாரூர் ஆடலரசி வந்திருக்கிறாள், இசை மன்னன் எழுந்தருளியிருக்கிறான் என்றால் கேட்கவா வேண்டும்? அத்தனை சனங்களும் ஆனந்த பரவசமாக நின்றனர்.

அப்போது சிற்றம்பலம் குமாரசாமி அருகில் அங்கவஸ்திரத்தை உதறியவண்ணம் வைத்தி வந்து நின்றார். "நீர் இன்னும் ஊருக்குப் போகவில்லையா?" என்றார் சிற்றம்பலம்.

"நான் எப்படி சார், போகிறது? இந்த வித்துவான்கள் இப்படிச் செய்வாங்கன்னு தெரியும் சார் எனக்கு. அதுக்காகத்தான் தங்கினேன் நான்" என்றார் வைத்தி.

"என்ன செய்துவிட்டார்கள்?"

"வாசிக்கலாமா சார் நீங்க சொல்லுங்கோ. பிறத்தியார் கிட்டே எக்ரிமெண்ட் எழுதிக் கொடுத்திட்டு இங்கே வாசிக்கலாமா?"

"ஏன் இப்படித் தகராறு செய்கிறீர்?"

"மகாராஜாவின் உத்தரவு. ஆறு மாதத்திற்கு அவருடைய காண்டிராக்டு" என்றார் வைத்தி.

"அரசனுக்கு எல்லாம் அரசன் ஆறுமுகன். அவன் தந்தது தமிழ். இசைவடிவான ஈசனின் மைந்தன் அவன். அவன் கோவில் வாசலிலே யாரையும் ஊத வேண்டாமென்று எவரும் தடுக்க முடியாது!"

"ஊதட்டும் சார் வேண்டாமென்று சொல்லவில்லை. என் கிட்டே ஒரு வார்த்தை சொல்லிட்டு ஊதலாமோல்லியோ!"



"நீர் யார் அதற்கு உத்தரவு கொடுக்க?"

"நான் மகாராஜாவின் ஏஜண்ட்!"

"இதைத் தடுப்பதற்கு உம்மிடம் என்ன அதிகாரம் இருக்கிறது?"

"அதிகாரம் இல்லேன்னு அவரே சொல்லட்டுமே!—"

"ஐயா, வைத்தியனாதரே, உங்கள் உயிர் பிழைக்க வேண்டுமானால் இப்பொழுது கூட்டத்திலே குழப்பம் செய்யாதீர்கள்."

"இப்போ நிறுத்தாட்டா பின்னே எப்போ சார் நிறுத்தறது? நீங்க விடுங்கோ சார். நான் நிறுத்தத்தான் போறேன்."

"சரி, போய் நிறுத்துங்கள். மக்களுக்கு இருக்கும் ஆத்திரத்தில் உங்களை அடித்து நொறுக்கிவிடுவார்கள். ஏன் நிற்கிறீர்? போம்!"

"என்ன சார் இப்படிச் சொல்கிறீர்கள்? நான் நிறுத்தணும்னா அப்பவே நிறுத்தியிருக்க மாட்டேனா? உங்களுக்காகப் பார்க்கிறேன் சார். இல்லேன்னா—"

"ஐயா, என்னை உமக்கு முன்பின் தெரியாது. நான் உமது நண்பனும் அல்ல. எனக்காக நீங்கள் ஏன் பார்க்கவேண்டும்?"

"அப்படியில்லே சார். நானும் தமிழன், நீங்களும் தமிழன். நீங்க எனக்கு ஏதாவது 'ஹெல்ப்' பண்ணுங்கோ. நான் பேசாமே இருந்துடறேன்."

"ஓஹோ, அதுதானா விஷயம்! இரைந்து பேசாமல் போய் வாரும்" என்று உறுதியாகச் சொன்னார் குமாரசாமி.

"சரி, பின்னே மேளத்தையாவது கேட்கிறேன், ஸார்" என்று அங்கவஸ்திரத்தை இடுப்பில் கட்டிக்கொண்டு நின்றார் வைத்தி. கூட்டத்தினர் தம்மை நோக்குவதைக் கண்டார். நமது சவடாலுக்கு இது சமயமல்ல என்று புரிந்துகொண்டார். சுவாமி பக்கம் திரும்பிக் கன்னத்தில் அடித்துக்கொண்டார். "சாமி, ஆண்டவனே நானே அடித்துக்கொள்கிறேன்" என்பது போல் இருந்தது அது.

## நூற்று ஒன்றாம் அத்தியாயம்

# உண்மையும் பொய்யாகும்!



**வா**னவெளியிலே மாலைச் சுதிரவன் மறையும்போது, எழுதி வைத்த சித்திரத்தைப் போல் தோன்றும் எண்ணற்ற வண்ண ஒவியங்களை எல்லோரும் ரசிக்கலாம். இரவில் நீலவானில் மாலை மாலையாகத் தொடுத்த வெண் மலர்களை எல்லோரும் கண் கொண்டு பார்த்துக் களிக்கலாம். நிலவை ரசிக்கலாம். நீரைப் பருகலாம். தென்றலைத் தழுவலாம். இவைகளைப்போல்

இசையும் முன்பு எல்லோருக்கும் பொதுவாக இருந்தது. ஏழைக்கும் கிடைத்து வந்தது. அதற்குக் கட்டணமும், காவலும், அக்காலத்தில் இல்லை. கோயில் வாசலில் நாதக் குழலை ஊதினான் சண்முகம். ராஜ வாத்தியம் ஆதலால் நெடுந்தூரம் கேட்டது. கூட்டத்தினரும் ஏழை பணக்காரர், சோபா தரை, நன்கொடையாளர் நாலணாக்காரர் என்ற பிரிவினைகள் இல்லாமல் ஈசன் தந்த இரு செவியும் குளிர இசையைக் கேட்டார்கள். இசை ஞானம் அதிகம் உடையவர்கள் நுணுக்கங்களை ரசித்தார்கள். அது இல்லாதவர்கள் இசை இன்பத்தைப் பருகினார்கள். எந்த ஊர் வெல்லம் என்று தெரிந்தா சுவைக்கிறோம்? இசை இசைதான்! இனிப்பு இனிப்புத்தான்!

"நல்லூர் வளர் கந்தனே! திரு நாரணன் மருகனே, முருக குகனே, நல்லூர் வளர் கந்தனே" என்று தோடி ராகத்தில் பல்லவியை வாசித்தான் சண்முகசுந்தரம். இதுவரை ஆடியும், பாடியும் நின்ற அத்தனை மக்களும் இப்பொழுது அசையாமல் நின்றார்கள். கோடி தனம் படைத்தவர்களுக்குக்கூடத் தோடியைக் கேட்பவன் உள்ளத்தில் ஏற்படும் சந்தோஷம் ஏற்படுவதில்லை. அத்தனை மக்களும் மெய்ம் மறந்து நின்றார்கள்.

அந்த நிசப்தமான நிலையில், மெட்டி குலுங்க நடந்து வந்தாள் மோகனா. செவி வழியே இசை சென்ற போதிலும், எழில் வழியே எல்லோருடைய கண்களும் திரும்பின. ஆம், அத்தனை பேர் கண்களும் அவள் பக்கம் திரும்பின. ஆனால், அவள் கண்களோ சண்முகசுந்தரத்தின் மீதே இருந்தன. இதைப் பார்த்த மக்களின் கண்கள் மறுபடியும் சண்முகத்தின் பக்கம் திரும்பிவிட்டன.

'சே சே! இனிமேல் கூட்டத்தில் குழப்பம் உண்டாகிவிடும். இவ்வளவு பெரிய கூட்டத்தின் நடுவில் இவள் ஏன் வந்தாள்? ஆண்கள் கூட்டத்தில் அழகிகள் வரலாமோ!' என்று உருகினார் வைத்தி. பாவம், அவர் மனத்தில்தான் குழப்பம் ஏற்பட்டது. கூட்டத்தில் குழப்பம் உண்டாகவில்லை. அவள் எங்கு நோக்கினாளோ அங்குதான் எல்லோரும் நோக்கினார்கள்.

கடலையைத் தின்பவன் பேசிக்கொண்டே தின்பான். ஆனால் அவனே, சுவைமிக்க கரும்பைத் தின்னும்போது பேசமாட்டான். அதைப் போலத்தான் ஒருவரைப் பார்த்தவுடனே கூட்டத்தில் குழப்பம் விளைவதும், அமைதி ஏற்படுவதும். வெறும் உடலழகும், பகட்டான உடைகளுந்தாம் குழப்பத்தை உண்டாக்குவன. ஆனால், மோகனாவிடம் அழகுக்காக மாத்திரம் உலகம் மயங்கிவிடவில்லை. அது நிலையற்றது என்றும் உலகம் கருதிவிடவில்லை. ஆனால், அழகைக்காட்டிலும் அவள் கலையில்தான் மயக்கம் அதிகம். அவள் ஒரு பொன் மலர். அதில் கலையின் மணம் கமழ்கிறது. அழகும், கலையும் கலந்த ஒருவரைக் காணும்போது, எல்லோருக்கும் தம்மை மறந்த நிலை உண்டாகின்றது.



கன்னிமாடத்தின் மேல் அன்னை ஜானகி நின்று கொண்டிருந்தாள். அவள் அழகைப் பற்றிச் சொல்லும் போது, கவி கூறுகிறார்: "அது வெறும் அழகல்ல, காமக் கிளர்ச்சியைத் தூண்டுவது அல்ல, கண்டவர்கள் நெஞ்சுருகித் தண்டனிடும் அழகு" என்று உரைக்கின்றார்.

மோகனாவின் அழகும் அத்தகைய அழகுதான். பார்ப்பவர்கள் மனத்தில் அது சபலத்தை ஏற்படுத்தவில்லை; நிறைவை உண்டாக்கியது. அவளும் இசையில் லயித்து அப்படியே நின்றாள். அன்றொரு நாள் அவளை, தாமரைக் குளத்தின் கரையில் இருந்து அழகன் சந்நிதி வரையில் எந்தக் காந்த சக்தி இழுத்துக்கொண்டு சென்றதோ, தன்னை மறந்து, தான் நடந்து செல்வதுகூடத் தெரியாமல் அவள் எதன் வழியே சென்றாளோ அதே இசையில்தான் இன்றும் ஈடுபட்டு நின்றாள். ஜீவகனின் யாழ் இசையைக் கேட்டு யானைக் கன்றுகள் ஓடி வந்தது போல, அன்று அழகர் கோவிலில் அதே தோடி ராகத்தைக் கேட்டுவிட்டுத்தான் அவன் அருகில் அவள் ஓடினாள். அவள் காதலில் பிறகு வந்த சோதனைகள் அன்றே, அழகர் கோவிலிலேயே ஆரம்பமாகிவிட்டன. அவள் விரும்பிக் கேட்ட தோடி ராகத்தின் நடுவில் அதிர்வேட்டு விழுந்தது. தம்புரா தந்தி அறுந்தது போல், பாதியில் காதல் அறுந்தது.

வாழ்க்கையிலே இன்பங்களும் தொடர்ந்து வருவதில்லை. இடையிடையே பற்பல வெடிகளும் விழத்தாம் செய்கின்றன. ஆனால் அறுந்த தந்தியைத்தான் ஒட்ட வைக்க முடியாது. ஆசையோ முழுவதும் அறுந்துவிடுவதில்லை. காலில் மிதித்து நசுக்கினாலும் அறுந்துவிடாத மல்லிகைக் கொடி போல் அது துளிர்த்து உரம் பெறுகின்றது.

இன்றும் தோடி ராகத்தைக் கேட்டதும் ஜாகையிலிருந்து அவள் அங்கு இழுத்து வரப்பட்டாள். 'நீ போக வேண்டாம்! கூட்டம் அதிகம், புதிய ஊர், திடீரென்று ஆடச் சொன்னாலும் சொல்வார்கள்,' என்று வடிவாம்பாள் எவ்வளவோ சொல்லியும் அவள் கேட்கவில்லை. தன்னுடைய செவிகளால் தோடியைக் கேட்டாள். ஓடி வந்தாள். பாதி வழியில் தன்னை மறந்தாள். அவன் முன் வந்து நின்றாள். அவனைப் பார்த்துக்கொண்டே இருக்கின்றாள். அவள் இதயத்தில் புகுந்த இசையமுதம் கண்களில் கண்ணீரை வருவிக்கின்றது. அவன் கண்களில் தன்னானந்தம். ஆனந்தக் கண்ணீர் துளிர்க்கின்றது. பல்லவி முடிந்தது.

பல்லவியை முடித்துவிட்டுப் பரவசத்துடன் திரும்பிய சண்முகம், எதிரில் மோகனா நிற்பதைக் கண்டான். 'இதே மாதிரிதானே இவள் அழகர் கோவிலில் வந்து நின்றாள்' என்ற நினைவு வந்தது. இருவர் கண்களும் ஆறுமுகன் பக்கம் திரும்பின. என்னதான் வேண்டிக் கொண்டார்களோ? மறுபடியும் ஒருவரையொருவர் திரும்பிப்

பார்க்கும் போது அவர்கள் கண்களில் ஒரே உணர்ச்சிதான் தெரிந்தது. கண்கள் லேசாகக் கலங்கியிருந்தன. அது காதலா, களிப்பா, அல்லது இருவரும் மனமொத்து எதையாவது வேண்டிக்கொண்டார்களா? சொல்ல இயலவில்லை.

இதற்குள் முத்துராக்குவின் தவுலின் காலப் பிரமாணம் சண்முகத்தின் கவனத்தைத் திருப்பியது. கைவிரலால் நாதஸ்வரத்தில் தாளத்தைக் காட்டிக்கொண்டே வந்தான் சண்முகம். நடுவில் ஒரு இடம் வரும்போது "பேஷ்!" என்றான். தம்முடைய வித்துவான் தம்மைக் கவனித்துத் தம் வாசிப்பை ரசிக்கிறார் என்ற ஆனந்தம் வரவே, முத்துராக்கு மகிழ்ந்தார். தன் அழகைக் கண்டு தன் கணவன் ரசிக்கின்றபோது, மனைவிக்கு ஏற்படும் ஆசையைப்போல முத்துராக்குவுக்கு ஒரு பெரிய கர்வம் ஏற்பட்டது. அந்தப் பெருமையிலே அவருடைய விரல்கள், "விர், விர்" என்று அருமையாகப் பேசின. அகவ கதி என்று சொல்லுவார்கள். அப்படித்தான் முத்துராக்குவின் கையில் நடை பேசியது. சண்முக சுந்தரம் மேலும் 'சபாஷ், சபாஷ்' என்று சொல்லிக்கொண்டே அதை ரசித்துக்கொண்டிருந்தான்.

கச்சேரியிலே சில வித்துவான்கள், தாம் பாடும்போது அழகாகப் பாடி முடிப்பார்கள். ஆனால், பக்க வாத்தியக்காரர்கள் வாசிக்க ஆரம்பித்தவுடனே, பொடியைப் போட்டுக்கொண்டு நாலு தும்மலைத் தும்முவார்கள். அல்லது எதிரில் உட்கார்ந்திருக்கும் பெரிய மனிதரைப் பார்த்து, "நமஸ்காரம், எப்பொழுது வந்தீர்கள்?" என்று குசலம் விசாரிக்க ஆரம்பிப்பார்கள். இவை எல்லாம் சண்முகசுந்தரத்தின் அருகில்கூட வராது. 'முத்துராக்கு, நீ காட்டும் காலப்பிரமாணத்தில் தானே நான் கப்பலை ஓட்டுகிறேன்!' என்று கூறிய சண்முகம் அல்லவா? இன்று முத்துராக்கு வாசிப்பில் அவன் முழுமனத்துடன் ஈடுபட்டான்.

முத்துராக்கு தவுலை அபாரமாய் வாசிக்க வாசிக்க, சிற்றம்பலம் குமாரசாமிக்கு வருத்தம் உண்டாயிற்று. 'பாவம், அவர் சரியாகச் சாப்பிடக்கூட இல்லையே, எப்படித்தான் வாசிக்கிறரோ?' என்று எண்ணினார்.

நல்ல காய்ச்சல் நடுவிலேகூடச் சில வித்துவான்கள் கச்சேரி செய்வார்கள். வீட்டிலே தொண்டையைக் கனைத்துக்கொண்டு திண்டாடிக்கொண்டு இருந்தவர்கள், கச்சேரியில் வந்து உட்கார்ந்தவுடனே, தங்களை அறியாமல் மூன்று ஸ்தாயிகளிலும் அற்புதமாகப் பாடிவிடுவார்கள். அதுதான் நாதயோகம். அன்றைய வாசிப்பில் நந்திதேவரே மத்தளம் கொட்டுவது போல் நாதோபாசனை செய்தார் முத்துராக்கு. இந்த உபாசனைக்கு ஏற்ப உபவாசம், விரதம், உள்ளத்தில் பக்தி எல்லாம் அவருக்கு நிறைந்து இருந்தன.



உண்மையில் முத்துராக்கு காலை, மாலைப் பலகாரம் 'செய்யவில்லை' இரவில் விரதம். கதிர்காமம் போகும் வரையில் 'ஒரு பொழுது' எப்பொழுதும் கந்தனே சிந்தனை. தவுலைத் தொட்டவுடன் நல்லூர் அவருக்கு நல்லூராகத் தோன்றவில்லை. கதிர்காமமாகவே காட்சியளித்தது. அவர் தம்மை மறந்தார். அதனால் மக்களும் தம்மை மறந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் முன்பு ஒரு காலத்தில் ஒரு தவுல் வித்துவான் இருந்தார். அவர் தமிழ்நாட்டையே தம் வாசிப்பால் பரவசப் படுத்தினார். அவர் கையிலிருந்து சொற்கட்டுகள் கனை கனையாகவும், கணிசமாகவும் பிறந்து உலகை மயக்கின. பல நாதஸ்வரக்காரர்கள் போட்டி போட்டுக்கொண்டு அந்த வித்துவானை பக்க வாத்தியமாக அமர்த்திக்கொண்டு வந்தார்கள். அவருக்குப் 'பொது நடை புரியார்' என்று பெயர். அவர் பிறந்த ஊரில் வாசிக்கிறோம் என்ற எண்ணம் முத்துராக்குவுக்கு வந்தவுடனே, குருநாதர் சந்நிதியில் காணிக்கை செலுத்துபவன் போலும், தியாகராஜர் சந்நிதியில் கச்சேரி செய்யும் வித்துவானைப் போலும் அன்று வாசித்தார்.

"நல்லா மேளம் அடிக்கிறார் ஐயா!" என்றார் ஒரு ரசிகர்.

"இந்த 'குமுக்கா' ஒன்றே போதுமே!" என்றார் மற்றொருவர்.

"தம்பி, அவர் எப்படி லயவிந்யாசம் செய்கிறார் பார்த்தீரா?" என்றார் தகப்பனார். அவருடைய ஏழு வயதுப் பையனோ, "நாத லோகத்திலேயே இருக்கிறோம் ஐயா!" என்றான்.

"அந்த ஒத்துக்காரர் எப்படி ஊதுகிறார் பார்த்தீரா?"

"அவரும் இவரோடு ஒத்து ஊதுகிறார் ஐயா, விலக இல்லை" என்றான் பையன். ஆம், தகப்பனும் மகனும், மரியாதையுடன், 'நீர் வாரும்' என்று அழைத்துக்கொள்ளும் நாடு அது. வயதில் சிறியவர்களைக்கூட "போடா, வாடா" என்று அங்கு அழைப்பதில்லை.

அன்று அந்த வாசிப்பை யாழ்ப்பாண மக்கள் ஆண், பெண், சிறியோர், பெரியோர் எல்லோரும் விரும்பிக் கேட்டார்கள். சாதாரணமாக, சில ஊர்களிலே மிருதங்கத்தில் தனி ஆவர்த்தனம் வாசிக்க ஆரம்பித்தவுடனே, கூட்டம் முழுவதும் எழுந்து ஓடிவிடும். இதைக் கண்டு மிருதங்கக்காரரும் ஓடுவார். ஆனால் யாழ்ப்பாணத்தில் தவுல் கச்சேரி நடக்கும்போதுகூட அங்குள்ள மக்கள் அப்படியே நின்றனர்.

வாசிப்பவர், கேட்பவர் எல்லோரும் ஆனந்தத்தில் இவ்வாறு மெய்ம்மறந்து இருக்கும்போது பெரிய மகாவித்வான் போல, வைத்தியும் தாளத்தைப் போட்டுக்கொண்டே நின்றார்.

பாவம், அவருக்குக் காற்றுப் போதவில்லை. விசிறி மடிப்புத் துப்பட்டாவைப் பிரித்து லேசாக உடம்பில் வீசிக்கொண்டார். அதிலிருந்து ஆட்டோ டில்பஹார் வாடை மூக்கைத் துளைத்தது

இடையிடையே தாளமும் போட்டுக்கொண்டார். ஆனால், அவர் தப்புத்தாளம் போடுகிறார் என்பதை யார் பார்த்தார்கள்? அதுதான் அவருக்கே தெரியாதே! இப்படியிருக்கும்போதே, 'இந்த வாத்தியத்தில் என்ன 'வெரைட்டி' இருக்கிறது? திருப்பித் திருப்பி ஒரே சம்பால்தானே அடிக்கிறான்' என்ற சலிப்பும் ஏற்பட்டது. உடனே அவர் கண்கள் அங்குமிங்கும் சுற்றி, கடைசியில் கந்தசாமி கோவில் மணிமண்டபத்தின் பக்கம் போயின.

அங்கு யாரோ ஒருவன் மணிமண்டபத்தின் மேல் ஏறுவதைக் கவனித்தார் வைத்தி. அவருக்குச் சுரீர் என்றது.

திடீரென்று, "போலீஸ், போலீஸ்" என்று கத்தினார். கச்சேரிக்கு இடையில் ஒருவர் இப்படிக் கூச்சலிடவே, அந்தக் கூட்டம் முழுவதும் வைத்தியின் பக்கம் திரும்பியது. "சும்மா இருங்களையா!" என்ற கோபக் குரல் எல்லா இடங்களிலிருந்தும் வந்தது. வைத்தியோ, "போலீஸ், போலீஸ்" என்று கூப்பிட்டுக்கொண்டே, மண்டபத்தை நோக்கி ஓடினார். போலீஸ்காரர்கள் அவரைத் தொடர்ந்தார்கள்.

"அதோ, திருடன், திருடன்" என்று அவர் கூவவே, போலீஸ்காரர்கள் மணிமண்டபத்தில் ஏறித் தேடினார்கள். வாகன மண்டபம் எல்லாம் தேடினார்கள். ஆனால் 'பாம்பு, பாம்பு' என்று கத்தியவுடன் அது மாயமாய் மறைவது போல், அந்தத் திருடனும் மறைந்துவிட்டான். வைத்தி மட்டும் திருட்டு விழி விழித்தார்.

"ஓய், இங்கே வாரும்!" என்று முகத்தில் கோபக்குறியுடன் சிற்றம்பலம் அழைத்தார்.

"என்ன?"

"உமது எண்ணந்தான் என்ன? கச்சேரி தொடங்கியது முதல் நீர் கலகம் செய்யத் துடிப்பதைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். ஏன் குழப்பம் உண்டாக்குகிறீர்?"

"இல்லே சார், என்னைப் 'பிக் பாக்கெட்' பண்ணினவன் அங்கே ஓடினான் சார்."

"பொய்! இத்தனை பேர் கண்களுக்கும் அகப்படாமல், அவன் எங்கே போய்விட்டான், ஐயா? இவரைக் கூட்டத்தைவிட்டு வெளியேற்றுங்கள்" என்று சிற்றம்பலம் சொல்லவே, எங்கிருந்தோ இருபது கைகள் வைத்தியின் மேல் வந்து விழுந்தன.

அடித்துவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. இருந்தாலும் ஏதோ படபடவென்று சத்தம் கேட்டது.

"இல்லே சார், நிஜமா பார்த்தேன் சார்! அந்தப் பிச்சைக்காரன் தான் சார். என்னைக் கொழும்பிலே கூடவே விரட்டினான்" என்று உளறினார் வைத்தி.

"கொழும்பில் நீர் உம்மையே தெரியாத நிலையில் இருந்தீர். அவனை எப்படி அறிந்தீர்? ஐயா வைத்தியனாதரே, ஆரம்பத்தில் இங்கே வந்து கச்சேரியை நிறுத்த வேண்டும் என்று சொன்னீர். நான் மறுத்துவிட்டேன். பிறகு சற்று சும்மா இருந்துவிட்டு, இப்பொழுது கலகம் விளைவிக்கின்றீர் — போலீஸ்!" என்று குமாரசாமி கூப்பிடவே போலீஸ்காரர் ஒருவர் அருகில் வந்து நின்றார்.



"இவர் சரியான நிலைமையில் இருக்கிறாரா பாரும்" என்று அவர் கேட்டுக்கொள்ளவே வைத்தியின் தோளைப் பிடித்து போலீஸ்காரர் தள்ளிக்கொண்டு சென்றார்.

"நான் குழப்பம் செய்யவில்லை பிரதர். எனக்குக் கொஞ்சம் மோகனாவிடம் பேசவேண்டும்" என்றார் வைத்தி.

"இனி ஒரு நிமிஷங்கூட நீர் கூட்டத்தில் இருக்கக் கூடாது!"

"அது இல்லே சார், முக்கியமான விஷயம் சார் மோகனாவின் உயிருக்கே ஆபத்து சார்."

"ஏதாவது பேசினால் உமது உயிருக்கு ஆபத்து!" என்று சொல்லி வைத்தியை அரை பர்லாங்கு தூரம் தள்ளிக்கொண்டு போய் விட்டார்கள்.

வைத்திக்கோ தம் பணத்தை எடுத்த திருடனைக் கண்ணால் கண்டும், அவன் பிடிபடாமல் போய்விட்டானே என்ற வருத்தம் வந்தது. அதைக்காட்டிலும் தாம் எவ்வளவுதான் உண்மையைச் சொன்னாலும், தம் சொல்லை ஒருவரும் நம்பவில்லையே என்றுதான் மிகவும் வருந்தினார். பாவம், அவர் வாயால் சத்தியத்தைச் சொன்னாலும் அது பொய்யாகவே கருதப்படும் என்பதை அந்த அவசரத்தில் அவர் உணரவில்லை.

நூற்று இரண்டாம் அத்தியாயம்

## சேது யாத்திரை



"மரகதம், மரகதம், இதைப் பார்த்தியா கல்யாணப் பத்திரிகை? யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பி இருக்காங்க!" என்றார் மைனர்.

"யாழ்ப்பாணம் மட்டும் என்ன? எந்த ஊரிலே பிறந்தாலும் கல்யாணம் பண்ணிக்கிட்டுத்தானே ஆகணும்!"

"மோகனா நாட்டியமாம், சண்முகசுந்தரத்தின் நாதஸ்வரமாம், கல்யாணத்திலே."

"சரியா போச்சு போங்க, நான் அவங்களுக்குத்தாம் கல்யாணமாக்கும்னு நினைச்சேன்."

"நீயும் நானும் இல்லாமே, அந்தக் கல்யாணம் நடக்குமா?"

"ஆமா, அவுங்க சீமைக்குப் போகல்லியா?"

" இல்லை. மோகனாவும் சண்முகசுந்தரமும் கொளும்பிலே இறங்கிப்பிட்டாங்களாம். எனக்கு லெட்டர் வந்திருக்குது."

" யாரு எழுதியிருக்காங்க?"

" நீதான் சொல்லேன்."

" அது என்ன சொல்றது. வடக்குத் தெரு வடிவாம்ப மகள்தான் எழுதியிருப்பா" என்று கூறிக்கொண்டே அருகில் வந்தார் கடம்பவனம் பிள்ளை.

" மாமா, உங்க புத்தி மட்டும் மாறாது" என்றார் மைனர்.

" பின்னே என்ன, அது மைனர் புத்தியா? சரி, யார்தாம் எழுதியிருக்காங்க?"

" சிக்கல் பிள்ளைதாம் எழுதியிருப்பாரு அப்பா. அக்கா அவுங்களுக்கு எழுதுமா?" என்று சிரித்தாள் மரகதம். மைனரிடம் திரும்பி, "நம்ப எப்போ அத்தான் கொளும்புக்குப் போறது?" என்று கேட்டாள்.

" போகலாம் வா. சண்முகம் மோகனாவைச் சாக்கிட்டு நாமும் அங்கு போவோம். அவுங்க கதிர்காமம் போறாங்களாம். சண்முகம் எழுதியிருக்காரு."

" நானும் வரலாமா மாப்பிள்ளை?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார் கடம்பவனம் பிள்ளை.

" நீங்க எதுக்கு மாமா?"

" மாப்பிள்ளை நீங்க எதுக்குப் போறீங்க?"

" என்ன சண்டையோ என்னமோ? போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்று உத்தேசம்."

"அந்தப் பயல் எப்பவுமே அப்படித்தான். எங்கிட்டேயே சண்டை பிடிச்சவன். ராஜாகிட்டே பிடிக்காமே இருப்பானா? சரி, நீங்க எல்லாம் போனீங்கன்னா நம்மையும் கூட்டிக்கிட்டுப் போங்க."

" நீங்கள் எஸ்டேட்டைப் பார்த்துக்கொள்ள வேண்டாமா?"

"அதுதான் நீங்களே மேல் பார்வை பார்க்க ஆரம்பிச்சுட்டீங்களே அட, உங்ககூட வந்தா ராமேசுவரத்திலே ஒரு முழுக்குப் போட்டுட்டு வரலாம்னு உத்தேசம்."

" இல்லை மாமா, இலங்கைக்கு ராமேசுவரம் போய்ப் போக வேண்டாம். மண்டபத்திலிருந்து நேரே போயிடலாம்."

" ராமேசுவரம் போயிட்டு வரப்படாதுன்னா சொல்றாங்க? மரகதமும் வருது. ராமேசுவரம் போயிட்டே போவோம், மாப்பிள்ளை!" என்று மரகதத்தைப் பார்த்தார் அவர் தந்தை.

இதைக் கேட்ட மரகதம் ஏதோ வெட்கத்தால் தலை குனிந்தாள். மைனரோ தாங்க மாட்டாத ஆனந்தத்துடன் வெளியே எழுந்து சென்றார் பிரயாண ஏற்பாடுகளைச் செய்தார்.

✦ ✦ ✦



முதல் இரவு சென்னையை விட்டுப் புறப்பட்டுச் சுமார் 420 மைல் ஓடிவந்த போட் மெயில் அலுப்புத் தாங்கமுடியாமல், உச்_ச்_என்று ஒரு ஸ்டேஷனில் வந்து நின்றது. அந்த ஸ்டேஷனின் பெயரும் உச்சிப் புளி. இதற்கு யார்தாம் உச்சிப் புளி என்று பெயர் வைத்தார்களோ? அந்த ஊரில் உச்சி வெய்யிலில் ரயில் வருவதும் இல்லை. புளிக்கும் அந்த ஊருக்கும் சம்பந்தமே கிடையாது. ஆனால் அந்த ஸ்டேஷனில் வண்டி நின்றவுடனே, வண்டியில் இருந்த எல்லோரும் பிராணாயாமத்தில் இறங்கினார்கள். மரகதம், மூக்கைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். மைனரும் தம் மூக்கைப் பிடித்துக்கொண்டார். பக்கத்தில் உட்கார்ந்திருந்த கடம்பவனம், "என்ன மாப்பிள்ளை, என்ன அனுட்டானம் செய்ய இறங்கிட்டீங்க?" என்றார்.

"அனுட்டானம் இல்லே மாமா, குமட்டுது !"

" என்ன மரகதம், ராமேசுவரம் வர இன்னும் இரண்டு காதம் இருக்குதே. இப்பவே மூக்கைப் பிடிச்சுக்கிட்டா, அங்கே போய்க் கடலிலே முழுகுகிறபோது, தொப்புனு முழுகலாம்னா?"

" ராமேசுவரத்துக்காக இப்போவே மூக்கைப் பிடிப்பாங்களாப்பா?"

" நீ பிடிச்சாலும், பிடிப்பே, குழந்தை வேணுங்கிற ஆசையிலே—"

" எனக்கு ஒண்ணும் ஆசையில்லே, உங்களுக்குத்தாம் பேரனைத் தூக்கி வச்சுக்கணும்னு இருக்குது."

" ஏன் இருக்காதா? அந்தப் பயலைத் தூக்கி வச்சுக்கிட்டு. நல்ல புத்திமதிகள் எல்லாம் சொல்லி ஒரு பத்து வருசம்—"

" மாமா, நீங்க தூக்கி வச்சுக்குங்க, வேண்டாங்கலே. ஆனால் பாட்டன் பாடத்தை மாத்திரம் பேரனுக்கும் சொல்லிக் கொடுத்திடாதீங்க" என்றார் மைனர்.

" சரிதான் மாப்பிள்ளை, சும்மா இருங்க. ஆமாம். நீங்க ரெண்டு பேரும் ஏன் மூக்கைப் பிடிச்சிட்டிருக்கீங்க?"

" உங்களுக்குக் கொஞ்சங்கூடத் தெரியவில்லையா மாமா?"

" என்ன?"

" ஒரே நாத்தமா நாறுதே !"

" நாத்தமா? அப்படி ஒண்ணும் தெரியல்லியே !"

" என்ன மாமா, உலர்ந்த மீன் நாத்தம் !"

" ஓஹோ, அப்படியா ! எனக்குக் கொஞ்சம் ஜலதோஷம் பிடிச்சு இருக்குது. அதனாலே ஒண்ணும் தெரியலே" என்று அவரும் மூக்கைப் பிடித்துக்கொண்டார்.

" மாமா எத்தனையோ வாசனைகளில் அடிபட்டவங்க. அவுங்க மூக்குக்கு இந்த வாசனை எங்கே தெரியப் போகுது!"

" இந்த மட்டிலும் மூக்கு கெட்டுப்போச்சு என்கிறீயே மாப்பிள்ளை, மூளை கெட்டுப் போச்சுன்னு சொல்லாமே!"

"ஆமாம். இப்போ கொளும்புலே போய் அவங்களை எங்கே தேடிக் கண்டுபிடிக்கப் போறீங்க?"

"கற்பூரமும், கஸ்தூரியும், கலைஞனும் இருக்கிற இடத்தை விசாரிச்சுக்கிட்டா போகணும்? காத தூரத்துக்கு மணக்குமே! அவங்கெல்லாம் கதிர்காமத்துக்குப் போறாங்களாம். நம்பளை மாத்துறையிலே வந்து சந்திக்கச் சொல்லி எழுதி இருக்கிறாங்க."

"என் மாப்பிள்ளை. கதிர்காமம் போகிறதுன்னா, ரொம்ப நடக்கணுமே!"

"நடந்தா என்ன மாமா?"

"அப்பா, நீங்க அங்கே வந்து, நம் ஊர்க் குடியானவர்களைப் பேசுகிற மாதிரி கடபுடான்னு ஆரம்பிச்சிங்கன்னா, ஒரே வம்புதான்——"

"சும்மா இரு மரகதம். மாமா ஒரு சத்தம் போட்டாங்கன்னா, கரடி புலி எல்லாம் ஓடிப் போகும். தெரியாமலா நான் கூட்டிக்கிட்டு வர்றேன்?"

"மாப்பிள்ளை, எல்லா ஏற்பாடும் நல்லாத்தான் இருக்குது. ஆனா உன் கௌரவத்துக்கு நீ அங்கே போறது............இது லாயக்கு இல்லேப்பா."

"என்ன மாமா?"

"நீ ஆசைப்பட்ட ஒரு பெண்ணை அந்த நாயனக்காரன் தட்டிக்கிட்டுப் போயிட்டான். அவனைப் பாக்கிறதுக்காக நீ கொளும்புக்குப் போகிறே பாரு. உம், சந்தடி சாக்கிலே அதையும் கண்ணாலே ஒரு வாட்டி பாத்துட்டு வரலாம்னு புறப்பட்டிருப்பே——!"

"மாமா, இலங்கையிலே ஒரு இடம் இருக்குதாம். அதுலே ஏர் உழுதால் அந்த மண்ணில் கிடந்து மரகதம் அகப்படுதாம்."

"என்ன மாப்பிள்ளை, என்னைப் பாத்தா மண் என்கிறே. இப்படியெல்லாம் நீ பேசினே, நான் ராமேசுவரத்திலிருந்தே திரும்பிடுவேன்."

மூர்த்தி, விருட்சம், தீர்த்தம் என்று மூவகைச் சிறப்புகள்தாம் ஒவ்வொரு தலத்திற்கும் உண்டு. அதில் நான்காவது சொல்லப் போனால் பேரளம் ஸ்டேஷனிலே வடை வாடை வீசும்; கடம்பூர் ஸ்டேஷனிலே போளி வாசனை வீசும்; திருமங்கலத்தில் ரோஜாப்பூ மணக்கும்; கொள்ளிடத்தில் வெட்டிவேர் மணக்கும்; குரோம் பேட்டையிலே உச்சிப்புளி வாளை வீசும்.

வண்டி அந்த ஊரை விட்டுப் புறப்பட்டது.

நல்ல காரியத்திலே நடுவில் புகுந்து குழப்புபவர்களை "பாம்பன் குறுக்கிட்டதுபோல்" என்று சொல்வார்கள். அந்தப் பாம்பனை நமது ரயில்வேக்காரர்கள் பாலம் போட்டு அடக்கிவிட்டார்கள். ஆதலால், போட்மெயில் அந்தப் பாலத்தின் மேல் உல்லாசமாகப் போய்க்



கொண்டிருந்தது. அந்தக் கால்வாயைப் பார்த்தால் நெடுந்தூரத்திற்குக் கடலில் கறுப்புக் கறுப்பாகப் பாறைகள் தெரிந்தன.

"அத்தான், இதைப் பார்த்தீங்களா? நீளத்திலே எருமை மாடு குளிக்குது!" என்றாள் மரகதம்.

"அப்படியெல்லாம் சொல்லாதே மரகதம். அதுதான் சேது அணை" என்றார் கடம்பவனம்.

ஆம். அது சேது அணையோ அல்லது ஆதாம் பாலமோ? அல்லது தமிழ்நாடும் இலங்கையும் ஒன்றாகவே இருந்த இடையில் கடலால் பிரிக்கப்பட்டவை என்பதைக் காட்டும் அடையாளங்கள்தாமோ? தனுஷ்கோடி முதல் இலங்கை வரையில் இம்மாதிரி அணையிட்டது போல் எத்தனையோ திட்டுகளும் தீவுகளும் இன்றும் இருக்கின்றன. வைகை ஆற்று நடுவே இட்ட ஓடுபாலம் போல் அவை காட்சியளிப்பதைக் காணலாம்.

பாரத நாடு முழுவதும், ஓர் இனம் என்ற உணர்ச்சியை இந்நாட்டில் இரண்டே கோபுரங்கள் உண்டாக்குகின்றன. அவற்றுள் ஒன்று, ராமேசுவரத்திலுள்ள கோபுரம். இது கடற்கரையில் உள்ளது. மற்றொன்று கங்கைக்கரையில் உள்ளது. காசியும் ராமேசுவரமுந்தாம் இந்தப் பாரத நாட்டு மக்களைப் பழங்காலம் முதல் ஒன்றாக்குகின்றன. அதற்கு இணையான தத்துவங்கள் இன்றுவரை தோன்றவில்லை. எத்தனையோ பேர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும், காசியையும் ராமேசுவரத்தையும் காண வேண்டுமென்று எண்ணி எண்ணித் தவித்துக்கொண்டிருந்திருக்கிறார்கள்.

"ராமநாதர் சந்நிதி வாசலில் இருந்துகொண்டு வங்கக் கடல் ஓசை "ராம், ராம்" என ஜபித்துக்கொண்டே இருக்கின்றது. செந்தில் முருகனை வேல், வேல் என்று ஓலமிட்டு வணங்கும் அதே கடல்தான் இதுவும். கடல் அருகே, சிற்றூறல் உண்ணீரும் ஆகிவிடும் என்பதற்கிணங்க, சந்நிதி வீதியிலே அக்கினி தீர்த்தத்துக்கு ஐம்பது கஜம் தள்ளி உள்ள கிணற்றில் நல்ல குடி தண்ணீர் கிடைக்கின்றது.

அகில உலகங்களையும் திருமால் இரண்டடியால் அளந்தார் என்பது புராணம். ஆனால் இரண்டே எழுத்துக்களால் பாரதநாட்டில் அனைவருடைய உள்ளங்களும் அளக்கப்பட்டுவிட்டன என்பது கண்கூடு. அந்த இரண்டு எழுத்துக்கள்தாம் தாரக மந்திரம் ஆகிய ரா. ம. என்ற வணக்கத்துக்குரிய அட்சரங்கள். ராமா, ராமா என்ற இந்த இரண்டு எழுத்துக்களால் ஒரு பெரிய திருக்கூட்டமே உண்டாக்கி இருக்கின்றது. தமிழ்நாட்டிலும் சரி, வடநாட்டிலும் சரி, ஒருவர் யாத்திரை செய்தால், வேறு யாருடைய எழுத்தும் கடிதமும் தேவையில்லை. இந்த இரண்டு எழுத்துக்களே போதும். வாயில் ராம நாமத்தைச் சொல்லிக்கொண்டே ஒருவர் நடக்க ஆரம்பித்தால், அவருக்கு வழியெங்கும் துணைவர்கள் இருப்பார்கள். அந்த ராமபிரான் வணங்கிய மூர்த்தி ராமநாதர்.

தமிழ் மறையை ஓதிய ஞானசம்பந்தப் பெருமானும் நாவுக்கரசரும், ராமேசுவரத்தில் இருந்தேதான் திருகோணமலையை வணங்கினார்கள் திருக்கேதீச்சுவரத்தைப் பார்த்தார்கள் அங்கிருந்துதான் தேவாரத்தைப் பாடினார்கள் என்று சொல்வதும் உண்டு. அந்த ஊரில் ரயில் வண்டி மாலை எட்டு மணிக்கு வந்து நின்றது. கடம்பவனமும், வைமனரும் மரகதமும் இறங்கினார்கள்.

## நூற்று மூன்றாம் அத்தியாயம்

# சென்று நீ தொழுதுய்யாய் திருவிராமேச்சுரம்



உலகில் நிதிகளில் உயர்ந்தவை சங்க நிதி, பதுமநிதி என்று சொல்லுவார்கள். அவற்றுள் சங்கநிதியைப்பற்றி மாத்திரம் நாம் எல்லோரும் அறிவோம். நமக்கெல்லாம் தாய்ப்பாலுக்கு அடுத்தபடியாகத் தாயாக நின்றது சங்குதான். பாலும் மருந்தும் சங்கால் புகட்டப்படாத குழந்தை எது? அடுத்தாற் போல் மேளமும் தாளமும் முழங்கினாலும் முழங்காவிட்டாலும் நம் நாட்டில் கல்யாணம் காட்சிகளில் முழங்குவது சங்கம். உச்சிக்கால தரிசனத்தில் மத்தளத்துடன் வருவது சங்கு. தாய்மார்கள் கையில் கணையாழி சங்கு, காப்பு வளை சங்கு.

கார்த்திகை சோமவாரத்தின் போது, ஆண்டவனுக்கு ஆயிரத்தெட்டுச் சங்குகளால் அபிஷேகம் செய்வார்கள். 'மத்தளம் கொட்ட வரி சங்கம் நின்றூத மாயவன் பவனி வந்தான்' என்பது நாச்சியார் திருமொழி. இவ்வாறு நம் வாழ்வுடன் கனவிலும் காரியத்திலும் பிணைந்து நிற்பது சங்கு. அத்தனை சங்க நிதிகளையும் ஆழ்கடலில் இருந்து அள்ளித் தருபவர் சேதுபதி.

மதுரையில் தமிழ்ச் சங்கங்கள் இருந்தன. பிறகு மறைந்தன. ஆனால் அந்நியர் ஆட்சிக்கு நாம் அடிமைப்பட்டிருந்த காலத்திலே, தமிழை நம்மவர்களே தள்ளி மிதித்த காலத்திலே அந்தச் சங்கத்தை மறுபடியும் எடுத்து வளர்த்தவர் இராமநாதபுரம் சேதுபதி. தமிழ் அன்னையின் பாடல் செல்வங்களிலே பாதிச் செல்வத்தை அளித்தவர்கள் அவர்கள். புலவர் பெருமக்களை வளர்த்தவர்கள் அவர்கள். ஒரு பாடலுக்கு ஒரு தேங்காய் வீதம் பரிசு அளித்தால் போதும் என்றார் ஒரு புலவர். சேதுபதி, பாடலைக் கேட்க ஆரம்பித்தார். புலவர் வாக்கு பொன் போல் இருந்தது. இந்தப் பொன்னான பாட்டுக்குப் பொன்னான தேங்காயை அல்லவா கொடுக்க வேண்டு



மென்று எண்ணினார் அரசர். அந்தக் கவிஞருக்கு ஒரு பாடலுக்கு ஒரு பொன்தேங்காய் வீதம் பரிசு அளித்தார். அது மாத்திரமல்ல, பொன்னங்கால் என்ற ஒரு வளநாட்டையும் பரிசு கொடுத்தார். இவ்வாறு தமிழ்ச் சங்கங்களாகிய சங்க நிதியையும் அவர்களே தந்தார்கள்.

சத்ரபதி சிவாஜி, அகண்ட ஹிந்துஸ்தானத்தை அமைக்கப் பாடுபட்டு, சரித்திரத்தில் பெயர் பெற்றார். இந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒன்றுபடுத்திப் பெயர் பெற்றவர் அக்பர். புத்த தர்மத்தை உலகமெங்கும் பரப்பி, அறநெறி வழியில் அரசை வகுத்து, அதனால் பெயர் பெற்றான் அசோகன். ஒரு கையில் மதப் புத்தகத்தையும், ஒரு கையில் வாளையும் வைத்துக்கொண்டு, 'மதமா, மடியா?' என்று கேட்டுப் பெயர் பெற்றார்கள் பலர். ஆனால், ஒரே ஒரு மன்னரின் பெயர் மட்டுந்தான் இந்நாட்டில் ஒரு கோயிலால் உயர்ந்தது. அந்தக் கோயில்தான் ராமேச்சுரம். அதனால் பெயர் பெற்றவர்கள்தாம் சேதுபதி மன்னர்கள்.

ரயிலிலே இருநூறு பேர்கள் வருவார்கள். அவ்வளவு பேரும் வடநாட்டவர்கள். பட்சி தீர்த்தத்துக்குப் போவார்கள். கழுக்குன்றினில் ஏறிக் காண்பார்கள். காஞ்சியைத் தரிசிப்பார்கள். மதுரையில் இறங்குவார்கள். ஹிந்தி பேசவில்லையென்று நமக்குப் புத்தி சொல்ல மாட்டார்கள். இவர்கள் எல்லாம் யார்? எதற்காக வருகின்றார்கள்? காஞ்சியையும் மதுரையையும் காணவா? அல்ல. அவர்கள் ராமேசுவரத்துக்குப் போகும் யாத்திரிகர்கள். இன்று ரயில் உண்டு. போலீஸ் உண்டு. அவர்களுக்குப் பாதுகாப்பு உண்டு. அன்று அப்படியல்ல. ராமேசுவரத்துக்குச் செல்பவர்களுக்கு எல்லாம் காவல்காரன், ராமநாதபுர அரசன். சேதுவழிக் காவலன்தான் சேதுபதி. சேதுபதியின் பெயர் தெய்வத்தால் பிறந்தது; செந்தமிழால் உயர்ந்தது.

தமிழை வளர்த்த அவர்கள், ராமேசுவரத்தின் திருப்பணிகளையும் விரிவுபடுத்தினார்கள். உலகத்திலேயே மிக நீளமான பிராகாரம் என்று சொல்லப்படுவது ராமேசுவரத்தின் கோயில் பிராகாரம். சொக்கட்டான்சாரி மண்டபம் என்றும் இது வழங்குகிறது. சுமார் ஆறேகால் பர்லாங்கு நீளம் உள்ளது. இத்தகைய உலகம் புகழும் திருப்பணியைச் செய்தவர்கள் சேதுபதி மன்னர்கள்.

" குற்றம் கடிந்தவர் சீராம நாயகர்
கோயில் அன்பான்
முற்றும் தவங்கள் புரிராம நாதன்
முடித்தானே"

என்று செப்பேட்டுப்பாடல் சொல்கின்றது.

அது ராமநாதப் பண்டாரம் என்பவரைக்கொண்டு அவர்கள் கட்டிய கோயில். அங்கு ராமநாதன் திரு உருவம் பொன்மேனி,

சொக்கத் தங்கத்தால் செய்யப்பட்ட சுந்தர உருவம். ராமநாதன் பொற்பண்டாரம் ஒரு செல்வக் களஞ்சியம். அங்குள்ள கருவூலமாகிய பொற்பண்டாரத்தை ஒவ்வொருவரும் பார்க்க வேண்டும். ஒரு நாள் இறைவன் முத்தை அணிவார்; ஒரு நாள் இறைவன் மரகதத்தால் அலங்கரிக்கப்படுவார். அம்பிகை பெயர் பருவதவர்த்தனி. ஆம்! கடலும் மலையும் கலந்த பதி ராமேச்சுரம்.

மைனரும், மரகதமும் அன்று உடல் குளிரப் புனலாடி மனம் குளிர இறைவழிபாடு செய்தனர்.

" குன்றுபோல் தோளு டைய
குணமிலா அரக்கர் தம்மைக்
கொன்றுபோ ராழி யம்மான்
வேட்கையால் செய்த கோயில்
நன்றுபோல் நெஞ்ச மேநீ
நன்மையை அறியா யாயின்
சென்றுநீ தொழுது உய்கண்டாய்
திருவிராமேச்சுரமே"

எனப் பாவுக்கரசராம் நாவுக்கரசர் பாடிய பைந்தமிழ்ப் பாடலுக்கு ஏற்ப இராமநாதரை வணங்கி உய்ந்தனர், மைனரும் அவர் மனையாளும்.

தனுஷ்கோடி மணலிலே நடப்பதற்குள் மரகதம் திணறிவிட்டாள். அவளுடைய அப்பா கடம்பவனம் பிள்ளையோ, பேச்சு ஒடுங்கி, பின்னால் தள்ளாடி நடந்து வந்தார்.

" மாமா, நீங்களும் சமுத்திரத்திலே குளிக்கப் போறீங்களா?" என்றார் மைனர்.

" என்ன மாப்பிள்ளை, இப்படிக் கேக்கறீங்க? தனுஷ்கோடி வரையில் வந்து குளிக்காம போகிறதுக்கு நான் என்ன கோஷாயியா? அவங்கதான், ரயிலிலே ஏறிக்கிட்டு, ஆயிரம் மைல் வருவாங்க. கோடிக் கரையிலே தள்ளி நின்னு கும்பிட்டுட்டுப் போயிடுவாங்க."

"அது என்ன மாமா, அப்படி?"

"அந்த மார்வாடி தேசத்திலே தண்ணீர் கிடையாது மாப்பிள்ளை. ஏதோ, அமாவாசை, கார்த்திகை, அப்படியுள்ள நாளிலேதான் அவங்க தலையிலே தண்ணீர் விட்டுக்குவாங்க. இங்கே கடலைக் கண்டதும் முழுகினா குளிருமோ என்று பயம் வந்துடும்."

"அட போங்கோ மாமா."

" இல்லை மாப்பிள்ளை, அவுங்க வேட்டியிலே பல க்ஷேத்திரத்துப் புழுதி எல்லாம் பட்டிருக்கும். அதைத் தண்ணியிலே நனைச்சா புண்ணியம் போய்விடுமேன்னு பயந்துக்கிட்டுத்தான், திரும்பிப் போறாங்களோ என்னமோ?"



" ஏன் அப்பா, நீங்க மட்டும் காசியிலே வெந்நீரிலே குளிச்சேன்னு சொன்னீங்களே !"

" அட சும்மா இரும்மா, நீ ஒண்ணு"

" உங்களைச் சொன்னால் மட்டும் கோபம் வருதில்லே! ஏன் குளிக்கறதில்லே தெரியுமா? 'நோக்கினால் வணங்குவார்க்கு நோய் வினை பொடியாகும்'னு நாவுக்கரசர் பாடியிருக்காரு"

" அவரு தமிழிலே இல்ல பாடினாரு. இந்திக்காரருக்கு எப்படித் தெரிஞ்சுது?"

" பக்திக்குப் பாஷை இல்லையப்பா... சரி, சரி, இப்ப நீங்க குளிக்கப் போறீங்களா... இல்லையா? இல்லாட்டி சாமான்களை எல்லாம் பாத்துக்குங்க."

" நானா விடுவேன்?"

" விடணுமே மாமா !"

" என்னத்தை விடணுங்கிறே?"

" மக்காவுக்குப் போயிட்டு வந்தவங்க, பொய், புளுகு, பொம்பிளை ஆசை, கெட்ட காரியங்கள் எல்லாத்தையும் விட்டுடணும்னு சொல்லுவாங்க, அந்த மாதிரி...?"

" இந்தா மாப்பிள்ளை இதுதானே, எனக்கு வயசு என்ன ஆகுது? நான் குளிக்கத்தானப்பா போறேன்" என்று சொல்லிக்கொண்டே கடலில் இறங்கினார் கடம்பவனம். ஆம், அன்று சேதுவின் கரையில் தான் அந்த மனிதர், பிறப்பு இறப்பு, பாவம் புண்ணியம், இளமை மூப்பு என்பதையெல்லாம் உணர்ந்தார்.

தன் மகளும் மருமகனும் இருவருடைய ஆடைகளையும் ஒன்றாக முடிந்து கட்டிக்கொண்டு கடலில் இறங்கிக் குளிப்பதைப் பார்த்து ஆனந்தப்பட்டார் கடம்பவனம் பிள்ளை. மரகதம், மைனர் இருவரும் கடலாடி எழுந்தார்கள்.

" இந்த ஊரிலே குளிச்சா என்னவாகும் தெரியுமில்லே" என்றார் மரகதத்திடம், மைனர்.

" என்னவாகும்? ஜலதோஷம் பிடிக்குமா?"

" அதல்ல, கை கனக்கும்."

என்ன, " நகை போட்டுக்குவாங்களா?"

" ராமேசுவரத்தில் குளிச்சா புள்ளைகுட்டிகள் தூக்க முடியாமே பொறக்குமாம்."

" போங்கோ அத்தான். கேலி பண்றீங்க. கடலிலே குளிக்கிற போது நல்ல வார்த்தையாகச் சொல்லுங்க" என்றாள் மரகதம்.

" வேறு எதுக்கு குளிக்கிறே? நம்ப நல்லா இருக்கணும். நம்ம குலம் நல்லா இருக்கணும். அதுக்குத்தானே மரகதம்?"

" சும்மா இருங்க. அப்பா பாக்கிறாரு"

"யாரு? உங்க அப்பாவா? அவரு ஏன் நம்பளைப் பாக்கிறாரு. இன்னும் யார் யாரு குளிக்க வந்திருக்காங்கனு பாக்கிறாரு. நீ ஒண்ணு—"

அப்போது "மாப்பிள்ளை, அலை—அலை" என்று அலறினார் கடம்பவனம். பனைமர உயரத்தில் ஒரு பெரிய அலை எழும்பி வந்து, மரகதத்தையும் மைனரையும் ஓங்கி அடித்துக் கடலில் தள்ளியது. கடம்பவனம் அலறிக்கொண்டே கடலில் குதித்து ஓடினார். மரகதம் மரகதம் என்று கதறினார்; துடித்தார். வாழ்க்கை ஒரு கணத்தில் மாறிவிடுவதை நினைத்தார். அப்போது, "ஏன் அப்பா கத்துறீங்க" என்ற கரையில் இருந்து சிரித்தான் மரகதம்.

ஆம், இவர்களை அந்த அலை கரையிலேதான் கொண்டுவந்து தள்ளியது. "இது ஆண் சமுத்திரம். அலை அதிகம். அதுக்குத்தான் கடலிலே குளிக்கிறபோது, சமுத்திரத்தைப் பாத்துக்கிட்டே குளிக்கணுங்கிறது. நீ மரகதத்தைப் பார்த்துக்கிட்டே குளிச்சே" என்று ஒரு மாதிரி ஜாடையாய்ப் பேசினார் கடம்பவனம்.

"சரி மாமா, சாமான்களைப் பாத்துக்குங்க" என்றார் மைனர்.

தனுஷ்கோடியிலே ஒருவர் நீராட வந்தார். தம்முடைய செம்பைக் கரையில் இருப்பவன் திருடிவிடுவானோ என்ற பயம் அவருக்கு. சிலர் கோவிலுக்கு போகும்போது வாசலிலே மிதியடியைக் கழற்றி வைப்பார்கள். உள்ளே போனபின் சிவபெருமான் சந்நிதியில் அதன் ஞாபகமாகவே இருப்பார்கள். அதைப் போல இந்தப் பக்தருக்குக் கடலில் இறங்கியும் செம்பின் ஞாபகம் விடவில்லை. கரையில் வந்து மணலைக் கையால் தோண்டினார். தோண்டி அதற்குள் செம்பைப் புதைத்து வைத்தார். அடையாளம் தெரிவதற்காக, மேலே ஒரு சிவலிங்கம் மாதிரி மண்ணைப் பிடித்து வைத்துவிட்டு, ஸ்நானம் செய்ய இறங்கிவிட்டார்.

இவர் மண்ணால் லிங்கத்தைப் பிடித்து வைத்ததைக் கண்ட பல பக்தர்கள், இது மாதிரிதான் இங்கு நாமும் செய்ய வேண்டும் போலிருக்கிறது என்று எண்ணிவிட்டார்கள். இதன் பயனாக அவர் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு கரையில் வந்து பார்த்தபோது, கரையோரத்தில் நூற்றுக்கணக்கான மணல் சிவலிங்கங்கள் காணப்பட்டன. அவற்றுள் எந்தச் சிவலிங்கம் தம்முடையது என்று அவருக்குப் புரியவில்லை.

செம்பு பக்தர் விழித்தார். சிவலிங்கங்களைத் தோண்டிப் பார்த்து விடலாம் என்று ஒரு சிவலிங்கத்தைத் தொடப் போனார். "யாரைய்யா அது. சற்றுக்கூட தெய்வ பக்தியில்லையா உமக்கு? என் லிங்கத்தை நீர் ஏனய்யா கலைக்கிறீர்?" என்ற சிவபக்தரின் அதட்டல் கேட்டது.

திரும்பினார் செம்பு பக்தர். உடனே செம்பு போனாலும் பாதகமில்லை. முதுகு மிஞ்சினால் போதுமென்ற அச்சம் வந்தது



அவருக்கு. சிவலிங்கத்தைத் தொடாமல், செம்பை விட்டுவிட்டு, தம் ஜாகைக்குப் போய்ச் சேர்ந்தார் என்று சொல்லுவார்கள்.

இம்மாதிரி பக்தி பரவசத்தில் ஆழ்ந்த மக்கள் பலரை அங்கு காணலாம். அந்தக் கடற்கரையில் பலர் தரைச் செல்வங்களைக் கடலில் அள்ளி அள்ளி வீசிக் காணிக்கை செலுத்தினார்கள். "மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்" என்று பாடிய தமிழ்ப்பண்புக்கு ஏற்ப அன்று மக்கள் கடலை வணங்கும் காட்சியைக் கண்டார் கடம்பவனம். கடலுக்கு என்ன கைம்மாறு செய்வது? உலகத்தின் வாழ்க்கைக்கே ருசியைத் தருவது கடல். கடல் இல்லையானால் உலகம் சப்பென்று போய்விடும். அதில் உப்பு இருக்காது. ஒருவர் பாடினார்,

"கஞ்சிக்கு உப்புக்கல் வேண்டி-இந்தக்
கடலைப் படைத்தாண்டி,
கடலைப் பேயாண்டி,
வஞ்சிக்கும் போருக்கும் அல்ல-இந்த
வகை கெட்ட, நீர்மூழ்கிச்
சண்டைக்குமல்ல"

என்று.

அத்தகையது கடல். அதிலும் கோடி நதிகள் தனுஷ்கோடியில் இருக்கையில் நீ என் ஓடி ஓடி அலைகின்றாய் என்று ஸ்ரீ தியாகராசர் புகழ்ந்த அந்தக் கோடிக்கரையில் நீராடி மரகதமும், மைனரும் ஏழைகளுக்குச் செல்வத்தை வாரி வாரிக் கொடுத்தார்கள். அடுத்த நாள் காலையில் மண்டபம் வந்து சேர்ந்தார்கள்.

மண்டபத்தில் போய் இறங்கியதும் அவர்கள் முதலில் கண்ட காட்சி அவர்களைத் திடுக்கிடச் செய்தது. அங்கே காரைக்கால் நடேசனும், வக்கீல் கிட்டாவய்யரின் குமாஸ்தா ராமசாமி ஐயரும் பெரிய வாக்குவாதம் செய்துகொண்டிருந்தார்கள்.

"அதெல்லாம் சரிதான் சார். அவர் மகா வித்துவானாக இருக்கலாம். சக்கரவர்த்தி தலை மேலே கையெழுத்துப் போட்டிருக்காரே. அந்தச் சத்தியத்தை மீற முடியுமா?" என்றார் வக்கீல் குமாஸ்தா.

"இதிலே சத்தியம் என்னாங்க?" என்றார் காரைக்கால் நடேசன்.

"ஆமாம். தலையிலே கையெழுத்துப் போட்டா, தலையிலே அடிச்சுச் சொன்ன மாதிரிதானே?"

"ஆமாம் எக்ரிமெண்டை நீங்க அவருக்கு முழுக்கப் படிச்சுக் காண்பித்தீர்களா?"

"படிக்கிறேன்னுதான் சொன்னேன். அவர்தாம் வேண்டாமுன் னுட்டார்."

"இப்போ உங்ககிட்டே காலணாகூட பணம் வாங்கலியே அவர்?"

"இல்லே, பணம் வேறே. எக்ரிமெண்டு வேறே சார். சட்டம் என்ன சொல்லறதுன்னு கேட்டா, ஒப்பந்தப்படி முதலிலே நடந்துக்கோ. பணம் வரலேன்னா, ஸிவில்லே பிராது போடு"

"சண்முகசுந்தரந்தான் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டாரே. அவர்மேல் நீங்கள் எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்?"

"எங்களுக்குப் பணம் வேண்டாம் சார். அவர் மகாராஜாவோடே போகணும். அவ்வளவுதான்."

"இது நியாயமாக இல்லையே !"

"நியாயம் வேறே, சட்டம் வேறே சார் !"

"ராமசாமி ஐயர்வாள், சண்முகசுந்தரம் பிள்ளை, தலை போனாலும் மரியாதையை விட்டுக் கொடுக்க மாட்டாரு. உங்க மகாராஜா வழக்கை விடமாட்டாரு. இரண்டு மூக்கரையன்களை சேர்ந்துக்கிட்டாங்க. இப்போ நீங்க போய் அங்கே என்ன பண்ணப் போறீங்க?"

"நான் போயி அவர்கிட்டே இதமா சொல்லறேன். அடுத்த கப்பலிலே சீமைக்குப் போகிறதுன்னா, ஏத்தி அனுப்புகிறேன்."

"இதெல்லாம் நடக்காது. நீங்க இங்கேயிருந்தே திரும்பிடலாம்."

"எப்படி நான் திரும்பறது? மகாராஜா ஏடனிலிருந்து தந்தி கொடுத்திருக்கிறார். அதிலே இன்னொரு ஆபத்து வேறே. வக்கில் ஐயருக்கு ராஜா பணம் அனுப்பியிருந்தாராம். அதுவும் வந்து சேரலே."

"ஏன், தபால்காரர் எடுத்துக்கிட்டாரா?"

"அதிலே அனுப்பினால் வந்திருக்குமே! யாரோ, வைத்தின்னு ஒருத்தர்கிட்டே கொடுத்தாராம்."

"யார்கிட்டே! வைத்திகிட்டயா? அந்த ஏடனிலே ஒரு கட்டிச் சூடனை வாங்கிக் கொளுத்தச் சொல்லுங்க."

"ஏன், ஆசாமி பெரிய திருடனோ?"

"அவன் திருடனில்லே சார். அவன் கிட்டே பணத்தைக் கொடுக்கிறவன்தான் முட்டாள். அதோ வராங்களே, பணத்தைக் கொடுத்து அனுபவிச்சவங்க. என்ன, சிங்கபுரத்தாரே, என்ன, நீங்க எப்படி மண்டபம் பக்கம்?" என்று நடேசன் சிங்கபுரம் மைனரைப் பார்த்துக் கேட்டார்.

"ஆமாம், வைத்திகிட்டே யாரு பணம் கொடுத்தாங்களாம்?" என்றார் மைனர்.

"வேறு யாரு? மதன்பூர் மகாராஜாதாம். வைத்தி உங்களை மேஜர் ஆக்கினார். மகாராஜாவை மைனராக்கிவிட்டார். வக்கீலுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை எடுத்துக்கொண்டு கம்பி நீட்டி விட்டார்."

"என்ன இராமசாமி ஐயர்?"

"ஆறு ஆயிரம் ரூபாய், சார். அந்த வைத்தி கிட்டே மகாராஜா கொடுத்து அனுப்பிச்ச இருக்கிறார் ஆளும் வரலே, பணமும் வரலே."

"இப்போ நீங்க அதுக்காகத்தான் போறீங்களா?"



"ஆமாம், சார்! இல்லேன்னா ஐயர்வாள் அனுப்புவாளோ? 'ராமசாமி நீ போ, விஷயம் பெரிச'ன்னு சொல்லி அனுப்பிச்சிருக்கிறார்."

குமாஸ்தா ராமசாமி ஐயர் பண விஷயத்தில் ரொம்பக் கெட்டிக்காரர். கட்சிக்காரரைப் பயமுறுத்துவது, பணத்தைக் கூடியவரையில் முன்னாலேயே வாங்குவது முதலிய விஷயங்களில் அவரை யாரும் மிஞ்சிவிட முடியாது.

"ஓய், இன்னிக்கு நீர் கோர்ட்டிலே கூண்டில் ஏற வேண்டி இருக்கும்" என்று ஒரு கட்சிக்காரரைப் பார்த்துச் சொல்லுவார். உடனே, கட்சிக்காரன் கைகால்கள் நடுங்கும்.

"இன்னிக்கு வேண்டாமுங்க. அடுத்த வாய்தாவிலே பாத்துக்குவோம்."

"அட, என்னாத்துக்கய்யா பயப்படறீங்க. பிராது போட்டா, கூண்டிலே ஏற வேண்டாமா?"

"இல்லே, நாம்ம காரியஸ்தரை ஏறச் சொல்லறேன்."

"உங்க காரியஸ்தர் சாட்சி சொன்னா, 'பொய்ச்சாட்சி சொல்லறான், சம்பளம் வாங்கிற ஆளு'ன்னு சொல்லுவாங்களே. நீங்களே ஏறுங்க சார்."

"இல்லே, இன்னிக்கு நான் 'ஷேவ்' பண்ணிக்கல்லே" என்பார் கட்சிக்காரர்.

"சரி, இன்னிக்கு உன் கேசு, எள்ளு!" என்று பயமுறுத்துவார். அடுத்த வாயிதாவுக்குக் கறந்துவிடுவார்.

எந்தக் கேஸ் முதலில் கவனிக்கப்பட வேண்டும், எந்தக் கேஸை வருஷக்கணக்கில் இழுத்து அடிக்க வேண்டும், எந்தக் கட்சிக்காரர் ஒழுங்காகப் பணம் கொடுப்பார், எதிர்க்கட்சிக்கு யார் ஆஜராகிறார்கள், நாம் எத்தனை வாய்தாக்கள் வாங்குவது, அவரிடம் சொல்லி எத்தனை வாய்தாக்கள் வாங்குவது என்பதையெல்லாம் ராமசாமி ஐயர் நன்கு அறிந்தவர். அதிலும் இப்பொழுது ஆறாயிரம் ரூபாய் பணம் கையை விட்டுப் போய்விட்டது என்பதை அறிந்தவுடன், அவரே புறப்பட்டு வந்திருக்கிறார். ஆனால் வக்கீல் கிட்டாவய்யர் சண்முகத்திடம் மரியாதையாக நடந்துகொள்ளும்படியும், தம்முடைய இக்கட்டான நிலைமையை அவர்களுக்கு எடுத்துத் தெரிவிக்கும்படியும் சொல்லி அனுப்பியிருக்கிறார். ஆதலால், முதலில் சண்முகசுந்தரம் இருக்கும் இடத்திற்குச் செல்ல வேண்டும். அங்கு போய் வைத்தியைப்பற்றி விசாரித்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்தின்மேல் அவர் வந்தார்.

எல்லோரும் சேர்ந்து பயணத்தைத் தொடங்கினார்கள். தனுஷ்கோடியில் இருந்து கப்பல் புறப்பட்டது. பேர்தான் கப்பல் யாத்திரை. இரண்டு மணி நேரத்தில் அது கடலைக் கடந்தது; தலைமன்னார் சென்றுவிட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்த ஒவ்வொரு நாளும் மோகனா, சண்முகசுந்தரம் முதலிய கலைஞர்களுக்கு, இன்பலோகத்தில் இருப்பது போலவே தோன்றியது. முத்துக்குமர நட்டுவனாரோ, ஆயுள் முழுவதும் யாழ்ப்பாணத்தில் இருக்கத் தயாராய் இருந்தார். அவருக்கு வேண்டியதெல்லாம் சிவ பூசையும் தமிழும்தாம். அங்குள்ள தமிழ்ப் பெரியார்களைக் காண்பதிலும், அவர்களோடு அளவளாவி அரிய கருத்துக்களைத் தெரிந்துகொள்வதிலும் அவருக்கு மிகுந்த அக்கறை உண்டாயிற்று. யாழ்ப்பாணத்திலே ஒருவர் தொல்காப்பியத்தில் வல்லவராக விளங்கினார். ஒருவர் திருவாசகத்தில் பெரும் புலவராக விளங்கினார் மற்றொருவர் நாடகக் காவியங்களில் பெரியவராக விளங்கினார். இவ்வாறு அங்குள்ள அத்தனை தமிழ்ப் புலவர்களும் ஒவ்வொரு அரிய பெரிய நூலை யாத்து, தமிழ் அன்னையை அலங்கரித்துப் பார்ப்பவர்களாக விளங்கினார்கள். ஆதலால் நட்டுவனாருக்கு நாட்கள் போவதே தெரியவில்லை.

தருமனோ சமயம் கிடைக்கும் போதெல்லாம் சில்லறை வாங்கி, சாமான்களைச் சேகரித்துக்கொண்டு இருந்தான். அவன் சேகரிக்கும் சாமான்களுக்கு அதிகப் பணம் செலவாகாது. ஒரு இடத்தில் பனைவெல்லம் விற்றார்கள். "கொழும்புக் கருப்பட்டி, குழந்தைக்குப் பிடிக்குமுங்க!" என்று சொல்லி ஒரு வீசை வாங்கினான். ஆனால் அடுத்த கடையில் கருப்பட்டி அதைவிட நிறமாக இருந்தது. அங்கும் அரைவீசை வாங்கினான். வெற்றிலைக் கொட்டான், புகையிலைக் கொட்டானில் எத்தனை தினுசுகள் உண்டோ அத்தனையும் வாங்கினான். யாழ்ப்பாணம் புகையிலைக்கு ஆசைப்பட்டு அதைப் பலவிடங்களில் ஒசியாகவே வாங்கிவிட்டான். மொத்தத்தில் அவன் செலவு செய்தது பத்து ரூபாய்தான் இருக்கும். ஆனால் மூட்டைக்குக் கூலி அதற்கு மேல் ஆகும்.

வரதனுக்குக் கையில் பத்து ரூபாய் பணம் இருந்தது. அங்கு சீமைத் துணி விலை மலிவாக இருந்தது. நல்ல 'வெல்வெட்'டை வாங்கி அதில் நடராஜா உருவம் வைத்து தன் மத்தளத்துக்கு ஒரு உறை தைத்தான்.

முத்துராக்கு விரதம் இருப்பவர் ஆதலால், "முருகா, முருகா" என்று உச்சரித்துக்கொண்டே இருந்தார். சண்முகமும் மோகனாவும் அடிக்கடி கலை அன்பர்களைச் சந்திப்பதும், அவர்களோடு பேசுவதும், விருந்துக்குப் போவதுமாக இருந்தார்கள். ஆனால் இருவரும் அருகில் இருந்தாலும் இன்னும் அந்நியர் போலவேதான் பழகினார்கள்.

சில வீடுகளில் அத்தை மகனுக்கும், மாமன் மகளுக்கும் கல்யாணம் நிச்சயித்துவிடுவார்கள். அதுவரையில் பேசிப் பழகி விளையாடிக்கொண்டிருந்த அந்த இளைஞர்கள், கலியாணம் நிச்சயம் செய்த தேதியிலிருந்து, கலியாணம் முடியும்வரையில், ஒருவரையொருவர் காண்பதற்கே வெட்கப்படுவார்கள். ஓடி ஒளிந்து



விடுவார்கள். இந்த நிலைதான், சண்முகத்துக்கும் மோகனாவுக்கும் இருந்து வந்தது. இருவரும் ஒரே வீட்டில் இருந்தார்கள். இருந்தாலும் காரணமின்றி ஒருவரையொருவர் சந்திப்பதில்லை, பேசுவதும் இல்லை.

வடிவாம்பாளின் கழுகுக்கண்கள், இவர்களை எப்பொழுதும் காவல் காத்து வருவதையும் அறிந்தார்கள். ஆனாலும் போகும் போதும், வரும்போதும், ஒருவரையொருவர் கடைக்கண்ணால் பார்ப்பதும், இளநகை புரிந்துகொள்வதும், சண்முகசுந்தரம் எதாவது கேட்டால், வடிவாம்பாள் பதில் சொல்லுமுன்பே மோகனா இடையில் புகுந்து 'அதைக் குளறுவதும், இப்படி இரண்டுங் கெட்டான் விவகாரம் நடந்துகொண்டே இருந்தது. ஆனால் 'ஒன்றாக இருக்கக் கொடுத்து வைத்ததே, அடிக்கடி அவரைப் பார்க்கிறோமே. அம்மா வாயை மூடிக்கொண்டிருக்கிறாளே' என்ற சந்தோஷத்தில் மோகனா, முன்னைக்காட்டிலும் பன்மடங்கு அழகாக விளங்கினாள்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் தை மாதத்தின் வருகைக்குக் காத்திருந்தார்கள். இதற்கிடையிலே திருக்கார்த்திகையின் போது, கதிர்காமம் சென்றுவிட வேண்டுமென்று தீர்மானமாகி இருந்தது.

ஆனால் வடிவாம்பாள் இதில் கலந்துகொள்ளாமலே இல்லை. அவளுக்கு இங்கு இருக்கும் ஒவ்வொரு நாளும் முள்ளின் மேல் இருப்பது போல் தோன்றியது. ஓடியாடிச் சம்பாதிக்கும் வயதில் ஒரு நாளை வீணாக்குவதைக்கூட அவளால் பொறுக்க முடியவில்லை. தன் கண்முன் தன் மகள் வைரக் கிரீடம் அணிவாள் என்று எதிர்பார்த்து இருந்தது போக, இன்று அவளுடைய காதல் அவளை இவ்வளவு எளிய நிலைக்குக் கொண்டுவந்துவிட்டதே! மறுபடியும் தன் இனத்திலேயே சம்பந்தம் செய்துகொள்ளப் போகிறோமே என்ற வருத்தம் அவளுக்குத் தாங்கவில்லை. இந்நிலையில் அவள் ஏதேதோ சிந்தனை செய்தாள். 'இந்நேரம் மகாராஜாவின் கப்பல் கடலில் போய்க்கொண்டிருக்கும். நாம் அதில் உல்லாசமாகப் போய்க் கொண்டிருக்கலாம். இப்போது தரையில் எடுத்துப் போட்ட மீன் போலத் துடிக்கும்படி ஏற்பட்டுவிட்டது' என்று வருந்தினாள். அவளுக்கு ஆத்திரம் வந்தது. மோகனாவிடம் சீறினாள்.

"ஆமாம், அவங்கெல்லாம் கதிர்காமத்துக்குப் போகப் போறாங்களே. நம்ம ஊருக்குப் போனாக்க என்ன மோகனா?"

"இல்லேம்மா, நம்பளும் கதிர்காமத்துக்கு வரணுங்கிறாங்க."

"அங்கே என்ன கச்சேரியா?"

"அங்கே ஏதம்மா கச்சேரி?"

"பின்னே எதுக்காகப் போகணும்?"

"சாமியைக் கும்பிட்டுவிட்டு வரலாம் என்றுதான்."

திருவாரூரிலே இல்லாத சாமியா அங்கே இருக்குது? அவுங்க ஆம்புளைங்க. போகலாம். உனக்கு என்ன, கோயில் குளத்துக்குப் போக வயசாயிடுத்தா? வயசுக்குத் தகுந்த மாதிரி காரியம் செய்யணும். இன்னைக்கு வரைக்கும் என் வாயைத் திறந்து ஒரு கோயிலுக்குப் போகணும்னு சொல்லி இருக்கிறேனா? ஏதோ விதி, கப்பலை விட்டு இறங்கிட்டோம். ஊருக்குப் போனா நாலு கச்சேரி வரும். அதைக் கெடுத்துக்கிட்டு ஒவ்வொரு நாளையும் வீணாக்கிறியே! அவரைக் கூப்பிடு. பாவம் அவரு நம்ம பிழைப்புக்கே திருச்சிற்றம்பலம் போட்டுட்டாரு. ஏ, வரதா, சிற்றம்பலமய்யா இருந்தாங்கன்னா கூப்பிடு."

சிற்றம்பலம் உள்ளே வந்தார்.

"என்னம்மா?"

"வந்து பத்து நாளாச்சு. நாங்க ஊருக்குப் போகலாம்னு நினைக்கிறோம்."

சிற்றம்பலத்துக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"ஊருக்கா? குழந்தை கலியாணம் முடிஞ்சு போங்கம்மா."

"அது எப்படிங்க? வந்த இடத்திலே கலியாணம் செஞ்சா நல்லா இருக்குமா? நாள், கிழமை பாத்து நாலு பேரைக் கேட்டுப் பேசியில்லே செய்யணும்."

சிற்றம்பலம் கேட்டது, தம் மகள் கலியாணத்தைப்பற்றி. ஆனால் வடிவாம்பாள் உளறியதோ, தன் மகள் கலியாணத்தைப்பற்றி. இதை அறிந்த மோகனா, "அம்மா, அவுங்க மக கல்யாணத்தைப்பற்றிச் சொல்றாங்க" என்று வெட்கத்துடன் கூறினாள்.

வடிவாம்பாள் விழித்துக்கொண்டாள்.

"நானும் அதைப்பத்தித்தான் சொல்லறேன். அது தை மாதத்திலேல்ல? அது வரைக்கும் நம்ப இங்கே இருக்கலாமா?"

"ஏனம்மா, உங்களுக்கு இங்கே என்ன கஷ்டம்?"

"கஷ்டம் ஒண்ணுமில்லிங்க. ஊரிலே பல இடங்களிலே கச்சேரிக்குக் கூப்பிடுவாங்க. சீமைக்குப் போகணுங்கிறதுக்காக, ரொம்பப் பேரை தேதியைத் தள்ளி வச்சுக்கச் சொல்லியிருக்கேன்."

"ஏம்மா, கார்த்திகையிலும், மார்கழியிலும் நம்ப ஊரிலே கலியாணம் கிடையாதே!" என்றாள் குறும்புடன் மோகனா.

"ஆமாம், உன்னைத்தான் கேட்டாங்க!"

"சரி அம்மா."

"கலியாணம் இல்லாட்டி, கோவில்லே திருவிழாக்கள் இருக்குமில்லே!"

"அது எங்கேம்மா. திருவண்ணாமலை கார்த்திகைதான் இருக்குது. அங்கே, நீயும் நானும் ஆட வேண்டாம். நெருப்பே நின்று ஆடும். அடுத்தது மார்கழி. சிதம்பரம், ஆவுடையார் கோயில். அங்கு நடராஜா நின்று ஆடுவார். நமக்கு ஏதம்மா ஆட்டக் கச்சேரி?"



"குளிரிலே 'விட விட'ன்னு ஆடினாத்தான்..." என்றான் வரதன்.

"இந்தா வரதா, உனக்கு என்ன தெரியும்? நானு, கிழமை பார்த்தா நம்ப கச்சேரியை வைக்கிறாங்க நம்பளுக்கு எப்போ சௌகரியப்படுகிறதோ அப்போ கச்சேரி வைக்கிறாங்க. இலங்கை சோறு போடறாங்க என்கிறதுக்காக இலங்கையிலேயே தங்க முடியுமா? ஏதோ வந்தோம், அவங்க உதவி பண்ணினாங்க நம்ப கௌரவமா ஊருக்குப் போயிட்டு வருவதுதான் சரி. சிவகாமசுந்தரிக்குக் கலியாணத் தேதியை வச்சு, அவங்க கடிதாக எழுதட்டும். இரண்டு நாள் முந்தியே வந்திடுவோம்."

"இல்லேம்மா. இங்கே மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் கச்சேரி ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் முடித்துக்கொண்டால், சிவகாமசுந்தரியின் கல்யாணம் வந்துவிடும். அதற்கும் இருந்து கச்சேரியைச் செய்துவிட்டு ஊருக்குப் போகலாம்" என்றார் சிற்றம்பலம்.

இதைக் கேட்டதும் வடிவாம்பாள் இளகினாள். "அப்படியிருந்தா ஒண்ணும் குற்றமில்லீங்க. சும்மா இருக்கிறோமேங்கறதுக்காகத்தான் சொன்னேன்" என்றாள்.

"ஏன் சும்மா இருக்கிறீர்கள்? திருக்கார்த்திகைக்குக் கதிர்காமம் செல்ல வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறோம். நீங்களும் வர வேண்டியதுதானே?"

"அது எப்படிங்க வரது? நான் ஒண்டிக்கட்டையா? பொண்ணையும் கூட்டிக்கிட்டல்ல வரணும்?"

"என் மகள் வருகிறாள். இன்னும் தமிழ் நாட்டிலிருந்துகூட சிலர் வருவதாகக் கேள்விப்பட்டேன்."

"இல்லீங்க. அது வேண்டாம். காட்டு வழி, கள்ளர் பயம்..."

"காட்டு வழிக்கும், கள்ளர் பயத்துக்கும் கந்தன் இருக்கிறானம்மா."

"அது என்னமோ, நடந்தே போகணுமாமில்லே..."

"ரொம்ப தூரம் நடக்க வேண்டாம். ஐந்து, ஆறு மைல்கள்தாம் நடக்க வேண்டியிருக்கும்."

"மிச்சம்?"

"நான் வண்டிகளுக்கெல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறேன். நாம் மாத்துறைவரையில் ரயிலில் போய்விடலாம். இலங்கைக்கு வந்துவிட்டு, முருகனைத் தரிசிக்காமல் செல்வது சரியல்ல அம்மா."

"எனக்குப் பக்தியில்லேன்னா நினைக்கிறீங்க? இல்லே, பணத்தைத்தான் முக்கியமா பார்க்கிறேனா? அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க. பொம்பளைங்க நடந்து போறது அவ்வளவு நல்லா இருக்காதேன்னு பார்க்கிறேன்."

"அம்மா, அந்த யாத்திரைக் கோஷ்டியில் சேரக் கொடுத்து வைப்பதே புண்ணியம். உங்களுக்கும் உங்கள் மகளுக்கும் அது மிகுந்த நன்மையைச் செய்யும்."

"கோவிலுக்குப் போனாதான் சாமியா? அவரு மனசிலே இருக்கிறாரு. என்றைக்கும் முருகான்னு சொல்லாமே நான் தூங்கமாட்டேனுங்க."

"நீங்கள் வந்தால், எங்களுக்கு ஒரு பெரியவர்கள் கூட வருவதாக இருக்கும்."

"அப்படி ஒன்னும் எனக்கு வயசாகலிங்க. உடம்பு கொஞ்சம் வாதசரீரம். ஆமாம், எப்போ புறப்படப் போறீங்க?"

"நாளையே புறப்படலாமென்று உத்தேசம். வீட்டிலே ஒருவரைப் பட்டினியாக வைத்துக்கொண்டு இனிமேல் என்னால் தாள முடியாது."

"என்னமோ போங்க. நீங்க போய்க் கும்பிட்டுவிட்டு, ஒரு காகிதத்தில் திருநூறைக் கொண்டாந்து குடுத்தா, வாங்கி இட்டுக்கொள்ளலாம்னு பாத்தேன். நீங்களானா நானும் வரணும்னு சொல்லறீங்க" என்று வேண்டா வெறுப்புடன் ஒப்புக்கொண்டாள் வடிவாம்பாள்.

நூற்று நான்காம் அத்தியாயம்

## திண்புவி தழைக்கவே கூவாய் குயிலே



'பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண், அச்சுதா' என்று பாடினார் ஆழ்வார். அன்று இலங்கையிலே ஸ்ரீமான் சிற்றம்பலம் குமாரசாமி அவர்களுடன் கதிர்காமப் பயணம் வந்தவர்கள் ஆழ்வார் பாடிய பாடலின் உட்பொருள் என்ன என்ற உண்மையை அங்கே கண்டு மகிழ்ந்து வந்தார்கள். 'காக்கும் நிலமே கடவுளின் உருவம்' என உளங்கனிந்து உரைத்தார்கள். 'மருத நிலப் பயிர் போலே வருண முன்ன பெருமானே' என்பதற்கு இணங்க, அந்த இலங்கை நிலத்தில் பச்சை மால் பள்ளி கொண்டு இருப்பது போல, ஏராளமான நெற்பயிர்கள் காட்சி அளித்தன. அங்குள்ள ஒவ்வொரு குன்றும் சிறு மலர்களால், சித்திர வேலை செய்யப்பட்ட பசும்புல் போர்வை போர்த்துக்கொண்டு, கண்ணுக்கு இனிய காட்சியைத் தந்துகொண்டிருந்தது. அந்தக் குன்றுகளின் ஊடே புனல் அருவிகள் இசைபாடி விழுந்த வண்ணம் இருந்தன.

நிலத்தில் உயர்ந்தது மருத நிலம். 'நான் அதன் பெயரைத் தாங்கியிருக்கின்றேன். ஆதலால் நானும் உயர்ந்தவன்' என்று கூறுவது போல்,



எங்கு பார்த்தாலும் மருத மரங்கள் ஓங்கி உயர்ந்து நின்று கொண்டு இருந்தன. 'ஏ வானவர்களே, வையம் உயக்குச் செய்யும் பெருமைக் கெல்லாம் வயலும் வரப்புந்தான் காரணம்' என்று சொல்லிக் கொண்டு நின்றன. அதுதான் மாத்துறையில் இருந்து கதிர்காமம் செல்லும் காட்டுப்பாதை. அந்தப் பாதையிலே சேர்ந்தாற்போல பத்து வண்டிகள் தொடர்ந்து போய்க்கொண்டிருந்தன. அவைகள் எல்லாம் மலை மேல் ஏறும் வண்டிகள். ஆதலால், வண்டிகளின் பின்னே கட்டைகளைக் கட்டித் தொங்கவிட்டிருந்தார்கள். வண்டி பின்புறம் சாய்ந்தால் அது சாயாதவண்ணம் தடுப்பதற்கு அவைகள் உபயோகமாக இருந்தன. அந்த வண்டிகளின் அமைப்பே நம் நாட்டை விடச் சற்று மாறுபட்டதாக இருந்தது. மூங்கிற்பாய்க்குப் பதிலாகத் தென்னங்கிடுகுகளால் கூடு வேயப்பட்டிருந்தது. காளைகள் நன்கு பெருத்து, பெரும் கொம்புகளுடன் விளங்கின.

"நல்ல மாட்டுக்கு ஒரு சூடு நல்ல மனைவிக்கு ஒரு வார்த்தை" என்று சிலர் சொல்லுவார்கள். மாட்டையும் மனைவியையும் ஒரு தராசில் வைத்து நிறுக்கும் இவர்களைப்பற்றி நாம் ஆராய வேண்டாம்! இருந்தாலும், இலங்கையில் வண்டி இழுக்கும் மாடுகள் ரொம்ப நல்ல மாடுகளோ என்னவோ! அவைகளுக்கு ஒரு சூடல்ல, உடம்பு முழுவதும் குட்டுக்கோலைக் காய்ச்சி இழுத்திருந்தார்கள்; சித்திரங்களைத் தீட்டியிருந்தார்கள்!

ஒருசில மனிதர்கள் தம்மை மட்டும் கடவுள் ஒழுங்காகப் படைத்திருக்கிறார் என்று எண்ணுவர். இதைப் போல மற்ற மனிதர்கள் விஷயத்தில் கடவுள் அவ்வளவு அக்கறையெடுத்துக் கொள்ளவில்லை என்பதும் அவர்கள் காணும் ஒரு குறைபாடு. மனிதர்கள் விஷயத்திலேயே கடவுளின் படைப்புத் திறமையில் இவ்வளவு சந்தேகப்படும் ஆசாமிகள், 'மாடுகளைக் கடவுள் சரியாகப் படைக்கவில்லை. கொம்பு என்ற ஒன்றைத் தவறுதலாக வைத்திருக்க வேண்டாம். அது மாட்டுக்கும் வலிக்கும், மனிதனையும் இடிக்கும்' என்ற முடிவுக்கு வந்து, பல ஊர்களில் மாட்டின் கொம்பைச் கட்டுத் தீய்த்துவிடுவார்கள். இதற்கு இன்னொரு காரணமும் இருக்கலாம். 'நாங்கள்தாம் குடுமியை எடுத்துவிட்டோமே, உனக்கு மாத்திரம் ஏன் கொம்பு? நீயும் கிராப்பு வைத்துக்கொள்' என்ற நல்ல எண்ணமாகவும் இருக்கலாம். நமது ஊரில் இம்மாதிரி கொம்பைச் கட்டுவிடுவது போல், இலங்கையில் உடம்பில் சூடு போடும் வழக்கம் உண்டு.

ஒவ்வொரு வண்டியையும் ஒரு சிங்களவர்தாம் ஓட்டிக்கொண்டு சென்றார். அந்தச் சிங்களவர்களும் 'கதிர்காமத்தை நோக்கிச் செல்கிறோம். கதிர்காமத் தெய்வோனைத் தரிசிக்கச் செல்கிறோம்' என்ற எண்ணத்திலே பரிசுத்தமான உள்ளத்தோடு ஆனந்தம் தோய்ந்த முகத்துடன் வண்டிகளை ஓட்டினார்கள்.

அழகு மலையில் புறப்பட்ட வண்டி யாத்திரை கதிர்காமம் வரையில் தொடருகிறதே என்று வடிவாம்பாள் எண்ணினாள். இந்த நெடுநாட்பிரயாணத்தின் நடுவில் கடந்த பள்ளம் மேடுகளை யெல்லாம் நினைத்தாள். இந்த யாத்திரையிலாவது அவனுக்கு நல்ல புத்தி வரவேண்டும் என்று வேண்டிக்கொண்டாள்.

அந்த வண்டிப் பயணம் போவதைப் பார்த்தால், ஒரு கலியாண கோஷ்டி போவதைப் போலவே இருந்தது. அதில் ஒரே ஒரு மாறுதல்; சண்முகத்தையும், மோகனாவையும் தனித்தனி வண்டிகளில் ஏற்றி விட்டார்கள். "இல்லை, நாங்கள் இருவரும் ஒரே வண்டியில்தான் போவோம்" என்று அவர்களால் சொல்லவும் முடியவில்லை. சண்முகத்தின் பக்கத்தில் காரைக்கால் நடேசனும் மைனரும் அமர்ந்திருந்தார்கள். மைனரோ, சண்முகத்தைக் கிண்டல் செய்ய ஆரம்பித்தார்.

"என்னங்க பிள்ளை, வண்டியிலே மூணு பேருக்கு இடம் பத்தலியே. நீங்க வேணும்னா இறங்கி முன்வண்டிக்குப் போயிடுங்களேன்."

"அவர் எப்படி இறங்கிப் போவாரு? அதிலே பொம்பளைங்க உக்கார்ந்து இருக்காங்களே!" என்றார் நடேசன்.

"இருந்தா என்ன, அண்ணே? சிங்கவரம் குழந்தை சும்மாவா சொல்றாங்க? மரகதத்தை இந்த வண்டிக்கு வரச்சொன்னா போகுது!" என்று குறுக்கே புகுந்தான் சண்முகம்.

"இந்த வண்டிப் பயணங்களில் மற்ற எல்லாவற்றையும் சகிச்சுக்கலாம்! புருசனையும் பெஞ்சாதியையும் பிரித்து வைக்கிற பழக்கம் இருக்குதே இதை மாத்திரம் சகிக்க முடியாது. ஆனால் கலியாணத்துக்குப் பிறகு அவுங்க ரெண்டுபேரும் ஒரே வண்டியில் மஞ்சள் ஆடை உடுத்தி மடியிலே மணவறைப் பானையை வைத்துக் கொண்டு குலதெய்வத்தின் கோவிலுக்குப் போவாங்களில்லே!" என்றார் மைனர்.

சிற்றம்பலம் குமாரசாமி அவர்கள் தம்முடைய வண்டியில் வந்தார். அவரோடுகூட ஸ்ரீமான் கடம்பவனம் பிள்ளையும் ஏறிக்கொண்டார். அவர் தம் பூர்வாசிரமத்தைச் சொல்லச் சொல்ல குமாரசாமிக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது. அவர் பொய்த் தூக்கத்தில் இறங்கினார். ஆனால் வண்டி ஒரு மைல் போவதற்குள், வடிவாம்பாள் ஒன்பது தூக்கம் தூங்கி எழுந்துவிட்டாள். காட்டுப் பாதை ஆகையால் எங்கு பார்த்தாலும் பள்ளங்கள் மேடுகள். வழியெங்கும் சேறு. ஒருமுறை வண்டி பள்ளத்தில் ஏறி இறங்குவதற்குள் நாலுபேர்கள் பார்ப்பிடிக்க வேண்டும். இப்படி வண்டியில் உட்கார்ந்து போவதைவிட, இறங்கி நடப்பதே நல்லது என்று வாதனுக்குத் தோன்றியது. அவன் மத்தளத்தைக் கூட்டில் கட்டிவிட்டு வண்டியிலிருந்து கீழே குதித்தான்.



"ஏ வரதா, பேசாமே வண்டியிலே ஏறு!" என்றாள் மோகனா.

"இல்லை தங்கச்சி நம்ப ஊர் ரயிலைவிட மோசமா நடந்து உனக்கு என்ன? நான் பத்திரமா நடந்து வாறேன். அவ்வளவுதானே?" என்றான்.

இதைப் பார்த்துத் தருமனும் இறங்கினான். பாவம், அவனை வண்டி நடுவில் உட்கார்த்திவிட்டார்கள். வெற்றிலை போட முடிய வில்லை. தருமன் இறங்கியதைப் பார்த்து எல்லோரும் ஒவ்வொரு வராக இறங்க ஆரம்பித்தார்கள். அந்த விந்தனைக் காட்டிலே வண்டி யில் போவதைவிட, நடந்து செல்வது மிக ஆனந்தமாக இருந்தது. மலையைப் பார்த்து வியப்பதா? மரங்களைப் பார்த்து வியப்பதா? அங்கு வசிக்கும் ஜந்துக்களைப் பார்த்து வியப்பதா?

நமது ஊர் அணில் அங்கே உடும்பைக்காட்டிலும் பெரியதாக இருந்தது. அட்டை கருவேலங்காய் போல் இருந்தது. செம்பட்டை நிற அணில்கள் ஓடி உலாவின. அடிக்கடி பறவைகளின் கீச், கீச் என்ற ஒலி முழங்கியது. சுவர்க் கோழியைப் போன்ற சில்லு வண்டுகளின் இடைவிடாத ஓசை காதைத் துளைத்தது.

ஒவ்வொருவரும் பார்த்துப் பார்த்து வியக்கும் வண்ணம் அமைந் திருந்தது அந்தப் பாதை. ஆனால், எத்தனை நேரந்தான் பச்சை மரத்தையும் பாதையையும் பார்ப்பது? சண்முகத்துக்கும் மோகனா வுக்கும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டும் பேசிக்கொண்டும் வர வேண்டும் என்ற ஆவல். இருபது, முப்பது பேர்களுடன் பிரயாணம் செய்வதால், இந்தச் சமயத்தில் சந்தடி சாக்கில் கொஞ்சம் உல்லாசமாகப் பேசிக்கொண்டு வரலாமென்றும் தோன்றியது. சண்முகசுந்தரம் கீழே இறங்கினான். இதைப் பார்த்த மோகனா அம்மாவை ஒரு முறை பார்த்தாள். வண்டிச் சக்கரத்தின் சத்தத்தோடு கலந்து அவள் குறட்டை விட்டுத் தூங்குவதைக் கண்டாள் மோகனா. உடனே கீழே இறங்கினாள்.

"ஏன் பிள்ளை, கொஞ்சம் போய்க் கையைப் பிடித்து இறக்கி விடுங்களேன்!" என்றார் நடேசன்.

மோகனா வெட்கத்தோடு சிரித்துக்கொண்டே குதித்தாள். "அக்கா, இதோ நானும் வர்ரேன்" என்று கூறிக்கொண்டே அவள்கூட அந்த வெகுளி மரகதமும் இறங்கினாள். இதைப் பார்த்த சண்முகம், "என்ன நடேசண்ணே, நீங்களும் இறங்குங்க. மைனர் மாத்திரம் பீட்டனிலே போறவர்; மாட்டு வண்டியிலாவது வரட்டும்" என்றான். மைனரும் நடேசனும் குதித்தார்கள்.

நண்பர்கள் பலர் சேர்ந்து முருகன் கோவிலுக்குச் செல்லும் போது, அது ஒரு பேரின்பமாகவே இருந்தது. வழியில் யார் யாருக்கு என்னென்ன வேண்டுமோ, அவைகளுக்கு எல்லாம் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. சிற்றம்பலம், விஷயம் தெரிந்தவராதலால், வண்டியில்

சீடை, தேன் குழல், பொரிவிளங்காய் ஆகியவை எல்லாம் தயார் செய்து வைத்து, கூடவே கட்டுச்சோற்று மூட்டையையும் கொண்டு வந்திருந்தார். தவுல்கார முத்துராக்குவுக்குத் தோசை மணம் என்னவோ செய்தது. அவரும் குதித்தார். இவ்வளவு உயரத்திற்கு மரங்கள் வளர்ந்திருந்தும் அங்கே நல்ல குடிதண்ணீர் கிடைப்பதில்லை. தண்ணீர் கிடைத்தாலும் அதைக் குடிப்பதற்கு மனிதர்களுக்குப் பயம். தருமன், வரதன் இருவருக்கும் பொரிவிளங்காய் உருண்டையில் போட்டி வந்தது. பாவம், அந்த உருண்டைக்குச் சற்று பாகு அதிகம். தருமன் அதைக் கையில் வைத்துக்கொண்டு, தவுல்காரரின் தயவை நாடினான்.

"தவுல்காரரே, இதைக் கொஞ்சம் உடைச்சுக் கொடுங்க!" என்று சொல்ல எண்ணி, தவுல்காரரிடம் போய் உருண்டையை நீட்டினான்.

அவருக்கு இப்பொழுது மௌன விரதமும் சேர்ந்துகொண்டது. "எனக்கு வேண்டாம்" என்று கையைக் காட்டிவிட்டார். இதைப் பார்த்த வரதன் "என்ன ஒத்துக்காரரே, உடைக்க முடியிலியா? இங்கே கொண்டாங்க" என்றான்.

"அட, நீங்க பயில்வான் இருக்கிங்களே. முட்டுக்காரரே, இதைக் கொஞ்சம் புட்டுக் குடுங்களேன்!"

"ஆமாம், நான் உடைச்சுக் கொடுத்திடுவேன். உங்களாலே திங்க முடியுமா?" என்று கேட்டுக்கொண்டே உருண்டையைக் கையில் வாங்கினான் வரதன்.

இரண்டு கை விரல்களையும் ஒன்றாகக் கோத்துக்கொண்டு, உள்ளங்கையில் அதை வைத்து ஒரு அமுக்கு அமுக்கினான் வரதன். பொரிவிளங்காய் உருண்டை இரண்டாகப் பிளந்தது. "இப்படி உடைக்கணும். உடைச்சு இப்படித்தான் சாப்பிடணும்" என்று சொல்லி, அதை வாயிலே போட்டுக்கொண்டுவிட்டான்!

தருமனுக்குக் கோபம் வந்தது. ஆத்திரத்தில் இன்னொரு உருண்டையை எடுத்து லபக்கென்று வாயில் வைத்துக் கடித்தான். 'ஹா' வென்று அலறிக்கொண்டே துப்பினான். கீழே விழுந்த உருண்டை அவன் மேல் கோபித்துக்கொண்டு மலைச்சரிவில் உருண்டு ஓடியது. தருமன் என்னவோ திகைத்தான். உடனே 'அடடா' என்று கூவி அதைப் பிடிக்க ஓடினான். வரதன் அவன் கையை இறுகப் பிடித்தான். "என்னங்க, ஒரு உருண்டை போனால் போகுதுங்க! எச்சி பண்ணினதை எடுக்கப் போறீங்களே!"

"அட, உருண்டைக்கில்லீங்க— என் பல்லு அதிலே ஒட்டிக்கிட்டு—" என்று குளறினான் தருமன்.

"அட, சரிதானுங்க. விழுந்த பல்லும், கறந்த பாலும் திரும்பச் சேருமா? விடுங்க!"

"இல்லே மத்தளக்காரரே, அது தங்கப் பல்லுங்க!" என்று ஓடி எடுத்தான் தருமன். அவனுடைய தங்கப் பல், முந்திரிப் பருப்புபோல் அதிலே ஒட்டிக்கொண்டு அவனைப் பார்த்துச் சிரித்தது. எல்லோரும் சிரித்தார்கள்.



இன்று நமக்குக் கோரமான பசி. எதை உண்கிறோம் என்று தெரியாமலே குரங்கு மார்க்கு ரொட்டி, கோபுர மார்க்கு என்னெண்ணெய் என்று உட்பொருள் விளங்காமல் சாப்பிடுவதைப் போல, முன்பெல்லாங்கூட ஒரு பலகாரத்தைச் சாப்பிட்டு வந்தார்கள். அதற்குப் பெயர்தான் பொருள் விளங்கா உருண்டை. இதைப் பார்த்தால் பயற்றமாவில் செய்தார்கள் என்பது விளங்காது. தின்றால் குலம் விளங்கும்.

அப்பொழுது நேரம் நடுப்பகல், உச்சி வெய்யில் தாங்க முடியாத நேரம். ஆனால் அந்தக் காட்டுக்குள்ளே, சூரியன் ஒளி புகவே இடமில்லை. வண்டிச் சலங்கைகளின் ஓசைகளும், அதற்கு இணங்க பறவைகளின் இனிய கானமும், சண்முகத்தின் கோஷ்டியினர் சிரிப்பும், குதூகலமும் அந்தக் காட்டுக்கே தனி அழகை உண்டாக்கின. இப்படிப் போய்க்கொண்டிருக்கும் போது, காட்டுக்குள்ளே இருந்து ஒரு தலை தெரிந்தது. அந்தத் தலையில் செடி முளைத்தது போல கொம்புகள் இருந்தன. பயத்துடன் அந்தப் பிராணி இந்த வண்டிகளை நோக்கியது.

"அதோ மான், மான்!" என்றாள் மரகதம். அந்த மானும் இவர்களைப் பார்த்தவுடனே, "நல்லவர்கள், கதிர்காமத்துக்குப் போகிறார்கள்" என்று தெரிந்துகொண்டது. துப்பாக்கிக்காரனைக் கண்டால், அதற்கு ஓடத் தெரியும். வில் எடுத்து வரும் வேடனைக் கண்டால் வேகமாகப் பாயத் தெரியும். ஆனால், அந்தப் பாதையிலே வரும் யாத்திரிகர்களைக் கண்டால், அந்தக் காட்டிலுள்ள மான்கள் அவர்கள் அருகில் வரும். இவ்வாறே அந்த மானும் வண்டியின் பக்கத்தில் வந்தது. ஆனால் புது நாட்டுப்பெண் போல் அதன் கண்களில் ஒரு மருட்சியும், உடம்பில் ஒரு துடிப்பும் இருந்தன. உடனே சிற்றம்பலம் குமாரசாமி வண்டியிலிருந்து ஒரு தார் வாழைப் பழங்களை எடுத்து வரச்சொன்னார். மரகதமும், மோகனாவும் போட்டி போட்டுக்கொண்டு, அந்தப் பழங்களை வாங்கி மானுக்குக் கொடுக்கப் போனார்கள்.

"அக்கா, பாத்தீங்களா? நம்ப, மான் கொம்பு கடினமா இருக்கும்னு நினைக்கிறோமே. அது, மான் தலையிலே இருக்கும்போது, எவ்வளவு மிருதுவா இருக்குது பார்த்தீங்களா?" என்றாள் மரகதம்.

"மனிதர்கள் கண் பட்டால் மான் கொம்பும் கடினமாகிறது" என்றாள் மோகனா.

வாழைப்பழத்தைக் கொண்டுபோய் அந்தக் கலைமானுக்கு ஊட்டினாள் மோகனா. அது பயந்துகொண்டே அவளைப் பார்த்தது.

"எதுக்காகப் பயப்படறே?" என்றாள் மோகனா.

"அக்கா, 'நீயும் அழகி, நானும் அழகி. உலகத்திலே நம்மை அன்பாக அணைப்பவர்களும் உண்டு, வேட்டையாட நினைப்ப

வர்களும் உண்டு. எதற்கும் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்' என்று அந்த மான் சொல்லுகிறது" என்றாள் மரகதம்.

இதைக் கேட்ட சண்முகம், "என்ன மைனர்வாள், எங்கேயோ மழை பெய்யுதே!" என்றான்.

"நம்ம தலையிலேதான் தூறல் விழுகுது. ஆனால் நான் கடலில் முழுகிவிட்டு வந்துவிட்டேன். இந்தச் சாரலுக்கு நடுங்க மாட்டேன்" என்றார் மைனர். ஆனால் இவைகளைப் பொருட்படுத்தாமல் அந்தக் கலைமான், கலை அரசியின் கையினால் வாழைப்பழத்தைக் கொடுக்கக் கொடுக்க வாங்கிச் சாப்பிட்டது.

"இந்தா, என்கிட்டே இரண்டு பழம் கொடு, நான் கொடுக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே கடம்பவனம் வந்தார். அவர் தன்னை நோக்கி வருவதைப் பார்த்தவுடனே மான் ஒரு பார்வை பார்த்தது. காட்டுக்குள் ஓடிவிட்டது.

"பயப்படுது" என்றாள் மரகதம்.

"ஆமாம், உங்க அப்பன் புலி பாரு!" என்றார் கடம்பவனம்.

அதற்குள் வண்டிகள் கொஞ்சதூரம் போய்விடவே, எல்லோரும் வேகமாக நடந்தார்கள்.

அப்பொழுது காட்டுக்குள்ளிருந்து தடார் தடார் என்று ஏதோ காலடிச் சத்தம் கேட்டது. வேடர்கள்தாம் பறை முழங்கி வருகிறார்களோ, வண்டிகளைக் கொள்ளையடிப்பார்களோ என்று அஞ்சினாள் வடிவாம்பாள்.

கதிர்காமக் காட்டிலே, வேடர்கள் நிரம்ப உண்டு என்றும், அவர்கள் மனிதர்களை அடித்துப் போடுவார்கள் என்றும் யாரோ கதை கட்டிவிட்டிருக்கிறார்கள். அதைக் கேட்டது முதல் வடிவாம்பாளுக்குப் பயம். ஆனால், அங்கு வந்தது வேடர்கள் அல்ல. எங்கே இருந்தோ திருச்சின்னம் ஊதுவது போல ஒரு சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து ஏழு, எட்டு திருச்சின்னங்கள் ஊதப்பட்டன. அந்தச் சத்தத்தைக் கேட்டவுடனே, வண்டியை இழுத்த மாடுகள் வெறித்தன. திசைக்கு ஒன்றாகப் பிய்த்துக்கொண்டு போக ஆரம்பித்தன. வண்டிக்காரர்கள் கீழே குதித்தார்கள். காளைகளின் மூக்குக் கயிறுகளை இறுகப் பிடித்துக்கொண்டார்கள். யாத்திரைக் கோஷ்டியில் இருந்த எல்லோருமே அச்சத்தால் நடுங்கி நிற்கையில் காட்டு யானைகளின் கூட்டம் ஒன்று அந்த வழியிலே வர ஆரம்பித்தது. கடவுள் படைப்பிலே உருவத்திலே பெரியது யானை. அது போதாது என்று, கரிய நிறத்தையும் கடவுள் அருளியிருக்கிறார். அங்கு வந்திருந்த ஒவ்வொரு யானையும் சாதாரணமாக, நாம் கோவில்களில் பார்க்கும் யானைகளைக்காட்டிலும் இரண்டு மடங்கு பெரியவையாக இருந்தன.

தாய்ப்பாலை ஊட்ட விடாமல் கன்றுக்குட்டியை வளர்ப்பது போல, யானையைப் படைத்த கடவுள், அதற்கு என்று, பசி தீர



உண்ணுவதற்கு அமைந்த காட்டை விட்டு, அந்த யானைகளைப் பிடித்துக்கொண்டு வந்து, கல்லுத்தரையில் கட்டி, ஒரு நாளைக்கு இரண்டு படி அரிசி, ஆறு வெல்லக்கட்டி, நாலு தென்னை மட்டை என்று ரேஷன் படி அரிசி கொடுத்தால், அதைச் சாப்பிடும் யானைகள் எப்படியிருக்கும்?

அம்மாதிரி தாங்கலாய் இல்லாமல் கதிர்காமக் காட்டில் யானைகள், கிடைக்கும் தழைகளைத் தின்று, நினைத்த நேரத்தில் தண்ணீர் குடித்து, கூழைக் கொம்புகளுடன் பெருநடை போட்டுக்கொண்டு வந்தன. அந்த யானைக் கூட்டத்திற்கும் ஒரு தலைவன். அவன் ஆடி அசைந்து குடிகாரன் போல் முன்னால் வந்து கொண்டிருந்தான். அவனுடைய இரண்டு கண்களுக்கும் மேலிருந்து மதம் பொங்கிக்கொண்டு வந்திருந்தது. நெற்றியில் நெய் தடவியது போல் வழிந்து இருந்தது. அவன் நடந்து வந்த அழகு எல்லோரையும் பிரமிக்க வைத்தது. அவனைத் தொடர்ந்து பல பெண் யானைகள் வந்தன. இளம் யானைக் குட்டிகள், தாய் யானைகளின் முன்னங்கால்களுக்கு இடையே நடந்து வந்தன. அவ்வளவு பெரிய நாலை அவைகள் தம் தலையால் ஒரு முட்டு முட்டுவதும் பாலைக் குடிப்பதும் பார்க்கப் பார்க்கத் திகட்டாத காட்சியாக இருந்தது. யானையும் தன் குழந்தைகளுக்கு அடங்கும். தாய்ப்பாசம் யானையைக் கூடப் பூனையாக்கிவிடும் என உணர்த்தியது. ஆனால் சடசடவென்று மரக்கிளைகள் முறிந்தன. கையால் மாங்காயைப் பறிப்பது போல் அவைகள் துதிக்கையால் பெரும் பெரும் கிளைகளை ஒடித்து வீசிப் போட்டன. எதிர்ப்பட்ட சிறு மரங்களைத் தலையால் முட்டி கீழே தள்ளின. கிளைகளைத் துதிக்கையால் தூக்கிக்கொண்டு மற்ற மரங்களில் இடிக்காமல் லாகவமாகக் கொண்டுவந்தன.

அந்த வண்டிகளுக்கும் நடந்து வந்தவர்களுக்கும் இடையில் இந்த யானைக் கூட்டம் குறுக்கிட்டது. எல்லோருக்கும் நடுக்கம் அதிகமாயிற்று. எந்த நிமிஷம் யானைகள் நம்மை நோக்கித் திரும்புமோ, நம்மை நோக்கிப் பாய்ந்தால், கொம்பின் ஒரு அசைப்புக்கு நாம் பதில் சொல்ல முடியாதே என்று எல்லோரும் நடுங்கினார்கள். வடிவாம்பாளுக்குத் தன் பெண்ணைப்பற்றிய பயம் ஏற்பட்டது. வண்டியை விட்டு இறங்கி ஓடிப்போய் மகளின் கையை இறுகப் பிடித்துக்கொள்ள எண்ணினாள். ஆனால் யானைகளைக் கடந்து எவ்வாறு செல்வது? பாவம் மோகனாவின் கால்கள் தள்ளாடின. பயத்தால் நடுங்கினாள். சண்முகம் அவளைப் பார்த்தான். மரகதமும், மைனரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

"அப்பா, அதை விரட்டுங்கப்பா!" என்றாள் மரகதம்.

"அட சும்மா இரு. உனக்குத் தெரியாது. சத்தம் போடக்கூடாது" என்று அவர் சொல்வதற்கு நினைத்தார். ஆனால், உதடுகள் தூலா

அடித்தன. இப்படி எல்லோரும் பயந்துகொண்டிருக்கையில் முதலில் நின்ற ஆண் யானையாகிய கூழைக் கொம்பன் தரையிலிருந்து துதிக்கையால் மண்ணை வாரித் தலையில் போட்டுக்கொண்டது. வழியை விடு என்று அதட்டுவது போல் கிரீச் என்று ஒரு பிளிறு பிளிறியது.

யானைகள் மதம் கொண்டுதான் இருக்கின்றன என்ற பயம் எல்லோருக்கும் ஏற்பட்டது. இதற்குள் பின்னால் இருந்த யானைகளில் ஒன்றுக்கொன்று சண்டை வந்துவிடவே, இரண்டு யானைகள் ஒன்றையொன்று முட்டிக்கொள்ள ஆரம்பித்தன. அவை துதிக்கையைத் தூக்கிக்கொண்டு மோதிக்கொண்டு கதறுவதைப் பார்த்தவுடனே, இரண்டு வண்டி மாடுகள் ஓட்டத்தில் பிடுங்கின. கடம்பவனம் பிள்ளை, "வாங்க மாப்பிள்ளை, திரும்பிடுவோம்" என்றார்.

சில ஊர்களில் கோவில்களுக்கென்று மாடு வளர்ப்பார்கள். தனி வண்டிகள் வழியில் போகும்போது, கோவில் காளை குறுக்கே வந்து விடும். மாடுகளைக் குத்திவிடும். வண்டியின் சக்கரத்தைக் கொம்பால் தூக்கிக் கவிழ்த்துவிடும். இப்போது யானைக் கூட்டமே எதிரில் வந்து நிற்கிறது என்றால், எல்லோருக்கும் எத்தனை அச்சமாக இருக்கும்? நாட்டில் யானையைப் பார்த்தால் வேடிக்கை. காட்டில் அதே யானையை நினைத்தால்கூட நடுக்கம் ஏற்படும். யானைகள் வஞ்சம் தீர்க்கும் சுபாவம் உடையவை. மனிதர்களிடம் அவைகளுக்கு நம்பிக்கை கிடையாது. அவைகளும் வரும்போது, தரையைத் துதிக்கையால் தட்டித் தட்டிப் பார்த்துக்கொண்டேதான் நடந்து வந்தன. தரையை ஓங்கித் தட்டுவதும் 'இங்கே கொப்பங்கள் இல்லை, குழிகள் இல்லை, மனிதன் வைத்த சூதுகள் இல்லை. என்னைத் தொடர்ந்து வாருங்கள்' என்று சொல்வதுந்தான் அந்தத் தலைவனின் வேலை.

வண்டிகளின் பக்கம் யானை திரும்பியது. வண்டிகளை இழுத்துக் கொண்டு வந்த மாடுகள் ஒவ்வொன்றும் பின்னால் வண்டியை இழுத்தன. அந்தச் சிங்களவர்கள் கயிற்றை விட்டுவிட்டு ஓட்டம் பிடித்தார்கள். யானைகள் கூட்டத்தின் பக்கம் திரும்பின. 'ஹா' என்ற அலறல் எல்லோர் வாயில் இருந்தும் வந்தது. மரகதம் தன் அப்பாவைக் கட்டிக்கொண்டாள். மோகனா ஓடி வந்தாள்; சண்முகத்தின் கைகள் அவளைத் தாவி அணைத்தன. அவள் மெய்ம்மறந்து அவன் அணைப்பில் நின்றாள். அந்தச் சமயத்தில் திருவாளர் சிற்றம்பலம் குமாரசாமி "கதிர்காம வேலவனுக்கு" என்றார். உடனே முத்துராக்கு "அரோஹரா!" என்று கூவினார்.

"எல்லோரும் இரைந்து சொல்லுங்கள்" என்றார் சிற்றம்பலம்.

"அரோஹரா" என்ற முழக்கம் வானைப் பிளந்தது. "வள்ளி மணவாளனுக்கு அரோஹரா! வண்ணமயில் வேலனுக்கு அரோஹரா" என்று முருகன் புகழ் முழங்கவே அவ்வளவு யானைகளும் துதிக்கைகளை உயரத் தூக்கின. அவைகளும் "அரோஹரா!" என்று சொல்வது போலத் திருச்சின்னங்கள் முழங்கின. காட்டு யானைகள் திரும்பின வந்த வழியே போய்விட்டன. அந்த யானைகள் காட்டுக்குள் போன பிறகுதான் கடம்பவனத்திற்குப் பெருமூச்சு வந்தது. சிற்றம்பலம் சிரித்துக்கொண்டே நின்றார்.



"இந்தக் காட்டிலே இது வழக்கம்தானுங்க. யானைகள் தண்ணீர் குடிக்கக் குறுக்கே வரும். கதிர்காமவேலன் பெயரைச் சொன்னால் போய்விடும்" என்று சொன்னார்.

"இவை எப்பவுமே குறுக்கே வருங்களா?" என்றான் வரதன்.

"ஆமாம், தம்பி. யானை வருவது நல்ல சகுனம். அவர் வந்துதான் கந்தனுக்கும் வள்ளிக்கும் கலியாணம் பண்ணி வச்சாரு. இப்போ முன்னாலே வந்திருக்காரு. என்ன செய்யப் போறாரோ?" என்றார் கடம்பவனம்.

அப்போதுதான் சண்முகசுந்தரத்தின் பிடிப்பில் இருந்த மோகனா "அத்தான்!" என்றாள்.

"என்ன மோகனா?"

"யானை போய்விட்டதா?"

"பாவம், விஷயம் புரியாமல் போயிடுச்சிங்க" என்றார் நடேசன். இதைக் கேட்ட மோகனா சரேலென்று விலகினாள். வெட்கத்தால் அவள் முகம் சிவந்தது. அந்த அழகைப் பருகினான் சண்முகம்.

"அந்த மாலுக்கு அத்தனை வாழைப்பழத்தையும் கொடுக்காட்டி யானைக்குக் கொடுத்திருக்கலாமே!" என்றார் கடம்பவனம்.

"மாமாவுக்குத் தைரியம் இல்லையானாலும் கற்பனை நல்லா இருக்குது" என்றார் மைனர்.

வண்டிகள் புறப்பட்டன. கருமன் இடையிடையே தங்கி நின்றான். மடியிலிருந்து ஒரு டப்பாவை எடுத்தான். அதிலிருந்து இரண்டு மாத்திரைகளை எடுத்து வாயில் போட்டுக்கொண்டான்.

"அது என்னாங்க?" என்றான் வரதன்.

"சும்மா இருங்க. மத்தளக்காரரே! இந்தப் பக்கத்திலே குளிர் காய்ச்சல் அதிகமாம். இந்த மாத்திரையை முழுங்கினா காய்ச்சலே வராதாம். எனக்கு ஆனையைக் கண்டது முதல் நடுங்குது" என்று அவன் மாத்திரைகளை விழுங்கினான்.

"ஒத்துக்காரரே, நீங்க கொஞ்சம் ஊதியிருந்தீங்கன்னா போதுமே அந்த யானைங்க அப்பவே ஓடிப்போயிருக்கும்!" என்றான் வரதன்.

இவ்வாறு அவர்கள் நடந்து வரும்போது, எதிரிலே வெண்மையான ஒரு கோபுரம் தெரிந்தது. அந்தக் கோபுரத்தின் மேல்புறம் சுண்ணாம்பு பூசப்பட்டு, வெண்தாமரை பூத்தது போல் இருந்தது. "அது என்ன?" என்று கேட்டார் நட்டுவனார்.

"இதுதான் திசை மாறா—"

"அப்படின்னா, கை காட்டியா?"

"கைகாட்டி இல்லை! திஸ்ஸ மகா ஆராமம் என்று பெயர். கதிர்காமம் செல்பவர்களைத் திசை மாறாமல் நேர் வழியில் செல்லச் செய்வது இது. ஆதலால் திசை மாறா என்கிறோம்."

"ஆமாங்க. இந்த இலங்கையிலேதானே சீதை இருந்தது? அசோகவனம் எங்கே இருக்குது?" என்று கேட்டார் முத்துக்குமார நட்டுவனார்.

"இன்னும் தெற்கே தென்னிலங்கையில் நுவரலியாப் பகுதியில்."

"அப்படின்னா ராமாயணம் இங்கேதானே நடந்தது? அந்த அசோகவனத்தை எப்போ பார்க்கலாம்!" என்றார் நட்டுவனார்.

"பார்க்கலாமய்யா !"

"அந்த ஊரிலே ராம லட்சுமணருக்கும் சீதைக்கும் கோவில்கள் இருக்கின்றன" என்றார் சிற்றம்பலம்.

"அப்படின்னா இங்கே அநுமார் கோவில் கிடையாதா?" என்றான் வாதன்.

"அதோ தெரியுது பாருங்க" என்று கையை உயர்த்திக் காட்டினார் சிற்றம்பலம். அங்கே வாதன் கண்ட காட்சி மயிர் சிலிர்க்க வைத்தது. மற்ற மரங்களைக்காட்டிலும் இரண்டு மடங்கு உயரமாக ஒரு பலாமரம் நின்றுகொண்டிருந்தது. அதில் ஒவ்வொரு பலாப்பழமும், ஒரு மூட்டை அரிசியைக் கட்டித் தொங்கவிட்டது போலத் தொங்கிக் கொண்டிருந்தன. அவற்றுள் ஒரு பலாப்பழத்தைக் கையாலே தோலை உரித்து, அதில் இருந்த சுளைகளைக் கையில் எடுத்துக்கொண்டு தன் மனைவிக்கு ஊட்டிக்கொண்டிருந்தது ஒரு வானரம். அவை கருங்குரங்கும் அல்ல. நமது ஊரிலுள்ள வெண்மையான குரங்குகளும் அல்ல. முகம் சிவந்து, உடல் கறுத்து இருந்த ஒருவகைக் குரங்கு. கனியைக் கொடுத்து வானரம் அதன் மந்தியுடன் கொஞ்சுவதைப் பார்த்தவுடன் வாதன், "ஜே, ஆஞ்சினேயா !" என்றான். இடுப்பிலே துண்டைக் கட்டிக்கொண்டு கீழே வீழ்ந்து கும்பிட்டான். அப்பொழுது "வானரங்கள், கனிகொடுத்து மந்தியுடன் கொஞ்சும்" என்ற குற்றாலக் குறவஞ்சிப் பாடலைக் குளிர்ந்த இசையுடன் பாட ஆரம்பித்தார் முத்துக்குமார நட்டுவனார்.

அவர் பாடலுக்கு எப்போதும் மோகனா ஆடுவது வழக்கம். அவள் இன்னும் அந்த இன்பத்திலேயே இருந்ததால் அன்று அவள் ஆடவில்லை. ஆனால், ஒருபாறையின் மேல் ஒரு அழகிய காட்சியை எல்லோரும் கண்டார்கள்.

'கதிர்காமம் அருகில் வந்துவிட்டது. வாருங்கள், வாருங்கள், கந்தனைப் பாருங்கள்' என்று அழைப்பது போல அங்கே ஒரு நாட்டியம் ஆரம்பமாகியது.



எத்தனையோ தெய்வங்களின் கோவில்களுக்குச் செல்கின்றோம். முருகன் கோவிலில் இருக்கும் ஆனந்தம் அங்கெல்லாம் வருவதில்லை. காளி அம்மன் கோவிலுக்குப் போனால், குங்குமத்தை வாங்கிக் கொண்டு வெளியே வரும்வரையில் நமக்கு என்னமோ ஒரு பயம் வருகிறது. சிவன் கோவிலில் சிவனுடைய சொத்தை நாம் எடுத்துக் கொண்டு வந்துவிடக்கூடாதே என்று கையில் வாங்கி, இட்டுக் கொண்டது போக, மீதி விபூதியை அங்கேயே வைத்துவிட்டு, துண்டை உதறிக்கொண்டு திரும்புகிறோம். அங்கும் அவ்வளவு பயம். ஆனால் முருகன் கோவிலுக்கு வந்தாலோ?— நாமே இன்பத்தில் ஆடுகிறோம், பாடுகிறோம், அழுகிறோம், தொழுகிறோம், வேல் முருகன் என்று சொன்னவுடனே, வினை அகலுகின்றது. ஆறுமுகா என்று அழைத்தவுடனே, அகம் குழைகின்றது. வள்ளி மணவாளா என்று சொன்னவுடனே, தெள்ளு தமிழ் துள்ளுகின்றது; இன்பம் நெஞ்சை அள்ளுகின்றது.

எங்கு பார்த்தாலும் நாட்டியம், எங்கு பார்த்தாலும் அகில் புகை மணம்; எங்கு பார்த்தாலும் ஆடல் பாடல்; இசையும் தமிழும் முழங்கும். என்னப்பன் முருகன் கோவில் அல்லவா கதிர்காமம்? அந்தக் கோவில் வழியிலே, பாறையின்மீது நின்றுகொண்டு ஓங்காரம் போல் சிறகை விரித்து அழகான மயில்கள் நான்கு ஆடிக் கொண்டிருந்தன. தோகையை விரித்து அவை ஆடுவதை எப்படி வர்ணிப்பது? கண்ணால் அல்லவா பார்க்க வேண்டும்? 'எம்பெருமான் முருகன், என்மேல் அமர்ந்திருக்கிறான்' என்ற ஆனந்தத்தில் அல்லவா மயில்கள் ஆடுகின்றன? அவை காலைத் தூக்கித் தானத்துடன் ஆடிய அழகில் மோகனா மயங்கினாள். சிலை போல நின்றாள். அவள் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் அருவி போலப் பாய்ந்தது. "ஆடி ஆடி வந்தாய், உன்னை அவன் ஆட்கொண்டான். நானும் ஆடி ஆடி வருகிறேன். என் சண்முகன் என்னை ஆட்கொள்ளும் நாள் எது?" என்று வேண்டிக்கொண்டாள்.

தானதன தந்ததன தானதன தந்ததன
தானதன தந்ததன தந்ததனனா
கோலமுறு செந்தில் நகர்
மேவுகுமரன் கருணை
கோகனதம் அன்பொடு
வணங்கும் மயிலே

என்று மயில் வகுப்பில் உள்ள அருமையான பாடலை, சந்தம் குதிபோட இசைத்தார் நட்டுவனார். 'ஏ மோகனா, உனக்குத்தான் ஆடத்தெரியுமா? நாங்கள் ஆடுகிறோம், பார்!' என அந்தமிகும் அந்த மயில்கள் சந்தமுடன் ஆடின. தில்லானா மோகனாம்பாள் திகைத்து நின்றாள். சிக்கல் சண்முகசுந்தர நாதஸ்வரக்காரர் அந்த ஆட்டத்தை

அக்கறையுடன் கவனித்தார். ஆம், இயற்கையின் எழிலுக்கு முன்னே, இறைவன் படைப்பின் முன்னே எல்லாக் கலைஞர்களும் வணங்கி நின்றனர்.

அப்போது அந்த மயில்களின் ஆட்டத்திற்கு ஏற்ப இயற்கையின் இனிய கீதம் ஒன்று பொழிந்தது. எங்கிருந்தோ ஒரு செம்போத்துப் பறவை கும் கும், கும் என்று உகியில் தாளம் கொட்டியது. ஆம், அதுவே தாளமாகவும் சுருதியாகவும் அமைந்திருந்தது. இவ்வாறு சுருதியும், தாளமும் கூடவே இசைக்கவும் பஞ்சம ஸ்வரம் முழங்கியது. அந்தக் கோகிலத் தொனியில் எல்லோரும் சிந்தையைப் பறி கொடுத்தனர். மருத மரத்தின்மேல் இருந்த இரண்டு குயில்கள்தாம் மாறி மாறிப் பஞ்சமத்தில் குக்கூ, குக்கூ என்று கூவ ஆரம்பித்தன.

குயில் கூவ, மயில் ஆட, நெஞ்சம் குதிகொள்ளும் இசையில் அவர்கள் சிந்தை பறி போய் நிற்கையில், "கூவாய் குயிலே" என்று எங்கிருந்தோ ஒரு பெண் குரலில், கடலில் அலை எழும்பி வருவதுபோல் களிப்பில் பொங்கி வந்த ஒரு பாடல் கேட்டது.

கூவாய் குயிலே
திங்கள் தோறும் எங்கும் மழை
மும்முறைகள் பெய்யவும்
திண்புவி தழைக்கவும்
கூவாய் குயிலே (கூ)

என்ற பாட்டை அந்த நங்கை நாட்டுப் பாட்டாகப் பாடுவது கேட்டதுமே அவர்கள் எல்லோரும் குரல் வந்த திக்கை நோக்கிப் போனார்கள்.

ஆஹா, என்ன ஆனந்தம். அங்கு ஒரு களத்துமேடு. அதில் பொன்னை அள்ளிக் குவித்தது போல் நெற்போர்கள் குவிந்து கிடந்தன. பண்ணைக்காரரும் பல குடியானவர்களும் நூற்றுக் கணக்காய் அங்கு கூடி அமர்ந்திருந்தார்கள். அவர்கள் எதிரில் தரையில் சாய மாத்து விரித்து அந்த மரத்தின் மேல் நின்றவண்ணம் காதில் கை வைத்து ஒரு நங்கை பாடினாள். தினைப்புனங்காக்கும் வள்ளியம்மை அவள்தானோ என வியக்கும்வண்ணம் அவள் நின்றாள். கூடவே நான்கு நங்கையர்கள் அந்தக் குயில் பாட்டை நாட்டுப்பாட்டாய்ப் பாடிக்கொண்டிருந்தார்கள். சிற்றம்பலம் சந்தோஷ மிகுதியால் துள்ளினார். "கதிரேசன் பள்ளு நாடகம்" நடக்கிறது என்றார்.



## சிங்கமுகாசுரன்



அது வேங்கை மரம். அந்த மரத்திலே இரண்டு கொடிகள் படர்ந்திருக்கின்றன. ஒன்று, முல்லைக்கொடி! இன்னொன்று, வள்ளிக்கொடி. இதைப் பார்த்தான் ஒரு கவிஞன். அவனுக்கு பக்தி பொங்கியது. அதில் பின் வரும் பாடல் பிறந்தது.

"தேவானை வடமொழியாம்,
சின்னவள்ளி செந்தமிழாம்
செந்தமிழும் வடமொழியும்
சேர்ந்துபடர்ந்த வேங்கைமரம்"

என்று முருகனைப் பாடினான். முருகனுக்கு ஏற்பட்ட உபயநாச்சியார் பெருமை அந்தப் பள்ளு நாடகத்திலும் இருந்தது. அந்த நாடகத்தின் தலைவனாகிய பள்ளருக்கும் இரண்டு மனைவியர் இருந்தனர்.

அந்த நாடகத்துக்கு மேடையில்லை. ஆர்மோனியம் இல்லை. நெல்லை அடிக்கும் களத்து மேட்டிலேயே நாடகம் நடந்து கொண்டிருந்தது. வெளி ஊரார்கள் பலர் அங்கு வருவதைப் பார்த்த வுடனே உள்ளூர் நாட்டாண்மைக்காரர் ஒருவர் எழுந்திருந்தார். அவர்களை வரவேற்று, முன் வரிசையில் மாற்றின் மேல் உட்கார வைத்தார்.

சண்முகம் கோஷ்டியினர் உட்கார்ந்தவுடனே ஒரு மரக்காலில் நாலு வெற்றிலை, பாக்கு எல்லாம் கொண்டுவந்து மரியாதைக்காக வைத்தார்கள். கூத்துப் போடும் நடிகர்களும் தங்கள் வேஷத்தை மறந்து இவர்களுக்கு ஒரு கும்பிடு போட்டு வரவேற்றனர். மறுபடியும் கூத்து ஆரம்பமாகியது. நாடகம் இதுதான்.

அந்தப் பண்ணைக்காரப் பள்ளனுக்கு இரண்டு மனைவியர். ஒருத்தி மூத்தவள்; இன்னொருத்தி இளையவள். இளையவள் மேல் உள்ள மோகத்தால் தன் கணவன் தன்னைக் கவனிப்பதில்லையென்று மூத்தவள் பண்ணைக்காரனிடம் புறம் கூறுகிறாள். இதைக் கேட்ட பண்ணைக்காரன் பள்ளனை மரத்தில் கட்டி வைக்கிறான். தன் கணவன் மரத்தில் கட்டப்படுவதைப் பார்த்தவுடனே இளைய பள்ளிக்கும் மூத்த பள்ளிக்கும் சண்டை வருகிறது. பிறகு அது சமாதானமாக மாறி, இருவரும் தங்களது கணவனுக்காகப் பண்ணைக் காரனிடம் 'இனி பள்ளன் ஒழுங்காக நடப்பான்' என்று முறையிடு கிறார்கள். பள்ளன் கட்டு அவிழ்த்துவிடப்படுகிறான். வயலை உழுகிறான். அப்பொழுது உழவு மாடு அவனை முட்டித் தள்ளுகிறது. அவன் மயங்கிக் கிடக்கின்றான். இரு மனைவியரும் வருந்துகிறார்கள்.

முருகன் அருளால் பள்ளன் களைப்புத் தீர்ந்து எழுகிறான். அதன்பின் இருவரும் அவனோடு அன்பாக இருக்கிறார்கள். இதுதான் பள்ளுப் பாட்டு.

நம் நாட்டிலே பள்ளு நாடகங்களிலே முக்கூடல் பள்ளு சிறந்ததாகக் கருதப்படுகிறது. இலங்கையிலே கதிரைமலைப் பள்ளு சிறந்தது. அது கதிரேசனைத் தலைவனாக வைத்துப் பாடுவது. அதில் வரும் இரண்டு பள்ளிகளுள், இளையவள் இந்தியப் பள்ளி; மூத்தவள் இலங்கைப் பள்ளி. இளையவள் பிள்ளையாரையும், சிவனையும் வணங்குபவள். மூத்தவள் முருகனை மாத்திரம் வணங்குபவள்.

இரண்டு சக்களத்திமார்களுக்கு ஏற்பட்ட சண்டையிலே தெய்வம் அடிபடுவதைக் கண்டார் முத்துக்குமார நட்டுவனார். அதைக் கேட்கக் கேட்க, அவருடைய கண்களில் கண்ணீர் மல்கியது. 'வைதாரை வாழ்விக்கும் கந்தனை இந்தப் பள்ளி உண்மையாகவே வைகிறாளே!' என்று ஆச்சரியப்பட்டார். ஆயிரம் வாழ்த்துப் பாடலைக்காட்டிலும், அந்த நிந்தாஸ்துதி அருமையாக இருப்பதைக் கண்டார்.

"ஏ, மீனாட்சி அம்மையே, உன்னை உலகத்தில் உள்ள எல்லா மக்களும் பூசித்தாலும், இந்திராதி தேவர்கள் நேசித்தாலும், நீ மேற்குலத்து மாது ஆவாயோ, சொல்லடி?" "உன் அண்ணன் ஆட்டிடையன்; உன் கணவன் வலைவீசிய வலையன். தன் ஆசை மகன் ஒரு குறவன். நீ ஒரு வேடச்சி" என்று கேட்கிறார் சங்கரதாஸ் சுவாமிகள்.

இம்மாதிரி சிலேடையாகத் தெய்வங்களை ஏசி வணங்குதல் இலக்கியங்களில் உண்டு. அந்த வகையைச் சேர்ந்தது கதிரைமலைப் பள்ளு. இன்னொரு விதத்திலும் அந்த நாடகம் உயர்ந்தது.

பள்ளுப் பாடிய புலவர் தமிழ் பாட நினைத்தவுடன் தாயன்பு மேலிட்டால் இந்தியாவையும் இலங்கையையும் இணைத்து அதில் பாடியிருக்கிறார். இவர்கள் அங்கு போய்ச் சேர்ந்த சமயத்தில் 'பள்ளேசல்' ஆரம்பமாகிவிட்டது. மூத்த பள்ளி, பண்ணைக் காரனிடம் கணவனைப்பற்றி முறையிடுகிறாள்.

"ஆண்டே, அவன் இல்லத்தில் சற்றும் இரான். அவன் என்னை யும் தேடான். நீங்கள் சொன்னதாக ஏதாவது ஒரு வேலை சொன்னால், உன் நாக்கை அறுத்துவிடுவேனடி' என்பான். கருக்க லில்லை, மதியமில்லை; அவள் வீட்டிலேயே இருப்பான். கூலிக்கு அளக்கிற நெல்லையெல்லாம் அவளுக்கே கொண்டுபோய் அளந்திடுவான். அவரைச் சொல்லிக் குத்தமில்லை. எம்மேலே ரொம்பப் பிரியமாகத்தான் இருந்தாரு. அவ வந்த நாள் முதல் என் மேலே நேசம் மறந்துட்டாரு—"

"அல்லும் பகலென்றுமில்லை
அங்கே யிருப்பான் அவட்



காசை கொண்ட நாள்முதல் என்
நேச மறந்தான்"

என்று பண்ணைக்காரரிடம் முறையிட்டாள் மூத்த பள்ளி.

உடனே இளைய பள்ளிக்குக் கோபம் வந்தது. அவள் இடுப்புச் சேலையை இறுகக் கட்டினாள். மூத்த பள்ளியிடம் வாதாட வருகிறாள். அவள் சண்டை பிடிக்க வந்தாலும், அவள் அழகே கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. அசைந்து, நெளிந்து நகைத்துச் களித்து ஆடிப் பாடி வருகிறாள். வந்த வேகத்தில், "ஆமாடி! உனக்கு நான் எந்த விதத்திலே மட்டமாகிவிட்டேனடி? உப்பும் கற்பூரமும் ஒக்குமோ, போடி!" என்றாள்.

"ஏண்டி, மயில் ஆடுதேன்னு கானாங்கோழி ஆடினா முடியுமா? துவர் நீரில் பருப்பு வேகுமா? என்னமோ யானையாட்டம் ஆடிக்கிட்டு வாரியே! இந்தச் சிங்கம் அதுக்கெல்லாம் அஞ்சாது" என்று மார்தட்டினாள் மூத்த பள்ளி.

"யாரு, நீயா சிங்கம்? போடி, பெருச்சாளி!"

"சரிதாண்டி, உனக்குப் பெருச்சாளி என்றுதான் ஏசத் தெரியும். நீ கும்பிடற சாமியைப் பெருச்சாளிதானே தூக்கிகிட்டுப் போவுது!"

"எங்க பிள்ளையாரை ஏசாதே! ஒன் சாமி மாத்திரம் ஒசந்த சாமியோ? எங்க வீட்டுச் சாமிக்கு இளைய சாமிதானேடி!"

"அடி, மூர்த்தி சிறுசானாலும், கீர்த்தி பெரிதடி. எங்கள் சாமி யாரு தெரியுமா? உன்னையும், உங்க அப்பனையும் உங்க பாட்டனையும் படைச்சவனைக் காலில் விலங்கிட்டு வைத்தவன்.

"எவ்வுலகு மெவ்வுயிரும்
எப்பொருளையும் படைத்த
இறைவனைக் காலில்விலங்
கிட்டு வைத்தவன்

எங்க சாமியைக் கும்பிட்டாலே தமிழ் வருமடி."

"உங்க சாமியைக் கும்பிடறதுக்கு முன்னாலே, எங்க பிள்ளை யாரைப் பிடிச்சு வைச்சுக் கும்பிட்டாத்தான் எந்தக் காரியமும் பலிக்கும்."

"என்னமோ பிடிச்சுவச்சுக் கும்பிடறானாமே! அவருதான் இடிச்சு வச்ச புளியாட்டம் உட்கார்ந்திருக்கிறாரே! ஆற்றங்கரையிலே குந்திக்கிட்டு கொழுக்கட்டை திங்கிறவர்தானே அவரு!"

"எங்க பிள்ளையார் கரையிலே குந்திக்கிட்டிருந்தாரு. உங்க முருகனைப் பிறக்கிறபோதே தண்ணியிலே தூக்கிப் போட்டுட்டாங்க. சரவணப் பொய்கையிலே அறுமீன் முலையுண்டு. அழுத பிள்ளை தானே, அவர் சங்கதி தெரியாதோ?"

"போடி போ! நீ ஒரு பிச்சைக்காரி. உன் சாமி ஒரு பிச்சைக்காரன். தக்கன் வேள்வியில் திங்கப் போய் அகப்பட்டுக்கொண்டவன்தானே உன் சிவபெருமான்?"

"தாகத்துக்குத் தண்ணீர் கேட்டு வள்ளியம்மையைக் கையைப் பிடித்த யோக்கியன்தானே உன் முருகன்!"

"எங்கள் முருகன் அழகன். வள்ளியம்மை அழகி. இவன் தொட்டான், அவள் தொடர்ந்தாள். உங்க பிள்ளையாரைப் போல பெண்கனே கிடைக்காமல் மரத்தடியில் உட்காரவில்லையடி!"

"உங்க முருகன் மரத்தடியிலே உட்காரவில்லை. மரமாகவே நின்னாரு! வள்ளியைக் கண்டு ஆசைப்பட்டு, கட்டை போட்டுக் கிடந்தாரு. அன்னைக்கே நம்பிராஜன் கையாலே வெட்டியிருந்தா தெரியும்"

"எவனடி வெட்டுவான்? குட்டுப்பட்ட பிள்ளையாரைக் கும்பிடறவதானே நீ? எங்கள் இலங்கை இராவணன் இருபது கையாலேயும் குட்டினது உங்க பிள்ளையாரைத்தானே! ஏதோ யானைத் தலையா போச்சு. காயம் படாமல் தப்பிச்சாரு."

"ஏடாகூடம் பேசாதடி. இனிமே தெய்வத்தை இழுத்துப் பேசினே, நான் பொல்லாதவளாக இருப்பேன்!"

"என்னடி செய்வே?"

"நீ என்னடி செய்வே?"

"ஏ புள்ளைகளா, அடிச்சுக்காதீங்க. உங்க இரண்டு பேருடைய சாமியும், நான் கும்பிடற பெரிய சாமியின் புள்ளைகள்" என்று கூறி விலக்கிவிட்டார் பண்ணைக்காரர்.

இதுவரை சண்டைக்குப் பயந்து கீழே கிடந்த பள்ளனும், ஏதோ முனகினான். கண்ணை விழித்தான். கணவன் கண் விழித்தவுடனே மனைவியர் இருவரும் அவன் அருகில் ஓடினர். அவன் இரண்டு கண்களாலும் பள்ளிகளைப் பார்த்தான். அவன் அருமை மனைவியர் இருவரும், சண்டை போடாமல் அருகில் இருப்பதைக் கண்டவுடனே, அவனுக்குப் புதிய தெம்பு வந்தது, எழுந்தான்.

எல்லோரும் சேர்ந்து கதிர்காமவேலன் அருளைத் தொழுதார்கள். 'வாழி வாழி' என்று வாழ்த்தினார்கள். நாடகம் முடிந்தது.

உடனே, பள்ளுப் பாடிய கூட்டத்தாருக்கு அந்த நிலத்துக்குரியவரின் சார்பில் ஐங்கல நெல் அளந்து கொடுக்கப்பட்டது.

அந்த நாடகத்திலே இதுவரை சொக்கி நின்ற மோகனா, அந்தப் பள்ளியர் நடித்த அழகையும், அவர்கள் முருகனையும் பிள்ளையாரையும் ஏசிப் பேசியதையும் நினைத்து இளநகை செய்தாள்.

"இது என்ன ஆச்சரியம்! உங்க அம்மா இருக்கிறபோது நித்தம் இதே சண்டைதான்" என்று மரகதத்திடம் கூறினார் கடம்பவனம்.

முத்துக்குமர நட்டுவனார் மனத்திலே, இந்த இலங்கை வந்ததற்கு நாமும் ஒரு காவியம் செய்துவிடவேண்டும்: மோகனாவை அதற்கு ஆடும்படி செய்ய வேண்டும் என்ற முடிவு தோன்றியது. பக்கத்தில் இருந்த குமாரசாமியிடம் "கண்ணகியம்மன் கோவில் எங்கே இருக்குது?" என்று கேட்டார்.



"கதிர்காமத்திலே இருக்கிறது. மட்டக்களப்பில் கண்ணகி வழிபாடு அதிகம். நம்ம யாழ்ப்பாணத்துக்கும் பக்கத்திலே பொன்கொடு தீவு என்று ஒரு தீவு இருக்கிறது. அந்தத் தீவில்தான் ஆதியில் கண்ணகிக்குக் கயவாகு மன்னன் கோவில் கட்டினான் என்று சொல்லுவார்கள். இப்பொழுது ஏன் கண்ணகி கோவிலைப்பற்றிக் கேட்கிறீர்கள்?"

"புத்தர் பிரான் அருள் பொங்கிய நாடு இந்தியா. ஆனால் பொங்கிய சோற்றை வெண்கலப்பானை சாப்பிடுவது இல்லை. அதைப் போல புத்த பிரானுடைய அருளை இலங்கைக்குப் பரிமாறிவிட்டது. கண்ணகி பிறந்தது காவிரிப்பூம்பட்டினம். அவள் கால் சிலம்பு புலம்பியது மதுரை. அந்தப் பாடலைப் புனைந்தவர் சேர நாட்டரசன். இவ்வாறு சேர, சோழ, பாண்டியராகிய மூவேந்தர்களுக்கும், மூன்று நாட்டினருக்கும் பொதுவான கண்ணகிக்கு எங்கள் ஊரில் கோவில் அதிகமில்லை. அவள் கதையில்லையேல் எங்களுக்கு இசையில்லை! ஆடல் இல்லை! அரங்கம் இல்லை! தமிழ் மக்களின் பண்டைய பெருமையை எடுத்துக்காட்டும் ஒரு புதையல் சிலப்பதிகாரம். அந்தச் சிலப்பதிகாரத்தின் ஜீவரத்தினம் கண்ணகி.

"அந்தக் கற்புக்கரசியின் முன்னே, இந்தக் கற்புக்கரசி ஆடல் செய்ய வேண்டும். கண்ணகி தெய்வத்துக்குத் தமிழ் நாட்டுப் பெண்ணொருத்தி அளிக்கும் காணிக்கையாக அது இருக்க வேண்டும். அதுதான் என் ஆவல்" என்று அன்புடனும், ஆவேசத்துடனும் மோகனாவைச் சுட்டிக்காட்டிக் கூறினார் முத்துக்குமர நட்டுவனார்.

இதைக் கேட்டவுடனே, மோகனாவின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. வடிவாம்பாளுக்கோ உண்மையாகவே கண்ணீர் வந்துவிட்டது. ஏற்கெனவே வந்து இருபது நாட்களுக்கு மேல் ஆகிவிட்டன. இந்த முத்துக்குமரன் மேலும் யாத்திரையில் இறங்குகிறானே என்று எண்ணினாள்.

"முத்துக்குமரு, கரும்பு நல்லா இருக்குதுன்னா வேரோடு பிடுங்கலாமா?"

"என்னம்மா?"

"இலங்கை நல்லா இருக்குதுன்னு இங்கேயே இருந்திடுவே போலிருக்கே!"

"இல்லையம்மா, மண்ணுக்குப் பெருமை பெண்ணாலே, அந்தப் பெண்ணுக்குப் பெருமை கற்பாலே, அந்தக் கற்புக்குப் பெருமை கண்ணகியாலே! அந்தக் கண்ணகியை வணங்குவது தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் கடமை!"

"சரிதான் போ, கறுப்பு வெளுப்புன்னு" என்று முகத்தை நொடித்துக்கொண்டு திரும்பினாள் வடிவாம்பாள். எதையோ கண்டாள். "ஹா" என்று ஒரு அலறு அலறினாள். 'தேள் கொட்டி

விட்டதா, பாம்புதான் கடித்துவிட்டதா? பேசிக்கொண்டே
இருந்தவள் இப்படி அலறுவானேன்?' என்று எல்லோரும்
துடித்தார்கள்.
வடிவாம்பாள் முகத்தில் குப்பென்று வியர்த்தது. ஏதோ சொல்ல
நினைத்தாள். அவளால் சொல்ல முடியவில்லை. நாக்குப் புரளவில்லை.
கன்னைகித் தெய்வந்தான் ஆவேசமாக வந்துவிட்டதோ என்று
எண்ணினார் நட்டுவனார். சண்முகசுந்தரம் அவள் அருகில் ஓடி
வந்தான். "அத்தே, என்ன அத்தே?" என்றான்.
வடிவாம்பாள் கைகள் நடுங்க, வைக்கோல் போரின் இடுக்கு
வழியே கையைக் காட்டினாள். அவள் கை காட்டிய இடத்தில்
எல்லோரும் பார்த்தார்கள்.
அங்கே இரண்டு செவ்விழிகள் அவர்களை நோக்கிக்கொண்
டிருந்தன. விழிகள் என்றால் சாதாரண விழிகள் அல்ல. செங்கண்கள்,
சிங்கத்தின் விழிகள். மாலைச் சூரியனின் வெளிச்சம் அந்தக் கண்களில்
பட்டு, தகதகவென்று நெருப்பை அள்ளி அவர்கள் மேல் வீசின.
அவனுக்கு மனித உடல், முகமோ சிங்கத்தின் முகம். அந்தச் சிங்க
விழிகள்தான் அவளைச் சீறிப் பார்த்தன. குமாரசாமி கடகடவென்று
சிரித்தார். "ஏம்மா, சிங்கம் என்றே பயந்துவிட்டீர்களா? அவர்கள்
இலங்கை நாட்டியக் கோஷ்டியினர்" என்றார்.
ஆமாம், அந்தக் கூட்டத்தில் ஆறு, ஏழு பேர்கள் இருந்தார்கள்.
ஒருவன் கையிலே பெரிய ஜாலராவை வைத்துக்கொண்டிருந்தான்.
ஒருவன் இடுப்பிலே பெரிய முழவு ஒன்றைக் கட்டிக்
கொண்டிருந்தான். பெண்ணொருத்தி தலையிலே குருனாத்
தகடுகளால் அலங்கரிக்கப்பட்ட கிரீடத்தை வைத்திருந்தாள். அவள்
முகத்திலேயும் பாம்பு முகமூடி போட்டுக்கொண்டிருந்தாள்.
வடிவாம்பாளுக்குப் பயத்தை அளித்தவனோ சிங்க முகமூடி
அணிந்திருந்தான்.
"பயப்படாதீர்கள், நாங்களும் கூத்துப் பார்த்தோம்" என்று
சொன்னாள் அந்தப் பெண். இவர்கள் பயத்தைக் கண்டுதானோ
என்னவோ, சிங்கமுக மூடிக்காரன், பக்கத்தில் இருந்த வண்டியில்
அமர்ந்தான். வண்டி வயல்களில் இறங்கி ஓடியது. அவன் போகும்
மட்டும், அவனைப் பார்த்துக்கொண்டே இருந்தாள் வடிவாம்பாள்.
அவளுக்குத் தன் நினைவு வருவதற்கே வெகு நேரம் ஆயிற்று.
"யாருங்க இவங்களெல்லாம்? ஏன் முகமூடி போட்டிருக்காங்க?"
என்று கேட்டான் சண்முகம்.
சிற்றம்பலம் கூறினார்: "இலங்கையிலே இவர்கள் வெறியாட்டக்
காரர்கள். புத்த மதத்தினர். வீடுகளில் நோய் நொடி வந்துவிட்டால்
இவர்களைக் கூப்பிட்டு ஆடச் சொல்வார்கள்."
"ஏன், இவர்கள் ஆட்டத்தைப் பார்த்துப் பேயுங்கூட ஓடிவிடும்
என்ற நம்பிக்கையா?" என்றான் சண்முகம்.



"பேய் ஏன் ஓடாது, நானே பயந்துட்டேனே!" என்றாள்
வடிவாம்பாள்.
"அப்படியில்லையம்மா! அவங்க ஆட்டம் அற்புதமாக இருக்கும்
கூப்பிட்டு ஆடச்சொல்லவா?" என்றார் குமாரசாமி.
"என் உசிரே போனாலும் நான் அதைப் பார்க்க மாட்டேனுங்க
இது என்னங்க. சிங்கம் புலி மாதிரி முகத்தை மூடிக்கிட்டு!"
காரணம் இல்லாமலே சில முகத்தைக் கண்டால், அன்பு
உண்டாகிறது. சில முகத்தைக் கண்டால் திகில் உண்டாகிறது. இதைத்
தான் முதலில் விழித்த நேரம் என்கிறார்கள். அந்த முகமூடிக்காரனைக்
கண்டவுடன் வடிவாம்பாள் மனத்தில் இதே திகில்தான்
உண்டாயிற்று. அந்தச் சிங்கமுககாரன் அவள் எண்ணத்தில் விரட்டிக்
கொண்டே இருந்தான். அவள் கண்களை விட்டு அந்த முகம்
அகலவே இல்லை. ஒரு அடி நடக்கக்கூட அவள் பயப்பட்டாள். இந்த
நிலையில் சிற்றம்பலம் குமாரசாமி உதவிக்கு வந்தார். அவர் சொல்லிய
ஒரு வார்த்தை வடிவாம்பாள் வயிற்றில் பால் வார்த்தது போல்
இருந்தது. அந்த வார்த்தை வேறொன்றுமல்ல.
"இனிமேல் வண்டிகள் போகாது. திசைமாறாவில் இரவுச்
சாப்பாட்டை முடித்துக்கொண்டு காலையில் நடக்கலாம்" என்பது
தான் அது.

## நூற்று ஆறாம் அத்தியாயம்

# ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்



நிழல், நெஞ்சம், நிலவு என்ற மூன்றும் தாம் ஒவ்வொருவரை என்றும் பிரியாதவை. அந்த யாத்திரைக் கூட்டத்தில் உள்ள அத்தனை பேருக்கும் நிலவு நிம்மதியை அளித்தது. அன்று கார்த்திகை மாதச் சதுர்த்தசி.

எங்குமே பூரணச்சந்திரன் அழகாயிருப்பான். ஆனால் இலங்கையில் இன்னும் அழகாயிருந்தான். காரணம் வானில் மறு இல்லை.

குழந்தைகளுக்குத் தாயுடன் கூடப்பிறந்த மாமன் சந்திரன். ஏனெனில், தாய் தன் குழந்தைக்கு, "அதோ பார்த்தாயா!" என்று முதலில் அறிமுகம் செய்து வைப்பது அவனைத்தான்.

சிறுவர்களுக்கு நல்ல சாப்பாடு கிடைப்பது சந்திரனாலே. நிலவில் அவர்கள் கையில் தாய்மார்கள் சாதம் போடும் போது அவர்கள் அடையும் ஆனந்தமே வேறு.

இளங்காதலர்களுக்கும் இன்பத்தை அள்ளித் தருபவன்
அவன்தான்.
கவிஞர்களுக்குக் கற்பனை ஊற்று அவன்
கிழவர்களுக்கு வழித்துணையே அவன். முதியவர்களின் வாழ்வில்
அவர்களோடு சிறு வயதில் பழகிய பலர் உலகைவிட்டுப்
போயிருப்பார்கள். ஆனால், தாயால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட
நாள் முதல் கடைசிவரை ஒவ்வொரு நாளும் அவர்கள் இரவில்
நடக்கும் போது கூடவே நடந்து பழகிய வழித்துணை அல்லவா
சந்திரன்? நின்றால் நிற்பான். நடந்தால் நடப்பான். இவ்வாறு நீங்காத
நிழல்போல என்றும் மனிதர்களுக்குத் துணையாளவன் சந்திரன்
இந்த உலகத்திலேயே அவனைக் கண்டு வெறுப்பவர்கள்
திருடர்களைத் தவிர வேறு யாருமில்லையாதலால், இரவில்தான்
திருடுவது என்று பழக்கமில்லாத இடங்களில் எல்லோருக்குமே
பிடித்தவன் சந்திரன் என்று சொல்லிவிடலாம்.
நிலவில் வண்டிகள் அவிழ்த்துவிடப்பட்டன. மல்லிகைப்பூதான்
மணக்கும் என்று நினைப்பவர்கள் இருக்கிறார்கள். ஆனால், கட்டுச்
சோற்று மூட்டையின் மணம் கதம்ப மாலைக்குக்கூட கிடையாது.
பசித்தபோதுதான் அது தெரியும். அன்று அந்த மணத்தை மிகவும்
ரசித்தவன் வரதன்தான். எல்லோரையும் வரிசையாக உட்காரச்
சொல்லி, கட்டுச்சாதக் கூடைகளைத் திறந்தான்!
வண்டியில் இருந்த 'கார்பைட்' விளக்குகள் நான்கைக் கொண்டு
வந்து வைத்தார் சிற்றம்பலம்.
நாம் இரவில் பிரயாணம் செய்யும்போது நடு வழியில் ஒரு
விளக்கைக் கண்டால் எவ்வளவு சந்தோஷம் அடைகிறோமோ
அதைப் போல் இந்த ஒளி வீசும் விளக்குகளைக் கண்டவுடனே,
காட்டில் உள்ள ஈ, எறும்பு, விட்டில், தத்துக்கிளி, வெட்டுப்பூச்சி,
விளக்கெண்ணெய்ப் பூச்சி முதலியவைகள் எல்லாம் அங்கு வந்து
வேடிக்கை பார்க்க ஆரம்பித்தன.
"ஐயோ, சாப்பாடே போதும். இதுகள் வேறு வாய்க்குள்
புகுந்திடப் போகுது!" என்றான் வரதன். விளக்குகள் அப்புறப்படுத்தப்
பட்டன. அதுவே நல்லதாகவும் ஆயிற்று. நல்ல நிலவில் நிலாச்
சாப்பாடும் தொடங்கியது.
எல்லாம் இருந்தன. இலைகள் மட்டும் அதிகம் இல்லை. ஆளுக்கு
ஒரு தாமரை இலையைக் கையில் வாங்கிக்கொண்டார்கள்.
நிலவில் புளிச்சாதத்துக்கும் தயிர்ச்சாதத்துக்கும் வித்தியாசம்
தெரியவில்லை. தருமனுக்கு கருவேப்பிலையும் வத்தல் மிளகாயும்
கண்ணுக்கு ஒன்றாய்த் தெரிந்தன. தயிர்ச் சாதம் என்று எண்ணி
புளியஞ்சாதத்தை அள்ளி அடைத்துக்கொண்டான். விக்கல் எடுக்க
ஆரம்பித்தது. முகம் சிவந்தது. தண்ணீர் குடிக்கவோ பயம்.



"தண்ணீர் தண்ணீர்" என்றான்.
"வேண்டாமுங்க, மலைக்காய்ச்சல் வந்துவிடும்" என்றான் வரதன்
பூமியில் பல நிலவுகள் தோன்றின. அவை மாதர்கள் கையால்
வார்க்கப்பட்ட சந்திரன்கள். அவைகளின் மேல் மிளகாய்த்தூளும்
எண்ணெயும் தடவி வட்ட மதிக்களங்கம் செதுக்கப்பட்டிருந்தது.
மோகனாவைப் பார்த்துக்கொண்டே அந்தத் தோசையை எடுத்து
உட்கொண்டான் சண்முகம். எரிச்சல் நாக்கு விட்டுப் போயிற்று. 'உஸ்
உஸ்' என்றான்.
"என்னங்க பிள்ளை, சீறுநீங்க!" என்றார் மைனர்.
"சீறல்லீங்க. இன்னும் நாலு நாளைக்கு வாயில் சீவாளி வைத்து
ஊத முடியாது!" என்றான் சண்முகம்.
"ஏன், ராமசாமி அய்யர் தடை உத்தரவு வந்துட்டுதா?" என்றார்
மைனர்.
"வரட்டும் அந்த வைத்தி!" என்றார் கடம்பவனம்.
"மாமாவுக்குப் பயந்துதான் வைத்தி எங்கேயோ மறைஞ்சுட்டார்
பாவம். வக்கீல் குமாஸ்தா தேடிக்கிட்டே இருக்கார்" என்றார் மைனர்
"வந்ததெல்லாம் வரட்டும். ஆனால், கந்தன் அருள் தாட்டும்"
என்றான் சண்முகம்.
சண்முகம் தாகத்தால் துடிப்பதைப் பார்த்த மோகனா,
குவளையை அவன் அருகில் கொண்டுவந்து வைத்தாள். அதை
எடுத்துச் சண்முகம் குடிப்பதற்கு முன்பாகவே, "என்னங்க இப்ப
தாகம் தீர்ந்து போச்சா?" என்றாள் மரகதம்.
இந்த நிலையில் தருமன் வற்றலையும் வடகத்தையும் எடுத்துத்
தின்னப் போனான். அது வற்றலாக இருந்து தொத்தலாகப்
போயிருந்தது. நமத்துப்போய் தோல் போல் இருந்தது. அவனுக்கு
உடனே ஒரு சந்தேகம் வந்துவிட்டது. இந்த வடகம் மறுபடியும்
பல்லைப் பதம் பார்த்துவிடுமோ என்று பயந்தான்.
இதுவே பகல் நேரமாக இருந்தால் எத்தனையோ காக்கைகளும்
குருவிகளும் அவர்களைச் சூழ்ந்துகொண்டிருக்கும். இரவு ஆதலால்
எங்கிருந்தோ ஒரு நாய் மட்டும் மெதுவாக வாலை ஆட்டிக்கொண்டு
கடம்பவனத்தின் அருகில் வந்தது. கடம்பவனம் விஷயம் புரியாமல்
கொஞ்சம் சோற்றை அதற்குப் போட்டுவிட்டார். அது மேலும்
மேலும் குழைந்து அவர் மேல் விழுந்து கொஞ்ச வந்தது. 'சீ சீ' என்று
எழுந்து நடந்தார். நாய் கூடவே தொடர்ந்தது. குரைக்க ஆரம்பித்தது
வேகமாய்ப் போனார். விரட்ட ஆரம்பித்தது. உடனே ஒரு கல்லை
எடுத்து அதன் மேல் எறிந்தார். நாய் ஆவேசங்கொண்டு அவர்மேல்
பாயப் புறப்பட்டது. நல்ல வேளை, அந்தச் சமயம் பார்த்து மரகதம்
அவர் கையில் இருந்த சாப்பாட்டைத் தட்டிவிட்டாள். அது கீழே
விழுந்த பிறகுதான் நாய் அவரை விட்டது. எல்லோரும் சிரித்தார்கள்

ஆனால், கடம்பவனம் பிள்ளையோ "எங்கள் ஊராக இருந்தால் உன்னை இந்நேரம் கட்டி வைத்து உரித்திருப்பேன்" என்றார். எல்லோரும் மேலும் சிரித்தார்கள்.

அன்று இரவு, பொழுது போனதே தெரியவில்லை. பேச்சிலும் விளையாட்டிலும் பொழுது கழிந்தது. காலை மூன்று மணிக்குக் கதிர் காமத்தை நோக்கி நடை ஆரம்பமாகியது.

ஆறு உற்பத்தியாகும் இடத்திலே பார்த்தால் முகம் சிறியதாக இருக்கிறது. வழியிலே பல கிளை நதிகள் வந்து கலக்கின்றன. ஆறு பெரிதாகின்றது. பெரிதாகி, அவ்வளவும் போய்க் கடலில் கலக்கின்றன. திசைமாறாவில் ஆரம்பித்த யாத்திரைக் காட்சியும் அத்தகையது. கதிர் காமத்துக்குச் செல்கிறவர்கள், இலங்கையின் எந்தப் பக்கத்திலிருந்து வந்தாலும், திசைமாறாவுக்கு வந்துதான் செல்லவேண்டும். ஒவ்வொரு பாதையில் இருந்தும் இருபது, முப்பது பேர்கள் அங்கே வந்து கலந்தார்கள். சற்று நேரத்தில் கூட்டத்தில் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்துவிடக் கூடாதே என்று பயப்படும்படி கூட்டம் அதிகமாயிற்று. வழியெங்கும் இருந்த சிறு குடிசைகளிலிருந்து எல்லாம், வீட்டுக் காரர்கள் வெளியே வந்தார்கள். 'அரோஹரா!' என்று சொல்லி வழியனுப்பினார்கள். யாரோ ஒருவர் எப்பொழுதோ வேண்டுதலை செய்துகொண்டார். ' கார்த்திகைக்குக் கதிர்காமத்துக்கு வா' என்று உத்தரவு கிடைத்தது. அவர் பால் காவடியைத் தோளிலே தூக்கிக் கொண்டு "எங்கள் முருகன் அருள் பொங்கினாற் போல" வழி யெல்லாம் பால் பொங்க ஆடிக்கொண்டே வந்தார். இருபது பேர்கள் பிடித்துக்கொண்டிருந்தும் அவருக்கு ஆவேசம் தணியவில்லை. அதைப் பார்த்த முத்துராக்குவுக்கும் ஆவேசம் உண்டாயிற்று. அந்தக் காட்சியைக் கண்ட வரதன் மத்தளத்தை இடுப்பில் கட்டிக் கொண்டான். கணீர் என்று மெய்சிலிர்க்கும் வண்ணம் உச்ச சுருதியில்,

"திருமகள் உலாவும் இருபுய முராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் யாவும் மிகுதிபெறு பாடல்
தெரிதரு குமாரப் பெருமாள்காண்
மருவும்அடி யார்கள் மனதில்விளை யாடும்
மரகத மயூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்!"

எனப் பாடல் முழக்கினான் சண்முகசுந்தரம்.

அந்தக் கூட்டத்திலே, நான், நீ, அன்னை, தந்தை, எதிரி, நண்பன் என்ற வார்த்தைகள் எல்லாம் மறந்தன. ஆவலோடு கடலை நோக்கி ஓடும் ஆறுபோல் அத்தனை பேரும் சென்றார்கள். எல்லோரும்



தம்மை மறந்தார்கள். "அரோஹரா, அரோஹரா" என்ற நாதம் எழுந்தது. மத்தளம் முழங்கியது. ஒரு புறம் கைத்தாளம் முழங்கியது. ஒரு புறம் இதுவரை வாய் திறந்து பாடாத சண்முகம் அன்றைக்குத் திருப்புகழைப் பாடினான். அவன் சிக்கலில் பிறந்தவன். சிங்கார வேலன் சந்நிதியில் வளர்ந்தவன். மயிலேறும் பெருமானைத் துதிப்பவன். அவன் அடியார் ஒருவரிடம் தமிழ் இசையைப் பயின்றவன். தன்னுடைய வித்தையை முதலில் சிக்கல் சிங்கார வேலனுக்கு அர்ப்பணம் செய்தவன்.

அவன் இன்று வாய் திறந்து திருப்புகழ் பாடியவுடனே, சிற்றம்பலம் பிரமித்தார். முத்துக்குமர நட்டுவனார் 'முருகா' என்று அலறினார். மோகனா தன்னை மறந்தாள். கைகள் இரண்டையும் கூப்பிக்கொண்டாள். அவனோடு சேர்ந்து பாடினாள், ஆடினாள், பரவசமானாள். அன்று ஜயதேவருடன் சென்ற பத்மாவதி தேவியார் போல் அவன் பாடலுக்கு ஆடிப் பாதையைக் கடந்தாள்.

எப்பொழுது காதல் இருக்கிறதோ அப்பொழுது வெட்கமும் கூடவே இருக்கும். இது என்ன விந்தை! இது என்ன விநோதம்! அந்தக் காதல் உணர்ச்சிகூட இப்பொழுது இல்லை. மின்னலைக் கண்டு இருள் விலகுவது போலக் காதல், வெட்கம், ஆண், பெண் என்ற வேற்றுமைகூட இல்லாமல் 'நா வேறெனா திருக்க நீ வேறெனா திருக்க' என்ற அத்வைத நிலை எய்தியது.

கீழ் வானத்தில் மாதுளம் பூ நிற நடைபாவாடை விரித்தான் அருணன். குமரன் கொடிக் கோழி கூவியது. 'வந்தேன்' என ஆதவன் ஓடி வந்தான். பறவைகள் பாடின. பனி மலர்கள் சிரித்தன. பலபல வென்று பொழுது விடிந்தது. மாணிக்கக் கங்கை நதியின் கரையில் வந்து நின்றார்கள்.

"ஆஹா, ஆயிரம் மைல்கள் இருக்கக் கூடாதா? பன்னிரண்டு மைல்கள்தானே! எல்லாரும் மாணிக்கக் கங்கையில் நீராடிவிட்டுச் செல்வோம்" என்றார் குமாரசாமி.

ஒவ்வொருவராய் இறங்கி நீராடினார்கள். அங்கு 'இது ஆண்கள் குளிக்கும் துறை, இது பெண்கள் குளிக்கும் துறை' என்று இல்லை ஆயினும், தமிழ் நாட்டிலே துறை கட்டியா, மறைவு கட்டியா மக்கள் வாழ்ந்தார்கள். மனம் மறைந்தால் மறைவு எதற்கு? எல்லோரும் பக்தி சிரத்தையுடன் ஆற்றில் மூழ்கி எழுந்தார்கள். கார்த்திகை மாத மாதலால் அதில் வெள்ளம் சற்று அதிகமாக ஓடிக்கொண்டிருந்தது. மோகனாவும், மரகதமும் கைகளைக் கோத்துக்கொண்டு தண்ணீரில் மூழ்கினார்கள். வடிவாம்பாள் ஒருவரும் துணை வேண்டாமென்று சொல்லிவிட்டுத் தானே இறங்கி மூழ்கினாள். அந்த மாணிக்கக் கங்கை ஆற்றில் சேறும், சகதியும் இல்லாமல் எங்கு பார்த்தாலும் அழகாக மணியாம் பருக்கைக் கல்லைப் பரப்பியது போல இருந்தது. ஆறு சலசலவென்று ஓடிக்கொண்டிருந்தது.

'முருகா' என்று ஒரு முழுக்கு மூழ்கி எழுந்தாள் வடிவாம்பாள். இரண்டாவது முழுக்குக்குக் காலைச் சற்றுத் தள்ளி வைக்கும்போது, அவள் காலில் ஏதோ வழுக்கியது. என்ன வழுக்குகிறது என்பதற்காகக் கையை வைத்து எடுத்தாள். அவள் கையிலே நெல்லிக்காய்ப் பருமனில் ஒரு பொருள் கிடைத்தது. அது சிவப்பு நிறமாக இருந்தது. 'அது என்ன கல்?' என்று கையில் எடுத்துப் பார்த்தாள். அப்பொழுது பரிதியின் ஒளி அதன் மேல் பரவியது. அந்தச் சோதியில் அந்தக் கல் செவ்வேள் போலச் சிவப்பு ஒளி வீசியது. அதன் மேல் பால் பொங்கி வழிவது போல ஆறு ரேகைகள் படர்ந்தன. "வேறு யாருக்காவது வழுக்கி விடப்போவுது" என்று சொல்லி அதைக் கீழே போடப் போனாள். அப்பொழுது சிற்றம்பலம் தடுத்தார்.

"அம்மா, என்ன அது?"

"இந்த பாருங்க, ஏதோ கல்லுங்க. பளபளன்னு இருக்கு. மேலே பார்த்தா ஆறு கோடு தெரியுது."

"ஆறு கோடுகளா? ஆறு படை வீடுகளா? ஆறு முகங்களா? ஆறு கரங்களா? எங்கே கொடுங்கள்" என்று இரு கைகளால் வாங்கினார் சிற்றம்பலம். அதைக் கையில் வைத்துக்கொண்டு மாறி மாறிப் பார்த்தார். அவர் கண்களில் கண்ணீர் பொங்கியது. 'முருகா' என்று மொழிந்தார். "தாயே நீங்கள் பாக்கியம் செய்தவர்கள். இந்த மாணிக்கத்தைக் கீழே போட இருந்தீர்களே!" என்று உரைத்து அதை இரு கண்களிலும் ஒற்றிக்கொண்டார்.

வடிவாம்பாள் கண்கள் திறந்தன. உள்ளம் பரவசம் அடைந்தது. அந்தப் பாவசத்திலே ஒரு நடுக்கங்கூட ஏற்பட்டது. அப்பொழுது மோகனா அன்னையின் அருகில் வந்து நின்றாள்.

"என்னம்மா?" என்றாள்.

"இதோ பாரு கண்ணு. இது நல்ல கல்லாம், மாணிக்கமாம்!" என்று சொல்லி, தன் மகள் கையில் அன்பொழுக அதைக் கொடுத்தாள் வடிவாம்பாள். மோகனா அந்தக் கல்லைப் பார்த்தாள். 'எத்தனை பிரயாணிகள் இந்த வழியாகச் சென்றார்களோ, அவர்கள் கையில் எல்லாம் அகப்படாமல் இன்றைக்கு நம் கையில் இது கிடைத்திருக்கிறது. அது ஏன்?' என்ற ஆவலோடு அதைப் பார்த்தாள். அப்பொழுது கடம்பவனம் பிள்ளை. "என்ன விலை பெறுமுங்க?" என்றார்.

"இருபதாயிரம் ரூபாய் பெறும். பணத்தைத் தள்ளுங்கள். இம்மாதிரி இரத்தினம் கிடைக்குமா?" என்றார் குமாரசாமி.

"என்னாங்க விசேஷம்? சொல்லுங்க!" என்று ஆவலோடு கேட்டாள் வடிவாம்பாள்.

"அம்மா! உங்கள் வீட்டிலே குலமாணிக்கம் பிறக்கப்போகிறது. ஆறு நாட்கள் ஓடுகின்றன. சண்முகநாதன் கிருபை செய்திருக்கிறான். அவன் அருளால் உங்கள் மகள் வயிற்றில் அழகான பேரன் பிறப்பான்.



அவன் மாணிக்கம் போலப் பிரகாசிப்பான். அவன் கீர்த்தி என்றைக்கும் ஒளி குன்றாது" என்று ஆவேசத்துடன் கூறினார் குமாரசாமி.

அதைக் கேட்ட அத்தனை பேர்களும் மெய்மறந்து நின்றார்கள். மோகனா சண்முகத்தைக் கடைக்கண்ணால் பார்த்தாள். சண்முகமும் அவளை நோக்கினான். ஆனால், வடிவாம்பாளோ, கரைக்கு அக்கரையில் இருக்கும் முருகனை நோக்கி, 'கதிர்காமவேலா, குமாரசாமியின் வாக்குப் பலிக்கட்டும். குலம் தழைக்கட்டும். என் பேரனைத் தூக்கி வளர்க்கும் பாக்கியம் எனக்கும் கிடைக்கட்டும்' என்று மனமார வேண்டிக்கொண்டாள்.

அந்த ஆறுமுக ரத்தினத்தை மோகனா தன் பட்டுப் புடவைத் தலைப்பில் பொதிந்து, வயிற்றில் செருகிக்கொண்டாள். அதே நேரத்தில் மெல்லிய பூங்காற்றில்,

"ஆறுமுக மான பொருள்
நீயருளல் வேண்டும்"

என்று ஒரு நல்லிசை மிதந்து வந்தது. அந்தப் பாடல் வந்த இடத்தை அக்கரையாய்ப் பார்த்தார்கள்.

அக்கரையில், மெய்யெல்லாம் திருநீறு பூசி, கையை உயரக் கூப்பி சொக்கத் தங்கச் சிலை போல் ஜோதி வடிவாய் நின்றார், அருளே உருவான அன்பர் பரமானந்தப் பரதேசியார்.

139560
4842704

(முதற்பாகம் முடிந்தது)

சென்னை-83